ரு எண் 573

உ

சிவமயம்

மாணிக்கவாசக சுவாமிகள்

அருளிச்செய்த

திருவாசகம் திருக்கோவையார்

ஆகிய

எட்டாந் திருமுறை

தருமையாதீனம்

[விலை ரூ. 9—00.



தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

குருபாதம்


திருத்தருமையாதீன முதற்குரவர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

குருபூஜை விழா மலர்

பராபவஞூ - வைகாசிமீ - 27உ - வியாழக்கிழமை

9—6—1966



தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

வெளியீடு எண் 572

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
குருபாதம்

மாணிக்கவாசக சுவாமிகள்

அருளிச்செய்த

திருவாசகம் திருக்கோவையார்

ஆகிய

எட்டாந் திருமுறை

[குறிப்புரையுடன்]

இந்நூல்

திருக்கயிலாய பரம்பரைத் திருத்தருமையாதீனம்
இருபத்தைந்தாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

திருவருளாணையால் வெளியிடப்பெற்றது.

 1966 [தருமையாதீனம்

பதிப்பாசிரியர்

வித்துவான்,

ஒடுக்கம், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

தருமையாதீன சமயப் பிரசார நிலையம், சென்னை.

குறிப்புரையாசிரியர்

தருமையாதீனப்புலவர், சித்தாந்தக்கலைமணி,
மகாவித்துவான்

திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள்,

தமிழ்ப்பேராசிரியர், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி.

பதிப்பகம்

ஞானசம்பந்தம் அச்சகம்

தருமபுரம்.

1/3

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

குருபாதம்

முன்னுரை

பாய்பரியோன் தந்த பரமானந் தப்பயனைத்
தூயதிரு வாய்மலரால் சொற்செய்து — மாயக்
கருவாதை யாமறியா வாறுசெய்தான் கண்டாய்
திருவாத வூராளுந் தே.

— திருக்களிற்றுப்படியார்.

திருவருள் வெளிப்பாடுகளாகிய திருமுறைகளுள் சமயாசாரியர் நால்வரது திருமுறைகளே முன்னிற்பவை. அவைகளுள் மாணிக்க வாசகரது திருமொழியாகிய எட்டாந் திருமுறையே காலத்தால் முற்பட்டது என்பது மரபு. இம் மரபு பற்றி இக் காலத்தார் சில தடைகளை எழுப்பி அதனை மாறுபடக் கூறுவர். அவற்றுள், 'மாணிக்க வாசகரது திருமுறை எட்டாவதாக வைக்கப்பட்டதே, அது தேவாரத் திருமுறைகளுக்குப் பிற்பட்டது என்பதனைக் காட்டும்' என்பது ஒன்று. திருமூலரது திருமந்திரம் தேவாரத்திற்கு முற்பட்டது என்பது அனைவர்க்கும் ஒத்த துணிபாகலானும், அது பத்தாந் திருமுறையாக வைக்கப்பட்டிருத்தலானும் திருமுறைகளின் வைப்பு முறையோடு அவற்றின் ஆசிரியரது காலங்களைத் தொடர்புபடுத்தல் கூடாததாகின்றது.

இனி, முதல்ஏழு திருமுறைகளாகிய தேவாரங்களை அருளிச் செய்த மூவர்க்குக் காலத்தாற் பிற்பட்டவரே எட்டாந் திருமுறையாகிய திருவாசகம் திருக்கோவையாரை அருளிச் செய்த மாணிக்க வாசகர் என்பதற்கு வலியதொரு சான்றாக அவர் கூறுவது, 'சிவனடியார்களைத் தொகுத்துக் கூறவந்த ஆளுடைய நம்பிகள் தமது திருத்தொண்டத்தொகையுள் மாணிக்கவாசகரை ஓதிற்றிலர்' என்பது. 'ஆளுடைய நம்பிகள் மணிவாசகரைத் தமது திருத்தொண்டத் தொகையுள் எடுத்து ஓதாதது என்னை' என்பது பெரியதோர் ஐயப்பாடே என்பதும், அதற்கு விடை காணவேண்டுவது இன்றியமையாதது என்பதும் உண்மையேயாயினும், 'அஃது, ஆளுடைய அடிகள் ஏனை மூவர்க்கும் முற்பட்டவர்' என்னும் மரபுபற்றி எழுவதோர் ஐயமாமன்றி, அதற்கு மாறாக, 'அவர் பிற்பட்டவரே' எனத் துணிவிக்கும் சான்றாகாது. என்னை ? ஆளுடைய நம்பிகள் மாணிக்கவாசகரைத் தம்

திருத்தொண்டத் தொகையுள் எடுத்தோதாமைக்கு அவர் காலத்தால் பிற்பட்டவர் என்பதொன்றே காரணமாகாது, பிறிது காரணம் இருத்தலும் கூடுவதேயெனின், அதனை மறுத்தல் கூடாதாகலின். அதனல், 'மாணிக்க வாசகர் மூவருக்குப் பிற் பட்டவர்' என நாட்டுதற்கு, 'அவரை மூவருள் ஒருவரும் கூறிற்றிலர்' என்னுது, மூவருள் ஒருவர் இருவரையோ அன்றி மூவரையுமோ, 'மாணிக்கவாசகர் எடுத்தோதியுள்ளார்' எனக் காட்டுதலே செயற்பாலதாம். அங்ஙனம் காட்டுதல் ஒருவர்க்கும் இயலாததாகலின், 'மாணிக்க வாசகர் மூவர்க்குப் பிற்பட்டவர்' என்பது துணியப்படாததொரு கொள்கையேயாம்.

நம்பியாரூரர் மணிவாசகரைத் திருத்தொண்டத்தொகையுட் கூருமை பற்றியே, 'மணிவாசகர் மூவர்க்குப் பிற்பட்டவர்' என முடிவு கட்டுவது நேரிதாகிவிடின், 'மணிவாசகர் மூவரைப் பற்றி ஓரிடத்தும் கூருமை பற்றி, மூவர் அவர்க்குப் பிற்பட்டவரே' என முடிவுகட்டுதலும் நேரிதேயாம். அதனல், ஒருவர் மற்றொரு வரைக் கூருமை, அவர்தம் காலத்தின் முற்பிற்பாடு துணிதற்கு ஏதுவாகாது. மற்று, ஒருவர் மற்றொருவரை எடுத்துக் கூறி யிருப்பின், அதுவே அதனைத் துணிதற்கு ஏதுவாகும் என்க.

'மாணிக்கவாசகர் மூவரைப்பற்றிக் கூருமை போன்றதன்று, நம்பியாரூரர் மாணிக்கவாசகரைப்பற்றிக் கூருமை; ஏனெனில், நம்பியாரூரர் சிவனடியார்கள் அனைவரையும் எடுத்துக் கூறு வதையே பொருளாகக்கொண்டு ஒரு திருப்பதிகம் அருளிச் செய்துள்ளார்; மாணிக்கவாசகர் அவ்வாறு அருளிச் செய்யப் புகுந்திலர், எனின், மாணிக்கவாசகர் சிவனடியார் களை எடுத்தோதப் புகுந்திலராயினும், சிவபெருமானது திருவிளையாடல்களையெல்லாம எடுத்தோதித் தொகுத்துள்ளார். அதுவே, 'கீர்த்தித் திருவகவல்' என்பது. அதனுள் சிவபெரு மான் ஓரிடத்தன்றிப் பற்பல இடங்களில் பற்பல அடியார் கட்குப் பற்பலவாறு அருள்புரிந்த வரலாறுகள் பலவும் காணப்படுகின்றன. அவற்றில் சிவபெருமான் திருநாவுக் கரசரைத் திருவதிகையில் சூலைநோய் தீர்த்து ஆட்கொண்ட தும், திருவெண்ணெய்நல்லூரில் நாவலூரரை வல்வழக்கிட்டு ஆட்கொண்டதும் குறிக்கப்படவில்லை. கழுமலத்தலம் (சீகாழி) கீர்த்தித்திருவகவலில்குறிக்கப்படுகின்றது. ஆனல், அங்கு ஞான சம்பந்தருக்கு ஞானப்பால் கொடுத்தமை குறிக்கப்படவில்லை. 'கழுமல மதனிற் காட்சி கொடுத்தும்' என்பது. திருஞானசம் பந்தருக்கு அருள்வழங்கியதையே குறிக்கும் என்பதற்கில்லை.

மதுரையில் சிவபெருமான் மண்சுமந்தது முதலிய பல திருவிளையாடல்களை மாணிக்கவாசகர் தமது கீர்த்தித் திருவகவலிலும், பிற இடங்களிலும் இனிது எடுத்து ஓதுகின்ருர். அவற்றுள் மதுரையில் ஞானசம்பந்தர் சமணரை வாதில் வென்றமையைக் கூறவில்லை. ஞானசம்பந்தருக்கு ஞானப் பால் அருளியது, நாவுக்கரசருக்குக் கல்மிதப்பித்தது, நாவலூரருக்குத் தூது சென்றதோடு, அவரைக் களையா உடலொடு கயிலைக்கு அழைத்தது முதலிய அதியற்புதச் செயல்களை அவர்களுக்குப் பின்வந்த பத்திமான்களுள் ஒருவரும் எளியனவாகக் கருதி விடுத்திலர். மதுரையைப் பற்றிப் பல வகையாகப் பாடுகின்ற ஆளுடைய அடிகள், மூவர் முதலிகட்குப் பிற்பட்டவராயின், அங்கு ஞானசம்பந்தர் வாயிலாகச் சைவ சமயத்திற்கே புத்துயிர் வழங்கிய அருள் நிகழ்ச்சியைக் கூருது போயினர் என்பது, எட்டுணையும் பொருந்துவதன்ரும். அதனல், 'திருத்தொண்டத் தொகையையே நுதலி எடுத்துக் கொண்ட திருப்பதிகத்துள் சுந்தரர் மாணிக்கவாசகரைக் கூருதது என்னை' என்னும் ஐயப்பாட்டிற்குச் சிறிதும் வலிமை குறைந்ததன்று, 'மாணிக்கவாசகர், மதுரையில் ஞானசம்பந்தர் சைவசமயத் தாபனம் செய்தது முதலிய வரலாறுகளைக் கூருதது என்னை' என்னும் ஐயம். 'திருத்தொண்டர் வரலாறு' என்னும் முறையில் திருத்தொண்டத் தொகையுள் மாணிக்கவாசகர் இடம் பெறுதல் இன்றியமையாதது போலவே 'இறைவன் திருவிளையாடல்' என்னும் முறையில் கீர்த்தித் திருவகவலுள் ஞானசம்பந்தர் முதலியோரது வரலாறு இடம் பெறுதலும் இன்றியமையாததேயாம். திருவிளையாடற் புராணத்தில் ஞானசம்பந்தர் வரலாறு இடம்பெற்றிருத்தல் இதனை நன்கு விளக்குவதாகும். ஆகவே. திருத்தொண்டத் தொகையுள் மாணிக்கவாசகர் கூறப்படாமைபற்றி அவரைத் தேவார ஆசிரியர் மூவர்க்கும் பிற்பட்டவர் என முடிவுகட்டுதல் இயலாது.

திருத்தொண்டர் புராணம் போன்று சைவசமயப் பெரியார்களது உண்மை வரலாற்றை விரித்துரைக்கும் வரலாற்று நூல் ஒன்றற்குத் தோற்றுவாயாகவே சுந்தரர் தமது திருத்தொண்டத் தொகையை அருளிச்செய்தாராகலின், அத்தகைய வரலாறுகள் நன்கறியப்பட்ட நாயன்மார்களையே பெயரெடுத்தோதி, ஏனையோரை, 'அப்பாலும் அடிச் சார்ந்தார்' என ஒரு சொல்லாற் குறித்துப் போயினர் எனவும், மாணிக்கவாசகரது வரலாறு 'தமிழகத்தின் இருண்டகாலம்' எனப்படும் குழப்பக் காலத்தில் நன்கறியப்படாது போயினமையின், அவரைப் பெயரெடுத்தோதிற்றிலர் எனவும் கொள்ளுதலே பொருந்துவ

நாம். இன்னும், தேவாரங்களுள் கிடைத்தன சிலவேயாக, கிடையாதன பலவாகலின், மூவர் முதலிகள் மாணிக்கவாசகரைக் குறித்திலர் என்பது துணியப்படாமையும், திருவாசகம் திருக்கோவயாருள் கிடையாதன இன்மையின், மாணிக்கவாசகர் மூவரைக் குறியாமை துணியப்படுதலும் கருதத்தக்கன. மற்றும் மாணிக்கவாசகர் பாடல் வகைகள், அவர் கூறும் தலங்கள், வரலாறுகள் முதலியன காலப் பழமையைக் காட்டுவனவாய் இருத்தலும் நோக்கற்பாற்று.

இனி, அடிகள் காலத்தைப் பிற்பட்டதாகக் கூறுவோர், அவர் திருக்கோவையாருள் வரகுண பாண்டியனைக் குறித்திருத்தலைக்காட்டி 'அப்பாண்டியன் மூவரது காலத்திற்குப் பிற்பட்டவன் என்பது கல்வெட்டுக்களால் நன்கு பெறப்படுகின்றது' என மற்றொரு வரலாற்றுச் சான்று காட்டுவர். அடிகள் வாக்கில், 'வரகுண பாண்டியன்' என்னும் பெயரொன்றுமே காணப்படுகின்றதன்றி, அவனைப்பற்றி வேறு ஒரு சிறு குறிப்பும் காணப்படவில்லை. ஆகவே, ஒருபெயரையுடைய மன்னர் பலர் இருத்தல்பலவிடத்தும் நன்கறியப்பட்டமையின், அடிகள் குறித்த வரகுணனே, கல்வெட்டுக்களால் அறியப்படுகின்ற வரகுணன் என அறுதியிட்டுக் கூறுதற்கு வழியில்லை. மாறாக, வேறொருவனைக் குறிப்பதற்கே அது வழிசெய்கின்றது.

அடிகள் உலக வாழ்க்கையை முற்றும் துறந்து இறைவன் திருவடிப்பேறு ஒன்றே கருதித் தில்லையை அடைந்திருந்த காலத்தில் அருளிச்செய்த திருக்கோவையாருள் 'வரகுணன்' என்னும் மன்னனைச் சிவபெருமானை வணங்கும் அன்பனாகக் குறித்துள்ளார் எனின், அவனது சிறந்த சிவபத்தி நோக்கி உண்மையால் அங்ஙனம் குறித்தனராதல் வேண்டுமன்றி, அவனை மகிழ்வித்தற்கு முகமனாகக் குறித்தனர் என்றல் எவ்வாற்றானும் பொருந்தாது. ஆனால், கல்வெட்டுக்களால், அறியப்படும் வரகுண பாண்டியன் அத்தகைய சிவபத்தியுடையன் என்பதற்குச் சான்று யாதும் இல்லை. அதற்கு மாறாக அவன் எஞ்ஞான்றும் போரில் விருப்புடையவனாகவே அறியப்படுகின்றான்.

பதினொன்றாந் திருமுறையில் உள்ள பட்டினத்து அடிகள் பாடலில் 'பெரிய அன்பின் வரகுண தேவன்' என்று ஒரு வரகுணன் பலவகைப் பத்திச் செயல்களுடன் எடுத்துக் கூறப்படுகின்றான். திருவிளையாடற் புராணத்திலும் ஒரு வரகுணன் அத்தகையோனாகக் குறிக்கப்படுகின்றான். இவ்விருவரும் வேறு வேறானவரல்லர்; ஒருவனே ஈரிடத்தும் சொல்லப்படுகின்றான் என்பதை

மறுப்பவர் யாரும் இலர். 'அவ்வரகுணன்தான் கல்வெட்டிற் காணப்படும் வரகுணன்' என்பதற்குப் பட்டினத்து அடிகள் பாடற் கருத்து, திருவிளையாடற் புராணத்தில் சொல்லப்பட்ட வரலாறு என்பவற்றோடு ஒத்த நிகழ்ச்சிகள் கல்வெட்டு வரகுணனைப் பற்றிக் காணப்படவேண்டும். அங்ஙனம் காணப்படாதபொழுது, அந்நூல்களில் சொல்லப்பட்ட வரகுணனும் கல்வெட்டுக்களில் சொல்லப்படும் வரகுணனும் ஒருவனே எனக் கூறுதல் பொருள்படாததேயாம். அதனால் அடிகள் குறித்த வரகுணன், பெரிய அன்பின் வரகுணனாதல் சாலு மாதலின், அவ் வரகுணனைக் குறித்திருத்தல் பற்றியும் அவரது காலம் தேவார ஆசிரியர் மூவர் காலத்திற்குப் பிற்பட்டது என்னும் துணிபு பிறக்குமாறில்லை.

'திருவாதவூரடிகள், மூவர் முதலிகட்கு முற்பட்டவர்' என்பது மரபாய் இருத்தலின், அதற்கு மாறாக, 'அவர் பிற்பட்டவர்' எனக்கூற முற்படுவோர், அதற்கு ஐயமற்ற தெளிவான சான்றுகாட்டியே தம்கொள்கையை நிறுவுதல்வேண்டும். அஃது இயலாதவரையில், முன்னை மரபே மரபாய் நிலைத்து நிற்பதாம். அதனால், ஒருவாற்றாற் கிடைக்கும் சான்றுகள் பலவும் முன்னை மரபிற்குத் துணைபுரியும் வகையிலேயே நோக்கப்படும். அவ்வாற்றால் அடிகள் குறித்த வரகுண பாண்டியனும், திருவிளையாடற் புராணத்திற் கூறுமாறு தேவார ஆசிரியர்கட்கு முற்பட்டவனாகவே கொள்ளப்படுவான். அப்பர் தமது திருவாரூர்த் திருப்பதிகத்துள், "நரியைக் குதிரை செய்வானும்" என்று அருளிச்செய்ததும் இவ்வாற்றால். அடிகள் பொருட்டுச் சிவபெருமான் நரியைப் பரியாக்கிய திருவிளையாடலைக் குறிப்பதாகவே கொள்ளப்படும். மற்றும் இன்னோரன்னவாகக் கொள்ளப்படுதற்கு உரியன பல.

'திருவாதவூர் அடிகள் அருளிச்செய்த திருவாசகம், திருக்கோவையார் என்பன தேவாரங்கட்கு முற்பட்டன, எனவே' தமிழ்மொழியில் ஓர் ஆசிரியராலே பலவகை இயல்புகளும் பொருந்தச் செய்யப்பட்ட பத்தித்துறை முதற் பேரிலக்கியம் எட்டாந் திருமுறையேயாதல் தெளிவு. இதனால், 'திருவாசகமே சைவம்; சைவமே திருவாசகம்' என்னும் நிலை ஒருகாலத்திருந்தது என்பது புலனாகும். இன்றும் திருவாசகத்திற்கு அத்தகைய ஒரு தனிச் சிறப்பிருத்தல் அறியத்தக்கது. 'திருவாசகத்திற்கு உருகார் ஒருவாசகத்திற்கும் உருகார்' என்னும் பழமொழியால், திருவாசகத்தின் பத்திப்பெருக்கும், "ஆரணங்காண் என்பர் அந்தணர்"

என்னும் தனிப்பாடலால் திருக்கோவையாரின் இலக்கியச் சிறப்பும் நன்கு வெளியாகும். அதற்கேற்ப, ஆசிரியர் ஆளுடைய அடிகள் திருவாசகத்தில் இறைவனை எத்தனை எத்தனை வகையால் பாடுகின்றார்!

'சிவபுராணம்' என்னும் முதற்பகுதியில், இறைவனது பெருமைகள் பலவற்றையும் தொகுத்துக் கூறி, இரண்டாவதாகிய கீர்த்தித் திருவகவலில் இறைவன்தன் அடியார்களுக்கு அருள்புரிந்த வரலாறுகளை எல்லாம் எடுத்தோதி, மூன்றாவதாகிய திருவண்டப் பகுதியுள், இறைவன் பெரியதிற் பெரியனுமாய்ச் சிறியதிற் சிறியனுமாய் நிற்கும் முறைமையை விரித்து, அவ்வாற்றால் எத்திறத்தார்க்கும், எவ்வகையானும் அரிதற்கரியனாகிய அவன், தமக்கு எளிவந்து அருள்புரிந்த அருட்டன்மையை வியந்து வாழ்த்தி, நான்காவதாகிய போற்றித் திருவகவலுள் இறைவனது இயல்புகள் பலவற்றையும் பல்பெயர்க் கோவையாக வைத்துப் போற்றி, போற்றி என உளம் உருகிப் பலவாறு போற்றி, அடிநிமிர்ந்து வந்த பெரிய பாட்டுக்களாக நான்கு தனிநிலைச் செய்யுட்களை அருளிச்செய்தார்.

மற்றும் சொற்றொடர் நிலைச்செய்யுளாக ஒரு நூறு பாட்டுக்களான் இயன்ற, 'சதகம்' என்பதனோடு, இருபது பாட்டுக்களாலும், ஒருபது பாட்டுக்களாலும் இயன்ற பலவகைத் தொகை நிலைச் செய்யுட்களாகிய பாமாலைகளை இறைவனுக்கு, தம் அன்பென்னும் நாராலே, செந்தமிழ்ச் சொற்களாகிய செவ்வி பெற்ற பூக்களை அவனது அருள் என்னும் தேன் ததும்பி வழியுமாறு அழகுபடத் தொடுத்தணிந்தார். இப்பாமாலைகளுட் பலவற்றை மகளிர் விளையாட்டின்கண் பாடப்படும் பாடல்களாகவே அமைத்தார். அங்ஙனம் அமைத்தது. தோற்றத்தால் மக்களது காதற் பாடல்கள்போலத் தோன்றி, உண்மையால், முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானிடத்துச் செல்லும் முறுகிய பேரன்புப் பாடலாய்ப் பயன்தருதற்பொருட்டு. அன்றியும் ஒரு பொருள் மகளிர் விளையாட்டுப் பாடலில் பாடப்படுமாயின், அது நாடெங்கும் நனிபரந்து பலர் நன்கறிந்த பொருளாய் நிற்றல் இயல்பாகலின், சிவபெருமானது திருப்புகழ் அத்தன்மையதாய் இலங்கி நிற்றல் வேண்டும் என்னும் கருத்தாலும் அடிகள் அவற்றை அங்ஙனம் அருளிச்செய்தாராவர்.

அடிகள் தமது திருக்குறிப்பினை இங்ஙனம், பிறர் கூற்றாக அருளிச் செய்ததன்றி, அதனை நேரே இறைவன் திருமுன் எடுத்து விண்ணப்பித்த பகுதிகள்தாம் எத்தனை!

இவையெல்லாம், 'திருவாசகம்' எனப் பெயர்பெற்று நிற்க, 'திருக்கோவை' எனப் பெயரிட்டுப் பொருட்டொடர் நிலைச் செய்யுளாய் விளங்கச் சிறந்ததொரு திருவருட் பேரிலக்கியத்தினை அடிகள் செய்தருளினர். 'இடுகுறிவகையால் மேலனவே 'திருவாசகம்' எனப்படினும், காரண வகையால் திருக்கோவையும் திருவாசகமே என்னும் கருத்தால், அதனையும் 'கோவைத்திருவாசகம்' என வழங்குவர் ஆன்றோர்.

இவை அனைத்திலும் அடிகளது அருள்நிலையும், அன்பு நிலையும், இவ்வுலக வாழ்க்கையை நீத்து இறைவன் அடிநிழற் கண்ணே சென்று வாழ்தற்கண் அவர்க்கிருந்த அளவிலா விரைவும் தெற்றென விளங்கி நிற்றலேயன்றி, அவற்றில். அனைவரும் ஆழ்ந்துணர்ந்து பயன் பெறுதற்குரிய அரும் பொருள் திருமொழிகள்தாம் எத்துணைய !

" அவனருளாலே அவன்தாள் வணங்கி ", " சிந்தனை நின்றனக்காக்கி நாயினேன்றன் கண்ணிணை நின் திருப்பாதப் போதுக்காக்கி - வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன் மணிவார்த்தைக் காக்கி ", " வணங்கத் தலைவைத்து வார்கழல் வாய் வாழ்த்த வைத்து இணங்கத்தன் சீரடியார் கூட்டமும் வைத்தெம்பெருமான் ", " தன் ஈரடிக்கு என் இரண்டு கரங்கள் தந்தான் " என்றாற்போலும் அருந்திரு மொழிகட்கு அடிகள் திருமுறையில் ஓர் அளவுண்டோ !

" கல்நார் உரித்த கனியே போற்றி ", " கல்லைப்பிசைந்து கனியாக்கித் தன்கருணை - வெள்ளத்தழுத்தி வினைகடிந்த வேதியனை " ' நானேயோ தவம் செய்தேன் சிவாயநம எனப் பெற்றேன் ", " பொற்றவிசு நாய்க்கிடுமா றன்றேநின் பொன்னருளே, " உலவாக் காலம் தவம் எய்தி உறுப்பும் வெறுத்திங் குனைக் காண்பான் - பலமாமுனிவர் நனிவாடப் பாவியேனைப் பணி கொண்டாய் ", " அன்பராகிமற் றருந்தவம் புரிவார் அயனும் மாலும் மற்றழலுறு மெழுகாம் - என்பராய் நினைவார் எனைப்பலர் நிற்க, இங்கெனை எற்றினுக்காண்டாய் - வன்பராய் முருடொக்கும் என் சிந்தை மரக்கண் என் செவி இரும்பினும் வலிது " " யானே பொய்; என் நெஞ்சும் பொய்; என் அன்பும் பொய் ", " நாய்வயின் உள்ள குணமும் இல்லேனை நற்றாண்டு கொண்ட - தீவயின் மேனியன் " " பாரார் விசும்புள்ளார் பாதாளத்தார் புறத்தார் - ஆராலும் காண்டற் கரியான் எமக் கெளிய பேராளன் ", " வான்வந்த தேவர்களும் மாலயனோ டிந்திரனும் - கானின்று வற்றியும் புற்றெழுந்தும் காண்பரிய

தான்வந்து நாயேனைத் தாய்போல் தலையளித்திட்டு '' என்றாற் போலும் திருமொழிகள், அடிகளது பணிவையும், இறைவன் தமக்குச் செய்த கருணையை நினைந்து கசிந்துருகும் உருக்கத் தினையும் தெள்ளத் தெளியப் புலப்படுத்துகின்றனவல்லவோ!

'' பொய்யனேன் நான் உண்டுடுத்திங் கிருப்பதானேன் போரேறே '', '' கண்கெட்ட ஊரேறாய் இங்குழல்வேனை கொடியேன் உயிர்தான் உலவாதே '', '' ஊனார் புழுக்கூடிது காத்திங் கிருப்பதானேன் உடையானே '', '' முடையார் புழுக்கூ டிதுகாத்திங் கிருப்பதாக முடித்தாயே ''. '' மொய்ப்பால் நரம்பு கயிறாக மூளை என்பு தோல்போர்த்த - குப்பாயம்புக் கிருக்ககில்லேன் கூவிக்கொள்ளாய் கோவேயோ '' என்றாற் போல வரும் எண்ணிறந்த தொடர்கள் அடிகளுக்கு இவ்வுலக வாழ்க்கையில் உண்டாகிய வெறுப்பினை நன்கு புலப்படுத்தி நிற்கும்.

உடம்பொடு நின்று இவ்வுலகத்தில் வாழ்தல் அடிகட்குப் பொறுக்கவொண்ணாத பெருந் துன்பமாய்த் தோன்றினமையை, '' தினைத்துணையேனும் பொறேன் துயராக்கையின் திண் வலையே '' என்பதனால் இனிது விளங்க அருளிச்செய்தார். இத்துன்பம் காரணமாக அடிகட்கு, ' இறைவன் தம்மை முன்பு எளிவந்து ஆண்டானாயினும், பின்னர்க் கைவிட்டனனோ ' என்ப தோர் ஐயமும் தோன்றுவதாயிற்று. அதனால், '' தன்மை பிறரால் அறியாத தலைவா, பொல்லா நாயான - புன்மையேனை ஆண்டு ஐயா புறமே போக விடுவாயோ - என்னை நோக்குவார் யாரே! என் நான் செய்கேன்! எம்பெருமான் - பொன்னே திகழுந் திருமேனி எந்தாய்! எங்குப் புகுவேனே '' என்று முறை யிடுகின்றார்! ' நீத்தல் விண்ணப்பம் ' என்னும் பகுதி முழுவதும், ' எம்பெருமானே, என்னை நீ கைவிடாது காத்தல் வேண்டும் ' என்னும் முறையீடேயாகும்.

இவ்வாறு முறையிடினும், '' நன்றே செய்வாய் பிழை செய் வாய் நானோ இதற்கு நாயகமே '', ' ஆயக் கடவேன் நானோ தான் என்னதோ இங்கதிகாரம் - காயத் திடுவாய் உன்னுடைய கழற்கீழ் வைப்பாய் கண்ணுதலே '', '' மண்மேல் யாக்கை விடு மாறும் வந்துன் கழற்கே புகுமாறும் - அண்ணா எண்ணக் கடவேனோ அடிமை சால அழகுடைத்தே '' என்றாற்போலும் திருமொழிகளால், அடிகள் தம்முனைப்பின்றி இறைவன் அருள் வழிப்பட்டு நின்றமை நன்கு புலனாகும்.

இவையேயன்றித் திருமுறைகட்கு இயல்பாய சிவபெருமானது முழுமுதற்றன்மையைச் சிறப்பித்துக் கூறும் பகுதிகள் அடிகள் திருமொழிகளில் முனைந்து காணப்படுவனவாம். திருச்சாழற்பகுதி, அதனைத் தடைவிடைகளால் எடுத்தோதி விளக்குவதும், திருவுந்தியார், அதனையே பொருளாகக் கொண்டெழுந்ததும், அச்சப்பத்து, சிவபெருமானைப் பொது நீக்கிநினையும் சிறப்பினை விளக்குவதுமாம். ஏனைய பகுதிகளிலும் இஃது ஆங்காங்கு விரவி நிற்பதே.

ஏத்து வகையில் அருளிச்செய்த திருவாசகத்துள் செம்பொருளாகக் காணப்படும் அடிகளது அனுபவங்கள் யாவும், இலக்கிய வகையில் அருளிச்செய்த அவரது திருக்கோவையிலும் மறைபொருளாய் நிரம்பி நிற்கின்றன. இவ்வாறு அளவிட ஒண்ணு அருஞ்சிறப்பு வாய்ந்த இவ் எட்டாந் திருமுறைக்கு உரைகாண்பது எளியதொன்றே! ‘அடிகளது திருமுறைக்குப் பொருள் யாது’ என வினவியவர்கட்கு, அம்பலக் கூத்தனையே காட்டி, ‘இவர்தாம் அதற்குப் பொருள் எனஅடிகளே கூறினர்’ என்பது ஒரு செவிவழிச் செய்தி உண்டு. சிவப்பிரகாச அடிகள் தமது நால்வர் நான்மணிமாலையில், “பெருந்துறை புகுந்து பேரின்ப வெள்ளம் - மூழ்கிய புனிதன் மொழிந்தவா சகமே - வாசகம்; அதற்கு வாச்சியம் - தூசகலல்குல் வேய்த் தோளிடத் தவனே” எனக் கூறினமை இதனை வலியுறுத்துகின்றது. இவ்வாற்ருல், ‘திருவாசகத்திற்கு உரை எழுதுதல் கூடாது’ என்றும் ஒரு காலத்திற் சொல்லப் பட்டு வந்தது. எனினும், தேவாரங்கட்குப்போலாது, ‘திருவாசகத்திற்கு இற்றைக்குச் சிறிது முற்பட்ட காலந்தொட்டே இன்றுகாறும் உரைகள் பல தோன்றி வந்துள்ளன. மிக மூற்பட்ட காலத்தே திருக்கோவையார்க்கு இரண்டு உரைகள் ஒன்றன்பின் ஒன்ருகத் தோன்றின. அவற்றுள் பின்னதாகிய பேராசிரியர் உரையே சிறப்பாகக் கொண்டு போற்றப்பட்டு வருகின்றது. எனினும், ஓரோரிடங்கள் தவிரப் பேராசிரியர் முன்னை உரையையே பின்பற்றி உரை வகுத்துள்ளார். முன்னை உரை மிகச் சுருங்கியிருப்பினும், ஆழ்ந்த நுட்பங்கள் பலவற்றை உடைய மெய்யுரையாகவே விளங்குகின்றது. பேராசிரியரும் அவ்வுரையை அங்ஙனமே மதித்துப் பல இடங்களில் தம் கருத்தை இரண்டாவது பொருளாகவே உரைத்துச் சென்ருர். விரிவும், சீரிய செந்தமிழ் நடையுமே பேராசிரியர் உரையிற் காணப்படும் பெரும்பான்மையான சிறப்புக்கள்.

திருக்கோவையார் உரையைப்போலத் திருவாசக உரைகள் ஒரே வகையாய் அமையவில்லை. அவைகளுட் சில, திருவாசகத்தின் சில பகுதிகட்கேயன்றி, முழுவதற்கும் எழுதப்படாதன.

மேலும் இவ்வுரைகளுள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு போக்கில் அமைந்துள்ளது. திருவாசகம் சிவானுபூதியின் சிறந்த விளைவாகலின், அதன்கண் உள்ள சொற்களுக்கு ஏனைய இலக்கியங்களில் உள்ள சொற்களுப் பொருள் காண்பது போலப் பொருள் காணாது, தத்துவப் பொருளே காணுதல் வேண்டும் எனக் கொண்டு ஒன்று அனுபூதியுரைப்பதும், மற்றொன்று யோகப் பொருள் கூறுவதும், பிறிதொன்று நாயக நாயகி பாவமாக ஐந்திணைப் பொருள் வழங்குவதும், வேறொன்று அனைத்து வகையானும் அகலங் கூறிச் செல்வதும் இங்ஙனம் அவை பல திறத்தனவாகக் காணப்படுகின்றன. எனினும் இவற்றுக்கிடையில், பாட்டுக்குப் பொருள்கொள்ளும் மரபு பிறழாது, சொற்பொருள், கருத்துப்பொருள், நோக்குடைப் !பொருள் முதலியவற்றை உரைத்துச் செல்லும் உரையும் இல்லாமல் இல்லை. இந்நிலையில் எட்டாந் திருமுறைக்குக் குறிப்புரை எழுதும் பணி அடியேனுக்கு உளதாயிற்று.

தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளவர்கள் திருமுறைகள், குறிப்புரை ஆராய்ச்சியுரைகளுடன் முறையாக வெளிவரத் திருவுளம்பாலித்துள்ளார்கள். அவ்வகையில் முதல் ஏழு திருமுறைகளாகிய தேவாரத் திருமுறைகள் வெளிவந்து பலர்க்கும் பயன்பட்டு வருகின்றன. அவற்றைத் தொடர்ந்து எட்டாந் திருமுறையாகிய திருவாசகம் திருக்கோவையார் திருமுறையும் அங்ஙனம் வெளிவருதற் பொருட்டு அதற்குக் குறிப்புரை எழுதும் வண்ணம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் அடியேனுக்கு அருளாணை பிறந்தது.

ஆறாந் திருமுறை ஏழாந் திருமுறை உரைகளிற் போலவே அடியேன் இவ் எட்டாந்திருமுறைக் குறிப்புரையிலும், ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தில் எழுந்த அருளாணையின்வழி நிற்குங் கடப்பாடுபற்றிப் புகுந்தேனல்லது: 'இதற்கு ஏனைய உரைகளிலும் விழுமியதோர் உரைகாண்பேன்' என்னும் கருத்தினாற் புகுந்தேனல்லேன். தேவாரத் திருமுறைகள் இரண்டற்கும், இத்திருவாசகம் திருக்கோவையார்க்கும் என்னால் இயன்ற பணியைச் செய்தற்குக் கிடைத்த இவ்வாய்ப்பினைக் கிடைத்தற்கரிய பெரும்பேறாகவே நினைந்து மகிழும் மனமுடையேனாதலின், இவ் அரியவாய்ப்பினை எனக்கு அளித்தருளிய ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களுடைய பொன்னார் திருவடிகளுக்கு எனது மனமொழி மெய்களாலாகிய வணக்கங்களைப் பன்முறையும் செலுத்திக்கொள்கின்றேன்.

மேற்கூறியவாறு இவ் எட்டாந்திருமுறைக்குப் பல உரைகள் முன்னரே வெளிந்திருத்தலின், இன்றியமையாத சிலவற்றை மட்டில் விளக்கிச் சுருக்கமாக அமைத்தலேயே குறிக்கோளாகக் கொண்டது இக்குறிப்புரை. எனினும், கருத்து வேறுபாட்டிற்கு உரியனவாய் இன்றியமையாது விரித்துரைக்கற்பாலன சில விரித்தே உரைக்கப்பட்டன. திருக்கோவையாரின் குறிப்புரையில் பெரும்பாலும் பேராசிரியர் உரையும், சிறுபான்மை பழைய உரையும் தழுவப்பட்டன. எனினும், அவ்விரண்டிற்கு வேருகவும் சில விடங்களில் உரைகொள்ள நேர்ந்தது.

திருக்கோவையாரின் பாட்டு ஒவ்வொன்றிற்கும் கொளு அமைந்துள்ளது. ஆயினும் அவற்றைச் செய்தார் யாவர் என்பது விளங்கவில்லை. பழைய உரையாசிரியர், பாட்டிற்குப் போலவே அக்கொளுக்களுக்கு முழுவுரை எழுதியுள்ளார். பேராசிரியர், இன்றியமையாத இடங்களில் சில குறிப்புக்களைத் தந்துள்ளார். இவற்ருல் அக்கொளுக்கள் இவ்வுரைகட்குமுற்பட்டவை எனத்துணியலாகும். அவை, திருவாசகப்பகுதிஒவ்வொன்றிற்கும் குறிப்பாக ஒவ்வொருதொடர் செய்யப்பட்டிருப்பதுபோலத் திருக்கோவையாரின் துறைப்பாட்டு ஒவ்வொன்றற்கும் ஒவ்வொரு கொளுச்செய்யப்பட்டது எனத் தோன்றுகின்றது. ஆயினும் இவ்விரு திறத்துக் குறிப்புக்களையும் தந்தோர் ஒருவரோ வேறு வேருனவரோ என்பது புலப்படவில்லை. திருக்கோவையாரின் கிளவிகளுக்கு அமைந்த நூற்பாக்கள் பழைய உரையாசிரியர் உரையுள் காணப்படவில்லை. அதனுல் அவை பேராசிரியர் உரையுள் முதற்பாட்டுரைக்கண் காணப்படும் உரைப்பாயிர நூற்பாப்போலப் பேராசிரியராலே செய்யப்பட்டன எனக் கருதவேண்டி உள்ளது. கொளுக்களில் பல இடங்களில் முன்னைய இரண்டு உரைகளிலும் பெரிதும் வேறுபட்ட பாடங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் பேராசிரியர் கொண்டவாறே இங்குக்காட்டப்பட்டன. நூற்பாக்களையும், கொளுக்களையும் இவ்வுரையில் எடுத்துக்காட்டியதன்றி, வேறொன்றும் கூறவில்லை. இவை அனைத்தையும் அறிஞர் உலகம் உற்றுநோக்கி, அல்லன நீக்கி நல்லன கொள்ளும் என்று நம்புகின்றேன்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணியவர்கள் திருமுறைகளில் உள்ள ஈடுபாட்டினுல் திருமுறை வழிபாடு, திருமுறைவிழா, திருமுறை மாநாடு, திருமுறை வெளியீடு முதலியவற்ருல் திருமுறைகளை எங்கும் பரவச்செய்துவருபவர்கள். அம்முறையில் இதுபொழுது எட்டாந்திருமுறையும் குறிப்புரை, ஆராய்ச்சியுரை முதலிய

வற்றுடன் வெளிவரத் திருவுளம் பற்றிய வண்ணம் தருமை யாதீனத்தின் ஆதிபரமாசாரியர் ஸ்ரீ குருஞானசம்பந்தரது 1966 ஆம் ஆண்டுக் குருபூஜை விழா மலராக இது வெளிவருகின்றது. திருவாசகம் திருக்கோவையார் என்னும் இரண்டும் உரையுடன் ஒருங்கிணைந்து விளங்குவது இப்பதிப்பில் உள்ள ஒரு தனிச் சிறப்பாகும். ஸ்ரீ லஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தின் இப் பெருங்கருணைத் திறத்திற்குத் தமிழுலகமும் சைவ உலகமும் என்றும் குன்றுநன்றி பாராட்டும் கடப்பாடுடையன.

இவ்வுரையினை முழுவதும் நன்கு ஆராய்ந்து 'உரைமாட்சி' எழுதியளித்தவர்கள், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி, முன்னாள் முதல்வரும், மாயூரம் அன்பநாதபுரம் வகையார் அறத்துறைக்கல்லூரிவிரிவுரையாளரும் ஆகிய செஞ்சொற்கொண்டல் வித்துவான். திரு. சொ. சிங்காரவேலனார் M. A., Dip. Ling. அவர்கள். இவர்கள் தமதுஇயற்கை நுண்ணறிவாலும், இலக்கிய இலக்கண மொழிப்புலமையாலும் இவ்வுரைப்பொருளைத் திறனாய்வு முறை யில் பலவகையாகப் பகுத்துக்காட்டி எடுத்துரைத்திருப்பது, இவ் வுரைக்கு மாட்சி தருவதோடன்றி, இத் திருமுறையினையும், உரையையும் ஆய்வோருக்குப் பெருந்துணை செய்வதாகவும் உள்ளது. இவ்வுரையையும், அதுகாரணமாக அடியேனையும் பலவகையாகப் பாராட்டியுள்ள அவர்களது பேரன்பிற்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இத் திருமுறைக்கு முதற்கண் இன்றியமையாது வேண்டப் படுவது, இத் திருமுறையின் அருளாசிரியராகிய திருவாதவூர் அடிகளது அருள் வரலாறாகும். அவ்வரலாறு, சமயாசாரியர் களில் ஏனைய மூவரது வரலாறுபோல் இல்லாமல், பலநூல்களைக் கொண்டு ஆய்ந்துணர வேண்டிய ஒன்றாகும். அதனைஅம்முறை யில் நன்கு ஆராய்ந்து அகச்சான்றுகளுடன் சிறப்புற எழுதித் தந்தவர்கள் தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பொறுப்பு முதல்வர் திருநெறிச்செம்மல், நல்லிசைப்புலவர், வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்கள்.

தித்திக்கும் மணிவார்த்தையாகிய இவ்எட்டாந்திருமுறையுள் அமைந்த இலக்கியச்சுவையைத்தனித்தெடுத்துவிளக்கிவரைந்து ஓர்இனியகட்டுரையை ஆக்கிஅளித்தவர்கள் தருமையாதீனப் பல் கலைக்கல்லூரிப் பேராசிரியை வித்துவான். திருமதி. ப. நீலா அம்மையார் அவர்கள்.

இலக்கியங்களில் இன்பந்தருவன உவமையும் உருவகமு மாகிய அணிநலம். அவைகளை இத்திருமுறைப் பதிப்பிற்கு அணியாகத் தொகுத்தும், திருவாசகம் திருக்கோவையார் உள்ளுறை, பாட்டுமுதற்குறிப்பகராதிகளை அமைத்தும் தந்ததோடன்றி இத்திருமுறை அச்சாகும் காலத்தில் பிழை திருத்தம்செய்து உதவியவர்கள், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர் சிரோமணி. வித்துவான். திரு. வி. சபேசனுர் அவர்கள். இப்புலவர் பெருமக்கள் மூவருக்கும் எனது உளமார்ந்த நன்றி தனித்தனியே உரியதாகும்.

முன்னைத் திருமுறைகள்போலவே இவ் எட்டாந்திருமுறை யினையும் அழகுபெற அச்சிட்டுத் தந்த தருமபுரம் ஞானசம்பந்தம் அச்சகத்தார்க்கும் எனது நன்றி உரியதாகின்றது.

அடியார் உள்ளத்து அகலாதிருந்து அவர் கருத்து யாவும் முடியும் வண்ணம் முன்னின்று முடிக்குமாறே, இத் திருப்பணி யினையும் முன்னின்று முடித்தருளிய முடியா முதல்வனுகிய இறைவனது திருவருளை எண்ணியும், வாழ்த்தியும், இறைஞ் சியும் அமைகின்றேன். அத்திருவருள் ஏனைய திருமுறைகளையும் இங்ஙனமே இனிது வெளிவரச் செய்வதாகுக.

திருவாசகம் திருக்கோவையார், என்னும் இருபெரு நூல் களும் ஒருங்கிணைந்த இவ் எட்டாந்திருமுறைப் பதிப்பினைத் தமிழுலகமும், சைவ உலகமும் பெற்றுப் பயன்பெறுவதாக.

வாழ்க திருமுறை! வளர்க திருநெறி!

இங்ஙனம்,

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள்
அருளாணையின் வண்ணம்,
அடியேன்
சி. அருணைவடிவேல்.

தருமையாதீனப்
பல்கலைக் கல்லூரி,
தருமபுரம்.
21—3—1968.

உ

சிவமயம்

பொருளடக்கம்

பக்கம்

உ

சிவமயம்

திருவாசகத்தில் வந்துள்ள தலங்கள்

1. அண்ணுமலை
2. ஆரூர்
3. இடைமருதூர்
4. ஈங்கோய்மலை
5. உத்தரகோசமங்கை
6. ஐயாறு
7. ஓரியூர்
9, கச்சியேகம்பம்
10. கடம்பூர்
13. கயிலை
8. கல்லாடம்
11. கழுமலம்
12. கழுக்குன்றம்
14. குற்ருலம்
15. கோகழி (திருப்பெருந்துறை)
16- சந்திரதீபம்
17. சாந்தம்புத்தூர்
18. சிராப்பள்ளி
19. சிவபுரம்
20. திருப்பெருந்துறை
21. தில்லை
22. துருத்தி
23. தேவூர்
24. நந்தம்பாடி
25. பட்டமங்கை
26. பராய்த்துறை
27. பஞ்சப்பள்ளி
28. பழனம்
29. பனையூர்
30. பாண்டூர்
31. புறம்பயம்
32. பூவணம்
33. மகேந்திரமலை
34. மதுரை
35, வாஞ்சியம்
36. வாதவூர்
37. வெண்காடு
38. வேலம்புத்தூர்

உ
சிவமயம்

திருவாசகப் பதிகத் தொகை

ஆசிரிய விருத்தம்

சிவபுரா ணங்கீர்த்தி திருவண்டப் பகுதி
திருப்போற்றி யுடனகவ றிருச்சதக நூறும்
நவநீத்தல் விண்ணப்ப மைம்பதாம் பாவை
நலந்திகழு மம்மானை நல்லபொற் சுண்ணம்
புவனமகிழ் கோத்தும்பி திருவார்தெள் ளேணம்
பொருவரிய திருச்சாழல் பூவல்லி யுந்தி
இவையிருப தாமிரே ழாகுதோ ணோக்கம்
எழிற்பொன்னூ சலுமேயொன் பானென்ன வீவையே.

திருவன்னை குயிற்பத்துத் திருத்தத்த சாங்கம்
திருப்பள்ளி யொடுகோயின் மூத்ததிருப் பதிகம்
அருட்கோயிற் றிருப்பதிகஞ் செத்திலடைக் கலமே
ஆசையதி சயம்புணர்ச்சி வாழாப்பத் தருட்பத்
தொருபதென வுரைசெய்வர் கழுக்குன்ற மேழாம்
உயிர்பிரார்த் தனைகள்பதி னொன்றுகுங் காண்பத்
திருமைபெருங் குழைத்தபத் துயிருண்ணி யச்சம்
எழிற்பாண்டி பிடித்தபத்தொ டேசறவு பத்தே.

திருப்புலம்பல் மூன்றுகுலா வற்புதமே சென்னி
திருவார்த்தை பத்தெண்ணப் பதிகதொரு வாரும்
பரற்குறிய யாத்திரைப்பத் தொருபதா மற்றைப்
படையெழுச்சி யிரண்டாகும் பதினொன்றும் வெண்பா
அருட்டவழும் பண்டாய நான்மறையே யாகும்
வலியபடை யாட்சியெட் டானந்த மேழாம்
அருட்பெருமச் சோவொன்ப தைம்பதொன்றும் பதிகம்
அகவலொடு செய்யுள்அறு நூற்றைம்பத் தெட்டே.

உ

சிவமயம்

வாதவூரடிகள் வரலாறு*

திருநெறிச்செம்மல், நல்லிசைப்புலவர்

வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்கள்

பொறுப்பு முதல்வர், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி.

எழுதரு மறைகள்தேரு இறைவனை எல்லிற் கங்குல்
பொழுதறு காலத்தென்றும் பூசனை விடாது செய்து
தொழுதகை தலைமீ தேறத் துளும்புகண் ணீருள்மூழ்கி
அழுதடி அடைந்த அன்பன் அடியவர்க்கு அடிமைசெய்வாம்.

— திருவிளையாடற் புராணம்.

செந்தமிழ் மணமும் சிவமணமும் ஒருங்கே கமழும் திருநாடு தென்பாண்டிவளநாடு. இந்நாட்டை அணிசெய்வது, "புனல்யாறு அன்று இது பூம்புனல்யாறு" எனப் புலவர்களால் போற்றப்படும் வையை யாறு ஆகும். இந்நதி வரலாற்றுச் சிறப்பும், புராண இதிகாசச் சிறப்புக்களும் உடையது.

திருவவதாரம் :

வையை யாற்றங்கரையில் மதுரை மாநகரத்திலிருந்து ஏழு கல் தொலைவில் திருவாதவூர் என்ற தலம் உள்ளது. இத்தலத்தில் இறைவன் வாதபுரீசுவரர் என்னும் திருநாமத்தோடு எழுந்தருளியுள்ளார். இத்தலம் வாயு பூசித்த காரணத்தால் வாதபுரம் என வழங்கப்பெறுகிறது. இந்நகரில் அமாத்திய அந்தணர் குலத்தில் சிவநெறி பிறழாச் சிந்தையாளராகிய அந்தணர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் பெயர் சம்புபாதாசிருதர். அவர் மனைவியாரின் பெயர் சிவஞானவதி என்பதாகும்.

---

*இவ் வரலாறு திருவாதவூரர் புராணத்தைத் தழுவி எழுதப் பெற்றதாகும்.

இவ்விருவரும் இல்லறம் வழுவாது ஒழுகிவரும் நாளில் தென்னாட்டில் புறச் சமயமாகிய பௌத்தம் மேலோங்கி இருந்தது. சைவ சமய வளர்ச்சி குன்றியிருந்தது. இறைவன் திருவருளால் இவ்விருவருக்கும், சைவம் தழைக்கவும், வேத சிவாகம நெறிகள் விளங்கவும் திருமகனார் ஒருவர் திருஅவதாரம் செய்தருளினார். தாய்தந்தையர் மனம் மகிழ்ந்து அம்மகனார்க்கு '' திருவாதவூரர் '' என்னும் திருப்பெயர் சூட்டினர்.

அமைச்சுரிமை யேற்றல் :

திருவாதவூரர்க்கு வயது ஏறஏறக் கலைஞானங்களும் நிரம்பின. பதினாறு வயதளவில் வாதவூரர் கலைஞானங்கள் அனைத்தும் கைவரப்பெற்றார். இவரது கல்வித் திறத்தையும், நல்லொழுக்கத்தையும், உற்றது கொண்டு மேல்வந்துறுபொருள் உணர்த்தும் அறிவின் திறனையும் கண்டு அனைவரும் வியந்தனர். அக்காலத்தில் பாண்டியநாட்டை ஆண்டுவந்த மன்னன் அரிமர்த்தன பாண்டியன் என்பவனாவான். திருவாதவூரரது அறிவுத்திறனைக் கேள்வியுற்ற அரிமர்த்தன பாண்டியன் அவரைத் தனது அவைக்கு அழைத்து அளவளாவி, அவரது அறிவு நலனைக் கண்டு வியந்து '' தென்னவன் பிரமராயன் '' என்னும் பட்டம் சூட்டித் தனது முதன் மந்திரியாக அமர்த்திக் கொண்டான். திருவாதவூரரும் இஃது இறைவனுடைய ஆணையென்று எண்ணி அதனை ஏற்றுக்கொண்டு அமைச்சுரிமைத் தொழிலை மிகக் கவனத்தோடு இயற்றிவந்தார். வாதவூரரது அமைச்சியலால் குடிமக்கள் மிக்க மகிழ்ச்சி அடைந்தனர். வாதவூரரும், அரிமர்த்தன பாண்டியனுக்குக் கண்ணும் கவசமுமாக விளங்கி வந்தார்.

பதவியில் பற்றின்மை :

வாதவூரர் தமக்குக் கிடைத்த அமைச்சுரிமைத் தகுதியால் உலக அனுபவ இன்பங்களில் மகிழ்ச்சி யடையவில்லை. உலக வாழ்வும் வாழ்வில் காணும் பெரும் போகமும் நிலையற்றவை என்றறிந்தமையால், அப்பதவியில் அவர்க்கு உவர்ப்புத் தோன்றியது. '' கூத்தினர் தன்மைவேறு கோலம் வேறு ஆகுமாறு போல '' இவர் மேற்கொண்டிருந்த அமைச்சுரிமைக்கும், இவருக்கும் தொடர்பில்லாமல் இருந்தது. ஒரு சிறந்த குருநாதரைத்

தேடும் வேட்கை இவருக்கு மிகுந்துவந்தது. பிறவிப் பெரும் பயனை அடைதற்குரிய வழி என்ன என்பதிலேயே இவருடைய சிந்தனை சுழன்றுகொண்டிருந்தது.

குதிரைகள் வாங்கச் செல்லல் :

ஒருநாள் வாதவூரர் அரசவையில் அமைச்சராய் வீற்றிருந்தார். அப்போது அரசனுடைய குதிரைச் சேவகர்கள் அங்கு வந்து 'அரசரேறே! நமது குதிரைப்படைகள் குறைந்துவிட்டன. வயது முதிர்ந்த குதிரைகளும், நோய் நிறைந்த குதிரைகளுமே இப்போது உள்ளன. சிறந்த குதிரைகள் நம்மிடம் இல்லை. ஆதலின் குதிரைப் படைகளைப் பலப்படுத்தவேண்டும் என்று நினைவுறுத்துவது எங்கள் கடமை' என்று வணங்கித் தெரிவித்துக்கொண்டார்கள். அப்போது அரசவையிலிருந்த சில தூதர்கள் கீழைக் கடற்கரையில் நல்ல குதிரைகள் வந்து இறங்கியிருக்கின்ற செய்தியை அரசனிடத்துத் தெரிவித்தார்கள். அரசன் அமைச்சர் பெருமானாகிய பிரமராயரைப் பார்த்து "நம்முடைய கருவூலத்திலிருந்து வேண்டும் பொருள்களைப் பணியாளர் மூலம் எடுத்துச்சென்று நல்ல குதிரைகளை வாங்கி வருக" என்று ஆணையிட்டான்.

வாதவூரரும் அக்கட்டளையை ஏற்றுப் பொற்பண்டாரத்தைத் திறந்து அளவிறந்த பொருள்களை ஒட்டகத்தின்மீதேற்றிக் கொண்டு, படைகளும் பரிசனங்களும் தன்னைச் சூழ்ந்துவர மதுரைச் சொக்கேசன் ஆலயத்திற்குச் சென்று வணங்கி மதுரையை விட்டுப் புறப்பட்டார். பல காதங்களைக் கடந்து திருப்பெருந்துறையென்னும் தலத்தை அடைந்தார். அவ்வூரை அணுக அணுக அவர்மேல் இருந்த ஏதோ ஒரு சுமை குறைந்து வருவது போலத் தோன்றியது. இத்தலமே இறைவன் தன்னை ஆட்கொள்ளும் இடம்போலும் என்ற உணர்வு தோன்றியது.

குரு உபதேசம் :

அவ்வேளையில் சிவநாம முழக்கம் எங்கிருந்தோ வருவது அவர் செவிகளுக்கு எட்டியது. அவ்வொலி வரும் திசைநோக்கி வாதவூரரும் விரைந்து சென்றார். ஓரிடத்தில் கல்லால மரம் போன்ற பெரியதொரு குருந்த மரத்தடியில் சீடர்கள் சிலரோடு

சிவபெருமானே குருநாதராய் எழுந்தருளியிருந்தார். வேத சிவாகமங்களும், புராண இதிகாசச் சமய நூல்களும் ஆகிய பல நூல்களையும் கற்றுத் தெளிந்த சிவகணநாதர்கள் அக்குருநாதரிடம் சீடர்களாக விளங்கினர். அச்சீடர்களின் பாசமாம் பற்றறுக்கும், ஆசானாக அக்குருநாதர் வீற்றிருந்தார். அவரது வலத் திருக்கை சின்முத்திரையைக் காட்டிக்கொண்டிருந்தது. அவரது திருமுகம் ஒளி மண்டலமாகத் திகழ்ந்தது. அவரது கண்கள் திருவருள் விளக்கத்தைச் செய்துகொண்டிருந்தன. இவ்வாறு வீற்றிருந்த குருநாதரைக் கண்ட வாதவூரர் தாம் பலநாட்களாக விருப்பியிருந்த குருநாதர் இவரேயென்று எண்ணினார். காந்தம் கண்ட இரும்புபோல மணிவாசகர் மனம் குருநாதர் வசமாயிற்று. இந்நிலையில் விரைந்து அருகிற்சென்ற வாதவூரர் அடியற்ற மரம்போல அவரது திருவடியில் வீழ்ந்து பணிந்தார். 'ஐயனே! எளியேனை ஆட்கொண்டருளுக' என வேண்டி நின்றார். வாதவூரரின் பரிபாக நிலையைக் கண்ட குருநாதர் திருக்கண்நோக்கம், பரிசம் முதலிய தீட்சைகள் செய்து திருவடி சூட்டித் திருவைந்தெழுத்தை அவருக்கு உபதேசம் செய்தருளினார். இவ்வாறு தம்மை ஆட்கொண்டருளிய பெருங் கருணைத் திறத்தை வியந்த வாதவூரர் அன்போடு குருநாதருடைய திருவடிகளை மீண்டும் வணங்கி எழுந்துநின்றார். ஞானாசிரியரது திருவருள் நோக்கால், ஞானத்தின் திருவுருவாக வாதவூரர் மாறினார். தமது குருநாதரின் திருவடிகளுக்குத் தம்மை ஆட்கொண்ட கருணையைக் குறித்துச் சொல்மாலைகள் பலவும் சூட்டினார்.

மாணிக்கவாசகர் :

ஞானாசிரியர் திருமுன் வாதவூரர் பாடிய தோத்திரங்கள் இனிமையோடும் கேட்போர் மனத்தை உருக்கும் அருள் விளக்கத்தோடும் இருந்த காரணத்தால் ஞானாசிரியர் வாதவூரரை நோக்கி "உனக்கு 'மாணிக்கவாசகன்' என்ற பெயர் தந்தோம்" என்று கூறி அவருக்கு அப்பெயரைத் தீட்சா நாமமாகச் சூட்டினார். அன்றுமுதல் வாதவூரர் என்ற திருப்பெயருடன் மாணிக்கவாசகர் என்ற பெயரும் அவருக்கு வழங்குவதாயிற்று.

திருப்பெருந்துறைத் திருப்பணி :

மணிவாசகர் குருநாதரை வணங்கி 'என்னை ஆட்கொண்ட போதே என்னுயிரும் உடைமையும் தங்கட்குரியவாயின. ஆதலால் அடியேன் கொண்டுவந்த பொருள்கள் அனைத்தையும் ஏற்றுக்கொண்டு அருளல் வேண்டும்' என்று குறையிரந்தார். குருநாதரும் 'அப்பொருள்களைக்கொண்டு சிவப்பணி செய்க' என்று அருளாணையிட்டார். அக்கட்டளையின் படியே மணி வாசகர் அப்பொருள்களைக் கொண்டு திருப்பெருந்துறையில் மிகச் சிறந்த திருக்கோயிலைக் கட்டினார். திருவிழாக்கள் செய் தார். திருமடங்கள், திருநந்தவனங்கள் முதலியன அமைத் தார். அடியார்களுக்கு மாகேசுவரபூசை நிகழ்த்தினார். இவ் வாறு அரசன் குதிரை வாங்குவதற்குத் தம்மிடம் அளித்த பொருள்கள் அனைத்தையும் சிவப்பணிகளுக்கே செலவிட்டார். நாட்கள் பல சென்றன. மணிவாசகர் அருளாரமுதத்தை உண்டுகொண்டே தெருளார் சிவானந்த போகத்துத் திளைத் திருந்தார். அமைச்சரின் வேறுபட்ட நிலையை உடன் வந்த வர்கள் கண்டு மணிவாசகரிடம் 'குதிரைகொண்டு மதுரை செல்லவேண்டுமே' என்று தாங்கள் எண்ணி வந்த செயலை நினைவூட்டினர். மணிவாசகர் அவ்வுரைகளைக் கேளாதவராய் இறைவழிபாட்டில் ஈடுபட்டிருப்பதை அறிந்த பணியாளர் மதுரைமா நகருக்குச் சென்று பாண்டியனிடம் நிகழ்ந்தவற்றைத் தெரிவித்தனர்.

பாண்டியன் அழைப்பு :

இச் செய்தியை அறிந்த பாண்டியன் சினந்து திருமுகம் ஒன்று எழுதி அதை வாதவூரரிடம் சேர்ப்பித்து 'அவரை அழைத்து வருக' என ஆணையிட்டுச் சிலரை ஏவினன். பணி யாளரும் திருப்பெருந்துறையை அடைந்து அரசன் அளித்த திருமுகத்தை அமைச்சர் பிரானிடம் கொடுத்து அரசன் கட்டளையை அறிவித்து நின்றனர். அதைக்கேட்ட வாதவூரர் தம் குருநாதரிடம் சென்று நிகழ்ந்ததை விண்ணப்பித்து நின்றார். குருநாதர் புன்முறுவல் பூத்து "அஞ்சற்க, ஆவணி மூலத்தன்று குதிரைகள் வரும் என்று மன்னனிடம் அறிவித்து விலையுயர்ந்த மாணிக்கக்கல்லையும் கையுறையாகக் கொடுக்க" எனக் கூறி மாணிக்க மணியை அளித்து விடை கொடுத்தனுப்

பினர். வாதவூரரும் குருநாதரைப் பிரிய மனமில்லாதவராய்ப் பிரியா விடைபெற்று மதுரைக்கு எழுந்தருளினர்.

அரசவைக்கு வந்த மணிவாசகர் இறைவன் அருளிய மாணிக்க மணியை மன்னனிடம் கொடுத்து, 'வருகின்ற ஆவணிமூல நாளில் குதிரைகள் மதுரை வந்தடையும்' என்று கூறினர். அரசனும் சினம் மாறி மனம் மகிழ்ந்து அமைச்சரை அன்போடு வரவேற்று அருகிருத்தி அவரை மகிழ்வித்தான்.

மணிவாசகரை மன்னன் ஒறுத்தல் :

ஆவணி மூலநாளை அரிமர்த்தனன் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். அதற்கு இரண்டு நாள் முன்னர் அமைச்சருள் சிலர், 'வாதவூரர் சொல்லியன அனைத்தும் பொய்யுரை ; அவர் தங்களை ஏமாற்ற எண்ணுகின்றார். எடுத்துச் சென்ற பொருள்கள் அனைத்தையும் திருப்பெருந்துறையில் அரன் பணிக்காகச் செலவிட்டுவிட்டார், அவர் கூறுவதை நம்ப வேண்டா'' என்று கூறினர். பாண்டியன் ஒற்றர்களை விடுத்து அவர் மூலம் அமைச்சர்கள் கூறியன அனைத்தும் உண்மையென்பதை அறிந்தான். வாதவூரர் செய்கையை எண்ணிச் சினந்து தண்டநாயகர் சிலரை அழைத்து வாதவூரர்பால் சென்று குதிரை வாங்கக்கொண்டுபோன பொருள்கள் அனைத்தையும் வற்புறுத்தித் திருப்பப் பெற்றுக்கொண்டு வருமாறு கட்டளையிட்டான். அச்சேனைத்தலைவர்கள் வாதவூரரிடம்சென்று மன்னன் கட்டளையை எடுத்துக்கூறி அவரைத் துன்புறுத்தத் தலைப்பட்டனர். கொடுஞ் சிறையில் இட்டனர். சுடுவெயிலில் நிறுத்திக் கடுமையாக வருத்தினர். வாதவூரர் இறைவனைத் தியானித்து ஐயனே ! ஆவணிமூலத்தன்று குதிரை கொண்டு வருவதாகக் கூறிய உன் உரை பொய்யாகுமா ? உன் அடித்தொண்டன் இவ்வாறு துன்புறுவது தகுதியா ? என்னைக் கைவிடில் எனக்கு யார் துணை ? அடியான் ஒருவன் துன்புறுவது உனக்குக் குறையல்லவா ? என்றெல்லாம் இறைவனிடம் முறையிட்டு வருந்தினர்.

நரிகள் பரிகளாயின :

வாதவூரர்தம் வருத்தத்தைத் தணிக்கத் திருவுளம்கொண்ட பெருமான் நரிகளையெல்லாம் குதிரைகளாக மாற்றித் தேவர்

களெல்லாம் குதிரைச் சேவகர்களாகப் புடைசூழத் தான் குதிரை வாணிகன்போலத் திருக்கோலம் கொண்டு வேதமாகிய குதிரையில் அமர்ந்து, மதுரையை நோக்கிப் புறப்பட்டான். குதிரைப் படைகள் மதுரை நோக்கி வருவதை ஒற்றர்கள் மூலம் மன்னன் அறிந்தான். அவன் மனம் மகிழ்ந்தது. திருவாத வூரரைத் தவருகத் தண்டித்து விட்டோமே? என்று வருந்தி அவரை விடுவித்தான். அரசவையில் அவரை அன்போடு வரவேற்று முகமன்கூறி அருகிருத்தினன்.

பாண்டியன் பரிசு :

கடல் அலைகள்போல் வந்த படைகளின் விரைந்த நடையால் எழுந்த புழுதிப் படலம் வானை மறைத்தது. குதிரைக் கூட்டம் மதுரைமாநகரை அடைந்தது. வாணிகத் தலைவனுக வந்த சிவபிரான் பாண்டியன் முன்னிலையில் குதிரைகளனைத்தையும் கொண்டுவந்து நிறுத்தினன். குதிரைகளைப் பல வகை நடைகளில் நடத்திக் காட்டியும், ஆடல்கள் புரியச் செய்தும் பாண்டியனை மகிழ்வுறுத்தினன். பெருமகிழ்ச்சியடைந்த பாண்டியன் குதிரைத் தலைவனுக்கு ஒரு பட்டாடையைப் பரிசாகக் கொடுத்தான். குதிரைத் தலைவனுக வந்த பெருமான் அப்பரிசைப் புன்னகையோடு தன் செண்டினுல் வாங்கினன். தான் அளித்த பரிசை மரியாதைக் குறைவாகக் குதிரைத் தலைவன் பெறுவதைக்கண்ட மன்னன் வெகுண்டான். அருகிலிருந்த வாதவூரர் 'செண்டினுல் பரிசு பெறுதல் அவர்கள் நாட்டு வழக்கு' என்றுகூறி, மன்னன் சினத்தை மாற்றினர். பின்னர் குதிரை இலக்கணமறிந்த புலவர்கள் குதிரைகளை யெல்லாம் ஆராய்ந்து இவைகள் நல்ல நிறமும், நடையும், நல்ல சுழிகளும் பெற்றுள்ளன என்று பாராட்டினர். அரசனும் தானளித்த பொருளைவிடப் பல மடங்கு அதிகமான குதிரைகளைப் பெற்றதாக மகிழ்ந்து அவைகளைப் பந்தியில் சேர்க்குமாறு பணித்தனன். வணிகர் தலைவன் குதிரைகளையெல்லாம் கயிறுமாறிக் கொடுக்கும்படித் தன் உடன் வந்தவர்களிடம் கூறி அரசனிடம் விடை பெற்றுச் சென்றுன்.

பரிகள் நரிகளாயின :

அன்று இரவு நடுநிசியில் குதிரைகளெல்லாம் நரிகளாக மாறின. பந்தியில் இருந்த பழைய குதிரைகளையும் கொன்று

நின்று ஊர்மக்கள் அஞ்சும்படி மூலை முடுக்குகளில் எல்லாம் ஓடி மறைந்தன. காலையில் குதிரைச் சேவகர்கள் உள்ளம் பதறி, உடல் நடுங்கி, அரசனிடம் வந்து முறையிட்டனர். இச் செய்தியைக் கேட்ட மன்னன் சினம் பொங்கி அமைச்சர்களை அழைத்து வாதவூரர் செய்த வஞ்சனையைக் கூறிப் படைத் தலைவர்களை அழைத்து, வாதவூரரைச் சுடுவெயிலில் நிறுத்தித் தண்டனை அளித்து அவரிடத்தில் கொடுத்த பொருள்களை யெல்லாம் திரும்பப் பெற்றுக்கொண்டு வருமாறு உத்தர விட்டான். படைவீரர்கள் இவரை அழைத்துச் சென்று சுடு வெயிலில் நிறுத்தித் தலையிலே கல்லேற்றி ஒறுத்தார்கள். வாதவூரர் இறைவன் திருவருளை நினைந்து எனக்கு இத்தகைய துன்பங்கள் வருதல் முறையாகுமா? என்று கூறி வருந்தி நின்றார்.

வைகையில் வெள்ளம்:

வாதவூரருடைய துன்பம் துடைக்க எண்ணிய பெருமான், வையையாற்றில் வெள்ளம் பெருகுமாறு செய்தருளினார். வையையில் தோன்றிய பெருவெள்ளம் மதுரைநகர் முழுவதும் விரைந்து பரவத் தொடங்கியது. பெரு வெள்ளத்தைக்கண்ட ஊர்மக்கள் ஊழிக்காலமே வந்துவிட்டதென்று அஞ்சி மன்ன னிடம் சென்று முறையிட்டனர். பாண்டியனும் ஆற்று வெள்ளத்தைத் தணிக்க, பூ, பொன், பட்டு முதலிய அணிகலன் களை ஆற்றில் விட்டு வெள்ளம் தணியுமாறு ஆற்றைப் பணிந் தனன். வெள்ளம் மேலும் பெருகியதேயல்லாமல் சிறிதும் குறையாதது கண்டு அமைச்சர்களோடு கூடி ஆராய்ந்து சிவனடி யாராகிய வாதவூரரைத் துன்புறுத்தியதன் விளைவே இது என்று நன்கு தெளிந்து அவரை விடுவித்து மதுரைமாநகரை இவ் வெள்ளநீர் அழிக்காதவாறு காப்பாற்ற வேண்டும் என்று வேண்டிக்கொண்டான். வாதவூரரும் திருவருளை எண்ணி வழுத்தினார். வெள்ளத்தின் வேகம் ஒரு சிறிது குறைந்தது. இருப்பினும் முற்றும் வெள்ளம் குறையவில்லை. அதைக்கண்ட பாண்டியன் மதுரை மக்களையெல்லாம் ஒருங்கு கூட்டி ஒவ்வொருவருக்கும் இவ்வளவு பங்கு என்று அளந்து கொடுத்து ஆற்றின் கரையை அடைக்கும்படி ஆணையிட்டான்.

மண் சுமந்தது :

அரசன் ஆணையைக் காவலர் ஊர் முழுவதும் முரசறைந்து அறிவித்தனர். அந்நகரில் பிட்டு விற்று வாழ்க்கை நடத்தும் வந்தி என்னும் மூதாட்டி தனக்கு அளவு செய்துவிட்ட ஆற்றின் பங்கை அடைக்க ஆள் கிடைக்காமல் வருந்தினாள். நாள்தோறும் ஆண்டவனிடம் அன்பு செலுத்தி வந்த அவ்வந்தியின் துன்பத்தைத் தவிர்க்க இறைவன் அவளிடம் கூலி ஆள் போலத் தோன்றினான். 'யாரேனும் கூலி கொடுத்து என் வேலை கொள்வார் உண்டோ?' என்று கூவிய வண்ணம் தன்னை வந்தடைந்த அப்பணியாளனைக் கண்ட வந்தி மகிழ்ந்து, 'நீ எனக்குக் கூலியாளாக வரவேண்டும்; அவ்வாறு வந்து என் ஆற்றின் பங்கை அடைத்துத் தருவாயானால் நான் விற்கும் பிட்டைக் கூலியாகத் தருகிறேன்' என்று கூறினாள். அதற்கு இசைந்த அக் கூலியாள் அவள் கொடுத்த பிட்டை வாங்கி உண்டு, தாயே! என் பசி தீர்ந்தது; இனி நீ ஏவிய பணியை நான் செய்துமுடிப்பேன் என்று அவள் பங்கை அறிந்து அதை அடைப்பதற்கு முற்பட்டான்.

பாண்டியன் பிரம்படி :

வேலையைத் தொடங்கிய அவ் வந்தியின் ஆளாகிய சிவபெருமான் மண்ணை வெட்டித் தன் திருமுடியில் எடுத்துச் சென்று கரையில் கொட்டிவிட்டுக் களைப்படைந்தவன்போல ஒய்வு எடுத்துக்கொள்வதும், வந்தி அளித்த பிட்டை உண்பதும், ஆடுவதும் பாடுவதும் செய்து பொழுதுபோக்கினான். வேலை செய்து களைத்தவன்போலக் கூடையைத் தலையணையாக வைத்து உறங்கவும் செய்தான். ஆற்றின் கரை அடைபட்டதா என்பதைப் பார்வையிடவந்த மன்னனிடம் காவலர், ஊரில் உள்ளோர் ஒவ்வொருவரும் தத்தம் பங்கை அடைத்து முடித்தனர். பிட்டு விற்கும் வந்தியென்னும் கிழவியின் பங்கு மட்டும் அடைபடாமல் கிடக்கிறது. வந்திக்கு ஆளாய் வந்த ஒருவன் சரிவரத் தன் பணியைச் செய்யாமல் பொழுதைக் கழிக்கிறான்; அதனால் அப்பகுதி நூற்றைக் கெடுத்தது குறுணி என்பதுபோல, ஒருத்தி பங்கு ஊரார் பங்கையும் கரைக்கிறது என்று கூறினர். உடனே அப்பகுதியைப் பார்வையிட வந்த பாண்டியன் அக் கூலியாளை அழைத்து வரச்செய்து தன்னுடைய கைப்பிரம்பால்

முதுகில் அடித்தான். அடித்த அளவில் கூலியாளாக வந்த பெருமான் ஒருகூடைமண்ணை உடைப்பிற்கொட்டி மறைந்தான். பாண்டியன் அடித்த அப்பிரம்படி அரசன், அரசி, அமைச்சர், காவலாளர்கள் முதலிய எல்லோர் மேலும் பட்டது. அண்ட சராசரப் பொருள் அனைத்தின் மேலும் பட்டது. அப்போது வாதவூரர் இறைவன் தன் அடியவன் பொருட்டுக் கூலியாளாக வந்த திருவருளை எண்ணி வியந்தார். பாண்டிய மன்னன் வாதவூரர் பெருமையை நன்கறிந்து அவரை வணங்கி, 'நற்றவப் பெரியீர்! எனக்கு அமைச்சராய் அமர்ந்து எம் குல தெய்வத்தை என் கண்ணாரக்காட்டிக் குதிரைச் சேவகனாகவும், கூலியாளாக வும் வரச்செய்து என் பிறவி மாசை ஒழித்த பெரியவரே, என்னை மன்னித்தருளவேண்டும். தங்கள் பெருமையை இறை வன் எனக்கு நன்குணர்த்தினான். என் அரசுரிமையை இன்று முதல் தாங்கள் ஏற்றருளல் வேண்டும்' என்று வேண்டினான். வாதவூரர் பாண்டியனிடம் 'இறைவனுடைய திருவடித்தொண்டு செய்ய என்னை உரிமையாக்குவதே இவ்வுலக ஆட்சியை எனக் குத் தருவதற்கு ஒப்பாகும்' என்றார். மன்னனும் அவர் விரும்பியவாறு அவரைச் செல்லவிடுத்துத் திருவருள் உணர் வோடு தம் அரண்மனைக்குச் சென்றான்.

அமைச்சியலைத் துறந்து தவவேடம் தாங்கிய வாதவூரடிகள் இறைவன் திருவிளையாடல்களை எண்ணி மகிழ்ந்தவராய், திருப் பெருந்துறையை அடைந்தார்.

குருநாதர் பிரிவு :

மீண்டும் தன் குருநாதரை அடைந்த வாதவூரடிகள் அடியவர் கூட்டத்தோடு கலந்து மகிழ்ந்திருந்தார். ஞான தேசிகனாய் வந்த பெருமான் தாம் கயிலைக்குச் செல்ல வேண்டி யதைச் சீடர்களுக்கு உணர்த்தி அவர்களை இன்புற்றிருக்குமாறு பணித்தார். அடியவர்கள் தம் குருநாதரைப் பிரிய மனம் இல்லாமல் பெரிதும் வருந்தினர். அதைக் கண்ட குருநாதர் இக் குருந்த மரத்தின் நிழலில் ஒரு தெய்வப்பீடம் அமைத்து அதில் நம்முடைய திருவடிகளை எழுப்பி வழிபாடு செய்து வருவீர்களானால் ஒருநாள் 'இக்கோயில் திருக்குளத்தில் தீப் பிழம்பு ஒன்று தோன்றும்; அதில் அனைவரும் மூழ்கி எம்மை அடையலாம்' என்று திருவாய் மலர்ந்து தம்மைப் பின் தொடர்ந்து வந்த அடியார்களை 'நிற்க' எனக் கட்டளையிட்டுக் கயிலை சென்றார். வாதவூரடிகள் மட்டும் அவரைப் பின்

தொடர்ந்து சென்று கொண்டிருந்தார். அவரைக்கண்ட குருநாதர், 'நீ எம்மைப் பின் தொடர்ந்து வருதல் வேண்டா; உத்தரகோசமங்கை என்னும் திருப்பதிக்குச்சென்று அங்கு எண் வகைச் சித்திகளையும் பெற்று, திருக்கழுக்குன்றம் முதலான தலங்களைத் தரிசித்துப் பின்னர் தில்லையை அடைவாயாக' என்று கூறிச் சென்றார். மணிவாசகரும் அவ்வாறே திருப்பெருந் துறைக் குருந்த மரத்தின்கீழ் ஒரு தெய்விகப் பீடம் அமைத்து அதில் குருநாதரின் திருவடிகளை எழுந்தருளச்செய்து அடியார் களோடு தாமும் வழிபட்டு வரலாயினர்.

தல யாத்திரை :

மணிவாசகர் திருவருட்போகத்தில் திளைத்து வாழும் நாட் களில் 1. நமச்சிவாய வாழ்க என்று தொடங்கும் சிவபுராணம், 2 அற்புதப் பத்து, 3. அதிசயப் பத்து, 4. குழைத்த பத்து, 5. சென்னிப் பத்து, 6. ஆசைப் பத்து, 7. வாழாப் பத்து, 8. அடைக்கலப் பத்து, 9. செத்திலாப் பத்து, 10. புணர்ச்சிப் பத்து, 11. அருட் பத்து, 12. திருவார்த்தை, 13. எண்ணப் பதிகம், 14 திருவெண்பா ‡ 15. திருப்பள்ளியெழுச்சி, 16. திருவேசறவு, 17. ஆனந்த மாலை, 18. உயிருண்ணிப் பத்து, 19 பிரார்த்தனைப் பத்து, 20. திருப்பாண்டிப் பதிகம் முதலிய பதிகங்களைத் திருவாய்மலர்ந்தருளி அடியார் கூட்டத்துடன் பலநாள் திருப்பெருந்துறையில் எழுந்தருளி யிருந்தார். ஒருநாள் திருக்குளத்தில் தீப் பிழம்பு தோன்றிற்று. அடியார்கள் அனைவரும் ஐந்தெழுத்தை ஓதிக்கொண்டு அதில் மூழ்கினர். பெருமான் அம்மையப்பராய் இடப வாகனத்தில் எழுந்தருளி அருட் காட்சி வழங்கியருளினான். அடியார்கள் அனைவரும் மூழ்கிச் சிவகணங்களாயினர். மணிவாசகர் இவ் வேளையில் கொன்றைமர நிழலில் சிவயோகத்தில் அமர்ந்திருந் தார். இந்நிகழ்ச்சியை யோகக் காட்சியில் அறிந்த அடிகள் அடியார்களின் பிரிவாற்றாது வருந்தி, குருந்த மரத்தினடியில் இருந்த குருநாதரின் திருவடிப் பீடத்தைப் பற்றிக்கொண்டு அழுதார். 21 திருச்சதகம் என்னும் பாமாலையால் இறைவன் திருவருளைத் தோத்திரித்தார். பின்னர் குருநாதன் தனக்குப் பணித்த அருளாணையின்வண்ணம் திருவுத்தரகோசமங்கைக்குச் சென்று அங்கும் குருநாதரைக் காணாது வருந்தி 22. நீத்தல் விண்ணப்பம் என்னும் திருப்பதிகத்தால் தோத்திரம் செய்தார்.

---

‡ பண்டாய நான்மறையும் இதில் சேர்க்கப்பட்டது.

அப்போது அத்தலத்தில் இறைவன் திருப்பெருந்துறையில் காட்டிய குருந்தமர் கோலத்தைக் காட்டியருளினன். அத்திருக் கோலத்தைக் கண்டு மகிழ்ந்த அடிகள். அங்குப் பல சித்திகளும் கைவரப்பெற்றுர். பின்னர் பல திருப்பதிகளையும் வணங்கிக் கொண்டு பாண்டியநாட்டைக் கடந்து சோழவளநாட்டைச் சேர்ந்த திருவிடைமருதூரை வந்தடைந்தார். இடைமருதில் ஆனந்தத் தேனுக எழுந்தருளியுள்ள இறைவன் அருள்நலத்தை நுகர்ந்து திருவாரூரை அடைந்து புற்றிடங்கொண்ட பெருமானை வணங்கி, 23. திருப்புலம்பல் என்னும் பதிகத்தை அருளிச் செய்தார். அதன் பின்னர்ச் சீகாழியை அடைந்து தோணியப் பரைத் தரிசித்து 24 பிடித்த பத்து என்னும் பதிகத்தை அருளிச் செய்தார். பின்னர் அங்கிருந்து புறப்பட்டு, சோழநாடு கடந்து நடுநாட்டை அடைந்து திருமுதுகுன்றம், திருவெண்ணெய் நல்லூர் முதலிய தலங்களைத் தரிசித்துக்கொண்டு திருவண்ணு மலையை அடைந்தார். அங்கும் இறைவன் குருந்தமர் திருக் கோலம் காட்டியருளினன். அக் காட்சியைக் கண்டு வணங்கிய அடிகள் அத்தலத்தில் பலநாட்கள் தங்கியிருந்தார்.

திருவண்ணுமலையில் :

அடிகள் அண்ணுமலையில் தங்கியிருந்தபோது மார்கழி மாதம் வந்தது. திருவாதிரைக்கு முன் பத்து நாட்களில் கன்னிப் பெண்கள் விடியற்காலம் எழுந்து வீடுகள்தோறும் சென்று ஒருவரையொருவர் துயிலெழுப்பிக் கொண்டு நீராடி வழிபாடு செய்வதைக்கண்டு அவர்கள் வாய் மொழியாகவே வைத்து 25. திருவெம்பாவையையும், அவ்வூர்ப் பெண்கள் அம்மானையாடும் காட்சியைக் கண்டு அவர்கள் பாடுவதாக வைத்து 26. திருவம்மானையையும் அருளினுர்.

சிதம்பர தரிசனம் :

பின்னர் அண்ணுமலையை நீங்கிக் காஞ்சிபுரம் அடைந்து அவ்வூர் இறைவனைத் தரிசித்துத் திருக்கழுக்குன்றம் அடைந்து 27. திருக்கழுக்குன்றப் பதிகம் பாடினுர். அங்கே பெருமான் பெருந்துறையில் அவரை ஆட்கொண்ட குருநாதர் திருக்கோலத் தோடு காட்சி வழங்கினன். பின்னர் அங்கிருந்து புறப்பட்டுத் திருத்தில்லையின் எல்லையை அடைந்து அத் திருத்தலத்தைத் தரிசித்தார். தில்லை சிவலோகம் போலக் காட்சியளித்தது.

அங்ஙகரை அடைந்த மணிவாசகர் திருவீதிகளைக் கடந்து வடக்குத் திருவாயில் வழியே திருக்கோயிலுக்குள் சென்றார். சிவகங்கையில் நீராடி வலமாகச் சிற்சபையில் எழுந்தருளியிருக்கும் ஆனந்த நடராசப் பெருமானை ஆரா அன்பினில் கண்டு கண்ணீர்வார உளம் நெகிழ்ந்து வணங்கினார். குருநாதனாக எழுந்தருளி வந்து காட்சி கொடுத்த இறைவனைத் தில்லைச் சிற்றம்பலத்திலேகண்டு தரிசித்து பேரானந்தம் உற்று ஆனந்தக் கண்ணீர் பெருக 28. கண்ட பத்து என்னும் பதிகம் பாடி வழிபட்டார். பின்னர் தில்லையின் கீழ்த்திசையில் ஒரு தவச் சாலை அமைத்துப் பலநாட்கள் தங்கியிருந்து தினமும் அம்பல வாணனின் ஆனந்த நடனத்தைத் தரிசித்துவந்தார். அங்கிருந்து திருப்புலீச்சரம், திருநாகேச்சரம் முதலான தலங்களுக்குச் சென்று தரிசித்து மீண்டும் தில்லை வந்தடைந்தார். தில்லையில் அடிகள் அருளிச் செய்தவை 29 குலாப் பத்து, 30. கோயில் திருப்பதிகம், 31. கோயில் மூத்த திருப்பதிகம், 32. கீர்த்தித் திருவகவல், 33. திருவண்டப் பகுதி, 34. போற்றித் திருவகவல், 35. திருப்பொற்சுண்ணம், 36. திருத்தெள்ளேணம், 37. திருவுந்தியார், 38. திருத்தோள் நோக்கம், 39. திருப்பூவல்லி, 40. திருப்பொன்னூசல், 41. அன்னைப் பத்து, 42. திருக்கோத்தும்பி, 43. குயில் பத்து. 44. திருத்தசாங்கம், 45. அச்சப் பத்து, என்பனவாம்.

புத்தரோடு சமய வாதம் :

மணிவாசகர் தில்லையில் வாழ்ந்துவரும் நாட்களில் சிவனடியார் ஒருவர் சிதம்பரத்திலிருந்து ஈழநாட்டிற்குச் சென்றிருந்தார். அவ்வடியார் செம்பொன்னம்பலம், திருவம்பலம், திருச்சிற்றம்பலம் என்ற திருநாமங்களை இடைவிடாதுசொல்லிக் கொண்டிருக்கும் இயல்புடையவர்.

அவர் ஈழம் சென்றிருந்த காலத்தில் ஈழநாட்டில் பௌத்த சமயம் மேலோங்கியிருந்தது. இவ்வடியாரின் இயல்பைக்கண்ட சிலர் அரசனிடம் சென்று அவரது செய்கைகளை உணர்த்தினர். அரசன் அச்சிவனடியாரைச் சபைக்கு அழைத்து வருமாறு செய்தான். அரசவைக்கு வந்த அடியவர் செம்பொன்னம்பலம் திருவம்பலம் என்று சொல்லிக்கொண்டே தன் இருக்கையிலமர்ந்தார். அரசன் வியந்து இதன் பொருள் யாது? என்று அவரைக் கேட்டான். அவ்வடியவர் அதன் சிறப்புக்களை எடுத்துரைத்து

'நியவரும் உள்ளன்போடு இப்பெயரை ஒருமுறை கூறினால் 21,600 தடவை திருவைந்தெழுத்தைக் கூறியதனால் உண்டாகும் பயனை இது தரும்' என்று கூறித் தில்லைப் பெருமானின் சிறப்பை எடுத்துரைத்தார். அங்கு இருந்த புத்தமத ஆசாரியன் சிவனடியார் கூறுவதைக்கேட்டுச் சினந்து 'திரிபிடகம் அருளிய எங்கள் புத்தனைத் தவிர வேறு தெய்வம் உண்டோ? இன்றே நான் தில்லைக்குச் சென்று சைவத்தை வென்று புத்தனே கடவுள் என்று நிலைநாட்டி வருவேன்' என்று சூளுரைத்து எழுந்தான். ஈழத்தரசனும் தன் ஊமைப் பெண்ணையும் உடனழைத்துக் கொண்டு புத்தாசாரியனுடன் தில்லைக்குப் புறப்பட்டான். தில்லையையடைந்த புத்தகுரு, அரசன் முதலானோர் திருக்கோவிலை அடைந்தனர். அக்கோயில் மண்டபம் ஒன்றில் அமர்ந்தனர். கோவில் காப்பாளர் அவர்களை அணுகி புறச்சமயத்தார் இங்குத் தங்குதல் கூடாது என்று கூறினர். அதைக்கேட்ட புத்தகுரு யாம் உங்கள் சமயத்தை வென்று எங்கள் சமயத்தை இங்கு நிலைநாட்ட வந்துள்ளோம் என்று வாதிற்கு அறைகூவினன். அச்சூளுரை தில்லைவாழ் அந்தணர்களுக்கு எட்டியது. அவர்கள் சோழமன்னனுக்கு இந்நிகழ்ச்சியை உடன் தெரிவித்தனர். அன்றிரவு தில்லைவாழ் அந்தணர்கள் அனைவரும் புத்தமத குருவை எவ்வாறு வெல்வது என்ற கவலையுடன் தில்லைச்சிற்றம்பலவனை எண்ணி வணங்கித் துயில்கொண்டனர். நடராஜப் பெருமான் அவர்கள் கனவில் எழுந்தருளி 'தில்லையின் கீழ்பால் சிவயோகத்தில் அமர்ந்து தவமியற்றி வரும் நம் அடியவனாகிய வாதவூரனை அழைத்து வந்து இப்புத்தகுருவோடு வாதிடச் செய்க, அவன் அவர்களை வெல்வான்; கவலற்க' என்று கூறி மறைந்தார். மறுநாள் தாம்கண்ட கனவை ஒவ்வொருவரும் ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டு இறைவன் திருவருளை வியந்து மணிவாசகர் எழுந்தருளியுள்ள தவச்சாலையை அடைந்து மணிவாசகரிடம் "அடிகளே! நம் சைவ சமயத்தை அழித்து புத்த மதத்தை நிலைநாட்டும் எண்ணத்துடன் ஈழநாட்டு மன்னனும், புத்தமதகுருவும் வந்துள்ளனர். தாங்கள் வந்து அவர்களை வாதில் வென்று நம் சமயத்தை நிலைநிறுத்தல் வேண்டும் என்று அழைத்தார்கள்.

ஊமைப்பெண் பேசியது:

வாதவூரடிகளும் தில்லை மூவாயிரவருடன்சென்று ஆனந்தக் கூத்தனை வணங்கி அவனருள் பெற்று புத்தமதகுரு இருந்த

மண்டபத்தை அடைந்தார். தீயவர்களைக்காண்பது தீது என்றெண்ணி அவர்களுக்கெதிரே ஒரு திரையிடச்செய்து தான் மறு பக்கத்தில் அமர்ந்தார். சோழ மன்னனும் மறையோரும், புலவர்களும் அவ்வவையில் கூடியிருந்தனர். சோழன் வாத ஊரரைப் பணிந்து, 'புத்தர்களை வாதில் வென்று நம் சமயத்தை நிலைபெறச்செய்வது தங்கள் கடமை. தோல்வியுற்ற புத்தர்களை முறை செய்வது என்கடமை' என்று வேண்டிக்கொண்டான். பின்னர் மணிவாசகர் புத்தகுருவை விளித்து 'வந்த காரியம் என்ன?' என்று வாதத்தைத்தொடங்கினர். வாதம் தொடர்ந்து நடைபெற்றது. மணிவாசகர் எத்துணை உண்மைகளை எடுத்துரைத்தாலும் அவை புத்தகுருவின் செவிகளில் ஏறவில்லை. மணிவாசகர் கூறிய வாதத்தை மறுக்கும் வழியின்றி, சிவநிந்தை செய்யத் தொடங்கினன். அதைக்கண்ட மணிவாசகர் கலைமகளை வேண்டி சிவநிந்தைசெய்யும் நாவில் நீ இருத்தல் பொருந்துமோ? இவர்கள் நாவைவிட்டு அகல்வாயாக; இது இறைவன் ஆணை' என்று கூறினர். அவ்வளவில் புத்தகுருவும், அவருடன் வந்தவர்களும் ஊமைகளாயினர். இதைக்கண்டு வியப்புற்ற ஈழமன்னன் வாதவூரரை வணங்கி அடிகளே என்பெண், பிறவி முதல் ஊமையாக இருக்கின்றுள். அவளைப் பேசும்படிச் செய்தால் நான் தங்களுக்கு அடிமையாவேன் என்று கூறினன். வாதவூரர் அதற்கிசைந்து அப்பெண்ணை அவைக்கு வரவழைத்து அமர்த்தி, பெண்ணே! இப்புத்தன்கேட்ட கேள்விகளுக்கு விடை கூறு என்று கூறினர். அப்பெண்ணும் அனைவரும் வியந்து மகிழும்படி, புத்தகுருவின் வினுக்களை மணிவாசகர் தாமே அப்பெண்ணிடம் கேட்க அப்பெண் அதற்கு விடையளித்தாள். அந்த வினு - விடைகள் தாம் 46. திருச்சாழல் என்ற திருப்பதிகமாக அமைந்தது. ஈழமன்னனும் அதைக்கண்டு மகிழ்ந்து மணிவாசகர் திருவடிகளிலேவிழுந்து வணங்கி சைவஞ்சார்ந்தான். அவையோர் அனைவரும் மணிவாசகப் பெருமானைப் போற்றித் துதித்தார்கள். ஈழ மன்னன் திருநீறும் கண்டிகையும் பூண்டு அடிகளைப் பணிந்து புத்தகுருவும், மற்றவர்களும் பேசும் திறம்பெற அருள் செய்ய வேண்டுமென்று வேண்டினன். மணிவாசகர் அவர்கள்மீது திருவருட் பார்வையைச் செலுத்தினர். அவ்வளவில் அனைவரும் ஊமை நீங்கிப் பேசும் திறம் பெற்று மணிவாசகரை வணங்கித் தாங்கள் செய்த குற்றத்தை மன்னிக்கும்படி வேண்டிக்கொண்டனர். புத்தகுருவும் அவரைச் சூழ வந்த அனைவரும் சைவர்களாக மாறினர். மணிவாசகரும்

திருக்கோவிலுக்குட் சென்று சபாநாயகரை வணங்கித் தம் தவச்சாலைக்கு எழுந்தருளினர். இவ்வாறு தவச்சாலையில் தங்கியிருந்தகாலத்தில் மணிவாசகர் 47. திருப்படையாட்சி, 48. திருப்படையெழுச்சி, 49. அச்சோப் பத்து, 50. யாத்திரைப் பத்து என்ற பதிகங்களைப் பாடியருளினர்.

இறைவன் திருவாசகம் கேட்டு எழுதியது :

இவ்வாறு சிதம்பரத்தில் மணிவாசகர் வாழ்ந்துவரும் நாட்களில், ஒருநாள் அந்தணர் ஒருவர் அவரிடம் வந்து தான் பாண்டிய நாட்டைச் சேர்ந்தவரென்றும், சிவபிரான் மணிவாசகருக்காகச் செய்த அருட் செயல் உலகெங்கும் பரவியுள்ளது என்றும் வியந்து கூறி மணிவாசகர் பல சமயங்களிலும் பாடிய பாடல்களை முறையாகச் சொல்லும்படிக் கேட்டுக்கொண்டார். மணிவாசகரும் அந்தணரை அருகில் இருத்தித் தாம் பாடிய திருவாசகப் பாடல்கள் அனைத்தையும் சொல்லியருளினர். அந்தணரும் தம் திருக்கரத்தால் அவைகளை எழுதி முடித்து 'பாவைபாடிய தங்கள் திருவாயால் ஒரு கோவைபாடுக' என்று கேட்டுக்கொண்டார். அவ்வேண்டுகோளுக்கு இணங்கிய மணிவாசகர் இறைவனது திருவடிப்பேற்றை உட்கருத்தாகக் கொண்ட இனிய கோவையார் என்ற நூலை அருளிச்செய்தார். கேட்ட அந்தணர் அந்த நூலையும் தம் திருக்கரத்தால் எழுதி முடித்தார். பின்னர் அந்தணர் வடிவில் வந்த சிவபெருமான் மறைந்தான். அதைக்கண்ட மணிவாசகர் இப்படித் தன்னை ஆட்கொண்டவர் சிவபிரானே என்பதை அறிந்து ஆனந்தக் கண்ணீர் பெருக்கித் திருவருளை எண்ணி வழுத்தினர்.

திருவாசக உட்பொருள் :

திருவாதவூரரின் திருவாசகத்தையும், திருக்கோவையையும் தம் கையால் எழுதிய இறைவன் அந்நூல்களை உலகறியச் செய்ய வேண்டி நூலின் முடிவில் 'திருச்சிற்றம்பலமுடையான் கையெழுத்து' எனத் திருசாத்திட்டு தில்லைச் சிற்றம்பலத்தில் வாயிற்படியிலே வைத்தருளினர். காலையில் கோவிலில் இறைவனைப் பூஜை செய்யவந்த அருச்சகர் வாயிற்படியில் நூல் ஒன்று இருப்பதைக்கண்டு அதை எடுத்து ஆண்டவனல் இது தரப்பட்டதாகும் என்ற அன்புணர்வோடு பிரித்துப் பார்த்துப் படித்தார்.

அவ் ஏடுகளின் முடிவில் திருவாதவூரர் சொற்படி திருச்சிற்றம் பலமுடையான் கையெழுத்து என்றிருந்ததைக்கண்டு உடல் சிலிர்த்து இறைவன் திருவருளைப் பெறுதற்குரிய நூல்களில் இது தலையானது என்று புகழ்ந்து இந்நூலைப் பாடிய வாதவூரரைச் சென்று கண்டு வணங்கினர். திருவாயிற்படியில் இந்நூல் இறைவனல் வைக்கப்பட்டிருந்த நிகழ்ச்சியை அவரிடம் தெரிவித்தார். வாதவூரர் அதைக் கேட்டுத் திருவருளை எண்ணி வணங்கினர். முடிவில் அந்தணர் அனைவரும் இந்நூலின் பொருளைத் தாங்களே விளக்கம் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டனர், அதற்கு மணிவாசகர் இதன் பொருளைத் தில்லைச்சிற்றம்பலத்தில் வந்து தெரிவிக்கின்றேன் என்று சொல்லி அவர்களோடு சிற்சபைக்கு எழுந்தருளினர். அங்குவந்து 'இந்நூற் பொருள் இச்சபையில் எழுந்தருளியுள்ள ஆனந்தக் கூத்தப்பெருமானேஆவன்' என்று சுட்டிக் காட்டி, அச்சபையில் எல்லோரும்காண மறைந்தருளினர். இவ்வற்புத நிகழ்ச்சியைக் கண்ட அனைவரும் வியந்து மகிழ்ந்து தொழுது போற்றினர். நடராஜப் பெருமான் மணிவாசகருக்கு தம் திருவடிகளிலே இரண்டறக் கலக்கும் பேரின்பப் பேற்றைத் தந்து அவரை ஆட்கொண்டருளினர்.

அடிகள் காலம் :

மணிவாசகர் காலத்தைப் பற்றி ஆராய்ச்சியாளர்கள் பல வேறுகருத்துக்களைக்கொண்டுள்ளனர். ஒவ்வொருவரும்தாங்கள் கருதிய கருத்துக்களை நிலைநாட்டுவதற்கு, பலவேறு ஆதாரங்களைக்காட்டுகின்றனர். எல்லோருடைய ஆராய்ச்சியும் அடிகளார் கடைச் சங்க காலத்திற்குப்பின் தொடங்கி 11-ஆம் நூற்றுண்டு வரை உள்ள காலங்களில் ஏதேனும் ஒருகாலம் மணிவாசகர் வாழ்ந்த காலம் என முடிவுசெய்கின்றது. இக்கால ஆராய்ச்சிகளைத் தொகுத்து ஆராய்ந்து மணிவாசகர் காலம் கி. பி. மூன்றும் நூற்றுண்டு என முடிவு செய்து தருமை ஆதீனத் திருவாசக நூல் வெளியீட்டில் மகாவித்துவான், திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அவர்களுடைய கால ஆராய்ச்சித் தொகுப்புரையின் ஒரு பகுதியைச் சுருக்கித் தருகின்றோம்.

"திருமலைக்கொழுந்துப் பிள்ளை அவர்கள் முதல் நூற்றுண்டாகவும், பொன்னம்பலப் பிள்ளை அவர்கள் இரண்டு

அல்லது மூன்றும் நூற்றுண்டாகவும், மறைமலையடிகளார் அவர்கள் மூன்றும் நூற்றுண்டாகவும். வில்ஸன்வுட் என்பவர் ஏழாம் நூற்றுண்டு என்றும், ஜி. யூ. போப் ஏழு, எட்டு அல்லது 9-ஆம் நூற்றுண்டு என்றும், சூலின் வின்ஸன் ஒன்பது அல்லது 10-ஆம் நூற்றுண்டு என்றும், மிஸ்டர் கௌடி எட்டிலிருந்து பத்தாம் நூற்றுண்டுக்குள் என்றும், டாக்டர் ரோஸ்ட்டு பதின்மூன்று அல்லது பதினான்காம் நூற்றுண்டு என்றும், நெல்ஸன் ஒன்பதாம் நூற்றுண்டு என்றும், கே. ஜி. சேஷய்யர் மூன்று அல்லது நான்காம் நூற்றுண்டு என்றும், சீனிவாசப் பிள்ளை ஒன்பதாம் நூற்றுண்டு என்றும், சி. கே. சுப்பிரமணிய முதலியார் மூவர்க்கும் முந்தியவர் என்றும் கூறுகின்றனர்''.

மூவர்க்கு முந்தியவர் மணிவாசகர் என்ற கருத்தே பொருத்த முடையதாகத் தோன்றுகிறது. மணிவாசகர் காலத்தில் நம் நாட்டில் தலையெடுத்திருந்த புறச்சமயம், பௌத்தம் ஒன்றே எனத் தெரிகிறது. மூவர் காலத்தில் பௌத்தம் ஓரளவிலும் சமணம் சிறப்புற்றும் இருந்தன. மணிவாசகர் வாக்கில் சமண் சமயக் குறிப்பேதும் காணப்பெறவில்லை. திருவாசகத்தில் விநாயகரைப் பற்றிய குறிப்பு எதுவும் காணப் பெறவில்லை. இன்ன பல காரணங்களால் மணிவாசகர் மூவர்க்கும் முந்தியவர் என்று கொள்ளலாம்.

அகச்சான்றுகள்

இறைவன் குருநாதனாய் எழுந்தருளி
மணிவாசகரை ஆட்கொண்டது :

1-3, 1-59, 2 42, 2-101 மு 126, 3-61, 63, 117, 119, 148, 149, 4-75, 76. 4-129, 130. 13, 22, 23, 25 மு 34. 36, 46, 47, 53, 54, 57 மு 64. 88, 95 மு 104, 105. 106, 111, 116, 178 மு 181. 184, 188, 192, 216, 218 224, 225, 227, 228 229, 235, 237 மு 248. 251. 275, 276. 282, 283, 284, 291, 314, 316, 327, 329 321 332, 333, 335, 349, 354, 355, 369, 370, 371, 372, 373, 374, 375, 377, 383, 387, 395 397, 398. 399. 405, 418, 420, 426 மு 435, 440, 444, 445, 446, 447, 456 மு 465, 473 மு 477, 480,

486, 500, 506, 507, 522, 535, 539, 543, 550, 553, 567 மு *576, 580, 595, 598, 643, 648* மு *656.*

குருநாதனாய் வந்த இறைவன் மறைந்தது :

2-55, 41, 57, 401.

இறைவன் குதிரைச் சேவகனாய் வந்தது ;

2-28, 2-38, 2-45, 2-116, 194, 334, 351, 352, 524. 525. 526, 530, 532, 590, 623, 627.

நரி பரி யாக்கியது ;

2-36, 544, 647.

வந்தி தந்த பிட்டுக்கு மண் சுமந்தது ; பிரம்படி பட்டது ;

2-47, 182, 290, 467. 484, 485.

உடனிருந்த அடியவர் சோதியுட் புகுந்தது ;

2-132, 87. 89, 90, 91, 92, 93. 95.

திருக்கழுக்குன்றில் காட்சி வழங்கியது ;

466 மு *472.*

உத்தரகோசமங்கையில் உருவக் காட்சி வழங்கியது :

2-48.

உ

சிவமயம்

உரை மாட்சி

செஞ்சொற்கொண்டல்

வித்துவான். திரு. சொ. சிங்காரவேலன் M. A , Dip. Ling. அவர்கள்

தமிழ் விரிவுரையாளர், அ. வ. அ. கல்லூரி, மாயூரம்.

'வாழும் உயிர் :'

உண்டு உடுத்து உறங்கிக் கழிவதுதான் வாழ்க்கை என்பது பெரும்பாலோர் நினைப்பு. இந்த நினைப்பால் வாழ்வின் பெரும் பகுதியை இத்தகையோர் வீணாக்கி விடுகின்றார்கள். வாழ் நாளின் இறுதிப்பகுதியிலே கூட இத்தகையோர் சிலர்க்கு உண்மையை உணரக் கூடிய வாய்ப்பு இல்லாமற் போய்விடு கிறது. ஒரு சிலர்க்கே வாழ்வின் குறிப்பு உட்கோள், மெய்ம்மை விளங்குகின்றது. அவர்களில் தம் வாழ்வின் மலர்ச்சி யுடன் நின்று விடுவோரும், அவ்வாறு தாம் கண்ட மெய்ம்மை யினை உலகிற்குக் காட்டி உலகினர்க்கும் அவ்வுண்மையறி வினைப் பரப்பி நலம் பல விளைத்து நன்மை பெருக்குவோரும் ஆகிய இருதிறச் சான்றோரைக் காணலாம். இத்தகு சான்றோர் களே 'வழிகாட்டும் வான் பொருள்' வாய்த்தவர்களாகக் கொள்ளத்தக்கவர்கள். இவர்களைத் தொழுதும், இவர்களது அருள்மொழிகளைச் சிந்தித்தும் வாழ்வது மனிதர் கடனாம். ஆறறிவு படைத்த மனிதன் மனம் உடையவன். மன உணர் வினால் நன்மை தீமை, மேடுபள்ளம், ஒளி இருட்டு, இன்பத் துன்பம் ஆகியவற்றைப் பகுத்தறியும் திறம் உடையவன். அவன் ஒருவனே 'வாழ்கின்றேன் என்னும் உணர்வுடன் வாழ்பவன்'. எனவே எல்லா உயிர்களும், ஓரறிவுயிர் முதல் ஐயறிவுயிர் வரை பகுக்கப்பட்டனவும் வாழ்வனவே யாயினும், 'வாழும் உயிர்' என்று வரையறுக்கப்படுபவன் மனிதன் ஒருவனே. ('வாழுநம் என்னும் செருக்கு', கண்ணென்ப வாழும் உயிர்க்கு- குறள்)

அருட்கொடை :

இத்தகு சான்றோர் அருளிய அருள்மொழிகளைச் சிந்திக்கும் திறன் உடையவன், சமுதாய நிலையில் மனிதன் ஒருவனே. இஃது இறைவனின் அருட்கொடையாக மனிதனுக்கு வாய்த்துள்ள மாண்புகளுள் ஒன்று.

இன்பக் கருவூலம் :

திருமுறைகள் இத்தகு சமயச் சான்றோரது தெளிவுரைகள்; வாட்டத்தைப் போக்கி உறுதியை வழங்கும் ஞானத் தேக்கங்கள் அவை; துன்ப உணர்வைத் தொலைத்து இன்ப உணர்வை எடுத்து வழங்கும் இன்பக் கருவூலங்கள் அவை;

விழுமிய கவிதை :

"அறியாமை ஆசை ஆகிய கட்டுக்களிலிருந்து நீங்கி உயிர்ப் பறவை மேலே மேலே பறந்து அருள் நிழல் சேர வழி காட்டும் அருள் துணைகள் அவை; துன்பமும் பொய்மையும் குழைந்த உலகத்தினின்று விடுபட்டு உண்மை ஒளியும் அன்புமாகிய சுதந்திர அரண்மனைக்குள் உயிரைப்புகுவிக்கும் ஒட்பமுடையவை அவை; அலைவும் உலைவும் உடைய மனத்தின் போக்கினை மாற்றி, இன்பம் பெருமிதம் ஆகியவற்றுடன் அனைத்து நிலைகளையும் நீக்கி, இன்பமும் அமைதியும் வாய்ந்த எல்லையற்ற ஞானப்பெருவெளியை உள்ளத்துள்ளே கண்டு ஒளி விளங்கச் செய்யும் திறன் உடையவை அவை."[1]A. உயர்ந்த கவிதை என்பது இதுவேயாகும். விழுமிய கவிதை என்பது 'வெளியிடும் ஆற்றல்' வாய்த்ததாகும். அது மனித வாழ்வின் புலன்களுக்கு எட்டும் அழகுகளையும், அவற்றின் ஆழ்பொருள்களையும் காட்டுவதாகும். அதுமட்டுமின்றி அத்தகு கவிதைகள்

---

[1] A "Tiruvasagam depicts in beautiful hymns, the Progress of the soul from the bondage of ignorance and passion into the liberty of light and love, ... Joy of union"

—Dr. Sir. Radhakrishnan, Vide. Tiruvasagam Ed. 1949.
(Dharmapuram edition) P. 13

இன்றேல் நாம் கண்ணை மூடியே கிடக்கநேரும். சிலர்க்கே இத்தகு கவிதையின் தெய்விகத் தன்மையையும் போக்கையும் உணர்ந்திட முடியும்" என்பர் அட்சன் என்னும் ஆங்கில அறிஞர். [1]B.

'திருவாசகத் தேன் :'

எட்டாம் திருமுறையாகச் சைவப் பெருநெறி கண்டுள்ள திருவாசகம் ஞானப்பனுவலாக மணிவாசகர் மலர்வாய்ப் பிறந்த ஞானத் தேனக - பழம் பிறவித் தளைநீக்கி, துன்பம் தொலைத்து, இன்பம் தருவதுடன், எல்லை இல்லாத ஞானப் பெருவெளிக்கு உயிரை உயர்த்தும் அற்புதத்தேன் மயமாகிய விழுமிய கவிதையாக-உள்ளது என்பது அநுபவ ஞானியர் கருத்து [2].

குருவருள் - உரை :

குருவருள் விளக்கம் எட்டாம் நூற்பாவில் மெய்கண்டார் கூறியருளிய மாண்பொருள். திருப்பெருந்துறையில் ஞானசிரியராக இறைவனே எழுந்தருளக்கண்டு, 'மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து அக்கழற்குத் தன் கைகளால் அஞ்சலி செய்து கண்ணீர் ததும்பி வெதும்பி, உள்ளம் பொய்தான் தளைந்து போற்றி சய சய போற்றி' என்று ஆடியும் பாடியும் அழுத அடிகளின் ஞான அநுபவம் கனிந்த இத்திருநூலுக்குத் தருமை ஆதீனம் 25ஆவது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானமவர்களின்

---

[1] B. One chief element of poety is its revealing Power. It opens our eyes to sensuous beauties and spritual meanings in the worlds of human experience and of nature to which otherwise we should remain blind. There are few of us who have not some endowment of Poetic insight and feeling, some measure of the vision and the faculty divine.

—W. H. Hudson - " An Introduction to the Study of Literature " 1958, P. 90.

[2] " தொல்லையிரும்பிறவி ... ... தேன் " —என்ற பழம்பாடல்.

திருவருட்கருணை இன்று ஒரு விளக்க உரையினைத் தந்திருக்கின்றது. இந்த உரையின் மாட்சிகளைத் தமிழுலகம் அறிவதற்கு ஓர் உரைகல்லே இச்சிந்தனை.

உரையாசிரியர் தகுதி :

இதன் உரையாசிரியர் சித்தாந்தக்கலைமணி, மகாவித்துவான், திரு. சி. அருணைவடிவேலு முதலியாரவர்கள், தருமையாதீனத் திருமுறை உரைகளில், ஆரும் திருமுறை, ஏழாம் திருமுறை ஆகியவற்றை எழுதியதுடன் இப்பேருரையையும் வரைந்துள்ளார். திருவாசகம் திருக்கோவையார்க்கு முன்னே பலப்பல உரைகள் உண்டேனும் இவ்வுரை தனிச் சிறப்புடன் விளங்குகின்றது. இரவுபகல் இப்பாடல்களோடு 'ஒன்றியிருந்து நினைந்து', தம் 'நுண்மாண் நுழைபுலத்துடன்' திரு. முதலியாரவர்கள் கண்டுள்ள இப்பேருரை கற்றோர்க்குக் கழிபேரின்பம் தருவதாய் உள்ளது. ஒரு நூலுக்குச் சிறந்த உரை யெழுதுவதென்ருல் அது பெரும் புலமையும், மதிநுட்பமும் உடைய சிறந்த போதகாசிரியர்க்கே வாய்ப்பதாகும். திரு. முதலியாரவர்கள் 'காஞ்சிப் புராணத்திற்கும்'[3] 'சிவபோகசாரத்திற்கும்'[4] அப்பர்[5] சுந்தரர்[6] திருமுறைகட்கும் உரை யெழுதியதுடன், ஆதீனத் தமிழ்க் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இருப்பதனுல் தொல்காப்பியம் சங்க இலக்கியம் முதலிய தமிழ்ப் பனுவல்கட்கு உரை விரித்து மாணவர்க்கு உரைத்து வருபவர்கள்; சைவ சித்தாந்தச் செம்பொருளை இளமை முதலே பொது மக்கட்கும், கற்றோர்க்கும் உரை விரித்து - ஓதிவரும் ஒட்பம் உடையவர்கள். நூல், உரை, போதகாசிரியர் ஆகிய மூன்நிலைகளிலும் சிறந்து விளங்கும் இவர்களை மணிவாசகர் திருவுள்ளம் தேர்ந்து

---

[3] காஞ்சிப் புராணம் - திரு. சி. அருணைவடிவேலு முதலியார் உரையுடன் கூடிய மூலப்பதிப்பு - காஞ்சி, மெய்கண்டார் கழகம்.

[4] சிவபோகசாரம் - திரு. சி. அ உரைப்பதிப்பு, தருமையாதீனம்.

[5] ஆரும் திருமுறை - திரு. சி. அ. உரைப்பதிப்பு, தருமையாதீனம்.

[6] ஏழாம் திருமுறை - திரு. சி. அ. உரைப்பதிப்பு, தருமையாதீனம்.

தெளிதற்கும் திருவுள்ளம்கொண்ட ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் திருவடிகட்குப் பெருவணக்கங்கள் உரியனவாகும். விரித்துக் கூறப்புகின் பன்னாட்கள் கழிந்தாலும் முற்றக் கூறவியலாத இவ்வுரைத் திட்பநுட்பங்கள் இச்சிறு கட்டுரை எல்லைப்படுவன அல்ல ஆயினும், அருளாணை மேற்கொண்டு ஒரு நெறியான் இங்குச் சிறிது காண முயல்வேம்.

உரைத் திறனாய்வு :

கவிதைக்கு உரை யெழுதுவதும் ஒருவகைத் திறனாய்வே என்று கூறலாம். நிறைந்த நெஞ்சும், தெளிந்த அறிவும் உடையவரே கவிதைக்கு விளக்கம் கூறமுடியும். இத்தகு திறனாய்வே சீரிய திறனாய்வாக இருக்க இயலும். கூறிய பகுதிக்குச் சீரிய விளக்கம் தருவதும், தாம் ஆராய்ந்து முடிவு கூறலுமே திறனாய்வின் இரண்டு செயல்கள் என்பர் அட்சன் என்பவர்.[7] அந்நிலை நின்று நோக்கினால், இவ்வுரை ஒரு சீரிய திறனாய்வாகவே விளங்குகின்றது. அதனை இங்குப் பல நிலைகளில் சிந்தித்துக் காண்போம்.

நடை நலம் :

இவ்வுரையின் நடை தெளிந்த தமிழ் நடை; வடசொற்கள் முதலிய பிறமொழிச் சொற்கள் கலவாத, தனி நடை; பிறமொழிச் சொற்களைக் கையாளவேண்டிய விடத்து, அவற்றை அவ்வாறே மேற்கோளாகக் காட்டலும், அவற்றைத் தமிழ்ப்படுத்தித் தமிழ்க்கோலம் புனைந்து காட்டலும் இவர் இயல்பாகும். நடைவேறுபாடு பற்றி இக்கால ஆய்வாளர் கூறும் கொள்கையளவில் நின்று நோக்கின்[8], எளிய சொற்களால், அரும்பொருளையும் விளக்கும் விழுமிய நடை இவ்வுரையாசிரியர்க்கு இயல்பாக வாய்ந்துள்ளது என்றறியலாம். சில

---

[7] "Criticism may be regarded as having two different functions - that of interpretation and that of Judgment."

— W. H. Hudson - Ibid - P. 267.

[8] W. H. Hudson — Ibid P. 60.

இடங்களில் பிறர் கருத்தை மறுத்துரைக்குங்கால் உணர்ச்சிவயப் படுதலும் இவர்க்கியல்பே. பதசாரம் எழுதுங்கால் இனிய சொற்களைத் தேர்ந்து அணிபெறவும் எழுதுகின்ற இயல்பினர் இவர். இவரது உரை முழுவதையும் ஒருசேர நோக்கினால், ஆற்றொழுக்குப் போன்று தெளிந்த நடையினது இவர் பேருரை என்பதும், தம் அறிவு நலத்தை உரை வாயிலாகப் பிறர்க்குக் காட்ட முயலும் சில உரைகாரர் போலன்றி, மூல நூலின் உட் பொருளை விளக்குவதில் இப்புலவர்க்குள்ள ஆர்வம் பெரிது என்பதும் தெளிவாகும்.

சொற்பொருள் விளக்கம் :

சொற்பொருள்களைத் தெளிவுற விளக்கிச் செல்வர் இவர். 'இறைவன்' என்பதற்கு, 'எல்லாப் பொருளிலும் தங்கியிருப் பவன்' என்பது சொற்பொருளாயினும், 'தலைவன்' என்பதன் மறுபெயராய் வழங்கும்; 'இறு' என்பது இதன் முதனிலை. 'இற' என்பது அடியாக வந்ததென உரைப்பார்க்குக் 'கடவுள்' என்பதன் பொருளேயன்றி வேறு பொருள் இன்றாமாதலின் அது சிறவாமை அறிந்து கொள்க' என்று எழுதும் பகுதி நோக்கத்தக்கது.[9]

இவ்வாறே 'சகம்'[10] சங்கரன்,[11] ஆகமம்,[12] சிவம்,[13] தெள்ளேணம்[14] முதலிய சொற்களுக்கு உரிய பொருளைத் தம் நுட்பமதி தோன்ற இவர் விரித்துரையெழுதியிருக்கும் பகுதிகள் வியந்து பாராட்டற்குரிய விறல் உடையவை.

கொள்கை விளக்கங்கள் :

"கடவுள் வாழ்த்திற்குப் புறத்திணையே சிறந்தது;[15] பாவினங்களின் அடி வரையறை மிக்குவருதலும் பழைய வழக்கே;[16] மணிவாசகர் மூவர்க்கும் முந்தியவர்;[17] திருப் பாவைக்கு உரை கூறுவோர் மதமே பற்றித் திருவெம்பாவைக் கும் உரைகூற முற்படுதல் பொருந்தாது;[18] திருவெம்பாவையுள்

(இனி இங்குக் காட்டப்பெறும் எண்கள், இந்நூலின் பக்க எண்களைக் குறிக்கும்.)

[9] 10. [10] 108. [11] 202. [12] 30 - 42. [13] 362. [14] 358. [15] 2 [16] 216. [17] 371. [18] 271.

சக்திகள் ஒன்றையொன்று எழுப்பின எனல் பொருந்துமா றில்லை ;[19] திருவெம்பாவைப் பாடல்களுள் பெண்டிர் வயது வரையறை கூறுவோர் உரை நயம் கூறுதலால் முடியுமன்றி வேறாகாது ;[20] திருவெம்பாவை தில்லையில் இருந்தபோது நினைந்து பாடியனவாகக் கொள்ளற்கும் உரியது.[21] திருப்பொற் சுண்ணம் காஞ்சித் தலத்திற் பாடப்பெற்றிருக்கலாம்.[22] இறைவனால் ஆட்கொள்ளப்பெறுவதற்குமுன் பல சமய சாத்திரங்களை மணிவாசகர் கற்றுத் தேர்ந்தவர்.[23] திருவாசகம் திருக்கோவையாரோடு சொல் நடையாற் பெரிதும் ஒத்துள்ள திருநூல்.[24] மேலைநாட்டு விளையாட்டுப்போக்கினால் தமிழகத்தில் அண்மைக் காலம் வரையிலும் கூடக் காணப்பட்ட விளையாட்டுக்களும் மறைவவாயின.[25] உத்தரகோசமங்கையில் ஆசிரியத் திருமேனியுடன் எழுந்தருளி இலிங்க மூர்த்தியே அருள் செய்தனராதல் வேண்டும்.[26] அன்னைப் பத்து, கலி விருத்தம் என்ற யாப்பிற்குரியது அன்று ; ஆசிரியத்துறையே ஆகும்.[27] அகப்பாட்டுப் புறப்பாட்டு என்ற பாடல்களிடை வேற்றுமை யறிய மாட்டாதாரே திருவாசகம் முற்றும் அகப் பாட்டென்று மொழிவர்.[28] வீணை, யாழ் என்பன வெவ்வேறு இசைக் கருவிகள்.[29]

திருக்கோவையார்ப் பாடல்கட்குத் தத்துவப் பொருள் கற்பித்தல் சான்றோர் கருத்தாகாது.[30] இலக்கணம் பலவற்றிற்கும் இலக்கியமாதலின் திருக்கோவையாரில் முரண் இல்லை.[31] இப்பாண்டியன் அடிகளை அமைச்சராகப் பெற்றிருந்தான் எனவும், அவனுக்கு நண்பனாகிய சோழ மன்னன் மாற்றரசரால் நலிவெய்திய காலத்து அவன் விரும்பியவாறே அடிகள் சென்று உதவி, மீண்டு வரத்தாழ்க்க, அவன் திருமுகம் விடுத்து அழைப்பித்தான் எனவும் துணிதற்கு இடம் உண்டு[32]

இவ்வாறு உரை யிடையிடையே தம் கொள்கைகள் பலவும் தோன்ற ஆசிரியர் உரை விரித்துள்ளார். திருப்பாட்டிற்குப் பொருள் காண்டலே குறிப்பாயினும், தம்முள்ளத்தே உறைத்து நின்ற மெய்ம்மைகளை இடத்திற்கேற்ப இனிது எடுத்து விளக்கிப் போகும் விழுப்பம் பலர்க்கும் நெறிகாட்டும் பாங்கினதாகும்.

---

[19] 272. [20] 273. [21] 275. [22] 329. [23] 369. [24] 384. [25] 395. [26] 433. [27] 437. [28] 454. [29] 458. [30] 684. [31] 980. [32] 1019.

வடநூற் புலமை :

வேதம், ஆகமம், உபநிடதங்களிடம் பற்றுடையவர் இவ்வுரையாசிரியர் என்பதும், சைவத் திருமுறைகளில் அக்கருத்துக்கள் வருங்கால் அவற்றைத் தெளிவுறுத்துவர் என்பதும் மகிழ்ச்சிக்குரியவை. காழ்ப்புணர்ச்சி இல்லாமல், மொழிகளனைத்திலும் உள்ள மெய்ப்பொருள் காண்டலே அறிவு என்ற உண்மையை உலகிற்கு உணர்த்துவது இது.

வடமொழிகளில் உள்ள ஆகமங்கள் எத்தனை என்பதையும், அவற்றைச் சிவபெருமானிடம் கேட்டவர்கள் யாவர் என்பதையும், இவர் விளக்குவர். திருமூலர் 'நவ ஆகமம் எங்கள் நந்தி பெற்றனே' என்பதும் உரைத்து, 'எண்ணில் எழுபது கோடி நூறுயிரம், என்றும் கூறுவது எதுபற்றி எனவும் விளக்குவர். இவ்வாகமங்கள் இறைவனால் சுத்தமாயாபுவனத்தில் தோற்றுவிக்கப்பட்டுப் பிரகிருதிபுவனத்திற்கு வந்தவை என்பதே கருத்து என்பதனை இவ்வுரையாசிரியர் தெளிவுறுத்தியுள்ளார்.[33]

கீர்த்தித் திருவகவலில் இந்திரஞாலம் போல வந்தருளியது பற்றி விளக்குங்கால் கேனோபநிடதக் கதையொன்றனைத் தெளிவுற எழுதியுள்ளார்.[34]

'வேதமும் வேள்வியும் ஆயினர்க்கு' என்ற பகுதிக்கு உரை யெழுதுங்கால். 'வேதம் என்றதற்கு வேதமுடிவினல் உணர்த்தப்படுவதாகிய ஞானம் எனப் பொருள் கூறுக. 'வேள்வி' என்றது கன்ம காண்டத்துள் சொல்லப்பட்ட வேள்விகளையாம்' என்று எழுதுகின்றார்.[35]

"நம்பனையும் ஆமாகேள் நான்மறைகள் தாமறியா
எம்பெருமான் ஈசாவென்று ஏத்தினகாண் சாழலோ"

என்ற பகுதிக்கு எழுதும் உரையில், 'இஃது ஈசானஸ் ஸர்வ வித்யானும்' என்று தொடங்கும் வேத மந்திரத்தை உட்கொண்டு அருளிச் செய்தது என்று எழுதுவர்.[36]

---

[33] 38 - 42. [34] 51 - 52. [35] 441. [36] 391.

'' பரிதிவாழ் ஒளியாய் பாதமே யல்லால்
பற்றுநான் பற்றிலேன் கண்டாய் ''

என்பதன் உரையில், ' காயத்திரி மறையின் பொருளும் இம் மூர்த்தியே யல்லது சூரியனல்லன் ' என்பதை அப்பர் தேவாரப் பகுதியொடும் புணர்த்து விளக்கியுள்ள திறம் அறிந்தின்புறற் பாலது.[37]

' சிறந்த தவக்கோலம் உடைமை பற்றிச் சிவபெருமானை முனிவன் ' எனக் கூறுவர் பெரியோர் என உரைத்து உபநிடத வாக்கியம் ஒன்றினையும் அங்குப் பொருந்தக் காட்டியுள்ளார். இப் பகுதி ' முத்தனே முதல்வா முக்கணா முதல்வா ' எனுந் திருப்பாட்டில் ' முனிவா ' என்பதன் விளக்கமாக வருவதாகும்.[38]

திருக்கோவையாரில் ' நான் இவளாம் பகுதிப் பொற்பு ' என்பதற்கு இவர் எழுதும் உரைப் பகுதி, உபநிடத வாக்கியங் கட்குச் சைவ சித்தாந்த நெறியிற் பொருள் காணும் இவர் பெரும் புலமையைக் காட்டி, ' மகாவித்துவான் ' என்ற மாண்பின் மெய்ம்மையை விளக்கிநிற்கின்றது. ' நான் இவன் ஆம் ' என்றதனால் ' நான் பிரமம் ஆகின்றேன் எனவும், ' அது நீ ஆகின்றாய் எனவும் பிறவாறும் வரும் உபநிடத மகாவாக்கியங் களின் பொருளையே அறிவுறுத்தமை அறிந்துகொள்க ' என்பது இவர் தரும் விளக்கம். ' நாம் ஒழிந்து சிவம் ஆனவாபாடி '' ' சிவமாக்கி எனையாண்ட ' என்றும் வரும் பகுதிகள் இந்நிலை யையே குறிக்கும் என்று காட்டி அதன்பின், ' இத்துரிய நிலைக் கண் நின்றவுயிரை அங்கு நின்றவாறே அதீதத்திற் செல்ல வொட்டாது மீளவும் அதனைக் கீழ்நிலையிற்செலுத்துவது வாதனா மலம்; அதனின் நீங்கி அதீதத்தைத் தலைப்படுதற்கு வழியாக விதிக்கப்படுவன சிவோகம் பாவனையும், திருவைந்தெழுத்துக் கணிப்பும், அந்தரியாகமுமாம். அவற்றுள் சிவோகம் பாவனையும் இங்குக் கூறிய ' நான் இவளாம் பகுதி ' என்றதனாற் குறிக்கப் படும் இயல்பினதாதல் அறிக ' என்றெழுதி அவ்வுபநிடத வாக்கியங்கட்கு மாயாவாதப் பொருள் பொருளாகாமையும், இவ்வாறு சித்தாந்தத்துட் கூறப்பட்ட பொருளே பொருளா

---

[37] 530. [38] 637.

தலும் விளக்கியுள்ளார் இவ்வுரையாசிரியர். இவ்வாறு 'கலவி யுரைத்தலில்' வரும், இத் தொடர் சிவோகம் பாவனையோ டொத்த பெருஞ்சிறப்புக் குறிக்கும் என இவர் விளக்கியுள் ளமை கற்றோ ரேத்தும் கவினுடையதாகும்.[39]

'சிற்றம்பலம் வடமொழியில் கூறப்படும் தகராகாசம் என்றும், தகரம் சிறுமை என்றும், இதயத்தின்கண் உள்ள சிறு வெளியில் சிற்றொளி வடிவாயுள்ள இறைவனைத் தியானிக் கும் முறையை உபநிடதம் தகரவித்தை எனக் கூறும் என்றும் இவர் எழுதுவர். இஃது அப்பரது திருத்தாண்டகத் திருமுறையி னுள்ளும் இவரான் விரிவாக எழுதப்பெற்றவையே.[40]

சுருங்கச் சொல்லல் :

மணிவாசகர், 'என்போல்வார்' என்று கூறியதன் ஆழ் பொருளைக் காண்பாராய், 'மேற்கூறிய முயற்சிகளுள் ஒன்றும் செய்யாது உலகியலில் நின்றவர்களை, இறைவனது பெருங் கருணைத் திறத்தை அடிகள் இங்ஙனம் அருளிச் செய்தாராயினும் இவரது முன்னைத் தவ முதிர்ச்சியின் பலனே அங்ஙனம் இறை வன் நேர்நின்று ஆட்கொண்டது என்க' என்றெழுதி, அடிக்கடி இதனை எழுதுவது காலப்பெருக்கம், முதலிய குற்றங்களை விளைக்குமாதலின், "இஃது இத்திருமுறையுள் யாண்டும் ஒக்கும்' என்றெழுதுவர். இஃது இவரது சொற் சுருங்கிய திட்ப நுட்பமதியினை விளக்கும் ஒரு சான்று என்று கூறலாம்.[41]

சைவசித்தாந்த விளக்கம் காணல் :

தாம் சைவசித்தாந்தப் பெரும்புலவராகவும், சைவசித் தாந்தக் கல்லூரியின் பேராசிரியராகவும் உள்ளமையால் திரு முறைகளாகிய தோத்திரங்கட்குரை விரிக்கும்போதே சாத்திரப் பகுதிகள் இயல்பாக இவர் உரையில் வருகின்றன. படிப்போர்க் கும் சைவத்தின் திறம் விளங்க அழுத்தமுடன் அவை பேசப் படுகின்றன.

கேவலம், சகலம், சுத்தம் ஆகியவை பற்றிய விளக்கம்,[42] 'அற்றவர்க்கு அற்ற சிவன்' ஆதல்,[43] நற்குடிப்பிறப்பே ஞானம்

---

[39] 702. [40] 716. [41] 92. [42] 144. [43] 205.

பெறுதற்கு வாயில் என்ற சாத்திர முடிவு,[44] 'வீடு' என்று சாத்திரங்களிற் கூறப்பெறுதல் எது எனும் குறிப்பு,[45] 'சிவம் ஆதல்' என்பதன் செம்பொருள்,[46] இறைவன் அகள சகளத் திருமேனிகள் கொள்ளல்[47] இறைவன் யோகம் புரிதலின் சாத்திரப் பொருள்நுட்பம்,[48] கங்காளமூர்த்தி காயாரோகண மூர்த்தியே எனல்,[49] சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடன் என்ற சிவஞானபோதக் கருத்து விளக்கம்,[50] ஆன்மா ஒளியும் இறைவன் அதன் உள்ளொளியும் ஆம் என்ற துணிவு,[51] 'ஆதி குணம் இலான்' என்பதன் ஆழப்பொருள்,[52] சம்புபட்சம் அணு பட்சம் என்பவற்றைத் தெளிவுறுத்தும் திறம்,[53] உடையாள் உன்றன் நடுவிருக்கும்' என்ற அருந்திறம்,[54] 'சீவனுக்குள்ளே சிவமணம்' என்பதன் தெளிநிலை,[55] 'அப்பணைந்த உப்பேபோல் அத்துவிதம் ஆதல் எனத் தெளிவுறுக்கும் உயர்நிலை,[56] மானத தீக்கைமாண்பு,[57] திரோதானசக்தி - மறைத்தல் என விளக்கும் எழிற்றிறம்,[58] சிவஞான யோகிகள் உரை நலம் காட்டி 'வேண்டத் தக்கது' என்பதனை விளக்கும் நிலை,[59] நிட்டை கைவந்தபின் சிவானந்தம் பெருகும் என்ற தெளிநிலை,[60] 'திருந்து உறையுள் வேல் மடுத்து' என்புழி உறை திரோதான சத்தியை யும் வேல் சிவஞானத்தையும் குறிக்குமென்ற திறன்,[61] சிற்றம் பலம் ஞானஅம்பலமே என விளக்கும் பொற்பு,[62] உபநிடத வாக்கியங்கட்குச் சாத்திர நெறியில் பொருள்காணும் எழில்,[63] துரியநிலை அதீதநிலை யாவையென விளக்கும் பகுதி,[64] முதலிய பல இடங்களில் சித்தாந்த சாத்திரக் கருத்துக்கள் இவர் உரை யில் இழைந்து சாத்திர மணம் வீசுதலைக் காணலாம்.

அகச்சான்று :

மணிவாசகர் வாழ்வொடு நிகழ்ந்த பலவற்றிற்குத் தக்க அகச்சான்றுகள் வரும்வழி அவற்றை விளக்கிச் செல்லலும், இவர் உரையியல்பு. நரிபரியாடல் நிகழ்ந்ததற்கும்,[65] மணி வாசகர் மணங்கொண்டதற்கும்,[66] இவர் தரும் விளக்கங்களைக் குறிக்கலாம்.

---

[44] 301. [45] 317. [46] 362. [47] 360. [48] 382. [49] 863. [50] 406. [51] 427. [52] 441. [53] 461. [54] 467. [55] 517. [56] 523. [57] 538. [58] 565. [59] 567. [60] 619. [61] 645. [62] 704. [63] 703. [64] 703. [65] 46. [66] 184

விழுமிய பாடம் தேர்தல் :

தக்க பாடம் அல்லாதவற்றை மறுத்துரைத்துத் தக்க பாடம் தேர்ந்த பின்னரே இவர் பொருள் உரைப்பர்; 'கழலிணை, 'அளியேன்', 'எழுகேனே', 'மெள்ளனவே'. 'அத்தன்', 'செங்கமல மலர்போல்', 'விளையாமல்' முதலிய பல பாடங்களை மறுத்துரைக்கும் பகுதிகளை[67] இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

விளக்க முறை :

சொற்பொருளை விளக்குதலில் இவர் உரை ஆங்காங்கு மேற்கொண்ட முறை பெரிதும் பாராட்டற்குரியதாகும்.

'சங்கரன் - இன்பத்தைச் செய்பவன்' எனவரும் பகுதி,[68] 'நம் சிவனை' என்புழி 'நம்' என்ற அடைச்சிறப்பு,[69] மதி மயங்கி என்பதன் விளக்கம்,[70] 'தெள்ளேணம்' என்பதன் விளக்கம்,[71] 'புத்தன்' என வருவதின் உண்மைப் பொருள்,[72] தாளியறுகு,[73] கொக்கிறகு[74] பற்றிய விளக்கங்கள், 'தம்பிரான் என்பதன் விளக்கம்,[75] 'துரை' - தன்முனைப்பு மிகுதிப்பாடு எனக்காண்டல்,[76] மூத்த திருப்பதிகம் என்புழி மூப்பு 'உயர்வு' குறித்தது எனச் சான்றோர் நெறி விளக்கம், [77] தியானித்தல் வழக்கன்றெனக் குறித்தல்,[78] முதற்பரம்பொருளை 'அது' என்றிடுதல் வடமொழி வழக்கு ; 'அவன்' என்றிடுதல் தமிழ் வழக்கு என விளக்கும் திறன்,[79] ஏமாத்தல் வேறு ஏமாறுதல் வேறு என்ற நுட்பம்,[80] 'இடைக்கலம்' என்ற அப்பர் தேவாரப் பொருள் இன்னதென்ற நுட்பம்,[81] அதெந்து என்பது விருப்பப் பொருள், இன்றியமையாமைப் பொருள் ஆகிய இருபொருள் குறிக்கும் என்ற நன்மை,[82] எத்துக்கு - எற்றுக்கு மரூஉ எனல்,[83] 'தால் - தாலு என்னும் ஆரியச் சொல் சிதைவு' என்றுரைத்தல்[84] இத்தை - இதனை என்பதன் மரூஉ ஆதல்,[85] விளாக்கை - விளாவுகை என்பதன் மரூஉ ஆதல்,[86] முருடு - இக்காலத்தார் முரடு என வழங்குப' எனல்,[87] 'தொடுகடல்' என்பதன்

---

[67] 207, 608, 218, 243, 619, 630. [68] 202. [69] 318. [70] 347-48. [71] 358. [72] 368. [73] 145, 438. [74] 370. [75] 397. [76] 427. [77] 465, [78] 473. [79] 460. [80] 472. [81] 498. [82] 534, [83] 555. [84] 602. [85] 515. [86] 516. [87] 609.

பொருள் விளக்கம்,[88] அருந்துதி - அருந்ததி மரூஉ வாதல்[89] முதலிய பகுதிகளை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

பழந்தமிழ்நூல் நலம் :

சங்க இலக்கியங்கள் மீதும், தொல்காப்பியத்தும் இவர் கொண்டுள்ள பற்றும், அவற்றின்பால் இவ்வாசிரியர்க்குள்ள புலமைத் திறமும் இவ்வுரைப் பகுதியிடையிடையே எண்ணற்ற இடங்களில் வெளிப்படுகின்றன. தைநீராட்டுப் பற்றிப் பேசுங்கால் பரிபாடலும்,[90] பிற பொருட்பகுதிகளை விளக்குங்கால் புறநானூறும்,[91] நற்றிணையும்,[92] நெடுநல்வாடையும்,[93] அகநானூறு,[94] முதலிய பல நூல் மேற்கோள்கள் விரவியுள்ளன. திருக்கோவையார் உரையில் பேராசிரியர் கருத்தைச் சில இடங்களில் வாளா எடுத்துக் காட்டியும் சில இடங்களில் மேற்கொண்டும் செல்லும் இவர், அவற்றுள் சில இடங்களில் தம் கருத்து மாறுபடுமாயின், அஞ்சாது அதனைச் சுட்டி மறுத்துரைத்தலையும் காணலாம்.[95] திருக்கோவையார் உரையில் திருவாசகக் கருத்துக்களும் சொன்னடையும் பயிலுங்கால் அவற்றை ஆங்காங்குக் குறிப்பர்[96] இவ்வாறே அப்பர் தேவாரத்திற்கும் மணிவாசகர் திருமொழிகட்கும் இடையேயுள்ள ஒப்புமைக் கருத்துக்களைத் தவறாது காட்டிச் செல்லும் இயல்பினர்.[97]

ஆழ்பொருள் உணர்த்தல் :

உள்ளுறையுவமை[98] இறைச்சி,[99] அணிநலங்கள் அமைந்த பகுதிகளைப் பிரித்துக் காட்டுதலும், அவற்றோடு பெரிதும் ஒத்த சங்கநூல் முதலிய பிறநூல் ஆட்சிகளை எடுத்துக்காட்டுதலும் இவர் உரையின் இயல்புகள் ஆதலை இவ்வுரை நூலை முற்றும் ஓதுவோர் நன்கு உணரக்கூடும்.

யாப்பு விளக்கல் :

ஆங்காங்கு யாப்புக் குறிப்புக்கள் வருமாயின் அவற்றிற்குத் தக்க விளக்கம் தருவர். எதுகை நோக்கிச் சொற்கள் திரிதல்,[100]

---

[88] 666. [89] 987. [90] 270. [91] 418, 570. [92] 735, [93] 1040. [94] 944, 945, 976, 1034. [95] 756, 896, 917, 941, 1029, [96] 760, 797, 802, 804, 858, 845 848, 871, 852, 943, 984, 987, 1006. [97] 403, 422, 530, 779, 780, 882, 991. [98] 797, 824, 855, 879. [99] 801, 819, 870, 930, 1020. [100] 204.

நாலசைச்சீர்கள் மூவசைச்சீராக நின்று அலகுபெறல்,[101] சில யாப்புவகைகள் தவருகக் குறிக்கப்பட்டிருக்குமேல் அவற்றைத் திருத்தல் (அன்னைப்பத்து கலிவிருத்தம் அன்று ; ஆசிரியத்துறை என்றிடுதல்)[102] ஒப்பியற் செய்யுள் என்று சிலவற்றை வரையறுத்தல்,[103] முதலியவற்றைக் கூறலாம். இவ்வாறே எழுத்துச் சொல்லிலக்கணப் பகுதிக்குறிப்புக்களும் ஆங்காங்கு வருவன,[104] தொல்காப்பியமே திருவாசகத்திற்கு முற்பட்ட இலக்கணம் ஆதலின் விளக்க நூற்பாக்கள் முற்றும் அப்பழம்பெரும் இலக்கண நூலினின்றே தந்துள்ளார் இவ்வாசிரியர்.

பதசாரப் பாங்கு :

சொற்களின் ஆழத்தை யறிந்து அவற்றினை விரித்தெழுதி இன்னபிறவற்ருல் இவ்வாறு கூறப்பெற்றது என உரைத்தல் 'பதசாரம்' எனப்படும். இவ்வுரையாசிரியரது பதசாரப் பண்பு பெரிதும் சிறந்திருத்தலை இவர் உரையின் பலபகுதிகள் விளக்குகின்றன.

'விண்ணோர் முழுமுதல் பாதாளத்தார் வித்து' என்ற திருப்பாட்டிற்கமைந்த பதசாரப்பகுதி கற்குந்தோறும் கற்குந் தோறும் கழிபேருவகை தருவதாய், மணிவாசகர் பேரருட் புலமையின் பெற்றியை விளக்குவதாய் உள்ளது இது போன்ற பகுதிகள் எண்ணற்றவை.[105]

நயம் காணல் :

'சாழல்' என்ற பகுதியில் தடை விடைகளாக வருவன, களவின்கண் பிரிவிடத்துத் தலைவி தலைவனை இயற்பழித்த வழி, தோழி இயற்பட மொழிந்து மறுத்த அமைப்பினது என விளக்குவது ஒரு புதுமை.[106] இவ்வாறே பரவல் புகழ்தல் என்பன முறையே முன்னிலைக்கும் படர்க்கைக்கும் மட்டுமே பெரிதும் வரும் என்பது ஓர் இனிய பகுதி.[107] தமிழகத்தையே சிவபிரான் சிறப்பிடமாகக் கொண்டவன் என்பதும்,[108] சிற்றின்பப் பேரின்ப ஒப்புமைப்பகுதிக் கூற்றுக்களும்,[109]

---

[101] 367, [102] 435, [103] 500. [104] 632, [105] 369 - 70, [106] 371. [107] 420, [108] 446, [109] 560.

சிறுபயன் தரும் சொல்லேயும் விலக்குக எனலும்[110] ஐந்திணை அகப்பொருள் ஆன்ருேராற் கொள்ளப்பட்டது.[111] என்பதும், 'திருவளர் தாமரை' எனத் தொடங்கினுரேனும், 'ஈசர் தில்லே' எனத் தொடங்குவதே மணிவாசகர் திருவுள்ளம் என்பதும்,[112] திருக்கோவையாருள் வரும் தலைவன் தலைவியர் நம்பியாரூரரும் பரவையாரும் போல்வர் என்பதும்,[113] முதலிய பகுதிகளும், சொற்களின் நயம் கூறும் பகுதிகளும் படித்துப் படித்து இன்புறத்தக்க பாங்கு உடையவை என்று கூறலும் மிகையே.

திருவாசகத்தின் இருதயப்பாட்டு :

ஒரு திறனுய்வாளராகவே உரையாசிரியர் விளங்குவதன் அவசியத்தை இக்காலத் திறனுய்வாளர் பெரிதும் புகழ்ந்துரைப்பர். எல்லாப் பாட்டுக்களினும் ஈடுபட்டாராயினும் கோயில் திருப்பதிகத்தின், "இன்றெனக்கருதி" என்ற பாட்டிற்கு உரை யெழுதப் புகுந்த இவர் இதனுட் காணப்பெறும் 'பரம சித்தாந்தத்தை' இனிது விளக்கியபின், "இதனைத் திருவாசகத்தின் இருதயமான பாட்டு என்பர் அறிஞர்" என்றெழுதுவது அறிந்து மகிழத்தக்க பகுதியாகும்.[114]

உரைவிளக்கம் நிறைவு :

இவ்வாறு பல நிலைகளிலும் கற்ருேர்க்கு இன்பம் ஊட்டித் திருவாசகம் திருக்கோவையார் ஆகிய இருநூல்கட்கும் இனியதோர் உரை வரைந்துள்ள மகாவித்துவான், திரு. சி. அருணை வடிவேலு முதலியாரவர்கள் இதன் வாயிலாகத் தமிழுலகிற்கும் சமயவுலகிற்கும் ஒரு புதிய உரைப்படைப்பை வழங்கியிருக்கிருர். இப்படைப்பைத் திருக்கையால் வழங்கியருளும் தருமையாதீனம் இருபத்தைந்தாவது குருமுதல்வரவர்கட்குச் சைவப்பெருமக்கள் நன்றியுணர்வு என்றும் உரியது. உரையெழுதலாகாது என்ற உணர்வு இருந்த காலத்தே, திருமுறைகட்குத் தெளிந்த உரை வருதலும் வேண்டும்; சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்க்கே செல்லும் நெறியும் சித்திக்கும்' என்று திருவுளங்கொண்டு, தக்காரைத் தேர்ந்து இத்திருமுறை உரைப் பணியைத் தொடர்ந்து நிகழ்த்தி வருகின்ருர்கள், சேக்கிழார்

---

[110] 580, [111] 683, [112] 689, [113] 686, [114] 486.

திருமொழி வரையும் இவ்வுரைப்பணி மிக விரைந்து நிறைவேற அம்பலக் கூத்தனும் செந்தமிழ்ச் சொக்கனும் அருள் வழங்குவர் என்பது உறுதி.

மெய்ப்பொருள் உணர்வு :

இதுகாறும் வெளிவந்துள்ள திருவாசக உரைகள் பலவற்றின் தொகுப்பில், இவ்வுரை இஞ்ஞான்று மலர்ந்து மணம் வீசுகின்றது. ஒரு நூலுக்குப் பல உரைகள், பல விளக்கங்கள் மேலும் மேலும் வேண்டும். அவரவர் நெஞ்சிற்கும், கனிவிற்கும், புலத்திற்கும் ஏற்ப அவ்வப்போது ஏற்றி வைக்கப்படும் இத்தகைய உரை விளக்குக்கள் புத்தொளி வீசிடும்; அவ்வொளியின் சுடரில் மூலநூலின் ஆழ்பொருள் இனிது புலனாகும்; அதனை உணர்வார் வாழ்வின் விழுப்பம் உணர்ந்து, மெய்ந்நெறி தலைப்பட்டு, மெய்ப்பொருள் கண்டு இன்புற்று வாழ்வர்.

வாழ்க மணிவாசகர் மலரடி ! வாழ்க திருவாசகத் திருநெறி !!

உ
சிவமயம்

எட்டாந் திருமுறையின்

இலக்கியச் சுவை

வித்துவான். திருமதி. ப. நீலா அவர்கள்
பேராசிரியை, ஆதீனப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

தேனினுமினிய தீந்தமிழ் வாசகம் திருவாசகம். 'திருவாசகத்திற்கு உருகாதார் ஒருவாசகத்திற்கும் உருகார்' என்பது நாடறிந்த மொழி. தெள்ளுதமிழ்ச் சொல்லெடுத்து உள்ளம் அள்ளும் அமுதப் பெருக்காகத் திருவாசகத்தை ஆக்கியளித்தவர் திருவாதவூரடிகளாம் மாணிக்கவாசகப் பெருந்தகையார்.

எட்டாம் திருமுறையாகிய திருவாசகத்தோடு திருக்கோவையாரையும் இணைத்து எண்ணும்போது நந்தமிழர் உள்ளம் வீறு கொண்டெழுந்து நிற்கும் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

'பாவை' பாடிய வாயால் 'கோவை' பாடுக என்று தில்லையம்பலத்தரசனே ஆணைதர, அடிகள் நானூறு பாக்கள் கொண்ட திருக்கோவையாரைப் பாடி முடித்தார். கோவை நூல்கள் பல இருந்தாலும் 'திரு' - என்ற அடைமொழியைப் பெற்ற கோவை நூல் இதுவொன்றேயாகும். அவரவர் உள்ளப் பாங்கிற்கேற்ப இந்நூல் ஒளிரும் என்ற சிறப்பை முதல் தனிப் பாடலே காட்டும். அந்தணர்கள் இதனை வேதமென்று போற்ற, யோகியர்களோ ஆகமம் என்பர். காமுகர் கண்ணிற்கு இது காம நன்னூலாகக் காட்சி தரும். தருக்கம் வல்லோர் இதனை ஏரணமென்று எக்காளமிட, எழுத்தென்று ஏமாப்பர் இன் புலவர். இப்படித் தேனூறு செஞ்சொல் திருக்கோவையென்ற நானூறும் நம் மனத்தே நடனமிட்டு அழியா ஓவியங்களென ஒளிர்கின்றன.

ஊழியில் படிக்க உதவும் ஒரு நூல் :

திருவாதவூரில் அந்தண குலத்தில் சம்புபாதாசிரியர் என்ற பெருமகனாருக்குத் தோன்றிய மணிவாசகர் என்ற ஞான நல்

பசு அளித்த தீம்பாலாம் திருவாசகம் பற்றிய பல செய்திகள் உண்டு. பிறப்பால் ஆங்கிலேயரான ஒருவர் இறப்பில் 'தமிழ் மாணவராக' - மாறினமைக்கு இச் செந்தமிழ் நூலே காரணம் என்பர் சிறந்தோர்.

சிவப்பணி செய்யவந்த செம்மல் சிவப்பிரகாசர் பூவென்றால் பொறிவாழ் பூவே, பா வென்றால் திருவாசகமே - என்று பாராட்டியுள்ளார்.

"செய்ய வார்சடைத் தெய்வ சிகாமணி
பாதம் போற்றும் வாதவூ ரன்ப,
பாவெனப் படுவதுன் பாட்டுப்
பூவெனப் படுவது பொறிவாழ் பூவே"

திருவார் பெருந்துறையிலே ஒரு குருந்தமரம். அதன் நிழல் சிவ நிழல். அதன் பயனோ சிவானந்தம். அதனை உண்டு செம் மாந்து நின்று அருளிய சொல்லே; பொற்கலம் நிகர்க்கும் மதுர வாசகம் என்பார் பிறிதோரிடத்தில்,

"மாணிக்க, வாசகன் புகன்ற மதுரவாசகம்
யாவரு மோதும் இயற்கைத் தாதலின்,
பொற்கல நிகர்க்கும்; பூசுரர் நான்மறை
மட்கல நிகர்க்கும்; மதுர வாசகம்
ஓதின் முத்தி யுறுபயன்;
வேத மோதின் மெய்ப்பய னறமே"

வேதம் ஓதுவதால் விண்ணுலகின் உயர்ந்த பதங்களையே அடையலாமாயிருக்க - திருவாசகத்தாலோ மேலான முத்தியின்பத்தையே அடையலாம் என்று முழக்குகின்றார்.

வாதவூரடிகளுக்கு உருவத் திருமேனி கொண்டு வெளிவந்த குருநாதர், இனி அப்படி யாருக்கு வரப்போகிறார் - என்று தாயுமானவ சுவாமிகள் தாமுணர்ந்த இன்பத்தைப் பராபரக் கண்ணியிலே கூறுகிறார்.

"உருவெளிதான் வாதவூர் உத்தமர்க் கல்லால் இனமும்
குருவழிநின் றார்க்கும் உண்டோ கூறாய் பராபரமே"

மணிவாசகர் வாக்கில் அவர் பெரிதும் ஈடுபாடு கொண்டவர் என்பதனைக் கீழ்வரும் அடிகள் தெளிவுபடுத்தும்.

" உள்ள பொருள் ஆவி உடல்மூன்றும் அன்றேதான்
கொள்ளை கொண்ட நீஎன் குறைதீர் பராபரமே"

என்பது,

" அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை யெல்லாமும்
குன்றே யனையாய் என்னையாட் கொண்ட போதே
[கொண்டிலையோ"
— குழைத்த பத்து - 7.

என்ற வரிகளின் நினைவிலிருந்து பிறந்ததே யன்றோ!

" தானாக வந்து தடுத்தாண் டெனை இன்ப
வானாகச் செய்த இன்ப வானே பராபரமே"

இது,

" தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்"

" அறிவிலாத எனைப்புகுந் தாண்டுகொண் டறிவதை
நெறியெலாம் புலமாக்கிய எந்தை" [யருளிமேல்

" கடையவ னேனைக் கருணையி
னால்கலந் தாண்டு கொண்ட விடையவனே."

" அரி அயன் இந்திரன் வானோர்க் கரியசிவன் வாவாவென் றென்னையும் பூதலத்தே வலித்தாண்டு கொண்டான்" என்ற திருவாசக வரிகளின் எதிரொலிப்பே.

சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றாய் இருக்கும் இறைத்தன்மையைத் தாயுமானவர்,

' அகத்தூ டணுஅணுவாய் அண்டமெல்லாம் தானாய்
மகத்தாகி நின்றனை "

என்று வாழ்த்துவார்.

" தந்தது உன்தன்னைக் கொண்டது என்தன்னை
சங்கரா யார்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன்று என்பால்"

எனவரும் திருவாசகப் பாடல்,

" என்னை உன்றன் கைக்களித்தார் யாவர்என்னையான் கொடுத்
பின்னை உன்னூற் பெற்றநலம் பேசேன் பராபரமே " [துப்

" தன்னைத்தந் தென்னைத் தடுத்தாண்ட நின்கருணைக்
கென்னைக்கொண் டென்னபலன் எந்தாய் பராபரமே "

என்று மாற்றுருக் கொண்டு மகிழவைக்கிறது.

இதற்கெல்லாம் முடிமணியாகப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை மனோன்மணீயத்தில் " திருவாசகத்தை இறைவன் எழுதினான். காரணம், ஊழி முடிவில் தன் தனிமையை அதன் துணையால் போக்கிக் கொள்ளலாம் என்பதே " எனக் குறிப்பிடுகிறார். ஊழியில் படிக்க இறைவனுக்கு அந்நூலே துணையானால், அதன் பெருமையும் தரமும் நம்மால் கூறவும்படுமோ?

பண் சுமந்த பாடல்;

இத் தொடருக்குப் பொருத்தமாகப் பல பதிகங்கள் இதனுள் அமைந்திருந்தாலும் திருவெம்பாவை, திருச்சாழல், திருவம்மானை, திருப்பொற்சுண்ணம், திருக்கோத்தும்பி, திருத்தெள்ளேணம், திருப்பூவல்லி போன்ற பகுதிகள் பண் சுமந்து பாட மிக இனியன.

கண் சுமந்த நெற்றிக் கடவுள் மாணிக்கவாசகருக்காக மண் சுமந்தான். கூலிகொடுத்து எனை வேலை கொள்வாருண்டோ என்று ஆலுமறைத்திருமுடியார் அடிக்கமலம் நிலஞ்சூடவந்தார். தொழுதகைய அன்னையவள் வந்தியின் கெழுதகைய அன்பிற்கு ஆட்பட்டு அடியும் பட்டார்.

" அருப்பிட்டுப் பச்சிலையிட்டு ஆட்செய்யும் அன்னையவள்
தரும்பிட்டு பிட்டுண்டாய் தலையன்பிற் கட்டுண்டே "

என்று குமரகுருபரர் இயம்புவார்.

பெண் சுமந்த பாகத்தன் - பெம்மான் பெருந்துறையில் மணிவாசகரை ஆட்கொண்டவன் - விண் சுமந்த புகழுடையான் பண் சுமந்த பாடலுக்காகத் தன் மேனியில் புண் சுமந்தான்.

சாக்கிய நாயனுர் கல்லால் எறிந்தார். பாண்டவருள் ஒருவனும் அருச்சுனன் வில்லால் அடித்தான். பாண்டியன் கைப் பிரம்பால் அடித்தான். சுந்தரர் 'பித்தா' என்ருர். இப்படித் தொண்டர் குழாம் பல விதங்களில் பிழைத்தது. நான் உன்னை எப்படித் துதிப்பது! போற்றுவது? என்கிருர் தாயுமானவர்.

" கல்லால் எறிந்தும்கை வில்லால் அடித்தும் கனிமதுரச்
சொல்லால் துதித்தும்நற் பச்சிலை தூவியும் தொண்டர்இனம்
எல்லாம் பிழைத்தன ; அன்பற்ற நான்இனி ஏதுசெய்வேன்
கொல்லா விரதியர் நேர்நின்ற முக்கட் குருமணியே. "

அங்கிங்கெனுதபடி எங்கும் பிரகாசமாய் இருக்கும் ஆண்டவன் அன்பர்களின் அன்பிலே கட்டுண்டதனுல் எழுந்த வரலாறுகள் அதிகம். ஆலம்தரித்து மூலமாய் எங்கும் முளைத்த சொக்கேசன் வாதவூரடிகளுக்காகப் பிரம்படிபட்டுப் புண் சுமந்ததே திருவாசகமாம் பண்சுமந்த பாடலின் பரிசாகும்.

கண்ணுதலின் பெருங்கருணை :

அண்ணல் எனக்கருளியவாறு யார் பெறுவார் என்று வினவுவார் அடிகள். காட்டிலே வேடனுக, கடலில் வலைவாணனுக, நாட்டில் பரிப்பாகனுக வந்து விளையாடும் திறத்தை,

" காட்டகத்து வேடன் கடலில் வலைவாணன்
நாட்டிற் பரிப்பாகன் நம்வினையை - வீட்டி
அருளும் பெருந்துறையான் அங்கமல பாதம்
மருளும் கெடநெஞ்சே வாழ்த்து. "

என்று நெஞ்சம் திறந்து வாழ்த்துகிருர்.

தில்லைமூதூர் நடஞ்செய்வான் எமை ஆளும் கொண்டெம் பணிகொள்வான் வைத்த மாமலர்ச் சேவடி சென்னி மன்னி மலரும் என்றவர், உனது தடங்கருணைக்கு முன் நான் எம்மட்டு! பொற்றவிசு நாய்க்கிடுமாறுபோலே எனக்குத் தகுதியளித்து ஏற்றுக்கொண்டாய் என்றும் பாடுவார். நானேயோ இதற்குத் தவஞ்செய்தேன். 'சிவாயநம' என்ற உபதேசம் செய்து தேனுக, இன்னமுதமாகத் தித்திக்கும் நீ தானேயாக வந்து என் உள்ளம் புகுந்து அருள்செய்தாயே! என நினைவார்.

தான்பெற்ற அறிவால் - அனுபவத்தால் உலகத்தாருக்கு உபதேசம் செய்கிருர்.

"காலமுண் டாகவே காதல்செய் துய்மின் கருதரிய
ஞாலமுண் டானெடு நான்முகன் வானவன் நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப் பிரான்றன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின் ருன்வந்து முந்துமினே"

—திருப்பாண்டிப் பதிகம் - 5.

புன்மை கடிந்த புனிதன் :

ஆணவத்தில் அடங்காத இறைவன் அன்பில் அகப்படும் அதிசயத்தைக் காண்கிறேம். விண்ணிறந்தார் - நிலம் விண்டவர் என்னு மிக்காரிருவர் கண்ணேயும் கடந்தவர் தில்லையம்பல வாணன். அவர் நடனமிடுகின்ற பொற்சபையிலே மண்ணளந்த ஐயன் பள்ளிகொண்டிருக்கிருன். இதன் காரணம் என்ன தெரியுமா! மணிவாசகர் தரும் விளக்கம் இதோ! திருமால் நெறியல்லா நெறியில் சென்று பூவுலகைப் பிளந்து கொண்டு சென்றும் திருவடிகளைக் காணுமல் வருந்தி சிவன் கொடுத்த இரண்டு கைகளாலும் அவனே வணங்கிப்போற்ற, சிறிது இரங்கிய சிவபெருமான் தனது ஒரு திருவடியைச் சிறிதே தூக்கிக் காட்டினுன். ஆடல்வல்லானுடைய மற்றைய திருவடியையும் காணுமல் இங்கிருந்து அசையமாட்டேன் என்று வரங் கிடப்பான்போல் அங்கேயே பள்ளிகொண்டான் அரங்கத் தண்ணல்.

"புரங்கடந் தானடி காண்பான் புவிவிண்டு புக்கறியா
திரங்கிடெந் தாயென் றிரப்பத்தன் னீரடிக் கென்னிரண்டு
கரங்கடந் தானென்று காட்டமற் ருங்கதுங் காட்டிடென்று
வரங்கிடந் தான்தில்லை யம்பல முன்றிலம் மாயவனே"

(திருக்கோவை - 86)

நீலகண்டன் விண்மடங்க, விரிநீர் பரந்து வெற்புக் கரப்ப, மண் மடங்கவருமொரு காலத்தும் மன்னி நிற்பவன். அக்கின்தவா மணிசேர் கண்டனுகிய அவ்வம்பலவன் என்பக்கம் வந்து என் பொல்லாவினே கடிந்து என்னுள் புக்கவாற்றை நான் எவ்வாறு விளம்புவேன். என்னிடத்திலோ சீலமில்லை, நோன்பில்லை,

செறிவுமில்லை, தெளிவுமில்லை, இந்நிலையில் மாலுங்காட்டி வழி காட்டி வாராஉலக நெறியேறக் கோலங்காட்டி ஆண்டான். அவனுக்கு நான் என்ன கைம்மாறு செய்வேன்' எண்ணிறந் தெல்லையிலாதானே நின்பெருஞ்சீர் பொல்லா வினையேன் புகழு மாறு ஒன்றறியேன். நலம்தான் சிறிதும் இல்லாத நாயேற்கு ஞானம் நல்கி - நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி - நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத் தாயிற்சிறந்த தயாவன தத்துவனே! ஈர்த்தென்னை ஆண்டுகொண்ட எந்தை பெரு மானே! என்று பலபடப் போற்றுவார் மணிவாசகர்.

அருளாம் பெருமழை :

நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதன் அருளை எப்படிப் பெறுவது! சில எளிய வழிகள் இருந்தாலும் ஒன்றாலும் நான் உய்ந்தேனில்லையே! என்று வருந்துகிறார் வாதவூரார்.

" ஆமாறுன் திருவடிக்கே அகங் குழையேன் அன்புருகேன்
பூமாலை புனைந் தேத்தேன் புகழ்ந் துரையேன் புத்தேளிர்
கோமானின் திருக்கோயில் தூகேன் மெழுகேன்
[கூத்தாடேன் "

அப்பர் பெருமானும் நிலைபெற எண்ணுகின்ற நெஞ்சை விளித்து இதே செய்தியைக் கூறுகிறார். சலம் - பூவொடு - தூபம் மறந்தறியாமல் - தமிழோடு இசைபாடவல்ல திருநாவுக்கரசர் வாக்கு இது,

" நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன் முன்னலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி என்றும்
அலைபுனல் சேர்செஞ்சடையெம் ஆதி யென்றும்
ஆரூரா யென்றென்றே அலறா நில்லே "

இதற்கு இலக்கியமாக வாழ்ந்து காட்டியவர் திலகவதியார். அப்படி வாழ இயலவில்லையே என வருந்துகிறார் மாணிக்க வாசகர். கரும்பினில் கட்டி போல்பவனாகிய இறைவன் விரும்பி

நல் விளக்குத் தூபம் இட்டாலே வேண்டுவன தருவான். அத்தகைய அருளாளன் அவன்.

விசும்பின் துளி விழவில்லையானல் பசும்புல் தலைகூட இங்கே காணப்படாது என்பார் வள்ளுவர். மணிவாசகர் அம் மழையையும் அம்பிகையின் கருணை மாமழையாகக் காட்டும் திறம் உன்னி உன்னி மகிழ்தற்குரியது.

கடலை முன்னிய மேகம் உடையாள் நிறம்போலக் கறுத்து, அவள் இடைபோல மின்னி, அவளுடைய திருவடிமேல் கிடக்கும் பொன்னஞ் சிலம்பென விம்மி, திருப்புருவமொத்து வில்லிட்டு எம்பெருமானுடைய அன்பர்க்கு அவள் சுரக்கும் இன்னருளே போல மேலிருந்து பொழிந்தது. 'முன்னிக் கடலை' என்ற திருவெம்பாவைப் பாடல் இக்கருத்தோடு இலங்குகின்றது. காதல் மடப்பிடியோடு வரும் களிறுகளை எல்லாம் சிவ சக்தியாகக் கண்ட செங்நின்ற நாவரசர் திறமும் இங்கே உணரற்பாலது.

தேனின் கசிவந்த சோல்:

வண்ணமலர் - அதனை நாடிவரும் வண்டு. செண்டொத்த பூவின்தேனை உண்டு - பண்பாடும் மகிழ்வுகொண்டு, தினையளவு தேனையுண்டு ஆனந்தங் கொள்ளும் தும்பியே! நினைக்க, பேச, காண எப்போதும் இன்பம் தரும் பரம்பொருளாம் வாடா மலரை நீ நாடியதில்லையோ! ஆனந்தத் தேன் சொரியும் அவனடி மலர்கள் சாவா இன்பம் தருமே!

" தினைத்தனை உள்ளதோர் பூவினில் தேனுண்ணுதே
நினைத்தொறும் காண்டொறும் பேசுந்தொறும் எப்போதும்
அனைத்தெலும் புள்நெக ஆனந்தத்தேன் சொரியும்
குனிப்புடையானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ! "

அகில உலக நாயகராம் பரசிவனைத்தேனுக -பாலாகக் கன்னலின் தெளிசாறுகக்கண்டு சுவைத்தவர் - நான் மாண்டு மாண்டு வந்தும் உன்னை மறக்காமல் இருக்க வேண்டும் என்ற விழைவை வெளியிடுகிறுர்.

பிறவாமை வேண்டும். மீண்டும் பிறப்பு உண்டேல் உன்னையென்றும் மறவாமை வேண்டும் என்று பாடினுர் காரைக்கால் அம்மையார். இனித்தமுடைய எடுத்த பொற்பாதம்காண மனித்தப் பிறவியே வேண்டும் என்றுர் ஆளுடைய அரசர்.

கலைமலிந்த சீர்க் கண்ணப்பர் :

வாளால் மகவரிதலும், மாதுசொன்ன சூளால் இளமை துறத்தலும், ஆறுநாளில் கண்ணிடந்து அப்பலும் ஆகிய இச் செயல்கள் எல்லாம் என் சக்திக்கு அப்பாற்பட்டன. நான் எப்படித் திருக்காளத்தியப்பருக்கு ஆளாக முடியும் என்று வெம்பி வாடுகிறார் பட்டினத்தடிகள். கண்ணப்பரின் - கருதரிய செயல் அன்பின் எல்லை கடந்த செயலாகும். தம்மை மறந்து தலைவன் தாளுக்கு ஆட்படும் அன்பராலேயே அது முடியும்.

இப்பிறப்பில் கல்வி கல்லாத கண்ணப்பர் முன்னைய ஊழின் பெருவலியால் நாளாறில் கண்ணிடந்து அப்பும் ஆற்றல் பெற்றார். ஆகவே அவரைக் கலைமலிந்த சீர் நம்பி கண்ணப்பர்-என்று செந்தமிழ்ச் சுந்தரர் குறிப்பிடுகிறார்.

மாணிக்கவாசகர் மனதில் இக்காட்சி பதிகிறது. பொய் மையே பேசிப் பொழுதினைச் சுருக்கும் புழுத்தலைப் புலையனேனை எனக்கும் கண்ணுதல் அருள்செய்தாரே! என்று கண்ணப் பருடைய அன்பின் திறம் வியந்து,

" கண்ணப்ப னொப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்னொப்பில் என்னையும் ஆட்கொண்டருளினன்"

என்று ஆனந்தங்கொள்வார். அகம்நெகிழ்ந்து பாடும் அவ்வின் குரலை நம் செவி கேட்கிறதே.

அஞ்சுவது எதற்கோ :

" அஞ்சுவ தஞ்சாமை பேதைமை அஞ்சுவ
தஞ்ச லறிவார் தொழில் " (குறள் - 428)

அஞ்சுவதற் கஞ்சுதல் அறிவார் தொழில் என்கிறார் தெய்வப் புலவர். தாம் அஞ்சாத பொருள்களை ஓர் பட்டிய லாக்கித் தருகிறார் ஆளுடை அடிகள். பிணியெலாம் வரினும் அஞ்சேன், பிறப்பினோடிறப்பும் அஞ்சேன், வாளுலாம் எரியும் அஞ்சேன், வன்புலால் வேலுமஞ்சேன், தகைவிலாப்பழி, தறி செறிகளிறு, தழல்விழியுழுவை, மஞ்சுலாம் இடி, மன்னரோடு றவு - கோள்நிலாவாளி, கூற்றுவன் சீற்றம், புற்றில்வாளரவு, பொய்யர்தம் மெய் இவைகளுக்கெல்லாம் அஞ்சாத நான் 'வெறிகமழ் சடையனும் விண்ணவர் நண்ணமாட்டாத செறி தரு கழல்கள் ஏத்திச் சிறக்காதவர்களைக் கண்டு அஞ்சுகிறேன்.

'' மால் திணிநிலம் பிளந்தும் காணாச் சேவடி பரவி
வெண்ணீறு அணிகிலா தவரைக் கண்டால்
அம்மநான் அஞ்சுகின்றேன் ''

என்று பாடுகிறார். பெருநீர் வற்றிடச் சிறுமீன் துவள்வது போலே, எறும்பிடைப்பட்ட நாங்கூழ்ப் புழுப்போல, ஆனைவெம் போரில் அகப்பட்ட குறுந்தூறெனக் கொம்பரில்லாக் கொடி தனையொத்து அலமரும் என்னை நீ கைவிடுதல் கூடாது; பெற்றது கொண்டு பிழையே செயும் எனை நீயும் கைவிட்டு விடுவாயாயின் - மற்று அடியேனைத் தாங்குநர் உண்டோ! அடியேனுடைய மனத்துணையே! யென்றன் வாழ்முதலே! எனக் கெய்ப்பில் வைப்பே! உடையாய் உன்னைப் பாடுதலே என் பணியாகும் என்ற கருத்துப்பட,

'' பழுதுசெய் வேனை விடேலுடை யாயுன்னைப் பாடுவனே ''
(நீத்தல் - 44.)

என உள்ளக்கருத்தை உரைக்கிறார்.

ஆனந்தத் தேன் !

திருவாசகம் இளையோருக்கு இலக்கியமாக - மூத்தோருக்கு மூதுரையாக-பக்தர்களுக்குப் புராணமாக - தொண்டர்களுக்குத் தேனமுதாகத் தித்தித் தொளிர்கிறது. இந்நூலின் பயனை ஓர் வெண்பா விளக்கும்;-

'' தொல்லை யிரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே — எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகமென்னும் தேன் ''

அங்கையின் நெல்லிக் கனியென இதன் அருமை இப்பாட்டால் விளங்கும்.

மணிவாசகர் முழக்கிய அருள் முரசு திருவாசகம். கற்றோர் இதனைக் கோயிலாக்கிப் பல்காலும் சுற்றுமின். இதுவே ஞான மென்றுக்கிச் சூழ்மின். வாழ்நாள் முற்றும் இதனையே தொடர் மின். ஒருநாளும் ஒருபொழுதும் இதனை விடேன்மின். பேரின்பப் பேற்றின் வாயிலுக்கு நெஞ்சோடு இதனைப் பற்று மின் என்று பறை சாற்றி முற்றுவிப்போம் - என்றும் மூவா முதல்வன் நற்றாள் வணங்கி.

உ
சிவமயம்

உவமை உருவக அணி நலன்

சிரோமணி. வித்துவான். திரு. வி. சபேசன் அவர்கள்
பேராசிரியர், ஆதீனப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

கவிதைக்கு அழகு தருவன அணிகள். அணிகளில் தலையானது உவமையணி. கவிஞன் எண்ணிய கருத்தை எண்ணியவாறே படிப்பவர் மனத்தில் பதியவைக்கும் இயல்புடையது இவ்வணி. ஒரு பொருளை அழகுறுத்திக் கூறுதற்கும் இவ்வுவமை பயன்படுகிறது. தெய்வக் கவிஞராகிய மணிவாசகப்பெருமான் ஆன்ம அறிவிற்கு அப்பாற்பட்ட சிவபோக நுகர்ச்சி முதலியவற்றை உவமை வழியாகச் சொல்லி விளக்கும் இயல்பை இந்நூலுட் காணலாம்.

உவமையினடியாகத் தோன்றும் பிறிதோரணி உருவகமாகும். உவமையும் உருவகமும் தாயும் சேயும் போல்வன. இவ்விரு அணிகளால் மணிவாசகர் பல நுட்பங்களை இனிது விளக்குகிறார். எட்டாந் திருமுறையாகிய திருவாசகம் திருக்கோவையார் ஆகிய இரு நூல்களிலும் மணிவாசகர் கையாண்ட உவமை உருவக அணிகளுள்சிறந்தன சிலவற்றைத் தொகுத்துக்காண்போம்.

வானவெளியில் அம்பிகை :

திருவண்ணாமலையில் கன்னிப் பெண்கள் மார்கழி விடியலில் நீராடி இறைவனை வழிபடும் காட்சியை விளக்கும் திருவெம்பாவையில் அப்பெண்கள் மழைபொழிந்து நாடு செழிக்கவேண்டுமெனப் பிரார்த்திக்கின்றனர், அப்பாடலில் அமைந்த உவமையணி இலக்கிய விருந்தாக விளங்குகின்றது. ‘மழையே! நீ கடல் நீரை யுண்டு அம்பிகையின் உருவம் போலக் கறுத்தும், அம்மையின் இடைபோல மின்னியும், சிலம்பொலிபோல இடித்தும், புருவம்போல வானவில் தோற்றியும், அம்பிகை அடியார்களுக்கு வழங்கும் அருள்போலப் பொழிவாயாக’ (170) என்று கூறும் பாவைப் பாட்டு, படிப்பவர்க்குச் சுவையூட்டும் திருப்பாட்டாக இலங்குகிறது.

அரும் பேறல் மேகம் ;

இறைவன் திருப்பெருந்துறையில் குருநாதனாய் எழுந்தருளித் தம்மை ஆட்கொண்டசிறப்பை வியந்தும், திருக்கோயில்கள் தோறும் எழுந்தருளி அடியார்களுக்கு அருள்வழங்கும் வள்ளன்மையை நினைந்தும் மணிவாசகர் திருவண்டப் பகுதியில் முற்றுருவகம் ஒன்றை அமைத்தருள்கின்றார்.

'பேரின்பமாகியகடல் குருநாதராகியமேகமாய்த்தோன்றித் திருப்பெருந்துறையாகிய மலையிலேறி, ஐம்புலன்களாகிய பாம்புகள் நடுங்க மின்னொளி செய்து, துன்பமாகிய கோடை தணிய முரசொலித்தாற்போல முழங்கி, அருள் மொழிகளாகிய மழையைப் பொழிந்தது. அறுவகைச் சமயங்களாகிய பேய்த்தேரினை வீடு பேறு விரும்பும் நல்லோர்களாகிய மான்கள் புனல் என்று எண்ணி வருந்த, அவ் ஞானமாகிய வெள்ளம் எம் உள்ளமாகிய வயலில் இன்பமாகிய சுழியிட்டுப் பாய்ந்தது. பல தலங்களாகிய கால்களில் ஓடி கோயிலாகிய குளத்தில் நிறைந்தது. தொண்டர்களாகிய உழவர்கள் வழிபாடு என்னும் வயலில் அந்நீரைப் பாய்ச்சி அன்பு விதை விதைத்து, சிவபோகமாகிய விளைவைப் பெறுகின்றனர். ஆதலின் இறைவன் மேகம் போன்றவன்'' (3.65 மு 95) என்று கூறும் பகுதி அரியதோர் இலக்கியப் படைப்பாகும்.

பிறவிக் கடல் :

திருச்சதகத்துள் பிறவிக் கடலாக உருவகித்துரைக்கும் திருப்பாடலுள் முற்றுருவக அணி அமைந்து விளங்குகிறது. 'பிறவியாகிய கடலில் தனியனாயகப்பட்ட என்னைத் துன்பங்களாகிய அலைகள் தாக்கத் துவண்டு நான் பற்றுக்கோடின்றித் தவிக்கின்றேன் மகளிர்மேற் கொள்ளும் மயல் என்னைப் புயலாய் வருத்துகிறது. ஆசை என்ற சுறுமீனின் வாயில் அகப்பட்டு அலமரும் வேளையில் திருவைந்தெழுத்தாகிய புணையைத் தந்து திருவடியாகிய கரையில் இறைவன் என்னைச் சேர்ப்பித்தான்' (31) என்று கூறியருளுதலைக் காணலாம்.

இருதலைக் கொள்ளி எறும்பு ;

இருபுறமும் நெருப்புப் பற்றி எரியும் சிறுவிறகின் இடையே அமைந்த துளையில் அகப்பட்ட எறும்பு இங்குமங்கும் ஓடி

அத்துன்பத்திலிருந்து விடுபட முயலும். அதுபோல ஆசையும் அச்சமும் இருமுகமாக ஈர்க்க யான் வருந்துகின்றேன் என்கிறார்.

இருகை யானை ;

யானை ஒரு கையால் உண்டு உயிர் வாழ்கிறது. உண்ணும் தொழிலை யன்றி வேறு எதனையும் யானை அறியாது. அது போல உண்டற்றொழிலொன்றையே யானும் செய்கின்றேனே யன்றி உயிர்க்குயிராகிய சிவனை யறிந்திலேன். அவ்விலங்கொடு எனக்கு வேற்றுமை இருகையுடைமையேயன்றிப் பிறிதில்லை, என்று கூறவந்த மணிவாசகர் 'இருகையானையை ஒத்திருந் தென்னுளக் கருவையான் கண்டிலேன்' (45) என்று இல் பொருளுவமை ஒன்றால் அருளிச் செய்கின்றார். இன்னோரன்ன உவமை உருவகங்களைத் தனித்தனி எடுத்துக் கூறின் விரியும். விரிவஞ்சி அவற்றை முறைப்படுத்தித் தொகுத்துக் கூறுகிறேன்.

தம்முடைய நிலை :

மணிவாசகர் இவ்வுலக வாழ்வைத் துன்பமென எண்ணிக் கலங்குதலையும், அவரது பற்றற்ற நிலையினையும் தமது கசிவில் லாத மன நிலையினையும் இத்தலைப்பிலமைந்துள்ள உவமைகள் மூலம் விளக்குகின்றார்.

மத்திடுதயிர் 44, மத்திட உடைந்து தாழியைப்பாவு தயிர் 411, தயிரிடைப்பட்டமத்து 133, மத்துறுதண்டயிர் 134, எறும் பிடை நாங்கூழ் 129, பெருநீரறச் சிறுமீன் துவளல் 130, பொதும்புறுதீ 140, தீப்புகுவிட்டில் 109, அடற்கரி ஐம்புலன் 136, இரும்பு நெஞ்சம் 41, 84, இரும்பு தருமனம் 544, இரும் பின் பாவை 26, இரும்பு செவி 399, மூருடொக்கும் சிந்தை 399, கல்மனம் 25, 52, 60, 316, 641, மரக்கண் 25, 399, தோலின் பாவைக் கூத்தாட்டு 643, கறங்கோலை போல்வதோர் பிறப் பிறப்பு 242, துன்பப்புயல் கழற்புணை 409, கடலின் திரைபோல வரு கலக்கம் 511, இரைதேர் கொக்கு 380, புளியம்பழம் 420, பலாப்பழத்தின் ஈ 150. மழக் கையிலங்கு பொற்கிண்ணம் 96, கண்கெட்ட ஊரேறு 57, ஊராமிலைக்கக் குருட்டாமிலைத்தல் 91. திணியார் மூங்கில் 93, நச்சு மாமரம் 100, கடலினுள் நாய் நக்குதல் 117, வெள்ளத்துள் நாவற்றுதல் 118, நெய்க்குடம் தன்னை மொய்க்கும் எறும்பு 128, பள்ளந்தாழ் உறுபுனல் 25, தீசேர் மெழுகு 92, 161, 460, ஊற்றுமணல் 437,

இறைவன் நிலை

மணிவாசகர் இது அவன் திருவுரு என்றாற்போல விளக்கும் பகுதிகளைப் பின்வரும் உவமைகளால் அறியலாம்.

செக்கர்போலும் திருமேனி 443, செந்தழல் மேனி 373, 453, 462, தீ மேனி 234, பொன்மலை 203, செந்தாமரைக் காடனைய மேனி 30, 354, செச்சைமலர் மேனி 33, செம்பவளவெற்பு 154, பளிங்கின் திரள் 4-103, தாமரைத்தாள் 49, 406, பொன்னும் மின்னும்அன்ன தோற்றம் 108, ஞாயிறு போன்றவன் 350, போரேறு56, வீணையிசைபோன்றவன்3-35. மடுச்சிறுதோணிமதி 130, தாரைகை போலும் தலைமாலை 152, பூவில் நாற்றம்போன்றுயர்ந்து 3-115. எள்ளும் எண்ணெயும் போல் நிற்பன் 50.

அம்மையின் திருவுரு

மணிவாசகர் அம்பிகையின் திருமேனியைக் குறித்துக் கூறும் உவமை உருவகங்களைப் பல இடங்களிற் காணலாம். மாவடுவகிரன்ன கண்ணி, பண்ணின் நேர் மொழியாள் 450. பஞ்சின் மெல்லடி 451. அரவேரல்குல் 504. பைங்குவளை 167.

எளிவந்த கருணை

இறைவன் உயிர்களின் ஈடேற்றம் கருதி வழங்கும் அருள் நலத்தைக் குறித்தல் :

இறைவன் தேன், நெய், கரும்பு, தேறல், அமுது, பழச்சுவை 42, 188, 190, 209, 511 முதலியன. அன்னையொப்பாய் 120, தாயிலாகிய அருள் 43, தாய்போல் தலையளித்தல் 178, தாயிற் சிறந்தவன் 1-61, 277, தாயின் இன் அருள் 645, பால் நினைந்தூட்டும் தாய் 542, கன்றை நினைந்த தாய் 634, தாயாய் முலையைத் தருவான் 645, கறந்தபால் கன்னலொடு நெய் கலந்தாற் போல 1-46.

அருள் வழங்கிய சிறப்பு

மணிவாசகர் தம்மை மிகவும் இழிவுபடுத்தித் தம்மையும் இறைவன் ஆட்கொண்டதை எடுத்துரைத்தல். நாய் சிவிகையேற்றுவித்தல் 222, 656, நாய்க்குத்தவிசிடல் 32, 234, 504, நாய்க்குப் பொன்தவிசிடல் 548, நாயிற் கடைப்பட்ட 60, 277. கல்லைப்பிசைந்து கனியாக்கல் 98, 179, கல்நார் உரித்தல் 4-97, 243, 283, வாழைப்பழத்தின் மனம் கனிவித்து 138.

போதுவானவை சில :

இல்நுழைகதிரின் துன்னணுப்புரைய 2-5, கொடிறும்பேதையும் கொண்டதுவிடா 4-63, பசுமரத்தாணி அறைந்தாற்போல 4-66, ஆசை - களிறு 4-37, கல்வி - கடல் 4-38, வறுமை - விடம் 4-40, அடியவர் - பசுக்கள் 4-48, மாயாவாதம் - சண்டமாருதம் 4-55, உலகாயதம் - பாம்பு 4-56, அறம்பாவம் என்னும் அருங்கயிறு 1-52, பக்தி - வலை 3-42, வையகம் - உரல், மேரு - உலக்கை - மெய் - மஞ்சள் 303.

திருக்கோவையாருள் ;

மணிவாசகர் திருக்கோவையாருட் கூறும் உவமைகள் இலக்கிய இன்சுவை பயப்பன. அவற்றைத் தொகுத்துக் காண்போம். கீழ்கடல் நின்றிட மேல்கடல் வான்நுகத்தின் துளைவழி நேர்கழி கோத்தென 6, அமுதிவள் யான் சுவையென்ன 8, மாளிகை நுண்களபத்தொளிபாய நும்மூர்க்கருங்குன்றம் வெண்ணிறக்கஞ்சுகம் ஏய்க்கும் 15, கூத்தன் அருளெனலாகும் 18, பொய்யுடையார்க்கரன்போல் அகலும் 48, மெய்யுடையார்க்கவன் அம்பலம்போல் மிகநணுகும் 48, சிற்றம்பலத்தான் அருளிலர்போல் 51, பளிங்கடுத்த ஒளியமர்ந்தாங்கு 64, காகத்திருகண்ணிற் கொன்றே மணிகலந்தாங்கு 71, கள்ளப்படிறர்க் கருளா அரன்தில்லை காணலர்போல் 87, சிற்றம்பலவன் கழற்கே மெய்த்தலையா நின்ற அன்பினர்போல 102, நாண்மதிபோன் றொளிர் கின்ற தொளிமுகமே 108, அன்பின் அகன்றவன், தில்லையின் ஒளிபோன்றவன், தோள்பூசத்திருநீறென வெளுத்தாங்கு, திருவார்த்தையிற் பெருநீளம் 109, கழைகாண்டலும் சுளியுங் களியானையன்னான் 111, மதிக்கமலம் எழில் தந்தென...124, விடைதென்புலியூர் உடையார் கடவி வருவது போலும் 136, மதுவினிற் கைப்பு வைத்தாலொத்த 146, மாமதி வேண்டி அழுமழப் போலும் 147, விசும்பினுக்கேணி நெறியன்ன 149, குன்றின் நீள்குடுமி மேற்றேன் விரும்பு முடவனைப்போல 150, விசும்புற்ற திங்கட் கழும்மழப் போன்று 198, தில்லைப் பொலிமலர்மேல் நன்பணைத்தண் ணறவுண் அளிபோன்று 219, சிற்றம்பலம் நெஞ்சுசுருதவர்போல் 254, ஆனந்தவெள்ளத்தழுந்துமொர் ஆருயிர் ஈருருக்கொண்டானந்த வெள்ளத்திடைத் திளைத்தாலொக்கும் 307, நெருப்புறு வெண்ணெயும் நீருறும் உப்புமென 315, கூழின் மலிமனம் போன்றிருளாநின்ற கோகிலமே 532, பள்ளம்புகு புனல்போல் 379,

உ
சிவமயம்

திருவாசக உள்ளுறை

திருக்கோவையார் உள்ளுறை



மாணிக்கவாசகர்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருவாசகம்

நூற் சிறப்பு

நேரிசை வெண்பா

தோல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே—எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகமென்னுந் தேன்.

இவ்வெண்பா, பிற்காலப் பெரியோர் மொழி. இதனை, "எல்லை" என்பதினின்றுந் தொடங்கி நேரே சென்று, "ஆக்கியதே" என முடிக்க. இதுபோலும் பாடல்கள் பிறவும் உளவேனும், இஃது ஒன்றே முதற்கண் மரபாக ஓதப்பட்டு வருகின்றது.

'பிறவித் தளை', 'சூழுந் தளை' எனத் தனித்தனி இயையும். 'தளை' என்றது, பிணியை. 'தளை, பிணி' என்பன ஒரு பொருளவாதல் அறிந்துகொள்க. ஓதியுணருங்கால், அருள், அன்பு, அவலம் முதலிய சுவைகளைப் பயந்து, பின்பு பிறவியை நீக்கி ஆன்ம லாபத்தைத் தருதல் பற்றித் திருவாசகத்தை, உண்ணுங்கால் இனிமையைப் பயந்து, பின்பு நோயை நீக்கி, உடல் நலத்தைத் தருகின்ற தேனாக உருவகஞ் செய்கின்றாராத லின், 'பிறவித் தளை நீக்கி' என்றதற்கு, 'பிறவியாகிய நோயை நீக்கி' என்று உரைத்தலே கருத்தாதல் அறிக. "நீக்கி" என்ற தற்கு, 'நீக்குமாற்றால்' என உரைக்க.

"ஆக்கியதே" என்றது, துணிவு பற்றி, எதிர்காலம், இறந்த காலமாகச் சொல்லப்பட்டதாம். ஏகாரம் - தேற்றம். எல்லே மருவா நெறி - முடிவைப் பொருந்தாத நிலை; அது, வீடுபேறு.

கடவுட்டன்மையை, 'திரு' என்றல் சமயங்களின் மரபாதலின், 'திருவாசகம்' என்பது, 'கடவுட்டன்மையை உடைய சொல்' என்னும் பொருளதாம். அஃது அடையடுத்த, கருவியாகு பெயராய், அச்சொற்களாலாகிய பாட்டுக்களைக் குறித்தது. திருவாதவூரடிகள் இறைவனையே பாட்டுடைத் தலைவனுகக்கொண்டு, 'புறம், அகம்' என்னும் இருதிணை வகையிலும் அருளிச் செய்த பாட்டுக்களுள், அகத்திணை வகையில் அமைந்த பாட்டுக்கள், 'கோவை' என்னும் பெயருடைய தொடர்நிலைச் செய்யுளாய் அமைந்திருத்தலின், புறத்திணை வகையில் அமைந்த பாட்டுக்களை, 'திருவாசகம்' என வேருெரு குறியிட்டு வழங்கினர் முன்னேர்.

"கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்"

என்ற ஔவையார் பாட்டினுலும், இப்பாட்டுக்கள் (நல்வழி) '**திருவாசகம்**' என்ற பெயருடையவாயினமை துணியப்படும். இப்பெயரையே,

"பாய்பரியோன் தந்த பரமானந்தப் பயனைத்
தூயதிரு வாய்மலராற் **சொற்**செய்து"

எனத் திருக்களிற்றுப்படியார், '**சொல்**' என்றது போலும்! கடவுள் வாழ்த்திற்குப் புறத்திணை சிறந்ததாகலின், எட்டாந் திருமுறையுள், திருவாசகத்தை முன் வைத்துக் கோத்தனர்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

எட்டாந் திருமுறை

திருவாசகம்

1. சிவ புராணம்

கலி வெண்பா

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாஅழ்க! நாதன்தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சி னீங்காதான் தாள்வாழ்க!
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க!
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க!
ஏகன் அனேகன் இறைவ னடிவாழ்க!

வேகங் கெடுத்தாண்ட வேந்த னடிவெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க!
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க!
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க!

ஈச னடிபோற்றி! எந்தையடி போற்றி!
தேச னடிபோற்றி! சிவன்சே வடிபோற்றி!
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி!
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி!
சீரார் பெருந்துறைநம் தேவ னடிபோற்றி!
ஆராத இன்பம் அருளு மலைபோற்றி!

சிவனவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தைமகிழச் சிவபுரா ணந்தன்னை
20 முந்தை வினைமுழுதும் மோய உரைப்பனியான்;

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
22 எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி

விண்ணிறைந்துமண்ணிறைந்துமிக்காய்விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே! நின்பெருஞ்சீர்
25 பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்;

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்; எம்பெருமான்!
32 மெய்யே; உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்;

உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா! விமலா! விடைப்பாகா! வேதங்கள்
'ஐயா' என, ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே!
வெய்யாய்! தணியாய்! இயமான னாம்விமலா!
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே!
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே!
40 அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே!

ஆக்கம் அளவிறுதி இல்லாய்! அனைத்துலகும்
ஆக்குவாய்! காப்பாய்! அழிப்பாய்! அருள்தருவாய்!
போக்குவாய்! என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்!
நாற்றத்தின் நேரியாய்! சேயாய்! நணியானே!
45 மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே!

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று

பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான் !
நிறங்களோ ரைந்துடையாய் ! விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் ! வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால், விமலா ! உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
61 தாயிற் சிறந்த தயாவான தத்துவனே !

மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே !
தேசனே ! தேனா ரமுதே ! சிவபுரனே !
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே !
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
66 பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே !

ஆரா அமுதே ! அளவிலாப் பெம்மானே !
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே !
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே !
70 இன்பமுந் துன்பமும் இல்லானே ! உள்ளானே !

அன்பருக் கன்பனே ! யாவையுமாய் அல்லையுமாஞ்
சோதியனே ! துன்னிருளே தோன்றாப் பெருமையனே !
ஆதியனே ! அந்தம் நடுவாகி அல்லானே !
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே !
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
76 நோக்கரிய நோக்கே ! நுணுக்கரிய நுண்ணுணர்வே !

போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே !
காக்குமெங் காவலனே ! காண்பரிய பேரொளியே !

ஆற்றின்ப வெள்ளமே! அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே! தேற்றத் தெளிவே! என் சிந்தனையுள்
83 ஊற்றான உண்ணா ரமுதே! உடையானே!

வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேன்; எம் ஐயா அரனேஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்ஆனார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
88 கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே!

நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே!
தில்லையுட் கூத்தனே! தென்பாண்டி நாட்டானே!
91 அல்லற் பிறவி அறுப்பானே! ஓஎன்று

சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
95 பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்.

சிவ புராணம் முற்றிற்று.

குறிப்புரை :- சிவ புராணம் - சிவபெருமானது பழையனவாகிய பெருமைகளைக் கூறும் பாட்டு. புராணம் - பழைமை; அது முதற்கண் பழையனவாகிய பெருமையையும், பின்னர் அதனைக் கூறும் பாட்டினையும் குறித்தலின், இருமடி யாகு பெயர். 'சிவனது பழையனவாகிய பெருமை' என்னும் பொருளைத் தருமிடத்து, இருபெயரொட்டாகுபெயராம். 'பழைமை' என்பது, இங்குக் காலம் பற்றியதாகாது, காலத்திற்கு அப்பாற்பட்ட நிலையையே குறிப்பது. இந்நிலையை, '**அநாதி**' என்பராதலின், 'சிவபுராணம்' என்றதற்கு, '**சிவனது அநாதி முறைமையான பழைமை**' எனக் கருத்துரைத்தனர், முன்னோர். இதுபோலும் கருத்துக்களைத் திருவாசகத்தின் பகுதிகள் எல்லாவற்றிற்கும் அவர் உரைத்திருத்தல் அறிக.

இங்கு, '**கலி வெண்பா**' என்றது, வெண்கலிப்பாவினை. இதனை, 'கலிவெண்பாட்டு' என்பர் தொல்காப்பியர். முழுதும் வெண்டளையே கொண்டு, ஈற்றடி முச்சீர்த்தாய் வருதலின், 'கலிவெண்பா' எனவும் பெயர் பெறுவதாயிற்று. எனினும், துள்ளலோசையே நிகழ்வதாகலின், கலிவகையேயாம்.

> "பாவிரி மருங்கினைப் பண்புறத் தொகுப்பின்
> ஆசிரி யப்பா வெண்பா என்றாங்
> காயிரு பாவினு ளடங்கு மென்ப"

என்பதும்,

> "ஆசிரிய நடைத்தே வஞ்சி; ஏனை
> வெண்பா நடைத்தே கலியென மொழிப."

என்பதும் தொல்காப்பிய மாதலின், கலிப்பாவும் ஒராற்றான் வெண்பாவே யாதல் அறிக. இதுபற்றியேபோலும், 'நெடுவெண்பாட்டு' எனத் தொல்காப்பியமும், 'பஃறொடை வெண்பா' எனப் பிற நூல்களும் கூறும் மிக்க அடிகளையுடைய வெண்பாவை, 'கலி வெண்பா' என்றும் வழங்கினர் பின்னோர். செப்பலோசையான் வருதலும், துள்ளலோசையான் வருதலும் வெண்பாவிற்கும், கலிப்பாவிற்கும் உள்ள வேறுபாடாதல், நன்கறியப்பட்டது. ஆகவே, திருவாசக உண்மையில், 'சிவபுராணத்து **அகவல்**' என்றமை ஆராய்தற்குரியது.

இது, 'திருப்பெருந்துறையில் அருளிச்செய்யப்பட்டது' என்பது, பதிப்புக்களில் காணப்படுவது. இதுமுதலாகத் திருவாசகப் பகுதிகள் அருளிச்செய்யப்பட்ட தலங்களைப் புராணங்கள் பலதலைப்படக் கூறுகின்றன. நீத்தல் விண்ணப்பம், திருக்கழுக்குன்றப் பதிகம் தவிர, ஏனைய திருவாசகம், திருக்கோவையார் ஆகிய எல்லாவற்றையும் அடிகள் தில்லையை அடைந்து ஆங்கு எழுந்தருளியிருந்த நாட்களில் அருளினர் எனக் கொள்ளுதலே பொருந்துவதுபோலும்! இறைவன், 'தில்லைப் பொதுவில் வருக' என்றருளிய ஆணை வழியே ஆங்கு அடைந்த அடிகள், அதன் பின்னும் இறைவன் தம்மைத் தன் திருவடிநிழலிற் சேர்த்துக்கொள்ளாது வாளாவிருந்தமைபற்றி எழுந்த கையறவினாலே இப்பாடல்கள் எல்லாவற்றையும் பாடினராவர். இக் கையறவு திருவாசக முழுதும் இனிது வெளிப்பட்டுக் கிடத்தலானும், 'தில்லைக்கு வருக' என்று இறைவன் பணித்தனன் என்பது தெளிவாகலானும், அவ்விடத்தை அடையும் முன்னரே அங்ஙனம் வருந்தினர் என்றல் பொருந்தாமையறிக. இவ்வாறாதலின், தில்லைக்குச் செல்லுங்கால் பிற தலங்களில் இறைவனை வணங்கும் அவாவால் அடிகள் ஆங்கெல்லாம் சென்று வணங்கித் தில்லையை நோக்கி விரைந்து சென்றதன்றித் திருப்பாடல்கள் பாடிற்றிலர் எனக் கொள்ளற்பாற்று.

1-16. அறிவாற் சிவனேயான திருவாதவூரடிகள், 'சிவ புராணம்' எனத் தாம் எடுத்துக்கொண்ட இத்திருப்பாட்டிற்கு முதற்கண் கூறும் மங்கல வாழ்த்தாக, இறைவனை, 'வாழ்க' வெல்க, போற்றி' எனப் பன்முறையான் வாழ்த்துகின்றார். அதனானே, இவ்வடிகள் மேல்வரும் அடிகளோடு தொடர்புற்று நிற்க, பாட்டு ஒன்றாயிற்று. இதனால், இத்திருப்பாட்டே தில்லையில் முதற்கண் அருளிச்செய்யப்பட்டது என்பது விளங்கும்.

1. 'நமச்சிவாய' என்னுந் தொடர், தன்னையே குறித்து நின்றது. இதனை முதற்கண் சிறந்தெடுத்தோதியவாற்றால், 'மந்திரங்கள் எல்லாவற்றுள்ளும் தலையாயதாகிய' என்னும் இசையெச்சம், முதற்கண் வருவித்துரைக்கப்படும். அதனானே, இதனின் மிக்க மங்கலச் சொல் இல்லையாதலும் பெறப்படும். இத்திருப்பாட்டினுட் போந்த உயிரளபெடை ஒற்றளபெடைகள் இல்லாது ஓதின், தளை சிதைதல் காண்க.

"நாதன்" என்றது, முன்னர்ப் போந்த மந்திரத்தால், 'சிவ பெருமானை' என்பது விளங்கிற்று. நாதன் - தலைவன். நமச் சிவாய மந்திரம், மந்திரங்கள் எல்லாவற்றிலும் மிக்கது எனவே, 'அதற்குப் பொருளாய் உள்ள நாதனே, எல்லாத் தேவரினும் மிக்க முழுமுதற் கடவுள்' என்பது போந்தது. 'நாதன்' என்றதற்கு, 'நாத தத்துவத்தில் உள்ளவன்' என்று உரைப்பாரும் உளர். மந்திரம், இறைவன் திருவருளினது கடத்த நிலையும், அவனது திருவடி, அதன் உண்மைநிலையுமாம். அவற்றுள் மந்திரம் நம்மனோரால் அறியப்படுதல் பற்றி அதனை முதற்கண் வாழ்த்தி, பின்னர்த் திருவடியையே பன்முறையானும் வாழ்த்துகின்றார்.

2. "நெஞ்சின்" என்றதில் இன், நீக்கப் பொருட்கண் வந்த ஐந்தாம் உருபு. இல்லுருபாகக் கொள்ளினும் அப் பொருட்டேயாம்.

3. எடுத்துக்கோடற்கண்ணே அருளிச் செய்தமையால், 'கோகழி' என்பது திருப்பெருந்துறையேயாதல் பெறப்படும். எங்ஙனமெனின், அடிகள் அருள்பெற்ற தலம் அதுவேயாதலின். இச் சொற்குப் பொருள் பல கூறுப. இப்பெயர் பின்னர் வழக்கு வீழ்ந்தமையின், பலரும் தத்தமக்குத் தோன்றியவாறே வேறு வேறு தலங்களை இதற்குப் பொருளாகக் கூறுவர். "ஆண்ட" என்ற இறந்த காலம், அடிகளை இறைவன் ஆட்கொண்ட காலம்பற்றி வந்தது. எனவே, 'கோகழியை ஆள்வோனாய் எழுந்தருளியிருந்த' என்பது அதற்குப் பொருளாம். "குருமணி" என்றது, குரவருள் மேம்பட்டவன் என்னும் கருத்தினதாம்; எங்ஙனமெனின், மணியென்னும் உவம ஆகுபெயர், 'சிறப்பே காதல் நலனே வலி' (தொல். பொருள் - 275.) என்ற நான்கினுள் சிறப்பு நிலைக்களனாக வந்ததாகலின். எனவே, இது, '**பரமாசாரியன்**' என்றவாறாயிற்று. இங்ஙனங் கூறுதல் இறைவன் ஒருவனுக்கே உண்மையாயும், ஏனையோர்க்கு முகமனாயும் அமைதலை அறிந்துகொள்க.

4. ஆகமம், சிவாகமம். வேதம் பொதுநூலாதலின், அதன் கண் பாலில் நெய்போல விளங்காது நிற்கும் இறைவனது உண்மை இயல்பு, சிறப்பு நூலாகிய சிவாகமங்களில், தயிரில் நெய்போல இனிது விளங்கிநிற்குமாதலின், "ஆகமமாகி நின்று

அண்ணிப்பான் " என்று அருளிச் செய்தார். அண்ணித்தல் - இனித்தல்.

5. இறைவன், ஏகனாய் நிற்றல் தன்னையே நோக்கிநிற்கும் உண்மை நிலையிலும், அனேகனாய் நிற்றல் உலகத்தை நோக்கி நின்று அதனைச் செயற்படுத்தும் பொது நிலையிலுமாம். 'சத்தும் அசத்தும் இலவாய் இருந்தபோது தனியே சிவபிரான் ஒருவனே இருந்தான்; அவன், நான் பலவாகுவேனாக என விரும்பினான்' என்றாற்போல உபநிடதங்களில் வருவனவற்றைக் காண்க. 'இறைவன்' என்பதற்கு, 'எல்லாப் பொருளிலும் தங்கியிருப்பவன்' என்பது சொற்பொருளாயினும், 'தலைவன்' என்பதன் மறுபெயராய் வழங்கும். 'இறு' என்பது இதன் முதனிலை. 'இற' என்பது அடியாக வந்ததென உரைப்பார்க்கு, 'கடவுள்' என்பதன் பொருளே யன்றி வேறு பொருள் இன்றாமாதலின், அது சிறவாமை அறிந்துகொள்க. இத்துணையும் **வாழ்த்துக்** கூறியது; இனி வெற்றி கூறுப.

6. "வேகம்" என்றது, 'யான், எனது' என்னும் முனைப்பினை. "ஆண்ட" என இறந்த காலத்தாற் கூறினமையின், ஆண்டது, அடிகளையே யாயிற்று. வேந்தன் - ஞானத் தலைவன்.

7. "பிறப்பறுக்கும்" என, 'முந்நிலைக் காலமும் தோன்றும் இயற்கை' கூறினமையின், இது, தம்மை உள்ளிட்ட அனைவர்க்கும் செய்தலாயிற்று. பிஞ்ஞகன் - தலைக்கோலம் உடையவன். சிவபிரானது தலைக்கோலம், மணிமுடியும், நறுமலர்க் கண்ணியும் முதலாய பிறர் தலைக்கோலங்கள்போலாது, சடைமுடியும், பிறைக் கண்ணியும், கங்கையும், பாம்பும் முதலியனவாக வேறுபட்டு நிற்றலின், இப்பெயர், அவனுக்கே உரியதாயிற்று. பிஞ்ஞகம், 'பின்னகம்' என்பதன் மரூஉ. "பெய்" என்றது, கழலுக்கு அடையாய், 'கட்டப்படுகின்ற' எனப் பொருள் தந்தது. இதனை இங்ஙனம் கிளந்தோதியவதனால், 'சிவபிரானது வெற்றியே உண்மை வெற்றி' என்பது கொள்ளப்படும். 'யாவரது வெற்றியும் சிவபிரானது வெற்றியே' என்பதனைக் **கேனோபநிடதம்**, சிவபிரான் ஓர் யட்ச வடிவில் எல்லாத் தேவர் முன்னும் தோன்றிச் செய்த திருவிளையாடலில் வைத்து விளக்குதல் காண்க.

8. புறத்தார் - சிவபிரானது திருவருட்குப் புறம்பானவர்; அஃதாவது, அவனது பெருமையை உணரமாட்டாது, ஏனைத் தேவர் பலருள்ளும் ஒருவனாக நினைப்பவர் என்றதாம்.

" சிவனொடொக் குந்தெய்வம் தேடினும் இல்லை;
அவனொடொப் பாரிங் கியாவரும் இல்லை; "

" அவனை யொழிய அமரரும் இல்லை;
....
அவனன்றி மூவரால் ஆவதொன் றில்லை; "

என்றற் றொடக்கத்தனவாகத் திருமந்திரம், (5, 6.) எடுத்துக் கோடற்கண்ணே சிவபிரானது தனிப்பெருஞ் சிறப்பினை இனிது விளங்க எடுத்தோதி விரித்தலும், அவ்வாறே ஏனைய திருமுறைகளும் அதனைப் பல்லாற்றானும் ஆங்காங்கு வலியுறுத்தோதலும் காண்க.

சிவபிரான் உயிர்கட்குச் செய்யும் செயல் இருவகைத்து; ஒன்று மறைத்தல்; மற்றொன்று அருளல். (மறைத்தலின் வகையே, படைத்தல் முதலிய மூன்றும்.) அவற்றுள் மறைத்தலும் அருட்செயலேயாயினும், அது, முன்னர்த் துன்பம் பயத்தலின் மறக்கருணையாய் நிற்க, அருளல் ஒன்றே அறக் கருணையாம். ஆதலின், 'திருவருள்' என்பது, அருளலையே குறிப்பதாயிற்று. இவ் அறக்கருணை, அவனது தனிப் பெருமையை உணர்ந்தார்க்கன்றிக் கூடாது என்பதனை, "பொது நீக்கித் தனைநினைய வல்லோர்க் கென்றும் - பெருந்துணையை" என்னுந் திருத்தாண்டகத்தால் (1. 5.) உணர்க.

சிவபிரானைப் பொதுநீக்கி உணரும் நிலையே 'சரியை, கிரியை, யோகம்' என்னும் தவங்களாம். இத் தவத்தாலே, சிவபிரான் குருவாய் நின்று அஞ்ஞானத்தை யகற்றி, மெய்ஞ் ஞானத்தைக் கொடுத்துப் பிறப்பினை யறுத்தல் உளதாகும். ஆகவே, சிவபிரானைப் பொதுநீக்கி உணரமாட்டாதவர், அவனது திருவருட்குப் புறம்பாதல் அறிக. "புறத்தார்க்குச் சேயோன்" எனவே, அணியனாய் நின்று பிறப்பை யறுத்தல், அவனைப் பொதுநீக்கி நினையும் அகத்தார்க்கென்பது பெறப் பட்டது. சிவபிரானைப் பொதுநீக்கி நினையும் நிலை, சத்திநிபாதத்து உத்தமர்க்கே உளதாகும் என்க.

"பூங்கழல்கள்" என்றதில், 'பூ' என்பது, 'பொலிவு' என்னும் பொருட்டாய், திருவடிக்கு அடையாயிற்று.

9, 10. "குவிவார்" இரண்டன் பின்னும் இரண்டனுருபுகள் தொகுத்தலாயின. 'குவிப்பார்' என்னாது, "குவிவார்" என்றருளினமையால், 'தம் குறிப்பின்றி அவை தாமே குவியப் பெறுவார்' என, அவரது அன்பின் மிகுதி கொள்க. "கரம்" என முன்னர்க் கூறிப்போந்தமையின், வாளா, "சிரங்குவிவார்" என்று போயினர். எனவே, "கரங்குவிவார்" என்றது, 'கைகள் தம்மளவில் குவியப்பெறுவார்' எனவும், "சிரங்குவிவார்" என்றது, 'அவை சிரமேற் சென்று குவியப்பெறுவார்' எனவும் பொருள்படுமாறு உணர்ந்துகொள்க. கைகள் தம் மளவிற் குவியப்பெறுவாரினும், அவை தலைமேற் சென்று குவியப்பெறுவாரது வசமழிவு பெரிதாகலின், 'முன்னையோரை உள்மகிழ்தலும், பின்னையோரை ஓங்குவித்தலும் செய்வான்' என்று அருளிச்செய்தார். ஓங்கு வித்தல் - ஏனையோர் பலரினும் உயர்ந்து விளங்கச் செய்தல். சிறந்த அறிவராய் (ஞானியராய்) விளங்குதலும் இதன்கண் அடங்கும் என்க. 'ஓங்குவிப்பான்' என்ற இதனால், உள்மகிழ்தல், பொதுப்பட நிற்கும் நலங்களை அருளுதலாயிற்று. சீர் - புகழ். இத்துணையும் வெற்றி கூறியது; இனி, போற்றி கூறுவார்.

11. ஈசன் - ஆள்பவன். 'போற்றி' என்பது 'வணக்கம்' என்னும் பொருளதாகிய தொழிற்பெயர். இதற்குமுன்னர், நான்கனுருபு விரிக்க.

12. தேசன் - ஒளி (ஞான) வடிவானவன். சிவன் - நிறைந்த மங்கலம் (நன்மை) உடையவன்.

13. நேயத்தே நிற்றல் - அன்பிலே விளங்கித் தோன்றுதல். "நின்ற" என இறந்த காலத்தால் அருளியது, முன்னையோரது அனுபவம் பற்றி என்க.

14. மாயம் - நிலையின்மை. 'பிறப்பை மாய (கெட) அறுக்கும்' என்றும் ஆம். மேல்வரும் பிறப்புக்களை அறுத்தலை மேலே அருளிச்செய்தமையின், இங்கு, 'பிறப்பு' என்றது, எடுத்த பிறப்பை; அஃதாவது உடற் சிறையை என்க.

15. சீர் - அழகு. "நம் தேவன்" என்றது, ஏனை அடியார்களையும் நினைந்து. 'தம்மையெல்லாம் ஆளாகக் கொண்டு, தமக்குத் தலைவனாய் நின்றருளினவன்' என, அவனது அருட்டிறத்தை நினைந்துருகியவாறு.

16. ஆராமை - நிரம்பாமை; தெவிட்டாமை. "மலை" என்றது காதலின்கண் வந்த உவம ஆகுபெயர். இத்துணையும், 'வாழ்த்து, வெற்றி, போற்றி' என்னும் மூவகையில் முதற்கண் மங்கல வாழ்த்துக் கூறியவாறு. இவற்றுள், பொருளியல் புரைத்தலும் அமைந்து கிடந்தவாறு அறிக. "கண்ணுதலான் ....எழிலார் கழல் இறைஞ்சி" என மேல்வரும் அடிகள் இரண்டனையும் இம் மங்கல வாழ்த்தின் பின்னர்க் கூட்டி யுரைக்க.

17-20. "சிவபுராணந்தன்னை" என்றதை முதலிலும், "அவனருளாலே" என்றதை, "தாள்" என்றதன் பின்னரும் வைத்து உரைக்க.

"சிவனவன்" என்றதில் 'அவன்', பகுதிப் பொருள் விகுதி. 'சிவன்' என்பதில் விகுதியும் உளதேனும், விகுதிமேல் விகுதி வருமிடத்து, முன்னைவிகுதியும் பகுதிபோலக் கொள்ளப் படுமாறு அறிந்துகொள்க. ஏகாரம், பிரிநிலை; இதனால் பிரிக் கப்பட்டு நின்றது, 'என் ஆற்றலால்' என்பது. 'வணங்கி மகிழ' என இயையும். "மகிழ" என்றது, சினைவினை முதல் மேல் நின்றதாகலின், அது, "வணங்கி" என்றதற்கு முடிபாதற்கு இழுக்கின்று. மகிழ - மகிழ்தல் ஒழியா திருக்குமாறு; இவ்வெச்சம், காரியப் பொருட்டாய், "மோய" என்னும் காரணப் பொருட்டாய எச்சத்தொடு முடிந்தது. முற்பிறப்பிற் செய்யப்பட்ட வினைகளுள், முகந்துகொண்டவை போக எஞ்சி நின்றவை, இறைவனது அருளாற்றலாற் கெட் டொழிந்தமையின், இங்கு, "முந்தை வினை" என்றது, முகந்து கொண்டவற்றையேயாம். மோய - நீங்க. இது, 'மோசனம்' என்னும் வடசொல்லின் திரிபாய்ப் பிறந்ததாம். இப்பாட்டி னுள் யாண்டும், மோனை சிதைந்ததின்மையின், 'ஓய' எனக் கண்ணழித்தல் பொருந்தாமை அறிக. பிராரத்தம் சிறிது தாக்கினும் இறையின்பம் இடையறவுபட்டுத் துன்பமாமாத லின், 'சிறிதும் தாக்காமைப் பொருட்டு' என்பார், "முழுதும்

மோய" என்றும், அங்ஙனம் அவை முற்றக் கெடுதற்கு இறைவனை இடையறாது உணர்தலன்றிப் பிறிதாறு இன்மையின், 'சிவபுராணந்தன்னை உரைப்பன்' என்றும் அருளிச்செய்தார். "சிவபுராணந்தன்னை" என, வேறொன்றுபோல அருளிச்செய்தாராயினும், 'சிவபுராணமாகிய இப்பாட்டினை' என்றலே கருத்தென்க. இஃது உணராதார் சிலர், அடிகள், தம் பாடற்றொகுதி முழுவதற்குமாகவே இப் பெயர் கூறினர் என மயங்கியுரைப்பர்; அவ்வாறாயின், 'கீர்த்தித் திருவகவல், திருவண்டப் பகுதி' முதலியனபோல, இப்பாட்டிற்கும் வேறொரு பெயர் வேண்டுமென்று ஒழிக. "முந்தை வினை முழுதும் மோய" என, முதலதாகிய இப்பாட்டினுள் அருளிச்செய்தமையின், இஃது, ஏனைய திருப்பாட்டிற்கும் கொள்ளப்படுவதாம். "யான்" என்றதை, "இறைஞ்சி" என்றதன் முன்னர்க் கூட்டுக.

21, 22. காட்டுதல் - உருவத் திருமேனி கொண்டுவந்தே புலப்படுத்தல். காட்ட - காட்டுதற்பொருட்டு. எய்தி - எய்தியதனால்; ஆசிரியத் திருக்கோலத்துடன் வந்து வீற்றிருந்தமையால். இஃது, ஆட்கொண்டமையாகிய காரியந் தோன்ற நின்றது. 'எண்ணுதற்கும்' என்னும் இழிவு சிறப்பும்மை, தொகுத்தலாயிற்று. அடைதல், சொல்லுதல் இவற்றினும் எண்ணுதல் எண்மையுடைத்தாதலின், 'அதற்கும் வாராத திருவடி' என்றபடி. "இறைஞ்சி" என்றது, மேல் மங்கல வாழ்த்தில் கூறியவாற்றை எல்லாம். 'கண்ணுதலானது எண்ணுதற்கும் எட்டாத எழிலார் கழல்களை, அவன் தனது கருணைக்கண்ணைக் காட்டுதற்பொருட்டு வந்து எய்தியதனால், யான் அனுபவமாகவே இவ்வாறு இறைஞ்சி இச் சிவபுராணத்தை உரைப்பன்' என உரைத்துக்கொள்க.

23-25. இவ்வடிகளில் உள்ள வினையெச்சங்கள் காரணப் பொருள. "மிக்காய்" என்றது, 'மேல் உள்ளவனே' என, விளி. "விளங்கொளியாய்" என்றது, 'தானே விளங்கும் அறிவு வடிவாய்' என, வினையெச்சம். எண் - எண்ணம்; சிந்தை. இது, சிவனைச் சிந்தை என்று கூறியது. (சிவஞான சித்தி - சூ. 4. 28.) மேலும் கீழுமாய விண்ணையும், மண்ணையும் கூறவே, இடைநிற்கும் பிற பூதங்கள் யாவும் அடங்கின. "பூதங்கள் தோறும் நின்றாய்" என்பது முதலியன, பின் வருவனவற்றுட் காணப்படும். 'விண்ணிலும் மண்ணிலும்

நிறைந்து நிற்குமாற்ருல் அவற்றின் மேல் உள்ளவனே! இயல்பாகவே விளங்கும் அறிவை யுடையையாமாற்ருல் ஆன்ம அறிவைக் கடந்துநின்று, அவ்வாற்ருனே, வரம்பின்றிப் பரந்து நிற்பவனே' என்க. "மிக்காய்" என்றதும், "எண்ணிறந்து" என்றதும், 'எல்லாப் பொருள்களையும் தனது வியாபகத்துள் அடக்கிநிற்பவன்' எனவும், "எல்லை யிலாதான்" என்றது, 'தான் ஒன்றன் வியாபகத்துட் படாதவன்' எனவும் அருளிய வாறு. இங்ஙனம் போந்தன பலவும், இறைவனது புகழ், அளவிடப் படாத பெரும் புகழாயிருத்தற்குரிய காரணத்தை உடம்பொடு புணர்த்தலால் தெரிவித்தற் பொருட்டுக் கூறியனவாம். பொல்லா வினை - தீவினை. இறைவனை மறக்கச் செய்வதில் நல்வினையினும் தீவினை வலிமை யுடையது. ஆதலின், "புகழுமாறு ஒன்றறியேன்" என்ருர். 'புகழ்தல்' என்பது, இங்கு, 'சொல்லுதல்' என்னும் அளவாய் நின்றது. ஆறு - முறைமை. ஒன்று - சிறிது. 'ஒன்றும்' என்னும் இழிவு சிறப்பும்மை தொகுத்தலாயிற்று. 'நல்வினை யுடையோரும், வினை நீங்கப் பெற்ருேரும் உனது பெருஞ்சீரினை முறையறிந்து சிறிது சொல்ல வல்லர்; யான் பொல்லா வினையேனுகலின், அவ்வாறு சிறிதும் மாட்டேனுயினேன்' என்றபடி. எனவே, 'இங்ஙனமாயினும், உரைப்பன் என்னும் அவாவினுல் எனக்குத் தோன்றியவாறே நெறிப்பாடின்றிக் கூறுவன சிலவற்றை ஏற்றருளல் வேண்டும்' என வேண்டிக்கொண்டதாயிற்று. இஃது, அவையடக்கமாயும் நிற்றல் அறிக. அவை, அடியவரது திருக்கூட்டம்.

26-32. 'மிருகம்' என்பது, 'விருகம்' என மருவிற்று. கல்லினுள் வாழும் தேரை முதலியனபோன்றவற்றை, "கல்" என்று அருளினுர். இனி, 'கல்தானே ஒருபிறப்பு" எனக் கொண்டு, அதற்கும் வளர்ச்சி உண்டென உரைப்பாரும் உளர். கணங்கள் - பூதங்கள். 'வல் அசுரராகி' என்க. செல்லா நிற்றல் - உலகில் இடையருது காணப்பட்டுவருதல். "பிறப்பும்" என்றதில், 'பிறப்பின்கண்ணும்' என ஏழாவது விரிக்க. "பிறந்து" என்றதற்கு, 'பலமுறை பிறந்து' என உரைக்க. "எம்பெருமான்" என்றது, விளி. "இன்று" என்றதனை, இதன்பின்னும், "மெய்யே" என்றதனை, "வீடுற்றேன்" என்றதன்பின்னும் கூட்டுக. "கண்டு வீடுற்றேன்" என்றது, 'உண்டு பசிதீர்ந்தான்' என்ருற்போலக் காரண காரியப் பொருட்டு. "இன்று, கண்டு வீடுற்றேன்" என்றதனுல்,

எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தது, இதனைக் காணாத முன்னை நாட்களில் என்பது பெறப்பட்டது. "மெய்யே" என்னும் பயனிலைக்கு, 'இது' என்னும் எழுவாய் வருவிக்க. இவ்வாறு வலியுறுத்தோதியது, தாவரசங்கமங்களாய் உள்ள பல வகைப் பிறப்புக்களிலும் பலகாலும் பிறந்து, இனி என்னே உய்யுமாறு என்று இளைத்தற்குக் காரணமாயிருந்தன பலவும், உனது திருவடியைக்கண்ட துணையானே அற்றொழிந்தன; இஃது உன்பெருமை இருந்தவாறு' என வியந்தவாறு. இதன்பின், 'ஆதலின்' என்னும் சொல்லெச்சம் வருவித்து, அதனை, **முடிவில்** "அரனேயோ" என்றதில் உள்ள, 'உனக்கு ஓலம்' என்னும் பொருளதாகிய, "ஓ" என்றதனோடு முடிக்க.

33. உள்ளத்துள் ஓங்காரமாய் நிற்றல் - அகர உகர மகர நாத விந்துக்களாய் நின்று அந்தக் கரணங்களை இயக்கிப் பொருளுணர்வைத் தருதல். இதனை யோக நெறியாலும், ஞானத்தினாலும் உணர்வர் பெரியோர். அவற்றுள், யோக நெறியாய் உணர்தல் பாவனை மாத்திரத்தாலேயாம். ஞானத்தினால் உணர்தலே அனுபவமாக உணர்தலாகும். அடிகள் ஞானத்தினால் உணர்ந்த உணர்ச்சியால் அருளுதலின், "உய்ய" எனவும், "மெய்யா" எனவும் போந்த மகிழ்வுரைகள் எழுவவாயின.

34. விடை - எருது. அதனைச் செலுத்துவோனை, "பாகன்" என்றது, மரபு வழுவமைதி.

35. ஐயன் - தலைவன். என - என்று சொல்லும்படி. 'வேதங்கள் சிவபிரானையே தலைவன் என முழங்குகின்றன' என்றதாம். இதனை, சுவேதாசுவதரம், அதர்வசிகை முதலிய உபநிடதங்களில் தெளிவாகக் காணலாம். 'ஓங்கி, ஆழ்ந்து, அகன்ற' என்ற மூன்றும், முறையே, 'மேல், கீழ், புடை' என்னும் இடங்களிற் பரவியிருத்தல் கூறியவாறு. இங்ஙனம் எல்லையின்றிப் பரந்து நிற்றலை, 'அகண்டாகாரம்' என்பர். "நுண்ணியனே" என்றது, மேற்கூறியவாறு, எங்கும் வியாபகனாய் நிற்றற்குரிய இயைபினை விளக்கியவாறாம். 'ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனாதலை யறிந்தே வேதங்கள், உன்னை, ஐயா எனத் துதிக்கின்றன' என்றபடி.

36. வெய்யாய் - வெப்பமுடையவனே. தணியாய் - தட்ப முடையவனே. இவ்விரண்டும் ஒறுத்தலையும், அருளலையும் குறித்துக் கூறியனவாம். இவற்றை முறையே ‘ அறக்கருணை, மறக்கருணை ’ என்பர். ‘ யஜமானன் ’ என்னும் ஆரியச் சொல், ‘ இயமானன் ’ என்று ஆயிற்று. இஃது உயிருக்குச் சொல்லப் படும் பெயர். “ இயமானனுய் எறியுங் காற்றுமாகி ” (திருத் தாண்டகம். 94. 1.) என்ருற்போல்வனவுங் காண்க. ‘ அறக் கருணை, மறக்கருணை என்பவற்றை உயிர்களோடு வேற்றுமை யின்றி நின்று செய்கின்ருய் ’ என்றதாம்.

37. முதலில் ஞானம்போலத் தோன்றி, பின் ஞானமன் ருய்ப் போதலின், விபரீதஞானத்தை, “ பொய் ” என்றும், அது பலவகை நிலைகளையுடைமையால், “எல்லாம்” என்றும் கூறினர். “ போய் அகல ” என்றதை, அகன்றுபோக என மாறிக் கூட்டுக. “ வந்தருளி ” என்றதில் அருளி, துணைவினை. இறை வனைப் பற்றிவரும் வினைச்சொற்களில், இவ்வாறு வருமிடங் களைத் தெரிந்துகொள்க. வருதல், உள்ளத்தில்.

38. மெய் - நிலைபேறு. மிளிர்தல் - மின்னுதல். ‘ விளக்கு வந்து ஒளிவிடுங்காலத்து இருள் நீங்குதல் போல, நீ வந்து விளங்கிய காலத்து அஞ்ஞானம் அகன்றது ’ என்றவாறு. ‘ ஏனைய விளக்குக்கள்போல அணையும் விளக்கல்லை ’ என்பார், “ மெய்ச் சுடரே ” என்று அருளினர். “ நொந்தா ஒண்சுடரே ” (திருமுறை. 7. 21. 1.) என்ருற்போல வருவனவுங்காண்க.

39. ‘ எஞ்ஞானம் ’ என்றதில் எகரவினு, எஞ்சாமைப் பொருட்டு. ‘ எஞ்ஞானமும் ’ என்னும் முற்றும்மை தொகுத் தலாயிற்று. “ இன்பப் பெருமானே ” என்பதை முன்னர்க் கூட்டி, ‘ இல்லாதேனது அஞ்ஞானந்தன்னை ’ என இயைக்க.

40. நல்லறிவு - குற்றத்தொடுபடாத அறிவு. ‘ அறிவை உடையவனே ’ என்னுது, “ அறிவே ” என்ருர், அதனது மிகுதி யுணர்த்தற்கு. முன்னர், “ மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற ” என்றது பலர்க்கும், பின்னர், “ அஞ்ஞானந்தன்னை அகல் விக்கும் ” என்றது ‘ தமக்கும் ’ எனக் கொள்க.

41. ஆக்கம் - தோற்றம். “அளவு” என்றதனை, “இறுதி” என்றதன் பின்னர்க் கூட்டுக. இறுதி - அழிவு. ‘ இல்லாய் ’ ஆக்குவாய் முதலியனவும், ஏனையபோல விளிகளே.

42. ஆக்குதல் முதலிய மூன்றும் மறைத்தலின் வகையே யாதலின், அதனைவிடுத்து, "அருள் தருவாய்" என்று போயினவை

43. "தொழும்பின்" என, பின்னர் வருகின்றமையின், வாளா, "போக்குவாய்" என்றார். "என்னை" என்பதை முதலிற் கூட்டுக. 'என்னை உன் தொண்டில் ஈடுபடாதவாறு நீக்குகின்றவனும் நீயே; அதன்கண் ஈடுபடச் செய்கின்றவனும் நீயே' என்றபடி. 'இருவேறு நிலையும் எனது பக்குவத்திற் கேற்ற படியாம்' என்றல் திருவுள்ளம்.

44. நாற்றத்தின் - பூவில் மணம்போல. நேரியன் - நுண்ணியன். இதன்பின், 'பரியாய்' என்பதனை வருவித்துக்கொள்க. நுண்மை, அறிதற்கரிய அவனது உண்மை இயல்பும், பருமை அவனது பொதுவியல்பும் என்க. உண்மை இயல்பு அறிதற் கரியதாயினும் அனுபவிக்கப்படும் என்றதற்கு, "நாற்றத்தின்" என்று அருளிச்செய்தார். சேய்மை - மறைந்து நிற்கும் நிலை. நணிமை - வெளிப்பட்டு நிற்கும் நிலை.

45. மறையோன் - வேதத்தை அருளிச் செய்தவன்; இது, 'முதற் கடவுள்' என்னும் பெயர் மாத்திரையாய் நின்றது.

46. அப்பொழுது கறக்கப்பட்ட பால், சுவை மிகுதி யுடைத்தாதல் அறிக. ஒடு, எண்ணிடைச்சொல். பின்னர், "சிந்தனையுள் நின்று" என்றலின், இங்கு, 'நாவிற் கலந்தாற் போல' என உரைக்க. பால் முதலியவற்றை நினைப்பினும், சொல்லினும், காணினும் நாவில் நீர் ஊறும்; அவை நாவிற் கலப்பின் மிக்க இன்பம் பயக்கும் என்க.

47. 'சிறந்த' என்பதில், அகரம் தொகுத்தலாயிற்று. தேன் - இனிமை. 'தேனாய் ஊறி' என, ஆக்கம் வருவிக்க.

48. பிறந்த பிறப்பு - இப் பிறப்பு; உடம்பு. "பிறந்த பிறப்பறுக்கும்" என அடைகொடுத்து ஓதுதலின், முன்னர் (31) "எம் பெருமான்" என்றதின் இது வேறுதலறிக. இங்ஙனமே, இதன்கண், ஒரு சொல் பலவிடத்தும் வருவன வேறு வேறு கருத்துடையவாதல் உய்த்துணர்ந்துகொள்க.

49. 'ஐந்தும்' என்னும் முற்றும்மை தொகுத்தலாயிற்று. 'நினைவார் நினைவின் வண்ணம் எந்நிறத்துடனும் தோன்று வாய்' என்றபடி. இனிச் சிவபிரானது திருமுகங்கள் ஐந்த னுள்ளும் ஒரோவொன்று ஒரோவொரு நிறம் உடையதாதலும் அறிந்துகொள்க.

50. இங்கு, 'மறைந்திருந்தாயாகிய எம்பெருமானே' என உரைக்க. 'அடியார்க்கு வெளிநிற்கும் நீ, தேவர்க்கு மறைந்து நிற்கின்றாய்' என்றபடி. "வினை" என்றது, வினையை விரும்பும் தன்மையை. அஃதாவது, தூலப் பொருளாய் நிற்றல். 'இத்தன்மையானே இருளால் மறைக்கப்பட்டேன்' என்றபடி.

51. மாயம் - அழிதற்றன்மை. இருள் - ஆணவ மலம். தடைமந்திரத்தால் தடுக்கப்பட்டபோது, நெருப்புத் தனது சுடுதற் சத்தி மடங்கி நிற்றல்போல, ஞானத்தால் தடுக்கப் பட்ட காலத்தில் தனது மறைத்தற் சத்தி மடங்கி நிற்றலே ஆணவ மலத்திற்கு நீக்கமாகும். அதனையே இங்கு, 'மாய்தல்' என்றார் என்க. "இருளை" என்றதில் ஐ, முன்னிலை ஒருமை விகுதி. 'இருளின் பக்கத்தனாய் உள்ளாய்' என்றபடி.

52. "அறம் பாவம்" என்றதனால், கன்ம மலங் கூறினார்.

53. போர்த்து - போர்க்குமாற்றால். 'எங்கும் உள்ள' என்க. 'புழுவையும் அழுக்கையும்' என எண்ணும்மை விரிக்க. மூடி - மூடப்பட்டு.

54. மலம் - அழுக்கு. சோரும் - வழிகின்ற. 'வாயிலை யுடைய குடில்' என்க. இஃது உடம்பைக் குறித்த உருவகம். எனவே, மாயா மலத்தைக் கூறியதாயிற்று. "குடிலை" என்ற தில் உள்ள ஐயும், "இருளை" என்றதில் உள்ள ஐ போல நின்று, 'குடிவிடத்தவனாய் உள்ளாய்' எனப் பொருள் தந்தது. 'இருளையாயும், குடிலையாயும் நின்று' என முற்றெச்சமாக்கி, மேல் வரும், 'நல்கி' என்பதனோடு முடிக்க.

55-61. மலங்க - யான் மனம் கலங்கும்படி; இது, "வஞ்சனையைச் செய்ய" என்றதனோடு இயைந்தது. "புலன்" என்றது பொறிகளை. வஞ்சனையாவது, நலஞ்செய்வதுபோலக் காட்டி வினைகளில் வீழ்த்துதல். "செய்ய" என்னும் காரணப் பொருட்டாகிய வினையெச்சம், "விலங்கும்" என்றதனோடு

முடியும். 'உனக்கு அன்பாகி' என்க. கலந்த அன்பு, உண்மை அன்பு. நல்குதல் - இரங்குதல்; "நல்கி" என்னும் எச்சம் எண்ணின்கண் வந்தது. தயா, ஆகுபெயர். 'தயை உடைய வன்' என்பது பொருள். 'நல்கியும், காட்டியும் தயையுடைய வனுய் நின்ற தத்துவனே' என்க. தத்துவன் - மெய்ப்பொரு ளாய் உள்ளவன்.

"நல்கி" என்றது, திரோதான சத்தியோடு இயைந்து நின்று மறைத்தலைச் செய்தலையும், "கழல்கள் காட்டி" என் றது, அருட் சத்தியோடு இயைந்து நின்று அருளலைச் செய்தலை யும் அருளினுர் என்க. 'ஆணவம், கன்மம், மாயை' என்னும் மும்மலங்களையும், அவற்ருேடு நின்று இறைவன் சத்தியே நடத்துகின்றது' என்பதையும், அதுபற்றியே அச்சத்தி, 'திரோதாயி (மறைப்பது)' என்னும் பெயருடைத்தாய், 'மலம்' என்று சொல்லப்படுகின்றது' என்பதையும், 'ஆணவ மலம் பரிபாகம் அடைந்தபொழுது, அதுவே அருட் சத்தியாய் ஆன்மாவினிடத்தில் பதியும்' என்பதையும்,

"ஏயும்மும் மலங்கள் தத்தம் தொழிலினைச் செய்ய ஏவும்
தூயவன் றனதோர் சத்தி திரோதானகரி"

எனச் சிவஞான சித்தியும் (சூ. 2. 87.),

"பாகமாம் வகைநின்று திரோதான சத்தி
பண்ணுதலால் மலம்எனவும் பகர்வர்; அது,பரிந்து
நாகமா நதிமதியம் பொதிசடையான் அடிகள்
நணுகும்வகை கருணைமிக நயக்குந் தானே"

எனச் சிவப்பிரகாசமும் (20) கூறுதலால் அறிக.

இங்ஙனம் திரோதான சத்தியோடு இயைந்துநின்று மலங் களை ஏவி மயக்க உணர்வை உண்டாக்குதலாகிய மறைத்தலைச் செய்தலே, '**பந்தம்**' என்றும், அருட்சத்தியோடு இயைந்து நின்று, மலங்களை நீக்கி மெய்யுணர்வை உண்டாக்குதலே, '**வீடு**' என்றும் சொல்லப்படும். ஆகவே, பந்தமும், வீடும் இறைவன் இன்றி ஆகாவாகலின், 'பந்தமும் அவனே; வீடும் அவனே' என்கின்றன உண்மை நூல்கள்.

"பந்தம் வீடவை யாய பராபரன்" (திருமுறை. 5. 7. 2.)

" பந்தமும் வீடும் படைப்போன் காண்க "

(திருவா. திருவண். 52.)

" பந்தமு மாய்வீடு மாயினருக்கு " (திருவா. திருப்பொற். 20)

என்றாற்போலும் திருமொழிகளைக் காண்க. மறைத்தலும், மலபரிபாகம் வருதற்பொருட்டேயாகலின், கருணையேயாம். இது, **மறக்கருணை** என்றும், அருளல் அறக்கருணை என்றும் சொல்லப்படும். ஆதலின், பந்தமாய் நின்று மறைத்து வந்ததையும், " **நல்கி** " என அருளிச்செய்தார்.

62. 'அற்ற மலர், மலர்ந்த மலர்' எனத் தனித்தனி முடிக்க. சோதி - ஒளி; என்றது, ஞானத்தை. " மலர் " என்றது, உள்ளத் தாமரையை. அஞ்ஞானம் நீங்க, மெய்ஞ் ஞானத்தைப் பெற்றோரது உள்ளத்தின்கண் இறைவன் ஒளியாய் இருப்பவனாதலறிக.

63. தேசன் - ஒளியாய் இருப்பவன். மேல், " சுடர் " என்றது, வரையறைப்பட்டுச் சிறிதாய்த் தோன்றுதலையும், இது, அளவின்றிப் பேரொளியாய் நிற்றலையுங் குறித்தவாறு என்க.

'தேனும் அரிய அமுதமும்போல இனியவனே' என இன்ப நிலை கூறியவாறு. ஒளி, அறிவாகலின், அதனை யடுத்து இன்பம் கூறினார். சிவபுரன் - சிவலோகத்தில் இருப்பவன். மேல், தன்மை கூறி, இதனால் இடம் குறித்தருளினார். இதனால் பத முத்தி எய்துங் காலை அவனது இன்பம் தோன்றப்பெறுதல் அறியப்படும்.

64. " பாசமாம் பற்று " என்றது, காரியத்தைக் காரண மாகக் குறித்தபடி. பற்று, 'யான்' என்னும் அகப்பற்றும், 'எனது' என்னும் புறப்பற்றும். பாரித்தல் - வளர்த்தல். இதற்கு 'ஞானத்தை' என்னும் செயப்படுபொருள் வருவிக்க. ஆரியன் - ஆசிரியன்.

65. நேச அருள் - அடியவன் என்னும் தொடர்பு காரண மாகத் தோன்றும் அருள்; எனவே, இஃது, ஆட்கொண்ட பின்னர் உளதாவதாயிற்று. புரிதல் - இடைவிடாது செய்தல்.

'நெஞ்சில் நின்ற' என இயையும். வஞ்சனையாவது, பழைய வாதனை பற்றி எழும் சில அவாக்கள். அவை அற்றம் பார்த்து நுழைந்து, பிறவிக் குழியில் வீழ்த்தலின், "வஞ்சம்" எனப் பட்டது. "ஒருவனை வஞ்சிப்பதோரும் அவா" என்றருளியது காண்க. (குறள் - 366.)

66. அருள்பெற்றோரது நெஞ்சில், வாதனை தாக்காதொழிதல் வேண்டின், இறைவன் அதன்கண் பெயராது நிற்றல் வேண்டுவதாதல் அறிக. "பெருங் கருணைப் பேராறே" என்றது, இது, முன்செய்த எல்லாவற்றினும் பேருதவியாதல் குறித்து.

67. ஆரா அமுது - தெவிட்டாத அமிர்தம்; என்றது, 'தேவாமிர்தத்தினும் வேறானது' என்றபடி. அளவின்மை - புதிது புதிதாக எல்லையின்றிப் புலப்பட்டுவருதல். இதனை, "உணர்ந்தார்க் குணர்வரியோன்" என்னும் திருக்கோவைப் பாட்டுள், அடிகள், சிற்றின்பத்தில் வைத்து உணர்த்தியருளுமாறறிக. இதனால், வாதனாமலமும் நீங்கப்பெற்றார்க்கு இறைவன் அநுபவப் பொருளாய் நிற்கும் நிலையை விளக்கியவாறும்.

68. இதனால், 'நீ இத்தன்மையையாயினும் உன்னை உணராதவர்க்குத் தோன்றாமலே நிற்கின்றாய்' என்று அருளினார். இந்நிலை, குருடர்க்கு ஒளியும் இருளேயாதல் போல்வது என்பார், "ஒளியே" என்று அருளினார்.

"ஊமன்கண் போல ஒளியும் மிகஇருளே
யாமன்கண் காணு மவை"

என்ற திருவருட்பயனைக் காண்க. (19).

69. 'ஓராதார்க்கு ஒளிக்கும் நீ, அடியேனுக்கு விளங்கி இன்பம் பயந்தாய்' என்றதாம்.

70. இன்பமும் துன்பமும் இல்லாமை தன்னளவிலும், அவைகளையுடைமை உயிர்களோடு நிற்றலினுமாம். இவைகளை, ஓராதாரிடத்தும், தம்போலும் அடியவரிடத்துமாக மேற் கூறியவற்றோடு எதிர் நிரல்நிறையாக இயைக்க.

71. "அன்பருக்கு அன்பன்" எனவே, அல்லாதார்க்கு அல்லாதானாதல் பெறப்பட்டது. யாவையுமாதல், கலப்பினால்

ஒன்றாய் நிற்றலாலும், அல்லனாதல், பொருட்டன்மையால் வேறாய்நிற்றலாலும் என்க.

72. "சோதியனே" என்றது, 'சத்தியாய் நிற்பவனே' என்றபடி;

" உலகெலா மாகி வேறாய் உடனுமாய் ஒளியாய் ஓங்கி"

எனச் சத்தியை, 'ஒளி' என்றமை காண்க (சிவஞான சித்தி. சு. 2. 1.). துன் இருள் - செறிந்த இருள்; என்றது ஆணவ மலத்தை. ஏகாரம், தேற்றம். தோன்றாமை - அடராமை. 'உயிர்கள்போல ஆணவமலத்தால் அணுகப்படாத பெருமை யுடையவனே' என்றபடி.

73. அனாதிமுத்தனாகலின், அநாதிபெத்தமுடைய உயிர் களின் பொருட்டு உலகத்தைத் தோற்றுவிப்பவனாயினை; அங் ஙனமே முடிவில் ஒடுக்குபவனும், இடைக்கண் நிறுத்துவிப்பவ னும் ஆயினை' என்றபடி. இது, 'பதியாய் நிற்கும் நிலை' என் றும், இத்தொழில்களுள் யாதொன்றனையும் செய்யாதிருத்தல், 'சிவமாய் நிற்கும் நிலை' எனவும் சொல்லப்படும். மேல், "ஆக்குவாய்" என்றது முதலியன, 'அத்தொழில்களைச் செய் யும் தலைவன்' என்ற ஒன்றையே கூறியது எனவும், இது, அத் தன்மையனாதற்குரிய இயைபு உணர்த்தி, அவனது உண்மை நிலையையும் கூறியது எனவும் கருத்து வேறுபாடு கொள்க.

74. ஈர்த்து ஆட்கொண்டமை, வலிய வந்து உலகியற் செலவைத் தடுத்து ஆட்கொண்டமையாம். எந்தை பெருமான் - எனக்கு ஞானத் தந்தையான பெருமான்.

76. 'நோக்கு நோக்கே' என இயைத்து, 'நோக்குகின்ற குறிப்பொருளே' என உரைக்க. நுணுக்குதல் - நுண்ணி தாகச் செய்தல். "நுணுக்கரிய" என்றதில் அருமை, இன்மை குறித்துநின்றது; 'இயல்பாக நுண்ணிதாய' என்றபடி. உணர்வுடையதனை, 'உணர்வு' என்றே கூறினார்.

77. 'போக்கும், வரவும்' என வேறு வேறாக எண்ணின மையின், முறையே இறப்பினையும், பிறப்பினையும் குறித்து அருளியனவாம். புணர்வு - தோய்வு; இன்பத் துன்ப நுகர்ச் சிகள். புண்ணியன் - அறவடிவினன்.

78. "காவலன்" என்றது, 'தலைவன்' என்னும் பொருளது. "எம் காவலன்" என்றதனால், 'எம்மைக் காக்கும்' என்பது போந்தது. காண்பு - காணுதல். உன்னுடைய நிலையை முழுதுங் காணுதல் உயிர்கட்கு இயலாது என்றபடி.

"அன்றுந் திருவுருவங் காணாதே ஆட்பட்டேன்
இன்றுந் திருவுருவங் காண்கிலேன் - என்றுந்தான்
எவ்வுருவோ நும்பெருமான் என்பார்கட் கென்னுரைப்பேன்
எவ்வுருவோ நின்னுருவம் ஏது" (அம்மை திருவந்தாதி. 61.)

"கடல்அலைத்தே ஆடுதற்குக் கைவந்து நின்றும்
கடல்அளக்க வாராதாற் போலப்—படியில்
அருத்திசெய்த அன்பரைவந் தாண்ட துவும் எல்லாம்
கருத்திற்குச் சேயனாய்க் காண்"

(திருக்களிற்றுப்படியார். 90.)

என்றாற்போல்வன, இதனை விளக்குவனவேயாம்.

79, 80. 'இன்ப வெள்ள ஆறே' என மாற்றி யுரைக்க. 'பெருவெள்ளத்திற்கு யாறே காரணமாதல் போல, பேரின்பத்திற்கு நீயே காரணன்' என்றபடி. அத்தன் - அப்பன்; இஃது எவ்வுயிர்க்கும் என்க. மிக்கு ஆய்நின்ற தோற்றம் - மிகுந்து வளர்ந்துநின்ற காட்சி; தூலமாய் விளங்குதலை யுடைய, சுடரொளி, நூலறிவு எனவும், சொல்லவாராத நுண்ணுணர்வு. அனுபவ ஞானம் எனவும் கொள்க. 'சுடரொளியாயும், நுண்ணுணர்வாயும் வந்து' என்க.

81. 'வேறு வேறு' என்பது, "வெவ்வேறு" என மருவிற்று. இது, மாறுபட்ட பல சமயங்களின் கோட்பாடுகளையும், அவற்றாற் பெறும் அனுபவங்களையும் குறித்தது. 'இங்ஙனம் பலவேறுவகைப்பட உணர்வு நிகழ்தற்குக் காரணம், உலகமாகிய பற்றுக்கோட்டினது இயல்பு' என்பார், "மாற்றமாம் வையகத்தின்" என்றார்.

82. தேற்றம் - துணிவு; மெய்யுணர்வு; முன்னைய அறிவுகளெல்லாம் பின்னர் அறியாமையாய்க் கழிய, இஃது ஒன்றே என்றும் அறிவாய் நிற்பதாகலான், "அறிவாந் தேற்றமே" என்று அருளினர். தேற்றத் தெளிவு - துணிபுணர்வின் பயன்; இன்பம்.

83. 'சிந்தனையுள் எழும் ஊற்று' என்றமையால், 'உண்ணுதலும் சிந்தனையாலே' என்பது போந்தது. இவ்வாறு நிற்பதோர் அமிர்தம் இன்மையின், "ஆரமுதே" என்று அருளினார். இது, வரம்புபடுதலும், வேறு நிற்றலும் இல்லாமை அருளியவாறு.

84-85. "வேற்று, விகார, விடக்கு" என்ற மூன்றனையும், "உடம்பு" என்றதனோடு தனித்தனி முடிக்க. வேற்றுடம்பு - தன்னின் வேறாயதாய உடம்பு. விகாரம் - மாறுதல். விடக்கு - ஊன். "உடம்பினுள்" என்பதில் உள், ஏழனுருபு. "கிடப்ப" என்ற செயவெனெச்சம், தொழிற் பெயர்ப் பொருளைத் தந்தது. ஆற்றேன் - பொறுக்கமாட்டேன்.

85, 88. "எம் ஐயா" என்றது முதலியன மெய்யானரது மொழிகள். ஓ - ஓலம். "என்றென்று" என்னும் அடுக்கு, பன்மை பற்றி வந்தது. 'போற்றியும், புகழ்ந்தும்' என்க. போற்றுதல் - வணங்குதல். பொய் - பொய்யுணர்வு. கெட்டு - கெடப்பெற்று. மெய் - மெய்யுணர்வு. ஆனார் - நீங்கப்பெறுதார். குரம்பை - குடில். கட்டழித்தல் - அடியோடு நீக்குதல். 'குரம்பைக் கட்டு' என்பது பாடமாயின், 'உடம்பாகிய தளையை' என உரைக்க. ஏனையோர் பலரும் உடம்புடையராயே நிற்ப. தான் ஒருவனே அஃது இன்றி நிற்பவனாதலின், "குரம்பை கட்டழிக்க வல்லானே" என்றார். தம் உடம்பை நீக்கியருளவேண்டுவார், மெய்யுணர்வில் நிலைபெற்றார்க்கு அருள் செய்யும் முறையை எடுத்தோதினார்.

89. நள்ளிருள் - செறிந்த இருள். இது, முற்றழிப்புக் காலத்தை உணர்த்துவது. 'பயில' என்பது, 'பயின்று' எனத் திரிந்தது; 'ஒழிவின்றி' என்பது பொருள். இந்நிலையிற் செய்யும் நடனம், 'சூக்கும நடனம்' எனப்படும்.

90. தில்லைக் கூத்துத் தூல நடனமாகும். சூக்கும நடனம், தூல நடனம் இரண்டினாலும், 'உலகிற்கு முதல்வன் நீயே' எனக் குறித்தவாறு. இறைவன் மதுரையிலும் அதனைச் சூழ்ந்த தலங்களிலும் அடியார் பலருக்குப் பல திருவிளையாடலாக வெளிநின்று அருளினமையாலும், தமக்கும் உத்தரகோச மங்கைத் தலத்திலே கைவிடாது காத்தல் அருளினமையாலும், பாண்டிநாட்டையே இறைவனுக்கு உரிய நாடாகவும், உத்தர கோச மங்கையையே ஊராகவும் அடிகள் ஆங்காங்குச் சிறந்தெடுத்தோதி அருளுவர் என்க. தெற்கு - சோழநாடு பற்றிக்

கூறப்படுவது. இவற்ருல் இறைவன் அடியார்கட்கு எளியனுய் வருதல் குறிக்கப்படும் என்றுணர்க.

91. 'இதுகாறும் கூறிவந்தன பலவும், பிறவியை நீக்குதல் கருதி' என்பார், "அல்லற் பிறவி அறுப்பானே" என இறுதிக்கட் கூறினுர். கூறவே, தமக்கு வேண்டுவதும் அதுவே என்றதாயிற்று. "பிறவி" என்ற பொதுமையால், எடுத்து நின்ற உடம்புங் கொள்க. ஓ - ஓலம்; இதுவே இப் பாட்டிற்கு முடிபாகலின், இதனுடன் வினை முடித்து, "என்று" என்றது, முதலியவற்றை, வேறெடுத்துக்கொண்டு உரைக்க. என்று - என இவ்வாறு.

92-95. "சொல்லற்கரியானைச் சொல்லி" என்றதனுல், யான் அறிந்த அளவிற் போற்றி என்க. செல்வர் - ஞானச் செல்வராவர். 'தம்மைப் பல்லோரும் ஏத்த, தாம் சிவபுரத்தில் சிவனடிக்கீழ் அவனைப் பணிந்து நிற்போராவர்' என, சொற்களை ஏற்குமாற்ருற் கூட்டியுரைக்க. 'சிவபுரத்தின் உள்ளார்' என்றது, தூய புலன்களை நுகர்தலை. ஞானச் செல்வராதல் கூறினமையின், அந்நுகர்ச்சியின் உவர்ப்புத்தோன்றியவழி, அங்கிருந்தே பரமுத்தியைத் தலைப்படுதல் பெறப்பட்டது. இதனுல் இப்பாட்டினை ஓதுவார்க்கு வரும் பயன் கூறினமை காண்க.

இங்ஙனம், மங்கல வாழ்த்து முதலாக, பாட்டின் பயன் ஈருகப் பாயிர உறுப்புக்கள் பலவும் அமைய இதனை அருளிச் செய்தமையின், அடிகள் தம் பெருமானைப் பலவாற்ருனும் பாடி மகிழ விரும்பி அங்ஙனம் பாடத் தொடங்குங்கால், இதனையே முதற்கண் அருளிச்செய்தார் என்பது பெறுதும். இதனுனே, இதனுட் கூறப்பட்ட பாயிரப் பகுதிகள் பலவும், பின்னர் அருளிச்செய்த பல பகுதிகட்கும் பொருந்துதல் கொள்க.

"சிவ புராணந்தன்னை உரைப்பன்" எனப் புகுந்த அடிகள், அதனைப் பலவாற்ருனும் விளிமுகமாகவே அருளினமையின், அவை யாண்டு நிற்பினும் பொருந்துவதேயாம். ஆதலின், 'எம் பெருமானே, முன்பு பல்லூழிக் காலம் எல்லாப் பிறப்புக்களிலும் பிறந்து இளைத்துப்போனேன்; இதுபோழ்து உன் பொன்னடிகளைக் கண்டு வீடு பெற்றேன்; இது மெய்யே. ஆயினும், உடம்பினுட் கிடப்ப ஆற்றேன்; பொய்கெட்டு மெய் ஆனுர்க்கு புலக் குரம்பை கட்டழிக்க வல்லானே! தில்லையுட் கூத்தனே! தென்பாண்டி நாட்டானே! அல்லற் பிறவி அறுப்பானே! ஓ' என வினைமுடித்துக்கொள்க.

2. கீர்த்தித் திருவகவல்

நிலைமண்டில ஆசிரியப்பா

திருச்சிற்றம்பலம்

தில்லை மூதூர் ஆடிய திருவடி
பல்லுயி ரெல்லாம் பயின்றன னாகி
எண்ணில் பல்குணம் எழில்பெற விளங்கி
மண்ணும் விண்ணும் வானோ ருலகுந்
துன்னிய கல்வி தோற்றியும் அழித்தும்

என்னுடை யிருளை ஏறத் துரந்தும்
அடியா ருள்ளத் தன்புமீ தூரக்
குடியாக் கொண்ட கொள்கையும் சிறப்பும்

மன்னு மாமலை மகேந்திர மதனிற்
சொன்ன ஆகமந் தோற்றுவித் தருளியுங்

கல்லா டத்துக் கலந்தினி தருளி
நல்லா ளோடு நயப்புற வெய்தியும்

பஞ்சப் பள்ளியிற் பான்மொழி தன்னொடும்
எஞ்சா தீண்டும் இன்னருள் விளைத்தும்

கிராத வேடமொடு கிஞ்சுக வாயவள்
விராவு கொங்கை நற்றடம் படிந்தும்

கேவேட ராகிக் கெளிறது படுத்து
மாவேட் டாகிய ஆகமம் வாங்கியும்

மற்றவை தம்மை மகேந்தி ரத்திருந்
துற்றஐம் முகங்க ளாற்பணித் தருளியும்

நந்தம் பாடியில் நான்மறை யோனாய்
அந்தமில் ஆரிய னாயமர்ந் தருளியும்

வேறுவே றுருவும் வேறுவே றியற்கையும்
நூறுநூ றாயிரம் இயல்பின தாகி
ஏறுடை ஈசன்இப் புவனியை உய்யக்
கூறுடை மங்கையும் தானும்வந் தருளிக்

குதிரையைக் கொண்டு குடநா டதன்மிசைச்
சதுர்படைச் சாத்தாய்த் தானெழுந் தருளியும்

வேலம் புத்தூர் விட்டே றருளிக்
கோலம் பொலிவு காட்டிய கொள்கையும்

தற்பண மதனிற் சாந்தம் புத்தூர்
விற்பொரு வேடற் கீந்த விளைவும்

மொக்கணி யருளிய முழுத்தழல் மேனி
சொக்க தாகக் காட்டிய தொன்மையும்

அரியொடு பிரமற் களவறி யொண்ணான்
நரியைக் குதிரை யாக்கிய நன்மையும்

ஆண்டுகொண் டருள அழகுறு திருவடி
பாண்டி யன்தனக் குப்பரி மாவிற்
றீண்டு கனகம் இசையப் பெறாஅ
தாண்டான் எங்கோன் அருள்வழி யிருப்பத்
தூண்டு சோதி தோற்றிய தொன்மையும்

அந்தண னாகி ஆண்டுகொண் டருளி
இந்திர ஞாலங் காட்டிய இயல்பும்

மதுரைப் பெருநன் மாநக ரிருந்து
குதிரைச் சேவக னாகிய கொள்கையும்

ஆங்கது தன்னில் அடியவட் காகப்
பாங்காய் மண்சுமந் தருளிய பரிசும்

உத்தர கோச மங்கையு ளிருந்து
வித்தக வேடங் காட்டிய இயல்பும்

பூவண மதனிற் பொலிந்திருந் தருளித்
தூவண மேனி காட்டிய தொன்மையும்

வாத வூரினில் வந்தினி தருளிப்
பாதச் சிலம்பொலி காட்டிய பண்பும்

திருவார் பெருந்துறைச் செல்வ னாகிக்
கருவார் சோதியிற் கரந்த கள்ளமும்

பூவல மதனிற் பொலிந்தினி தருளிப்
பாவ நாச மாக்கிய பரிசும்

தண்ணீர்ப் பந்தர் சயம்பெற வைத்து
நன்னீர்ச் சேவக னாகிய நன்மையும்

விருந்தின னாகி வெண்கா டதனில்
குருந்தின் கீழன் றிருந்த கொள்கையும்

பட்ட மங்கையிற் பாங்கா யிருந்தங்
கட்டமா சித்தி அருளிய அதுவும்

வேடுவ னாகி வேண்டுருக் கொண்டு
காடது தன்னிற் கரந்த கள்ளமும்

மெய்க்காட்டிட்டு வேண்டுருக் கொண்டு
தக்கா னொருவ னாகிய தன்மையும்

ஓரி யூரின் உகந்தினி தருளிப்
பாரிரும் பாலக னாகிய பரிசும்

பாண்டூர் தன்னில் ஈண்ட இருந்துந்

தேவூர்த் தென்பால் திகழ்தரு தீவிற்
கோவார் கோலங் கொண்ட கொள்கையும்

தேனமர் சோலைத் திருவா ரூரில்
ஞானந் தன்னை நல்கிய நன்மையும்

இடைமரு ததனில் ஈண்ட இருந்து
படி மப்பாதம் வைத்தஅப் பரிசும்

ஏகம் பத்தின் இயல்பா யிருந்து
பாகம் பெண்ணோ டாயின பரிசும்

திருவாஞ் சியத்திற் சீர்பெற இருந்து
மருவார் குழலியொடு மகிழ்ந்த வண்ணமும்

சேவக னாகித் திண்சிலை யேந்திப்
பாவகம் பலபல காட்டிய பரிசும்
கடம்பூர் தன்னில் இடம்பெற இருந்தும்

ஈங்கோய் மலையில் எழிலது காட்டியும்
ஐயா றதனிற் சைவ னாகியும்
துருத்தி தன்னில் அருத்தியோ டிருந்தும்
திருப்பனை யூரில் விருப்ப னாகியும்
கழுமல மதனிற் காட்சி கொடுத்தும்
கழுக்குன் றதனில் வழுக்கா திருந்தும்
புறம்பய மதனில் அறம்பல அருளியும்
குற்றா லத்துக் குறியா யிருந்தும்

அந்தமில் பெருமை அழலுருக் கரந்து
சுந்தர வேடத் தொருமுத லுருவுகொண்
டிந்திர ஞாலம் போலவந் தருளி
எவ்வெவர் தன்மையுந் தன்வயிற் படுத்துத்
தானே யாகிய தயாபரன் எம்மிறை
சந்திர தீபத்துச் சாத்திர னாகி
அந்தரத் திழிந்துவந் தழகமர் பாலையுட்
சுந்தரத் தன்மையொடு துதைந்திருந் தருளியும்

மந்திர மாமலை மகேந்திர வெற்பன்
அந்தமில் பெருமை அருளுடை அண்ணல்
எந்தமை ஆண்ட பரிசது பகரின்

ஆற்றல் அதுவுடை அழகமர் திருவுரு
நீற்றுக் கோடி நிமிர்ந்து காட்டியும்
ஊனந் தன்னை யொருங்குடன் அறுக்கும்
ஆனந் தம்மே ஆறா அருளியும்

மாதிற் கூறுடை மாப்பெருங் கருணையன்
நாதப் பெரும்பறை நவின்று கறங்கவும்

அழுக்கடை யாமல் ஆண்டுகொண் டருள்பவன்
கழுக்கடை தன்னைக் கைக்கொண் டருளியும்

மூல மாகிய மும்மலம் அறுக்குந்
தூய மேனிச் சுடர்விடு சோதி
காதல னாகிக் கழுநீர் மாலை
ஏலுடைத் தாக எழில்பெற அணிந்தும்

அரியொடு பிரமற் களவறி யாதவன்
பரிமா வின்மிசைப் பயின்ற வண்ணமும்

மீண்டு வாரா வழியருள் புரிபவன்
பாண்டி நாடே பழம்பதி யாகவும்

பத்திசெய் அடியரைப் பரம்பரத் துய்ப்பவன்
உத்தர கோச மங்கையூ ராகவும்

ஆதி மூர்த்திகட் கருள்புரிந் தருளிய
தேவ தேவன் திருப்பெய ராகவும்

இருள்கடிந் தருளிய இன்ப வூர்தி
அருளிய பெருமை அருண்மலை யாகவும்

எப்பெருந் தன்மையும் எவ்வெவர் திறமும்
அப்பரி சதனால் ஆண்டுகொண் டருளி

நாயி னேனை நலமலி தில்லையுட்
கோல மார்தரு பொதுவினில் வருகென
ஏல என்னை யீங்கொழித் தருளி
அன்றுடன் சென்ற அருள்பெறும் அடியவர்
ஒன்ற வொன்ற உடன்கலந் தருளியும்

எய்தவந் திலாதார் எரியிற் பாயவும்
மாலது வாகி மயக்க மெய்தியும்
பூதல மதனிற் புரண்டுவீழ்ந் தலறியும்

கால்விசைத் தோடிக் கடல்புக மண்டி
நாத நாத என்றழு தரற்றிப்
பாத மெய்தினர் பாத மெய்தவும்

பதஞ்சலிக் கருளிய பரமநா டகஎன்
றிதஞ்சலிப் பெய்தநின் றேங்கினர் ஏங்கவும்

எழில்பெறும் இமயத் தியல்புடை யம்பொற்
பொலிதரு புலியூர்ப் பொதுவினில் நடநவில்
கனிதரு செவ்வாய் உமையொடு காளிக்
கருளிய திருமுகத் தழகுறு சிறுநகை
இறைவன் ஈண்டிய அடியவ ரோடும்
பொலிதரு புலியூர்ப் புக்கினி தருளினன்
ஒலிதரு கைலை உயர்கிழ வோனே.

திருச்சிற்றம்பலம்

கீர்த்தித் திருவகவல் முற்றிற்று.

குறிப்புரை

கீர்த்தித் திருஅகவல் - சிவபெருமானது அருட்புகழைக் கூறுகின்ற சிறந்த அகவற் பாட்டு. இதற்கு, முன்னோர் உரைத்த குறிப்பும், '**சிவனது திருவருட் புகழ்ச்சி முறைமை**' என்பதேயாகும்.

சிவபுராணத்துள், சிவபெருமானது திருவருட்பெருமையை, பண்பாக எடுத்துப் போற்றிய அடிகள், இதனுள் அதனைச் செயலாக எடுத்துப் போற்றுகின்றார். அச் செயல் பற்பல இடங்களில், பற்பல காலத்தில், பற்பலவகையில் நிகழ்ந்தனவாம். ஆகவே, இதனுட் கூறப்படுவன பலவும், இறைவனது அருட்டிருவிளையாடல்கள் என்பது பெறப்படும்.

அடிகளது காலப் பழைமையால், இதனுட் குறிக்கப்பட்ட தலங்களுள்ளும், வரலாறுகளுள்ளும் பல, பிற்காலத்தவரால் நன்கு அறிதற்கு அரியவாயின. அதனால், அவற்றை அவரவரும் தாம் தாம் கருதியவாற்றால் பலபடக் கூறிப்போந்தனர். ஆகவே, அவர் கூற்றுக்கள், ஏற்றபெற்றியே கொள்ளப்படும் என்க.

1-3. "திருவடி" என்றது, விடாத ஆகுபெயராய், அவைகளை யுடைய இறைவன் என்பொருள் தந்தது. "எல்லாம்" என்றதில், 'எல்லாவற்றுக்கண்ணும்' என ஏழாவது விரிக்க. பயிலுதல் - நீங்காது நின்று அருள்புரிதல். இறைவன் புறத்தே தில்லையிலும், அகத்தே நெஞ்சத் தாமரையிடத்தும் நடனம் புரிதலை இங்ஙனம் அருளிச்செய்தார். "பல்குணம்" என்றதில், 'குணம்' ஆற்றல். அஃது, "எழில்பெற" என்றதனோடு முடிந்தது. எழில் பெற - எழுச்சி பெற்று நிற்குமாறு. விளங்கி - தடத்தநிலையில் தூலமாய் நின்று. இவ்வெச்சம், "தோற்றியும், அழித்தும், துரந்தும்" என வருவனவற்றோடு முடியும்.

4-8. "மண், விண்" என்றது பூதங்களை. கீழும் மேலுமான இவற்றைக் கூறவே, இடை நிற்கும் பூதங்களும் அடங்கின. 'வானோருலகு' எனப் பின்னர் வருதலின், இவை மக்களுலகாயின. 'கல்வியும்' என, தொகுக்கப்பட்ட எண்ணும்மையை விரித்துரைக்க. 'சொல்லும், பொருளும்' என இரு

கூற்றுலகத்தையும் குறித்தவாறு. என்னை? துணிபுணர்விற்குக் காரணமாய் நிற்கும் சொற்கள் பலவற்றையுமே ஈண்டு '' கல்வி '' என்றமையின். தோற்றலும், அழித்தலும் கூறவே, இடை நிற்கும் நிறுத்தலும் அடங்கிற்று; எனவே, 'முத்தொழில் களைச் செய்து' என்றவாருயிற்று. இருள், ஆணவமலம். 'இவ்வாற்ருனே இருளைத் துரந்து' என்றபடி. எனவே, 'இறைவன் முத்தொழில் செய்தல், உயிர்களின் இயற்கை மல மாகிய ஆணவத்தைத் தொலைத்தற் பொருட்டு' என்பது போந்தது.

'' சொன்னஇத் தொழில்கள் என்ன
காரணந் தோற்ற என்னில்
முன்னவன் விளையாட் டென்று
மொழிதலும் ஆம்; உயிர்க்கு
மன்னிய புத்தி முத்தி
வழங்கவும், அருளால் முன்னே
துன்னிய மலங்க ளெல்லாம்
துடைப்பதும் சொல்ல லாமே ''

என்னும் சிவஞான சித்தியைக் காண்க (சூ. 1. 36.)

சொற்பல்காமைப் பொருட்டுச் சுருங்க ஓதினராயினும், 'என்னுடை இருளை ஏறத்துரந்து என் உள்ளத்து அன்பு மீதூரக் குடியாக் கொண்ட கொள்கையும் சிறப்பும்' எனவும், 'ஏனை அடியார் பலருடைய இருளையும் ஏறத் துரந்து அவர் உள்ளத்து அன்பு மீதூரக் குடியாக் கொண்ட கொள்கையும் சிறப்பும்' எனவும் வகுத்துரைத்தல் கருத்தென்க. இவ்விரண் டினையும் இத்திருப்பாட்டுள் எடுத்தோதுதல் காண்க.

ஏற - கடைபோக; முற்றிலும். மீதூர்தல் - மேன்மேல் வளர்தல். 'அவற்றைக் குடியாக்கொண்ட' என்க. குடி - குடியிருக்கும் இடம். கொள்கை - கோட்பாடு. சிறப்பு - மேன்மை. 'கொள்கை சிறப்பு' என்ற இரண்டும், முறையே, காரணப் பெயராயும், காரியப் பெயராயும் நின்று, ''கொண்ட'' என்ற பெயரெச்சத்திற்கு முடிபாயின. இதனுல், இறைவன் உயிர்கள் பொருட்டுச் செய்யும் திருவிளையாடல்களைத் தொகுத் துக் கூறியவாறு.

9-10 "சொன்ன ஆகமம்" என்றதை முதலிற் கூட்டி, 'முன்னர்ப் பிரணவர் முதலியோர்க்குச் சொன்ன ஆகமங்களை' என உரைக்க. சுத்த புவனத்திற் சொல்லப்பட்டவற்றை நில வுலகத்திற் புலப்படுத்தினமையின், "தோற்றுவித்து" என் றருளினர். 'எழுதுவிக்கப்பட்டன' என்பதும் இதனையே கொள்க. என்னை? தோற்றுவித்தல் என்பது, 'கட்புலனாம்படி செய்தல்' எனவும் பொருள் தருமாகலின். எழுதினோர் சிவ கணத்தவர் எனக் கொள்ளப்படும்.

'மகேந்திரமலை வடக்கின்கண் உள்ளது' என ஒரு சாரா ரும், 'தெற்கின்கண் உள்ளது' என மற்றொரு சாராரும் கூறுப. அடிகள் தென்னாட்டில் நிகழ்ந்தவற்றையே அருளிச் செய்தலின், தெற்கண் உள்ளதெனக் கோடலே பொருந்துவ தாம். இப்பெயருடைய மலை தெற்கின்கண் உள்ளதென்றே இராமாயணத்தாலும் அறிகின்றோம். "மன்னு மாமலை" என்றதனால், அது சிறப்புடைய மலையாதல் விளங்கும்.

11-12. கல்லாடம், ஒருதலம். கலந்து - வெளிப்பட்டு நின்று. நல்லாள், உமையம்மை. நயப்பு உறவு - மகிழ்ச்சி யுறுதல்; அஃதாவது, 'சினந் தணிதல். மகேந்திரமலையில் தோற்றுவித்தருளிய ஆகமங்களை இறைவன் உமையம்மைக்கு அவ்விடத்தே அறிவுறுத்த, அவள் அவற்றை விருப்பமின்றிக் கேட்டாள்; அதனாற் சினங்கொண்ட இறைவன், நீ ஈங்கிருக் கற்பாலை யல்லை எனக் கடிந்து நீக்க, அவள், 'கல்லாடம்' என்னும் தலத்திற் சென்று தன் பிழை நீங்க இறைவனை வழி பட்டாள்; அவ் வழிபாட்டினால் மகிழ்ந்த இறைவன் அங்கு அம்மைமுன் வெளிப்பட்டுத் தனது மகிழ்ச்சியைப் புலப்படுத்தி, நின் பிழையைப் பொறுத்தோம் என்று அருள்செய்தான்' என் பது இவ்வடிகளால் கொள்ளத்தகும் வரலாறு.

13-14. பஞ்சப்பள்ளி, ஒருதலம். பால்மொழி, உமை யம்மை. எஞ்சாது ஈண்டும் இன்னருள் - பிரியாது அணுகி யிருக்கும் வரம். விளைத்து - கொடுத்து.

அம்மை கல்லாடத்தில் வழிபட்டுக் குற்றம்பொறுத்தருளப் பெற்ற பின்னர்ப் பஞ்சப் பள்ளியில் வழிபட, இறைவன் ஆங்குத் தோன்றியருளியபோது, அம்மை இறைவனோடு

நீங்காது உறையும் வரத்தினை வேண்டுதலும், இறைவன் அம்மையை, 'வலைஞர் மகளாய் சென்றிரு; பின்னர் வந்து மணம் புரிதும்' என்று அருளினான் என இங்குக் கொள்ளற்பாற்று. குற்றம் பொறுத்த பின்பும் அம்மையை வலைஞர் மகளாகச் செல்லப் பணித்தது, அது முற்றும் நீங்குதற்கு. இனி வலைஞர் தலைவனது தவமே இதற்குச் சிறந்த காரணம் என்க.

15-16. வேடனைக் குறிக்கும், 'கிராதன்' என்னும் வடசொல், 'கொல்லும் தொழிலுடையவன்' என்னும் பொருளையுடையதாதலின், இங்கு அத்தொழிலை யுடைய வலைஞனுக்குக் காரணக் குறியாயிற்று. "மீன்வலை வீசிய கானவன்" எனப் பின்னும் அருளுவர் (திருப்படை யாட்சி - 1.).

"கடல்புக் குயிர்கொன்று வாழ்வர்நின் ஐயர்
உடல்புக் குயிர்கொன்று வாழ்வைமன் நீயும்"

என வலைஞர்களது கொலைத் தொழிலைச் சிலப்பதிகாரமும் கூறுதல்காண்க. கிஞ்சுகம் - முள்முருக்கு ; அதன் பூப்போலும் வாயவள், உமையம்மை. விராவு - நெருங்கிய. தடம்-பொய்கை. இன்பம் பற்றி வந்த உருவகம். வலைஞர் மகளாய்ச் சென்று வளர்ந்திருந்த அம்மையை இறைவன் ஓர் வலைஞனாய்ச் சென்று மணந்து அவளோடு கூடி இன்புற்றனன் என்பது இதனுட் குறிக்கப்பட்ட வரலாறு.

இதற்கு இவ்வாறன்றி. பார்த்தனுக்கு வேடனாய்ச் சென்று அருள்புரிந்த வரலாற்றைப் பொருளாகக் கூறின், அதனைக் கூறுமையிற் குன்றக் கூறலும், கிஞ்சுக வாயவளோடு இன்புற்றமையை விரித்தோதினமையின், மற்றொன்று விரித்தலுமாகிய குற்றங்கள் தங்கும் என்க. இவ்வரலாறு, அடுத்து வரும் வரலாற்றின் பின்னர்க் கூறற்பாலதாயினும், அம்மைக்கு அருள் புரிந்தவற்றோடு ஒருங்கியைதற் பொருட்டு இதனை முன்னரும், ஆகம வரலாறுகள் தம்முள் ஒருங்கியைய, அடுத்து வருவதனை இதன் பின்னரும் அருளினார் என்க.

இத்துணையும், உமையம்மைக்கு அருள்புரிந்த திருவிளையாடல்களாம்.

17-18. கேவேடர் - வலைஞர். 'கேவேடருள்' என உருபு விரித்து, 'வலைஞருள் ஒருவனாய்ச் சென்று' என உரைக்க. "கெளிறு" என்றது இங்கு அப்பெயருடைய மீனை உணர்த்தும் சிறப்புப்பொருள் தாராது. 'மீன்' என்னும் பொதுப்பொருளே தந்து, சுறுமீனைக் குறித்தது. மா ஏட்டு ஆகிய ஆகமம் - பெரிய சுவடிக்கண் பொருந்திய ஆகமங்கள்.

இறைவன் மகேந்திரமலையில் எழுந்தருளியிருந்து ஆகமங்களைச் சுவடிகளாக்கி வைத்தபின்னர், அவற்றின் பொருளை அம்மைக்கு விளக்கத் திருவுளங்கொண்டு அவளுடன் தனிமையில் இருந்து, 'ஈண்டு யாரையும் புகவிடாதி' என நந்தி பெருமானுக்கு ஆணையிட்டு, அம்மைக்கு ஆகமப் பொருளை விளக்கி வருங்கால், அம்மை அவற்றை விருப்பின்றிக் கேட்டிருந்தாள்; அதனால் வெகுண்ட இறைவன் அவளைத் தன்பால் நில்லாது நீங்கச் செய்தான். இதனையறிந்த முருகப்பெருமான், சீற்றங்கொண்டு, நந்திதேவரது தடைக்கு அஞ்சாது உட்புகுந்து, ஆகமச் சுவடிக் குவியல் முழுவதையும் தமது பன்னிருகைகளாலும் ஒருசேர வாரியெடுத்துக் கடலிற் புக எறிந்தார். அதனால், இறைவன் அவரை, 'நீ மதுரையில் மூங்கை மகனாய்ப் பிறக்க' எனவும், நந்திதேவரை, 'நீ கடலில் சுறுமீனாகி அலைக' எனவும் வெவ்வுரை கூற, முருகப்பெருமான் மதுரையில் 'உப்பூரி குடி' கிழானாகிய வணிகனுக்கு மூங்கைப் பிள்ளையாய்ப் பிறந்திருந்தார். உருத்திரனால் (சிவபெருமானால்) பெற்ற சன்மத்தை (பிறப்பை) உடைமையால், அப்பிள்ளையை, 'உருத்திர சன்மன்' என்பர்.

நந்திதேவர் கடலிற் சுறுமீனாகி முருகப்பெருமானால் எறியப்பட்ட ஆகமச் சுவடிகள் அனைத்தையும் வைத்துக் காத்துக் கொண்டு வலைஞர்களுக்கு அகப்படாது திரிந்து அவர்களை அலைத்துவர, அம்மை, மேற்கூறியவாறு கல்லாடத்திலும், பஞ்சப்பள்ளியிலும் இறைவனை வழிபட்டு வலைஞர்கோன், மகளாய்ச் சென்று வளர்ந்து மணப்பருவம் எய்தியிருக்க முன்னர்க் குறித்த சுறுமீனைப் பிடித்துக் கொணர்வோர்க்கு அவளைக் கொடுப்பதாக வலைஞர்கோன் அறிவித்தான். வலைஞர் மைந்தர் ஒருவரும் அச் சுறுமீனை அகப்படுத்தமாட்டாராய் இருப்ப, இறைவன் தானே ஒரு வலைஞர் மகனாய்ச் சென்று சுறுமீனை வலையுட் படுத்துக் கொணர்ந்தான். நந்திதேவர்

முன்னை யுருவெய்தி, ஆகமச் சுவடிகளை இறைவன்முன் வைத்து வணங்கினர். உண்மையை யுணர்ந்து, வலைஞனாய் வந்தவர் சிவபெருமானே என்றும் அறிந்து அனைவரும் வியப்பில் ஆழ்ந்தனர். பின்னர் இறைவன் அம்மையை மணந்துகொண்டு மகேந்திரமலைக்கு எழுந்தருளினன். முருகப் பெருமான் உருத்திரசன்மராய் சங்கத்தார்க்கு உதவியிருந்து, முன்னைநிலை எய்தினர். இவையே, "கல்லாடத்துக் கலந்தினி தருளி" என்றதுமுதல் இதுகாறும் வந்த அடிகளில் குறிக்கப்பட்ட வரலாறுகள் என்க. இவற்றைத் திருவிளையாடற் புராணம் சிற்சில வேறுபாடுகளுடன் கூறுமாயினும், ஆளுடைய அடிகளது திருமொழியாற் கொள்ளத்தக்கன இவையே எனக் கொள்க.

19-20. மற்று, வினைமாற்று. அவைதம்மை - அந்த ஆகமங்களை. சிவபெருமானது - திருமுகங்கள் ஐந்து, 'ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம்' என்பன.

காமிகம் முதல் வாதுளம் ஈருக உள்ள சிவாகமங்கள் இருபத்தெட்டினையும் பிரணவர் முதலிய இருபத்தெண்மருக்கும் சிவபெருமான் ஒரோவொருவர்க்கு ஒரோ ஒன்ருக இவ்வைந்து திருமுகங்களானும் அருளிச்செய்தான்; அவற்றுள் முதற் பத்து ஆகமங்களையும் முன்னர்க்கேட்டவர்பால் ஒருவர்வழி ஒருவராக ஒரோவொன்றை மற்றும் இருவர் கேட்டனர். இங்ஙனம் இப்பத்து ஆகமங்களையுங் கேட்ட முப்பதின்மரும், '**சிவர்**' எனப்படுதலின், இவை, '**சிவபேதம்**' என்னும் பெயருடையவாயின. ஏனைப் பதினெட்டு ஆகமங்களையும் முன்னர்க்கேட்டவர்பால் ஒரோவொன்றை மற்றும் ஒரோவொருவர் கேட்டனர். இங்ஙனம் இப்பதினெட்டு ஆகமங்களையும்கேட்ட முப்பத்தறுவரும், '**உருத்திரர்**' எனப்படுதலின், இவை. '**உருத்திர பேதம்**' என்னும் பெயருடையவாயின. இங்ஙனம், சிவாகமங்களைக் கேட்டவர் அறுபத்தறுவராகலின், அவரை யெல்லாம் ஒருங்கே தொகுத்து,

"அஞ்சன மேனி யரிவையோர் பாகத்தன்
அஞ்சோ டிருபத்து மூன்றுள ஆகமம்
அஞ்சலி கூப்பி அறுபத் தறுவரும்
அஞ்சாம் முகத்தில் அரும்பொருள் கேட்டதே"

என்று, ஒருபெற்றியராகவே சுருங்க அருளிச்செய்தார் திருமூல நாயனர் (திருமந்திரம்). இதனையே, அடிகள், "**சொன்ன ஆகமம்**" என மேலே (அடி. 10.) குறித்தருளினர்.

காமிகம் முதலிய பத்து ஆகமங்களையும் சிவபெருமானிடமிருந்து கேட்ட சிவர்கள், 'பிரணவர், சுதாக்கியர், சுதீத்தர், காரணர், சுசிவர், ஈசர், சூக்குமர், காலர், அம்பு, தேசேசர்' என்போர். இவர்கள்பால் மேற்கூறிய ஆகமங்களை ஒருவர்வழி ஒருவராக கேட்ட இவ்விரு சிவர்கள், 'திரிகலர், அரர் - பசுமர், விபு - கோபதி, அம்பிகை - சருவருத்திரர், பிரசேசர் - சிவர், அச்சுதர் - திரிமூர்த்தி, உதாசனர் - வைச்சிரவணர், பிரபஞ்சனர் - வீமர், தருமர் - உக்கிரர், ஆதித்தர் - விக்கினேசர், சசி' என்போர். இவருள் இவ்விருவர் ஓர் ஆகமத்தை ஒருவர்பால் ஒருவராகக் கேட்டவர் என்பது மறவற்க.

ஏனைப் பதினெட்டாகமங்களையும் சிவபெருமான்பால் கேட்ட உருத்திரர்கள், 'அநாதிருத்திரர், தசாருணர், நிதனேசர், வியோமர், தேசர், பிரமேசர், சிவர், சருவோத்தமர், அனந்தர், பிரசாந்தர், சூலி, ஆலயேசர், விந்து, சிவநிட்டர், சோமதேவர், சிதேவி, தேவவிபு, சிவர்' என்போர். இவர் ஒரோவொருவரிடமும் அவ்வாகமங்களைக் கேட்ட ஒரோ ஒருவர் முறையே, 'பரமேசர், பார்ப்பதி, பதுமபூ, உதாசனர், பிரசாபதி, நந்திகேசர், மகாதேவர், வீரபத்திரர், பிருகற்பதி, தசிசி, கவசர், இலளிதர், சண்டேசர், அசம்பாதர், நிருசிங்கர், உசனர், சம்வர்த்தர், மகாகாளர்' என்போர். இவரெல்லாரும், 'விஞ்ஞானகலர்' எனப்படுதலின், இவர்கள் கேட்டனவெல்லாம் சுத்தமாயாபுவனத்திலேயாம். இவ்வாகமங்களையே நிலவுலகில் இறைவன் மகேந்திரமலையில் வெளிப்படுத்தினன் என அடிகள் மேல் (அடி - 10) அருளிச்செய்தார் என்க. விஞ்ஞானகலராகிய அறுபத்தறுவருட் சிலரைப் பெயரொற்றுமை பற்றிப் பிறராக நினையற்க.

சிவபிரானது படைத்தல் முதலிய ஐவகை ஆற்றல்களே அவனது சத்தியோசாதம் முதலிய ஐந்து திருமுகங்களாகும். அவற்றுள் சத்தியோசாத முகத்தால் சொல்லப்பட்ட ஆகமங்கள், '**காமிகம், யோகசம், சிந்தியம், காரணம், அசிதம்**' என்னும் ஐந்துமாம். இவை, **கௌசிக முனிவருக்குச்** சொல்லப்பட்டன. வாமதேவ முகத்தாற் சொல்லப்பட்ட ஆகமங்கள், '**தீர்த்தம், சூக்குமம், சகச்சிரம், அஞ்சுமான், சுப்பிரபேதம்**' என்னும் ஐந்துமாம். இவை, **காசிப முனிவருக்குச்** சொல்லப்பட்டன. அகோர முகத்தாற் சொல்லப்பட்ட ஆகமங்கள்,

'விசயம், நிச்சுவாசம், சுவாயம்புவம், ஆக்கினேயம், வீரம்' என்னும் ஐந்துமாம். இவை, பாரத்துவாச முனிவருக்குச் சொல்லப்பட்டன. தற்புருட முகத்தாற் சொல்லப்பட்ட ஆகமங்கள், 'இரௌரவம் மகுடம், விமலம், சந்திர ஞானம், முகவிம்பம்' என்னும் ஐந்துமாம். இவை, கௌதம முனிவருக்குச் சொல்லப்பட்டன. ஈசான முகத்தாற் சொல்லப்பட்ட ஆகமங்கள், 'புரோற்கீதம், இலளிதம், சித்தம், சந்தானம், சருவோத்தம், பாரமேசுரம், கிரணம், வாதுளம்' என்னும் எட்டுமாம். இவை, அகத்திய முனிவருக்குச் சொல்லப்பட்டன. சுத்தமாயா புவனத்தில் பிரணவர் முதலிய அறுபத்தறுவர்க்குச் சொன்ன ஆகமங்களை, இங்ஙனம், மகேந்திரத்தில் ஐந்து திரு முகங்களால் ஐந்து முனிவர்கட்கு இறைவன் பணித்தருளினன் என்க. இம்முனிவர் ஐவரும் இல்லறத்தவராய் இருந்து தம் தம் குடி வழிகளில் தாம் தாம் கேட்ட ஆகம நெறிகளை நிலவுலகிற் பரவச் செய்தனர். இவர் தம் குடிவழிகள் முறையே, சிவ கோத்திரம், சிகா கோத்திரம், சோதி கோத்திரம், சாவித்திரி கோத்திரம், வியோம கோத்திரம் எனப் பெயர் பெற்று விளங்கின. இங்ஙனம் ஐம்முகங்களாலும் ஐவருக்கு எல்லா ஆகமங்களையும் சொல்லி முடித்தபின்பு திருக்கையிலையில் இவைகளை உமையம்மைக்குச் சொல்ல, அவற்றை அவள் முன்போல இல்லாமல் ஆர்வத்துடன் கேட்டு, அவற்றின் முறைப்படியே இறைவனைக் காஞ்சியம்பதியில் வழிபட்டாள் என்பதையே சேக்கிழார்,

"வெள்ளி மால்வரைக் கயிலையில் வீற்றிருந் தருளித்
துள்ளு வார்புனல் வேணியார் அருள்செயத் தொழுது
தெள்ளு வாய்மையின் ஆகமத் திறனெலாம் தெளிய
உள்ள வாறுகேட் டருளினள் உலகைஆ ளுடையாள்"

என்பது முதலாகக் கூறுகின்றார் எனக் கொள்ளற்பாற்று.

"நவஆகமம் எங்கள் நந்திபெற் றனே" (திருமந்திரம். 62.) எனத் திருமூலர் அருளியது, அம்மைக்கு எல்லா ஆகமங்களையும் சொல்லிய பின்பு, அவற்றுள் ஒன்பது ஆகமங்களையே இறைவன் நந்தி பெருமானுக்குச் சொன்னான் என்பதைக் குறிப்பதாகும். அஃவொன்பது ஆகமங்கள் இவை என்பதை,

" பெற்றநல் லாகமம் காரணம் காமிகம்
உற்றநல் வீரம் உயர்சிந்தம் வாதுளம்
அற்றவ் வியாமளம் ஆகும் காலோத்தரம்
துற்றநற் சுப்பிரம் சொல்லும் மகுடமே "

என்ற திருமந்திரத்தால் (63) அறியலாகும். எனினும், இத் திருமந்திரத்துள் மூன்றும் அடியின் பாடம் திரிபுடையது என்பர். என்னையெனின், அதனுட் கூறப்பட்ட யாமளம். மூலாகமங்கள் இருபத்தெட்டனுட்பட்டது அல்லவாதலின், நந்தி தேவர் கேட்ட ஆகமங்கள் ஒன்பது என்பதற்கேற்ப, திருமந்திரம் ஒன்பது தந்திரமாக அருளிச்செய்யப்பெற்றமை கருதற்பாலது.

ஆகமங்கள் இறைவனால் சுத்தமாயா புவனத்தில் தோற்றுவிக்கப்பட்டுப் பிரகிருதி புவனத்திற்கு வந்த வரலாற்றைத் திருமந்திரம் (62),

" சிவமாம் பரத்தினில் சத்தி சதாசிவம்
உவமா மகேசர் உருத்திர தேவர்
தவமால் பிரமேசர் தம்மில்தாம் பெற்ற
நவஆ கமம்எங்கள் நந்திபெற் றனே. "

எனக் கூறுகின்றது.

இனி,

" அண்ணல் அருளால் அருளும்திவ் யாகமம்
விண்ணில் அமரர் தமக்கும் விளங்கரிது
எண்ணில் எழுபது கோடிநூ றாயிரம் "

(திருமந்திரம்-60.) என்றாற்போல ஆகமங்களை அளவிலவாகக் கூறுதல், அவற்றின் பொருளைப் பற்பல காலங்களில் பற்பலருக்கு விளக்கிய உபாகமங்களையாம். திருமூலர், மூலாகமங்களை, 'இருபத்தெட்டு' என வரையறுத்தருளிச் செய்ததுபோல, உபாகமங்களை, 'இருநூற்றேழு' என வரையறுத்தருளிச் செய்யாமை யறிக. இனி இதனை, 'ஆகமங்களிற் போந்த கிரந்தங்களை அளவில எனக் கூறியது' என்றலுமாம்.

இவற்றின் பின்னர்,

" மாரியுங் கோடையும் வார்பனி தூங்கநின்று
ஏரியும் நின்றங் கிளைக்கின்ற காலத்தே
ஆரிய முந்தமி ழும்உட னேசொலிக்
காரிகை யார்க்குக் கருணைசெய் தானே."

எனத் திருமூலர் அருளியது, ஆகமங்களின் பொருளை மக்கட்கு விளங்கச் செய்தற் பொருட்டே. 'ஆரியம், தமிழ்' என்னும் இருபெரு மொழிகளும் தோற்றுவிக்கப்பட்டன என்றவாறும். "வார்பனி" என்றது, பகுத்துணர்வோடு கூடாத புலனுணர்வை. "ஏரி" என்றது நிறைந்த ஞானத்தை. ஆரியமும், தமிழும் சிவாகமப் பொருளையே சிறந்தெடுத்துக் கூறும் என்பதனை,

" அவிழ்க்கின்ற வாறும் அதுகட்டு மாறும்
சிமிழ்த்தலைப் பட்டுயிர் போகின்ற வாறும்
தமிழ்ச்சொல் வடசொல் எனும்இவ் விரண்டும்
உணர்த்தும்; அவனை உணரலு மாமே"

என்று அவர் (திருமந்திரம். 66.) இனிது விளங்க அருளிச் செய்தார்.

" தமிழ்ச்சொலும் வடசொலும் தாள்நிழற் சேர "

என்ற ஆளுடைய பிள்ளையார் அருள்மொழியும் (திருமுறை. 1. 77. 4.) இங்கு நினைக்கத் தக்கது. "ஆரியமும் தமிழும் உடனேசொலி" (திருமந்திரம். 65.) "ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்" (திருமுறை-6. 23. 5.) என்றாற்போலச் சிலவிடங்களில் ஆரியத்தை முன்வைத்தும். " தமிழ்ச்சொல் வடசொல் எனும் இவ் விரண்டும்" (திருமந்-66.), " தமிழ்ச் சொலும் வடசொலும் தாள்நிழற் சேர" (திருமுறை. 1.77. 4.) என்றாற்போலச் சிலவிடங்களில் தமிழை முன்வைத்தும் அருளிச்செய்தலின், அவ்விருமொழியும் ஒப்ப உயர்ந்தனவாகவே உயர்ந்தோர் தழுவினர் என்பது பெறப்படும். படவே, அவற்றுள் ஒன்றனையே உயர்ந்தோர் மொழியெனக் கொண்டு, பிறிதொன்றனை அன்னது அன்றெனை இகழ்தல் கூடாமை அறிக.

இவ்விரண்டினாலும், ஆகமத்தை நிலவுலகில் நெறிப்பட வழங்குவித்தமை அருளியவாறு.

21-22. 'நந்தம் பாடி' என்பது, சாத்தங்குடி, கொற்றங்குடி முதலியனபோல, 'நந்தன் பாடி' என்பதன் மரூஉவாதல் வேண்டும். பின்னர், 'வேலம் புத்தூர்' என வருவதும், அன்னது; இப்பெயருடைய தலம் இஞ்ஞான்று அறியப்படாமையின், இதன்கண் இறைவன் நான்கு வேதங்களையும் முற்ற ஓதிஉணர்ந்த வேதிய வடிவத்துடன், அவ்வேதங்களைச் செவ்வனே ஓதுவித்துப் பொருள் உணர்த்தும் ஆசிரியனாய் எழுந்தருளிய வரலாறும் அறியப்படவில்லை. இறைவன் மதுரையில் வேதத்துக்குப் பொருள் அருளிச்செய்த ஒரு திருவிளையாடல், பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணத்திற் காணப்படுகின்றது. இது, வேதத்தை விளங்கச் செய்தமை அருளியவாறு.

23-26. "இயற்கை" என்றது, செயலை. நூறுநூறாயிரம்-கோடி; இஃது அளவின்மை குறித்து நின்றது. "இயல்பினது" என்றது, பன்மை ஒருமை மயக்கம். "இயல்பினவாகி" என்பதே பாடம் எனல் சிறப்பு. "ஆகி" என்றதன்பின், 'நிற்ப' என்பதும், "உய்ய" என்றதன்பின், 'கொள்ள' என்பதும் எஞ்சிநின்றன.

"சொன்ன ஆகமம்" என்பது முதலாக இதுகாறும் வந்தவற்றுள் உள்ள, 'தோற்றுவித்தருளியும், எய்தியும், விளைத்தும், படிந்தும், வாங்கியும், பணித்தருளியும், அமர்ந்தருளியும், இயல்பினதாகிநிற்ப, உய்யக்கொள்ள' என வந்த வினையெச்சங்கள், "வந்தருளி" என்ற எச்சத்தோடே முடிந்தன. ஆகவே, "வந்தருளி" என்றது, 'இங்ஙனம் வந்தருளி' என மேற்போந்த செயல்களையே குறித்ததாயிற்று. அவை அனைத்திலும் இறைவன் அம்மையோடு உடனாய் நின்றமை யறிக. "தோற்றுவித்தருளியும்" என்றது முதலாக உம்மை கொடுத்து அருளிச்செய்து, "வந்தருளி" என வாளா அருளினமையின் அவ்வெச்சங்கள் இவ்விடத்து முடிந்து நிற்கப் படுபொருளே பொருளாம் என்பது விளங்கும். ஆகவே, இவை மிகப் பழைய வரலாறுகள் என்பது உணரப்படும். அதனால், இதன்பின், 'பின்னர்' என வேறெடுத்துக்கொண்டு உரைக்கப்படும்.

27-28. இறுமுதலாகப் பாண்டியன் பொருட்டுச் செய்யப்பட்ட அருள்விளையாடலை அருளுகின்றார். குடநாடு - மேற்கே உள்ள நாடு; என்றது, பாண்டியன் நாட்டினையே. அதனை இங்ஙனங் கூறியது. திருப்பெருந்துறையிலிருந்து வருபவர்போல வந்தமையைக் குறித்தற்கு. சதுர்பட - திறமை தோன்ற. திறமை - குதிரையை நடத்துதற்கண் உள்ளது. சாத்து - வணிகக் கூட்டம். இறைவன், அடிகள் பொருட்டுச் சிவகணங்களைக் குதிரை வாணிகர்களாகக் கொண்டு, தான் அவர்கட்குத் தலைவனாய் நெடுந்தொலைவிலிருந்து காணப்பட்டு வந்து மதுரையில் பாண்டியனிடம் பல குதிரைகளைக் கொடுத்துச் சென்ற வரலாறு பலவிடங்களிலும் சொல்லப்படுவதே. "எழுந்தருளியும்" எனச் சுருங்க அருளினாராயினும், பின் வருவனவற்றோடு இயையுமாறு, 'எழுந்தருளிய அருளும்' என உரைக்க.

29-30. வேலம் புத்தூர், 'வேலன் புத்தூர்' என்பதன் மரூஉ முடிபு. இப்பெயர், முருகக்கடவுளோடு இதற்கு உள்ள தொடர்பு பற்றி வந்ததாகலாம். 'வேலம் புத்தூரின்கண்' என ஏழாவது விரிக்க. விட்டேறு. வேற்படை. "பொரு வேடற்கு" எனப் பின்னர் வருகின்ற குறிப்பு, இதற்கும் பொருந்துவதாம். ஆகவே, இத் தலத்தில் வேல் வல்ல வீரன் ஒருவனுக்கு இறைவன் வேற்படை வழங்கி அவன் வாயிலாகப் பாண்டியனுக்கு வெற்றியுண்டாகச் செய்தனன் என்பது பெறுதும். இவ்வாறன்றி இதனைத் திருவிளையாடற் புராணங்கள் கூறும் உக்கிரகுமார பாண்டியர் வரலாற்றோடு இயைத்துரைத்தற்கு, அடிகள் வாக்கில் காணப்படுவதொரு குறிப்பும் இல்லை.

கோலம் பொலிவு - தனது அருட்கோலம் விளங்குதல். சொற்பொருள் இவ்வாறாயினும், 'பொலிதலை யுடைய கோலத்தைக் காட்டிய' என்பதே கருத்தாகக் கொள்க. கொள்கை, விளைவு முதலியனவாக இங்கு வருவன பலவும், செயலையே குறிப்பன என்க.

31-32. 'கண்ணாடி' என்னும் பொருளதாகிய, 'தார்ப்பணம்' என்னும் ஆரியச்சொல், 'தற்பணம்' எனத் திரிந்து நின்றது. குறிற்கீழ் ரகாரத்தை உடைய ஆரியச்சொல் தமிழில் வருங்கால், அதன்மேல் உகரம் பெற்று, 'தருப்பணம்' என்றாற் போல வருதலே பெரும்பான்மையாயினும், அம்மெய்யெழுத்து,

பின்னர் வல்லொற்றோடு கூடி ஈரொற்றாய் நிற்கும் இடங்களில், தமிழில், செய்யுளில், ஏற்குமிடத்தில் வல்லின நகரமாய்த் திரிந்து, 'தற்பணம்' என்றாற்போல ஓரொற்றாய் நிற்றலும் பலவிடங்களிற் காணப்படுவதாம். இங்கு, "விற்பொரு வேடற்கு" என்ற எதுகையையும் நோக்குக. இவ்வாறன்றி ஆரியத்தில் உள்ளவாறே 'தர்ப்பணம்' என ஓதுதல் கூடாமை யறிக. 'சாத்தம் புத்தூர்' என்பதே பாடமாதல் வேண்டும். இப்பெயர், அரிகர புத்திரராகிய மாசாத்தனாரோடு இத்தலத்திற்கு உண்டாகிய தொடர்பு பற்றி வந்ததாகலாம். வேடன் - மறவன். பொருவேடன் — போர் புரியும் மறவன்; வீரன். 'இவனுக்கு வில் ஈந்த விளைவும்' என்க. வேலம் புத்தூரில் வேல் வீரன் ஒருவனுக்கு நேரே தோன்றி வேல் கொடுத்தருளியது போல, சாத்தம் புத்தூரில் வில்வீரன் ஒருவனுக்குக் கண்ணாடியில் தீட்டப்பெற்றிருந்த வண்ண ஓவியத்தில் நின்று இறைவன் வில் வழங்கினான் என்பது பெறுதும். 'வில்' எனினும், அம்புப் புட்டிலும் உடன் கொள்ளப்படுவதேயாம். இவனாலும் பிறிதொருகால் இறைவன் பாண்டிய மன்னனுக்கு வெற்றியுண்டாகச் செய்தான் என்க. இவையெல்லாம் பிற்காலத்தில், யானை எய்த திருவிளையாடல், நாகம் எய்த திருவிளையாடல் முதலியவற்றில் சிறிது சிறிது இயைபுபட்டுத் தோன்றுவவாயின.

33-34. மொக்கணி - குதிரை வாயில் கொள்ளுக் கட்டும் பை. அருணகிரிநாதரும், "சற்கரை மொக்கிய (கந்தர் அலங்காரம் - காப்புச் செய்யுள்.) என, வாய் நிறைய இட்டுக் குதட்டுதலை, 'மொக்குதல்' என்றார். 'தழல்போலும் மேனி' என்க. சொக்கு - அழகு; அது, விடாத ஆகுபெயராய், சொக்கலிங்க மூர்த்தியைக் குறித்தது. காட்டுதல் - தெளிவித்தல். 'குதிரை வாணிகனாய் வந்த கோலத்தைச் சொக்கலிங்கத்தின்கண் உளதாகப் பின்பு பாண்டியனுக்குத் தெளிவித்த பழைமையும்' என்றபடி. பழைமை - பழைய தொடர்பான செயல். எனவே, 'இவை யெல்லாம் நம்மாட்டு உள்ள கருணையால் சிவபெருமானே செய்தருளினான்' எனப் பாண்டியன் பின்னர் உணர்ந்து வியந்து, அப்பெருமான்பால் அன்பு மீதூரப் பெற்றான் என்க. இவ்வாற்றால் வேலம்புத்தூர் முதலிய தலங்களும், பாண்டியன் நாட்டின்கண் உள்ளனவாதல் பெறப்பட்டது. முதற்கண் குறித்த குதிரை வாணிகனாய் வந்தது

ஒன்றையே இங்கு மீள எடுத்தோதினராயினும், ஏனைய அருள் விளையாடல்களும் கொள்ளப்படும். இனி, "மொக்கணி" என்றதற்குப் பிறிது உரைப்பாரும் உளர். இதுகாறும் பாண்டியனுக்கு அருள்புரிந்தமை அருளியவாறு. இனித் தமக்கு அருள் செய்தவாற்றைக் கூறுவார்.

35-36. இறைவன் அடிகள் பொருட்டு நரிகளைக் குதிரைகளாக்கிக் கொணர்ந்த வரலாறு நன்கறியப்பட்டது. இது மேல், சாத்தாய் எழுந்தருளியது எனக் குறிக்கப்பட்டதின் வேறன்றாயினும் அங்குப் பாண்டியன்முன் வந்து தோன்றிய திருவருளையும், இங்குத் தம்மைக் காக்க நினைந்து செய்த திருவருளையும் குறித்தற்கு வேறுவேறாக அருளிச் செய்தார் என்க.

37-41. இங்கும், "திருவடி" என்றது, 'அதனை யுடையவன்' என்றே பொருள்தந்தது. 'விற்று' எனின், அகவலடி இனிது நிரம்பாமையின் 'விற்றும்' என்பதே பாடம்போலும். ஈண்டு கனகம் - மிகுந்த பொன். இசையப்பெறாது - நேர்தல் பெருமையால். தூண்டு சோதி - மிக்க ஒளிவடிவினனாகிய அவ்விறைவன். தோற்றியது, பாண்டியன்முன் தோன்றி அடிகள் கொணர்ந்த பொன்னை எல்லாம் தானே ஏற்றுக்கொண்டமையை உணர்த்தி, அவரைத் தம் விருப்பப்படி செல்லுமாறு விடப்பணித்தது என்க. இதனையும், "தொன்மை" என்றார், முன்பு ஆண்ட கருணையை விடாது செய்தமை பற்றி. 'என்னை ஆண்டுகொண்டருளுதற் பொருட்டுப் பரிமாவிற்றும் கனகம் ஈடுசெய்யப் பெருமையால் வருந்தி யான் அருள்வழி இருப்ப, அவன் தோற்றிய தொன்மையும்' என்க. இசையப்பெருமை குதிரைகள் நரிகள் ஆனமையாலாம். குதிரைகள் பின்பு நரிகளாயின என்பது, 'நரியைக் குதிரை யாக்கிய நன்மையும்' என மேலே கூறியதனால் அறியப்பட்டது. என்னை, அவை அங்ஙனம் ஆகாதிருப்பின், நரியைக் குதிரையாக்கியது அறியப்படுமாறில்லையாகலின், "நரியைக் குதிரை ஆக்கிய நன்மையும்" என ஈண்டு அடிகள் அருளிச்செய்தவாற்றால், அன்னதொரு திருவிளையாடல் நிகழ்ந்ததில்லை என்பாரது கூற்றுப் பொருந்தாமை விளங்கும்.

42-43. "அருளி" என்றது, 'அருளினவன்' எனப் பெயராயிற்று. 'இவ்வாறெல்லாம் இந்திர ஞாலங் காட்டிய' என்க.

'சாலம்' என்றுகற்பாலது, 'ஞாலம்' என்றுயிற்று. இந்திர சாலம் - பெரிய மாயவித்தை. அஃது, அதுபோலும் பல அருள் விளையாடல்களைக் குறித்தது.

44-45. மதுரையில் குதிரைச் சேவகனுய் வந்தது, 'சௌந்தர சாமந்தன்' என்னும் அமைச்சன் பொருட்டு எனப் பரஞ்சோதியார் திருவிளையாடல் கூறும்.

46-47. "ஆங்கது" என்றது ஒருசொல் நீர்மைத்து. 'அடியவள். வந்தியென்னும் பெயருடையாள்' எனக் கூறப்படு வதும் அவள் பொருட்டாக இறைவன் மண் சுமந்த வரலாறும் பலரும் அறிந்தவை. பாங்கு - செம்மை. செம்மையாய் மண் சுமந்தது, வந்தியின் பங்குக் கரையை நன்கு அடைத்தே சென்றது.

48-49. வித்தக வேடம் - ஞானசிரியக் கோலம். தாண்டு சோதி (இறைவன்) தோற்றியபின்னர், அடிகள் தம் விருப்பின் வழியே மீளத் திருப்பெருந்துறை செல்லுங்கால், வழியில் உத்தரகோச மங்கையில், 'இறைவன் இதுகாறும் திருப்பெருந் துறையுள் முன்போல இருந்து நம்மை ஏற்றருள்வானே! ஏலாது விட்டுவிடுவானே' என்னும் ஏக்கத்தால், நீத்தல் விண்ணப்பம் பாடி நின்றபொழுது இறைவன் அடிகளை ஆட் கொண்ட அவ்வடிவிலே தோன்றி, 'திருப்பெருந்துறைக்கு வருக' என அருளினன் என்பது கொள்ளற்பாலதாம். என்னை? "திருவார் பெருந்துறை" என வருகின்ற அதற்கு முன்னரே இதனை அருளினமையின். இதனைப் பின்னர் நிகழ்ந்ததாகப் புராணங்கள் கூறும்.

50-51. தூ வண்ண மேனி, பொன்னல் அமைக்கப்பட்ட திருமேனி. "தொன்மை" என்றதனல், இதன் வரலாறு. பரஞ்சோதியார் திருவிளையாடலுட் சொல்லப்பட்டவாறே கொள்ளத்தக்கது. இத்திருமேனியை அடிகள் திருப்பூவணத்தில் கண்டு வணங்கி மகிழ்ந்தார் என்க.

52-53. திருப்பெருந்துறைக்குச் செல்லும் முன்பு அடிகள் தமது திருவவதாரத் தலமாகிய திருவாதவூரில் சென்று சின்னள் தங்கியிருந்தாராக, இறைவன் அவரைத் தனது பாதச் சிலம்பொலியைக் கேட்பித்து அங்குநின்றும் போதரச்செய்தான்

என்பது ஈண்டுப் பெறப்படுவதாகும். இங்ஙனம் போதரச் செய்த கருணைப் பெருக்கையே அடிகள், 'பண்பு' எனப்போற்றி யருளிச்செய்தார். இதனை, இறைவன் குதிரை கொணர்ந்த காலத்து நிகழ்ந்ததாக, நம்பி திருவிளையாடல் கூறும். "காட்டிய" என்றது, 'தோற்றுவித்த' என்றவாறு.

54-55. திருவார் பெருந்துறை - கடவுட்டன்மை நிறைந்த பெருந்துறையின்கண். செல்வன் - ஞான வள்ளல். ஆகி - ஆகிவீற்றிருந்து. "கருவார் சோதி" என்றது, 'இறைவன் வெளிப்படுதற்கும் மறைவதற்கும் இடமாய் நிற்கும் ஒளிப் பிழம்பு' என, அதன் தன்மை கூறியவாறு. சிலரை யொழித்துச் சிலரொடு மாத்திரம் மறைந்து, மீண்டும் வெளிப்படாதொழிந் தமை பற்றி, "கள்ளம்" என்றார். திருப்பெருந்துறையில் குருந்தமரத்தடியில் ஞானசிரியனாய் வீற்றிருந்த இறைவன், 'நீ தில்லைக்கு வருக' எனக் கட்டளையிட்டு, அவ்விடத்தே ஒளியைத் தோற்றுவித்து, அப்பொழுது அங்கிருந்த ஏனை அடியவர்களை அதனுட் புகச்செய்து, தானும் அதனுள் மறைந்தருளினான் என்க. பக்குவம் இன்மை நோக்கி இறைவன் சிலரை அப் பொழுது அங்கு இல்லாது நீங்கச்செய்தான்போலும்! இவ் வரலாற்றினைப் புராணங்கள் சிறிது வேறுபடக் கூறும்.

56-57. "பூ வலம்" என்றது, 'பூப்பிரதட்சிணம்' என்னும் பொருட்டாய், அடிகளது சிவ தல யாத்திரையைக் குறித் தது. 'இல்' என்பது, 'உண்ணுதற்கண் வந்தான்' என்பது போல, வினைசெய்யிடத்தின்கண் வந்த ஏழனுருபு. இஃது உணராமையால், இதனை ஒரு தலத்தின் பெயராக மயங்குப. இறைவன் தம்மை உடன்கொண்டு செல்லாது, 'தில்லைக்கு வருக' என்று சொல்லி மறைந்தது, தம் பாவத்தால் (வினை யால்) எனவும், அவை அவன் எழுந்தருளியுள்ள தலங்கள் பலவற்றிலும் சென்று வணங்கினமையால் கெட்டொழிந்தன எனவும் அடிகள் கருதினர் என்பது இவ்வடிகளால் விளங்கும். "பொலிந்தினிதருளி" என்றது, தலங்கள்தோறும் எழுந்தருளி யிருந்து திருவருள்செய்தமையை.

இத்துணையும், இறைவன் தமக்கு அருள்புரிந்தமையைக் கூறியவாறு. பின்னர்ப் பிற தலங்களுட் செய்தவற்றைக் கூறுவாராகலின், மதுரையில் நிகழ்ந்தவற்றை முடித்தற்கு,

குதிரைச் சேவகனாகியதனையும், மண் சுமந்ததனையும் இடையே பெய்துரைத்தார். இஃதுணராது, குதிரைச் சேவகன் ஆகியதை முன்னர் அடிகட்குச் செய்த அதுவாகவே கொண்டு உரைப் பாரும் உளர். அடியவட்காக மண்சுமந்த வரலாற்றை அடிகள் வரலாற்றோடு வலிதிற் பிணைத்தமையும், இவ்வாற்றால் விளைந் ததேயாம். இனி, ஏனையோர் பலர்க்கு ஆங்காங்கு அருள் புரிந்தமை கூறுவார்.

58-59. தண்ணீர்ப் பந்தர் வைத்தமை இன்ன இடத்து என்னாமையால், பின்னர் வரும், 'திருவெண்காடு' என்றே கொள்ளப்படும். அதனானே, சயம் (வெற்றி) பெறச் செய்தது, சோழனையாம். இதனைப் பாண்டியன் பொருட்டு மதுரையிற் செய்ததாகத் திருவிளையாடற் புராணங்கள் கூறும். நன்னீர் - நல்ல நீர்மை. 'சேவகன்' என்றது, தண்ணீரைத் தானே கொடுத்தமை பற்றி.

60-61. திருவெண்காட்டில் இறைவன் விருந்தினனாய் வந்து குருந்தமரத்தடியில் அமர்ந்திருந்த வரலாறு அறியப்பட வில்லை.

62-63. இவ்வடிகளிற் குறிக்கப்பட்ட வரலாற்றைத் திருவிளையாடற் புராணங்களிற் காண்க.

64-67. இவற்றுட் குறிக்கப்பட்ட இருவரலாறுகளையும் மதுரையில் நிகழ்ந்தனவாகத் திருவிளையாடற் புராணங்கள் கூறும். எனினும், பட்டமங்கையில் நிகழ்ந்தனவாதல் வேண்டும்.

68-69. பார்ப் பாலகன் - மண்ணுலகக் குழந்தை. இருமை - பெருமை; அஃது, அருமைமேல் நின்றது. "உகந் தினிதருளி" என்றதனால், முன்னர் விருத்தனாய் வந்து, பின்பு கட்டிளைஞனாய் நின்றமையும் கொள்ளப்படும். படவே, விருத்த குமார பாலரான திருவிளையாடலே இது என்றல் பொருந்துவ தாம்.

70. ஈண்ட - மக்கள் பலரும் திரண்டுவந்து காண. இங்ஙனம் இறைவன் இங்கு வீற்றிருந்த வரலாறு அறியப்பட வில்லை. எல்லாம் வல்ல சித்தரானது போல்வதொன்றாதல் வேண்டும்.

71-72. தென்பால் தீவு, இலங்கையேயாம். ஆகவே, "தேவூர்" என்றதனை அதற்கேற்பக் கொள்க. இராமேசுவரத் திற்கு, 'தேவை' என்னும் பெயர் தாயுமானவர் பாடலில் 'மலைவளர் காதலி' என்னும் பகுதியிற் காணப்படுகின்றது. கோவார் கோலம் - அரசத் தன்மை நிறைந்த வடிவம். "கொண்ட" என்றதனால், ஈழநாட்டில் அன்புடைய அரசன் ஒருவனுக்கு இறைவன் அரச வடிவத்தில் வந்து அரசியல் முறையை விளக்கி மறைந்தனன் என்று கொள்ளலாகும். இதுவே, திருவிளையாடற் புராணங்களில், சிவபெருமான் சௌந்தர பாண்டியனாய் இருந்து அரசளித்த வரலாறாக அமைந்தது.

73-74. ஞானம் நல்கியது அடியவர் பலர்க்காம். அத னானே, ஆரூர் அடியவர் திருக்கூட்டத்திற்கு இடமாயிற்று என்க.

75-76. ஈண்ட - அடியவர் புடைசூழ. படிமப் பாதம் - தவநெறி. வைத்த - நிலைநிறுத்திய. என்றது, 'தானே வழி பாடு செய்வோனாய் இருந்து வழிபட்டுக் காட்டிய தன்மை' என்றவாறு. திருவிடை மருதூர் இறைவன் தன்னைத் தானே பூசித்த தலமாதல் அறிக.

77-78. இயல்பாய் இருத்தல் - சுயம்பு லிங்கமாய் எழுந் தருளியிருத்தல். கச்சி ஏகம்பத்தில் அம்மையது தவத்திற்கு இரங்கி இறைவன் மாவடியில் சுயம்பு லிங்கமாய்த் தோன்றின மையைப் பெரிய புராணத்துட் சேக்கிழார் கூறினமை காண்க. பின்பு அம்மை செய்த வழிபாட்டின் பயனாக அவளை இறைவன் தனது இடப்பாகத்தில் இருத்திக்கொண்டனன் என்க.

79-80. மருவார் குழலி, உமையம்மை. அவளோடு மகிழ்ந்தது. அவளது வழிபாட்டினாலாம். அம்மை பூசித்த தலங் களாகச் சில தமிழ்நாட்டில் விளங்குதல் காண்க. இங்ஙனம் யாதானும் ஒரு சிறப்பு அம்மைக்கு உளதாய தலங்களில் மட்டுமே முதற்காலத்தில் அம்மைக்குத் தனிக்கோயில் இருந்த தென்பது, காஞ்சியில் காமக் கோட்டம் வேறோரிடத்தில் தனித் திருத்தலும், அங்குள்ள பல சிவாலயங்களுள் ஒன்றிலும் அம் மைக்குத் தனிக் கோயில் இல்லாமையும் பற்றி அறிந்துகொள் ளப்படும்.

81-82. சேவகன் - வீரன். சிலை - வில். இறைவன் வில் வீரனுய்த் தோன்றிச் செய்த வீரச் செயல்கள் பலவும் அவனுக்கு நாடகமாத்திரையாய் அமைதலின், அவற்றை, "பாவகம்' என்றுர். இங்ஙனம் காட்டிய திருவிளையாடல் திருவிளையாடற் புராணங்களிற் காணப்படும். ஆயினும், அதனைத் திருவாஞ்சியத்தில் நிகழ்ந்தது எனக் கொள்க. இத்துணையும் ஆங்காங்கு அடியவர் பலர்க்கு அருளினமை கூறியவாறு. இனி, தலங்கள் பலவற்றில் இறைவன் எழுந்தருளியிருக்கும் திறத்தினையே கூறுவர்.

தானெழுந்தருளியும் என்பது முதலாக இதுகாறும் உம்மை கொடுத்து எண்ணிவந்தவைகள் அனைத்தையும், 'ஆகிய இவையெல்லாம் எந்தமை யாண்ட பரிசுகளாம்' எனப் பின்வரும் நூற்றிரண்டாம் அடியுடன் தொகுத்து முடிக்க.

83-91. இடம்பெற - நீங்காது விளங்க. ஈங்கோய் மலையில் உள்ள பெருமான் மரகத வடிவில் அழகுடன் விளங்குதல் காண்க. 'சைவன்' என்பதும், 'சிவன்' என்னும் பொருளதேயாம். இதற்கு வரலாறு ஒன்றனைக் கூறுவர் பலரும், 'அருத்தி' என்பதும், விருப்பமே. வழுக்காது - நீங்காது. அறம்பல அருளியும் என்றது, ஆல்நிழற் கடவுளாய் வீற்றிருத்தலை. குறியாய் - குறியாக; அத்தலத்தில் இருத்தலே குறிக்கோளாக.

92-96. இவ்வடிகளில், இறைவன் தேவர்கள் முன்னே செய்த ஒரு திருவிளையாடல் குறிக்கப்படுகின்றது. அதுவருமாறு;- தேவர் பலரும் கூடி ஒருகால் அசுரரை வென்று பெருமிதம் கொண்டகாலை, மால், அயன், இந்திரன், அக்கினி, வாயு முதலிய பலரும், 'வெற்றி என்னுல் விளைந்ததே' எனத் தனித்தனியே ஒவ்வொருவரும் கூறித் தம்முட் கலாய்த்தனர். அவ்விடத்தில் சிவபெருமான் அளவற்ற பேரழகுடன் ஓர் யட்சனுய்த்தோன்றி ஓரிடத்தில் துரும்பு ஒன்றை நட்டு, அதன் அருகில் இறுமாந்து அமர்ந்திருந்தார். அவ்யட்சனை இன்னுன் என்று அறியாத தேவர்கள், 'நீ யார்? உனக்கு இத்துணை இறுமாப்பிற்குக் காரணம் என்னை?' என்று வினவினர். சிவபெருமான், 'நான் யாராயினும் ஆகுக; உங்களில் யாரேனும் இத்துரும்பை அசைத்தல் கூடுமோ?' என்று வினவினுர். தேவர்கள் அவரது

வினவைக் கேட்டு நகைத்து அத் துரும்பை அசைக்க முயன் றனர். அஃது இயலவில்லை. இந்திரன் வச்சிராயுதத்தால் வெட்டியபொழுது, வச்சிராயுதமே கூர்மழுங்கிற்று. அக்கினி தேவன் அத் துரும்பை எரிக்க முயன்றான்; வாயுதேவன் அசைக்க முயன்றான்; பிறரும் வேறு வேறு முயன்றனர். ஒருவராலும் அத் துரும்பை ஒன்றும் செய்ய இயலவில்லை. அதனால், தேவர் பலரும் நாணமுற்றிருக்கையில் பெருமான் மறைந்தருளினான். 'வந்தவன் யாவன்!' என்று தேவர்கள் திகைத்தனர். அப்பொழுது அவர்கள்முன் அம்பிகை வெளிப் பட்டு நின்று, 'வந்தவர் சிவபெருமானே' என்பதை அறிவித்து, 'ஒரு துரும்பை அசைக்கமாட்டாத நீங்களோ அசுரரை வென் றீர்கள்; உங்களுக்கு வெற்றியைத் தந்தவன் சிவபெருமானே' எனக் கூறி மறைந்தாள். அதனால் தேவர்கள், 'அவனன்றி ஓர் அணுவும் அசையாது' என்று உணர்ந்து தம் செருக்கு நீங்கினர். இது, கேனோபநிடதத்துச் சொல்லப்பட்டது. இதனைக் காஞ்சிப் புராணம் விரித்துக் கூறும். இவ் வரலாற் றையே இங்கு அடிகள் அருளியிருத்தலை, ஊன்றி நோக்கி உணர்க. "சுந்தர வேடம்" என்றது, அழகிய யட்ச வடி வத்தை, முதல் உருவு - தலைவன் வடிவம். இந்திர ஞாலம் போல வந்தது, தேவர் வியப்பப் பொருக்கெனத் தோன்றின மையாம். எவ்வெவர் தன்மையும் தன்வயிற் படுத்தமை, எல்லாத் தேவர்களது ஆற்றலும் தன்முன் மடங்கச்செய்தமை. தானேயாகியது, அனைத்திற்கும் முதல்வன் தானேயாதலை விளக்கினமை. இவ் வரலாற்றை இங்கு எடுத்தோதியது, அடுத்து வரும் திருவிளையாடல் இதனோடு ஒத்திருத்தல் பற்றி யாம். ஆகவே, இஃது உடம்பொடு புணர்த்தலாயிற்று.

97-99. சந்திர தீபம், ஒரு தலம். அன்றி, 'ஒரு தீவு' என்றலுமாம். சாத்திரன் - ஞானநூற் பொருளை யுணர்த்து வோன். 'அந்தரத்தினின்றும் இழிந்து வந்து' என்க. பாலை, ஒரு மரம். அது தழையிலது ஆயினும், இறைவன் அமர்ந்திருந் தமையின் அழகுடையதாயிற்று. "பாலையுள்" என்றதில் 'உள்' என்பது, 'கீழ்' என்னும் பொருளது. சுந்தரத் தன்மை- அழகிய வடிவம். துதைந்து - நீங்காது பொருந்தி. இன்ன தொரு வரலாறு இங்குக் குறிக்கப்பட்டது என்க.

100-102 ஆகமங்களையே, 'மந்திரம்' என்றார். மகேந்திர மலைபற்றி மேலே (பக். 35.) கூறப்பட்டது. "எந்தமை" என்றது, தம்மையும், பிற அடியார்களையுமாம். பரிசு - தன்மை; திருவருட் செயல்கள்.

'மகேந்திர வெற்பனுகிய அவ் வருளுடையண்ணல் (100, 101.). இருந்தும் (83), காட்டியும் (84), ...துறைதந்திருந் தருளியும் (99) எந்தமை ஆண்ட பரிசது பகரின்' என்க. இவைகளால் இறைவனது திருவருட் செயல்களைச் சிறப்பு வகையிற் பல்லாற்ருனும் அருளிச்செய்தவாறு. இனி, 'பரிசது பகரின்' எனத் தொடங்கித் தசாங்கம் கூறுகின்ருர்.

தசாங்கம் - பத்து உறுப்பு. அரசர்க்குரிய சிறப்புப் பொருள்களே, இங்கு, 'உறுப்பு' எனப்படுகின்றது. அவை இங்கு, 'கொடி, யாறு, முரசு, படைக்கலம், மாலை, ஊர்தி, நாடு, ஊர், பெயர், மலை' என்னும் முறையிற் கூறப்படுகின்றன. இவை, "படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண்" (குறள் 381.) என்ற முறையானன்றி, வேருருவகையாற் கூறப்படுவன. இவைபற்றி அரசர்கள்மீது அகலக் கவிகளை இயற்றும் வழக்கம் பிற்காலத்திற் சிறந்து விளங்கியது. அதனால், அடிகள் இறைவனை அவ்வாற்ருற் பாடுகின்ருர்.

103-104. 'திருவுருவில் உள்ள' என்க. நீறு - திருநீறு. கொடி, 'கோடி' என நீண்டது. 'கொடீஇ' என்பதொரு பாடமும் உண்டு. பின்னர் வரும் 'தசாங்கம்' என்னும் பகுதியுள் கூறப்படுவனவற்ரோடு இங்குக் கூறப்படுவன சிறிது வேறு படும். அங்ஙனம் படும் இடங்களில், இரண்டும் கொள்ளற் பாலனவாம். அவ்வாற்ருல் இங்குத் திருநீற்றுக் கொடி கூறப் பட்டது; அங்கு ஏற்றுக் கொடி கூறுப. திருவுருவில் உள்ள திரு நீற்றின் முக்குறித் தொகுதிபோல எழுதப்பட்ட வடிவத்தை, "திருவுரு நீறு" என்று அருளினுர். "நிமிர்ந்து" என்றதனை, 'நிமிர' எனத் திரிக்க. நிமிர்தல் - உயர்தல்.

இவற்ருல், 'இறைவனுக்கு, திருநீறே கொடி' என்பது. கூறப்பட்டது. இக்கொடி ஞானுசிரியனுய் இருக்கும் நிலையிலாம்

105-106. ஊனம் - குறைகள்; துன்பங்கள். ஒருங்கு - ஒருசேர. உடன் - விரைவாக. 'துன்பங்கள் அனைத்தையும்

வாராது ஒருசேர நீக்கும் ஆனந்தம்' என்றதனால், அது பேரின்பமாயிற்று.

இவற்றால், 'இறைவனுக்குப் பேரின்பமே **யாறு**' என்பது கூறப்பட்டது. எதுகை நயத்தை நோக்கும்வழி, 'ஊனந் தம்மை' என்பதே பாடம்போலும் எனலாம்.

107-108. மாதிற் கூறுடை - உமையிடத்தில் ஒரு கூற்றை உடைய. நாதம் - சூக்குமை வாக்கு. இதுவே, வேதம் முதலிய நூல்கட்கெல்லாம் பிறப்பிடமாகலின், இறைவனுக்குச் சிறந்த பறையாயிற்று. "பறை" என்றது, முரசினை. நவின்று - தொடர்ந்து. கறங்கவும் என்பதற்கு, 'ஒலிக்கச்செய்தும்' என உரைக்க.

இவற்றால், 'இறைவனுக்குச் சூக்குமை வாக்கே **முரசு**' என்பது கூறப்பட்டது.

109-110. அழுக்கு - குற்றம்; வினை; என்றது ஆகாமியத்தை. கழுக்கடை - முத்தலை வேல்; சூலம்.

இவற்றால், 'இறைவனுக்குச் சூலமே **படைக்கலம்**' என்பது கூறப்பட்டது.

111-114. மூலம், பிறவிக்கு என்க. 'அறுக்கும் சோதி, தூய மேனிச் சோதி' எனத் தனித்தனி இயையும். சோதி, இறைவன். காதலன் - பேரன்பன்; அருளாளன்; என்றது ஞானாசிரியனை. கழுநீர் - செங்கழுநீர்ப் பூ. ஏல் - ஏற்பு; முதனிலைத் தொழிற்பெயர்.

இவற்றால், 'இறைவனுக்குச் செங்கழுநீர் மாலையே **மாலை**' என்பது கூறப்பட்டது. இதுவும், ஞானாசிரியக் கோலத்தில் என்க.

115-116. பரிமா - குதிரை. "வண்ணமும்" என்றாரேனும், 'வண்ணனாகியும்' என உரைக்க.

இவற்றால், 'இறைவனுக்குக் குதிரையே **ஊர்தி**' என்பது கூறப்பட்டது. இஃது அடிகள் தாம் கண்ட காட்சி பற்றிக் கூறியதாம்.

117-118. மீண்டு வாரா வழி - மறித்துப் பிறப்பில் வாராத நெறி ; வீட்டு நெறி. "மற்றீண்டு வாரா நெறி" என்னும் திருக்குறளை (356.) நோக்குக. "பதி" என்றது நாட்டினை. இது முதலாக நான்கிடத்தும், 'ஆகவும்' என்பதற்கு, 'ஆகக் கொண்டும்' என உரைக்க.

இவற்றால், 'இறைவனுக்குப் பாண்டிநாடே நாடு' என்பது கூறப்பட்டது. இதுவும், இறைவன் தம் பொருட்டுக் குதிரை வாணிகனாய் வந்தது முதலிய பெருங்கருணைத்திறம் பற்றிக் கூறியதாம்.

119-120. பரம்பரம் - மேலுள்ளதற்கு மேலுள்ளது ; பரமுத்தி நிலை. "அப்பாலைக் கப்பாலைப் பாடுதும்" என்பர் திருவம்மானையிலும் (11.). உய்ப்பவன் - செலுத்துபவன்.

இவற்றால், 'இறைவனுக்கு உத்தரகோச மங்கையே ஊர்' என்பது கூறப்பட்டது. இதன்கண் அடிகளுக்கு இறைவன் மீள ஞானாசிரியனாய் வெளிப்பட்டு அபயம் அளித்தமை மேலே (பக். 47.) காட்டப்பட்டது.

121-122. ஆதி மூர்த்திகள் - மும்மூர்த்திகள். இவர்களுக்குப் பரமசிவன் வெளிப்பட்டுத் தோன்றி, படைத்தல் முதலிய முத்தொழிலையும் இயற்றும் நிலையை வழங்கியதனையே, "அருள்புரிந்தருளிய" என்றார். "ஆதி மூர்த்திகட்கு அருள் புரிந்தருளிய" என்றது, 'தேவ தேவன்' என்னும் பெயர்க் காரணத்தை விளக்கியவாறு. 'தேவ தேவன்' என்பது, 'தேவர்கட்குத் தேவன்' எனப் பொருள்படும். 'மகாதேவன்' என்பதும் இப்பொருளது. 'தேவ தேவன், அதுவே திருப்பெயராகக் கொண்டும்' என்க.

123 124. இங்கு, 'ஊர்தி' என்றது, மீதூர்ந்து ஓடுவதாகிய யாற்றைக் குறித்தது. "ஊனந் தன்னை ஒருங்குடன் அறுக்கும் ஆனந்தம்" என மேற் கூறியதனையே, இங்கு, "இருள்கடிந் தருளிய இன்பம்" என்றார். எனவே, 'அப்பேரின்ப மாகிய யாற்றை உண்டாக்கிய பெருமையை யுடைய அருளையே மலையாகக் கொண்டும்' என்பது பொருளாயிற்று.

இவற்றால், 'இறைவனுக்கு அவனது திருவருளே மலை' என்பது கூறப்பட்டது. இங்ஙனம் கொடி முதலாக, மலை ஈருகப் பத்து உறுப்புக்களும் கூறப்பட்டமை காண்க.

125-126. "அப்பரிசதனால்" என்றதை, "எப்பெருந் தன்மையும்" என்றதற்கு முன்னர் வைத்து, இங்ஙனம், 'இத் தசாங்கங்களைக் கொண்டு விளங்கும் தன்மையாலே' என உரைக்க. தன்மை, இயற்கையும் செயற்கையுமாகிய நிலைகள். திறம், ஆற்றல். 'உலக வேந்தர்கள் பத்து உறுப்புக்களோடும் கூடி நிற்றலால், எத்தகையோரையும் தம் ஆணைவழிப்படுத்து ஆளுதல்போல, ஞான வேந்தனாகிய இறைவன் எத்தகையோ ரையும் தன் அருள்வழிப்படுத்து ஆட்கொள்கின்றான்' என்ற படி. அதற்கு, அமைச்சராய் இருந்து ஆளான அடிகளே சான்றாவர். அத்தகையோரான மற்றும் பல அடியார்களை அடிகள் திருப்பெருந்துறையில் கண்டனர் என்பது, பின்வரும் அடிகளால் விளங்கும்.

127-131. "என்னை" என்றதனை முதலில் வைத்து, 'என் ஐ' எனப் பிரித்துப் பொருள் உரைக்க. 'ஏற்ப' என் பது, பகரவுகரம் தொக, 'ஏல' என நின்றது. 'என் வினைக் கேற்ப' என்றவாறு. இதனை, "நாயினேனை" என்றதன் பின்னர்க் கூட்டுக. கோலம் - அழகு. பொது - சபை; அம்பலம். ஈங்கு - இவ்வுலகத்தில். உடன் சென்றது, சோதி யிற் கலந்து என்க. அருள்பெறும் - திருவருளை முற்றப்பெறும் தகுதியுடைய. ஒன்ற - தன்னோடு ஒன்றுபட. 'அஃதாவது, பிறிதொன்றனையும் அறியாது தன்னையே அறிந்துநிற்க' என்ற படி. இதுவே, 'ஞாதுரு ஞான ஞேயங்கள் அற்ற நிலை, பேச்சற்ற நிலை' என்றெல்லாம் சொல்லப்படுவது. எனவே, பரமுத்தி நிலை என்பது பெறப்பட்டது. "ஒன்ற ஒன்ற" என்ற அடுக்கு, பன்மை பற்றி வந்தது. "உடன் கலந்தருளி" என்றதற்கு, 'அவர்களோடு தானும் நீக்கமின்றிக் கலந்தும்' என்க. இது, தானும் சோதியிற் கரந்ததைக் குறித்தவாறு. இஃது, அவர்கட்குப் 'போகமாய்த் தான் விளையும் பொற்பி'னைக் (சிவஞான போதம் - சூ. 12. அதி. 1.) குறித்ததாம். "கலந் தருளியும்" என்றது 'கலந்தருளிய பின்னும்' என்னும் பொருட்டு; உம்மை, எதிரது தழுவிய எச்சம்; என்னை? பின் வரும், 'பாயவும்" என்பது முதலியவற்றைத் தழுவி நிற்றலின்.

132-139. எய்த - சோதியிற் கலத்தல் தமக்குக் கிடைக்கும்படி. வந்திலாதார் - ஆண்டு விரைந்துவாராதவர். மால் - பித்து. மயக்கம் - மூர்ச்சை. " புரண்டு வீழ்ந்து " என்றதனை, ' வீழ்ந்து புரண்டு ' என மாற்றிக்கொள்க. " மண்டி, அரற்றி " என்றவற்றின் பின்னரும், எண்ணும்மை விரிக்க. இறைவன் தோற்றுவித்த சோதியிற் கலக்கும் பேறில்லாதவர்கள், தீப் பாய்தல் முதலிய பலவாற்றால் அவன் திருவடியை அடைந்தனர் ; அது மாட்டாதார், உலக இன்பத்திலும் வெறுப்புடையராய் ஏக்கமுற்றனர் என்க.

பரம நாடகம் - மேலான கூத்து. இதம் - இன்பம் ; இஃது உலகின்பத்தைக் குறித்தது. சலிப்பு - வெறுப்பு.

140-146. ' ஒலிதரு கயிலை உயர்கிழவோன் " என்றதை முதலிற் கூட்டுக. இமயத்து இயல்பு, பொன்மயமாய் நிற்றல். ' அம்பொற் பொது ' எனவும், ' நடம் நவில் இறைவன் ' எனவும் இயையும். புலியூர் - பெரும்பற்றப்புலியூர் ; தில்லை. " கனி தரு " என்றதில் உள்ள தரு, உவம உருபு. உமைக்கு அருளிய நகை மகிழ்வு நகை எனவும், காளிக்கு அருளிய நகை வெகுளி நகை எனவும் கொள்க. இவற்றால் முறையே, அளியும், தெறலும் அருளப்பட்டன. காளிக்கு நகை அருளியது நடனப் போரிலாம். ஈண்டிய அடியவர், திருப்பெருந்துறையிற் பல்லாற்றானும் தன்னை யடைந்து திரண்ட அடியவர். " புக்கினி தருளினன் " என்றதை, 'இனிது புக்கருளினன்' என மாற்றியுரைக்க. ஒலி, அரவொலி. ஆகம ஒலி அறிவார் அறி தோத்திர ஒலி முதலியன. (திருமுறை. 7-100-8.). ' கயிலையின்கண் உள்ள உயர்ந்த கிழவோன் ' என்க. கிழவோன் - எல்லாப் பொருளையும் தனக்கு உரிமையாக உடையவன். ' கயிலையில் உள்ளவனாயினும் புலியூரில் நடம் நவில் இறைவன் ஆதலின், புலியூர் புக்கருளினன் ' என்றபடி. இங்ஙனமே திருநாவுக்கரசரும், புக்க திருத்தாண்டகத்தில், சிவபெருமான் பல்வேறு தலங்களிற் காணப்படினும், புலியூர்ச்சிற்றம்பலமே புக்கதாக அருளிச்செய்தல் காண்க. அன்றித் தம்மை, 'கோலமார்தரு பொதுவினில் வருக' என்று அருளிப்போயினமை பற்றிக் கூறினர் என்றலுமாம்.

இனி இத்திருவகவலில், ' தில்லை மூதூரில் ஆடிய திருவடியையுடையான், பல்லுயிர்களிலும் பயின்றேனாகித் தனது எண்ணில்லாத பல குணங்களும் எழுச்சிபெறுமாறு விளங்கிநின்று,

தோற்றல், அழித்தல் முதலியவற்றால் உயிர்களது அகவிருளை முற்றும் நீக்கி, அவைகளது உள்ளத்தில் அன்பு மீதூரும்படி அவ்வுள்ளங்களையே குடியாக்கொண்ட செயல்களும், அவற்றின் மேன்மைகளும் யாவையெனின், ஆகமம் தோற்றுவித்தருளியும் .... ஆரியனாய் அமர்ந்தருளியும் இவ்வாறு மங்கையும் தானுமாய் வந்தருளி, அதன்பின், சாத்தாய்த் தானெழுந்தருளியது முதலாகப் பாவகம் பலபல காட்டிய பரிசு ஈறாக உள்ளனவாம். இனி அவற்றின்மேலும், கடம்பூர் முதலாகச் சந்திரதீபம் ஈறாகக் கூறிய தலங்களில் கோயில்கொண்டிருந்து, மகேந்திர வெற்பனாகிய அவ்வண்ணல் எங்களை ஆட்கொண்ட தன்மையை விளங்கக் கூறுமிடத்து, திருநீறாகிய கொடி முதலாகவும், திருவருளாகிய மலை யீறாகவும் உள்ள பத்து உறுப்புக்களையும் கொண்டு நின்று, எத்தகையோரையும் தனது திருவருளின் வழிப்படுத்து ஆண்டுகொண்டு, அவர்களில் நாயினேனை, என் வினையிருந்தவாற்றிற்கு ஏற்ப, 'தில்லையில் வருக' எனப் பணித்துவிட்டுத் தகுதி மிக்க அடியார்களோடு தான் திருவுருக் கரந்தருளிய பின்னும், அப் பேறில்லாதவருட் சிலர் எரியிற் பாய்தல் முதலியவற்றால் தனது திருவடியை அடையவும், அவை மாட்டாதார் ஏக்கமுற்று நிற்கவும், கயிலை உயர்கிழவோனாகிய புலியூர்ப் பொதுவினில் நடம் நவிலும் அவ்விறைவன், அவ்விடத்து மீள வெளிப்படாதே, தன்னை அடைந்த அடியார்களோடும் புலியூரில் இனிது புகுந்தருளினான்' என்னும் வகையில் சொற்களை இயைத்துப் பொருள்கொள்க.

இங்ஙனம் இத் திருப்பாட்டில் இறைவனது திருவருள் விளையாட்டுக்களைப் பொது வகையானும், சிறப்பு வகையானும் அடிகள் அருளிச் செய்தமை காண்க.

3. திருவண்டப் பகுதி

இணைக்குறள் ஆசிரியப்பா

திருச்சிற்றம்பலம்

அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்,
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன ;
இன்னுழை கதிரில் துன்அணுப் புரையச்
சிறிய வாகப் பெரியோன், தெரியின்,
வேதியன் தொகையொடு மாலவன் மிகுதியும்
தோற்றமுஞ் சிறப்பும் ஈற்றொடு புணரிய
மாப்பே ரூழியும் நீக்கமும் நிலையும்
சூக்கமொடு தூலத்துச்
சூறை மாருதத் தெறியது வளியிற்
கொட்கப் பெயர்க்குங் குழகன் ; முழுவதும்
படைப்போற் படைக்கும் பழையோன் ; படைத்தவை
காப்போற் காக்குங் கடவுள் ; காப்பவை
கரப்போன் ; கரப்பவை கருதாக்
கருத்துடைக் கடவுள் : திருத்தகும்
அறுவகைச் சமயத் தறுவகை யோர்க்கும்
வீடுபே றாய்நின்ற விண்ணோர் பகுதி
கீடம் புரையுங் கிழவோன் ; நாடொறும்
அருக்கனிற் சோதி அமைத்தோன் ; திருத்தகு
மதியின் தண்மை வைத்தோன் ; திண்திறல்
தீயின் வெம்மை செய்தோன் ; பொய்தீர்
வானிற் கலப்பு வைத்தோன் ; மேதகு
காலின் ஊக்கங் கண்டோன் ; நிழல்திகழ்
நீரின் இன்சுவை நிகழ்ந்தோன் ; வெளிப்பட
மண்ணின் திண்மை வைத்தோன் ; என்றென்

றெனைப்பல கோடி யெனைப்பல பிறவும்
அனைத்தனைத் தவ்வயின் அடைத்தோன்; அஃதான்று,
முன்னோன் காண்க; முழுதோன் காண்க;
தன்னே ரில்லோன் தானே காண்க;
ஏனத் தொல்லெயி றணிந்தோன் காண்க;
கானப் புலியுரி அரையோன் காண்க;
நீற்றோன் காண்க; நினைதொறும் நினைதொறும்
ஆற்றேன் காண்க; அந்தோ கெடுவேன்!
இன்னிசை வீணையில் இசைந்தோன் காண்க;
அன்னதொன் றவ்வயின் அறிந்தோன் காண்க;
பரமன் காண்க; பழையோன் காண்க;
பிரமன்மால் காணாப் பெரியோன் காண்க;
அற்புதன் காண்க; அனேகன் காண்க;
சொற்பதங் கடந்த தொல்லோன் காண்க;
சித்தமுஞ் செல்லாச் சேட்சியன் காண்க;
பத்தி வலையிற் படுவோன் காண்க;
ஒருவன் என்னும் ஒருவன் காண்க;
விரிபொழில் முழுதாய் விரிந்தோன் காண்க;
அணுத்தருந் தன்மைஇல் ஐயோன் காண்க;
இணைப்பரும் பெருமையில் ஈசன் காண்க;
அரியதில் அரிய அரியோன் காண்க;
மருவிஎப் பொருளும் வளர்ப்போன் காண்க;
நூலுணர் வுணரா நுண்ணியோன் காண்க;

மேலொடு கீழாய் விரிந்தோன் காண்க;
அந்தமும் ஆதியும் அகன்றோன் காண்க;
பந்தமும் வீடும் படைப்போன் காண்க;
நிற்பதுஞ் செல்வதும் ஆனோன் காண்க;
கற்பமும் இறுதியுங் கண்டோன் காண்க;
யாவரும் பெறவுறும் ஈசன் காண்க;
தேவரும் அறியாச் சிவனே காண்க;
பெண் ஆண் அலியெனும் பெற்றியன் காண்க;
கண்ணால் யானுங் கண்டேன் காண்க;
அருணனி சுரக்கும் அமுதே காண்க;
கருணையின் பெருமை கண்டேன் காண்க;
புவனியிற் சேவடி தீண்டினன் காண்க;
சிவனென யானுந் தேறினன் காண்க;
அவனெனை ஆட்கொண் டருளினன் காண்க;
குவளைக் கண்ணி கூறன் காண்க;
அவளுந் தானும் உடனே காண்க;

பரமா னந்தப் பழங்கட லதுவே
கருமா முகிலின் தோன்றித்
திருவார் பெருந்துறை வரையி லேறித்
திருத்தகு மின்னொளி திசைதிசை விரிய,
ஐம்புலப் பந்தனை வாளர விரிய,
வெந்துயர்க் கோடை மாத்தலை கரப்ப,
நீடெழில் தோன்றி வாலொளி மிளிர,
எந்தம் பிறவியிற் கோபம் மிகுத்து
முரசெறிந்து மாப்பெருங் கருணையின் முழங்கிப்
பூப்புரை அஞ்சலி காந்தள் காட்ட,

எஞ்சா இன்னருள் நுண்துளி கொள்ளச்,
செஞ்சுடர் வெள்ளம் திசைதிசை தெவிட்ட, வரையுறக்
கேதக் குட்டங் கையற வோங்கி
இருமுச் சமயத் தொருபேய்த் தேரினை
நீர்நசை தரவரும் நெடுங்கண் மான்கணம்
தவப்பெரு வாயிடைப் பருகித் தளர்வொடும்
அவப்பெருந் தாபம் நீங்கா தசைந்தன
ஆயிடை வானப் பேரியாற் றகவயிற்
பாய்ந்தெழுந் தின்பப் பெருஞ்சுழி கொழித்துச்
சுழித்தெம் பந்தமாக் கரைபொரு தலைத்திடித்
தூழூழ் ஓங்கிய நங்கள்
இருவினை மாமரம் வேர்பறித் தெழுந்
துருவ அருள்நீர் ஓட்டா அருவரைச்
சந்தின் வான்சிறை கட்டி மட்டவிழ்
வெறிமலர்க் குளவாய் கோலி நிறையகில்
மாப்புகைக் கரைசேர் வண்டுடைக் குளத்தின்
மீக்கொள மேன்மேன் மகிழ்தலின், நோக்கி
அருச்சனை வயலுள் அன்புவித் திட்டுத்
தொண்ட உழவ ராரத் தந்த
அண்டத் தரும்பெறல் மேகன் வாழ்க!

கரும்பணக் கச்சைக் கடவுள் வாழ்க!

அருந்தவர்க் கருளும் ஆதி வாழ்க!

அச்சந் தவிர்த்த சேவகன் வாழ்க!

நிச்சலும் ஈர்த்தாட் கொள்வோன் வாழ்க!

சூழிருந் துன்பந் துடைப்போன் வாழ்க;

எய்தினர்க் காரமு தளிப்போன் வாழ்க!

கூரிருட் கூத்தொடு குனிப்போன் வாழ்க!

பேரமைத் தோளி காதலன் வாழ்க!

ஏதிலர்க் கேதிலெம் இறைவன் வாழ்க!

காதலர்க் கெய்ப்பினில் வைப்பு வாழ்க!

நச்சர வாட்டிய நம்பன் போற்றி!

பிச்செமை யேற்றிய பெரியோன் போற்றி!

நீற்றெடு தோற்ற வல்லோன் போற்றி! நாற்றிசை

நடப்பன நடாஅய்க் கிடப்பன கிடாஅய்
நிற்பன நிறீஇச்
சொற்பதங் கடந்த தொல்லோன் ;

உள்ளத் துணர்ச்சியிற் கொள்ளவும் படாஅன் ;

கண்முதற் புலனாற் காட்சியும் இல்லோன் ;

விண்முதற் பூதம் வெளிப்பட வகுத்தோன் ;

பூவில் நாற்றம் போன்றுயர்ந் தெங்கும்
ஒழிவற நிறைந்து மேவிய பெருமை
இன்றெனக் கெளிவந் தருளி
அழிதரும் ஆக்கை ஒழியச்செய்த ஒண்பொருள்
இன்றெனக் கெளிவந் திருந்தனன் போற்றி!

அளிதரும் ஆக்கை செய்தோன் போற்றி!

ஊற்றிருந் துள்ளங் களிப்போன் போற்றி!

ஆற்றா இன்பம் அலர்ந்தலை செய்யப்
போற்றா ஆக்கையைப் பொறுத்தல் புகலேன்,

மரகதக் குவாஅல் மாமணிப் பிறக்கம்
மின்னொளி கொண்ட பொன்னொளி திகழத்
திசைமுகன் சென்று தேடினர்க் கொளித்தும்,

முறையுளி யொற்றி முயன்றவர்க் கொளித்தும்,

ஒற்றுமை கொண்டு நோக்கும் உள்ளத்
துற்றவர் வருந்த உறைப்பவர்க் கொளித்தும்,

மறைத்திறம் நோக்கி வருந்தினர்க் கொளித்தும்,

இத்தந் திரத்திற் காண்டுமென் றிருந்தோர்க்
கத்தந் திரத்தின் அவ்வயின் ஒளித்தும்,

முனிவற நோக்கி நனிவரக் கௌவி
ஆணெனத் தோன்றி அலியெனப் பெயர்ந்து
வாணுதற் பெண்ணென ஒளித்தும், சேண்வயின்

ஐம்புலன் செலவிடுத் தருவரை தொறும்போய்த்
துற்றவை துறந்த வெற்றுயி ராக்கை
அருந்தவர் காட்சியுள் திருந்த ஒளித்தும்,

ஒன்றுண் டில்லை யென்றறி வொளித்தும்

பண்டே பயில்தொறும் இன்றே பயில்தொறும்
ஒளிக்குஞ் சோரனைக் கண்டனம் ;
ஆர்மின் ! ஆர்மின் ! நாண்மலர்ப் பிணையலின்
தாள்தளை யிடுமின் !
சுற்றுமின் ! சூழ்மின் ! தொடர்மின் ! விடேன்மின் !
பற்றுமின் ! என்றவர் பற்றுமுற் றொளித்தும்

தன்னே ரில்லோன் தானேயான தன்மை
என்னே ரனையோர் கேட்கவந் தியம்பி
அறைகூவி ஆட்கொண் டருளி
மறையோர் கோலங் காட்டி யருளலும்

உளையா அன்பென் புருக வோலமிட்
டலைகடல் திரையின் ஆர்த்தார்த் தோங்கித்
தலைதடு மாறா வீழ்ந்துபுரண் டலறிப்
பித்தரின் மயங்கி மத்தரின் மதித்து
நாட்டவர் மருளவுங் கேட்டவர் வியப்பவும்
கடக்களி றேற்றாத் தடப்பெரு மதத்தின்
ஆற்றே னாக அவயவஞ் சுவைதரு
கோற்றேன் கொண்டு செய்தனன் ;

ஏற்றார் மூதூர் எழில்நகை எரியின்
வீழ்வித் தாங்கன்
றருட்பெருந் தீயின் அடியோம் அடிக்குடில்
ஒருத்தரும் வழாமை யொடுக்கினன் ;

தடக்கையின் நெல்லிக் கனியெனக் காயினன்

சொல்லுவ தறியேன் வாழி ! முறையோ !
தரியேன் ! நாயேன் ! தான்எனைச் செய்தது
தெரியேன் ! ஆவா ! செத்தேன் ! அடியேற்
கருளிய தறியேன் ! பருகியும் ஆரேன் !
விழுங்கியும் ஒல்ல கில்லேன் !

செழுந்தண் பாற்கடல் திரைபுரைவித்
துவாக்கடல் நள்ளுநீர் உள்ளகந் ததும்ப
வாக்கிறந் தமுதம் மயிர்க்கால் தோறுந்
தேக்கிடச் செய்தனன் ; கொடியேன் ஊன்தழை

குரம்பை தோறும் நாயுட லகத்தே
குரம்பைகொண் டின்தேன் பாய்த்தி, நிரம்பிய
அற்புத மான அமுத தாரைகள்
எற்புத் துளைதொறும் ஏற்றினன் ; உருகுவ

துள்ளங் கொண்டோர் உருச்செய் தாங்கெனக்
கள்ளூ ருக்கை யமைத்தனன் ; ஒள்ளிய

கன்னற் கனிதேர் களிறெனக் கடைமுறை
என்னையும் இருப்ப தாக்கினன் ; என்னிற்

கருணை வான்தேன் கலக்க
அருளொடு பராவமு தாக்கினன்,
பிரமன்மா லறியாப் பெற்றி யோனே.

திருச்சிற்றம்பலம்

திருவண்டப் பகுதி முற்றிற்று.

குறிப்புரை

இது தில்லையில் அருளிச்செய்யப்பட்டதாகவே, யாண்டும் கூறப்படுகின்றது.

'திருவண்டப் பகுதி' என்பது, முதற்குறிப்பாற் பெற்ற பெயர், 'ஆத்தி சூடி' முதலியனபோல. இதன்கண் அடிகள் இறைவனது பெருமைகள் பலவற்றையும் விரித்துக் கூறி, அன்னபெருமைகளை யுடையவன், தமக்கு மிக எளிவந்து அருள்புரிந்தமையை வியந்து, வாழ்த்துதலும், போற்றுதலும் செய்கின்றார். '**சிவனது தூல சூக்குமத்தை வியந்தது**' என்னும் பழைய குறிப்பும் இதனை ஒருவாறு உணர்த்தும்.

தொல்காப்பியனார், 'குட்டம் வந்த ஆசிரியம்' என்றதனைப் பிற்காலத்தார், 'இணைக் குறள் ஆசிரியப்பா' என்றனர்

1-6. அண்டப் பகுதி - அண்டங்களாகிய இடப்பகுதிகள். உருண்டை, 'உண்டை' என மருவி, அத்தன்மைத்தாய வடிவத்தை உணர்த்திற்று. பிறக்கம் - விளக்கம்; பொலிவு. 'அளப்பருந் தன்மையை யுடைய காட்சி' என்க; 'காட்சியோடு' என உருபு விரிக்க. "ஒன்றனுக்கொன்று" என்றதன்பின், 'பெரிதாய்' என்பது எஞ்சிநின்றது. 'நின்ற' என்பதன் அகரம் தொகுத்தலாயிற்று. எழில் - எழுச்சி; பரப்பு. "நூற்றொரு கோடியின்" என்றது, 'ஒருநூறு கோடி' என்றவாறு. 'கோடி" என்றது, அவ்வளவினதாகிய யோசனையைக் குறித்த ஆருபெயர். 'கோடியினின்றும் மிகுதிப்பட விரிந்தன' என்க.

'பிருதிவி தத்துவம் முதலாகத் தொடங்கி மேற்செல்லும் தத்துவங்களுள் பிருதிவி தத்துவத்தின் அண்டம் எப்பக்கத்தினும் நூறுகோடி யோசனை பரப்புடையது' என்றும், 'அதன் மேல் மூலப் பகுதிகாறும் உள்ள அண்டங்களுள் ஒன்றுபோல மற்றொன்று பத்து மடங்கு பரப்புடையது' என்றும், 'அவற்றிற்குமேல், நூறுமடங்கு, ஆயிரமடங்கு என்று இவ்வாறு சிவதத்துவம் முடிய உள்ள தத்துவ அண்டங்கள் விரிந்து கிடக்கின்றன' என்றும் ஆகமங்கள் கூறுதலின், இவ்வாறு அருளிச்செய்தார். "விரிந்தன" என்ற சொற்குறிப்பானும்,

இங்குப் பெருமை கூறுதலே கருத்தாகலானும், "நூற்றொரு கோடி" என்றது, விரிவையன்றித் தொகையையன்றென்க.

"விரிந்தன" என்றது 'விரிந்தனவாம்' என வினைப்பெயர். இதன்பின், "அவை" என்னும் சுட்டுப் பெயர் வருவிக்க. இல் நுழை கதிரில் துன் அணுப் புரைய - இல்லத்துள் புழைவழியாகப் புகும் ஞாயிற்றின் ஒளியில் நெருங்கித் தோன்றும் நுண் துகள் போல. சிறிய ஆக - சிறியவாய்த் தோன்றும்படி. பெரியோன் - பெரியோனாய் நிற்பவன். இறைவனது பெரு வடிவொடு நோக்க, மேற் கூறிய அண்டங்கள் சிறுதுகள்களாம் என்றபடி. இதனானே, இந் நுண் துகள்கள் மேற்கூறிய அண்டங்கள்போலப் பெரியவாய்த் தோன்றும்படி அத்துணைச் சிறியோனாய் நிற்பவன் என்பதும் பெறப்படும்.

"அண்டங்க ளெல்லாம் அணுவாக அணுக்க ளெல்லாம்
அண்டங்க ளாகப் பெரிதாய்ச்சிறி தாயி னானும்"

என்ற பரஞ்சோதியார் திருவிளையாடலைக் காண்க. (பாயிரம். 7) இதனால், இறைவனது வியாபகத் தன்மை கூறியவாறு.

7-12. மேற்போந்த, 'தெரியின்' என்பதனை இங்குக் கூட்டி, 'அவனது பெருமைகளை ஆராயுமிடத்து' என உரைக்க.

வேதியன் - பிரமன். தொகை - கூட்டம். மிகுதி - பரப்பு. பிரம விட்டுணுக்கள் இவ்வண்டத்தில் உள்ளவாறே ஏனைய பல்கோடி அண்டங்களினும் உளராகலின், அவர்களையே, "தொகை" என்றும், "மிகுதி" என்றும் அருளினார். இவ்வண்டத்தில் உள்ளாரோடு ஒத்த பிரம விட்டுணுக்களது கூட்டத்தை, இவர்களுடைய கூட்டம் என உடைமையாக்கி ஓதினார், இனம் பற்றி.

சிறப்பு - வளர்ச்சி; எனவே, நிலைத்தலாயிற்று. 'பிரமரது தொகுதியும், மாயோரது மிகுதியும் தோன்றுதலையும், நிற்றலையும், இறுதியோடே புணர்ந்த ஊழி' என்க. 'புணரிய ஊழி' என்பதில், பெயரெச்சம் காலப்பெயர் கொண்டது. ஊழி, வடமொழியில், 'கற்பம்' எனப்படும். பிரமனும், மாயோனும் செயலொழிந்து துயிலுங் காலம், அவரவர்க்கு

'நித்திய கற்பம்' என்றும், அவர் இறந்துபடுங்காலம் அவ ரவர்க்கு, 'மகாகற்பம்' என்றும் கூறப்படுமாகலின், அவற்றுள் அவர் இறந்துபடுங் காலமாகிய மகாகற்பம் என்பது அறிவித் தற்கு, "மாப்பேரூழி" என்றார். ஆகவே, அவற்றுள், 'அவரது தோன்றல், நிற்றல், அழிதல்' என்னும் மூன்றும் நிகழ்ந்து முற்றுப்பெறுமாதலின், அதனை, "தோற்றமும் சிறப்பும் ஈற் ெறாடு புணரிய" என்று விளக்கினார். 'ஊழி' என்னும் அஃறிணை இயற்பெயர் ஈண்டுப் பன்மையின் மேலது.

"ஊழியும்" என்றது, 'ஊழியினது தோற்றமும்' என்ற வாறு. எனவே, பின்னர்க் குறித்த நீங்குதலும் (முடிவெய்து தலும்) நிலைத்தலும் (நிகழ்தலும்) ஊழியினுடையவேயாயின. 'முதலும் முடிவும்' எனக் கூறி, நடுவை இறுதிக்கட் கூறலும் மரபாகலின், நீக்கத்தை இடைவைத்தார். சூக்கமொடு தூலத்து- நுண்மையும், பருமையும் ஆய இருநிலைகளிடத்தும்; இதனை, "கொட்க" என வருவதனோடு இயைக்க. நுண்மை, ஒடுக்கமும், பருமை, தோற்றம் நிகழ்ச்சி என்னும் இரண்டும் ஆதல் அறிக. "சூறை மாருதத்து" என்பதனை இதனோடே கூட்டி நாற்சீரடி யாக்கி, "எறியது வளியின" என்பதனை இருசீரடி யாக்குவா ரும் உளர். அகவற்பாவினுள் வரும் இருசீரடிக்கு மூவசைச் சீராதல், ஆசிரிய உரிச்சீராதல், இரண்டுமாதல் அடுத்துவந்து நிற்பதே இன்னோசை பயப்பதாகலின், அது பொருந்தாமை யறிக. இவ்வாறு அடிவரையறை செய்யவே, ஓசை வேறு பாட்டானும், ஈண்டுரைக்கப்படும் பொருளே தோன்றுதல் காண்க.

சூறை மாருதம் - சூறுவளி; சுழல்காற்று. மாருதத்து - மாருதமான நிலையில். 'எறி வளி' என இயையும். 'அவ் வளி' எனச் சுட்டாக ஓதற்பாலதனை, 'அது வளி' என இரு பெயரொட்டாக ஓதினார். 'அது காலை, அது போழ்து' என்றற் றொடக்கத்தனபோல. வளியின் - வளிபோல. இதனை, "பெயர்க்கும்" என வருவதனோடு இயைக்க. 'மாப்பேரூழி களது தோற்றங்களும், நிகழ்ச்சிகளும், முடிவுகளும், 'நுண்மை, பருமை' என்னும் இருவகை நிலைகளில் தமக்கு ஏற்ற நிலையிற் பொருந்திச் சுழன்றுவருமாறு, சுழல்காற்றைப்போலச் சுழற்று கின்ற குழகன் என்க. பிரம விட்டுணுக்கள் என்னும் காரணக் கடவுளர் முதலியோரையும், தோவறிநின்று அழியச்செய்வது,

ஊழி முதலிய பெயர்களைப் பெற்று விளங்கும் காலம்; அதனைத் தோன்றி நின்று அழியுமாறு செய்பின்றவன் இறைவன் என, அவனது முதன்மையை வியந்தவாறு. மாப்பேரூழியது அளவை. சூறுவளியில் அகப்பட்டு விரையச் சுழலும் சிறு பொருள்களது சுழற்சியளவோடு ஒப்புமைப்படுத்தியது என்னையெனின், 'அது தானும் நிலையுடையதன்றி மாறித் தோன்றுவதேயாம்' என அதனது நிலையாமையை இனிது விளக்குதற் பொருட்டென்க.

" உறங்கு வதுபோ லும் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு "

எனத் திருவள்ளுவ நாயனாரும் (குறள். 339.) நிலையாமையை இவ்வாறு விளக்குதல் காண்க.

எல்லாவற்றையும் ஆக்கிக் காத்து அழித்துச் சுழற்றி நிற்பது காலம்; அதனை அங்ஙனம் சுழலச் செய்பவன் இறைவன் என்றதனால், அவற்றின்வழிச் சுழல்வனவற்றையும் அங்ஙனம் சுழற்றுபவன் அவனே என்பது, தெற்றென விளங்கிக் கிடந்தது. எனவே, காலத்துட் படாதவன் இறைவன் ஒருவனே யன்றிப் பிறர் இல்லை என்பது பெறப்பட்டது. சிவ பெருமான் காலனைக் காலால் உதைத்தமை, 'அவன் காலத்தைத் தன்வழி நடாத்துபவன்' என்பதையும், மார்க்கண்டேயர் அப்பெருமானை வழிபட்டு என்றும் பதினாறு வயதாய் இருக்கப் பெற்றமை, அவனை அடைந்தவரே காலத்தைக் கடப்பவராவர் என்பதையும் விளக்குவனவாம். இவ் வரலாறு இங்ஙனம் உலகறிய வழங்கிவருவதாகவும், அப்பெருமானை வழிபடுதலினும் சிறப்பாக ஒன்பான் கோள்கள் முதலிய காலக் கடவுளரை வழிபட்டுக் காலம் போக்குவாரது நிலையை நாம் என்னெனபது!

காலம் தன்வயம் உடையதன்று; இறைவன் ஒருவனே தன்வயம் உடையவன்; காலம் அவன்வழிப்பட்டதே என்பதை,

" காலமே கடவு ளாகக் கண்டனம் தொழிலுக்கென்னிற்
காலமோ அறிவின் றாகும்; ஆயினும் காரி யங்கள்
காலமே தரவே காண்டும்; காரணன் விதியினுக்குக்
காலமும் கடவுள் ஏவ லால்துணைக் கார ணங்காண் "

என விளக்குகின்றது, சிவஞான சித்தி (சூ. 1. 10.).

"குழகன்" என்ருர், எல்லாவற்றையும் கொட்கப் பெயர்ப்பினும் தான் அப்பெயர்ச்சியுட்படாது, என்றும் ஒரு பெற்றியனுயே நிற்பான் என்பது அறிவித்தற்கு. எனவே, "கொட்கப் பெயர்க்கும்" என்றதனுல், அவனது முடிவிலாற்றலையும், "குழகன்" என்றதனுல் அவனது தன்வயமுடைமையையும் குறித்தவாருயிற்று.

13-19. "முழுவதும்" என்றதனை இவற்ருேடு கூட்டிப் பொருள்கொள்க. "முழுவதும்" என்றது, அவரவரது எல்லைக்குட்பட்டன எல்லாவற்றையும் என்றதாம். "படைப்போன், காப்போன்" என்ற விடத்துச் சொல்லுவாரது குறிப்பு, பொருள்மாத்திரையினன்றித் தொழிலொடு கூடிய பொருள்மேலதாதலின், அவை அத்தொழிலையுடைய பலர்க்கும் பொருந்துவதாம். இவ்வாறு வருவதனை,

> "ஒருபாற் கிளவி எனைப்பாற் கண்ணும்
> வருவகை தாமே வழக்கென மொழிப"

என்று அமைத்தார் தொல்காப்பியர் (பொருள். 222.) இதனை, 'சாதியொருமை' என்ப.

"படைப்போன், காப்போன்" என்றவற்றில் ஐயுருபு தொக்குநிற்றல் வெளிப்படை. 'பழையோன்" என்றதனுல், அவனுக்கு முன்னே நின்று அவனைப் படைப்போர் ஒருவருமிலர் என்றவாருயிற்று. இங்ஙனம் ஒருவராற் படைக்கப்படாது நிற்கும் நிலையை, 'அனுதி' என்ப. 'காப்போனையும் காக்கும் முதல்வன்' என்றற்கு, "காப்போற் காக்கும் கடவுள்" என்ருராயினும், அதனுனே, முன்னர் அவனைப் படைத்தலும் அடங்கிற்று. கரப்போன - அழிப்பவன். "படைப்போன், காப்போன்" என்ற அவரோடொப்பக் காப்போனுகிய உருத்திரனைச் சுட்டி, 'கரப்போற் கரக்குங் கடவுள்' என்னுது சிவபெருமானையே கரப்போனுக அருளிச்செய்தார், அவன் ஏனை இருவர் போலச் சகலருட்பட்டு மீளப் பிறத்தலின்றி, அதிகார மல வாசனை, பின்பு போகமல வாசனையாயும் இலயமல வாசனையாயும் தேய்ந்தொழிய விட்டெய்துவானுகலின். எனவே, 'அழித்தல்' என்பது, மீளப் பிறப்பாரிடத்தே செய்யப்படுவதாம் என்பது தெளிக.

"கரப்பவைகருதா" என்றதற்கு, 'அழிக்கப்படும் அவற்றை அவைநிலையுதலுறுங் காலத்து அழிக்கக் கருதாத' எனப் பொருள் கூறுக. இதனால், அழித்தலைத் தனது ஆற்றல் வெளிப்படுத்தல் கருதியாதல், பிறிதொன்று கருதியாதல் தன் பொருட்டாகச் செய்யாது, உயிர்களின் பொருட்டாகவே செய்தல் பெறப்பட்டது. படவே, "கருத்துடை" என்றதற்கு, 'அருளுள்ளத்தை யுடைய' என்பது பொருளாயிற்று. அழித்தல் உயிர்களை இளைப்பாற்றுதற் பொருட்டு என்பதனை,

> " அழிப்பிளைப் பாற்றல்...........
> பார்த்திடில் அருளே எல்லாம்"

எனச் சிவஞான சித்தி விளக்குதல் காண்க (சூ. 1. 37.). "கருதா" என்றதற்கு இவ்வாறன்றி, 'அழித்தவைகளை இளைப்பு நீங்குங்காறும் படைக்கக் கருதாதவன்' என உரைப்பாரும் உளர்; 'கரந்தவை' என ஓதாது, "கரப்பவை" என ஓதினமையின், அது பொருந்தாமை யறிக. இனி, "கருதா" என்றதனை வினையெச்சமாக்கி, 'கருத் துடை கடவுள்' எனப் பாடம் வேறாக ஓதி, 'அழித்தலுட்பட்ட உயிர்கட்கு அருள் கருதி, அவற்றின் பிறப்பை நீக்கும் கடவுள்' என்று உரைப்பாரும் உளர்.

17 - 19. திருத்தகும் என்றதனை இங்குக் கூட்டி, 'சிறப்புத் தக்கிருக்கின்ற' என உரைக்க. 'அறுவகைச் சமயத்தால் அறுவகைப்பட்டோர்க்கும்' என்க. ஒரோவொரு சமயத்தினும் கொள்கையும், ஒழுக்கமும் பற்றிய சிறுசிறு வேறுபாடுகள் உள்வாதல்பற்றி, 'ஆறு சமயம்' என்னாது, "அறுவகைச் சமயம்" என்று அருளினார். "திருத்தகும்", எனச் சிறப்பித்தது, கடவுட் கொள்கை யுடையவற்றையே பிரித்துணர்த்தற்கு. அதனால், அவை, ஆருகதம், இரணிய கருப்பம், வைணவம், சௌரம், சௌமியம், வாமம்' என்றேனும், பிறவாறேனும் கொள்ளப்படும். அருகன், இரணிய கருப்பன். (பிரமன்) விண்டு (மாயோன்), சூரியன், சந்திரன், சத்தி என்போர் இச் சமயங்களின் தெய்வங்களாவர். 'உலகாயதம், பௌத்தம், மீமாஞ்சை' என்னும் மதங்கள் கடவுட் கொள்கையில்லாதனவாதலாலும், வைசேடிகமும், நையாயிகமும் கடவுளையடைதல் முத்தி என்று கொள்ளாமையாலும்,

'காணுபத்தியம், கௌமாரம், சாத்தேயம், வைரவம், பாசுபதம். மாவிரதம்' என்னும் மதங்களின் தேவர்கள் இழித்துரைக்கற் பாலர் அல்லராதலாலும், மேற்கூறியவாறு ஏற்புடைய சமயங் களையே ஈண்டுக் கொள்க. வாமமதத்தவர், 'சத்தி' எனக் கூறுதல் சிவசத்தியை அன்று; விண்ணோர் குழுவுட் பெண் பாலார் சிலரையேயாம்; ஆதலின், அஃது ஈண்டுக்கொள்ளத் தகும் என்க. இனி, ஒன்றிரண்டு குறைவனவாயினும், 'அறு சமயம்' என்னும் வழக்குப்பற்றிக் கூறினார் எனக் கொண்டு, சிலவற்றையே கொள்ளினும் அமையும். பிரமன் மாயோன் இருவரது நிலை முன்னரே கூறப்பட்டமையின், மீண்டும் அவரை ஈண்டுக் கூறல் வேண்டா எனின், ஆண்டுக் காரணக் கடவுளராதல் பற்றி வேறெடுத்துக் கூறினார்; ஈண்டுச் சமயக் கடவுளராதல் பற்றிப் பிற தெய்வங்களோடொப்ப ஒருங்கெடுத்துக் கூறினார்; அதனான் அஃது இழுக்கன்றென்க. இக் கடவுளர்தாம் சிவபிரான்போல ஒருவரேயாகாது பல ராதலின், 'விண்ணோர்' என்று ஓழியாது, "பகுதி" என்றார். எல்லாச் சமயத்தவர்க்கும் அவரவர்கொண்ட முதற்பொருளே வீடுபேறுதல் அறிக. எல்லா முதன்மையும் உடைய இறைவ னொடு நோக்க, ஒரோவொரு முதன்மையை யுடைய இக் கடவுளர்கள் மிகத் தாழ்ந்த புழுப்போல்வாராகலின், "கீடம் புரையும்" என்று அருளினார். கீடம் - புழு. கிழவோன் - எல்லாப் பொருளையும் தனக்கு உரியனவாக உடையவன்; 'முழுமுதற் கடவுள்' என்றபடி.

ஈண்டு, சிவபிரானை முதற்கடவுளாக உணரும்பேறில்லாது பிற கடவுளரையே முதற் கடவுளராக நினைந்து வழிபடுவாரது நிலைக்கு இரங்குதல் கருத்தன்றி மற்றைத் தேவரது இழிபுணர்த்துதல் கருத்தன்றாகலின், "சமயம்" என்றது, கடவுட்கொள்கையுடைய சமயங்களையே எனக் கொள்ளுதலே பொருந்துவதன்றி, எச் சமயத்தாராயினும் அவர் கொண்ட தத்துவத்தின் தலைவரே வீடுபேறாய் நிற்பராகலின், "சமயம்", என்றது, அனைத்துச் சமயங்களையுமாம் எனக் கொள்ளுதல் பொருந்தாமையறிக. இனி, 'வீடுபேறாய் நின்ற கிழவோன்' என இயைத்துரைப்பின் "விண்ணோர் பகுதி கீடம்புரையும்" என் பது, கவர்பொருட்டாய் இடை நிற்றல் பொருந்தாமையறிக.

இவற்றால் சிவபெருமானது முழுமுதற்றன்மை கூறிய வாறு.

20-28. அருக்கன் - சூரியன். அவனது சோதி, நாள் தோறும் புதுவதாய்ப் புறப்பட்டு வருதலின், அதனை நாள் தோறும் அமைத்துத் தந்ததுபோலக் கூறினார். இறந்த காலத்தாற் கூறியது, முன் கண்ட நாட்களில் அது நன்கறியப் பட்டமை குறித்து. திருத்தகுமதி - அழகு தக்கிருக்கின்ற சந்திரன். திண்திறல் - இளையாத வலிமை; என்றது, எல்லா வற்றையும் நீருக்கும் ஆற்றலை. பொய் - பொய்த்தல்; இல்லை யாதல். இது, 'இது விசும்பென்பது ஒன்று இல்லை என்பாரது கூற்று மெய்யாகாமை குறித்தது' விசும்பு, தனக்குக் கீழுள்ள எல்லாப் பொருட்கண்ணும் உளதாதல் அறிக. அங்ஙனம் எல்லாவற்றிலும் நிறைந்திருத்தலையே **'கலப்பு'** என்றார். விசும்பேயன்றி ஏனைய பூதங்களும் தங்கீழ் உள்ளவற்றின் வியாபகம் உடையன என்க.

மேதகு - மேன்மை தக்கிருக்கின்ற. காற்றிற்கு மேன்மை, விசும்போடு ஒருபுடை ஒத்து யாண்டும் சென்று இயங்குதலும், உயிர்கட்கு உடம்பை நிலைபெறுவித்தலுமாம். ஊக்கம் - கிளர்ச்சி; இயக்கம். கண்டோன் - ஆக்கினோன். நீரின்கண் பிறபொருள்களின் நிழல் தோன்றுதல் அதனது தூய்மை யாலாதலின், அதனை எடுத்தோதினார். இன்சுவை என்றது மென்மையை. இஃது இதனைச் செய்யும் ஆற்றல்மேல் நின்றது. 'நிகழ்த்தினோன்' எனற்பாலது, 'நிகழ்ந்தோன்' எனத் தொகுக்கப்பட்டது. திண்மை - தாங்கும் வலிமை. ஏனைய பொருள்கள் போலன்றி உயிர்கட்கு நிலத்தின்மேல் நிற்றல் என்ஞான்றும் இடையறவு படாமையின், அதனது திண்மைக் குணம் மிக வெளிப்படையாக அறியப்படுவதாயிற்று. 'என் றென்றும்' என்னும் உம்மை தொகுத்தலாயிற்று' எத்தனையோ பல கோடியாய தன்மைகளை எத்தனையோ பலவாகிய பிற பொருள்களில் அது அது அவ்வத்தன்மை யுடையதாம்படி அவற்றின்கண் பொருந்தச் செய்தோன்' என்க. 'அனைத் தனைத்தாக' என ஆக்கம் வருவித்துக்கொள்க. 'அவ்' என்னும் வகரவீற்றுச் சுட்டுப்பெயர். 'வயின்' என்னும் ஏழனுருபு ஏற்று, 'அவ்வயின்' என நின்றது. அஃதான்று அதுவன்றி. இவற்றால், படைப்பின் வியத்தகு நிலைகளை விரிக்கும் முகத்தால், இறைவனது திறப்பாட்டினை வியந்தவாறு.

29 - 65. இவ்வடிகள் பலவற்றினும் வரும், **'காண்க'** என்பன யாவும் அசைநிலைகள்.

29. கண்டாய், கண்டீர் முதலியன இறந்த காலத்தவாய் நின்று அசையாகும்; இஃது எதிர்காலத்ததாய் நின்று அசையாயிற்று. முன்னோன் எல்லாப் பொருள்கட்கும் முன்னிடத்தில் உள்ளவன்; தலைவன். முன், இடமுன். காலமுன், "படைப்போற் படைக்கும் பழையோன்" (13) என்றதனால் பெறப்பட்டது. முழுதோன் - எல்லாப் பொருள்களிலும் நிறைந்து நிற்பவன்.

30. தன் நேர் - தன்னோடு ஒக்கும் பொருள். "தானே" என்றதில் தான், ஏ இரண்டும் அசைநிலைகள்.

31. ஏனம் - பன்றி. அதனது தொன்மை, அதன் எயிற்றின்மேல் ஏற்றப்பட்டது. எயிறு - பல். ஒருகால் பிரளய வெள்ளத்தில் அழுந்திய நிலத்தைத் திருமால் சுவேதவராக (வெள்ளைப்பன்றி) உருக்கொண்டு கொம்பின்மீது ஏற்றிக் காத்து, பின்னர் அச்செருக்கால் உயிர்கட்கு இடர்விளைக்க, சிவபிரான் அப்பன்றியை அழித்து, அதன் கொம்பினை மார்பில் அணிந்துகொண்டான் என்பது வரலாறு.

32. கானம் - காடு; இஃது இனம்பற்றி வந்த அடை. உரி - தோல். தருகாவனத்து முனிவர்கள் விடுத்த புலியைச் சிவபிரான் அழித்து அதன் தோலை உடுத்துக்கொண்டனன் என்பது அறிக.

33 - 34. நீற்றோன் - திருநீற்றை அணிந்தவன். "நினைதோறும்.........கெடுவேன்" என்றது, இடைக்கண் ஆற்றாமை மீதூரக் கூறியதாம். 'அவனை நினைதோறும்' என்க. ஆற்றேன் - அவனைக் காணாது நிற்கலாற்றேன். கெடுவேன் - இனி, யான் அழிந்தொழிவேன்.

35. "இன்னிசை வீணையில்" என்றதனை, 'வீணை இன்னிசையில்' என மாற்றிப் பொருள்கொள்க. வீணையில், இல் - போல. இசைந்தோன் - எல்லாப் பொருளிலும் நுண்ணியனாய்க் கலந்தவன். முன்னர் வாளா, "முழுதோன்", என்றார், ஈண்டு அதனை உவமைமுகத்தால் இனிது விளக்கினார்.

36. அன்னதொன்று - வீணைஇசைபோல்வதோர் இன்பம். அவ்வயின் - தான் நிறைந்து நின்ற அவ்விடத்து; என்றது

உயிரையே எனக்கொள்க. அறிந்தோன் - உயிர்கள் பொருட்டு அறிந்து நிற்பவன். இறைவன் பெத்தம் முத்தி இரண்டினும் உயிர்கட்கு விடயங்களை அறிவித்தலேயன்றி, அறிந்தும் நின்று உதவுவன் என்பதைச் சிவஞானபோதப் பதினொன்றும் சூத்திரத்து முதல் அதிகரண பாடியத்துள் இனிது விளங்க விரித்துரைத்தமை காண்க.

37. பரமன் - மேலானவன். பழையோன் - மேன்மையை என்றுமே இயல்பாக உடையவன்.

39. அற்புதன் - பிறவிடத்துக் காணலாகாத தன்மை களை யுடையவன். அனேகன் - பொருளால் ஒருவனாயினும், கலப்பினால் எண்ணில்லாதவனாய் இருப்பவன். இஃது ஒரு வனே பல பொருளாய் இருத்தலை வியந்தவாறு.

40. சொற்பதம் - சூக்குமை வாக்கின் நிலை. அது, நாத தத்துவம். சத்தப் பிரமவாதிகள் 'நாதமே பிரமம்; அதனின் மேற்பட்ட பொருள் இல்லை' என்பர்; அஃது உண்மையன்று என்றற்கு, 'அதனைக் கடந்த தொல்லோன் இறைவன்' என்று அருளினார்.

41. 'சிந்தையைச் சீவன் என்றும், சிவனைச் சிந்தை என்றும்' (சிவஞான சித்தி சூ4. 28.) கூறுதல் வழக்கமாதலின், இங்கு, 'சித்தம்' என்றது, உயிரினது அறிவையாம். அஃது அந்நாத தத்துவத்தையும் கடந்து தன்னையே பொருளாக உணர்ந்து நிற்பதாகும். இனி, "சொல்" என்றதை மத்திமை வைகரி வாக்குக்களாகக் கொள்ளின், சித்தம், அந்தக் கரணமே யாம். இப்பொருட்கு, 'பதம்; அளவு' என்றாகும். மாண், மாட்சி என வருதல்போல் சேண், 'சேட்சி' என வந்தது. சேண் - தொலைவு.

42. பத்தி - அன்பு. இதனை, "வலை' என்றது ஏகதேச உருவகமாகலின், அதனுள் அகப்படுகின்ற மான் ஆகின்றவன் என உரைக்க. உரைக்கவே, அது பெரியோன் என்னும் பொருளையும் தோற்றுவித்தல் காண்க.

43. ஒருவன் என்னும் ஒருவன் - 'ஒருவன்' என்னும் பெயரால் சுட்டப்படுகின்ற ஒருவன். 'முதற்பொருள் ஒன்றே'

என்றல் அனைவர்க்கும் உடன்பாடாதலின், முழுமுதற் கடவுளாய சிவபெருமானையே "ஒருவன் (ஏகன்)" என்று உபநிடதம் கூறுதல் பற்றி, (एकोहि रुद्रो नद्वितीयाय तस्थुः - சுவேதாசுவதரம்.), "ஒருவன் என்னும் ஒருவன்" என்று அருளினார். 'ஒருவன் என்று ஏத்த நின்ற நளிர்மதிச் சடையன்' எனப் பிறரும் கூறினார். (திருவாய்மொழி).

44. பொழில் - உலகம். முன்னர் ஒடுங்கிநின்று, பின்னர் விரிந்திடுதல்பற்றி, "விரிபொழில்" என்றும், விரியுங்கால் தானே விரியமாட்டாதாகலின், அதற்குப் பற்றுக்கோடாய் நின்று விரியச்செய்து, பின்னும் நீங்காது நிற்கின்றான் என்பார், "முழுதாய் விரிந்தோன்" என்றும் அருளினார். 'பற்றி யுலகை விடாதாய் போற்றி" என்றருளியதும் இதுபற்றி (திருமுறை 6. 55. 6.). 'பிரபஞ்சம்' என்னும் வடசொற்கும், 'விரிவுடையது' என்பதே பொருளாதல் அறிக.

45. அணுத் தரும் தன்மை இல் - ஆணவத்தால் தரப்படுகின்ற தன்மை இல்லாத; அதனால் பற்றப்படுதல் இல்லாத' என்றபடி. அணுத்தன்மையைச் செய்வதனை, "அணு" என்றார். 'ஐயன்' என்பது, "ஐயோன்" என்று ஆயிற்று. ஐயன் - வியப்பினன். பிறர் எல்லாரும் அணுத்தன்மை எய்தியிருக்கத் தான் ஒருவனும் அதனை எய்தாதிருத்தலின் வியப்பாயிற்று.

46. இணைப்புஅரும் பெருமை இல் - தனது பெருமையோடு ஒப்பிப்பதொரு பெருமை இல்லாத.

47. "அரியோன்" என்றது, வாளா பெயராய் நின்றது.

48. மருவி - வேறறக் கலந்து நின்று. அறிவில் பொருள்களில் அவற்றின் குணங்களையும், அறிவுடைப் பொருளில் அவற்றின் அறிவுகளையும் வளர்க்கின்றான் ஆதலின், "எப் பொருளும்" என்றார்.

49. "நூல்" எனப் பொதுப்படக் கூறினும், ஈண்டுச் சமய நூல்களே கொள்ளப்படும். எல்லாப் பொருள்களையும் அறிதல்போல அவற்றால் அளவிட்டறிதற்கு வாராமையின், அவைபற்றி உணரும் உணர்விற்கு உணரவாரான் என்றார்.

" எந்தை யாரவர் எவ்வகை யார்கொலோ "

எனவும்.

" ஆட்பாலவர்க் கருளும் வண்ணமும் ஆதி மாண்பும்
கேட்பான்புகில் அளவில்லை கிளக்க வேண்டா
....எந்தை
தாட்பால் வணங்கித் தலைநின்றிவை கேட்க தக்கார் "

எனவும்,

" ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா ; சுடர் விட்டுளன் எங்கள் சோதி
மாதுக்கம் நீங்க லுறுவீர் மனம்பற்றி வாழ்மின் "

எனவும், (திருமுறை 3, 54, 3, 4, 5)

" நூலறிவு பேசி நுழைவிலா தார்திரிக "

எனவும் (அற்புதத் திருவந்தாதி-33) பிற திருமுறைகளினும் இவ்வாறே அருளிச்செய்தல் காண்க.

50. மேலொடு கீழாய் விரிதல். எல்லாப் பொருளையும் தனது வியாபகத்துள் அடக்கிநிற்றல்.

51. அந்தம் - அழிவு. ஆதி - தோற்றம்.

52. பந்தம் - பிறப்பு நிலை. வீடு - அது நீங்கிய நிலை. இவ்விரண்டையும் உயிர்கட்கு உளவாக்குவோன் இறைவனே யாதல் அறிக. இவையே, 'மறைத்தல். அருளல்' என்னும் இருதொழில்களாகக் கூறப்படுகின்றன; மறைத்தலின் விரிவே, படைத்தல் முதலிய மூன்றும்.

53. நிற்பது - அசரம். செல்வது - சரம். இவற்றால் பல் வகைப் பிறவிகளையும் குறித்தவாறு.

54. 'கற்பம், ஊழி' என்பது முன்பே கூறப்பட்டது. அதன் நிகழ்ச்சி முழுவதையும், அதன் முடிவிற்குப் பின்னுள்ள நிலையையும் காண்பார் இறைவனையன்றிப் பிறர் இன்மை யானும், அவை எண்ணில்லாதனவற்றை அவன் கண்டவன் ஆகலானும், " கற்பமும் இறுதியும் கண்டோன் " என்றார்.

55. யாவரும் பெற உறும் - முடிவில் யாவராலும் பெறு தற்கு உரியவனாய் நிற்கின்ற. முடிவு - அறியாமையால் உழன்றுதிரிதல். எனவே, 'தேவராலும்' என்றது, அதற்கு இடையிலாயிற்று. 'பெறுதல், அறிதல்' என் வந்த சொற் குறிப்புக்களையும் ஓர்ந்துணர்க.

56. "தேவரும்" என்ற சிறப்பும்மையால் ஒருவரேனும் அறியாமை பெறப்பட்டது.

57. உயிரில் பொருளை, 'அலி' என்றல் வடநூல் வழக்கு. இவ்வழக்குப்பற்றி அடிகள் சில விடங்களில் ஓதுதலைப் பின்னருங் காண்க. பெற்றி - தன்மை. உயிர்ப் பொருள்கள் பலவும் 'பெண், ஆண்' என்னும் இருகூற்றன வாய்க் கூடிக்கலந்து வாழவும், உயிரில் பொருள்களை அவ் வாழ்விற்கு உதவவும் வைத்து. தான் அவையேயாய் நிற்கும் நிலையை, "பெண் ஆண் அலி எனும் பெற்றியன்" என்று வியந்தார். உயிர்ப்பொருளிடத்தே உள்ள, 'அலி' என்பதொரு பிறப்பும் ஈண்டுக் கூறியதனுள் அடங்குதல் காண்க. உயிருடைய அலிப் பிறப்பு, இன்பமொழித்து ஒழிந்த புருடார்த் தங்களுள் அறத்தையேனும், விட்டையேனும் எய்துமாயின், வேறெண்ணப்படும்; இல்லையேல், உயிரில்லவற்ரோடு ஒன்று யொழியும் என்க;

58-65. 'அத்தகையோனை யானும் கண்ணால் கண்டேன்' என உரைக்க. அவனைக் கண்ணால் கண்டவர் சிலர்; அவருள் யானும் ஒருவன் என்பது பொருளாகலின், உம்மை இறந்தது தழுவிற்றும். "சுரக்கும்" எனக் குறிப்புருவகம் செய்து, சொற்பல்காவாறு ஓதினமையின், 'அவள் அருளாகிய அமுதத்தைச் சுரப்பதோர் ஊற்றென்றல் மெய்யேகாண்' என, தாம் கண்ணாற் கண்டு பெற்ற அனுபவத்தைக் கிளந் தோதியவாருக உரைக்க. பின்வரும் தொடர்களும் அன்னவாம். அவற்றை, 'அவனது கருணையின் பெருமை எத்தகையது என யான் கண்டேன்; அஃதாவது, தனது சிவந்த திருவடிகளை என் பொருட்டு நிலத்தில் தோயவைத்து வந்தான்; அவன் நம்மனோர் போலக் காணப்படினும், பிறப்பிற்பட்டுத்தோன்ருத அருட்டிரு மேனியே அவனது திருமேனி என்று யான் தெளிவாக உணர்ந் தேன்; ஆகவே, சிவபெருமான்தான் என்னை வந்து ஆட்

கொண்டான்; அவன் மாதொரு கூறன்தான்; எஞ்ஞான்றும் அவளும் தானுமாகப் பிரியாது உடனாய் இருப்பவனே, என முடிக்க.

அடிகள், சிவபிரான் தம்மை வந்து ஆண்டுகொண்டருளிய உண்மையை அனுபவமாக மிகவும் தெளிவுபட இப் பகுதியில் இனிதெடுத்து அருளிச் செய்திருத்தல் நம்மனோர்க்கும் பெரிதும் பயன் தருவதாம். சிவபெருமான், பிறப்பிறப்பில்லாதவனாக லானும், தம்மை ஆளவந்த திருமேனி நம்மனோரது உடம்புகள் போல எழுவகைத் தாதுக்களாலயதாகக் காணப்படாது, தண்ணிய சேயொளிப் பிழம்பாய்க் காணப்பட்டமையானும், சிவபெருமானே நேர்பட வந்து தம்மை ஆட்கொண்டான் என அடிகள் தெளிந்தார் எனவும், சிவபெருமான் மாதொரு கூறனாய் நிற்றல், தான் எத்துணையும் பெரியோனாயினும், எத்துணையும் சிறியவாய உயிர்கள் மாட்டுக் கைம்மாறு கருதாத பேரிரக்கமாகிய பண்பினையும், அது காரணமாக யாவரையும் அவரவரது நிலைக்கேற்ப இயைந்து நின்று ஆட்கொள்ளுத லாகிய செயலையும் உடையவன் என்பதை விளக்குவதேயாக லானும், அப்பண்பையும், செயலையும், அடிகள் நேரே கண்டமை யானும், தம்மை ஆட்கொண்ட பெருமான் மாதொரு கூறனாய், அவளோடு நீங்காதே நிற்பவன்தான் என்பதையும் தெற் றெனத் தெளிந்தார் எனவும் கொள்க. உடனாய் இருப்பவரை, "உடன்" என்று அருளினார். சிவபெருமான் மாதொரு கூற னாய் நிற்றல் மேற்கூறியவற்றையே வலியுறுத்தும் என்பதனை,

> "இதுறுவ னானால் சிவபதிதான் கைவிடுமோ
> மாதொருகூ றல்லனோ மற்று"

எனத் திருக்களிற்றுப்படியார் (42) விளக்குதல் காண்க. "உடனே" என்றதன்பின், 'ஆகலின்' என்னும் சொல் லெச்சம் வருவித்து, அதனை, "மேகன்" என்னும் (95) வினைக்குறிப்போடு முடிக்க.

66-95. இப்பகுதியில், அடிகள், சிவபெருமான் தம்மைத் திருப்பெருந்துறையில் வந்து ஆட்கொண்டு அருள்புரிந்த சிறப்பினை நீண்டதொரு முற்றுருவகத்தால் மிக்க அழகுபட விரித்தருளுகின்றார்.

பரமானந்தம் - மேலான இன்பம்; பேரின்பம். அது, பகுதிப்பொருள் விகுதி. ஏகாரம், பிற பொருளினின்றும்

பிரித்தலின், பிரிவிலே. கருமாமுகில், சிலேடையுருவகம்; 'உருவமென்னும் சிறந்த சூல்கொண்ட கரிய மேகம்' என்பது பொருள். முகிலின் - முகிலாய், வரை - மலை. 'திரு மின்' என இயைத்து, அழகென்னும் பின்னல்' என உரைக்க. பந்தனை - கட்டு. 'பந்தனையாகிய அரவு (பாம்பு)' என்க. வாள் - கொடிய. இரிய - அஞ்சி நீங்க வெந் துயர் - கொடிய துன்பம். மா - பெரிய. 'கோடை தனது பெரிய தலையை மறைத்துக்கொள்ள' என்க. பெரிய கோடை முழுதும் நீங்கின மையைப் பான்மை வழக்கால் இங்ஙனங் கூறினர். நீடு எழில் தோன்றி - பெருகும் இன்பமாகிய தோன்றிப் பூ. வாள் ஒளி மிளிர - மிக்க ஒளி விட்டு விளங்க. 'துயர் கரப்ப' என்றமையால், தோன்ற வேண்டுவது இன்பமேயாம் ஆதலின், "எழில்" என்றது, அதனைத் தருவதாய இன்பத்தைக்குறித்தது. எமது பிறவியின்மேற் கோபம் மிகக் கொண்டு என்றது. மழைக்காலம் 'இந்திர கோபம்' என்னும் வண்டினை மிகக் கொண்டிருத்தலைச் சிலேடை வகையாற் குறித்தவாறு. எனவே, இறைவன் அடிகளது பிறவிமேற் கொண்ட கோபமே இந்திர கோபமாக உருவகிக்கப்பட்டவாறாயிற்று. முரசு எறிந்து-முரசெறிந்தாற்போல. 'முழங்கி' என்றது, அழைத்தருளினமையை; "அறைகூவி ஆட்கொண்டு" என்றல் காண்க.

அஞ்சலி - கூப்பிய கை. காந்தள் கைக்கு உவமையாதலும், மழைக்காலத்துத் தோன்றுவதாதலும் அறிக. "பூ" எனப்பட்ட உவமையாகிய தாமரையும், உருவகத்தின்கண் வந்த காந்தளும் அரும்பெனவே கொள்க. "காட்ட" என்றது, 'தோன்ற' என்றபடி. எஞ்சா - குறையாத. "அருள்" என்றது, அருண்மொழியாகிய உபதேசத்தையும், திருநோக்கு பரிசம் முதலிய செயல்களையும். இவற்றை, 'தீக்கை' என ஆகமங்கள் கூறும். துளிகொள்ள - குறிப்புருவகம். 'பெய்ய' என்றவாறு. செஞ்சுடர் வெள்ளம், சிலேடை யுருவகம். 'சிவந்த ஒளியையுடைய வெள்ளம்' என்றும் 'செவ்விய ஞானமாகிய வெள்ளம்' என்றும் பொருள் தந்தது. புதுவெள்ளம் சிவந்து தோன்றுதல் இயல்பு. தீக்கைகள் பலவாய் நிற்றலின் அவற்றை மழைத் துளிகளாகவும், அவை அனைத்தினாலும் விளங்கும் ஞானம் ஒன்றாய் மிக்கெழுதலின், அதனை வெள்ளமாகவும் உருவகம் செய்தார். திசை - இடம். 'திசை திசைதோறும்' என்க. "திசை" என்றது, அடியவரை, தெவிட்டுதல் - நிரம்புதல்.

வரையுற - மலைபோல; இதனை, "ஓங்கி" என்பதற்கு முன் கூட்டுக. கேதம் - குற்றங்கள் அவை, காமம், குரோதம் முதலியன. குட்டம் - பள்ளங்கள். கை அற - தூர்ந்து இடம் அற்றுப்போகுமாறு. ஓங்கி - மேலெழுந்து. இருமுச் சமயம், 'உலகாயதம் பௌத்தம், மீமாஞ்சை, மாயாவாதம், நையாயிகம், பாஞ்சராத்திரம்' என்னும் இவையென்க. இவை களை அடிகள் சில விடங்களிற் கிளந்தோதுதல் அறிக. பேய்த் தேர் - கானல் நீர், சமயங்களைக் கானல் நீர் எனவே, 'மான் கணம் எனப்பட்டோர், விடுபேறு வேண்டி அவற்றில் நின்றோர் என்பது அமைந்து கிடந்தது. மான்களின் கண்கள் அழகும் மருண்ட பார்வையும் உடையனவாய் நுனித்து நோக்கும் இயல்பினவாதலின "நெடுங்கண்" என்றார். அதனானே பொருட்கண்ணும், மெய்ப்பொருளை ஆராயும் ஆராய்ச்சியைத் தலைப்பட்டுப் பல நூல்பற்றிப் பலவாறாக ஐயுற்று நுனித்து ஆராயும் அவரது தன்மை பெறப்பட்டது. 'தவமாகிய வாய்' என்க. வேட்கை மிகுதியால் பருகுதல் தோன்ற, 'பெருவாய்' என்றார். அதனானே, ஞானத்திற்குத் தவமே சிறந்த வாயில் என்பதும் குறித்தவாறாயிற்று. பெருமணல்வெளியில் கடுங் கோடைக்கண் கானல் தம் அருகிலே நிரம்பத் தோன்று மாதலின், அதனை மான்கள் வாய்வைத்துப் பருகும் என்க. பருகினும் வெறுந்தோற்றமாவதன்றி, நீராய் வாயிடைப் புக்கு வேட்கையைத் தணியாமையின், 'அசைந்தன" என்றார். அசைதல் - சோர்தல், அவம், தவத்திற்கு எதிரியதாதலை, "தவம் செய்வார் தங்கருமம் செய்வார்மற்றல்லார் - அவம் செய்வார்" (குறள் - 266.) என்றாற்போல்வனவற்றிற் காண்க. அஃதாவது பற்று நீங்காமை. தாபம் - நீர்வேட்கை. 'அசைந் தனவாகிய அவ்விடத்து' என்க. இது காலத்தைக் குறித்தது. வானப் பேரியாற்று - பெரிய ஆகாய கங்கையைப்போல. அகவயின் - உள்ளிடத்து; என்றது அறிவினை. 'அவ்விடத்தை மூடி மேலெழுந்து, இன்பமாகிய பெரிய சுழிகளை ஆங்காங்கு அழகுபடக் காட்டி' என்றது, 'ஆன்ம போதத்தை விழுங்கிக் கொண்டு, பேரின்பமாகிய கவர்ச்சியைப் பல நிலைகளிலும் தோற்றுவித்து' என்றதாம். சுழித்தல் - கோபித்தல். 'சுளித் தல்' என வருவதும் இதுவே. பந்தம் - மயக்க உணர்வாகிய கட்டு. அஃது அறிவை ஏகதேசப்படுத்தலின், கரையாக உருவகம் செய்தார். 'கரையை இடித்து' என்க. "ஊழ் ஊழ் ஓங்கிய" என்றது, 'முறைமுறையாக வளர்ந்த' எனவும்,

'ஊழின் பயன் தோறும் உண்டாகிப் பெருகிய' எனவும் இரு பொருள் தந்தது. மா மரம் - பெரிய மரத்தை. வேர் பறித்து - வேரோடு பறித்து வீழ்த்தி. எழுந்து - பெருகி. "உருவ அருள் நீர்" என்றதை, 'அருள் உருவ நீர்' எனப் பின்முன்னாக்கி உரைக்க. "அருள் உருவம்" என்றது, திருக்கோயிலுள் இருக்கும் திருமேனியை. அஃது அதனைச் சிவனெனவே காணும் உணர்வையே குறித்தது. ஓட்டா - பல கால்கள் வழியாக எங்கும் ஓடப்பண்ணி. வெள்ளம் பிண்டமும், நீர் பிண்டிக்கப்பட்ட பொருளும் போலக் கோடலின், 'வெள்ளம், நீரை ஓடப் பண்ணியது' என்றார். இவ்வாறே, பொருளினும். சிவஞானம் பிண்டமும், திருமேனியைச் சிவனெனவே காணுதல் முதலியன பிண்டிக்கப்பட்ட பொருளுமாகக் கொள்க. 'கால்கள்' பல தலங்கள் என்க. 'அருவரைச் சந்தின்' என்றதனை, 'சந்து அருவரையின்' என மாற்றி, இடைநிலங்களையுடைய அரிய மலைகள் போல என உரைக்க. வான் சிறை - பெரிய கரை; என்றது, கோயிலின் சுற்றுச் சுவர்களை. கட்டி - கட்டப்பட்டு. மட்டு அவிழ் - தேனோடு மலர்கின்ற. வெறி - வாசனை. குளவாய் - குளப் பரப்பு; என்றது கோயிலின் உள்ளிடத்தை. அங்கு மலர்கள் கொணர்ந்து நிறைக்கப் பெறுதலின், 'மலரையுடைய குளம்' என்றற்கு ஏற்புடையதாயிற்று. கோலி - வரையறுக்கப்பட்டு. கோயிலினுள் எழுப்பப்படும் கரிய அகிற் புகையை வண்டாக உருவகித்தார்; எனவே, "குளம்" என்றது திருக்கோயிலையாயிற்று. கறை - கறுப்பு. 'கரைசேர்' என்பது பாடமன்று. மீக்கொள - மீக்கொள்ளுகையால். மகிழ்வார், ஞானத்தைப் பெற்றவர். 'அது நோக்கி' எனச் செயப்படுபொருள் வருவிக்க. சிவஞானத்தை அடைந்தோர் அதன்பின்னர்த் திருக்கோயில் வழிபாட்டினைச்செய்து, அதனால் அந்த ஞானம் பெருகி இன்பம் பயத்தலை அறிந்து மகிழ்தல் இயல்பாதலை யறிக. தொண்ட உழவர் - தொண்டராகிய உழவர். "தொண்டர்" என்றது, சத்திநிபாதத்து உத்தமராய் ஞானத்தைப் பெற விரும்புவோரை. இருபெயரொட்டும், உயர்திணையாயின், புணரியல் நிலையிடை உணரத் தோன்றும்; (தொல் - எழுத்து 482.) ஏனெனில், 'தொண்ட உழவன், தொண்ட உழத்தி, தொண்ட உழவர்' என்னுங்கால், நிலைமொழி உயர்திணை முப்பாலையும் உணர்த்தி நிற்றலின் என்க. அண்டத்து அரும்பெறல் மேகன் - எவ்வண்டத்திலும் பெறுதற்கரிய மேகம் போன்றவனாயினான். இங்கு 'மேகம்போன்றவன்'

என உவமைவகையாற் கூறியதனை மேல், உருவக வகையால் "கருமாமுகிலின் தோன்றி" என்றாராகலின், கூறியது கூறலாகாமை யறிக.

இவ்வுருவகங்களைத் தொகுத்துக் காணுங்கால், 'பேரின்பமாகிய கடல், ஆசிரியக் கோலமாகிய மேகமாய்த் தோன்றித் திருப்பெருந்துறையாகிய மலையை அடைந்து, எமது பிறவியின் மேற் கோபம் மிகுத்து, முரசு எறிந்தாற்போல அழைப்பொலியாகிய இடிமுழக்கத்தைச் செய்து, அருட்செயல்களும் அருள் மொழிகளுமாகிய நுண்டுளிகளைச் சொரிய, அதன்பயனாகச் செவ்விய ஞானமாகிய வெள்ளம் பலவிடத்தும் உள்ள அடியார்களாகிய இடங்களெல்லாம் நிறையும்படி மலைபோல ஓங்கியெழுந்து, எம் உள்ளத்திடத்துப் பாய்ந்து, இன்பமாகிய சுழிகளை ஆங்காங்கு உளவாக்கி, உருவ வழிபாட்டுணர்வாகிய நீரைப் பல தலங்களாகிய கால்களிலும் ஓடச்செய்து, திருக்கோயிலாகிய குளத்தில் நிறைய, அதனால் சிவஞானம் பெற்ற அப்பெரியோர் மேன்மேலும் மகிழ்ந்து இன்புறுதலின், அதனைக்கண்டு தொண்டர்களாகிய உழவர்கள், வழிபாடாகிய வயலுள், அன்பாகிய விதையை விதைத்து, சிவபோகமாகிய விளைவை நிரம்பத் துய்க்குமாறு அருள்புரிந்த மேகம் போன்றவனாயினான்' என்றாகும்.

இவற்றிடையே, அருளாகிய மழை பொழியுங்கால், திருமேனியின் அழகாகிய மின்னலின் ஒளி எத்திசைகளிலும் விரிந்தன; அழைப்பொலியாகிய இடி முழக்கினால், ஐம்புல அவாவாகிய பாம்புகள் அஞ்சியோடின; அதன்பின் துன்பமாகிய கோடை முழுதும் ஒழிந்தது; இன்பமாகிய தோன்றிப் பூக்கள் அழகாக மலர்ந்தன; அடியவர்களது கூப்பிய கைகளாகிய காந்தள் அரும்புகள் காணப்பட்டன; ஞானமாகிய வெள்ளம் குற்றங்களாகிய பள்ளங்களைத் தூர்த்து, அறியாமையாகிய கரையைத் தாக்கி அலைத்து இடித்துவிட்டது; வினையாகிய பெரிய மரங்களை வேரோடு பறித்து வீழ்த்திற்று; நல்லோராகிய மான்களின் கூட்டம் ஆறு சமயங்களாகிய கானல் நீரைத் தம் தவமாகிய வாய் வழியே பருகியும் ஞானமாகிய நீரைப் பெற்று வீண்முயற்சிகளாகிய தாகம் தணியாது சோர்ந்திருக்குங் காலத்தில், இவையெல்லாம் எங்கள்பால் நிகழ்ந்தன' எனக் கூறப்பட்டது.

இவற்றால், இறைவன் திருப்பெருந்துறையில் ஞானாசிரியனாய் வந்து அடிகளையுள்ளிட்ட அடியார் சிலர்க்கு ஞானத்தை அருளினமை, அவர்களேயன்றி, அஞ்ஞான்று பக்குவம் எய்தினாரும், பின்னர்ப் பக்குவம் எய்துவோரும் ஆகிய ஏனைய அடியவர்களும் பயன்பெறுதற்கு ஏதுவாயினமையை விரித்தவாறு.

இங்ஙனம் இறைவன் அருளாகிய மழையைப் பொழிந்து அடியார்களை வாழ்வித்த சிறப்பினைப் பெரிதும் வியந்து, அவனை வாழ்த்திய அடிகள், இதனைத் தொடர்ந்து மேலும் பலவாற்றால் அவனுக்கு வாழ்த்தும், போற்றியும் கூறுகின்றார்.

96. பணம் - பாம்பின் படம்; அஃது ஆகுபெயராய், அதனையுடைய பாம்பைக் குறித்தது, முன்னின்ற, 'கருமை' யென்னும் அடை, ஆகுபெயர்ப் பொருளாகிய பாம்பை விசேடித்தது, கரிய கச்சு அழகைத் தருவதாதல் அறிக.

97. ஆதி - முதல்வன்,

98. அச்சம் - பிறவிபற்றி வருவது. சேவகன் - வீரன்; இது, பிறர் அது மாட்டாமை உணர நின்றது.

99. நிச்சல் - நித்தல்; போலி. ஈர்த்து ஆளுதல், வலிய அழைத்து ஆட்கொள்ளுதல் பல்வேறிடங்களில், பல்வேறு அடியார்களைப் பல்வேறு வாயால் ஆட்கொள்ளுதலை, இடையறாது செய்தலின், 'நிச்சலும்' என்றார், 'அடியார்களை' என்பது வருவிக்க.

100. சிவஞானத்திற்குத் தடையாகப் பலவாற்றால்வரும் பிராரத்த கன்மங்களின் விளைவை, "சூழ் இருந்துன்பம்" என்றார். துடைத்தல், - விரைந்து வந்து நீக்குதல்; இஃது இப்பொருளதாதலை, விழுமம் துடைத்தவர்" (குறள் - 107.) என்பதன் உரையிற் காண்க,

101. எய்தினர் - தன்னை அடைந்தவர். ஆரமுது - தேவர் உலகத்திலும் கிடைத்தற்கரிய அமுதம்; பேரின்பம்.

102. கூர் இருள் - மிக்க இருளின்கண்; இது மகாசங்கார காலத்தை உணர்த்தும். கூத்தொடு - பல்வகைப்பட்ட கூத்து நிலைகளுடன். குனிப்போன் - நடிப்பவன்.

103. அமை - மூங்கில்.

104. ஏது - இயைபு. 'தன்னோடு இயைதல் இல்லாதவர்க்குத் தானும் இயைதல் இல்லாத இறைவன்' என்க. தமக்கு அவ்வாறின்றிப் பெரிதும் இயைபுடைமை தோன்ற, "எம் இறைவன்" என்றார்.

105. காதலர் - பேரன்புடையவர். எய்ப்பு - இளைத்தல்; இஃது இங்கு, கைப்பொருள் இன்றி வருந்துதலைக் குறித்தது. வைப்பு - இருப்பாக வைக்கப்பட்ட பொருள்; சேமநிதி. 'பொருள் வரவு இல்லாது மெலிவுற்ற நிலையில், முன்பு வைத்துள்ள பொருள் உதவுதல் போல, அடியார்களுக்கு உதவுபவன்' என்றதாம். "எய்ப்பினில் வைப்பு" என்றது, உவம ஆகு பெயர்.

106. சிவபெருமான் உடம்பெங்கும் பாம்பை அணிந்திருப்பினும், ஒரு பாம்பைக் கையிற்பிடித்து ஆட்டுகின்றான் என்பது யாண்டும் கூறப்படும். ஆதலின், "அரவு ஆட்டிய நம்பன்" என்றார். இவ்வாறு கூறுதலைப் பின்னும், தேவாரம் முதலிய திருமுறைகளினும் காண்க. இது பிச்சைக் கோலத்தில் சிறப்பாகக் குறிக்கப்படும். இனி இதற்கு, 'புறம்பயம்' என்னும் தலத்தில் சிவபெருமான் பாம்பாட்டியாய் வந்து விடந்தீர்த்தான் என்பதொரு வரலாற்றினைப் பொருளாக உரைப்பாரும் உளர். நம்பன் - நம்புதற்கு (விரும்புதற்கு) உரியவன்.

107. அறிவை விழுங்கி யெழும் பேரன்பு பித்துப் போல நிற்றலின், அதனை, 'பித்து' என வழங்குப. 'எமைப் பித்தேற்றிய' என்றதை, 'குடும்பத்தைக் குற்றம் மறைத்தான்' (குறள் - 1029) என்பதுபோலக் கொள்க.

108. நீறு - திருநீற்றுப் பூச்சு. இஃது இங்கு ஆசிரியக் கோலத்தைக் குறிப்பால் உணர்த்திற்று. "வல்லோன்' என்றது, 'அவ்வாறு தோன்றி அடியார்களை ஆளவல்லவன்' என்றபடி. 'நாற்றிசையின்கண்ணும்' என, உருபும், முற்றும்மையும் விரிக்க.

109 - 110. நடப்பன - சரம்; நிற்பன - அசரம்; இவை இரண்டும் உயிர் வகைகள். "கிடப்பன" என்றது, 'செயல் இல்லன' என்னும் பொருட்டாய், உயிரில் பொருளைக் குறித்தது.

இஃது இறுதிக்கண் வைக்கற்பாலதாயினும், இசையின்பம் நோக்கி இடைக்கண் வைத்தார். 'நட, கிட' என்னும் தன் வினைப்பகுதிகள், இறுதி நீண்டு அளபெடுத்து, பிறவினைப் பகுதிகளாயின. 'எழூஉ, உறாஉ' முதலியனபோல. எனவே, ஈண்டுப் போந்த அளபெடைகள் யாவும் சொல்லிசை நிறைக்கவே வந்தனவாதல் அறிக. ''நடாஅய், கிடாஅய்'' என்றவற்றில், யகரமெய் வினையெச்ச விகுதி. 'ஆய், போய்' என்பவற்றிற் போல. 'நடப்பனவற்றை நடத்தி, கிடப்பனவற்றைக் கிடத்தி, நிற்பனவற்றை நிறுத்தி' என்றது, 'பல்வேறுவகையான எல்லாப் பொருள்களையும் படைத்து' என்றவாறு.

111. இங்ஙனம், எல்லாவற்றையும் படைப்பினும், தான் அவற்றிற்கு அகப்படாது அப்பாற்பட்டவன் என்றற்கும், 'அவைபோலத் தோன்றி ஒடுங்குபவன் அல்லன்' என்றற்கும், ''சொற்பதங் கடந்த'' என்றும், ''தொல்லோன்'' என்றும் கூறினார். ''சொற்பதம்'' என்றதற்குப் பொருள் மேலே உரைக்கப்பட்டது.

112. உள்ளத்து உணர்ச்சி - கருதலளவை. கொள்ளவும் - கருதவும். கொள்ளுதல், கருதுதல் ஆதலை, 'கொள்கை, கோட்பாடு' என்பவற்றால் அறிக.

113. ''புலன்'' என்றது, பொறியை. 'காட்சி' என்பது, காணப்படுதலைக் குறித்து நிற்றலும் வழக்கேயாதலின், ஈண்டு அவ்வாறு நின்றது.

114. வெளிப்பட - தோன்றும்படி. வகுத்தோன் - வகைபடத் தோற்றுவித்தோன்.

115. உயர்ந்து - சிறந்து. பூவிற்கு நாற்றம் சிறந்தவாறு போல எல்லாப் பொருட்கும் சிறந்தவன் இறைவன் என்றபடி.

116-117. 'பெருமை எளிவந்து' என, பண்பு பண்பியோடு சார்த்தி முடிக்கப்பட்டது. இவ்வாறன்றி, ''இன்றெனக்கு எளிவந்து இருந்தனன்'' எனப் பின்னர் வருவதன் பொருளே இதற்கும் பொருளாக உரைப்பர்.

'எளிது' என்பது ஈறு குன்றி, 'வருதல்' என்பதனோடு புணர்ந்து, 'எளிவருதல்' என நிற்றல் செய்யுள் முடிபு. அவ்வாற்றானே இங்கு 'எளிவந்து' என வந்தது என்க. "அருளி" என்றது, துணைவினை. இதனானே, எளிவந்தது, அருளால் என்பது போந்தது.

118. ஆக்கை - உடம்பு; என்றது, அதன் தன்மையை.

"யாக்கைத்-தன்பரிசும் வினையிரண்டும் சாருமலம் மூன்றும்அற
அன்புபிழம் பாய்த்திரிவார்"

என்று அருளிச்செய்தார் சேக்கிழார் நாயனாரும். (கண்ணப்பர் - பு. 154.) ஒண்பொருள் - தூய்தாகிய பொருளாய் உள்ளவன். 'ஆதலின், எனது யாக்கையின் மாசினை ஒழித்தான்' என்றதாம்.

119. "இருந்தனன்" என்றது வினையாகலின், 'அவனுக்கு' என்பது வருவிக்க.

120. அளிதரல் - நெகிழ்தல்; இஃது அன்பினால் ஆவதாம். எனவே, மேல், "அன்புபிழம்பாய்த் திரிவார்" எனக் காட்டிய நிலையே அடிகள் மாட்டும் அமைந்தமை யறிக.

121. ஊற்று இருந்து - இன்ப ஊற்றாய் உள்ளிருந்து, உள்ளம் - அடியார்களது உள்ளங்களை. களிப்போன் - களிக்கச் செய்வோன். 'களிப்பிப்போன்' என்பது, 'களிப்போன்' எனக் குறைந்து நின்றது. "செய்தோன், களிப்போன்" என்பவற்றில் நான்கனுருபு தொகுத்தலாயிற்று.

122-123, மேல் இறைவனது பெருமையை விதந்தோதிப் போற்றியவர் இனி அவனது அருமையை விதந்தருளிச் செய்கின்றார். தாங்கற்கரிய பேரின்ப வெள்ளம் எங்கும் பரந்து அலையெறியாநிற்ப, அதனைப்பெற்றுப்பேணமாட்டாத மாகடம் பினைச் சுமத்தலாகிய துன்ப நிலையை யான் விண்ணப்பித்திலேன்; ஆயினும்' என்பது இவ்வடிகளின் பொருள். 'ஆயினும்' என்பது சொல்லெச்சம். அது, 'காட்டியருளலும்' என வருவதனோடு (149) முடியும்.

124-126. மரகதம் - பச்சை மணி. குவால் - குவியல். மா மணி - சிறந்த மணி. பிறக்கம் - மிகுதி; இதுவும் குவியல் என்றவாறும். மரகதக் குவியலும், மாணிக்கக் குவியலும் இணைந்து மின்றுகின்ற ஒளியை உடைய ஓர் அழகிய ஒளி; சிவசோதி. இது, 'சத்தியின் கூறுகிய நீல ஒளியையும், தன்கூறுகிய செவ்வொளியையும் கொண்டது' என்பதை. (ऋतं सत्यं परं ब्रह्म पुरुषं कृष्णपिङ्गलम्) 'கிருஷ்ண பிங்களம்' என மகாநாராயணேபநிடதம் கூறுமாற்ருல் அறிக. திகழ - தம்முன் விளங்க. திசை, இங்குக் கீழும், மேலும்; முகன், 'முகம்' என்பதன் போலி, 'பக்கம்' என்பது இதன் பொருள். சிவசோதியை, கீழும் மேலும் சென்று அதன் அடியையும் முடியையும் தேடினேர் திருமாலும், பிரமனும் என்பதும், அவர் அங்ஙனம் தேடிக் கண்டிலர் என்பதும் வெளிப்படை. இது முதலாக, "ஒளித்தும்" என வருவன பலவற்றுள்ளும் உள்ள உம்மைகள் உயர்வு சிறப்பினவாம். இது, தேவர்க்கு அரியனுயினமையை அருளியவாறு.

127. முறையுளி - முறைப்படி. ஒற்றி - மனத்தைப் பொருத்தி. முயன்றவர் - சரியை கிரியைகளைச் செய்தவர், அவர்கட்கும் இறைவன் மறைந்து நின்றே பயன் தருதலின், "ஒளித்தும்" என்ருர்.

128-129. யோகநெறியில் தியான சமாதிகளில் நிற்ப வரை, "ஒற்றுமைகொண்டு நோக்கும் உள்ளத்து உறைப்பவர்" என்ருர். உறைத்தல் - பிறழாது அழுந்தி நிற்றல். உலகருள் இவர் தம் சுற்றத்தார் இவரது செயலைக்கண்டு இரங்குவராத லின், "உற்றவர் வருந்த" என்ருர். இவர்கள் இறைவனைக் காண்பதும் பாவனையே யாதலின், அவர்கட்கும் இறைவன் தோன்ருனுயினன்.

130. மறைத்திறம் - வேதத்தினது கூறுபாடுகள் அவை, 'கன்ம காண்டம், உபாசன காண்டம், ஞான காண்டம்' என்பன. இவை முறையே, வேள்வி முதலிய கன்மங்களையும் தகர வித்தை முதலிய உபாசனைகளையும், 'தத்துவ ஞானம்' எனப்படும் மெய்ப்பொருள் உணர்வையும் கூறும். வேதத்தின் ஞான காண்டம் முதற்பொருளின் இயல்பைச் சூத்திரம்போலக் குறிப்பாற் கூறுதலல்லது, உரைபோல இனிது விளங்கக் கூருமையின், அதன்வழியானும் இறைவனை உணர்தல்

கூடாதாயிற்று. வேதத்தின் ஏனைய பகுதிகளின்வழி உணரலாகாமை வெளிப்படை 'மறைத்திறத்தால்' என, மூன்றுவது விரிக்க.

131-132. "தந்திரம்" என்றது, சிவாகமங்களல்லாத பிற ஆகமங்களை. காண்டும் - காண்போம். இன் இரண்டும் ஏதுப்பொருளவாய ஐந்தனுருபுகள். "அவ்வயின்" என்றது, முன்னர்ப்போந்த "காண்டும்" என்றதனைச் சுட்டிநிற்றலின், 'அங்ஙனம் காணுதற்கண்' என உரைக்க. இதன்பின், "ஒளித்தும்" என்பது, சிறிதும் தோன்றுமையை. சிறிதும் தோன்றுது மறைதல், புத்த அருக ஆகமங்களின்வழிக் காண லுறுவார்க்காம், அவர் இறைவனைக்காண முயல்வாரல்லரெனின, அஃது உண்மையாயினும், பேரா இயற்கை (குறள் - 370.)யாகிய வீடுபேற்றைப்பெற விழைந்து முயலுதலானும் வீடு சிவபெருமானின் வேறன்றுதலானும் இங்ஙனம் கூறினர். தந்திரம், 'நூல்' எனவும் பொருள்தருமாதலின், சாங்கியம் போல்வனவும் கொள்ளப்படும் என்க.

133 - 135. பாஞ்சராத்திரம், பாசுபதம் முதலிய ஆகமங்களின்வழிக் காண முயல்பவர்களில் சிலர்க்கு ஆண்வடிவாயும், சிலர்க்குப் பெண்வடிவாயும், சிலர்க்கு அஃறிணைப் பொருள் வடிவாயும் தோன்றி மறைந்து தனது உண்மை நிலையைக் காட்டாதொழிதலை இவற்றுட் குறித்தருளினர். ஆண்வடிவில் தோன்றுதல் பாஞ்சராத்திரம், பாசுபதம் முதலிய தந்திரங்களின்வழிக் காணப்புகுவார்க்கு எனவும், பெண்வடிவில் தோன்றுதல், யாமளம், வாமம் முதலிய தந்திரங்களின்வழிக் காணப்புகுவார்க்கு எனவும், அஃறிணைப்பொருள் வடிவில் தோன்றுதல், மிருதி முதலியவற்றின்வழிக் காணப்புகுவார்க்கு எனவும் கொள்க. மிருதிமுதலியவற்றின்வழி நிற்போர் மந்திரங்கள், ஞாயிறு முதலிய சுடர்கள், கங்கைமுதலிய பல தீர்த்தங்கள் முதலானவையே பயன் தருவன எனக்கருதி வழிபடுவோராதல் அறிக. இவற்றை இறைவன் புத்தர் முதலியோரைப்போல வெறுத்தொதுக்காது, அருளோடு நோக்கி, இன்னும் தன்னை மிக அணுகிவருமாறு பற்றிக்கொண்டு, இவ்வாற்றுலெல்லாம் பயன் தருதலால், "முனிவற நோக்கி நனிவரக் கௌவி" என்றும், அவ்வாறு அருளினும் தனது உண்மை இயல்பை

இவர்கட்குக் காட்டாமையின், " ஒளித்தும் " என்றும் அருளிச்செய்தார். எனவே, " அவ்வயின் ஒளித்தும் " என்றது, இத் தந்திரத்திற் காண்டும் என்று இருந்தோருள் ஒருசாரார்க்கு என்பதும், தோன்றி, பெயர்ந்து ஒளித்தும் " என்றது, அவருள் வேறு சில சாரார்க்கு என்பதும் போந்தன. இத்துணையும் மக்களுள் இல்லற நிலையில் நிற்பார்க்கு அரியனாயினமை கூறிய வாறு.

136 - 138. " சேண்வயின் " என்றதனை, இவற்றோடு கூட்டுக. ஐம்புலன் - ஐம்புல ஆசை ; ' அவற்றைச் சேண்வயின் நீங்கப் போக்கி ' என்க. சேண்வயின் - சேயதாய இடம். அருவரை - ஏறுதற்கு அரிய மலை. துற்றவை - உண்டவை ; நுகர்ந்த இன்பங்கள். " துறந்த " என்றது, ' வெறுத்துநின்ற ' என்றவாறு. ' வெற்றாக்கை, உயிராக்கை ' எனத் தனித்தனி இயையும். உணவைத் தானும் உண்ணாது விடுத்தலின், " வெற்றாக்கை " என்றார். ' வெற்றாக்கை ' என்றே ஒழியின், ' உயிரில்லது ' எனப் பொருள்படுமாகலின், ' உயிராக்கை ' என்றும் அருளினார். தவர் - நீர்பலகால் மூழ்கல் முதலிய நாலிருவழக்கினையுடைய தாபதர்கள் (பு. வெ. மா. 168.). காட்சி - அறிவு. இருந்த - அறிவராய் (ஞானிகளாய்)த் திருந்துமாறு. இது, துறவற நிலையில் நின்றார்க்கு அரியனாயினமை அருளிய வாறு. இவர் கிரியா குருவைப் பெற்று இந்நிலையில் நின்றதல்லது ஞான குருவைப் பெறாமையின், இவர்க்கு இறைவனது உண்மை இயல்பு விளங்காதாயிற்று.

139. அறிவு, அனுபவமுடைய நல்லாசிரியரால் அறிவுறுக்கப்பெற்ற உண்மைப் பொருளைப் பெற்ற அறிவு. அது, பின்னர் அப்பொருளை அளவைகளானும் பொருந்துமாற்றானும் ஆராய்தலை, " ஒன்று உண்டு, இல்லை என்ற " என்றார். ' ஒன்றாகிய மெய்ப்பொருள் உண்டு என்றும், இல்லை என்றும் ஆராய்ந்த ' என உரைக்க. இங்ஙனம் ஆராயுங்காலத்து, இறைவன் எல்லாமாய் நிற்கும் கலப்புநிலை விளங்குவதன்றி, அவன் தன்னியல்பில் நிற்கும் உண்மைநிலை விளங்காமையின், இறைவன் இவர்க்கும் ஒளிப்பவனேயாகின்றான். ' என்ற ' என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று.

140 - 145. பண்டு, சரியை கிரியை யோகங்களைச் செய்து போந்த காலம். நல்லாசிரியர்பாற் கேட்டுச் சிந்தித்தகாலத்தை,

'இன்று' என்றனர் என்க. ஏகாரங்கள் இரண்டும் பிரிநிலை. அவற்றாற் பிரிக்கப்பட்டு நின்றவை, அவை அடுத்து நின்ற காலத்திற்குப் பிற்பட்ட காலங்கள். சோரன் - கள்வன். தெளிதல் உணர்வில் விளங்கிய அருள் நிலையைக் கண்டு, 'கண்டனம்' என்றனர். எனினும், நிட்டை நிலையை அடையாமையின், தம்முனைப்பால் பல கூறுவாராயினர். ஆர்மின் - கட்டுங்கள். கள்வன் அகப்படிற் கட்டுதல் இயல்பு. அடுக்கு, விரைவுபற்றி வந்தது. எனவே, இந்நிலையிலும் ஒளிப்பான் எனக் கருதினமை பெறப்பட்டது. நாள் மலர்ப் பிணையல் - அன்றலர்ந்த மலர்களாலாகிய மாலை. தாள் - கால். தளை - விலங்கு. ஒளித்தல் பற்றி, 'சோரன்' என்றாராயினும், அன்பாற் செய்யும் வழிபாட்டினாலல்லது அவனை அகப்படுத்தல் இயலாது என்பதை உணர்வார் ஆதலின், 'நாண்மலர்ப் பிணையலில் தாள்தளை இடுமின்' என்றனர். கட்டுதலும், தளையிடுதலும் வேறு வேறுதல் அறிக. இங்ஙனம் விரையவும், நீங்க முயலுதல்பற்றி, 'சுற்றுமின் (வளையுங்கள்)' என்றும், அஃது இயலாமையின், 'சூழ்மின் (என்செய்வதென்று ஆராயுங்கள்)' என்றும், அங்ஙனம் ஆராய்வதற்குள் நீங்கினமையின், 'தொடர்மின், விடேன்மின், பற்றுமின்' என்றுங் கூறி அலமந்தனர். அவர் அங்ஙனம் அலமரவும். இறைவன் அவரது பற்றினின்றும் (பிடியினின்றும்) முற்ற ஒளித்தான். அஃதாவது அருள் நிலையைத் தந்ததன்றி, ஆனந்த நிலையைத் தாராதொழிந்தனன் என்றதாம். 'பற்றின்' என, நீக்கப்பொருட்கண் வந்த இன்னுருபு விரிக்க. 'முற்ற' என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று.

"ஒளித்தும், ஒளித்தும்" எனவந்த எச்சங்கள் எல்லாம், "என்னேரனையோர் கேட்க வந்து என்றதில் 'வந்து' என்றதனோடு முடியும். "தன்னேரில்லோன்" என்றது, இறைவன்' என்னும் அளவாய் நின்றது, மேற்கூறியவாறெல்லாம் முயன்றார் பலர்க்கும் தனது உண்மை நிலையைக் காட்டாது ஒளித்த இறைவன், அதனை என்போல்வார் கேட்டுணரும்படி நேரே எழுந்தருளி வந்து இயம்பியருளினன்' என்று அடிகள் அன்புமீதூரப்பெற்று அருளுதல் காண்க. "நேரனையோர்" ஒரு பொருட் பன்மொழி. 'என்போல்வார்' என்றது, மேற்கூறிய முயற்சிகளுள் ஒன்றும் செய்யாது, உலகியலில் நின்றவர்களை. இறைவனது பெருங்கருணைத்திறத்தை அடிகள்

இங்ஙனம் அருளிச்செய்தாராயினும், இவரது முன்னைத் தவமுதிர்ச்சியின் பயனே அங்ஙனம் இறைவன் நேர்நின்று ஆட்கொண்டது என்க. இஃது இத்திருமுறையுள் யாண்டும் ஒக்கும். முயலாது நின்ற நிலையில் வலியவந்து ஆண்டருளிய தையே ''அறைகூவி ஆட்கொண்டருளி'' என்று அருளிச் செய்தார். இயம்பி ஆட்கொண்ட பின்னரும் நீங்காது உடனிருந்தமை தோன்ற, 'மறையோர் கோலத்தனாய் வந்து ஆட்கொண்டருளி' என்னாது, 'வந்து ஆட்கொண்டருளி. 'மறையோர் கோலம் காட்டியருளலும்' என்றார். காட்டியருள லும் ஆற்றேனாக' என இயையும்.

150-157. உளையா அன்பு - வருந்திப்பெறாத-இயல்பாகத் தோன்றிய அன்பு. 'உலையா அன்பு' என்பதே பாடமாகல் வேண்டும். 'அன்பினால்' என உருபு விரிக்க, 'என்பும்' எனவும் இழிவு சிறப்பும்மை தொக்கது. உருகும் இயல் பின்மை, 'எலும்பிற்கு இழிவு என்க. அலைகடல் - அலைகின்ற கடல் நீர், திரையின் - அலைகள்போல. ஆர்த்து - ஆரவாரித்து, கடலில் ஆரவாரம் செய்வன அலைகளேயாதல் அறிக. ஓங்கி - துள்ளி. தலை தடுமாறு - தலை கீழாம்படி. மத்தம் - உன் மத்தம். பித்து தொடக்க நிலை; மத்தம், முதிர்ந்த நிலை. மதித்தல் - மத்திட்டுக் கலக்குதல்; இங்கு அதுபோல உலகில் உள்ளாரது உள்ளங்களை வியப்பாலும், அச்சத்தாலும் நிலை குலையச் செய்தமையைக் குறித்தது. ஆனேற்றை, ''ஏற்று'' என்றார். ''தடப்பெரு'' ஒரு பொருட் பன்மொழி. ஆனேறு களும் மதங்கொள்ளுதல் இயல்பு. 'களிறு ஏற்று இவற்றின் மிகப்பெருமதம் அவற்றால் ஆற்றவொண்ணாமைபோல, இறைவ னால் ஆட்கொள்ளப்பெற்ற களிப்பை யான் ஆற்றேனாய் நிற்க' என்க. ''ஆற்றேனாக'' என்றதன்பின், 'அந்நிலையில்' என்பது வருவிக்க. ''அவயவம்' என்றதற்கு, 'என் உறுப்புக்களை' என உரைக்க. கோல்தேன் - கொம்புத்தேன். ''செய்தனன்'' என்றது, 'செய்தாற்போல ஆக்கினான்' என்றபடி. அஃதாவது 'உள்ளமும் உடலும் ஒருங்கே இன்பவெள்ளத்தில் மூழ்கச் செய்தனன்' என்றதாம்.

158-162. ஏற்றார் - தனது போரினை ஏற்றுக்கொண்டவர், ''மூதூர்'' என்றது, திரிபுரத்தை, 'மூதூரை வீழ்வித்து' என இயையும். ஆங்கு, உவம உருபு. ''அன்று'' என்றதனை,

முதற்கண், கூட்டுக. "அருட்பெருந் தீ" என்றது, சோதியை, "கருவார் சோதி" (கீர்த்தி - 55.) என்றது காண்க. அடிக் குடில் - முதலிற் கிடைத்த சிறிய இல்லம்; உடம்பு. 'வாழாமை' என்பது குறுகிநின்றது. 'அடியோங்களது அடிக் குடிலுள் ஒருத்தரும் வாழாதபடி, அருட்பெருந்தியின் ஒடுக்கினன்' என்க. "எனக்கு" எனப் பின்னர்த் தம்மை வேறு கூறலின், "ஒருத்தரும்" என்றது, அடிகளை ஒழிந்தோரையேயாம். ஆயினும், யானும் அக்குடிலில் இருக்க 'என்னை ஒடுக்கா தொழிந்தனன்' என்பது தோன்ற, 'அடியார் அடிக்குடில்' என்னாது, "அடியோம் அடிக்குடில்" என்றார். இறைவன் அந்தணனாய் வந்து நிகழ்த்தியன பலவுங் கூறுகின்றாராதலின், பிறர்க்கு அருளியவற்றையும் கூறினார் என்க. தடக் கை - பெரிய கை; என்றது, தடங் கண், தடஞ் சோலை முதலியன போல, அகன்ற அகங்கையைக் குறித்தது. சுவையுடைய பொருள்களில், கனிகள் சிறந்தவை. அது, "கனியிருப்பக் காய்கவர்ந்தற்று", (குறள்-100.) "கனிதந்தால் கனி உண்ண வும் வல்லீரே" (திருமுறை 5-91. 7.) என்றாற்போல்வனவற்றா லும் அறியப்படும். இனி, கனிகளுள் நெல்லிக்கனி சிறந்தது என்பது, ஔவையார்க்கு அதியமான் நெல்லிக்கனி யளித்தமை முதலியவற்றால் விளங்கும். அதனால், 'அங்கை நெல்லிக்கனி' என்னும் உவமை, "யானைதன் - கோட்டிடை வைத்த கவளம்" (புறம்-101.) என்பதுபோல, தப்பாது பயன்படுதலைக் குறிப்ப தாம். ஆகவே, இப்பகுதியால், பலருக்கு ஒளித்த இறைவன், என்போல்வரை அறைகூவியாட்கொள்ளுதலை மேற்கொண்டு, எனக்கும் ஆசிரியத் திருமேனியைக் காட்டி, உள்ளத்தையே யன்றி உடம்பையும் இன்ப வடிவாக்கி, பின் உடம்பளவில் நில்லாது எங்குமாய் நிறைந்து நுகரும் இன்பத்தை ஒருதலையாக எய்துவிக்க இசைந்தனன்' என்றவாறாயிற்று. 'இறைவன் தமக்கு, எங்குமாய் நிறைந்து நுகரும் இன்பத்தினை எய்து வித்தல் ஒருதலை' என்பதை, அவன் வாளா செல்லாது, "நலமலி தில்லையுட் கோலமார்தரு பொதுவினில் வருக" (கீர்த்தி-127.) என்று அருளிச்சென்றமையால் உணர்ந்தார் என்க. இஃது உணர்ந்தாராயினும், 'ஏனைய அடியார்கட்கு இறைவன் வாயுட் புக்க நெல்லிக்கனியாயினன்; எனக்குக் கையிற்புக்க நெல்லிக்கனியாயினன்' என்ற பொருளையும், 'எனக்குத் தடக்கையின் நெல்லிக்கனியாயினன்' என்ற உவமையால் தோற்றுவித்தார், எனவே, இனி வருகின்ற

ஐந்தடிகளையும் தமக்கு அருளிய அருமையும், ஏனையோர்போல விரைந்து செல்ல அருளாமையும் என்னும் இருகருத்தும் பற்றியே வருவனவாகக் கொள்க.

163 - 167. வாழி, அசைநிலை. செய்தது - இந்நிலையினன் ஆக்கியது. 'ஆவா, செத்தேன்' என்னும் இடைச்சொற்கள், 'வியப்பும், அவலமும்' என்னும் இருகுறிப்பினும் வருவனவாம். ஒல்லகில்லேன் - ஆற்றமாட்டேன்; முற்றப் பெற்றிலேன். 'வாரிக்கொண்டு - விழுங்குகின்றேன் விக்கினேன்' (அடைக் கலப் பத்து-11.) என்று அருளுதலும் காண்க.

168 - 177. இனி, 'அவயவம் கோற்றேன் கொண்டுசெய் தனன்' என மேல் தொகுத்துணர்த்தியதனை, ஈண்டு வகுத்து உணர்த்துகின்றார். புரைவித்து - ஒப்பாகச் செய்து. உவா - பௌர்ணமி. நள்ளுநீர் - மிகுகின்ற நீர். 'உவா நாளிற் கடலின்கண் மிகுகின்ற நீர்போல, நெஞ்சிடமெல்லாம் நிறையும்படி' என்க. 'இறந்த' என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. "வாக்கிறந் தமுதம்" என்றதனை "உவாக் கடல்" என்ற அடியின் முன்னே கூட்டி, இரண்டனை யும், "செழுந்தண் பாற்கடல்" என்பதற்கு முன்னேவைத் துரைக்க. வாக்கிறந்த அமுதம் - சொல்ல வாராத பேரின்பம். 'அஃது உள்ளகத்தில் ததும்புமாறு பாற்கடல் திரைபோல வித்து' என்க. உவாநாளிற் பொங்கக் காண்டல் நீர்க்கட லிடத்தே யாதலின், மிகுதற்கு அதனையே உவமை கூறினார். இனிமைக்குப் பாற்கடலை உவமை கூறினார். நாய் - நாய்போ லும் எனது. குரம்பை - கட்டு; குடில். "குரம்பைகொண்டு" என்றது, 'இடமாகக்கொண்டு' என்றபடி. குரம்பைதோறும் - உடம்பில் உள்ள பல கட்டுக்களில் எல்லாம். "புன்புலால் யாக்கை புரைபுரை கனிய" (கோயில்-3.) எனப் பின்னரும் வருவது காண்க. "குரம்பைதோறும்" என்றதை, "குரம்பை கொண்டு" என்றதன் பின்னர்க் கூட்டுக. மேல், உள்ளத்தை நிறைத்தமை கூறினார்; இங்கு, உடம்பினுள் பல பகுதிகளை நிறைத்தமை கூறினார். 'பாய்' என்னும் தன்வினைப் பகுதி, பிறவினையுணர்த்தும் துவ்விறு பெற்று, 'பாய்த்து' என நிற்ற லின், வினையெச்சத்தின்கண் இகர ஈறாயிற்று. இது, 'பாய்ச்சி' என வருதல் பெரும்பான்மை. அற்புதம் - அதிசயம். என்பு- 'எற்பு' எனத் திரிந்தது, 'உருகும் உள்ளம் என்ற ஒன்று கொண்டே ஓர் உடம்பைச் செய்தாற்போல, அன்பு கரந்து

பெருகுகின்ற உடம்பை எனக்கு அமைத்தனன்' என்க. அன்பு பெருகும் வழியே இன்பமும் பெருகுமாதலின், இதனையும் அருளிச்செய்தார். அள் - மிகுதி.

178 - 181. 'என்னையும் கடைமுறை களிறு என இருப்ப தாக்கினன்' என இயைக்க. "என்னையும்" என்ற உம்மை, உயர்வு சிறப்பு. உயர்வு, மேற்கூறியவாற்றால், பொருளும், பேரன்பும், பேரின்பமும் பெற்றமை. "ஒள்ளிய" என்றது, 'உணவாதற்குச் சிறந்த' என்றவாறு. கன்னல் - கரும்பு. கனி, வாழை முதலியனவாக ஏற்பன கொள்க. உம்மைத் தொகை திரிந்து முடிதலும் உண்மையின் "கன்னற் கனி" என நின்றது. தேர்தல் - தேடி உழலுதல். "இருப்பது" என்பது, தொழிற்பெயராய், வினைமுதற்கு ஆயிற்று. 'இறைவன் பிறர்க்குப்போல எனக்கு அரியனாகாது எளியனாய் வந்து அருள் செய்தும், இறுதியில், தனது பெருவாயையும் பெருவயிற்றையும் நிரப்புதற்பொருட்டு இனிய உணவுகளையே எஞ்ஞான்றும் தேடித் திரிகின்ற யானையைப்போல, உணவைத் தேடி உண்டு இப்பூமியின்கண் இருக்குமபடி விட்டுச் சென்றான்' என்றபடி. "இருகை யானையை ஒத்திருந் தென்னுளக் - கருவை யான் கண்டிலேன்" (திருச்சதகம், - 41.) "பொய்யனேன் நான் உண்டுடுத்திங் கிருப்பதானேன்" (ஷை - 52.) எனப் பின்னரும் கூறுதல் காண்க. "இருப்பதாக்கினன்" என்றதன்பின், 'ஆகையால்' என்பது வருவிக்க. 'என்னின் அமுதாக்கினன்' என இயையும். என்னின் - என்னால். கருணை வான் தேன் கலக்க - தனது திருவருளாகிய உயர்ந்ததேன் கலந்திருக்க. அருளொடு - அவ்வருள் நினைவோடே. பராவு - துதிக்கின்ற. அமுது - அமுதம் போன்ற பாடல்களை. ஆக்கினன் - உளவாகச் செய்தான். இதனால், திருவாசகம், திருக்கோவையார் என்னும் இருதிறத்துத் திருப்பாட்டுக்களும் வெளிவந்து உலகிற்குப் பெரும் பயன் தருதற் பொருட்டே அடிகளை இறைவன் இந் நிலவுலகத்திற் சிறிதுகாலம் எழுந்தருளியிருக்கும்படி விட்டுச் சென்றனன் என்பது நன்கு பெறப்படுதல் காண்க. இன்னும் இதனையே, மேல், "பரமானந்தப் பழங்கடல்" என்பது முத லாக உருவகவகையால் விரித்தோதி, இறுதியில், "தொண்ட உழவர் ஆரத் தந்த" என்றதும், அனைவரும் தன்னைப் பாடிப் பரவித் தனது திருவடிக்கண் அன்பு மிக்குத் தனது பேரின் பத்தைப் பெறுமாறு அடிகளது திருமொழியை இறைவன்

உலகிற்கு அளித்தருளினன் என்பதனையே குறிப்பான் உணர்த்தியதாதல் பெறப்படும். இதுகொண்டே சிவப்பிரகாச அடிகள், தமது நால்வர் நான்மணி மாலையில் "நலமலி கங்கை" என்னும் பாட்டினுள் "திருவாசகம் எனும் பெருநீர்" என உருவகித்து, முன்னும் பின்னும் முற்றுருவக நலம் நனிசிறந்து விளங்க அடிகளது திருமொழியின் பெருமையை இனிது விளக்கினர் என்க. "நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனை" எனப் பின்னரும் (திருக்கோத்தும்பி - 12.) வருதல் காணத் தக்கது. "பத்திமையாற் பணிந்தடியேன் றன்னைப் பன்னாள் - பாமாலை பலபாடப் பயில்வித்தானை" (திருமுறை - 6. 54. 3.) என்றருளிச்செய்தார், திருநாவுக்கரசு நாயனாரும். ஞானசம்பந்தரும், நம்பியாரூரரும்போல, நாவுக்கரசரும், வாதவூரடிகளும் தம் திருமொழியின் பெருமைகளைப் பலவிடத்தும் இனிது விளங்க எடுத்தோதி யருளாதுபோயினும், இவ்வாறு ஒரோவிடத்துக் குறிப்பால் தோன்ற அருளிச்செய்தலைக் குறிக்கொண்டு உணர்தல் நம்மனோர்க்குத் தலையாய கடனாகும்.

182. பெற்றி - தன்மை "பிரமன் மால் அறியாப் பெற்றியோன்" என்றது, 'அவன்' என்னும் சுட்டுப் பெயரளவாய் நின்றது. இதனை, "ஒல்லகில்லேன்" (167) என்றதன் பினனர்க் கூட்டி, இதன் பின்னர், 'இவ்வாறு' என்பது வருவித்துரைக்க.

இத்திருப்பாட்டில் சொற்கள் பொருள் இயைபுபட நிற்குமாறு :-

ஆறும் அடியிற் போந்த, "பெரியோன்" என்னும் குறிப்பு வினைப்பெயர் எழுவாயாய் நின்று, பன்னிரண்டாம் அடியிற் போந்த "குழகன்" என்பது முதலாக, தொண்ணூற்றைந்தாம் அடியிற்போந்த, "மேகன்" என்பது ஈறாக நின்ற பெயர்ப் பயனிலைகளைக் கொண்டு முடிந்தது.

"மேகன்" என்றதன்பின் எஞ்சி நின்ற 'அவன்' என்பது முதலாக, நூற்றைந்தாம் அடியிற்போந்த, "வைப்பு" என்பது ஈறாக நின்ற பெயர்கள் பலவும் எழுவாயாய் நின்று, ஆங்காங்கே போந்த "வாழ்க" என்னும் வினைப்பயனிலையோடே முடிந்தன. நூற்று ஆறுவது முதலிய மூன்றடிகளிலும் போந்த, "நம்பன்" முதலிய மூன்று பெயர்களும், தொக்கு நின்ற நான்கனுருபை

ஏற்று, ஆங்காங்குப் போந்த, ''போற்றி' என்ற தொழிற் பெயர்ப் பயனிலைகளோடு முடிந்தன. நான்கனுருபு பெயரோடு முடிதலும் இயல்பே.

நூற்றுப் பதினொன்றும் அடியிற் போந்த, 'தொல்லோன்' என்பது முதலாக, நூற்றுப் பதினெட்டாம் அடியிற் போந்த, ''ஒண்பொருள்' என்பது ஈறாக நின்ற ஐந்து பெயர்களும் எழுவாயாய் நின்று, நூற்றுப் பத்தொன்பதாம் அடியிற் போந்த 'இருந்தனன்' என்னும் வினைப்பயனிலையைக் கொண்டு முடிய அதன்பின் எஞ்சி நின்ற, 'அவனுக்கு' என்பது, அவ்விடத்தே நின்ற ''போற்றி'' என்பதனோடு முடிந்தது. நூற்றிருபது. இருபத்தொன்றும் அடிகளின் முடிபுகளும் அவ்வாறுதல் வெளிப்படை.

நூற்று இருபத்திரண்டாவது முதலாக, நூற்று ஐம்பத்தேழாவது ஈறாக உள்ள அடிகளிற் போந்த சொற்கள், 'யான் புகலேனாகவும், தன்னேரில்லோன் பலர்க்கும் ஒளித்தும், என்னேரனையோர் கேட்க வந்து தானேயான தன்மையை இயம்பி ஆட்கொண்டருளி மறையோர் கோலம் காட்டியருளலும், யான், ஓலமிட்டு ஆர்த்தார்த்து, ஓங்கி வீழ்ந்து புரண்டு, அலறி, பயங்கி, மதித்து ஆற்றேனாகும்படி, என் அவயவங்களைக் கோற்றேன் கொண்டு செய்தனன்' என முடிந்தன.

நூற்று ஐம்பத்தெட்டு முதலாக, நூற்று அறுபத்திரண்டு ஈறாக உள்ள அடிகளுக்கு மேற்போந்த பெயர்களே எழுவாயாய் நின்று, ''ஒடுக்கினன்'', ''ஆயினன்'' என்னும் வினைப் பயனிலைகளைக் கொண்டு முடிந்தன.

நூற்று அறுபத்துமூன்று முதலாக, நூற்று அறுபத்தேழு ஈறாக உள்ள அடிகளில், 'யான்' என்பது தோன்றா எழுவாயாய் நின்று, ''அறியேன்'' என்பது முதலாக ''ஒல்லகில்லேன்'' என்பது ஈறாகப் போந்த வினைப் பயனிலைகளைக் கொண்டு முடிந்தது.

ஈற்றடி, நூற்று அறுபத்தேழாம் அடியின் பின் வந்து நிற்ப, அதன்கண் உள்ள, ''பெற்றியோன்'' என்னும் பெயர் எழுவாயாய், நூற்று அறுபத்தெட்டாவது முதலாக, நூற்று எண்பத்தொன்றாவது ஈறாக உள்ள அடிகளிற் போந்த,

''புரைவித்து தேக்கிடச்செய்தனன், இன்தேன் பாய்த்தி அமுத தாரைகள் ஏற்றினன், அள்ளூருக்கை அமைத்தனன். என்னையும் இருப்பதாக்கினன், என்னின் பாரவமுது ஆக்கினன்'' என்னும் பயனிலைகளோடு முடிந்தன. ''கண்ணால் யானும் கண்டேன்'' என்பது முதலிய ஆறடிகளும் இடைநிலையாயும், அவற்றை அடுத்துப்போந்த இரண்டடிகளும், பின் வருவனவற்றிற்குத் தோற்றுவாயாயும் நின்றன. ''நினை தோறும் ஆற்றேன் அந்தோ கெடுவேன்'' என்றனவும் இடைநிலையேயாம். இங்ஙனமாகவே, இதனுள் முதற்கண் இறைவனது பெருமைகளை வியந்து கூறி, இடைக்கண் அவனை வாழ்த்துதலும், போற்றுதலும் செய்து, இறுதிக்கண் தமக்கு அவன் செய்த திருவருள் முறையினைக் கூறி முடித்தருளிய வாறுதல் காண்க.

திருவாதவூரடிகள் புராணம்

முக்கணொரு நான்குபுய வைந்துமுக முன்னோன்
சொக்கனரு ளன்மைபெறு தொன்மைதிகழ் நன்னா
டக்கடுவி டத்தையர னுக்கருள்வ தென்றே
மைக்கடலில் வைகலொழி வைகைவள நாடு. 1

நீண்டகயி லைக்கிறை நிகழ்த்தவரு ளாலே
பூண்டமுனி மெய்த்தமிழ் புகன்றதிரு நாடு
மூண்டபகை செற்றுலக முற்றுமர சாளும்
பாண்டிய னலங்குலவு பாண்டிவள நாடு. 2

மேவுமூர் வளம்பலவு மிகுந்துளநா டதனுணலம்
பாவுமூர் பழமறைதே ரந்தணர்கள் பயின்றுளவூர்
தாவுமூர் விடையேறி தங்கியவூ ரங்குறையுந்
தேவரூ ரினுமேன்மை சிறந்ததிரு வாதவூர். 3

4. போற்றித் திருவகவல்

நிலைமண்டில ஆசிரியப்பா

திருச்சிற்றம்பலம்

நான்முகன் முதலா வானவர் தொழுதெழ
ஈரடி யாலே மூவுல களந்து
நாற்றிசை முனிவரும் ஐம்புலன் மலரப்
போற்றிசெய் கதிர்முடித் திருநெடு மாலன்
றடிமுடி யறியும் ஆதர வதனிற்
கடுமுரண் ஏன மாகி முன்கலந்
தேழ்தலம் உருவ இடந்து பின்னெய்த்
தூழி முதல்வ சயசய என்று
வழுத்தியுங் காணா மலரடி யிணைகள்
வழுத்துதற் கெளிதாய் வார்கடல் உலகினில்
யானை முதலா எறும்பீ றாய
ஊனமி லியோனியி னுள்வினை பிழைத்தும்
மானுடப் பிறப்பினுள் மாதா உதரத்
தீனமில் கிருமிச் செருவினிற் பிழைத்தும்
ஒருமதித் தான்றியின் இருமையிற் பிழைத்தும்
இருமதி விளைவின் ஒருமையிற் பிழைத்தும்
மும்மதி தன்னுள் அம்மதம் பிழைத்தும்
ஈரிரு திங்களிற் பேரிருள் பிழைத்தும்
அஞ்சு திங்களின் முஞ்சுதல் பிழைத்தும்
ஆறு திங்களின் நூறலர் பிழைத்தும்
ஏழு திங்களில் தாழ்புவி பிழைத்தும்
எட்டுத் திங்களிற் கட்டமும் பிழைத்தும்
ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்தும்

தக்க தசமதி தாயொடு தான்படுந்
துக்க சாகரத் துயரிடைப் பிழைத்தும்

ஆண்டுகள் தோறும் அடைந்தஅக் காலை
ஈண்டியும் இருத்தியும் எனைப்பல பிழைத்தும்

காலை மலமொடு கடும்பகற் பசிநிசி
வேலை நித்திரை யாத்திரை பிழைத்தும்

கருங்குழற் செவ்வாய் வெண்ணகைக் கார்மயில்
ஒருங்கிய சாயல் நெருங்கியுள் மதர்த்துக்
கச்சற நிமிர்ந்து கதிர்த்து முன்பணைத்
தெய்த்திடை வருந்த எழுந்து புடைபரந்
தீர்க்கிடை போகா இளமுலை மாதர்தங்
கூர்த்த நயனக் கொள்ளையிற் பிழைத்தும்

பித்த வுலகர் பெருந்துறைப் பரப்பினுள்
மத்தக் களிறெனும் அவாவிடைப் பிழைத்தும்

கல்வி யென்னும் பல்கடற் பிழைத்தும்

செல்வ மென்னும் அல்லலிற் பிழைத்தும்

நல்குர வென்னுந் தொல்விடம் பிழைத்தும்

புல்வரம் பாய பலதுறைப் பிழைத்துந்
தெய்வ மென்பதோர் சித்தமுண் டாகி
முனிவி லாததோர் பொருளது கருதலும்
ஆறு கோடி மாயா சத்திகள்
வேறு வேறுதம் மாயைகள் தொடங்கின;

ஆத்த மானார் அயல்வர் கூடி
நாத்திகம் பேசி நாத்தழும் பேறினர்;

சுற்ற மென்னுந் தொல்பசுக் குழாங்கள்
பற்றி யழைத்துப் பதறினர் பெருகவும்

விரத மேபர மாகவே தியருஞ்
சரத மாகவே சாத்திரங் காட்டினர்;

சமய வாதிகள் தத்தம் மதங்களே
அமைவ தாக அரற்றி மலைந்தனர் ;

மிண்டிய மாயா வாத மென்னுஞ்
சண்ட மாருதஞ் சுழித்தடித் தாஅர்த்

துலோகா யதனெனும் ஒண்டிறற் பாம்பின்
கலாபே தத்த கடுவிட மெய்தி
அதிற்பெரு மாயை யெனைப்பல சூழவும்

தப்பா மேதாம் பிடித்தது சலியாத்
தழலது கண்ட மெழுகது போலத்
தொழுதுளம் உருகி அழுதுடல் கம்பித்

தாடியும் அலறியும் பாடியும் பரவியுங்
கொடிறும் பேதையுங் கொண்டது விடாதெனும்
படியே யாகிநல் லிடையறா அன்பிற்

பசுமரத் தாணி அறைந்தாற் போலக்
கசிவது பெருகிக் கடலென மறுகி
அகங்குழைந் தனுகுல மாய்மெய் விதிர்த்துச்

சகம்பேய் என்று தம்மைச் சிரிப்ப
நாணது ஒழிந்து நாடவர் பழித்துரை
பூணது வாகக் கோணுத லின்றிச்
சதுரிழந் தறிமால் கொண்டு சாருங்
கதியது பரமா அதிசய மாகக்

கற்று மனமெனக் கதறியும் பதறியும்
மற்றோர் தெய்வங் கனவிலும் நினையா
தருபரத் தொருவன் அவனியில் வந்து
குருபர னாகி அருளிய பெருமையைச்
சிறுமையென் றிகழாதே திருவடி யிணையைப்
பிறிவினை யறியா நிழலது போல
முன்பின் னாகி முனியா தத்திசை
என்புநைந் துருகி நெக்குநெக் கேங்கி
அன்பெனும் ஆறு கரையது புரள

நன்புலன் ஒன்றி நாதஎன் றரற்றி
உரைதடு மாறி உரோமஞ் சிலிர்ப்பக்
கரமலர் மொட்டித் திருதயம் மலரக்
கண்களி கூர நுண்துளி அரும்பச்
சாயா அன்பினை நாடொறுந் தழைப்பவர்
தாயே யாகி வளர்த்தனை போற்றி !

மெய்தரு வேதிய னாகி வினைகெடக்
கைதர வல்ல கடவுள் போற்றி !

ஆடக மதுரை அரசே போற்றி !
கூடல் இலங்கு குருமணி போற்றி !

தென்தில்லை மன்றினுள் ஆடி போற்றி !
இன்றெனக் காரமு தானாய் போற்றி !

மூவா நான்மறை முதல்வா போற்றி !
சேவார் வெல்கொடிச் சிவனே போற்றி !

மின்னா ருருவ விகிர்தா போற்றி !
கல்நார் உரித்த கனியே போற்றி !

காவாய் கனகக் குன்றே போற்றி !
ஆவா என்றனக் கருளாய் போற்றி !

படைப்பாய் காப்பாய் துடைப்பாய் போற்றி !
இடரைக் களையும் எந்தாய் போற்றி !

ஈச போற்றி ! இறைவ போற்றி !
தேசப் பளிங்கின் திரளே போற்றி !

அரைசே போற்றி ! அமுதே போற்றி !
விரைசேர் சரண விகிர்தா போற்றி !

வேதி போற்றி ! விமலா போற்றி !
ஆதி போற்றி ! அறிவே போற்றி !

கதியே போற்றி ! கனியே போற்றி !
நதிசேர் செஞ்சடை நம்பா போற்றி !

உடையாய் போற்றி! உணர்வே போற்றி!
கடையேன் அடிமை கண்டாய் போற்றி!

ஐயா போற்றி! அணுவே போற்றி!
சைவா போற்றி! தலைவா போற்றி!

குறியே போற்றி! குணமே போற்றி!
நெறியே போற்றி! நினைவே போற்றி!

வானோர்க் கரிய மருந்தே போற்றி!
ஏனோர்க் கெளிய இறைவா போற்றி!

மூவேழ் சுற்றம் முரணுறு நரகிடை
ஆழா மேயருள் அரசே போற்றி!

தோழா போற்றி! துணைவா போற்றி!
வாழ்வே போற்றி! என் வைப்பே போற்றி!

முத்தா போற்றி! முதல்வா போற்றி!
அத்தா போற்றி! அரனே போற்றி!

உரையுணர் விறந்த ஒருவ போற்றி!
விரிகடல் உலகின் விளைவே போற்றி!

அருமையில் எளிய அழகே போற்றி!
கருமுகி லாகிய கண்ணே போற்றி!

மன்னிய திருவருள் மலையே போற்றி!
என்னையும் ஒருவ னாக்கி இருங்கழல்
சென்னியில் வைத்த சேவக போற்றி!

தொழுதகை துன்பந் துடைப்பாய் போற்றி!
அழிவிலா ஆனந்த வாரி போற்றி!
அழிவதும் ஆவதுங் கடந்தாய் போற்றி!
முழுவதும் இறந்த முதல்வா போற்றி!

மானேர் நோக்கி மணாளா போற்றி!
வானகத் தமரர் தாயே போற்றி!

பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி !
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி !
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி !
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி !
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி !
அளிபவர் உள்ளத் தமுதே போற்றி !

கனவிலுந் தேவர்க் கரியாய் போற்றி !
நனவிலும் நாயேற் கருளினை போற்றி !

இடைமரு துறையும் எந்தாய் போற்றி !
சடையிடைக் கங்கை தரித்தாய் போற்றி !

ஆரூ ரமர்ந்த அரசே போற்றி !
சீரார் திருவை யாறா போற்றி !

அண்ணா மலையெம் அண்ணா போற்றி !
கண்ணார் அமுதக் கடலே போற்றி !

ஏகம் பத்துறை யெந்தாய் போற்றி !
பாகம் பெண்ணுரு வானாய் போற்றி !

பராய்த்துறை மேவிய பரனே போற்றி !
சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி !

மற்றோர் பற்றிங் கறியேன் போற்றி !
குற்றா லத்தெங் கூத்தா போற்றி !

கோகழி மேவிய கோவே போற்றி !

ஈங்கோய் மலையெம் எந்தாய் போற்றி !
பாங்கார் பழனத் தழகா போற்றி !

கடம்பூர் மேவிய விடங்கா போற்றி !
அடைந்தவர்க் கருளும் அப்பா போற்றி !

இத்தி தன்னின் கீழிரு மூவர்க்
கத்திக் கருளிய அரசே போற்றி !

தென்னா டுடைய சிவனே போற்றி !
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி !

ஏனக் குருளைக் கருளினை போற்றி !
மானக் கயிலை மலையாய் போற்றி !

அருளிட வேண்டும் அம்மான் போற்றி !
இருள்கெட அருளும் இறைவா போற்றி !

தளர்ந்தேன் அடியேன் தமியேன் போற்றி !
களங்கொளக் கருத அருளாய் போற்றி !

அஞ்சே லென்றிங் கருளாய் போற்றி !
நஞ்சே அமுதா நயந்தாய் போற்றி !

அத்தா போற்றி! ஐயா போற்றி !
நித்தா போற்றி! நிமலா போற்றி !
பத்தா போற்றி! பவனே போற்றி !

பெரியாய் போற்றி! பிரானே போற்றி !
அரியாய் போற்றி! அமலா போற்றி !

மறையோர் கோல நெறியே போற்றி !
முறையோ தரியேன் முதல்வா போற்றி !

உறவே போற்றி! உயிரே போற்றி !
சிறவே போற்றி! சிவமே போற்றி !

மஞ்சா போற்றி! மணாளா போற்றி !
பஞ்சே ரடியாள் பங்கா போற்றி !

அலந்தேன் நாயேன் அடியேன் போற்றி !
இலங்கு சுடரெம் ஈசா போற்றி !

கவைத்தலை மேவிய கண்ணே போற்றி !
குவைப்பதி மலிந்த கோவே போற்றி !

மலைநா டுடைய மன்னே போற்றி !
கலையா ரரிகே சரியாய் போற்றி !

திருக்கழுக் குன்றிற் செல்வா போற்றி !
பொருப்பமர் பூவணத் தரனே போற்றி !

அருவமும் உருவமும் ஆனாய் போற்றி !
மருவிய கருணை மலையே போற்றி !

துரியமும் இறந்த சுடரே போற்றி !
தெரிவரி தாகிய தெளிவே போற்றி !

தோளா முத்தச் சுடரே போற்றி !
ஆளா னவர்கட் கன்பா போற்றி !

ஆரா அமுதே அருளே போற்றி !
பேரா யிரமுடைப் பெம்மான் போற்றி !

தாளி அறுகின் தாராய் போற்றி !
நீளொளி யாகிய நிருத்தா போற்றி !

சந்தனச் சாந்தின் சுந்தர போற்றி !
சிந்தனைக் கரிய சிவமே போற்றி !

மந்திர மாமலை மேயாய் போற்றி !
எந்தமை உய்யக் கொள்வாய் போற்றி !

புலிமுலை புல்வாய்க் கருளினை போற்றி !
அலைகடல் மீமிசை நடந்தாய் போற்றி !

கருங்குரு விக்கன் றருளினை போற்றி !
இரும்புலன் புலர இசைந்தனை போற்றி !

படியுறப் பயின்ற பாவக போற்றி !
அடியொடு நடுவீ றானாய் போற்றி !

நரகொடு சுவர்க்கம் நானிலம் புகாமற்
பரகதி பாண்டியற் கருளினை போற்றி !

ஒழிவற நிறைந்த ஒருவ போற்றி !
செழுமலர்ச் சிவபுரத் தரசே போற்றி !

கழுநீர் மாலைக் கடவுள் போற்றி !
தொழுவார் மையல் துணிப்பாய் போற்றி !

பிழைப்பு வாய்ப்பொன் றறியா நாயேன்
குழைத்தசொன் மாலை கொண்டருள் போற்றி !

புரம்பல எரித்த புராண போற்றி !
பரம்பரஞ் சோதிப் பரனே போற்றி !

போற்றி ! போற்றி ! புயங்கப் பெருமான்
போற்றி ! போற்றி ! புராண காரண
போற்றி ! போற்றி ! சயசய போற்றி !

திருச்சிற்றம்பலம்.

போற்றித் திருவகவல் முற்றிற்று.

குறிப்புரை

போற்றித் திருஅகவல் - 'போற்றி' என்னும் சொல்லை யுடைய திரு அகவல். 'போற்றுதலை உடைய' எனப் பொருள்மேல் வைத்துரைப்பின், அஃது ஏனைய பகுதிகட்கும் பிறவற்றிற்கும் பொதுவாதல் அறிக. இத் திருப்பாட்டில் இறைவனை அடிகள் பல்பெயர்க் கோவையாற் போற்றுகின்றார்.

இதற்கு, 'சகத்தின் உற்பத்தி' என முன்னோர் உரைத்த குறிப்பு, முதற் போற்றி வரையில் உள்ள பகுதி பற்றியே கூறியதாம். அங்ஙனம் கூறும் வழியும், 'உலகம்' எனப் பொருள்தரும், 'சகம்' என்பது, மக்களுலகையே குறித்துக் கூறியதாம்.

1 - 10. இதனுள் முதல் மூன்று அடிகளில் எண்ணலங் காரம் வந்தது. திருமால் காத்தற் கடவுளாதலின், போகத் தைத் தரும் கடவுளாவன். அதனால், ஐம்புலன்களும் நிரம்பக் கிடைத்தற் பொருட்டுப் போற்றப்படுவனுயினன். ஆகவே, இங்கு "முனிவர்" என்றது, சுவர்க்க இன்பத்தை வேண்டித் தவம் செய்வோரையாயிற்று. மலர - நிரம்ப உளவாதற் பொருட்டு. கதிர்முடி, மணிமுடி. கடவுளரிற் சிறந்தமையின், மாலை, 'திருமால்' என்ப. அவன் கடவுளரிற் சிறந்தோனாதலை,

"தேவில் திருமால் எனச் சிறந்தது"

என்னும் திருவள்ளுவ மாலையானும் (36) அறிக. இதில் 'தே' என்பது அஃறிணைச் சொல்லாய், பன்மைமேல் நின்றது. '**புருடோத்தமன்**' என்றலும் இதுபற்றி. நிலங்கடந்த (உலகத்தை அளந்த) அண்ணல் என்பார், "கதிர்முடி நெடுமால்" என்று அருளினார். பிரமன், மால் இருவரும் சிவசோதியினது அடி, முடி இரண்டையுங்காணவே புகுந்தனராதலின், "அடி முடி அறியும் ஆதரவு" என்றார். ஆதரவு - விருப்பம். அது, பகுதிப்பொருள் விகுதி. இன், ஏதுப்பொருட்கண் வந்த ஐந்தாம் உருபு.

கடுமுரண் - மிக்க வலிமை. ஏனம் - பன்றி. முன் கலந்து - நிலத்தைச் சார்ந்து. "முன்" என்றது ஆகுபெயராய், முன்னே காணப்படும் நிலத்தைக் குறித்தது. ஆகாயம்,

அன்னாந்து நோக்கிய வழியே காணப்படுமாதலின், அது முன்னர்க் காணப்படுவதன்றாயிற்று. ஏழ்தலம், கீழ் உலகம் ஏழு; அவை 'அதலம், விதலம், சுதலம், தராதலம், ரசாதலம், மகாதலம் பாதலம்' என்பன. உருவுதல் - கடந்துபோதல். எய்த்தது, பிரகிருதியுடம்பு உடைமையின், பாதலத்திற்குக் கீழ்ச்செல்ல இயலாமையால் என்க. எய்த்தல் - இளைத்தல். "ஊழி முதல்வன்" என்றது, 'காலத்தை நடத்துபவன்' என்றவாறு. எல்லாப்பொருளும் காலத்திற்கு உட்பட்டு நிற்றலின், 'காலத்திற்கு முதல்வன்' என்றது, 'எல்லாப் பொருட்கும் முதல்வன்' என்றவாறும்.

சயசய - நீ வெல்க! வெல்க! வழுத்துதல் - துதித்தல். "அடி இணைகள்" என்றதனை, 'இணை அடிகள்' என மாற்றிக்கொள்க. இணை அடிகள் சிவபிரானுடையன என்பது. திருமால் தேடிக் காணாத வரலாறு கூறியவதனால் பெறப்பட்டது. "எளிது" என்ற ஒருமை அப்பண்பின்மேல் நின்று ஆகுபெயராயிற்று. "ஆய்" என்ற வினையெச்சம் காரணப் பொருட்டாய், 'தாம் பிடித்தது சலியா" (59) என்பது முதலியவற்றில் வரும் "சலியா" என்பது முதலிய வினைகளோடு இயைந்து நின்றது. வார் - நீண்ட.

11 - 12. இது முதலாகவரும் நாற்பத்தொன்பது அடிகளால் உயிர்கட்கு இறையுணர்வு உண்டாவதன் அருமையை விரித்தோதியருளுகின்றார்,

யானையினும் பெரிய பிறவியும், எறும்பினும் சிறிய பிறவியும் உளவாயினும் பெருமை சிறுமைகளின் எல்லைக்கு அவற்றைக்கூறும் வழக்குப்பற்றி அங்ஙனமே ஓதியருளினார். ஊனம் - குறைவு. 'குறைவில்லாத' என்றது, 'பலவாகிய' என்பதனைக் குறித்தது. யோனி - பிறப்பின் வகைகள். இவ் வடசொல் முதற்கண் இகரம் பெற்று வந்தது. எழுவகைப் பிறப்பிலும் உள்ள யோனிபேதம் எண்பத்துநான்கு நூறாயிரம் என்பதை,

" அண்டசம் சுவேத சங்கள்
உற்பிச்சம் சராயு சத்தோ
டெண்டரு நால்எண் பத்து
நான்குநூ றாயிரத்தால்

உண்டுபல் யோனி: எல்லாம்
ஒழித்துமா னுடத்து தித்தல்
கண்டிடிற் கடலைக் கையால்
நீந்தினன் காரியங்காண் ''

என்னும் சிவஞான சித்தியிலும் (சூ, 2. 89),

'' தோற்றியிடும் அண்டங்கள் சுவேதசங்கள் பாரில்
துதைந்துவரும் உற்பீசம் சராயுசங்கள் நான்கில்
ஊற்றமிகு தாபரங்கள் பத்தொன்ப தென்றும்
ஊர்வபதி னைந்தமரர் பதினொன்றொ டுலவா
மாற்றருநீர் உறைவனநற் பறவைகள்நாற் காலி
மன்னியிடும் பப்பத்து மானுடர்ஒன் பதுமா
ஏற்றிரு தொகையதனில் இயம்புவர்கள் யோனி
எண்பத்து நான்குநூ றாயிரமென் றெடுத்தே ''

என்னும் சிவப்பிரகாசத்திலும் (47) காண்க. எண்பத்து நான்கிற்குச் சிவப்பிரகாசத்துட் கூறப்பட்ட வகையை,

'' ஊர்வ பதினொன்றும் ஒன்பது மானுடம்
நீர்பறவை நாற்கால்ஓர் பப்பத்துச் - சீரிய
பந்தமாந் தேவர் பதினால் அயன்படைத்த
அந்தமில்சீர்த் தாவரம்நா லைந்து ''

என (குறள் - பரிமேலழகர் உரை)ச் சிறிது வேறுபடவும் கூறுவர் என்பது தோன்றவே சிவப்பிரகாசத்துள் 'ஒரு தொகையதனில் இயம்புவர்'' என்று அருளினார் போலும்!

'' யோனியினுள் '' என்றதன்பின், 'செலுத்தும்' என்பது தொகுத்தலாய் நின்றது. 'வினையினின்றும் பிழைத்தும்' என்க. பிழைத்தல் - தப்புதல். '' பிழைத்தும் '' என வரும் உம்மைகள் யாவும், வினைக்கண் வந்த எண்ணிடைச் சொற்கள். உயிர்கட்கு இறையுணர்வு உண்டாதற்கு உளவாகும் இடையூறுகள் பலவற்றையும் இங்கு முறைமைப்பட வைத்து அருளிச் செய்கின்றாராதலின், '' பிழைத்தும் '' என வருவனவற்றின் பின்னெல்லாம், 'அதன் பின்' என்பது வருவித்து அம்முறைமை தோன்ற உரைக்க. '' பிழைத்து '' என வருவன பலவும், '' உண்டாகி '' (42) என்பதனோடே முடியும்.

13, 14. உயிர்கள் நிலவுலகில் கருப்பையினுள் தோன்றும் பிறப்பிற் புகுங்கால், முதற்கண் தான் நின்ற நுண்ணுடம்போடு உணவு வழியாக ஆண் உடம்பிற் புகுந்து தங்கி, பின் அதனது வெண்ணீர் வழியாகப் பெண்ணினது வயிற்றில் உள்ள கருப் பையினுட் புகுந்து புல் நுனியில் நிற்கும் பனியினது சிறு திவலை யினும் சிறிதாகிய நுண்டுளி யளவில் கருவாகி நின்று, பின் சிறிது சிறிதாக வளர்ந்து நிரம்பும் பருவுடம்புடனே பிறக்கும். பெண்ணினது வயிற்றில் நுண்டுளியளவில் நின்று வளர்ந்து பிறத்தற்கு இடையே அதற்கு உண்டாகும் அழிவு நிலைகள் எத்துணையோ உளவாம். மக்களாய்ப் பிறக்கும் உயிர்களும், அத்துணை அழிவுகட்கும் தப்பியே பிறத்தல் வேண்டும் என்ப தனை இது முதற்பதின்மூன்று அடிகளில் அருளிச்செய்கின்றார்.

உதரம் - வயிறு; அஃது இங்கு அதனிடத்துள்ள கருப்பையைக் குறித்தது. ஈனம் இல் - குன்றுதல் இல்லாத; என்றது, 'பலவான' என்றபடி. எனவே அவற்றின் செரு விற்குத் தப்புதலின் அருமை குறித்தவாறாயிற்று. "கிருமி" என்றது, அக்கருவை உண்ண விரையும் அவற்றை. அவற்றி னின்றும் தப்புதல், அவ்விடத்து அக்கிருமிகளை அழித்தொழிக் கும் நற்பொருள்களாலேயாம். அப்பொருள்கள் அவ்விடத்து உளவாதல் அக்கருவிடத்து உள்ள உயிரது நல்வினையானே யாம் ஆதலின்; 'அவ்வாற்றான் அவ்வுயிர் அவற்றது செருவி னின்றும் பிழைத்தும்' என்று அருளினார்.

15. ஒருமதி - ஒரு திங்கள் அளவில். ஈண்டு, 'திங்கள்' என்பது, 'சாந்திரமானம்' எனப்படும் மதியளவாகிய இருபத் தேழுநாட் காலமே யாம்; அது, 'திங்கள்' என்பதனானே இனிது பெறப்படும். தான்றி - தான்றிக் காய்; என்றது, அவ்வளவினதாகிய வடிவத்தைக் குறித்தது. 'தான்றியின் கண்' என ஏழாம் உருபு விரித்து, தான்றிக்காய் அளவினதாகிய வடிவம் பெறும் அளவில்' என உரைக்க. "இருமை" என்றது, இங்கு, சிதைவுறும் தன்மையைக் குறித்தது. இம்மெல்லிய நிலையிலே தாயது அறியாமை முதலிய பற்பல காரணங்களால் கருச்சிதைந்தொழிதல் எளிதாதலின், 'அதனினின்றும் தப்பியும்' என்றார். இந்நிலையில் தப்புதல், தாயது வயிற்றில் நின்று அக் கருவை ஊட்டி வலியுற நிறுத்தும் நற்பொருள்களாலே யாம்.

16. இருமதி விளைவின் - இரண்டு திங்கள் என்னும் அளவில் உண்டாகின்ற வளர்ச்சிக்கண். 'ஒருமையின் பிழைத்

தும் - ஒரு திங்கள் அளவில் இருந்தவாறே இருத்தலினின்றும் தப்பியும்; என்றது, முதற்றிங்களில் தான்றிக்காய் அளவாய் முட்டைபோற் பருத்து நின்ற கரு, இரண்டாந் திங்கள் முதலாக உறுப்புக்கள் பிரிந்து தோன்றும் நிலையைப்பெற்று வளர்ச்சியுறுமாகலானும், அந்நிலையில் அக்கரு அங்ஙனம் வளர்தற்கு வேண்டும் பொருள்கள் அதற்குக் கிடையாதொழியின், முதற்றிங்களில் நின்ற நிலையிலே நின்று கெட்டொழியுமாகலானும் 'அங்ஙனம் கெடுதலினின்றும் தப்பியும்' என்றவாறு.

புல்நுனிமேல் பனித்திவலையினும் சிறிய நுண்டுளியாய் நிற்கு மதுவே வித்தாயினும், நிலத்தின்கட் பதிந்து நீர் முதலியவற்றால் பதனெய்திய விதையே பின் முளையைத் தோற்றுவித்தல்போல, அந்நுண்டுளி ஒரு திங்கள்காறும் பருத்துத் தான்றிக்காயளவினதாய் நின்றபின்பே பின்னர்க் கழுத்து, தலை முதலிய உறுப்புக்களைத் தோற்றுவிக்குமாதலின், அதுகாறும் உள்ள நிலையை வித்தெனவே கொண்டு, பின்னர் இரண்டாந்திங்கள் முதலாக உறுப்பு முதலியவை தோனறப்பெறும் நிலைகளையே, 'விளைவு' என்று அருளினார். ஒருமை - ஒன்றன் தன்மை. 'ஒன்று' என்பது, முன்னர் ஒருதிங்களாகிய காலத்தைக் குறித்து, பின்னர் அக்காலத்தில் நிகழும் நிகழ்ச்சியைக் குறித்தது.

17. மும்மதிதன்னுள் - மூன்று திங்கள் என்னும் அளவில். மதம் - மயக்கம். சூல்கொண்ட மகளிர் மூன்றாந் திங்களில் பித்தம் மிகப்பெற்று உணவேலாது மயக்கமுற்றுக் கிடக்கும் நிலையை, 'மயற்கை' என வழங்குதல் பலரும் அறிந்ததாகலின், அதனை 'அம்மதம்' எனப் பண்டறிசுட்டாற் சுட்டிப் போயினார். 'இம் மயற்கைக் காலத்தில் மகளிர், கருவைக் காத்துக்கொள்ளுதலில் கருத்தின்றி, புளிப்புப் பண்டங்களையே யன்றி, மண்ணை உண்ணுதல் முதலியவற்றையும் செய்வர். ஆதலின், அவற்றிற்கெல்லாம் அக் கரு, தப்பிவளர்தல் வேண்டும் என்று அருளிச்செய்தார். கருவுற்ற மகளிர் மண்ணை விரும்பியுண்டல்,

"*வயவுறு மகளிர் வேட்டுணி னல்லது
பகைவ ருண்ணா வருமண் ணினையே"

எனப் புறப்பாட்டுள்ளுங் கூறப்பட்டது (20).

---

* 'வயா' என்பதற்கு, 'வேட்கை' எனப்பொருள் உரைத்தார், உரையாளர்.

18. ஈரிரு திங்கள் - நான்கு திங்களளவில். பேரிருள் - யாதும் அறியாமை. மூன்றுந் திங்களில் மயற்கையுற்ற மகளிர், நான்காந் திங்களில் அம்மயற்கை நீங்கப் பெறுவர். அந் நிலையில் முன்னர் உற்று நின்ற கரு மயற்கைக் காலத்துக் கெட்டொழியாது நிலைபெற்றதோ, அன்றி நிலைபெறாதே கெட்டொழிந்ததோ என எழும் ஐயத்தின்கண் யாதும் துணியப்படுதற்கு வழியின்றி நிற்குமாதலின், அந்நிலையையே, "பேரிருள்" என்றார். எனவே, அந்நிலையிலும் அக்கரு நிலைபெறாதொழிதல் கூடுமாகலின், 'அவ்விடத்தும் கெடாது நிலைபெற்று' என்பார், 'ஈரிரு திங்களிற் பேரிருள் பிழைத்தும்' என்றார்.

19. ஐந்து, அஞ்சு என மருவிற்று. அஞ்சு திங்கள் - ஐந்து திங்களின் என்னும் அளவில். முஞ்சுதல் - சாதல். தாயது வயிற்றினின்றும் போந்து நிலத்தையடைதற்குப் பத்துத் திங்களை எல்லையாக உடைய கருப்பைக் குழவி, அதனிற் பாதியளவினதாகிய ஐந்து திங்கள்காறும் பெரும்பான்மையும் நிலையாமையையே உடையதாம். அதனுள்ளும், மயற்கைக் காலத்து அழிந்தொழியாது நிலைபெற்று நான்காந் திங்களில் மெலிந்துநிற்கும் கருக்குழவியை ஐந்தாந் திங்களிற் பல்லாற்றானும் குறிக்கொண்டு காவாதொழியின், வலுப்பெற்று முதிரமாட்டாது அழிந்தொழியும்; அதனால், ஐந்தாந் திங்களைக் கரு அழியுங் காலமாக அருளினார்.

20. ஆறு திங்களின் - ஆறு திங்கள் என்னும் அளவில். நாறு அலர் பிழைத்தும் - கருப்பையைக் கிழிக்கின்ற பூவினது செயலுக்குத் தப்பியும். அலர் - பூ.

மரவகைகளிடத்துக் காய் தோன்றுதற்கு வழியாய் நிற்கும் பூப்போல, கருப் பையுள் கருவை ஏற்று ஈனும் பிறப்புக்களது கருப் பையினுள், தாயினது செந்நீரில் குமிழிபோலத் தோன்றுவதொரு பொருள் உண்டு. அதற்கும் பூவைப்போல அரும்புதல், மலர்தல், கூம்புதல்கள் உள, அதனது மலர்ச்சிக் காலத்தில் பெண்ணிற்கு ஆணோடு கூட்டம் உண்டாயின், கரு வாய்க்கும். அக்காலத்தின்றி, அரும்பற் காலத்தும், கூம்பற் காலத்தும் உளவாம் கூட்டத்தாற் கருவுண்டாதல் இல்லை. கருவை ஏற்றலின்றி வாளா கூம்பிய பூ, சின்னாளில் கெட்டு வெளிப்போந்தொழியும். தாயது வயிற்றிற் பூவுண்டாயினமை அது புறத்துப் போந்துழியே அறியப்படுதலின், அதனையே,

'பூப்பு' என வழங்குப. முதற் பூ, கருவை ஏற்றலின்றி அழியற்பாலதே; ஏனெனின், அது கரு வந்தடைதற்கு வாயி லில்லாத காலத்தே உண்டாவது. அது கெட்டபின், தான் உள்ளே நில்லாது வெளிப்போதுங்கால், வாயிலை உண்டாக்கிப் போதருதலின், பின்னர்த் தோன்றும் பூக்கள் கருப் பெறுதற்கு உரியனவாம். முதற் பூ தான் பயனின்றி ஒழியினும், பின்னர்த் தோன்றுவன அனைத்தும் பயனுடையவாதற்கு ஏதுவாய் விழ்தலின், அவ்விழ்ச்சியையே, சிறப்பாக, 'பூப்பு' எனக் குறிப்பர். ஒரு பூ அரும்பி மலர்ந்து நிற்கும் காலம், முன்னைப் பூ விழ்ந்த நாள் முதலாகப் பதினைந்து நாள் எல்லை என்பதும், அதன் பின்னர் அது கூம்புதல் உளதாம் என்பதும்,

"பூப்பின் புறப்பா டீரறு நாளும்"

என்பதனான் அறியப்படும் (தொல் - பொருள்; 185). 'பூ விழ்ந்த நாள்முதலாக மூன்று நாட்கள் பூப்பின் அகப்பாட்டு நாட்களாம்' என்பதனை அச்சூத்திர உரைகளான் அறிக.

கருப்பையுடைய பிறப்புக்களில் மக்கட் பிறப்பிலும் மாக் களுள் ஒருசார் பிறப்பிலும் உள்ள பெண்களது கருப்பையில் ஒரு முறையில் பெரும்பாலும் ஒரு பூவும், சிறுபான்மை சில முறைகளில் ஒன்றற்கு மேற்பட்ட பூக்களும் தோன்றும்; ஆதலின், அவற்றால் ஓர் ஈற்றில் பெரும்பான்மையும் ஒரு குழவி யும், சிறுபான்மை ஒன்றற்கு மேற்பட்ட குழவிகளும் பிறக்கும். மாக்களுள் ஒரு சாரனவற்றுப் பெண்களது கருப்பையில் ஒருமுறையில் பல பூக்கள் தோன்றுதலின், அவற்றிடமாக ஓர் ஈற்றில் பல குழவிகள் பிறப்பனவாம். ஆகவே, கருப் பையுள் தோன்றும் கருவிற்கும், மரவகைகளிற்போல, அக் கருப்பையினுள் அரும்பி மலரும் பூவே காரணம் என்பது புலப்படும்.

இத்தகைய பூ, மக்கட் பிறப்பின் மகளிரிடத்துக் கருவை ஏற்றுக் குழவி உருவத்தைப் பெறத்தொடங்குவது, அஃது ஐந்தாந் திங்களிற் கெடாது வலியுற்று நின்ற பின்னரேயாம். அஃது அங்ஙனம் உருப்பெற்று வளர்கின்றுழி, அதுகருப்பையைத் தாக்குதல் உளதாம் அக்காலத்து அத்தாக்குதலால் ஓரோவழி, கருப்பை கிழிந்து, அவ்வுருவம் அரையும் குறையுமாய் நிலத்தில் விழ்தலும் உண்டு. அந்நிலையினும் குழவி தப்புதல் வேண்டும்

என்பதனையே, "ஆறு திங்களின் நாறலர் பிழைத்தும்" என்று அருளிச்செய்தார். மக்களுள் மலடரல்லராயும், மகவை உருவோடு பெறும் நல்வினை இல்லாத மகளிர் தம் கருவை இழத்தல், பெரும்பான்மையும் இத்தன்மைத்தாய ஆறுந்திங்களிலேயாம். ஆதலின், அதனைக் கடந்த பின்னரே, சூல் காப்பு முதலிய சடங்குகளைச் செய்தல் முறைமையாயிற்று. நாறுதல் - சிதைத்தல். "அலர்" என்றது ஆகு பெயராய் அதனது தொழிலைக் குறித்தது. கருவை ஏற்ற பூ, காய் எனப்படுதல், குழவி உருவம் நிரம்பப்பெற்ற ஏழாந் திங்களிலேயாதலின், ஆறுந் திங்களில் நின்ற உருவத்தினை, "பூ" (அலர்) என்றே அருளினர்.

21. ஏழு திங்களில் - ஏழென்னும் திங்களளவில். புவி - நிலம். அஃது ஆகுபெயராய், அதனுள் தோன்றும் பிறப்புக்களை உணர்த்திற்று. கரு ஆறுந் திங்களில் வீழாதே நிற்பினும், குழவி நன்முறையில் வளராதொழியின், மக்கட்டன்மை நிரம்பப்பெறாது, ஏழாந் திங்களில் மாக்கள்போலப் பிறப்பதாம். அப்பிறப்பு வகைகளை,

> "சிறப்பில் சிதடும், உறுப்பில் பிண்டமும்,
> கூனும், குறளும், ஊமும், செவிடும்,
> மாவும் மருளும்"

என வந்த புறப்பாட்டுள் (28) 'உறுப்பில் பிண்டம்' என்றது ஒழிந்தன எனக் கொள்க. இவ்வாறெல்லாம் பிறத்தல் மக்களுலகில் தொன்றுதொட்டே காணப்படுவது என்பதனை,

> "..............................இவையெல்லாம்
> பேதைமை யல்ல தூதிய மில்லென
> முன்னும் அறிந்தோர் கூறினர்"

என அப்பாட்டுட் கிளந்தோதியவாற்றான் அறிக.

இனி மக்கள் வயிற்றினும் ஓரோவொருகால் மாக்களும், பாம்பு போலும் சில ஊர்வனவும், பிறவும் பிறத்தல் உள என்ப; அவையெல்லாம் ஏழாந்திங்களில் குழவியது வளர்ச்சிக் குறைபாட்டால் நிகழ்வனவேயாதலின், மானுடப் பிறப்பினுட் புகுந்தும், தீவினை வயத்தால் அவ்வாறெல்லாம் ஆகாது தப்புதல் வேண்டும் என்பதனையே, "தாழ்புவி பிழைத்தும்"

என்று அருளினார், இஃது உண்டாகாமைப் பொருட்டும் ஏழாந் திங்களிற் கடவுட் பராவலே, அறிந்தோர் செய்ப.

இனி, மக்கட் குழவி பிறப்பது பெரும்பான்மையும் பத்தாந் திங்களிலேயாயினும், சிறுபான்மை அதற்கு முற்பட்ட ஒன்பது, எட்டு ஏழென்னும் திங்களிலும் பிறத்தல் உள. அவை ஒன்றி னொன்று சிறுபான்மைத்தாக நிகழும். அவற்றுள் ஏழாந் திங்களிற் பிறக்குங் குழவி உயிரொடு பிறத்தல் சிறுபான்மை. உயிரொடு பிறந்த வழியும் பின்னர் நெடிது வாழ்தல் மிகச் சிறுபான்மை. அதனால், அங்ஙனம் ஏழாந் திங்களிற் பிறத்தலி னும் தப்புதல் வேண்டும் என்பதனையே இவ்வடியுள் அருளினார் எனக் கொண்டு, அதற்கேற்ப, "தாழ்புவி" என்றதனை 'புவி தாழ்' எனப் பின் முன்னாக மாற்றி, 'ஏழாந் திங்களிற்றானே நிலத்தின் வந்து பிறத்தலினின்றுந் தப்பியும்' என உரைத் தலுமாம். இவ்விரண்டனையும் இவ்வடியின் பொருளாகக் கொள்க.

22. எட்டுத் திங்களில் - எட்டென்னும் திங்களளவில். கட்டம் - மெய்வருத்தம். அஃதாவது, ஏழாந் திங்களில் உரு நிரம்பப் பெற்ற குழவி, அவ்வுருவம் நன்கு முதிர்ந்து வளரும் வளர்ச்சியால் கருப்பையினுட் கட்டுண்டு கிடக்கமாட்டாது வருந்தும் வருத்தமாம். இக்காலத்தில் அது, அக்கருப்பை யோடே அசைவுறுதலும் உண்டு.

23. "ஒன்பது", ஆகுபெயர் ; 'ஒன்பது திங்கள் என்னும் அளவில்' என்றபடி. துன்பம் - மனக் கவலை. எட்டாந் திங்களில் நன்கு முதிர்ந்து வளர்ச்சியுற்ற குழவி, ஒன்பதாந் திங்களில் கருப்பையுட் கட்டுண்டு கிடக்கும் நிலையை உணர்ந்து 'இனி இதனினின்றும் புறப்படுமாறு எவ்வாறு' என நினைந்து கவலையுறும். 'அக்காலை அஃது இனிப் பிறவி வாராமல் அருள வேண்டும் என இறைவனைக் கைகூப்பி வேண்டும்' எனவும் சொல்லுப. இவ் எட்டு ஒன்பதாந் திங்கள்களில் உளவாகும் உடல் வருத்தம், மன வருத்தம் என்பவற்றைத் தாங்கும் உடல் வலிமையும், மனவலியும் இல்லாததாய் இருப்பின், குழவி அக்காலத்தே இறந்துபடுமாகலின், அவற்றினின்றுந் தப்புதல் வேண்டும் என்பார், "எட்டுத் திங்களிற் கட்டமும் பிழைத்தும்" என்றும், "ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்தும்" என்றும்

அருளினர். "கட்டமும் துன்பமும்" என்ற உம்மைகள் எச்சப் பொருள.

24 - 25. தக்க தச மதி - குழவி குறையின்றிப் பிறப்பதற்கு ஏற்புடைத்தாய பத்துத் திங்கள் என்னும் அளவில். "தாயொடு" என்ற ஒடு, எண்ணெடு. துக்க சாகரத் துயர் - துக்கமாகிய, கடல்போலும் துயர். 'துக்கம், துயர்' என்பன ஒரு பொருளவாயினும், அடையடுத்து வந்தமையின், சிறப்பும் பொதுவுமாய் இருபெயரொட்டாய் நின்றன. குழவி பிறக்குங்கால் தாயும், குழவியும் படும் துன்பம் பெருந்துன்பமாதல் வெளிப்படை. குழவிக்கும் தாய்க்கும் உளவாந் துன்பங்கள், குழவி தான வெளிப்போதரற்குச்செய்யும் முயற்சியால் வருவனவாம். தாய் தனக்கு உளதாய துன்பமிகுதியால் குழவி இனிது பிறத்தற்கு ஏற்ப நில்லாமையானுதல், குழவி தனக்கு உண்டாய துன்ப மிகுதியால் வெளிப்போதும் முயற்சியிற் சோர்வுறுதலானுதல் குழவி பிறவாது வயிற்றிலே இறத்தலும் உண்டு. அதனல், அவ்விருவகை இன்னலினும் தப்புதல் வேண்டுமாகலின், "தாயொடு தான்படுந் துக்கசாகரத் துயரிடைப் பிழைத்தும்" என்று அருளினர்.

26, 27. 'ஆண்டுகள் தோறும்" என்றதனை, "இருத்தியும்" என்றதன் பின்னர்க் கூட்டுக. 'பிறந்த பின்னர், தாயர் முதலியோர் தம்பால் நெருங்க அணைத்தும் ஓரிடத்தே இருக்க வைத்தும் ஆண்டுகளின் வளர்ச்சிதோறும் அவர் செய்யும் எத்துணையோ பல செயல்களினின்றும் தப்பியும்' என்க.

'ஈண்டுவித்தும்' என்பது, தொகுத்தலாயிற்று. எனைப் பலவாவன, பாலூட்டல், நீராட்டல் மருந்தூட்டல், சோறூட்டல் முதலியன. இவை குழவிக்கு நலஞ்செய்யுமாயினும், காலம் அளவு முதலியன ஒவ்வாதவழித் தீங்கு பயக்குமாதலானும், அவ்வொவ்வாமையை அவர் அறிதல் அரிதாகலானும், அவற்றினும் தப்புதல்வேண்டும் என்ருர்.

28, 29. மேலெல்லாம், உயிர், மக்கட்பிறப்பிற் புக்க வழியும் இனிது பிறவாதவாறும், பிறந்தபின் நன்கு வளராதவாறும் நிகழும் இடையூறுகளினின்றும் தப்புதல் கூறினர்; இனி, வளர்ந்த பின்னரும் உள்ளம் தெய்வத்தின்பாலன்றிப் பிறவற்றிற் செல்லுதற்கு வாயிலாவனவற்றினின்றுந் தப்புதல் கூறுகின்ருர்.

"வேலை" என்றதை, "காலை", "கடும்பகல்" என்றவற்றிற்கும் கூட்டுக. வேலை - பொழுது. மலம் - வயிற்றில் உள்ள மலத்தால் உளதாம் துன்பம். இது காலைக்கண் பெரிதாம். பசி - பசித்துன்பம். நிசி - இரவு. நித்திரை - உறக்கம். இது நன்றாயினும் தெய்வத்தை நினைத்தற்கு இடங்கொடாது, தானே வந்து பற்றுதலின், தடையாயிற்று. 'நித்திரை பிழைத்தும், யாத்திரை பிழைத்தும்' எனத் தனித்தனி கூட்டுக. நாள்தோறும் தவறாது நிகழும் மலம் முதலிய மூன்றனையும் ஒருங்கெண்ணி, 'அவற்றிற் பிழைத்தும்' எனவும், இடையிட்டு வேண்டுங்காலத்து நிகழும் யாத்திரையை வேறு வைத்து, "யாத்திரை பிழைத்தும்" எனவும் அருளினார் என்க. யாத்திரை - வழிச் செலவு. மலம், ஆகுபெயர்.

30 - 35. இப் பகுதியுள் மகளிரது அழகு ஆடவரது மனத்தைக் கொள்ளைகொள்ளுமாற்றினை விரித்தருளிச் செய்கின்றார். சிறப்புப்பற்றி ஆடவரது உள்ளத்தையே கூறினாராயினும், இதனானே ஆடவரது அழகும் பெண்டிரது உள்ளத்தைக் கொள்ளைகொள்ளுதலும் பெறப்படுவதேயாம். கார்மயில் - கார்காலத்து மயில், கார்காலத்தில் மயில் மேகத்தைக் கண்டு களித்தலும், அக் களிப்பினால் தோகையை விரித்து அழகுற ஆடுதலும் இயல்பு. ஒருங்கிய சாயல் - ஒழுங்குபட்ட தோற்றம். பிற்கால வழக்கில் சாயல் என்னும் சொல் தோற்றம் எனப் பொருள்தரும் என்க. மயில்போலும் சாயல்' என்க. நெருங்கி - ஒன்றை ஒன்று அணுகி. மதர்த்து - விம்மி. கதிர்த்து - அழகுமிக்கு. 'முன' " என்றதனை. "நிமிர்ந்து" என்றதற்கு முன்னே கூட்டுக. பணைத்து - பருத்து. 'இடை எய்த்து வருந்த' என்க. வருந்தல் பாரம் தாங்கமாட்டாமையானும். எழுந்து-வளர்ச்சியுற்று. புடைபரந்து-மார்பிடம் எங்கும் பரவி. "ஈர்க்கிடை போகா இளமுலை" என்பது, பொருநராற்றுப் படையுள்ளும் (36) வந்தமை காண்க. 'குழலையும், வாயையும், நகையையும், சாயலையும், முலையையும் உடைய மாதர்' என்க. கூர்த்த - கூர்மை பெற்ற, நயனம் - கண். பிற உறுப்புக்களும் உள்ளத்தைக் கவருமாயினும், அவை நின்ற நிலையில் நிற்றலன்றிக் கண்போலப் புடைபெயர்ந்து அகப்படுத்த மாட்டாமையின் அக்கவர்ச்சிகள் சிறியவாக கண் அவ்வாறன்றிப் புடைபெயர்ந்து அதனை அகப்படுத்தலின்

அக்கவர்ச்சி பெரிதாதல்பற்றி அதனையே உள்ளத்தைக் கொள்ளை கொள்வதாக அருளினார்.

36-37. பித்து, 'பித்தும்' என நின்று, வேற்றுமைக்கண் இறுதியொற்றுக் கெட்டது. உலகர் - உலக வாழ்க்கையை யன்றிப் பிறிதொன்றை நோக்காதவர். அவ்வியல்பு அவரறிவின் கண் உள்ள மயக்கத்தாலாயிற்றாகலின், அதனை, 'பித்து' என்றார். பெருந்துறைப் பரப்பு - பெரியவாகிய துறைகளை யுடைய நீர்ப் பரப்பு. 'பரப்பு' என்றது, வாழ்க்கையை. அதுதான், அரசாட்சியும், அமைச்சு முதலிய அரச வினைகளும், உழவும் வாணிபமும் முதலாகப் பற்பல துறைகளை யுடைமை யின், 'பெருந்துறைப் பரப்பு' என்றார். 'துறை, பரப்பு' என்றவை குறிப்பு உருவகம். பெருமை, இங்கு பன்மை குறித்தது. 'பரப்பினுள்'' என்றதன் பின், 'நின்று கலக்கும்' என்பது வருவிக்க. 'வாழ்க்கையாகிய நீர்ப்பரப்பினுள் நின்று அதனைக் கலக்கும் மதயானை என்று சொல்லத்தக்க ஆசை' என்க. வாழ்க்கைக்கண் உளதாம் ஆசையாவது, பல தொழில் துறைகளில் நிற்குங்கால், அவற்றை, 'இவை உடலோம்பல் மாத்திரைக்கே ஆவன' என்று அறிந்து புறத்தால் தழுவி, அகத்தில் பற்றின்றி யொழுகாது, அவையே உயிராகக் கருதி, அவற்றின்கண் மேன்மேல் உயர விரும்புதல். அவ்விருப்பம், அறிவை அறத்தையும் வீட்டையும் நோக்கவொட்டாது மயக்கி, அதனானே, வாழ்க்கைத் துறைகளிலும் பொய், களவு முதலிய பிழைகள் பலவற்றைப் புரிந்து ஒழுகச் செய்தலின், அதனை நீர்ப்பரப்பைக் கலக்கும் மதயானையாக உருவகம் செய்தார் ''அவாவிடை'' என்ற ஏழனுருபை ஐந்தனுரு பாகத் திரிக்க.

38. ''கல்வி கரையில'' (நாலடி-135.) என்றபடி, கல்வி, அளவில்லாத துறைகளையுடைத்தாய், ஒவ்வொரு துறையும் மிகப் பரந்து கிடப்ப நிற்றலானும், அவை அனைத்தினும் வேட்கை செலுத்தின, நிரம்பிப் பயன் எய்துதல் கூடாமையா னும், நீர்வேட்கை கொண்டோன் அது, தணிதற்கு வேண்டும் நீரை முகந்துண்டு தன் காரியத்திற் செல்லுதலல்லது, தன்முன் காணப்படும் யாறு, குளம் முதலியவற்றிலுள்ள நீரையெல்லாம் முகக்கக் கருதாமைபோல, பரந்துபட்ட கல்வியுள் உலகியலில் தமக்கு வேண்டுந்துணையே கற்று அமைந்து, உயிர்க்குறுதிதேட

முயறலன்றி எல்லாக் கல்வியையும் முற்றக் கற்க முயலுதல் அறிவுடைமை யன்ருகலானும், " கல்வி யென்னும் பல்கடற் பிழைத்தும் " என்ருர்.

39. ஈட்டல், காத்தல், அழித்தல் முதலிய எல்லாவற்ருனும் பொருள் துன்பமே பயத்தலின், " செல்வம் என்னும் அல்லல் " என்று அருளினுர். அல்லலைத் தருவது, " அல்லல் " எனப்பட்டது. இதனினின்றுந் தப்புதலாவது, இதன்கண் பற்றுச் செய்யாமையாம்.

40. நல்குரவு - வறுமை. விடம் - நஞ்சு. செல்வம் அல்லல் பயப்பினும், அறிவுடையார்க்காயின், அறத்தையும் உடன் பயக்கும். வறுமை அவ்வாறின்றி அவர்க்கும் இருமுது குரவர் முதலாயினுரை இனிது ஓர்பமாட்டாமை முதலிய பல குற்றங்களைப் பயந்து இருமையையுங் கெடுத்தலின், அதனை நஞ்சாக உருவகித்தார். இதனுனே, வறுமையுட் பட்டார்க்கு அறிவு மெய்யுணர்தற்கட் செல்லாமையும் பெறப்பட்டது.

" வாழ்வெனும் மையல் விட்டு வறுமையாம் சிறுமை தப்பி "

என்ருர் சித்தியாரினும் (சூ. 2-91.). வறுமை இருமையையுங் கெடுத்தலை,

" இன்மை யெனஒரு பாவி மறுமையும்
இம்மையும் இன்றி வரும் " (குறள் - 1042)

என்பதனுனும் அறிக. இவ்வாறு நல்குரவு இருமையுங் கெடுத்தலைப் பலரும் பண்டே அறிந்து அஞ்சப்படுவதென்பதனையே, " தொல்விடம் " என்ருர் என்க. இதனினின்றும் தப்புதல்,

" தெண்ணீ ரடுபுற்கை யாயினும் தாள்தந்த
துண்ணலி னூங்கினிய தில் " (குறள் - 1065)

என்று மகிழ்ந்திருக்கும் பண்பு, தமக்கும், தம் சுற்றத்திற்கும் வாய்த்தலால் உண்டாவதாம்

41 புல்வரம்பாய பல துறை - இழிந்த நிலையினவாகிய பல தொழில்கள் அவை, கள் விற்றல், மீன்படுத்தல், ஊன் விற்றல் போல்வன. இவை அறிவின்கண் நல்லன புக வொட்டாமையின், தெய்வ உணர்விற்கும் தடையாதல் அறிக. இத்தொழில்கள் தாமே சாதிகளாய் நிற்றலின்,

" தரைதனிற் கீழை விட்டுத் தவஞ்செய்சா தியினில் வந்து "

எனச் சிவஞானசித்தியுட் கூறப்பட்டது (சூ 2 - 90).

42 - 45. தெய்வம் என்பது ஓர் சித்தம் - கடவுள் என்று உணர்வதோர் உணர்ச்சி. உண்டாகி - தோன்றப்பெற்று, முனிவிலாதது ஓர் பொருள் கருதலும் எஞ்ஞான்றும் வெறுக்கப் படாததாகிய அவ்வொப்பற்ற பொருளை அடைய விரும்பிய அளவிலே; அளவில்லாத மாயையின் ஆற்றல்கள் தனித் தனியே தம் மயக்கும் செயல்களைச் செய்யத் தொடங்கிவிட்டன என்க.

தெய்வம், 'கடவுள் - பரம்பொருள்' என்னும் பொருளதாய் நின்றது. 'அம் முனிவிலாததோர் பொருள்' எனச் சுட்டு வருவித்துரைக்க. அது, பகுதிப் பொருள் விகுதி. 'மாயா சத்திகள்' எனப்பட்டன, உலகியல்களாம். "ஆறுகோடி" என்றது, அளவின்மை குறித்தவாறும். கோடி என்றே போகாது "ஆறுகோடி" என்றது மாயாகாரியங்கள் அனைத் தும் 'அத்துவா' எனப்படும், 'மந்திரம், பதம், வன்னம், புவனம் தத்துவம் கலை' என்னும் ஆறாய் அடங்குதல்பற்றிப் போலும்! இனி, இதனை, 'காமம், குரோதம்' முதலிய அகப் பகை ஆறென்றல் பற்றிக் கூறியதாக உரைப்பின், அவை ஆணவத்தின் காரியமாதலேயன்றி, மேல், மாதர்தம் மயக்கம் முதலாகக் கூறியவற்றுள் அடங்கினவாதலும் அறிக.

மேல் கடவுளுணர்வு தோன்றுதற்குத் தடையாயுள்ளன வற்றை வகுத்தருளிச் செய்தார்; இனி, அது தோன்றிய பின்னரும், நிலைபெறுதொழிலைச் செய்வனவற்றை அவ்வா றருளிச் செய்வாராய், " மாயா சத்திகள் தம் மாயைகள் தொடங்கின " என்றார். எனவே, இனி வருவன அம் மாயா சத்திகளின் செயல்களேயாதல் அறிக.

உணர்வை, " சித்தம் " என்றார். உலகப் பொருள்கள் முன்னர் இனியவாய்த் தோன்றி விரும்பப்பட்டுப் பின்னர் இன்னாதனவாய் வெறுக்கப்படுதல்போலன்றி, பரம்பொருள் எஞ்ஞான்றும் இனிதாயே நிற்றலின், அடையற்பாலது அஃது ஒன்றுமே என்பதுணர்த்துவார், " முனிவிலாததோர் பொருள் " என்றார்.

46, 47. 'ஆத்தமானாரும் அயலவரும் கூடி' என்க. ஆத்தம் - மெய்ம்மை. ஆனார் - நீங்காதவர்; என்றது, 'உறுதி யுரைக்கும் நண்பர்' என்றவாறு. இனி, 'ஆத்தம்' என்னும் பண்புப் பெயர், அதனை உடையார்மேல் நின்றதெனக்கொண்டு, 'ஆத்தராயினர்' என்று உரைத்தலுமாம். அயலவரும் அவரொடு கூடியது, அவர் கூற்றை வலியுறுத்தற்பொருட்டாம். இவர்கள் பேசும் நாத்திக உரைகளாவன, 'இப்பொழுது கிடைத்துள்ள செல்வமும், மாடமாளிகையும், மகளிரும் முதலாய பொருள்களைத் துறந்து, இனியெய்தற்பாலதாய கடவுளை அடைதற்கு இப்பொழுது விரும்புதல் வேண்டா; பின்னர்ப் பார்த்துக் கொள்வோம்' என்றாற்போல மெய்ந்நெறியினை நெகிழவிடக் கூறுவனவாம். கடவுளும், வினைப்பயனும், மறு பிறப்பும் போல்வனவற்றை, 'இல்லை' என அழித்துரைக்கும் நாத்திகரைப் பின்னர்க் குறித்தருளுப. "நாத்தழும்பேறினர்" எனறதனால், இவற்றைப் பல்காலும் இடையறாது கூறி, ஆமளவும் கடவுள் உணர்வை மாற்றமுயறல் குறிக்கப்பட்டது. "நாத்தழும்பேறினர்" என, சினைவினை, முதல்மேல் நின்றது. "பெருகவும், சூழவும்" எனப் பின்னர் வருதலின், அவற்றிற்கேற்ப ஏனையிடங்களிலும், 'நாத்தழும்பேறினராகவும்', 'சாத்திரங் காட்டினராகவும்' என்றாற்போல, ஆக்கமும், உம்மையும் விரித்துரைக்க.

48 49. சுற்றம் - உறவினர். கடவுள் நெறியது நலப் பாட்டினை அறியமாட்டாமையின, அதனை அடைய விரும்பு வாரைத் தமக்கும் தம் தமர்க்கும் உறுதியுணராதவராகநினைத்து அவலம் எய்தலின், அத்தன்மையராய உறவினரை விலங்குகளோடு ஒப்பித்து, "பசுக்குழாங்கள்" என்று அருளிச்செய்தார். எனவே, 'சுற்றம் எனனும் குழாங்கள்'' என்றது, இகழ்ச்சிக்கண் உயர்திணை அஃறிணையாய் பின்வரும், 'பதறினர்'' என்பதனோடு திணைமயக்கமாயிற்று எனக. இனி, 'பதறின' என்பதே பாடம் என்றலுமாம். தொன்றுதொட்டு வந்த உறவுடையர் என்பார், "தொல்பசுக்குழாங்கள்" என்றார். பற்றி அழைத்தல் - கை கால்களைப் பற்றிக்கொண்டு, 'அந்தோ! துறத்தல் வேண்டா' எனக் கூப்பிடு செய்தல். பதறுதல் - துன்பத்தால் விதிர்விதிர்த்தல். 'பதறினராய்ப் பெருக' எனக. பெருகுதல், பலராய்ச் சூழ்ந்துகொள்ளுதல்.

உம்மை, வினைக்கண் வந்த எண்ணிடைச் சொல். ''சூழவும்'' எனப் பின்னர் (58) வருவதும் அது.

ஒருவர்க்கு ஒருகாரியம் பற்றிச் சொல்பவருள் ஆத்த நண்பர் முன்னிற்பராகலானும், அவர், தம் கருத்தை யுரைத்தலைக் கேட்கும் வாய்ப்புப் பெற்றுழி, அயலாரும் அவரோடு உடம்பட்டுச் சில சொல்லுபவாகலானும் அவ்விருவரையும் முன்னர் வைத்தும், அவர்தம் உரைப்படியேனும், அவற்றிற்கு மாறாகவேனும் செயலை மேற்கொள்ளும் வழியே சுற்றத்தார் அறிந்து தாம் கூறுவனவற்றைக் கூறுவராகலின், அவரை அவ் விருவருக்கும் பின்னர் வைத்தும் அருளிச்செய்தார். இவரெல்லாம் உலகவராய் நீங்க, இனிச் சமயத்தார் செய்வனவற்றை அருளுவார்.

50, 51. விரதம் - நோன்புகள். பரம் - மெய்ப்பொருள். 'உயிர்கள் செய்யும் வினைகளே, அவற்றிற்கு நன்மை தீமைகளைப் பயக்கும்; உயிர்கட்கும், அவை செய்யும் வினைகட்கும் வேறாய் மூன்றாவதொருபொருள் இல்லை என்பவர், வேதத்துட் கருமகாண்டத்தையே சிறப்புடைய பகுதியாகக் கொண்டு, ஏனைய பகுதிகளைப் பொதுவகையால் தழுவுபவர். இவர், வேதத்தின முற்பகுதியாகிய கருமகாண்டம் ஒன்றனையுமே ஆராய்பவராகலின் 'பூருவ மீமாஞ்சகர்' எனவும், கருமகாண்டம் ஒன்றனையுமே சிறந்த பிரமாணமாகக் கொள்ளுதலின், 'கருமகாண்டிகள்' எனவும், 'கருமமே கடவுள்' என்றலின், 'கருமப் பிரம வாதிகள்' எனவும் பெயர் கூறப் படுவர். எனவே, இங்கு, ''வேதியர்'' என்றது, இவர்களையே யாம்.

''ஆதிமறை ஓதி அதன் பயனொன் றும்மறியா
வேதியர்சொல் மெய்யென்று மேவாதே''

என்றார், நெஞ்சுவிடுதூதினும் (106, 107.).

சரதம் - உண்மை. 'சாத்திரம்' என்றது, இவரது நூலாகிய பூருவ மீமாஞ்சையை. இது, சைமினி முனிவரால் செய்யப்பட்டது. அந்நூல், இவர் தம் கொள்கையை மிகத் திறம்பட நிறுவலின், ''சரதமாகவே காட்டினர்'' என்று அருளினார். எவ்வாறுரைப்பினும், இவர் தம் கூற்று உண்மையல்ல என்பார், ''பரமாக' எனவும், 'சரதமாகவே''

எனவும் ஈரிடத்தும் ஆக்கச் சொற்புணர்த்து அருளிச்செய்தார். "ஆகவே" என்றது, 'போலத்தோன்றும்படியே' என்றவாறு. இன்றும், 'உணர்த்தினர்' என்றது. "காட்டினர்" என்றார். அஃது அறிவுடையோர் உணர்வைப்பற்றாது நீங்கலின். வேதத்துட் கரும காண்டம் முன்நிற்றல்பற்றி, இவரை முன்னர்க் கூறினார்.

52 - 53. "சமய வாதிகள்" என்றது, வேதத்துள் உபாசனா காண்டமும் அதுபோலும்' பிற நூல்களும் பற்றி ஒரு தெய்வத்தையாதல், பல தெய்வங்களையாதல் வழிபடும் கிரியா மார்க்கத்தவரையாம். உபாசனா காண்டம், கரும காண்டத்தின் பின்னர்த்தாதல் பற்றி. இவரை மீமாஞ்சர்க்குப் பின்னர் வைத்து அருளிச்செய்தார். மதம் - தாம் தாம் தெய்வம் எனக் கொண்ட பொருள்பற்றிய கொள்கை. அமைதலுக்கு வினைமுதல், மேல் 'பரம்'' என்றதேயாம் அதனால், அதனை இங்கும் இயைத்துரைக்க. இங்கும், "அமைவதாக" என்றார் பரம்பொருள் அவர் தம் மதங்களில் அமையாமையின். அமைதல் - அடங்குதல், "அரற்றி" என்றதும் அதுபற்றி. அரற்றுதல் - வாய்விட்டழுதல். இவருள் ஒருவர் கொண்ட தெய்வத்தை மற்றையோர் உடம்படாது மறுத்துரைத்துக் கலாய்த்தலின், "மலைந்தனர்" என்றும் அருளிச்செய்தார்.

54 - 55. மிண்டிய - வலிமைபெற்றெழுந்த. மாயாவாதம்- 'உலகம் உள்பொருளன்று' என்னும் கூற்று. உலகம், கடவுள் போல என்றும் ஒருநிலையாய் நில்லாது, தோன்றி நின்று மறைதல் பற்றி, 'பொய்' எனவும். 'அசத்து' எனவும் ஆன்றோர் கூறினராக, அக்கருத்துணராது, 'கயிற்றில் அரவு போலவும் கானலின் நீர் போலவும் கடவுளிடத்தே தோன்றுவதொரு பொய்த் தோற்றமே உலகம்' எனவும். 'அன்னதொரு தோற்றமே மாயை' எனவும் கொண்டு' 'நாம் காண்பன அனைத்தும் மாயையே' என வாதித்தலின். அவ்வாதம், 'மாயா வாதம்' எனப்பட்டது. இவ்வாதத்தினை வலியுறுத்த உத்தரமீமாஞ்சையாகிய பிரமசூத்திரம் என்னும் முதனூலைச் செய்தவர் வேதவியாத முனிவராதலின், அதற்கு அந்நூலோடு இயைந்த உரையை வகுத்துப் பெருமைபெற்ற சங்கரர் காலத்திற்குமுன் இவ்வாதம் தோன்றிற்று என்றல் உண்மையுணராதார் கூற்றேயாமென்க.

இனி, மாயாவாதம் சங்கரர் காலத்திற்கு முன்னரே தோன்றிற்றாயினும், அது தமிழகத்திற் பரவியது, அவரது காலத்திற்றான் என்பது உண்மையேயாயினும், அடிகள்போன்ற பேரறிவுடையார்க்குச் சங்கரர் காலத்திற்கு முன்னர் அதனை அறிதல் இயலாதென்றல் பொருந்துவதன்றாம். மாயாவாத நூல் வேதவியாத முனிவரால் செய்யப்பட்டது என்பதனை, 'இங்ஙனம் நால்வேறு வகைப்பட்ட ஏகான்மவாத நூல் செய்தவன் வியாதமுனிவன்' எனச் சிவஞானபாடியத்துட் கூறியவாற்றான் உணர்க. ஏகான்மவாதவகை நான்கனுள் மாயாவாதமே தலையாயதென்பது வெளிப்படை.

இவ்வாற்றான், சிவநெறியாளர்க்கு வடமொழியில் சிவாகமமே சிறப்பு நூலாவதன்றிப் பிற நூல்களுள் யாதொன்றும் அன்னதாகாமை பெறப்பட்டது. இவ்வரையறையில் நில்லாது, வியாத முனிவரது ஏகான்ம நூலைச் சிவநெறி நூலாக மேற்கொண்டு உரை வகுக்கப் புகுந்தமையால், நீலகண்ட சிவாசாரியர் சைவசித்தாந்தத்தோடு உள்ளத்தால் முரணாராயும், உரையால் முரணி நிற்பாராயினர் என்க.

வேதத்தை வகைப்படுத்திப் பதினெண் புராணங்களையும் செய்த வியாத முனிவரது நூலை, இவ்வாறு பிரமாணம் அன்றென விலக்குதல் குற்றமாமன்றோ எனின், ஆகாது; எவ்வாறு எனின்,

"வேதந் துறைசெய்தான் மெய்துணியான் கைதுணிந்தான்"

எனப் பிற்காலத்தார்தாமே (குமரகுருபர அடிகள் - சிதம்பரச் செய்யுட்கோவை - 13.) ஓதினராகலானும், அவர் அங்ஙனம் ஓதுதற்கு முதலாய்

"கங்கைசூழ் கிடந்த காசிமால் வரைப்பிற்
பொய்புகல் வியாதன் கைதம் பித்தலின்"

(சிவஞான முனிவர் மொழிபெயர்ப்பு; இதன் மூலம் **'वाराणस्याच पाराशरिनियमि भुजस्तंभनात्'** என்னும் அரதத்த சிவாசாரியர் பஞ்ச சுலோக வாக்கியம்) எனக் குறிக்கப்படும் பண்டை வரலாறு உண்மையானும், வேதவியாதர் குணவயப் பட்டு மயங்கினமை பெறப்படுதலான் என்க.

'மாயாவாதம் சங்கரர் காலத்திலன்றே தோன்றியது' என்பார்க்கு, இங்ஙனம் செவ்வனே விடையிறுக்கமாட்டாதார், ஈண்டு அடிகள், "மாயாவாதம்" என்றது, சூனியவாதமாகிய பௌத்த மதத்தை எனக் கூறி இடர்ப்படுவர். 'மாயை' என்னும் வாய்பாடு வைதிக மதங்கட்கன்றி, அவற்றிற்குப் புறமாய மதங்கட்கு ஏலாமைதானே, அவர் கூற்றுப் பொருந்தாமையை இனிது விளக்கும். அன்றியும் அடிகள் ஈண்டு வைதிக மதங்களை எடுத்தோதியதன்றி அவைதிக மதங்களை எடுத்தோதினாரல்லர். ஓதினாரெனின், ஆருக மதத்தையும் கூறியிருத்தல் வேண்டும் என்க. உலகாயத மதம் ஏனை மதங்கள் அனைத்திற்குமே புறம்பாவதென்பதுணர்க.

இம் மாயாவாதம், கடவுட்கும் உயிர்க்கும் இடையே உள்ளதாய், யாண்டும் உயர்ந்தோர் பலராலும் போற்றிக் கொள்ளப்பட்டு வரும் ஆண்டான் அடிமைத் திறத்தினை, முனிவர் ஒருவரது நாலைத் துணைக்கொண்டு போக்க உறுதி கொண்டு நிற்றலின், "மிண்டிய" என அடைபுணர்த்தும், ஈன்று புறந்தந்து விளங்குவாளை, 'இவள் மலடி' என்பார் கூற்றுப்போல, யாவராலும் உள்ளதாய்க் காணப்பட்டுப் பயன் தந்து வரும் உலகினை, விடாய் கொண்டோர்க்கு அதனைத் தணிக்கமாட்டாது வெறுந் தோற்றமாத்திரையாய் ஒழியும் கானல்நீர் முதலியவற்றோடு ஒப்பித்து, 'இஃதோர் பொய்த் தோற்றம்' எனக் கூறும் தமது முருட்டு வாதத்தினை, 'தற்கம், வாதம், செற்பம், விதண்டை, சலம், சாதி' முதலிய பாகுபாட்டுரைகளாற் சொற்சாலம் பட விரிக்கும் அவரது ஆரவார உரைகள், யாதுமறியா மக்களுள்ளத்தை மருட்சிக்குள்ளாக்குதலின், அதனை. சுழன்றடித்துப் பொருள்களைத் தலைதடுமாறுகப் புரட்டி மக்களை அல்லற்படுத்தும் பேய்க்காற்றின் செயலோடொப்பித்து, 'மாயாவாதமென்னும் சண்டமாருதம் சுழித்தடித்து ஆஅர்த்து' என உருவகித்தும் அருளிச்செய்தார். 'மாயாவாதிகள்' என அதனை யுடையார்மேல் வைத்து அருளாது, 'மாயாவாதம்' என அவ்வாதத்தின் மேலே வைத்து அருளியதும், அதனது மயக்க மிகுதியைப் புலப்படுத்தற் பொருட்டாம். "அதிற்பெருமாயை எனைப்பல சூழவும்" எனப் பின்னர் வருவதனை (58) இதற்குங் கூட்டியுரைக்க.

இவ்வாதம், வேதத்துள் உபாசன காண்டத்தின் பின்வைத்தாய் இறுதியில் நிற்கும் ஞான காண்டத்தையே பற்றிநிற்

றலின், மேற்கூறிய கிரியாமார்க்கச் சமயங்களின் பின்னர் வைத்து அருளினார். இதனையே, இதன் நூல், 'உத்தர மீமாஞ்சை' எனவும், இம்மதம், 'வேதாந்தம்' எனவும் பெயர் பெறுவவாயின. உபநிடதங்களுள் 'அத்துவிதம்' எனவரும் சொல்லினைச் சிறப்பாகப் பற்றிக்கோடலின், 'இவ் வாதிகள் தம் மதத்தினை' 'அத்துவித மதம்' எனவும் தம்மை 'அத்துவிதிகள்' எனவும் கூறிக்கொள்ளினும், 'ஏகான்ம வாதம்' என்பது இதற்கு ஏற்புடைய பெயராகும். 'மாயா வாதம்' என்பது சிவநெறியாளர் இதற்கு இட்ட பெயராம்.

உத்தர மீமாஞ்சை வேதத்தின் ஞானகாண்டத்தை ஆராய்வதாயின், அதனை இகழ்தல் குற்றமாமன்றோ எனின், அன்றாம். என்னையெனின், வேதத்தின் பொருளை ஒருதலையாக இனிது விளங்க எழுந்தவையே சிவாகமங்களாதலின், அவற்றை இகழ்ந்தொதுக்கி, அவற்றோடு மாறுபட எழுந்த பிற நூல்களைக் கொள்வதே குற்றமாதலின் என்க. இதனை,

"......நீண்மறையின் ஒழிபொருள், வேதாந்தத்
தீதில்பொருள் கொண்டுரைக்கும் நூல் சைவம்; பிறநூல்
திகழ்பூர்வம்; சிவாகமங்கள் சித்தாந்த மாகும்"

என்றும் (சிவஞானசித்தி - சு. 8-15.) "வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தம்" என்றும் (சிவப்பிரகாசம் - 7.) சிவநெறி யாசிரியன்மார் இனிது விளக்கிப் போந்தவாறறிக. இன்னும் அவர், சிவாகமங்களை யொழித்து வேதத்தின் சார்பாய் எழுந்த நூல்கள் அனைத்தும் பசுத்தன்மை யுடையோரால், தாம்தாம் அறிந்தவாற்றாற் செய்யப்பட்டன என்பதை,

"அருமறை, ஆகமம்முதல்நூல், அனைத்தும் உரைக்கை யினால்;
அளப்பரிதாம் அப்பொருளை; அரனருளால் அணுக்கள்
தருவர்கள், பின் தனித்தனியே தாமறிந்த அளவில்
தற்கமொ டுத்தரங்களினால் சமயம்சாதித்து"

(ஷை 8-14.)

என எடுத்தோதியதுங் காண்க.

56 - 57. 'உலகாயதர்' எனப் பன்மையாற் கூறாது ஒருமையாற் கூறினார், அவரது மதம் ஏனை எல்லா மதங்களினுங் கீழ்ப்பட்டதாய அதனது இழிபுணர்த்தற் பொருட்டு.

'காட்சி ஒன்றே அளவை; அதற்கு வாராதவாறு உரைப்பனவெல்லாம் போலிகள்; ஆகவே, முற்பிறப்பு, மறு பிறப்பு, வீடுபேறு முதலியவற்றைக் கூறி, உலகத்தாரை, அலைக்கழித்தல் வேண்டா' என்பதே உலகாயதமதம். 'நாத்திகம்' எனப்படுவதும் இதுவே. உலகாயதருள்ளும், 'உடம்பே உயிர், மனமே உயிர், பிராணவாயுவே உயிர்' என்றுற்போலும் வேறுபட்ட கொள்கை நூல்களை யுடையார் உளராகலின், அந்நூல் வேறுபாடுகளை, "கலாபேதம்" என்றார். கலா - கலை; நூல். உலகாயதரது கொள்கைகள் பலவும் அந்நூல்களில் கிடைத்தலால், அந்நூற்பொருளை அம்மதமாகிய பாம்பினது கடிய விடமாக உருவகித்தார். கடுவிடம் - பெருநஞ்சு; 'அஃதாவது மீளுதற்கரிய நஞ்சு' என்றவாறு. உலகாயதம், ஏனை மதங்கள்போல மக்களை உள்ளவாறு நெறிப்பட்டொழுகச் செய்யாது "அச்சமே கீழ்களது ஆசாரம்; எச்சம் - அவாவுண்டேல் உண்டாம் சிறிது" (குறள்-1075) என்றபடி அரசனையும், பிறவுமாகிய புறப்பொருள்கள் சார்பாக நெறிப்பட்டொழுகச் செய்தலால், உள்ளத்தால் பழி பாவங்கட்கு அஞ்சுதலைப் போக்கிக் கேடு பயத்தலின், அதனைக் கடுவிடமாக உருவகிப்பார், அதற்கேற்ப, அதனையுடையாரைப் பாம்பாக உருவகித்தார்.

உலகத்தனையே பொய்த்தோற்றம் எனவும், அதனால் கடவுட்கும், உயிர்க்கும் இடையே காணப்படும் ஆண்டவன் அடிமைத் திறமும் அன்னதே எனவும் உபதேசிக்கும் மாயாவாதிகளது உபதேச மொழியைக் கேட்டோர், கடவுளும், புண்ணிய பாவங்களும் சுவர்க்க நரகங்களும் இல்லை என்பதனை வலியுறுத்தி உணர்த்தும் உலகாயதரது நாத்திக மதத்தில் எளிதின் விழுந்து கெடுவர் என்பது தோன்ற, அவர்களை மாயாவாதிகளை அடுக்க வைத்து, அவர் கூற்றினைக் கடவுளுணர்விற்கு மாறுவன பலவற்றினும் நேர்மாறுவதெனக் குறிப்பான் உணர்த்தி முடித்தார். எய்தி - எய்துதலால். மாயை - மயக்கம். எனைப் பல - எத்துணையோ பல.

59. தப்பாமே - தவறிப்போகாதபடி. 'தாம் பிடித்தது' எனச் செயப்படுபொருள் வினைமுதல்போலக் கூறப்பட்டது. பிடித்தது முன்னர்க் கூறிய, முனிவிலாத பொருளை அடையக் கருதிய கருத்து (43). 'சலியாது' என்பது ஈறு குறைந்தது.

இதன்பின்னர், 'நின்று' என்பது எஞ்சி நின்றது. "ஆத்த மானார்" (46) என்றது முதலாக இதுகாறும் வந்தவற்றை, 'ஏறவும், பெருகவும், காட்டவும், மலையவும், ஆர்த்தலால் சூழவும், எய்தலால் சூழவும், தாம் பிடித்தது தப்பாமே சலியாது நின்று' என முடிக்க. இதனுள் "தாம்" என்றது, பின்னர், "தழைப்பவர்" (86) எனப் படுவாரைக் குறித்தது.

60 - 61. "தழலது", "மெழுகது" என்றவற்றில் அது, பகுதிப்பொருள் விகுதி. 'மெழுகுபோல உளம் உருகித் தொழுது' என மாற்றி உரைக்க. கம்பித்து - நடுங்கி. தொழுவது, சிவபெருமானை என்பது உய்த்துணர வைக்கப் பட்டது, ஞானத்தைத் தருபவன் அவனே என்பது வெளிப்படை என்பது தோன்றுதற் பொருட்டு.

62 - 64. பரவி - துதித்து. கொடிறு - 'குறடு' என்னும் கருவி. "விடாது" என்றதனைத் தனித்தனி கூட்டியுரைக்க, "படியேயாகி" என்றது, 'இறுகப் பற்றிக்கொண்டு' என்ற வாறு.

65 - 67. "ஆணி அறைந்தாற்போல" என்றாராயினும், 'அறைந்த ஆணிபோல' என்பதே கருத்து. 'பசுமரத்தின்கண் அறையப்பட்ட ஆணிபோல இடையறாது நிற்கும் நல்ல அன்பி னால் கசிவது' என்க. நல்லன்பு - மெய்யன்பு. கசிவது - துளிப்பதாகிய கண்ணீர். 'அது பெருகிக் கடல் என்னும்படி மறுகப்பெற்று' என்க. மறுகுதல், இங்கு, வீழ்தலைக் குறித்தது. அகம் குழைந்து - மனம் கரைந்து; என்றது, 'அந்தக் கரணங் களும் அன்புவடிவாகப்பெற்று' என்றபடி. 'அனுகுலமாய் அகங் குழைந்து' என மாறிக் கூட்டுக. 'அனுகூலமாய்' என்றது, குறுகிநின்றது. 'அந்தக்கரணங்கள் முன்னர் மாறிநின்று ஐம்புல வழியே தம்மை ஈர்த்து அலைத்தாற்போல அலையாது, தம்மோடு ஒத்துநிற்கப்பெற்று' என்றவாறு. மெய்விதிர்த்து - உடல் நடுங்கி இவையெல்லாம் இடையறாத நல்லன்பின் செயலாக அருளினமையின், முன்னர், உளம் உருகுதல் முதலாகப் பரவு தல் ஈறாக அருளியவை ஒரோவழி நிகழும் பொதுவன்பின் செயலாம் என்பது உணர்க.

68 - 71. சகம் - உலகம். 'தம்மைப் பேய் என்று சிரிப்ப' என மாற்றிக் கொள்க. பேய் என்றலாவது, 'அறிவை

இழந்தார்' என்றலாம். சிரித்தல் - எள்ளி நகையாடுதல். 'சகம் சிரிக்கும்படி நாண் நீங்கப்பெற்று' என்க. நாண் நீங்குதல் நன்றுமோ எனின், "அவமதிப்பும் ஆன்ற மதிப்பும் இரண்டும் - மிகைமக்களான் மதிக்கற் பால" (நாலடி 163.) என்பவாக லின், உலகர் இகழ்ச்சிக்கு இறைவன் அடியார் நாணுர் என்க. "நாடவர்" என்றது, 'அவர்' என்னும் சுட்டுப்பெயரளவாய் நின்றது. பூணுக - அணிகலனுய் நிற்ப. உலகத்தாரால் இகழப் பெறுதல் இறைவன் அடியார்க்குச் சிறுமையாகாமையே யன்றிப் பெருமையாயும் நிற்றலின், 'பழித்துரை பூணதுவாக' என்றார். நாணது, பூணது என்றவற்றில் அது, பகுதிப் பொருள் விகுதி. 'பூணது' என ஒருமையாகக் கூறியது, 'பூண்' என்னும் இனத்தை நோக்கி. கோணுதல் - மனம் திரிதல்; திரிவு, வெகுளியான் என்க, சதுர் - திறமை. அஃதாவது, அவர்போலத் தாமும் உலகியலில் வல்லராதல். அந்நிலை மனத்தினும் தோன்றுது ஒழிதலின், "இழந்து" என்றார். அறிமால் - அறிகின்ற மயக்கம்; அஃதாவது உலகியலை அறிந்தே அதனைப் பொருட்படுத்தாது நிற்றல். எனவே. பித்துக்கொண்டோர் உலகியலை அறியாது மயங்கி அலமரும் மயக்கம் போல்வதன்று என்றவாருயிற்று. அறிவதையே, 'மால்' என்றமையின், 'அறி' என்னும் காலங்கரந்த பெயரெச்சம் வினைப்பெயர் கொண்டதாம். 'அறிதுயில்' என்பதற்கும் இது பொருந்தும்.

72 - 87. சாருங் கதி - அடையத்தக்க நிலை; வீடுபேறு. "கதியது" என்றதில் அது, பகுதிப்பொருள்விகுதி. 'கதியதனை' என இரண்டனுருபு விரித்து, "அருளிய" என வருவதனேடு முடிக்க. பரமாஅதிசயமாக-மேலானபெருவியப்பாம்படி; இதனை யும், அதனேடே முடிக்க. கற்று - கன்று ஆ; கன்றை யுடைய பசு. "கதறியும் பதறியும்" என்றது, 'அன்பு மீதூரப் பெற்று' என்னும் பொருட்டாய், "மனமென" என்றதற்கு முடிபா யிற்று. இது, "நினையாது" என வருவதில், நினைத்தல் வினை யோடே முடிந்தது. எனவே, 'பிறதெய்வங்களிடத்து அன்பு செலுத்துதலைச் செய்யாது' என்றவாருயிற்று. இறைவன் குருவாகி அருளுதற்குமுன் முப்பொருள்களின் இயல்பு அனுபவ மாய்த் தோன்றுமையின், அக்காலத்தில் ஏனைத் தெய்வங்களை யும் சிவபெருமானேடு ஒப்பக்கொண்டு தொழுதல் உண்டாக, அவன் குருவாகிவந்து அருளியபின்பு அவை அனுபவமாய்த்

தோன்றலின், மற்றோர் தெய்வத்தைக் கனவிலும் நினையாத நிலை உளதாதல்பற்றி, "மற்றோர் தெய்வம் கனவிலும் நினையாது - குருபரனாகிவந்து அருளிய பெருமை" என்று அருளினார்.

"நினையாது" என்றதனை, 'நினையாமே' எனத் திரித்து, 'நினையாமே வந்து அருளிய' என முடிக்க. 'அரும்பரம்' என்பது, 'அருபரம்' எனக் குறைந்துநின்றது. அரும்பரத்து ஒருவன்- அரிய பரம்பொருளாகிய இறைவன். "பரத்து" என்றதில் அத்து, அல்வழிக்கண் வந்த சாரியை. அவனி - பூமி. "வந்து குருபரனாகி அருளிய பெருமை" என்றதனை, 'குருபரனாகி வந்து அருளிய பெருமை' என மாற்றி யுரைக்க.

"பெருமை", "சிறுமை" என்றன, அவ்வளவினதான கருணையைக் குறித்தது. பெருங்கருணையாவது, அருளப்படுவாரது தரத்தினளவாகாது, அதனின் மிகப் பெரிதாவது. அஃது ஏனக் குருளைக்குத் தாயாய் வந்து பால்கொடுத்தமை போல்வது. இதனை, 'நாய்க்குத் தவிசிட்டாற்போல' என அடிகள் பலவிடத்தும் எடுத்தோதியருளுவார். அதனை அறியாது, 'எம் தரத்திற்கு இஃது அவனாற் செயற்பாலதே என இகழாது' என்பார், "சிறுமையென்று இகழாதே" என்றார். தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகிய பின்னர் ஒரோவழி உளம் உருகி ஆடிப் பாடித் தொழுதலும், அதன் பின்னர்ப் பலநாள் செல்ல, சகம் பேய் என்று தம்மைச் சிரித்தலைப் பொருட்படுத்தாது இடையறா அன்பின் இறைவனையே நாடி நிற்றலும் செய்யினும், அனாதி தொட்டு அளவிலா ஊழிக்காலங் காறும், ஓர் இமைப்பொழுதும் நீங்காது உயிர்க்குயிராய் உடன்நின்று நோக்கி உபகரித்துவந்த அவனது அருட்டிறத்தைச் சிறிதும் நினையாது மறந்தமையேயன்றி, 'அதனை மறத்தலாகாது' என, அறிவோர் உரைத்த பல அருளுரைகளையும் அழித்துப் பேசிவந்த பெருங் குற்றத்தைச் சிறிதும் திருவுளத் தடையாது, இடையறா அன்பு தோன்றிய துணையானே வெளிநின்று அருள் புரிந்த திறத்தினை அங்ஙனம் அருளப்பட்டாரது தரத்தினளவானதே என்றல் எத்துணை ஓர் அறியாமையாதல் உணர்க.

இதனானே, முதற்கண் ஒரோவழி உளம் உருகித் தொழுதலும், பின்னர் இடையறா அன்பின் சதுர் இழந்து அறிமால் கொண்டு நிற்றலும் நிகழும் என்பதும், அது நிகழ்ந்தபின்னரே

இறைவன் குருபரனாகி வந்து அருளுவான் என்பதும் போந்தன. குருபரனாகி அருளுவதற்குமுன் நிகழும் அந்நிலைகளே சத்திநி பாதமாவன. அவற்றுள், முன்னையது 'மந்ததரம், மந்தம்' என இருவகைப்பட்டும், பின்னையது, 'தீவிரம், தீவிரதரம்' என இருவகைப்பட்டும் நிகழும். அவற்றுள், "நானது ஒழிந்து" என்றதுமுதல், "அறிமால் கொண்டு" என்றது ஈறாக, அருளப் பட்டன தீவிரதர சத்திநிபாதமாம் என்க. "இகழாதே" என்பது முதலியன, இறைவன் குருபரனாகிவந்து அருளியதன் பின்னர் நிகழும் ஞானச் செய்திகளாம்.

"நிழலது" என்றதில் அது, பகுதிப் பொருள் விகுதி. "கரையது" என்றதும் அது. 'அத்திசை முன்பின்னாகி' எனக் கூட்டுக. அத்திசை - அவ்விடத்து; என்றது, திருவடியுள்ள இடத்தை. அடியார்க்குத் துணையாவன ஆசிரியனது அடியிணையே யாதலின், அதனையே அருளிச்செய்தார். முன்பின் ஆகி - முன்னாதல் பின்னாதல் ஆகி. முனியாது - வெறாது நின்று; வெறுத்தல், மெய்வருத்தம் காரணமாக உளதாவது. அன்பு மீதூர்ந்தவிடத்து அவ்வருத்தந் தோன்றாமையின், "முனியாது" என்றார். அதனை,

"...............மெய்ம்மையின் வேறு கொள்ளாச்
செவ்விய அன்பு தாங்கித்
திருக்கையிற் சிலையுந் தாங்கி
மைவரை என்ன ஐயர்
மருங்குநின் றகலா நின்றார்"

எனவும்,

"சார்வருந் தவங்கள் செய்து
முனிவரும் அமரர் தாமும்
கார்வரை அடவி சேர்ந்துங்
காணுதற் கரியார் தம்மை
ஆர்வமுன் பெருக ஆரா
அன்பினிற் கண்டு கொண்டே
நேர்பெற நோக்கி நின்றார்
நீளிருள் நீங்க நின்றார்"

எனவும்,

" கருங்கடல் என்ன நின்று
கண் துயி லாத வீரர் "

எனவும்,

" எப்பொழுதும் மேன்மேல்வந் தெழும்அன்பால் காளத்தி
அப்பர்எதிர் அல்உறங்கார் ; பகல்வேட்டை யாடுவார் "

எனவும்,

" கருமுகில் என்ன நின்ற
கண்படா வில்லி யார்தாம் "

எனவும் சேக்கிழார் நாயனர் இனிது விளங்க அருளிச்செய்தமை யறிக. (கண்ணப்பர் புராணம் - 127, 128, 132, 151, 133 .) இந்நிலை நோக்கி யன்றே,

" கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின் "

என (திருக்கோத்தும்பி - 4.) அடிகள் தாமே தம் நிலைக்கு இரங்கியருளிச் செய்தார் என்க.

" நெக்கு நெக்கு " என்றதற்கு வினை முதலாகிய, ' மனம் ' என்பது வருவிக்க. " புலன் " என்றது, ஐம்புலன்கண்மேற் செல்லும் அறிவை. அஃது ஒன்றுதலாவது, அவற்றின்மேற் செல்லாது, ஆசான் மூர்த்தியையே அறிந்து நிற்றல், அவ்வழிக் காண்டல் கேட்டல் முதலியன அவன்பொருட்டே நிகழ்தலின், அங்ஙனம் ஒன்றும் தன்மை எய்திய அதனை, " நன்புலன் " எனச் சிறப்பித்தார். நாத - தலைவனே, அரற்றுதல், பிரிவுக் குறிப்புத் தோன்றிய பொழுதாம். மொட்டித்தல் - அரும்புதல் ; என்றது, குவிதலை. கரம் மொட்டித்து இருதயம் மலர ' என்றது நயம். ' மலர் " என்றதனை இருதயத்திற்குங் கூட்டுக. இதனையே, முன்னர், இருதயம் மொட்டித்து, கரம் மலர்ந்திருந்தமை பெறப்பட்டது.

கண் களிகூர்தல், ஆசிரியத் திருமேனியைக் காணும் காட்சியாலாம். " கண் " என முன்னர் வந்தமையின், பின்னர் வாளா, ' நுண் துளி அரும்ப ' என்றார். நிறுப்பவும் நில்லாது வெளிப்படுதல் தோன்ற, " நுண் துளி " எனவும், " அரும்ப "

எனவும் அருளிச்செய்தார். "ஆர்வலர் புன்கணீர்" (குறள் - 71.) என்றார் திருவள்ளுவ நாயனாரும். கண்ணீரை நிறுத்த முயல்வது, மெய்யடியார்முன் தாமும் பேரன்புடைய அடியராய்த் தோன்றுதற்கு வெள்கி என்க.

சாயா - மெலியாத. தழைப்பவர் - பெருக நிற்பவர். பெருகுதல், ஆசான் மூர்த்தியைக் காண்டல், அவனது அருட்டிறத்தை நினைதல் முதலியவற்றால் இயல்பாகவே நிகழும் என்க. "தாயே" என்னும் பிரிநிலை ஏகாரம், சிறப்புணர்த்தி நின்றது. வளர்த்தது, ஞானத்தையாம், "வளர்த்தனை" என்றது வினையாலணையும் பெயர். அதன்பின்னர் நான்கனுருபு விரிக்க. போற்றி - வணக்கம்.

இதனுள், "உடல் கம்பித்து, அகம் குழைந்து, கரமலர் மொட்டித்து" என்றாற்போல வந்த பல சினைவினையும் குணவினையும், அவற்றையுடைய முதல்மேலும், குணிமேலும் நின்றன,

"யானை முதலா" என்றது முதலாக இதுகாறும் வந்தன பலவற்றையும், பிறர்மேல் வைத்துப் பொதுப்பட அருளிச் செய்தாராயினும், தம் அனுபவச் செயலையே அவ்வாறு அருளினார் என்பது உணர்ந்துகொள்க.

88 89. மெய் - உண்மை ஞானம். "வேதியன்" என்றது, ஆசாரியனை. வினை, முன்னே செய்யப்பட்டுக் கிடந்தனவும், இஞ்ஞான்று செய்யப்படுவனவுமாம். இவை முறையே, '**சஞ்சிதம்**' எனவும், '**ஆகாமியம்**' எனவும் சொல்லப்படும். சஞ்சிதத்தினின்றும் இப் பிறப்பிற்கு நுகர்ச்சியாய் அமைந்தவை '**பிராரதம்**' எனப்படும். இவற்றுள் முன்வினையை அருட்பார்வையால், நெருப்புச் சேர்ந்த விறகுபோல அழிந்தொழியப் போக்கியும், இஞ்ஞான்றை வினையை, உணக்கிலாத வித்துப்போல மெலிவித்தும் கெடுத்தலால், சஞ்சிதத்தினின்று பிராரத்தம்; பிராரத்தத்தினின்று ஆகாமியம் என்று ஆகி, மீளவும் ஆகாமியம் சஞ்சிதமாய் வளர்தலாகிய தொடர்ச்சி அற்றொழிதலால், "வினைகெடக் கைதர வல்ல கடவுள்" என்றார். உற்றுழி உதவுதலை, 'கைகொடுத்தல்' என்னும் வழக்குப்பற்றி, "கைதர வல்ல" என்றார், 'பிறவிக் கடலின் ஆழாது, கைகொடுத்து ஏற்ற வல்ல' என்றது குறிப்பு, ஏனையோர்

அது மாட்டாமையின், "வல்ல" என்றார். இறைவற்குக் கையாவது திருவருளே என்க.

முதற்கண் அன்பரை ஆட்கொள்ளும் முறையை விரிவாக எடுத்தோதிப் போற்றி, அப்பால், முன்னர் மதுரையிலும், இறுதியில் தில்லையிலும் தமக்கு அருள்புரிந்தும், புரியவும் நிற்கும் நிலையினை நினைந்து போற்றுகின்றார்,

90, 91. ஆடக மதுரை - பொன்மயமான மதுரை. இது, செல்வச் சிறப்பை விளக்கிற்று, அரசு - தலைவன். அரசனாய் இருந்தான் எனக் கூறப்படும் வரலாற்றோடு இயைய உரைப்பாரும் உளர். மதுரையை முதற்கண் கூறினமையின், அஃதே அடிகள் முன்னர் வாழ்ந்த இடம் என்பது பெறுதும். மதுரை கூடல், எனப் பெயர் பெற்றமைக்கு வரலாறு ஒன்று கூறப்படி னும், 'சங்கம் இருக்கும் இடம்' என்பதே பொருளாதல் வேண்டும், "உயர்மதிற் கூடலின் ஆய்ந்த ஒண் தீந்தமிழ்" என்று அருளுவார் திருக்கோவையாருள்ளும். 'கூடல், கூட்டம்' என் பன ஒருபொருட் சொற்கள். சங்கத்தை, 'புணர் கூட்டு' என்றார் மதுரைக் காஞ்சியுள் (வரி, 762). எனவே, "மதுரை" என்றது திருக்கோயிலில் இருத்தல். நோக்கியும், "கூடல்" என்றது, சங்கத்தில் இருத்தல் நோக்கியும் அருளிய வாறாயிற்று. அல்லாக்கால், "மதுரை" என்றதனையே, மீளவும் பிறிதொரு பெயராற் குறித்தல் வேண்டாமையறிக. குருமணி - மேலான ஆசிரியன். சங்கத்தார்க்குத் தலைமை பூண்டு நின்றமை பற்றி, இவ்வாறு அருளிச்செய்தார்.

92, 93. தமிழகம், பரதகண்டத்தின் தென்பகுதியாதல் பற்றி, அதன்கண் உள்ள தலங்களைத் தெற்கின்கண் உள்ளன வாகக் கூறுப; அதனால், "தென்தில்லை" என்றார். பின்னும் இவ்வாறு வருவன பல உள. இதற்கு, 'தென்-அழகு' என்றே உரை கூறிப்போதலும் செய்ப. ஆடி - ஆடுபவன்; இப்பெயர் விளியேற்று நின்றது. இன்று-உன்னை யான் அடையப்பெற்ற இக்காலத்தில். "ஆரமுது" என்றது, அமுதம் கிடைத்தற்கரிய பொருளாதலை விதந்தவாறு. அதனால், இறைவன் காண்டற் கரியன் என்பது உணர்த்தப்பட்டது. "அமுது" முதலியன வாக இங்கு வருவன பலவும் உவம ஆகுபெயராதல் அறிக. இவ் விருதலங்களையும் அருளியபின்னர், அவனது பெருமைகளை எடுத்தோதிப் போற்றுகின்றார்.

94, 95. மூவா-கெடாத. மறைகளை (வேதங்களை), 'நான்கு' என்றல், 'அறம், பொருள், இன்பம், வீடு' என்னும் பொருள் பற்றிய வழக்கென்றலே பொருந்துவதாம். என்னையெனின், சொல்பற்றி 'மூன்று' எனவும், 'நான்கு' எனவும், 'அளவில்லன' எனவும் பலவாறு கூறப்படுதலின். 'மறை' என்பதற்கும், 'வேதம்' என்பதற்கும் சொற்பொருள் யாதாயினும், 'உண்மை முதனூல்' என்பதே பொருளாம். அஃது, எக்காலத்திலும், எவ்விடத்திலும், எம்மொழியிலும் தோன்றுதல் கூடும். அத்தோற்றம் இறைவன் திருவருள் முன்னிற்றலானேயாம். ஆதலின், "மறைகள் ஈசன் சொல்" (சிவஞான சித்தி. சு. 2. 30.) என்றல் பொருந்துவதேயாகும்.

"உற்ற குறியழியும் ஓதுங்காற் பாடைகளில்
சற்றும் பொருள்தான் சலியாது"

என்றபடி (உண்மை விளக்கம் - 41.), சொல்லுக்கன்றிப் பொருட்கு அழிவின்மையின், "மூவா நான்மறை" என்று அருளினார். இனி, நான்மறையாவன இருக்கு முதலியவே எனினும், மூவாமை, பொருள்பற்றிக் கூறியதாமன்றிச் சொல் பற்றியதாகாமை யறிக. "முதல்வன்", "ஆக்கியோனும், அவற்றால்" உணர்த்தப்படும் தலைவனும் என்க.

சே ஆர் - இடபம் பொருந்திய. "வெல்கொடி" என்ற வினைத்தொகையில், 'கொடி' என்பது, 'ஆறு சென்றவியர்' என்பதில், 'வியர்' என்பது போலக் காரியப் பெயர்.

96, 97. 'மின் ஆர்' எனப் பிரித்து, 'ஒளி பொருந்திய' என்றும், 'மின்னார்' என ஒரு சொல்லாகவே கொண்டு, 'உமையை உடைய' என்றும் பொருள் கொள்க. விகிர்தன் - உலகியலின் வேறுபட்டவன். கல் - கல்லினின்றும். 'வானத்தை வில்லா வளைத்தல், மணலைக் கயிறாத் திரித்தல்' என்பனபோல, 'கல்லில் நார் உரித்தல்' என்பதும், செயற்கருஞ் செயலைச் செய்தலைக் குறித்து வழங்கப்படுவதோர் உவம வழக்கு. இதுவும் ஒட்டணியின்பாற்படும். எனவே, கல்லில் நார் உரித்தது போலும் வியக்கத் தக்கதொரு செயலைச் செய்தவனே' என்பது பொருளாயிற்று. இது, தம்மை அன்பராக்கிய செயலைக் குறித்தே அருளியதாம். தம் வன்கண்மையை உணர்த்தத் தம்மை, 'கல்' என்று அருளி, இறைவனது அருளுடைமையை

உணர்த்த, 'கனி' என்று அருளிச்செய்தார். 'நார்' என்பது, அன்பினையும் குறித்துநிற்றல் காண்க.

98, 99. "காவாய்" என்றது, 'முன்னர் உலகியலின் நீக்கி அங்ஙனம் ஆண்டுகொண்டவாறே, இனியும் அதன்கண் செல்லாதவாறு காத்தருள்' என வேண்டியதாம். கனகம் - பொன் ஆ என்னும் இடைச்சொல் அடுக்கி, 'ஆவா' என வந்தது, இஃது, 'இரக்கம் வியப்பு' என்பவற்றைக் குறிக்கும் இடைச் சொல்; இங்கு இரக்கங்குறித்து நின்றது, "அருளாய்" என்றது, 'உனது திருவடிப் பேற்றினை அளித்தருள்' என்றதாம். "ஆவா" என்றது, அது பெருமையால் உளதாகும் வருத்தம் பற்றி, 'எனக்கு' என்பது, 'என்றனக்கு' எனச் சாரியை பெற்று வந்தது; 'என்றெனக்கு' எனப் பாடம் ஓதுதலுமாம்.

100, 101. "படைப்பாய்" முதலிய மூன்றும் விளிகள். இடர், பந்தம்; அதனைக் களைதல் கூறவே, அஃது, 'அருளல்' என்பதைக் கூறியதாயிற்று. எந்தாய் - எம் தந்தையே.

102, 103. ஈசன் - ஐசுவரியம் உடையவன்; இவ் வட சொல்லைத் தமிழில், 'செல்வன்' என்பர் ஆசிரியன்மார். இறைவன் - எப்பொருளிலும் தங்குவோன். 'தேசு' எனக் குற்றிய லுகர ஈறாய் நிற்கும் வடசொல், அம்முப்பெற்று, 'தேசம்' என வந்தது. 'குன்று, குன்றம்; மன்று, மன்றம்' என்றற் றொடக்கத்தனபோல. இன்னோரன்னவற்றை, 'குற்றிய லுகரம் அக்குச்சாரியை பெற்றன' என்பர், ஆசிரியர் தொல்காப்பியர். சிவபெருமான், தீத்திரள்போலும் திருமேனியையேயன்றித் தூய பளிங்குத்திரள் போலும் திருமேனியையும் உடையவனேயாம். இனி, இதனை, திருநீற்றுப் பூச்சுப் பற்றிக் கூறப்படுவதாகவும் உரைப்ப.

104, 105. அரைசு - அரசன். விரை - வாசனை. சரணம் - திருவடி. "விரைசேர்" என்றது, மலர்போறலைக் குறித்தது.

106, 107, வேதி - வேதத்தை உடையவன். விமலன் - மாசில்லாதவன். ஆதி - எப்பொருட்கும் முதலானவன். அறிவு - அறிவே வடிவாயுள்ளவன்.

108, 109. கதி - எவ்வுயிரும் சென்று சேரும் இடமாய் உள்ளவன். இன்பவடிவினனாதல்பற்றி, "கனியே" என்றார். நம்பன் - விரும்புதற்குரியவன்.

110, 111. உடையான் - எப்பொருளையும் தனக்கு உடைமையாகவும், எவ்வுயிரையும் தனக்கு அடிமையாகவும் உடையவன். உணர்வு - உயிர்கட்கு அறிவைப் பயப்பவன். 'கடையேனது அடிமைத் தன்மையையும் பொருட்படுத்தி நோக்கினாய்' என்றது, 'அதனை மகிழ்ந்து ஏற்றுக் கொண்டாய்' என்றபடி.

112, 113. ஐயன் - வியக்கத் தக்கவன்; வியப்பு, பல்கோடி அண்டங்களையும் தன்னுள் அடக்கிநிற்கும் பெரியனாய் நிற்கும் நிலைபற்றித் தோன்றுவது. அணு - அவ்வாறே சிறியதிற் சிறியனுமாயவன். சைவன் - சிவம் (மங்கலம்) உடையவன். தலைவன் - யாவர்க்கும் தலைவன்.

114. 115. குறி - உலகில் காணப்படும் ஆண் பெண் வடிவங்கள். குணம் - அவற்றிற்கு அமைந்த இயல்புகள். நெறி - அவற்றிற்கு அமைந்த ஒழுகலாறுகள். நினைவு - அவ்வொழுகலாறுகட்கிடையே அவற்றது உள்ளங்களில் எழும் எண்ணங்கள். இவை அனைத்தினும் இறைவன் கலந்து நிற்கும் கலப்புப் பற்றி அவனை அவையேயாக அருளினார். பின்னரும் இவ்வாறு அருளப்படுவனவற்றை அறிந்துகொள்க.

116, 117. மருந்து - அமுதம். தேவர்கட்குக் கிடைத்துள்ள அமுதம் அன்று என்பார், "வானோர்க்கரிய மருந்து" என்றார். ஏனோர், மக்கள். வானோர், தம் சுவர்க்கபோகத்தில் மயங்கி வழிபடாது காலங்கழித்தலின், இறைவன் அவர்கட்கு அரியனாயும், மக்கள் அவ்வாறன்றி உலகியலின் துன்பத்தை உணர்ந்து அதனை நீக்கவேண்டி வழிபட்டு நிற்றலின் அவர்க்கு எளியனாயும் நிற்கின்றான் என்க. 'இப் பூமி - சிவன் உய்யக் கொள்கின்ற ஆறு" எனப் பின்னரும் (திருப்பள்ளி - 10.) அருளிச்செய்வார்.

118, 119. சுற்றம் - வழித்தோன்றல்கள். மூவேழ் தலைமுறையாவன, தன் தந்தைவழி, தாய்வழி, தன் மனைவிக்குத் தந்தைவழி என்பவற்றுள் ஒவ்வொன்றினும் ஏழாய் நிற்கும்.

தலைமுறைகளாம். இவைகளைச் சென்றகாலம் பற்றியும், வருங் காலம் பற்றியும் கொள்க. ஒருகுடியுள் ஒருவன் செய்த நன்மை தீமைகள், முன்னும் பின்னும் அவனது இம் மூவேழ் தலைமுறை யின் உள்ளாரையும் சென்று பற்றும் என்பது வைதிக நூற் றுணிபு. அதனால், ' தன்னால் ஆட்கொள்ளப்பட்ட அடியவரது மூவேழ் சுற்றங்களையும் நரகின்கண் அழுந்தாது மீட்டருள் வான் ' என்று அருளிச்செய்தார். இவ்வாறே திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரும்,

" நாளாய போகாமே நஞ்சணியுங் கண்டனுக்கே
ஆளாய அன்புசெய்வோம்; மடநெஞ்சே, அரன்நாமம்
கேளாய்;நம் கிளைகிளைக்கும் கேடுபடாத் திறம்அருளிக்
கோளாய நீக்குமவன் கோளிலிஎம் பெருமானே "

என அருளிச்செய்தல் காண்க (திருமுறை - 1. 62. 1.).

" எழுபிறப்பும் தியவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின் "

என்று அருளியதும், (குறள் - 62.) இதுபற்றி.

" மனம் தூயார்க்கு எச்சம் நன்றாகும் "

என்றமையால் (குறள் - 456.) நன்மக்கட்பேற்றிற்கு மன மொழி மெய்களின் தூய்மையும், தவமும் வேண்டும் என்பது விளங்கும். விளங்கவே,

" நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்; தியொழுக்கம்
என்றும் இடும்பை தரும் "

என்னும் அருமைத் திருக்குறளை (138.)ப் பொன்னேபோற் பொதிந்து போற்றுதல் இன்றியமையாததொன்று என்பது போதரும். இவ்வாறு சுற்றத்தையும் காக்கும் வன்மையுடையன் என்பார், " அருள் அரசே " என்று அருளினார். முரண் - வலிமை.

120, 121. அடியவர், தம் அடிமைத் திறம் திறம்பாது நிற்பினும், இறைவன் தான் அவரொடு தோழமை முறையிலும், உடன் பிறந்தார் முறையிலும் எளியனாய் நின்று அருளுதலை,

"தோழா, துணைவா" என்பவற்றால், அருளிச்செய்தார். வாழ்வு - நல்ல வாழ்க்கை. வைப்பு - சேம நிதி.

122, 123. முத்தன் - பாசத்தினின்றும் நீங்கினவன். இஃது இயல்பாகவே நீங்கியதாம். இஃது, '**அனாதி முத்தத் தன்மை**' எனப்படும். முதல்வன் - எப்பொருட்கும் முன்னுள்ளவன். அத்தன் - தந்தை. அரன் - பாசங்களைத் தேய்ப்பவன்.

124, 125. "உரை" என்பது, 'பாச ஞானம்' எனவும், "உணர்வு" என்றது, 'பசு ஞானம்' எனவும் கொள்ளப்படும். "உரையுணர்வு", உம்மைத்தொகை. இறந்த - கடந்த. ஒருவன் - தனக்கு நிகராவது ஒரு பொருளும் இல்லாதவன். விளைவு - நிகழ்ச்சி; அஃது ஆகுபெயராய், அதனது காரணத்தின் மேல் நின்றது. காணப்படும் சிறப்புப்பற்றி, கடல் சூழ்ந்த உலகத்தையே எடுத்தோதினார்.

126, 127. அருமை, காணலாகாத நிலை; அது, கருவி கரணங்களாகிய உடம்பொடு நிற்கும் நிலையாம். அதன்கண்ணே உள்ள எளிமையாவது, அந்நிலையிற்றானே கண்ணெதிரே காண எழுந்தருளி வருதலாம். அழகு - அழகிய திருமேனியையுடையவன்; இருமடியாகுபெயர். 'இன்பமாகிய மழையைப் பொழிதலின். கண்போலச் சிறந்து நிற்பவனே' என்பார், "கருமுகிலாகிய கண்ணே" என்றார்.

128, 130. ஏனை மலைகளின் வேறுபடுத்தற்கு, "மன்னிய" எனவும். "திருவருள்" எனவும் அருளிச்செய்தார். "மலை" என்றது, பெருமை பற்றி வந்த உவமை. சேவகன் - வீரன். சேவகம், ஒருசொல்லால் தம்மை வழிப்படுத்த திறல்; "**மன்ன என்னை ஓர் வார்த்தையுட் படுத்துப் பற்றினாய்**" (செந்திலாப் பத்து - 2.) எனப் பின்னரும் அருளுப.

131, 134. தொழுத கை - வணங்கிய உடன், 'கை' என்பது இங்குக் காலத்தை உணர்த்திற்று. இனி, 'தொழு தகை' என்றானும், 'தொழுத கை' என்றானும் பிரித்து, 'தொழுந் தகைமை யுடையார், தொழுத கையினை யுடையார்' எனப் பொருள் கொள்ளலுமாம். துடைத்தல் - விரையச் சென்று முற்றத் தொலைத்தல், வாரி - கடல். முழுதும் - பசுக்களும், பாசங்களுமாகிய எல்லாப் பொருள்களையும்.

135, 136. நோக்கி - பார்வையை யுடையவள். தாய் - தாய்போலச் சிறந்தவள்.

137, 142. பார் - நிலம். ஐந்து, 'நாற்றம், சுவை, உருவம், ஊறு, ஒலி' என்னுங் குணங்கள். இவற்றுள் நாற்றம் முதல் ஒரோவொன்ருக முறையே நீக்கி, ஏனையவற்றை நீர் முதலிய ஏனை நான்கு பூதங்களினும் உள்ளன என்க. அளிபவர் - மனம் இளகுபவர்.

143, 144. தமக்கு நனவிலும் வந்து அருளிய அருட்டிறம் இனிது விளங்க, கனவிலும் தேவர்க்கு அரியனுதலை, முன்னர் எடுத்தோதினுர். இங்ஙனம் இறைவனை அவனது பெருமைகள் பலவற்றையும் விதந்து போற்றிய பின்னர், மதுரையும், தில்லையும் தவிர ஏனைய தலங்கள் பலவற்றிலும் எழுந்தருளியிருக்கும் நிலையை விதந்து போற்றுகின்ருர்.

149, 150. 'அண்ணல்' என்பது. 'அண்ண' என மருவிற்று. கண் ஆர் - கண்ணுல் பருகும். ஆர்தல் - நிறைதல். அஃது இங்கு நிறையப் பருகுதலைக் குறித்தது.

155. இஃது இடைநிலையாய் வந்தது. அன்பு மிகுதியால் இன்னேரன்னவை இடை இடையே அடிகள் வாக்கில் நிகழ்தல் காண்க.

159. பாங்கு - அழகு.

160. விடங்கன் - ஒருவராற் செய்யப்படாது. இயல்பாய் அமைந்த திருவுருவத்தை யுடையவன்; 'அழகன்' என்றுமாம்.

162, 163. இத்தி - கல்லால மரம். இருமூவர். அட்டமா சித்தி வேண்டி நோற்ற மகளிர் அறுவர். அத்தி - வெள்ளானை. 'மகளிர்க்கும், அத்திக்கும் அருளியவன்' என்க. இவ்வரலாறுகளைத் திருவிளையாடற் புராணம் சிறிது வேறுபடக் கூறும்.

164, 165. தென்னுடு - பாண்டிநாடு. தமக்கு அருளிய நிலைபற்றி, அதனையே அடிகள் இறைவனுக்கு உரிய நாடாகப் பலவிடத்தும் அருளுவர். எனினும், எல்லா நாடும் அவனுடையனவே என்பது தெரித்தற்கு, அடுக்க, "எந்நாட்டவர்க்கும் இறைவா" என்று அருளினுர். இறுதிக்கண் எந்நாட்டையும்

எடுத்தோதி முடித்து, இனியும் முன்போலப் பிறவாற்ருற் போற்றுகின்ருர்.

166, 167. பன்றிக்குட்டிகட்கு இறைவன் தாய்ப் பன்றியாய்ச் சென்று பால் கொடுத்த வரலாற்றைத் திருவிளையாடற் புராணத்துட் காண்க. ஏனம் - பன்றி. குருளை - குட்டி. மானம் - பெருமை.

168, 169. அம்மான் - தலைவன். இருள் - துன்பம்; நரகமுமாம்; உவமையாகுபெயர்.

171. களங் கொளக் கருத - உன்னை என் நெஞ்சார நினைக்கும் படி. நெஞ்சத்தையே இங்கு, 'களம்' என்ருர் என்க.

172. இங்கு - இப்பொழுது.

174, 176. 'அத்தன், ஐயன்' என்பன முன்னர்க் கூறப் பட்டனவாயினும், நித்தன் முதலாகப் பின்னர் வருவனவற்ருேடு ஒருங்குநின்று சிறப்பித்தற் பொருட்டு ஈண்டும் கூறினர். நித்தன் - அழிவில்லாதவன். நிமலன் - மலம் இல்லாதவன். பத்தா - தலைவன்; வடசொல்; இஃது இயல்பாய் நின்று, அண்மை விளி ஏற்றது, 'பத்தன்' எனக் கொண்டு, 'அன்புடையவன்' என்றும் உரைப்ப, பவன் - எவ்விடத்தும் தோன்றுபவன்; 'எவையும் தோன்றுதற்கு இடமாயுள்ளவன்' என்றுமாம்,

177, 178. பிரான் - கடவுள். அமலன் - மலம் இல்லாதவன்; 'விமலன், அமலன், நிமலன்' என்பன ஒருபொருட் சொற்களாயினும், பலவகையாகப் போற்றுதல் செய்யும் போற்றிக் கோவையில், பொருள்வகை ஒன்ருனே போற்றுதல் வேண்டும் என்பதோர் யாப்புறவில்லை; சொல்வகையானும் பலவகையாகப் போற்றுதல் செய்யப்படும்; அதனுல், இன்னேரன்ன சொற்களால் பன்முறையானும் போற்றினர் என்க.

179, 180. கோலம் - வடிவம்; 'அதனை யுடைய நெறியாளனே' என்க. நெறியாளன்-உய்யும் நெறியை உணர்த்துபவன்; ஞானுசிரியன். தரியேன் - இனிப் பொறேன்; 'வீடுதந்தருள்' என்பது கருத்து. "முறையோ" என்ற முறையீட்டுச் சொல்லை,

இதன்பின் கூட்டி யுரைக்க. "முதல்வா" என்றதனை, 'ஈண்டு எனது முறையீட்டைக் கேட்பது உனக்குக் கடப்பாடு' என்னுங் கருத்தாற் கூறினர்.

181, 182. உறவு - உறவினன், உயிர் - உயிரின்கண் கலந்து நிற்பவன். சிறவு - சிறப்பு ; சிறப்புடையவன். சிவம் - மங்கலம்; மங்கலம் உடையவன்.

183, 184. 'மைந்தன்' என்பது, 'மஞ்சன்' எனப் போலியாயிற்று. 'வலிமை யுடையவன்' என்பது பொருள். மணாளன் - 'மணவாளன்' என்பதன் மரூஉ. 'கலியாண கோலம் உடையவன்' என்பது பொருள். சிவபிரான் வடிவங்களுள், கலியாண கோலமும் ஒன்றுதல் உணர்க. பஞ்சு ஏர் அடி - செம்பஞ்சினையும், அழகினையும் உடைய பாதம்.

185, 186. அலந்தேன்-உழன்றேன். நாயேன் அடியேன்- நாய்போன்றேனாகிய அடியேன். இலங்கு சுடர் - விளங்குகின்ற விளக்குப்போலும்.

187, 190. இந்நான்கடிகளிலும் சிவபிரான், தமிழ்நாடன்றிப் பிற நாடுகளிலும் கோயில் கொண்டிருத்தலை எடுத்தோதிப் போற்றுகின்றார். 'கவைத்தலை, குவைப்பதி, அரிகேசரி' என்பன தலங்களாம். அவை இக்காலத்து அறிதற்கரியவாயின. சேரநாடும் மலைநாடு எனப்படுமாயினும் இங்கு, "மலைநாடு" என்றது, இமயத்தைச் சார்ந்த நிலப் பகுதியையாம். அங்குக் கேதாரம், பசுபதீச்சரம், அனேகதங்காவதம், இந்திரநீலப் பருப்பதம் முதலிய சிவதலங்கள் இருத்தல் வெளிப்படை. "கலை ஆர்" என்றது, 'நூல்கள் நிரம்பிய' என்றும், 'மான் கூட்டங்கள் நிறைந்த' என்றும் பொருள் கொள்ளுதற்கு உரித்து. அத்தொடரால் சிறப்பிக்கப்பட்ட தலம் அறியப்படாமையின், அத்தொடர்க்கும் பொருள்காண்டல் அரிதாகும். கவைத்தலை முதலியவற்றைத் தலங்களாகக் கொள்ளாது. சொற்பொருள் கூறுவாரும் உளர்.

191, 192. பிறநாட்டுத்தலங்களை நினைந்த தொடர்பானே, தமக்கு மீளவும் குருவடிவத்தைக் காட்டியருளிய திருக்கழுக்குன்றத்தையும், தமது பாண்டிநாட்டில் பொன்னுருவில் நின்று அருள் புரியும் திருப்பூவணத்தையும் நினைந்து, இவ்விரண்டடிகளிலும் போற்றிசெய்தார்,

193, 194. மூவகைத் திருமேனிகளுள் அருவத் திருமேனி, உருவத் திருமேனி என்னும் இரண்டனைக் கூறவே இடைநிற்கும் அருவுருவத் திருமேனியும் தானே பெறப்பட்டது. முன்னர், "மன்னிய திருவருள் மலை" (128) என்றார்; இங்கு, "மருவிய கருணை மலை" என்றார். மருவுதல் - அடியவர் உள்ளத்து நீங்காது பொருந்துதல்.

195, 196. 'நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப் படங்கல்' என்னும் ஐந்து நிலைகளும் வடமொழியில் முறையே, 'சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம்' எனப் படும். இவை, 'இருள்நிலை, பொருள்நிலை, அருள்நிலை' என்னும் மூன்று நிலைகளிலும் நிகழ்வன. இருள்நிலையில், ஒன்றைவிட மற்றொன்றில் இருள் (அறியாமை) மிகும்; பொருள்நிலையில், ஒன்றைவிட மற்றொன்றில் உலகப் பொருள் மிக்கு விளங்கும்; அருள்நிலையில் ஒன்றைவிட மற்றொன்றில் இறைவனது திரு வருள் மிக்கு விளங்கும். அவற்றுள் அருள்நிலையில் உள்ள துரியநிலையே இங்குக் குறிக்கப்பட்டது. அந்நிலையில் பேரின்பம் சிறிது அரும்புதலன்றி, வெள்ளமாய்ப் பெருகி உயிரை விழுங்கிக் கொள்ளும் நிலை உண்டாகாது. அதனால், இந்நிலையில் நின்றோர், பேரின்ப வெள்ளத்துள் மூழ்கித் திளைத்திருத்தலன்றி, உல கத்தை நோக்கி நிற்றலும் உடையராவர். இதனைக் கடந்த அதீத நிலையிலே அது கூடுவதாகும். அதனைப் பெற்றோரே சிவனது உண்மை நிலையைத் தலைப்பட்டவராவர். அவர்க்கு அந்நிலையினின்றும் மீட்சி இல்லை. ஆதலின், அப்பெருமானை, "துரியமும் இறந்த சுடர்" என்று அருளினார். இருள்நிலை முதலிய மூன்றும் முறையே, 'கேவலம், சகலம், சுத்தம்' எனப்படும். உம்மை, சிறப்பும்மை. தெரிவு அரிது - கருவி களால் அறியப்படாதது. தெளிவு - அனுபவப் பொருள்.

197, 198. தோளா - துளையிடாத. முத்தம் - முத்து. துளையிடாத முத்தில் ஒளி குறைபாடின்றி விளங்கும். மாணிக்கம் முதலிய பிறவற்றின் ஒளிகளினும், முத்தின் ஒளி தண்ணிதாதல்பற்றி, அதனையே உவமித்தார். திருநீற்றுப் பூச்சினால் விளங்கும் வெண்மைபற்றி உவமித்தார் என்றலுமாம். இறைவன் தனக்கு அடியரானார்க்கு அன்பனாதலை, "தீர்ந்த அன்பாய அன்பர்க்கு அவரினும் அன்ப போற்றி" எனப் பின்னரும் (திருச்சதகம் - 69.) அருளுவார்.

199, 200. ஆராமை - நிரம்பாமை. பேர் - பெயர். ஆயிரம், மிகுதிக்கு ஓர் எண் காட்டியவாறு. எல்லாம் உடைய பெருமானுகலின் அவைபற்றி வரும் பெயர்கள் அளவிலவாயின. பெம்மான் - பெரியோன்.

201, 202. தாளி அறுகு - தழைத்துப் படர்ந்த அறுகம்புல். இது, பனையினுள் ஒருவகை, 'தாளிப் பனை' என்னும் பெயர்த் தாதல் பற்றியும் அறியப்படும். 'இதனைக் கன்றுகள் விரும்பி மேயும்' என்பதும், அவ்வாறு மேயப்பட்டு வேனிற் காலத்தில் பட்டுக்கிடப்பினும் மழைக் காலத்தில் செழித்துப் படரும் என்பதும் இதனை அங்ஙனமே வளரவிட்டால், அரும்புவிட்டுப் பூக்கும் என்பதும், அப்பூ நீலநிறத்துடன் அழகிதாய் விளங்கும் என்பதும், அதனை, மணவினைக்காலத்தில் மணமகளுக்கு வாகை இலையொடு விரவத் தொடுத்து அணிவர் என்பதும், பின்வரும் அகநானூற்றுப் பாடலின் (136.) அடிகளால் அறியப்படும்.

மென்பூ வாகைப் புன்புறக் கவட்டிலை
பழங்கன்று கறித்த பயம்பல் அறுகைத்
தழங்குகுரல் வானின் தலைப்பெயற் கீன்ற
மண்ணுமணி யன்ன மாயிதழ்ப் பாவைத்
தண்ணறு முகையொடு வெண்ணூல் சூட்டி.

அறுகம் புல், பண்டைத் தமிழ்ச் செய்யுட்களில், 'அறுகை' என வழங்கும். இதனுல், இவ்வறுகு தமிழகத்தில் பண்டு கண்கவர் வனப்பினதாய்ச் சிறந்த ஒரு மங்கலப் பொருளாய் விளங்கினமை பெறப்படும். அதனுனே வாழ்த்துக் கூறுவோர், மஞ்சளரிசியுடன் இதனையும் சேர்த்துத் தூவி வாழ்த்துதல் பண்டை மரபாய் இருந்தது.

"அறுகு சிறுபூளை நெல்லொடு தூஉய்" என்னும் வரி, சிலப்பதிகாரத்துள் கடவுள் வழிபாடு கூறுமிடத்துக் காணப் படுகின்றது. (கனுத்திறம் உரைத்த காதை - 43). இவ் வாற்றுனே, ஞானசிரியர்க்கு அவர்தம் அடியவர் தழைத்து வளர்ந்த அறுகம் புல்லாலாகிய மாலையை அணிவித்து அவரை வழிபட்டு நிற்றல் மரபாய் இருந்தமை பெறப்படும். செங்கழு நீர்ப் பூமாலையும் அவ்வாறு ஞானசிரியர்க்கு அணியப்படுவதாம். அதனைப் பின்னர்க் கூறுப (217). சிவபிரான் அடிமுடி தோன்றுத நீண்ட ஒளிப்பிழம்பாய்த் தோன்றியது, மால் அயன் முன்பு என்க. நிருத்தன் - நடனம் புரிபவன்.

203. இறைவன் தன் அடியவர் சாத்தும் சந்தனக் குழம் பினை அணிந்து அழகுடன் விளங்குதல் வெளிப்படை.

205, 206. 'மந்திர மாமலை, மகேந்திரமலை' என்பது, கீர்த்தித் திருவகவலில் காட்டப்பட்டது. உய்யக் கொள்வாய் - உய்யுமாறு உலகியலினின்றும் மீட்டுக் கொள்பவனே. "எந் தமை" என்றது, அடியவர்களை.

207, 208. "புலிமுலை புல்வாய்க்கு அருளினை" என்ற இதுவும், "கல்நார் உரித்த" (97) என்றாற்போல 'நினது அரிய திருவருளை எனக்கு வழங்கினாய்' என, அன்னதொரு செயலைக் குறிப்பது. 'புலியொன்றைத் தாயை இழந்த மான் கன்று ஒன்றிற்குப் பால்கொடுக்கச் செய்தனன்" என்ற வரலா றொன்றும் உண்டு. அலை கடல் - அலைகின்ற கடல்நீர். 'இவ் வடி, வலைவீசிய திருவிளையாடலைக் குறித்தது' என்ப. "மீமிசை" எனவும், "நடந்தாய்" எனவும் போந்த சொற்கள், அங்ஙனம் பொருள்படுதற்கு ஏலாமையின், பிரளய வெள்ளத் துட் படாது நின்று, அதனுட் பட்டு அலந்த மாயோன் முதலி யோர்க்குத் தோன்றி அருள்புரிந்தமையைக் குறித்தது என்றல் பொருந்தும்.

209, 210, கரிக்குருவிக்கு அருள்புரிந்தமை, திருவிளை யாடற் புராணத்துட் கூறப்பட்டது, அதுவும், எளியார்க்கு அருளுதலையே விளக்கிநிற்கும், இரும் புலன் - வரம்பில்லன வாய் எழும் ஐம்புல வேட்கைகள். நிரம்புதலை, 'விடிதல்' என்னும் வழக்குப் பற்றி, 'புலர' என்றார். அஃதாவது, 'இனி இவை அமையும்' என்று ஒழிதல். இசைந்தனை - வந்து பொருந்தினாய்; 'உனக்கு வணக்கம்' என்க.

211, 212, படி உறப் பயின்ற - நிலத்தின்கண்ணே பல நாள் எம்முடன் மிகப் பழகின. பாவக - வேடத்தை யுடைய வனே. இறைவன் குருவாகி வந்த கோலத்தை, 'வேடம்' என்றார், தன்பொருட்டன்றிப் பிறர்பொருட்டுக் கொண்டதா கலின். "ஒருவனே இராவணாதி பாவகம் உற்றாற் போல" என்ற சிவஞான சித்தியையுங் காண்க, (சூ. 1. 67.), அடி நடு ஈறு - உலகத்தின் தோற்றம், நிலை, இறுதி. அவற்றைச் செய்பவனை அவையாகவே அருளினார்.

213, 214. நானிலம் - பூமி. 'நாகலோகம் முதலிய மூவுலகத்திலும் புகாமல்' என்றது 'பிறவி எய்தாமல்' என்றபடி. பரகதி - மேலான நிலை; வீடுபேறு. பாண்டியற்கு அருளியது, அடிகள் நிமித்தமாக அவனும் காண எழுந்தருளிவந்தது.

215, 216. ஒழிவு அற - எப்பொருளும் எஞ்சுதல் இல்லையாக. நிறைந்த - எல்லாவற்றிலும் நிறைந்து நிற்கின்ற. செழுமலர்ச் சிவபுரம் - உலகமாகிய கொடிக்குச் செம்மையான பூப்போலச் சிறந்து நிற்கும் சிவலோகம்; குறிப்புருவகம். திருக்கைலையைச் சேக்கிழார் இங்ஙனம் சிறப்பித்தல் காண்க (திருமலைச் சிறப்பு - 3.), ஒளிவடிவாய் நிற்றல் பற்றிச் செழுமை கூறினார்,

217, 218. கழுநீர் மாலை பற்றி மேலே (அடி - 201.) கூறப்பட்டது. மையல் - மயக்கம்; திரிபுணர்வு. துணித்தல் - அறுத்தல்,

219, 220. பிழைப்பு - பொருந்தாதது. வாய்ப்பு - பொருந்துவது. இத்தொழிற் பெயர்கள் இரண்டும் ஆகுபெயராய் நின்று, இவற்றை யுடைய பொருளைக் குறித்தன, 'ஒன்றும்' என்னும் இழிவு சிறப்பும்மை தொகுத்தலாயிற்று. "குழைத்த" என்பது, உன்னைக் 'குழைவித்தற்குச் செய்த' எனக் காரணத்தின்மேல் நின்றது. "அன்போடியைந்த வழக்கு" (குறள். 73.) என்றதில். 'இயைந்த' என்றதுபோல.

221, 222. திரிபுரம் வகையால் மூன்றாயினும், அதனுட்பட்ட நகரங்கள் பலவாதல் பற்றி, "பல" என்றார். அன்றி. ஒன்றல்லன வெல்லாம், 'பல' எனப்படுதல் பற்றி. அவ்வாறு அருளினார் என்றலுமாம். புராணன் - பழையோன். பரம்பரஞ்சோதி - மேலானவற்றினும் மேலான ஒளி; பேரறிவு. 'அதனை யுடைய பரன்' என்க. "பரன்" என்றது, வாளா பெயராய் நின்றது.

223 - 225. புயங்கன் - பாம்பை யணிந்தவன். 'புயங்கம் என்பதொரு நட்னத்தைச் செய்பவன்' எனவும் உரைப்ப. புராண காரணன் - காரணங்கள் பலவற்றிற்கும் காரணமாய் நிற்பவன். சய சய - வெல்க வெல்க.

இத் திருப்பாட்டும், கீர்த்தித் திருவகவலேபோல, நிலைமண்டில ஆசிரியம் என்க.

5. திருச்சதகம்

['சதகம்' என்பது, நூறு பாட்டுக்களைத் தொகைநிலையாக வேனும், தொடர்நிலையாகவேனும் செய்யும் செய்யுள் வகை. எனவே, 'சதகம்' என்பது, எண்ணால் பெறும் பெயராதல் தெளிவு; இனி, 'கலம்பகம், அந்தாதி' என்றற்றொடக்கத்தன வாகப் பிற காரணங்களானும் இது பெயர்பெறும்.

'தொகைநிலை, தொடர்நிலை' என்னும் இரண்டனுள் இச் சதகம் தொடர்நிலை. 'சொற்றொடர்நிலை, பொருட்டொடர்நிலை' என்னும் இருவகைத் தொடர்நிலைகளுள், அந்தாதியாய்த் தொடர்தலின், இது சொற்றொடர் நிலையாதல் வெளிப்படை. தொகைநிலையாய் வருவதனையே, 'சதகம்' என்றும், அந்தாதி யாய் வருவதனை, 'அந்தாதி' என்றும் வேறுபட வழங்கினர் பிற்காலத்தார்.

இவ்வந்தாதித் தொடர், பத்து வகையான பாட்டுக்களை வகைக்குப் பத்தாக உடையது. அந்தாதியுள்ளும் இவ்வாறு வருவதனைப் பிற்காலத்தார், 'பதிற்றுப்பத் தந்தாதி' எனச் சிறப்புப் பெயர் கொடுத்து வழங்கினர். இங்ஙனம் பெயர்களை வேறு தெரித்துக் கூறினாராயினும், சதகம், 'அந்தாதி, பதிற்றுப் பத் தந்தாதி' என்னும் செய்யுள் வகைகட்கெல்லாம் அடிகள் அருளிச்செய்த இத் திருச்சதகமே முதல் என்க.

சிவபுராணம் முதலிய நான்கும் மிகப் பல அடிகளையுடைய ஒவ்வொரு பாட்டாகிய தனிநிலைச்செய்யுட்களாதலின் அவற்றை முன்வைத்து, நான்கும், ஆறும், எட்டும் ஆய வரையறைகளை யுடைய சில அடிகளை யுடைய பல பாட்டுக்களின் திரட்சியாகிய தொகைநிலை தொடர்நிலைச் செய்யுட்களாதலின், இத் திருச் சதகம் முதலியவற்றை அவற்றின் பின் வைத்துக் கோத்தனர் முன்னோர். அவற்றுள்ளும், நூறு, ஐம்பது, இருபது முதலிய பாட்டின் தொகைபற்றி அம்முறையே முறையாகக் கோத் தனர் என்க.

மிகப் பல அடிகளை யுடைய தனிநிலைச் செய்யுட்களாதலின், சிவபுராணம் முதலிய நான்கும், 'தோல்' என்னும் வனப்புச் செய்யுட்களாம். என்னை?

" இழுமென் மொழியான் விழுமியது நுவலினும்
பரந்த மொழியான் அடிநிமிர்ந் தொழுகினும்
தோல்என மொழிப தொன்னெறிப் புலவர் "

என்பது தொல்காப்பியமாதலின் (செய்யுளியல் - 230.). இந்நூற்பாவிற்கு உரையாசிரியர் உரைத்த உரையே கொள்ளற்பாற்று.

இத் திருச்சதகம் முதலிய பலவும், பலப்பல வகையான பாட்டுக்கள், நூறு, ஐம்பது, இருபது முதலிய பலவேறு தொகையினவாய், மகளிர் விளையாட்டு, புறக்கைக்கிளை முதலிய வகையில், புகழ்தலும், பரவலும் முதலிய பல பொருள்கள்மேல் தொகை நிலையும், தொடர் நிலையுமாகப் பெரிதும் புதுமைப்பட வருதலின், '**விருந்து**' என்னும் வனப்புச் செய்யுட்களாம். என்னை ?

" **விருந்தே** தானும்
புதுவது புனைந்த யாப்பின் மேற்றே "

என்பது தொல்காப்பியமாதலின் (ஷை-231.). இந்நூற்பாவில் பின்னை உரையாளர், "புதுவது கிளந்த" எனப் பாடம் ஓதினர்.

தொல்காப்பியத்திற்குப் பின்னர்ப் பலவகையில் நெறிப்பட வந்த செய்யுள் வகைகளை '**அகலக்கவி**' எனவும், '**பிரபந்த வகை**' எனவும் வைத்துத் தொண்ணூற்றாறு என வரையறைப் படுத்து, அவற்றிற்கெல்லாம் தனித்தனி இலக்கணம் சொல்லிப் போந்தார் பிற்காலத்தார். அவை, பன்னிருபாட்டியல் முதலிய பாட்டியல் நூல்களுட் காணப்படும். எனினும், அடிகள் அருளிச்செய்த சில செய்யுள்வகைகள் அவற்றுள் அடங்கிற்றில.

தேவாரத் திருப்பதிகங்களும் பலவேறு கட்டளைப்படச் செய்யப்பட்டமையின், '**விருந்து**' என்னும் வனப்பினவே. ஆயினும், அவை, இசை யாகிய சிறப்புடைமை பற்றித் திருமுறைகளுள் முன்வைக்கப்பட்டன. இயற்பாட்டுக்களினும், இசைப்பாட்டுக்கள் இனிமையிற் சிறந்தன என்பது நிற்க, கடவுட் பராவலில் இயற்பாட்டினும், இசைப்பாட்டு உணர்வு மிகச் செய்வனவாதல் அறிக.]

1. கட்டளைக் கலித்துறை

திருச்சிற்றம்பலம்

5 மெய்தான் அரும்பி விதிர்விதிர்த் துன்விரை
யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி
வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய
போற்றியென்னும்
கைதான் நெகிழ விடேன்உடை யாய்என்னைக்
கண்டுகொள்ளே. (1)

இப் பகுதி ஒருவகைப் பாட்டாலன்றிப் பலவகைப் பாடல்களால் அமைந்திருத்தலின், பத்தியையும், வைராக்கியத்தையும் பலவகையில் வெளிப்படுத்தருளியது என்பதுபட, 'பத்தி வைராக்கிய விசித்திரம்' என இதற்குக் கருத்துரைத்தனர் முன்னோர். இதன் முதற்பாட்டுப் பத்தியையும், இரண்டாம் பாட்டு வைராக்கியத்தையும் உணர்த்துதல் காணலாம். மெய்ப் பொருளிடத்துப் பத்தியும், பிற பொருளிடத்து வைராக்கியமும் உளவாதல், அதனை யுணர்ந்தபின் ஆதலின், முதற் பத்தின் கருத்து, 'மெய்யுணர்தல்' எனக் கூறினர்.

'விருப்பம்' எனப் பொருள் தரும் 'ராகம்' என்னும் வட சொல், எதிர்மறைப் பொருட்டாகிய, 'வி' என்னும் இடைச் சொல்லை முன்னர்ப் பெற்று நிற்கும், 'விராகம்' என்னும் சொல்லினின்றும் பிறப்பது, 'வைராக்கியம்' என்னும் சொல். எனவே, 'விருப்பமின்மை' என்பது இதன் பொருளாயிற்று. தமிழ்மொழியுள் இஃது, 'உவர்ப்பு' எனப்படும்.

இம் முதற்பத்து, கட்டளைக் கலித்துறையால் அமைந்தது. இன்னோரன்ன பெயர்கள், பிற்காலத்தார் செய்த யாப்பியல் பற்றிக் கூறப்படுவன.

5. இப்பாட்டினை, 'உடையாய், யான், உன் கழற்கு, மெய் மயிர்அரும்பி, விதிர்விதிர்த்து, கண் நீர்ததும்பி, உள்ளம்

6 கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு ;
குடிகெடினும்
நள்ளேன் நினதடி யாரொடல் லால் ; நர
கம்புகினும்
எள்ளேன் திருவரு ளாலே இருக்கப்
பெறின் இறைவா,
உள்ளேன் பிறதெய்வம் உன்னையல் லாதெங்கள்
உத்தமனே. (2)

வெதும்பி, பொய் தவிர்ந்து, கை தலைவைத்து, 'போற்றி ! சய ! சய ! போற்றி' என்று உன்னைத் துதிக்கும் கையை நெகிழ விடேன் ; ஆதலின் என்னை நீ கண்டுகொள்' என இயைத்து, வேண்டும் சொற்களை வருவித்துரைக்க. பின்னரும் இவ்வாறு, சொல்லெச்சமாயும், இசையெச்சமாயும் நிற்கும் சொற்களை வருவித்துரைத்தலை அறிந்துகொள்க.

'உனது திருவடிக்கண் நீங்காது அன்பு செய்து ஒழுகுகின்றேன் ; எனக்கு இரங்கியருள்' என்பது இத் திருப்பாட்டின் திரண்டபொருள். இதனுள், 'மனம், மொழி, மெய்' என்னும் மூன்றும் அன்பு வழிய வாயினமை அமைந்து கிடந்தவாறறிக.

"மெய்தான்" முதலிய நான்கிடத்தும் வந்த "தான்", அசைநிலை. விதிர்விதிர்த்தல் - நடுநடுங்குதல். இதுவும் அன்பால் உளதாவதே. 'துடிதுடித்தல்' என்பதுபோல, 'விதிர் விதிர்த்தல்' என்பது இரட்டைக்கிளவி. விரை - வாசனை. இஃது அடியவர் சூட்டும் மலர்களால் ஆவது. கழற்கு - கழற் பொருட்டு. இந்நான்கனுருபு பொருட்டுப் பொருளதன்று ; ஏதுப் பொருளது. நான்கனுருபு இப்பொருட்டாய் வருதலை,

" அடிபுனை தொடுகழல் மையணற் காளைக்கென்
தொடிகழித் திடுதல்யான் யாயஞ் சுவலே"

(புறம் - 83.) என்றாற்போல்வனவற்றுள்ளுங் காண்க. "கை" இரண்டனுள், பின்னையது ஒழுக்கம். உள்ளம் வெதும்புதல் திருவடிப்பேறு கிடையாமையினலாம். "உன்னை" என்பது, "என்னும்" என்பதனுள் எஞ்சிநின்ற துதித்தல் வினையோடு முடிந்தது. கண்டுகொள் - எனது நிலையை நோக்கி அருள் செய்யத் திருவுளங்கொள்.

'அரும்பி, ததும்பி' என்பன, முன்னர், இடத்து நிகழ் பொருளின் தொழில் இடத்தின்மேல் நின்றனவாய், பின்னர், 'விதிர்விதிர்த்து', 'வெதும்பி' என்பவற்றோடு ஒரு நிகரனவாய், சினை வினை முதல் மேல் நின்றனவாயின.

6. **பொருள்கோள் :-** 'இறைவா, எங்கள் உத்தமனே, யான், உனது திருவருள் வழியே இருக்கப்பெறின், நரகம் புகினும் அதனை எள்ளேன்; அதனை மறந்து இருப்பதாயின், புரந்தரன், மால், அயன் முதலியோரது பதவிகளில் இருப்ப தாயினும் அவற்றைக் கொள்ளேன்; யானன்றி என் குடியே கெடுவதாயினும், நினது அடியாரொடல்லால் பிறரோடு நட்புச் செய்தலும், உன்னையல்லாது பிற தெய்வங்களைத் துணையாக எண்ணுதலும் செய்யேன்'

'ஆதலின், என்னைக் கடைக்கணித்தருள்' என, மேலைத் திருப்பாட்டில் உள்ள, "என்னைக் கண்டுகொள்" என்றதனை, ஈண்டும் வருவித்து முடிக்க. 'சிவஞானம் ஒன்றே பிறவித் துன்பத்தை நீக்குவதாதலின், அதன்கண் விருப்பமும், அஃதல் லாத பிற எவையும் அத்துன்பத்தை ஆக்குவன ஆதலின் அவற் றின்கண் விருப்பம் இன்மையும் கொண்ட தமது நிலையை இதனுள் எடுத்து விளக்கி வேண்டினார்.

புரந்தரன் - இந்திரன். 'வாழ்வும்' என்னும். சிறப்பும்மை தொகுத்தலாயிற்று. "குடி" என்றதில் தொக்குநின்ற பிரிநிலை ஏகாரம் சிறப்புணர்த்திநின்றது. "கெடினும், புகினும்" என்ற உம்மைகள், எதிர்மறை. இவற்றால், இறைவன் அடியரல்லாத வரோடு நட்புச் செய்யாமையால் குடிகெடுதலும், திருவருளை மறவாமையால் நரகம் புகுதலும் இல்லை என்பது போந்தது. "நினது அடியார்" என, உயர்திணைக் கிழமைப் பொருளில் குவ்வுருபு வாராது, அதுவுருபு வருதல் பிற்கால வழக்கு. எள்ளாமைக்கு, 'திருவருளாலே இருக்கப்பெறுதலாகிய காரணத்தைக் கூறியவதனால், கொள்ளாமைக்கு, அதன் மறுதலை யாகிய காரணம் பெறப்பட்டது. "பிற தெய்வம்" என்பதில், 'தெய்வம்' என்றது, 'உன்னையன்றிப் பிறரெல்லாம் எழு வகைப் பிறப்பினுள் ஒன்றாய தெய்வப் பிறப்பினர்', எனவும், 'அதனால் அவரை எனக்குத் துணையாக நினையேன்' எனவும் குறிப்பினால் அருளிச்செய்தவாறு. 'மேலானவன்' என்னும்

7 உத்தமன் அத்தன் உடையான் அடியே
நினைந்துருகி
மத்த மனத்தொடு மால்இவன் என்ன
மனநினைவில்
ஒத்தன ஒத்தன சொல்லிட ஊரூர்
திரிந்தெவருந்
தத்தம் மனத்தன பேசஎஞ் ஞான்றுகொல்
சாவதுவே. (3)

பொருளதாகிய, 'உத்தமன்' என்பது, இங்கு, 'தலைவன்' என்னும் அளவாய் நின்றது.

7. பொருள்கோள் :- 'உத்தமன்......அடியே நினைந்து உருகி, கண்டோர், 'இவன் மால்' என்னத் தம் மனநினைவில் ஒத்தன ஒத்தன சொல்லிட, மத்த மனத்தொடு ஊர் ஊர் திரிந்து, எவரும் தத்தம் மனத்தன பேசச் சாவது எஞ்ஞான்று'

"கொல்", அசைநிலை. "உடையான் அடியே" என்ற பிரிநிலை ஏகாரம், 'பிறிதொன்றையும் நினையாது' என்பதை விளக்கிற்று. மத்தம் - உன்மத்தம்; பித்து; என்றது பேரன் பினை. மால் - மயக்கம்; இஃது ஆகுபெயராய், 'மால் கொண் டான்' (அறிவு மயங்கினான்) எனப் பொருள் தந்தது. "நினை வில்" என்றது, ஏதுப்பொருளில்வந்த ஐந்தாம் வேற்றுமை. "ஒத்தன" என்றது, "இவன் மால்" என்னக் கருதிய அவ் வொருபொருளே பற்றிவரும் சொற்களையும், "தத்தம் மனத் தன" என்றது, நல்லனவும், தீயனவுமாய பல பொருள்களைப் பற்றிவரும் சொற்களையும் என்க. 'ஊர்க்கண் ஊர்க்கண் திரிந்து' என உருபு விரிக்க. 'பல ஊர்களில் திரிந்து' என்ற வாறு. இங்ஙனம் திரியவேண்டியது, உலகியலுள் அகப்படா மைப் பொருட்டு. அடிகள் உலகியலின் நீங்கியே நின்றாராயி னும், 'மீளவும் அதன்கண் அகப்படுவேங்கொல்லோ' என்னும் அச்சத்தினால் இங்ஙனந் திரியவேண்டினார் என்க. "திரிந்து" என்னும் எச்சம், எண்ணின்கண் வந்தது. 'சாவது எஞ் ஞான்று' என்றது, சாவின்கண் உள்ள விருப்பத்தாலன்றி, உடம்பின்கண் உள்ள வெறுப்பினாலாகலின், அதற்கு 'இவ்

8 சாவமுன் னாள்தக்கன் வேள்வித் தகர்தின்று
நஞ்சம்அஞ்சி
ஆவஎந் தாய்என் றவிதா விடும்நம்
மவரவரே
மூவரென் றேஎம்பி ரானொடும் எண்ணிவிண்
ணாண்டுமண்மேல்
தேவரென் றேஇறு மாந்தென்ன பாவந்
திரிதவரே. (4)

வுடம்பு நீங்கப் பெறுதல் எஞ்ஞான்று' என்பதே பொருளா யிற்று. "ஊரூர் திரிந்து" என்றதனால், மனநினைவில் ஒத்தன சொல்வார், அவ்வாறு திரியக் கண்டோர் என்பது பெறப்பட் டது. எவரும் - யாவரும். இறந்தவரைப் பற்றிப் பலரும் பல சொல்லுதல் இயல்பாதலறிக. உடம்புள்ள துணையும் உலகி யலிற் றொடக்குண்ணாது நிற்கவும், உடம்பு விரைய நீங்கப் பெறவும் வேண்டியவாறு.

8. பொருள்கோள் :- 'முன் நாள், ஒருமுறை, தாம் சாவ, தக்கன் வேள்விக்கண் தகர் தின்று, மற்றொருமுறை நஞ்சத்திற்கு அஞ்சி, 'எந்தாய்! ஆவா! அவிதா' என்று முறை யிடும் நம்மனோராகிய அவரையே, 'மூவர் கடவுளர்' என எம் பிரானொடும் வைத்து எண்ணி, அதன் பயனாக விண்ணாள்வ தற்கு அமைந்து, 'யாம் மண்மேல் தேவர்' என்றே இறுமாந்து திரிதருவர் சிலர்; இஃது என்ன பாவம்!'

சாவ - சாமாறு. இது விரபத்திரரால் நிகழ்ந்தது. "தகர் தின்று" என்றது, நஞ்சினை உண்ணமாட்டாமையையும், தக்கனைக் கடியமாட்டாமையையும் உணர்த்திநின்றது. 'இவற் றாலும், முறையிட்டமையாலும் பசுவருக்கத்தினர் என்பது தெற்றென விளங்கவும், அவரைப் பதியாகிய சிவபெருமானோடு ஒருங்குவைத்தெண்ணுவர்' என்றவாறு. 'அவிதா' என்பது, ஓர் முறையீட்டுச் சொல். 'நம்மவர்' என்றது, 'பசுவருக்கத் தினர்' என்றதாம். "அவர்" என்றதில் இரண்டனுருபு தொகுத்தலாயிற்று. "அவரே" என்ற பிரிநிலை ஏகாரம், இழிவுணர்த்திநின்றது. 'ஆண்டு' என்பது, பான்மை

வழக்கால். 'ஆளுதற்கு அமைந்து' எனப் பொருள் தந்தது, "அன்போடியைந்த வழக்கு" (குறள் - 73.) என்பதில், 'இயைந்த' என்பதுபோல. 'பூசுரர்' என்பதை, 'மண்மேல் தேவர்' என்று அருளினர். 'நிலவுலகிற் காணப்படும் தேவர்' என்பது இதன்பொருள். எனவே, 'ஆசிரியன்மார்' என்றதாம். இங்ஙனமாகவே, இவர், தாம் வீடடையாமையேயன்றிப் பிறரையும் அடையவொட்டாது மயக்கம் உறுவிக்கின்றனர் என்று இரங்கியவாறாயிற்று. என்ன பாவம் - என்னே அவர்தம் வினையிருந்தவாறு. 'திரிதருவர்' என்பது தொகுத்தலாயிற்று. மக்கட் பிறப்பின் பயனாகிய வீடெய்தாது, அதனை விண்போக்கலின், "திரிதருவர்" என்றார். இங்ஙனம் திரிதருவார், சிவாகமங்களைக் கொள்ளாது இகழ்ந்து, வேதம் ஒன்றையே போற்றும் வேதியர். சிறப்பு நூலைக் கொள்ளாது இகழ்ந்து, பொதுநூல் ஒன்றனையே கொண்டு, அதற்குத் தாம் வேண்டியவாறே பொருள்கூறித் தருக்குதல் பற்றி, அவரை இவ்வாறு அருளிச் செய்வாராயினர்.

மண்மேல் தேவர் என்று இறுமாந்து திரிபவர், பூர்வ மீமாஞ்சகர், உத்தர மீமாஞ்சகர் என்னும் இருசாராருமே யாவர். அவருள், பூர்வ மீமாஞ்சகர், 'வேதம், தெய்வம் உண்டு என்னும் பொருள்படக் கூறும் கூற்றுக்கள் புனைந்துரையன்றி உண்மையன்று; ஆயினும், அக்கூற்று நல்வழி நிற்றற்கு உதவுவதால் உண்மை என்று கொள்ளத்தக்கன' என்பர் ஆதலாலும், உத்தர மீமாஞ்சகர், 'பலவேறு வகைப்பட்ட தேவர்கள், மற்றைய உயிர்கள், பலவகை உலகங்கள் ஆகிய யாவும், உண்மையில் கயிற்றில் அரவுபோலப் பொய்யே; ஆயினும், அவ்வுண்மையை உணரும் பக்குவம் வரும் வரையில் அவைகளை உண்மைபோலக் கொண்டு ஒழுகல் வேண்டும்' என்பர் ஆதலாலும், இவ்விருசாராரும் எல்லாத் தேவர்களையும் ஒருதன்மையராகக் கொள்வதன்றி, அவருள் எவரையும் தனிச் சிறப்புடையராகக் கொள்ளார்; ஆகவே, 'சிவபெருமான் ஒருவனே பதி; ஏனையோரெல்லாம் பசுவருக்கத்தினர்' என உணரும் உண்மை ஞானம் அவர்க்கு ஆகமங்களின் வழியேனும், அனுபவத்தின் வழியேனும் உண்டாதற்கு ஏதுவின்மை யறிக.

'சிவபெருமான் ஒருவனே பதி' என்பது, வேதத்துள் குறிப்பாகவும், சிவாகமத்துள் வெளிப்படையாகவும் சொல்லப்

9 தவமே புரிந்திலன் ; தண்மலர் இட்டுமுட்
டாதிறைஞ்சேன் ;
அவமே பிறந்த அருவினை யேன் ;உனக்
கன்பருள்ளாஞ்
சிவமே பெறுந்திரு வெய்திற்றி லேன் ; நின்
திருவடிக்காம்
பவமே யருளுகண் டாய்அடி யேற்கெம்
பரம்பரனே. (5)

படுதலை உணரமாட்டாராயினும், புராணங்களில் அது பல வரலாறுகள் வாயிலாக இனிதுணர்த்தப்படுதலின். அவைகளைத் தாமும் உணர்கிலர் என்பார், தக்கன் வேள்வித் தகர்நின்றது, நஞ்சம் அஞ்சி அவிதா இட்டது ஆகிய புராண வரலாறுகளை உடம்பொடு புணர்த்துக் காட்டியருளினார். அதனால், உலகிற்கு இந்திரன் முதலிய பலரும் முதல்வர்' எனவும், 'மும்மூர்த்திகளும் முதல்வர்' எனவும் அனேகேசுரவாதங்கூறும் பௌராணிகர் கூற்றும் பொருந்தாமை பெறப்பட்டது.

மூவருள் சிவபிரானோடு வைத்து எண்ணப்படும் ஏனையிருவர், மாலும் அயனும் என்பது வெளிப்படை. இவ்விருவரோடு ஒருவாற்றான் ஒப்பவைத்து எண்ணுதற்குரியவன் குணருத்திரனேயன்றி, குணாதீதனாகிய, 'மகாருத்திரன்' எனப்படும் சிவபிரான் அல்லன் என்க.

இனி இக்குணருத்திரன், மால், அயன் முதலியோருள் ஒரோவொருவரைப் பதியாகக் கருதும் பாசுபதர் முதலியோரை இங்குக் கூறுராயினர், அவர், முதல்வரல்லாதாரை முதல்வர் எனக் கருதலன்றிப் பலரையும் முதல்வர் என்னாமையானும், முதல்வரல்லாத சிலரையும், முதல்வனோடு ஒப்பவைத்து முதல்வர் எனக் கருதுதல் உண்மை ஞானத்திற்குப் பெரிதும் புறம்பாய் வீடுபயவாமைபற்றியே இரங்கி அருளிச்செய்கின்றாராகலானும் என்க.

9. 'மேலானவர்க்கு மேலானவன்' எனப் பொருள் தரும், 'பரம்பரன்' என்னும் தொகைச்சொல் ஒருசொல் நடைத்தாய், 'கடவுள்' என்னும் அளவில் நின்று "எம்" என்றதற்கு முடிபாயிற்று. இத்தொடரை முதலில் வைத்து 'யான்' என்னும்

10 பரந்துபல் ஆய்மலர் இட்டுமுட் டாதடி
யேஇறைஞ்சி
இரந்தஎல் லாம்எமக் கேபெற லாம்என்னும்
அன்பருள்ளம்
கரந்துநில் லாக்கள்வ னேநின்றன் வார்கழற்
கன்பெனக்கும்
நிரந்தர மாய்அரு ளாய்நின்னை ஏத்த
முழுவதுமே. (6)

எழுவாய் வருவித்துரைக்க. மலரிட்டு இறைஞ்சுதலாகிய கிரியைத் தொண்டினைப் பின்னர்க் கூறுதலின், ' தவம் " என்றது யோகத்தையாயிற்று. சரியையும் கிரியையுள் அடங்கும். சரியையும், கிரியையும், ' சிவதருமம் ' என ஒன்ருகக் கூறப்படுதல் காண்க. சரியையை, " **புத்தேளிர் கோமான்நின் திருக்கோயில் தூகேன் மெழுகேன் கூத்தாடேன்** " என, அடிகள் பின்னர் அருளுதல் காண்க (18). " தவமே " என்ற ஏகாரம், தேற்றப்பொருட்டாய், ' சிறிதும் ' எனப் பொருள் தந்தது. முட்டாது - தவருது. ' சரியை கிரியை யோகங்களைச் செய்யேன் ' என்றது, அடிகள் அமைச்சராய் இருந்தமையைக் குறிக்கும். " இறைஞ்சேன் " என்றதன்பின், ' அதனுல் ' என்பது வருவிக்க. அவம் - வீண். " அருவினையேன் " என்றதன்பின், ' ஆயினேன் ' என்பது தொகுத்தலாயிற்று. ' அவம்படவே பிறந்த வினையேனுகிவிட்டேன் ' என்க. இனி, ' வீண் என்பது உண்டாதற்கு இடமாகிய வினையேன் ஆகிவிட்டேன் ' எனினுமாம். ' இவ்வாற்ருல் உன் அடியார் நடுவுள் இருக்கும் பேற்றினைப் பெற்றிலேன் ' என்ருர் என்க. சிவம் - நன்மை. திரு - நல்லூழ். ' எனினும், உன் திருவடியிற் சேர்கின்ற பயனையே எனக்கு அருளவேண்டும் ' என வேண்டுவார், அதற்குக் காரணமாக, ' யானும் அவ்வடியவர்போல உன்னுல் ஆட்கொள்ளப்பட்டவனன்ருே ' என்பதனை, 'அடியேற்கு' என உடம்பொடு புணர்த்தருளினுர். பவம் - உண்மை. அது, செயல் நிகழ்தலைக் குறிக்கும். இது; 'சம்பவம்' எனவும் வரும். "அருளு" என, ஏவற்கண் உகரச்சாரியை வந்தது. கண்டாய், அசைநிலை.

10. பரந்து - வலம் வந்து. ஆயப்படாத மலரினை இடுதலும், நாளும் செய்யாது இடை இடையே விட்டொழிதலும்

11 முழுவதுங் கண்டவ னைப்படைத் தான்முடி
சாய்த்துமுன் னாள்
செழுமலர் கொண்டெங்குந் தேடஅப் பாலன்இப்
பால்எம்பிரான்
கழுதொடு காட்டிடை நாடக மாடிக்
கதியிலியாய்
உழுவையின் தோலுடுத் துன்மத்தம் மேல்கொண்
டுழிதருமே. (7)

கூடாமையின், "ஆய்மலர் இட்டு முட்டாது இறைஞ்சி" என்று அருளினர். இரந்த எல்லாம் - (தம் பிழையைப் பொறுக்குமாறு) வேண்டித் துதித்த செய்கைகள் யாவும் எமக்கே பெறல் ஆம் - நமக்கே பேறுவனவாம். என்னும் அன்பர் - என்று உணர்கின்ற மெய்யன்பினை உடையவர்களது. 'இறைவனை வழிபடப் பெறுதலே பெரும்பேறு என உணர்கின்றவரே மெய்யன்பர்' என, அவரது இயல்பினை விதந்தோதியவாறு. உள்ளம் - உள்ளத்தின்கண். 'விளங்கிநிற்கின்ற பெருமானே' என்றது, "கரந்து நில்லாக் கள்வனே" என்றது 'அன்பரல்லாத பிறரது உள்ளத்தில் சிறிதும் விளங்காது நிற்பவன்' என்று கூறும் கருத்தினாலாம். 'யானும் நின்னை முழுவதும் ஏத்த, எனக்கும் நின்றன் வார்கழற்கு அன்பை நிரந்தரமாக அருளாய்' என்க. வார்கழல், அடையடுத்த ஆகுபெயர். நிரந்தரம் - இடைவிடாமை.

11. முழுவதும் - உலகங்கள் எல்லாவற்றையும். கண்டவன் - படைத்தவன்; பிரமதேவன். பிரமதேவனைப் படைத்தவன் திருமால். முடி சாய்த்து - தலைவணங்கி. தேடியது, வழிபடற்பொருட்டு. அப்பாலன் - அகப்படாது ஒளித்தவனாகிய எம்பிரான் என்க. திருமால் சிவபிரான் திருவடியைத் தேடிக் காணாமையேயன்றி, வழிபட விரும்பித் தேடியபொழுதும் அவர் காணாதவாறு சிவபிரான் ஒளித்த வரலாறு ஒன்றும் உண்டு என்பது, இதனாற் பெறப்படுகின்றது. 'அதர்வசிரசு' என்னும் உபநிடதத்திலும், இலிங்கபுராணத்திலும், 'தேவர்கள் தம்முன் காணப்பட்ட உருத்திரரை இன்னார் என்று அறியாது,

12 உழிதரு காலும் கனலும் புனலொடு
மண்ணும்விண்ணும்
இழிதரு காலம்எக் காலம் வருவது!
வந்ததற்பின்
உழிதரு காலத்த உன்னடி யேன்செய்த
வல்வினையைக்
கழிதரு காலமு மாய்அவை காத்தெம்மைக்
காப்பவனே. (8)

'நீர் யார்' என வினவ, அவர் தமது பெருமைகளைக்கூறி மறைந்தார்; பின்பு தேவர்கள் அவரைக் கண்டிலர்' என்று ஒரு செய்தி கூறப்பட்டுள்ளது. 'கண்டிலர்' என்பது, எதிர்ப்பட்டவர் உருத்திரரே என்று அறிந்த தேவர்கள் தமது அறியாமைக்கு வருந்தி, அவரை வழிபட விரும்பித் தேடியபொழுது கண்டிலர் என்னும் குறிப்புடையதேயாதல் வேண்டும். அவ்வரலாறே இங்குத் தேவர் என்றது, திருமால் எனப்பட்டது போலும்!

கழுது - பேய். நாடகம் - நடனம். கதியிலி - புகலிடம் இல்லாதவன். உழுவை - புலி. உன்மத்தம் - பித்து. உழிதரும் - திரிவான். 'தேவருலகத்தில் திருமால் முதலியவர்கட்கு எட்டாதவன், இம் மண்ணுலகத்தில் மிக எளியனாய்க் காணப்படுகின்றான்' என்றபடி. தனக்கோர் ஆதாரம் இன்றித் தானே அனைத்திற்கும் ஆதாரமாய்நிற்றலை, "கதியிலி" என்றும், உலகத்தாரொடு ஒத்துநில்லாது வேறு பட்டு நிற்கும் நிலையை, "உன்மத்தம்" என்றும் பழிப்பதுபோலக் கூறிப் புகழ்ந்தருளினார். 'கழுதொடு காட்டிடை நாடகம் ஆடுதல்' என்பது, உண்மையில் எல்லாவற்றையும் அழித்த நிலையில் உயிர்களோடு நின்று சூக்குமஐந்தொழில் செய்வதேயாயினும், அந்நிலையை மக்கள் இவ்வுலகத்தில் சுடுகாட்டுள் ஆடுவானாகவே கண்டு வழிபட, அவர்க்கு அருள்புரிதல்பற்றி, "இப்பால் உழிதரும்' என்று அருளிச்செய்தார்.

12. சொற்கிடக்கை முறை வேறாயினும், "எக்காலம் வருவது" என்பதனை, 'வருவது எக்காலம்' என மாற்றி இறுதியில் வைத்துரைத்தல் கருத்தாதல் அறிக. "உழிதரு காலத்த"

13 பவன்எம் பிரான்பனி மாமதிக் கண்ணிவிண்
ணோர்பெருமான்
சிவன்எம் பிரான்என்னை ஆண்டுகொண்டான் என்
சிறுமைகண்டும்
அவன்எம் பிரான்என்ன நான்அடி யேன்என்ன
இப்பரிசே
புவன்எம் பிரான்தெரி யும்பரி சாவ
தியம்புகவே. (9)

என்றதனை முதலிற் கொள்க. உழிதரல் - நில்லாது பெயர்தல். இப்பண்பு காற்றிற்கும் காலத்திற்கும் உளதாதல் அறிக. கால் - காற்று. இழிதரல் - விட்டு நீங்குதல். 'காலம்' என்னும் முதனிலை அன்விகுதியோடு புணருமிடத்து இடையே அத்துச் சாரியை பெற்று, 'காலத்தன்' என நின்று விளியேற்றது. 'நில்லாது பெயர்கின்ற காலதத்துவமாய் நிற்பவனே' என்பது பொருள். "வல்வினையைக் கழிதரு காலமுமாய்" என்றது, 'காலதத்துவமாய் நிற்பதனால், உன் அடியேனாகிய யான், பல பல பிறப்புக்களில் செய்த வல்வினையினின்றும் நீங்குகின்ற காலமுமாய் நின்று' என்றபடி. 'அடியேன் கழிதரு' என இயையும். அவை - அவ்வல்வினைகளை. காத்து - வந்து பற்றுத வாறு தடுத்து. "எம்மை" என்றது, தம்மோடொத்த பிறரை யும் உளப்படுத்து. 'ஐம்பெரும் பூதங்கள் முதலிய தத்துவங்கள் என்னின் வேறாக என்னால் அறியப்பட்டு நீங்குங்காலமே என் வல்வினை கழியுங்காலம்; அதுபோது என்னை நீ உன் திருவடியிற் சேர்த்து உய்யக்கொள்வாய்; அத்தகைய காலம் எனக்கு வாய்ப்பது எப்பொழுது' என்பது இப்பாட்டின் திரண்ட கருத்து, பூதங்களையே கூறினாராயினும், பிற தத்துவங்களையும் தழுவிக்கொள்ளுதல் கருத்தென்க.

13. 'பவனாகிய எம்பிரான், சிவனாகிய எம்பிரான்' என்க. இப்பரிசே எம்பிரான் தெரியும் பரிசாவது - இம் முறைமை யிலே எம் இறைவன் என்னைக் கடைக்கணித்தற்குக் காரணத்தை. புவன் இயம்புக - இவ்வுலகம் அறிந்து கூறுவ தாக. 'அவனது பேரருளல்லது பிறிது காரணம் இல்லை' என்றவாறு. 'புவனம்' என்பது கடைக்குறைந்துநின்றது.

14 புகவே தகேன்உனக் கன்பருள் யான்என்பொல்
லாமணியே
தகவே எனை உனக் காட்கொண்ட தன்மைஎப்
புன்மையரை
மிகவே உயர்த்திவிண் ணோரைப் பணித்திஅண்
ணாஅமுதே
நகவே தகும்எம் பிரான்என்னை நீசெய்த
நாடகமே. (10)

2. நாலடித் தரவு கொச்சகக் கலிப்பா

15 நாடகத்தால் உன்னடியார் போல்நடித்து நான்நடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே இடையறா அன்புனக்கென்
ஊடகத்தே நின்றுருகத் தந்தருள்எம் உடையானே. (11)

---

14. பொருள்கோள்:- 'என் பொல்லா மணியே, அண்ணா, அமுதே, எம்பிரான், யான் உனக்கு அன்பருள் புகவே தகேன்; அங்ஙனமாக என்னை உனக்கு ஆளாகக் கொண்ட தன்மை தகவே? சிலபோது, நீ, எப் புன்மையரை மிகவே உயர்த்தி, விண்ணோரைப் பணித்தி; ஆதலின், என்னை நீ செய்த நாடகம் நகவே தகும்'.

ஏகாரங்களுள் "தகவே" என்பது வினாப்பொருளிலும், "நகவே" என்பது பிரிநிலைப் பொருளிலும் வந்தன. "புகவே, மிகவே" என்பன, தேற்றப் பொருள. பொல்லா - பொள்ளா; துளையிடாத. "தோளா முத்தச் சுடரே" என முன்னருங் கூறினார் (போற்றித்-197.). எப் புன்மையர் - எத்துணைக் கீழானோரையும்; உம்மை, தொகுத்தல். பணித்தி - தாழ்விப்பாய். செய்த - இவ்வாறு ஆக்கிய. "நாடகம்" என்றது, இங்கு வினோதக் கூத்தைக் குறித்தது.

15. இவ்விரண்டாம் பத்து, சிலவற்றை இறைவனிடமும், சிலவற்றை நெஞ்சினிடமும் கூறுவதாக அமைந்திருத்தலின், இதற்கு, '**அறிவுறுத்தல்**' எனக் குறிப்புரைத்தனர்போலும் முன்னோர்! 'தரவு கொச்சகம்' என்பன தொல்காப்பியத்தும் காணப்படும்.

16 யானேதும் பிறப்பஞ்சேன் ; இறப்பதனுக் கென்கடவேன் !
வானேயும் பெறில்வேண்டேன் ; மண்ணாள்வான் [மதித்துமிரேன் ;
தேனேயும் மலர்க்கொன்றைச் சிவனேஎம் பெருமான்எம்
மானேஉன் அருள்பெறுநாள் என்றென்றே வருந்துவனே. (12)

நடுவே - அவர்களுக்கு இடையில். "வீடகத்து" என்றது, 'உனது இல்லத்தினுள்' என்ற நயத்தினையும் தோற்றுவித்தது. தக்கார் பலர் குழுமிப்புகும் ஓரிடத்து அவர்போல நடிப்பவனும் அவர்கட்கிடையே அங்குப்புக மிக விரைந்து செல்லுதல் உலகியல்பு. அவ்வியல்புபற்றிக் கூறியவதனால், அடிகளுக்கு வீடடைதற்கண் உள்ள விரைவு எத்துணையது என்பது புலனாகும். எய்த வந்திலாதார் எரியிற் பாய்ந்தமை முதலியவற்றைச் செய்ததுபோலத் (கீர்த்தி - 132.) தாம் செய்யாமை பற்றித் தமது செயலை நாடகம் என்று அருளினார். ஆடகச் சீர் மணி - பொன்னின்கண் பொருந்திய மணி. சீர்த்தல் - பொருந்துதல். உனக்கு - உன் பொருட்டு. "ஊடகத்தே" என்பதனை, 'அகத்தூடே' என மாற்றிக்கொள்க. அகம் - மனம். நின்று - நிற்க. 'அதனால் அஃது உருக' என்க. "உருக" என்ற செயவெனெச்சம், தொழிற்பெயர்ப் பொருளைத் தந்து நின்றது. 'எம்மை உடையானே' என, இரண்டாவது விரிக்க. 'உடையான்' தலைவன் எனக்கொண்டு, நான்காவது விரித்தலுமாம்.

16. என் கடவேன் - என்ன கடப்பாடு உடையேன்; ஒன்றுமில்லை. எனவே, 'இறப்பைப் பற்றியும் கவலையுறுகின்றிலேன்' என்றவாறு. "வானேயும்" என்றதில் ஏகாரமும், உம்மையுமாகிய இரண்டு இடைச்சொற்கள் ஒருங்குவந்தன. ஏகாரம் தேற்றமும், உம்மை உயர்வு சிறப்புமாய் நின்றன. தேன் ஏயும் - தேன் பொருந்திய. 'மலர்க் கொன்றை' என்றதனை, 'கொன்றை மலர்' என மாற்றியுரைக்க. 'பெருமான், மான்' என்றவற்றுள் ஒன்றற்கு, 'தலைவன்' எனவும், மற்றொன்றற்கு, 'பெரியோன்' எனவும் பொருள் உரைக்க. 'பிறப்பு இறப்புக்களாகிய துன்பங்களை நீக்கிக்கொள்வது எவ்வாறு என்றோ, சுவர்க்கபோகமும், இவ்வுலகத்தை ஆளும் செல்வமும் ஆகிய இன்பத்தைப் பெறுவது எவ்வாறு என்றோ யான் கவலையுறுகின்றேனல்லேன்; உன் அருளைப் பெறுவது

17 வருந்துவன்நின் மலர்ப்பாத மவைகாண்பான் நாயடியேன்
இருந்துநல மலர்புனையேன் ; ஏத்தேன்நாத் தழும்பேறப் ;
பொருந்தியபொற் சிலைகுனித்தாய் அருளமுதம் புரியாயேல்
வருந்துவனத் தமியேன்மற் றென்னேநான் ஆமாறே. (13)

18 ஆமாறுன் திருவடிக்கே அகங்குழையேன் ; அன்புருகேன் ;
பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன் ; புத்தேளிர்
கோமான்நின் திருக்கோயில் தூகேன் ; மெழுகேன் ; கூத்தாடேன்;
சாமாறே விரைகின்றேன் சதுராலே சார்வானே. (14)

எந்நாள் என்ற அவ்வொன்றை நினைந்தே நான் கவலையுறுகின்றேன்' என்றவாறு. 'அருள்' என்றது, இவ்வுடம்பின் நீக்கித் தன்னோடு உடனாகச் செய்தலை.

17. 'வருந்துவன் நின் மலர்ப்பாதமவை காண்பான்' என மேற்போந்ததனையே மறித்துங் கூறினர், 'அங்ஙனம் வருந்துதலன்றி, அதற்கு ஆவனவற்றுள் ஒன்றும் செய்திலேன்' எனத் தமது ஏழைமையை விண்ணப்பித்தற்பொருட்டு. ''புனையேன்'' என்றதற்கு, 'சாத்தி வழிபடேன்' என்றாயினும், 'மாலை முதலியனவாகத் தொடேன்' என்றாயினும் உரைக்க. இவ்விரண்டும் இருந்து செய்யற்பாலனவாதல் அறிக. அதனைக் கிளந்தோதியது,' எனது உலகியல் நாட்டம் என்னை இவற்றின்கண் விடுகின்றிலது' என்பதைத் தெரிவித்தற் பொருட்டு. 'நத் தமியேன்' எனப் பிரித்து, 'மிகவும் தமியேனாகிய யான்' எனப் பொருள் உரைக்க. 'ந' என்னும் இடைச்சொல் சிறப்புணர்த்தியும் வருமாகலின், அது, பின் வரும் தனிமையின் மிகுதியை உணர்த்திற்று. 'அதுவன்றி நான் ஆமாறு மற்று என்' என்க. ஆமாறு - அடையும் நிலை.

18. 'உன் திருவடிக்கு ஆமாறு' என மாற்றுக. ஏகாரம், அசைநிலை. 'அன்பினால் அகம் குழையேன் ; உருகேன்' என்க. குழைதல் - இளகல். உருகல் - ஓட்டெடுத்தல். 'தூகேன்' என்பதற்கு, 'தூ' என்பது முதனிலை. 'விளக்குதல்' என்பது இதன் பொருள். இதனை, 'திருவலகிடுதல்' என்றல் மரபு. "விளக்கினார் பெற்ற இன்பம் மெழுக்கினாற் பதிற்றியாகும்" என்று அருளிச்செய்தமை காண்க. (திருமுறை - 4. 77. 3.) 'சதுராலே சாமாறே விரைகின்றேன்' எனக் கூட்டி, 'உல

19 வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யான்எனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே. (15)

20 வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான் ; மனம்நின்பால்
தாழ்த்துவதும் தாம்உயர்ந்து தம்மைஎல்லாந் தொழவேண்டிச் ;
சூழ்த்துமது கரமுரலுந் தாரோயை நாயடியேன்
பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானும்உன்னைப் பரவுவனே.

யெல் துழனிகளால் இறப்பதற்கே விரைந்து செல்லுகின்றேன்' என உரைக்க. 'விரைகின்றேன்' எனத் தம் குறிப்பின்றி நிகழ்வதனைத் தம் குறிப்பொடு நிகழ்வது போல அருளினார். சார்வானே - எல்லாப் பொருட்கும் சார்பாய் நிற்பவனே. இப்பாட்டில் மூன்றும் அடி ஐஞ்சீரடியாய் மயங்கிற்று.

19. வளி - காற்று. ஒளி, ஞாயிறு முதலியவை. ஊன் - உடம்பு; ஆகுபெயர். 'பூதங்களும், அவற்றின் காரியங்களும் ஆகியிருப்பவன்' என்றபடி. இறைவன் இப்பொருள்கள் எல்லாமாய் நிற்பது, உடலுயிர்போல வேறறக் கலந்து நிற்கும் கலப்பினாலாம். "உண்மை, இன்மை" என்றவை, அவற்றை யுடைய பொருளைக் குறித்தன. இறைவன், அனுபவமாக உணர்வார்க்கு உள்பொருளாயும், அவ்வாறன்றி ஆய்ந்துணர் வார்க்கு இல் பொருளாயும் நிற்பான் என்க. கோன் - எப் பொருட்கும் தலைவன். அவர் அவரை - ஒவ்வொருவரையும். "யான் எனது என்று" என்னும் எச்சம், "ஆட்டுவான்" என்னும் பிறவினையுள் தன்வினையொடு முடியும். எனவே, "ஆட்டுவான்" என்பது, 'ஆடுமாறு செய்வான்' என இரு சொல் தன்மை எய்திநின்றதாம். உலகியலை, 'கூத்து' என்றது, நிலையற்றதாதல் கருதி. கூத்து, ஒரு கால எல்லையளவில் நிகழ்ந்து, பின் நீங்குவதாதல் அறிக. 'ஒத்த சிறப்பினவாய் அளவின்றிக் கிடக்கும் உனது பெருமைகளுள் எவற்றைச் சொல்வேன்! எவற்றைச் சொல்லாது விடுவேன்!' என்பது இத்திருப்பாட்டின் தெளிபொருள்.

20. எல்லாம் - எல்லாரும். 'சூழ்ந்து' என்பது வலித்த லாயிற்று. மதுகரம் - வண்டு. தாரோயை - மாலையை அணிந்த உன்னை. நாயடியேன் - நாய்போலும் அடியேன்.

21 பரவுவார் இமையோர்கள் ; பாடுவன நால்வேதம் ;
குரவுவார் குழல்மடவாள் கூறுடையாள் ஒருபாகம் ;
விரவுவார் மெய்யன்பின் அடியார்கள் ; மேன்மேல்உன்
அரவுவார் கழலிணைகள் காண்பாரோ அரியானே. (17)

'நாயடியேனாகிய யானும்' என, ''யானும்'' என்றதனை இதன் பின் கூட்டுக. பாழ்த்த - இன்பம் அற்ற. பரவுவன் - துதிப்பேன். 'தேவர்களும் உன்னை வணங்குகின்றார்கள் ; யானும் உன்னை வணங்குகின்றேன், தேவர்கள் போகத்தை வேண்டுகின்றனர் ; எனக்கு அது வேண்டுவதில்லை ; உனது திருவடி நிழலே வேண்டும்' என்பது கருத்து. இதனானே, 'இதனை அருளுதல் உனக்கு இயல்பேயாய் இருத்தலின், எனக்கு விரைந்து அருள்புரிக' என்ற குறிப்பும் பெறப்பட்டது. இறைவன் போகத்தை வழங்குதல், உயிர்களின் இழிநிலை குறித்தன்றித் தன் விருப்பத்தினாலன்றாதலும், வீடுபேற்றைத் தருதலே அவனது கருத்தாதலும் அறிந்துகொள்க, உம்மைகள், எச்சப்பொருள.

21. குரவு - குராமலரையணிந்த. அரவு - பாம்பையணிந்த. ''வார்கழல்'' என்றது அடையடுத்த ஆகுபெயராய், 'திருவடி' என்னும் பொருட்டாய் நின்றது. 'கழலிணைகள்' என்றதனை 'இணையாகிய கழல்கள்' எனக்கொள்க. 'உன் திருமுன்பில் தேவர்கள் உன்னைத் துதித்து நிற்பார்கள் ; வேதங்கள் முழங்கும் ; உமையம்மை உனது திருமேனியில் ஒரு கூறாய் விளங்குவாள் ; ஆயினும், அடியார்களே மெய்யன்பினால் உன்னை அடைவார்கள் ; ஆதலின், அவர்களே உனது திருவடிகளை மேன்மேலும் கண்டு இன்புறுவார்கள்போலும்' என்றவாறு. ஓகாரம் சிறப்புப் பொருட்டு. அம்மையும் இறைவனை வழிபடுதல் முதலியவற்றால் இறைவன் திருவடியைக் காண முயல்பவள்போலக் காணப்படுவதால், 'தேவர், வேதங்கள்' என்னும் இவரோடு உடன் கூறினார். 'அவள் இறைவனின் வேறாதலின்மையின், கண்டு இன்புறுவாருள் ஒருத்தியாகாள்' என்றபடி. எனவே, 'ஒரோவொருகாரணத்தால் இமையோர் முதலியவர் திருவடியைக் காணாராக, அடியார்களே அவற்றைக் கண்டு இன்புறுவார்' என்றதாயிற்று. இமையவர்கட்கு மெய்யன்பு இன்மையானும், வேதம் மாயாகாரியமேயாகலானும்

22 அரியானே யாவர்க்கும் அம்பரவா அம்பலத்தெம்
பெரியானே சிறியேனை ஆட்கொண்ட பெய்கழற்கீழ்
விரையார்ந்த மலர்தூவேன் ; வியந்தலறேன் ; நயந்துருகேன் ;
தரியேன் ; நான் ஆமாறென் ! சாவேன் நான் சாவேனே.

23 வேனில்வேள் மலர்க்கணைக்கும் வெண்ணகைச்செவ் [வாய்க்கரிய
பானலார் கண்ணியர்க்கும் பதைத்துருகும் பாழ்நெஞ்சே
ஊனெலாம் நின்றுருகப் புகுந்தாண்டான் இன்றுபோய்
வானுளான் காணாய்நீ ; மாளாவாழ் கின்றாயே. (19)

திருவடியைக் காணலாகாமை யறிக. அரியானே - யாவர்க்கும் காண்டற்கு அரியவனே.

22. 'யாவர்க்கும் அரியானே' என மாற்றுக. அம்பரம் - ஆகாயம். சிதம்பரம் - சிதாகாசம்; ஞானவெளி. அதனுள் விளங்குதல்பற்றி, 'அம்பரவா' என்றார். அம்பலம் - மன்று; சபை. பெய்கழல் - கட்டப்பட்ட கழலையுடைய திருவடி. "கீழ்" என்றது ஏழனுருபு. அலறுதல் - கூப்பிடுதல். நயந்து - விரும்பி ; அன்புகொண்டு. தரியேன் - அத்திருவடிகளை உள்ளத்துக்கொள்ளேன் ; நினையேன். 'ஆதலின், நான் ஆமாறு என் ! நான் சாவேன் ! சாவேன் !!' என்க. "சாவேன்" என்றது, 'பயனின்றி இறப்பேன்' என்றபடி. அடுக்கு, துணிவுபற்றி வந்தது.

23. வேனில்வேள் - மன்மதன், அவன் வேனிற் காலத்தை உரிமையாக உடைமைபற்றி, 'வேனில்வேள்' எனப்பட்டான். "வெண்ணகைச் செவ்வாய்க்கரிய பானலார் கண்ணியர்" என்றாராயினும், 'அவரது நகை முதலியவற்றுக்கு' என்று உரைத்தலே கருத்தென்க. குவ்வுருபுகளை ஆனுருபாகத் திரிக்க. "இன்றுபோய், வான் உளான்" என்றதனால், 'புகுந்து ஆண்டது அன்று' என்பது பெறப்பட்டது. வான் - சிவலோகம், நீகாணாய் - அவன் பிரிந்து நிற்றற்கு ஏதுவாகிய உன் இழிநிலையை நீ நினைக்கின்றிலை ; 'அதனால் இறவாது உயிர் வாழ்கின்றாய் ; உனது வன்மை இருந்தவாறு என்' என்க. இதன்கண் நெஞ்சினை உயிருடையது போல அருளினார்.

24 வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்
டாழ்கின்றாய் ஆழாமற் காப்பானை ஏத்தாதே
சூழ்கின்றாய் கேடுனக்குச் சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீஅவலக் கடலாய வெள்ளத்தே. (20)

3. எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

25 வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே எனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தாழ் உறுபுனலிற் கீழ்மே லாகப்
பதைத்துருகும் அவர்நிற்க என்னை யாண்டாய்க்
குள்ளந்தாள் நின்றுச்சி யளவும் நெஞ்சாய்
உருகாதால் உடம்பெல்லாங் கண்ணாய்; அண்ணா,
வெள்ளந்தான் பாயாதால்; நெஞ்சம் கல்லாம்;
கண்ணிணையும் மரமாம்; தீ வினையி னேற்கே. (21)

---

24. "வாழாத நெஞ்சமே" என்றதனை முதலில்வைத்து 'இறைவனை அடைந்து வாழமாட்டாத மனமே' என உரைக்க, "வாழ்கின்றாய்", என்றது, வாழ்தலையோ செய்கின்றாய்' எனப் பொருள் தருதலை எடுத்தலோசையாற் கூறிக்காண்க. அங்ஙனம் பொருள்படவே; 'இல்லை' என்பது அதன்பின் வருவிக்கப் படுவதாம். "உனக்கு" என்றது முன்னரும் சென்று, 'ஏத்தாதே உனக்குக் கேடு சூழ்கின்றாய்' என இயையும். 'உனக்குப் பல்காலும் சொல்கின்றேன்' என மாற்றியுரைக்க, "சொல்கின்றேன்" எனத் தொடங்கியதனையே, ஈற்றடியிற் சொல்லி முடித்தார். எனவே, 'உய்யப் பார்' என அறிவுறுத்திய வாறாயிற்று. அவலக் கடலாய வெள்ளம் - 'துன்பக் கடல்' எனப் பெயர்பெற்ற வெள்ளம்.

25. இம் மூன்றும் பத்துள் முதல்திருப்பாட்டில் பேரன்பின் நிலையையும், எட்டாம் திருப்பாட்டில் இறைவன் தமக்கு வியாபக உணர்வு அளித்தமையையும், ஒன்பதாம் திருப்பாட்டில் இறை வனது பெருநிலையையும் குறித்திருத்தல் பற்றி இதற்கு. 'சுட்டறுத்தல்' எனக் குறிப்புரைத்தனர்போலும் முன்னோர். சுட்டு - சுட்டுணர்வு. அஃது, ஒருகாலத்துப் பலவற்றை உணராது ஒன்றனை மட்டுமே உணர்தல். இஃது, 'ஏகதேச உணர்வு' எனவும் படும். ஒருகாலத்தில் பலவற்றையும் ஒருங்

26 வினையிலே கிடந்தேனைப் புகுந்து நின்று
போது நான் வினைக்கேடன் என்பாய் போல
இனையன் நான் என்றுன்னை அறிவித் தென்னை
ஆட்கொண்டெம் பிரானானாய்க் கிரும்பின் பாவை
அனைய நான் பாடேன்; நின் ருடேன்; அந்தோ!
அலறிடேன்; உலறிடேன்; ஆவி சோரேன்!
முனைவனே, முறையோ நான் ஆன வாறு!
முடிவறியேன் முதல்அந்தம் ஆயி னானே. (22)

குணர்தல், 'வியாபக உணர்வாகும்'. உணர்வை, 'ஞானம்' என்ப. இவையே, 'சிற்றறிவு, முற்றறிவு' எனப்படுவன வாம்.

என - என்று துதிப்பவர் துதிக்க. வேட்ட - (உன்னைக் காண) அவாவிய. நெஞ்சு - நெஞ்சினர்; ஆகுபெயர். பள்ளம்தாழ் - பள்ளத்தின்கண் வீழ்கின்ற. உறுபுனலின் - மிகுந்த நீர்போல. 'உறுபுனலின் பதைத்து' என இயையும். "கீழ்" என்றது, கீழ் நிற்பனவாகிய கால்களை. பதைத்து - விரைந்து; ஓடி. ஓடுதல், இறைவன் வெளிப்படும் இடத்தை நாடியாம், அவர் - அத்தகைய பேரன்பர். "நிற்க" என்றது, உன்னைக் காணாது நிற்க எனவும், "ஆண்டாய்" என்றது, 'எதிர் வந்து ஆண்டாய்' எனவும் பொருள் தந்தன, ஆண்டாய்க்கு - ஆண்ட உன்பொருட்டு. உடம்பு 'முழுதும் நெஞ்சேயாய் உருக வேண்டியிருக்க, உள்ள நெஞ்சும் உருகவில்லை; உடம்பு முழுதும் கண்களேயாய் நீர்சொரிய வேண்டுவதாக, உள்ள கண்களும் சிறிதும் நீரைச் சிந்தவில்லை; இங்ஙனமாகவே, என் நெஞ்சு கல்லே; என் கண்கள் மரத்தின்கண் உள்ள கண்களே' என்றபடி. "மரம்" என்றது அதன் கண்களை, மரத்தின்கண் உள்ள துளைகட்கு, 'கண்' என்னும் பெயருண்மை பற்றி, இகழப்படும் கண்களை, அவைகளாகக் கூறும் வழக்கினை, "மரக்கண்ணோ மண்ணாள்வார் கண்" என்னும் முத்தொள்ளாயிரச் செய்யுளால் உணர்க. 'அண்ணல்' என்பது, "அண்ணா" என மருவிற்று.

26. புகுந்து - எதிர்வந்து. போது - வா. வினைக் கேடன் - வினைகட்கு அழிவைச் செய்பவன். இனையன் - இன்னான்; உருகுந் தன்மை இல்லாமை பற்றித் தம்மை

27 ஆயநான் மறையவனும் நீயே யாதல்
அறிந்தியான் யாவரினுங் கடைய னாய
நாயினேன் ஆதலையும் நோக்கிக் கண்டு
நாதனே நானுனக்கோர் அன்பன் என்பேன்
ஆயினேன் ஆதலால் ஆண்டு கொண்டாய்;
அடியார்தாம் இல்லையே? அன்றி மற்றோர்
பேயனேன் இதுதான் நின் பெருமை யன்றே!
எம்பெருமான் என்சொல்லிப் பேசு கேனே. (23)

இருப்புப் பாவையோடு ஒப்பித்தார். உலறுதல் - வற்றுதல்; மெலிதல். சோர்தல் - நீங்குதல், முனைவன் - முன் (முதற் கண்) நிற்பவன். 'நான் இங்ஙனம் ஆனவாறு முறை யாகுமோ' என்க. முடிவு - (இவ்வாறு இருப்பதன்) விளைவு. "கிடந்தேனை உன்னை அறிவித்து" என்றது, "**களித்தானைக் காரணங் காட்டுதல்**" (குறள் 929.) என்றதுபோல நின்றது.

27. ஆய - பெருகிய. நான்மறையவனும் - நான்கு வேதங்களையும் அருளினவனும்; என்றது, 'ஒழுக்க நெறிகள் பலவற்றையும், உலகிற்கு நன்கு உணர்த்தியவன்' என்றவாறு. "நீயே" என்ற ஏகாரம், பிரிநிலை. "கடையன்" என்றது, 'ஒழுக்க நெறிகளுள் ஒன்றிலும் நில்லாதவன்' என்றதாம். "நோக்கி" என்றது முன்னர், "அறிந்து" என்றதனோடு இயைய வைத்து எண்ணப்பட்டது, கண்டு - பின், உண்மையை உணர்ந்து. உண்மையாவது, 'சிறியோர்க்கு இரங்குதல் பெரி யோர்க்கு இயல்பு' என்பது. "நாதனே, எம்பெருமான்" என்ற இரண்டையும் முதலில் கூட்டுக. 'நானும்' என்னும் இழிவு சிறப்பும்மை தொகுத்தலாயிற்று. அன்பன் - அன்ப னாதற்கு உரியவன். என்பேனாயினேன் - என்று எண்ணும் இயல்புடையேனாயினேன். ஆதலால் - ஒழுக்க நெறிகளால் சான்றோனாகாவிடினும், இவ்வாறு உன் பெருமையைச் சிறிதே னும் உணரப்பெற்றமையால். இதனால், இறைவன் குருவாகி வந்து ஆட்கொள்வதற்கு முன்பே அடிகள் இறைவன் திருவரு ளில் நாட்டமுற்று நின்றமை பெறப்படும். "அடியார் தாம் இல்லையே" என்றது, 'உனக்கு அடியவர் இல்லையாயின் குறையோ'. என்னும் பொருளது. ஏகாரம், வினா. "அன்றி" என்றதனை, இதற்கு முன்னே கூட்டுக. பெருமை - பெரியோ

28 பேசிற்றும் ஈசனே எந்தாய் எந்தை
பெருமானே என்றென்றே பேசிப் பேசிப்
பூசிற்றும் திருநீறே நிறையப் பூசிப்
போற்றியெம் பெருமானே என்று பின்று
நேசத்தாற் பிறப்பிறப்பைக் கடந்தார் தம்மை
ஆண்டானே! அவாவெள்ளக் கள்வனேனை
மாசற்ற மணிக்குன்றே! எந்தாய்! அந்தோ!
என்னைநீ ஆட்கொண்ட வண்ணந் தானே. (24)

29 வண்ணந்தான் சேயதன்று; வெளிதே யன்;ற
னேகன்ஏகன் அணுஅணுவில் இறந்தாய் என்றங்
கெண்ணந்தான் தடுமாறி இமையோர் கூட்டம்
எய்துமா றறியாத எந்தாய்! உன்றன்
வண்ணந்தா னதுகாட்டி, வடிவு காட்டி,
மலர்க்கழல்க ளவைகாட்டி, வழியற் றேனைத்
திண்ணந்தான் பிறவாமற் காத்தாட் கொண்டாய்;
எம்பெருமான் என்சொல்லிச் சிந்திக் கேனே. (25)

ரது தன்மை; அது, சிறியோரை இகழாது, குற்றங்கள் நீக்கிக் குணங்கொண்டு கோதாட்டல். 'ஓர் பேயனேன் மற்று என் சொல்லிப் பேசுகேன்' என இயையும். பேசுதல், இங்கு, 'விளக்குதல்' என்னும் பொருட்டு. விளக்குதல், தம்மை ஆட்கொண்ட காரணத்தை என்க.

28. 'தாம் பேசின்'. 'தாம் பூசின்' என மாற்றுக. 'பேசின், பூசின்' என்றவை, பேசுதல், பூதல் இவற்றின் அருமையைக் குறியாது, 'பேசும்பொழுதெல்லாம், பூசும்பொழுதெல்லாம்' எனப் பொருள்தந்தன. பின்று நேசம் - சலியாத அன்பு. கடந்தார் - கடந்தவராயினர்; இது, துணிவு பற்றி எதிர்காலம் இறந்தகாலமாக வந்ததாம். துணிவு, தகுதிபற்றி வந்தது. 'பின்று நேசத்தாரை ஆண்டானே, நீ, அவா வெள்ளக் கள்வனேனை ஆட்கொண்ட வண்ணந்தான் என்னே' என வியந்தவாறு காண்க.

29. "வண்ணம்" என்றதற்குமுன், 'உன்' என்பதும் "அனேகன்" என்றதற்குமுன், 'நீ' என்பதும் வருவித்து,

30 சிந்தனை நின் றனக்காக்கி, நாயி னேன்றன்
கண்ணிணை நின் திருப்பாதப் போதுக் காக்கி,
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி, வாக்குன்
மணிவார்த்தைக் காக்கிஐம் புலன்கள் ஆர
வந்தனை; ஆட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே! மலையே! உன்னைத்
தந்தனை; செந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே! இரண்டுமிலித் தனிய னேற்கே. (26)

அனேகன் முதலிய நான்கின்பின்னும் 'அல்லை' என்பதைத் தனித்தனி விரித்தும் உரைக்க, "சேயது, வெளிது" என்றவை பண்பின்மேல் நின்றன. அணு - சிறியாய்; ஆகுபெயர், அணுவில் இறந்தாய் - பெரியாய், அங்கு - அறியப்புகும் அக்காலத்து, எண்ணம் - கொள்கை. தடுமாற்றம், அனுபவ மாகாமையால் வந்தது. காட்டி - அனுபவமாகக் காணும்படி காட்டி, இப்பகுதியை, "அதுபழச் சுவையென" என்ற திருப்பாட்டின் (திருப்பள்ளி. 7.) பகுதியோடு ஒருங்குவைத்துக் காண்க. வழி - உய்யும் வழி. 'திண்ணமாக' என ஆக்கம் வருவிக்க. திண்ணமாயது, பிறவாமையே. "தான்" என வந்தன பலவும் அசைநிலைகள். சிந்திக்கேன் - நினைப்பேன். "என்" என்றதனை, "சிந்திக்கேன்" என்றதற்குங் கூட்டுக, 'எச்சொல்லால் சொல்லி, எந்நினைவால் நினைப்பேன்! சொல்லுக்கும், நினைவுக்கும் அடங்காததாய் உள்ளது உனது திருவருட் பெருமை' என்றவாறு.

30. சிந்தனை - நினைத்தல்; இஃது இறைவன் வடிவம் முழுவதையும் பற்றி அகத்தே நிகழவேண்டுமாதலின், "நின்றனக்கு ஆக்கி" என்றும், ஏனைய காட்சியும், தொழுகையும் புறத்தில் திருவடியை நோக்கிச் செய்தலே சிறப்பாகலின், 'அவற்றைத் திருவடிமலர்க்கே ஆக்கி' எனவும் அருளினர். வார்த்தை - செய்தி; இங்குப் புகழைக் குறித்தது. அடிகள் புலமைத்திறம் முழுவதையும் இறைவன் புகழுக்கே ஆக்கினமை அறிக. "மணி" என்றது. சிறப்புப்பற்றிக் கூறப்பட்டது. இறைவன்புகழே யாவர் புகழினும் சிறந்ததாதல் அறிக, இறைவன் புகழை இங்ஙனம், "மணிவார்த்தை" எனக் குறிப்பிட்டமையானே, அஃதொன்றையே பாடியருளிய அடி-

கள், "மாணிக்கவாசகர்" எனப் பெயர் பெற்றூர் என்ப. "ஆக்கி" என்னும் எச்சங்கள், "ஆர" என்றதனோடு முடியும். அது, சினைவினையாயினும் முதல்மேல் நின்றதாகலின் அவ் வெச்சங்கட்கு முடிபாதற்கு இழுக்கின்று. 'ஐம்புலன்களும்' என்னும் உம்மை தொகுத்தல். "புலன்கள்" என்றது, பொறி களை. ஆர - நிரம்ப; என்றது, 'இன்புறுமாறு' என்றபடி; இஃது எதிர்காலத்ததாய் நின்றமையின், "ஆக்கி" என்னும் எச்சங்களும் 'உழுது வருவான்' என்பதுபோல, எதிர்காலத் தனவாம். என்னை?

"செய்தெ னெச்சத் திறந்த காலம்
எய்திட னுடைத்தே வாராக் காலம்"

என்பது தொல்காப்பியமாகலின் (தொல் - சொல் 241.)

இறைவன் ஆசிரியத் திருமேனியனுய் வந்து உடன், இருந்த காலத்தில் அடிகள் முதலியோரது ஐம்பொறிகளுள் நாப்பொறி இன்பம் எய்தியது, அவன் அளித்து உண்பித்த சுவைப் பொருள்களாலாம். இனி, "ஐம்புலன்கள்" என்றது பெரும் பான்மைபற்றிக் கூறியதெனினும் இழுக்காது; 'இவ்வூனக் கண்களாலே காண வந்தாய்' என்பதே கருத்து.

"உணர்வின் நேர்பெற வருஞ்சிவ போகத்தை
ஒழிவின்றி உருவின்கண்
அணையும் ஐம்பொறி அளவினும் எளிவர
அருளினை"

(பெ. பு. ஞான. சம்-161.) என்று அருளிச்செய்தது காண்க. வந்தனை - எதிர்வந்தாய்; இஃது எச்சப்பொருட்டாய் நின்றது. விச்சை - வித்தை. மால் - மருட்கை; வியப்பு. 'விச்சையை யுடைய, வியப்பைத் தருகின்ற அமுதப்பெருங்கடலே' என்க. தருதல்,' தடையின்றிச் சார்ந்து இன்புறவைத்தல். இரண்டு; இகம், பரம். அவை இல்லையாயது, அவற்றிற்கேற்ற அறிவும், ஒழுக்கமும் இன்மையினுலாம். தனியன் - பற்றுக்கோடில்லாத வன். 'ஒரு பயனும் இன்றி யொழியற்பாலனுகிய எளியேனை, மிக மேலான பயனைப் பெறச்செய்தாய்' என்றபடி. 'உனது கருணையை என்னென்று புகழ்வேன்' என்பது குறிப்பெச்சம்.

31 தனியனேன் பெரும்பிறவிப் பௌவத் தெவ்வத்
தடந்திரையால் எற்றுண்டு பற்றென் றின்றிக்
கனியைநேர் துவர்வாயார் என்னுங் காலாற்
கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்
டினியென்னே உய்யுமா றென்றென் றெண்ணி
அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின் றேனை
முனைவனே முதல்அந்தம் இல்லா மல்லற்
கரைகாட்டி ஆட்கொண்டாய் மூர்க்க னேற்கே. (27)

32 கேட்டாரும் அறியாதான் ; கேடொன் றில்லான் ;
கிளையிலான் ; கேளாதே எல்லாங் கேட்டான் ;
நாட்டார்கள் விழித்திருப்ப ஞாலத் துள்ளே
நாயினுக்குத் தவிசிட்டு, நாயி னேற்கே

---

31. இதனுள், 'பிறவி, துன்பம், மகளிர், காமம்; திருவைந் தெழுத்து, பிறப்பின்மை, என்னும் இவைகளை முறையே. 'கடல், அலை. சூருவளி, சுறாமீன், புணை, கரை, என்னும் இவை களாக முற்றுருவகம்பட வைத்து அருளிச்செய்தவாறு காண்க. மல்லல் - வளம். மூர்க்கன் - கொண்டது விடாதவன். 'எனக்கும் உண்மையை உணர்த்தி என்னை ஆட்கொண் டாய்' என்றபடி. 'உனது சதுரப்பாடு இருந்தவாறு என்' என்பது குறிப்பெச்சம். "கல்நாருரித்த கனியே" என முன்னரும் (போற்றித்-97.) அருளிச்செய்தார், 'இனி என்னே உய்யுமாறு என்று எண்ணி, அஞ்செழுத்தைத் துணையாகப் பற்றியிருந்த தம்மை, "மூர்க்கனேன்" என்றது, மாதராசை துன்பந்தருவது என்று அறிந்தும் அதனை விடாது நின்றது பற்றி யாம். இதனாலும், அடிகள், இறைவனால் ஆட்கொள்ளப்படுதற்கு முன்னர், 'சரியை, கிரியை, யோகம் என்னும் நிலைகளில் நின்றமை பெறப்படும். தனியனேனாய்க்கிடக்கின்ற என்னை, அவ்விடத்து மூர்க்கனேற்குக் கரையைக் காட்டி ஆட் கொண்டாய்' என முடிக்க. 'தனியனேன் என்றது கேவல நிலையைக் குறித்தது' எனக் கொண்டு, 'கேவலம், சகலம், சுத்தம்' என்னும் மூன்று நிலைகளும் இதனுட் கூறப்பட்டன எனக் காட்டுவாரும் உளர்.

32, 'ஆரும் கேட்டு அறியாதான்' என மாற்றுக. "ஆரும்" என்றது, சத்திநிபாதர்களைச் சுட்டியன்றி, உலகரைச்

காட்டா தனவெல்லாங் காட்டிப் பின்னுங்
கேளா தனவெல்லாங் கேட்பித் தென்னை
மீட்டேயும் பிறவாமற் காத்தாட் கொண்டான் ;
எம்பெருமான் செய்திட்ட விச்சை தானே. (28)

சுட்டியேயாம். இவர்களை, 'நாடவர்' எனவும், 'நாட்டார்' எனவும் அடிகள் குறித்தலை யறிக. உலகரால் கேட்டறியப் படாமை, அவர்கள் அறிவிற்கு உணரவாராமையின் தமராய்ச் சொல்லுவார் இன்மையினாலும், அறிவர் உரைக்கும் உரைகள் அவர்கட்குப் பொருள்படாமையினாலுமாம். கேடு - அழிவு. ஒன்று - சிறிது. 'கேட்டாரும் அறியாமையால், இலனால் இல்லை' என்றபடி. கேளாதே எல்லாம் கேட்டான் - பிறர் அறிவிக்க வேண்டாது, தானே எல்லாவற்றையும் நன்குணர்ந் தவன், இது, கிளை யின்மையால் அறியப்படும் என்பார், அதனை முற்கூறினார். கிளை, இருமுதுகுரவரும், பிற தமரும் இத்தன்மையனாகலின், பிறவாமற் காத்து ஆட் கொண்டான், என்பார், இவற்றை முதற்கண் கிளந்தோதினார். ஏக்கற்றுநின்றாரை, 'விழித்து நின்றார்' என்றல் வழக்கு. அடிகள்பெற்ற பேற்றினை யறிந்தபின், உலகவர் தமக்கு அஃது இன்மையை நினைந்து ஏக்கற்றனர் என்க. உயர்ந்தோர்க்குச் செய்யத்தக்கனை, இழிந்தோர்க்குச் செய்யின், அதனை, 'நாய் மேல் தவிசிட்டவாறு' என்றல் மரபு. தவிசு - இருக்கை. இஃது, யானையேறுவார் அதன்மேல் இடுவது. "நாய்மேல் தவிசிட்ட வாறு" எனப் பழமொழி நானூற்றிலும், "அடுகளிற் றெருத் தின் இட்ட - வண்ணப்பூந் தவிசுதன்னை ஞமலிமேல் இட்ட தொக்கும்" (202) எனச் சீவகசிந்தாமணியிலும் சொல்லப்பட் டமை காண்க. வ்வாறாகவே, "இட்டு" என்றது, 'இட்டது போலும் செய்கையைச் செய்து' என்றவாறு. அச்செயலாவது, ஒருமொழியாகிய ஐந்தெழுத்தின் உண்மையை அறிவுறுத்திய தாம். "பின்னும்" என்றதனை இதன்பின் கூட்டுக. "நாயி னேற்கே" என்றது, 'எனக்கே' என்னும் அளவாய் நின்றது. காட்டாதன, உணர்த்தியவாறே உணரும் உணர்வு மதுகை இல்லாதார்க்கு உணர்த்தலாகாதன. அவை, பொருட் பெற்றி கள்; இவற்றை, 'தத்துவம்' என்ப கேளாதன, உணர்த்தியவாறே ஒழுகும் ஆர்வம் இல்லாதவரால் கேட்கலாகாதன ; இதற்கும், 'சொல்லலாகாதன' என்பதே கருத்து. அவை, சாதனங்களும்,

33 விச்சைதான் இதுவொப்ப துண்டோ கேட்கின்,
மிகுகாதல் அடியார்தம் அடிய னாக்கி
அச்சந்தீர்த் தாட்கொண்டான் ; அமுதம் ஊறி
அகம்நெகவே புகுந்தாண்டான் அன்பு கூர ;
அச்சன்ஆண் பெண்ணலிஆ காச மாகி
ஆரழலாய் அந்தமாய் அப்பால் நின்ற
செச்சைமா மலர்புரையும் மேனி எங்கள்
சிவபெருமான் எம்பெருமான் தேவர் கோவே. (29)

34 தேவர்கோ அறியாத தேவ தேவன்,
செழும்பொழில்கள் பயந்துகாத் தழிக்கும் மற்றை
மூவர்கோ னாய்நின்ற முதல்வன், மூர்த்தி,
மூதாதை, மாதாளும் பாகத் தெந்தை,

அவற்றாற் சாதிக்கும் முறைகளுமாம். "மீட்டேயும்" என்றதில் உள்ள தேற்றேகாரத்தைப் பிரித்து, "பிறவாமல்" என்றதனோடு கூட்டுக. "விச்சைதான்" என்ற எழுவாய்க்குப் பயனிலையாகிய, 'இது' என்பது எஞ்சி நின்றது. 'இவையும் உயர்ந்தோர்க்கே செய்யற்பாலன; இவற்றையும் எனக்குச் செய்தான்' என்பது கருத்து.

33. பொருள்கோள் : 'அச்சன்......தேவர்கோ, (என்னை) ஆக்கி ஆட்கொண்டான்; அன்புகூர, அமுதம் ஊறி, அகம் நெகப் புகுந்து ஆண்டான்; கேட்கின், இது ஒப்பது விச்சை உண்டோ'.

கேட்டல் - ஆராய்தல். "கேட்பான்புகில் அளவில்லை', என்புழியும் (திருமுறை - 3-54-4.) கேட்டல் என்பது, இப் பொருட்டாதல் அறிக. அச்சம், பிறவி பற்றியது. "அமுதம்" என்றது, இன்பத்தை. அன்பினாலும், இன்பத்தாலும் மனம் நெகிழப்பெறும் என்க. "நெகவே" என்னும் ஏகாரம், தேற்றம். புகுந்தது, அகத்து என்க. "ஆண்டான்" என்றது, 'அருளினான்' என்னும் பொருட்டு. அச்சன் - தந்தை பூதங்களுள் இரண்டைக் கூறவே, ஏனையவும் கொள்ளப்படும். அந்தத்தில் உள்ள நாத தத்துவத்தை, "அந்தம்" என்றார்; ஆகுபெயர். செச்சை - வெட்சி.

34. தேவர் கோ, இந்திரன். பொழில்கள் - உலகங்கள். பயந்து - பெற்று; படைத்து. மற்றை - தன்னின் வேறாகிய,

யாவர்கோன் என்னையும்வந் தாண்டு கொண்டான் ;
யாமார்க்குங் குடியல்லோம் ; யாதும் அஞ்சோம் ;
மேவினோம் அவனடியார் அடியா ரோடும் ;
மேன்மேலுங் குடைந்தாடி யாடு வோமே. (30)

4. அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

35 ஆடு கின்றிலை கூத்துடை யான்கழற்
கன்பிலை ; என்புருகிப்
பாடு கின்றிலை ; பதைப்பதும் செய்கிலை ;
பணிகிலை ; பாதமலர்
சூடு கின்றிலை ; சூட்டுகின் றதுமிலை ;
துணையிலி பிணநெஞ்சே !
தேடு கின்றிலை தெருவுதோ றலறிலை ;
செய்வ தொன்றறியேனே. (31)

மூவர் : அயன், அரி, அரன். 'இவர்கள் குணமூர்த்திகளாதலின், நிர்க்குணனாகிய பரமசிவனின் வேறே' எனவும், 'அன்னராயினும், அவனது அதிகார சத்தியைப் பெறுதற்கு உரிமையுடையராயினமையின், ஏனைத் தேவரின் மேம்பட்டவர்' எனவும் உணர்த்தற்கு, "மற்றை" என்றார். இதனானே, மூவருள் ஒருவனாகிய உருத்திரன் பரமசிவனின் வேறென்பதும், பரமசிவனாகிய சிவபெருமான் இம்மூவரின் வேறாய நான்காவது பொருள் என்பதும் தெற்றென விளங்கும். **प्रपञ्चोपशमं शान्तं शिवमद्वैतं चतुर्थं मन्यन्ते ।** (மாண்டுக்யம் 1 - 7) என்ற உபநிடத வாக்கியத்தையும் நோக்குக. மூர்த்தி - மூவர் முதலிய பலரையும் தனது வடிவாக உடையவன். வாயிலை (அதிட்டானத்தை) வடிவு என்று பாற்படுத்துக் கூறுதல் மரபு. மூதாதை - பாட்டன் ; என்றது, இம்மூவர்க்கும் மேற்பட்ட வித்தியேசுரர் முதலியோர்க்கும் முன்னோனாதல்பற்றி. மாது ஆளும் பாகத்து - உமையம்மையால் ஆளப்படும் கூற்றினையுடைய. 'யாவர்க்கும்' என்னும் குவ்வுருபும் உம்மையும் தொகுத்தலாயின. குடி - அடிமை. குடைந்து ஆடி - அவ்வின்பத்தில் மூழ்கி விளையாடி. ஆடுவோம் - களித்தாடுவோம். "நாமார்க்குங் குடியல்லோம்" என்னும் திருத்தாண்டகத்தை (98-1.) இதனுடன் ஒருங்குவைத்துக் காண்க.

35. இதனுள், அடிகள் தம் தாழ்நிலையையே தம்நெஞ்சின் மேலும், தம்மேலும் வைத்துக் கூறியருளும் முகத்தால், அந் நிலையை நீக்கிக்கொள்ள முயலுதல்பற்றி, '**ஆத்தும சுத்தி**' என இதற்குக் குறிப்புரைத்தனர் போலும் முன்னோர்.

'பிண நெஞ்சே, உடையான் கழற்கு அன்பிலை' என்றெடுத்துக்கொண்டு, 'அதனால் துணையிலி ஆகின்றாய்' செய்வது ஒன்று அறியேன்' என முடிக்க. உடையான் - நம்மை ஆளாக உடையவன்; 'அந்தணனாய் வந்து அறைகூவி ஆட்கொண்டருளியவன்' என்றபடி. இவ்வாறன்றி, 'கூத்து உடையான்' என்றியைத்துரைத்தல் ஈண்டுச் சிறவாமை அறிக. "கூத்து" என்ற விதப்பு, 'அஃது அன்பராயினார்க்கன்றிச் செய்யவாராது' என அதனது பெருமையுணர்த்தியவாறு. பதைத்தல், செய்வதறியாமையான் வருவது. "பாதமலர்" என்றது, முன்னும் சென்று இயையும். 'அவனது பாதமலர்' எனவும், 'அவனைத் தேடுகின்றிலை' எனவும் உரைக்க. "மலர் சூடுகின்றிலை" என்றதனால், 'சென்னிமேற் கொள்கின்றிலை' என்பது பொருளாயிற்று. சூட்டுதலுக்கு, 'மலர்' என்னும் செயப்படுபொருள் வருவித்து, 'அவற்றின்கண் சூட்டுகின்றதும் இலை' என்க. உம்மை, எச்சம். "பிண நெஞ்சு", உவமத் தொகை. உவமை, அறிவின்மை பற்றிக் கூறப்பட்டது. அவன் வந்து ஆட்கொள்வதற்கு முன்னர், அறியாமையால் அவனை நினையாதிருந்த குற்றம் பொறுக்கப்பட்டது; ஆட் கொண்ட பின்னரும் அவ்வாறிருப்பின் பொறுக்கப்படுமாறில்லை என்பார், "செய்வதொன்றறியேன்" என்று அருளினார்.

> "தன்னை அறிவித்துத் தான்தானச் செய்தானைப்
> பின்னை மறத்தல் பிழை"

(சிவஞானபோதம். சூ. 12.)

என்றது காண்க,

> "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
> செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

(குறள்-110.) என்றது பற்றி எழுந்தவாறுமாம். "இலை" நின்ற ஐகாரம், முன்னிலை ஒருமை விகுதி; சாரியையன்று.

36 அறிவி லாதஎ னைப்புகுந் தாண்டுகொண்
டறிவதை யருளிமேல்
நெறியெ லாம்புல மாக்கிய எந்தையைப்
பந்தனை யறுப்பானைப்
பிறிவிலாதஇன் னருள்கள்பெற் றிருந்துமா
றுடுதி பிணநெஞ்சே
கிறியெ லாம்மிகக் கீழ்ப்படுத் தாய்;கெடுத்
தாய்என்னைக் கெடுமாறே. (32)

---

36. அறிவு - மெய்யறிவு; என்றது, உள்ளவாறு உணரும் தன்மையை. "அறிவதை" என்றதில் அது, பகுதிப் பொருள் விகுதி. மேல் - பின். நெறி - அறியும் முறைமை. புலமாக்குதல் - அறிவித்தல். பந்தனை அறுத்தல் - பாசத்தைப் பற்றறத் துடைத்தல். இது, பின்னர் நிகழ்தற்பாலதாதலின், எதிர்காலத்தாற் கூறினர். 'அறுப்பானைப் பிறிவிலாத' என இயையும். பிறிவிலாத அருள் - பிரிவில்லாமைக்கு ஏதுவாய அருள். தன்னை வேண்டாது, உலகின்பத்தை வேண்டுவார்க்கு அப்பயனையும் இறைவன் அருளுதலின், அது, பிரிவுடைய அருளாம். அவ்வாறன்றித் தன்னையே தருவது, பிரிவிலாத அருள் என்க. இதனை, "இன்னருள்" என்றார், ஏனையது இன்னாமையையும் விளைத்தல் பற்றி. இவ்வருள்தான், அருளும் முறைமையாற் பலவாதல் பற்றி, "அருள்கள்" எனப் பன்மையாற் கூறினர். அவற்றையே, "பலவிதம் ஆசான் பாச மோசனந்தான் பண்ணும் படி" (சிவஞானசித்தி - சூ. 8. 3.) என ஓராற்றான் உணரக் கூறுப. 'உரையாடுதல், சொல்லாடுதல்' என்பனபோல, 'மாறுடுதல்' என்பது ஒரு சொல்; 'பிணங்குதல்' என்பது பொருள். அஃதாவது, 'பிரிவிலாது நிற்க விரும்புகின்ற என்னோடு ஒருப்பட்டு நில்லாது, மாறு கொண்டு நிற்கின்றாய்' என்றபடி. இந்நிலை, மலவாதனையால் வருவது. இதனானே, இறைவனை அடைந்து இன்பத்துள் நீங்காது நிற்க விரும்புதலே உயிர்க்கு இயல்பென்பதும், அவ் விருப்பத்திற்கு மாறாய் அவனை அடையவொட்டாது தடுத்து அதனைத் துன்பத்துள் வீழ்த்துவது மலம் என்பதும் பெறப்படு மாறறிக. கிறி - பொய்; என்றது, திரிபுணர்வை. அதுதான், உணரப்படும் பொருளாற் பலவாமாகலின், "எல்லாம்" என்றார். மிக - மேம்பட்டுத் தோன்ற; கீழ்ப்படுத்தாய் -

37 மாறி நின்றெனைக் கெடக்கிடந் தனையைஎம்
மதியிலி மடநெஞ்சே
தேறு கின்றிலம் இனியுனைச் சிக்கெனச்
சிவனவன் திரள்தோள்மேல்
நீறு நின்றது கண்டனை யாயினும்
நெக்கிலை ; இக்காயம்
கீறு கின்றிலை ; கெடுவ துன் பரிசிது
கேட்கவுங் கில்லேனே. (33)

அவற்றின்கீழ்க் கிடக்கச் செய்தாய். 'கெடுமாற்றானே கெடுத்தாய்' என்க. கெடுமாற்றானே கெடுத்தலாவது, கெடும் வழி அறிந்து அவ்வழியிலே செலுத்திக் கெடுத்தல்; நெஞ்சினை அறிவுடையதுபோலக் கூறிய பான்மைக் கூற்று. 'உனது மாறுபாட்டத்தால், என்னைக் கீழ்ப்படுத்தாய்; கெடுத்தாய்' என்க. 'அருளிமேல்' என மூவசைச் சீராதலே பாடம் போலும்.

37. 'கெடுப்ப' என்பது, 'கெட' எனத் தொகுத்தலாயிற்று. 'கிடந்த' என்பதன் ஈற்று அகரமும் அன்னது. அனையை - அத்தன்மையை உடையை, 'அனையையாகிய நெஞ்சே' என்க. 'மடநெஞ்சு' என்பது, வாளா பெயராய் நின்றது. "எம்" என்ற பன்மை, 'எனக்கேயன்றி என் குடியிலுள்ளார்க்கும் நலஞ்செய்ய அமைந்த நெஞ்சே' எனப் புகழ்தல் வாய்பாட்டால் இகழ்ந்தவாறு. "தேறுகின்றிலம்" என்றதும், தம் தமரையும் உளப்படுத்து. தேறுதல் - தெளிதல். சிக்கென - உறுதியாக. 'சிக்கெனத் தேறுகின்றிலம்' என இயையும். "இனித் தேறுகின்றிலம்" என்றது முன்னர்ப் பலகாலும் தேறிக் கெட்டமை பற்றி. 'கண்டனை ; ஆயினும் நெக்கிலை' என இருதொடராக்கி யுரைக்க. சிவபிரான் திருமேனியில் உள்ள திருநீறு, தேவர் முதல் யாவரும், எப்பொருளும் நிலையாது ஒழிதலையும், அனைவரையும், அனைத்தையும் அவனே தாங்குபவனாதலையும் விளக்கி நிற்கும், 'ஆதலின் அதனை உணர்ந்தும் அவனிடத்து அன்பு செய்கின்றாயில்லை' என்றவாறு. தாங்குதலை இனிது விளக்குதல் தோன்றத் தோள்மேல் உள்ளதை அருளினார். காயம் - உடம்பு. அதனைச் சிதைத்தல் பிரிவாற்றாமையாலாம். கெடுதற்கு ஏதுவாவதனை.

38 கிற்ற வாமன மேகெடு வாய்உடை
யான்அடி நாயேனை
விற்றெ லாம்மிக ஆள்வதற் குரியவன்
விரைமலர்த் திருப்பாத
முற்றி லாஇளந் தளிர்பிரிந் திருந்துநீ
உண்டன எல்லாம்முன்
அற்ற வாறும்நின் னறிவும்நின் பெருமையும்
அளவறுக் கில்லேனே. (34)

39 அளவ றுப்பதற் கரியவன் இமையவர்க்
கடியவர்க் கெளியான்நம்
களவ றுத்துநின் றுண்டமை கருத்தினுட்
கசிந்துணர்ந் திருந்தேயும்

"கெடுவது" என்றார். இது - இத்தன்மையை. கேட்கவும் இல்லேன் - ஏற்றுக்கொள்ளாமையன்றி, இவ்வாறுனது என்று சொல்லுதலைச் செவியால் கேட்டுணரவும் பொறேன்.

38. 'உடையானும், உரியவனும் ஆகியவனது திருப் பாதத் தளிர்' என்க. எல்லாம் - எல்லாவற்றுனும். "பிரிந் திருந்தும் நீ உண்டன" என்றதனுல், பிரிவுபற்றி வருந்தாதிருத் தலும், "அற்றன" என்றதனுல், அவை அறுது நிற்கும் எனக் கருதி அவற்றை அவாவினமையும் குறிக்கப்பட்டன. நிலையாத வற்றை நிலையுடையன எனக்கருதிய அறியாமையை, "அறிவு" என்றும், அவற்றைப் பெற்ற அளவானே மகிழ்ந்து செருக்கும் சிறுமையை, "பெருமை" என்றும் அருளினர். இகழ்ச்சி தோன்றுதற் பொருட்டு, அறியாமை, சிறுமை என்பவற்றை உண்டவற்றேடு ஒருங்கெண்ணி, 'அளவுபடா' என்றார், இவை அவ்வுண்டவைபற்றியே அறியப்படுதலின். கிற்றவா - நீ வல்லவாறு; 'இது' எனச் சொல்லெச்சம் வருவிக்க. கெடு வாய் - இச்செய்கையால் நீ கெட்டொழிதல் திண்ணம். "கிற்றவா, கெடுவாய்" என்றவற்றை இறுதியில் வைத்து முடிக்க.

39. 'இமையவர்க்கு அளவறுப்பதற்கு அரியவன்' என்க. இமையவர்க்கு அருமைகூறவே, ஏனையோர்க்கு அருமைகூற

உளக றுத்துனை நினைந்துளம் பெருங்களன்
　　செய்தது மிலைநெஞ்சே
பளக றுத்துடை யான்கழல் பணிந்திலை
　　பரகதி புகுவானே. (35)

40 புகுவ தாவதும் போதர வில்லதும்
　　பொன்னகர் புகப்போதற்
குகுவ தாவதும் எந்தையெம் பிரான்என்னை
　　ஆண்டவன் கழற்கன்பு
நெகுவ தாவதும் நித்தலும் அமுதொடு
　　தேனொடு பால்கட்டி
மிகுவ தாவதும் இன்றெனின் மற்றிதற்
　　கென்செய்கேன் வினையேனே. (36)

வேண்டாவாயிற்று. களவு - யான் எனது என்பது. இறைவன் செய்ததை, 'யான் செய்தேன்' என்றும், இறைவனுடையதை 'எனது' என்றும் கருதுதலின், களவாயிற்று. 'கருத்தினுள் உணர்ந்து' என இயையும். 'இருந்து' என்பது துணைவினை. 'உலகு' என்பது, எதுகை நோக்கி, 'உளகு' எனத் திரிந்தது. பளகு - குற்றம். இறைவன் உன்னை ஆட்கொண்ட கருணையை நீ உணர்ந்திருந்தாயாயினும், உன்னை அவன் நினைந்து, இவ்வுலகத்தொடர்பை அறுத்து, உன் உள்ளத்தைத் தான் உறையும் பெரிய இடமாகச் செய்தமை காணப்படவில்லை, அஃது ஏன்? நீ அவ்வுணர்ச்சி யளவில் நில்லாது, பரகதியிற் புக விரும்பி உன் குற்றங்களைக் களைந்து அவனது திருவடிகளை வணங்கும் செயலில் நின்றிலை' என்றவாறு. இதனால், மெய்யுணர்ந்த பின்னர், அதன்கண் உறைத்து நிற்க வேண்டுதல் பெறப் பட்டது. இறைவனால் மீள நினைக்கப்படுதல் முதலிய தம், செயல்களை நெஞ்சினுடையனபோல் அருளிச்செய்தார். இதனுள், இறுதியிரண்டடிக்கும் பிறவாறு உரைப்பாரும் உளர்.

40. புகுவது முதலிய நான்கும் அவ்வத்தொழில்மேல் நின்றன. சிவலோகத்தைக் குறித்த, 'பொன்னகர்' என்பதனை முதலிற் கூட்டுக. 'ஆவது' என்பன பல்வற்றிற்கும், 'உண்டாதல்' எனப் பொருளுரைக்கப்படும். போதரவு - மீண்டு வருதல். 'இல்லது, இன்று' என்பன அப்பண்பின்மேல்

41 வினைஎன் போல்உடை யார்பிறர்
ஆர்?உடை யான்அடி நாயேனைத்
தினையின் பாகமும் பிரிவது திருக்குறிப்
பன்றுமற் றதனாலே
முனைவன் பாதநன் மலர்பிரிந் திருந்துநான்
முட்டிலேன்; தலைகீறேன்;
இனையன் பாவனை இரும்பு;கல் மனம்;செவி
இன்னதென் றறியேனே. (37)

நின்றன. தாம் விரும்புவன பலவற்றையும் நினைந்து இரங்கு கின்றாராகலின், புகுந்தபின் நிகழற்பாலதாகிய போதரவு இன்மையையும் அருளிச்செய்தார். உகுவது - நீங்குவது; இதற்கு, 'உடம்பு' என்னும் வினைமுதல் வருவிக்க. நெகுவது - ஊறுவது. ஒடு, எண்ணிடைச்சொல். தேன் முதலிய மூன்றும் ஆகுபெயராய், அவைபோலும் இன்பத்தைக் குறித்தன. மற்று, வினைமாற்று.

41. 'உடையானுக்கு' என்னும் நான்கனுருபு தொகுத்தலாயிற்று. "தினையின் பாகம்" என்றது, 'மிகச் சிறிது' என்னும் பொருட்டாய், அவ்வளவிற்றாகிய காலத்தை உணர்த்திற்று. மற்று அசைநிலை. 'நான் பிரிந்து' என மாற்றி, 'நானே' எனப் பிரிநிலை ஏகாரம் விரித்துரைக்க. "அதனால்" என்றது, இக்கூற்றிற்கே ஏது உணர்த்திநின்றது. 'இருந்து' என்றே ஓழியாது, 'இருந்தும்' என உம்மை விரித்து ஓதுதல் பாடமாகாமை அறிந்துகொள்க. "தலை" என்றது, முன்னரும் சென்று இயையும். முட்டுதல், கல்முதலியவற்றினும், கீறுதல், கருவியாலும் என்க. "இருந்து முட்டிலேன் கீறேன்" என்றாராயினும், 'முட்டாமலும், கீறாமலும் இருக்கின்றேன்' என்றலே கருத்தென்க. "கீறிலேன்" என்றதன்பின்னும் 'ஆகலான்' என்னும் சொல்லெச்சம் வருவிக்க. இனையன் - இத்தன்மை யுடையேனது. 'வேடம்' எனப் பொருள்தரும் 'பாவனை' என்பது, இங்கு, உடம்பைக் குறித்தது. "இரும்பு, கல், இன்னது" என்றன, 'அவற்றான் இயன்றது' எனப் பொருள் தந்து நின்றன.

42 ஏனை யாவரும் எய்திட லுற்றுமற்
றின்னதென் றறியாத
தேனை, ஆன்நெயைக், கரும்பின்இன் தேறலைச்,
சிவனை,என் சிவலோகக்
கோனை மான்அன நோக்கிதன் கூறனைக்
குறுகிலேன் நெடுங்காலம்;
ஊனை யான்இருந் தோம்புகின் றேன்;கெடு
வேன்உயிர் ஓயாதே. (38)

43 ஓய்வி லாதன உவமனில் இறந்தன
ஒண்மலர்த் தாள்தந்து
நாயி லாகிய குலத்தினுங் கடைப்படும்
என்னை நன் னெறிகாட்டித்
தாயி லாகிய இன்னருள் புரிந்தஎன்
தலைவனை நனிகாணேன்;
தீயில் வீழ்கிலேன், திண்வரை உருள்கிலேன்,
செழுங்கடல் புகுவேனே. (39)

---

42. தேன் முதலிய மூன்றும் ஆகுபெயராய், 'அவை போல்பவன்' எனப் பொருள் தந்து, "அறியாத" என்னும் பெயரெச்சத்திற்கு முடிபாயின. "சிவன்" என்றது, இறைவனைச் சிறப்பு வகையாற் குறித்தவாறு. இதனை, "கூறனை" என்றதன் பின்னர் வைத்து, 'சிவனை, ஏனை யாவரும் எய்திடலுற்றும், யான் நெடுங்காலம் குறுகிலேன்; உயிர் ஓயாதே இருந்து ஊனை ஓம்புகின்றேன்; கெடுவேன்' எனக் கூட்டி யுரைக்க. ஏனை யாவரும் - என்னை யொழித்து ஒழிந்த அடியவர் எல்லாரும். "நெடுங்காலம்" என்றதன்பின், 'செல்ல' என்னும் பொருட்டாகிய, 'ஆக' என்பதும், அதன்பின் உம்மையும் விரிக்க. 'கெடுவேன்' என்றதன் பின்னும் இரக்கப் பொருட்டாகிய ஓகாரம் விரித்து, 'இங்ஙிலையிற்றானே இருந்து, அழிந்தொழி வேன் போலும்' என உரைக்க.

43. ஓய்வு - மெலிதல்; 'உயிர்களைத் தாங்குதலில் தளர்ச்சி யில்லாத' என்றபடி. 'உவமம்' என்பது, "உவமன்" என ஈறு திரிந்தது. "உயர்ந்ததன் மேற்றே உள்ளுங்காலை" (தொல், பொருள் - 274.) என்றாங்கு, 'எவ்விடத்தும், பொருளின்

44 வேனில் வேள்கணை கிழித்திட மதிசுடும்
அதுதனை நினையாதே
மான்நி லாவிய நோக்கியர் படிறிடை
மத்திடு தயிராகித்
தேன்நி லாவிய திருவருள் புரிந்தஎன்
சிவன்நகர்புகப் போகேன் ;
ஊனில் ஆவியை ஓம்புதற் பொருட்டினும்
உண்டுடுத் திருந்தேனே. (40)

உவமம் சிறந்து காட்டுதல் மரபாய் இருக்க, இவை அவ்வா றன்றி, உவமம் யாதாயினும், அதனினும் சிறந்து நிற்பன' என வியந்தருளிச் செய்தவாறு. உவமம், தாமரைமலர், பொன், தளிர் முதலியன. 'இலாதனவும், இறந்தனவும் ஆகிய தாள்' என்க. 'நாய்' என்பது, அதன் பண்பின்மேலும், 'குலம்' என்றது, அதனிற் பிறந்த உயிரின்மேலும் நின்றன. 'நாய் என்னும் அத்தன்மையிற் பொருந்திய குலத்திற்பிறந்த அவ் வுயிரினும் கடைப்பட்ட' என்றபடி. "என்னை" என்றதை, 'எனக்கு' எனத் திரிக்க. தாயில் ஆகிய இன்னருள் புரிந்த - தாயினது அன்புபோலச் சுரந்த இனிய திருவருளை விரும்பிச் செய்த. 'நனி' என்னும் உரிச்சொல், 'காணேன்' என்பதன் முதனிலையைச் சிறப்பித்தது; 'இடையறுது கண்டிருக்கும் பேற் றைப் பெற்றிலேன்' என்றபடி. இதன்பின், 'அதன்பொருட்டு' என்பது வருவிக்க. "புகுவேனே" என்றதில் உள்ள ஏகாரம் எதிர்மறையாகலின், 'தீயில் விழமாட்டாதவனும், திண்வரையி னின்றும் உருளமாட்டாதவனும் ஆகிய யான், செழுமையான கடலிலே புகுவேனோ ; மாட்டேன்' என உரைக்க.

44. வேனில்வேள் - மன்மதன். மதி - சந்திரன். படிறு - வஞ்சனை, என்றது அன்னதாகிய பார்வையை என்பது, 'நோக்கியர்' என்றதனால் பெறப்பட்டது. "படிறிடை" என்றதன்பின், 'பட்டு' என ஒருசொல் வருவித்து, அதனையே "நினையாது" என்ற எச்சத்திற்கு முடிபாக்குக. 'மகளிரது கடைக்கண் நோக்கில் அகப்படின், வேள்கணை கிழிக்கவும், மதிசுடவும் துயருறும் நிலை உண்டாம் என்பதனை நோக்காது அகப்பட்டேன்' என்றதாம். 'மத்திடு தயிராகியதனால்' போகேனாய் இன்னும் இருந்தேன்' என்க. மேல் (பாட்டு-41)

"உடையான் அடிநாயேனைத் தினையின் பாகமும் பிரிவது திருக்குறிப்பன்று" என்றதனால், இறைவன் அடிகளை "கோலமார்தரு பொதுவினில் வருக" என ஈங்கே நிறுத்தி, ஏனையடியார்களை மட்டில் அழைத்துச் சென்றதற்குக் காரணம், தமது கருத்துவகையேயன்றி, இறைவனது திருவுளப் பாங்கு அன்று என்பதை அருளிச்செய்தார். இதனுள் அக் கருத்து இன்னதென்பதை எடுத்தோதியருளினர். "மான் நிலாவிய நோக்கியர்" எனப் பொதுமையிற் கூறினாரேனும், அஃது அடிகள்மாட்டுப் பேரன்புடையராய் அவரையின்றி யமையாராகிய ஒருவரையே குறிக்கும். அவரை அடிகள்தம் மனைவியார் என்றலே பொருந்துவதன்றிப் பிறவாறு கோடல் பொருந்தாது. அவரும் இறைவன் அடிகளை ஆட்கொள்வதற்கு அண்மைக் காலத்தே மணந்தவராதல் வேண்டும். அடிகளை அவர் இன்றியமையாதிருந்தமையையும், அந்நிலையை அடிகள் நினைந்து அவர் அறியாதே இறைவனோடு செல்லமாட்டா ராயினமையையும் வருத்த மிகுதியால் காமம் காரணமாக அமைந்தனபோலத் தாம் அருளிச்செய்தாராயினும், அன்பினால் அமைந்தன என்றே கொள்ளப்படும். படவே, அடிகள் பாண்டியனை விட்டு நீங்கியபின்னும் இறைவன் 'தில்லையில் வருக' என்று பணித்த பின்னும் சிறிது காலம் அவ்வம்மையா ரோடு திருவாதவூரில் இருந்து, பின்னர் இறைவன் திருவருட் பேற்றின் பெருமையை அவர்க்கும் அறிவுறுத்தித் தில்லைக் குப் புறப்பட்டார் என்பதும் அவ்வம்மையாரும் வருத்தமின்றி, அடிகளையும் இறைவனையும் வழிபட்டிருந்து இறைவன் திருவடியை அடைந்தார் என்பதும் உய்த்துணர்ந்து கொள்ளற் பாலன.

அடிகள் தாம் இறைவனோடு செல்லாது நின்ற காரணத்தை, இனிவரும், "முடித்தவாறும்" என்ற திருப்பாடலிலும் அருளு வர். சுந்தரர் இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட பின்னரும் மனைவியார் இருவருடன் வாழ்ந்திருந்தமை நன்கறியப்பட்ட தாகலின், அன்னதொரு நிலை அடிகட்கும் இருந்ததெனக் கொள்ளுதல் எவ்வாற்றானும் தவறுடைத்தாகாமையேயன்றி, இன்னோரன்ன அருட்டிருமொழிகளை, மனம் உலகப் பற்றினா லும், பிறவாற்றாலும் சிறிதும் துயருறாதிருக்கவும், உற்றது போல, 'மாதர் வலையில் அகப்பட்டு வருந்துகின்றேன் ;

5. கலிவிருத்தம்

45 இருகை யானையை ஒத்திருந் தென்னுளக்
கருவை யான்கண் டிலேன் ;கண்ட தெவ்வமே ;
வருக வென்று பணித்தனை ; வானுளோர்க்
கொருவ னேகிற்றி லேன் ;கிற்பன் உண்ணவே. (41)

ஆக்கைக்கு இரைதேடி அலைவதிலே காலம் கழிக்கின்றேன்' என்றெல்லாம் பாடுவார் சிலரது பாடல்களோடு ஒப்பவைத்துப் பொருள் செய்தல் குற்றமாதலும் அறிந்துகொள்க.

இங்ஙனம், சிறுபற்றுக் காரணமாக அடிகள் உலகில் நின்ற பின், மீள இறைவன் திருவடி கூடுங்காலம் சிறிது நீட்டித்தமையின், அந்நீட்டிப்பைப்பொறுமையால், அடிகள், தம்மைத் தாமே பலகாலும் நொந்து பல பாடல்களை அருளிச்செய்தார் ; அவ்வருளிச்செயல் உலகிற்குப் பேருபகாரமாய் முடிந்தது எனக் கொள்க.

45. இப்பகுதிக்கு, 'கைம்மாறு கொடுத்தல்' எனக் குறிப்புரைத்தனர் முன்னோர். 'கொடுத்தல்' என்பது 'கொடுத்தல் பற்றியது' என்னும் பொருட்டாய், கொடுத்தல் இயலாமையையே குறிக்கும். இஃது இப்பகுதியின் ஒன்பதாந் திருப்பாட்டின் பொருள் பற்றி உரைக்கப்பட்டது.

பொருள்கோள்: 'வானுளோர்க்கு ஒருவனே, (நீ என்னை) வருக என்று பணித்தனை; (ஆயினும் யான்) அது செய்கிற்றிலேன் ;(மற்று) உண்ணவே கிற்பன் ; (அதனால்,) யான் இருகை யானையை ஒத்திருந்து, என் உள்ளக் கருவைக் கண்டிலேன் ; கண்டது எவ்வமே'.

இருகை யானை, இல்பொருள் உவமை. விலங்கொடு தமக்கு வேற்றுமை கையுடைமை என்பது கூறுவார், யானையாகிய விலங்கிற்குக் கையுண்மை கருதி, அதனின் வேறுபடுத்து, "இருகை யானையை ஒத்து" என்றார். கரு - உட்பொருள். உள்ளத்தின்கண் உள்ள உட்பொருளாவது, முதற்பொருள் ; சிவம். 'கருவை" என்றது, 'கருவாகிய நின்னை' என்னும் பொருட்டாகலின், முன்னிலைக்கண் படர்க்கை வந்த மயக்கமாம். கிற்றிலேன் - வல்லேனல்லேன். கிற்பன் - வல்லேன்.

46 உண்டொர் ஒண்பொரு ளென்றுணர் வார்க்கெலாம்
பெண்டிர் ஆண்அலி யென்றறி யொண்கிலை ;
தொண்ட னேற்குள்ள வாவந்து தோன்றிநாய் ;
கண்டுங் கண்டிலேன் என்னகண் மாயமே. (42)

47 மேலை வானவ ரும்மறி யாததோர்
கோல மேயெனை ஆட்கொண்ட கூத்தனே !
ஞால மேவிசும் பேஇவை வந்துபோம்
கால மேஉனை யென்றுகொல் காண்பதே. (43)

---

46. ஒண்பொருள் - சிறந்த பொருள் ; பரம்பொருள். உண்டு என்று உணர்வார் - உண்மை மாத்திரையின் உணர்வார். அவர், சிந்தனையறிவின்றிக் கேட்டலறிவு ஒன்றே யுடையார் என்க. அவர்க்கு அப்பொருளின் இயல்பு அறிய வாராமையை, "பெண்டிர் ஆண் அலி என்று அறிய ஒண்கிலை" என்றார். எனவே, 'பெண்டிர் ஆண் அலி' என்றது, 'இன்னது' என்னும் அளவாய் நின்றது. "உள்ளவா" என்றது, 'நின் இயல்பு முழுதும் இனிது விளங்கும் வகையில்' என்றபடி. கண்டும் - தோன்றியபொழுது அனுபவமாகக் கண்டும். கண்டிலேன் - பின்னர்க் காணவில்லை. 'அவ் வனுபவம் நீங்காது நிற்கப் பெறுகிலேன்' என்றபடி. கண் மாயம் - கட்பொறி பற்றிய மாயம். அது நன்கு காணப்பட்ட பொருள் ஓர் இமைப்பொழுதில் விரைய மறைதல். கோடி தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிதாதல்போல, (குறள் 377.) அனுபவத்தைத் தலைப்பட்டும், நிலைக்கப்பெற்றிலேன் ; இஃது ஓர் வினைப்பயன் இருந்தவாறு என்றதாம்.

47. "மேலை" என்றதில் ஐ சாரியை. மேலை வானவர் - மேலிடத்துள்ள தேவர். எனவே, "வானவர்" என்றது, வாளா பெயராய் நின்றதாம். கோலம் - வடிவம். அஃது ஆகுபெயராய், அதனை உடையவனைக் குறித்தது. வானவராலும் அறியப்படாமை கோலத்திற்கு அடையாதல் அறிக. "கூத்தன்" என்றது, தான் செய்யும் செயலால் தொடக்குண்ணுதவன் என்பது குறித்து நின்றது. மண், விண் முதலிய எல்லாவற்றிலும் அவையேயாய்க் கலந்து நிற்றல்பற்றி இறைவனை அவையாகவே ஓதினார். அதனானே, பின்னர்

48 காண லாம்பர மே! கட் கிறந்ததோர்
வாளி லாம்பொருளே! இங்கொர் பார்ப்பெனப்
பாழ னேன்படிற் றாக்கையை விட்டுனைப்
பூணு மாறறி யேன்புலன் போற்றியே. (44)

அவைகளை 'இவை' எனச் சுட்டினர். பின்னர், 'காலமே' என்றதும் அது. ஏகாரத்தை எண்ணுப்பொருளதாக்குவாரும் உளர்; அவர், பின்னர், 'காலமே' என்றதற்கு வேறு கூற மாட்டாதவராவர். ''போம்'' என்ற பெயரெச்சம், ''காலம்'' என்ற ஏதுப்பெயர் கொண்டது. 'காலம்' என்பது காலப் பெயரன்றோ வெனின், அன்று; என்னையெனின், ''நிலனே காலம் கருவி'' (தொல். சொல்-113.) என்றவிடத்து, 'காலம்' என்றது, அவ்வவ் வினைநிகழ்ச்சிக்குரிய சிறப்புக் காலத்தையன்றி, எல்லாவற்றிற்கும் ஏதுவெனப்படும் பொதுக்காலத்தை அன்றாகலானும், ஈண்டுக் கருதியது பொதுக் காலத்தையன்றிச் சிறப்புக் காலத்தை அன்றாகலானும், இப்பொதுக்காலம், பிறபொருள்களோடு ஒப்பப் பொருள் எனப்படுமாகலானும் என்க.

48. காணலாம் பரமே - ஞானக்கண்ணாலன்றி ஊனக் கண்ணாலும் காணத்தக்க பரம்பொருளே; இஃது அடியவர்க்கு அனுபவமாதல் குறித்தபடி. கட்கு இறந்தது ஓர் வாள் நிலாம் பொருளே - கண்ணொளியைக் கடந்ததாகிய ஒரு பேரொளி நிலைபெற்றுள்ள பொருளே; இஃது இறைவனது திருமேனியின் சிறப்புக் கூறியவாறு. 'நிலாப் பொருள்' என்பது, பாடம் ஆகாமையறிக. பார்ப்பு - பறவைக்குஞ்சு. 'பாழ்நனேன்' என்பது, எதுகை நோக்கி, 'பாழனேன்' எனத் திரிந்துநின்றது. ''பாழ்த்த பிறப்பு'' (திருவாசகம் - 20) என்றாற்போல, 'பாழ்' என்பது வினைப் பகுதியாயும் நிற்றலின், நகர இடைநிலை பெற்றது. 'பாழாகின்ற யான்' என்பது பொருள். ''புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய'' (சிவபுராணம் அடி-55) என்றாராகலின் அவ்வஞ்சனைக்கு இடமாகிய உடம்பை, ''படிற்று ஆக்கை'' என்று அருளினர். பூணுதல் - பொருந்தக் கொள்ளுதல். போற்றி - பாதுகாத்து; என்றது, 'அவற்றை அடக்குதலின்றி நின்று' என்றபடி. 'பார்ப்பெனப் படிற்றாக்கையைவிட்டு உனைப் பூணுமாறு அறிகின்றிலேன்' என்க. 'குடம்பை தனித்தொழியப் புள் பறத்தல்

49 போற்றி யென்றும் புரண்டும் புகழ்ந்தும்நின்
றூற்ற மிக்கஅன் பாலழைக் கின்றிலேன் ;
ஏற்று வந்தெதிர் தாமரைத் தாளுறுங்
கூற்றம் அன்னதொர் கொள்கையென் கொள்கையே. (45)

50 கொள்ளுங் கொல்லெனை அன்பரிற் கூய்ப்பணி ;
கள்ளும் வண்டும் அறுமலர்க் கொன்றையான்
நள்ளுங் கீழுளும் மேலுளும் யாவுளும்
எள்ளும் எண்ணெயும் போல்நின்ற எந்தையே. (46)

போல, (குறள் - 334) உடம்பு தனித்துக்கிடப்ப யான் அதனினின்றும் புறப்பட்டு' என்பார், ''பார்ப்பென ஆக்கையை விட்டு'' என்றார்.

49. போற்றி என்றல் - வணக்கங் கூறுதல். புரளுதல், ஆற்றாமைபற்றி. நின்று - அன்பு நெறியிலே நின்று. ''ஆற்ற மிக்க'', ஒருபொருட் பன்மொழி. 'ஆற்றல் மிக்க'', என்பது பாடமாயின், உன்னை யடைவிக்கும் 'ஆற்றல் மிகுந்த' என உரைக்க. ''அழைக்கின்றிலேன்'' என்றதன்பின், 'அதனால்' என்பது வருவிக்க. ''ஏற்று வந்து எதிர்'' என்றதை, 'எதிரேற்று வந்து' என மாற்றிக்கொள்க. எதிரேற்றல் - பகையாய் ஏற்றுக்கொள்ளுதல். கூற்றம் - இயமன் ; என்றது அவனது செயலை. ''கொள்கை'' என்றதும், செயலையே. 'உன்னை அன்பால் அழைத்து அடைய.'பெறாது ஐம்புல இன்பங்களில் திளைத்திருக்கின்ற என்னை, நீ ஒறுத்துஉன்பால் அழைக்கவே உன்னை யான் பெறுவேன்போலும்' என்பார், இறைவனை அன்பால் வழிபட்டு அவன் திருவடியைப் பெறாது, பகையாய் வந்து அதனைப்பெற்ற கூற்றுவனது செயலை உவமை கூறினார். ''காலன் அறிந்தான் அறிதற்கரியான் கழலடியே'' (திருமுறை 4 - 1069) என்றார், ஆளுடைய அரசுகளும்.

50. 'கொள்ளுங்கில்' என்பது பிழைபட்ட பாடம். 'எனையும்' என்ற உம்மை தொகுத்தலாயிற்று. அன்பரின் - ஏனைய அடியார்களைப்போல. கூய் அழைத்து 'பணிகொள்ளுங் கொல்' என இயைக்க. நள் - நடு. 'நடு, கீழ், மேல்' என்பன, அவ்வவ்விடத்தை யுணர்த்தி நின்றன.

51 எந்தை ; யாய் ; எம்பி ரான் ; மற்றும் யாவர்க்கும்
தந்தை ; தாய் ; தம்பி ரான் ; தனக் கஃதிலான் ;
முந்தி என்னுள் புகுந்தனன் ; யாவருஞ்
சிந்தை யாலும் அறிவருஞ் செல்வனே. (47)

52 செல்வம் நல்குர வின்றிவிண் ணோர்புழுப்
புல்வ ரம்பின்றி யார்க்கும் அரும்பொருள் ;
எல்லை யில்கழல் கண்டும் பிரிந்தனன்;
கல்வ கைமனத் தேன்பட்ட கட்டமே. (48)

---

51. "எந்தை, யாய், எம்பிரான்" என்றது தமக்கும், "தந்தை, தாய், தம்பிரான்" என்றது பிறர்க்குமாம். 'யாய்' என்றது, எனக்குத்தாய் என்னும் பொருளதாதலை "யாயும் ஞாயும் யாரா கியரோ" (குறுந்தொகை - 40) என்றதனானும் அறிக. அஃது - அம்முறைமை. முந்தி - தானே முற்பட்டு. "முந்தி என்னுள் புகுந்தனன்" என்றதை இறுதிக்கண் வைத்துரைக்க. 'பிறர் முயன்றும் அடைதற்கரியவன், தானே வந்து என்னுள் புகுந்தனன்' என்றபடி. செல்வன் - எல்லாம் உடையவன்.

52. "செல்வம், நல்குரவு" என்றவை அவற்றை யுடைய வரைக் குறித்தன. "புழு, புல்" என்றவற்றை, 'தாழ்ந்த பிறவி' என ஒருபகுதியாகக் கொள்க. "வரம்பு" என்றது, 'பாகுபாடு' என்னும் பொருட்டாய் நின்றது. 'இறைவனை அறிதல் அறியாமைகட்கு, உலகமுறை பற்றிக் காணப்படும் இப்பாகுபாடுகள் காரணமன்று ; அருள்வழி நிற்றலும், நில்லாமைகளுமே காரணம்' என்பார், உலகியலை எடுத்தோதி, "யார்க்கும் அரும்பொருள்" என்று அருளினார். விண்ணோரது உயர்வைக் குறித்தற்குப் புழுப் புற்களை எடுத்தோதியதன்றிப் பிறிதின்மையின், 'யாவற்றுக்கும்' என்பது கூறாராயினர். அரும்பொருளாகிய இறைவனை, "அரும்பொருள்" என்றது பான்மை வழக்கு. கல்வகை மனம் - கல்லென்னும் வகை போலும் மனம். "வகை" என்றது, அதனையுடைய பொருள் மேல் நின்றது. "பட்ட கட்டம்" என்னும் எழுவாய்க்குரிய 'இது' என்னும் பயனிலை எஞ்சி நின்றது. 'இது' என்பது, 'இழிக்கத் தக்கது' என்னும் குறிப்பினது.

53 கட்ட றுத்தெனை யாண்டுகண் ணார நீ
றிட்ட அன்பரொ டியாவருங் காணவே
பட்டி மண்டபம் ஏற்றினை, ஏற்றினை
எட்டி னோடிரண் டும்அறி யேனையே. (49)

54 அறிவ னே ! அமு தே ! அடி நாயினேன்
அறிவ னாகக்கொண் டோஎனை ஆண்டது ?
அறிவி லாமையன் றேகண்ட தாண்டநாள்
அறிவ னோஅல்ல னோ அரு ளீசனே. (50)

---

53. கட்டு - பாசம். கண் ஆர நீறிடுதல் - காண்கின்ற கண்கள் மகிழ்வுறும்படி திருநீற்றை அணிதல். பட்டி மண்டபம் - கூட்ட மண்டபம்; என்றது, கேள்வி மண்டபத்தை. அஃதாவது, அறிவார் ஒருவர் உரைக்கும் அரும் பொருள்களைப் பலர் இருந்து கேட்கும் மண்டபம். இறைவன் திருப் பெருந்துறையில் ஆசிரியக் கோலத்துடன் குருந்த மரத் தடியில் அடியவர் பலருடன் வீற்றிருந்த நிலையையே அடிகள் இங்கு, "பட்டி மண்டபம்" என்றார் என்க. "எட்டி னோடு" என்றதில் ஓடு, எண்ணிடைச்சொல். எனவே, "எட்டினோடு இரண்டும்" என்றது, 'எட்டும் இரண்டும்' என்றவாறாயிற்று. இஃது உலகியலில், 'எட்டும் இரண்டும் கூட்டியுணரத் தெரியாதவன்' என்னும் பொருட்டாய், 'யாதும் அறியாதவன்' என்பதைக் குறிக்கும். கலைத்துறையில், 'அ உ அறியாதவன்' என்னும் பொருட்டாய், 'கல்லாதவன்' என்ப தைக் குறிக்கும். யோக நெறியில், அகார உகரங்களாகிய பிரணவத்தை உணராதவன் என்பதைக் குறிக்கும். உபதேச முறையில் எட்டும் இரண்டும் கூடிய பத்தென்னும் எண்ணினைக் குறிக்கும் யகரமாகிய எழுத்தின் பொருளை - ஆன்மா இயல்பை அறியாதவன் என்பதைக் குறிக்கும். இவற்றுள் அடிகள் அருளியது யோகநெறிப் பொருள்பற்றியேயாம், ஞானோப தேசத்திற்கு முற்பட்ட நிலை அதுவேயாகலின். 'தவமே புரிந்திலன்" என மேலும் (9) அருளிச்செய்தமை யறிக. "ஏற்றினை" என வந்த இரண்டனுள், பின்னையதன்பொருள், 'இட்பவாகனத்தையுடைய நீ' என்பது. 'அறியேனைப் பட்டி மண்டபம் ஏற்றினை ; இது நின் கருணை இருந்தவாறு' என்க.

54. பொருள்கோள் : 'அறிவனே, அமுதே. ஈசனே, நீ என்னை ஆண்ட நாளில், அடிநாயினேன் அறிவனாகக்

6. அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

55 ஈசனே! என் எம்மானே!
எந்தை பெருமான் என்பிறவி
நாசனே! நான் யாதுமொன்
றல்லாப் பொல்லா நாயான
நீசனேனை ஆண்டாய்க்கு
நினைக்க மாட்டேன் கண்டாயே
தேசனே! அம் பலவனே!
செய்வ தொன்றும் அறியேனே. (51)

கொண்டோ ஆண்டது! (என்பால் நீ) கண்டது அறிவிலாமை யன்றே! (அங்ஙனமாக, யான் என்றும்) அறிவனோ? அல்லனோ? அருள்'.

இதனுள், "அறிவு" என வந்தன பலவற்றிற்கும், 'பேரறிவு' என உரைக்க. இது, சொற்பொருட்பின் வருநிலை யணி. 'சிற்றறிவுடைமையே என் இயல்பாதல் அறிந்த நீ, என் பிழை கருதி என்னை விலக்கியது பொருந்துமோ', என முறை யிட்டவாறு. அருள் - சொல்லு.

55. இப் பகுதிக்கு முன்னோர் கூறிய குறிப்பு, 'அனுபோக சுத்தி' என்பது, 'தடையில்லாச்சிவானுபவம்' என்று இதற்குப் பொருள்கொள்ளலாம். அடிகள் இப் பகுதியில் அதனையே விரும்பிப் பாடுதல் காணலாம்.

"ஈசனே" என்றதன்பின் உள்ள, "என்" என்றதனை இறுதிக்கண் கூட்டி, வினவாக்கி, 'இதற்குக் காரணம் என்' என உரைத்து, 'என்மாட்டுள்ள மலமாசே காரணம்' என்பது கருத்தாக்குக. எந்தை பெருமான் - என் தந்தையாகிய பெருமானே. நாசன் - போக்குபவன். "யாதும் ஒன்று" என்றதனை, 'யாதொன்றும்' என மாற்றியுரைக்க. 'உலகில் உள்ள பொருள்களில் யாதொன்றும் ஆகாத நீசனேன்' என்க. யாதொன்றும் ஆகாமையாவது, எப்பொருளினும் யாதேனும் ஓர் குணம் உளதாகும்; என்னிடத்தில் குணம் யாதும் உண்டா யிற்றில்லை என்றபடி. இங்ஙனங் கூறியபின், "பொல்லா நாயான நீசனேன்" என்றது, இத்துணை இழிந்தவரை நாயோடு

56 செய்வ தறியாச் சிறுநாயேன்
　　செம்பொற் பாத மலர்காணாப்
பொய்யர் பெறும்பே றத்தனையும்
　　பெறுதற் குரியேன் பொய்யிலா
மெய்யர் வெறியார் மலர்ப்பாதம்
　　மேவக் கண்டுங் கேட்டிருந்தும்
பொய்ய னேன்நான் உண்டுடுத்திங்
　　கிருப்ப தானேன் போரேறே. (52)

ஒப்புமைப் படுத்தும் வழக்கு நோக்கி, 'அதுதானும் என் மாட்டு ஒவ்வாது' என்றற்கு. பொல்லா நாய் - நன்றி யறிவில்லாத நாய்; இஃது இல்பொருள் உவமை. நீசன் - இழிந்தவன். "ஆண்டாய்க்கு" என்றதன்பின், 'கைம்மாறாக' என்பது வருவிக்க. 'நினைக்கவும்' என்ற உம்மை தொகுத்தலாயிற்று. கண்டாயே - இதனை நீ கண்டாயன்றோ. செய்வது - இதை நீக்குதற்குச் செய்யும் வழி. அறியேன் - அறியாது திகைக்கின்றேன்.

56. "செய்வது" என்றது, அருள் பெற்றபின் செயற்பாலதனை. அது, அவ்வருட்கு முதல்வனாகிய இறைவனையன்றிப் பிறிதொன்றனை நாடாமையாம். 'அதனை அறிந்திலேன்' என்றது, பின்னும் இவ்வுலகத்தை நாடினமைபற்றி. அதனானே, "சிறுநாயேன்" என வருந்தி யுரைத்தார். சிறுமை, நாய்க்கு அடை. 'அருள் பெற்றபின் செயற்பாலதனைச் செய்யாதொழிந்தமையின், அருள் பெறாதவரது நிலையையே நான் எய்தற்குரியனாயினேன்' என்பார், 'பாதமலர் காணாப் பொய்யர் பெறும் பேறு அத்தனையும் பெறுதற்கு உரியேன்' என்றார். இதன் பின்னர், 'ஆதலின்' என்னும் சொல்லெச்சம் வருவித்து, அதனை, "இருப்பதானேன்" என்றதனோடு இயைத்து, 'இஃதொரு வினையிருந்தவாறு' எனக் குறிப்பெச்சம் வருவித்து முடிக்க. "செம்பொற் பாதமலர், மலர்ப்பாதம்" என்றவற்றிற்குமுன், 'நின்' என்பது எஞ்சிநின்றது. பொய்யர் பெறும் இழப்பினை, 'பேறு' என்றது இகழ்ச்சி பற்றி. வெறி - வாசனை. பொய், உலகியல். மெய் - வீட்டு நெறி. மெய்யர் பாதம் மேவலை அடிகள் கேட்டது, கண்ணப்பர் முதலியோரது வரலாற்றில் என்க. 'அக் கேள்வி யறிவேயும் அமையும், யான்

57 போரே றேநின் பொன்னகர்வாய்
நீபோந் தருளி யிருள் நீக்கி
வாரே றிளமென் முலையாளோ டுடன்வந்
தருள அருள்பெற்ற
சீரே றடியார் நின்பாதஞ்
சேரக் கண்டுங் கண்கெட்ட
ஊரே றாய்இங் குழல்வேனே
கொடியேன் உயிர்தான் உலவாதே. (53)

இவ்வுலகியலைத் துறத்தற்கு' என்பார், அதனையும் உடன் கூறினார். இக் காட்சியறிவு கேள்வியறிவுகளாலும் என் உள்ளம் திருந்திற்றில்லை என்பார், "உண்டு உடுத்து இருப்பதானேன்" என்று அருளினார். உண்டலையும், உடுத்தலையும் எடுத்தோதியது, அவற்றைப் பெற்றதனோடு மகிழ்ந்து, பிறிது நாட்டமின்றி யிருக்கின்றேன் என்றற்கு. ஏறு, சிங்க ஏறு, என்பது, 'போர்' என்னும் அடையாற் பெறுதும். தேவரின் மிக்கானுதல் கருதிச் சிவபெருமான், 'சிங்கம்' எனப்படுதலை, **"மூவாச் சிங்கமே"** (திருமுறை - 6. 99. 2), **"சிவனே தேவர் சிங்கமே"** (திருமுறை - 7. 52. 1.) என்றாற்போலுந் திருமொழி பற்றி அறிந்துகொள்க. ஏறு போல்வானை, "ஏறு" என்றது, உவமையாகுபெயர்.

57. "போந்தருளி" என்ற செய்தெனெச்சத்தை, 'போந்தருள' எனத்திரித்தும், "இருள்நீக்கி" என்றதனை, "உடன் வந்து" என்றதன்பின்னர்க் கூட்டியும், 'கொடியேன், உயிர் உலவாது, கண்கெட்ட ஊர் ஏறாய் இங்கு உழல்வேனே' என மாற்றியும் பொருள் கொள்க. 'நீ' என்றது, பின்னரும் சென்றியையும். 'நீ நின் பொன்னகர்வாய் போந்தருளவும், அருள்பெற்ற சீரேறு அடியார் நின்பாதம் சேரவும் அவற்றைக் கண்டும் உயிர் உலவாது கொடியேன் இங்கு உழல்வேனே' என வினைமுடிக்க.

"உடன்" என்றதில், 'உடனாய்' என ஆக்கம் வருவித்துரைக்க. திருப்பெருந்துறையில் இறைவன் ஆசான் மூர்த்தியாய் வந்தபொழுது அம்மையோடு உடனாய் இருந்திலனாயினும், அம்மையாவாள் அருளன்றி வேறல்லளாகலானும், இறைவன்

58 உலவாக் காலந் தவமெய்தி
　　உறுப்பும் வெறுத்திங் குனைக்காண்பான்
பலமா முனிவர் நனிவாடப்
　　பாவி யேனைப் பணிகொண்டாய்
மலமாக் குரம்பை இதுமாய்க்க
　　மாட்டேன் மணியே உனைக்காண்பான்
அலவா நிற்கும் அன்பிலேன்
　　என்கொண் டெழுகேன் எம்மானே. (54)

அருளன்றியிலனுகலானும், அவளோடு உடனுய் வந்தருளிய தாகப் பலவிடத்தும் அருளுவர்; மேலும் அவ்வாறு அருளினமை காட்டப்பட்டது. இறைவன் அருளன்றி இலனுதலை,

" அருளுண்டா மீசற் கதுசத்தி யன்றே
அருளு மவனன்றி யில்லை அருளின் -
றவனன்றே இல்லை"

என்பதனுல் அறிக. (சிவஞானபோதம் சூ-5. அதி-2.) ஏறு - எருது. காட்டேற்றினின்றும் பிரித்தற்கு, " ஊரேறு " என்றுர். ஊர் ஏறுகள் மேய்தற் பொருட்டுக் காட்டிற் செல்லுமாயினும், மேய்ந்த பின்னர் ஊரை அடையும். அவற்றுள் கண்கெட்ட ஏறு ஒன்று இருக்குமாயின், அஃது ஏனையவற்ருேடு கூடிச் செல்லமாட்டாது காட்டிலே கிடந்து தன் இனத்தையும், தலைவனையும் நினைந்து கதறி அலமருதலின், அதனை, அருளைப் பெறுதற் பொருட்டு இவ்வுலகில் வந்தவர் பலரும் அதனைப் பெற்றுச் சிவன் நகருக்குச் சென்றுவிட, அவர்களோடு செல்லாது இவ்வுலகில் நின்று அவர்களையும், இறைவனையும் நினைந்து அழுது அலமரும் தமக்கு உவமை கூறினர். 'என் உயிர்' என்பது ஒற்றுமை வழக்காயினும், உறுப்புத்தற்கிழமை வழக்கோடொத்தலின், 'உலவாது' என்பது, சினைவினை முதல்மேல் நின்றவாறு; இவ்வாறன்றி இதனை வேறு தொடராக்கி உரைத்தலுமாம்.

58. **பொருள்கோள்:** 'மணியே, எம்மானே' உனைக் காண்பான், பல் மாமுனிவர், உறுப்பும் வெறுத்து, இங்கு உலவாக் காலம் தவம் எய்தி நனிவாட, அவர்களைப் பணிகொள்

59 மானேர் நோக்கி உமையாள்
பங்கா வந்திங் காட்கொண்ட
தேனே அமுதே கரும்பின்
தெளிவே சிவனே தென்தில்லைக்
கோனே உன்தன் திருக்குறிப்புக்
கூடு வார்நின் கழல்கூட,
ஊனார் புழுக்கூ டிதுகாத்திங்
கிருப்ப தானேன் உடையானே. (55)

ளாமல் உன்னைக் காணும்பொருட்டு யாதும் செய்யாத பாவியேனைப் பணிகொண்டாய்; (யானோ) உடம்பை நீக்கிக் கொள்ளும் விருப்பம் இல்லேன்; உன்னைக்காண விரும்பி அலைகின்ற அன்பும் இல்லேன்; எவ்வாற்றால் உன்னைத் தொடர்வேன்'.

தவம், உண்டி சுருக்கல் முதலாயின. உடம்பினை, 'அங்கம்' என்னும் வடநூல் வழக்குப்பற்றி, "உறுப்பு" என்றார்.

"உறுப்பொத்தல் மக்கள்ஒப் பன்றால்"

எனவும்,

"குறித்தது கூறாமைக் கொள்வாரோடு ஏனை
உறுப்போ ரனையரால் வேறு"

எனவும் (குறள் 993, 704.) வருவனபோல்வனவற்றைக் காண்க.

59. கூடுவார் - பொருந்துபவர்; ஒத்து நடப்பவர், "கூட" என்றதன்பின், 'கூடாதேனாகிய யான்' என்னும் எழுவாய் வருவிக்க. 'இஃது என் வினையிருந்தவாறு' என்பது குறிப்பெச்சமாய், இறுதிக்கண் எஞ்சி நின்றது. "உமையாள்," "கரும்பின்" என்பன மூவசையிடத்து ஈரசை வந்த சீர் மயக்கம்.

60 உடையா னேநின் றனைஉள்கி
　　உள்ளம் உருகும் பெருங்காதல்
உடையார் உடையாய் நின்பாதஞ்
　　சேரக் கண்டிங் கூர்நாயிற்
கடையா னேன்நெஞ் சுருகாதேன்
　　கல்லா மனத்தேன் கசியாதேன்
முடையார் புழுக்கூ டிதுகாத்திங்
　　கிருப்ப தாக முடித்தாயே. (56)

61 முடித்த வாறும் என்றனக்கே
　　தக்க தேமுன் னடியாரைப்
பிடித்த வாறும் சோராமற்
　　சோர னேன்இங் கொருத்திவாய்
துடித்த வாறும் துகிலிறையே
　　சோர்ந்த வாறும் முகங்குறுவேர்
பொடித்த வாறும் இவையுணர்ந்து
　　கேடென் றனக்கே சூழ்ந்தேனே. (57)

---

60. 'உடையாயாகிய நின் பாதம்' என்க. "கண்டும்" என்னும் உம்மை தொக்கது. இஃது, "இருப்பதாக" என்றதில், 'ஆக' என்பதனோடு முடியும். ஊர் நாய் - வளர்ப்பார் இல்லாத நாய்; 'அஃதாயினும் தான் செய்தற்பாலதனைச் செய்யும்; யான் அஃதில்லேன்' என்பார், "ஊர்நாயிற் கடையானேன்" என்றார். ஊர் நாய் செய்வது, ஊரைக் காத்தல். "கசியாதேன்" முதலிய எழுவாய்கள், 'இருப்பது' என்னும் தொழிற்பெயரொடு முடியும். ஆக - நிகழும்படி. முடித்தாய் - வரையறுத்தாய். ஏகாரம், தேற்றம். 'இதுதான் என்னை வந்திங்காட்கொண்ட கருணைக்குரிய செயலோ' என்பது குறிப்பெச்சம்.

61. "சோரனேன்" என்பது முதலாக இறுதிகாறும் உள்ளனவற்றை, எஞ்சிநின்ற, 'ஆதலின்' என்பதனோடு முதலிற் கூட்டி, "தக்கதே" என்றதைப் பின்னும் இயைத்து, 'அவருக்கு' என்பது வருவித்து, 'முடித்தவாறும் என்றனக்கே தக்கதே; அடியாரைச் சோராமல் முன் பிடித்தவாறும் அவருக்கே தக்கதே' என உரைக்க. 'அவரவருக்குச் செயற்

62 தேனைப் பாலைக் கன்னலின்
தெளிவை ஒளியைத் தெளிந்தார்தம்
ஊனை உருக்கும் உடையானை
உம்ப ரானை வம்பனேன்
நானின் னடியேன் நீஎன்னை
ஆண்டாய் என்றால் அடியேற்குத்
தானுஞ் சிரித்தே யருளலாந்
தன்மை யாம்என் தன்மையே. (58)

பாலதனையே செய்தாய்; ஆதலின், யான் இங்கு நின்று துன்புறுவது நின்பிழை அன்று; என்பிழையே' என்றவாறு. முன்னைத் திருப்பாட்டில், 'இறைவன் செய்தது முறையன்று' என்பதுபோல அருளினமையின், இத் திருப்பாட்டில், 'அது முறையே' என்றார் என்க. கழிபடர் (மிக்க துன்பம்) உற்றோர் இங்ஙனம் பலவகையாலுங் கூறி இரங்குதல் இயல்பென்க.

"ஒருத்தி" என்றது, தம் மனைவியாரையேயாதல் வேண்டும் என்பது மேலே (பாட்டு-44) கூறப்பட்டது. வாய்துடித்தமை முதலியவாகக் கூறியன, அடிகள் பிரிந்து வருங்காலத்து, அவ்வம்மையார்பால் நிகழ்ந்த ஆற்றாமைக் குறிப்பே என்றும், அங்ஙனம் ஆற்றாமை எய்திய அவரை, 'விரைந்து வருதும்' என அடிகள் தேற்றிப்பிரிந்தார் என்றும், அதனால், இறைவன் தம்மைப் பிரிந்து செல்லும்பொழுது தாம் அத்தேற்றச் சொல்லைக் கடக்கமாட்டாராயினார் என்றும் கொள்ளற்பாற்று.

62. கன்னல் - கரும்பு; இஃது அதன் சாற்றைக் குறித்தது. உம்பர் - மேலிடம். உம்பரான் - மேலிடத்தில் இருப்பவன். 'உம்பர் ஆனை' என இருசொல்லாக அறுத்து, 'தேவர் ஆ (பசு - காமதேனு)' என்றும் உரைப்பர். என்றால் - என்று உறவு கூறினால். "தானும் சிரித்து" என்றது, 'பிறர் சிரித்தலேயன்றி' என்னும் பொருளைத் தருதலின், உம்மை, எச்சப் பொருட்டு. சிரித்தல், 'வருக என்று பணித்தபோதும் வாராதொழிந்த இவன்தானோ என் அடியான்! இவனைத்தானோ நான் ஆண்டுகொண்டது! நன்றாயுள்ளது இவன் கூற்று!' என்னும் இகழ்ச்சிக் குறிப்பினாலாம். "சிரித்தே" என்ற

63 தன்மை பிறரால் அறியாத
தலைவா பொல்லா நாயான
புன்மை யேனை ஆண்டையா
புறமே போக விடுவாயோ!
என்னை நோக்கு வார்யாரே!
என் நான் செய்கேன் எம்பெருமான்,
பொன்னே திகழுந் திருமேனி
எந்தாய் எங்குப் புகுவேனே. (59)

64 புகுவேன் எனதே நின்பாதம்
போற்றும் அடியா ருள்நின்று
நகுவேன் பண்டு தோள்நோக்கி
நாண மில்லா நாயினேன்

ஏகாரம், தேற்றம். 'அங்ஙனம் இகழினும், தனக்கு இயல்பாய அருட்டன்மையால், முன்பு வந்து ஆண்டதுபோல, இனியும் என்னைத் தன்பால் கூவிக்கொள்வான்' என்பார், 'சிரித்தே ஒழியலாம்' என்னாது, "சிரித்தே அருளலாம்" என்று அருளினார்.

63. பிறர் - உன்னையொழிந்த மற்றையோர். சிவானுபூதிச் செல்வராயினும், சிவனது தன்மை முற்றும் அறியப் படாமை யறிக. அறியாத - அறியப்படாத. "பொல்லா நாய்" என்றதற்கு மேல் (55) உரைத்தாம். "புன்மையேனை ஆண்டு விடுவாயோ" என்றது, 'என் புன்மை நோக்காது முன்பு என்னை ஆண்டுகொண்டு, பின்பு அதுநோக்கி விட்டு விடுவாயோ' என்றவாறு. 'அங்ஙனம் செய்யின், அஃது ஆண்டவற்கு அழகாகாது' என்பது குறிப்பு. ஓகாரம், இரக்கப்பொருட்டு. "விடுவாயோ" என்றதன்பின், 'விடின்' என்பது எஞ்சிநின்றது. "நோக்குவார்" என்றது, 'நோக்கி இரங்குவார்' என்னும்பொருட்டு. "யாரே" என்னும் ஏகாரம், அசைநிலை. "பொன்" என்றது, அதன் ஒளியை. "எங்கு" என்றது. 'எவரிடத்தில்' என்றபடி.

64. 'எந்தாய், நின் பாதத்தில் யான் புகுவேன்; (அதற்கு) அஃது என்னுடையதோ! (நீ கொடுக்க அன்றே

நெகும்அன் பில்லை நினைக்காண
நீஆண் டருள அடியேனுந்
தகுவ னேஎன் தன்மையே
எந்தாய் அந்தோ தரியேனே. (60)

7. அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

65 தரிக்கிலேன் காய வாழ்க்கை சங்கரா போற்றி! வான
விருத்தனே போற்றி! எங்கள் விடலையே போற்றி! ஒப்பில்
ஒருத்தனே போற்றி! உம்பர் தம்பிரான் போற்றி! தில்லை
நிருத்தனே போற்றி! எங்கள் நின்மலா போற்றி! போற்றி!

பெறற்பாலது!) அதனை நீ கொடுத்து ஆண்டருள (ஏனைய அடியார்போல) அடியேனும் தகுவனே? (தகேன்; ஏனெனில்,) நாணமில்லா நாயினேன், பண்டு. போற்றும் அடியாருள் நின்று நின் தோள்களை நோக்கி மகிழ்வேனாயினும், (இன்று எனக்கு) நினைக்காண நெகும் அன்பில்லை; அந்தோ, என் தன்மையை (யான்) தரியேன்' எனப் பொருள் கொள்க.

இறைவன் திருப்பெருந்துறையில் ஆசான் மூர்த்தியாய் எழுந்தருளியிருந்த கோலம், அடியார் உள்ளத்தைக் கவருந் தன்மையதாய் இருந்தமையின் தம் உள்ளமும் அதனால் ஈர்ப்புண்டது என்பதை, "பண்டு தோள்நோக்கி நகுவேன்" என்றார். "சிவனவன் திரள்தோள்மேல் - நீறு நின்றது கண்டனையாயினும் நெக்கிலை" என முன்னரும் (37) அருளினார். "நாணாமை நாடாமை நாணின்மை யாதொன்றும் – பேணாமை பேதை தொழில்" (குறள்-833.) என்பவாகலின், "நாணமில்லா நாயினேன்" என்றது, 'பேதையேன்' என்னும் பொருளதாதலும், பெற்ற திருவருளைப் பேணுந்தன்மை இன்மையால், 'பேதையேன்' என்றார் என்பதும் பெறப்படும். 'பேணாது நின்றே பயன்பெற விழைகின்றேன்; அஃது இயல்வதோ' என்பார், 'புகுவேன் எனதே நின்பாதம்' என்றார்.

65. இப்பகுதிக்கு, 'காருணியத்திரங்கல்' என முன்னோர் உரைத்த குறிப்பிற்கு, 'இறைவன் தனது கருணைத் தன்மையால் திருவுளம் இரங்குதலைக் குறித்தது' என்றே பொருள் கொள்ளற்பாற்று; என்னையெனின். இதனுள் அடிகள்,

66 போற்றிஓம் நமச்சி வாய! புயங்கனே மயங்கு கின்றேன் ;
போற்றிஓம் நமச்சி வாய! புகலிடம் பிறிதொன் றில்லை ;
போற்றிஓம் நமச்சி வாய! புறம்எனைப் போக்கல் கண்டாய் ;
போற்றிஓம் நமச்சி வாய! சயசய போற்றி! போற்றி! (62)

67 போற்றிஎன் போலும் பொய்யர் தம்மைஆட் கொள்ளும் [வள்ளல் ;
போற்றிநின் பாதம் போற்றி! நாதனே போற்றி போற்றி!
போற்றிநின் கருணை வெள்ளப் புதுமதுப் புவனம் நீர்தீக்
காற்றிய மானன் வானம் இருசுடர்க் கடவு ளானே! (63)

"தரிக்கிலேன் காய வாழ்க்கை" என்று எடுத்துக்கொண்டு 'உடல் இது களைந்திட்டு ஒல்லை உம்பர் தந்தருளு, ஒழித்திடு இவ்வாழ்வு, வருக என்று என்னை நின்பால் வாங்கிடவேண்டும்' என்றாற்போலப் பன்முறையும் வேண்டுகின்றாராகலின், இதனானே, இதனுள், 'போற்றி' என வருவன பலவும், அங்ஙனம் இரங்குமாறு வேண்டிக்கொள்ளும் வணக்கவுரையாதல் பெறப்படும்.

தரிக்கிலேன் - பொறுக்கமாட்டேன். 'காய வாழ்க்கை தரிக்கிலேன்' என்க. வானம் - பரலோகம். 'அதன்கண் உள்ள' என்க. நீ எவ்வாறும் ஆவாய் என்பார், 'எங்கள் விருத்தனே, விடலையே' என்றார். விருத்தன் - முதியோன். விடலை - இளையோன். "தம்பிரான்" என்றதில் தம், சாரியை. பிரான் - தலைவன்.

66. "ஓம் நமச்சிவாய" என்றது, 'இம்மந்திரத்தின் பொருளாய் உள்ளவனே' என்றவாறு. 'போற்றியோ' எனப் பிரித்து, ஓகாரத்தை, இரக்கப்பொருளது எனினுமாம். புயங்கம் - பாம்பு; 'ஒருவகை நடனம்' எனவும் கூறுப. மயங்குதல் - செய்வதறியாது திகைத்தல். 'என்னைப் புறம் போக்கல்' என்க. கண்டாய், முன்னிலை அசை. சயசய - வெல்க வெல்க.

67. "பொய்யர் தம்மை ஆட்கொள்ளும்" என்றது, அருட்டிறத்தை அருளியவாறு. 'கருணையாகிய புதுமது வெள்ளம்' என்றபடி. மது - தேன். புவனம் - நிலம்.

68 கடவுளே போற்றி! என்னைக் கண்டுகொண் டருளு போற்றி!
விடவுளே உருக்கி என்னை ஆண்டிட வேண்டும் போற்றி!
உடலிது களைந்திட் டொல்லை உம்பர்தந் தருளு போற்றி!
சடையுளே கங்கை வைத்த சங்கரா போற்றி! போற்றி! (64)

69 சங்கரா போற்றி! மற்றோர் சரணிலேன் போற்றி! கோலப்
பொங்கரா அல்குற் செவ்வாய் வெண்ணகைக் கரியவாட்கண்
மங்கையோர் பங்க போற்றி! மால்விடை யூர்தி போற்றி!
இங்கிவாழ் வாற்ற கில்லேன் எம்பிரான் இழித்திட் டேனே.

இயமானன் - உயிர். இருசுடர், ஞாயிறும் திங்களும். 'இவ் வெட்டுமாய் நிற்கும் இறைவனே' என்றபடி. கடவுளான் - எல்லாவற்றையும் கடத்தலை உடையவன். 'இறை, தெய்வம்' என்னும் தெய்வஞ்சுட்டிய பெயர்நிலைக் கிளவிகள், 'இறைவன், தேவன்' என உயர்திணை மருங்கிற் பால்பிரிந்திசைத்தல் போல, 'கடவுள்' என்னும் பெயரும் 'கடவுளான்' எனப் பால்பிரிந்து இசைத்தது என்க (தொல். சொல் - 2.).

68. "கண்டுகொண்டு" என்றதில் கொள், தற்பொருட்டுப் பொருண்மை விகுதி, 'உனக்குள் நீதானே கண்டு' என்பது பொருள். 'உன்னை வலிசெய்வார் ஒருவரிலர்; நீதானே இரங்குதல் வேண்டும்' என்றபடி. விட - (உலகப் பற்று) நீங்குமாறு. 'என்னை உள்ளே உருக்கி ஆண்டிட வேண்டும்' என்க. உருக்கி - உருகப்பண்ணி, உம்பர் - மேலுலகம்; சிவலோகம். 'அருள்' என்னும் முதனிலை, ஏவலிடத்து, உகரம் பெற்றது.

69. சங்கரன் - இன்பத்தைச் செய்பவன். சரண் - புகலிடம். பொங்கு அரா - சினம் மிகுகின்ற பாம்பு; இஃது ஆகுபெயராய் அதன் படத்தைக் குறித்தது. மால் விடை - பெரிய இடபம். 'ஊர்தி' என்பதில் இகரம், செயப்படுபொருட் பொருளதாய் நின்று, 'ஊரப்படுவது' எனவும், வினைமுதற் பொருளதாய் நின்று, 'ஊர்பவன்' என்னும் பொருளையும் தரும். இங்கு அஃது வினைமுதற் பொருளதாய் நின்றது, 'இவ்வாழ்வு' என்னும் வகரம் தொகுத்தலாயிற்று. இழித்திட்டேன் - அருவருத்தேன். 'ஆதலின், நீக்கியருள்' என்பது குறிப்பெச்சம்.

70 இழித்தனன் என்னை யானே எம்பிரான் போற்றி! போற்றி!
பழித்திலேன் உன்னை என்னை ஆளுடைப் பாதம் போற்றி!
பிழைத்தவை பொறுக்கை எல்லாம் பெரியவர் கடமை போற்றி!
ஒழித்திடிவ் வாழ்வு போற்றி! உம்பர்நாட் டெம்பி ரானே.

71 எம்பிரான் போற்றி! வானத் தவரவர் ஏறு போற்றி!
கொம்பரார் மருங்குல் மங்கை கூறவெண் ணீற போற்றி!
செம்பிரான் போற்றி! தில்லைத் திருச்சிற்றம் பலவ போற்றி!
உம்பரா போற்றி! என்னை ஆளுடை ஒருவ போற்றி! (67)

---

70. 'யான் உன்னைப் பழித்திலேன்; என்னையே இழித்தனன்' என்க. இழித்தேன் - இகழ்ந்துகொண்டேன். பழித்திலேன் - பழிகூறிற்றிலேன். 'என்னைப் பிரிவது உனக்குத் திருக்குறிப்பன்றாகவும், (41) யானே பிரிந்து நின்றேன்; சிறியோரது பிழையைப் பொறுத்து அவர்க்கு உதவுதல் பெரியோரது கடனாகலின், நீ எனது பிழையைப் பொறுத்து இவ்வாழ்வை ஒழித்திடல் வேண்டும்' என வேண்டியவாறு. உம்பர் நாடு - மேலுலகம்; 'அதன்கண் உள்ள எம்பிரானே; என்க.

71. வானத்து அவரவர் - வானுலகில் உள்ள அவ்வவர்க்கு, "அவரவர்" என்றது, ஒவ்வொரு பகுதியில் உள்ளாரைக் குறித்து. "ஏறு" என்றது, 'தலைவன்' என்னும் பொருட்டாய் நின்றது. தெய்வப் பகுதியினராவார், உலகை நடத்துதற்கண் ஒவ்வொரு தொழிற்கு உரியராய் நின்று, அவ்வவளவில், 'முதல்வர்' எனப்படுபவராதலாலும், அம் முதன்மைகள் பலவும் 'சிவபெருமானது' முழுமுதன்மையின் ஒவ்வொரு கூறாய் நிற்பனவாதலாலும், அப்பெருமானை 'வானத்து அவரவர் ஏறு" என்று அருளிச்செய்தார். கொம்பர் - பூங்கொம்பு. ஆர் - (அதன் தன்மை) பொருந்திய. 'கொம்பர்போலப் பொருந்திய' என்றுமாம், செம் பிரான் - சிவப்பு நிறக் கடவுள். பிரமனை, 'பொன்னன்' என்றும், திருமாலை, 'மாயோன்' என்றும் கூறுதல்போல, சிவபிரானை, "செம்பிரான்" என்றார். 'உம்பர்' என்பதன் அடியாகத் தோன்றிய, 'உம்பரான்' என்பது விளியேற்று, "உம்பரா" என நின்றது.

72 ஒருவனே போற்றி! ஒப்பில் அப்பனே போற்றி! வானோர்
குருவனே போற்றி! எங்கள் கோமளக் கொழுந்து போற்றி!
வருகஎன் றென்னை நின்பால் வாங்கிட வேண்டும் போற்றி!
தருகநின் பாதம் போற்றி! தமியனேன் தனிமை தீர்த்தே.

73 தீர்ந்தஅன் பாய அன்பர்க் கவரினும் அன்ப போற்றி!
பேர்ந்தும்என் பொய்ம்மை யாட்கொண் டருளிடும் பெருமை
[போற்றி!
வார்ந்தநஞ் சயின்று வானோர்க் கமுதம்ஈ வள்ளல் போற்றி!
ஆர்ந்தநின் பாதம் நாயேற் கருளிட வேண்டும் போற்றி!

---

72. 'ஒருவன்' என்பது, கடவுளைக் குறிப்பதொரு சொல். ஒப்பில் அப்பன் - 'தந்தை' எனப்படுவாருள் ஒருவரும் ஒப்பில்லாத தந்தை. 'குரவன்' என்பது, எதுகைநோக்கி, 'குருவன்' என நின்றது. மக்களுக்கு உய்யும் நெறிகாட்டுவார் ஆசிரியராதல்போல, தேவர்கட்கு உய்யும் நெறிகாட்டுவான் சிவபெருமானே யாதல்பற்றி, 'வானோர் குரவனே' என்றார். கோமளக் கொழுந்து - அழகின்மேல் எல்லை. சிவபிரானது அழகின் சிறு கூறுகளே ஏனைய யாவரிடத்தும், எப்பொருளிடத்தும் காணப்படும் அழகுகளாதல் தெளிவு. இதனை, அப்பெருமான் பேரழகுடன் தோன்றிய வரலாறுகள் பல தெளிவுறுத்தும். உடலினின்றும் பிரித்து ஏற்றுக்கொள்ளுதலை, "வாங்கிட வேண்டும்" என்றார். 'தமியனேன் தனிமை தீர்த்து நின் பாதம் தருக' எனக் கூட்டுக.

73. தீர்ந்த அன்பு - முதிரவேண்டுமளவும் முதிர்ந்து முடிந்த அன்பு; 'பேரன்பு' என்றவாறு. அன்பாய - அன்பே வடிவமாகிய; "அன்பு பிழம்பாய்த் திரிவார்", 'அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பு" (பெ. பு. கண்ணப்பர் - 154, 157.)என்றாற்போல வருவன காண்க. "அன்பர்" என்றது, 'அடியவர்' என்னும் அளவாய் நின்றது. "அவரினும் அன்பன்" என்றது, அவரது அன்பளவினன்றிப் பன்மடங்கு பெரிதாய பேரருளை அவர்கட்கு வழங்குபவன்' என்றவாறு. அவ்வருளாவது, ஊனக்கண்ணைப் பெயர்த்தளித்த அன்பர்க்குப் பரிசாக, "என் அன்புடைத் தோன்றல்" (நக்கீரர் திருமறம்) என விளித்தும், தனது திருக்கையாலே அவரது திருக்கையைப் பிடித்தும்,

74 போற்றிஇப் புவனம் நீர்தீக் காலொடு வான மானாய்!
போற்றிஎவ் வுயிர்க்குந் தோற்றம் ஆகிநீ தோற்ற மில்லாய்!
போற்றிஎல் லாஉ யிர்க்கும் ஈறாய்ஈ றின்மை யானாய்!
போற்றிஐம் புலன்கள் நின்னைப் புணர்கிலாப் புணர்க்கை
[யானே. (70)

தன்னைப் பயன் கருதியன்றி அன்பே காரணமாக வணங்குவார் பலரும் அவரைத் தன்னினும் மேலாக வைத்து வணங்குமாறு, தன் வலப்பக்கத்தே அவரை என்றும் நீங்காது நிற்கச்செய்தும் உயர்த்தினமை போல்வதாம். இது பற்றியன்றே. ''பேறுமற் றிதன்மேலுண்டோ'' (பெ. பு. கண்ணப்பர் - 185.) என இச் சிறப்பினைப் போற்றிக் கூறியது! ''அற்றவர்க்கு அற்ற சிவன்'' என்று அருளிச்செய்தார் ஆளுடைய பிள்ளையாரும் (திருமுறை - 3.120.2.) என்க. 'பேர்த்தும்' என்பது மெலிந்து நின்றது. 'மீளவும்' என்பது பொருள். தம்மை ஆட்கொள்வ தைத் தம்பொய்ம்மையை ஆட்கொள்வதாக அருளினார். முன்னர் இருந்த பொய்ம்மை, மெய்ந்நெறியிற்' செல்லாது உலகியலில் இருந்தது. பின்னர் உள்ள பொய்ம்மை, இறைவனுடன் செல்லாது இவ்வுலகில் நின்றது. பெரியோனாகலின், மீளவும் பொறுத்து அருள்புரிவான் என்று துணியலாகும் என்னும் கருத்தினால். ''ஆட்கொண்டருளிடும் பெருமை போற்றி'' என்றார். எனவே, இஃது எதிர்காலம் நோக்கிக் கூறிய தாயிற்று. இங்ஙனம் துணிதல் கூடுமாயினும், அவனது திருக் குறிப்பை வரையறுத்தல் கூடாமையின், ''நின்பாதம் நாயேற்கு அருளிட வேண்டும்'' என்று வேண்டினார். அங்ஙனம் வேண்டு கின்றவர் சிறியேனது குற்றத்தை எண்ணாத அவனது திருவரு ளின் பெருமையைக் குறித்தற்பொருட்டு, ''நஞ்சயின்று வானோர்க்கு அமுதம் ஈ வள்ளல்'' என்று அருளினார். வள்ளல், விளி. வார்ந்த - ஒழுகிய. ஆர்ந்த - (இன்பம்) நிறைந்த.

74. ''தோற்றமாகி'', ''ஈறாய்'' என்றவற்றில், 'தோற் றம், ஈறு' என்றவை, 'அவற்றிற்குக் காரணன் எனப்பொருள் தந்தன. ''ஆனாய்'' எனவும், ''இல்லாய்'' எனவும் வந்தன, விளிகள். புணர்க்கை - புணர்ப்பு; சூழ்ச்சி; என்றது, வல்லமையை.

8. எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

75 புணர்ப்பதொக்க எந்தை என்னை யாண்டு பூணநோக்கினாய்
புணர்ப்ப தன்றி தென்றபோது நின்னொ டென்னொடென்னிதாம்
புணர்ப்ப தாக அன்றி தாக அன்பு நின்கழற்கணே [தாம்
புணர்ப்ப தாக அங்க ணாள புங்க மான போகமே. (71)

---

75. இப்பகுதியில் அடிகள் இறைவன்மாட்டு முறுகி எழும் பேரன்பினையே சிறப்பாக வேண்டிப் பாடுகின்றார். அன்பே இன்பிற்குக் காரணம் ஆதலின், இதற்கு, 'ஆனந்தத் தழுந்தல்' எனக் குறிப்புரைத்தனர்போலும் முன்னோர்!

புணர்ப்பது ஒக்க - என்னை உன்னுடன் இரண்டறச் சேர்த்துக்கொள்வதுபோலவே. 'ஒக்கவே' என்னும் தேற்றேகாரம், தொகுத்தலாயிற்று. இதனால், இறைவன் மாட்டுக் குறையின்மை பெறப்பட்டது. பூண நோக்கினாய் - நிரம்பத் திருவருளை நல்கினாய். நோக்குதல் அருளுதலாதலை, 'கண் பார்த்தல்' எனக் கூறும் வழக்குப் பற்றி உணர்க. "புணர்ப்பது" நான்கில் இடை இரண்டனுள் அது, பகுதிப்பொருள் விகுதி. இது புணர்ப்பன்று என்றபோது இது நின்னொடு என்னொடு என் ஆம் - இங்ஙனம் நல்கிய அருள் என்னை நின்னொடு ஒன்றாகச் செய்யும் உபாயம் அன்று எனப்பட்ட பொழுது, இவ்வருள் உன்னோடு என்னிடை என்ன பயனை உடையதாம்? 'இஃது உபாயம் அன்று எனப்பட்டது' என்றது, அருள் புரிந்த உடனே இறைவனுடன் ஒன்றுபடாமல் உலகில் நின்று விட்டமையை யாவரும் அறிந்தமைபற்றி. இங்ஙனம் அருளியது அருளின் மாட்டாமை கூறியதன்று; தமது பக்குவம் இன்மை கூறியதாம். இது புணர்ப்பாக அன்றாக - இவ்வருள் என்னை உன்னோடு ஒன்று படுத்தும் உபாயமாகுக, அன்றாகுக; என்றது, இதற்குமேல் செயற்பாலதனை நோக்கல் வேண்டும் என்றபடி. அன்பு நின்கழற்கண் புங்கமான போகம் புணப்பதாக - இனி அன்பென்னும் உபாயமே உனது திருவடிக்கண் உண்டாகும் பேரின்ப நுகர்ச்சியில் என்னைச் சேர்ப்பதாக; 'அத்தகைய அன்பினை எனக்கு அருளுதல் வேண்டும்' என்பது கருத்து. எனவே, 'திருவருள் பயன்

76 போகம் வேண்டி வேண்டி லேன்பு ரந்த ராதி இன்பமும்
ஏக நின்க ழல்லி ணைய லாதி லேனென் எம்பிரான்
ஆகம் விண்டு கம்பம் வந்து குஞ்சி அஞ்ச லிக்கணே
ஆக என்கை கண்கள் தாரை ஆற தாக ஐயனே. (72)

படுவது அன்புடையாரிடத்தேயாம் என்பது பெறப்பட்டது. அடிகள் அன்பில்லாதவரல்லர்; **அன்று உடன்சென்ற அருள் பெறும் அடியவரது** (கீர்த்தித் திருவகவல் - 130.) அன்பு போன்ற அன்பும், கண்ணப்பரது (திருக்கோத்தும்பி - 4.) அன்பு போன்ற அன்பும் தமக்கு இல்லை என்பதையே குறித் தருளுகின்றார். புங்கம் - உயர்ச்சி.

76. போகம் வேண்டி - இன்பத்தை விரும்பி. 'புரந் தராதிகளது இன்பமும் வேண்டிலேன்' என்க. புரந்தரன் - இந்திரன். ''இன்பம்'' என்றது இன்ப வாழ்க்கையை. 'மக்களுள் மன்னர் முதலியோரது வாழ்வையேயன்றி' எனப் பொருள் தருதலின், ''இன்பமும்'' என்ற உம்மை, இறந்தது தழுவிற்று. ஏக - ஏகனே. ''இலேன்'' என்றதற்கு 'பற்றுக் கோடு' என்னும் செயப்படுபொருள் வருவிக்க. இதன்பின் 'ஆதலின்' என்பதும் எஞ்சிநின்றது. ஆகம் - உடம்பு. விண்டு- உருகி. கம்பம் - நடுக்கம். வந்து - வரப்பெற்று; இதனை, 'வரப்பெற' எனத் திரித்துக்கொள்க. குஞ்சி - தலைமயிர். 'என் கை குஞ்சிக்கண் அஞ்சலித்தற்கண் ஆக' என்க. அஞ்ச லித்தல் - கும்பிடுதல். 'என்கை குஞ்சிக்கண் அஞ்சலியாக' எனினுமாம். 'கண்களில் தாரை ஆறதாக' என்க. 'தாரை - இடையறுது விழும் வீழ்ச்சி. 'அதனையுடைய ஆறு' என்க. அது, பகுதிப்பொருள் விகுதி. ''ஆறதாக'' என்றது பன்மை ஒருமை மயக்கம். 'இந்திராதியரது இன்பங்களை உவர்த்து உனது திருவடியொன்றினையே பற்றுக்கோடாகக் கொண்டவ ரிடத்து இத்தகைய அன்பின் நிகழ்ச்சிகள் நிகழுமன்றே; அடியேன் அவை நிகழப் பெற்றிலேன்' என்று இரங்கி, அவற்றை வேண்டியவாறு. 'கழலிணை' என, விகாரமின்றியே ஓதுதல் பாடமாகாமை யறிக.

77 ஐய நின்ன தல்ல தில்லை மற்றோர் பற்று ; வஞ்சனேன்
பொய்கலந்த தல்ல தில்லை பொய்ம்மை யேன்என் எம்பிரான்
மைகலந்த கண்ணி பங்க வந்து நின்கழற்கணே
மெய்கலந்த அன்ப ரன்பெ னக்கு மாக வேண்டுமே. (73)

78 வேண்டும் நின்கழற்க ணன்பு பொய்ம்மை தீர்த்து மெய்ம்மையே
ஆண்டு கொண்டு நாயி னேனை ஆவ என்ற ருளுநீ;
பூண்டு கொண்டடிய னேனும் போற்றி போற்றி யென்றுமென்றும்
மாண்டு மாண்டு வந்து வந்து மன்ன நின்வ ணங்கவே.

---

77. பற்று - துணை. பொய் - நிலையில்லாத உலக வாழ்க்கை. 'அதனைக் கலந்ததல்லது வேறு பேறில்லேன்' என்றது, திருவடிப்பேற்றினைப் பெருமை கருதி. பொய்ம்மை ஏன் - 'எனக்கு உலகவாழ்க்கையில் பற்றில்லை' என்று சொல்லுகின்ற பொய்ம்மையை நான் ஏன் சொல்லவேண்டும்? சொல்லமாட்டேன்; 'ஆதலின் எனக்குத் துணைபுரிய வேண்டும்' என்றபடி. 'நின் கழற்கணே வந்து மெய்கலந்த அன்பர்' என்க. மெய் - நிலைபெற்ற இன்பம். ஆக வேண்டும் - உண்டாக வேண்டும். முதற்றொடரை இறுதியிற் கூட்டுக.

78. பொருள்கோள்: 'மன்ன, நின் கழற்கண் அன்பு பொய்ம்மை தீர்த்து மெய்ம்மையேவேண்டும்; அதன்பொருட்டு நீ நாயினேனை ஆண்டுகொண்டு ஆவ என்று அருளு; அடியனேனும், மாண்டு மாண்டு வந்து வந்து பூண்டுகொண்டு போற்றி போற்றி என்றுமென்றும் நின் வணங்க' எனக் கூட்டியுரைக்க,

இஃது, 'இப்பிறப்பில் அத்தகைய பேரன்பு அடியேனுக்கு எய்தாதாயின், பல பிறப்புக்கள் பிறந்தாயினும் அதனைப் பெறுவேனாக' என்றபடி. எனவே, ஆண்டுகொண்டு ஆவ என்று அருளுதலும் அப்பிறவிதோறும் என்பதாயிற்று. ஆவ என்று - ஆ ஆ என்று இரங்கி. பூணுதல், அத்திருவருளை. 'என்றென்று' என்னும் அடுக்குச் சிறப்பும்மையுடன் நின்றது. வணங்க. அகர ஈற்று வியங்கோள். இதனால், இறைவன் திருவடிக்கண் பொய்யற்ற மெய்யன்பைப் பெறுதல் எத்துணை அரும்பேறு என்பது விளங்கும்.

79 வணங்கும் நின்னை மண்ணும் விண்ணும் வேதம் நான்கும் [ஓலமிட்
டுணங்கு நின்னை எய்தலுற்று மற்றொ ருண்மை இன்மையின்;
வணங்கி யாம்வி டேங்க ளென்ன வந்து நின்ற ருளுதற்
கிணங்கு கொங்கை மங்கை பங்க என்கொ லோநினைப்பதே.

80 நினைப்ப தாக சிந்தை செல்லு மெல்லை யேய வாக்கினால்
தினைத்த னையு மாவ தில்லை சொல்ல லாவ கேட்பவே
அனைத் துலகு மாய நின்னை ஐம்பு லன்கள் காண்கிலா
எனைத்தெ னைத்த தெப்பு றத்த தெந்தை பாத மெய்தவே.

---

79. பொருள்கோள்: 'மங்கை பங்க, நின்னை மண்ணும் விண்ணும் வணங்கும்; வேதம் நான்கும் ஓலம் இட்டு உணங்கும்; இவற்றால், மற்றோர் மெய்ப்பொருள் இல்லாமை தெளியப்படுதலின், யாம் நின்னை எய்தலுற்று வணங்கி, 'விடேங்கள்' என்று கூறி நிற்கவும், வந்துநின்று அருளுதற்கு நினைப்பது என் கொலோ'.

'ஓலம் இடுதல்' என்பது இங்கு, 'துதித்தல்' என்னும் பொருளது. உணங்கும் - இளைக்கும். 'விடேம்' என்னும் தன்மைப் பன்மை முற்றுவினை, 'கள்' என்னும் விகுதிமேல் விகுதியைப் பெற்றது. 'என்னவும்' என்னும் உம்மை தொகுத்தலாயிற்று. வந்து நின்று - மீளத் தோன்றிநின்று. அருளுதல் - பொய்ம்மை தீர்ந்த மெய்யன்பினைப் பெறச் செய்தல். இணங்கு - நெருங்கிய. நினைப்பது - நினைத்தல்; ஆராய்தல். 'இனி உன்னை யாங்கள் பிரிவதில்லை என்று உறுதி கூறவும், எங்களுக்கு அருள் செய்ய ஆராய்வது என்னை' என்றபடி. இதனுள், தம்மைப் பன்மையாக அருளினார்.

80. "நினைப்பதாக" என்றதனை இறுதிக்கண் வைத்து உரைக்க. ஏய - பொருந்த. "சொல்லல்" என்றது, சொல்லப்படும் பொருள்களைக் குறித்தது. 'ஆவன' என்பது, அன் பெறாது நின்றது. கேட்பவே - அறிந்தார் சொல்லக் கேட்பனவே; சொல்வோர் கேள்வியுணர்வே உடையவர் என்க. காண்கிலா - காணமாட்டா; இதன்பின், 'இங்ஙனமாகலின்' என்பது வருவிக்க. 'எந்தை பாதம் எய்த எனைத்தெனைத்தது, எப்புறத்தது' எனக் கூட்டுக. "நினைப்பு அது ஆக - இவ்வாறு

81 எய்த லாவ தென்று நின்னை எம்பி ரான்இவ் வஞ்சனேற்
குய்த லாவ துன்க ணன்றி மற்றொ ருண்மை யின்மையின்
பைத லாவ தென்று பாது காத்தி ரங்கு பாவியேற்
கீத லாது நின்க ணொன்றும் வண்ண மில்லை யீசனே. (77)

யினும், என் எண்ணம் நின்பாதத்தை எய்துதலாகிய அதுவே யாகுக. 'நினைபஃதாக' எனப் பாடம் ஓதினும் அமையும். 'மனம் செல்லும் அளவிற்கு, வாக்குச் செல்லாது. மற்று, அஃது உன்னைப்பற்றிப் பலவற்றைச் சொல்லுகின்றதே என்றால், அவையனைத்தும் பிறர்சொல்லியவற்றைக் கேட்டு அங்ஙனமே சொல்வனவன்றி வேறில்லை. ஐம்புலன்கள் அடியோடு உன்னை அணுகவே மாட்டாது நிற்கும். என்றால், உனது பாதத்தை உயிர்கள் அடைதல் என்பது எந்த அளவில் இயல்வது! எத்துணைச் சேய்மையில் உள்ளது! ஆயினும், எண்ணம் மாறாதிருப்பின் என்றேனும் எய்தலாம்' என்றபடி. "வைத்த உள்ளம் மாற்ற வேண்டா, வம்மின்மனத் தீரே" என ஆளுடைய நம்பிகளும் அருளிச்செய்தார் (திருமுறை - 7-7-1). "புலன்கள்" என்றது பொறிகளை. அவை இறைவனை அணுகமாட்டாமைக்கு ஏதுக்கூறுவார், "அனைத்துலகுமாய நின்னை" என்றார். 'அனைத்துலஃகும்' என்பதே பாடமாதல் வேண்டும். "எய்த" என்ற வினையெச்சம் தொழிற் பெயர்ப் பொருள் தந்தது; 'எய்தலே' என்பதே பாடம் எனினும் அமையும்.

81. பொருள்கோள்: 'எம்பிரான், ஈசனே, நின்னை யான் எய்தலாவது என்று? வஞ்சனேற்கு உய்தலாவது நின்கண் (ஒன்றுதலாகிய உண்மை) யன்றி மற்றோர் உண்மை இன்மையின் (நீ என்னைப் புறக்கணித்துவிட்டால்) ஆவது பைதல் என்று நினைந்து பாவியேற்கு இரங்கிப் பாதுகாத்தருள்; ஈதலாது (யான்) நின்கண் ஒன்றும் வண்ணம் இல்லை'.

"ஆவது" மூன்றில் முதலது, உண்டாவது; இடையது, இடைச்சொல். இறுதியது, விளைதல். பைதல் - துன்பம். "பாது காத்து இரங்கு" என்றதனை, 'இரங்கிப் பாதுகா' எனப் பின் முன்னாக்கி உரைக்க. "ஈது" என்றது, இதனையே சுட்டிற்று.

82 ஈசனேநீ அல்ல தில்லை இங்கும் அங்கும் என்பதும்
பேசினேனோர் பேதமின்மை பேதையேனென் எம்பிரான்!
நீசனேனை ஆண்டுகொண்ட நின்மலாஓர் நின்னலால்
தேசனேஓர் தேவருண்மை சிந்தியாது சிந்தையே. (78)

ஒன்றும் வண்ணம் - ஒன்றுதற்கு வழி; அன்றி, 'வண்ணம் ஒன்றும் இல்லை' என மாற்றி, 'இதுவல்லது உன்னிடம் நான் வேண்டுவது ஒன்றும் இல்லை' என்று உரைத்தலுமாம். மூன்றும் அடியில் "பைதல்" என்றதன் முதலெழுத்து ஒன்றரை மாத்திரையாய் நின்று எதுகையாயினமையின், நான்காம் அடியின் முதலெழுத்து இரண்டு மாத்திரையாய் நின்று எதுகையாயிற்று. மூன்றுமடியில், 'பய்தல்' என்று பாடம் ஓதுதலும், அவ்விடத்து, 'நான்காம் அடியின் முதலெழுத்து ஓசையொப்புமையான் எதுகையாயிற்று; இன்னோரன்னவை உயர்ந்தோர் செய்யுட்கண்வரும் ஒப்பியல்' என்று உரைத்தலுமே சிறப்புடையவாம். இவ்வொப்பியலை, 'ஆரிடப் போலி' என்பர்.

82. பொருள்கோள்: 'ஈசனே, எம்பிரான், நீசனேனை ஆண்டுகொண்ட நின்மலா, தேசனே, இங்கும் அங்கும் நீயல்லது இல்லை என்பதும், ஓர் பேதம் இன்மையும் பேதையேன் பேசினேன்; என் சிந்தை, ஓர் நின்னலால் ஓர் தேவர் உண்மை சிந்தியாது' எனக் கூட்டி, 'ஆதலின் எனக்கு இரங்கியருள்' எனக் குறிப்பெச்சம் வருவித்து முடிக்க.

இங்கும் - உலக நிலையிலும். அங்கும் - வீட்டு நிலையிலும். இல்லை - வேறு துணை இல்லை. ஓர் பேதம் - சிறிது வேற்றுமை; என்றது, எல்லாப் பொருளிலும் வேறறக் கலந்து நிற்றல். 'ஓர் பேதமும்' என்னும் இழிவு சிறப்பும்மையும், 'இன்மையும்' என்னும் எண்ணும்மையும் தொகுத்தலாயின. ஓர் நின்னலால் - ஒப்பற்ற உன்னையன்றி. பேதமின்மையை எடுத்தோதியது' எல்லாவற்றையும் சிவமாகக் காணும் உணர்வு பெற்றமையைக் குறித்தற்கு.

83 சிந்தை செய்கை கேள்வி வாக்குச் சீரில் ஐம்பு லன்களான்
முந்தை யான காலம் நின்னை எய்தி டாத மூர்க்கனேன்
வெந்தை யாவி ழுந்தி லேனென் உள்ளம் வெள்கி விண்டி
[லேன்
எந்தை யாய நின்னை இன்னம் எய்த லுற்றி ருப்பனே. (79)

---

83. இதனுள், "செய்கை" என்றது, அதற்குக் கருவியாகிய கன்மேந்திரியங்களைக் குறித்தன. இசை யோசையைக் கேட்கும்வழியன்றி எழுத்தோசையைக் கேட்கும் வழிச் செவி ஐம்பொறிகளின் வேறு வைத்து எண்ணப்படுமாகலின், அதனை, 'கேள்வி' என வேறாக ஓதினார். சீர் இல் - சிறப்பில்லாத. இது தாப்பிசையாய், முன்னரும் சென்று இயையும். "புலன்கள்" என்றது பொறிகளை. மெய்ந்நெறியில் தொழிற்படும் கருவி கரணங்கள் சிறப்புடையன (வீட்டுநிலையின) ஆகலின், உலகியலிற் செல்லும் அவற்றை, 'சிறப்பில்லன' என்றார். 'சிறப்பில்லன' என்றது, 'இழிவுடையன' என்னும் பொருட்டு. இழிவு, பிறவியில் வீழ்த்தல். இம் முதலடியில், அடிகள் இறைவனை அடைதற்குத் தடைசெய்தவற்றை விதந்தோதியருளினார். முந்தையான காலம் - முதலாய் நின்ற காலம்; அஃது இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட காலமாம். இதற்கு, 'ஆட்கொள்ளப்படுதற்கு முற்பட்ட காலம்' என உரைப்பாரும் உளர். அப்பொழுது எய்தாதொழிந்தமைக்கு அடிகள் இத்துணை இரங்குதற்கு ஓர் இயைபின்மையின், அஃது உரையாகாமை அறிக. விழுந்திலேன் - அழிந்திலேன். இனி, "வெந்து விழுந்திலேன்" என்றதனை, 'விழுந்து வெந்திலேன்' எனப் பின் முன்னாக்கி, 'தீயின்கண்' என்பதனை வருவித்து உரைப்பாரும் உள்ர். உள்ளம் வெள்கி விண்டிலேன் - நெஞ்சம் வெள்கிப் பிளந்திலேன். 'நின்னை எய்தலுற்று இன்னம் இருப்பன்' என்க. எய்தலுற்று - எய்த விரும்பி. இருப்பன் - உயிர்வாழ்வேன். 'அன்று நீ அழைத்த காலத்தில் அடையாது, இன்று அடைவதற்கு அவாவுகின்றேன்; இஃது என் அறியாமை இருந்தபடி' என்பதாம். முன்னர் இறைவனது குறிப்பின்வழிச் செல்லாது தம் குறிப்பின்படியே நின்றமை குறித்து, "மூர்க்கனேன்" என்று அருளிச்செய்தார். 'அம் மூர்க்கத்தன்மையின் பயனை இப்போது அடைகின்றேன்' என வருந்தியவாறு. இத் திருப்பாட்டு, அடிகளது உண்மையுள்ளத்தை எத்துணைத் தெளிவாகக் காட்டுகின்றது!

84 இருப்பு நெஞ்ச வஞ்ச னேனை ஆண்டு கொண்ட நின்னதாட்
கருப்பு மட்டு வாய்ம டுத்தெ னைக்க லந்து போகவும்
நெருப்பு முண்டி யானு முண்டி ருந்த துண்ட தாயினும்
விருப்பு முண்டு நின்கண் என்கண் என்ப தென்ன
[விச்சையே. (80)

---

84. 'நின' என்பது, விரித்தல்பெற்றது. "தாள்" என்றது, அதன்கண் எழும் இன்பத்தைக் குறித்தது. கருப்பு மட்டு - கருப்பஞ்சாறு. எனைக் கலந்து - என்னை அடைந்து; 'எனக்குக் கிடைத்து' என்றபடி. 'எனைக் கலந்து வாய் மடுத்து' என மாற்றி, 'கலந்தமையால் யான் வாய்மடுத்த பின், நீங்கிப் போகவும்' என உரைக்க. 'போகவும் இருந்தது' என இயையும். "நெருப்பும் உண்டு' என்றதன்பின்னும், "யானும் உண்டு" என்றதன் பின்னும், 'ஆக' என்பது வருவிக்க. 'உண்டு' என்பது மூவிடத்திற்கும் பொதுவாய் வருதல், பிற்கால வழக்கு. இருந்தது - நெருப்பில் வீழாது உயிர்வாழ்ந்திருந்தது. அதாயினும் - அந்நிலை உண்டாய பின்னும். 'அஃதாயினும்' எனப்பாடம் ஓதுதல் பொருந்தும். 'என்கண் நின்கண் விருப்பும் உண்டு' என மாறுக. விருப்பு - அன்பு. 'உயிர்வாழ்தலோடு இதுவும் உண்டு' எனப் பொருள் தருதலின், "விருப்பும்" என்ற உம்மை, இறந்தது தழுவிய எச்சம். என்ன விச்சை - என்ன மாய வித்தை. ஒருவரது அன்பிற்குரிய பொருள் நீங்கியபின் அவர் உயிர்வாழ்தலும், ஒருபொருள் நீங்கியபின்னும் உயிர்வாழ்வார் அப்பொருள்மேல் அன்புடையர் எனப்படுதலும் இயல்வன அல்ல ஆகலின், "நின்ன தாள் கருப்புமட்டுப் போகவும் யான் இருந்ததுண்டு; அஃதாயினும் என்கண் நின்கண் விருப்பும் உண்டு என்பது என்ன விச்சை" என்றார். "நெருப்பும் உண்டு; யானும் உண்டு" என்றது, 'யான் நெருப்பில் வீழாமைக்கு நின்பால் அன்பின்மையே காரணம்; பிறிதொரு காரணம் இல்லை' என்பதனை வலியுறுத்தவாறு. 'என் அவிச்சை' எனப் பிரித்து, 'உன்பால் எனக்கு அன்பு உண்டு என்பது என் அறியாமையே' என்று உரைப்பாரும் உளர்.

9. கலிநிலைத்துறை

௮5 விச்சுக் கேடு பொய்க் காகா தென்றிங் கெனைவைத்தாய் ;
இச்சைக் கானா ரெல்லாரும் வந்துன் தாள்சேர்ந்தார்
அச்சத் தாலே ஆழ்ந்திடு கின்றேன் ஆரூர்எம்
பிச்சைத் தேவா என்னான் செய்கேன் பேசாயே. (81)

---

85. இப்பகுதியில் அடிகள், ஏனைய அடியார்கள் பெற்ற பெரும்பேற்றை நினைந்து தமக்கு அதுவாயாமைக்கு வருந்தி அதனைத் தந்தருளுமாறு பல்லாற்றானும் வேண்டுகின்றார். இவ்வருத்தத்தினையே, 'ஆனந்த பரவசம்' என்றனர் போலும் முன்னோர் !

விச்சு, 'வித்து' என்பதன் போலி. கேடு - அழிவு. 'பொய்ம்மைக்கு விதைக்கேடு உண்டாதல் கூடாது என்னும் கருத்தினால் என்னை இவ்வுலகத்தில் வைத்தாய்' என்க. எனவே, 'பொய்ம்மைக்கு விதை தாமல்லது பிறரில்லை' என்ற வாறாயிற்று. "என்னை வகுத்திலை யேல்இடும் பைக்கிடம் யாது சொல்லே" என்ற திருநாவுக்கரசர் திருமொழியையும் (திருமுறை - 4, 105. 2.) காண்க. பொய்ம்மையாவது, பிறவி. பிறக்கும் உயிர்கள் பல உளவேனும், அப்பிறவி நீங்கும் வாயிலைப் பெற்றபின்னும் அதன்வழியே பிறவியை ஒழிக்கக் கருதாது மீளப் பிறவிக்கு வாயிலைப் பற்றி நிற்பதோர் உயிரில்லை என்னும் கருத்தால், இவ்வாறு கூறினார். கூறவே, 'அவ்வாயிலைப் பெற்ற ஏனைய அடியவர் பலரும் பிறவா நெறியை அடைந்தனர்; யான் அதனை அடைந்திலேன்' என்பது போதரலின், அதனையே இரண்டாம் அடியில் கிளந் தோதினார் என்க. இச்சைக்கு ஆனார் - உன் விருப்பத்திற்கு உடன்பட்டவர்கள் ; என்றதனால், அடிகள் அதற்கு உடம் பட்டிலாமை பெறப்பட்டது. அச்சம், பிறவிபற்றியது. 'இஃது இப்பொழுது உள்ள எனது நிலை' என்றபடி. 'யான் செய்யத் தக்கதைச் சொல்' என்பதாம்.

86 பேசப் பட்டேன் நின்னடி ; யாரில் திருநீறே
பூசப் பட்டேன் ; பூதல ரால்உன் அடியானென்
றேசப் பட்டேன் ; இனிப்படு கின்ற தமையாதால் ;
ஆசைப் பட்டேன் ஆட்பட் டேன்உன் அடியேனே. (82)

87 அடியேன் அல்லேன் கொல்லோ தானெனை ஆட்கொண்டிலை
[கொல்லோ
அடியா ரானா ரெல்லாரும் வந்துன் தாள்சேர்ந்தார் ;
செடிசேர் உடலம் இதுநீக்க மாட்டேன் எங்கள் சிவலோகா,
கடியேன் உன்னைக் கண்ணாரக் காணுமாறு காணேனே. (83)

---

86. பொருள்கோள்: 'திருநீறே (உன்னால்) பூசப்பட்டேன்; அதனால், பூதலரால் (முன்) உன் அடியாரில் (வைத்துப்) பேசப்பட்டேன் ; (இப்பொழுது அவர்களால்) உன் அடியான் (படுகின்ற துன்பம் இது) என்று ஏசப்பட்டேன் ; இனி (இத் துன்பத்தைப்) படுகின்றது (உன் அடியான் என்ற நிலைமைக்குப்) பொருந்தாது ; (ஆதலின்) உனக்கு ஆட்பட்டேனாகிய உன் அடியேன், அவ்வடியார்க்கு உரிய அந்நிலையைப் பெற ஆசைப் பட்டேன்.'

" திருநீறே பூசப்பட்டேன் " என்றதில் உள்ள ஏகாரம், ஏனைய அடியார்கள்போல உடன்வரும் நிலைமையை அருளாமையைப் பிரித்து நின்றது. 'அடியான்' என்னும் சொல், பிறிதொரு சொற்குறிப்பானன்றித் தானே இழிவுணர்த்தாமையின், அது தன்னையே இகழுரையாக உரைத்தல் பொருந்தாமை யறிக. "ஏசப்பட்டேன்" என்றமையால், "இனிப் படுகின்றது" என்றது, துன்பத்தை என்பதும், "உன் அடியேன் " என்றதனால், ஆசைப்பட்டது அதற்கேற்ற நிலையை என்பதும் பெறப்பட்டன. 'அதனைத் தந்தருள்' எனக் குறிப்பெச்சம் வருவித்து முடிக்க.

87. முதலடியை ஈற்றில் வைத்து உரைக்க. "கடியேன்", என்றதனை, "சேர்ந்தார்" என்றதன்பின்னர்க் கூட்டுக. செடி - துன்பம். காணுமாறு - காணும் வாயிலை. "காணேன்", என்றதன்பின், 'அதனால்' என்பது வருவிக்க. ஆட்கொள்ளப் பட்டு அடியராயினர் பெற்ற பயன் தமக்கு எய்தாமையின்,

88 காணு மாறு காணேன் உன்னை அந்நாட் கண்டேனும்
பாணே பேசி என்தன்னைப் படுத்த தென்ன பரஞ்சோதி
ஆணே பெண்ணே ஆரமுதே அத்தா செத்தே போயினேன்
ஏணு ணில்லா நாயினேன் என்கொண் டெழுகேன்
[எம்மானே. (84)

'இறைவன் தம்மை ஆட்கொண்டதாக நினைப்பது மயக்கமோ' என்று ஐயுறுவார்போல அருளினார். பாவினங்களின் அடிகட்கும் பிற்காலத்தார் சீர்வரையறுத்தாராயினும், அவற்றுள் சில அடிகள் சீர்மிக்கு வருதலும் முன்னைய வழக்கென்பது சிலப்பதிகாரம், சிந்தாமணி முதலியவற்றானும் அறியப்படும். அவ்வாற்றானே இத்திருப்பாட்டுள் இரண்டாமடி யொழிந்தவை அறுசீரடியாயின. மேல் வருவனவற்றுள்ளும் சில பாடலிற் சிலவும், பலவும் இவ்வாறு வருதல் காண்க. பத்துத் திருப்பாடலையும் ஓரினச் செய்யுளாகவே செய்யப் புகுந்தமையின், நான்கடியும் அறுசீராயினவும் ஈண்டு, 'கலித்துறை' என்றே கொள்ளப்படும்.

88. 'கண்டேனேனும்' என்பது 'கண்டேனும்' எனத் தொகுத்தலாயிற்று. பாண் - பாணர் மொழி; இன்சொல். 'உன்னை யான் அந்நாட் கண்டேனேனும் இன்று காணுமாற்றைக் காணேன்; அதனால், என்னை அன்று இன்சொற் பேசி உன்பாற் படுத்தது என் கருதி' என உரைக்க. 'உனது காட்சியை முன்போல வழங்கி, ஏனையோர்போல என்னையும் அழைத்துச் செல்லவேண்டும்' என்பது கருத்து. இறைவன், 'ஆண், பெண்' என்னும் இருவகைப் பிறப்பினையுடைய எல்லா உயிர்களிலும் கலந்துள்ளமை பற்றி, "ஆணே பெண்ணே" எனவும், 'அருளாதொழியின் நான் அழிந்தொழிதல் திண்ணம்' என்றற்கு, "செத்தேபோயினேன்" எனவும் அருளினார். ஏண் - வலிமை. "நாண்" என்றதன்பின், 'இரண்டும்' என்பது தொகுத்தலாயிற்று. என் கொண்டு - எதனைத் துணையாகக் கொண்டு. எழுகேன் - கரையேறுவேன்,

89 மானேர் நோக்கி யுடையாள் பங்கா! மறையீ றறியா [மறையோனே!
தேனே! அமுதே! சிந்தைக் கரியாய்! சிறியேன் பிழை [பொறுக்குங்
கோனே சிறிதே கொடுமை பறைந்தேன் சிவமா நகர்குறுகப்
போன ரடியார்; யானும் பொய்யும் புறமே போந்தோமே.

90 புறமே போந்தோம் பொய்யும் யானும்; மெய்யன்பு
பெறவே வல்லேன் அல்லா வண்ணம் பெற்றேன்யான்;
அறவே நின்னைச் சேர்ந்த அடியார் மற்றொன் றறியாதார்
சிறவே செய்து வழிவந்து சிவனே நின்தாள் சேர்ந்தாரே.

---

89. "கொடுமை" என்றதில், பொருட்டுப் பொருளதாகிய குவ்வுருபு விரிக்க. பறைந்தேன் - விரைந்தேன். 'கொடுமை செய்வதற்குச் சிறிதே விரைந்தேன்' என்றபடி. இறைவன் தம்முன் இருந்து மறைந்த அந்நாளில் உடன் செல்ல மாட்டாதிருந்தமையையே அடிகள், சிறிது கொடுமை செய்ய விரைந்ததாக அருளினார். அஃது இறைவன் திருக்குறிப்பிற்கு மாறுதல்பற்றி, "கொடுமை" என்றார். எனினும், 'பிழை' என்பதே பொருளாகக் கொள்ளற்பாற்று. 'நீ அடியவர் செய்யும் பிழையைப் பொறுக்கும் தலைவனாதலின் பொறுத்தருளவேண்டும்' என்பார், "சிறியேன் பிழைபொறுக்குங் கோனே" என விளித்தார். 'யான் அடியவரோடு சிவமாநகர் குறுகப் போகாமல், பொய்ம்மையோடு வேறோரிடம் குறுகப் போனேன்' என்பார், "யானும் பொய்யும் புறமே போந்தோம்" என்றார். இங்ஙனம் பொய்ம்மையைத் தம்மோடு ஒப்பவைத்து எண்ணியது, 'அது வல்லது எனக்கு நட்புப் பிறிதில்லை' எனக் கூறுமுகத்தால், அப்பொய்ம்மையால் தமக்குக் கேடு விளைந்தமையைக் குறித்தற்கு. பொய்ம்மை, இறைவன்வழியையன்றித் தம்வழியைப் பொருளாகத் துணிந்தமை. சிவமாநகர்க்குப் புறமாவது இவ்வுலகு. 'நின்னிற் சிறந்த பொருள் பிறிதில்லையாகவும் உளதாக எனது பேதைமையால் நினைந்தேன்' என்றற்பொருட்டே முதற்கண் இறைவனை, 'தேனே! அமுதே!' என்றற்றொடக்கத்தனவாகப் பலவற்றான் விளித்தருளிச் செய்தார்.

90. வல்லேன் - மாட்டேன்; இது, 'வல்லுதல்' என்னும் தொழிலடியாகப் பிறந்த எதிர்மறைவினை; 'வன்மை' என்னும்

91 தாராய் உடையாய் அடியேற் குன்தா ளிணையன்பு;
பேரா உலகம் புக்கா ரடியார் புறமே போந்தேன்யான்;
ஊரா மிலேக்கக் குருட்டா மிலேத்திங் குன்தா ளிணையன்புக்
காரா அடியேன் அயலே மயல்கொண் டழுகேனே. (87)

பண்படியாகப் பிறந்ததாயின், 'வன்மையுடையேன்' எனப் பொருள்படும். இதன்பின், 'ஆதலின்' என்பது வருவித்து, 'மாட்டாமையான் அல்லாத தன்மையை (பொய்யன்பை)ப் பெற்றேன்' என உரைக்க. 'இஃது என் தன்மை, நின்னை; முற்றச் சார்ந்த அடியவரே உன்னையன்றிப் பிறிதொன்றைப் பொருளாக அறியாதவர்; அதனால், வீடுபேற்றிற்குரியவற்றையே செய்து உனது திருவடியை அடைந்தார்' என்பது பின்னிரண்டடிகளின் பொருள். அறவே - முற்றிலும். சிறவு - சிறப்பு; வீடுபேறு; இஃது இதற்கு ஏதுவாய செயல்களைக் குறித்தது. நிரம்பிய அடிமையை உடையவரது செயல்கள் இவை எனவே, இவற்றின் மறுதலையாயவை தமது செயல்கள் என்பதும், அதனால் தாம் இறைவன்தாள் சேராராயினர் என்பதும் கூறியவாறாயிற்று. ஆகவே, 'யான் இங்குக் கிடந்து அலமருதல் என் குற்றமன்றி உன் குற்றம் அன்று' என்பதும் குறித்தவாறும். "என்னை லறியாப் பதந்தந்தாய் யான் அதறியாதே கெட்டேன் - உன்னால் ஒன்றுங் குறைவில்லை" (ஆனந்தமாலை - 2.) எனப் பின்னர் வெளிப்படையாகவே அருளிச்செய்வர்.

91. முதலடியை இறுதியிற் கூட்டி உரைக்க. மிலேத்தல் - கனைத்தல். 'ஊர் ஆ மிலேக்கக் குருட்டு ஆ மிலேத்து' என்றது, ஊரிலுள்ள ஏனைய பசுக்கள் மாலைக்காலத்தில் தம் இல்லத்தை அணுகியபொழுது தம் கன்றுகளைக் கனைத்து அழைக்க, குருட்டுப் பசுவும் தன் இல்லத்தை அணிமையிற் கண்டது போலத் தன் கன்றினைக் கனைத்து அழைத்தலையாம். 'மிலேத்து' என்றது, 'மிலேத்தது' போன்ற செயலைச் செய்து' என உவமை குறித்து நின்றது. 'கனி இருக்கக் காய் கவர்ந்த கள்வனேன்', 'பனிநீராற் பரவை செயப் பாவித்தேன்' (திருமுறை - 4 - 5 - 1, 4.) என்றாற்போல. இதனால், 'மெய்யடியார்கள் நீ பேரின்பப் பொருளாதலை உணர்ந்து உன்னை, 'தேனே அமுதே கரும்பின் தெளிவே,

92 அழுகேன் நின்பால் அன்பாம் மனமாய் ; அழல்சேர்ந்த
மெழுகே அன்னுர் மின்னுர் பொன்னுர் கழல்கண்டு
தொழுதே உன்னைத் தொடர்ந்தா ரோடுந் தொடராதே
பழுதே பிறந்தேன் என்கொண் டுன்னைப் பணிகேனே. (88)

93 பணிவார் பிணிதீர்த் தருளிப் பழைய அடியார்க்குன்
அணியார் பாதங் கொடுத்தி அதுவும் அரிதென்ருல்
திணியார் மூங்கி லனையேன் வினையைப் பொடியாக்கித்
தணியார் பாதம் வந்தொல்லை தாராய் பொய்தீர்
[மெய்யானே. (89)

என்று இன்புற்றுப் புகழ, அதனைக் கண்டு யானும் அவ்வாறே புகழ்கின்றேன்' எனக் குறித்தவாறும். 'மிலைத்து ஆரா' என இயையும். மிலைத்து - மிலைத்தலால். ஆரா - பொருந் தாத; ஏற்புடையேனுகாத, வருகின்ற திருப்பாட்டு, 'அழுகேன்' எனத் தொடங்குதலால், இப்பாட்டின் இறுதிச் சொல்லை, 'எழுகேன்' என ஓதுதல் பாடமாகாமை யறிக. ''மிலைத் திங்கு'' என்ற பாடத்தை, மிலைத்தாங்கு' என ஓதி, அதனை, அன்பு வேண்டி அழுதற்கு வந்த உவமையாக்கி உரைப்பாரும் உளர். அவர், ''மயல்கொண்டு'' என்றதற்கு, ''ஆசைப்பட்டு'' எனப் பொருள் உரைப்பாரும் உளர். மோனை கருதி, 'போரா உலகம்' எனப் பாடம் ஓதி, 'போதா' என்பது, ''போரா'' என மருவிற்று எனக் கொள்ளுதலும் உண்டு.

92. 'அழல்சேர்ந்த மெழுகே அன்னுராகிய தொடர்ந் தார்' என்க. 'மெழுகே அன்னுர் தொடர்ந்தார்; அவரோடும் என ஓதற்பாலதனை இங்ஙனம் சுருங்க ஓதினர். பழுது - குற் றம். 'பிறந்தேன்' என, இடத்து நிகழ்பொருளின் தொழில் இடத்தின்மேல் ஏற்றப்பட்டது. என்கொண்டு - என்ன முறை மையைக் கொண்டு. ''பணிகேன்'' என்றது, 'பணிந்து இரக் கேன்' என்னும் பொருளதாய் நின்றது. இரத்தல், பேரா உலகத்தையாம். அன்பாம்மனத்தோடு அழுதல் உண்மையே; ஆயினும், உன்னைத் தொடர்ந்தாரோடு கூடி உன்னைத் தொடராது நின்றயான் இப்பொழுது என்ன முறைமைபற்றி என்னை உன்பால் அழைத்துக் கொள்ளும்படி உன்னை வேண்டு வேன்' என்றவாறு. ''பிறந்தேன்,'' வினையாலணையும் பெயர்,

93. ''பணிவார்'' என்றது முற்று. ''பழைய அடியார்'' எனப் பின்னர் வருகின்றமையின் வாளா, ''பணிவார்'' என்ருர்.

94 யானே பொய், என் நெஞ்சும் பொய், என் அன்பும்பொய்
யாஞல் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே?
தேனே! அமுதே! கரும்பின் தெளிவே தித்திக்கும்
மானே அருளாய் அடியேன் உனைவந் துறுமாறே. (90)

எனவே, 'பழைய அடியார் உன்னையே பணிவார்; அவர்க்குப் பிணி தீர்த்தருளி உன்பாதங் கொடுத்தி' என உரைத்தல் உரையாயிற்று. புனல் காலே உண்டியாக, கானின்று வற்றியும் புற்றெழுந்தும் செய்யும் தவங்களினும் இறைவனை வணங்குதல் எளிதிற் செயற்பாலதாகலின், "அதுவும் அரிதென்ருல்" என்ருர். "யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை" (திருமந்திரம்-252.) என்று அருளியதும் காண்க. "வினையைப் பொடியாக்கி" என்றதனுல், 'அதனையும் எனக்கு அரிதாகச் செய்தது என்வினை என்ருல், அவ்வினையை முதற்கண் நீக்கி உன்னைப் பணியச்செய்து, பின்பு வந்து உன் பாதம் தாராய்' என்பது பொருளாயிற்று. "ஒல்லை" என்றதனை "பொடியாக்கி" என்றதற்கு முன்னே கூட்டுக. பொய்தீர் மெய்யானே - பொய்யை நீக்கியருளுகின்ற மெய்ப்பொருளாய் உள்ளவனே.

94. "யானே" என்னும் பிரிநிலை ஏகாரம் சிறப்புணர்த்தி நின்றது. சிறப்பு, 'உறுப்பும், பண்பும்' ஆகியவற்றிற்கு முதலாய் நிற்றல். "நெஞ்சு" என்றது நினைப்பினை. "யானே பொய்" என்றதனுல், 'நெஞ்சும் பொய், அன்பும் பொய்' என்றவை, வலியுறுத்தல் மாத்திரையாய் நின்றன. 'இங்ஙனமாயின் வருந்தினுல்மட்டும் உன்னைப் பெறுதல் கூடுமோ? கூடாதாகலின், அடியேன் உன்னைவந்து அடையும் வழியை அருளாய்' என்பது ஏனைய அடிகளின் பொருள்.

"உருகுவது உள்ளங்கொண்டு ஓர்உருச் செய்தாங்கு எனக்கு அள்ளூருக்கை அமைத்தனன்" (திருவண்-175-177.), "மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து......கண்ணீரரும்பி...... உன்னைப் போற்றி சயசய போற்றி என்னும் கைதான் நெகிழ விடேன்" (திருச்சதகம்-1) என்ருற்போல் முன்னரும் இவ்வாறே பின்னரும் அடிகள் பல விடத்தும் அருளுதலின், அவர் இறைவன் மாட்டு உள்ளம் நெக்குருகி

10. எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

95 மாறி லாதமாக் கருணை வெள்ளமே
வந்து முந்திநின் மலர்கொள் தாளிணை
வேறி லாப்பதப் பரிசு பெற்றநின்
மெய்ம்மை அன்பர்உன் மெய்ம்மை மேவினர் ;
ஈறி லாதநீ எளியை யாகிவந்
தொளிசெய் மானுட மாக நோக்கியுங்
கீறி லாதநெஞ் சுடைய நாயினேன்
கடையன் ஆயினேன் ; பட்ட கிழ்மையே. (91)

இடையறாது கண்ணீர் பெருக்கி நின்றமை தெளிவாதலின், அவர் அந்நிலையைப் பெறாது அதனையே அவாவி நின்றாராக வைத்து, " பெறலாமே " என்றதற்கு, 'பெறுதல் கூடும்' என உடன்பாடாகப் பொருளுரைத்தல் பொருந்தாமை யறிக. இங்ஙனமாகவே, " என் அன்பும் பொய் " என்றது, மெய்விதிர்த்தல், கண்ணீரரும்புதல் முதலியவை நிகழாமை பற்றிக் கூறியதாகாது, " முனைவன் பாதநன் மலர் பிரிந்திருந்தும் நான் முட்டிலேன் தலைகிறேன் " " தீயில் வீழ்கிலேன் திண்வரையுருள்கிலேன் " (திருச்சதகம் - 37 39.) என்றாற் போல அருளிய நிலைபற்றியே வருந்தி அருளிச்செய்ததாதல் அறியப்படும். படவே, 'எய்தவந்திலாதார் எரியிற் பாய்ந் தமை (கீர்த்தி-132.) போல்வதொரு செயலால் இறைவன் திருவடியைப் பெறுதல் கூடுமன்றி, அதுமாட்டாது ஏங்கி அழுதலால் மட்டும் பெறுதல் கூடாது' என்பதனையே, "அழுதால் உன்னைப் பெறலாமே " என்று அருளினர் என்பது இனிது விளங்கும். இன்னும், 'பெறுதல் கூடும்' என்பது கருத்தாயின், 'ஆனாலும்' என உம்மை கொடுத்து ஓதுதல் வேண்டும் என்க,

95. முன்னைப் பகுதியில், இறைவன் பிரிவினால் உயிர்விடத்தக்க ஆற்றாமையைத் தரும் பேரன்பினை வேண்டிய அடிகள், இவ் இறுதிப் பகுதியில், அவ்வன்பின் முடிந்த பயனாகிய திருவடி கூடுதலையே வேண்டுகின்றார். இது பற்றியே இதற்கு, 'ஆனந்தாதீதம்' எனக் குறிப்புரைத்தனர் முன்னோர். ஆனந்த அதீதம் - இன்பத்தை வேறாக உணரும் உணர்வும் அடங்கப் பெற்று, அவ்வின்பத்தில் அழுந்திநிற்கும் நிலை.

96 மையி லங்குநற் கண்ணி பங்கனே !
வந்தெனைப்பணி கொண்ட பின்மழக்
கையி லங்குபொற் கிண்ணம் என்றலால்
அரியை யென்றுனைக் கருது கின்றிலேன் ;
மெய்யி லங்குவெண் ணீற்று மேனியாய்
மெய்ம்மை அன்பர்உன் மெய்ம்மை மேவினர் ;
பொய்யி லங்கெனைப் புகுத விட்டுநீ
போவ தோசொலாய் பொருத்த மாவதே. (92)

மாறுஇலாத - வற்றுதல் இல்லாத. "வந்து முந்தி" என்றதனை, "உன் மெய்ம்மை மேவினர்" என்றதற்கு முன்னர்க் கூட்டி, 'உன்பால் வந்து, என்னின் முற்பட்டு' என உரைக்க; மலர்கொள் - மலர்தலைக் கொண்ட; எங்கும் நிறைந்த. 'தாளிணையின்' என, நீக்கப் பொருட்கண் வந்த இன்னுருபு விரிக்க. வேறு இலாப் பதம் - வேறுதல் இல்லாத பக்குவம். பரிசு - தன்மை. மெய்ம்மை - நிலையான இன்பம்; ஆகுபெயர். 'என் உடம்பு ஒளிசெய் மானுட மாம்படி நோக்கியும்' என உரைக்க. ஒளிசெய்தலை, ஞானத்தைத் தருதலாகக் கொண்டு இறைவற்கு ஆக்கின், 'ஆக' என்றதனை, 'ஆகி' என ஓதுதல் வேண்டும். கீறிலாத - கிழிக்க இயலாத; வலிய. 'ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தாம் அடங்கா தவர், ஓதி உணராத பேதையாரினும் பெரும்பேதையாராதல் போல, நீ எதிர்வந்து அருள்செய்யப்பெற்றும் உருகாத நெஞ்சத்தையுடைய நான், அவ்வாறு அருள்செய்யப்பெறாத கடையரினும் பெரிதும் கடையனாயினேன்' என்றதாம். 'நான் பட்ட கீழ்மை இது' எனப் பயனிலை வருவித்து முடிக்க. 'இக்கீழ்மையை நீக்கி, உன் மெய்ம்மை அன்பர் பெற்ற நிலையை எனக்கும் அளித்தருள்' என்பது குறிப்பெச்சம்.

96. மழ - மழவு; குழவி. "என்று" என்றதனை, 'என' என்று திரித்து, உவம உருபாக்குக. "மழக் கையிலங்கு பொற்கிண்ணம் என்றலால்" என ஓதினாரேனும், 'கையிலங்கு பொற்கிண்ணத்தை மழவு எண்ணுதல் என அல்லால்' எனப் பொருளுக்கேற்ப மாறுதல் கருத்தாதல் அறிக, 'பொற்கிண்ணம் குழவி கையிற் கிடைத்ததாயின், அதனை அஃது ஏனைய சில பொருள்களோடொப்ப எளிய பொருளாகக்

97 பொருத்த மின்மையேன் ; பொய்ம்மை யுண்மையேன் ;
போத என்றெனைப் புரிந்து நோக்கவும்
வருத்த மின்மையேன் வஞ்ச முண்மையேன்
மாண்டி லேன் ; மலர்க் கமல பாதனே
அரத்த மேனியாய் அருள்செய் அன்பரும்
நீயும் அங்கெழுந் தருளி இங்கெனை
இருத்தி னுய்முறை யோஎ னெம்பிரான்
வம்ப னேன்வினைக் கிறுதி யில்லையே. (93)

கருதுதல் போலவே, என்முன் வந்து என்னைப் பணிகொண்ட உன்னை நான் ஏனைய சிலரோடொப்ப எளியையாகக் கருதினே னன்றி அரியையாகக் கருதிற்றிலேன்' என இதனை விரித் துரைத்துக்கொள்க. 'என் இபல்பு இதுவாயிற்று' என்பார் இறந்த காலத்தாற் கூறுது, நிகழ்காலத்தாற் கூறினர். 'எளிய னுகக் கருதினேன்' என்றது, அழைத்தபொழுது செல்லாமல், 'பின்னர்ச் சென்று அடைவோம்' என்று பிற்பட்டு நின்ற மையை என்க. 'உன் மெய்ம்மை அன்பர் இவ்வாறின்மை யால், உன்னை முன்பே வந்து அடைந்துவிட்டார்கள் ; யான் பிற்பட்டு நின்றது எனது அறியாமையாலே என்பார், "பொய் இலங்கு எனை" என்றும், 'யான் எனது அறியாமை காரண மாகப் பிற்பட்டு நிற்பினும், என்னை வற்புறுத்தி உடன்கொண்டு செல்லாது மீளவும் முன்போலவே உலகியலில் புகும்படி விட்டுப் போவது, அறைகூவி ஆட்கொண்ட உனது அருளுக்குப் பொருத்தமாகுமோ? சொல்' என்பார், 'புகுதவிட்டு நீ போவதோ பொருத்தமாவது சொலாய் என்றும் அருளிச் செய்தார்.

97. "பொய்ம்மை உண்மையேன்" என்றதன்பின், 'ஆயினும்' எனவும், 'வஞ்சம் உண்மையேன்' என்றதன்பின், 'ஆதலின்' எனவும் நின்ற சொல்லெச்சங்களை வருவித்துரைக்க. போத - போதுக; வருக. புரிந்து - விரும்பி. வஞ்சம் - வேறோர் எண்ணம்; என்றது, உலகியற் பற்றினை. "மாண்டி லேன்" என்றதற்கு, 'பிரிவாற்றுமையால்' என்னும் காரணம், ஆற்றலாற் கொள்ளக்கிடந்தது. "மலர்க் கமலம்" என்றது, பின் முன்னுக நின்ற ஆறுவதன் தொகை. அரத்தம் - சிவப்பு. "அருள்செய் அன்பா" என்றது, செயப்படுபொருள்மேல்.

98 இல்லை நின்கழற் கன்ப தென்கணே
ஏலம் ஏலுநற் குழலி பங்கனே!
கல்லை மென்கனி யாக்கும் விச்சைகொண்
டென்னை நின்கழற் கன்ப னாக்கினாய்;
எல்லை யில்லை நின் கருணை யெம்பிரான்
ஏது கொண்டுநான் ஏது செய்யினும்
வல்லை யேயெனக் கின்னும் உன் கழல்
காட்டி மீட்கவும் மறுவில் வானனே. (94)

தொக்க வினைத்தொகை. "அன்பரும் நீயும் அங்கு எழுந் தருளி" எனவும், "எனை இங்கு இருத்தினாய்" "வம்பனேன் வினைக்கு இறுதி இல்லையே" எனவும் போந்த சொற்கள், அடிகளது ஆற்றாமை நனிமிக விளக்குவனவாம். முறையோ - நேர்மையோ. வம்பன் - பயனில்லாதவன்.

98. "அன்பது" என்றதில் அது, பகுதிப்பொருள் விகுதி. ஏலம்-மயிர்ச்சாந்து. ஏலும்-பொருந்தும். "நற்குழலி" என்றதில் நன்மை-அழகு. ஆக்கும் விச்சை-ஆக்குகின்ற வித்தை போல்வதொரு வித்தை. "கருணை" என்றதில் நான்கனுருபு தொகுத்தலாயிற்று. 'நின்கருணைக்கு எல்லை இல்லை' என மாற்றி, 'ஆதலின்' என்னும் சொல்லெச்சம் வருவிக்க. "வல்லை" என்றதை "மீட்கவும்" என்றதன் பின்னர்க் கூட்டுக. மறு - குற்றம். குற்றமில்லாத வானம், சிவலோகம். 'என்கணே நின்கழற்கு அன்பு இல்லையாகவும், நின் கருணைக்கு எல்லை இல்லை ஆதலின், கல்லை மென்கனியாக்கும் விச்சை கொண்டு என்னை முன்பு நின்கழற்கு அன்பனாக்கினாய்; அது போலவே, நான் இப்பொழுது ஏதுகொண்டு ஏது செய்யினும் இன்னும் எனக்கு உன்கழல்காட்டி மீட்கவும் வல்லையே' என்க. "கொண்டு" என்பது மூன்றுவதன் பொருள்தரும் இடைச் சொல்லாதலின், 'எக்காரணத்தால் எதனைச்செய்யினும்' எனப் பொருள் கூறுக. "வல்லையே" என்றதில் உள்ள ஏகாரம் தேற்றம். எனவே, 'இனியும் என்னை மீட்க நீ வல்லாய் என்னும் துணிவுடையேன்' என்பது பொருளாயிற்று. "மீட்கவும்" என்ற உம்மை, சிறப்பு.

99 வான நாடரும் அறியொ ணாதநீ,
மறையில் ஈறுமுன் தொடரொ ணாதநீ,
ஏனை நாடருந் தெரியொ ணாதநீ
என்னை இன்னிதாய் ஆண்டு கொண்டவா,
ஊனை நாடகம் ஆடு வித்தவா,
உருகி நான்உனைப் பருக வைத்தவா,
ஞான நாடகம் ஆடு வித்தவா
நைய வையகத் துடைய விச்சையே. (95)

100 விச்ச தின்றியே விளைவு செய்குவாய்
விண்ணும் மண்ணகம் முழுதும் யாவையும்
வைச்சு வாங்குவாய் வஞ்ச கப்பெரும்
புலைய னேனைஉன் கோயில் வாயிவிற்

---

99. இறைவனது அருமை தோன்ற, "நீ" என்றதனைப் பலமுறை கூறினர். மறையில் ஈறும் - வேதத்தில் முடிவாயுள்ள பகுதியும். உம்மை, சிறப்பு. ஏனை நாடர் - தேவருலகிற்கு மேற்பட்ட சத்தியலோகம் முதலியவற்றில் உள்ளவர். அவர், பிரமன் முதலியோர். 'இனிதாய்' என்பது, விரித்தலாயிற்று. "ஆண்டுகொண்டவா" என்றது முதலிய நான்கிடத்தும், 'ஆறு' என்பது கடைக்குறைந்து நின்றது. அவற்றிலெல்லாம் எண்ணும்மை விரித்து, அவற்றை, எஞ்சிநின்ற, 'வியப்பைத் தருவன்' என்பதனோடு முடிக்க. ஊனை - உடம்பை. உடம்பை ஆடச் செய்த நாடகம், உலகியல். ஞானநாடகம், ஆனந்தக் கூத்து, எனவே, 'முன்பு உடம்பை ஊன நாடகம் ஆடுவித்த வாறும், பின்பு உயிரை ஞானநாட்கம் ஆடுவித்தவாறும்' என்ற தாயிற்று. 'ஊன நாடகம்' எனப் பாடம் ஓதி, ஆடுவித்தமை இரண்டிற்கும், 'என்னை' என்பதனைச் செயப்படுபொருளாகக் கொள்ளுதலே சிறக்கும். பருகுதல் - அனுபவித்தல். வையகத்து உடைய விச்சை நைய - உலகின்கண் யான் கொண்டிருந்த பாச ஞானம் கெட. இதனை, "ஞானநாடகம் ஆடுவித்தவா" என்றதற்கு முன்னே கூட்டுக. 'இச்சை' எனப் பிரித்தல், அந்தாதிக்கு ஒவ்வாமை யறிக.

100. விச்சு - வித்து. 'வித்தில்லாமலே விளைவை உண்டாக்குவாய்' என்றது. 'அதுபோன்ற செயல்களைச்

பிச்ச ணுக்கினய் ; பெரிய அன்பருக்
குரிய ணுக்கினய் ; தாம்வ ளர்த்ததோர்
நச்சு மாமர மாயி னுங்கொலார் ;
நானும் அங்ஙனே உடைய நாதனே. (96)

செய்வாய்' என்றபடி. "விச்சின்றி நாறுசெய் வானும்" (திருமுறை - 4 - 4. 2.) என்று அருளிச்செய்ததும் இவ்வாறும். இறைவன் இங்ஙனம் செய்தல் என்பது, சில காரியங்களை அவற்றிற்குரிய நியத காரணம் இல்லையாகவும், பிற காரணமே காரணமாய் அமைய அவற்றை நிகழச் செய்தலாம். அது, நாவுக்கரசர்க்குக் கல்லே தெப்பமாய் அமையக் கடலைக் கடந்து கரையேறச் செய்தமை, ஞானசம்பந்தருக்கு ஆண்பனைகளே பெண்பனைகளாய்க் காய்தரச் செய்தமை, சுந்தரருக்குச் செங் கல்லே பொன்னுகிப் பயன்படச் செய்தமை போல்வனவாம். இவைபோலும் செயல்கள் பிறவும் கேட்கப்படுதலின், அவை பற்றியே அடிகள் இவ்வாறு அருளிச்செய்தாராவர். எனினும், தமக்கு இறைவனைக் காணும் முயற்சியின்றியும் அவன் தானே வந்து தம்மைத் தலையளித்தாட்கொண்டமையைக் குறிப்பிடு தலே கருத்தென்க. இனி இப்பகுதி, உயிர்களின் முதற்பிறப் பிற்கு வினையாகிய காரணம் இல்லையாகவும், அவைகட்கு முதற் கண் நுண்ணுடம்பைக் கொடுத்துப் பின் அதன்வழித் தோன் றிய வினைக்கிடான பிறவியைத் தருதலைக் குறிப்பதாகச் சிவ ஞானபோத மாபாடியத்துள் உரைக்கப்பட்டவாற்றையும் அறிக. வைச்சு - வைத்து. வைப்பது உயிர்களிடம் என்க. கோயில், திருப்பெருந்துறையில் உள்ளது. "திருப்பெருந் துறையுறை கோயிலும் காட்டி" (திருப்பள்ளி - 8.) எனப் பின்னரும் அருளிச்செய்வர். பிச்சன் - பித்தன். உரியன் - அடியவன். "தாம்" என்றது மக்களை என்பது, பின்னர் வருவனவற்ருல் விளங்கிக் கிடந்தது, ஓர் - ஒரு. இது சிறப் பின்மை குறித்தது. மா - பெரிய. 'மா நச்சு மரம்' என மாற்றிக்கொள்க. 'மிக்க நஞ்சாய மரம்' என்றது, காய் கனி முதலியவற்றை உண்டாரை அப்பொழுதே கொல்லும் எட்டி மரம் போலும் மரங்களை. 'அம்மரங்களால் தீங்கு உண்டாதல் அறிந்திருந்தாலும், வளர்த்தவர் வெட்டமாட்டார் கள்' என்றபடி. "வளர்த்தது" என்றதற்கு, 'அறியாது வளர்த்தது' எனவும், "ஆயினும்" என்றதற்கு, 'ஆதல்

101 உடைய நாதனே போற்றி! நின்னலால்
　　பற்று மற்றெனக் காவ தொன்றினி
உடைய னேபணி போற்றி! உம்பரார்
　　தம்ப ராபரா போற்றி! யாரினுங்
கடைய னாயினேன் போற்றி! என்பெருங்
　　கருணை யாளனே போற்றி! என்னைநின்
அடிய னாக்கினாய் போற்றி! ஆதியும்
　　அந்த மாயினாய் போற்றி! அப்பனே. (97)

102 அப்ப னேயெனக் கமுத னேஆ
　　னந்த னேஅகம் நெகஅள் ளூறுதேன்
ஒப்ப னேஉனக் குரிய அன்பரில்
　　உரிய னாய்உனைப் பருக நின்றதோர்
துப்ப னேசுடர் முடிய னேதுணை
　　யாள னேதொழும் பாள ரெய்ப்பினில்
வைப்ப னேஎனை வைப்ப தோசொலாய்
　　நைய வையகத் தெங்கள் மன்னனே. (98)

அறியப்படினும்' எனவும் உரைப்பினும் அமையும். "நானும் அங்ஙனே" என்றது, 'நானுக்கும் உனக்கு அத்தன்மையனே' என்றபடி. உவமைக்கண், வளர்த்தது, கொல்லுதல் என்றவற்றிற்கு ஏற்பப் பொருட்கண் கருதப்பட்டன. கோயில் வாயிலில் பிச்சனாக்கி அன்பருக்கு உரியனாக்கினமையும், பின் கைவிடுதலையுமாம்.

101. ஆவது - நன்மை தருவது. 'எனக்கு ஆவது பற்று மற்று இனி ஒன்று உடையனோ' என்க. பணி - சொல்லு. உம்பரார்-தேவர். பராபரன் - முன்னும் பின்னும் உள்ளவன். இத் திருப்பாட்டில் வணக்கமே கூறினர்.

102. அள் ஊறு - உள்ளே சுரக்கின்ற. அன்பரில் - அன்பரைப்போல. துப்பன் - பற்றுக்கோடானவன். 'என்னை வையகத்து நைய வைப்பதோ' என மாற்றி, 'வைப்பதோ பொருத்தம்' எனச் சொல்லெச்சம் வருவித்து முடிக்க.

103 மன்ன எம்பிரான் வருக என்னெனை
மாலும் நான்முகத் தொருவன் யாரினும்
முன்ன எம்பிரான் வருக என்னெனை
முழுதும் யாவையும் இறுதி யுற்றநாள்
பின்ன எம்பிரான் வருக என்னெனைப்
பெய்க ழற்கண்அன் பாயென் நாவினுற்
பன்ன எம்பிரான் வருக என்னெனைப்
பாவ நாசநின் சீர்கள் பாடவே. (99)

104 பாட வேண்டும்நான் போற்றி! நின்னையே
பாடி நைந்துநைந் துருகி நெக்குநெக்
காட வேண்டும்நான் போற்றி! அம்பலத்
தாடு நின்கழற் போது நாயினேன்
கூட வேண்டும்நான் போற்றி! இப்புழுக்
கூடு நீக்கெனைப் போற்றி! பொய்யெலாம்
விட வேண்டும்நான் போற்றி! வீடுதந்
தருளு போற்றிநின் மெய்யர் மெய்யனே. (100)

திருச்சிற்றம்பலம்.

---

103. 'மன்ன, முன்ன, பின்ன, பன்ன' எனவும், "எம்பிரான்" என வந்தனவும் விளிகள். பன்னன் - துதிக்கப் பட்டவன். இத் திருப்பாட்டில், 'நின் சீர்கள் பாட என்னை வருக என்று அழை' என்பதே அருளிச் செய்தார். பாடுதல், சிவலோகத்தில் என்க.

104. 'நான் நின்னையே பாட வேண்டும்' எனக் கூட்டுக. பிறவும் அங்ஙனம் கூட்டற்பாலன. போது - மலர். புழுக் கூடு - புழுக்களுக்கு உறைவிடமான இடம்; உடம்பு. 'புழுக் கூட்டினை நீக்கு' என்றது, 'உன்பால் சேர்த்துக்கொள்' என்னும் பொருளதாதலின், "எனை" என்ற இரண்டாவதற்கு முடிபாயிற்று. வீடவேண்டும் - நீங்கவேண்டும். பொய் - உலகப் பற்று. மெய்யர் மெய்யன் - மெய்யன்பர்களுக்கு மெய்ப் பொருளாய் உள்ளவன். இத் திருப்பாட்டில் தம் விருப்பங்கள் பலவற்றையும் பன்முறை வணக்கங்கூறி விண்ணப்பித்துக் கொண்டார். முதல் திருப்பாட்டின் முதற் சொல்லாகிய, 'மெய்' என்பதனுலே இவ்விறுதித் திருப்பாட்டு முடிந்திருத்தல் அறியத்தக்கது.

6. நீத்தல் விண்ணப்பம்

['நீத்தல் விண்ணப்பம்' என்பது, 'இறைவன் தம்மைக் கைவிடுதலைப் பற்றிச் செய்யும் விண்ணப்பம்' எனப் பொருள் தரும். அஃதாவது, 'நீ என்னைக் கைவிடுவையாயின், அடியேன் முன்போலவே உலகியலில் கிடந்து பிறப்பிற்கு ஆளாவேன்; அதனால், என்னைக் கைவிடாது ஏற்றருள்க' என்று வேண்டுதல். எனவே, இஃது உலகியலில் தமக்கு விருப்பம் இன்மை கூறுதலாக அமைவதால், இதற்கு 'பிரபஞ்ச வைராக்கியம்' எனக் குறிப்புரைத்தனர் முன்னோர். இதனை அடிகள், 'உத்தரகோச மங்கை' என்னும் தலத்தில் அருளிச்செய்தார் என்பது இத்திருப் பாட்டுக்களிலே நன்கு பெறப்பட்டுக் கிடக்கின்றது. "உத்தர கோச மங்கையுள் இருந்து-வித்தக வேடம் காட்டிய இயல்பும்" (கீர்த்தி - 48, 49.) என மேல் அருளிச்செய்தமையால், இவ் விண்ணப்பத்தைச் செய்த பின்னர், அடிகட்கு இறைவன் தனது திருவுருவத்தை மீளக் காட்டி, அவரைத் தேற்றுவித்தருளினான் என்பதும் கொள்ளக்கிடக்கின்றது. இதனைப் புராணம் சிறிது வேறுபடக் கூறும். இறைவன் தேற்றுவித்த முறை இன்னதென்பதனை அறியக்கூடவில்லை. ஐம்பது திருப்பாடல்களால் இயன்றிருத்தலின், இதனைத் திருச்சதகத்தின் பின்னர்க் கோத்தனர்.]

கட்டளைக் கலித்துறை

திருச்சிற்றம்பலம்

105 கடையவ னேனைக் கருணையி னாற்கலந்
  தாண்டுகொண்ட
விடையவ னே!விட் டிடுதிகண் டாய்;விறல்
  வேங்கையின்தோல்
உடையவ னே!மன்னும் உத்தர கோசமங்
  கைக்கரசே
சடையவ னே!தளர்ந் தேன்எம்பி ரான்!என்னைத்
  தாங்கிக்கொள்ளே. (1)

---

105. "எம்பிரான்" என்றதை, "சடையவனே" என்றதன் பின்னரும், "விடுதிகண்டாய்" என்றதை இதன்பின்னரும்

106 கொள்ளேர் பிளவக லாத்தடங் கொங்கையர்
கொவ்வைச்செவ்வாய்
விள்ளேன் எனினும் விடுதிகண் டாய்,நின்
விழுத்தொழும்பின்
உள்ளேன்; புறமல்லேன்; உத்தர கோசமங்
கைக்கரசே!
கள்ளேன் ஒழியவுங் கண்டுகொண் டாண்டதெக்
காரணமே. (2)

கூட்டுக. விறல் - வெற்றி; வலிமையுமாம். உடையவன் - உடையை உடையவன். 'தோலாகிய உடையை உடையவன்' என்க. விட்டிடுதி - விடுகின்றாய். இகர ஈறு, இங்கு எதிர் காலத்தில் வந்தது. 'கண்டாய்' என்னும் முன்னிலை யசைச் சொல், 'போலும்' என்னும் உரையசைப் பொருளில் நின்று, 'விடாதி; விட்டாற் கெட்டொழிவேன்' என்னும் பொருளைத் தந்தது. இவை இப்பகுதியின் எல்லாத் திருப்பாட்டிலும் ஒக்கும். 'கருணையினாற் கலந்தாண்டு கொண்ட' என்றதனால், 'அக் கருணை இடையில் ஒழிதற்பாலதோ' என்பது திருவுள்ள மாயிற்று. இறைவன் தம்மை ஆட்கொண்ட பின்னர்ப் பாண்டி யனிடம் தம்மைச் செல்லுமாறுவிடுத்து, நரியைப் பரியாக்கிக் கொணர்ந்தளித்து மறைந்ததனால், இந்நிலையிலேயே தம்மை இருக்க வைத்து விடுவானோ என்று அடிகள் ஐயுற்று வருந்தி இங்ஙனம் விண்ணப்பிக்கின்றார் என்க. அடிகள் திருப்பெருந் துறையை அடைந்தமையும், அங்கு இறைவன் முன்னைத் திரு வுருவத்தோடும் விளங்கியிருந்து இவரை, 'தில்லைக்கு வருக' என்று சொல்லி நிறுத்திவிட்டு, ஏனை அடியார்களோடு மறைந் தமையும், இதன்பின் நிகழ்ந்தன என்று கொள்ளுதலே பொருந்தும்; என்னை? 'தில்லைக்கு வருக' என்று பணித்தபின் அடிகள் இத்துணை வருந்தி வேண்டாராகலின்.

106. "விடுதிகண்டாய்" என்றதனை இறுதியிற் கூட்டி யுரைக்க. "கொள் ஏர்" என்றதனை, 'ஏர் கொள்' என மாற்றிக் கொள்க. ஏர் - எழுச்சி. பிளவு அகலா - வேறாகி நீங்காத; 'நெருங்கிய' என்றபடி. விள்ளேன் - நீங்கேன். விழுத்தொழும்பின் உள்ளேன் - உனது மேலான தொண்டிற்கு உள்ளாயினேன்; என்றது, உன்னால் 'ஆட்கொள்ளப்பட்டு

107 காருறு கண்ணியர் ஐம்புலன் ஆற்றங்
கரைமரமாய்
வேருறு வேனை விடுதிகண் டாய் ;விளங்
குந்திருவா
ரூருறை வாய்!மன்னும் உத்தர கோசமங்
கைக்கரசே!
வாருறு பூண்முலை யாள்பங்க! என்னை
வளர்ப்பவனே. (3)

108 வளர்கின்ற நின்கரு ணைக்கையில் வாங்கவும்
நீங்கிஇப்பால்
மிளிர்கின்ற என்னை விடுதிகண் டாய் ;வெண்
மதிக்கொழுந்தொன்

விட்டேன்' என்றதாம். அதனால், 'இனிப் புறமாவேனல்லேன்' என்க. கள்ளேன் - களவுடையேனாய்; ஒழியவும் - உன்னை அணுகாதிருக்கவும். கண்டுகொண்டு - அருள்நோக்கம் செய்து. ஆண்டது எக்காரணம் - ஆட்கொண்டது எக்காரணத்தால்; 'விடாது பற்றிக்கொள்ளுதற்கே யன்றோ' என்பது கருத்து. 'காரணத்தால்' என்னும் உருபு, தொகுத்தலாயிற்று.

107. கார்உறு - கருமைபொருந்திய. 'கண்ணியரது ஐம்புலனில் வேர் உறுவேன்' என்க. ஐம்புலன் - கண்ணுக்குப் புலனாகின்ற அழகு முதலியன. வேர் உறுதல் - ஊன்றிநிற்றல். "ஆற்றங்கரை மரமாய்" என்றதில் ஆக்கம், உவமை குறித்துநின்றது. 'ஆற்றங்கரையில் உள்ள மரம் அவ்விடத்தில் வேர் ஊன்றுதல்போல' என்பது பொருள். 'இஃது அவ்வேர் நிலைபெறாது அவ்வாற்றுநீராலே அழிக்கப்படுதல் போல, யானும் அவரது ஐம்புல இன்பங்களாலே அழிக்கப்படுவேன்' என்பதை உணர்த்திநிற்றலின், தொழில்பற்றி வந்த உவமை. வளர்ப்பவன் - முன்னர் அறிவை மிகுவித்துப் பின்னர் அதனால் அன்பையும், அதன்பின்னர் அவ்வின்பத்தினால் இன்பத்தையும் மிகுவிப்பவன்.

108. வளர்கின்ற - எல்லா உயிர்களும் வளரும் இடமாகிய. கருணைக் கை, உருவகம். வாங்கவும் - எடுக்கவும்.

றெளிர்கின்ற நீள்முடி உத்தர கோசமங்
கைக்கரசே!
தெளிகின்ற பொன்னுமின் னும்மன்ன தோற்றச்
செழுஞ்சுடரே. (4)

109 செழிகின்ற தீப்புகு விட்டிலிற் சின்மொழி
யாரிற்பன்னுள்
விழுகின்ற என்னை விடுதிகண் டாய்;வெறி
வாய்அறுகால்
உழுகின்ற பூமுடி உத்தர கோசமங்
கைக்கரசே!
வழிநின்று நின்னரு ளாரமு தூட்ட
மறுத்தனனே. (5)

மிளிர்கின்ற - பிறழ்கின்ற; குதிக்கின்ற. தெளிகின்ற - விளங்குகின்ற.

109. 'செழிக்கின்ற' என்பது, இடைக் குறைந்து நின்றது. தீ, விளக்குத் தீ. விட்டில் - 'விட்டில்' என்னும் வண்டு. விட்டிலின் - விட்டில் போல. சின்மொழி - சிலவாகிய மொழி; இது நாணத்தால் பல பேசாமையைக் குறித்தது. மொழியாரில் - மொழியாரிடத்து. "பன்னுள் விழுகின்ற" என்றதனுல், உவமையிலும் பன்முறை வீழ்தல் பெறப்பட்டது. படவே, விட்டில் விளக்கினைக் கண்டு அவ்வொளியால் மயங்கி அணுகுந்தோறும் அதன் வெப்பத்தால் தாக்குண்டு, அங்ஙனம் தாக்குண்ட பின்னரும் விடாது சென்று முடிவில் அதன் கண்ணே வீழ்ந்து இறக்குந் தன்மை பொருளிலும் கொள்ளற் பாலதாயிற்று. வெறிவாய் - தேனின்கண். அறுகால் - வண்டு. வழிநின்று - யான் செல்லும் வழியில் வந்து நின்று. "மறுத் தனனே" என்ற தேற்றேகாரம், 'என்னே என் அறியாமை யின் மிகுதி' என இரக்கங் குறித்துநின்றது. மறுத்தது, உடன்செல்ல இயையாது நின்றது.

110 மறுத்தனன் யான்உன் அருள்அறி யாமையின்
என்மணியே !
வெறுத்தெனை நீவிட் டிடுதிகண் டாய் ;வினை
யின்தொகுதி
ஒறுத்தெனை ஆண்டுகொள், உத்தர கோசமங்
கைக்கரசே !
பொறுப்ப ரன்றேபெரி யோர்சிறு நாய்கள்தம்
பொய்யினையே. (6)

111 பொய்யவ னேனைப் பொருளென ஆண்டொன்று
பொத்திக்கொண்ட
மெய்யவ னே!விட் டிடுதிகண் டாய் ;விட
முண்மிடற்று
மையவ னே!மன்னும் உத்தர கோசமங்
கைக்கரசே !
செய்யவ னே!சிவ னே!சிறி யேன்பவந்
தீர்ப்பவனே. (7)

---

110. 'அறியாமையின் யான் உன் அருளை மறுத்தனன்' என்க. ஒறுத்து - அழித்து. ''நாய்கள்'' என்றது உவமை யாகுபெயராய், 'நாய்கள் போன்றவர்' எனப் பொருள் தந்தது. சிறுமை-இழிவு. ஈற்றடி, 'வேற்றுப்பொருள் வைப்பு' என்னும் அணிபட வந்தது.

111. 'ஒன்று ஆண்டு' என மாற்றியுரைக்க. ஒன்று - ஒருபொழுது. பொத்திக்கொண்ட மெய்யவன் - மறைத்துக் கொண்ட திருமேனியை உடையவன். விடம் உண் - நஞ்சு உண்டதனாலாகிய. மிடற்று மை - கழுத்தின்கண் உள்ள கருமை நிறம். செய்யவன் - சிவப்பு நிறத்தை உடையவன். பவம் - பிறப்பு.

112 தீர்க்கின்ற வாறென் பிழையைநின் சீரருள்
என்கொல்என்று
வேர்க்கின்ற என்னை விடுதிகண் டாய்;விர
வார்வெருவ
ஆர்க்கின்ற தார்விடை உத்தர கோசமங்
கைக்கரசே!
ஈர்க்கின்ற அஞ்சொடச் சம்வினை யேனை
இருதலையே. (8)

113 இருதலைக் கொள்ளியி னுள்ளெறும் பொத்து
நினைப்பிரிந்த
விரிதலை யேனை விடுதிகண் டாய்;வியன்
மூவுலகுக்
கொருதலைவா! மன்னும் உத்தர கோசமங்
கைக்கரசே!
பொருதலை மூவிலை வேல்வலன் ஏந்திப்
பொலிபவனே. (9)

---

112. 'வினையேனை அஞ்சொடு அச்சம் இருதலை ஈர்க்கின்ற; (அதனால்) என் பிழையை நின் சீர் அருள் தீர்க்கின்ற வாறு என்கொல் என்று வேர்க்கின்ற என்னை விடுதி கண்டாய்' எனக் கூட்டுக. என்கொல் என்று - எவ்வாறோ என்று. வேர்த்தல் - இளைத்தல்; வருந்துதல். விரவார் - பகைவர். வெருவ - அஞ்சும்படி. ஆர்க்கின்ற தார் விடை - ஒலிக்கின்ற கிண்கிணி மாலையை அணிந்த இடபத்தை யுடைய. அஞ்சு - ஐம்புல ஆசை. அச்சம், அவற்றின்வழிச்செல்ல அஞ்சுதல். 'இந்த இரண்டும் இருமுகமாக மாறி மாறி ஈர்க்கின்றன' என்றபடி.

113. அடிகள் தாம் இருதலைக் கொள்ளியினுள் எறும்பை ஒத்திருத்தல் இவ்வாற்றால் என்பதை முன்னைத் திருப்பாட்டில் அருளிச்செய்தமையின், இதனுள் அதனை எடுத்தோதாராயினார். "பிரிந்த" என்றது, 'பிரிந்து வருந்துகின்ற' என்னும் பொருளது. விரிதலை - விரிந்ததலைமயிர்; இடவாகுபெயர். தலைமயிர் விரிந்து கிடத்தலைக் கூறியது. எங்கும் ஓடி அலமருதலைக்

114 பொலிகின்ற நின்தாள் புகுதப்பெற் றாக்கையைப்
போக்கப்பெற்று
மெலிகின்ற என்னை விடுதிகண் டாய்;அளி
தேர்விளரி
ஒலிநின்ற பூம்பொழில் உத்தர கோசமங்
கைக்கரசே!
வலிநின்ற திண்சிலை யாலெரித் தாய்,புரம்
மாறுபட்டே! (10)

115 மாறுபட் டஞ்சென்னை வஞ்சிப்ப யான்உன்
மணிமலர்த்தாள்
வேறுபட் டேனை விடுதிகண் டாய்;வினை
யேன்மனத்தே
ஊறுமட் டேமன்னும் உத்தர கோசமங்
கைக்கரசே!
நீறுபட் டேஒளி காட்டும்பொன் மேனி
நெடுந்தகையே. (11)

குறித்த குறிப்புமொழி. பொருது அலை - பகைவரொடு போர் செய்து அவரை வருத்துகின்ற. மூவிலை வேல் - சூலம். வலன் - வலப்பக்கம்.

114. 'புகுதல் பெற்ற' என்றதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. புகுதப்பெற்றமை, புகுந்துவணங்கப்பெற்றமை. போக்கப்பெற்று உன்னால் விலக்கப்பட்டு; இதன்கண் "பெற்று" என்னும் வினைக்கு வினைமுதல் அடிகளாதலின். "ஆக்கையை" என்னும் இரண்டாவது, "போக்க" என்றதனோடு முடியும். 'தில்லைக்கு வருக' என்று நிறுத்திச் சென்றதனை, 'போக்க' என்றார். அளி - வண்டுகள். தேர் விளரி ஒலி - தேனை ஆராய்கின்ற, விளரி இசையினது ஓசை. எரித்தாய் - எரித்தவனே.

115. அஞ்சு - ஐம்புலன். 'தாளின் வேறுபட்டேனை' என்க. மட்டு - தேன். நீறு பட்டு - திருநீறு பொருந்தப்பட்டு.

116 நெடுந்தகை நீஎன்னை ஆட்கொள்ள யான்ஐம்
புலன்கள்கொண்டு
விடுந்தகை யேனை விடுதிகண் டாய் ;விர
வார்வெருவ
அடுந்தகை வேல்வல்ல உத்தர கோசமங்
கைக்கரசே!
கடுந்தகை யேன்உண்ணுந் தெண்ணீர் அமுதப்
பெருங்கடலே. (12)

117 கடலினுள் நாய்நக்கி யாங்குன் கருணைக்
கடலின்உள்ளம்
விடலரி யேனை விடுதிகண் டாய் ;விட
லில்லடியார்
உடலில மேமன்னும் உத்தர கோசமங்
கைக்கரசே!
மடலின்மட் டேமணி யேஅமு தேயென்
மதுவெள்ளமே. (13)

---

116. தகையேனை - தன்மையுடைய என்னை. அடும் தகை வேல் வல்ல - கொல்லும் தன்மையையுடைய சூலத்தை ஆளுதல் வல்ல. கடுந்தகையேன் - கடிய குணமுடைய யான்; 'எனக்குத் தெண்ணீர் கிடைத்தல் அரிது' என்பது குறிப்பு. 'தெண்ணீ ராகிய அமுதம்' என்க. நாவறட்சியைத் தணித்து உயிரை நிலைபெறுத்தலின். தெண்ணீர், 'அமுது' எனப்பட்டது. இறைவனால் தணிக்கப்படுவது வினை வெப்பமாம்.

117. 'விடலரியேனை" என்றாரேனும், 'முழுதும் மூழ்கும் படி விட்டுப் பருகாது, சிறிதே சுவைத்து ஒழிவேனை' என உவமைக்கேற்ப உரைத்தலே கருத்தென்க. உடல் இல்லம்-உடம் பாகிய வீடு, "உடலிடங்கொண்டாய்" (கோயில்-10.) என்றாற் போலப் பின்னரும் அருளிச்செய்வர்; யாண்டும். 'அடியவர் உடம்பில் நிற்கும் உள்ளத்தை இடமாகக் கொண்டிருப்பவன்' என்பதே பொருளாம்; "நிற்பதொத்து நிலையிலா நெஞ்சந் தன்னுள் நிலாவாத புலால்உடம்பே புகுந்து நின்ற - கற்பகமே". (திருமுறை-6.95.4.) என்ற அப்பர் திருமொழியையும் காண்க.

118 வெள்ளத்துள் நாவற் றியாங்குன் அருள்பெற்றுத்
துன்பத்தின்றும்
விள்ளக்கி லேனை விடுதிகண் டாய்;விரும்
பும்அடியார்
உள்ளத்துள் ளாய்!மன்னும் உத்தர கோசமங்
கைக்கரசே!
கள்ளத்து ளேற்கரு ளாய்,களி யாத
களியெனக்கே. (14)

119 களிவந்த சிந்தையொ டுன்கழல் கண்டுங்
கலந்தருள
வெளிவந்தி லேனை விடுதிகண் டாய்;மெய்ச்
சுடருக்கெல்லாம்
ஒளிவந்த பூங்கழல் உத்தர கோசமங்
கைக்கரசே!
எளிவந்த எந்தை பிரான்என்னை ஆளுடை
என்னப்பனே. (15)

மடலின் மட்டு - பூவிதழில் துளிக்கின்ற தேன். மதுவெள்ளம் - தேன் வெள்ளம். முன்னர்ச் சிறிதாயுள்ள தேனைக் கூறினர்; பின்பு அது பெருக்கெடுத்தலைக் கூறினர்,

118, "வெள்ளத்துள் நாவற்றியாங்கு" என்றது இல்பொருள் உவமை. 'விள்ளகிலேனை' என்பது விரித்தல் பெற்றது. கள்ளத்து உளேற்கு - பொய்யன்பில் நிற்பேனுக்கு. களியாத களி - நான் இதுகாறும் மகிழ்ந்தறியாத மகிழ்ச்சி. "அருளாய்" என்றது இரட்டுறமொழிதலாய், முன்னர், 'இரங்காய்' எனப் பொருள்தந்து, "கள்ளத்துளேற்கு" என்றதனோடும், பின்னர், 'ஈவாய்' எனப் பொருள்தந்து, 'எனக்கு' என்பதனோடும் இயைதற்குரித்தாயிற்று. ஈற்றில் நின்ற ஏகாரத்தைப் பிரித்து, "களி" என்றதனோடு கூட்டிப் பிரிநிலையாக்கியுரைக்க.

119. வெளிவருதல் - புறப்படுதல்; 'உலகியலைவிட்டுப் புறப்படுதல்' என்க. மெய்ச்சுடர் - உலகத்தவர்க்குக் கண்கூடாகக் காணப்படும் ஒளிகள்; அவை, 'ஞாயிறு, திங்கள்,

120 என்னைஅப் பாஅஞ்சல் என்பவர் இன்றிநின்
றெய்த்தலைந்தேன்
மின்னையொப் பாய்விட் டிடுதிகண் டாய் ;உவ
மிக்கின்மெய்யே
உன்னையொப் பாய்மன்னும் உத்தர கோசமங்
கைக்கரசே!
அன்னையொப் பாய் !எனக் கத்தன்ஒப் பாய் !என்
அரும்பொருளே. (16)

121 பொருளே! தமியேன் புகலிட மே!நின்
புகழ்இகழ்வார்
வெருளே! எனைவிட் டிடுதிகண்டாய் ; மெய்ம்மை
யார்விழுங்கும்
அருளே! அணிபொழில் உத்தர கோசமங்
கைக்கரசே!
இருளே! வெளியே! இகபர மாகி
யிருந்தவனே. (17)

விண்மீன், தீ' என்பன. வந்த - வருதற்குக் காரணமான ; என்றது, 'மிக்க ஒளியினையுடைய' என்றவாறு. சொற்பொருள் இதுவாயினும், 'அச்சுடருக்கெல்லாம் ஒளியைத் தருகின்ற' என்னும் பொருள்மேலும் இது நோக்குடைத்து.

120. 'என்னை அஞ்சல் என்பவர் இன்றி நின்று எய்த்து அலைந்தேன்; விடுதி கண்டாய்' என்றதனை ஈற்றில் தந் துரைக்க. 'உவமிக்கின் மெய் மின்னை ஒப்பாய்' என இயை யும். "மெய்யே" என்ற ஏகாரம், அசைநிலை. உன்னை ஒப் பாய் - உன்னை நீயே ஒப்பாய்; 'ஒப்பார் பிறர் இல்லாதவனே' என்றபடி.

121. பொருள் - 'பொருள்' என்று சிறப்பித்துச் சொல் லுதற்குரிய பொருள் ; மெய்ப்பொருள். 'இகழ்வார்க்கு' என்னும் நான்கனுருபு தொகுத்தலாயிற்று. வெருள்-அச்சம்; அஃது, 'அதனைத் தருவது' என்னும் பொருளதாய் நின்றது. "விழுங்கும்" என்றது, 'ஆர்வத்தோடு முற்ற நுகரும்' என்ற படி. இது குறிப்புருவகம். இதனால், "அருளே" என்றது,

122 இருந்தென்னை ஆண்டுகொள் விற்றுக்கொள் ஒற்றிவை
என்னினல்லால்
விருந்தின னேனை விடுதிகண் டாய் ; மிக்க
நஞ்சமுதா
அருந்தின னே ! மன்னும் உத்தர கோசமங்
கைக்கரசே !
மருந்தின னேபிற விப்பிணிப் பட்டு
மடங்கினர்க்கே. (18)

123 மடங்கஎன் வல்வினைக் காட்டைநின் மன்னருள்
தீக்கொளுவும்
விடங்க என்றன்னை விடுதிகண் டாய் ; என்
பிறவியைவே
ரொடுங்களைந் தாண்டுகொள் ; உத்தர கோசமங்
கைக்கரசே !
கொடுங்கரிக் குன்றுரித் தஞ்சுவித் தாய் ; வஞ்சிக்
கொம்பினையே. (19)

'அருளாகிய அமுத உருவினனே' என்றதாயிற்று. இருள் - மறைப்பு; வெளி - விளக்கம்; இவை இரண்டும், முறையே கட்டு வீடுகளைக் குறித்தன. இகம் - இம்மை. பரம்-மறுமை.

122. 'என்னின் இருந்து' எனக்கூட்டி 'என்பால் வீற்றிருந்து' எனப் பொருள் கூறுக. இஃது, 'என்னை ஏற்றுக் கொண்டு' என்றருளியவாறு. ஆண்டுகொள் - உன்தொண்டில் ஈடுபடுத்திக்கொள். அல்லால் - இங்ஙனம் செய்யாது. 'அல்லால் விடுதி கண்டாய்' என இயைத்து, வேறு தொடராக்குக. விருந்தினன் - புத்தடியேன். "அல்லால்" என்றதன் பின், 'வேறொன்றறியாத' என்பதனையும், "இருந்து" என்றதற்குமுன், 'என்னுடன்' என்பதனையும் வருவித்து, சொற்களைக் கிடந்தவாறே வைத்து உரைப்பாரும் உளர். "மடங்கினர்" என்றது. நோயுட்பட்டவர் செயலற்றுக் கிடத்தலைக் குறித்தது.

123. மடங்குதல், இங்கு, அழிதலின் மேற்று. மன் - நிலைபெற்ற. 'அருளால்' என உருபு விரிக்க. தீக்கொளுவுதல்-எரித்தல். விடங்கன்-ஆண்மையுடையவன். "வஞ்சிக்கொம்பு"

124 கொம்பரில் லாக்கொடி போல்அல மந்தனன் ;
கோமளமே !
வெம்புகின் றேனை விடுதிகண் டாய் ;விண்ணார்
நண்ணுகில்லா
உம்பருள் ளாய்மன்னும் உத்தர கோசமங்
கைக்கரசே !
அம்பர மேநில னேஅனல் காலொடப்
பானவனே. (20)

125 ஆனைவெம் போரிற் குறுந்தூ றெனப்புல
னால்அலைப்புண்
டேனையெந் தாய்விட் டிடுதிகண் டாய் ;வினை
யேன்மனத்துத்
தேனையும் பாலையுங் கன்னலை யும்அமு
தத்தையும்ஒத்
தூனையும் என்பினை யும்உருக் காநின்ற
ஒண்மையனே. (21)

என்றது, உமையம்மையை. யானையை உரித்த செயலைக் கண்டு அம்மை அஞ்சினாள் என்க. 'அஞ்சுவித்தாய்' என்னும் விளி, 'உனக்கு என் வினையை அஞ்சப் பண்ணுதல் எளிது' என்னும் குறிப்பினது.

124. கொம்பர் - கொம்பு; போலி. அலமந்தனன் - அலைந்தேன் ; இதனை எச்சமாக்கி, "வெம்புகின்றேனை" என்பத னோடு முடிக்க. கோமளம் - அழகு. 'அழகனே' என்னாது, 'அழகே' என்றது, 'அழகே ஓர் வடிவங்கொண்டு நின்றாற் போல்பவனே' என அதன் மிகுதி யுணர்த்தற்பொருட்டு. வெம்புதல் - வருந்துதல். உம்பர் - மேலிடம்; சிவலோகம். அம்பரம் - ஆகாயம். கால் - காற்று. அப்பு - நீர்.

125. ஐம்புலன்களுக்கு உவமையாகக்கூறலின், ஆனைகளை ஐந்தாகக் கொள்க. குறுந்தூறு - சிறுபுதல். 'ஐந்து யானைகள் தம்முள் மாறுபட்டுச் செய்யும் போர்க்கிடையில் ஒரு சிறுபுதல் அகப்பட்டுக்கொள்ளுமாயின், அஃது எவ்வாறு அவற்றால் மிதிப்புண்ணுமோ அதுபோல, ஐம்புலன்களின் மாறுபாட்டிற்

126 ஒண்மைய னே! திரு நீற்றைஉத் தூளித்
தொளிமிளிரும்
வெண்மைய னே! விட் டிடுதிகண் டாய்; மெய்
யடியவர்கட்
கண்மைய னே! என்றுஞ் சேயாய்! பிறர்க்கறி
தற்கரிதாம்
பெண்மைய னே! தொன்மை ஆண்மைய னே! அலிப்
பெற்றியனே. (22)

127 பெற்றது கொண்டு பிழையே பெருக்கிச்
சுருக்குமன்பின்
வெற்றடி யேனை விடுதிகண் டாய்; விடி
லோகெடுவேன்!

கிடையில் அகப்பட்டுள்ள யான் அவற்றால் அலைப்புண்கின்றேன்' என்றபடி. கன்னல் - கரும்பு. ஒண்மையன் - ஞான வடிவினன்.

126. உத்தூளித்தல் - மேலே பூசுதல். 'மெய்யடியவர்கட்கு என்றும் அண்மையனே, பிறர்க்கு என்றும் சேயாய்' என்க. அரிதாம் - அரிய பொருளாகிய. பெண்மையன் முதலிய மூன்று பெயராலும் தனித்தனியே விளித்தாரேனும், 'பெண் தன்மை, ஆண் தன்மை, அலித்தன்மை என்னும் இம் மூன்று தன்மைகளையும் உடையவனாய் இருப்பவனே' என்றலே கருத்து. ஒருவனே மூன்று தன்மைகளை உடையவனாய் இருத்தலின், இன்ன தன்மையன் என ஒரு பெற்றியனாக அறிதல் அரிதாயிற்று. அறிதற்கு அரிதாதல், யாவர்க்கும் என்க. ஒருவனே மூன்று தன்மைகளை யுடையனாய் இருத்தலின், இவை அவனது பொதுவியல்பே என்பதும், உண்மை இயல்பு இவை அனைத்தினும் வேறு என்பதும் பெறப்படும்.

127. பெற்றது, முன்பு உலகியலில் பெற்ற இன்பம். 'பெற்றதே' என்னும் பிரிநிலை ஏகாரம் தொகுத்தல். கொண்டு- மீளவும் பெற்று, "பிழை" என்றது, உலகியலை. "அன்பு" என்றதற்கு, 'உன் திருவடிக்குச்செய்யும் அன்பு' என உரைக்க. வெற்றடியேன் - ஆட்கொண்டதனால் பயன் ஒன்றும் இல்லாத

மற்றடி யேன்றன்னைத் தாங்குநர் இல்லை ;என்
வாழ்முதலே !
உற்றடி யேன்மிகத் தேறிநின் றேன்,எனக்
குள்ளவனே. (23)

128 உள்ளன வேநிற்க இல்லன செய்யும்மை
யற்றுழனி
வெள்ளன லேனை விடுதிகண் டாய் ;வியன்
மாத்தடக்கைப்
பொள்ளனல் வேழத் துரியாய், புலன் நின்கட்
போதலொட்டா
மெள்ளென வேமொய்க்கும் நெய்க்குடந் தன்னை
எறும்பெனவே. (24)

அடியேன். "மற்று" என்றதனை, "இல்லை" என்றதற்கு முன்னே கூட்டுக. 'என் முதல்' என இயையும். "வாழ் முதல்" என்ற வினைத்தொகை, ஏதுப் பொருட்கண் வந்தது. உற்று- உலகியலிற் பொருந்தி. தேறிநின்றேன் - அதனால் தெளி வெய்தி நின்றேன். தெளிந்தது, 'தாங்குநர் மற்றில்லை' என்பதையும், 'விடிற் கெடுவேன்' என்பதையுமாம். "தாங்குநர்" என முன்னர் வந்தமையின். "உள்ளவன்" என்றதற்கு, 'எனக்குப் பற்றுக்கோடாய் உள்ளவனே' என உரைக்க.

128. "உள்ளன, இல்லன" என்றவற்றிற்கு, 'பயன் ,என்னும் வினைமுதல் வருவிக்க. பிரிநிலை ஏகாரத்தைப் பிரித்து, ,'இல்லன" என்றதனோடு கூட்டுக. மையல் - மயக்கம். 'துழனி வெள்ளன்" என்றதனை, 'வெண்துழனியனை' எனப் பின் முன்னாக்கி, உருபுவிரித்துரைக்க. வெண்துழனி - வெற்றுரவாரம். அல்லேனை - மெய்ந்நெறிக்கு உரியனல்லாத என்னை. 'வியன் உரி' எனவும், 'மா வேழம்' எனவும் இயையும். கைப் பொள்ளல் - கையின்கண் உள்ள புழையையுடைய ; சொற்கிடக்கை இவ்வாறாயினும், 'பொள்ளற் கை' என்பதே பொருள் என்க, "நல்வேழம்" என்றதில் நன்மை, வலிமை மேல் நின்றது. 'ஒட்டாது' என்னும் வினையெச்சம் ஈறு குறைந்தது; 'முற்றேஎச்சப் பொருட்டாயிற்று' என்றலுமாம்.

129 எறும்பிடை நாங்கூ ழெனப்புல னால்அரிப்
புண்டலந்த
வெறுந்தமி யேனை விடுதிகண் டாய் ;வெய்ய
கூற்றெடுங்க
உறுங்கடிப் போதவை யேஉணர் வுற்றவர்
உம்பரும்பர்
பெறும்பத மே! அடி யார்பெய ராத
பெருமையனே. (25)

"மொய்க்கும்" எனப் பொருட்கண் கூறினமையின், உவமைக் கண், "எறும்பெனவே" வாளா கூறிப் போயினர். ஆதலின், 'எறும்புகள் நெய்க்குடந்தன்னை மொய்த்தல் என, புலன்கள் என்னை மொய்க்கும்' என்பது பொருளாயிற்று. அற்றம் பார்த்து வருதலின், "மெள்ளென" என்றார். குறிப்புச்சொல், 'செவ்வனம்' என்பதுபோல், 'மெள்ளனம்' என வருதலன்றி, 'மெள்ளன' என வாராதாகலின், 'மெள்ளனவே' என்பது பாடம் அன்று.

129. பொருட்கண், "அரிப்புண்டு" என வருகின்றமை யின், உவமைக்கண்ணும், 'எறும்பிடைநாங்கூழ் அரிப்புண்டால் என' என்றுரைக்கப்படும். "வெறுந்தமியேன்" என்றது, 'வெறுமையேனை, தமியேனை' என்றபடி. வெறுமை - பய னின்மை. தமி - துணையின்மை. 'கூற்று ஒடுங்குமாறு அவன் மேல் உறும்போது' என்க. கடி - நறுமணம். போதுஅவையே - போதுகளாகிய அவற்றையே. போது-மலர்; என்றது திருவடியை. உம்பர் உம்பர் - தேவர்க்கும் மேலுள்ள இடம், 'உம்பர் உம்பர்க்கண்' என உருபுவிரிக்க. பதம்-நிலை; என்றது வீட்டினை. இறைவனே வீடாகலின், "பதமே" என்று அருளினார். அடியார் - அடியரானார். பெயராத - நீங்காத. நீங்காமைக்கு ஏது, பேரின்பம்.

"மேவினர் பிரிய மாட்டா விமலனார்"

என்றது காண்க. (பெ. பு. கண்ணப் 174.) பெயராமையையே பெருமை என்றலின், "பெயராத பெருமை" என்றதில், பெயரெச்சம் வினைப்பெயர் கொண்டதாம்.

130 பெருநீ ரறச்சிறு மீன்துவண் டாங்கு
நினைப்பிரிந்து
வெருநீர்மை யேனை விடுதிகண் டாய் ;வியன்
கங்கைபொங்கி
வருநீர் மடுவுள் மலைச்சிறு தோணி
வடிவின்வெள் ளைக்
குருநீர் மதிபொதி யுஞ்சடை வானக்
கொழுமணியே. (26)

131 கொழுமணி யேர்நகை யார்கொங்கைக் குன்றிடைச்
சென்றுகுன்றி
விழுமடி யேனை விடுதிகண் டாய் ;மெய்ம்
முழுதுங்கம்பித்
தழுமடி யாரிடை ஆர்த்துவைத் தாட்கொண்
டருளிஎன்னைக்
கழுமணி யே! இன்னுங் காட்டுகண் டாய் ;நின்
புலன்கழலே. (27)

---

130. பெருமை, சிறுமை என்பன, இடமும், இடத்து நிகழ்பொருளுமாய் நிற்கும் அவற்றது இயல்புணர்த்தி நிற்ற லின், இயைபின்மை நீக்கிய விசேடணங்களாம். துவளுதல் - மெலிதல். 'வெருவு நீர்மை என்பது குறைந்து நின்றது. வெருவுதல் - அஞ்சுதல்; அச்சம், ஐம்புலன் நோக்கி. உவமை யோடு இயையாமையின், பிரிந்த' என்பது பாடம் அன்று. 'கங்கை என்னும் பொங்கி வரும் நீராகிய மடு' எனவும், 'மலைத்தலை (எதிர்த்தலை) யுடைய சிறுதோணி' எனவும் உரைக்க. வெள்ளைக் குருநீர் - வெண்மை நிறமாகிய தன்மை. வானக் கொழுமணி - மேலுலகில் உள்ள சிறந்த இரத்தினம்; தலைமைக் கடவுள் என்றபடி.

131. "மெய்ம்முழுதும்" என்றது முதலாக, "கழு மணியே" என்பது ஈறுக உள்ளவற்றை முதற்கண் வைத் துரைக்க. "கொழுமணி" என்றதில் மணி, முத்து. "குன்றிடைச் சென்று குன்றி" என்றது, சொற்பின்வருநிலை. "குன்றிவிழும்" என்றது, உடனிலைவகையால், அறிவு குன்றி விரும்புதலையும், மலையிடைச் சென்றோர் வலிமைகுன்றி விழு-

132 புலன்கள் திகைப்பிக்க யானுந் திகைத்திங்கொர்
பொய்ந்நெறிக்கே
விலங்குகின் றேனை விடுதிகண் டாய்;விண்ணும்
மண்ணுமெல்லாங்
கலங்கமுந் நீர்நஞ் சமுதுசெய் தாய்,கரு
ணாகரனே!
துலங்குகின் றேன்அடி யேன்உடை யாய்,என்
தொழுகுலமே. (28)

தலையும் குறித்தது. கம்பித்தல்-நடுங்குதல்; இஃது அன்பி னாலாம். ஆர்த்து வைத்தல் - அகலாதிருக்கச் செய்தல். கழவுதல் - பாசத்தை நீக்குதல். "கழுமணி", இறந்தகால வினைத் தொகை. புலன் கழல் - ஞானத்தின் திருவுருவாகிய திருவடி. "இன்னும் நின்கழல் காட்டு கண்டாய்" என்ற இதனால் 'இறைவன் முன்புபோல மற்றும் ஒருமுறை தோன்றியருளல் வேண்டும்' என அடிகள் விரும்பினர் என்பது பெறுதும்.

132. "யானும்" என்ற உம்மை, 'உனக்கு அடியவன் ஆகிய யானும்' என்னும் சிறப்புணர்த்திற்று. "நெறிக்கு" என்ற நான்கனுருபை, ஏழனுருபாகத் திரிக்க. விண், மண் என்பன, அவ்விடத்து வாழ்வாரை உணர்த்தின. "கலங்க" என்றதன்பின், 'கண்டு' என, ஒருசொல் வருவிக்க. கருணாகரன் - அருளுக்கு இருப்பிடமாய் உள்ளவன். முன்பு, "உற்றடியேன் மிகத் தேறிநின்றேன்" (23) என்றதுபோல, இங்கும், "துலங்குகின்றேன்" - (அறிவு விளங்கப் பெறுகின்றேன்) என்றார். இதற்கு இவ்வாறன்றி, துளங்குகின்றேன் என்பது பொருளாக உரைப்பாரும் உளர்; அது பொருந்தாமை வெளிப்படை. தொழு குலம் - வணங்கப்படும் இனம். இஃது ஆகுபெயராய், அவ்வினத்தவரைக் குறித்தது; அவர், தாய் தந்தை, மூத்தோர், ஆசிரியன்மார், தெய்வங்கள். 'எனக்கு இவரெல்லாருமாய் உள்ளவனே' என்றபடி. திருநாவுக்கரசரும், "அப்பன்நீ அம்மைநீ ஐயனும் நீ - அன்புடைய மாமனும் மாமி யும்நீ" (திருமுறை - 6-95-1.) என்று அருளிச்செய்தல் காண்க.

133 குலங்களைந் தாய்,களைந் தாய்,என்னைக் குற்றங்கொற்
றச்சிலையாம்
விலங்கல்எந் தாய்,விட் டிடுதிகண் டாய்;பொன்னின்
மின்னுகொன்றை
அலங்கலந் தாமரை மேனிஅப் பாஒப்
பிலாதவனே,
மலங்களைந் தாற்சுழல் வன்தயி ரிற்பொரு
மத்துறவே. (29)

134 மத்துறு தண்தயி ரிற்புலன் தீக்கது
வக்கலங்கி
வித்துறு வேனை விடுதிகண் டாய்;வெண்
டலைமிலைச்சிக்

---

133. 'என்னைக் குலம் களைந்தாய்; குற்றம் களைந்தாய்; என்க. சிலை - வில். விலங்கல் - மலை; மகாமேரு. "கொற்றச் சிலையாம் விலங்கல் எந்தாய்" என்றாரேனும், 'விலங்கலாம் கொற்றச் சிலை எந்தாய்' என்பதே கருத்தாம். 'அலங்கல் மேனி' எனவும், 'அம் தாமரை மேனி' எனவும் தனித்தனி இயையும். "தாமரை" என்றது, செந்தாமரை மலரை' "செந்தாமரைக்காடனைய மேனித் தனிச் சுடரே" (திருச் சதகம்-26.) என முன்னரும் கூறினார். மலங்கள் ஐந்து; ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதாயி. மலங்கள் ஐந்தாகக் கூறப்படுதலை,

" மாறா மலம்ஐந்தால் மன்னும் அவத்தையின்
வேறாய மாயா தனுகர ணாதிக்கிங்
கீறாகா தேஎவ் வுயிரும் பிறந்திறந்
தாறாத வல்வினை யால்அடி யுண்ணுமே"

என்றாற்போலத் திருமந்திரத்திலே (2160) கூறப்படுதல் காண்க. 'பொருமத்துத் தயிரின் உறவே சுழல்வன்' எனக் கூட்டுக. பொருமத்து - கலக்குகின்ற மத்தினைக்கொண்ட. தயிரின் - தயிர்போல. உறவே - மிகவும்.

134. திக் கதுவ - நெருப்புப்போல வந்து பற்ற. இது வேறுவமை கூறியதாகலின், முன்னை யுவமைக்கு இழுக்கின்மை

கொத்துறு போது மிலைந்து குடர்நெடு
மாலைசுற்றித்
தத்துறு நீறுடன் ஆரச்செஞ் சாந்தணி
சச்சையனே. (30)

135 சச்சைய னே,மிக்க தண்புனல் விண்கால்
நிலம்நெருப்பாம்
விச்சைய னே,விட் டிடுதிகண் டாய்;வெளி
யாய்,கரியாய்,
பச்சைய னே,செய்ய மேனிய னேயொண்
படஅரவக்
கச்சைய னே,கடந் தாய்;தடந் தாள
அடற்கரியே. (31)

யுணர்க. வித்து - நடுக்கம். இது, 'விதுப்பு' என்பது, முதனிலை மாத்திரமாய் நின்று ஒற்றிரட்டி இப்பொருள் தந்தது. இனி, "அறிவு" என்றும், 'அறிவுடையவன்' என்றும் பொருள் படும் வடசொல்லாகக் கொண்டு, அதற்கேற்ப உரைத்தலும் ஆம். மிலைச்சி - தலையில் அணிந்து. தாருகாவன முனிவர்கள் விடுத்த வெண்டலையைச் சிவபிரான் தனது சடையில் அணிந்து கொண்டமை அறிக. போது-மலர். 'குடர்போலும் மாலை' என்க. இது கணவிர (செவ்வலரி) மாலை. சுற்றியது, சடையில். வெண்டலை கிடத்தலின், அதனைச் சூழ்ந்துள்ள மாலையும் குடர்போலத் தோன்றுவதாயிற்று. தத்துறு-பரந்திருக்கின்ற ஆரம் - சந்தனக்கட்டை. சாந்து-அதனைத் தேய்த்த தேய்வை. குங்குமப் பூக்கலத்தலால், சாந்து செம்மை நிறம் பெற்றது. 'செச்சை' என்பது, மோனைநயம் நோக்கி, "சச்சை" எனத் திரிக்கப்பட்டது. செச்சை-வெட்சி. 'வெட்சிப் பூப்போலும் திருமேனியையுடையவனே' என்க. இதனுள், சிவபெருமான் திருக்கோலத்தில் செம்மையும், வெண்மையும் விரவிக் கிடத்தலை விதந்தவாறு காண்க.

135. அந்தாதி யாதற்பொருட்டு, இங்கும் செச்சை, 'சச்சை' எனப்பட்டது. புனல்-நீர். கால்-காற்று. விச்சை-வித்தை; வியத்தகு தன்மை. வெளியாய் - வெண்மை நிறம்

136 அடற்கரி போல்ஐம் புலன்களுக் கஞ்சி
அழிந்தஎன்னை
விடற்கரி யாய்,விட் டிடுதிகண் டாய்;விழுத்
தொண்டர்க்கல்லால்
தொடற்கரி யாய்,சுடர் மாமணி யே,சுடு
தீச்சுழலக்
கடற்கரி தாய்எழு நஞ்சமு தாக்குங்
கறைக்கண்டனே. (32)

137 கண்டது செய்து கருணைமட் டுப்பரு
கிக்களித்து
மிண்டுகின் றேனை விடுதிகண் டாய்;நின்
விரைமலர்த்தாள்
பண்டுதந் தாற்போற் பணித்துப் பணிசெயக்
கூவித்தென்னைக்
கொண்டென்எந் தாய்,களை யாய்களை யாய்
குதுகுதுப்பே. (33)

உடையவனே. "நிறங்கள் ஓர் ஐந்துடையாய்" (சிவபுராணம்-49.) என்றதன் குறிப்பைக் காண்க. தடந் தாள அடல் கரி - பெரிய கால்களையுடைய வலிய யானை. 'கரியைக் கடந்தாய்' என இயையும்; இதுவும் விளியே.

136. அழிந்த - வலி இழந்த. 'என்னை விட்டிடுதி கண்டாய்' என இயையும். விடற்கு அரியாய் - உன்னைப் பற்றினோர், பின்னர் விடுதற்கு அரியவனே; 'அவர்களை வசிகரித்துக் கொள்பவனே' என்றபடி. "அடியார் பெயராத பெருமையனே" என்றார் முன்னும் (25). அருமை, இங்கு இன்மைமேல் நின்றது. தொடல் - தீண்டல்; அணுகுதல். தீச் சுழல - நெருப்புப் பரக்குமாறு, "கடற்கு" என்றதனை, 'கடற்கண்' எனத் திரிக்க. 'கடத்தற்கு' என்பது குறைந்து நின்றது' எனினுமாம்.

137. கண்டது, அவ்வப்பொழுது மனத்திற்குத் தோன்றியது; 'ஒரு நெறிப்படாத செயல்கள்' என்றபடி, இவ்வாறு செய்தல், எல்லாம் உனது அருள்வழியாக நினைத்து அதனை

138 குதுகுதுப் பின்றிநின் றென்குறிப் பேசெய்து
நின்குறிப்பில்
விதுவிதுப் பேனை விடுதிகண் டாய்;விரை
யார்ந்தினிய
மதுமதுப் போன்றென்னை வாழைப் பழத்தின்
மனங்கனிவித்
தெதிர்வதெப் போது பயில்விக் கயிலைப்
பரம்பரனே. (34)

மறவாமையால் என்பார், 'கருணை மட்டுப் பருகிக் களித்து" என்றும், 'அதனால் யாதோர் அச்சமும் இன்றி இருக்கின்றேன்' என்பார், "மிண்டுகின்றேனை" என்றும் அருளினர். மட்டு - தேன். மிண்டுதல் - திண்மையுறுதல். "பண்டுதந்தாற்போல்" என்றதனால், "பணித்து" என்றதற்கு, 'இன்றும் பணித்து' என உரைக்கப்படும். பணித்தல் - காணக் காட்டுதல். 'கூவு வித்து' என்பது, கூவித்து எனக் குறைந்து நின்றது; 'நீயே அழையாது பிறரால் அழைப்பிப்பினும் நன்றே' என்பார், 'கூவி' என்னாது,' கூவுவித்து என்றார். இதனால், அடியார்க்கு அடியராய் நிற்கவும் ஒருப்பட்டமை பெறப்படுகின்றது. கொண்டு - ஏற்றுக்கொண்டு. களையாய - (சிவபோகத் திற்குத்) தடையாய் உள்ள. குதுகுதுப்பு - அடக்கம் இன்மை; பரபரப்பு. இது, பேரறிவின்மையால் உளதாவது. இதனை, "நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும் - பேணாமை பேதை தொழில்" (குறள் - 833.) என்பதில், 'நாடாமை' என்றார், திருவள்ளுவநாயனார். இக்காலத்தார் இதனை, 'குறுகுறுத்தல்' எனக் கூறுப. எனவே, இது மேல், 'கண்டது செய்து' என்றதனையே குறித்ததாயிற்று. அடிகள் இறைவனை மீண்டுங் காண விரும்பினமை, இதனுள் வெளிப் படையாகவே அறியக் கிடக்கின்றது.

138. 'நின் குறிப்பில் குதுகுதுப்பின்றி' எனக் கூட்டுக. நின் குறிப்பு - உனது கருத்து. 'உன் திருவுள்ளக் குறிப்பின் வழி நிற்றலில் விரைதல் இன்றி' என்றவாறு. என் குறிப்பு - எனது கருத்து; என்றது, 'யான் கருதிய செயல்' என்றபடி. விதுவிதுப்பேன் - மிக்க விரைவினை உடையேன். விரைவு, இறைவனை அடைதற்கு என்க. 'நின் குறிப்பின்வழி ஒழுகா

139 பரம்பர னே, நின் பழஅடி யாரொடும்
என்படிறு
விரும்பர னேவிட் டிடுதிகண் டாய்,மென்
முயற்கறையின்
அரும்பர நேர்வைத் தணிந்தாய் பிறவி
ஐவாயரவம்
பொரும்பெ ருமான்வினை யேன்மனம் அஞ்சிப்
பொதும்புறவே. (35)

மலே உன்னை அடைவதற்கு மிக விரைகின்றேன்' என்றபடி. "மது" இரண்டனுள் முன்னது, நீர்; பின்னது, தேன். 'விலாமிச்சைவேர் முதலிய வாசனைப் பொருள்கள் இடப்பட்டு இனிதாய நீரும், தேனும்போல நீ என் எதிர்வருதல் எப்போது' என்க. "வாழைப் பழத்தின் மவம் கனிவித்து" என்றதனை, "விடுதிகண்டாய்" என்றதன் பின்னர்க் கூட்டுக. பயில் வி - மிக்க தூய்மையை யுடைய (கயிலை). இத் திருப்பாட்டிலும் முன்னைப்பாட்டிற் கூறிய கருத்து இனிது விளங்கிக் கிடத்தல் காண்க.

139. "பழ அடியார்" என்றது ஆகு பெயராய், அவரது மெய்யன்பினைக் குறித்தது. மூன்றாம் பிறை முதற்கண் தோன்றுவதாகலின், அதனை, "அரும்பு" என்றார். 'அரா' என்பது, 'அர' என நின்றது. நேர்வைத்து அணிதல் - எதிர் எதிராக வைத்துஅணிதல். 'சந்திரனும், பாம்பும் பகைப் பொருள்களாக, அவற்றைப் பகையின்றி இயைந்திருக்க வைத்து அணிந்தாய்' என்றபடி. 'பாம்பும் மதியும் புனலும் தம்மிற் பகைதீர்த் துடன்வைத்த பண்பா போற்றி" எனத் திருநாவுக்கரசுநாயனாரும் (திருமுறை 6-5-4) அருளினார். 'பிறவியாகிய விடத்தைத் தருகின்ற ஐந்தலை அரவம்' என்க. அது, புலன்கள்மேல் செல்கின்ற அவா. அவா ஒன்றாயினும், புலன்கள் ஐந்தன் மேலும் செல்லுதலின், "ஐவாய் அரவம்" என்றார். பிறவியை விடம் என்னுமையின் ஏகதேச உருவகமும், 'அவா' என்பதனை வெளிப்படக்கூறாது, வாளாதே, "ஐவாய் அரவம்" என்றமையின், குறிப்புருவகமும் வந்தனவாம். இனி, "வாய்" என்றது, பொறிகளை எனக் கொண்டு, அஃது ஆகுபெயராய்ப் புலன்களைக் குறித்தன எனினும் ஆம்.

140 பொதும்புறு தீப்போற் புகைந்தெரி யப்புலன்
தீக்கதுவ
வெதும்புறு வேனை விடுதிகண் டாய்;விரை
யார்நறவந்
ததும்புமந் தாரத்தில் தாரம் பயின்றுமந்
தம்முரல்வண்
டதும்புங் கொழுந்தேன் அவிர்சடை வானத்
தடலரைசே. (36)

141 அரைசே அறியாச்சிறுவன் பிழைக்கஞ்ச
லென்னினல்லால்
விரைசேர் முடியாய், விடுதிகண் டாய்,வெண்
நகைக்கருங்கண்

இப்பொருட்கு, 'அரவம், பன்மையாம். பொரும் - போர் செய்யும். 'விடில் பொரும்' என்பதாம். பெருமான், விளி. "பொதும்புஉற" என்றதற்கு, 'துன்பமாகிய காட்டில் புகும்படி' என உரைக்க 'பொதும்பு உறப்பொரும்' எனக் கூட்டுக.

140. பொதும்பு-காடு "பொதும்புறு தீப்போல்" என்று அருளினாராயினும், 'தீயுறு பொதும்புபோல்' என்றலே திருவுள்ளமாம். புகைந்து எரிதற்கு, 'உள்ளம்' என்னும் வினை முதல் வருவிக்க. தீக் கதுவ - தீயனவாய் வந்து பற்ற. வெதும்புறுதல் - வருந்துதல். நறவம் - தேன். தாரம் - வல்லிசை. மந்தம்-மெல்லிசை. இவற்றிற்கு இடைப்பட்டதனை, 'மத்திமம்' என்ப.

"மந்தரத்தும் மத்திமத்தும் தாரத்தும் வரன்முறையால்
தந்திரிகள் மெலிவித்தும் சமங்கொண்டும் வலிவித்தும்"

என்றதுங் காண்க (பெ. பு. ஆனாய - 27). முரல் - ஒலிக்கின்ற. 'அசும்பும்' என்பது, "அதும்பும்" எனத் திரிந்தது; 'சிந்தும்' என்பது பொருள். வண்டினையும், தேனையும் உடைய 'சடையாகிய வானம்' என்க. வானம், செவ்வானம்.

141. பிழைக்கு - பிழையை நீக்குதல் காரணமாக. 'அஞ்சல் என்னின் அல்லால் வல்வினைதாம் வந்து அடர்

திரைசேர் மடந்தை மணந்த திருப்பொற்
பதப்புயங்கா
வரைசேர்ந் தடர்ந்தென்ன வல்வினை தான்வந்
தடர்வனவே. (37)

142 அடர்புல னால்நிற் பிரிந்தஞ்சி அஞ்சொல்நல்
லாரவர்தம்
விடர்விட லேனை விடுதிகண் டாய்விரிந்
தேயெரியுஞ்
சுடரனை யாய்சுடு காட்டர சேதொழும்
பர்க்கமுதே
தொடர்வரி யாய்தமி யேன்தனி நீக்குந்
தனித்துணையே. (38)

143 தனித்துணை நீநிற்க யான்தருக் கித்தலை
யால்நடந்த
வினைத்துணை யேனை விடுதிகண் டாய்;வினை
யேனுடைய

வனவே' என இயையும். "விடுதிகண்டாய்" என்றதனை இறுதிக்கண் கூட்டி, இதற்குமுன், 'அதனை அறிந்தும்' என்னும் சொல்லெச்சம் வருவிக்க. திரைசேர் மடந்தை - கங்கை. 'கண்ணாகிய கடல் பொருந்திய மடந்தை' என்று உரைத்து, 'உமையம்மையை மணந்த' என்றலுமாம். 'மணந்த புயங்கா' என இயையும். வரைசேர்ந்து அடர்ந்தென்ன - மலைகள் பல ஒருங்கு கூடி நெருங்கினாற்போல.

142. அஞ்சுதல், பிறவிபற்றி. 'அவ்வச்சம் ஒருபால் உளதாயினும், ஒருபால் மாதராசையும் நீங்கமாட்டாதவனாய் இருக்கின்றேன்' என்பார், "அஞ்சி விடர் விடலேன்" என்று அருளிச்செய்தார். "அவர்தம்" என வேற்றுமைத்தொகை பட அருளினமையின், பண்புத்தொகையாக உரைத்தல் ஏற்புடைத்தன்றாம். சுடர் - தீ; ஆகுபெயர். 'பிறர்க்குத் தொடர்வரியாய்' என்றபடி.

143. தனித் துணை - ஒப்பற்ற துணைவன். 'ஒப்பற்ற துணைவனாகிய நீ நிற்க உன் வழிநில்லாது, யான் தனியே என்

மனத்துணையே,என் றன்வாழ்முத லே,எனக்
கெய்ப்பில்வைப்பே,
தினைத்துணை யேனும் பொறேன்துய ராக்கையின்
திண்வலையே. (39)

144 வலைத்தலை மானன்ன நோக்கியர் நோக்கின்
வலையிற்பட்டு
மிலைத்தலைந் தேனை விடுதிகண் டாய்வெண்
மதியின்ஒற்றைக்
கலைத்தலை யாய்,கரு ணாகர னேகயி
லாயமென்னும்
மலைத்தலை வாமலை யாள்மண வாளஎன்
வாழ்முதலே. (40)

145 முதலைச்செவ் வாய்ச்சியர் வேட்கைவெந் நீரிற்
கடிப்பமூழ்கி
விதலைச்செய் வேனை விடுதிகண் டாய்;விடக்
கூன்மிடைந்த

ஆற்றலையே துணையாகக்கொண்டு செருக்குற்று முறைமாறாக நடந்தேன்; அதனால், எனக்கு அந்நடையின் பயனாக விளைந்த வினைதான் துணையாக முடிந்தது; என்னை விடுதிகண்டாய்' என்றபடி. "நடந்த வினைத்துணையேன்" என்ற, வினைமுதற் பெயர்கொண்ட பெயரெச்ச முடிபிற்கு முன்னர், "யான்" என எழுவாய் புணர்த்தமையின், 'யான் தருக்கி நடந்தேன்; அங்ஙனம் நடந்த என்னை' என உரைக்க. பின்னரும் இவ்வாறு வருவன உள; அவற்றை அறிந்துகொள்க. "ஆக்கையின்" என்றதில் இன், அல்வழிக்கண்வந்த சாரியை.

144. "வலைத்தலை" என்றதில் தலை, ஏழனுருபு.நோக்கு - பார்வை. "நோக்கின்" என்றதில் இன், அல்வழிக்கண் வந்த சாரியை. மிலைத்து - மேற்கொண்டு. மேற்கொண்டது, உலகியலை என்க. கலைத் தலையாய் - கலையை அணிந்த முடியை யுடையவனே. மலையாள் - மலைமகள்.

145. "முதலைச் செவ்வாய்ச்சியர்" என்றதனை, 'செவ் வாய்ச்சியர் முதலை' என மாற்றிக்கொள்க. வெந்நீர் - கொடிய

சிதலைச்செய் காயம் பொறேன்;சிவ னே,முறை
யோ!முறையோ!
திதலைச்செய் பூண்முலை மங்கைபங் கா,என்
சிவகதியே. (41)

146 கதியடி யேற்குன் கழல்தந் தருளவும்
ஊன்கழியா
விதியடி யேனை விடுதிகண் டாய்;வெண்
டலைமுழையிற்
பதியுடை வாளரப் பார்த்திறை பைத்துச்
சுருங்கஅஞ்சி
மதிநெடு நீரிற் குளித்தொளிக் குஞ்சடை
மன்னவனே. (42)

147 மன்னவ னே,ஒன்று மாறறி யாச்சிறி
யேன்மகிழ்ச்சி
மின்னவ னே,விட் டிடுதிகண் டாய்;மிக்க
வேதமெய்ந்நூல்

நீர்; சுழலையுடைய நீர். கௌவுதலை, 'கடித்தல்' என்றார். விதலை - நடுங்குதல். விடக்கு ஊன், ஒருபொருட் பன்மொழி. சிதலை - நோய். 'முறையோ' என்பது, முறையீட்டுச் சொல். திதலை - சுணங்கு (தேமல்). சிவகதி - நற்கதி; வீடு. முதல் அடி தவிர ஏனைய அடிகளின் முதற்சீரில் சகர ஒற்றுக்கள் விரித்தலாய் வந்தன.

146. 'கதியாக' என, ஆக்கம் வருவிக்க. ஊன் கழியா - உடம்பை நீக்கமாட்டாத. விதிஅடியேனை - வினையை உடைய என்னை. பதி உடை - பொருந்துதல் உடைய. வாள் அரா - கொடிய பாம்பு. இறை பைத்து - சிறிது படம் எடுத்து. சுருங்க - பின் அவ்விடத்தே ஒடுங்க. "அஞ்சி" என்றதனை, "மதி" என்றதன் பின்னர்க் கூட்டுக. நெடுநீர் - கங்கை யாகிய மிக்கநீர். மதி, நிறைவின்றிப் பிறையாய்த் தோன்று தலின், பாம்பு அதன்பால் செல்லாதாயிற்று. எனவே, பார்த்தமை, நிரம்பினமை அறிதற்பொருட்டாயிற்று.

147. மாறு - பிழை. இஃது, உலகியல் வகையில் பிழை ஒன்றும் செய்யாமையைக் குறித்ததாம். 'ஆறு' எனப் பிரித்து,

சொன்னவ னே,சொற் கழிந்தவ னே,கழி
யாத்தொழும்பர்
முன்ன வனே,பின்னும் ஆனவ னே,இம்
முழுதையுமே. (43)

148 முழுதயில் வேற்கண் ணியரெனும் மூரித்
தழல்முழுகும்
விழுதனை யேனை விடுதிகண் டாய்,நின்
வெறிமலர்த்தாள்
தொழுதுசெல் வான்நற் றொழும்பரிற் கூட்டிடு
சோத்தெம்பிரான்,
பழுதுசெய் வேனை விடேல்;உடை யாய்,உன்னைப்
பாடுவனே. (44)

'வழி' எனவும் பொருள் உரைப்பர். மின்னவன்-மின்னலைச் செய்தவன். இறைவன் தோன்றி மறைந்தமையின், 'மகிழ்ச்சி யாகிய மின்னலைச் செய்தவன்' என்று அருளினர். கழியா-விட்டு நீங்காத. முன்னவன்-கண்முன் தோன்றுபவன். "பின்னும்" என்றது, 'மற்றும்' எனப் பொருள் தந்தது. 'இம்முழுதையும் ஆனவனே' என மாற்றியுரைக்க. இகரச் சுட்டின் ஈற்றில் நின்ற வகரமெய், மகரமாய்த் திரிந்தது. "முழுதையும்" என்றதில் ஐ, சாரியை. 'இவை முழுதும் ஆனவனே' என்பது பொருள். 'நிலம் நீர் முதலாகக் காணப்படுவனவற்றை' "இவ்" எனச் சுட்டிக் கூறினர்.

148. 'முழுதும்' என்னும் உம்மை தொகுத்தலாயிற்று. "கண்ணியர்" என்றது ஆகுபெயராய், அவர் மேற்செல்லும் ஆசையைக் குறித்தது. 'முழுதும் முழுகும்' என இயையும். மூரித்தழல் - பெரிய நெருப்பு. விழுது - இழுது; வெண்ணெய். செல் - சென்ற. வான் நல் தொழும்பர் - வீட்டுலகத்தில் உள்ள நல்ல அடியார். அவர்களை, "நற்றொழும்பர்" என்றது, தாம் அன்னராகாமையை விளக்குதற்கு. சோத்து-வணக்கம்; இஃது இழிந்தோர் கூற்றுயே வரும். 'செய்வேன்' என்றது, 'செய்யும் இயல்பினேன்' என்றதாம். 'ஆயினும் உன்னைப் பாடுதல் செய்வேன்; ஆதலின், விடுதல் ஆகாது' என்பார், மறித்தும், "விடேல்" என விண்ணப்பித்தார்.

149 பாடிற்றி லேன்,பணி யேன்;மணி நீஒளித்
தாய்க்குப்பச்சூன்
வீடிற்றி லேனை விடுதிகண் டாய்;விய ந்
தாங்கலறித்
தேடிற்றி லேன்;சிவன் எவ்விடத் தான்?எவர்
கண்டனர்?என்
றோடிற்றி லேன்;கிடந் துள்ளுரு கேன்; நின்
றுழைத்தனனே. (45)

150 உழைதரு நோக்கியர் கொங்கைப் பலாப்பழத்
தீயினைப்பாய்
விழைதரு வேனை விடுதிகண் டாய்;விடின்
வேலைநஞ்சுண்
மழைதரு கண்டன், குணமிலி, மானிடன்,
தேய்மதியன்,
பழைதரு மாபரன் என்றென் றறைவன்
பழிப்பினையே. (46)

---

149. "வீடிற்றிலேனை" என்றது, 'வீடிற்றிலேன்; என்னை' என இருசொற்பொருட்டாய் நின்றது. "மணி" என்றது, விளி. "நீ விடுதிகண்டாய்" என இயையும். வியந்து - மருண்டு. 'மணியே, ஒளித்த உன் பொருட்டுப் பாடிற்றிலேன்; பணியேன்; வியந்து ... ... உருகேன்; பச்சூன் வீடிற்றிலேன்; நின்று உழைத்தனன்; என்னை நீ விடுதிகண்டாய்' என்க. 'உயிர்நின்ற உடம்பு' என்பார், "பச்சூன்" என்று அருளினார். உழைத்தனன் - அலைந்தேன்.

150. உழை - மான். தரு, உவம உருபு. 'கொங்கைக் கண்' என உருபு விரிக்க. "ஈயின்" என்றதில் இன், வேண்டா வழிச் சாரியை. பலாப்பழத்து ஈ, அதன்கண் விழ்ந்து மீள மாட்டாது அழிதலாகிய தொழில்பற்றி வந்த உவமை. இதற்கு, கொங்கையைப் பலாப்பழத்தோடு உவமித்ததாக உரைத்து, அதன்மேலும் பல நயம் கூறுவாரும் உளர். 'நஞ்சுண் கறைக்கண்டன் முதலிய சொற்களாலெல்லாம் பழிப்பினையே புலப்படுத்துவன்' என்றபடி, நஞ்சுண்டல், பேரறிவில்லாதாரது செயல்; கண்டத்தில் கறுப்புண்மை

151 பழிப்பில்நின் பாதப் பழந்தொழும் பெய்தி
விழப்பழித்து
விழித்திருந் தேனை விடுதிகண் டாய்;வெண்
மணிப்பணிலங்
கொழித்துமந் தாரம்மந் தாகினி நுந்தும்பந்
தப்பெருமை
தழிச்சிறை நீரிற் பிறைக்கலஞ் சேர்தரு
தாரவனே. (47)

உடல் அழகிற்கு ஓர் மறு; மானிடன் - தேவனல்லன். தேய் மதியன் - குறைந்த அறிவையுடையவன். பழை - பழைமை. தரு - பொருந்திய; என்றது, 'யாவராலும் அறியப்பட்ட' என்றபடி. மா அபரன் எனப் பிரித்து, 'மிகவும் கீழானவன்' என உரைக்க. இனி மா பரன் என்றே பிரித்து, 'யாவர்க்கும் மிக அயலான்' என்று உரைப்பினும் ஆம். 'என்னை ஏன்று கொள்ளாது விட்டுவிடின், இப் பெயர்கள் எல்லாம் இங்ஙனம் கூறும் பொருளையே உடையனவாய் விடும்' என்றபடி. இங்ஙனம் இச்சொற்களை வேறு பொருள்பட வைத்தமை அடிகளது புலமைத் திறத்தையும் உணர்த்துகின்றது. இப் பாட்டிலும், "சிரிப்பிப்பன்" எனப் பின்னர் வருகின்ற பாட்டிலும் அடிகள் தம்மை இறைவன் ஆட்கொண்ட உரிமையாற் சில கூறினமை அறிந்து இன்புறற்பாலது. குணம் இலி - மாயா குணங்களாகிய முக்குணங்களுள் ஒன்றும் இல்லாதவன். மான் இடன் - பெண்ணை அல்லது மானை இடப்பக்கத்தில் கொண்டவன். தேய் மதியன் - தேய்ந்த சந்திரனை அழிந்தொழியாதபடி அணிந்தவன். பழைதரு மா பரன் - அனாதியான பெரிய மேலானவன். இவையே இச் சொற்கள் குறிக்கும் உண்மைப் பொருள்.

151. விழ - அஃது என்னிடத்தினின்றும் தவறிவிட. பழித்து - அதனால் என்னையே பழித்துக்கொண்டு. 'பழித்து - பழிக்கப்பட்டு' எனினுமாம். வெண்மணி - முத்து. பணிலம் - சங்கு. மந்தாரம் - மந்தார மலர்: இஃது இறைவன் சடையில் உள்ளது. 'நுந்தும் மந்தாகினி' என மாறுக. நுந்தும் - தள்ளுகின்ற. மந்தாகினி - கங்கை. 'மந்தாகினியாகிய நீரில்' என்க. 'பந்தப் பெருமை தழி' என்பதனை, "வெண்மணி"

152 தாரகை போலுந் தலைத்தலை மாலைத்
தழலரப்பூண்
வீர,என் றன்னை விடுதிகண் டாய்;விடில்
என்னைமிக்கார்
ஆரடி யான்என்னின், உத்தர கோசமங்
கைக்கரசின்
சீரடி யாரடி யான்என்று நின்னைச்
சிரிப்பிப்பனே. (48)

153 சிரிப்பிப்பன் சீறும் பிழைப்பைத் தொழும்பையும்
ஈசற்கென்று
விரிப்பிப்பன் என்னை விடுதிகண் டாய்;விடின்
வெங்கரியின்

என்றதற்கு முன்னே கூட்டுக. பந்தப் பெருமை - (உன்னோடு) தொடர்புற்று வாழும் பெருமை. 'தமீஇ' என்பது குறுகி நின்றது. சிறை நீரில் - தடுத்து வைக்கப்பட்ட நீரில். கலம் - மரக்கலம்; தோணி. தார் - மாலை. இது, கொன்றைமாலையே என்பது அறியப்பட்டது.

152. தாரகை - விண்மீன்.தாரகை போலும் தலையில் உள்ள தலைமாலையையும், தழல் போலக் கொடிய அரவமாகிய அணிகலத்தையும் உடைய வீரனே' என்க. "தலைமாலை தலைக் கணிந்து" (திருமுறை. 4 - 9. 1.) எனவும், "தலைக்குத் தலை மாலை அணிந்ததென்னே" (திருமுறை. 7. 4.-1.) எனவும் வந்தனவற்றால்,சிவபிரான் தலையிலும் தலைமாலை யணிந்திருத்தல் அறியப்படும். மிக்கார் - உயர்ந்தோர். "ஆரடியான்" என்ற தற்கு' நீ 'என்னும் எழுவாய் வருவிக்க. என்னின் - என்று வினவின்.என்று - என்று விடைசொல்லி. "சிரிப்பிப்பன்" என்றது. இவ்விடையைக் கேட்ட அளவில், 'இவனை ஆட்கொண்டது இவ்வாறுதானோ' என்று நின்னை அவர்கள் எள்ளி நகையாடுவார்கள் என்றபடி. எனவே, 'சிரிப்பிப்பன்' என்பதற்கு 'சிரித்தற்குக் காரணமாய் நிற்பேன்' என்றதாம்.

153. "என்னை விடுதிகண்டாய்; விடின்" என்றதனை, "முதலிலும். என்னையும் ஆளுடைப் பிச்சன்" என்றதனை, 'வெங்கரியின்' என்றதற்கு முன்னும் கூட்டுக. 'சீறும் பிழைப்

உரிப்பிச்சன்; தோலுடைப் பிச்சன்;நஞ் சூண்பிச்சன்;
ஊர்ச்சுடுகாட்
டெரிப்பிச்சன்; என்னையும் ஆளுடைப்பிச் சன்என்
றேசுவனே. (49)

154 ஏசினும், யான்உன்னை ஏத்தினும் என்பிழைக்
கேகுழைந்து
வேசறு வேனை விடுதிகண் டாய்;செம்
பவளவெற்பின்
தேசுடை யாய்,என்னை ஆளுடை யாய்,சிற்
றுயிர்க்கிரங்கிக்
காய்சின ஆலமுண் டாய்,அமு துண்ணக்
கடையவனே. (50)

திருச்சிற்றம்பலம்.

பைச் சிரிப்பிப்பன்' என மாற்றிக்கொள்க. சீறும் பிழைப்பு - ஆட்கொண்டபின் என்னை வெறுக்கும் உனது தவறான செயலை. சிரிப்பிப்பன் - பிறர் இகழுமாறு செய்வன். தொழும்பையும் ஈசற்கு என்றே விரிப்பிப்பன் - 'இவனது அடிமைத்திறமும் சிவபெருமானுக்குத்தான்' என்று பலரும் தம்முள் விரிவாக எடுத்துப் பேசும்படி செய்வேன். பிச்சன் - பித்தன். எரிப் பிச்சன் - தீயில் நின்று ஆடும் பித்தன். "என்னையும்" என்றதில் உள்ள உம்மை, 'ஏனை அடியார்களோடு' என இறந்தது தழுவிற்று.

154. ஏசுதல் - இகழ்தல். ஏத்துதல் - புகழ்தல். பிழைக்கு - பிழை செய்தது கருதி. குழைந்து - மெலிந்து. வேசறுவேன் - வருந்துவேன். இங்கும், "வேசறுவேனை" என்றதற்கு, 'வேசறுவேன்' 'அத்தன்மையனாகிய என்னை' என இருசொற்பொருட்டாக உரைக்க. "சிற்றுயிர்" என்றது, இயைபின்மை நீக்கிய விசேடணம். இது தேவர் முதலிய யாவரையும் குறித்தது. எங்கும் பரந்து கொல்லத் தொடங்கிய செயலை, 'காய்கின்ற சினம்' என்றார். ஆலம் - நஞ்சு. 'சிற்றுயிர்க்கு இரங்கி. அவை அமுதுண்ணுதற்பொருட்டு ஆலமுண்டவனே' என்க. 'கடையவன்' என்றது, முதற்கண் நின்ற, "யான்" என்றதனோடு இயையும். இதனால், இறுதிக்கண் சில திருப்பாட்டுக்களில்

அடிகள் இறைவனை இகழ்வது போலக் கூறினமைக்கு வருந்தி, 'என் வாயினின்றும் எழுந்த சொற்கள், ஏசுதல், ஏத்துதல் என்பவற்றுள் எவ்வடிவில் அமைந்திருப்பினும், என் கருத்து, என் பிழையைக் கருதி வருந்துவதல்லது உன்னைப் பழிப்பதன்று என்பது நீ அறிந்ததன்றோ' என விண்ணப்பித்து, தம்மைக் கைவிடாது ஏற்றருளுமாறு வேண்டினமை காண்க. "ஆலம் உண்டாய்" என்றதும், 'பிழையைப் பொறுக்கற்பாலை" என்னும் குறிப்பினதே. இத் திருப்பாட்டின் இறுதிச் சீர், முதல் திருப்பாட்டில் எடுத்த, 'கடையவன்' என்னும் சொல்லேயாய், அதனோடு சென்றியைந்து மண்டலித்தல் காண்க.

அந்நகரின் மறையோரி லருள்புனைமாத் தியர்குலத்துத்
தன்னிகரில் சைவநெறித் தலைவனவன் றனித்தேவி
மின்னனையா டிருவயிற்றின் மென்கொடிபங் கினனருளாற்
றென்னவன்செங் கோன்முதல்வர் திருவவதா ரஞ்செய்தார். 4

பொய்ம்மையா முலகின் மாயப் பொங்கிரு ளகல வன்னோர்
தம்மையாழ் நரகிற் றள்ளுஞ் சமயதா ரகைம ழுங்க
எம்மையா ளுடையா னன்ப ரிதயதா மரைக ளெல்லாஞ்
செம்மையாய் மலர ஞான தினகர ருதயஞ் செய்தார். 5

மருவாத நெறிபூண்ட மத்தனெனும் புத்தனுடன்
பெருவாது வென்றுசிவன் பெருநாம மிகவளர
ஒருவாத பிறவியிற்சென் றொருநாம முறுதவர்க்குத்
திருவாத வூரரெனுந் திருநாமந் தரித்தார்கள். 6

தவமெனும் பெரிய வித்துட் டங்கியே யங்கு ரித்துப்
பவமெனும் பங்க நீங்கிப் பயிலருட் குருத்துண் டாகி
அவமெனுங் களைக ணீங்கி யாக்குவோ னருளா லுண்மைச்
சிவமெனும் விளைவுண் டாக வளர்ந்தது தெய்வச் சாலி. 7

தேனினொடு கரும்பினெழுஞ் செழும்பாகு முக்கனியும்
ஆனினறும் பாலுமுட னளவியுளங் களிகூர
ஈனமிகும் பலயோனிப் பிறவியெனும் பசிதீர
ஞானவமு துண்பார்க்கு நயந்தமுது நுகர்வித்தார். 8

— திருவாதவூரடிகள் புராணம்.

7. திருவெம்பாவை

['எம்பாவாய்' என்னும் முடிபினை யுடைய பாடல்களை யுடைமையால், இப்பாடற்றொகுதிக்கு, 'திருஎம்பாவை' என்பது பெயராயிற்று. இவ்வாறு வரும் பாடல்கள் 'பாவைப் பாட்டு' எனப்பட்டன என்பது, தொல்காப்பியப் பேராசிரியர் உரையானும், அவையாவும், இறுதியில், 'எம்பாவாய்' என்னும் முடிபினையே யுடையனவாய் வரும் என்பது, யாப்பருங்கல விருத்தியுட் காட்டப்பட்ட பாடல் ஒன்றானும் அறியப்படுகின்றன. அதனால், முடிபினாற் பெற்ற பெயராக இங்கு, 'திரு எம்பாவை' எனப்பட்டது. 'எம்பாவாய்' என்பதற்கு முன்னர், 'ஏலோர்' என்பதனைக் கூட்டி, 'ஏலோர் எம்பாவாய்' என முடித்தலும் இப் பாவைப் பாடல்கட்குரிய மரபு என்பதும், மேற்குறித்த அப்பாடலானே அறியப்படும்.

இனி இப் 'பாவைப்பாட்டு' என்பது யாது என்பதும் ஆராயற்பாலது.

'இளமகளிர் தாம் நற்பண்புடைய ஆடவரையே கணவராக அடைதல் வேண்டும் எனக் கருதி அதன்பொருட்டு மார்கழித் திங்களில் உமையம்மையை வழிபடும் நோன்பை மேற்கொண்டு, விடியற்காலையில் நீராடச் செல்லுங்கால் நீர்க்கரையில் அவ் வம்மை தன் வடிவமாக மணலாற் பாவை செய்து வழிபடுவர்' எனவும், 'அதனால் அந்நோன்பு, பாவை நோன்பு எனப்படும்' எனவும், 'அந்நாளில் அப்பாவையை முன்னிலைப்படுத்து அம் மகளிர் பாடும் பாடலே பாவைப்பாட்டு எனப் பெயர்பெற்றது' எனவும் உரைப்பர் சிலர். ஆயினும், அந்நோன்பைப் பற்றிய ஒரு சிறுகுறிப்பும் அடிகளது திருவெம்பாவையில் காணப் படாமையின், அங்ஙனம் உரைத்தல் கூடுமாறில்லை.

'ஆண்டாள் திருப்பாவையாகிய வேறொரு பாவைப் பாட்டில் இது விளக்கமாகக் கூறப்பட்டிருத்தலின், அடிகளது பாவைப்பாட்டும் அன்னதே எனக் கோடல் சாலும்' என்பது அவரது கருத்து. அக்கருத்து அடிகட்கு ஒத்ததாயின், மகளிர் முதற்கண் விடியலில் எழுந்து எழாதவர்களை எழுப்புதல் பின்பு யாவரும் ஒருங்குகூடி இறைவனை வாழ்த்தி வணங்குதல்

நீர்த்துறைக்குச் சென்று நீராடுதல் என்பவற்றை முறைப்படக் கூறும் தமது திருவெம்பாவையில் அதன் பின்பு இப்பாட்டிற்கு முதலாகிய பாவை வழிபாடு பற்றியாதல் பாவை நோன்பு பற்றியாதல் யாதும் கூறாதே போயினர் என்றல் முறையாகா தன்றோ? அதனால், 'பாவைப் பாட்டு' என்பது, பாவை நோன்பு பற்றியாதல், வழிபடப்படும் பாவைபற்றி யாதல் வந்த தன்றென்பது தெளிவு. அன்றியும், சமண சமயத்தினரும் தம் கடவுள் பற்றிப் பாவைப் பாட்டுப் பாடினர் என்பது, மேற் குறித்த யாப்பருங்கல விருத்தியுட் காட்டிய பாடலாலும், பிற வாற்றாலும் அறியப்படுதலாலும், பாவைப் பாட்டு என்பது உமைவழிபாட்டுப் பாடலாயின் அவர் அதனைக் கொள்ளாராத லாலும் இது தெளிந்துகொள்ளப்படும். இன்னும், 'எம்பா வாய்' என்பது, வழிபடப்படும் தெய்வப் பாவையை விளிப்ப தாய், பொருள் பயந்து நிற்குமாயின், பின்னர்க் கூறப்படும் பொருள்கள் அத் தெய்வத்தைப் பற்றியதாதல் வேண்டு மன்றி வேறாதல் கூடாமையானும் அங்ஙனம் கூறுதல் பொருந் தாமை யறிக.

'பாவைப் பாட்டு' என்பது, பாவை நோன்பு பற்றியதன் றாயின். மற்றியாதோ எனின், 'அம்மானைப் பாட்டு, ஊசற் பாட்டு' முதலியவை மகளிர் விளையாட்டுப் பாடலாதல்போலப் பாவைப் பாட்டும் அவரது விளையாட்டுப் பாடலேயாம். அங் ஙனமாயின், அம்மானை, ஊசல் முதலியன விளையாட்டாதல் போலப் பாவையும் விளையாட்டோ எனின், அன்னதன்று; இளமகளிர் தாம் நீராடுங்கால் பாவையொன்றனை நீராட்டி ஆடும் விளையாட்டின்கண் அப்பாவையை, 'எம்பாவாய்' என விளித்துப் பாடும் பாட்டே 'பாவைப் பாட்டு' எனக் கொள் ளுதுமாகலின், 'பாவை' என்பது விளையாட்டாகாமைபற்றி இழுக்கில்லை. எனவே, விளையாட்டு வகையால் நோக்கின் இது, 'நீராடற் பாட்டு' எனப் பெயர் பெறற்பாற்று என்பதும், அவ் வாறாயினும் பாவையை விளித்துப் பாடுதல்பற்றி, 'பாவைப் பாட்டு' என வழங்கப்பட்டது என்பதும் போதரும். இவை யெல்லாம் எற்றாற் பெறுதுமெனின், பாவைப் பாட்டுக்கள் யாவும் நீராடல் பற்றியே வருதலாற் பெறுதும். இதனானே, இப்பாட்டின்கண் வரும் 'ஏலோர்' என்பது, பாவை நீராட்டு மகளிர் அப்பாவையை விளிப்பதோர் சொல்லெனக் கொள்ளப் படும்.

ஆண்டாள் திருப்பாவை பாவைநோன்பு பற்றி வந்தமை தெளிவாதலின், பாவைப் பாட்டுக்கள் பலவும் அத்தன்மையனவே எனக் கொள்ளுதல் எளிதாய் இருக்க, அதனை விடுத்து, வேறு காரணம் கற்பித்துக்கொண்டு இவ்வாறெல்லாம் கூறி இடர்ப்படுதல் என்னையோ எனின், பாவை நோன்பாவது, 'மாயோன் கண்ணனாய்த் தோன்றி ஆயர்பாடியில் வாழ்ந்த ஞான்று அவனையே கணவனாகப் பெற விரும்பிய ஆயர்குல மகளிர் நோற்றுத் தம் கருத்து நிரம்பப் பெற்ற நோன்பு' எனக் கிருட்டின பாகவதம் கூறுதலன்றித் தமிழ் நூல்களிலாதல், சிவநெறி நூல்களிலாதல் அஃது யாண்டும் கூறப்படாமையானும், ஆண்டாளும் ஆயர்பாடி மகளிர்போலக் கண்ணனைக் கணவனாகப் பெறுதலையே விரும்பினமையின், கிருட்டின பாகவதம் கூறுமாற்றானே தானும் நோற்கக் கருதிப் பாடிய, அப் பாவைப்பாட்டிற்கு அக்காரணம் பொருந்துவதன்றி, தம் கடவுளரைக் கணவனாகப் பெறும் விருப்பத்திற்கே இயைபில்லாது, அன்பு காரணமாக அவரைப் பாடிப் பரவுதல் மாத்திரையே கருதி, பாவை நோன்பு என்பதொன்று காணப்படுதற்கே இடனின்றிப் பாடப்பட்ட பிற பாவைப் பாட்டிற்கும் அதுவே காரணம் எனக் கூறின், அது நூற்கருத்திற்கு ஏலாமையானும் அங்ஙனங் கொள்ளுதல் பொருந்தாதாம். அதனாலன்றோ, வாதவூரடிகளது திருவெம்பாவை ஒன்றையே பற்றுக்கோடாகக் கொண்டு அதன் வரலாறுரைத்த கடவுள் மாமுனிவர், 'மார்கழித் திங்களில் திருவாதிரையை முடிவாகக் கொண்ட பத்து நாட்களிலும் மகளிர் விடியலில் எழுந்து, எழாதவர்களையும் எழுப்பிக்கொண்டு நீர்த்துறைக்குச் சென்று நீராடினர்' என்னுந் துணையே கூறியதன்றி, ஆண்டாள் கண்ணனைக் காதலித்துப் பாடிய பாவைப் பாட்டிற் காணப்பட்ட பாவை நோன்பை இங்கும் புகுத்திக் கூறாது போயினதூஉம் என்க. எனவே, திருவாசகத்தின் முன்னை உரையாளர் ஒருவரும் பாவைநோன்பு பற்றிய செய்தியை ஈண்டுக் கொண்டு கூறாமையும் இதுபற்றியே யாயிற்று.

கிருட்டின பாகவதம் கூறும் பாவை நோன்பு, மாயோன் தேவி முதலிய பிற தெய்வங்களைப் பற்றியதாகாது, சிவபிரான் தேவியாகிய உமையம்மையைப் பற்றியதேயாக, அதனை, சிவபிரானையும், உமையம்மையையுமே வாழ்த்துவதாய இத் திருவெம்பாவைக்கு ஏலாது என்றது என்னையெனின், அது, செயல்வகையில் உமையம்மையைப் பற்றியதாயினும், கருத்து

வகையில் கண்ணனைக் கணவனாக அடைவதையே பயனாகக் கொண்டமையின், அக் கருத்தில்லாத மகளிரைப் பற்றி வரும் இத் திருவெம்பாவைக்கு அஃது ஏற்புடைத்தாகாமை தெளிவா தல் அறிக.

இன்னும், ஆயர்பாடியில் தோன்றிய ஆயர், கன்னியர் அனை வரும், கண்ணனாகிய ஒருவனையே காதலித்தலை அவரைப் பெற் றோர் விரும்பாது சினந்தமையின், அம்மகளிர், தம் கருத்தை நிறைவேற்றுதற்குத் தெய்வம் பராவுவாராய், அதனைத் தம் இல்லத்தில் தம் இருமுதுகுரவர் முன்னர்ச் செய்யமாட்டாது தாம் நீராடச் செல்லும் நீர்க்கரையிற் செய்தலும், அங்ஙனம் செய்கின்றுழி, மாயோனைக் கணவனாகப் பெற விரும்பும் தம் விருப்பத்தினை அவன் தேவியிடத்து வெளிப்படுத்தமாட்டாரா யினமையின், அவளை வழிபடாதொழிதலும், கண்ணனைக் கடவுளாகக் கருதினும் கணவனாகற்பாலன் எனக் கருதினமை யின், அம் முறையால் சிவபிரானையும் அயலானோர் ஆடவனாகக் கருதி அப்பெருமானையும் வழிபடாது, உமையை வழிபடுதலும் உடையராயினமையின், அவையெல்லாம் திருவாதவூரடிகள் அருளிச்செய்த இத் திருவெம்பாவையிற் கூற்று நிகழ்த்தும் மகளிர்க்குப் பொருந்துமாறில்லை. என்னையெனின், இறைவனைக் கணவனாகப் பெற்றுத் தழுவி இன்புறக் கருதுதல் மாயோன் நெறியிற் காணப்படுவதன்றிச் சிவநெறியிற் காணப்படுவதன்றா கலின். இறைவனைக் கணவனாகக் கருதுதல் மாயோன் நெறியிற் காணப்படுதற்கும், சிவநெறியில் அது காணப்படாமைக்கும் காரணம், ‘இறை இன்பமும், இவ்வுடம்பு இல்லாவிடினும் ஒளியுடம்பாய வேறோர் உடம்பு கொண்டு நுகரப்படுவதே’ என்பது மாயோன் நெறியினர் கொண்ட கொள்கையும், அவ் வாறின்றி, ‘இறைவனுக்கும் உயிருக்கும் இடையே உடம்பென்ப தொன்று நிற்கும் நிலையாதாயினும் அது, இறைவனை நேரே தலைப்படுவதாகாமையின் பந்தமே’ என்பதும், ‘அதனால், இடையீடு யாதுமின்றி உயிர் இறைநிறைவில் ஒன்றாய்க் கலந்து அவ்வின்பத்தில் அழுந்தி நிற்பதே வீடு’ என்பதும் சிவநெறிக் கொள்கையுமாதலேயாம். இவ்வுண்மை, ஆண்டாள்வரலாற்றி லும், பாடலிலும் இறைவனைக் கணவனாகக் கண்டு காதலித் தமை கேட்கப்படுதலாலும், காரைக்காலம்மையார் வரலாற்றி லும், பாடலிலும் அது கேட்கப்படாமையோடு, இறைவனை அவர், ‘அப்பா’ என அழைத்தமையே கேட்கப்படுதலாலும் நன்கு புலனாகும்.

காரைக்காலம்மையார் தாம் தசைப்பொதி உடம்பைச் சுமந்துநின்றது உலகியல்பற்றித் தம் கணவன் பொருட்டாகவே என்பதையும், அவ்வுடம்பு கணவனுக்கும் ஆகாமை அறிந்த அப்பொழுதே அவர் இறைவனை வேண்டி அவனது அருள் வலியால் அவ்வுடம்பை உதறித்தள்ளிப் பேயுருப் பெற்றதையும் சேக்கிழார்,

"ஈங்கிவன் குறித்த கொள்கை இதுஇனி இவனுக்காகத்
தாங்கிய வனப்பு நின்ற தசைப்பொதி கழித்திங் குன்பால்
ஆங்குநின் தாள்கள் போற்றும் பேய்வடி வடியேற் கின்று
பாங்குற வேண்டு மென்று பரமனைப் பரவி நின்றார்"

எனவும்,

"ஆனஅப் பொழுது மன்றுள் ஆடுவா ரருளி னாலே
மேனெறி உணர்வு கூர வேண்டிற்றே பெறுவார் மெய்யில்
ஊனடை வனப்பை யெல்லாம் உதறிஎற் புடம்பே யாகி
வானமும் மண்ணும் எல்லாம் வணங்குபேய் வடிவ மானார்"

எனவும் இனிது விளங்கக் கூறினார்.

இங்ஙனம் உடம்பைச் சுமையாகக் கருதி வெறுத்து,

"அறிவானுந் தானே; அறிவிப்பான் தானே;
அறிவா யறிகின்றான் தானே — அறிகின்ற
மெய்ப்பொருளுந் தானே; விரிசுடர்பார் ஆகாயம்
எப்பொருளும் தானே அவன்"

(அற்புதத் திருவந்தாதி - 20)

என்று இறைவனை அறிவினுள்ளே அறிவினாலறிந்து இன்புற்றிருந்த அம்மையாரது ஞானத்தின் மிகுதிக்கு ஓர் எல்லையும் உண்டோ! அதனாலன்றோ, ஞானத்தின் திருவுருவேயான ஞானசம்பந்தரும், 'அம்மை தலையால் நடந்த திருத்தலத்தை யான் காலால் மிதியேன்' என்று அஞ்சி ஆலங்காட்டினுட் செல்லாது புறத்தே தங்கியிருந்ததும் இறைவனும் அவரை 'வா' என்று உள்ளே அழையாது, அவரிருந்த இடத்திற்றானே சென்று பாடச் செய்து அப்பாடலைக் கேட்டதும் என்க. இவற்றாலெல்லாம், 'இறையின்பத்தை நுகர்தற்கு உடம்பு

வேண்டப்படுவதன்று' என்பதோடு, 'அஃது அதற்குத் தடையு மாம்' என்பதே சிவநெறிக் கொள்கை என்பது போந்தது.

" மற்றும் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க
லுற்றார்க் குடம்பும் மிகை "

எனத் திருவள்ளுவரும் கூறுதல் காணலாம். (குறள். 345.) 'வீடாவது ஓர் உலகமே' என யாண்டும் கூறி, அவ்வுலகம் 'செங்கண் மாலுலகமே' என்னும் தம் கருத்தை,

" தாம்வீழ்வார் மென்றோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணா னுலகு "

என்னும் குறள் (1103) உரையில் வெளிப்படுத்திய பரிமே லழகர், "மற்றும் தொடர்ப்பாடு எவன்கொல்" என்னும் குறள் உரையில், 'உடம்பென்ற பொதுமையான் உருவுடம்பும் அருவுடம்பும் கொள்ளப்படும்' எனக் கூறி, அருவுடம்பின் தன்மையை விளக்குமளவே உரைத்து அதற்குமேல் ஒன்றும் உரையாதுபோயினமையின், தாம் கூறும் வீட்டுலகத்திற் செல்வோர்க்கு உடம்பு உளதாதல் பற்றி யாதும் உரைக்க மறந்தார் போலும்!

இறை இன்பம் உடம்பு கொண்டே நுகரப்படுவது எனவும், இறைவன் சிறப்புடைய ஓர் ஆடவன் (புருடோத்தமன்) என வும் கொள்ளுதலால், அவனது இன்பத்தை நுகரும் அடியார் களுள் ஆடவரினும், மகளிரே பெரிதும் தகுதியுடையர்' என்பர் மாயோன் நெறியினர். சிவநெறியின்கண் அக்கொள்கையின்மை யானும் 'ஆடவர், மகளிர்' என்னும் வேறுபாடு உடம்பின் கண்ணதன்றி, உயிரின்கண் இன்மையானும், இறையின்பத்தை நுகரும் அடியாரிடத்து ஆடவர், மகளிர் என்னும் வேற்றுமை கொள்ளாது, இருதிறத்தவரும் ஒப்ப உயர்ந்தவர் எனவே கொள்வர் சிவநெறியாளர். இதனானே, இறைவனோடு அவன் அடியாரிடை நாயக நாயகிபாவம் கொள்ளுதலும் சிவநெறியின் கண் இல்லையாயிற்று. அது, 'சரியை, கிரியை, யோகம்' என் பவற்றை முறையே, 'தாச மார்க்கம், சற்புத்திர மார்க்கம், சக மார்க்கம்' எனக் கூறியவாறே, ஞானத்தை, 'நாயகி மார்க்கம்' எனக் கூறாது, 'சன்மார்க்கம்' என்றே அவர் கூறிப்போதலா னும் நன்கறியப்படும்.

அங்ஙனமாயின், தொல்காப்பியர்,

" காமப் பகுதி கடவுளும் வரையார்
ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர் "

எனக் கூறியவாறு (பொருள். 81) கடவுள் வாழ்த்தில், 'கடவுள்மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கம்' என்பதொரு துறை காணப்படுவது என்னையெனின், பாடாண் திணையுள் வரும் கைக்கிளை, பாட்டுடைத் தலைவனது பெருமை புலப்படற் பொருட்டு அவனைப் பாடும் புலவர், ஒருத்தி அவனைக் காதலித்தாளாகப் புனைந்து கூறுதலன்றி அஃது உண்மை நிகழ்ச்சி அன்றாதலின், அது பற்றி வருவதோர் ஐயமில்லை. அதனாலன்றோ, அத் துறையுள், காதலித்த தலைவி இவள் என இயற்பெயர் கூறுதல் இல்லையாயிற்று.

சமண சமயத்தினர், 'பெண்டிர்க்கு முத்திப் பேறு இல்லை' என்பர்; இறைவனோடு அவன் அடியாரிடை நாயக நாயகி பாவம் கூறுவார், 'ஆடவர்க்கு முத்திப் பேறு இல்லை' என்பர்; இவ்விரண்டும், உயிரியல்பையும், உடம்பியல்பையும் பகுத்துணரும் உணர்வினார் முன்னர் நகையைத் தோற்றுவிக்குமளவாய்ப் போமென்பதறிக. இவற்றாலெல்லாம், ஆளுடைய அடிகளது திருவெம்பாவையினது பெற்றியை அதனையே கொண்டும், ஏனைச் சிவநெறி நூல்களைக் கொண்டும் நோக்குதல் வேண்டுமன்றிப் பிற நூல் கொண்டு நோக்குதல் கூடாமை உணர்ந்துகொள்க. இதனானே, திருவெம்பாவையிற் கூற்று நிகழ்த்து மகளிராதல், அவர்வாயிலாக ஆளுடைய அடிகளாதல் பிற சிவநெறி நூல்களின் ஆசிரியராதல் இறைவனைக் கணவனாகவும், தம்மை மனைவியராகவும் கருதினின்றார் என்பதற்கோர் காரணம் இன்மையும் நன்குணர்ந்து கொள்ளப்படும்.

இனி, இத் திருவெம்பாவை முதலாக உள்ள பாவைப் பாட்டுக்கள் கடவுள் பொருளாகப் பாடப்பட்டன எனினும், அவற்றிற்கு முன்னர் வழங்கிய பாவைப் பாட்டுக்கள் கடவுள் பொருளாகவன்றி மக்கள் பொருளாக வழங்கின எனக் கொள்ளல் வேண்டும். ஏனெனின், அம்மானைவரி, ஊசல்வரி முதலியன அவ்வாறு வருதலைச் சிலப்பதிகாரம் முதலிய இலக்கியங்களிற் காண்கின்றாமாதலின், ஆசிரியர் தொல்காப்பியனார் பாடாண் திணையுள், 'கொற்றவள்ளை' என்பதொரு துறை

கூறியிருத்தல் இக்கருத்தை நிலைநிறுத்தும். எவ்வாறெனின், 'வள்ளை' என்பது உரற்பாட்டாகலானும், அதனுல் பாட்டுடைத் தலைவர் பாடப்படுவர் என அவர் கூறலானும், அவ்வாறே அம்மானைப் பாட்டு, ஊசற் பாட்டு முதலியவற்ருனும் பாட்டுடைத் தலைவர் பாடப்பட்டனர் என்பது சொல்லாதே அமைதலான் என்க. கொம்மைப் பாட்டு, பள்ளுப் பாட்டு முதலியவற்ருல் பாட்டுடைத் தலைவரை இக்காலத்தாரும் பாடுதல் காணப்படுவது. இப்பாட்டுக்கள், சொல்லும், பொருளும் விழுமியவாகாதுவரின், 'நாட்டுப் பாடல்' எனப் புறவழக்காம். அவ்வாறின்றி, நல்லிசைப் புலவரால் சிறப்புறப் பாடப்படுமாயின், 'வரிப் பாட்டு' எனப் புலனெறி வழக்காய் உயர்ந்த இலக்கியமாம்.

புறத்திணை வகையும், அகத்திணை வகையுமாய்ப் பெரும்பான்மையும் மக்களையே நுதலி நடந்த இப்பண்டைப் புலனெறி வழக்கத்தினை, புறத்திணையுள் பாடாண் பகுதி கடவுளையும் நுதலிவருதலும், அகத்திணைப் பாடல்களுள் பாட்டுடைத் தலைவர் சார்த்துவகையாற் பாடப் படுதலும் ஆகிய மரபு பற்றி, ஆளுடைய அடிகள் முழுதும் கடவுளையே நுதலி வருவனவாக்கி, (திருவாசகம், திருக்கோவை) என்னும் இருபெரும் பகுதியவாய திருப்பாட்டுக்களை அருளிச் செய்வார், திருவாசகத்திடையே கொற்றவள்ளை போல்வனவாய, 'பொற்சுண்ணம், அம்மானை, தெள்ளேணம், சாழல், பூவல்லி, உந்தி, தோணோக்கம், ஊசல்' என்பவற்றை அருளினராகலின், அவ்வாறே அருளப்பட்ட பாவைப் பாட்டாகிய திருவெம்பாவைக்கும் மகளிர் விளையாட்டாதலொன்றே, காரணமாதல் சாலுமாகலின், அதற்கு வேறு காரணம் வேண்டுவதின்மை யறிக.

அம்மானை முதலிய பாட்டுக்களைப் போலவே மகளிரது நீர் விளையாட்டுப் பாடலாகிய பாவைப் பாட்டை இறைவனுக்கு ஆக்குவார், அதனை ஏனையபோலப் பொதுப்படச் செய்யாது, இயல்பாகவே சிவபிரானுக்குரியதாய் நிகழும் மார்கழி நீராட்டிற் குரித்தாகச் செய்தருளினர். அது, தமது நெறிக்குப் பெரிதும் பொருந்துவதாய்ச் சிறந்து காட்டும் என்பதுபற்றி. அதனுனே, அன்று தொடங்கி இத் திருவெம்பாவை சிவபிரானுக்குரிய திருவாதிரை விழா நாட்களில் இன்றியமையாது ஓதப்படுவதாயிற்று.

மார்கழித் திங்களில் சிவபிரானுக்குத் திருவாதிரை விழா எடுத்தலும், அந்நாட்களில் உலகு செழிக்க அந்தணர் வேள்வி வேட்டலாகிய தம் தொழிலைச் சிறக்கச் செய்தலும், இல்லறத் தவராகிய ஆடவரும் பெண்டிரும் அந்நாளில் சென்று தீர்த்த மாடித் தாம் தாம் விரும்பியவற்றைப்பெற இறைவனை வேண்டி நிற்றலும், அவரிடையே சிற்றிளமகளிரும் முதுபார்ப்பனியர் சொல்வழியே நோற்றலை மேற்கொண்டு தம் தாய்மாரோடு சென்று நீராடுதலும் போன்ற தவச்செயல்கள் நடைபெறு தலும் " விரிகதிர் மதியமொடு " என்னும் பரிபாடல் (11),

" கனைக்கும் அதிர்குரல் கார்வானம் நீங்கப்
பனிப்படு பைதல் விதலைப் பருவத்து
ஞாயிறு காயா நளிமாரிப் பிற்குளத்து
மாயிருந் திங்கள் மறுநிறை ஆதிரை
விரிநூ லந்தணர் விழவு தொடங்கப்
புரிநூ லந்தணர் பொலங்கலம் ஏற்ப
வெம்பா தாக வியனில வரைப்பென
அம்பா ஆடலின் ஆய்தொடிக் கன்னியர்
முனித்துறை முதல்வியர் முறைமை காட்டப்
பனிப்புலர்பு ஆடிப் பருமணல் அருவியின்
ஊதை ஊர்தர உறைசிறை வேதியர்
நெறிநிமிர் நுடங்கழல் பேணிய சிறப்பின்
தையல் மகளிர் ஈரணி புலர்த்தர "

என்பது முதலாக விரித்துக் கூறியவாற்ரான் நன்குணரப்படும். இதனுள், ' அம்பா ஆடல் ' என்றது, இளமகளிர் தம் தாய ரோடு கூடி ஆடுதலாம் என்பதை அதன் உரையிற் காண்க.

தேவர்கட்கு எடுக்கும் விழாக்கள் நிறைமதிநாள் பற்றி நிகழ்வன ஆதலாலும், அது சிவபிரானுக்குரிய திருவாதிரை நாளோடு கூடி வருவது மார்கழித் திங்களிலாதலாலும் அத் திங்கள் சிவபிரானுக்குரிய விழாத் திங்களாயிற்று. ஆகவே, அரசனுக்குரிய விழா நாள், நாடு முழுவதற்கும் விழாநாளாதல் போல, முழுமுதற்றேவனாகிய சிவபிரானுக்குரிய விழாத்திங்கள், ஏனைய தேவர் பலர்க்கும் விழாத்திங்களாயிற்று. அதனானே, திங்கள் பன்னிரண்டனுள்ளும் மார்கழித்திங்கள் சிறந்ததா யிற்று. தேவதேவனாகிய சிவபிரானது திருவாதிரை விழாவைத் தேவர் பலரும் ஒருங்குகூடிச் சிறக்கச் செய்வர் என்பதை,

" ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன் அங்கி
இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத் தும்நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே"

என்னும் சேந்தனர் திருப்பல்லாண்டினல் (12) உணர்க. திருவாதிரைத் திருநாட் சிறப்புப்பற்றித் திருநாவுக்கரசு நாயனர் ஒரு திருப்பதிகமே அருளிச்செய்தார் (திருமுறை. 4. 21.).

வாதவூரடிகள் அருளிச் செய்த இம் மார்கழி நீராட்டு, மேற்காட்டிய பரிபாடல்முதலிய சங்கப் பாடல்களுள், 'தைந் நீராட்டு' எனக் குறிக்கப்படுகின்றது. 'தைந்நீராட்டு' என் பதற்கு, 'தைத்திங்கள் நிறைமதி நாளில் ஆடும் நீராட்டு' எனப் பொருள்கொண்டு, 'மேற்குறித்த பரிபாடற் பகுதியின் படி, மார்கழித்திங்கள் நிறைமதி நாளில் தொடங்கிய விழா, தைத்திங்கள் நிறைமதிநாள்காறும் நிகழ்ந்து நிரம்புமாகலின், அந்நாளில் நிகழும் நீராட்டு, 'தைந்நீராட்டு' எனப்படுதல் இயல்பே' என்பாரும், 'தைந்நீராட்டாவது, தைப்பிறப்பு நாளில் ஆடும் நீராட்டு' என்பாரும் என இருதிறத்தார் உளர். அவருள் முன்னர்க் கூறியவாறு கூறுவார்பக்கம் வலியுடைத்து. அதனல் தொடக்க நீராட்டு மார்கழி நீராட்டும், முடிவு நீராட் டுத் தைந்நீராட்டுமாதலின், அடிகள் சிவபிரானுக்குரிய திருவா திரை நாளில் ஆடும் மார்கழி நீராட்டினையே அருளிச்செய்தா ராவர். ஆதிரை விழா. ஆதிரைநாட்கு முன்பே தொடங்கி ஆதிரைநாளில் முற்றுப்பெறுதல் பிற்கால வழக்காம். இவ் வழக்குப்பற்றியே கடவுள் மாமுனிவர் தமது திருவாதவூரடி கள் புராணத்துள்,

" மாதர்கொள் மாத ரெல்லாம்
மார்கழித் திங்கள் தன்னில்
ஆதிரை முன்ஈ ரைந்தே
ஆகிய தினங்கள் தம்மில்

மேதகு மனைகள் தோறும்
அழைத்திருள் விடிவ தானால்
போதிவர் தம்மிற் கூடிப்
புனற்றடம் ஆடல் செய்வார்

எனக் கூறிப்போந்தார்.

இங்ஙனம் திருவாதவூரடிகள் பாடாண் திணையின் பல்வகையானும், அகத்திணைத் துறைகள் பலவற்றானும் 'திருவாசகம், திருக்கோவையார்' என்னும் இருதிறத்துப் பாடல்கள் ஓராயிரத்திற்கு மேற்பட்டவற்றைப் பல அடிகளானும், சில அடிகளானும் அமையப் பாடியருளினமையின், இவையே தமிழ் மொழியில் முதற்கண் கடவுட் பேரிலக்கியமாக அமைந்தன என்பதும், அதன்பின்னரே அடிகள் அருளிய வகையானும், பிறவகையானும் கடவுள் இலக்கியங்கள் தமிழில் பெருகுவவாயின என்பதும், அடிகள் இவ்வாறு கடவுள் நெறியில் இயற்றமிழ் இலக்கியத்தைத் தோற்றுவித்தருளினமையின், அதன் பின்னர் நல்லிசை ஞானசம்பந்தரும், நாவுக்கரையரும் பெரும்பான்மையும் பாட்டுக்களை நான்கு என்னும் அடிவரையறையுட்படுத்து இசைத்தமிழ் இறையிலக்கியத்தைப் பெருகச்செய்தனர் என்பதும், அவர்வழியேநின்று நம்பியாரூரரும், பின்னும் திருவிசைப்பா ஆசிரியன்மார்களும் அங்ஙனமே செய்தனர் என்பதும் இவ்வாற்றால் பிறமதங்களினும் நால்வர் பெருமக்கட்குப் பின்னர் இறை இலக்கியங்கள் இயற்றமிழாகவும், இசைத்தமிழாகவும் தோன்றின என்பதும், இங்ஙனம் யாப்பு வகையால் பல மதக் கடவுள் இலக்கியங்களும் ஒருநெறிப்பட்டன போலத் தோன்றினும், அவை பொருள் வகையால் வேறுபட்டே நிற்பன என்பதும், அதனை யறியாது அவையனைத்தையும் ஒன்றெனக் கருதின் ஒன்றானும் பயனின்றாய் ஒழியும் என்பதும் உணர்ந்து கொள்ளப்படும். படவே, திருப்பாவைக்கு உரை கூறுவார் மதமே பற்றித் திருவெம்பாவைக்கும் உரை கூற முற்படுதல் பொருந்தாததொன்றாமாதலின், திருப்பாவையுள் கூறப்படும் பாவை நோன்பிற்குத் திருவெம்பாவையோடு யாதோர் இயைபும் இன்றென்க.

இனி இதுநிற்க, அடிகள் அருளிச்செய்த இத் திருவெம்பாவைக்கு முன்னோர் உரைத்த குறிப்பு, '**சத்தியை வியந்தது**' என்பது. இஃது உண்மையில் இப்பகுதிப் பதினான்காம் திருப்

பாட்டில், "பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன் பாதத் திறம்பாடி" என வரும் தொடரிலும், "முன்னிக் கடலைச் சுருக்கி" எனவரும் பதினொரும் திருப்பாடல் முழுவதிலும் அம்மையைத் தனியாக எடுத்துப் பாடினமை பற்றியே உரைக்கப்பட்டதாம். இங்குக் காட்டிய இவ்விடங்களை யன்றிப் பிறிதோரிடத்தை அம்மையைத் தனியாகப் பாடிய பாடலாகத் திருமுறைகளிற் காணுதல் இயலாது. அதுபற்றியே இங்ஙனம் குறிப்புரைத்தனர் முன்னோர். இவ்வாறு ஒரு பகுதியுள் எவையேனும் ஒன்றிரண்டு பாடல்களைச் சிறப்புடையனவாகக் கருதி அப்பகுதிக்கு அவர் கருத்துரைத்தல் மேலே காட்டப்பட்டது; இனி வருகின்ற பகுதிகளினும் காட்டப்படும்.

அங்ஙனமாக, இக்குறிப்பில் உள்ள, 'சத்தி' என்னும் சொல், 'அம்மை, மாது, மங்கை' முதலிய இலக்கியச் சொற்கள் போலாது, சாத்திரச் சொல்லாய் இருத்தலானும், பெண்கள் ஒருவரை ஒருவர் எழுப்பியவாருக அருளிச்செய்யப்பட்ட திருப்பாடல்கள், காக தாலிய நியாயமாக எட்டாய் அமைந்தமையானும், 'உலகத்தோற்றத்தின் பொருட்டு முதற்கண் எழுந்த, 'மனோன்மனி' என்னும் சிவசத்தி, 'சருவபூத தமனி' என்னும் சத்தியை எழுப்ப, அச் சத்தி, 'பலப்பிரமதனி' என்னும் சத்தியை எழுப்ப, இவ்வாறே, 'பலவிகரணி, கலவிகரணி, காளி, இரௌத்திரி, சேட்டை, வாமை' என்னும் சத்திகள் முறையே ஒன்று ஒன்றனை எழுப்புதலையே இத் திருப்பாடல்கள் கருதின என உள்ளுறைப் பொருள் கூறினர், முன்னை உரையாளர். அதனையே பிறரும் மேற்கொண்டு உரைப்பாராயினர். அது கருத்தாயின், ஏனைய பன்னிரண்டு திருப்பாடல்கட்கும் உலகத் தோற்றத்தோடு இயைந்த உள்ளுறைப் பொருள் கூறல் வேண்டும்; அங்ஙனம் கூறின், பெரிதும் நலிந்து கூறலாம் என்று அஞ்சி அவரும் நெகிழ்ந்துபோயினமையானும், ஏனைய பகுதிகளில் யாதொன்றையும் இன்னோரன்ன சாத்திரப் பொருளே பொருளாக வெளிப்படையாகவேனும், குறிப்பாகவேனும் அருளிச்செய்யாத அடிகள், இத் திருவெம்பாவை மட்டில் யாது கருதி இங்ஙனம் செய்தார் எனக் கடாவுவார்க்கு விடையிறுத்தல் இயலாதாகலானும், அவ்வாறு உரைப்பனவெல்லாம் உரையாமாறில்லை.

இனி, இத் தத்துவ உரையை மேற்கொள்ளாது விடுத்து, 'இந்நாட்டிற்குரிய மகளிர் பன்னிரண்டியாண்டிற்கு மேற்

படாத பருவத்தினரே' எனக் கொண்டு. 'இவ்வெட்டுத் திருப் பாட்டுக்களும் முதற்ருெடங்கி ஒவ்வொருபாட்டும் முறையானே பன்னிரண்டியாண்டு முதலாக ஐந்தியாண்டு ஈருகக் குறைந்த பருவத்து மகளிரை எழுப்பியவையாம்' என உரைப்பாரும் உளர். அப்பொருளை இப்பாடல்கள் இனிதுதோற்றுவியாமையே யன்றி, சில பொருள்கள் அக்கருத்திற்கு மாறுபடவருதலான், அதுவும் ஓர் நயங்கூறலாய் முடிவதன்றி வேருகாதென்க.

அன்னதேல் இவை எல்லாம் ஆக; திருவம்மானை, திருத் தெள்ளேணம் முதலியவை அவ்வவ் விளையாட்டுப் பற்றிய பாடல் என்னும் துணையே தோன்றச் சொல் நிலையை அம் மகளிர் கூற்ருக அமைத்தாரேனும், பொருள்நிலையெல்லாம் தம் கருத்தாகவே அருளிச்செய்த அடிகள், இத் திருவெம்பாவை மட்டில் பொருள் நிலையையும், ''உன்னடியார் தாள்பணிவோம்; ஆங்கவர்க்கே பாங்காவோம்; — அன்னவரே எங்கணவ ராவார்'', ''எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க'' 'முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே — என்னப் பொழியாய் மழை' என்ருற்போல அம் மகளிரது கூற்ருகவே அருளிச்செய்தது என்னையெனின், நீராட்டுப் பாடலாகிய இதனை, ஏனைய விளையாட்டுப் பாடல்கள்போலப் பொது வகையாற் செய்யாது, இறைவனது விழா நாளில் ஆடும் நீராட் டிற்குரியதாகச் செய்தருளினமையின், அதனைத் தமக்கேயன்றி அம்மகளிர்க்கும், உலகினர் பிறர்க்கும் பயன்படுக என்னும் கருணைகாரணமாக அங்ஙனம் செய்தருளியதன்றி வேறில்லை என்க. அம்மையைத் தனியாகப் பாடிய பாட்டு இதன்கண் காணப்பெறுதலும் மகளிர் பொருட்டேயாம்.

பாவைப் பாட்டுப் பற்றியும், இத்திருவெம்பாவைப் பொருள் பற்றியும், அவை ஏதுவாக அடிகளது நிலை, ஏனை அடியாரது நிலை பற்றியும் பலரும் பலவாறு கூறுபவாகலின், அவைபற்றி இத்துணை விரித்துக் கூறல் வேண்டுவதாயிற்று.

இவற்ருல், 'பாவைப் பாட்டு என்பது, கன்னிமைப் பெண் கள் நோன்பு மேற்கொண்டு வழிபடும் பாவை பற்றியது அன்று; அம்மானை, ஊசல் முதலியன போல மகளிர் விளை யாட்டுப் பாடலே' என்பதும், 'அவ்வாடலாவது நீராட்டு' என்பதும், 'அந்நீராட்டினை அடிகள் மார்கழி நீராட்டாக வரை யறுத்தருளினர்' என்பதும், 'அதனுல், இத் திருவெம்பாவை

யைத் தமக்கேயன்றி அந்நீராடு மகளிர்க்கும், உலகினர் பிறர்க்கும் பயன்படுமாறு செய்தருளினர்' என்பதும், 'இவ்வாற்றால் இத் திருவெம்பாவையில் வரும் மகளிராதல், இதனை அருளிச் செய்த அடிகளாதல், ஏனைச் சிவநெறி ஆசிரியராதல் இறைவனை உடம்பால் தழுவி இன்புறக் கருதினர் என்றற்கு ஒரு தினைத் துணையேனும் இடமின்று' என்பதும் ஒருவாறு காட்டப்பட்டன.

நூறும், ஐம்பதுமாகிய பாடற்றொகுதிகளை முறையானே முன்வைத்துப் பின்னர் இருபதாகிய பாடற்றொகுதிகளை வைக்கின்றுழி. எட்டடியான் இயன்ற இத்திருவெம்பாவையை முன்வைத்துக் கோத்தனர். இது, முழுதும் வெண்டளையான் வந்த எட்டடித்தரவுக் கொச்சகக்கலிப்பாவான் இயன்றது.

தொல்காப்பியர், 'கொச்சக ஒருபோகு' என்றதனையே பிற்காலத்தார், 'கொச்சகக் கலிப்பா' என்றனர்.

"தரவின் ருகித் தாழிசை பெற்றும்
தாழிசை யின்றித் தரவுடைத் தாகியும்"

என்றமையின் (தொல். பொருள். 452.), இது தரவு மாத்திரமாய் வந்தது. மேலும் இவ்வாறு வந்தமையும், இனியும் இவ்வாறு வருதலும் காண்க. இவ்விடத்து,

"யாப்பினும் பொருளினும் வேற்றுமை யுடையது"

என்றமையான், கலிவெண்பாட்டுப்போல இக் கொச்சக ஒருபோகும் முழுதும் வெண்டளையானே வருதல் கொள்ளப்பட்டது.

"தரவே தானும் நாலடி இழிபாய்
ஆறிரண் டுயர்வும் பிறவும் பெறுமே"

எனவும் (ஷை - 438.),

"தரவே தானும்
நான்கும் ஆறும் எட்டும் என்ற
நேரடி பற்றிய நிலைமைத் தாகும்"

எனவும் (ஷை - 445.) ஆங்காங்குக் கூறினமையின், இங்குத் தரவு எட்டடியாய் வந்தது. வருகின்ற பகுதியுள் ஆறடியாய் வரும். நாலடியாய்வருதலே பிற்காலத்தில் பெருவழக்காயிற்று.]

வெண்டளையான்வந்த எட்டடித்தரவுக் கொச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்.

155 ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ? வன்செவியோ நின்செவிதான்?
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்தியவாழ்த் தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதா ரமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனு மாகாள் கிடந்தாள்என் னேயென்னே
ஈதே எந்தோழி பரிசேலோ ரெம்பாவாய்! (1)

---

155. இது முதலாக மகளிர் விளையாட்டு வகையில்வருவன பலவும், பாடாண் கொற்ற வள்ளையோடு ஒத்த வகையினவாய் நிற்கும் கடவுட் பாட்டுக்களாம் என்பதும், மேலெல்லாம் கூறியவாறு பற்றிக் கொள்ளக்கிடந்தமை காண்க.

இதன்கண்ணும் (18), அடுத்து வரும் திருவம்மானையிலும் (10) ''அண்ணு மலையான்'' என எடுத்தோதியருளினமை பற்றி, இவ்விரண்டனையும் அடிகள், 'திருவண்ணுமலையில் அருளிச்செய்தார்' எனத் திருவாதவூரர் புராணங் கூறிற்று. அதனுல், இவை, அங்ஙனமே கொள்ளப்பட்டுவருகின்றன. எனினும், இதன்கண் ''சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி... ......ஆடு'' (14) என்று அருளிச்செய்ததன்றி, 'அண்ணு மலையானைப் பாடி ஆடு' என அடிகள் அருளிச்செய்திலர். திருவம்மானையில், ''அண்ணு மலையானைப் பாடுதுங்காண் அம்மானுய்'' (10) என்று அருளினுராயினும், ''ஐயா றமர்ந் தானைப் பாடுதுங்காண் அம்மானுய்'' (13) என்றும், ''ஆடு வான் சேவடியே பாடுதுங்காண் அம்மானுய்'' (17) என்றும், பிறவாறும் அருளிச்செய்தார். ஆதலின், இவையெல்லாம், ''தென்னுனைக் காவானைத் தென்பாண்டி நாட்டானைப்........ பாடுதும்'' (திருவம்மானை - 19) என்ருற்போலத் தில்லைக்கண் இருந்து பாடுங்கால் நினைந்து பாடியனவாகக் கொள்ளுதற்கும் உரியனவேயாம். நம்பி திருவிளையாடல், 'இவ்விரண்டும் திருப் பெருந்துறையில் அருளியவை' என்கின்றது.

இதுமுதல் எட்டுத் திருப்பாடல்கள், நீராடுதற்கு விடியலில் எழுந்து செல்லற்பாலராகிய மகளிருள் முன்னர் எழுந்தார் சிலர் ஒருங்குகூடி, எழாதார் வாயிலிற் சென்று அவரைத் துயிலுணர்த்துமாறாக அருளிச் செய்யப்பட்டன.

மகளிர் விளையாட்டுப் பாடல்களில் அவை இன்ன பாடல் வகை என்பதனை அறிவிக்கும் முறையால் அப்பாடல் பற்றிய சொல்லானும், சொற்றொடரானும் ஈற்றில் நின்று அப்பாடல் களை முடிக்கும். அதனால், 'அவை அங்ஙனம் வருதல் மரபு' என்னும் அளவாய்ப் பாடலை நிரப்பிநிற்பதன்றி வேறு பொருள் படாமையின், அவையெல்லாம் அசைநிலைபோலவே கொள்ளப் படும். படவே, இவ்விடத்தும், 'ஏலோர் எம்பாவாய்' என்பது அவ்வாறே கொள்ளப்படும் என்பது, தானே பெறப்பட்டது.

இதனுள், "மாதே" என்றதனை முதலிற் கொள்க. சோதி - ஒளிவடிவினன்; ஆகுபெயர். உயர்ந்தோர் உறங்குதலை, 'கண்வளர்தல்' என்றல் வழக்கு. இங்கு, எழாதவளை எள்ளுகின்றார்களாதலின், 'கண்வளருதியோ' என்கின்றவர் கள், அக்கண்களை, 'வாள் தடங்கண்' என்றும் சிறப்பித்துக் கூறினார்கள். வாள் தடங்கண் - வாள்போலும் பெரியகண்; இது, மகளிர் கண் நன்கமைந்திருத்தலைக் குறிக்கும் தொடர். இதனை இங்குக் கூறியது, 'உன் கண்கள் நன்கமைந்திருத்தல் உறங்கிக் கிடத்தற்குத்தானோ' என்றற்காம். 'இயல்பாய் விழிக்கற்பாலனவாகிய கண்கள் விழித்தில' எனக் கண்களை இகழ்ந்தவர்கள்,' எழுப்பும் ஓசையைக் கேட்கற்பாலனவாகிய செவிகளும் கேளாதொழிந்தனவோ' எனச் செவிகளையும் இகழ்வாராய், "வன்செவியோ நின்செவிதான்" என்றார்கள். வன்மை-ஓசையை ஏலாமை. இங்ஙனங் கூறியதனால், முன்னர், "கேட்டேயும்" என்றது, 'தன்னை அழைக்க எனக் கருதியிருந்தாள்' என்னும் கருத்தினாற் கூறியதாயிற்று. "செவி" என்றது, 'செவிப்பொறி' என்னும் பொருளதாதலின், "செவி தான்" என ஒருமையாற் சொல்லப்பட்டது. தான் அசைநிலை.

இத்துணையும், சென்ற மகளிர் உறங்குவாளை நோக்கிக் கூறியன; இனி வருவன அவளைப்பற்றி அவர்கள் தங்களுள் நகையாடிக் கூறுவன. இவையும், அவள் கேட்டு எழுந்துவருவாள் என்னும் கருத்தினாற் கூறுவனவேயாம். "என்னே

என்னே" என்றதனை, "பரிசு" என்றதன் பின்னர்க் கூட்டுக. 'நம் தோழி உறக்கத்தால் எழாதிருக்கின்றாளல்லள்: நமது பாடல் வீதியில் எழும்பொழுதே அதனைக் கேட்டு மனம் உருகிப் படுக்கையிற்றானே மெய்ம்மறந்து கிடக்கின்றாள்; இவளது அன்பின் பெருமை எத்தகையது' என்பது இப் பகுதியின் திரண்ட பொருள். 'மெய்ம்மறந்து புரண்டு' என இயையும். போது ஆர் அமளி - மலர் நிறைந்த படுக்கை. 'இறைவன் பாடலைக் கேட்டு உருகுதற்கு அமளி இடம் அன்று' என்றற்கு அதனை இங்ஙனம் சிறப்பித்துக் கூறினார்கள். "அமளியின் மேனின்றும் புரண்டு" என்றது, 'ஒருபால் நின்று மற்றொரு பாற் புரண்டு' என்றவாறு. 'புரண்டு கீழே வீழ்ந்து' எனச் சில சொல் வருவித்து முடிப்பாரும் உளர். இங்ஙன் - இப் பொழுதைக்கு; என்றது, 'நாம் மேற்கொண்ட செயலுக்கு' என்றபடி. ஏதேனும் ஆகாள் - சிறிதும் உதவாள். 'ஆகா ளாய்க் கிடந்தாள்' என்க. "ஈதே" என்ற ஏகாரம் தேற்றம். கூறுவார்களும், கேட்பார்களுமாயவர்களுள், கூறுகின்றவர்கள், உறங்குகின்றவளது இகழ்ச்சி தோன்ற, "எம் தோழி" எனத் தமக்கே உறவுடையாள்போலக் கூறினார்கள்.

இனி இப் பகுதிக்கு, "எம் தோழி" என்றது பிறள் ஒருத்தியை எனக்கொண்டு, அவளது மெய்யன்பின் சிறப்பை உறங்குகின்றவட்கு அறிவித்தவாறாகப் பொருள் உரைப்பர்; இறைவனிடத்து அன்புடையவர்க்கு விடியலில் அவனைப் பாடும் பாட்டொலி கேட்கும்பொழுது விரைந்தெழுந்து பின்னர் அவனது அருட்குணங்களில் ஈடுபடுதல் இயல்பாமல்லது, எழாது, கிடந்த கிடையிலே விம்மி விம்மி அழுதல் முதலியன இயல்பாகாதாகலானும், ஆமெனினும் ஈண்டைக்கு அதனை எடுத்துக் கூறுதலாற் பயன் இன்மையானும், அது பயன்பட வேண்டுமாயின், கிடந்தமை மாத்திரையே கூறியொழியாது, பின்னர் எழுந்து வந்தமையையும் ஒருதலையாகக் கூறவேண்டுதலின், அங்ஙனங் கூறாமையானும், பிறவாற்றானும் அது பொருந்தாமை அறிக. மேற்கூறியவாறு பொருள் உரைப்பாருள், "கிடந்தாள்" என்றது முடியவே பிறள் ஒருத்தியைக் குறித்ததாக வைத்து, அதற்கு, 'ஒருத்தி' என்பதோர் எழுவாயை வலிந்து வருவித்தும், "எந்தோழி" என்றது. முன்னிலைக்கண் படர்க்கை வந்த வழுவமைதியாக்கியும் உரைப்பாரும் உளர். சென்றவர்கள்

156 பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதா ரமளிக்கே
நேசமும் வைத்தனையோ, நேரிழையாய் ? நேரிழையீர்,
சீசி யிவையுஞ் சிலவோ ! விளையாடி
ஏசு மிடமீதோ ! விண்ணோர்க ளேத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோ ரெம்பாவாய் ! (2)

இவ்வாறு நகையாடிச் சில கூறியபின், உறங்கிக் கிடந்தவள் எழுந்துவந்து அவர்களுடன் கூடினாள் என்க. பின் வருகின்ற பாடல்களிலும் இவ்வாறே கொள்க.

156. 'நேரிழையாய் இராப்பகல் நாம் பேசும்போது எப்போது, அப்போது பரஞ்சோதிக்குப் பாசம் என்பாய்; இப்போது, ஆரமளிக்கே நேசமும் வைத்தனையோ' என்க. அன்பு 'நார்' எனப்படுதல் பற்றி இங்கு அதனை, "பாசம்" என்று அருளினார்.

'பரஞ்சோதிக்கே' என்னும் பிரிநிலை ஏகாரம் தொகுத்தலாயிற்று. இதன்பின், உரியது என்பதும் 'எப்போது' என்ற தன்பின்னர், 'அப்போது' என்பதும் எஞ்சிநின்றன. "இராப்பகல்" என்றது, 'இரவாக, பகலாக' என்றபடி. ஆரமளி - அரிய படுக்கை. "நேசமும்" என்ற சிறப்பும்மையால் 'அன்பு முழுவதையும்' என்பது பெறப்பட்டது. 'நீ, பாசம் பரஞ்சோதிக்கு' எனினும் உண்மையில் அது நேரிழைக்கே என்றற்கு, "நேரிழையாய்" என்றனர். இதுகாறும், சென்ற மகளிர் கூறியன. இனிவருவன, இங்ஙனம் நகையாடிக் கூறியவர்களை நோக்கி உறங்கினவள் கூறுவன. தன்னை, 'நேரிழையாய்' என்றவர்களைத் தானும் அவ்வாறு அழைத்தாள். 'சீசீ' என்ற ஒருசொல்லடுக்கில், பின்னின்றது, குறுக்கல் விகாரம் பெற்றது. 'சீசீ' என்றே பாடம் ஓதுவாரும் உளர். எள்ளற் குறிப்பிடைச் சொல்லாகிய 'சீ' என்பது, இங்குப் பெயர்த் தன்மைப்பட்டு, 'சீ எனல்' எனப் பொருள் தந்தது ; "சீயேதும் இல்லாது என் செய்பணிகள் கொண்டருளி" (திருக்கோத்தும்பி - 12.) என்னுமிடத்தும் இஃது இவ்வாறு நிற்றல் காண்க. இங்ஙன

மாகவே, 'சீசீ என்றலாகிய இவையும் சிலவோ' என்றது பொருளாயிற்று. சிலவோ - நண்பரிடத்துச் சொல்லுகின்ற சொற்களுள் சிலவோ. "இடம்" என்றது, பொழுதை. வாளா, 'ஏசுமிடம்' என்னாது, "விளையாடி ஏசுமிடம்" என்றதனால், 'நகையாடிப் பேசுதற்கும் இது சமையமன்று' என்றதாம். கூசுதல் - நாணுதல்.

"நக்கு நிற்பன் அவர்தம்மை நாணியே"

என வந்தமை காண்க (திருமுறை - 5. 90. 9.) 'நாணுதல்' என்பது, நாணிக் காட்டாதொழிதலாகிய தன் காரியந்தோன்ற நின்றது. 'தேவர்களுக்குக்காட்டாது மறைக்கு திருவடியை நமக்குத் தர வருபவன்' என்றபடி. "ஈசனார்" என்பது. ஒருமைப் பன்மை மயக்கம். 'பாசம் பரஞ்சோதிக்கு' என்று சொல்லுபவள் 'நான்மட்டும் அன்று; நம் எல்லோருந்தாம்' என்பாள், "ஈசனார்க் கன்பார் யாம் ஆர்" என்றாள். "ஆர்", என்றது, 'அன்பரல்லது மற்று யார்' என்றபடியாம். இனி, 'விண்ணோர்கள் ஏத்துதற்கு' என்பது முதலியவற்றை, சென்றோர் மறித்தும் கூறியவாறாக வைத்து, அதற்கேற்பத் தாம் தாம் வேண்டுஞ் சொற்கள் பலவற்றை வருவித்து உரைப்பாரும் உளர்.

'இவ்வாறு, ஒருவர் ஒன்றுகூற, மற்றொருவர் அதற்கு மாறு சொல்லுதலாக வரும் பொருள், கலிப்பாவினாற் பாடப்படும்' என்றும், அஃது, 'உறழ் கலிப்பா எனப்படும்' என்றும் தொல்காப்பியர் கூறுதலை,

"ஒத்தா ழிசைக்கலி கலிவெண் பாட்டே
கொச்சகம் உறழொடு கலிநால் வகைத்தே"

எனவும்,

"கூற்றும் மாற்றமும் இடையிடை மிடைந்து
போக்கின் றாகல் உறழ்கலிக் கியல்பே"

எனவும் வரும் நூற்பாக்களான் அறிக (தொல். பொருள். 435, 458.).

157 முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன்ஆ னந்தன் அமுதன்என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய்; வந்துன் கடைதிறவாய்;
பத்துடை யீர்! ஈசன்பழ வடியீர்! பாங்குடையீர்!
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ!
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ!
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை!
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய்! (3)

---

157. "பேசுவாய்" என்றதும், 'பேசுகின்றவளே' என விளித்ததேயாம். இவ்வாறு விளித்தது முன்னாள் இவள், 'நீவிர் வரும் முன்னமே நான் எழுந்திருந்து, நீவிர் வரும்பொழுது எங்கள் எதிரே வந்து இறைவனை மனம் உருகித் துதிப்பேன்' என்று சொல்லி, இதுபொழுது அவ்வாறு செய்யாது உறங்கிக் கிடந்தமையைச் சுட்டியாம். ஆகவே, "முன்வந்து எதிர்எழுந்து" என்றது, 'முன் எழுந்து எதிர் வந்து' என மாற்றியுரைக்கற் பாலதாயிற்று. இதனானே, "முத்தன்ன வெண்ணகையாய்" என்றதும் 'எதனையும் திட்பமின்றிப் பேதைநீரையாய்ச் சொல்லளவில் இனிமைப்படச் சிரித்துக்கொண்டு கூறுகின்றவளே' என்றவாறும். கடை - வாயில். முதற்றொட்டு, 'கடை திறவாய்" என்றதுகாறும் சென்றமகளிர் கூறியன. இதனை அடுத்துவரும் இரண்டடிகளும் உறங்கினவள் கூறுவன.

பத்து - அடியார்க்குரிய இலக்கணமாகிய பத்து. இவற்றை, 'புறத்திலக்கணம் பத்து' எனவும், 'அகத்திலக்கணம் பத்து' எனவும் இரண்டாக்கி உபதேச காண்டங்கூறும். அவற்றுள் புறத்திலக்கணம்பத்தாவன: திருநீறும் கண்டிகையும் அணிதல், பெரியோரை வணங்கல் சிவனைப் புகழ்ந்துபாடுதல், சிவநாமங்களை உச்சரித்தல், சிவபூஜை செய்தல், சிவபுண்ணியங்களைச்செய்தல், சிவபுராணங்களைக்கேட்டல், சிவாலயவழிபாடுசெய்தல், சிவனடியாரிடத்தன்றி உண்ணாமை, சிவனடியார்க்கு வேண்டுவன கொடுத்தல் என்பன. அகத்திலக்கணம் பத்தாவன; சிவபெருமானது புகழைக்கேட்குங்கால் மிடறு விம்மல், நாத்தழுதழுத்தல், இதழ் துடித்தல், உடல் குலுங்கல், மயிர் சிலிர்த்தல், வியர்த்தல், சொல்லெழாமை, கண்ணீரரும்புதல், வாய்விட்டழுதல், மெய்ம்மறத்தல் என்பன.

158 ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ ?
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ ?
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் ; அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே

" பத்துக்கொலாம்அடியார்செய்கை தானே " (திருமுறை. 4 - 18 - 10.) என்றருளினர் திருநாவுக்கரசரும். இவற்றை, சித்தாந்த நூல்களிற் காணப்படும் தசகாரியமாகவும் சொல்லுப. 'பத்தும்' என்னும் முற்றும்மை தொகுத்தலாயிற்று. இனி, 'பற்று என்பது எதுகைநோக்கி, பத்தென ஆயிற்று' என்றும் உரைப்பர். பழைமை, புதுமைகளை முன் எழுதல், பின் எழுதல் பற்றிக் கூறினள். பாங்கு - எல்லாம் நிரம்பிய தன்மை. 'நீங்கள் தாம் நிரம்பிய அடியார்கள்' என, தன்னை நகைத்துரைத்தவர்களைத் தான் நகைத்துரைத்தாள் என்க. இகலிக் கூறுகின்றாளாகலின், தன்னோடொத்த பிறரையும் உளப்படுத்து, "அடியோம்" எனவும், "எமக்கு" எனவும் பன்மையாற் கூறினள். புன்மை - குற்றம். பொல்லாது - தீமை ; 'தீமை உண்டோ' என உரைக்க. அடுத்து வரும் மூன்றடிகளும், சென்றோர் மறித்தும் கூறுவன.

'நின் அன்புடைமை எத்தோ' என மாற்றுக. எத்து - வஞ்சனை. "எத்தனுகிவந் தில்புகுந்து" (சென்னிப் - 4.) என்றாற்போலப் பின்னரும் வருதல் காண்க. தங்களை, 'மெய்யடியார்கள்' என்று அவள் நகையுள்ளுறுத்துக் கூறக்கேட்டவர்கள், 'உன்னுடைய மெய்யன்பை நாங்கள் அறிந்திலமோ' என மறித்தும் நகைபடக் கூறிப் பின்னர், 'உள்ளத்தில் மெய்யன்புடைய மகளிரானவர், விடியலில் எழுந்து நம்பெருமானைப் பாடமாட்டார்களோ' என வெளிப்படையாகவே கழறினர். 'விடியலில் எழுந்து' என்பது, இடத்தால் வந்து இயைந்தது. இதன்பின், உறங்கியிருந்தவள், 'சிறிது அயர்த்துப் போய் விடியலில் எழாது துயின்று கிடந்த எனக்கு இத்துணையும் வேண்டுவதுதான்' என்று தன் நெஞ்சோடே சொல்லிக் கொண்டு வந்து உடன்கலந்தாள். ஈற்றடியையும், சென்ற பெண்கள் கூற்றாகவேகொண்டு, 'இவ்வளவே எமக்கு வேண்டும்' எனவும் உரைப்பர்.

158. " ஒள் நகை " என இயையும். இது புன்முறுவலைக் குறிக்கும். புன்முறுவல் பெருமிதமுடையார் செயலாகலின்,

விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாம்மாட்டோம்; நீயேவந்
தெண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய். (4)

"ஒள் நித்தில நகையாய்" என்றது, பெருமிதமுடைமையைக் குறிப்பாற் கூறியவாறும். இவளது பெருமிதத்திற்கு ஏற்ப, சென்ற மகளிர், 'இன்னம் பொழுது புலர்ந்திலதோ' என்னும் துணையே கூறினர். அவளும் அதற்கேற்ப, 'நீங்கள் சொல்லு வதைப் பார்த்தால், எல்லோரும் எழுந்துவந்துவிட்டனர்; நான் மாத்திரமே எழாதிருக்கின்றேன்போலத் தோன்றுகின்றது' என்னும் பொருள்பட, "வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ" என்றாள். அங்ஙனங் கூறுகின்றவள், அதனிடையே 'உங்கள் பேச்சு மிக நன்றாய் இருக்கின்றது' என்று இகழ்வாள், பிறரைக் கூறுவாள்போல அவர்களது சொல்லைச் சிறப்பித்துக் கூறினாள். சென்ற மகளிர் அது கேட்டுக் கூறுவன ஏனைய பகுதி.

'கொண்டு' என்பது, "கொடு" என மருவிற்று. 'உள்ள வாறு' என்பது கடைக்குறைந்து நின்றது. 'சொல்லுகோ மாக' என ஆக்கம் வருவித்து, 'சொல்லிக்கொண்டிருக்க' என உரைக்க. அவ்வளவும் - அத்துணைக் காலமும். "கண்ணை" என்றதில் ஐ, பகுதிப்பொருள் விகுதி. அவமே - பயன்படா மலே. 'போக்காது' என்னும் எச்சம் தேற்றேகாரம் பெற்று வந்தது. "விண்" என்றது விண்ணவரை. ஒரு மருந்து - ஒப்பற்ற அமுதம். 'அவருக்குக் கிடைத்துள்ள அமுதத்தின் வேறுபட்டது' என்பதாம். கசிந்து - கண்ணீர் சிந்தி. 'உள்ளம் உள்நின்று நெக்குருக' என மாற்றிக் கொள்க. 'நீ காலத் தைப் போக்காமைப் பொருட்டும், நாங்கள் இறைவனைப் பாடி உருகுதற் பொருட்டும் அதனை (எண்ணிச் சொல்லுதலை)ச் செய்யமாட்டோம்' என்றனர் என்க. "குறையில்" என்றது, 'வரற்பாலோர் வாராதிருப்பின்' என்றவாறு. 'நீ மீண்டு சென்று துயில்கொள்வாயாக' என்றது, துயிலில் உள்ள ஆர்வத் தினைச் சுட்டி இகழ்ந்தது. 'பாடிக் கசிந்து உருக' என்றதும், 'நீ அதற்கு ஆகாய்' என இகழ்ந்ததேயாம்.

159 மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ ! கடைதிறவாய் ;
ஞாலமே, விண்ணே, பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்
றோலம் இடினும் உணராய் உணராய்காண் ;
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய் ! (5)

---

159. "அறியா, காணா" என்றவை, எதிர்மறைப் பெயரெச்ச அடுக்கு. மலை - மலைவடிவானவன். 'மலை' என்றே கொண்டு, 'அண்ணாமலையை' என்றலும் பொருந்துவதே. போல் அசைநிலை. உள்ள பொக்கங்கள் - உலகில் உள்ள பொய்களை எல்லாம். "தேன்" என்றதை, "பால்" என்றதன் பின்னர்க் கூட்டுக. பால், தேன் என்பன, மிக்க இனிமையைக் குறித்துநின்றன. படிறீ - பொய்ம்மை யுடையவளே; இது, வாளா பெயராய் நின்றது. இவள் சொற்சாலம் செய்பவள் என்பதை அனைவரும் எப்பொழுதும் அவள் அறியக் கூறுவர் என்பதும், அதுபற்றி இவள் சினந்து கொள்வதில்லை என்பதும், சென்ற மகளிர் இவளை இங்ஙனம் வெளிப்படையாகவே கூறி விளித்தமையாற் பெறப்படும். "ஓலம் இடினும் உணராய் உணராய்" என்றதும், அவளது எளியநிலை கருதியேயாம். அவளது சொற்சாலத்துக்கு ஓர் எல்லையாகவே, 'மாலறியா நான்முகனும் காணாமலையினை நாம் அறிவோம்' எனக் கூறுதலை எடுத்துக்காட்டினர். இதனானே, சிவபெருமானை ஏனைத் தேவரோடு ஒப்பவைத்துக் கூறுவாரது தன்மையும் அடிகள் புலப்படுத்தியவாறு பெறப்பட்டது.

"கூவ லாமை குரைகட லாமையைக்
கூவலோ டொக்கு மோகடல் என்றல்போல்
பாவ காரிகள் பார்ப்பரி தென்பரால்
தேவ தேவன் சிவன்பெருந் தன்மையே"

என ஆளுடைய அரசுகள் அருளிச்செய்தலுங் காண்க (திருமுறை - 5 - 100 ; 5.). "ஞாலமே" முதலிய மூன்று ஏகாரங்களும் எண்ணுப் பொருள. இவற்றால் எண்ணப் பட்டன, அவ்வவ்வுலகங்களாம். இவற்றின்பின், 'ஆகிய

160 மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய்; இன்னம் புலர்ந்தின்றோ?
வானே, நிலனே, பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்;
ஊனே உருகாய், உனக்கே உறும்; எமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய்! (6)

உலகங்களால்' என்பது தொகுத்தலாயிற்று. கோதாட்டுதல் - திருத்துதல். 'கோ துதலைச்செய்தல்' என்பது சொற்பொருள். சீலம் - செய்கை. உணராய் - துயில் நீங்காய். காண், முன்னிலை அசை. 'ஏலக்குழலியாகிய உன் பரிசு இது' என, ஒருசொல் வருவித்து முடிக்க. ஏலம் - மயிர்ச் சாந்து. 'வாயால் இனிமைபடப் பேசுதல்போலவே, உடலையும் நன்கு ஒப்பனை செய்துகொள்வாய்' என்பார், 'ஏலக் குழலி' என்றனர்.

160, மானே - மான்போன்ற பார்வையை உடையவளே; 'அச்சத்தால் பின்வருமாறு கூறினாய்' என்பார், இவ்வாறு விளித்தனர். நென்னல் - நேற்று; ஐகாரம், சாரியை. என்றலும் - என்று சொல்லிய செயலையும். 'செயலையும்' என இரண்டனுருபு விரியாது, 'செயலுக்கும்' என நான்கனுருபு விரிப்பின், பிற்கால வழக்காம். 'நீ போன திசை பகராய்' என்க. திசை - இடம். பகராய் - சொல்லு. நேற்றுச் சொன்ன சொற்படி நீ வந்து எங்களை எழுப்புதற்கு, இன்னும் பொழுது புலரவில்லை போலும்!' என நகைத்துக் கூறினர் என்க. "வானே நிலனே பிறவே அறிவரியான்" என்றதற்கு, மேல் உரைத்தாங்குரைக்க. தலையளித்து - தலையளிசெய்து; தலையளி - மேலான கருணை. அருளும் கழல் - தரப்படுகின்ற திருவடி. வாய் திறவாய் - ஒன்றும் மறுமாற்றம் கூறாது உறங்குகின்றாய். ஊனே உருகாய் - உடல் மெலியமாட்டாய். மெலிதல், நாணத்தினாதல், அச்சத்தினாதல் நிகழற்பாலது என்பதாம். உனக்கே உறும் - இவை யெல்லாம் உனக்கே தகும். 'இனியேனும் எழுந்துவந்து எங்களோடு இறைவனைப் பாடு' என இறுதியிற் கூறி முடித்தனர்.

161 அன்னே இவையுஞ் சிலவோ ? பலவமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய் ;
தென்னாஎன் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய் ;
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் : இன்னந் துயிலுதியோ ?
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால் !
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய் ! (7)

---

161. இங்கு எழுப்பப்படுபவள் சிவபெருமானிடத்துப் பேரன்புடையள் என்பது, சென்ற மகளிர் பின்னர்க் கூறும் அவற்றான் இனிது விளங்கும். அதனால், இவளை அனைவரும் 'அன்னையே' என்று விளித்தனர். செய்யுளாதலின், "இவையும்" என்ற சுட்டுப் பெயர் முன்வந்தது. இது, பின்வருகின்ற, மிக்க துயில், எழுப்பியபொழுதும் வாய்வாளாது கிடத்தல் என்பவற்றைச் சுட்டிற்று. சிலவோ - உன் தன்மைகளிற் சிலவோ. ஒருவன் - ஒப்பற்றவன். இருஞ்சீரான் - பெரிய புகழையுடையவன். 'அரியானும், ஒருவனும், சீரானும் ஆகியவனது சின்னங்கள்' என்க. 'விடியலில் திருச்சின்னங்கள் ஊதுதல் கேட்கப்படும்பொழுதே துயிலுணர்ந்து சிவ சிவ என்று சொல்லுவாய் ; பின்பு, எழுந்த அடியவர்கள் பாண்டிநாட்டையுடைய பெருமானே என்று பாடுதற்கு முன்பே நெருப்பைச் சேர்ந்த மெழுகுபோல உள்ளமும் உடலும் உருகுவாய்; ஆயினும், இன்று யாங்கள் உன்வாயிலில் வந்து, இறைவனைத் தனித் தனியே பலவாறாகப் பாடினோம் ; இன்னமும் உறங்குகின்றாய் ; இறைவனிடத்து அன்பில்லாத வலிய நெஞ்சத்தையுடைய பெண்டிர்போல வாயும் திறவாது கிடக்கின்றாய்; உறக்கத்தின் பெருமைதான் என்னே' என, எழுப்பவந்த மகளிர் இவளது நிலையை எல்லாம் விரித்துக் கூறினர்.

'கேட்பவே' என்னும் பிரிநிலை ஏகாரம் தொகுத்தலாயிற்று. 'துயிலுணர்ந்தபின் முதற் சொல்லாகத் திருவைந்தெழுத்தையே சொல்லுவாய்' என்றற்கு, "சிவனென்றே வாய்திறப்பாய்" என்றனர். "தென்னா என்னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்" என்றது, 'அம்பு படுமுன் தலை துணிந்தது' என்றல்போல, விரைவு மிகுதி குறித்தது. இதனை, '**காரியம்**

162 கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம்; கேட்டிலையோ?
வாழியீ தென்ன உறக்கமோ? வாய்திறவாய்;
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ?
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய்! (8)

முந்தூறூஉங் காரணமிலை' எனக் கூறி, ஏதுவணியின்பாற் படுப்பார், அணிநூலுடையார். "ஆனை" என்றது, காதற் சொல். அரையன் - அரசன்; தலைவன். தனித்தனியே பாடினமையின் "என்" என ஒருமையாற் கூறினர். "எல்லாம்" என்பதே தன்மையிடத்தை யுணர்த்துமாயினும், அது திரிபுடைத்து. 'எல்லோம்' என்பது அதனைத் திரிபின்றி யுணர்த்தும். 'எல்லாரும், எல்லிரும்' என்னும் படர்க்கை முன்னிலைப் பெயர்கள்போல, 'எல்லோமும்' என்னும் தன்மைப் பெயரும் இறுதியில் உம்மையொடு நின்றது. "கேள்" என்றதனை "அன்னே" என்றதன் பின்னர்க் கூட்டுக. 'வெவ்வேறாய்ச் சொன்னோம்' என இயையும். 'இன்னமும்' என்னும் உம்மை தொகுத்தலாயிற்று. பேதையர் - பெண்டிர்; 'அறிவிலாதவர்' என்பது நயம். "துயில்" என்றதற்கு, 'எல்லாரையும் ஆட்கொள்கின்ற உறக்கம்' என உரைக்க. "பரிசு" என்றது பெருமையை. கொடுமையாகிய இழிவை. 'பெருமை' என்றது இகழ்ச்சிபற்றி.

162. "வாழி" என்றதனை முதலில் வைத்து, 'வாழ்தலுடையவளே' என உரைக்க. 'நன்கு வாழ விரும்புபவளுக்கு இத்துணைப் பேருறக்கம் தகாது' என்பார், இவ்வாறு விளித்தனர். "ஏழில்" என்றதில் உள்ள, "இல்" என்னும் பெயரை இதன்பின்னருங் கூட்டுக. இல்லங்களில் கோழி கூவ, எவ்விடத்தும் பிற பறவைகள் ஒலிக்கின்றன. இல்லங்களில் ஏழிசைகளையுடைய இசைக் கருவிகள் ஒலிக்க, எவ்விடத்தும் சங்குகள் ஒலிக்கின்றன' என்க. "ஏழ்" என்றது, முன்னர் இசையையும், பின்னர் அவற்றை வெளியிடும் கருவியையும் உணர்த்தினமையின், இருமடியாகுபெயர். இசைக் கருவிகளுள்

மிடற்றுக் கருவியும் ஒன்றுதலின், மிடற்றுப் பாடலும் அடங்கிற்று. திருப்பள்ளி எழுச்சி பாடுவாரும், இசை பயில்வோரும் விடியலில் பாடுதல் அறிந்துகொள்க. 'ஏழில்' என்பதே ஒரு கருவியின் பெயராகவும் உரைப்ப.

கேழ் - உவமை. பரம் - மேன்மை. சோதியையும், கருணையையும் உடையவனை, 'சோதி, கருணை' என்றது, ஆகு பெயர். 'சோதியும், கருணையும் ஆயவனது பொருள்கள் பாடினோம்' என்க. பொருள்கள், இயல்புகள். "ஈதென்ன உறக்கமோ" என்றது, 'இத்துணை ஓசைகளாலும் நீங்காத இவ்வுறக்கம் எத்தன்மைத்தாய உறக்கமோ; அறிகின்றிலேம்' என்று இகழ்ந்தவாறு. ஆழியான் - மாயோன். அவனது அன்புபோலும் அன்பினை, "ஆழியான் அன்பு" என்றனர். 'மாயோன் சிவபெருமானுக்குத் தன் கண்ணைப் பறித்துச் சாத்திச் சக்கரம் பெற்றமைபோல, யானும் நெறிமுறை பிழையாது அப்பெருமானை வழிபட்டுப் பெருவாழ்வு பெறுவேன்' என்று கூறுகின்றவள் இவள் என்பது, "ஆழியான் அன்புடைமை யாமாறும் இவ்வாறோ" என்ற ஏச்சுரையாற் பெறப்பட்டது. 'நெறிமுறை பிறழாது சிவனை வழிபடுவேன்' என்ற நீதானோ, இத்துணை ஓசை எழவும் எழாது உறங்குகின்றாய்; 'நீதான் பெருவாழ்வு பெறப் போகின்றவள்' என்பது கருத்து. "மாயோனது அன்பினை நீயும் பெறுதற்கு, அவன் எழாதே உறங்குதல்போல நீயும் உறங்குகின்றாய்போலும்" என்பது உள்ளுறைநகை.

ஊழி முதல்வன் - ஊழிகள் பலவற்றிற்கும் முதல்வன்; 'அவற்றால் தாக்குண்ணாத முதல்வன்' என்றபடி. ஏழை - பெண்; உமை. "பங்காளனையே" என்ற பிரிநிலை ஏகாரம், 'நீ வழிபடுவேன் என்று சொல்லும் அவனையே பாடு என்கின்றோம்; பிறரைப் பாடு என்கின்றிலோம்' எனப் பொருள் தந்து நின்றது.

இத்துணையும் வந்த திருப்பாட்டுக்கள், மகளிருள் முன் எழுந்தோர், பின்னர் எழற்பாலாரை அவர்தம் வாயிலிற் சென்று அவரை எழுப்பியன. அடுத்துவரும் திருப்பாட்டு அவர் எல்லாரும் ஒருங்கு கூடியபின், முதற்கண் இறைவனைப் பரவுவது.

163 முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே!
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே!
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம்; ஆங்கவர்க்கே பாங்கா [வோம்;
அன்னவரே எம்கணவ ராவார்; அவர்உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்;
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்,
என்ன குறையும் இலோமேலோ ரெம்பாவாய்! (9)

164 பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்:
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே;
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்;
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன்; தொண்டருளன்;
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்!
ஏதவன்ஊர்? ஏதவன்பேர்? ஆருற்றார்? ஆரயலார்?
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய்! (10)

---

163. முன்னைப் பழம்பொருள் - முன்னே தோன்றிநின்று மறைந்த பொருள். மறையாது நிற்கும் பொருளும் இதன்கண் அடங்கும். இவை இரண்டற்கும் முன்னேயுள்ள பழையோன் இறைவன். பின்னைப் புதுமை - இனித் தோன்ற இருக்கின்ற புதுப்பொருள். இதற்கும் முற்கூறியதுபோலவே பின்னே யுள்ளவன் இறைவன். இறைவன் பொருள்களைத் தோற்று விக்குங்கால், காலத்தின்வழி முற்பிற்பாடு தோன்றத் தோற்று வித்து, தான் அதற்கு அப்பாற்பட்டு நிற்றலையே இங்ஙனங் குறித்தனர். 'உன்னையே' என்னும் பிரிநிலை ஏகாரம் விரிக்க. பிரான் - முதல்வன். பெறுதல், அறிவினால் என்க. பாங்கு - துணை. ஆவார் - ஆதற்கு உரியார். "தொழும்பாய்" என்றது, 'மனத்தோடு பொருந்தி' என்றவாறு. இதனால், கன்னிமை யுடையராகிய இம் மகளிர், இளமைக்கண்ணே சிவபெருமா னுக்கு அன்புடையராய் ஒழுகும் ஆடவரே தமக்குக் கணவராய் வாய்த்தல் வேண்டும் என அப்பெருமானை வேண்டினமை கூறப்பட்டது.

164. இத் திருப்பாட்டு இல்லங்களினின்றும் எழுந்து சென்று குழாங்கூடிய மகளிர், சிவபிரானைப் பரவிய பின்னர்

நீர்த்துறையை அடைந்து, அங்குத் தமக்கு முன்னே வந்துள்ள அப்பெருமான் கோயிலிற் பணிபுரியும் மகளிரைக்கண்டு அவர்களோடு கூடி அவன் புகழைப் பேசி மகிழ்ந்தது.

பொருள்கோள் ; 'கோதில் குலத்துத் தோன்றிய, அரன்றன் கோயிற் பிணாப் பிள்ளைகாள், அவன்றன் பாதமலர் பாதாளம் ஏழினுங் கீழ்; போது ஆர் புனை முடியும் எல்லாப் பொருள் முடிவு; அவன் திருமேனி ஒன்றல்லன் ; ஒருபால் பேதை; வேத முதல்; விண்ணோரும் மண்ணும் துதித்தாலும், ஓத உலவா ஒரு தோழன் ; தொண்டர் உளன் : ஆதலின், அவன் ஊர் ஏது? அவன் பேர் ஏது? அவனுக்கு ஆர் உற்றார்? ஆர் அயலார்? அவனைப் பாடும் பரிசு ஏது?'

திருக்கோயிற் பணிபுரியும் மகளிர் என்றும் கன்னிமையுடையர். இந்நிலை. அவர் தாமே விரும்பி மேற்கொள்வது. அவரது மனநிலையை அறிந்து அவர்தம் பெற்றோரும் அதற்கிசைந்து விடைகொடுப்பர். பின்னர்க் கோயிற்கு அணித்தாய் உள்ள கன்னிமாடத்தில் தங்கிக் கோயிலினின்றும் பெறும் உணவு உடைகளால் வாழ்ந்து கோயிற் பணிகளையே செய்வர். இறைவன் ஆணைவழிப் பின்னர் நம்பியாரூரரை மணந்த சங்கிலியார், முன்னர் மேற்கொண்டிருந்தநிலை இதுவே என்பதை, வரலாறுநோக்கி அறிந்துகொள்க. இவருள் இறுதிகாறும் கன்னியராய் இராது மணம் புரிந்துகொள்ளும் நிலை உண்டாகுமாயின், அங்ஙனம் செய்துகொள்ளுதலும் உண்டு என்பதற்கும் அவ்வரலாறே சான்றாம்.

சொற்கழிவு - சொல்செல்லாது நின்ற இடம். போது ஆர் - மலர் நிறைந்த. புனை - அழகிய. 'முடிவும்' என்னும் உம்மை தொகுத்தலாயிற்று. முடிவும் - முடிவுமாகிய இடம். முடிவுக்கு மேல் உள்ள இடத்தையே "முடிவு" என்றார். "சொற்கழிவு" என்றதனால், பொருள் இன்மையையும், "பொருள் முடிவு" என்றதனால், சொல்செல்லாமையையும் உணரவைத்தார். இவற்றால் வியாபகத் தன்மை குறிக்கப்பட்டது. "ஒன்று" என்றது, ஒரு தன்மையை. திருமேனி ஒன்றாகாமைக்குக் காரணமாக, "ஒருபால் பேதை" என்றார். "ஒருபால்" என்றதற்கு, 'திருமேனியின் ஒரு கூற்றில்' என்க. பேதை - பெண்; என்றது, பெண்ணுருவினை. இதன்பின்

165 மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி,
ஐயா! வழியடியோம்; வாழ்ந்தோங்காண்! ஆரழல்போற்
செய்யா! வெண் ணீருடி! செல்வா! சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா!
ஐயா! நீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்!
எய்யாமற் காப்பாய் எமையேலோ ரெம்பாவாய்! (11)

'உளது' என்பது எஞ்சிநின்றது. "ஒருடம் பிருவ ராகி" என்று அருளிச்செய்தார், திருநாவுக்கரசு நாயனாரும் (திருமுறை-4. 22. 6,). வேத முதல் - வேதத்திற்கு முதல்வன். "மண்" என்றதும், மண்ணுலோரையே. துதித்தல் - புகழ்தல். 'அவர் ஓத உலவா' என்க. "ஓத" என்றதும், 'துதிக்க' என்றதாம். புகழது உலவாமையை அதனை உடையான்மேல் வைத்துக் கூறினர். உலத்தல் - முடிதல். ஒரு தோழன் - ஒப்பற்ற தோழன். இறைவனோடு ஆண்டான் அடிமைத்திறத்திலன்றித் தோழமை முறையிலும் அடியவர் உரிமை கொள்ளுதல்பற்றி இறைவனை, "தோழன்" என்றார். "தோழா போற்றி" எனப் போற்றித் திருவகவலிலும் அருளிச்செய்தமை காண்க (120). "விரும்பி நின்ற - பத்தாம் அடியவர்க்கோர் பாங்கனுமாம்" என்ற திருநாவுக்கரசர் திருமொழியையும் காண்க (திருமுறை-6. 15. 2.). 'ஒருதோழந் தொண்டருளன்' என்பதே பாடம் எனவும், 'தோழம்' என்பது, 'பேரெண்' எனப் பொருள்படும் எனவும் கூறுவாரும் உளர். அவர், 'உளன்' என்றதற்கு 'உடையன்' எனப் பொருள் உரைப்பர். தொண்டர் உளன் - அடியவர் உள்ளத்திலிருப்பவன். இதன்பின், 'ஆதலின்' என்னும் சொல்லெச்சம் வருவிக்க. 'யாது' என்பது, 'ஏது' என மருவி வழங்கும். இவ்வினா, ஈண்டுப் பல இடத்தும், யாதும் இன்மையைக் குறித்து நின்றது. "பரிசு" என்றது, வகையை. 'கருவி கரணங்களால் ஏகதேசப்பட்டு நிற்பவர்க்கே ஊரும், பேரும், உற்றாரும், அயலாரும், பாடும் வகையும் உள்ளன; அவ்வாறன்றி வியாபகனாய்நிற்கும் இறைவனுக்கு அவை இலவாதலின், இயன்ற அளவிலே நாம் பாடுகின்றோம்' என்றவாறு.

165. விளிகளை எல்லாம் முதலிற் கூட்டி, 'வழியடியோம் பொய்கை புக்கு முகேர் என்னக் குடைந்து உன் கழல்பாடி

வாழ்ந்தோம்' எனவும், நீ ஆட்கொண்டருளும் விளையாட்டின் உய்ந்தொழிந்தோம்; இனி எம்மை எய்யாமற் காப்பாய்' எனவும் வினைமுடிக்க,

மொய் ஆர் - மொய்த்தல் (நெருங்குதல்) பொருந்திய. மொய்த்தலுக்கு வினைமுதல் நீராடுவோர். மலர்களை நாடி வரும் வண்டுகளையும் கொள்வர். தடம் பொய்கை - பெரிய குளம். "முகேர்" என்றது, ஒலிக் குறிப்பு. குடைதல் - துழாவுதல். பாடும்பொழுது நீரைக் கையால் துழாவிநிற்றல் இயல்பு. வழி யடியோம் - குடிமுழுதுமாகத் தொன்றுதொட்டு அடியராயி னேம். காண், முன்னிலை அசை. "கழல்பாடி வாழ்ந்தோம்" என்றது, 'பாடுதலாகிய பேற்றைப் பெற்றேம்' என்றபடி. இவை, முன்னர் நிகழ்ந்தன. ஆரழல்போல் செய்யன் - அணுகு தற்கரிய தீப்போலச் சிவந்த திருமேனியை யுடையவன். "ஆட் கொண்டருளும் விளையாட்டு" என்றது, 'படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்' என்னும் ஐந்தொழிலையுமாம் என்பது, வருகின்ற திருப்பாட்டுள், "**காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி**" என்பதனால் விளங்கும். ஐந்தொழில் களுள் அருளலையன்றி ஏனையவற்றையும் ஆட்கொண்டருளுத லாக அருளிச்செய்தது, அவையெல்லாம் அருளலுக்கு ஏதுவாம் முறைமை பற்றியே செய்யப்படுதலாம். இத் தொழில்களை இறைவனுக்கு விளையாட்டு என்றல், 'ஐங்கலப் பாரம் சுமத்தல் சாத்தற்கு விளையாட்டு' என்பதுபோல, எளிதிற் செய்தல் பற்றியேயாம் என்பதனை, மாதவச் சிவஞான யோகிகள் சிவ ஞான போத மாபாடியத்தும், சிவஞான சித்தி உரையிடத்தும் இனிது விள்க்கிப் போந்தமை காண்க. உய்வார்கள் உய்யும் வகை, அவரவர் நிலைக்கேற்ப, மண்ணுலக இன்பங்களையும், விண்ணுலக இன்பங்களையும், வீட்டுலகத்தில் உடம்பொடுநின்று நுகரும் இன்பங்களையும் பெறும் நிலைகளாம். வகை எல்லாம் - வகையால் எல்லாம். "உய்ந்தொழிந்தோம்" என்றதில் ஒழி தல், துணிவுப் பொருள்பற்றி வந்தது. எய்த்தல் - பிறவியிற் சென்று இளைத்தல். எனவே, மேற்கூறியவாறு உய்ந்தவை அனைத்தும் பிறவி நீங்கிய நிலையாகாமை பெறப்பட்டது. இங்ஙனம் எல்லாவற்றையும் வெறுத்து, பிறவியற்ற நிலையாகிய பரமுத்தியை வேண்டுதல் அடிகளது விருப்பமேயாம். எனினும். இத்தனைப் பெண்கள் கூற்றாக அவர் அருளிச்செய்தமையின்,

166 ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடுந்
தீர்த்தன், நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தன், இவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும், படைத்தும், கரந்தும் விளையாடி.
வார்த்தையும் பேசி, வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய, அணிகுழல்மேல் வண்டார்ப்பப்,
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனை நீ ராடேலோ ரெம்பாவாய்! (12)

"எய்யாமல் காப்பாய்" என்றதற்கு, அப் பெண்கள் இந்நிலையினையே விரும்பும் ஆடவருக்கே தாம் வாழ்க்கைப்படுமாறு அருளுதல்வேண்டும்என வேண்டினர் என உரைத்துக்கொள்க. 'காவாய்' என்னும் ஏவல் வினையை மரூஉ வழக்காக, 'காப்பாய்' என முன்னிலை வினைபோல அருளினர். இள மகளிர் கூற்றுதல்பற்றி, இத்திருப்பாட்டு, இல்லங்களினின்றும் போந்த மகளிர் நீராடுதற்கண் இறைவனைப் பரவியது,

166. இது முதலாக வரும் நான்கு பாடல்கள், அன்ன மகளிர் இறைவனைப் பாடிக்கொண்டே நீராடுவன. இவற்றுள், ஒருவரை முன்னிலைப்படுத்தியேனும், பலரையும் உளப்படுத்தியேனும் சில சொல்லி ஆடுவர்.

ஆர்த்த - பிணித்துள்ள. "துயர்" என்றது வெப்பத்தை. ஆர்த்து - ஆரவாரித்து; 'மகிழ்ந்து' என்றபடி. தீர்த்தன் - தீர்த்தமாய் உள்ளவன். தீ ஆடும் - தீயோடு ஆடுகின்ற. கூத்தப் பெருமான் திருக்கைகளில் ஒன்றில் தீயேந்தியிருத்தல் அறிக. குவலயம் - பூ மண்டலம். "எல்லோமும்" எனத் தன்மை யிடத்தால் ஓதினமையின், 'நம் எல்லோரையும்' என்று உரைக்க. "நம்" என்றது மக்கள் எல்லாரையும் உளப்படுத்து, இவ்வாறு மக்கள் இனத்தை வேறு கூறினர், அவர் சிறப்புடைய உலகமாதல் பற்றி. 'இறைவனால் ஆட்கொள்ளப்படும் பேற்றால், தேவரினும் மக்களே சிறப்புடையர்' என அடிகள் பலவிடத்தும் ஓதியருளுதல் காண்க. "விளையாடி" என்றது, முன்னர், "கூத்தன்" என்றதனோடு இயைந்து நின்ற பெயர். 'கூத்தனும், விளையாடியும் ஆகியவனது

167 பைங்குவளைக் கார்மலரால், செங்கமலப் பைம்போதால்,
அங்கங் குருகினத்தால், பின்னும் அரவத்தால்,
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினல்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்! (13)

வார்த்தை' என்க. வார்த்தை - செய்தி; புகழ். 'வார்த்தையும்" என்ற உம்மை சிறப்பு. சிலம்ப - ஒலிக்க. வார் - நீண்ட. மேகலைகளை, "கலைகள்" என்றது, முதற்குறை. ஆர்ப்பு - ஆரவாரிப்பு. அரவம் - ஒலி 'ஆரவாரிப்பாகிய ஒலி' என்க. 'குடைந்தபின்' என்பது, "குடைந்து" எனத் திரிந்து நின்றது. குடைந்து - முழுகி. "உடையான் பொற்பாதம் ஏத்தி" என்றதன்பின், வளைசிலம்புதல் முதலியவற்றைச் சுட்டும், 'அவ்வாறு' என்பது வருவிக்க. நீராடு மகளிர், பொய்கை, சுனை, அருவி, மடு, யாறு, கடல் என்னும் அனைத்திலும் ஆடுதல் இயல்பு. அவற்றுள், இது சுனையாடுவார் கூறியது.

167. இத்திருப்பாட்டுள், அன்ன மகளிர், தாம் ஆடச் சென்ற மடுவினை மாதொருகூறன் வடிவமாகக்கண்டு மகிழ்ந்து கூறுதல் சொல்லப்படுகின்றது.

கார் மலர் - கரிய மலர். குவளையின் கரியமலர் இறைவியது நிறத்தையும், செந்தாமரை மலர் இறைவனது நிறத்தையும் காட்டும். குருகு - பறவை; சொற் பொதுமையால் இது அம்மையது வளையையும் உடனிலையாகச் சுட்டிற்று. பின்னும் அரவத்தால் - மேலும் மேலும் எழுகின்ற ஒலியால். இதுவும் அவ்வாற்றால், இறைவன் மீது ஒன்றேடொன்றுபொருந்தி ஊரும் பாம்பினைக் குறித்தது. "மலம்" என்றது, மடுவிற்கு ஆங்கால் உடல் அழுக்கையும், இறைவன் இறைவியர்க்கு ஆங்கால் உயிர் அழுக்கையும் குறிக்கும். இசைந்த - பொருந்திய. பொங்கு மடு - நீர் மிகுந்த மடு. கலந்து - ஏனைய காலணிகளுடன் சேர்ந்து. விளையாட்டு மகிழ்ச்சியால் உடல் பூரித்தலின், கொங்கைகளும் பூரிப்பவாயின. மடுவிலும் தாமரைகள் நிரம்பி

168 காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருள்ஆ மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தம்ஆ மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய்! (14)

யிருக்குமாகலின், "பங்கயப் பூம்புனல்" என்று அருளினார். இது, மடுவாடுவார் கூறியது.

168. இத் திருப்பாட்டுள், அன்ன மகளிர் இறைவனையும், இறைவியையும் பலபடியாகப் பாடி ஆடுதல் கூறப்படுகின்றது.

"சிற்றம்பலம் பாடி" என்றது தொடங்கி, "பாதத் திறம் பாடி" என்றதுகாறும் உள்ளவற்றை முதற்கண் கூட்டுக.

காது ஆர் - காதில் பொருந்திய. 'பைங் கலன்' என இயையும். பசிய பொன்னாற் செய்யப்பட்டமையின், கலனும் பசுமையுடைத்தாயிற்று. 'கலன்' என்பது பொதுச்சொல்லா தலின், "பூண்கலன்" என அடைபுணர்க்கப்பட்டது. பூண் கலன், வினைத்தொகை. கோதை - மாலை. 'மாலை கூந்தலின் கண் ஆட' என்க. 'கோதைக் குழலாட' எனவும் பாடம் ஓதுவர். சீதப் புனல் - தண்ணிய நீர். இஃது, 'ஆடுதற்கு இனிதாம்' எனக் குறித்தவாறு. 'புனலின்கண்' என ஏழாவது விரிக்க. வேதப் பொருள் - வேதத்துள் கூறப்பட்ட முதற் பொருளின் இயல்பு. அப்பொருள் - அவ்வியல்பையுடைய பொருள். ஆமா - ஆமாற்றினை; என்றது, 'சிவபெருமானிடமே அவ்வியல்பு காணப்படுமாற்றினை' என்றபடி. "ஆமாறு" என்றதனை "ஆதி" என்றதற்கும், கூட்டுக. "சோதி" என்றது 'சிவன்' என்னும் அளவாய் நின்றது. சூழ் - மார்பினைச் சூழ்ந்துள்ள. "தார்" என்றது, அதனது சிறப்பினை. ஆதியும், அந்தமும் ஆதல், 'உலகிற்கு' என்க. பேதித்தல் - ஒருகாலைக் கொருகால் அறிவு வேறாகச் செய்தல். "வளர்த்து" என்றத னால், இது ஆக்க மாய வேறுபாட்டையே குறிக்கும். எடுத்த - உயர்த்திய. இறைவனது அருட்சத்தியே முன்னர் மறைப்புச்

169 ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள், சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் ; விண்ணோரைத் தான்பணி
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும் [யாள் ;
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர், வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்! (15)

சத்தியாயும், பின்னர் விளக்கற் சத்தியாயும் நின்று அறிவை வளர்த்தலின், "வளர்த்தெடுத்த பெய்வளை" என்றார். மறைத்தல் அதற்கியல்பாகாது விளக்குதலே இயல்பாகலின், விளக்கத் தொடங்கும் நிலையே, 'சத்திநிபாதம்' எனப்படுகின்றது. மறைத்தலேயன்றி, விளக்குதலாகிய சத்திநிபாதமும், 'மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம்' என நால்வகைப்பட்டு, அவற்றுள் ஒன்று நான்காயும், மற்றும் அவ்வாற்றால் பலவாயும் நிகழ்தலின், "பேதித்து" என்று அருளிச்செய்தார். புனல் ஆடி ஆடு - நீரின்கண் விளையாடி மூழ்கு. "சிற்றம்பலம்பாடி" என்றதனால், இது, கோயிற் றிருக்குளம் ஆடுவார் கூறியதாம். இத் திருக்குளம், 'சிவகங்கை' எனப்படுகின்றது.

169. இத் திருப்பாட்டு, அன்னமகளிர், சிவபெருமானது பேரின்ப நிலையை வியந்து பாடி ஆடியது. "வாருருவப் பூண் முலையீர்" என்றதனை முதலிற் கொள்க.

ஓரொருகால் - ஓரோவொரு சமையத்தில். எம்பெருமான் என்றென்றே - சிவபெருமான் என்று சொல்லியே. சித்தம் களிகூர - பின்பு உள்ளம் மகிழ்ச்சி மிக. கண் நெடுந்தாரை நீர் ஓவா பனிப்ப - கண்கள் இடையறாத தாரையாகிய நீரை ஒழியாது பெய்ய. நம்பெருமான் சீர் ஒருகால் வாய் ஓவாள் - சிவபெருமானது புகழை ஒருகாலும் வாயினின்றும் ஒழியாதவளாயின இவள். பாரொருகால் வந்தனையாள் - இப்பொழுது நிலத்தில் ஒருமுறையே வணங்கி எழாது கிடக்கின்றாள். விண்ணோரைப் பணியாள் - பிற தேவரை ஒருபோதும் வணங்காள். இங்ஙன் இவ்வண்ணம் ஒருவர் பேரரையற்குப் பித்தும் ஆமாறு - இவ்வுலகத்திலே இவ்வாறு ஒருவர் தம் கடவுள்

170 முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவணமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்! (16)

பொருட்டுப் பித்தும் கொண்டவர் ஆகும்படி. ஆட்கொள்ளும் வித்தகர் ஆர் ஒருவர் - ஆட்கொண்டருளும் தேவர் யாரொருவர் உளர்; ஒருவரும் இலர். தாள் - (ஆதலின், இவ்வாறு ஆட்கொள்பவனாகிய நம் சிவபெருமானது) திருவடிகளை. (நாம் வாயாரப் பாடிப் புனல் பாய்ந்து ஆடுவோம்).

'சிவபெருமானது பெயரை முதற்கண் சில பொழுது பொதுவாகச் சொல்லியவள், பின்னர் அதன் பயனாகத் தன்னை மறந்த பேரன்புடையளாயினாள்; இங்ஙனம் தன்னை அடைந்தவரை வசிகரித்துப் பேரருள் புரியும் தேவர் பிறர் யாவர் உளர்' என வியந்தபடி.

"சீரொருகால்" என்றதில், 'ஒருகாலும்' என்னும் உம்மை தொகுத்தல். "விண்ணோரைத் தான்பணியாள்" என்றதில் தான், அசைநிலை. "ஆமாறும்" என்ற சிறப்பும்மையை "பித்து" என்றதனோடு கூட்டுக. "தாள்" என்பதற்குமுன், 'அவர்' என்பது வருவிக்க. ஏர் உருவப் புனல் - எழுந்து தோன்றுகின்ற உருவத்தையுடைய நீர்; என்றது அருவிநீரை. பூம்புனல் - அழகிய நீர். 'ஆட' என்னும் வியங்கோளின் இறுதி அகரம் தொகுத்தலாயிற்று. இஃது அருவி யாடுவார் கூறியது.

170. இத் திருப்பாட்டு, அன்ன மகளிர் உலக நலத்தின் பொருட்டு மழையை நோக்கி வேண்டியது. அங்ஙனம் வேண்டுங்கால், தம் பெண்மைக்கேற்ப, இறைவி தன் சிறப்பே தோன்றக் கூறி வேண்டுவர்.

இதனுள், "மழை" என்றதனை முதலிற் கொள்க. மழை - மேகம். முன் இக் கடலைச் சுருக்கி - முதற்கண் இக் கடல் நீரைக் குறையப்பண்ணி. குறையப்பண்ணுதல் - முகத்தல்.

171 செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி, நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை,
அங்கண் அரசை, அடியோங்கட் காரமுதை,
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்! (17)

உடையாள் - எப்பொருள்களையும் தனக்கு உரிமையாக உடையவள் ; இறைவி. 'இறைவி' என்றது அவளது திருமேனியை. எம்மை ஆளுடையாள் - எம்மை ஆளுதல் உடையவள் ; என்றது, 'உலகியலின் நீக்கித் தன்வழி ஒழுகச் செய்பவள்' என்றபடி. இது முதலாக இறைவியைக் குறித்துவரும் மூன்று பெயர்களும், இறுதியில் நிற்கும், 'அவள்' என்பதுபோலச் சுட்டுப்பெயரளவேயாய் நின்றன. இட்டிடையின் - சிறிய இடைபோல. சிலை - வில். 'குலவுவித்து' என்பது, 'குலவி' என நின்றது. குலவுதல் - விளங்குதல். '' தன்னின் '' என்றதில் உள்ள தன், சாரியை. 'எங்கோமான் தன் அன்பர்க்கு முன், அவள் நமக்கு முன்னிச் சுரக்கும் இன்னருள்' என இயைத்துக் கொள்க. அன்பர்க்கு முன் - அன்பர்க்குச் சுரக்குமுன். முன்னி - நினைத்து. நினைத்தது, பின் நிகழ்வதனை. 'சுரக்கும்' என்றது, சுரந்து பொழிகின்ற எனத் தன் காரியந் தோன்ற நின்றது. '' பொழியாய் மழை '' என்றாராயினும், எம்பெருமானது அருளால் பொழியாய் என்பதே கருத்தாகும். '' இக் கடலை '' என்றமையால், இது, கடலாடுவார் கூறியதாம். மழையை நினைவுகூர்தல், அவர்க்கே பெரிதும் இயைவதாதல் அறிக.

171. இத் திருப்பாட்டு, அன்ன மகளிர், இறைவன் தம் இல்லங்கள்தோறும் எழுந்தருளிவந்து அருள்செய்தலை நினைந்து உருகிப் பாடி ஆடியது.

இதனுள், '' கொங்குண் கருங்குழலி '' என்றதை முதலிற் கொள்க ; இது விளி. கொங்கு உண் - வண்டுகள் தேனை உண்கின்ற.

செங்கணவன் - திருமால். 'கண்ணவன்' என்பதில், ணகரம் தொகுக்கப்பட்டது. 'கண்ணவன், தோளவன்,

172 அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்!

நல்லவன்' என்றாற்போல, அகரம் புணர்த்து வழங்குதல், பிற்கால வழக்கு. எங்கும் இலாததோர் இன்பம், வரம்பிலின்பம். நம்பாலதா - நம்மிடத்ததாதற் பொருட்டு. "நந்தம்மைக் கோதாட்டி" என்றதனை, "எழுந்தருளி" என்றதன்பின்வர்க் கூட்டுக. இங்கு - இவ்வுலகத்தில். 'இல்லங்கள்தோறும் எழுந்தருளிப் பொற்பாதம் தந்தருளும்' என, முந்நிலைக்காலமும் தோன்றும் இயற்கையாகக் கூறினமையின், (தொல். சொல் 242.) எழுந்தருளுதல், விழாக்காலத்திற் பல திருவுருவங்களிலும், எழுந்தருளுதலாம். "நின் அடியார் பழங்குடில்தொறும் எழுந்தருளிய பரனே" (திருப்பள்ளி - 8.) என்புழி, "எழுந்தருளிய" என, இறந்த காலத்தாற் கூறினமையின், அஃது அடியவர் இல்லத்தே தன்னைக் கண்டு வழிபட எழுந்தருளியிருத்தலைக் குறித்ததாம். இனி இவ்விரண்டும் முறையே, குரு சங்கமங்களில் வருதலையும், மதுரையில் இருந்த அடியவள் ஒருத்தி தன் இல்லத்திற் சென்று பிட்டுப் பெற்றமை போன்ற அருட்செயல்களையும் குறிக்கும். இவற்றிற்கு இவ்விருவகைப்பொருளையும் கொள்க. கோதாட்டி - செம்மைப்படுத்தி. சேவகன் - வீரன். அங்கண் அரசு - அருளால் அழகுபெற்ற கண்களையுடைய தலைவன். பங்கயப் பூம்புனல், தாமரைப்பூவையுடைய நீர்; வாளாதே, "பங்கயப் பூம்புனல்" என்றமையின், குளத்து நீர் எனக் கொள்ளப்படுமாகலின், இது பொய்கையாடுவார் கூறியதாம்.

172. இதனுள் சிவபெருமான் தேவதேவனாய உயர்வுடையனாதலை நினைந்து பேசுதல் கூறப்படுகின்றது.

விறு - பெருமை ; என்றது, ஒளியை. சிவபெருமானது இரு திருவடியினது ஒளியின்முன், தேவர் பலரது முடியின்கண்ணும் உள்ள அளவிறந்த மணிகளும் ஒருங்குகூடிய கூட்டத்து எழுந்த பேரொளியும் மழுங்கும் என்க. இங்குக் கூறியது பொருளுவமம் ;

" பொருளே உவமம் செய்தனர் மொழியினும்
மருளறு சிறப்பினஃ துவம மாகும்"

என்னும் உவமவியல் நூற்பாவினைக் காண்க. இதற்கு உரையாசிரியர் உரைத்த உரை பொருந்துவதன்று. இதனை அணி இயலார், ' விபரீத உவமை ' என்றும், ' எதிர்நிலை உவமை ' என்றும் கூறுவர். தேவர் பலரது முடிகளும் சிவபெருமானது திருவடியின் முன் குழுமுதல், அவர்கள் அப்பெருமானது அடியில் தங்கள் முடிபட வணங்குதலாம். கண் ஆர் இரவி - கண்ணுக்குத் துணையாய்ப் பொருந்துகின்ற கதிரவன். வந்து - வருதலால். கார் - கருமை ; அஃது ஆகுபெயராய், இருளை உணர்த்திற்று. தண் ஆர் ஒளி - குளிர்ச்சி பொருந்திய ஒளி. தாரகைகள் - விண்மீன்கள். அகலுதல் - காணப்படாது மறைதல். " பிறங்கொளி " என்றதில் ஒளி என்றது, அதனையுடைய பொருள்களைக் குறித்தது. இறைவன் தன் கலப்பினை நோக்கிய வழி உலகமேயாயும், தன் தன்மையை நோக்கியவழி அதனின் வேறாயும் அறியப்படுதல்பற்றி, 'பெண் முதலிய பலவுமாகி, இத்தனையும் வேறாகி' என்று அருளினார். கண் ஆர் அமுதம் - கண்ணால் பருகும் அமுதம் ; இது, 'தேவரமுதத்தின் வேறு' என்றவாறு; இதனை விலக்குருவகத்தின்பாற்படுத்துக. 'கண்ணாரமுதக் கடலே போற்றி' என முன்னருங் கூறினார். (போற்றி-150.) மேற்கூறியவாறன்றி இவ்வாறும் ஆமென்றலின், " அமுதமுமாய் " என்ற உம்மை, இறந்தது தழுவிற்று. வாளாதே " இப் பூம்புனல் " என்றமையின், 'கிடைத்த இந்நீரின்கண்' என்க. இது, விண்மீன்கள் ஒளிமழுங்கிக் கதிரவன் தோன்றுங் காலம் வருதலின், தீர்த்தமாயுள்ளவற்றிற் செல்லாது, கிடைத்த நீரில் ஆடுவார் கூறியது. தீர்த்தமன்மை குறிப்பார், " இப்புனல் " என்றும், தீர்த்தமன்றாயினும் ஆடப்படுதற்குரியதே என்பார், " பூம்புனல் " என்றுங் கூறினர்.

173 'உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்' என்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போம்;கேள்!
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க;
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்பற்க;
கங்குல் பகல்எங்கண் மற்றொன்றுங் காணற்க;
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்,
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய்! (19)

---

173. இஃது, அன்ன மகளிர், தமக்குச் சிவபெருமா னிடத்து அன்புடையரல்லாத ஆடவர் கணவராய் வருதல் கூடாதவாறு அருளுமாறு இறைவனை வேண்டியது.

'உன்கை' என்பது, "உங்கை" என, எதுகை நோக்கித் திரிந்தது. இனஎதுகையும் பொருந்தும் ஆகலின், 'உன்கை என்பதே பாடம்' எனினும் ஆம். 'உன்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்றாற்போல' என்பது, ஒரு பொருளைக் காப்பதில் தாமே பெருவிருப்புடையராகிய ஒருவரை நோக்கிப் பிறர், 'நீவிர் இதனைக் குறிக்கொண்டு காப்பீராக' என வேண்டிக்கொள்ளுமிடத்து, 'அவ்வேண்டுகோள் மிகை' என்பதை விளக்கப் பண்டைக் காலத்தில் கூறப்பட்டுவந்ததொரு பழமொழி என்பது, இங்கு அறியப்படுகின்றது.

"தாமே தரும்அவரைத் தம்வலியி னாற்கருத
லாமே இவனா ரதற்கு'

என்னும் திருவருட்பயனை (70) இங்கு இதனோடு ஒருவாற்றான் ஒப்பிடலாம். ஆகவே, ஒரு குழவியை, 'கருத்தொடு பாதுகாக்க' என்று அதன் தாய்க்குப் பிறர் கூறுங் கூற்று இது என்பது விளங்கும். இதனை, மணவினையிடத்து மணமகளை மணமகனிடத்துக் கையடையாகக் கொடுக்குங்காலத்து இருமுதுகுரவர் கூறுவதொரு சொற்றொடர் என்பாரும் உளர். இதனுட் கிடக்கும் சொற்கள் அவ்வாறு பொருள்படுதற்கு ஏலாமையானும், என்றுமே இறைவனிடத்து அடங்கிநின்று, அவனால் நன்கு புறந்தரப்படும் உயிர்களுட் சிலராகிய இம் மகளிர்க்கு, முதற்காலத்தில் இருமுதுகுரவர்க்கு உரியளாய் இருந்து பின்னர் மணமகன் முதலியோரது வேண்டுகோட்கிணங்கி அவனுக்கு அவரால்

கொடுக்கப்படுகின்ற கன்னிகை உவமையாதல் கூடாமையானும், அவ்வாறு உரைத்தல் பொருந்தாமை அறிந்துகொள்க.

'என்ற' என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. 'அங்கு அச்சொல்' என்றது, ஒருசொல் நீர்மைத்து. புதுக்கும் அச்சம் - புதுக்குதலால் உளதாம் அச்சம். புதுக்குதல், அதனைத் தாம் பொருளுடையாதாக்க முயலுதல். அது பொருளற்றதென யாவராலும் அறியப்பட்டுப் பொருந்தாததாகலின், இறைவற்கு வெகுளிதோன்றுங்கொல் என, மகளிர் அஞ்சுவாராயினர். ஆயினும், அவாமிகுதியால் அதனைச் செய்யவே துணிந்து, 'எம் அறியாமை நோக்கி முனியாது எம் விண்ணப்பத்தைக் கேட்டருள்' என முன்னர் வேண்டிப் பின்னர்த் தாம் கூறக் கருதியவற்றைக் கூறுகின்றனர்.

நான்கு, ஐந்து, ஆறும் அடிகளால், மகளிர், சிவபெருமானிடத்து அன்புடையரல்லாத ஆடவர் தமக்கு எவ்வாற்றானும் கணவராய் அமைதல் கூடாது என்பதனையே பலவாற்றான் வேண்டினர். பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல் சிறந்து தன்சேவடியே சேர்ந்திருக்கும் (அம்மைதிருவந்தாதி-1.) மகளிரை அவர்தம் இயல்பிற்கு மாறாய இயல்பினையுடைய ஆடவர்க்கு உரியராக்க இறைவன் நினையானாயினும், தம் வினை காரணமாக ஒரோவொருகால் அவ்வாறு நிகழினும் நிகழுமோ என்னும் அச்சத்தாலே இம்மகளிர் இங்ஙனம் வேண்டினர். இதனால், சிவபிரானுக்கு வழிவழி அடிமையாய் வருங் குடியிற் பிறந்த ஆடவர்க்காயினும், பெண்டிர்க்காயினும் ஒருவர்மாட்டு ஒருவர்க்குக் காதல் பிறத்தற்கு வாயிலாக முதற்கண் நிற்பது, அவர்க்குச் சிவபிரானிடத்துள்ள அன்பே என்பதும், மெய்ந்நிறைந்த அழகும், கைந்நிறைந்த பொருளும் முதலாயினவெல்லாம் அதன் பின்னிடத்தனவாம் என்பதும் நன்கு விளங்கும். நம்பியாரூரரோடு பரவையாரிடத்துக் காதல் நிகழ்ந்த விடத்தும், சங்கிலியாரைக் கண்டபொழுது அவர்பால் நம்பியாரூரர்க்குக் காதல் நிகழ்ந்தவிடத்தும் இதனையே காண்கின்றோம். இனிச் சங்கிலியாருக்கு நம்பியாரூரர்பால் காதல் பிறப்பிக்க அவரைப்பற்றி இறைவன் அருளியவற்றில், "**சால நம்பால் அன்புடையான்**" என்பதையே முதற்கண் அருளியதும் காணத்தக்கது. இத்தகைய நற்குடிப் பிறப்பே ஞானம் பெறுதற்கு வாயில் என்பதனையே, மெய்கண்ட தேவர்,

" ....தவம்செய்த
நற்சார்பில் வந்துதித்து ஞானத்தை நண்ணுதலைக்
கற்றோர்சூழ் சொல்லுமாங் கண்டு"

என்று அருளிச்செய்தார் (சூத். 8. அதி. 1.).

" தரையினிற் கீழை விட்டுத்
தவம்செய்சா தியினில் வந்து
பரசம யங்கட் செல்லாப்
பாக்கியம் பண்ணொ ணாதே"

எனச் சிவஞானசித்தி கூறியதூஉம் இதுபற்றி (சு. 2. 90.).

ஒன்பதாம் திருப்பாட்டுள் மகளிர், 'சிவபிரானுக்கு அன்புடையவரைக் கணவராக அடைதல் வேண்டும்' என, உடம்பாட்டு முகத்தான் வேண்டினர். இதனுள், 'அன்னரல்லாதாரைக் கணவராக அடைதல் கூடாது' என, அதனை எதிர்மறைமுகத்தான் வேண்டினர்; இவை இவ்விரண்டற்கும் வேற்றுமை.

சிவபிரானுக்கு அன்பரல்லாதவர்க்கு வாழ்க்கைப்படின், கைகள் பயனற்ற சில பணிகளைச்செய்தலும், கண்கள் பயனில்லாத சில காட்சிகளைக் காணுதலும் உடையனவாதல் கூடுமாகலின், அவற்றை வேண்டா எனக் கூறும்முகத்தால், அன்ன தன்மையர் கணவராய்வருதல் வேண்டாமையைக் குறித்தனர். முன்னர், "உனக்கல்லாது" என்றமையின், "மற்றொன்றும்" என்றதற்கும், 'உன்னை யல்லாது மற்றொன்றும்' என்று உரைக்கப்படும். தெய்வங்களும் அஃறிணையாகக் கூறப்படுமாதலின், "மற்றொன்று" என்றதில் அவையும் அடங்கும். இங்கு - இவ்வுலகத்தில். இப்பரிசே - இவ்வாறே. "எங்கோன்" என்றது இடவழுவமைதி. நல்குதியேல் - அருள்செய்வாயாயின். 'ஞாயிறு எங்கு எழில் எமக்கு என்' என்க. 'எங்கெழிலென் ஞாயிறு' என்பது, கவலையற்றோர் கூறுவதொரு தொடர். கதிரவன் திசைமாறித் தோன்றுதல் முதலிய, இயற்கைக்கு மாறான செயல்கள் நிகழுமாயின், அவை உலகம் கெடுவது காட்டும் குறி (உற்பாதம்) என்பர். ஆதலின், ஒன்றானும் குறைவில்லாதோர், இவ்வாறு கூறுதல் வழக்கு.

174 போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர் !
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள் !
போற்றிஎல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம் !
போற்றிஎல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள் !
போற்றிஎல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள் !
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம் !
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள் !
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய் !　(20)

திருச்சிற்றம்பலம்

" வெம்பவரு கிற்பதன்று கூற்றம் நம்மேல்
வெய்ய வினைப்பகையும் பைய நையும்
எம்பரிவுந் தீர்ந்தோம் இடுக்கண் இல்லோம்
எங்கெழிலென் ஞாயிறு எளியோ மல்லோம் "

என்ற திருத்தாண்டகத்தையும் (95 - 2.),

" எங்கெழிலென் ஞாயிறெமக் கென்றுகுறை வின்றி "

என்ற சிவஞான சித்தியையும் (சூ. 8. 31.) காண்க.

" எங்கெழிலென் ஞாயிறென இன்னணம் வளர்ந்தேம் " என்றாற்போலப் (சீவகசிந்தாமணி. கனகமாலை - 237.) பிற விடத்தும் வரும்.

174. இத்திருப்பாட்டினுள், அன்ன மகளிர் இறைவனது திருவடியே எல்லாமாய் இருத்தலை உணர்ந்து அவற்றைப் பல முறையானும் போற்றுதல் கூறப்படுகின்றது.

முதல் இரண்டடிகளிலும் உள்ள, " போற்றி அருளுக " என்பவற்றை அவ்வவ்வடியின் இறுதிக்கண் கூட்டி, இருதொடராக்குக. மேலைத்திருப்பாட்டில் உள்ள, " எங்கள் பெருமான் " என்னும் விளி, இதனுள்ளும் முதற்கண் வந்து இயையும். இதன்கண் திருவடியைக் குறிக்குமிடத்தெல்லாம் நான்காம் வேற்றுமை விரிக்கப்படும். போற்றி - வணக்கம். அருளுக - எம்க்கு இரங்குவனவாகுக. இதற்கு, ' அவை ' என்னும் எழுவாய் வருவித்துக்கொள்க. சத்தியே பாதமாகலின், அருளுதல் முதலியன பொருந்துமாறறிக. செந்தளிர், உவமையாகு

பெயர். மூன்றும் அடி முதலிய ஐந்தினும், முறையே, 'உலகத்தைப் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்' என்னும் ஐந்தொழிலும் கூறப்பட்டமை காண்க. திருமந்திரம் தவிர ஏனையதிருமுறைகளுள் ஐந்தொழிலையும் இனிதுவிளங்கக் கூறும் திருப்பாட்டு இஃதொன்றேயாம். அதனால், இது சிவாகமங்களுள், '**பஞ்சப்பிரம மந்திரம்**' எனக் கூறப்படும் மந்திரங்களோடு ஒருங்கொத்தது. ஐந்தொழிலும் சகலநிலைபற்றிக் கூறப்படுவனவாகலின், 'ஆதி' எனவும், 'அந்தம்' எனவும் வந்தவை, முறையே, கேவல நிலையையும், சுத்த நிலையையும் கூறியவாறும். சகல நிலைக்கு வாராத உயிர்களும் உளவாதலின், 'ஆம்' என்றார். ஆகவே, எஞ்ஞான்றும் உலகிற்கு நிலைக்களம் இறைவனது திருவடியே என்பதனை இனிது விளங்க அருளிச் செய்தமை காண்க. "வித்துண்டா மூலம் முளைத்தவா தாரகமாம் — அத்தன்தாள் நிற்றல்" என்று அருளிச்செய்தார் மெய்கண்டதேவரும் (சிவஞானபோதம் - சூ. 1. அதி 2.).

பொன்மலர்கள் பொன்னால் ஆகிய மலர். மலராவது, தாமரை மலரே. 'செந்தளிர்கள், புண்டரிகம், பொன்மலர்கள்' என்பன உவமையாகுபெயர்கள். 'ஆதி, அந்தம்' என அவ்வந் நிலைக்கண் நிற்பனவற்றை அவையேயாகவும் 'தோற்றம், போகம், ஈறு' என, அவற்றிற்குக் காரணமாய் நிற்பவற்றைக் காரியமாகவும் பாற்படுத்து ஓதியருளினார். "பொன்மலர்" என்றதன்பின், 'என' என்பது தொகுத்தலாயிற்று. இறுதிக்கண் நின்ற, 'போற்றி' என்பது வினையெச்சம். மார்கழி நீர் - மார்கழியில் ஆடப்படும் நீர். 'மார்கழி' என்பது, அம்மாதத்திற்கேயன்றி, 'மிருகசீரிடம்' என்னும் நாண்மீனுக்கும் பெயர். அதனால், இஃது ஆதிரைமீனையும் குறிக்கும்; என்னை? மிருகசீரிடத்தோடு தொடர்புடைய ஆதிரையையே சிறந்ததெனக் கொள்ப ஆதலின். ஈண்டும், 'ஆட' என்னும் வியங்கோள் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. பொய்கை, சுனை முதலிய பலவற்றினும் ஆடுவார் கூற்றுக்களாக அனைத்தையும் கூறியது அங்ஙனம் அவற்றிற் சென்று ஆடுவார் பலர்க்கும் அத்திருப்பாடல்கள் ஏற்ற பெற்றியாற் பயன்தருதற் பொருட்டென்க. எனவே, இப்பகுதி முழுவதும், எல்லார்க்கும் எல்லா நாளினும் ஒருபெற்றியே நிகழ்வனவற்றைக் கூறியதாகாது, பலர்க்கும் பலநாளினும் பலவாறாக நிகழ்வனவற்றைக் கூறியதேயாதல் பெறப்படும்.

8. திருவம்மானை

['அம்மானை' என்பது, மகளிர் விளையாட்டுக்களில் ஒன்று. இதன்கண் பாடப்படும் பாட்டே அம்மானைப்பாட்டாம். இஃது, 'அம்மானை வரி' என்றும் சொல்லப்படும்.

இவ்விளையாட்டு, 'மூன்றுகாய்களைக்கொண்டு ஆடுவது' என்றும், 'மூன்றுபெண்கள் நின்று, ஒருத்தி ஒன்று சொல்வதும் மற்றொருத்தி அதன்கண் ஐயத்தை எழுப்புவதும், மூன்றுமவள் அவ்வையத்தை நீக்குவதுமாய் வரும் பாட்டுக்களைப் பாடி ஆடப்படும்' என்றும் கூறுவர். ஒரு பொருள்மேல் எழுப்பப் பட்ட ஐயத்தை நீக்குதல், அதனை முதலிற் சொல்லியவளுக்கே உரியதாகலின், 'இங்ஙனம் வரும் பாடல்களைப் பாடி ஆடுவோர் இருவரே' என்றல் பொருந்துவதாகலானும், சிலப்பதிகார அம்மானை வரிப்பாடல்களிற் சொல்லப்படும் கருத்துக்கள் மூவர் கூற்றாகவும் கொள்ளுதற்கு ஏற்புடையனவாய்க் காணப்படுத லானும், அடிகள் அருளிச்செய்யும் அம்மானைப் பாட்டு, பலர் நின்று தம்தம் முறை வரும் காலத்து ஒரோவொருகருத்தமைந்த பாடலைப் பாடி ஆடும் முறையிலே அமைந்திருத்தலானும், அம் மானை ஆடும் மகளிரை, 'மூவர்' என்றே வரையறாது, 'ஏற்ற பெற்றியால் எத்துணையோருமாவர்' எனக் கொள்ளுதலே தக்க தாம். இனி, அம்மானைப் பாட்டுக்களின் அளவும் வேறுபட்டுத் தோன்றலால், அவற்றின் அளவிற்கேற்பக் காய்களின் தொகை யும் வேறுபடும் போலும்! 'அம்மானை' என்பது, 'அம்மனை' எனவும்வழங்கும். இவற்றுள், ஐயவினாவும் அதற்குரியவிடையும் கொண்டு வரும் அம்மானைப் பாட்டுக்கள் எல்லாம் பிற்காலத் தனவாகவே காணப்படுகின்றன. இங்ஙனம் வரும் விளையாட்டுப் பாடல்களை, 'வரிப்பாட்டு' எனவும், வரிப்பாட்டுக்களைப் பாடி ஆடும் விளையாட்டுக்களையும் கூத்தின்பாற்படுத்து, 'வரிக்கூத்து' எனவும் பண்டையோர் வழங்கினர் என்பது, சிலப்பதிகாரத்தா லும், அதன் உரையாலும் அறியக்கிடக்கின்றது.

இனி, அரசரும், வள்ளல்களும் போன்ற மக்களைத் தலைவ ராகக் கொண்டு பாடாண் பாட்டு வகையில் நிகழ்ந்த இவ் வரிப்பாடல்கள் பலவும் இறைவற்கே ஆகுமாறு அருளிச்செய்த அடிகள், இவற்றின் பொருளையும் உலகியலாகிய இன்பம் முத லியவை பற்றிவரச் செய்யாது, மெய்ந்நெறியாகிய இறைவனது

திருவருள் பற்றியேவர அருளிச்செய்தார். அதனால், இவற்றைப் பாடி ஆடும் மகளிரை, இறைவன் திருவருள் பெற்றுப் பேரின்பத்தினைத் தலைப்பட்ட மகளிர் எனவே கொள்க. இதனானே, இவ்வரிப்பாட்டு முறைகளை அடிகள் ஒருபுடை தழுவிக்கொண்டதன்றி, முழுவதூஉம் அவ்வாறே கொண்டிலர் என்பதும் போந்தது. இவற்றிடையே சிறுபான்மை இன்பம் பற்றிவருவனபோலவும் செய்ப, அது வரிப்பாட்டிற்கு இயல்பாதல்பற்றி.]

வெண்டளையான்வந்த ஆறடித்தரவுக் கொச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

175 செங்கண் நெடுமாலுஞ் சென்றிடந்துங் காண்பரிய
பொங்கு மலர்ப்பாதம் பூதலத்தே போந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமும் ஆட்கொண்டு
தெங்கு திரள்சோலைத் தென்னன் பெருந்துறையான்
அங்கணன் அந்தணனாய் அறைகூவி வீடருளும்
அங்கருணை வார்கழலே பாடுதுங்காண் அம்மானாய். (1)

---

175. இப் பகுதியில், அடிகள் தமக்கு இறைவன் செய்த திருவருளின் பெருமையையே பாடிப் பரவசம் எய்துகின்றாராகலின், இதற்கு, 'ஆனந்தக் களிப்பு' எனக் குறிப்புரைத்தனர் முன்னோர். ஆனந்தக் களிப்பு - இன்பத்தால் எழுந்த பெருமகிழ்ச்சி. இன்பம், இங்குப் பேரின்பம்.

பொருள்கோள்: 'பெருந்துறையான், அங்கணன் அந்தணனாய், பாதம் பூதலத்தே போந்தருளி, அறைகூவி ஆட்கொண்டு, பிறப்பறுத்திட்டு வீடருளும் கருணை வார்கழலே அம்மானாய்ப் பாடுதும்'. "போந்தருளி" என்றதை, 'போந்தருள' எனத் திரிக்க.

"சென்று இடந்தும்" என்றதனை 'இடந்து சென்றும்' என மாறுக. இடத்தல் - நிலத்தைக் கிண்டுதல். 'பொங்கு பாதம்' என இயையும். பொங்கு - ஒளிமிகுகின்ற. தரம் - நிலை. "ஆட்கொண்டு" என்றது, இங்கு, 'ஏற்றுக்கொண்டு' என்னும் பொருளதாய்நின்றது. தெங்கு - தென்னைமரம்.

176 பாரார் விசும்புள்ளார் பாதாளத் தார்புறத்தார்
ஆராலும் காண்டற் கரியான் ; எமக்கெளிய
பேராளன் ; தென்னன் ; பெருந்துறையான் ; பிச்சேற்றி ;
வாரா வழியருளி வந்தென் உளம்புகுந்த
ஆரா அமுதாய் அலைகடல்வாய் மீன்விசிறும்
பேராசை வாரியனைப் பாடுதுங்காண் அம்மானாய்.　(2)

177 இந்திரனும் மாலயனும் ஏனோரும் வானோரும்
அந்தரமே நிற்கச் சிவன்அவனி வந்தருளி
எந்தரமும் ஆட்கொண்டு தோட்கொண்ட நீற்றனாய்ச்
சிந்தனையை வந்துருக்குஞ் சீரார் பெருந்துறையான்
பந்தம் பறியப் பரிமேற்கொண் டான்தந்த
அந்தமிலா ஆனந்தம் பாடுதுங்காண் அம்மானாய்.　(3)

'தென்னன்' என்பது, இங்கு, 'தென் நன்' எனப் பிரித்து, 'அழகிய நல்ல' எனப் பொருளுரைத்தலன்றிப் பிறவாறு உரைத்தற்கு ஏலாமை அறிக. அறை கூவி - வலிய அழைத்து. 'தாம் வேண்டாதமுன்பே வந்து அருள்செய்தான்' என்றபடி. காண், முன்னிலையசை. 'அம்மானையாய்' என்பது, "அம்மானாய்" எனத் தொகுத்தலாயிற்று. அம்மானை - அம்மானைப் பாட்டு. "ஆய்" என்றதனை, 'ஆக' எனத் திரித்துக்கொள்க. "அம்மானையாகப் பாடுதும்" என இயையும். "அம்மானாய்" என்றது, 'அம்மானை' என்றது விளியேற்றுவந்தது எனக் கொண்டு, 'விளித்தது முன்னின்றார்களை' எனவும், அம்மானைக் காயை எனவும் பலவாறு உரைப்பர்.

176. 'பார், விசும்பு, பாதாளம்' என்றது இவ்வண்டத்தைக் குறித்தும், 'புறம்' என்றது, பிற அண்டங்களைக் குறித்துமாம். பேராளன் - புகழுடையவன். 'பெருமை யுடையவன்' என்பாரும் உளர். பித்து, 'பிச்சு' என வந்தது. 'ஏற்றி' என்றது, 'ஏற்றியவன்' எனப் பெயர் ; வினையெச்சமாகக்கொண்டு உரைத்தலும் ஆம். வாரா வழி - வீட்டு நெறி. "மீன்" என்றதில் நான்கனுருபு தொகுத்தல். விசுறுதற்கு, 'வலை' என்னும் செயப்படுபொருள் எஞ்சிநின்றது. 'ஆசை' என்பது, இங்கு, கருணையின்மேல் நின்றது. வாரியன் - கடலாய் உள்ளவன்.

177. 'அந்தரத்தே' எனற்பாலதாகிய சாரியை சிறுபான்மை வாராதொழிதலும், "புலம் புக்கனனே" (புறம் - 258.)

178 வான்வந்த தேவர்களும் மாலயனே டிந்திர னுங்
கானின்று வற்றியும் புற்றெழுந்துங் காண்பரிய
தான்வந்து நாயேனைத் தாய்போல் தலையளித்திட்
டூன்வந் துரோமங்கள் உள்ளே உயிர்ப்பெய்து
தேன்வந் தமுதின் தெளிவி னொளிவந்த
வான்வந்த வார்கழலே பாடுதுங்காண் அம்மானாய். (4)

என்றதனோடு ஒப்பக்கொள்ளப்படும். அந்தரம் - வானுலகம்; 'நிலையின்றி வருந்த' என்பது நயம். 'தோட்கொண்ட நீறு உள்ளத்தைக் கவர்தலுடையது' என்பது, மேலே உரைக்கப் பட்டது. (திருச்சதகம் - 33.) 'நீற்றனாய் வந்து சிந்தனையை உருக்கும்' என்க. பந்தம் பறிய - பாசம் நீங்குதலால். 'பறியத் தந்த' என இயையும். "பரிமேற்கொண்டான் தந்த ஆனந்தம்" என்றது, அடிகள் பொருட்டே. இறைவன் குதிரைகொணர்ந் தனன் என்பதை இனிது விளக்கும். இதுபற்றியே, "பாய் பரியோன் தந்த பரமானந் தப்பயன்" என்றது திருக்களிற்றுப் படியார் (73.)

178. வான் வந்த தேவர் - விண்ணுலகில் தோன்றிய தேவர். கான் - காடு. 'தேவர்களும் நிலவுலகத்திற்போந்து தவம் புரிகின்றனர்' என்றபடி. இந்திரன் சீகாழிப்பதியில் தங்கித் தவம் புரிந்தமையைக் கந்த புராணம் விரித்துரைத்தல் காண்க. "தான்" என்றது "பரிமேற்கொண்டான் என மேற் கூறப்பட்ட அவன்" என்றபடி. 'ஊன் உரோமங்கள் வந்து' என மாறுக. வருதல், இங்கு, மேலெழுதல்; சிலிர்த்தல். இதனை, 'வர' எனத் திரிக்க. உயிர்ப்பு - உயிர்த்தல்; மூச் செறிதல்; அன்பினால் இதுவும் உளதாகும். எய்து - எய்து தற்குக் காரணமான; இது, "கழல்" என்றதனோடு இயையும். 'அமுதின் தெளிவின் தேன்வந்து ஒளிவந்த கழல்' என்க. தேன் வந்து - இனிமை மிகுந்து. வான் வந்த கழல் - பெருமை பொருந்திய திருவடி. வார்கழல், அடையடுத்த ஆகுபெயர்.

179 கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றிக்
கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன்கருணை
வெள்ளத் தழுத்தி வினைகடிந்த வேதியனைத்
தில்லை நகர்புக்குச் சிற்றம் பலம்மன்னும்
ஒல்லை விடையானைப் பாடுதுங்காண் அம்மானாய். (5)

---

179. கல்லாம் மனம் - கல்போன்ற மனம். பிச்சேற்றி - பேரன்பு கொள்ளச் செய்து. "ஏற்றி" என்றது, 'ஏற்றியதனால்' என்றவாறு. "கல்லைப் பிசைந்து கனியாக்கி" என்றது, 'அன்னதொரு செயலைச் செய்து' என்றபடி; "கல்நார் உரித்த கனியே" என முன்னரும் அருளினார் (போற்றி - 97.). இங்ஙனம்செய்தமைபற்றி, "வல்லாளன்" என்றார். "கருணை" என்றது, கருணையால் விளைகின்ற இன்பத்தை. "பிச்சேற்றி கருணை வெள்ளத்தழுத்தி" என்றதனால், 'அன்பே இன்பத்திற்குக் காரணம்' என்பது போந்தது. என்றும் இருத்தலை, 'புக்கு மன்னும்' என்றது, பான்மை வழக்கு. ஒல்லை விடை - விரையச் செல்லும் இடபம்.

இவ்வைந்து திருப்பாட்டுக்களும், பிரிவிடை ஆற்றாளாகிய தலைவியை ஆற்றுவித்தற்பொருட்டுத் தோழி தலைவனை இயற்பழித்தவழி, தலைவி இயற்படமொழிந்தவாறாக அருளிச்செய்யப்பட்டன. பாடாண் பாட்டில் கைக்கிளைவகையேயன்றி ஐந்திணை வகை வருதலும் உண்டென்க. கடவுள் நெறியாகிய மெய்ந் நெறிப் பொருள் காமப் பொருளாய் வருமிடத்து, இறைவன் தலைவனும், உயிர் தலைவியும், நெஞ்சு தோழியும், பிற தத்துவங்களின் கூட்டம் ஆயத்தார் முதலிய பிறரது கூட்டமுமாய் அமையும். பிறவும் இங்ஙனம் ஏற்ற பெற்றியால் அறிந்து கொள்ளப்படும். இவ்விடத்து, இயற்பழித்தல் உலகியலின் வழிநின்று கூறுதலும், இயற்படமொழிதல் அனுபவம் பற்றிக் கூறுதலுமாம்,

180 கேட்டாயோ தோழி கிறிசெய்த வாறொருவன்
தீட்டார் மதில்புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
காட்டா தனவெல்லாங் காட்டிச் சிவங்காட்டித்
தாட்டா மரைகாட்டித் தன்கருணைத் தேன்காட்டி
நாட்டார் நகைசெய்ய நாம்மேலை வீடெய்த
ஆட்டான்கொண் டாண்டவா பாடுதுங்காண் அம்மானாய். 6

---

180. 'தோழி, ஒருவன் என்னைக் கிறி செய்தவாறு கேட்டாயோ? கேட்டிலையேல் கேள்' எனத் தோற்றுவாய் செய்துரைக்க. பிரிவிடை ஆற்றாளாய்க் கூறுதலின், ''கிறி'' என்றாள். கிறி - வஞ்சனை. இஃது இயற்பழித்தது. 'ஒருவனுவான் இவன்' என்பதை, ''பெருந்துறையான்'' என்று விளக்கினாள். ''காட்டாதனவெல்லாம் காட்டி'' என்பது, முன்னும் கூறப்பட்டது (திருச்சதகம் - 28.). ''சிவம் காட்டி'; எனப் பின்னர் வருகின்றமையின், ''எல்லாம்'' என்றது அஃதொழிந்த பிறவற்றை என்க. சிவம் - மெய்ப்பொருள், உணர்த்திய முறைமை கூறுகின்றாராதலின், மெய்ப்பொருளை வேறுபோலக் கூறினார். ''தாள் தாமரை காட்டி'' என்றது' 'கொம்பரில்லாக் கொடிபோலப் பற்றுக்கோடின்றித் தமியளாய் அலமந்த எனக்கு அவற்றைப் பற்றுக்கோடாகத் தந்து' என்றபடி. ''கருணைத் தேன்'' என்றது, அதனால்விளைகின்ற இன்பத்தை. நாட்டார் - உலகவர். அவர் நகைப்பது, அகலிடத்தார் ஆசாரத்தை அகன்றமை (திருமுறை - 6. 25. 7.) பற்றியாம். மேலை வீடு - முடிந்த நிலையாகிய வீடுபேறு; இதனை, 'பரமுத்தி' என்ப. 'நமக்குளதாகும் இப்பெறற்கரும் பேற்றினை அறியாமையால் நாட்டார் நகைக்கின்றாராதலின், அதனான் நமக்கு வருவதோர் தாழ்வில்லை' என்றபடி. ''ஆட்டான்'' என்றதில் தான், அசைநிலை. 'ஆண்டான்; அவ்வாற்றைப் பாடுதும்' என்க. ஆண்டவாறே தன்னை அவன் உடன்கொண்டு போகாது நீத்தமையின், இத்துணைத் தலையளியையும், ''கிறி'' என்றாள். எனவே, இத் திருப்பாட்டு, 'தலைவர் நம்மை மறந்தொழிவாரல்லர்' எனத் தோழி வற்புறுத்தியவழி, தலைவி வன்புறை எதிரழிந்து அவனை இயற்பழித்ததாம். தோழி தூது செல்வாளாவது இதன் பயன்.

181 ஓயாதே உள்குவார் உள்ளிருக்கும் உள்ளானைச்
சேயானைச் சேவகனைத் தென்னன் பெருந்துறையின்
மேயானை வேதியனை மாதிருக்கும் பாதியனை
நாயான நந்தம்மை ஆட்கொண்ட நாயகனைத்
தாயான தத்துவனைத் தானே உலகேழும்
ஆயானை ஆள்வானைப் பாடுதுங்காண் அம்மானாய். (7)

182 பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண்ட லத்தீசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண் டக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய். (8)

---

181. ஓயாது - மெலியாது; 'சலிப்பின்றி' என்றபடி. எனவே, ஒருகாலைக்கொருகால் இன்பம் மீதூரப்பெறுதல் பெறப்பட்டது. உள்ளான் - உள்ளீடாய் இருப்பவன். "உள்ளத்தின் உள்ளேநின்ற கருவே" என அருளிச்செய்தார் (திருமுறை - 6. 47. 1.) திருநாவுக்கரசரும். 'பிறர்க்குச் சேயான்' என்க. பாதி - பாதியுடம்பு. தாய் - எல்லாப் பொருட்கும் பிறப்பிடம். தத்துவன் - மெய்ப்பொருளாய் உள்ளவன். ஆள்வான் - யாவரையும் அடியராகக்கொள்பவன்.

182. 'பாடற்குப் படைத்தருளும்' என்க. பரிசு - பரிசில்; என்றது, 'இம்மை, மறுமை, வீடு' என்னும் மூன்றனையுமாம். 'இசைப்பாடலால் பாடுவோர்க்குப் பேரருள் செய்வன் இறைவன்' என்பதனை இவ்வாறு அருளினார்.

" கோழைமிட றுககவி கோளுமில வாகஇசை
கூடும்வகையால்
ஏழையடி யாரவர்கள் யாவைசொன சொன்மகிழும்
ஈசன் "

என ஆளுடைய பிள்ளையாரும் (திருமுறை - 3. 71. 1.),

" அளப்பில கீதம் சொன்னார்க்
கடிகள்தாம் அருளுமாறே "

எனத் திருநாவுக்கரசரும் அருளிச்செய்தல் காண்க (திருமுறை- 4. 77. 3)

183 துண்டப் பிறையான் மறையான் பெருந்துறையான்
கொண்ட புரிநூலான் கோலமா ஊர்தியான்
கண்டங் கரியான்செம் மேனியான் வெண்ணீற்றன்
அண்டமுத லாயினன் அந்தமிலா ஆனந்தம்
பண்டைப் பரிசே பழவடியார்க் கீந்தருளும்
அண்டம் வியப்புறுமா பாடுதுங்காண் அம்மானாய், (9)

இனி, 'அடிகள் இவ்வாறு அருளிச்செய்தது, மூவர் தேவாரத்திற்கும், பாணபத்திரர், திருநீலகண்ட யாழ்ப்பாணர் என்னும் இவர்களது இசைக்கும் இறைவன் மகிழ்ந்து அருள் புரிந்தமை பற்றி' என்று உரைப்பாரும் உளர்; அவையெல்லாம், அடிகள், அவர்தம் காலத்திற்குப் பிற்பட்டவரென்பது துணியப்பட்ட வழியே பொருந்துவனவாம்.

விண்சுமந்த கீர்த்தி - விண்ணைச் சுமந்த புகழ்; என்றது, 'வானளாவிய புகழ்' என்றபடி. 'கீர்த்தியை யுடைய மண்டலம்' என்க. 'தலம்' என்பது வடசொல்லாதலின், 'மண்' என்பதன் ஈறு இயல்பாயிற்று. எல்லாவுலகுக்கும் தலைவனாகிய இறைவனை, நிலவுலகத்திற்கே தலைவன்போலக் கூறியது, இங்குள்ளாரையே தான் வலியவந்து ஆட்கொள்ளுதல் பற்றி. கலி - ஆரவாரம்.

183. கோல மா - அழகிய குதிரை. அண்ட முதல் - உலகிற்கு முதல். பழவடியார் - முன்னரே ஆட்கொள்ளப்பெற்ற அடியவர். அவர், தன்னால் ஆட்கொள்ளப்பட்டபின்னரும் பிராரத்தம் காரணமாக உலகியலைத் தழுவி நிற்பாராயின் அப்பிராரத்தவினை ஒழிவில் அவர் மீளப் பிறவியிற் செல்லாதவாறு தடுத்துத் தனது வரம்பிலின்பத்தை அவர்க்கு அளித்தருளுதலையே இதன்கண் அருளிச்செய்தார் என்க. இறைவன் தான் தன் அடியவரை ஆட்கொள்ளும் பொழுது, 'அவர்க்கு அந்தமிலா ஆனந்தத்தை அளித்தருளுதும்' என்றே ஆட்கொண்டருளுவன் ஆதலின், அதனை, 'பண்டைப் பரிசு' என்று அருளினார். இறைவனால் ஆட்கொள்ளப்பெற்றவர்கள் பிராரத்தம் கழிந்தபின் இங்ஙனம் அந்தமிலா ஆனந்தம் பெற்று உய்தலையே.

" காயமொழிந் தாற்சுத்த னாகி ஆன்மா
....
மாயமெலாம் நீங்கிஅரன் மலரடிக்கீழ் இருப்பன்,
மாறாத சிவானுபவம் மருவிக் கொண்டே"

என்று விளக்கியது சிவஞான சித்தி (சூ. 11. 1.). இதனானே, அவர் தம் பிராரத்தவினையை நுகருங் காலத்து ஒருதலையாக விளைதற்பாலதாய ஆகாமிய வினையையும் அது முறுகிச் சஞ்சித மாகாவாறு இறைவன் அழித்தொழிப்பான் என்பதும் பெறப் பட்டது. இதனையே,

" தொல்லையின் வருதல் போலத்
தோன்றிரு வினைய துண்டேல்
அல்லொளி புரையு ஞானத்
தழலுற வழிந்து போமே"

எனச் சிவப்பிரகாசமும் (89),

" ஏன்ற வினைஉடலோ டேகும்;இடை ஏறும்வினை
தோன்றில் அருளே சுடும்"

எனத் திருவருட்பயனும் (98) கூறின.

இனி, இறை இன்பமே உயிர்க்கு இயற்கையும், அதனைத் தடுத்து நின்றது அனாதி செயற்கையாகிய ஆணவமுமாகலின், அவ்வாணவம் நீங்கியபின் அடையும் இன்பத்தை, 'பண்டைப் பரிசு' என்று அருளினார் என்றலுமாம். இப்பொருட்கு 'பழ வடியாராவார், இறைவன் தந்தருளிய திருவருளை மறவாது சிந்தித்தும், தெளிந்தும் நிட்டை கூடியவர்' என்று பொருள் உரைக்கப்படும். "பரிசே" என்ற ஏகாரம், தேற்றம். "ஈந் தருளும், வியப்புறும்" என வந்த பெயரெச்சங்கள் அடுக்கி, "ஆறு" என்ற ஒருபெயர் கொண்டன. அண்டம் - புவனம்; இஃது ஆகுபெயராய், அவற்றின் உள்ளாரைக் குறித்தது. வியப்புறுதல், அவர்செய்த பாதகமும் பணியாயது நோக்கியாம். இங்ஙனம் இவையெல்லாம் பிறரிடத்து நிகழ்வனபோல அருளிச் செய்தாராயினும், தம்மியல்பு கூறுதலே அடிகட்குக் கருத் தென்க.

184 விண்ணாளுந் தேவர்க்கு மேலாய வேதியனை
மண்ணாளும் மன்னவர்க்கு மாண்பாகி நின்றானைத்
தண்ணார் தமிழளிக்குந் தண்பாண்டி நாட்டானைப்
பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந்துறையிற்
கண்ணார் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணா மலையானைப் பாடுதுங்காண் அம்மானாய். (10)

---

184. 'மன்னவர்க்கு, அவர்க்கு உண்டாகின்ற மாண்பாகி நின்றானை' என்க. மாண்பு - பெருமை; என்றது நீதியால் விளையும் பயனை. அது,

'' இறைகாக்கும் வையக மெல்லாம்; அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின் ''

(குறள் - 547.) என்றபடி, செங்கோல்முறை முட்டவந் துழியும் அதற்கு இளையாது, அதனை முட்டாமற் செலுத்திய வழி, அதனான் அப்பொழுது எய்தும் தீங்கினையும் எய்தாது நீக்குதல். இது மகனை முறைசெய்த சோழன், அதனால் இழந்த மைந்தன் உயிர்த்தெழப் பெற்றமையும், தன் கையைக் குறைத் துக்கொண்ட பாண்டியன், பின்னும் முன்போலக் கைவளரப் பெற்றமையும் போல்வனவற்றால் அறியப்பட்டது.

'' நாவில் நடுவுரையாய் நின்றாய் நீயே ''

'' ....நிலவேந்தர் பரிசாக நினைவுற் றோங்கும்
பேரவன்காண் ''

'' மன்னானாய் மன்னவர்க்கோ ரமுத மானாய் ''

எனத் திருநாவுக்கரசரும் அருளிச்செய்தல் காண்க (திருமுறை-6 - 38. 8., 87. 6., 95. 7.).

தமிழ்ச் சங்கத்தில் தானும் ஒரு புலவனாய் இருந்து தமிழை ஆராய்ந்தமைபற்றி, '' தமிழளிக்கும் '' என்றார்.

'' சிறைவான் புனல்தில்லைச் சிற்றம் பலத்தும்என்
சிந்தையுள்ளும்
உறைவான் உயர்மதிற் கூடலின் ஆய்ந்தஒண்
தீந்தமிழ் ''

185 செப்பார் முலைபங்கன் தென்னன் பெருந்துறையான்
தப்பாமே தாளடைந்தார் நெஞ்சுருக்குந் தன்மையினன்
அப்பாண்டி நாட்டைச் சிவலோகம் ஆக்குவித்த
அப்பார் சடையப்பன் ஆனந்த வார்கழலே
ஒப்பாக ஒப்புவித்த உள்ளத்தா ருள்ளிருக்கும்
அப்பாலைக் கப்பாலைப் பாடுதுங்காண் அம்மானாய். (11)

எனத் திருக்கோவையுள்ளும் அருளிச்செய்வார் (20.) ''அளிக்கும்'' என்றது, ''நாட்டான்'' என்றதன் இறுதிநிலை யோடு முடியும். 'பேணு'' என்றது, 'அடியவர்கள் விரும்பிப் போற்றுகின்ற' என வந்த அடையே; 'பேணு பெருந்துறை' என்னுந் தலம் இதனின் வேறு. 'பெருந்துறையில் நாயேனை ஆட்கொண்ட' என்றதற்கு, பெண்கள் கூற்றில் இப்பெண் அங்ஙனம் ஆட்கொள்ளப்பட்டவளாகப் பொருள்கொள்ளப் படும். பின்னர் இவ்வாறு வருவனவற்றிற்கும் இது பொருந்தும். இப்பெண்டிர்க்கெல்லாம் இயற்பெயர் கூறாமையின், இதுவும் பொருந்துவதேயாம்.

185. செப்பு - கிண்ணம். ஆர், உவம உருபு. 'தப்பாமே உருக்கும்' என இயையும். தப்பாமே - நீங்கிப்போகாதபடி; 'தன்னை அடைந்தவரது நெஞ்சம் பிறிதொன்றை நினையாத வாறு இன்புறச் செய்பவன்' என்றதாம். 'சங்கமிருந்தது முதலியவற்றால் பலராலும் நன்கறியப்பட்டது' என்பார், 'அப் பாண்டிநாடு' என்றார். அதனைச் சிவலோகம் ஆக்குவித்தது, வலை வீசுதல், குதிரை கொணர்தல், மண் சுமத்தல் முதலிய திருவிளையாடலின் பொருட்டுத் தான் பலகாலும், பலவிடத்தும் எழுந்தருளி வந்தமையாலாம். இனி, 'வரகுணன்' என்னும் பாண்டியனுக்கு மதுரையையே சிவலோகமாகக் காட்டிய திருவிளையாடல் ஒன்றும் பரஞ்சோதியார் திருவிளையாடலிற் காணப்படுகின்றது. அப்பு - நீர். ''ஒப்பு'' என்றது விலையை. 'தம் நெஞ்சை விற்றற்கு விலையாகப் பெறும் பொருள் கழலே யாகும்படி' என்றவாறு. ஒப்புவித்தல் - விற்றுவிடுதல். ''ஒப்பு'' என்றதனை, 'ஒற்றிக்கலம்' எனக்கொண்டு 'கழற்கே' என உருபு விரித்துரைப்பாரும் உளர்; 'கழற்கே' என்னும் யாப்புக் கெடாதாக, அவ்வாறோதாமையானும் அடியவர், தம் நெஞ்சினை இறைவனுக்கு மீளா அடிமை ஆக்குதல் அன்றி

186 மைப்பொலியுங் கண்ணிகேள் மாலயனோ டிந்திரனும்
எப்பிறவி யுந்தேட என்னையுந்தன் இன்னருளால்
இப்பிறவி ஆட்கொண் டினிப்பிறவா மேகாத்து
மெய்ப்பொருட்கண் தோற்றமாய் மெய்யே நிலைபேருய்
எப்பொருட்குந் தானேயாய் யாவைக்கும் வீடாகும்
அப்பொருளாம் நம்சிவனைப் பாடுதுங்காண் அம்மானாய். (12)

ஒற்றியாக வைத்தல் இலராகலானும், 'ஒப்புவித்தல்' என்னும் சொல், 'ஒற்றியாக வைத்தல்' எனப் பொருள்படாதாகலானும் அது பொருந்துவதன்றாம்.

"விற்றுக்கொள்வீர் ஒற்றி யல்லேன்
விரும்பி யாட்பட்டேன்"

என ஆளுடைய நம்பிகள் அருளிச்செய்ததனைக் காண்க (திருமுறை - 7. 95. 2.) அப்பால் - மாயைக்கு அப்பால் உள்ளது; என்றது உயிரை. உலகத்தையும், உயிரறிவையும் கடந்து நிற்பவன் இறைவன் ஆதலின், "அப்பாலுக் கப்பால்" என்று அருளிச்செய்தார்.

186. "எப்பிறவியும் தேட" என்றது, பெரிதும் அருமை குறித்தவாறு. 'இப்பிறவிக்கண்' என உருபு விரிக்க. "காத்து" என்ற வினையெச்சம், "ஆகும்" என்பதனோடு முடியும். இவ்வெச்சம் எண்ணின்கண் வந்தமையின், 'காத்தவனும், வீடாகும் அப்பொருளுமாம் நம்சிவன்' என்பதே பொருளாம்.

மெய்ப்பொருளை அறிதற்கருவியாகிய மெய்யறிவை ஆகுபெயரால், "மெய்ப் பொருள்" என்றார்; "பொன்னும் மெய்ப்பொருளும் தருவானை" என்றதும் காண்க (திருமுறை - 7. 59. 1.). "தோற்றம்" என்றதும், அவ்வாற்றால், தோன்றுதலுடைய பொருள்மேல் நின்றது. மெய் - மெய்ம்மை; ஒருவாற்றானும் திரிபின்றி, என்றும் ஒரு படித்தாயிருத்தல். வடமொழியுள், 'சத்து' எனப்படுவதும் இதுவே. "நிலைபேறு" என்றது, அதனையுடைய தன்மையைக் குறித்து. ஒருபொருட்குத் தன்னியல்பு என்றும் நீங்காது நிற்குமாதலின், அதனை, "நிலைபேறு" என்றார். எனவே, 'சத்தாதற்

றன்மையைத் தனக்கு இயல்பாக உடையதாய்' என்பது பொருளாயிற்று. 'தன்னியல்பு, சுபாவம், இயற்கை' என்பன ஒருபொருட் சொற்கள். இதனை, 'சொரூப லக்கணம்' என வும், 'உண்மை இயல்பு' எனவும் கூறுவர். "எப்பொருட்கும்" என்றதன்பின், 'முதல்' என்பது எஞ்சிநின்றது. முதலாவது, நிலைக்களம்; இதனை, 'தாரகம்' என்ப. 'யாவற்றுக்கும்' என்னும் சாரியை தொகுத்தல். "வீடாகும்" என்பதனால், 'யாவை' என்பது, அறிவுடைப் பொருளாகிய உயிர்களையே குறித்தது, வீடுபெறுதற்குரியன அவையேயாகலின். வீடாவது, பந்தத்தினின்றும் நீங்குதல். கயிறற்றமையால் அதனினின்றும் நீங்கிய ஊசற்குப் புகலிடம் நிலமன்றி வேறில்லாமைபோல, பந்தம் மெலியப் பெற்றமையால் அதனினின்றும் நீங்கிய உயிருக்குப் புகலிடம் இறைவனன்றி வேறில்லையாதலின், அவனை, "யாவைக்கும் வீடாகும் அப்பொருள்" என்றார். விடுதலின்பின் எய்தற்பாலதாய பொருளை, 'வீடு' என்றல், காரியவாகுபெயராம். பந்தத்தினின்றும் நீங்கிய உயிர்க்குப் புகலிடம் இறைவன் திருவடியன்றி வேறில்லை என்பதை, மெய்கண்டதேவ நாயனார்,

"விட்டு - அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே"

எனவும் (சூ. 8.),

"இனி, இவ்வான்மாத் தன்னை இந்திரியத்தின் வேறுவான் காணவே தமதுமுதல் சிபாதத்தை அணையும் என்றது,

ஊசல் கயிறற்றால் தாய் தரையேயாந் துணையான்"

எனவும் (ஷி. அதி. 4.) விளக்கினார். "தோற்றமாய்" என வும், "தானேயாய்" எனவும் வந்த செய்தெனெச்சங்கள் காரணப் பொருளவாய் நின்று, பின்னர் வந்த, "நிலைபேறாய்", "வீடாகும்" என்றவற்றோடு முறையே முடிந்தன. இவற்றால், பொய்யறிவின்கண் தோன்றாது, மெய்யறிவின்கண் தோன்று தலால், மெய்ம்மையையே தனக்கியல்பாகவுடையதாயும், எப் பொருட்கும் முதல் தானேயாதலால், யாவைக்கும் வீடாயும் நிற்கும் என்றவாறறிக.

187 கையார் வளைசிலம்பக் காதார் குழையாட
மையார் குழல்புரளத் தேன்பாய வண்டொலிப்பச்
செய்யானை வெண்ணீ றணிந்தானைச் சேர்ந்தறியாக்
கையானை எங்குஞ் செறிந்தானை அன்பர்க்கு
மெய்யானை அல்லாதார்க் கல்லாத வேதியனை
ஐயா றமர்ந்தானைப் பாடுதுங்காண் அம்மானாய். (13)

'பொய்ப்பொருளால் விளங்கிப் பொய்ப்பொருளையே அறிவது பொய்யறிவு' எனவும், 'மெய்ப்பொருளால் விளங்கி மெய்ப்பொருளையே அறிவது மெய்யறிவு' எனவும் உணர்க. இவற்றை முறையே 'பாசஞானம்' எனவும், 'பதிஞானம்' எனவும் சைவசித்தாந்த நூல்கள் கூறும். இவ்விரண்டுமின்றிப் பசுஞானமாகிய உயிரறிவு தனித்து நில்லாதாகலின், அதனைத் தனித்து நிற்பதாக அறியும் பசுஞானமும் பொய்யறிவேயாத லறிக. 'பொய், மெய்' என்பன, நிலைபெறுதலும், நிலைபெறா மையுமாகிய இயல்புகளைக் குறிப்பனவன்றி, இன்மை உண்மை மாத்திரையே குறித்தொழிவனவல்ல.

மெய்ப்பொருட்கண் தோற்றமாதல் முதலியனவே பரம் பொருளின் இயல்பென்பது மறைகளின் முடிபு என்பார், 'இத்தன்மைகளையுடைய அப்பொருள்' என முன்னர் பொதுப் படச் சுட்டி, பின்னர், 'சிவபெருமானையன்றிப் பரம்பொரு ளாவார் பிறரில்லை' என்னும் உண்மையை விளக்குவார், சிறப் பாக, ''நம் சிவனே'' என்று அருளிச்செய்தார்.

187. மை ஆர் - மேகம்போலும். தேன், கூந்தலில் முடித்த பூவில் உள்ளது. 'சிலம்ப, ஆட, ஒலிப்ப' என்பவற்றை, 'ஆடி' என, ஒருசொல் வருவித்து முடிக்க. சேர்ந்தறியாக் கை - ஒரு பொருளிலும் தோய்ந்தறியாத ஒழுக்கம்; இது, பின், 'எங்கும் செறிந்தானை' என்பதனோடு முரணிநின்று, 'எப் பொருளிலும் நிறைந்திருப்பினும், ஒன்றிலும் தோய்வின்றி நிற்றலை உணர்த்திற்று.' ''செய்யானை'' என்றது முதலிய மூன்றடிகளிலும், முரண்தொடை அமையவே அடிகள் அருளிச் செய்திருத்தல் அறிக. இங்ஙனமாகவும், ''சேர்ந்தறியாக் கையானை'' என்றதற்கு, 'ஒருவரைத் தொழுதறியாத கைகளை யுடையவன்' எனப் பொருளுரைப்பாரும் உளர்; இறைவனுக்கு

188 ஆனையாய்க் கீடமாய் மானுடராய்த் தேவராய்
ஏனைப் பிறவாய்ப் பிறந்திறந் தெய்த்தேனை
ஊனையும் நின்றுருக்கி என்வினையை ஓட்டுகந்து
தேனையும் பாலையுங் கன்னலையும் ஒத்தினிய
கோனவன்போல் வந்தென்னைத் தன்தொழும்பிற் கொண்டருளும்
வானவன் பூங்கழலே பாடுதுங்காண் அம்மானாய்.

189 சந்திரனைத் தேய்த்தருளித் தக்கன்றன் வேள்வியினில்
இந்திரனைத் தோள்நெரித்திட் டெச்சன் தலையரிந்
தந்தரமே செல்லும் அலர்கதிரோன் பல்தகர்த்துச்
சிந்தித் திசைதிசையே தேவர்களை ஓட்டுகந்த
செந்தார்ப் பொழில்புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
மந்தார மாலையே பாடுதுங்காண் அம்மானாய். (15)

அப்பொருள் சிறப்புத் தாராமை யறிக. மெய்யான் - அனுபவப் பொருளாய் உள்ளவன்.

188. கீடம் - புழு. ஓட்டு - ஓட்டுதல். முதனிலைத் தொழிற்பெயர். 'ஓட்டுதலை உகந்து' என்க. உகந்து - விரும்பி. கன்னல் - கரும்பு; என்றது, அதன் சாற்றை. இனிய கோன், ஞானாசிரியன். அவன், பகுதிப்பொருள் விகுதி. இறைவன் கொண்ட வேடமாகலின், 'கோனவன்போல்' என்று அருளினார். எனவே, 'ஆசிரியனைப்போல வேடங்கொண்டு வந்து' என்றவாறாயிற்று. இது, பெண்கள் கூற்றில், 'இனிய தலைவன் தானேயாதல் தோன்ற' எனப் பொருள் தரும்.

189. "தக்கன்றன் வேள்வியினில்" என்றதை முதலிற் கொள்க. தக்கன் செய்த வேள்வியில் வீரபத்திரரைக்கொண்டு சிவபெருமான் தேவர் பலரையும் பலவாறு ஒறுத்தமை நன்கறியப்பட்ட வரலாறு. எச்சன் - வேள்வித் தெய்வம். 'அந்தரத்தே' என்னும் சாரியை தொகுத்தலாயிற்று. அந்தரம் - ஆகாயம். அலர் கதிரோன் - விரிகின்ற பல கதிர்களையுடையவன். 'தேவர்களைத் திசைதிசையே சிந்தி ஓட்டுகந்த' என்க. சிந்தி - சிதறி. "ஓட்டு" என்ற பிறவினை 'ஓடச்செய்தல்' எனப் பொருள்படுதலின், அதனுள் நின்ற, 'ஓட' என்பது "சிந்தி" என்னும் வினையெச்சத்திற்கு முடிபாயிற்று. இனி, சிந்துதல், 'சிதறச்செய்தல்' எனவும் பொருள்படுமாகலின்,

190 ஊனாய் உயிராய் உணர்வாய்என் னுட்கலந்து
தேனாய் அமுதமுமாய்த் தீங்கரும்பின் கட்டியுமாய்
வானோ ரறியா வழிஎமக்குத் தந்தருளுந்
தேனார் மலர்கொன்றைச் சேவகனார் சீரொளிசேர்
ஆனா அறிவாய் அளவிறந்த பல்லுயிர்க்கும்
கோனாகி நின்றவா கூறுதுங்காண் அம்மானாய். (16)

191 சூடுவேன் பூங்கொன்றை சூடிச் சிவன்திரள்தோள்
கூடுவேன் கூடி முயங்கி மயங்கிநின்
றூடுவேன் செவ்வாய்க் குருகுவேன் உள்ளுருகித்
தேடுவேன் தேடிச் சிவன்கழலே சிந்திப்பேன்
வாடுவேன் பேர்த்து மலர்வேன் அனலேந்தி
ஆடுவான் சேவடியே பாடுதுங்காண் அம்மானாய். (17)

அதனை இறைவற்கு ஆக்கி உரைத்தலுமாம். செம்மை, இங்கு அழகைக் குறித்தது. தார் - பூ. மந்தாரம், விண்ணுலகத் தருக்களில் ஒன்று. இதன் பூவால் இயன்ற மாலையைச் சிவபிரானுக்குக் கூறியது, 'தேவர் தலைவன்' என்பதைக் குறிப் பிட்டு, 'அவனையின்றித் தேவர் தக்கன் வேள்வியில் அவி யுண்ணச் சென்றமையின் அவரை ஒறுத்துத் தனது தலைமையை நிலைநிறுத்தினன்' என்பது உணர்த்துதற்கு. இஃது, இம்மாலை யைப் பெற விரும்பினாள் கூற்றாதற்குச் சிறந்தது.

190. ஊன் - உடம்பு; ஆகுபெயர். சேவகன் - வீரன்; உயர்வுப்பன்மையாக, "சேவகனார்" என்றார். சீர் - சிறப்பு. ஒளி - விளக்கம். ஆனா - நீங்காத. 'சீரொளிசேர் அறிவு, ஆனா அறிவு' எனத் தனித்தனி முடிக்க, இவ்வாறு முடியக் கூறி னாரேனும், 'சீரொளிசேர் அறிவாய் ஆனாது' என்றலே கருத்து எனக்கொண்டு, அத்தொடரை முதற்கண்ணே கூட்டி யுரைக்க. இப்பத்துத் திருப்பாட்டுக்களும், முதல் ஐந்து திருப்பாட்டுக்கள் போல இயற்பட மொழிந்தனவேயாம்.

191. இதனுட் கூறப்படுவனவெல்லாம், சிவபெருமானைக் காணப்பெறின் நிகழும் என்னும் கருத்தினவாகலின், முதற் கண், 'சிவன் வரின்' என்பதனை வருவித்து, 'அவன் பூங் கொன்றை சூடுவேன்', 'அவன் திரள்தோள் கூடுவேன்'

என்றாற்போல உரைக்க. "ஆடுவான்" என்றதற்கும், 'ஆடுவானாகிய அப்பெருமானது' என்றே உரைக்க. "முயங்கி" என மறித்துங்கூறியது, 'கவவுக்கை நெகிழாது நின்று' என்றபடி. மயங்குதல் - வசமழிதல். "நின்று" என்றதன் பின்னர், 'பின்னொருகால்' என்பது எஞ்சிநின்றது. தலைவி ஊடுவது புறத்தேயாகலின், செவ்வாய்க்கு உருகுதல், அது போழ்து நெஞ்சினுள்ளே நிகழ்வதாம். தேடுதல், தலைவி ஊடல் தணியாளாய் நின்றபொழுது தலைவன் மறைந்தமையாலாம். கழலைச் சிந்தித்தல், அதற்குப் பணிசெய்தற்கு உரியளாகத்தான் கொள்ளப்படவேண்டும் என்று கருதியாம். வாடுதல், 'தன்னை அவன் இனி நோக்கான்' என்னும் கருத்தினாலும், மலர்தல், 'அவன் தன்னைக் கைவிடான்' என்னும் துணிவினாலுமாம். "மலர்வேன்" என்றதன்பின், "ஆதலின்" என்பது வருவிக்க. அங்ஙனம் வருவித்துரைக்கவே, 'அவனது சேவடியைப் பாடின் சிறிது ஆற்றுவேன்' என்பது கருத்தாம்.

இத் திருப்பாட்டினைக் காமப்பொருள் பற்றியே அருளிச் செய்தார், வரிப்பாட்டிற்கு அஃது இயல்பென்பது தோன்றுதற்கு, எனவே, இக்கூற்றினை நிகழ்த்தினாள், 'சிவபெருமான்மேற் கொண்ட காதல் மீதூரப்பெற்றாள் ஒருத்தி' என்க. இங்ஙனம் இப்பொருளே பயப்ப அருளிச்செய்தாராயினும், அடிகள் தமக்கு இறைவன் மீளத்தோன்றி அருள்புரியின், அவனது திருவடியின்பத்தைச் சிறிதும் தடையின்றி வேண்டியவாறே நுகர்தல் உளதாகும் என்னும் தம் விருப்பத்தினையே உள்ளுறுத்து அருளினார் என்க. எனவே, 'கவவுக்கை நெகிழாது நின்று' என்றது, 'இறைவனது திருவடி நிழலினின்றும் சிறிதும் மீளாது உறைத்து நின்று' என்றபடியாம். திருவடி நிழலிலிருந்து மீளுதலாவது, இறைவனை உணர்தல் ஒழிந்து, தன்னையும், பிறவற்றையும் உணர்தல். அங்ஙனம் உணரச் செய்வது மலத்தின் வாதனை. அஃது உண்டாயவிடத்து உளதாவது துன்பமே. 'அதனால், எவ்வாற்றானும் திருவடியினின்றும் சிறிதும் பிரிதல் கூடாது' என்பதனையே, "முயங்கி" என்பதனாற் குறித்தருளினார். இதனானே, திருவள்ளுவ நாயனார், காமத்துப்பாலில்,

"முயக்கிய கைகளை ஊக்கப் பசந்தது
பைந்தொடிப் பேதை நுதல்"

எனவும்,

192 கிளிவந்த மென்மொழியாள் கேழ்கிளரும் பாதியனை
வெளிவந்த மாலயனுங் காண்பரியவித்தகனைத்
தெளிவந்த தேறலைச் சீரார் பெருந்துறையில்
எளிவந் திருந்திரங்கி எண்ணரிய இன்னருளால்
ஒளிவந்தென் உள்ளத்தின் உள்ளே ஒளிதிகழ
அளிவந்த அந்தணனைப் பாடுதுங்காண் அம்மானாய். (18)

" முயக்கிடைத் தண்வளி போழப் பசப்புற்ற
பேதை பெருமழைக் கண் "

எனவும்,

" கண்ணின் பசப்போ பருவர லெய்தின்றே
ஒண்ணுதல் செய்தது கண்டு "

எனவும் ஓதியது, (1238, 1239, 1240) இம்மெய்நெறியின் நுண்பொருளையும் அவைபற்றி உய்த்துணர்ந்துகொள்ளுதற் பொருட்டேயாம் என்பதும் பெறப்படும். அவற்றுள், 'தண்வளி போழ-சிறுகாற்று ஊடறுக்க' என்றது, மலவாதனை சிறிதே புகுந்து உயிரைத் திருவடி நிழலினின்றும் பிரித்தலையும், 'கண் பசந்தன' என்றது, அப்பிரிவு நிகழ்ந்தவழி ஆன்ம அறிவு துன்புற்று மெலிதலையும் உணர்த்தும். இஃது 'ஆற்றுவல்' என்றது.

192. கிளிவந்த - கிளியினது தன்மை வந்த. 'மென் மொழியாளது கேழ்' என்க. கேழ் - நிறம். கிளரும் - விளங்கும். பாதி - பாதி உருவம். வெளிவந்த - 'காண்போம்' என்று புறப்பட்ட. தெளிவந்த தேறல் - தெளிவு உண்டாகிய தேன்; 'வடித்தெடுத்ததேன்' என்றபடி. 'இன்னருளால் எளிவந்து பெருந்துறையில் இருந்து என் உள்ளத்தின் ஒளி வந்து உள்ளே ஒளிதிகழ இரங்கி அளிவந்த அந்தணன்' எனக் கூட்டியுரைக்க. ஒளி இரண்டனுள், முன்னது, 'தூய்மை' என்னும் பொருளையும், பின்னது 'ஞானம்' என்னும் பொருளையும் குறித்தன. "ஒளிவந்து" என்றது, ஒளி வருதலால் எனக் காரணப் பொருட்டாய் நின்றது. அளிவந்த - அளித்தல் (ஆட்கொள்ளுதல்) பொருந்திய. அந்தணன் - அந்தணக்கோலம் உடையவன்.

193 முன்னானை மூவர்க்கும் முற்றுமாய் முற்றுக்கும்
பின்னானைப் பிஞ்ஞகனைப் பேணு பெருந்துறையின்
மன்னானை வானவனை மாதியலும் பாதியனைத்
தென்னானைக் காவானைத் தென்பாண்டி நாட்டானை
என்னானை என்னப்பன் என்பார்கட் கின்னமுதை
அன்னானை அம்மானைப் பாடுதுங்காண் அம்மானாய். (19)

194 பெற்றி பிறர்க்கரிய பெம்மான் பெருந்துறையான்
கொற்றக் குதிரையின்மேல் வந்தருளித் தன்னடியார்
குற்றங்கள் நீக்கிக் குணங்கொண்டு கோதாட்டிச்
சுற்றிய சுற்றத் தொடர்வறுப்பான் தொல்புகழே
பற்றிஇப் பாசத்தைப் பற்றறநாம் பற்றுவான்
பற்றியபே ரானந்தம் பாடுதுங்காண் அம்மானாய். (20)

---

193. 'மூவர்க்கும் முன்னானை' என மாற்றிக்கொள்க. மூவரும் ஆதி மூர்த்திகள் (கீர்த்தி - 121.) ஆதலின், 'அவர்க்கு முன்னோன்' என்றது, 'அநாதிமூர்த்தி' என்றவாறு "முற்றுக்கும் பின்னான்" என்றதும், 'அவர்கள் ஒடுங்கிய பின்னும் நிற்பவன்' என, இதனையே வேறோராற்றான் விளக்கியவாறு. இதனையே,

" அறுதியில் அரனே எல்லாம்
அழித்தலால் அவனால் இன்னும்
பெறுதும்நாம் ஆக்கம் நோக்கம்
பேரதி கரணத் தாலே "

எனச் சிவஞான சித்தி விளக்கிற்று (சூ. 1-35). முற்றும் - தோற்றம் நிலை இறுதிகளையுடைய பொருள்கள் முழுதும். 'மன்னானை' என்பது, நீட்டலாயிற்று. 'மன்னானவனை' என்பது தொகுத்தலாயிற்று எனினுமாம். 'என் ஆனை என் அப்பன்' என்பன, காதல்பற்றியெழும் சொற்கள். அன்னான் - ஒத்தவன். இனி, 'இன்னமுதை' என்றதனை வேறு தொடராக்கி, 'அன்னான் - 'அன்னபெருமைகளையுடையவன்' என்று உரைத்தலுமாம். அன்ன பெருமைகள், மேற்கூறியனவாம்.

194. பெற்றி - தனது தன்மை. "அடியார்" எனப் பின்னர் வருகின்றமையின், வாளா, "பிறர்க்கு" என்றார்.

'கோதாட்டுதல்' என்பதுதானே, 'திருத்துதல்' எனப் பொருள் தருமாதலின், "குற்றங்கள் நீக்கிக் குணங்கொண்டு" என்றது, 'கோதாட்டுமாறு இவ்வாறு' என்பதனை விதந்தவாறும். 'மிகப் பெரிய சுற்றம்' என்பார், "சுற்றிய சுற்றம்" என்றார். தொடர்வு - தொடர்பு; பற்று. "அறுப்பான்" என வேறொருவன் போலக் கூறினாராயினும், 'அறுப்பானாகிய தனது' எனப் பொருள் உரைக்க. பற்றி - துணையாகப் பற்றி. 'பற்றறச் செய்ய' என ஒரு சொல் வருவிக்க. அன்றி, "பாசத்தை" என்ற ஐகாரத்தை, 'சாரியை' என்றலுமாம். நாம் பற்றுவான் - நம்மால் பற்றப்படுபவன். பற்றிய பேரானந்தம் - நம்மைப் பற்றியதனால் விளைந்த பேரின்பத்தை. இவையும் இயற்பட மொழிதல்.

காயமுட னுயிர்முயலுங் கருமமெலாம் பரனருளாற்
றாயமனத் துணர்ந்துவினைத் தொகையெழுதி நாடோறும்
ஆயதுயர் சுகமளிக்கும் யமன்கணக்கி லரும்பாவத்
தீயசிகை யில்லார்க்குச் சிறந்தசிகை வருவித்தார். 9

குவலயமங் கையைநீடு கோலஞ்செய் தரும்பொன்னும்
நவமணியுங் குவைசெய்து நன்குடன்மங் கலநாளிற்
றவமணமுந் திருநீற்றின் றன்மணமுந் தவறாத
சிவமணமும் பெறக்கல்விச் செல்விமணம் புணர்வித்தார். 10

இதுநூன்மற் றல்லதுநூ லில்லையெனு மறுசமய
விதநூலுந் தலநூலும் விரிந்தபுரா தனநூலும்
பொதுநூலென் றுலகனைத்தும் புகழ்மறைநூ லுஞ்சைவ
முதுநூலுந் தரிப்பார்க்கு முந்நூலுந் தரித்தார்கள். 11

மிக்கலையுஞ் செழுநீரு மதிக்கலையு மிலைக்குமவர்
அக்கலையுந் தோளர்புலி யதட்கலையர் நல்லருளால்
ஒக்கலையும் பிறக்கலையு மொழித்திடுமா கமகலையும்
எக்கலையுங் கற்றுணர்ந்தா ரிரெட்டாண் டெல்லையினில். 12

உழைக்கரனுக் கன்பாகி யுண்மையறிந் துலகமெலாம்
பிழைக்கவருட் கவிபாடும் பெரியவர்தஞ் செயலெல்லாந்
தழைத்தகலைத் தமிழ்மாறன் றக்கோர்க ளுரைப்பவறிந்
தழைத்துரிமைத் திறநல்கி யகலாநண் பாயினன். 13

— திருவாதவூரடிகள் புராணம்.

9. திருப்பொற்சுண்ணம்

[பொற்சுண்ணம் - பொன்போலும் பொடி; இது வண்ண உவமை. 'பொன், அழகு' என்பாரும் உளர். 'சுண்ணம்' என்பது, 'சூர்ணம்' என்னும் ஆரியச் சொல்லின் திரிபு. அரிதாரம் முதலிய மணப் பொருள்கள் பலவற்றை உரலிலிட்டு இடித்த நறுமணப்பொடியே இங்கு பொற்சுண்ணம் எனப் பட்டது. இதனை மகளிர் பலர் குழுமி இடிப்பர் என்பது, **"பலர்தொகுபு இடித்த தாதுகு சுண்ணத்தர்"** என்னும் மதுரைக் காஞ்சியடிக்கு (399,) "இடிக்க வல்லார் பலரும் திரண்டு இடித்த பூந்தாதுக்கள்போலப் பரக்கும் சுண்ணத்தை யுடையாரும்" என நச்சினர்க்கினியர் உரைத்த உரையாலும் அறியப்படும். சுண்ணம் இடித்தல் தினைகுற்றுதல் முதலிய வற்றைச் செய்யும்பொழுது பாடப்படும் பாட்டே, **'வள்ளை'** என்னும் உரற்பாட்டு. இது, மகளிரிடையே பலபொருள்பற்றி வருமாயினும் புலவர்கள் இதனை அகப்பாட்டுள் தலைவனைப் பற்றித் தலைவியும், தோழியும் பாடுவதாகவும், புறப்பாட்டுள் பகைவரை வென்ற அரசனது புகழைப் பலரும் பாடுவதாகவும், பாடாண் பாட்டுள் பாட்டுடைத் தலைவனது இயல்பை அவன் மேற் காதல் கொண்டவள் பாடுவதாகவும் செய்வர். அவ் வகைகளுள் இது, பாடாண்திணைக் கடவுள் வாழ்த்துப் பகுதி. அதனுள்ளும் கைக்கிளையாகாது ஐந்திணையேயாம். பாடாண் பாட்டு ஐந்திணை பற்றியும் வரும் என்பதனை, **"புரைதீர் காமம் புல்லிய வகையினும்"** என்றதனுன் அறிக (தொல்-பொருள்-79.). தம் இயல்பின்படியே நச்சினர்க்கினியர் இதற்கு வேறுரை உரைத்தாராயினும், உண்மையுரையை உரையாசிரியர் உரைத்திருத்தல் காண்க. மற்றும், **"மக்கள் நுதலிய"**. **"புறத் திணை மருங்கின்"** என்னும் நூற்பாக்களையும் (ஷெ. ஷெ. 57, 58.) இங்கு உடன் நோக்கி உணர்க. 'சுண்ணம்' என்பது இங்கு அதனை இடிக்குங் காலத்துப் பாடும் பாட்டிற்கு ஆயிற்று.

ஐந்திணை வகைகளுள் இப்பகுதி, கற்பிடத்துப் பிரிவின்கண் பருவங்கண்டு ஆற்ருளாய தலைமகளைத் தலைவர் வருவார் எனக் கூறி வற்புறுக்குந் தோழி கூற்று. இதன்கண் அடிகள் இன்ப மேலீட்டினையே புலப்படுத்தருளுதலின் இப்பகுதிக்கு, **'ஆனந்த மனேலயம்"** எனக் குறிப்புரைத்தனர் முன்னேர். ஆனந்த மனேலயம் - இன்பத்தால் உண்டாகிய உள்ள ஒடுக்கம்.

இதன்கண் உள்ள திருப்பாட்டுக்கள் எண்சீரடிகளா லாயவை. அச்சீர்களுள் மூன்ருவதும் ஏழாவதும் முன்னைச் சீர்களோடு வெண்டளை வகையிற் கண்ணுற்று இருவகை மாச்சீராகியும், நான்காவதும் எட்டாவதும் தேமாவாகியும் நிற்கும். எனினும், இவ்விரு மாச்சீர்களின் ஓசையை ஒரு விளங்காய்ச் சீர் ஓராற்ருல் தந்து நிற்றலின், ஒரோவடியிடத்து எழுசீரும், அறுசீரும் நிற்றல் உளவாம். இதுபோலும் விருத்த யாப்பினுள் இங்ஙனம் சீர்கள் மயங்கி வருதல் இயல்பாதலின், இம்மயக்கம் பற்றி இப்பாட்டுக்களில் எல்லாரும் எல்லா அடிக ளையும் அறுசீரான் இயன்றவையாகக் கூறுதல் பொருந்தா மையை, அவர்காட்டும் சீர்களுள் நாலசைச் சீர் பயின்றுவருத லான் அறிந்துகொள்க. நாலசையான் ஆகுஞ் சீர்களும் உள என நூல் செய்தோரும், அவை அருகிவருமெனக் கொண்ட தல்லது, பயின்றுவரும் எனக் கொள்ளாமை வெளிப்படை. இது தில்லையில் அருளிச்செய்யப்பட்டதாகவே, பதிப்புக்களிற் காணப்படுகின்றது. விருத்தப்பாக்களுள் இப்பகுதி சந்தமுடைத் தாதலின், இதனை முன்வைத்துக் கோத்தனர்.]

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

195 முத்துநல் தாமம்பூ மாலை தூக்கி
  முளைக்குடம் தூபம்நல் தீபம் வைம்மின்
சத்தியும் சோமியும் பார்மகளும்
  நாமக ளோடுபல் லாண்டி சைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியும்
  கங்கையும் வந்து கவரி கொண்மின்
அத்தன்ஐ யாறன்அம் மானைப் பாடி
  ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 1

---

195. முத்துநல் தாமம் - முத்தினாலாகிய நல்ல மாலை. தூக்கி - தொங்கவிட்டு. மாலை தூக்குதல் முதலியன, மனை எங்குமாம். சத்தி என்பது, உருத்திராணியைக் குறிக்கும். சோமி - திருமகள்; 'சந்திரனுக்குப் பின் பிறந்தவள்' என்பது இப்பெயரின் பொருள். 'பாற்கடல் கடையப்பட்ட பொழுது, சந்திரனும், திருமகளும் அதன்கண் தோன்றினர்'

196 பூவியல் வார்சடை எம்பி ராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்க வேண்டும்
மாவின் வடுவகி ரன்ன கண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடு மின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நி லாமே
குனிமின் தொழுமின்எம் கோனெங் கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மை யாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்தும் நாமே. 2

என்பது புராணம். பார்மகள்-நிலமகள். திருமகள், நிலமகள் இருவரும் திருமாலுக்குத்தேவியராதலையும், நாமகள் நான்முகன் தேவியாதலையும் அறிக. இவரது பெயர்களெல்லாம் இங்குப் பெண்களுக்கு இடப்பட்டவை எனக்கொள்க. பல்லாண்டு, 'பல்லாண்டுக் காலம் வாழ்க' என வாழ்த்திப் பாடும் பாடல். "சித்தி" முதலிய மூன்றும் உமையம்மைதன் பெயர்களே. அவற்றையுடைய வேறு வேறு மகளிர், இங்குக் குறிக்கப் பட்டனர். சித்தி - ஞான வடிவினள். கௌரி - செம்மைநிறம் உடையவள். 'உமையம்மை ஒருபொழுது செம்மை நிறமுடைய ளாய்த் தோன்றினாள்' என்பதும் புராணம். பார்ப்பதி - மலை மகள். "ஐயாறன்" என்றதன்பின், 'ஆகிய' என்பது விரிக்க. 'அவன் ஆட' எனச் சுட்டுப்பெயர் வருவித்துரைக்க. ஆட - மூழ்க; என்றது, இங்கு நெய்பூசி மூழ்குதலைக் குறித்தது. நெய்பூசியபின், நறுஞ்சுண்ணம் திமிர்ந்து மூழ்குதல் அறிக.

196. பூ இயல் - பூக்கள் பொருந்திய. பொன் திருச்சுண்ணம் - பொன்போலும் அழகிய சுண்ணம். 'இடிக்க" என்பது, தொழிற்பெயர்ப் பொருள் தந்தது. கூவுமின் - அழையுங்கள். 'தொண்டர்' புறம் நில்லாதவாறு அவரை இங்கு அழையுங்கள்' என்க. குனிமின் - நடனம் செய்யுங்கள். ஆள - ஆளுதற்பொருட்டு. 'வேண்டும்' என்பது, செய்வினை வாய்பாடாய் நின்று, 'வேண்டப்படும்' எனப் பொருள்தந்து இன்றியமையாமை குறிப்பதொரு செய்யுமென்முற்று. சொல்வார்க்கும், கேட்பார்க்கும் உள்ள தகுதி வேறுபாடுகளால், இஃது இரத்தற் குறிப்பையும், விதித்தற் குறிப்பையும் உடன் உணர்த்தி நிற்கும். இவ்வேறுபாட்டானே இது தன்மை முன்னிலை

197 சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிப ரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டி எங்கும்
எற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன்அயன் றன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன் தாதை
எந்தரம் ஆள்உமை யாள்கொழுநற்
கேய்ந்த பொற்சுண்ணம் இடித்தும் நாமே. 3

198 காசணி மின்கள் உலக்கை யெல்லாங்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடிய வர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங் கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில் பாடிப்
பாச வினையைப் பறித்து நின்று
பாடிப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே. 4

களினும், படர்க்கைப் பலர்பாலினும் வருதல் பொருந்துவதாயிற்று, இஃது இயல்பாய் ஏனை வினைச்சொற்கள் போலவரும் வேண்டும்' என்பதனின் வேறுபட்டதென்க.

197, நீறணிதல், மகளிர் நெற்றியிலாம். 'நீறணிந்தும் மெழுகி' என்ற மகர ஒற்று, விரித்தல். "எங்கும்" என்றதனை, "மெழுகி" என்றதற்கு முன்னர்க் கூட்டுக. எங்கும் - மனையக மெல்லாம். அந்தரர் - விண்ணோர். ஆழியான் - திருமால். விண்ணோர் முதலிய மூவர்க்கும் தலைவன் என்பதை வலியுறுப்பார். பொருட்பின் வருநிலையாக, 'கோன், பெருமான், நாதன்' என அப்பெயர்தோறும் தலைமைச் சொற்கொடுத்து அருளிச் செய்தார். 'இன்னபெருமானுக்குச் சுண்ணம் இடிக்கின்றோமாகலின், இந்திரன் கற்பகம் நமக்கு அரிதன்று, என்பாள், இந்திரன் கற்பகம் நாட்டுமின்' என்றாள். "தாதை" என்றதன்பின் 'ஆகிய' என்பது விரிக்க.

198. காசு - மணி, இரத்தினம். காம்பு - பட்டாடை. 'கறுப்பு' என்னும் பொருளதாகிய, 'கறை' என்பது, இங்கு

199 அறுகெடுப் பார்அய னும்மரியும்
அன்றிமற் றிந்திர னேடு மரர்
நறுமுறு தேவர் கணங்க ளெல்லாம்
நம்மிற்பின் பல்ல தெடுக்க வொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்த வில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில் பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்க ணப்பற்
காடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 5

அந்நிறத்தையுடைய கல்லைக் குறித்தது. "தேசமெல்லாம் புகழ்ந்து ஆடும் கச்சித் திருவேகம்பம் என அடிகள் அருளிச் செய்தமை, அத்தலத்தின் பெருமை இனிது விளங்குதற் பொருட்டே என்பது, நன்குணர நிற்பதொன்று. இவ்விடத்தே, 'அன்புடையவர்கள் என்றும் நின்று நிலாவுக' என அடியார் களை வாழ்த்தியதும், அடிகளை அங்கு நல்வரவேற்று வணங்கி மகிழ்ந்த அடியவர் குழாத்தினை நினைந்தே போலும்! இத் திருப்பாட்டில் இத்துணை வெளிப்படையான சொற்கள் பொருந்தியிருப்பவும், அடுத்துவரும் திருப்பாட்டும் இவ்வாறுக வும் இப்பகுதியை இத்தலத்தில் அருளிச்செய்ததாக ஒருவருங் கூறுது போயது வியப்பேயாம். பாசவினை - 'வினை பாசத்தை என மாறிக் கூட்டுக. முன்னர், 'கோயில்பாடி என்றமை யின், இங்கு, "பாடி" என்றது, அவனது புகழ் முதலிய பிறவற்றையும் பாடி' என்றவாறும்.

199. அறுகு - அறுகம் புல். எடுப்பார் - எடுப்பதற்கு முற்படுவார். ஒருவரை மங்கல நீராட்டுவார் முதற்கண் அறுகம் புல்லை நெய்யில் தோய்த்து எடுத்து அதனுல் நெய்யேற்றிப் பின் சுண்ணந்திமிர்ந்து நீராட்டுதல் மரபு. அவ்வாறு செய்யு மிடத்து நெய்யேற்றுதற்கண் முற்பிற்பாட்டு முறைமை அதனைச் செய்வாரது தகுதி வேறுபாட்டிற்கு ஏற்ப அமையும். அம்முறைமைக்கண், தகுதி வேறுபாடு தெற்றென விளங்காதாரிடையே பிணக்குண்டாதலும் உண்டு. அவ்வாற் ருல் இறைவனுக்குத் திருமஞ்சனம் ஆட்டுதற்கண் நெய்யேற்று தற்கு மக்களினும் தேவர் முற்பட்டு அறுகம் புல்லை எடுப்பார் என்பாள், "அறுகெடுப்பார் அயனும் அரியும்......எல்லாம்", என்ருள். அன்றி - அவரன்றியும், "இந்திரனேடு" என்றத ஞல், "அமரர்" என்றது, ஏனைத் திசைக்காவலரை என்க.

200 உலக்கை பலஒச்சு வார்பெரியர்
உலகமெ லாம்உரல் போதா தென்றே
கலக்க அடியவர் வந்து நின்றார்
காண உலகங்கள் போதா தென்றே

அயன், மால், திசைக்காவலர் என்னும் இவரிடைத் தகுதி வேறுபாடு தெற்றென விளங்கிக் கிடத்தலின், முற்பிற்பாட்டு முறைமைக்கண் இவர் மாட்டுப் பிணக்கு நிகழாமை பற்றி அவர் களை வாளாதே சுட்டி, ஏனைத் தேவரிடையே அவ்வேறுபாடு தெரித்துக்காட்ட வாராமையின், அவர்தங் குழாங்கட்கிடையே பிணக்கு நிகழும் என்பதுபற்றி அக்குழாங்களை, ''நறுமுறு தேவர்கணங்கள்'' என்றாள். 'நறுமுறுத்தல்' என்பதை இக் காலத்தார், 'முணுமுணுத்தல்' என்பர். இஃது உள்ளத் தெழுந்த வெகுளியைத் தெற்றென வெளிப்படுத்தமாட்டாதார் செய்வது, 'தம்மில் பிணங்காதும், பிணங்கியும் முற்படும் தேவர் அனைவரும் நம்மைக் கண்டவழி அஞ்சி நமக்கும் பிற்படு வர்; அவ்வாறின்றி முற்படவே துணிவராயினும், நம் உரிமையை நாம் நிலைநிறுத்திக்கொள்ள வல்லோம்' என்பாள், ''எல்லாம் நம்மிற்பின்பல்ல தெடுக்கவொட்டோம்'' எனக்கூறினாள். இவள் இங்ஙனம் கூறியது, 'எப்புன்மையரையும் மிகவே உயர்த்தி விண் ணோரைப் பணிக்கும்' (திருச்சதகம்-10.) தனது கருணைத் திறத் தினால்,தேவர்க்கும் வழங்காத பெருநிலையை தங்கட்கு வழங்கி ஆட்கொண்ட அணுக்கம் பற்றியாம். ''நம்மின்'' எனத் தலை வியையும் உளப்படுத்திக் கூறினாளாதலின், தோழி குற்றேவல் பிழைத்தாளல்லள் என்க. இஃது ஏனையிடங்கட்கும் ஒக்கும். ''எடுக்கவொட்டோம்'' என்றதன்பின், 'ஆதலின்' என்னும் சொல்லெச்சம் வருவித்து, அதனை, 'சுண்ணத்தினைத் தாமாது இடிப்போம்' என உரைத்து முடிக்க. தேவர்க்கும் எட்டாத பெருமான் தமக்கு எளிவந்து அருளிய அருட்டிறத்தை இடை யறாது எண்ணி எண்ணி நெஞ்சம் கரைந்துருகும் அடிகள், தம் உள்ளத்துணர்ச்சியை இத்திருப்பாட்டின்கண் செய்யுள் நலம் பொதுளத் தெளித்துள்ள அருமையை உணரின், நெஞ்சம் நெக்குருகாதார் யாவர்!

200. **பொருள்கோள்;** 'பெரியர் உலக்கை பலவற்றைக் கொணர்ந்து ஒச்சுவார்; அதனால், உலகமெலாம் உரலாயினும்

நலக்க அடியோமை ஆண்டு கொண்டு
　　நாண்மலர்ப் பாதங்கள் சூடத் தந்த
மலைக்கு மருகனைப் பாடிப் பாடி
　　மகிழ்ந்து பொற்சுண்ணம் இடித்தும் நாமே.　　6

201 சூடகந் தோள்வளை ஆர்ப்ப ஆர்ப்பத்
　　தொண்டர் குழாமெழுந் தார்ப்ப ஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
　　நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்பப்
பாடகம் மெல்லடி ஆர்க்கும் மங்கை
　　பங்கினன் எங்கள் பராபரனுக்
காடக மாமலை அன்ன கோவுக்
　　காடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே.　　7

போதாது என்று சொல்லி, அடியவர் நம்மோடு கலந்து பணி செய்ய, காண உலகங்கள் போதா என்னும்படி வந்து நின்றார்; ஆதலின்......நாம் பாடிப்பாடி மகிழ்ந்து பொற்சுண்ணம் இடித்தும்' சிவபெருமானது வருகையை முன் உணர்ந்தோர் அதனை முன்னிட்டு நிகழும் ஆரவாரங்களை நினைந்து கூறினராக லின், "ஓச்சுவார்" என எதிர்காலத்தாற் கூறினர். பெரியர் - அடியவர். 'ஆயினும்' என்பது தொகுத்தல். நலக்க - நலம் அடைய.

201. சூடகம் - கை வளை. "ஆர்ப்ப" என்றன பலவும், நிகழ்காலத்தின்கண் வந்தன. நாடவர் ஆர்ப்ப, நாமும் ஆர்ப்ப' என்ற இரண்டிடத்தும் உள்ள ஆர்த்தல், 'சிரித்தல் என்னும்' பொருள, நாடவர் அடியவரைச் சிரித்தல், சிற்றின்பத்தை இகழ்தல் பற்றி. அடியவர் நாடவரைச் சிரித்தல், பேரின்பத்தை இகழ்தல்பற்றி. அடுக்குக்கள், இடை விடாமைப் பொருளன. பாடகம் ஒருவகைக் காலணி. 'மெல்லடியின்கண் பாடகம் ஆர்க்கும் மங்கை' என்க. சிவ பெருமான் பொன்னார் மேனியனாகலின். "ஆடக மாமலை அன்னகோ" என்றாள். ஆடகம் - பொன்,

202 வாட்டடங் கண்மட மங்கை நல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கை பொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்தி லங்கச்
சோத்தெம்பி ரானென்று சொல்லிச் சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங் காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மை இம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப் பாடி
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே. 8

203 வையகம் எல்லாம் உரல தாக
மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறைய அட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப் பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கை பற்றி
ஐயன் அணிதில்லை வாண னுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 9

---

202. வரி - கீற்று; இஃது அழகிற்காக இடப்படுவது. பொங்க - பூரிக்க. துதைந்து இலங்குதலுக்கு. 'நீறு' என்னும் வினைமுதல் வருவித்து, 'தோளிலும், அழகிய நெற்றியிலும் திருநீறு நிறைந்து விளங்க' என உரைக்க. 'எம்பிரானே சோத்து' என்க. நாட்கொண்ட - மலரும் நாளைப் பொருந்திய. 'நாள மலர்' என்பதில், அகரம் தொகுத்தல். நாளம் - தாமரைத் தண்டு.

203. "வையகம்" என்றது முதலாக, "அட்டி" என்றது இறுதியாக உள்ள பகுதியால், 'மக்கள் இறைவன் பொருட்டுப் பொற்சுண்ணம் இடிக்குங்கால், உரலை நிலவுலக மாகவும், உலக்கையை மேருமலையாகவும், இடிக்கப்படும் பொருள்களை உண்மை அன்பாகவும் கருதிக்கொண்டு இடித்தல் வேண்டும்' என்பது குறிப்பிடப்பட்டது. இதனால். 'இறைவன் ஆடுவது அன்பர் அன்பிலன்றி, அவர் ஆட்டும் பொருளில் அன்று' என்பது திருவுள்ளம். "நேயமே நெய்யும் பாலா" என்று அருளிச்செய்தார் திருநாவுக்கரசு நாயனாரும் (திருமுறை-4-76-4). உண்மையன்பைப் பிற பொருட்கண் செலுத்

204 முத்தணி கொங்கைகள் ஆட ஆட
மொய்குழல் வண்டினம் ஆட ஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆட ஆடச்
செங்கயற் கண்பனி ஆட ஆடப்
பித்தெம் பிரானொடும் ஆட ஆடப்
பிறவி பிறரொடும் ஆட ஆட
அத்தன் கருணையொ டாட ஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே.

தாது இறைவனிடத்திற் செலுத்துதலே, இடித்தல் தொழிலாம். ஆகவே, எல்லாவற்றையும் தாங்கும் நிலமும், அதற்கு உறுதியாய் நிற்கும் மேரு மலையும் அத்தொழிற்கே துணைபுரிவனவாதல் வேண்டும் என்றவாறு. மெய், ஆகு பெயர். "மஞ்சள்" என்றாரேனும், ஏனையவும் உடன் கொள்ளப்படும். மேதகு - மேன்மை தக்கிருக்கின்ற "காசணிமின்கள் உலக்கை எல்லாம்" என்றமையின் அதற்குப் பொன்னணியும் பூட்டுதல் பெறப்படுதலின், "செம்பொன்" என்றதும் அதனுறுப்பு அணியை என்க. 'செம்பொன்னாலாகிய உலக்கை' என்றே உரைப்பாரும் உளர். இருகையும், பணிசெய்ய வேண்டுதலின், 'வலக் கை, வலிமையையுடைய கை' என்க.

204. முத்து அணி - முத்து மாலையை அணிந்த. 'குழலின் கண்' எனவும், 'நம் சித்தம்' எனவும், 'நம் செங்கயற் கண்களில்' எனவும், 'நம் பித்து' எனவும், உரைக்க. கண் பனி ஆட" என, இடத்து நிகழ்பொருளின் தொழில், இடத்தின்மேல் நின்றது. பனி - பனித்தலை (சிந்துதலை) உடையநீர். பித்து - பேரன்பு. 'ஆட' என்பது, "சிவனொடும் ஆட" என்றாற் போல்வனவற்றில், 'பொருந்த' என்னும் பொருளைத் தந்து நின்றது. "பிறரொடும்" என்ற இழிவு சிறப்பும்மையைப் பிரித்து, "பிறவி" என்றதனோடு கூட்டுக. உம்மை, பிறவிக்கு இடமின்மை காட்டி நின்றது. 'அத்தன் ஆட' என இயையும்; இங்கு. "ஆட" என்றது, 'மூழ்க' என்றதாம். இது, முன் வந்தவற்றோடு ஒரு நிகர்த்ததாகாது வேறாதலின், மும்முறை அடுக்கி யருளினார். இங்கும் அடுக்குக்கள்மேல் வந்தனபோல நின்றன.

205 மாடு நகைவாள் நிலாஎ றிப்ப
வாய்திறந் தம்பவ ளந்து டிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்ட வாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப் பாடித்
தேடுமின் எம்பெரு மானைத் தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமின் அம்பலத் தாடி னானுக்
காடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 11

---

205. மாடு - பக்கம். நகை வாள் - பற்களின் ஒளி. நிலா எறிப்ப - நிலவை வீச. "வாய்திறந்து" என்றதை, "பாடுமின்" என்றதற்கு முன்னே கூட்டுக. பவளம் போலும் இதழை, "பவளம்" என்றது உவமையாகு பெயர். "எறிப்ப, துடிப்ப" என்றவை, "பாடுமின்" என்றதனோடு முடியும். 'நந்தம்மை ஆண்டவாறும் பணிகொண்ட வண்ணமும் வாய்திறந்து பாடுமின்; பாடி எம், பெருமானைத் திகைத்துத் தேடுமின்; தேடித் தேறிச் சித்தங் களிப்ப ஆடுமின்' எனக் கூட்டியுரைக்க. பெருமான் வரவுணர்ந்து எல்லாம் செய்கின்றவள் நீட்டித்தல் நோக்கி, 'பலதிசையினும் சென்று பார்மின்' என்பாள், "திகைத்துத் தேடுமின்" என்றும், 'அங்ஙனம் பார்க்குமிடத்து யாதேனும் ஒரு திசையில் பெருமான் வரக் காணின், அவ்விடத்து அவனை மகிழ்ச்சியோடு எதிர்கொண்மின்' என்பாள், "தேறிச் சித்தங் களிப்ப ஆடுமின்" என்றும் கூறினாள். "தேடுமின், ஆடுமின்" என்ற இரண்டும் ஆயத்தாருள் ஒரு சிலரை நோக்கிக் கூறியனவும், ஏனையவை பலரையும் நோக்கிக் கூறியனவுமாகலின், இவை தம்முள் இயையாமை இல்லை என்க. தேடச் செல்லுகின்றவர்களும் சிறிது நேரம் எம்முடன் பாடிப் பின்னர்ச் செல்லுக என்பாள், "பாடித் தேடுமின்" என்றாள். "பாடிப் பாடி" என்றதனை அடுக்காக்காது பிரித்து, ஒன்றனை, "ஆண்டவாறும்" என்றதனோடு கூட்டுக. "பாடி" எனவும், "தேடி" எனவும் பெயர்த்துங் கூறியது, 'இது செய்தபின் இது செய்க' என முறைதெரித்தற் பொருட்டு. எனவே, அவை 'பாடியபின், தேடியபின்' என்னும் பொருளவாம்.

206 மையமர் கண்டனை வான நாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் றன்னை
ஐயனை ஐயர்பி ரானை நம்மை
அகப்படுத் தாட்கொண் டருமை காட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொ டித்தோள்
பையர வல்குல் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 12

207 மின்னிடைச் செந்துவர் வாய்க்க ருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர் !
என்னுடை ஆரமு தெங்க ளப்பன்
எம்பெரு மான்இம வான்ம கட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்த கப்பன்
தமையன்எம் ஐயன தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கை நல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே. 13

---

206. மை - கருமை நிறம். வானநாடர் மருந்து - அமுதம். மாணிக்கக் கூத்து - மாணிக்கம்போலும் உயர்ந்த கூத்து. ஐயன் - தலைவன். ஐயர் - தேவர்; இதுவும், ஒருசார் தலைமை பற்றி வந்த பெயரேயாம். அகப்படுத்து - தன்வழிப்படுத்து. அருமை காட்டும் - தனது அரியனாந் தன்மையைக் காட்டுகின்ற; என்றது, 'நாம் பல்கால் வேண்டியும் எளிதின் வந்திலன்' என்றதாம். 'முன்பு அகப்படுத்து ஆட்கொண்டு, இப்பொழுது அருமை காட்டுகின்றான்' என்றபடி. பொய்யன்-வெளிப்படாது நிற்பவன். மெய்யன் - வெள்ளிப்பட்டு அருள் செய்பவன். 'யாம் பொய்யரல்லேம்; மெய்யேமாகலின் வாராதொழியான்' என்பது குறிப்பு. போது அரிக் கண் - பூப்போலும். வரிகளையுடைய கண்; 'அவற்றது இணை,' என்க. 'பையர வல்குல்' என்பதில், 'பையரவு' என்பது, 'முன்றில்' என்பது போலப் பின்முன்னாகத் தொக்க ஆறுவதன் தொகை.

207. பண் அமர் - பண்ணின் தன்மை பொருந்திய. தன் உடை - தன் உடைப் பொருளாகிய. "தன்" என்றது, இமவான் மகளை. 'தன் உடைப்பொருளாகிய கேள்வன்' என்றது, கணவன் மனைவியரிடையுள்ள இயைபை விதந்தோதியவாறு

"பிறன் பொருளாள்" என்னும் திருக்குறளில் (141) திருவள்ளுவரும், ஒருவன் மனைவியை, 'அவனது உடைமைப் பொருள்' எனக் கூறினர். மனைவியை, 'உரிமை' என்னும் பெயராற் குறித்தலும் இதுபற்றியேயாம். சிவத்தையும், சத்தியையும் முறையே தந்தையும் மகளுமாகக் கூறுதல், சிவமும், நாதமும் ஆகிய சிவபேதங்களினின்றும் முறையே சத்தியும், விந்துவுமாகிய சத்தி பேதங்கள் தோன்றுதல் பற்றியாம். சத்தியையும், சிவத்தையும் முறையே தாயும், மகனுமாகக் கூறுதல், சத்திபேதங்களுள் ஒன்றாகிய சத்தியினின்றும், நாதமாகிய சிவபேதம் தோன்றுதல் பற்றியாம். சிவத்தையும், சத்தியையும் முறையே தமையனும், தங்கையுமாகக் கூறுதல், சத்தி பேதமாகிய விந்துவினின்றும், சிவபேதமாகிய சதாசிவன் முன்னும், சத்தி பேதமாகிய மனோன்மனி பின்னும் தோன்றுதல் பற்றியாம். சிவமும், சத்தியும் சதாசிவன், மனோன்மனி முதலிய சிவபேத சத்தி பேதங்களாய் நின்று எல்லாப் பொருள்களையும் பயத்தலின், அவ்விருவரும் கணவனும் மனைவியுமாகவும், உலகிற்கு அப்பனும் அம்மையுமாகவும் கூறப்படுவர்; இறுதியிற் கூறிய இஃது ஒன்றே பெரும்பான்மை. "மனோன்மனியைப் பேற்ற - தாயிலானைத் தழுவும்என் ஆவியே" (திருமுறை - 5. 91. 1.) என்றருளியதில், 'மனோன்மனி' என்றது, பொதுமையில், 'சத்தி' என்னும் பொருளதாம். இச் சிவபேத சத்தி பேதங்களின் இயல்பை எல்லாம் சிவஞானசித்தியினும், சிவஞானபோத மாபாடியத்தினும் தெளியக் காண்க; ஈண்டு விரிப்பிற் பெருகும்.

இத்தத்துவ முறைபற்றி இங்கு இவ்வாறருளிச்செய்த அடிகள், திருக்கோவையுள்ளும், "தவளத்த நீறணியுந் தடந்தோள் அண்ணல், தன்ஒருபாலவள் அத்தனும்; மகனும்" என்று இங்ஙனமே அருளுதலையும்,

> 'சிவ தத்துவத்தினின்றும் சத்தி தத்துவம் தோன்றலின் அத்தனும் என்றும், சத்தி தத்துவத்தினின்றும் சதாசிவதத்துவம் தோன்றலின் மகனும் என்றும் கூறினர், "இமவான் மகட்குத் தன்னுடைக் கேள்வன் மகன் தகப்பன்" என்பதூஉம் அப்பொருண்மேல் வந்தது'

என்று அதற்குப் பேராசிரியர் உரை உரைத்தலும் காண்க.

" வாயும் மனமும் கடந்த மனோன்மனி
பேயும் கணமும் பெரிதுடைப் பெண்பிள்ளை
ஆயும் அறிவும் கடந்த அரனுக்குத்
தாயும் மகளும்நல் தாரமும் ஆமே "

என்பது (திருமந்திரம் - 1178.).

" கனகமார் கவின்செய் மன்றில்
அனகநா டகற்கெம் அன்னை
மனைவிதாய் தங்கை மகள் "

எனக் குமரகுருபரரும் அருளிச்செய்தார் (சிதம்பரச் செய்யுட் கோவை - 514.).

" பூத்தவ ளேபுவ னம்பதி னான்கையும்
பூத்தவண்ணம்
காத்தவ ளேபின் கரந்தவ ளேகறைக்
கண்டனுக்கு
மூத்தவளே "

எனவும்,

" தவளே இவள்எங்கள் சங்கர னார்மனை ;
மங்கலமாம்
அவளே அவர்தமக் கன்னையு மாயினள் ;

எனவும் கூறியதும் இதுபற்றி (அபிராமியந்தாதி - 13, 44.). ஒருவரையே இங்ஙனம் ஒவ்வாத பல முறையினராகக் கூறுதல், ' இவையெல்லாம் ஒருபயன் கருதி நாடகமாத்திரையால் அவர் மேற்கொள்வனவே யன்றி, உண்மையில் அவர் இவ்வாறு திரிபுற்று நிற்பவரல்லர் ; அவர்தம் உண்மை இயல்பு, இவை அனைத்தினும்வேறு ' என்பது உணர்த்துதற் பொருட்டேயாம். இதனை, " ஒருவனே இராவணாதி பாவகம் உற்றாற் போலத் - தருவன் இவ்வடிவம் எல்லாம் தன்மையும் திரியானாகும் " என விளக்குகின்றது சிவஞானசித்தி (சூ. 1 - 67).

இவற்றையெல்லாம், 'அபரஞானம்' எனப்படும் நூலுணர்வினால் நம்மனோரும் பரக்கக் கூறுதல் கூடுமாயினும், பரஞான

208 சங்கம் அரற்றச் சிலம்பொ லிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலை யாடச்
செங்கனி வாயித ழுந்து டிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம் பாடிக்
கங்கை இரைப்ப அராஇ ரைக்குங்
கற்றைச் சடைமுடி யான்க ழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே. 14

மாகிய அனுபூதியைப் பெற்ற அடிகள்போன்றவர்கட்கே இவை யெல்லாம் உண்மையான் விளங்குவன என்பதையும் அந்நூல்,

"சிவம்சத்தி தன்னை ஈன்றும்
சத்திதான் சிவத்தை ஈன்றும்
உவந்திரு வரும்பு ணர்ந்திங்
குலகுயி ரெல்லாம் ஈன்றும்
பவன்பிரம சாரி யாகும்
பான்மொழி கன்னி யாகும்
தவந்தரு ஞானத் தோர்க்கித்
தன்மைதான் தெரியு மன்றே"

என விளக்குகின்றது (சு. 2. 77.). கேள்வன் முதலிய பெயர் களைச் செய்யுள் நோக்கி முறைபிறழ வைத்தார்.

208. இரைப்ப - ஒலிக்க; இஃது உடனிகழ்ச்சியாகிய எதிர்காலத்தின்கண் வந்தது.

"நீரொலிக்க அராஇரைக்க நிலாமுகிழ்க்கும் திருமுடியார்" என்றதும் காணத்தக்கது (பெ. பு. திருக்குறிப்பு. 113.). 'கழற்கே பொங்கிய' என இயையும். 'காதலால் கொங்கைகள் பொங்க' என்க. இக் காமப் பொருள், 'இறைவன் திருவடியில் பேரன்புடையார்க்கு அது காரணமாக உடல் பூரிக்கும்' என் பதைக் குறிக்கும்.

209 ஞானக் கரும்பின் தெளிவைப் பாகை
நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயி னானைச்
சித்தம் புகுந்துதித் திக்க வல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டு கொண்ட
கூத்தனை நாத்தழும் பேற வாழ்த்திப்
பானற் றடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 15

210 ஆவகை நாமும்வந் தன்பர் தம்மோ
டாட்செயும் வண்ணங்கள் பாடி விண்மேல்
தேவர் கனவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்ற கொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப் பாடிச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்தும் நாமே. 16

---

209. ஞானக் கரும்பு, உருவகம். தெளிவு - அதன் சாறு. பாகு - அச்சாற்றைக் காய்ச்சுவதனாலாவது. நாடல் - நினைத்தல். கிடைத்தல் கூடாமையால், நினைத்தற்கும் அரியதாயிற்று. நலம், அதனையுடைய பொருட்கு ஆகுபெயர். நந்தா - கெடாத. 'சித்தம் புகுந்து தித்திக்க வல்ல தேனை' எனக் கூட்டுக. பானல் - நீலோற்பல மலர்.

210. ஆவகை - உயர்வெய்தும் வகையில். வந்து - சென்று; இடவழுவமைதி.

'' கனவிலும் தேவர்க் கரியாய் போற்றி ''

என முன்னரும் அருளிச்செய்தார். 'பாதங்களை நமக்குக் காட்டும்' என்க. சே அகம் ஏந்திய கொடி - எருதைத் தன்னகத்துக் கொண்ட கொடி. கொற்றம் - வெற்றி. சேவகம் - வீரம்.

211 தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளை பாடி
மால்விடை பாடி வலக்கை யேந்தும்
ஊனக மாமழுச் சூலம் பாடி
உம்பரும் இம்பரும் உய்ய அன்று
போனக மாகநஞ் சுண்டல் பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே. 17

212 அயன்தலை கொண்டுசெண் டாடல் பாடி
அருக்கன் எயிறு பறித்தல் பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடிக்
காலனைக் காலால் உதைத்தல் பாடி
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டு கொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடி யாடி
நாதற்குச் சுண்ணம் இடித்தும் நாமே. 18

---

211. தேன் அக மா மலர் - தேனை அகத்திலே உடைய சிறந்த மலர். 'தேனகக் கொன்றை மலர்' என மாற்றிப் பொருள் கொள்க. வானகம் - விண்ணில் இயங்குதற்குரிய. மதிப் பிள்ளை - பிள்ளை மதி; மூன்றாம் பிறை. மால் விடை - பெரிய இடபம். ஊனகமாமழு - பகைவரது ஊனை அகத்திலே உடைய பெரிய மழு. உம்பர் - மேலுலகம். இம்பர் - கீழுலகம். போனகம் - உணவு.

212. பிரமன் தலைகளுள் ஒன்றைச் சிவபெருமான் கைந் நகத்தால் கிள்ளி எறிந்தபொழுது அதனைச் செண்டாடினார் என்பது இதனால் பெறப்படுகின்றது.

"அரி அயன்தலை வெட்டிவட் டாடினார்"

என்ற அப்பர் திருமொழியும் (திருமுறை - 5. 85. 2.) இங்கு நினைக்கத்தக்கது. அருக்கன் - சூரியன். இவனது பல்லைச் சிவபெருமான் பறித்தது தக்கன் வேள்வியில். கயம் - யானை.

213 வட்ட மலர்க்கொன்றை மாலை பாடி
மத்தமும் பாடி மதியும் பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லை பாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம் பாடிக்
கட்டிய மாசுணக் கச்சை பாடிக்
கங்கணம் பாடிக் கவித்த கைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம் பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்தும் நாமே. 19

214 வேதமும் வேள்வியும் ஆயி னார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயி னார்க்குச்
சோதியு மாய்இருள் ஆயி னார்க்குத்
துன்பமு மாய்இன்பம் ஆயி னார்க்குப்
பாதியு மாய்முற்றும் ஆயி னார்க்குப்
பந்தமு மாய்விடும் ஆயி னாருக்
காதியும் அந்தமும் ஆயி னாருக்
காடப்பொற் கன்ணம் இடித்தும் நாமே. 20

திருச்சிற்றம்பலம்.

யானையுருக் கொண்ட அசுரன் கயாசுரன். இயைந்தன முப்புரம் - ஒருங்கு கூடி இயங்கிய மூன்று கோட்டைகள். நயம் - விருப்பம்; என்றது, திருவருளை.

213. 'வட்ட மாலை' என இயையும். இஃது இண்டையைக் குறித்தது. மத்தம் - ஊமத்த மலர். சிட்டர் - மேலோர்; இது தில்லைவாழந்தணர்களைக் கூறியதாம். செல்வம் - செல்வம் போல உள்ள சிவபெருமான். மாசுணம் - பாம்பு. கச்சை - அரையில் உடைமேல் இறுகக் கட்டுவது. "மாசுணம்" என்றது, "கங்கணம்" என்றதனோடும் இயையும். சிவபெருமான் கையில் ஒரு பாம்பைத் தனியாக வைத்து ஆட்டுதலும் பலவிடங்களிற் கூறப்படும்.

214. பின் வருவனபோல மறுதலைப் பொருள்பட, "வேதம்" என்றதற்கு, 'வேதமுடிபினால் உணர்த்தப்படுவதாகிய ஞானம்' எனப் பொருள்கூறுக. "வேள்வி" என்றது,

கன்ம காண்டத்துள் சொல்லப்பட்ட வேள்விகளையாம். மெய்ம்மை-நிலைத்த பொருள். பொய்ம்மை - நிலையாத பொருள். சோதி - ஒளி ; ஞானம். இருள் - அஞ்ஞானம். பாதியாதல், ஒரு வடிவத்தில் பாதி வடிவமேதானாய் இருத்தல். மற்றைப் பாதி வடிவம் அம்மை என்க. இது, மாதொரு கூறுனவடிவம். முற்றுமாதல், முழுவடிவமும் தானேயாதல்; இது உமாமகேசுர வடிவம் முதலாகப் பலவாம். இவ்வடிவங்களில், அம்மை தனித்துக் காணப்படுவாள்,

'' பெண்ணுரு ஒருதிறன் ஆகின்று ; அவ்வுருத்
தன்னுள் அடக்கிக் கரக்கினும் கரக்கும் ''

எனப் புறநானூற்றுக் கடவுள் வாழ்த்திலும் இவ்விருவகை வடிவும் கூறப்பட்டன. பந்தம் - கட்டு ; பிறப்பு நிலை. வீடு - பிறப்பு நீங்கிய நிலை.

இறைவன் மெய்ப்பொருளாதல் வெளிப்படை. எல்லாப் பொருளிலும் உடலில் உயிர்போலக் கலந்து நிற்றலால், நிலையாப் பொருளும் ஆகின்றான். ஞானம், இறைவனது இயற்கைத் தன்மை, அஞ்ஞானத்தைத் தருகின்ற ஆணவத்திலும் திரோதான சத்தியாய் இயைந்து நிற்றலின், அஞ்ஞானமும் ஆகின்றான். மறைத்தல் தொழிலால் பிறவித் துன்பத்தை விளைவித்தலின், துன்பமாகின்றான். இன்பம் - பேரின்பம். இஃது அவனிடத்தில் இயல்பாய் உள்ளது. பந்தம் - திரோதான சத்தி வாயிலாக ஆணவத்தின் சத்தியை நடத்தி உயிர்களைப் பிறப்பினுள் அழுத்தல். ஐந்தொழில்களுள், 'மறைத்தல்' என்பது இதுவே. விடாவான் இறைவனே என்பதும், அவனே உலகிற்கு ஆதியும், அந்தமும் என்பதும் வெளிப்படை. இவ்வாற்றால், 'அவனையன்றி யாதும் இல்லை' என்பது உணர்த்தியவாறு.

சங்கோல மிடும்பழனத் தடம்புடைசூழ் வாதவூர்
எங்கோவின் செய்கையறிந் தியல்புடையோ ரெனநாடிப்
பொங்கோத வேலைநிலம் புரந்துபெரும் பகைதுரந்து
செங்கோன்மை முறைநடத்துஞ் செழுந்தலைமைத் திறநல்கி. 14

— திருவாதவூரடிகள் புராணம்.

10. திருக்கோத்தும்பி

[கோத்தும்பியை நோக்கிக் கூறுவதாக அமைந்த பகுதி யாதலால் இது, 'திருக்கோத்தும்பி' எனப் பெயர் பெற்றது. கோ - அரசு. தும்பி - வண்டு. கோத்தும்பி - அரச வண்டு; ஆண்வண்டு. களவொழுக்கத்தாற் கலந்த தலைவன் ஒருவழித் தணந்தபொழுது தலைவி ஆற்றுமை மிகுதியால் கடலும், கானலும், கழியும், புள்ளும், மரமும் போல்வனவற்றை முன்னிலைப் படுத்துச் சிலசொற் சொல்லி இரங்குவாள்; அவ்வழி அவைகளை அவள், 'நீவிர் என்பொருட்டுத் தலைவரிடம் தூது சென்று சில சொல்லிவாருங்கள்' எனக்கூறுதலும் உண்டு; தலைவி சொல்லியவற்றைக் கேட்டலும், அவட்கு அவை ஒன்று செய்தலும் இலவாயினும், தனது ஆற்றுமை ஒருசிறிது நீங்கச் சிறிது ஆற்றியிருத்தலே இக்கூற்றுக்களுக்கெல்லாம் பயனும். இவை 'மறைந்தவற் காண்டல்'' என்னும் நூற்பாவினுள் (தொல். பொருள். 109.) ''காமம் சிறப்பினும்'' என்றதனுற் கொள்ளப்படும்; எவ்வாறெனின், ''சொல்லா மரபின் அவற்றெடு கெழீஇச் செய்யா மரபின் தொழிற்படுத் தடக்கியும்'' (ஷை. ஷை - 194.) எனப் பின்னர்க் கூறுதலான் என்க. இவற்றை, ''சென்ருேன் நீடலிற் காமம் மிக்க கழிபடர் கிளவி'' என்ருர் பிற்காலத்தார் (நம்பியகப்பொருள் - 168.). இக் கூற்றுக்கள் பாடாண் திணையுள்ளும் அமையப் பாடுவராகலின், அம் முறையில் சிவபெருமானைத் தலைவனுகப் பெற்ற தலைவி அப்பெருமான் தன்னை உடன்கொண்டு செல்லாது பிரிந்த பிரிவின்கண் ஆற்றுளாய் வண்டினை நோக்கிக் கூறுவதாக அமைந்தது இப் பகுதி. பாடாண்திணையுள் இதுபோல வருங் கூற்றுக்களே பிற்காலத்தில் வண்டுவிடு தூது, கிள்ளைவிடு தூது முதலிய அஃறிணைப் பொருள்பற்றிய தூதுப் பிரபந்தங்களாக வளர்ச்சியுற்றன. 'நெஞ்சுவிடு தூது' என்பதும் இதுவேயாம். வடமொழியுள் மேகவிடு தூதும் காணப்படும். எனவே, அடிகள் அருளிச்செய்த குயிற் பத்து, கிளிப் பத்து (திருத்தசாங்கம்) என்பனவும் இப்பொருள்மேல் வந்தனவாதல் விளங்கும். தேவாரத் திருமுறைகளிலும் இவ்வாறு வந்துள்ளவற்றைக் காண்க.

'இருபது' என்னும் தொகையமைந்த பாடற்றெகுதிகளைக் கோக்கின்றுழி, எட்டடியான் இயன்ற பாட்டுக்களது தொகு

தியை முன்னும், ஆறடியான் இயன்ற பாட்டுக்களது தொகு தியை அதன்பின்னும்வைத்து, நான்கடிகளான் இயன்றவற்றுட் சந்தம் பெற்று வந்ததனை முதற்கண் வைத்து, அதன்பின்னர்ச் சந்தமின்றி வருவனவற்றை வைக்கத் தொடங்கி, காமம் மிக்க கழிபடர் கிளவி சிறப்புடைத்தாகலின் அதனையுடைய இப் பகுதியை முதற்கண் வைத்துக் கோத்தனர் முன்னோர் என்க.

இது முழுவதும், பெரும்பான்மையும் வெண்டளையும், சிறு பான்மை கலித்தளையும் பெற்று வந்த நாலடித் தரவுக் கொச்ச கக் கலிப்பாக்களான் இயன்றுள்ளது. 'இது **தில்லையில்** அருளிச்செய்யப்பட்டது' என்பதே எல்லாப் பதிப்புக்களிலும் காணப்படுவது. இதன்கண் அடிகள் சிவபெருமானது அருட் குணங்களில் நினைத்தல் ஒன்றே காணப்படுதல் பற்றி இதற்கு, '**சிவனோடு ஐக்கியம்**' எனக் குறிப்புரைத்தனர் போலும் முன்னோர்.

நாலடித்தரவுக் கொச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

215 பூவேறு கோனும் புரந்தரனும் பொற்பமைந்த
நாவேறு செல்வியும் நாரணனும் நான்மறையும்
மாவேறு சோதியும் வானவருந் தாமறியாச்
சேவேறு சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ! 1

---

215. எல்லா இடத்தும், "கோத்தும்பீ" என வருவதனை முதலிற் கொள்க.

பூ ஏறு கோன் - தாமரை மலர்மேல் ஏறி வீற்றிருக்கும் தலைவன்; பிரமதேவன். பொற்பு - அழகு. நா ஏறு செல்வி - எல்லார் நாவிலும் சென்று தங்கும் அரசி; கலைமகள். மா - பெருமை. 'ஏற்றுச் சோதி' எனற்பாலது. எதுகை நோக்கி, "ஏறு சோதி" என நின்றது; 'இடபத்தினை உடைய ஒளி வடிவினன்; உருத்திரன்' என்பது இதன் பொருள். சே ஏறு சேவடி - இடபத்தின்கண் ஏறும் செவ்விய திருவடி. சேவடிக்கு- சேவடிக்கண்; உருபுமயக்கம். ஏகாரம் பிரிநிலை. பின்வருவன வற்றிற்கும் இவை பொருந்தும். 'குணமூர்த்தியாகிய உருத்திர னுக்கும், நிற்குணமூர்த்தியாகிய பரமசிவனுக்கும் வடிவு, பெயர்

முதலியன ஒருவகையினவாயினும், உருத்திரன் ஆன்மவருக்கத்தினன் எனவும், பரமசிவன் யாவர்க்கும் பதியாகிய முதற்கடவுள் எனவும் பகுத்துணர்ந்து கோடல் வேண்டும் என்பது உணர்த்துதற்கு இருவர்க்கும் இடப வாகனம் உண்மையை விதந்தோதியருளினர். வானவரோடு உடன் வைத்து எண்ணினமையானும், "அறியா" என்றதனானும், "மா ஏறு சோதி" உருத்திரன் என்பதும், 'ஒருவரும் அறியாச் சேவடி' என்றமையால், அவை பரமசிவனுடையன என்பதும் இனிது விளங்கின.

வண்டினைப் பரமசிவன்பால் சென்று ஊது என ஏவுகின்றவள், ஏனையோரை அப்பெருமான் என எண்ணி மயங்காமைப் பொருட்டு, எல்லார் அடையாளங்களையும் தெரித்துக் கூறினாள். 'அவ்வடையாளங்களுள், வானவரோடு ஒருங்கு நிற்றலும், அவர் அனைவரும் வணங்க அவர்கட்கு மேல் நிற்றலும் உருத்திரனோடு பரமசிவனிடையுள்ள வேற்றுமை' என்பதை உடம்பொடு புணர்த்திக் கூறினாள். இவற்றிடையே 'வானவருள் நாவேறு செல்வியும், நான்மறையும் இசையைத் தந்து நிற்றல் உண்டாகலின், இசையில் விருப்புடைய நீ அவ்விடத்தும் மயங்கியொழியற்க' என்பதையும் கூறினாள் என்க. சேவடி, செங்கமல மலர்போல்வன ஆகலின் அது வண்டிற்கு மிகவும் இன்பம் செய்யும் என்பது கருதி, 'அவற்றின்கண் சென்று ஊது' என்றாள். இதனானே, 'ஆன்மாக்களாகிய வண்டுகட்கு அச் சேவடி அறிவாகிய மணத்தினையும், ஆனந்தமாகிய தேனினையும் அளித்துப் பிறிதொன்றனையும் அறியாது இன்பம் ஒன்றையே துய்த்துத் தம்மிடத்தே கிடக்கச்செய்யும்' என்பதும் போதரும்.

தும்பி சென்று ஊதும்பொழுதே அதனது நறுமணத்தாலும், பிறவற்றாலும் அது தன்னிடத்துத் தும்பி என்பதனை உணர்ந்து, தன்னை நினைந்து வருவான் என்னும் துணிவினளாதலின், 'இன்னது சொல்' எனக் கூறாமல், ஊதுதலால் தும்பிக்கு உளதாகும் பயனைமட்டுமே குறித்து, "ஊதாய்" என்று ஒழிந்தாள். ஊதுதல் - ஒலித்தல்.

216 நானார்என் உள்ளமார் ஞானங்க ளாரென்னை யாரறிவார்
வானோர் பிரானென்னை ஆண்டிலனேல் மதிமயங்கி
ஊனா ருடைதலையில் உண்பலிதேர் அம்பலவன்
தேனார் கமலமே சென்றூதாய் கோத்தும்பீ! 2

---

216. "வானோர் பிரான் மதிமயங்கி என்னை ஆண்டில னேல், நான் ஆர்........யாரறிவார்" என்க. "ஆர்" என்றது, 'யார்' என்னும் வினா வினைக் குறிப்பின் மரூஉ. இஃது, உயர் திணை முப்பாற்கும் பொதுவாய் 'எத்தன்மையன், எத்தன்மை யள், எத்தன்மையர்' என்னும் மூன்று பொருள்களுள் ஒன்றை இடத்துக்கேற்பத் தந்துநிற்கும். இஃது இங்கு 'நான் ஆர்' எனத் தன்மையில் வந்தது இடவழுவமைதி.

"ஊதைகூட் டுண்ணும் உகுபனி யாமத்தெங்
கோதைகூட் டுண்ணிய தான்யார்மன் – போதெல்லாம்
தாதொடு தாழுந்தார்க் கச்சி வளநாடன்
தூதொடு வாராத வண்டு"

என்றாற்போல (தொல். சொல். சேனாவரையம் - 210.) அஃறிணைக்கண் வருதல் திணைவழுவமைதி. அவ்வாற்றான் இங்கு "என் உள்ளம் ஆர்", "ஞானங்கள் ஆர்" என வந்தது. இவை யெல்லாம் பிற்கால வழக்கு. இவ்வாற்றால், "நான் ஆர்" என்றது, 'நான் எத்தன்மையேனாய் இருப்பேன்' எனவும், "என் உள்ளம் ஆர்" என்றது, என் மனம் எத்தன்மையதாய் இருக்கும்' எனவும், "ஞானங்கள் ஆர்" என்றது, 'என் அறிவுகள் எத்தன்மையனவாய் இருக்கும்' எனவும் பொருள் தருமாறு அறிக. என்னை யார் அறிவார் - என்னை ஒருமகனாக இவ்வுலகில் யாவர் அறிந்து நிற்பார். 'ஆண்டிலனாயின் இவ் வாறு ஆம்' எனவே, 'ஆண்டதனால் இப்பொழுது நான் இறை வனுக்குப் பேரன்பனாயினேன்; என் உள்ளம் அவனையே நினைந்து உருகுகின்றது; என் அறிவுகள் எல்லாம் அவனையே பொருளாக அறிந்து நிற்கின்றன; என்னை எல்லாரும் சிவனடி யான் என்று அறிந்து நிற்கின்றனர்' என்பது தானே பெறப் பட்டது. தலைவி கூற்றில் இவை, தலைவனால் தமக்கு முதுக் குறைவுண்டாயிற்றாக ஊரெல்லாம் சொல்லப்படுதலைக் குறிக் கும். அறிவு ஒன்றேயாயினும், அறியப்பட்ட பொருள்பற்றி

வேறுவேருய்த் தோன்றலின், "ஞானங்கள்" எனப் பன்மையாற் கூறினர்.

இம் முதலடி ஐஞ்சீருடையதாய்க் கொச்சகக் கலிப்பாவின் கண் மயங்கி வந்தது, அஃது யாப்பினும் பொருளினும் வேற்றுமையுடையதாகலின் (தொல். செய். 452.).

" வெண்டளை விரவியும் ஆசிரியம் விரவியும்
ஐஞ்சீ ரடியும் உளஎன மொழிப "

என்றதனைக் (ஷை. ஷை. 369) கலிப்பாவின் இலக்கணமாகவே கொண்டார் பேராசிரியர்.

" அருகிக் கலியில் அகவன் மருங்கின்ஐஞ் சீரடியும்
வருதற் குரித்தென்பர் வான்றமிழ் நாவலர் "

எனப் (யா. கா.) பிற்காலத்தாரும், கலிப்பாவின்கண் சிறுபான்மை ஐஞ்சீரடி மயங்கிவரும் எனக் கூறினமை காண்க. சீர் மிகுதியாக வந்தமையின் இடையே வெண்டளையாதல், கலித்தளையாதல் வருதலின்றி ஆசிரியத்தளை வந்தது. பின்னரும் இக் கொச்சகக் கலிப்பாவில் ஐஞ்சீரடி வருவன உள; அவற்றை அறிந்துகொள்க.

" மதிமயங்கி " என்றது, அருளது மிகுதியைக் குறித்தவாறு. இதனனே, இறைவற்கு மயக்கம் உண்மை கூறிய குற்றம் எய்தாதாயிற்று. இங்ஙனமாகவும், ' மயங்கி ' என்றதனைப் பெயர் எனக் கொண்டு அதனைப் பிரமனுக்கு ஆக்கி, பின்வரும், ' ஊனர் உடைதலை ' என்றதனை, ' அத்தலை பிரமன் தலை ' என விதந்தவாருக உரைப்பாரும் உளர். புணர்ச்சிப் பத்தின் ஒன்பதாம் திருப்பாட்டுள், " நாயேன்றனை ஆண்ட பேதாய் " என வருவதற்கு அவரும் வேறுரையாது, ' அன்பினல் கூறியது ' என்றே போதலின், ஈண்டும் அவ்வாறு உரைத்துப் போதலே தக்கது என்க. " மதிமயங்கி, பேதை " என்ருற் போல்வன சொல்வகையால் இறைவனை இகழ்ந்துரைப்பன போலத் தோன்றினும், கருத்துவகையால், ' அவன் நம்மை ஆட்கொள்ளுதற்குரிய தகுதி ஒன்றேனும் நம்மிடத்தில்லா தொழியினும், தனது பேரருள் ஒன்றுனே நம்மை ஆட்கொண்டருளினுன் ' என அவனது கருணையின் பெருமையைப் பெரிதும்

217 நினைந்தனை உள்ளதோர் பூவினில்தேன் உண்ணுதே
நினைந்தோறுங் காண்தோறும் பேசுந்தோறும் எப்போதும்
அனைத்தெலும் புள்நெக ஆனந்தத் தேன்சொரியுங்
குனிப்புடை யானுக்கே சென்றுதாய் கோத்தும்பி ! 3

புகழ்ந்துரைப்பனவேயாதலின், அவை குற்றமாதல் யாண்டையது என்க. இன்னோரன்னவற்றைக் குற்றமெனின், தேவாரத் திருமுறையுள் இறைவனை "பித்தா" என்றும், "மதியுடையவர் செய்கை செய்யீர்" என்றும் (திருமுறை-7.1.1,5.3.) பிறவாறும் வந்தனவும், இங்கும் நீத்தல் விண்ணப்பத்துள் (49),

"வெங்கரியின் - உரிப்பிச்சன் தோலுடைப் பிச்சன்நஞ்
சூண்பிச்சன் ஊர்ச்சுடுகாட்டு
எரிப்பிச்சன்"

என வந்தனவும், பிறவும் எல்லாம் குற்றமாயொழியும். அவையெல்லாம் சிறிதே கடுமையுடையன; இஃது அன்னதன்றெனின், 'இறைவனிடம் சிறு குற்றங்களைச் செய்தல் பிழையன்று' என்பது பட்டு முறைமையன்றுமென்றொழிக.

'என்னை இங்ஙனம் முதுக்குறைவு எய்தினளாக ஊரவர் பலரும் சொல்லுமாறு வந்து கலந்த தலைவனை மீட்டும் அவ்வாறேயாக வருமாறு சென்று ஊது' என்கின்றாளாகலின், "நானோர்" என்றது முதலியவை, "சென்று ஊதாய்" என்பதனோடு இயைந்து நிற்றல் அறிக.

'ஊன் ஆர் தலை, உடை தலை' என்க. உடைதல் - சிதைதல். தலை ஓடு சிதைவில் வழி பலிப்பாத்திரமாதற்கு ஏலாமை உணர்க. "கமலம்" என்றது, உருவக வகையால், திருவடியை உணர்த்திற்று. 'கமலத்தே' என்னும் சாரியை தொகுத்தலாயிற்று.

217. "பூவினில்" என்றதனை முதலிற் கொள்க. உள்ளது - உள்ளதாகிய. ஓர் - சிறிய. "உண்ணுதே", 'உண்ணாதை' என்பதன் மரூஉ. ஆனந்தத் தேன், உருவகம். குனிப்பு - நடனம். 'என் சொற் கேட்பின், நின் முயற்சியினும் நீ பெரும்பயன் எய்துவாய்' என்பாள் இவ்வாறு கூறினாள்.

218 கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்னொப்பில் என்னையும் ஆட் கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணைச்
சுண்ணப்பொன் நீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ! 4

இதனுள், 'பூ' என்றது உலகத்தையும், " தினைத்தனை உள்ள தோர் தேன் " என்றது, அதன்கண் உள்ள சிற்றின்பத்தையும் குறித்து நிற்றல் காண்க. இதனானே, திருவருள் பெற்ற பின்னரும் ஆன்மபோதம் உலக இன்பத்தை வேம்பு தின்ற புழுப்போல (சிவஞானபோதம். சூ. 9. அதி. 3.) மீண்டும் நோக்குதல் உண்மை பெறப்பட்டது.

218, கண்ணப்பன், கண்ணப்ப நாயனார். அவரது வர லாறு நன்கறியப்பட்டது. 'அவர்' இறைவனுக்குச், செய்தன வெல்லாம் அடியராவார்க்குச் சிறிதும் ஒவ்வா தனவேயாயினும் இறைவன் அவ்வொவ்வாச் செயல்களை நோக்காது அவரை மகிழ்ந்தேற்றுக்கொண்டது. அவரது ஒப்புயர்வற்ற அன்பு கருதி யேயாம்; அங்ஙனமாக, என்னிடத்து உள்ள ஒவ்வாச் செயல்களை நோக்காது என்னை அவன் ஆட்கொள்ள வேண்டுமாயின், அவரது அன்புபோலும் அன்பு என்னிடத்தில் உண்டாதல் வேண்டும்; அஃது இல்லையாகவும், என்னை அவன் ஆட் கொண்டது வியப்பினும் வியப்பே' என்பது இத்திருப்பாட்டிற் குறிக்கப்பட்டது.

'அன்பு' எனப் பின்னர் வருகின்றமையின், 'கண்ணப்பன்' என்றதும், ஆகுபெயரால், அவரது அன்பினையே குறிக்கும். "என் ஒப்பு இல் என்னையும்" என்றது, 'குற்றம் புரிதலில் எனக்கு நிகர் வேறொருவர் இல்லாத என்னையும்' என்றபடி.

" உன்னைஎப் போதும் மறந்திட்
டுனக்கினி தாயிருக்கும்
என்னைஒப் பார்உளரோ சொல்லு
வாழி இறையவனே "

என்ற அப்பர் திருமொழியை நோக்குக (திருமுறை 4-112-4).

" வண்ணம் பணித்து " என்பது வலிந்து நின்றது; 'உய்யும் வகையை அருளிச்செய்து' என்பது பொருள். எல்லாரும்,

219 அத்தேவர் தேவர் அவர்தேவர் என்றிங்ஙன்
பொய்த்தேவு பேசிப் புலம்புகின்ற பூதலத்தே
பத்தேதும் இல்லாதென் பற்றறநான் பற்றிநின்ற
மெய்த்தேவர் தேவற்கே சென்றூதாய் கோத்தும்பி! 5

'வண்ண' எனச் செயவெனெச்சமாக்கி உரைத்தார்: இஃது அங்ஙனம் என ஆமாறு இன்றென்க. "வா என்ற" என்றது. 'என்பால் வருக என அழைத்துத் தனக்கு அடிமையாக்கிக் கொண்ட' என்றவாறு, "வருக என்று பணித்தனை" என முன்னருங் கூறினார் (திருச்சதகம்-41). சுண்ண நீறு - நீற்றுச் சுண்ணம்; 'திருநீற்றையே நறுமணப் பொடியாகப் பூசிக் கொள்பவன்' என்றபடி. பொன் - அழகு, தலைவி கூற்றில் இது, 'முன்பு அன்புடையேனாய்த் தோன்றிய அவர்க்கு யான் இன்று அன்பில்லாதவளாய்த் தோன்றுகின்றேன்' என்னும் கருத்தினதாம்.

219. "தேவர், அவர்" என்பன உயர்வின்கண் வந்த பன்மை. அத்தேவர் தேவர் - அந்தக்கடவுளே முதற்கடவுள். "அவர்" என்றது, முன்னர்க் கூறியவரைச் சுட்டியதன்று; வேறொருவரைச் சுட்டியதாம்; "என்று இங்ஙன்" என்றது, 'என்று இவ்வாறு ஒரோவொரு கடவுளைச் சுட்டி' என்றவாறு. பொய்த்தேவு பேசி - பொய்யான கடவுட்டன்மையைக் கூறி. தேவு - கடவுட்டன்மை. 'அவரெல்லாம் முதற் கடவுளராகாமை, வேதங்களாலும், புராணங்களாலும் இனிது விளங்கிக்கிடப்பது' என்பது திருவுள்ளம். பற்று, 'பத்து' எனத்திரிந்தது. பற்று ஏதும் இல்லாது - வேறொரு துணையும் இல்லாது தான் ஒருவனுமே துணையாக. பற்றுஅற - எனது உலகப்பற்று நீங்கும்வண்ணம். "தேவர் தேவர்" என்றது, 'தேவர்க்குத் தேவர்' என்னும் பொருட்டாய், 'முதற்கடவுள்' எனப்பொருள் தந்து, "மெய்" என்ற அடைபெற்று, 'உண்மை முதற் கடவுள்' என்றவாறாயிற்று. 'பலரும் பொய்த்தேவு பேசிப் பிறவிக் கடலினின்றும் ஏறமாட்டாது புலம்புகின்ற இப் பூதலத்தே, நான் மெய்த்தேவை உணர்ந்து பற்றிக் கரையேறும் பேறுடையனாயினேன்' என மகிழ்ந்தருளிச்செய்தவாறு, தலைவி கூற்றில் இது, வேற்று வரைவை விரும்பாமையைக் குறிக்கும்.

220 வைத்த நிதிபெண்டிர் மக்கள்குலம் கல்வியென்னும்
பித்த உலகிற் பிறப்போ டிறப்பென்னும்
சித்த விகாரக் கலக்கந் தெளிவித்த
வித்தகத் தேவற்கே சென்றூதாய் கோத்தும்பீ! 6

221 சட்டோ நினைக்க மனத்தமுதாஞ் சங்கரனைக்
கெட்டேன் மறப்பேனோ கேடுபடாத் திருவடியை
ஒட்டாத பாவித் தொழும்பரைநாம் உருவறியோம்
சிட்டாய சிட்டற்கே சென்றூதாய் கோத்தும்பீ! 7

---

220. 'அச் சித்த விகாரம்' எனச் சுட்டு வருவித்துரைக்க. விகாரம் - திரிபு; மாற்றம். 'விகாரமாகிய கலக்கம்' என்க. கலக்கம் - திகைப்பு. பிறப்போடு இறப்பு என்னும் கலக்கம் - பிறப்பிற்கும், இறப்பிற்கும் காரணமாகிய கலக்கம். வித்தகம் - திறல்; இது, பிறர் இது செய்யமாட்டாமை உணரநின்றது. "தீராநோய் தீர்த்தருள வல்லான் றன்னை" என்று திருநாவுக்கரசரும் அருளிச் செய்தார் (திருமுறை - *6. 54. 8.*).

221. 'சங்கரனைச் சட்டோ நினைக்க மனத்து அமுதாம்; ஆதலின் அவனது திருவடியை மறப்பேனோ' என்க.

'சட்ட' என்பது, 'சட்டோ' எனத் திரிந்துநின்றது.

"சுட்டி யுணர்வதனைச் சுட்டி அசத்தென்னச்
சட்ட இனியுளது சத்தேகாண்"

(சிவஞானபோதம் - சூ - *9.* அதி - *2.*) என்பதன் உரையில், "சட்ட என்பது செப்பப் பொருட்டாயதோர் அகரவீற்றிடைச் சொல்; அது, 'சட்டம்' என இழிவழக்கில் மகரவீறாய் மருவிற்று' என மாபாடியம் உடையார் உரைத்தமை காண்க.

'சங்கரன்' என்பது, 'இன்பத்தைச் செய்பவன்' என்னும் பொருளதாதலின், 'உள்ளத்தில் அமுதம் ஊற்றெடுக்கச் செய்பவன்' என்பதனைக் கூறுமிடத்தில் இறைவனை அப்பெயராற் குறித்தருளினர். 'கெட்டேன்' என்பது, அவலக் குறிப்பு உணர்த்துவதோர் இடைச்சொல். இதனை, "அத்தனுக் கென்கொல் கெட்டேன் அடுத்தது" என்றாற்போல்வனவற்றிற்காண்க (பெ. பு. *168.*). ஒட்டாத - அப்பெருமானிடத்து உள்ளம்

222 ஒன்ருய் முளைத்தெழுந் தெத்தனையோ கவடுவிட்டு
நன்ருக வைத்தென்னை நாய்சிவிகை ஏற்றுவித்த
என்ருதை தாதைக்கும் எம்மனைக்கும் தம்பெருமான்
குன்ருத செல்வற்கே சென்றூதாய் கோத்தும்பீ ! 8

பொருந்தாத. "பாவி" என்றது பன்மை யொருமை மயக்கம். தொழும்பர் - அடிமைகள். எல்லாரும் இறைவன் அடிமைகளேயாதலின், அவர் எல்லாரையும் தாங்கும் தன் கடனைச் செய்து நிற்கின்ருன் இறைவன். ஆயினும், அவனது தாங்குதலைப் பெற்றும், தம் கடனுகிய பணியை (திருமுறை - 5 - 19. 9.) அவனுக்குச் செய்யாது பிறதொழில்களைச் செய்தே காலம் கழிப்பவரை, "பாவித் தொழும்பர்" என்று அருளினுர். உரு - பொருள். 'உருவாக' என ஆக்கம் வருவிக்க. அறியோம் - மதியோம். 'சிட்டமாய' என்பதில், 'அம்' என்பது குறைந்துநின்றது. சிட்டம் - மேன்மை. மேன்மையுடையாரை ஈண்டு, 'மேன்மை' என்றதனை,

"இலக்கம் உடம்பிடும்பைக் கென்று கலக்கத்தைக்
கையாருக் கொள்ளாதாம் மேல்"

(குறள் - 624.) என்புழி, மேலோரை, 'மேல்' என்றது போலக் கொள்க. கொள்ளவே, 'சிட்டாய சிட்டன்' என்பது, 'மேன்மையுடையாருள் மேன்மையுடையான்' என்றவாயிற்று. "பாவித் தொழும்பர்" என்றது, தலைவி கூற்றில், இயற்பழித் தலும், தூது செல்லாமையும் உடைய தோழியைக் குறிக்கும்.

222. "முளைத்தெழுந்து" எனவும், "கவடுவிட்டு" எனவும் வந்தமையின், "ஒன்ருய்" என்றது 'ஒருமரமாய்' எனக் குறிப்புருவகமாயிற்று. இறைவன் தன்னியல்பில் ஒருவனேயாய் இருந்தும், உலகத்தைத் தொழிற்படுத்துதற்பொருட்டு அளவிறந்த வடிவும், பெயரும் உடையவனுய்த் தோன்றலின், "ஒன்ருய் முளைத்தெழுந்து எத்தனையோ கவடுவிட்டு" என்ருர். 'தம்மை ஆட்கொண்டதும் அத்துணைச் செயல்களுள் ஒன்று' என்றற்கு இதனை எடுத்துக் கூறினுர். நன்று ஆக வைத்து - நன்மை உண்டாகும்படி திருத்தி. "ஏற்றுவித்த" 'ஏற்றுவித்தது போலச் செய்வித்த' என்னும் பொருட்டாகலின், அஃது, 'என்னை' என்னும் இரண்டாவதற்கு முடிபாயிற்று.

223 கரணங்கள் எல்லாங் கடந்துநின்ற கறைமிடற்றன்
சரணங்க ளேசென்று சார்தலுமே தான்எனக்கு
மரணம் பிறப்பென் றிவையிரண்டின் மயக்கறுத்த
கருணைக் கடலுக்கே சென்றூதாய் கோத்தும்பி! 9

224 நோயுற்று மூத்துநான் நுந்துகன்றாய் இங்கிருந்து
நாயுற்ற செல்வம் நயந்தறியா வண்ணமெல்லாம்
தாயுற்று வந்தென்னை ஆண்டுகொண்ட தன்கருணைத்
தேயுற்ற செல்வற்கே சென்றூதாய் கோத்தும்பி! 10

தாதை தாதை - தந்தைக்குத் தந்தை. அன்னையை வேறு கூறினார், அவளது குடிக்கும் பெருமானுயினமைபற்றி. ஒருவர்க்குத் தந்தைவழி, தாய்வழி இரண்டும் சிவநெறி வழியாதல் அருமை என்பதனை,

"மரபிரண்டும் சைவநெறி வழிவந்த கேண்மையராய்"

என்ற சேக்கிழார் திருமொழியான் அறிக (திருஞான. 17.) குன்றாத செல்வம், அறிவும் இன்பமும்; இவற்றை 'அருள்' எனினும் இழுக்காது.

223. "கரணங்கள் எல்லாம்" என்றது, ஞானேந்திரியம், கன்மேந்திரியங்களாகிய புறக்கரணங்களும், மனம் முதலிய அந்தக்கரணங்களும் ஆகிய அனைத்தும் அடங்கவாம். அராகம் முதலிய உள்ளந்தக்கரணங்களையும் குறித்தல் பொருந்துவதே. "மயக்கு" என்றது இங்கு இளைப்பினை. "இரண்டின் மயக்கு" என்ற ஆறுவதன் தொகை, 'வாளது தழும்பு' என்பதுபோலக் காரியக் கிழமைப் பொருட்டு.

224. "நான் நுந்து கன்றாய் இங்கிருந்து" என்றதனை முதலிற் கூட்டுக. "உற்று, மூத்து" என்ற எச்சங்கள், 'அறியா' என்றதனோடு முடிந்தன. நுந்துகன்று - தாய்ப் பசுவால் உதைத்துத் தள்ளப்பட்ட கன்று. "செல்வம்" என்றதன்பின், 'போல' என்னும் உவம உருபு விரிக்க. "குணுங்கர் நாய் பாற் சோற்றின் - செவ்வி கொளல் தேற்றாது", "பொற் கலத் தூட்டிப் புறந்தரினும் நாய் பிறர் - எச்சிற்கிமையாது பார்த்திருக்கும்" (நாலடி - 322, 345.) என்றாற்போல்வன,

225 வன்னெஞ்சக் கள்வன் மனவலியன் என்னாதே
கன்னெஞ் சுருக்கிக் கருணையினால் ஆண்டுகொண்ட
அன்னந் திளைக்கும் அணிதில்லை அம்பலவன்
பொன்னங் கழலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ ! 11

226 நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனைப்
பேயனே துள்ளப் பிழைபொறுக்கும் பெருமையனைச்
சீயேதும் இல்லாதென் செய்பணிகள் கொண்டருளுந்
தாயான ஈசற்கே சென்றூதாய் கோத்தும்பீ ! 12

நாய் நல்லனவற்றை அறியாமையைக் குறித்தல் காண்க. "நாயுற்ற செல்வம் போல" என்றாராயினும், 'செல்வம் உற்ற நாய் அதன் சிறப்பை அறியாதவாறுபோல' என்பதே கருத்தாம். 'நயந்து' என்றதனை, 'நயப்ப' எனத் திரித்து, உவம உருபாக்குக. அறியாதது, இறைவன் செய்த திருவருள் நலத்தையாம். "அறியா" என்றதனை 'அழியா' எனப் பாடம் ஓதுதல் பொருந்துவதுபோலும். "வண்ணமெல்லாம் சென்று ஊதாய்" என இயைக்க. தாய் - தாயது தன்மை; பேரருள். 'ஒளி' எனப் பொருள்தரும், 'தேயு' என்னும் வட சொல்லின் ஈற்று உகரம் தொகுத்தலாயிற்று.

225. மன வலியன் - மனத்தால் வலியன். 'வலிய மனம் உடையவன்' என்பது கருத்து. 'கள்வன், வலியன்' என்பன ஆண்பாற் படர்க்கைச் சொல்லாயினும், தலைவி கூற்றில் தன்மை யொருமைச் சொற்களாகக் கொள்ளப்படும். 'பொய்கைகளில் அன்னப்பறவைகள் ஆடி இன்புறும் தில்லை' என்க.

226. இறைவன் அடிகளை, 'கோலமார்தரு பொதுவினில் வருக' என (கீர்த்தி - 128.) இங்கு நிறுத்திச் சென்றமை யானே அவர் அவனைப் பாடும் நிலை உண்டாயினமைபற்றி, "நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகன்" என்று அருளினார். இது தலைவி கூற்றில் வள்ளை, ஊசல் முதலியவை பாடி இரங்குதலைக் குறிக்கும். உள்ளப் பிழை - மனக் குற்றம்; அது, அவனது திருவருளைப் பேணாமை. தலைவி கூற்றில் குறிவழிச் செல்லாமை முதலியனவாம். இகழ்ச்சிக் குறிப் பிடைச் சொல்லாகிய 'சி' என்பது, பெயர்த்தன்மைப்பட்டு நின்றமை மேலே (பாட்டு - 156.) குறிக்கப்பட்டது.

227 நான்தனக் கன்பின்மை நானுந்தா னும்அறிவோம்
தானென்னை ஆட்கொண்ட தெல்லாருந் தாமறிவார்
ஆன கருணையும் அங்குற்றே தானவனே
கோனென்னைக் கூடக் குளிர்ந்தூதாய் கோத்தும்பி! 13

228 கருவாய் உலகினுக் கப்புறமாய் இப்புறத்தே
மருவார் மலர்க்குழல் மாதினொடும் வந்தருளி
அருவாய் மறைபயில் அந்தணனாய் ஆண்டுகொண்ட
திருவான தேவற்கே சென்றூதாய் கோத்தும்பி! 14

229 நானும்என் சிந்தையும் நாயகனுக் கெவ்விடத்தோம்,
தானுந்தன் தையலும் தாழ்சடையோன் ஆண்டிலனேல்;
வானுந் திசைகளும் மாகடலும் ஆயபிரான்
தேனுந்து சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பி! 15

---

227. "அறிவோம்" என்றதன்பின், 'அவ்வாறாகவும்' என்பதும் "அறிவார்" என்றதன்பின், 'ஆகலான்' என்பதும், "அங்கு" என்றதன்பின், 'இன்றும்' என்பதும் வருவிக்க. ஆன - அன்று உண்டான. "ஆன கருணையும்" என்ற உம்மை சிறப்பு. அங்கு - அவ்வாறு. "தான்" என்றது அசைநிலை. 'கோன் அவனே' என மாற்றிப் பொருள்கொள்க.

228. கரு - முதல். "உலகினுக்கு" என்றது தாப்பிசையாய், முன்னும் சென்றியையும். இப்புறம் - இவ்விடம்; நிலவுலகு. மாதினொடும் வந்தாளுதல்பற்றி மேலே (பக். 79.) கூறப்பட்டது. அரு வாய் மறை - அரிய, உண்மையான வேதம். திரு ஆன தேவன் - மங்கலம். என்றும் நீங்காது பொருந்தியுள்ள இறைவன்; 'சிவன்' என்றபடி.

229. எவ்விடத்தோம் - எத்துணைச் சேய்மையில் இருப்போம். 'அவ்வாறின்றித் தன் கருணை காரணமாக மிக அணியராம் வகை என்னை ஆண்டுகொண்ட அப்பெருமானது சேவடிக்கே சென்று ஊதாய்' என்க. சிந்தை - மனம். அதனை வேறுபோல அருளினர், தம் வழிப்படாது தன்வழியே செல்லுதலும் உடைமைபற்றி. இது தலைவி கூற்றிற்கும் பொருந்தும். "பிரான்" என்றதற்கு, 'அப் பிரான்' எனச் சுட்டு வருவித்துரைக்க. தேன் உந்து - தேனைச் சொரிகின்ற; என்றது குறிப்புருவகம்.

230 உள்ளப் படாத திருவுருவை உள்ளுதலும்
கள்ளப் படாத களிவந்த வான்கருணை
வெள்ளப் பிரான்எம் பிரான்என்னை வேறேஆட்
கொள்ளப் பிரானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ ! 16

231 பொய்யாய செல்வத்தே புக்கழுந்தி நாள்தோறும்
மெய்யாக் கருதிக் கிடந்தேனை ஆட்கொண்ட
ஐயாஎன் ஆருயிரே அம்பலவா என்றவன்றன்
செய்யார் மலரடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ ! 17

232 தோலும் துகிலுங் குழையும் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமுந் தொக்க வளையு முடைத்தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ ! 18

---

230. உள்ளப்படாத - நினைக்கவாராது மறைந்து நிற்கின்ற. இது, தன்முனைப்பின்வழி நினைக்குமிடத்தாம். உள்ளுதல், அருள்வழி நின்று நினைத்தலாம். அவ்விடத்து அவன் கள்ளந்தீர்ந்து வெளிப்பட்டு இன்பம் தருதலை, "கள்ளப்படாத களிவந்த வான்கருணை வெள்ளப் பிரான்" என்று அருளினார். வேறே - தனியே; என்றது, தவம் முயலாதிருக்கும் பொழுதும் தானாகவே வந்து ஆண்டமையை. 'கொள் அப்பிரான்' என்க.

231. பொய்யாய - நிலையாத. "செவ்வத்தே புக்கழுந்தி" என்றதனால், 'அடிகள் பெருஞ்செல்வத்திருந்தார்' என்பது பெறப்படும். படவே, அமைச்சராயிருந்தார் என்றல் பொருந்துவதேயாயிற்று. தன் சொல்லை அவ்வாறே கூறப் பணிக்கின்றாளாதலின், "என்னை ஆட்கொண்ட ஐயா! என் ஆருயிரே! அம்பலவா என்று ஊதாய்" என்றாள்.

232. இத் திருப்பாட்டு, இறைவன் மாதொரு கூறனாய் இருக்கும் நிலையை விளக்குகின்றது. தோல், குழை, வெள்ளை நீறு, சூலம் இவை வலப்பாகத்துக் காணப்படும் ஆணுருவத்தில் உள்ளவை. துகில், தோடு, சாந்து, வளை இவை இடப்பாகத்துக் காணப்படும் பெண்ணுருவில் உள்ளவை. பைங்கிளியும் அம்மை கையில் உள்ளதே. ஆதலின் அதனை, 'பைங்கிளியும் தொக்க வளையும்' எனக் கூட்டி உரைக்க. தொக்க - கூடிய; 'மிகுதியான' என்றபடி. இது, முதற்பொருள் சிவமும், சத்தியும் என

233 கள்வன் கடியன் கலதிஇவன் என்னாதே
வள்ளல் வரவர வந்தொழிந்தான் என்மனத்தே
உள்ளத் துறுதுயர் ஒன்றொழியா வண்ணமெல்லாம்
தெள்ளுங் கழலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ! 19

234 பூமேல் அயனோடு மாலும் புகலரிதென்
றேமாறி நிற்க அடியேன் இறுமாக்க
நாய்மேல் தவிசிட்டு நன்றாப் பொருட்படுத்த
தீமேனி யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ! 20

திருச்சிற்றம்பலம்

இருதிறப்பட்டு இயைந்து நிற்கும் இயற்கை வடிவமாகலின், "தொன்மைக் கோலம்" என்றும், இதனைக் காணின் இன்பம் தானே பெருகும் என்றற்கு, "குளிர்ந்து" என்றும் அருளிச் செய்தார்.

233. கள்வன் - வஞ்சகன். கடியன் - கடுமையுடையவன். கலதி - முகடி (மூதேவி). இது, 'நற்குணம் இல்லாதவன்' என்னும் பொருட்டு. இவை இப்பொருளவாயினும், தலைவி கூற்றில், முதல் இரண்டும் தன்மைக்கண் வந்த குறிப்பு வினைப் பெயராகவும், "இவன்" என்றது, 'ஈவன்' என்னும் தன்மை வினைமுற்றின் குறுக்கமாகவும் கொள்ளப்படும். "வர வர" என்றது, 'மெல்ல மெல்ல' என்னும் பொருளதாய் நின்றது. 'எல்லாவற்றையும் தெள்ளும்' என்க. தெள்ளுதல் - ஆராய்ந்து களைதல்.

234. புகல் - கிட்டுதல். அயனும் மாலும் முடியையும், அடியையும் கண்டுவிட இயலும் என்று எண்ணிய தம் எண்ணத்தை இழந்தாராகலின், "ஏமாறி நிற்க" என்றார். ஏமாறுதல் - எண்ணம் இழத்தல். "நாய்மேல் தவிசிட்டு" என்றது, 'அதுபோலும் செய்கையைச் செய்து' என்றபடி. நன்றாக - பெரிதும். தீமேனி - நெருப்புப்போலும் திருமேனி.

11. திருத்தெள்ளேணம்

['ஏனம்' என்பது, 'குடையோலை' எனப் பொருள் தருவதொரு சொல். இது பற்றியே, இச் சொல், கொள்கலங் கட்கும் பெயராய் இக்காலத்து வழங்கப்படுகின்றது. இதன் பண்டைய வடிவம், 'ஏணம்' என்பதாய் இருத்தல் கூடும். 'வலிமை' எனப் பொருள்தரும் 'ஏண்' என்பது இதன் அடி நிலை என்றல் பொருந்தும். 'தெள் ஏணம்' என்பது, 'தெள்ளு கின்ற குடையோலை' என்னும் பொருட்டாய், மகளிர் விளை யாட்டிற் கொள்ளும் முற்றிலுக்கு (சிறுமுறத்திற்கு)ப் பெய ராய் வழங்கிற்றுப்போலும். அவ்வாறாயின், 'தெள்ளேணம்' என்பது, முற்றிலால் சிலவற்றை அள்ளித் தெள்ளிக்கொட்டும் முறையில் மகளிர் வலப்புறமும், இடப்புறமும் குனிந்தும், நிமிர்ந்தும் கைகொட்டி ஆடும் கொம்மை விளையாட்டேயாம். அதனால், அவ்விளையாட்டிற் பாடப்படும்பாட்டே தெள்ளேணப் பாட்டுமாம். எங்ஙனம் நோக்கினும், இவ்விளையாட்டு இப் பெற்றியது என்பதனை இக்காலத்து அறிதல் அரிதாயிற்று. இதனுள் அடிகள் கூறும் பொருளும், முன்னர்த் திருக்கோத் தும்பியிற் கூறிய பொருளோடே ஒத்திருத்தலின், 'சிவனோடு ஐக்கியம்' என்னும் பொருளே தருவதாகிய, 'சிவனோடு அடைவு' என்பதனையே இதற்கும் குறிப்பாகக் கூறினர் போலும். இருபது திருப்பாட்டுக்களால் ஆயினமையாலும், காதற்பொருட்கும் இயைபுடைமையாலும் இப்பகுதியை, திருக் கோத்தும்பியின் பின்வைத்துக் கோத்தனர். இது, 'தில்லையில் அருளியது' என்பதே பதிப்புக்களில் உள்ளது. இதன் யாப்பு வகையும், திருக்கோத்தும்பியில் உள்ள யாப்பு வகையேயாம்.]

நாலடித்தரவுக் கொச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

235 திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடியை
உருநாம் அறியஓர் அந்தணனாய் ஆண்டுகொண்டான்
ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமில்லாற் காயிரம்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணங் கொட்டாமோ. 1

---

235. ''திருவடியை உரு அறிய'' என்றதில் ஐயுருபு, 'குடும்பத்தைக் குற்றம் மறைத்தான்' (குறள் - 1029.) என்பதிற்போல வந்தது. 'திருவடியை அறிய' என்று போகாது, ''உருவறிய'' என்றார், 'நன்குணரப் பெற்றேம்' என்பது உணர்த்துதற்கு. நாமம் - பெயர். உருவம் - வடிவம். இவை இரண்டையுங் கூறவே, அவற்றிற்குரிய தொழிலும் உடன் கொள்ளப்படும். ஒன்றும் - சிறிதும். இறைவன், யாதொரு வடிவும், பெயரும், தொழிலும் இன்றி நிற்றல், உலகத்தைநோக்காது தன்னியல்பில் நிற்கும் நிலையிலாம். இதுவே அவனது 'உண்மை இயல்பு - சொரூபலக்கணம்' எனப்படுவது, இவ்வியல்பில் நிற்பவன் உலகத்தைத் தொழிற்படுத்தி நிற்கும் நிலையில் அளவற்ற வடிவும், பெயரும், தொழிலும் உடையவனாய் நிற்றலின், 'அவனுக்கே ஆயிரம் திருநாமம் பாடி' என்றார். இது, 'பொதுவியல்பு' எனப்படும் தடத்தலக்கணம், நாமம் கூறவே, ஏனைய வடிவும், தொழிலும் தாமே பெறப்பட்டன. 'கொட்டுவாம்' என்பதில் முதனிலையிற்று உகரமும், இடைநிலை வகரமும் தொகுத்தலாயின. ஓகாரம், அசைநிலை. இவை, பின்னர் வருகின்ற 'ஆடாமோ' என்றதற்கும் ஒக்கும். இவற்றிற்கு இவ்வாறே நன்னூற்காண்டிகை யுரையுள் இலக்கணங்கூறினர் நாவலர். ஓகாரத்தை எதிர்மறை எனக்கொண்டு, 'கொட்டாம், ஆடாம்' என்னும் எதிர்மறை வினைகள், பின்னர் வந்த ஓகாரத்தொடு கூடி உடன்பாட்டுப் பொருளைத் தந்தது எனக் கொள்ளின், அவ்வாறு வருதல் தேற்றத்தின்கணுதலானும், ஈண்டு ஐயமின்மையின் தேற்றுதல் வேண்டாமையானும் அவ்வாறுரைத்தல் பொருந்தாதாம்.

236 திருவார் பெருந்துறை மேயபிரான் என்பிறவிக்
கருவேர் அறுத்தபின் யாவரையுங் கண்டதில்லை
அருவாய் உருவமும் ஆயபிரான் அவன்மருவுந்
திருவாரூர் பாடிநாம் தெள்ளேணங் கொட்டாமோ. 2

237 அரிக்கும் பிரமற்கும் அல்லாத தேவர்கட்குந்
தெரிக்கும் படித்தன்றி நின்றசிவம் வந்துநம்மை
உருக்கும் பணிகொள்ளும் என்பதுகேட் டுலகமெல்லாஞ்
சிரிக்குந் திறம்பாடித் தெள்ளேணங் கொட்டாமோ. 3

---

236. கரு - முதல். பிறவிக்கு முதல் - பாசம். 'அதனை வேரோடு அறுத்தான்' என்க. கண்டது-பொருளாக அறிந்தது "அரு" என்றது, 'அகளம்' என்னும் பொருளிலும், "உரு" என்றது, 'சகளம்' என்னும் பொருளிலும் வந்தன. அவை முறையே அவனது உண்மை இயல்பு, பொதுவியல்புகளை உணர்த்தும். அகளமாய் உள்ளவன், சகளமாய் வருதல் அருள்காரணத்தினாலாம். ஓர் இடத்திருந்து பாடுங்கால், முன்பு தாம் கண்டு வணங்கிய இடத்தும், வணங்க நினைக்கும் இடத்தும் உள்ள பெருமானது கோலத்தை நினைந்து பாடுதல் அடியவர்க்கு யாண்டும் இயல்பாதல், தேவாரத் திருமுறைகளால் நன்கறியக் கிடத்தலின், ஈண்டும் அவ்வாறே, 'திருவாரூர் பாடி' என்று அருளினார். திருக்கோவையுள்ளும் இவ்வாறு பல தலங்களும் கூறப்படுதல் காண்க.

237. தெரித்தல் - முற்றும் உணர வகுத்துக் கூறுதல். 'இது கூடாது' எனவே, ஒருசிறிதுணர்தல் பெறப்பட்டது. படி - நிலைமை. படித்து - நிலைமையை யுடையது. "சிவம்" என்றது, 'சிவமுதற்பொருள்' என்றவாறு. 'நம்மை' என்பது, இசையெச்சத்தால், 'ஒன்றற்கும் பற்றாத நம்மை' எனப் பொருள் தந்தது. 'உருக்கிற்று, பணிகொண்டது' என இறந்த காலத்தாற் கூறற்பாலவற்றை, "உருக்கும், பணிகொள்ளும்" என எதிர்காலத்தால் அருளினார், அவை அச் செயலளவில் நில்லாது, 'இன்னோரன்னவும் அம்முதற்பொருட்கு இயல்பாம்' என அதனது தன்மை உணர்த்தி நிற்றற்கு. எனவே, உலக மெல்லாம் சிரித்தல், 'அப்பெரும்பொருட்கு இஃது இயல் பாமோ' எனக் கருதி என்பதாயிற்று. பரம்பொருளினது

238 அவமாய தேவர் அவகதியில் அழுந்தாமே
பவமாயங் காத்தென்னை ஆண்டுகொண்ட பரஞ்சோதி
நவமாய செஞ்சுடர் நல்குதலும் நாம்ஒழிந்து
சிவமான வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ. 4

பேரருள் தன்மையை உலகர் உணராராகலின், இங்ஙனம் கருதிச் சிரிப்பாராயினர் என்க. இதனானே, 'பரம்பொருளால் ஏற்றுக்கொள்ளப்படுதல் நம்மனோர்க்கு இயல்வதோ என அயர்த்தொழியாது, அந்நிலையைப் பெறும் தவத்தின்கண் உறைத்து நிற்றல் வேண்டும்' என்பதும் பெறப்பட்டது. இவ்வுண்மையே, திருநாவுக்கரசரது திருக்கைலை யாத்திரையுள் இறைவன் முனிவர் வடிவிற் போந்து, "கயிலை மால்வரையாவது காசினி மருங்கு - பயிலும் மானுடப் பான்மையோர் அடைவதற் கெளிதோ", "மீளும் அத்தனை உமக்கினிக் கடன்" என அயர்ப்பித்தவழியும் நாவுக்கரசர் அயராது, "ஆளும் நாயகன் கயிலையில் இருக்கைகண் டல்லால் - மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்" என மறுத்தவிடத்து இனிது விளங்கிநிற்கின்றது. புராண இதிகாசங்களிலும் இதுபோலும் நிகழ்ச்சிகள் கூறப் படுதல் வெளிப்படை.

238. அவம் - பயன் இன்மை. பிறவி நீங்கப் பெறுதலே, பயன்கள் எல்லாவற்றுள்ளும் சிறந்த பயனாகலானும், சிவ பெருமானை யன்றிப் பிற தேவராதல், அவர்தம் பதவியாதல் அதனை நீக்கமாட்டாமையானும் தேவரையும் அவர்தம் பதவி யையும், "அவமாய தேவர்" என்றும் "அவகதி" என்றும் அருளிச்செய்தார். பவம் - பிறப்பு. மாயம் - நிலையற்ற நிலைமை; சுழற்சி என்றபடி. காத்து - அஃது அணுகாவகை தடுத்து. நவமாய செஞ்சுடர் - புதிதாகிய செவ்விய ஒளி; என்றது சிவஞானத்தை. "நாம்" என்றதும், 'நாம்' என்னும் உணர்வை; இதுவே, 'செருக்கு' என்றும், 'தன் முனைப்பு' என்றும் சொல்லப்படுவது. சிவமாயினமை, சிவத்தினது எண் குணங்களும் தம்மாட்டு விளங்கப் பெற்றமை. "அடுத்தது காட்டும் பளிங்குபோல்" என்றபடி, (குறள் - 706.) அடுத்து நிற்கின்ற பொருளின் தன்மையே தன் தன்மையாகக் கொண்டு காட்டுதல் பளிங்கிற்கு இயல்பாதல்போல, அடுத்த பொருளின் இயல்பே தன் இயல்பாகக்கொண்டு நிற்றல் ஆன்மாவிற்கு

239 அருமந்த தேவர் அயன்திருமாற் கரியசிவம்
உருவந்து பூதலத்தோர் உகப்பெய்தக் கொண்டருளிக்
கருவெந்து விழக் கடைக்கணித்தென் உளம்புகுந்த
திருவந்த வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ. 5

240 அரையாடு நாகம் அசைத்தபிரான் அவனியின்மேல்
வரையாடு மங்கைதன் பங்கொடும்வந் தாண்டதிறம்
உரையாட உள்ளொளியாட ஒண்மாமலர்க் கண்களில்நீர்த்
திரையாடு மாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ. 6

உள்ள இயல்பு. அதனால், அநாதியே பாசத்தின் தன்மையை எய்திப் பாசமாகியே கிடந்த உயிர், பாசம் நீங்கப்பெற்ற பின்னர்ச் சிவத்தினது எண் குணங்களும் தன்னிடத்து இனிது விளங்கப்பெற்றுச் சிவமாகியே விளங்கும் என்க.

239. 'அருமருந்தன்ன' என்பது, "அருமந்த" என மருவிற்று. 'அருமருந்தை உண்ணும் அத்தேவர்' என்க. அருமருந்து - அமுதம். 'தேவர், அயன், திருமால்' என்றது செவ்வெண்ணாகலானும், சிறப்புடையவரையே எடுத்து எண்ணினமையானும் "திருமால்" என்றதன்பின், 'இவர்க்கும்' என, ஒருபெயரும், சிறப்பும்மையும் விரிக்க. 'உருவாய் வந்து' என ஆக்கம் வருவிக்க. உகப்பு - உயர்ச்சி. 'தேவர்க்குக் கனவிலும் காண இயலாத பெருமான், மக்களுள்ளார்க்குத் தானே தோன்றி வந்து அருளுகின்றான்' என, அடிகள்பால் நிகழ்ந்த நிகழ்ச்சியால் மக்கள் உயர்வு படைத்தனர் என்க. இது, தலைவி கூற்றிற்குப் பெரிதும் பொருந்துவதாம். கொண்டருளி - நம்மை ஆட்கொண்டருளி. கரு - பிறப்பு. கடைக்கணித்தல் - கடைக்கண்ணால் நோக்குதல். இஃது அருளுதலைக் குறிப்பதொரு பான்மை வழக்கு. இதனை, 'கடாட்சித்தல், என வடசொல்லாற் கூறுவர். புகுந்த திரு - புகுந்ததாகிய நன்மை. வந்தவாபாடி - கிடைத்தவாற்றைப் பாடி.

240. 'ஆடு நாகம் அரை அசைத்த பிரான்' எனக் கூட்டுக. அசைத்தல் - கட்டுதல். வரைஆடு மங்கை - மலையில் விளையாடிய (வளர்ந்த) நங்கை. உரை ஆட - நம் சொற்களில் பொருந்த, உள்ளொளி ஆட - ஞானம் மிக. இதன் மூன்றும்

241 ஆவா அரிஅயன்இந் திரன்வானோர்க் கரியசிவன்
வாவாஎன் றென்னையும்பூ தலத்தேவலித் தாண்டுகொண் [டான்
பூவார் அடிச்சுவ டென்தலைமேற் பொறித்தலுமே
தேவான வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ. 7

242 கறங்கோலை போல்வதோர் காயப் பிறப்போ டிறப்பென்னும்
அறம்பாவம் என்றிரண் டச்சந் தவிர்த்தென்னை ஆண்டு [கொண்டான்
மறந்தேயுந் தன்கழல்நான் மறவா வண்ணம் நல்கியஅத்
திறம்பாடல் பாடிநாம் தெள்ளேணங் கொட்டாமோ. 8

அடியுள், கனிச்சீர் மயங்கி வந்தது. "உரையாடஉள்" என்றதில் டகரம் தனித்து நிற்குமெனின், 'உள்' என்பதனைக் கூனுக்குக.

241. "ஆவா" என்றது. வியப்புக் குறிப்பு. அடுக்கு, விரைவுப் பொருட்டு. "பூதலத்தே" என வேண்டா கூறியது, இவ்வுலகின் சிறப்புத் தோன்றுதற்கு, வலித்து - ஈர்த்து. பூ ஆர் அடி - பூப்போலப் பொருந்திய பாதம். தே ஆனவா - சிவமாயினவாற்றை, இதன்கண்ணும் இரண்டாம் அடியில் கனிச்சீர் மயங்கிற்று.

242. கறங்கு - காற்றாடி, அதன்கண் உள்ள ஓலைகள் மாறி மாறி வருதல் விரைய நிகழ்தலின், அவை, அவ்வாறு வரும் பிறப்பிறப்பிற்கு உவமையாயின. காயம் - உடம்பு, பிறப்பும், இறப்பும் உடற்கன்றி உயிர்க்கின்மையின், "காயப் பிறப்போ டிறப்பு" என்றார். அறமும் பிறப்பை விளைத்தலின், அஞ்சப்படுவதாயிற்று, "என்று" என்ற எண்ணிடைச்சொல் ஈற்றில் நின்று, முன்னதனோடும் இயைந்தது. இரண்டு அச்சம் - இரண்டனாலும் வரும் அச்சம். "மறந்தேயும்" என்றது, 'சோர்ந்தும்' என்றவாறு.

"துஞ்சலும் துஞ்சல் இலாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின் நாடொறும்"

எனத் திருஞானசம்பந்தரும் (திருமுறை - 3·22·1),

"துஞ்சும் போதும் சுடர்விடு சோதியை
நெஞ்சுள் நின்று நினைப்பிக்கும் நீதியை"

எனத் திருநாவுக்கரசரும் (திருமுறை - 5.93.8.) அருளிச் செய்தல் காண்க. துஞ்சுதல் - உறங்குதல்; 'உறங்குதல்' என்பது சுழுத்தி நிலையை ஆதலானும், சுழுத்தியில் மனம், புத்தி, அகங்காரம் என்பன இல்லையெனினும் சித்தம் உண்டு என்பது உண்மை நூல்களின் துணிபாகலானும் ஈண்டுக் கூறிய நினைவெல்லாம் சித்தத்தின் தொழிற்பாட்டினையாம். உறக்கத்தின் கண்ணும் சித்தம் தொழிற்படும் என்பது, உறங்கி எழுங் காலத்து, முன்னர்த் தெளியாதிருந்த ஒன்று தெளிவுற்று விளங்குதல் பற்றியும் அறிந்துகொள்ளப்படும். இதனானே, 'பெரிதும் விரும்பப்படுகின்ற ஒன்றனைப் பற்றிய நினைவு உறக்கத்திலும் சித்தத்தைவிட்டு அகலாது நிற்கும்' என்பதும், 'அதுவே, விழித்தெழுந்தவுடன் ஏனை அந்தக் கரணங்களினும் பொருந்தி விளங்கும்' என்பதும் பெறப்பட்டன. இவையெல்லாம் பற்றியே,

" தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள் "

எனவும் (குறள் - 55.),

" தம்மையே - சிந்தியா எழுவார்வினை தீர்ப்பரால் "

எனவும் (திருமுறை - 3. 54. 3.),

" எந்தையார் திருநாம நமச்சி வாய
என்றெழுவார்க் கிருவிசும்பில் இருக்கலாமே "

எனவும் (திருமுறை - 6. 93. 10.),

" சிந்தித்தெழு வார்க்குநெல் லிக்கனியே "

எனவும் (திருமுறை - 7. 4. 3.),

" தொழுதெழுவார் வினைவளம் நீறெழ "

எனவும் (திருக்கோவை - 118.) திருவாக்குக்கள் எழுந்தன. இறைவனை யன்றிப் பிறிதொன்றிற் பற்றில்லாதவர்க்கன்றித் துயிலெழுங்காலத்து இறைவனைப்பற்றிய நினைவு தோன்றுதல் கூடாமை அறிக.

243 கன்னா ருரித்தென்ன என்னையுந்தன் கருணையினாற்
பொன்னார் கழல்பணித் தாண்டபிரான் புகழ்பாடி
மின்னேர் நுடங்கிடைச் செந்துவர்வாய் வெண்ணகையீர்
தென்னாதென் னாஎன்று தெள்ளேணங் கொட்டாமோ. 9

244 கனவேயும் தேவர்கள் காண்பரிய கனைகழலோன்
புனவே யனவளைத் தோளியொடும் புகுந்தருளி
நனவே எனைப்பிடித்தாட் கொண்டவா நயந்துநெஞ்சம்
சினவேற்கண் நீர்மல்கத் தெள்ளேணங் கொட்டாமோ. 10

245 கயல்மாண்ட கண்ணிதன் பங்கன் எனைக்கலந் தாண்டலுமே
அயல்மாண் டருவினைச் சுற்றமும்மாண் டவனியின்மேல்
மயல்மாண்டு மற்றுள்ள வாசகம்மாண் டென்னுடைய
செயல்மாண்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ. 11

நல்கிய - அருள்செய்த. "திறம்" என்றது, கருணை. "பாடல் பாடி" என்றது, "உண்ணலும் உண்ணேன்" (கலி - பாலை - 22.) என்றாற்போல நின்றது. இதன் முதல் மூன்றடிகள் ஐஞ்சீராய் மயங்கின.

243. 'உரித்தென்ன ஆண்டபிரான்' என இயையும். பணித்து - கொடுத்து' 'தென்னா தென்னா' என்பது, பாடற்கு இசை கூட்டும் முறை.

244. கனவேயும் - கனவின்கண்ணேயும். ஏகாரம் பிரிநிலை; உம்மை, இழிவு சிறப்பு. புனம் - காடு. வேய் - மூங்கில், 'வேயனதோளி' என இயையும். 'நெஞ்சம் நயந்து' என மாறுக. நயத்தல் - விரும்புதல். சினம், வேலுக்கு அடை. பான்மை வழக்கால், உடையவரது சினத்தை வேலின்மேல் ஏற்றிக் கூறுப.

245. 'கயல்போல மாண்ட கண்ணி' என்க. "மாண்ட" எனவும், "மாண்டு" எனவும் வந்தன பலவற்றுள், முதற்கண் நின்றதொன்றும் 'மாண்' என்பது அடியாகவும், ஏனையவை, 'மாள்' என்பது அடியாகவும் வந்தன. அயல் - (இறைவனுக்கு) அயலாம் தன்மை; இஃது அறியாமையால் உளதாவது. அருவினைச் சுற்றம் - நீக்குதற்கரிய வினையால் வந்த சுற்றம். மக்களுட் பலர் தம்முட் சுற்றமாய் இயைதல்

246 முத்திக் குழன்று முனிவர்குழாம் நனிவாட
அத்திக் கருளி அடியேனை ஆண்டுகொண்டு
பத்திக் கடலுட் பதித்த பரஞ்சோதி
தித்திக்கு மாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ. 12

247 பார்பாடும் பாதாளர் பாடும்விண் ணோர் தம்பாடும்
ஆர்பாடுஞ் சாரா வகையருளி ஆண்டுகொண்ட
நேர்பாடல் பாடி நினைப்பரிய தனிப்பெரியோன்
சீர்பாடல் பாடிநாம் தெள்ளேணங் கொட்டாமோ. 13

வினைகாரணமாகவன்றிப் பிறிதின்மையின், இவ்வாறு அருளினார். அவனியின்மேல் மயல் - உலகத்தின்மேல் கொள்ளும் மோகம். 'மனம், மொழி, மெய்' என்னும் மூன்றனுள், மயல் மனத்தின்கண்ணதாகலின், ஏனைய மொழி மெய்களின்கண்ணவாகிய சொல்லையும், செயலையும், "மற்றுள்ள" என்றார். இவற்றில், பசுகரணம் நீங்கிப் பதிகரணம் பெற்றவாறு குறிக்கப் பட்டது. "என்னுடைய" என்பது கடைநிலைத் தீவகமாய், முன்னின்றவற்றோடும் இயையும். இதன் முதலடி ஐஞ்சீரடியாய் வந்தது.

246. முத்திக்கு - வீடுபெறுதற்கு. உழன்று - வழிதேடி அலைந்து. "வாட" என்றது, 'அவர்க்கு அருளாமல் வாடச் செய்து' என்றபடி. அத்தி - யானை. அடிகள், தம்மை "இருகை யானை" எனக் கூறிக்கொள்வராகலின், (திருச்சதகம் - 41.) 'யானைக்கு அருள்செய்த வகையிலே எனக்கும் அருள்செய்தான்' என்றற்கு "அத்திக்கருளி அடியேனை ஆண்டுகொண்டு" என்றார். யானைக்குஅருள்செய்தது மதுரையிலும், மற்றும் திருவானைக்கா, திருக்காளத்தி என்னும் தலங்களிலும் நிகழ்ந்தமை வெளிப் படை. "ஆண்டுகொண்டு பத்திக் கடலுட் பதித்த" என்றதனான், இறைவனிடத்து அன்பு தோன்றுவது, அவன் அருள் வழியே' என்பதும், அதன்பின்னர், "தித்திக்குமா பாடி" என்றதனான், 'அன்பினால் இன்பம் விளையும்' என்பதும் பெற்றாம்.

247. "பாதாளர்" எனவும், "விண்ணோர்" எனவும் பின்னர் வருதலின், அவற்றோடு இயைய, 'பாரோர்' என்பதன் இறுதிநிலை தொகுத்தலாயிற்று என்க; மூவுலகத்தாரையும்

248 மாலே பிரமனே மற்றொழிந்த தேவர்களே
நாலே நுழைவரியான் நுண்ணியனாய் வந்தடியேன்
பாலே புகுந்து பரிந்துருக்கும் பாவகத்தாற்
சேலேர்கண் நீர்மல்கத் தெள்ளேணங் கொட்டாமோ. 14

249 உருகிப் பெருகி உளங்குளிர முகந்துகொண்டு
பருகற் கினிய பரங்கருணைத் தடங்கடலை
மருவித் திகழ்தென்னன் வார்கழலே நினைந்தடியோம்
திருவைப் பரவிநாம் தெள்ளேணங் கொட்டாமோ. 15

கூறியவாறாயிற்று. பாடு-பக்கம். ஆர்பாடும் சாராவகை அருளி, ஒருவரிடத்தும் சென்று அவரை வேண்டிக்கொள்ளாதபடி அருள்செய்து. நேர் - செம்மை; என்றது வெளிப்பட்டு நின்றமையை. இங்கும், "பாடல்பாடி" என்றதற்கு மேல் (242) உரைத்தாங்கு உரைக்க. இதன் முதலடிக்கண், 'பாடும் விண்ணோர்' என்றதில் மகர ஒற்றுக் குறுக்கமாய் அலகுபெறா தொழிதலின், "பாடு" என்றதனை நேர்பசையாகக் கொள்ள, அச்சீர் மூவசைச் சீராதல் அறிக. இனி, "பாதாளர்" என்றதனை, "பாதாளத்தார்" எனப் பாடம் ஓதி, இவ்வடியையும் ஐஞ்சீரடியாக்குவாரும் உளர்.

248. ஏகாரங்கள் எண்ணுப்பொருள. 'ஒழிந்த மற்றுத் தேவர்கள்' என மாற்றி, 'அவர் ஒழிந்த ஏனைத் தேவர்கள்-என உரைக்க. இனி, 'மற்று, அசைநிலை' எனலுமாம். அணுகமாட்டாத இயைபுபற்றி நாலையும் உடன் எண்ணினர். நுழைவு - அணுகுதல். "அரியான்" என்றது பெயர். நுண்ணியன் - நுண்பொருளை உணர்த்துபவன்; ஞானாசிரியன். பரிந்து - இரங்கி. பாவகம் - நினைவு. "பாவகத்தால்" என்றதில் ஆல் உருபு, ஒடு உருபின் பொருளில் வந்தது, "தாங்கு கையான் ஓங்கு நடைய" (புறம் - 22.) என்றதிற்போல.

249. உருகி - மனம் நெகிழ்ந்து. பெருகி - அன்பு மிகுந்து. 'உருகி, பெருகி, முகந்துகொண்டு" என்ற எச்சங்கள், "பருகற்கு" என்றதனோடு முடிந்தன. "தென்னன்" என்றதில் ஐயுருபு தொகுத்தல். "வார்கழலே நினைந்து" என்றதனை

250 புத்தன் புரந்தராதியர் அயன்மால் போற்றிசெயும்
பித்தன் பெருந்துறை மேயபிரான் பிறப்பறுத்த
அத்தன் அணிதில்லை அம்பலவன் அருட்கழல்கள்
சித்தம் புகுந்தவா தெள்ளேணங் கொட்டாமோ. 16

251 உவலைச் சமயங்கள் ஒவ்வாத சாத்திரமாம்
சவலைக் கடல்உளனாய்க் கிடந்து தடுமாறும்
கவலைக் கெடுத்துக் கழலிணைகள் தந்தருளுஞ்
செயலைப் பரவிநாம் தெள்ளேணங் கொட்டாமோ. 17

"திருவை" என்றதன் பின்னர்க் கூட்டுக. அடியோம் திரு - அடியோங்களது செல்வம். ஐயுருபுகள், "பரவி" என்றதனோடு முடியும்.

250. 'திருமால் புத்தனாய்த் திரிபுரத்தவரிடம் சென்று புத்த மதத்தைப் போதித்து, அவரது சிவபத்தியைப் போக்கியதனால் சூழ்ந்த பெரும்பாவத்தைச் சிவபூசை செய்து நீக்கிக் கொண்டான்' என்பது புராணமாகலின், அவ்வரலாற்றைக் குறிக்க, "புத்தன்" என வேறு கூறி, பின்னர்த், தேவர் பலராலும் வணங்கப்படுதலைக் குறிக்கும்வழி, "மால்" என்பதும் கூறினார். அதனால் அது, கூறியது கூறிற்றும், ஈண்டைக்கு இயைபின்மை யுடையதும் ஆகாமை யறிக. இதற்குப் பிறரெல்லாம், 'புதியோன்' என்றும், 'ஞானம் உடையவன்' என்றும் உரைத்து, சிவபிரானுக்கே ஆக்கியுரைப்பாரும், 'புத்த மதத்தின் ஆசிரியனை ஈண்டுக் கூறுதற்கு ஓர் இயைபின்று' என மறுப்பாரும் ஆயினர். 'புத்த மதத்தை ஆக்கியவனும் மக்களுள் ஒருவனே' என இக்காலத்தார் கூறும் கருத்து அடிகட்கு இல்லாமை யறிக. புரந்தராதியர் - இந்திரன் முதலிய தேவர். 'புரந்தராதி, புரந்தராதியர்' என்பன பாடம் அல்ல. 'நம் சித்தம் புகுந்தவா' என்க. "புகுந்தவா" என்றதன்பின்னர், 'பாடி' என்பது எஞ்சிநின்றது.

251. உவலை - பொய். 'உவலைச்சமயங்களது சாத்திரம்' என்க. ஒவ்வாத - பொருந்தாத. சவலை - மெலிவு. 'மெலிவைத் தருகின்ற கடல்' என்க. "கவலைக் கெடுத்து" என்றதில் ககர ஒற்று, விரித்தல். அன்றி, 'கவலுதலைக் கெடுத்து'

252 வான்கெட்டு மாருதம் மாய்ந்தழல்நீர் மண்கெடினுந்
தான்கெட்ட லின்றிச் சலிப்பறியாத் தன்மையனுக்
கூன்கெட் டுயிர்கெட் டுணர்வுகெட்டென் உள்ளமும்போய்
நான்கெட்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ.   18

253 விண்ணோர் முழுமுதல் பாதாளத் தார்வித்து
மண்ணோர் மருந்தயன் மாலுடைய வைப்படியோம்
கண்ணார வந்துநின்றான் கருணைக் கழல்பாடித்
தென்னாதென் னாஎன்று தெள்ளேணங் கொட்டாமோ.   19

என்றும்ஆம். இதனால், அடிகள் இறைவனால் ஆட்கொள்ளப்படுதற்கு முன்னர்ப் பல சமய சாத்திரங்களை ஆராய்ந்து தெளிவு பெறாதிருந்தமை பெறப்படும். 'அவனது செயலை' என எடுத்துக்கொண்டு உரைக்க.

252. வான் - ஆகாயம். மாருதம் - காற்று. அழல் - நெருப்பு. அழிப்புக் காலத்தில் ஒன்றும் இன்றாதலை வலியுறுத்தற்கு, கெடுதலை ஐம்பூதங்களிலும் தனித்தனி அருளிச்செய்தார். "கெட்டலின்றி" என்பதில் டகர ஒற்று விரித்தல். கெடுதல் - அழிதல். சலித்தல் - தளர்ச்சியுறுதல். தன்மையனுக்கு - தன்மையன்பொருட்டு. "உயிர்" என்றது பிராணவாயுவை. "கெட்டு" என்பன, எண்ணின்கண் வந்த எச்சங்கள். "நான்" என்றதும், "நாம்" என்றதுபோல (238) "நான்" என்னும் உணர்வையேயாம்.

253. இறைவன் தேவர்கட்கு ஒவ்வொரு தலைமையை வழங்கி அவர்கள் அனைவர்க்கும் தலைவனாய் இருத்தலின், **"விண்ணோர் முழுமுதல்"** என்றும், பாதல உலகத்தார் தம் பாவங்காரணமாக அவ்விடத்துக் கிடப்பராதலானும், அவரை அப்பாவத்தினின்றுநீக்கி நல்வினையால்மேல் ஏறி இன்பம்பெறச் செய்தல் பற்றி, **"பாதாளத்தார் வித்து"** என்றும், மனிதரை ஆணவமலமாகிய மிருத்துவைக் கடந்து வீடுபெற்று என்றும் ஒரு பெற்றியராய் வாழுமாறு செய்தலின், **"மண்ணோர் மருந்து"** என்றும், (மருந்து - அமுதம்) அயன், மால் இருவரையும் அணுக்கராகக் கொண்டு, தானும் அவருள் ஒருவனாய், காரணக் கடவுளராகும் பெருந்தலைமையைத் தந்து மிக்க இன்பத்தைப் பயத்தலின், **"அயன் மாலுடைய வைப்பு"**

254 குலம்பாடிக் கொக்கிற கும்பாடிக் கோல்வளையாள்
நலம்பாடி நஞ்சுண்ட வாபாடி நாள்தோறும்
அலம்பார் புனல்தில்லை அம்பலத்தே ஆடுகின்ற
சிலம்பாடல் பாடிநாம் தெள்ளேணங் கொட்டாமோ. 20

திருச்சிற்றம்பலம்

என்றும், (வைப்பு - சேமநிதி) 'இவ்வாறு அவரவர் தகுதிக்கேற்ப வேறுவேறு வகையாக அருள்புரிகின்ற அவன், யாதொரு தகுதியும் இல்லாத நமக்கு இவ்வூனக் கண்ணாலும் நிரம்பக் கண்டு இன்புறும்படி வந்து தங்கி அருள்புரிந்தான்' என்பார், "அடியோம் கண்ணார வந்து நின்றான்" என்றும், 'அத்தகைய பேரருள் திறத்தை எஞ்ஞான்றும் மறவாது போற்றுவதன்றி நாம் அவனுக்குச் செய்யும் கைம்மாறு யாது' என்பார், "கருணைக் கழல்பாடி............தெள்ளேணம் கொட்டாமோ" என்றும் அருளிச்செய்தார்.

254. 'குலம் - சிவபெருமானை வணங்கும் தேவர் கூட்டமும், அடியார் கூட்டமும். கொக்கிறகு - கொக்குருவங்கொண்ட அசுரனை அழித்து, அதன் அடையாளமாகச் சிவபெருமான் தன் தலையில் அணிந்தது. இவ்வசுரனை, 'குரண்டாசுரன்' எனக் குறிப்பிட்டு, இவ்வரலாற்றைக் கந்த புராணமும், உபதேச காண்டமும் கூறுதல் காண்க. இனி, 'கொக்கிறகு' என்பது, 'கொக்கு மந்தாரை' என்பதொரு மலரே என்பாரும் உளர். கோல்வளையாள் நலம் - உமையம்மையது திருமேனி யழகு. "நாள்தோறும் பாடி" என முன்னே சென்று இயையும். "நாள்தோறும் கொட்டாமோ" என்றியைத்தலுமாம். அலம்பு ஆர் புனல் - ஒலித்தல் பொருந்திய நீர். 'ஆடுகின்ற ஆடல்' என இயையும். சிலம்போடு கூடிய ஆடல்.

தென்னவன் பிரம ராய னென்றருள் சிறக்கு நாம
மன்னவர் மதிக்க நல்கி வையக முய்வதாக
மின்னவ மணிப்பூ ணாடை வெண்மதிக் கவிகை தண்டு
பொன்னவிர் கவரி வேழ மளித்தனன் பொருநை நாடன். 15

— திருவாதவூரடிகள் புராணம்.

12. திருச்சாழல்

['சாழல்' என்பது, மகளிர் விளையாட்டு வகைகளுள் ஒன்று என்னும் அளவே, இதனால் அறியப்படுகின்றது. சிலப்பதிகார அரங்கேற்றுகாதை உரையில், (12 - 25.) அடியார்க்கு நல்லார், 'பல்வரிக் கூத்தாவன இவை' என்பதற்கு எடுத்துக் காட்டிய சூத்திரத்துள், 'நல்லார்தந் தோள் வீச்சு நற்சாழல்' என்பதொன்றுமே இதுபற்றிக் காணப்படும் பண்டையகுறிப்பு. இக்குறிப்பினால், 'இது மகளிர் விளையாட்டு' என்னுந் துணையே ஒருவாறு கூறலாகும். பிறிதொன்றும் இதுபற்றி அறிதற்கில்லை. பிற்காலத்தில் அம்மானைப்பாட்டில் வரும் தடைவிடை முறை, அடிகள் காலத்தில் சாழற் பாட்டில் அமைந்திருந்தது என்பது இப்பகுதியால் அறியப்படுகின்றது. இத்தடைவிடை முறையை அடிகள், புராண வரலாறு பற்றிப் புறச்சமயத்தார் சிவபெருமானது கடவுட்டன்மைக்குக் கூறும் தடைகட்கும், அவற்றிற்குச் சிவனடியார் கூறும் விடைகட்குமாகப் பயன்படுத்திக்கொள்கின்றார். இதனானே, 'அடிகள் தில்லையில் எழுந்தருளியிருந்தபொழுது ஈழநாட்டினின்றும் போந்த புத்தரோடு வாதிட்டு அவர்களை ஊமையராக்கியபின், அவரொடு வந்த ஈழநாட்டு அரசன் ஊமை மகளை, அவன் வேண்டுகோட்கு இரங்கி ஊமை நீங்கச்செய்து, புத்தர்கள் எழுப்பிய தடைகளை அடிகள் தாமே எழுப்பி அவளை வினவ, அவளே அவற்றிற்கு விடைகூறியபின், அந்நிகழ்ச்சியை இத்திருச்சாழலாகப் பாடியருளினர்' என்னும் வரலாறு தோன்றியது போலும்! இதனுட் கூறப்படும் தடை விடைகள்போலும் தடை விடைகளைக் கந்தபுராண ஆசிரியர் தட்சகாண்டம் ததீசி உத்தரப்படலத்துள் அமைத்துள்ளார். வரிப்பாட்டு முறையில் இது, களவிடத்துப் பிரிவின்கண் ஆற்றுமை மிகுதியால் தலைவி தலைவனை இயற்பழித்தவழி, தோழி இயற்பட மொழிந்து ஆற்றுவித்தலாக அமைந்துள்ளது. தலைவி இயற்பழித்தலை, "செங்கடுமொழி" எனவும், தோழி அதனை மறுத்து இயற்பட மொழிதலை "அன்புதலையடுத்த வன்புறை" எனவும் கூறுவர் தொல்காப்பியர் (பொருள் - 112.). இவ்வாறன்றி ஈண்டு இயற்பழிப்பாள் தோழி எனக் கூறின், அவள் தலைவியை "ஏடீ" என்றல் பொருந்தாமை அறிக. முன்பு கைகொட்டு தலை வைத்து, பின்பு தோள்வீசுதலை வைத்திருத்தலால், இதனை இவ் விளையாட்டின் இயல்பு பற்றி இடைவைத்துக் கோத்தனர் போலும். இதனுள் சிவபெருமானது அருட்-

குணங்களின் சிறப்பே விளக்கப்படுதலின், இதற்கு, 'சிவனுடைய காருணியம்' எனக் குறிப்புரைத்தனர் முன்னோர். இதுவும் முன்னைப் பகுதிபோலும் கொச்சகக் கலிப்பாவான் இயன்றது.]

நாலடித்தரவுக் கொச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

255 பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலுங் காணேடீ!
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை!
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ. 1

---

255. இதனுள் எல்லா இடத்தும், "ஏடீ" என்றதனை முதலிற் கொள்க.

"பூண்பது" என்றது, இனம் பற்றிய ஒருமை. இயற்பழிக்கின்றாள் கூற்றாகலின், "திருவாய்" என்றது, பழித்தலை உட்கொண்டதாம். மறை - பொருள் விளங்காத சொல். 'வேதம்' என்பது, உண்மைப் பொருள். காண், முன்னிலை அசை. 'ஏடி' என்பது தோழி முன்னிலைப் பெயர். கொண்டு-பற்றி. 'இயல்பாய்' என ஆக்கம் வருவித்து, 'அவன் இயல்பாய் எவ்வுயிர்க்கும் ஈசன் ஆனான்' என்க. ஈசன் - தலைவன், "இயல்பாய்" என்றது 'அத்தலைமை அவனுக்குப் பிறர்தர வந்ததன்றி, தன்னோடு அவற்றிடை இயல்பாய் உள்ள ஏற்றத் தாழ்வுகளால் தானே அமைந்தது' என்றதாம். எனவே, பிறரது தலைமைபோல அவனது தலைமையை, பூசுவது, பூண்பது முதலியன கொண்டு அறியவேண்டுவது இல்லை என்றதாயிற்று.

'சிவன் சாந்தாகப் பூசுவதும் சாம்பல்; அணியாக அணிவதும் பாம்பு; சொல்வதும் பொருள் விளங்காத சொல் என்றால், அவன் உயர்ந்தோனாதல் எவ்வாறு?' என்பது இதனுள் எழுப்பப்பட்ட தடை,

'எல்லா உயிர்க்கும் அவனே தலைவன் என்பது யாவராலும் நன்கறிப்பட்டதானபொழுது, அவன் பூசுவது முதலியனபற்றி ஐயுற வேண்டுவது என்' என்பது மேல் நிகழ்த்தப்பட்ட தடைக்கு விடை.

256 என்னப்பன் எம்பிரான் எல்லார்க்குந் தானீசன்
துன்னம்பெய் கோவணமாக் கொள்ளுமது என்னேடீ?
மன்னுகலை துன்னுபொருள் மறைநான்கே வான்சரடாத்
தன்னையே கோவணமாச் சாத்தினன்காண் சாழலோ. 2

257 கோயில் சுடுகாடு கொல்புலித்தோல் நல்லாடை
தாயுமிலி தந்தையிலி தான்தனியன் காணேடீ!
தாயுமிலி தந்தையிலி தான்தனியன் ஆயிடினுங்
காயில் உலகனைத்துங் கற்பொடிகாண் சாழலோ. 3

---

256. "தான்" என்றதன்பின் தொகுக்கப்பட்ட பிரிநிலை ஏகாரத்தை விரிக்க, 'அப்பனும், பிரானும், ஈசனுமாகிய அவன்' என்க. இது, தோழி கூறியதைத் தலைவி கொண்டு கூறியது, 'அப்பன்' என்றது, 'அன்பினால் அப்பன்போல்பவன்' என்றபடி. துன்னம்பெய் கோவணம் - கிழிந்து பொருந்தத் தைத்த கோவணம். 'கோவணமாகக் கொள்ளும் அது' என்றது, 'கோவணத்தையே உடையாகக் கொள்ளுகின்ற அத்தன்மை' என்னும் பொருளது. மன்னுகலை துன்னுபொருள் மறை - நிலைபெற்ற நூல்களில் பொருந்திய பொருள்களை யுடைய வேதம். இது, வேதத்தின் பொருளையே மற்றைய நூல்கொண்டு நிற்கின்றன என்றதாம். சரடு - கயிறு. அஃது இங்கு துறவர் கட்டும் கீளினைக் குறித்தல், "வான் சரடு" எனச் சிறப்பித்ததனால் பெறப்படும். தன்னையே - அப்பொருளையே. மறை பற்றுக்கோடும், பொருள் அதனைப் பற்றி நிற்பதும் ஆதல்பற்றி, அவை முறையே சரடும், கோவணமும் ஆயின.

'பூசுவது, பூண்பது முதலியன எவ்வாறாயினும், ஆடை இன்றியமையாததன்றோ? அதுவும் இல்லாதவன் யாவர்க்கும் தலைவனாதல எவ்வாறு' என்பது இதன்கண் நிகழ்த்திய தடை.

'அவனது சாங்க உபாங்கம் முதலியன பலவும் பிறர்போல அவன் தனக்கெனக்கொண்டனவன்றி, உயிர்கள் பொருட்டுக் கொண்டனவாகலின், அவை ஏற்ற பெற்றியான் எவ்வாறும் ஆம்' என்பது அதற்குக் கூறப்பட்ட விடை.

257. கோயில் - அரண்மனை; நல்லாடை - உயர்ந்த உடை. இதன்பின் 'ஆகுக' என்பது வருவிக்க. "தந்தை" என்ற

258 அயனை அனங்கனை அந்தகனைச் சந்திரனை
வயனங்கள் மாயா வடுச்செய்தான் காணேடீ !
நயனங்கள் மூன்றுடைய நாயகனே தண்டித்தால்,
சயமன்றே வானவர்க்குத் தாழ்குழலாய் சாழலோ. 4

விடத்து எச்சவும்மை தொகுத்தலாயிற்று. "தாயும் இலி தந்தையும் இலி தான் தனியன்" என்றது, 'ஒருவரும் துணையில்லாத தனிமையன்' என்று இகழ்ந்த தாம். காயில்-வெகுண்டால்.

'உன்னுற் புகழப்பட்ட தலைவனுக்குச் சுடுகாடே அரண்மனையும், புலித்தோலே பொன்னுடையுமாதல் ஒருபால் நிற்க; அவன், துணையற்ற தனியனாய் இருத்தல் பொருந்துமோ' என்பது தடை.

'அவன் வெகுண்டவழி முன்னிற்பது ஒன்றுமில்லையாதலின், அவனுக்குத் துணை வேண்டுவது எற்றுக்கு' என்பது விடை.

"தாயும் இலி தந்தை இலி" என்றதனால் 'பிறப்பற்றவன்' என்பது கூறப்பட்டது. "தந்தையாரொடு தாயிலர்" என்று அருளிச்செய்தார் ஞானசம்பந்தர் (திருமுறை 3-54-3). இதன் மூன்றும் அடி, மடக்காய் வந்தது, இவ்வாறு இனி வரும் பாட்டுக்களினும் வருதல் காண்க.

258. வசனம், 'வயனம்' என்றாயிற்று. 'சொல்' என்னும் பொருட்டாகிய இது, இங்கு வசைச்சொல்லைக்குறித்து நின்றது. மாயா - கெடாத. வடு - அடையாளம்.

அயன்-பிரமன்; அவனை வடுச்செய்தது, அவன் தலைகளுள் ஒன்றைக் கிள்ளியது. அனங்கன் - மன்மதன்; அவனை வடுச்செய்தது, உருவிலி ஆக்கியது. 'அனங்கன்' என்பதும் அதனாற் பெற்ற பெயரேயாம். அந்தகன் - கூற்றுவன்; அவனை வடுச்செய்தது, காலால் உதைத்து உருட்டியது. இதனால், அவன் மார்பில் தழும்புடையனானான் என்றலுமாம். சந்திரனை வடுச்செய்தது, தக்கன் வேள்வியில் காலால் தேய்த்தது. இதுவே, அவனுக்கு மறுவாயிற்று என்றலுமாம். நயனம் - கண். "நாயகனே" என்ற பிரிநிலை ஏகாரம், சிறப்புணர்த்திற்று.

'தன்னின் மெலியார் மாட்டு அன்பும், அருளும் இல்லாது அவரை நலிகின்றவன் தலைவனாதல் எவ்வாறு' என்பது தடை.

'தந்தை தாயர், தம் மக்களை ஒறுத்தல் அவரது நலத்தின் பொருட்டேயன்றிப் பிறிதில்லாமைபோல, சிவபெருமானும் அயன் முதலியோரை ஒறுத்தது அவர் தம் குற்றத்தின் நீங்கி உய்திபெறற்பொருட்டே யாகலின், அஃது அவர்கட்கு நன்மை செய்ததேயாம்' என்பது விடை.

"கொன்றது வினையைக் கொன்று
நின்றஅக் குணம்என் றோரார்"

எனவும்,

"தந்தைதாய் பெற்ற தத்தம்
புதல்வர்கள் தம்சொல் ஆற்றின்
வந்திடா விடினு றுக்கி
வளாரினால் அடித்துத் தீய
பந்தமும் இடுவர்; எல்லாம்
பார்த்திடிற் பரிவே யாகும்;
இந்தநீர் முறைமை யன்றோ
ஈசனார் முனிவும் என்றும்"

எனவும் கூறிய விளக்கங்களைக் காண்க. (சிவஞானசித்தி சூ. 1-51. சூ. 2-16). இவ்வாறுஒறுக்கும் திருவருள், 'மறக் கருணை' என்றும், வேண்டுவார்க்கு அவர் வேண்டுவதை அளித்து மகிழ்விக்கும் திருவருள், 'அறக்கருணை' என்றும் சொல்லப்படும் என்க.

நெற்றிக்கண் வியாபக உணர்வாகிய ஞானத்தைக் குறிப்ப தாகலின், 'அஃதுடையவன், அதனை இல்லாதவர்கட்குத் தலைவனாய் மறக்கருணை அறக்கருணைகளை அவர்கட்கு ஏற்ற பெற்றியாற் செய்து அவர்களை உய்யக்கொள்ளுதல் இயல்பு' என்பதைக் குறிப்பாற்பெற வைத்தமையின். 'நயனங்கள் மூன்றுடைய நாயகன்' என்றது உடம்பொடு புணர்த்தல். நன்மையை, 'வெற்றி" என்று அருளினார்.

259 தக்கனையும் எச்சனையுந் தலையறுத்துத் தேவர்கணம்
தொக்கனவந் தவர்தம்மைத் தொலைத்ததுதான் என்னேடீ !
தொக்கனவந் தவர்தம்மைத் தொலைத்தருளி [அருள்கொடுத்தங்
கெச்சனுக்கு மிகைத்தலைமற் றருளினன்காண் சாழலோ.

---

259. எச்சன் - வேள்வித் தேவன். இவனைத் தக்கன் வேள்வியில் வீரபத்திரர் தலையறுத்தமை.

"மனையர் சாலையில் மகத்தின் தெய்வதம்
பிணை என வெருக்கொடு பெயர்ந்து போதலும்
குனைமிகு வரிசிலை குனித்து வீரன் ஓர்
கணைதொடுத்து அவன்தலை களத்தின் வீட்டினான்"

"இரிந்திடு கின்றதோர் எச்சன் என்பவன்
சிரந்துணி படுதலும்"

எனக் கந்தபுராணத்துட் கூறப்பட்டமை காண்க (தட்ச காண்டம் - யாகசங்காரப் படலம் - 37, 38.) பிணை - மான். 'வந்தவழி' என்பது, 'வந்து' எனத்திரிந்து நின்றது. அவர் - அக்கணத்தவர். வேள்வி செய்பவனையும், வேள்வித் தெய்வத்தையும் குறிப்பதாய, 'எச்சன்' என்னும் பல பொருள் ஒரு சொல், "மிகைத்தலை மற்று அருளினன்" எனப் பின்னர் வந்த குறிப்பினால், வேள்வி செய்தவனாகிய தக்கனையே சுட்டி நின்றது. மிகைத்தலை - வேண்டாத, (நாணத்தக்க) தலை; அஃது யாட்டுத்தலை. 'மிகைத்தலையாக' என ஆக்கம் வருவிக்க. மற்று - மற்றொன்று (தேவர்க்குப் பொருந்தாத ஒன்று). தக்கன் வேள்வியில் தேவர்களை வீரபத்திரர் ஒறுத்தஞான்று, தக்கன் தலையைமட்டில் திக்கிரை ஆக்கியதையும் அதனால் பின்பு சிவபெருமான் இறந்தவரை உயிர்பெற்றெழச் செய்தபொழுது தக்கன் எழாதொழிய, வேள்வியின் பொருட்டு வெட்டப்பட்ட யாட்டின் தலைகளுள் ஒன்றை அவன் உடலிற் பொருத்தி எழச் செய்ததையும் கந்தபுராணம்,

"கண்டு மற்றது வீரபத் திரன்எனும் கடவுள்
கொண்ட சிற்றமோ டேகியே தக்கனைக் குறுகி
அண்ட ரோடுநீ ஈசனை இகழ்ந்தனை அதனால்
தண்டம் ஈதென வாளினால் அவன்தலை தடிந்தான்".

" அற்ற தோர்சென்னி விழுமுன் இறைவன் அங்கையினுல்
பற்றி ஆயிடை அலமரும் பாவகற் பாராத்
திற்றி ஈதெனக் கொடுத்தனன் கொடுத்தலும் செந்தீ
மற்றெர் மாத்திரைப் போதினில் மிசைந்தது மன்னோ"

எனவும்,

" வித்தக வலிகொள் பூதர்
வீரபத் திரன்றன் முன்னர்
உய்த்தலும் அதன்மேல் வேள்விக்
குண்டியாம் பகவுள் வீந்த
மைத்தலை கண்டு சேர்த்தி
எழுகென்ருன் மறைகள் போற்றும்
அத்தனை இகழும் நீரர்
ஆவர்இப் பரிசே என்ன "

" என்றலும் உயிர்பெற் றங்கண்
எழுந்தஅத் தக்கன் முன்னம்
நின்றதோர் வீரற் கண்டு
நெஞ்சு துண் ணென்ன அஞ்சித்
தன்தக விழந்து பெற்ற
தலைகொடு வணங்கி நாணி
அன்றுசெய் நிலைமை நாடி
அரந்தையங் கடலுட் பட்டான் "

எனவும் விளக்கிற்று (ஷை - ஷை 50, 51, 161, 164) மை-யாடு. அரந்தை - துன்பம்).

யாவரும் உயிர்பெற்றெழுந்த பின்னர், வேள்வித்தேவன் முதலிய தேவர் பலருடன் தக்கனும் சிவபெருமானை வணங்கி அருள்பெற்றனன் என்பதையும்,

" மீத்தகு விண்ணு ளோரும்,
வேள்வியங் தேவும், மாலும்,
பூத்திகழ் கமலத் தோனும்
புதல்வனும், முனிவர் தாமும்

260 அலரவனும் மாலவனும் அறியாமே அழலுருவாய்
நிலமுதற்கீழ் அண்டமுற நின்றதுதான் என்னேடீ ?
நிலமுதற்கீழ் அண்டமுற நின்றிலனேல் இருவருந்தம்
சலமுகத்தால் ஆங்காரந் தவிரார்காண் சாழலோ. 6

ஏத்தினர் வணங்கி நிற்ப
எம்மைஆ ளுடைய முக்கண்
ஆத்தன்அங் கவரை நோக்கி
இவைசில அருளிச் செய்வான் "

என அவ்விடத்துக் கூறப்பட்டமை அறிக. (டி-டி 169 புதல்வன் - பிரமன் மகன்; தக்கன்).

தக்கனையன்றிப் பிறர் ஒருவர்க்கும் சிவபெருமான் மாற்றுத் தலை அருளாமையின், இங்கு, இறுதிக்கண் வந்த "எச்சன்", என்றது, பிறர் ஒருவர்க்கும் ஆகாமை அறிக.

'வடுச்செய்தது பொருந்துமாயினும், பலரைக் கொன்றொழித்தது பொருந்துமோ' என்பது தடை.

'பலரைக் கொன்றொழித்துப்போயினுன் அல்லன்; மீளவும் அவரை உயிர்பெற்றெழச்செய்து அருள்வழங்கியே சென்றான்; அவருள் முன்னின்றவனையும் அழித்தொழியாது எழச்செய்து, மாற்றுத்தலையால் அவனது குற்றத்தின் முதன்மை என்ஞான்றும் விளங்கச்செய்தான்; அதனால், அவர் தம்மைத் தொலைத்தது மாத்திரையே கூறிப் பழித்தல் பொருந்தாது' என்பது விடை.

தக்கன் வேள்வி நிகழ்ச்சியை இவ் இருதிருப்பாட்டுக்களில் அடிகள் எடுத்தோதி வலியுறுத்ததனனே, பின்னர் ஞானசம்பந்தரும், நாவுக்கரசரும் தம் திருப்பதிகங்களுள் இதனை யாண்டும் பயில எடுத்து அருளிச்செய்தனர்.

260. முதல் - அடி, அண்டத்திற்கு அப்பாற்பட்டதையே அண்டம் என்றார். 'நிலத்தடியின்கீழும் அண்டத்திற்கு அப்பாலும் உற' - என்க. சலம் - மிக்க வெகுளி. 'சலமுகத்தாற்செய்த' என ஒரு சொல் வருவிக்க. முகம், வாயில்; காரணம். 'அகங்காரம், ஆங்காரம்' என மருவிற்று. இஃது ஆகுபெயராய், இதனால் விளைந்த போரை உணர்த்திற்று.—

'அயனும், மாலும் ஒரு பிரமகற்பத் தொடக்கத்தில் தாங்களே உலகிற்கு முதல்வர் என்று தம்முட் கலாய்த்துச் செய்த போரினால் உலகம் பெரிதும் இன்னற்படுவதை அறிந்து தேவர்கள் செய்த முறையிட்டிற்கிரங்கிய சிவபெருமான், பாதலத்தின் கீழும் அண்ட முகட்டின் மேலும் ஊடுருவி நிற்கும் ஓர் ஒளித்தம்பமாய்த் தோன்ற, அதனைக்கண்ட அவர்கள் அஞ்சி நின்று, 'இதன் அடியையும், முடியையும் காண்பவரே உலகிற்கு முதல்வர்' எனத் தம்முள் முடிவு செய்துகொண்டு, திருமால் பன்றி வடிவங்கொண்டு நிலத்தின் கீழ்ச் சென்றும், அயன் அன்ன வடிவடிவங்கொண்டு விண்ணின் மேற் சென்றும் அடிமுடிகளைக் காண இயலாது மீண்டு வந்து, அது சிவபெருமான் கொண்ட வடிவமே என்பதறிந்து, அப்பெருமானை வணங்கித் தம் செருக்கொழிந்தனர்' என்னும் புராண வரலாறு நன்கறியப்பட்டதொன்று. இதனை இங்கு அடிகள் அருளிச்செய்தவாறே, கந்தபுராண ஆசிரியர், யாக சங்காரப் படலத்தை யடுத்து, 'அடி முடிதேடு படலம்' என அமைத்துக் கூறினமை காண்க. இவ்வரலாற்றை அடிகள் திருத்தோணோக்கத்துப் பன்னிரண்டாம் திருப்பாட்டுள் இன்னும் சிறிது விளக்கமாக அருளிச்செய்வார்.

இங்ஙனம் இவர் இதனைப் பல விடத்தும் பெரிதும் அருளிச் செய்ததனானே பின்வந்த இருபேராசிரியரும் (ஞானசம்பந்தரும், நாவுக்கரசரும்) இதனை முன்னை வரலாற்றினும் பெரும்பான்மை யாக ஆங்காங்கு எடுத்து அருளிச்செய்து போந்தனர்,

'சிலரை வெளிப்பட்டு நின்று ஒறுத்தல் பொருந்துவதாயி னும், சிலரை மறைந்து நின்று மருட்டுதல் தலைவராயினார்க்குப் பொருந்துமோ' என்பது தடை.

'நோய்க்குத் தகவே மருத்துவன் மருந்து கொடுத்தல் போல, அவரவர்க்கு ஏற்ற முறையானே அவரவரைத் திருத்து தல் வேண்டுமாகலின், மறைந்து நின்று மருட்டித் திருத்துத லும் குற்றமாகாது' என்பது விடை.

261 மலைமகளை யொருபாகம் வைத்தலுமே மற்றொருத்தி
சலமுகத்தால் அவன்சடையிற் பாயுமது என்னேடீ ?
சலமுகத்தால் அவன்சடையிற் பாய்ந்திலனேல்
[தரணியெல்லாம்
பிலமுகத்தே புகப்பாய்ந்து பெருங்கேடாஞ் சாழலோ. 7

262 கோலால மாகிக் குரைகடல்வாய் அன்றெழுந்த
ஆலாலம் உண்டான் அவன்சதுர்தான் என்னேடீ ?
ஆலாலம் உண்டிலனேல் அன்றயன்மால் உள்ளிட்ட
மேலாய தேவரெல்லாம் வீடுவர்காண் சாழலோ. 8

---

261. மலைமகள் - உமாதேவி. மற்றொருத்தி, கங்கை. சலமுகத்தால் - நீர்வடிவமாய்; 'வஞ்சனையால்' என்பது நயம். தரணி - பூமி. பிலம் - பாதலத்திற்குச் செல்லும் வழி. பெருங்கேடு ஆம் - பேரழிவு உண்டாகும்; உண்டாகியிருக்கும்.

பகீரதன் பொருட்டு நிலவுலகத்திற்கு வந்த கங்கையைச் சிவபெருமான் தனது சடையில் தாங்கி நின்றமை புராண வரலாறுதல் வெளிப்படை.

'ஒருத்தியை மணந்தபின் மற்றொருத்தியை அவளறியாமல் மறைத்து வைத்திருத்தல் உயர்ந்த தலைவராவார்க்குப் பொருந்துமோ' என்பது தடை.

'மற்றொருத்தியாவாள் உண்மையில் உலகை அழிக்க வந்தவளேயாகலானும், அவளைச் சடையில் வைத்திருத்தல் உலகத்தைக் காத்தற் பொருட்டேயன்றி, கரவினால் இன்பம் நுகர்தற்பொருட்டன்றாகலானும் அஃது அவற்குப் புகழாதலன்றிக் குற்றமாதல் எவ்வாறு' என்பது விடை.

262. 'கோலாகலம்' என்பது, 'கோலாலம்' எனக் குறைந்து நின்றது, 'ஆரவாரம்' என்பது பொருள். 'ஆகியதன் பின்' என்பது, 'ஆகி' எனத் திரிந்து நின்றது. 'அமரரெல்லாம் ஆரவாரம் செய்து கடைந்தபொழுது' என்பது பொருள். ஆலாலம் - நஞ்சு. "ஆலாலம் உண்டான்" என்றது, 'அமுதம் உண்ணாது நஞ்சம் உண்டான்' என்றவாறு. சதுர் - திறல். "என்" என்றது. 'எத்தன்மைத்து' என இகழ்தற்குறிப்பாய் நின்றது. "உள்ளிட்ட" என்றது, 'அயன்'

263 தென்பா லுகந்தாடுந் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பா லுகந்தான் பெரும்பித்தன் காணேடீ !
பெண்பா லுகந்திலனேற் பேதாய் இருநிலத்தோர்
விண்பா லியோகெய்தி வீடுவர்காண் சாழலோ. 9

மால்' என்பவரது சிறப்புணர்த்தி நின்றது. விடுவர் - அழிவர்; அழிந்திருப்பர்.

'கனியிருப்பக் காய்கவர்தல்போல, அமுதத்தை உண்ணுது நஞ்சினை உண்டது பித்தர் செயலாவதல்லது. அறிவுடையார் செயலாதல் எவ்வாறு' என்பது தடை.

'நஞ்சினை உண்டும் அவன் இறவாமையும், அமுதம் உண்டும் பிறர் இறத்தலும் கேட்கப்படுதலின், அச்செயல் அவன் அவர்களை முன்பே இறவாது காக்கச்செய்த அருட் செயலாதல் தெளிவு. அதனுல், அஃது அறிவும், அருளும் உடைமையாவதல்லது, பித்தாதல் யாங்ஙனம்' என்பது விடை.

263. தென்பால் உகந்து - தென்றிசையை விரும்பி இது, கூத்தப்பெருமான் தெற்குநோக்கி நிற்றலைக் குறித்தது. பெண் பால் உகந்தான் - ஒருத்தியைப் பக்கத்தே நீங்காது கொண்டான். உகத்தல் - விருப்புதல், அஃது எஞ்ஞான்றும் உடனுயிருக்கும் தன் காரியத்தைத் தோற்றி நின்றது, 'ஆதலின் பெரும்பித்தன்' என்க. பேதாய் - பெண்ணே; 'அறிவிலியே, என்பது நயம். "விண்பால்" என்றதன்பின், 'நோக்கி' என்பது வருவிக்க. 'யோகம்' என்பது, 'யோகு' என நின்றது. இஃது இங்குத் துறவறத்தைக் குறித்து நின்றது. "நிலத்தோர்" என்றது, 'உலகிலுள்ளோர் அனைவரும்' என்றபடி.

"தவமும் தவமுடையார்க் காகும்; அவம்அதனை
அஃதிலார் மேற்கொள் வது"

என்றவாறு, (குறள் - 262.) துறவறத்திற்கு உரியரல்லாதவர் அதனை மேற்கொள்ளின் இரண்டறங்களையும் இழந்து கெடுவ ராதலின், "இருநிலத்தோர், விண்பாலியோகெய்தி வீடுவர்"

என்று அருளினர். 'உடலின் தொழிற்பாட்டிற்கு உயிரின் இயைபு இன்றியமையாதவாறுபோல, உயிர்களின் தொழிற் பாட்டிற்கு இறைவனது இயைபு இன்றியமையாமையின், அவன் அவரவருக்கு ஏற்றவாற்றான் இயைந்துநிற்றல்வேண்டும்' அதனால், சிலர்க்குப் போகியாகியும், சிலருக்கு யோகியாகியும் நிற்பன்; இவ்வாறின்றி யோகியாயே நிற்பின், யோகத்திற்கு உரியவாகாது போகத்திற்கே உரியவாய உயிர்கள் கேடுறும்' என்பது இத்திருப்பாட்டின் கருத்து.

"போகியாய் இருந்து யிர்க்குப்
போகத்தைப் புரிதல் ஓரார்;
யோகியாய் யோக முத்தி
உதவுத லதுவும் ஓரார்;
வேகியா றாற்போல் செய்த
வினையினை வீட்டல் ஓரார்:
ஊகியா மூட ரெல்லாம்
உம்பரின் ஒருவன் என்பர்"

என்றது காண்க. (சிவஞானசித்தி சூ. 1,50.).

இறைவன் போகியாய் இல்லாதொழியின் உயிர்கட்குப் போகம் அமையமாட்டாது என்பதை, 'அவன் யோகியாய் இருந்து சனகாதி நால்வர்க்கு ஞானத்தை அருளியபொழுது யாதோர் உயிர்க்கும் போகமில்லையாய்ப் பிரமனது படைப்புத் தொழிலும் இல்லையாயிற்று' எனவும், 'பின்னர் அவ்யோகம் நீங்கி மலைமகளை மணந்தபொழுதே உயிர்கட்குப்போகம் அமைந்தது' எனவும் வரும் கந்தபுராண வரலாறு நன்கு உணர்த்தும். இன்னும், 'போகத்தைப் பயப்பிக்கும் கடவுள் காமனேபோலத் தோன்றினும், உண்மையில் அவன் அதற்கு உரியவன் அல்லன்; எல்லார்க்கும் எல்லாவற்றையும் தருபவன் சிவபெருமானே' என்பதும், அப்பெருமான் காமனை எரித்தமையைக்கூறும் அப்புராணத்தால் அறியப்படும். அதனால்,

"கண்ணுதல் யோகி ருப்பக்
காமன்நின் றிடவேட் கைக்கு
விண்ணுறு தேவ ராதி
மெலிந்தமை ஓரார்; மால்தான்

264 தானந்தம் இல்லான் தனையடைந்த நாயேனை
ஆனந்த வெள்ளத் தழுத்துவித்தான் காணேடீ!
ஆனந்த வெள்ளத் தழுத்துவித்த திருவடிகள்
வானுந்து தேவர்கட்கோர் வான்பொருள்காண் சாழலோ.

எண்ணிவேள் மதனை ஏவ
எரிவிழித் திமவான் பெற்ற
பெண்ணினைப் புணர்ந்து யிர்க்குப்
பேரின்பம் அளித்த தோரார் ''

என்றது சிவஞானசித்தி (சூ - 1.53.).

'உலகவர்போல மனைவியை உடையனாய் இருப்பவன் கடவுளாவனோ' என்பது இங்கு எழுப்பப்பட்ட தடை.

'அவ்வாறிருத்தல் தன்பொருட்டன்றி உயிர்கள் பொருட்டே ஆகலானும், அங்ஙனமாகவே, அஃது இளஞ்சிறாரை மகிழ்விக்க அவரொடு விளையாட்டயரும் பெற்றோரது செயல்போல நாடகமாத்திரையான் மேற்கொள்வதாதலன்றி, உண்மையான் விரும்பிக்கொள்வதன்றாதல் இனிது விளங்குதலானும், அஃது உலகத்தை நடத்தும் இறைவற்கு இன்றியமையாததொரு செயலாவதன்றி, இறைமைத் தன்மையொடு மாறுதல் எங்ஙனம்' என்பது விடை.

இது, கடவுள்மாட்டு நயப்புற்றவளது கூற்றேயாகலின், கடவுட்டன்மைபற்றிக் கூறலும் பொருந்துவதாதல் அறிக.

264. 'தானே' எனச் சிறப்பு ஓகாரம் விரித்து, 'நாயேனை ஆனந்த வெள்ளத்து அழுத்துவித்தான்; அஃது எவ்வாறு' என இசையெச்சம் வருவித்து உரைக்க. '' தனையடைந்த '' என்றது, தலைவி தனக்கு வேட்கையுண்மையை உடம்பட்டும், அடிகள் தாம் தம்மை ஆளவந்த ஆசிரியன்வழி நின்றமையை உடம்பட்டும் கூறியதாம். உந்துதல் - செலுத்துதல்; அது, வல்லவன் ஏவா வான ஊர்தியை (புறம் - 27.) என்க. வான் பொருள் - எட்டாத பொருள். ஆனந்த வெள்ளத்து அழுத்து விப்பன அவன் திருவடிகளே என்பது அனுவாத முகத்தாற் பெறவைத்துக் கூறலின், முதல்வனைப்பற்றி வினவியவட்கு,

265 நங்காய் இதென்னதவம் நரம்போ டெலும்பணிந்து
கங்காளம் தோள்மேலே காதலித்தான் காணேடீ !
கங்காளம் ஆமாகேள் காலாந்த ரத்திருவர்
தங்காலஞ் செய்யத் தரித்தனன்காண் சாழலோ. 11

அவனது திருவடிகளது சிறப்புக் கூறினமை விடைவழுவாகாமை அறிக. உயிர்கட்கு இன்பமாவது இறைவனது சத்தியாதலா னும் திருவடியே உயிர்களை ஆனந்த வெள்ளத்து அழுத்து விப்பனவாதல் அறிக. இத்திருப்பாட்டின் சொல்நடை "ஆனந்த வெள்ளத் தழுந்துமொ ராருயிர்" என்னும் திருக் கோவைப்பாட்டோடு (307) ஒத்திருத்தல் அறியத்தக்கது.

"ஆதி அந்தம் இல்லாத கடவுள் மானிடப் பெண்டிர்க்கும் இன்பம் தருவானோ; தாரான் ஆதலின், எனக்குப் பேரின்பம் தந்தவன் அத்தகைய கடவுளாதல் எவ்வாறு' என்பது தலைவி கூற்றிற்கு இயைய எழுந்த தடை. 'தகுதி' இல்லாதார்க்கும் வீடு தருவானோ' என்பது அடிகளது அனுபவத்திற்கியைய இதன்கண் உள்ளுறையாய் அமைந்து நிற்பது.

'அவ்வாறு உனக்கு அவன் எதிர்வந்து பேரின்பம் அளித்தது அவன் கருணையினாலே காண்; அக்கருணை உனது முன்னைத் தவத்தால் உனக்கு எளிதிற்கிடைத்ததாயினும், அது, வானத்திற் பறக்கும் தேவர்களுக்கும் எட்டாததொன்று' என்பது விடை.

265. "தவம்" என்றது ஆகுபெயரால், தவக்கோலத்தை உணர்த்திற்று, "தவமறைந்தல்லவை செய்தல்" (குறள்-274.) என்புழிப்போல. பின்னர், "தோள்மேல்" என வருகின்றமை யின், முன்னர் 'மார்பின்மேல்' என்பது வருவிக்க, எலும்பை நரம்போடு அணிந்து என்றதனால், அவை நரம்பினால் தொடுக்கப் படும் என்பது பெறுதும். "அணிந்து" என்றதற்கு அணிந்த தன்றியும் என உரைக்க. கங்காளம் - எலும்புக் கூடு.

'மாயோன் ஒருவனது வாழ்நாளில் பிரமர் நூற்றுவர் தோன்றி வாழ்ந்து அழிவர்' என்பதும், 'அவ்வழி நூறுவது எண்ணு முறைமைக்கண் வரும் பிரமன் இறக்குங்காலத்து

மாலும் இறக்க, அவ்விருவரது எலும்புக் கூட்டினையும் சிவபெருமான் தனது இரு தோள்களிலும் ஏற்று நடம்புரிவன்' என்பதும் புராண வரலாருதல்பற்றி எழுந்தவை. இத்திருப் பாட்டின்கண் உள்ள தடை விடைகள்.

ஆமா கேள் - அவனுக்கு ஏற்புடையவாயினவாற்றைக் கேள். அந்தரம் - முடிவு. "காலாந்தரத்து" என்றதனை, "தரித்தனன்" என்றதற்கு முன்னர்க் கூட்டுக. "இருவர்" என்றது, தொகைக் குறிப்பாய், 'அயன், மால்' என்பவரை உணர்த்திற்று. "காலம்" என்றதும், அதனது முடிவை. "செய்ய" என்ற பொதுவினை, 'காட்ட' எனச் சிறப்பு வினையாய் நின்றது. 'அவர் காலாந்தரத்துத் தரித்தனன்' எனச் சுட்டுப்பெயர் வருவித்துரைக்க.

'சடை, கல்லாடை முதலியவற்றைக் கூறின், நீ அவை தவக்கோலம் என்பாய்; அருளுக்கு மாருய நரம்போடு எலும்புகளும் அன்னவாயொழியினும், கங்காளமும் தவக்கோலமோ' என்பது தடை.

'கங்காளம் காதலித்தது, தவக்கோலம் அன்று; அயன், மால் என்பவரும் நிலையாமையுடையரே என்பது உணர்த்துதற் பொருட்டாம்' என்பது விடை.

இதனுல், 'சிவபிரானது திருவேடங்கள் பலவும், பலப்பல உண்மைகளை உணர்த்து முகத்தான், உண்மை ஞானத்தைப் பயக்கும் என்பது' போந்தது. இதனை, "மருந்துவேண்டில் இவை" என்னும் திருந்துதேவன்குடிப் பதிகத்துள், (திருமுறை - 3. 25.) ஞானசம்பந்தர்,

"விதிபோக் காவன, வினையைவீட் டுவ்வன,
ஓதிஓர்க் கப்படாப் பொருளைஓர் விப்பன
.............அடிகள்வே டங்களே."

"விண்ணுலா வும்நெறி, வீடுகாட் டும்நெறி,
மண்ணுலா வும்நெறி, மயக்கந்தீர்க் கும்நெறி
.............அடிகள்வே டங்களே"

என்ருற்போலப் பலபட விளக்கியும், 'இவ்வாற்ருல் இவை பழித்தற்குரியனவல்ல; பெரிதும் புகழ்தற்குரியன' என்பதை,

" பங்கமென் னப்படர் பழிகளென் னப்படா,
புங்கமென் னப்படர் புகழ்களென் னப்படும்
....அடிகள்வே டங்களே "

என வலியுறுத்தியும் அருளிச்செய்தல் காண்க. இங்கு அடிகள் எடுத்தோதி வலியுறுத்தருளிய இக் கங்காள வேடத்தின் வரலாற்றை,

" பெருங்கடல் மூடிப் பிரளயங் கொண்டு பிரமனும்போய்,
இருங்கடன் மூடி இறக்கும்; இறந்தான் களேபரமும்,
கருங்கடல் வண்ணன் களேபரமுங் கொண்டு கங்காளராய்
வருங்கடன் மீளநின் றெம்மிறை நல்வீணை வாசிக்குமே"

என அப்பரும் வலியுறுத்தருளுதல் காண்க (திருமுறை - 4. 112. 7.).

அயன், மால் இருவரது காயத்தை (எலும்புக் கூட்டினை) மேலேற்றிக்கொள்ளுதல் பற்றிக் கங்காள மூர்த்தி, 'காயாரோகண மூர்த்தி' எனவும் படுவர்; அவர் சிறந்து விளங்குந் தலமும் 'காயாரோகணம்' எனப்படும். 'காயாரோகணம்' என்பதே, 'காரோணம்' என மருவி வழங்கும். அதனால், காஞ்சிப் புராணக் காயாரோகணப் படலத்துள் இவ்வரலாறு இனிது விளக்கப்படுகின்றது. அதனுள், ஈண்டைக்கு இன்றியமையாததொரு செய்யுள் வருமாறு:-

" இருவரும் ஒருங்கே இறவருங் காலம்
எந்தையே ஒடுக்கிஆங் கவர்தம்
உருவம்மீ தேற்றிக் கோடலால் காயா
ரோகணப் பெயர்அதற் குறுமால்;
வருமுறை இவ்வா றெண்ணிலா விரிஞ்சர்
மாயவர் காயம்மேல் தாங்கிக்
கருணையால் அங்கண் நடம்புரிந் தருளும்
காலமாய்க் காலமுங் கடந்தோன் "

இங்குக் காட்டிய சிறந்த பல மேற்கோள்களால் கங்காளத்தின் இயல்பு இனிது விளங்குதலின், 'கங்காளமாவது, சிவபிரான் வாமனனை அழித்து, அவன் முதுகெலும்பைத் தண்டாகப் பற்றிய அதுவே' என்பாரது கூற்றுப் பொருந்தாமை அறிந்துகொள்க.

266 கானார் புலித்தோல் உடைதலையூண் காடுபதி
ஆனால் அவனுக்கிங் காட்படுவார் ஆரேடீ!
ஆனாலுங் கேளாய் அயனுந் திருமாலும்
வானடர் கோவும் வழியடியார் சாழலோ. 12

267 மலையரையன் பொற்பாவை வாள்நுதலாள் பெண்திருவை
உலகறியத் தீவேட்டான் என்னுமது என்னேடீ?
உலகறியத் தீவேளா தொழிந்தனனேல் உலகனைத்துங்
கலைநவின்ற பொருள்களெல்லாங் கலங்கிடுங்காண் சாழலோ. 13

---

266. கான் - காடு. தலை - தலை ஓடு. 'தலையில் ஊண்' என்க. ஊண் - உண்ணுதல். இனி, 'இஃது ஆகுபெயராய் உண்கலத்தை உணர்த்திற்று' எனினும் அமையும். காடு - சுடுகாடு. பதி - உறைவிடம்.

'உடை முதலியன இவ்வாறாக உடையவனை அன்பினால் அடைபவர் யார்' என்பது தடை,

'அவை அவ்வாறு இருப்பவும் உயர்ந்த தேவர் பலரும் தொன்றுதொட்ட அன்பராயிருத்தல் உண்மையானபின், அவை பற்றி ஐயம் என்' என்பது விடை.

முன்னர் (257) "காயில் உலகனைத்தும் கற்பொடிகாண்" எனப் பலரும் அச்சத்தால் அடங்கி நிற்றல் கூறப்பட்டமையின், இங்கு, "ஆட்படுவார்" என்றது, அன்பினால் ஆட்படுவாரையே யாம். இதனானே, புலித்தோலாடை முதலியவைபற்றி மீண்டும் கூறியது பிறிதொரு கருத்துப் பற்றியாதலும் அறிந்துகொள்க.

"அஞ்சி யாகிலும் அன்புபட் டாகிலும்
நெஞ்சம் வாழி நினைநின்றி யூரைநீ"

என்றருளிச்செய்தமையின், (திருமுறை - 5. 23. 9.) அடியராதல் அச்சமும், அன்பும் என்னும் இருவகையானல்லது இல்லாமை யறிக. பயன் கருதிச் செய்யும் அன்பும், "அன்பு" என்றதன்கண் அடங்கும்.

267. "பாவை" முதலிய மூன்றும் ஒருபொருள்மேல் வந்த பலபெயர்கள். பெண்திரு - பெண்ணினத்தின் செல்வம்.

268 தேன்புக்க தண்பணைசூழ் தில்லைச்சிற் றம்பலவன்
தான்புக்கு நட்டம் பயிலுமது என்னேடீ!
தான்புக்கு நட்டம் பயின்றிலனேல் தரணியெல்லாம்
ஊன்புக்க வேற்காளிக் கூட்டாங்காண் சாழலோ. 14

தீ வேட்டான் - தீ முன்னர் மணந்தான். என்னும் அது என் - என்று அறிந்தோர் சொல்லும் அச்செய்திக்குக் காரணம் யாது. கலை நவின்ற பொருள்கள் - மணமுறையைக் கூறும் நூல்களில் தான் சொல்லிய பொருள்கள். கலங்கிடும் - இனிது விளங்கா தொழியும்.

'சிவபெருமானும் தன் தேவியைத் தீமுன்னர்ச் சடங்கு செய்து திருமணம் புரிந்தான் எனில், அங்கியங்கடவுள் முதலா னவரன்றோ அனைவர்க்கும் சான்றாய் நிற்கும் கடவுளர்' என்பது தடை.

'சிவபெருமான் அங்ஙனம் செய்தது, கற்பிப்பான் ஒருவன் தான் கற்பிக்கும் கலை மாணாக்கர்க்கு இனிது விளங்கித் தெளி வெய்துதற் பொருட்டுத் தானே அதனைப் பயிலுதல்போலத் தான் உலகர்க்கு வகுத்த விதி இனிது விளங்குதற்பொருட்டுத் தானே மேற்கொண்டு செய்துகாட்டியதன்றி வேறில்லையாத லின், அதுபற்றி அங்கியங்கடவுள் முதலானோர் அவனின் மிக்கா ராதல் இல்லை' என்பது விடை.

"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப"

என்றதனால், (தொல். பொருள் - 142.) மணமுறைச் சடங்கு கள் முனிவராற் கட்டப்பட்டனவே என்பது இனிது விளங்கிக் கிடப்பவும், அவற்றைச் சிவபெருமானே செய்தனவாக வைத் துத் தடை விடைகளான் ஆராய்ந்ததனால், 'பற்றிகல் இன்றிச் செய்வாரது செயல்களை எல்லாம் இறைவன் தன்செயலாக ஏற்றுக்கொள்வன்' என்பது நல்லாசிரியரது துணிபு என்பது பெறப்படும்.

268. பணை - வயல். தான் புக்கு நட்டம் பயிலும் அது - தான் காளிமுன் ஒருசிகராய்ச் சென்று நடனம் செய்த அச் செயல். 'காளிமுன்' என்பது ஆற்றலான் வந்து இயைந்தது.

269 கடகரியும் பரிமாவும் தேரும்உகந் தேருதே
இடபம்உகந் தேறியவா றெனக்கறிய இயம்பேடீ!
தடமதில்கள் அவைமூன்றுந் தழலெரித்த அந்நாளில்
இடபமதாய்த் தாங்கினுன் திருமால்காண் சாழலோ. 15

என் - என்ன காரணத்தால். தரணி - உலகம். ஊன் புக்க வேல் - அசுரரது புலால் பொருந்திய சூலம். "ஊட்டு" என்ற முதனிலைத் தொழிற்பெயர் ஆகுபெயராய், ஊட்டப்படும் உணவைக் குறித்தது.

"தில்லைச் சிற்றம்பலவன்" என்றதனுல், 'அடியார்கள் பொருட்டு ஆனந்தநடனத்தைச் செய்பவன்' என்பது போந்தது. போதரவே, 'இத்தகையோன் ஒரு பெண்முன் சென்று அவளோடு நடனப்போரினை மேற்கொண்டு செய்தது ஏன்' என்பது தடையாயிற்று.

'காளி, தாரகன் என்னும் அசுரனை அழித்து அவன் உதிரத்தைக் குடித்த செருக்கினுல் உலகினைத் துன்புறுத்த, சிவபெருமான், அவள்முன் சென்று நடனப்போர் செய்து அச் செருக்கினை அடக்கினுர்' என்பதே புராண வரலாறு ஆதலின், அதுவே இங்கு விடையாயினமை அறிக.

இவ்வரலாற்றைத் திருநாவுக்கரசர் தமது தசபுராணத் திருப்பதிகத்துள் எடுத்தோதுதல்காண்க (திருமுறை-4. 14. 4.). இவ்வரலாற்றை 'நிசும்பன், சும்பன்' என்னும் அசுரரால் நிகழ்ந்த வரலாருகவும் புராணங்கள் கூறும்.

269. கட கரி - மதத்தை உடைய யானை. பரிமா - குதிரை. உகந்து - விரும்பி. திரிபுரம் எரித்த காலத்தில் திருமால் இடப உருவங்கொண்டு சிவபெருமானைத் தாங்கிய வரலாற்றினைக் கந்த புராணமும் குறிப்பிடுதல் காண்க (தட்சகாண்டம். ததீசி யுத்தரப் படலம் - 314.).

'செல்வரானவர்க்கு யானையும். குதிரையும், தேரும்போல்வனவன்றே ஊர்தியாவன? அவை இல்லாது எருதின்மேல் ஏறிவருபவன் செல்வனுவனே' என்பது தடை.

270 நன்றாக நால்வர்க்கு நான்மறையின் உட்பொருளை
அன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்தான் காணேடீ!
அன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்தான் ஆயிடினும்
கொன்றான்காண் புரமூன்றுங் கூட்டோடே சாழலோ. 16

'அஃது ஒருகாலத்து நிகழ்ந்த நிகழ்ச்சியாயினும், அக்காலத்தில் பணிபுரிந்த மாயோனுக்கு மகிழ்ச்சி உண்டாதற் பொருட்டு அதனையே தான் மேற்கொண்டான்' என்பது விடை.

இறைவனுக்கு உண்மையில் இடபமாய் இருப்பது அறக் கடவுளே. இதனையே கந்த புராணமும் விரித்துக் கூறிற்று' எனினும், இவ்வரலாற்றையே இங்கு விடையாகக் கூறியது, 'அவ்வளவின் அவன் மகிழ்க' என்னும் நயம் பற்றிப் பருப் பொருளாய் எல்லார்க்கும் இனிது விளங்குதற் பொருட்டாம்.

270. நால்வராவார் சனகாதியர் என்பர். அன்று - முற்காலத்தில். ஆல் - கல்லால மரம். 'அறமாக' என ஆக்கம் வருவித்து உரைக்க. கொன்றான் - அழித்தான். கூட்டு - கூட்டம்; அசுரக் குழாம்.

'நால்வர் முனிவர்கட்கு ஆலின்கீழ் இருந்து அறம் கூறுவானாயினமையின், அவன் துறவோர்க்குத் துணையாய் வீடுதருதலல்லது, இல்வாழ்வார்க்குத் துணையாய்ப் பொருள் இன்பங்களைத் தாரான்; ஆதலின், இல்வாழ்வார், பிற தேவரையே அடைதல் வேண்டும்' என்பது தடை.

'அவன் அஃது ஒன்றே செய்தொழியாது, முப்புரத்தை அழித்துத் தேவர்கட்கு வாழ்வளித்தலையும் செய்தானாதலின், இல்வாழ்வார்க்கும் பொருள் இன்பங்களைத் தருபவனேகாண்' என்பது விடை.

'பொருள் இன்பங்களைத் தருவாராகப் பிறர் கூறும் தேவர் கட்கும் முப்புரத்தவராகிய பகையை அழித்து வாழ்வருளிய பெருமான் அவனேயாகலின், போகம், மோட்சம் இரண்டிற்கும் அவனையன்றி முதல்வர் யாவர் உளர்' என்பது திருவுள்ளம்.

271 அம்பலத்தே கூத்தாடி அமுது செயப் பலிதிரியும்
நம்பனையுந் தேவனென்று நண்ணுமது என்னேடீ!
நம்பனையும் ஆமாகேள் நான்மறைகள் தாமறியா
எம்பெருமான் ஈசாவென் றேத்தினகாண் சாழலோ.　　17

272 சலமுடைய சலந்தரன்றன் உடல்தடிந்த நல்லாழி
நலமுடைய நாரணற்கன் றருளியவா றென்னேடீ?
நலமுடைய நாரணன்தன் நயனம்இடந் தரனடிக்கீழ்
அலராக இடஆழி அருளினன்காண் சாழலோ.　　18

மெய்கண்ட தேவரும் இவ்வாறே, "கல்லால் நிழல் மலைவில் லார்" என இவ்விரண்டனையும் குறிப்பிட்டு, அவனது முழு முதல் தன்மையைக் குறிப்பித்தல் காண்க (சிவஞானபோதம்-காப்பு.).

271. அமுது செய - உணவைத் தேட. பலி - பிச்சை. 'பலிக்கு' என நான்காவது விரிக்க. நம்பன் - சிவன். நண்ணுதல் - அடைதல். மூன்றும் அடியில், "நம்பனையும்" என்ற உம்மையைப் பிரித்து, "மறைகள்" என்றதனோடு கூட்டுக. இது சிறப்பும்மை. 'நம்பனை நான்மறைகளும் தாம் அறியா; மற்று அவை ஆமாறு கேள்; எம்பெருமானே, ஈசா என்று துதித்து நிற்கும்' என உரைக்க. இஃது, "ஈசானஸ் ஸர்வ வித்யாநும்" என்று தொடங்கும் வேதமந்திரத்தை உட்கொண்டு அருளிச்செய்தது. "அறியா" என்றது, 'அளவிட்டுணரமாட்டா' என்றபடி.

'பலருங் காண அம்பலத்திலே நின்று கூத்தாடி அவரை மகிழ்வித்தும், உணவின் பொருட்டுப் பிச்சைக்கு அலைந்தும் நிற்கின்ற சிவனையும் சிலர் கடவுள் என்று அடைவது என்' என்பது தடை.

'சிவனை வேதங்களும் அளவிட்டுணரமாட்டாவாய்த் துதித்தமைகின்றன என்றால், அவனை முதற் கடவுள் என்று அறிந்து அடைபவர் அறிவாற் பெரியோரேயன்றிப் பிறரல்லர் என்பது சொல்லவேண்டுமோ' என்பது விடை.

272, சலம் - சினம். பிரமனது சீற்றத்திற் பிறந்த அசுரனே சலந்தராசுரன். இவனைச் சிவபெருமான் தாம்

273 அம்பரமாம் புள்ளித்தோல் ஆலாலம் ஆரமுதம்
எம்பெருமான் உண்டசதுர் எனக்கறிய இயம்பேடீ !
எம்பெருமான் ஏதுடுத்தங் கேதமுது செய்திடினும்
தம்பெருமை தானறியாத் தன்மையன்காண் சாழலோ. 19

உண்டாக்கிய சக்கரப் படையால் அழியச்செய்தார். சலந்தராசுரனது தோற்றம் முதலிய வரலாறுகளையும், அவனை அழித்த சக்கரத்தைத் திருமால் சிவபெருமானை வழிபட்டுப் பெற்றதையும் கந்த புராணத் ததீசி உத்தரப் படலத்துட் காண்க. நயனம் - கண். இடந்து - பெயர்த்து. அலராக - மலராக. ஆழி - சக்கரம்.

'தனக்கு வெற்றியைத் தந்த படைக்கலத்தைப் போற்றிக் கொள்ளாமல் எளிதாகப் பிறருக்கு அளித்தவனது செயல் எங்ஙனம் சிறந்ததாகும்' என்பது தடை.

'அச் செயல், தன்னை வழிபடுவார்க்கு அவர் வேண்டியவற்றை வேண்டியவாறே கொடுக்கும் வள்ளன்மை உடையவன், தனக்கென ஒன்றையும் விரும்பாதவன் என்னும் உயர்வுகளை உணர்த்துமன்றித் தாழ்வினை உணர்த்துதல் எவ்வாறு' என்பது விடை.

273. 'புள்ளித்தோல் அம்பரமாம்' என்க. ''உண்ட'' என்றது, இங்கு, 'அடைந்த' என்றும், ''சதுர்'' என்றது 'பெருமை' என்றும் பொருள் தந்தன. அல்லாக்கால், ''உண்ட'' என்றது, ''அம்பரம்'' என்றதனோடு இயையுமாறு இல்லை. ''தம்'' என்றது, ஒருமைப் பன்மை மயக்கம். 'தன் பெருமை' எனின், இனவெதுகையாய்ப் பொருந்துமாதலின் அதுவே பாடம் போலும். ''அறியாமை'', இங்கு, எண்ணாமை. எனவே, 'தன்பெருமையை நோக்காது எளிவந்து எதனையும் செய்வான்' என்பது பொருளாயிற்று. 'எம்பெருமான் எதனை உடுத்து எதனை உண்டாலும் அவற்றாலெல்லாம் அவன் தன் பெருமையைத் தான் அறியாத அருளாளனேயாவன்' என்றபடி. ''முழுதும் தானும் காண்கிலன் இன்னமும் தன்பெருந் தலைமை'' என்னும் கந்தபுராண அடியின் பொருள் யாதாயினும், (மகேந்திரகாண்டம். சூரன் அமைச்சியற்படலம்-128.) ஈண்டு இதற்கு இதுவே பொருள் என்க.

274 அருந்தவருக் காலின்கீழ் அறமுதலா நான்கனையும்
இருந்தவருக் கருளுமது எனக்கறிய இயம்பேடீ!
அருந்தவருக் கறமுதல்நான் கன்றருளிச் செய்திலனேல்,
திருந்தவருக் குலகியற்கை தெரியாகாண் சாழலோ. 20

திருச்சிற்றம்பலம்

'காயில் உலகனைத்தும் கற்பொடி' எனவும் (257), 'அயனும் திருமாலும் வானடர் கோவும் வழியடியார்' எனவும் (266), நீ சொல்லியவாறு அவன் பேராற்றலும், பெருந்தலைமையும் உடையவனாய் இருப்பினும், புலித்தோலை உடுப்பதும், நஞ்சை உண்பதும் போன்றவை (பிச்சை எடுத்தல் முதலியவை) அவனுக்குச் சிறிதும் பொருந்தாகாண்' என்பது மீட்டும் மேலன பற்றி எழுந்த தடை.

'தம் பெருமை ஒன்றே கருதிப் பிறருக்கு உதவி செய்யாத வன்கண்மை யுடையார்க்காயின் நீ சொல்வது பொருந்தும்; சிவபெருமான் அவ்வாறு தன் பெருமை கருதாது பிறர் நலம் ஒன்றையே கருதுதலின், அவை அவனது பேரருட்கு அழகு செய்து நிற்பனவேகாண்' என்பது விடை.

274. 'அருந்தவருக்கு ஆலின்கீழ் இருந்து, அறம் முதலாய நான்கனையும் அவருக்கு அருளும் அது' எனக் கூட்டுக. அருந் தவருக்கு இருந்து - அரிய தவத்தோர்க்கு அருள் செய்வதற் கென்று ஆசிரியக் கோலத்துடன் எழுந்தருளியிருந்து. "அவருக்கு" என்றது, "அத்தன்மையோர்க்கு" என்னும் பொருட்டாய் மேற்போந்த (270) நால்வரைக் குறித்தது. திருந்து அவருக்கு - நன்னெறியில் ஒழுக விரும்புபவர்க்கு. உல கியற்கை - உலகுயிர்களின் ஒழுக்கநெறி. அஃது, 'அறவொழுக் கம், பொருளொழுக்கம், இன்பவொழுக்கம், வீட்டொழுக்கம்' என நால்வகைப்படுதலின், "தெரியா" எனப் பன்மையாற் கூறினர். 'முதற்கண் இறைவன் ஆசிரியனாய் எழுந்தருளியிருந்து தக்கார்க்கு ஒழுக்க நெறியை உணர்த்த, அவர்வழியாகவே உலகத்தில் ஒழுக்கநெறிகள் உளவாயின' என்பது நல்லாசிரியர் அனைவர்க்கும் ஒத்த துணிபு என்பதனை,

"பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்"

என்னும் திருக்குறளான் அறிக (6). இங்கு அடிகள் அருளிச் செய்தவாறே,

"அழிந்த சிந்தை அந்த ணாளர்க்
கறம்பொருளின்பம் வீடு
மொழிந்த வாயான் முக்கண் ஆதி
மேயதுமுது குன்றே"

(திருமுறை - 1. 53. 6.) என்றாற்போல, மூவர் முதலிகளும் தம் திருப்பதிகங்களுள் இதனைப் பலவிடத்தும் தெளிய அருளிச் செய்தல் காண்க.

'சிலருக்கு அறம் முதலியவற்றைக் கற்பிக்கும் ஆசிரியத் தொழிலுடையவன், உலகிற்கெல்லாம் ஒப்பற்ற தலைவனாதல் எவ்வாறு' என்பது தடை.

'உலகிற்கு முதல்வனாவான் அன்றி, உலகிற்கு ஒழுக்க நெறியை உணர்த்துவோர் பிறர் யாவர்'' என்பது விடை.

அடிகள், சிவபுராணத்தால் இறைவனைத் துதிக்கும் முறையை வகுத்தும், கீர்த்தித்திருவகவலில் அவன் பலவிடத்தும் பலருக்கும் செய்த திருவருட் சிறப்புக்களை யெல்லாம் தொகுத்தும், திருவண்டப் பகுதியில் அவனது ஏனை இயல்புகளை எல்லாம் விளக்கியும், இதனுள் புறச்சமயங்கள் பற்றியாதல், தமக்கேயாதல் நன்மக்கட்கு நிகழும் ஐயங்களைத் தடைவிடைகளால் அகற்றிச் சிவபெருமானது முதன்மையை நிறுவியும், திருக்கோவையால் அகப்பொருள் வகையிலெல்லாம் சிவபெருமானைப் பாட்டுடைத் தலைவனாக்கிப் புகழ்ந்தும், மற்றும் பலவாற்றானும் பெரியதோர் இலக்கியக் கருவூலத்தை அருளிச்செய்து, சிவநெறிக்குப் பெரியதோர் ஆக்கம் விளைத்தமையின், இந்நெறியின் பண்டைப் பேருளாசிரியராய் விளங்குதலும், அவர்வழியே பின்னை ஆசிரியர்களும் சிவநெறியை நன்கு வளர்த்தமையும் ஈண்டு ஓர்ந்துணர்ந்து கொள்ளத்தக்கனவாம்.

13. திருப்பூவல்லி

[வல்லி - கொடி. 'பூவல்லி' எனப்பட்ட 'இதுவும் மகளிர் விளையாடும் ஒருவகை விளையாட்டு' என்பது வெளிப்படை. இதனுள் ஒவ்வொரு திருப்பாட்டின் இறுதியிலும் 'பூவல்லி கொய்யாமோ' என வருந் தொடர், 'பூவைக் கொடியினின்றும் பறிப்போம்' எனப் பொருள் தரும். அதனுல், 'இவ்விளையாட்டு, ஓர் இடத்தில் மகளிர் பலர் கூடிப் பூங்காவிற் சென்று பூக்களைக் கொடிகளினின்றும் பறிப்பதுபோலப் பாவனை காட்டிச் சில பாடல்களைப் பாடி ஆடும் விளையாட்டு' எனக் கொள்ளல் பொருந்துவதாம்.

சில பெண்களை வரிசையாக நிறுத்தி, மற்றும் சில பெண்கள், 'ஒருகுடம் நீர்வார்த்தேன்; ஒரு பூப் பூத்தது; இரண்டு குடம் நீர்வார்த்தேன்; இரண்டு பூப் பூத்தது' என்று ஒரு பாடலைப் பாடிக்கொண்டு, நிறுத்திவைத்துள்ள பெண்களை ஒருவர்பின் ஒருவராகப் பூப்பறிப்பதுபோலச் சுற்றி வந்து விளையாடும் விளையாட்டொன்று அண்மைக் காலத்திலும் சிறுமியரிடையே நிகழ்ந்துவந்தது. மேலைநாட்டு விளையாட்டுப் போக்கினுல், தமிழகத்தில் அண்மையில் காணப்பட்ட விளையாட்டுக்களும் மறைவவாயின. ஆதலின், அடிகள் காலத்தில் நிகழ்ந்துவந்த இவ்விளையாட்டின் இயல்பு தெற்றென அறியப்படுகின்றதில்லை. அடியார்க்கு நல்லார் காட்டியதாக மேற்குறித்த சூத்திரத்துள்ளும், "அந்தியம்போ தாடுங்களி கொய்யு முள்ளிப் பூ" என்றும், "துஞ்சாத சும்மைப் பூ" என்றும் குறிப்புக்கள் காணப்படுகின்றன. எவ்வாருயினும், இது மகளிர் ஆடும் ஒரு வகை விளையாட்டு' என்பது தெளிவு. பெண்களைக் கொடியோடு ஒப்புமைப்படுத்தல் பற்றிக் கொடியினின்றும் பறிப்பதே விளையாட்டாயிற்றுப்போலும்!

திருச்சாழலின்பின், திருத்தோணேக்கத்தை வைத்தலே முறையாயினும், அது பதினுன்கு திருப்பாடலான் இயன்றிருத்தல் பற்றி, 'இப்பூவல்லி, உந்தி' என்பவற்றின் பின்வைத்துக் கோத்தனர். 'பூவல்லி, உந்தி' என்பவற்றுள் யாப்பியைபு பற்றிப் பூவல்லியை முன்வைத்துக் கோத்தனர்.

மாயையை, 'வல்லி - கொடி' என்றல் மரபு என்பது, "வல்லி - மலகன்மம் அன்றுளவாம்" (சிவஞானபோதம் சூ. 2. அதி-2.) என்றுற்போல்வனவற்றுல் அறியப்படுதலின், வல்லியி

னின்றும் பூப்பறிப்பதாகப் பாடப்படும் இப்பாட்டினை, 'மாயா விசயம் நீக்குதல்' எனக் கொண்டனர்போலும், முன்னோர்! மாயா விசயம் - மாயையின் வெற்றி. 'இதுவும் தில்லையில் அருளிச்செய்யப் பெற்றது' என்பதே பதிப்புக்களிற் காணப் படுவது.]

நாலடித்தரவுக் கொச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

275 இணையார் திருவடிஎன் தலைமேல் வைத்தலுமே
துணையான சுற்றங்கள் அத்தனையுந் துறந்தொழிந்தேன் ;
அணையார் புனற்றில்லை அம்பலத்தே ஆடுகின்ற
புணையாளன் சீர்பாடிப் பூவல்லி கொய்யாமோ. 1

276 எந்தைஎந் தாய்சுற்றம் மற்றுமெல்லாம் என்னுடைய
பந்தம் அறுத்தென்னை ஆண்டுகொண்ட பாண்டிப்பிரான்
அந்த இடைமருதில் ஆனந்தத் தேனிருந்த
பொந்தைப் பரவிநாம் பூவல்லி கொய்யாமோ. 2

---

275. இணை ஆர் - இணையாகப் பொருந்திய. இங்குக் கூறும் தலைவி சிவபெருமானிடத்தில் பேரின்பம் பெற்ற பெண்ணாகவும் கொள்ளப்படுதலின், திருவடி சென்னிமேற் சூட்டப் பெற்றதாகக் கூறலும் பொருந்துவதே. துணையான - முன்பு எனக்குத் துணையாய் இருந்த; என்றது, 'அவை துணையாதல் போலி' என்றபடி. "துறந்தொழிந்தேன்" என்றது ஒரு சொல் நீர்மைத்தாய், துணிவுப்பொருள் உணர்த்திற்று. இதன் பின், 'ஆதலின்' என்பது எஞ்சிநின்றது. அணை ஆர் - மடையினால் தடுக்கப்படுகின்ற. புணையாளன் - திருவருளாகிய புணையை உடையவன். திருவருள் புணையாதல், பிறவிக் கடலுக்காம். எனவே, "புணை" என்றது, சிறப்புருவகமாயிற்று. 'அப்புணையாளன்' எனச் சுட்டு வருவித்துரைக்க. சீர் - புகழ். இதனுள் இறைவனது புகழ் பலவும் வருதல் காண்க. இங்கும், 'கொய்வாமோ' என்பது, 'கொய்யாமோ' என மருவியதாக உரைக்க.

276. "எந்தை" என்பதற்கு, "எம் தாய்" என்றதனோடு இயைய, 'எம் தந்தை' என உரைக்க. "எம்" என்றதனை, "சுற்றம்" என்றதற்கும் கூட்டி, 'எம் மற்றுச் சுற்றம்'

277 நாயிற் கடைப்பட்ட நம்மையுமோர் பொருட்படுத்துத்
தாயிற் பெரிதுந் தயாவுடைய தம்பெருமான்
மாயப் பிறப்பறுத் தாண்டானென் வல்வினையின்
வாயிற் பொடியட்டிப் பூவல்லி கொய்யாமோ. 3

278 பண்பட்ட தில்லைப் பதிக்கரசைப் பரவாதே
எண்பட்ட தக்கன் அருக்கனெச்சன் இந்துஅனல்
விண்பட்ட பூதப் படைவீர பத்திரரால்
புண்பட்ட வாபாடிப் பூவல்லி கொய்யாமோ. 4

என மாற்றியுரைக்க. "சுற்றம்" என்றதன்பின், 'என்கின்ற' என்பது வருவித்து, 'எந்தை, எம்தாய், எம் மற்றுச் சுற்றம் என்கின்ற என்னுடைய பந்தம் எல்லாம் அறுத்து' எனக் கூட்டுக. அந்தம் - அழகு. 'கொத்து, கொந்து' என்பன ஒரு பொருளவாய் நிற்றல் போல, 'பொத்து, பொந்து' என்பன ஒருபொருளவாய் நிற்கும். பொந்துகளிலும் தேன் ஈக்கள் தேனைச் சேர்த்து வைத்தல் உண்டு. 'பாண்டிப்பிரானாகிய பொந்து' என்க.

277. தயா - தயவு; கருணை. உயிர்களை, 'தாம்' என்றல் மரபு என்பதை, 'தம்பிரான்' என்னும் வழக்குப்பற்றி அறிந்து கொள்க. மாயம் - நிலையின்மை. "ஆண்டான்" என்றதன் பின், 'ஆதலின்' என்பது எஞ்சிநின்றது. பொடி - மண். அட்டி - சொரிந்து. எண்ணம் இழந்தவரை, 'வாயில் மண் ணிட்டுக் கொண்டார்' என்னும் வழக்குப்பற்றி, "வினையின் வாயில் பொடி அட்டி" என்று அருளினார். இன்னோரன்னவை உவமவாயிற்படுத்துரைக்கும் பான்மை வழக்குக்கள். 'வினை யைத் தோல்வியடையச் செய்து' என்பது பொருள். இது, வினை தோற்றோடுமாறு இறைவன் புகழைப் பாடுதலைக் குறித்தது.

278. பண் படுதல் - செம்மைப் படுதல். எண் பட்ட - வேறோர் எண்ணத்தைப் பொருந்திய. அருக்கன் - சூரியன். எச்சன் - வேள்வித்தேவன். இந்து - சந்திரன். விண்பட்ட - வானத்தினின்றும் பாய்ந்த.

279 தேனாடு கொன்றை சடைக்கணிந்த சிவபெருமான்
ஊனாடி நாடிவந் துள்புகுந்தான் உலகர்முன்னே
நானாடி ஆடிநின் றோலமிட நடம்பயிலும்
வானாடர் கோவுக்கே பூவல்லி கொய்யாமோ. 5

280 எரிமூன்று தேவர்க் கிரங்கியருள் செய்தருளிச்
சிரமூன் றறத்தன் திருப்புருவம் நெரித்தருளி
உருமூன்று மாகி உணர்வரிதாம் ஒருவனுமே
புரமூன் றெரித்தவா பூவல்லி கொய்யாமோ. 6

---

279. தேன் நாடு - வண்டுகள் தேடி அடைகின்ற. ஊன் - உடம்பு. 'என் ஊன்' என்க. "நாடி நாடி" என்ற அடுக்கு, பல முறை வந்தமை குறித்தது. பலமுறையாவன, திருப்பெருந்துறையிலும், மதுரையிலும், உத்தரகோச மங்கையிலும், கழுக்குன்றத்திலும், வந்தருளியன வாம். 'உலகர் முன்னே வந்து' என முன்னே கூட்டுக. 'இம்மைக்கண் வந்து அருள்புரிந்தான்' என்பார், "ஊன் நாடி வந்து" என்றார். நாடி ஆடி நின்று-தேடி அலைந்து நின்று. நடம் பயிலும் - நாடகம் புரியும்; என்றது, 'முன்பு தானே வந்து ஆட்கொண்டருளினான்; இப்பொழுது, நான் நாடி ஆடி ஓலமிடவும் தோன்றாது நாடகம் செய்கின்றான்' என்றவாறு. "கோவுக்கே" என்றதன்பின், 'பாடி' என ஒரு சொல் வருவிக்க.

280. எரி மூன்று தேவர் - முத்தீ வேள்வியை விரும்புகின்ற தேவர்கள். "சிரம் மூன்று அற" என்றது, 'பெருவலியுடைய அசுரர் மூவர் அழிந்தொழிய' எனப்பொதுப்பொருளே தந்து நின்றது. புருவம் நெரித்தல், சினத்தால் நிகழ்வது. உருமூன்று - மும்மூர்த்திகள். 'அருவம், உருவம், அருவுருவம்' என்றும், 'போகவடிவம், யோகவடிவம், வேகவடிவம்' என்றும் உரைப்பர். அரிதாம் - அரிய பொருளாகிய, "ஒருவனும்" என்ற உம்மை, முற்றும்மை. 'ஒருவனே மூன்று புரங்களை அழித்தமை வியப்பு' என்றவாறு, "எரித்தவா" என்றதன் பின், 'பாடி, என்பது எஞ்சிநின்றது. 'தேவர்கள்மேல் இரக்கம் வைத்தும், மூவர் அசுரர்மேல் சினங்கொண்டும் ஒருவனே மூன்று புரங்களை எரித்தான்' என்பது இப்பாட்டின் திரண்டபொருள். இனி, மேற்போந்த (278) தக்கன்றன் வேள்வி நிகழ்ச்சியே இங்கும்

281 வணங்கத் தலைவைத்து வார்கழல்வாய் வாழ்த்தவைத்
திணங்கத்தன் சீரடியார் கூட்டமும்வைத் தெம்பெருமான்
அணங்கொ டணிதில்லை அம்பலத்தே ஆடுகின்ற
குணங்கூரப் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ. 7

முதல் இரண்டடிகளில் குறிக்கப்பட்டதெனக்கொண்டு, அதற் கியைய உரைப்பர் பிறரெல்லாம்.

281. "எம்பெருமான்" என்றதை முதலிற் கூட்டி, அதன்பின், 'மக்களாய் உள்ளார்க்கு' என்பது வருவிக்க. "வார்கழல்" என்றது தாப்பிசையாய், முன்னரும் சென்று இயையும். "வாய்" என்றதனை, "வாழ்த்த" என்றதன் பின்னர்க் கூட்டுக. இணங்க - கூடியிருக்க. சீரடியார் - சிறப்புடைய அடியவர்; அவர், 'கூடும் அன்பினிற் கும்பிடலே யன்றி, வீடும் வேண்டா விறலினோர்' (பெ. பு. திருக்கூட்ட-8.) என்க. அவரையும், 'வைத்து' என்றதனால், அவர்கட்குத் தன் திருவடி கூடுதலை விரைய அருளாது இந்நிலவுலகில் சின்னாள் உலாவச் செய்தலும் உலக நலத்தின் பொருட்டென் பது போந்தது. இதனை,

"அன்ன தன்மையர் கயிலையை அணைவதற் கருளார்
மன்னு தீந்தமிழ் புவியின்மேற் பின்னையும் வழுத்த"

(பெ. பு. திருநாவுக்கரசர் - 361.) என்றதனானும் அறிக. அடிகளிடத்தும் இந்நிலை காணப்படுவது என்க.

"எம்பெருமான்" என்றது, "வைத்து" என்றவற்றோடு முடியுமாகலின், ஆடுதலுக்கு, 'தான்' என்னும் எழுவாய் வருவிக்க. அணங்கொடு - தேவியோடு. இதனை, "அம்பலத்தே" என்றதன் பின்னர்க் கூட்டி, ஒடு உருபினை, 'நின்று' என்பது வருவித்து முடிக்க. இவ்வாறு முடியாது. "தொடியொடு - தொல்கவின் வாடிய தோள்" (குறள் - 1235.) என்றதுபோல, 'ஒடு, வேறு வினைப் பொருளில் வந்தது' எனக் கொண்டு, 'அணங்கு காண' என்பது கருத்தாக உரைப்பினும் அமையும். "குணம்" என்றது அருளை. கூரப்பாடி - மிகப்பாடி. இத் திருப்பாட்டுள், இறைவன் உயிர்களை உய்விக்குமாறெல்லாம்

282 நெறிசெய் தருளித்தன் சீரடியார் பொன்னடிக்கே
குறிசெய்து கொண்டென்னை ஆண்டபிரான் குணம்பரவி
முறிசெய்து நம்மை முழுதுடற்றும் பழவினையைக்
கிறிசெய்த வாபாடிப் பூவல்லி கொய்யாமோ. 8

283 பன்னாட் பரவிப் பணிசெய்யப் பாதமலர்
என்னாகம் துன்னவைத்த பெரியோன் எழிற்சுடராய்க்
கன்னா ருரித்தென்னை யாண்டுகொண்டான் கழலிணைகள்
பொன்னான வாபாடிப் பூவல்லி கொய்யாமோ. 9

வருத்தோதுமுகத்தான், அவன் செய்வனவெல்லாம் உயிர்கள் பொருட்டேயாதலாகிய பேரருள் கூறப்பட்டது.

"வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேன்நெடுங் காலமே"

என்ற நாவுக்கரசர் திருமொழி (திருமுறை - 5.90.7) இங்கு நினைக்கத்தக்கது.

282 "என்னை" என்றதனை முதலிற் கொள்க. நெறி செய்து - நல்வழிப்படுத்தி. குறிசெய்து (உரிய பொருளாக்கத்) திருவுளங்கொண்டு. கொண்டு - ஏற்றுக்கொண்டு. பரவி - பரவுதலால், 'பரவிக் கிறிசெய்த' என இயையும். முறிசெய்து - ஆவணம் செய்துகொண்டு; ஆவணம், இங்கு, அடிமைப் பத்திரம். முழுது-அன்று தொட்டு இன்றுகாறும் இடைவிடாது நின்று. உடற்றும் - வருத்துகின்ற. கிறிசெய்து - பொய்யாக்கி; இல்லையாகச்செய்து. "ஆண்டபிரான் குணம் பரவி வல்வினை யைக் கிறிசெய்தவா" என்றதனால், இறைவன் பொருள்சேர் புகழ்புரிந்தார்மாட்டு இருள்சேர் இருவினையும் சேராமை (குறள் - 5.) பெறப்பட்டது.

283. ஆகம் - மார்பு; அஃது இருதயத்தைக் குறித்தது. இனி, 'அகம் என்பது நீட்டலாயிற்று' எனினுமாம். 'பெரி யோனாகிய ஆண்டுகொண்டானது கழலிணைகள்' என்க. 'கழலிணைகள்' எனப்பட்டது பற்றிய குறிப்பு மேலே (251) தரப்பட்டது. சுடர் - ஞான விளக்கு; என்றது, ஆசான் மூர்த்தியை. பொன் - நிதி. 'நமக்குப் பொன்னானவா' என்க.

284 பேராசை யாமிந்தப் பிண்டமறப் பெருந்துறையான்
சீரார் திருவடி என்தலைமேல் வைத்தபிரான்
காரார் கடல்நஞ்சை உண்டுகந்த காபாலி
போரார் புரம்பாடிப் பூவல்லி கொய்யாமோ. 10

---

284. பிண்டம் - உடம்பு. உடம்பு ஆசையால் வருதலின், அதனை ஆசையாகவே ஒற்றுமைப்படுத்து ஓதியருளினார். 'பிண்டம் அறப்பாடி' என இயைக்க. போர்ஆர்புரம் - போர் பொருந்திய ஊர்; தலங்கள். சிவபிரானது போர்ச் செயல்களைக் குறிக்கும் தலங்கள் எட்டு. அவை, 'அட்ட வீரட்டம்' எனப்படும். அவற்றை,

"[1]பூமன் சிரம் கண்டி; [2]அந்தகன் கோவல்;
[3]புரம் அதிகை;
[4]மாமன் பறியல்; [5]சலந்தரன் விற்குடி;
[6]மா வழுவூர்;
[7]காமன் குறுக்கை; [8]யமன் கடவூர்; இந்தக்
காசினியில்
தேமன்னு கொன்றையும் திங்களும் சூடிதன்
சேவகமே"

என்னும் தனிப்பாடலால் அறிக. சிவநெறியை அழித்துப் பௌத்தராய் நின்று பின் சிவபெருமானோடு போரேற்று அழிந்த அசுரரது திரிபுரங்களை, அப்பெருமானிடத்து அன்புடையார் பாடாராகலின், "புரம்" என்றதற்கு, 'திரிபுரம்' என உரைத்தல் பொருந்தாமை வெளிப்படை. 'புரத்துப் போரார்தல்' என மாற்றி உரைத்தும் எனின், அது "புர மூன்று எரித்தவா" என மேலே (280) கூறப்பட்டமை காண்க.

இனி, இவ்வாறன்றி, 'பேரானந்தம் பாடி' எனப் பின்னர் மோனையின்றி வருதல்போல, (292) ஈண்டும், 'பேரார் புரம்' எனப் பாடம் ஓதி, 'புகழ் பொருந்திய சிவலோகம்' என்று உரைப்பினுமாம்.

285 பாலும் அமுதமுந் தேனுடனும் பராபரமாய்க்
கோலங் குளிர்ந்துள்ளங் கொண்டபிரான் குரைகழல்கள்
ஞாலம் பரவுவார் நன்னெறியாம் அந்நெறியே
போலும் புகழ்பாடிப் பூவல்லி கொய்யாமோ. 11

286 வானவன் மாலயன் மற்றுமுள்ள தேவர்கட்கும்
கோனவ னாய்நின்று கூடலிலாக் குணக்குறியோன்
ஆன நெடுங்கடல் ஆலாலம் அமுதுசெய்யப்
போனகம் ஆனவா பூவல்லி கொய்யாமோ. 12

287 அன்றால நீழற்கீழ் அருமறைகள் தானருளி
நன்றாக வானவர் மாமுனிவர் நாள்தோறும்
நின்றார ஏத்தும் நிறைகழலோன் புனைகொன்றைப்
பொன்றாது பாடிநாம் பூவல்லி கொய்யாமோ. 13

---

285. "தேன்" என்றவிடத்தும் உம்மை விரிக்க. உடனும்-ஒருங்கு கலந்ததுபோலும். பராபரமாய் - மிக மேலான இன்பமாய். "கோலம் குளிர்ந்து" என, இடத்து நிகழ்பொருளின் தொழில் இடத்தின்மேல் நின்றது. 'கோலத்தை இனிதாகக் கொண்டு' என்பது பொருள். 'கழல்களை ஞாலத்துப் பரவுவார்' எனவும்', 'பரவுவாரது நன்னெறியாகிய அந்நெறியானே புகழைப்பாடி.' எனவும் உரைக்க. "போலும்" என்றது அசை நிலை. உண்மையான் நோக்குமிடத்து இறைவனது பேராற்றலுக்கு யாதொரு செயலும் அரியதன்றாதலின், "போலும் புகழ்" என்றார் என்றலுமாம்.

286. "கோனவன்" என்றதில் "அவன்", பகுதிப் பொருள் விகுதி. "கூடல் இலாக் குணக் குறியோன்" என்றது, 'அறிந்து அடைதற்கேற்ற குணமும், குறியும் இல்லாதவன்' என்றபடி. போனகம் - நல்உணவு. ஆன – பொருந்திய. இங்கும், "ஆனவா" என்றதன்பின், "பாடி" என்பது வருவிக்க.

287. "தான்" என்றதனை முதற்கண்வைத்து எழுவாயாக்கி, அதனை, "அருளி, கழலோன்" என்னும் பெயர்ப் பயனிலைகள் கொடுத்து முடித்து, 'அவன் புனைகொன்றைப் பொன்றாது பாடி' எனச் சுட்டுப்பெயர் வருவித்துரைக்க.

288 படமாக என்னுள்ளே தன்னிணைப்போ தவையளித்திங்
கிடமாகக் கொண்டிருந் தேகம்பம் மேயபிரான்
தடமார் மதில்தில்லை அம்பலமே தானிடமா
நடமாடு மாபாடிப் பூவல்லி கொய்யாமோ. 14

289 அங்கி அருக்கன் இராவணனந் தகன்கூற்றன்
செங்கண் அரிஅயன் இந்திரனுஞ் சந்திரனும்
பங்கமில் தக்கனும் எச்சனுந்தம் பரிசழியப்
பொங்கியசீர் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ. 15

290 திண்போர் விடையான் சிவபுரத்தார் போரேறு
மண்பால் மதுரையிற் பிட்டமுது செய்தருளித்
தண்டாலே பாண்டியன் தன்னைப் பணிகொண்ட
புண்பாடல் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ. 16

"புனை கொன்றை", வினைத்தொகை. 'பொற்றுது' என்பது, எதுகை நோக்கி மெலிந்து நின்றது; பொன்போலும் தாது, மகரந்தம்.

288. படம் - ஓவியம். "உள்ளக்கிழியின் உருவெழுதி" (திருமுறை-6.25 1) என்றருளினர் திருநாவுக்கரசரும். "போது" என்றது, உவமையாகு பெயராய்த் திருவடியை உணர்த்திற்று. 'இங்கு இருந்து' என இயையும். 'இங்கு" என்றதனால் 'நிலமே இடமாக' என்பது, தானேபோதரும். தடம் ஆர் - குளங்கள் நிறைந்த. தான், அசைநிலை.

289. அந்தகன் - அந்தகாசுரன். பரிசு - தன்மை; என்றது வலிமையை. பொங்கிய சீர் - மிக்குப் பரவிய புகழ். 'பரிசு அழிந்தமையால் பொங்கிய சீர்' என்க. இங்குக் கூறப்பட்டவருள் இராவணனும், அந்தகாசுரனும் ஒழித்து ஒழிந்தோர் அனைவரும் தக்கன் வேள்வியில் ஒறுக்கப்பட்டவர் என்க.

290. சிவபுரம் - சிவலோகம். அங்கு உள்ளார்க்குத் தலைவனாய் நின்று இடர்களைதலின், "சிவபுரத்தார் போர் ஏறு" என்று அருளினர். மண்பால் - மண்ணுலகத்தில். அமுது செய்து - உண்டு. "தண்டு" என்றது பிரம்பினை. "தன்னை"

291 முன்னுய மாலயனும் வானவருந் தானவரும்
பொன்னுர் திருவடி தாமறியார் போற்றுவதே
என்னுகம் உள்புகுந் தாண்டுகொண்டான் இலங்கணியாம்
பன்னுகம் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ. 17

என்றது, "விடையான்" எனவும், "ஏறு" எனவும் கூறப் பட்டவனைக் குறித்தது. 'தன்னைப் பாண்டியன் தண்டாலே பணிகொண்ட புண்' என்க. பணிகொள்ளுதல் - ஏவல்கொள் ளுதல். "பணிகொண்ட புண்" என்றது, 'ஆறுசென்ற வியர்' என்பதுபோல நின்றது. "பாடல் பாடி" என்றதற்கு மேல் (242) உரைத்தவாறு உரைக்க.

291. முன் ஆய - தேவருள் முன்நிற்கின்ற. தானவர் - அசுரர். "இலங்கு அணியாம் பன்னுகம்" எனப் பின்னர் வருதலின், "பொன்னுர் திருவடி" என்றவை, பன்னுகம் அணிந்த அப்பெருமானுடையவை ஆயின. 'பொன்னுர் திருவடிக் கொன்றுண்டு விண்ணப்பம்' எனச் சிவபெருமானது திருவடி களை, "பொன்னுர் திருவடி" என அப்பரும் அருளிச்செய்தார் (திருமுறை - 4.109.1). 'ஆகத்துக்கண் உள் புகுந்து' என்க. "உள்" என்றது, மனத்தை. 'ஆண்டுகொண்டானது அணி' என்பதாம். இலங்கு அணி - விளங்குகின்ற ஆபரணம். பல் நாகம் - பல பாம்புகள்.

தாருகாவன முனிவர்களது மனைவிமார்கள்முன் சிவபெரு மான் பிச்சைக்கோலத்துடன் சென்றபொழுது அம்மகளிர் அவரது அழகில் ஈடுபட்டுத் தம் கற்பினை இழந்தமை பற்றிச் சினந்த அம்முனிவர்கள் கொடுவேள்வி ஒன்றைச் செய்து அதனி னின்றும் உண்டாக்கி அனுப்பிய பொருள்களுள், பாம்புகளும் சில; அவற்றையும், காசிப முனிவர் மனைவியருள், 'வினதை' என்பவள் பெற்ற மகனுகிய கருடனுக்கு அஞ்சி அடைக்கலம் புகுந்த, அம்முனிவர் மனைவியருள் மற்றொருத்தியாகிய கத்துரு என்பவள் பெற்ற பாம்புகளையும் சிவபெருமான் அணிகலங் களாக அணிந்துகொண்டனர் என்பது புராண வரலாறு.

292 சீரார் திருவடித் திண்சிலம்பு சிலம்பொலிக்கே
ஆராத ஆசையதாய் அடியேன் அகமகிழத்
தேரார்ந்த வீதிப் பெருந்துறையான் திருநடஞ்செய்
பேரானந் தம்பாடிப் பூவல்லி கொய்யாமோ. 18

293 அத்தி யுரித்தது போர்த்தருளும் பெருந்துறையான்
பித்த வடிவுகொண் டிவ்வுலகிற் பிள்ளையுமாம்
முத்தி முழுமுதலுத் தரகோச மங்கைவள்ளல்
புத்தி புகுந்தவா பூவல்லி கொய்யாமோ. 19

---

292. 'திருவடிக்கண் அணிந்த சிலம்பு சிலம்புஒலி' என்க. சிலம்பு ஒலி - ஒலிக்கின்ற ஒலி. ஆசையது - ஆசையை உடையது. 'ஆய' என்பதன் இறுதிநிலை தொகுத்தலாயிற்று. 'ஆசையதாய அகம்' என்க. 'அகம் மகிழ நடம்செய்' என இயையும். நடம்புரியும்பொழுது சிலம்பொலி கேட்கப்படுதலின், ஆசைப்பட்ட அகம், அது கேட்டு மகிழ்வதாயிற்று. செய் பேரானந்தம்-செய்ததனுல் விளையும் பெரிய இன்பம்.

293. அத்தி - யானை. ''அது'' என்றது, உரிக்கப்பட்ட தோலினை. தோலைப் போர்வையும், ஆடையுமாகக் கொண்டது முதலியவற்றையே, 'பித்தவடிவு' என்ருர். பிள்ளை - மகவு. சிவபெருமான் மகவாய் வந்தமையை. ''ஓரி யூரின் உவந்தினி தருளிப் - பாரிரும் பாலக ஞகிய பரிசும்'' என முன்னே அருளிச் செய்தார் (கீர்த்தி - 68, 69.). ''பிள்ளையுமாம்'' என்ற உம்மையால், காளையுமாதல் தழுவப்பட்டது. தாருகாவன முனிவர் மனைவியர்முன் சென்றது முதலியவை காளைவடிவமாதல் அறிக. இவற்றுல், இவையனைத்தும் நாடகமாதலல்லது, அவனது உண்மை இயல்பு அன்றென்பது குறித்தவாரும். இவ்வாற்றுனே, அவன் முத்தி முழுமுதலாதல் தெளிவிக்கப்பட்டது. முத்தியாவது பிறவியற்ற நிலையாதலானும், சிவபிரான் ஒருவனே பிறப்பில்லாதவன் ஆதலானும், அவனல்லது அந்நிலையை அருள்வார் பிறர் இன்மையின், ''முத்தி முழுமுதல்'' என்று அருளிச்செய்தார். முழுமுதல் - முடிந்த தலைவன்; 'ஏனையோர் பலரும் இடைநிலையாய சிலவற்றைத் தருபவரே' என்றற்கு, இவ்வாறு அருளினுர். 'புகுந்தவா பாடி' என வருவித்துரைக்க.

294 மாவார ஏறி மதுரைநகர் புகுந்தருளித்
தேவார்ந்த கோலந் திகழப் பெருந்துறையான்
கோவாகி வந்தெம்மைக் குற்றேவல் கொண்டருளும்
பூவார் கழல்பரவிப் பூவல்லி கொய்யாமோ. 20

திருச்சிற்றம்பலம்

---

294. மா - குதிரையை. ஆர ஏறி - நன்கு ஊர்ந்து. "புகுந்தருளி" என்றது, "கோவாகி" என்றதனோடு முடியும். 'குதிரைமேல் வந்தபொழுதும் அவனது உருவம் வியக்கத் தக்கதாய் இருந்தது' என்றற்கு, "தேவார்ந்த கோலம் திகழ' என்றார். கோ - தலைவன். சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடன்(சிவஞானபோதம் - சூ. 10, அதி. 2.) ஆதலின், அங்ஙனம் காக்க வந்த நிலையை, "கோவாகி" என்று அருளினார். இத் திருப்பாட்டினால், இறைவன் அடிகளைக் காத்தற்பொருட்டு மதுரை நகரில் குதிரை ஏறி வந்தமை இனிது பெறப்படும். பூ ஆர் - மலர்போலப் பொருந்திய. பூ, பொலிவுமாம். 'பலரும் தூவி வணங்கும் மலர்கள் பொருந்திய கழல்' எனலுமாம். இப்பாட்டும், அடுத்துவரும் திருவுந்தியாரின் இறுதிப்பாட்டும் சில பிரதிகளில் இல்லை என்பர்; அவ்வாற்றான் இவை இடைச் செருகலாயின், பத்தொன்பது பாட்டுக்களால் ஆயினமை பற்றியே இது, திருச்சாழலின்பின் வைத்துக் கோக்கப்பட்டதாகும்.

இந்திரச் செல்வம் போல விசைந்துள வின்ப மெய்தி
மந்திரத் தலைமை பூண்ட வண்புகழ் வாத வூரர்
தந்திரத் தொகுதி சூழத் தாரகா கணங்க ளோடும்
அந்தரத் திழிந்து மண்மே லமர்ந்தவெண் மதிய மொத்தார். 16

பெருங்கட னாக நீதி பெருக்கியே தருக்கு நல்கி
இருங்கட கத்தோண் மேல்வைத் தீண்டருள் பூண்ட கோவுங்
கருங்கட நாக மெட்டுங் காளமா நாக மெட்டும்
பரங்கெட வுலக பாரம் பரித்தனர் திருத்த மிக்கார். 17

— திருவாதவூரடிகள் புராணம்.

14. திருவுந்தியார்

['மகளிர் விளையாட்டு வகைகளுள், 'உந்தி' என்பது ஒன்று உண்டு என்பது பிங்கல நிகண்டால் அறியப்படுகின்றது. 'அடியார்க்கு நல்லார் காட்டினர்' என மேற்குறித்த சூத்திரத் துள்ளும், 'உந்தி' என்பது ஒன்று காணப்படுவதால், இது பல்வரிக்கூத்துள் ஒன்று என்பதும் அறியலாகும். இப்பகுதியுள் வரும் ''உந்தீ பற'' என்ற தொடர்களில் உள்ள, 'உந்தீ' என்பது, 'உந்தி' என்னும் பெயர் விளியேற்று நின்றதாகவே கொள்ளக்கிடப்பதால், இவ்விளையாட்டினைச் செய்யும் மகளிர் அவ் விளையாட்டில், 'உந்தி' என்னும் புனைபெயரை உடையராய் இருப்பர் எனக் கொள்ளவேண்டியுள்ளது. இதன்கண் ஓரிடத்து, 'ஏடி, உந்தி' என வருதலும், அடியார்க்கு நல்லார் காட்டிய சூத்திரத்துள் வரும் சில வரிக்கூத்துக்கள், 'பப்பரப்பெண். கிழவி, வேதாளி, வாணி, பகவதி' முதலிய பெயர்களை உடையனவாய் இருத்தலும் இதனை வலியுறுத்தும். இங்ஙனமாயின் இது, கலம்பகத்துள் வரும், 'பிச்சியார், கொற்றியார், மதங்கியார்' என்னும் உறுப்புக்களுள் வரும் 'பிச்சி, கொற்றி, மதங்கி' என்னும் பெயர்களோடு ஒப்பதாம். இதுபற்றியே, 'பிச்சியார்' முதலியன போல, இதுவும், 'உந்தியார்' என ஆர்விகுதி பெற்று நின்றதுபோலும்!

மேற்குறித்த சூத்திரத்துள், உந்தி என்பதோடு, 'பிச்சி கொற்றி' என்னும் பெயர்களும் காணப்படுகின்றன. இவற்றால், 'மகளிர் விளையாட்டு' எனவும், 'வரிக்கூத்து' எனவும் அறியப் படுகின்ற இது, 'உந்தி' என்னும் பெயராலும், பறத்தல் தொழி லோடு இயைத்துச் சொல்லப்படுவதாலும், இதனை ஆடும் மகளிர், பறவைபோல நிலத்தில் இருபாதங்கள் மட்டும் படிய, இருகைகளையும் முடக்கி இருந்து, பின் விரைந்தெழுந்து, இரு கைகளையும் இருபக்கங்களில் சிறகுபோல நீட்டிப் பறவைகள் பறப்பதுபோலப் பாவனை செய்து ஓடி வேறோர் இடத்தில் முன் போல அமர்ந்து. பின்னும் அவ்வாறே ஆடப்படும் என்று கொள்ளல் பொருந்தும். இவ்வாறு ஆடுதல் மகளிர்க்கு நல்ல தோர் உடற்பயிற்சியாயும் அமையும்.

கலம்பகத்துள் வரும் பிச்சியார் முதலிய துறைப் பாடல்கள் அயலார் கூற்றாகவருதலின் அப்பெயர்கட்கேற்பப்

பன்மையில் அமைந்துள்ளன. இவ்வுந்தியார் என்பது, 'உந்தீ, என ஒருமையாக விளித்து, 'பற' என்னும் ஒருமை ஏவலாலே முடிக்கப்படுகின்றது. அதனால், ஒருவர்க்கொருவர் தோழியராய் ஒத்த நிலையில் உள்ள மகளிர் தம்மில் இவ்வாறு விளித்தும், ஏவியும் பாடி ஆடுவர் என்பது பெறப்படும். ஏனைய விளையாட்டுப் பாடல்கள்போல இவ்விளையாட்டுப் பாடலும், 'உந்திப் பாட்டு' எனப்படும் எனக் கொள்க.

இதுவும், 'தில்லையில் அருளிச்செய்யப்பட்டது' என்பதே பதிப்புக்களில் சொல்லப்படுவது. இது முழுவதும் கலித்தாழிசையான் இயன்றது. இதனுள் சிவபெருமானது வெற்றியே கூறப்படுதலின், அவ்வெற்றி அப்பெருமானே முதற்பொருள் என்று உணரும் ஞானத்தினது வெற்றியாதற்குத் தடையின்மையின், இப்பகுதிக்கு, 'ஞான வெற்றி' எனக் குறிப்புரைத்தனர் முன்னோர். யாப்பு வகையால் இது, திருத்தோணோக்கத்தின்பின் வைக்கற்பாலதாயினும், இருபது பாட்டுக்களான் இயன்றிருத்தல் பற்றி அதற்கு முன்னர் வைத்துக் கோத்தனர்.]

கலித்தாழிசை

திருச்சிற்றம்பலம்

295 வளைந்தது வில்லு; விளைந்தது பூசல்;
உளைந்தன முப்புரம் உந்தீபற
ஒருங்குடன் வெந்தவா றுந்தீபற. 1

---

295. 'வில்' என்பது. ஈற்றில் உகரம் பெற்று வந்தது. 'வில் சிவபெருமானுடையது' என்பதும், 'பூசல் (போர்) அசுரருடையது' என்பதும் ஆற்றலான் விளங்கின. உளைந்தன-துயருற்றன. "முப்புரம்" என்றது இரட்டுற மொழிதலாய் முன்னர் அதன்கண் வாழ்வார் மேல்நின்று, உளைதல் வினையோடும், பின்னர் முப்புரத்தின்மேலதேயாய் வேதல் வினையோடும் இயைந்தது. ஒருங்கு - ஒருசேர. "உடன்" என்றது, 'நொடியில்' என விரைவு குறித்தவாறு. "வெந்தவாறு" என்றதன்பின், 'பாடி' என்பது வருவிக்க. இதனுள் இனி வரும் திருப்பாட்டுக்களிலும் வேண்டுமிடங்களில் இவ்வாறே இதனை வருவித்து முடிக்க.

296 ஈரம்பு கண்டிலம் ஏகம்பர் தங்கையில்
ஓரம்பே முப்புரம் உந்தீபற
ஒன்றும் பெருமிகை உந்தீபற. 2

297 தச்சு விடுத்தலும் தாமடி யிட்டலும்
அச்சு முறிந்ததென் றுந்தீபற
அழிந்தன முப்புரம் உந்தீபற. 3

---

296. "ஏகம்பர் தங்கையில்" என்றதனை முதலில் வைத்து. "ஓரம்பே" என்றதன்பின், 'கண்டனம்' என்பது வருவிக்க, "முப்புரம்" என்று அருளினாராயினும், 'புரம் மூன்று' என உரைத்தல் திருவுள்ளமாம். ஆகவே, 'இறைவர் கையில் இருந்தது ஓரம்பே; பகையாய் எதிர்ந்த புரங்களோ மூன்று; எனினும், அவைகளை அழித்தற்கு அவ்வோரம்புதானும் சிறிதும் வேண்டப்படாததாயிற்று' என்பது பொருளாதல் அறிக. சிவபெருமான் திரிபுரங்களை அம்பு முதலியவற்றால் அழியாது, புன்சிரிப்பானே அழித்தமையின், அவ்வோரம்பும் வேண்டப்படாததாயிற்று. இதனால், இறைவன், எல்லாவற்றையும் கரணத்தானன்றிச் சங்கற்பத்தானே செய்தலைக், கூறியவாறு. "பெருமிகை" என்றதன்பின், 'என்று' என்பது வருவிக்க.

297. 'தைத்து' என்பது, 'தச்சு' எனப்போலியாயிற்று. 'தைத்தல், அழகுபடச்செய்தல் என்பது, "வேலன் தைஇய வெறியயர் களனும்" (முருகு - 222.) என்றற்றொடக்கத்தன வாக வருவனவற்றான் அறிக. மகளிர்க்கு, 'தையலார்' என்னும் பெயரும், தம்மை ஒப்பனை செய்துகொள்ளுதலாகிய காரணம் பற்றிவந்ததாம். 'தையல்' எனஒருமைக்கண் வருதல், ஆகுபெயர். இப்பொருட்டாகிய, 'தையல், தைத்தல்' என்பன பிற்காலத்தில், துன்னத்திற்கும், துன்னம் செய்தற்கும் உரியவாயின. ஒருவகைத் தொழிலை உணர்த்தும் 'தச்சு' என்னும் பெயர்ச்சொல், இங்கு, வினையெச்சமாய் வந்த 'தச்சு' என்பதனின் வேறு. 'தச்சு' என்பது அடியாக, 'தச்சன், தச்சர்' முதலிய ஒட்டுப்பெயர்கள் பிறக்கும். "தச்சு" என்றதற்கு, 'தேர்' என்னும் செயப்படுபொருளும், அச்சுமுரிதலுக்கு, அஃது என்னும் எழுவாயும், வருவிக்க.

"தாம்" என்றது, முன்னைத் திருப்பாட்டில், "ஏகம்பர்" எனக் குறிக்கப்பட்டவரை என்பது வெளிப்படை. 'இடலும்'

298 உய்யவல் லாரொரு மூவரைக் காவல்கொண்
டெய்யவல் லானுக்கே உந்தீபற
இளமுலை பங்கனென் றுந்தீபற. 4

என்பது விரித்தல் விகாரம் பெற்றது. 'அடியிட்டபொழுதே அச்சு முரிந்தமை அவரது வன்மையையும், பிறரது மென்மையையும் எளிதின் விளக்கும்' என்பதும், 'தேர் அச்சு முரிந்ததாயினும் அவர் முப்புரத்தை அழிக்கக்கருதியது முடிந்தேவிட்டது' என்பதும் குறித்தவாறு. "அழிந்தன" என்றதற்குமுன், 'ஆயினும்' என்பது வருவிக்க.

298. உய்ய வல்லார் - யார் யார் எத்துணை மயக்க உரைகளைக் கூறினும் அவற்றைக் கேளாது நன்னெறியைக் கடைப்பிடிக்க வல்லவர், ஒரு மூவராவார், 'சுதன்மன், சுசீலன், சுபுத்தி' என்னும் பெயருடைய அசுரர். இவர்கள் திரிபுரத்தில் வாழ்ந்தவர்கள். திரிபுரத் தலைவர்களாகிய, 'தாரகாக்கன், கமலாக்கன், வித்தியுன்மாலி' என்பவர், முதலில் தாங்களும் சிவநெறியில் ஒழுகிப் பிறரையும் ஒழுகச்செய்து, பின்பு திருமால் புத்த வடிவம் கொண்கி நாரத முனிவருடன் சென்று புத்த சமயத்தைப் போதித்தபொழுது பௌத்தர்களாய்ச் சிவநெறியைக் கைவிட, ஏனையோரும் அவ்வாறே சிவநெறியைக் கைவிடவும், இம்மூவர் மட்டில் சிவநெறியிலே நின்றமைபற்றி இவரை, "உய்ய வல்லார்" என்றும், சிவபெருமான் திரிபுரத்தை எரித்தபொழுது இம்மூவரை மட்டில் அழியாதவாறு காத்து ஏனையபலரையும் அழித்தமை பற்றி, "ஒரு மூவரைக் காவல்கொண்டு எய்யவல்லான்" என்றும் அருளிச்செய்தார்.

"மூவார் புரங்கள் எரித்த அன்று
மூவர்க் கருள்செய்தார்"

என இதனைத் திருஞானசம்பந்தரும் எடுத்தருளிச்செய்தல் காண்க (திருமுறை - 1. 69. 1.). 'திரிபுரங்கள் அழிக்கப்பட்ட பொழுது அழியாது பிழைத்தவர் மேற்குறித்த மூவரே' என்பதையும், 'பின்பு அவர்கள், சிவபெருமான் திருவருளால் அப்பெருமானது வாயில் காவலராயினர்' என்பதையும்,

" முப்பு ரங்களின் மூவர் புத்தன்
　　மொழித்தி றத்தின் மயங்கிடாது
அப்ப ணிந்தவர் தாள்ப ணிந்தரு
　　ளாற்றின் நின்றனர் ஆதலால்,
பொய்ப்பு ரந்தபு காலை நீற்றறை
　　நாவின் மன்னவர் போல்எரி
தப்பி வாழ்ந்தனர் ; ஈசன் ஆணையில்
　　நிற்ப வர்க்கிடர் சாருமோ "

" சுதன்மன் என்று, சுசீலன் என்று
　　சுபுத்தி என்று சொலப்படும்
அதன்மம் நீத்தஅம் மூவருக்கும்
　　அருள்சு ரந்துமை பாகனுர்
இதம்வி ளங்க வரங்கள் வேட்ட
　　விளம்பு மின்என அங்கவர்
பதம்வ ணங்குபு நின்திருப்பணி
　　வாயில் காப்பருள் என்றனர் "

என்றற் றொடக்கத்துக் காஞ்சிப் புராணச் செய்யுட்களான் அறிக. காஞ்சிப் புராணத்துள் இங்ஙனம் 'வாயில் காப்பு' எனப் பொதுப்படக் கூறி இருப்பினும், 'மூவருள் இருவர் வாயில் காவலரும், ஒருவன் இறைவனது திருக்கூத்திற்கு மத்தளம் முழக்குபவனும் ஆயினர்' என்பதை,

" மூவெயில் செற்ற ஞான்றுய்ந்த மூவரில்
　　இருவர் நின்திருக் கோயிலின் வாய்தல்
காவ லாளர்என் றேவிய பின்னை
　　ஒருவன் நீகரி காடரங்காக
மானை நோக்கியோர் மாநடம் மகிழ
　　மணிமு ழாமுழக் கவ்வருள் செய்த
தேவ தேவநின் திருவடி யடைந்தேன்
　　செழும்பொ ழில்திருப் புன்கூருளானே "

என்னும் சுந்தரர் திருமொழியான் உணர்க (திருமுறை. 7-55. 8.). 'சுதன்மன், சுசீலன், சுபுத்தி' என்ற முறைபற்றி, 'இறுதியிற் சொல்லப்படுபவனே மத்தளம் முழக்குவோனு யினன்' என்று கொள்ள இடம் உண்டு. வாயில் காவலரை

299 சாடிய வேள்வி சரிந்திடத் தேவர்கள்
ஓடிய வாபாடி உந்தீபற
உருத்திர நாதனுக் குந்தீபற. 5

300 ஆவா திருமால் அவிப்பாகங் கொண்டன்று
சாவா திருந்தானென் றுந்தீபற
சதுர்முகன் தாதையென் றுந்தீபற. 6

இப்பொழுது, 'திண்டி, முண்டி' என்கின்றர். இவ்வசுரர்கள் சிவபெருமான் கோயிலில் வாயில்காவலர் ஆயினமையை அடிகளும் திருத்தோணுேக்கத்து ஒன்பதாம் திருப்பாட்டில் குறித்தருளுதல் காண்க. "வல்லானுக்கு" என்றதும், "என்று" என்றதும் எஞ்சிநின்ற, 'பாடி' என்பதனேடு முடியும். பாடுதலுக்கு இறைவனைச் செயப்படுபொருளாக வன்றிக் கொள்வோனுகக் கருதினமையின், "வல்லானுக்கு" எனக் குவ்வுருபு கொடுத்து ஓதினர்; பின்வருவனவற்றிற்கும் இது பொருந்தும். இத் திருப்பாட்டால், சிவபெருமானது அருளையும், ஆற்றலையும் வியந்தவாறு.

299. "சாடிய" என்றது உடம்பொடு புணர்த்ததாகலின் 'சாடியதனல்' என்பது கருத்தாயிற்று. இங்கு 'வேள்வி' எனப்படுவது, தக்கனுடையதே என்பது இனிது விளங்கிக் கிடக்கும். உருத்திரநாதன், இருபெயரொட்டு. 'உருத்திர நாதனுக்குப் பாடி' என இயையும். இனி, 'உருத்திரநாதனுகிய ஒருவனுக்குத் தேவர் பலர் உடைந்தோடியவாற்றைப் பாடி' என உரைப்பினுமாம்.

300. ஆவா, இரக்கக் குறிப்பு; இதனை, "இருந்தான்" என்றதன் பின்னர்க் கூட்டுக. 'சாவாதிருந்தான்" என்றது, 'உயிர் போதல் ஒன்ருெழிய ஏனை எல்லாத் துன்பங்களையும் எய்தினன்' என்றவாறு, வீரபத்திரரது தண்டத்தால் மார்பில் அடியுண்டு மூர்ச்சையுற்றுக் கிடந்த நிலையை இவ்வாறு அருளிச்செய்தார். திருமால் எய்தியதாக யாண்டுங்காணப்படும் இந் நிலையையே அடிகள் அருளிச்செய்ததன்றி, அவன் தலையறுப் புண்டதாக ஒரோவிடத்துக் கூறப்படும் அதனை அடிகள் அருளிச்செய்திலர். 'உலகையெல்லாம் படைப்பவனைப் படைத்த பெரியோன்' என அவனது பெருமையை எடுத்துக் கூறுவார், "**சதுர்முகன் தாதை**" என்று மறித்தும் அருளிச்செய்தார்.

301 வெய்யவன் அங்கி விழுங்கத் திரட்டிய
கையைத் தறித்தானென் றுந்திபற
கலங்கிற்று வேள்வியென் றுந்திபற 7

302 பார்ப்பதி யைப்பகை சாற்றிய தக்கனைப்
பார்ப்பதென் னேஏடி யுந்திபற
பணைமுலை பாகனுக் குந்திபற. 8

303 புரந்தர னாரொரு பூங்குயி லாகி
மரந்தனி லேறினார் உந்திபற
வானவர் கோனென்றே உந்திபற. 9

---

301. 'வெம்மை யுடையவன்' என்னும் பொருளதாகிய, 'வெய்யவன்' என்பது, 'கொடியவன்' என்னும் நயத்தைத் தோற்றுவித்து, ஒறுக்கப்படுதற்குரிய இயைபுணர்த்திநின்றது. 'விருப்பமுடையவனாய்' எனவும் உரைப்ப. திரட்டுதலுக்கு, 'அவிப்பாகம்' என்னும் செயப்படுபொருள், முன்னைத் திருப்பாட்டினின்றும்வந்து இயையும்.

302. 'பர்வதம்' என்பது, 'பருப்பதம்' என வருதல் போல, 'பார்வதி' என்பது, 'பார்ப்பதி' எனவந்தது. 'மலைமகள்' என்பதே இதன் பொருள்; எனினும், இங்கு, 'இறைவி' என்னும் பொருளதாய் நின்றது. பார்ப்பது - கண்ணோடுவது. 'இறைவி என்று கருதாமல், ஏனையோர்போலக் கருதிய அறிவிலியாகிய அவன்மீது கண்ணோட்டஞ்செய்து இகழாதொழிதல் வேண்டா' என்றபடி. எனவே, 'அவனை மிக இகழ்ந்தும், சிவனை மிகப்புகழ்ந்தும் பாடி ஆடு' என்றதாயிற்று. குற்றம் செய்தவரை ஒறுத்தல் அரசர்க்கு முறைமையாதல்போல, குற்றம் செய்தவரை இகழ்தலும் அறிவுடையோர்க்கு முறைமையாதலின், இவ்வாறு அருளிச்செய்தார்.

303. புரந்தரன் - இந்திரன். பூ - அழகு. 'தக்கன் வேள்வியில் வீரபத்திரருக்கு அஞ்சி இந்திரன் குயில் உருவங் கொண்டு ஓடி ஒளிந்தான்' என்பது வரலாறு. "வானவர் கோன்" என்றதும், முன்னர் (300) "சதுர்முகன் தாதை" என்றதனோடு ஒப்பது. "கோன்" என்றது, பன்மை யொருமை மயக்கம்.

304 வெஞ்சின வேள்வி வியாத்திர னார்தலை
துஞ்சின வாபாடி உந்தீபற
தொடர்ந்த பிறப்பற உந்தீபற. 10

305 ஆட்டின் தலையை விதிக்குத் தலையாகக்
கூட்டிய வாபாடி உந்தீபற
கொங்கை குலுங்கநின் றுந்தீபற. 11

306 உண்ணப் புகுந்த பகனொளித் தோடாமே
கண்ணைப் பறித்தவா றுந்தீபற
கருக்கெட நாமெலாம் உந்தீபற. 12

304, 'வெஞ்சினத்தால் தொடங்கிய வேள்வியையுடைய வியாத்திரனார்' என்க. வெஞ்சினம், சிவபெருமான்மீதெழுந்தது. வியாத்திரன் - மாறுபட்ட செலவினையுடையவன்; தக்கன். "மெச்சன் வியாத்திரன் தலையும் வேறாக் கொண்டார்" (திருமுறை - 6.96.9.) என்னும் திருத்தாண்டகத் தொடருள், "வேறாக" என்றதனால், இப்பெயர் தக்கனைக் குறித்தல் இனிதுணரப்படும். துஞ்சுதல் - அழிதல். ஈண்டுச் சிவபெருமானது வெற்றியையே பெரிதும் பாடுதல் பற்றி, தக்கன் உயிர்த்தெழுந்தமையை அருளாது, அவன் துஞ்சியது மாத்திரையே அருளினார். தொடர்ந்த - பண்டுதொட்டு விடாது வந்த, 'பிறப்பு அறப்பாடி' என இயையும்.

305. விதி, சிறுவிதி; தக்கன். 'சிறுவிதி' என்னும் பெயர், பிரமன் மகனாயினமை பற்றிக் கூறப்படுவது. யாட்டின் தலையை அமைத்ததும் ஒறுப்பேயாகலின், இதுவும் வெற்றி கூறியதேயாயிற்று.

306. 'அவியை உண்ண' என வருவித்துரைக்க. பகன், ஆதித்தர் பன்னிருவருள் ஒருவன். 'நாமெலாம் கருக்கெட' என மாற்றி, எஞ்சி நின்ற 'பாடி' என்பதனோடு முடிக்க. "கரு" என்றது, 'கருவில் வீழ்தல்' எனப் பொருள் தருதலின், 'நாமெலாம் கருக் கெட' எனத் தொழில், முதலொடு சார்த்தி முடிக்கப்பட்டதாம்.

307 நாமகள்நாசி சிரம்பிர மன்படச்
சோமன் முகன்னெரித் துந்தீபற
தொல்லை வினைகெட உந்தீபற. 13

308 நான்மறை யோனு மகத்திய மான்படப்
போம்வழி தேடுமா றுந்தீபற
புரந்தரன் வேள்வியில் உந்தீபற. 14

---

307. ''பட'' என்றதனை, ''நாசி'' என்றதனோடும் கூட்டி, 'நாமகள் நாசி படவும், பிரமன் சிரம்படவும்' என உரைக்க. சோமன் - சந்திரன். முகன் - முகம்; போலி. னகரவொற்று விரித்தல். 'முகம்' என்பது பாடமாயின், நகர வொற்று விரித்தலாம், 'நெரித்தது' என்பது குறைந்து, 'நெரித்து' என நின்றது. நெரித்தது - காலால் தேய்த்தது. இதன்பின், 'பாடி' என்பது எஞ்சிநின்றது. 'நெரிந்து' எனப்பாடம் ஓதி, அதனையும், 'நெரிந்தது' எனக் கொண்டுரைத்தல் சிறக்கும். இதனுள், வீரபத்திரரால் நாமகள் மூக்கிழந்தும், பிரமன் தலையிழந்தும், சந்திரன் தேய்க்கப்பட்டும் போயினமை அருளப்பட்டது. இதனுள், ''பிரமன்'' என்றது, முன்னர், ''விதி'' என்றதுபோல, தக்கனையே குறித்தது என்பாரும் உளர். தக்கனை, 'சிறுவிதி' என்றல்போல, 'சிறு பிரமன்' என்றல் வழக்கின்கண் இன்மையானும், தக்கன் தலையிழந்து மாற்றுத்தலை பெற்றமை முன்னர்க் கூறப்பட்டமை யானும் அது பொருந்துமாறில்லை.

308. ''வேள்வியில்'' என்றதனை முதலிற்கொள்க. நான் மறையோன் - பிரமன். அகத்து இயமான் - நடுவிடத்தில் இருந்த தலைவன்; தக்கன். 'இயமானன்' என்பது குறைந்து நின்றது; இது வேட்போனைக் குறிக்கும் ஆரியச் சொற்சிதைவு. ''இயமானன்'' என்றதன்பின்னும் உம்மை விரிக்க. 'மகத்தியமான்' எனவும் பிரிப்பர். 'பட' என்பது, 'பட்டமையால்' எனக் காரணப்பொருளில் வந்தது. 'புரந்தரன் தேடுமாறு' என இயையும். முன்னர், ''இந்திரனைத் தோள்நெரித்திட்டு'' என்றமையால், (திருவம்மானை - *15.*) இங்கு, 'போம் வழிதேடுதல் என்றது, அங்ஙனம் தோள் நெரிந்து மன வலியிழந்தமையையேயாம். ஆகவே, 'நான் மறையோனும் அகத்தியமானும் பட' என்றது மன்வலி

309 சூரிய னார்தொண்டை வாயினிற் பற்களை
வாரி நெரித்தவா றுந்தீபற
மயங்கிற்று வேள்வியென் றுந்தீபற. 15

310 தக்கனார் அன்றே தலையிழந் தார்தக்கன்
மக்களைச் சூழநின் றுந்தீபற
மடிந்தது வேள்வியென் றுந்தீபற. 16

இழத்தற்குக் காரணங்கூறும் அளவிற்றாய் வந்ததாம். 'வேட்பிப்போனும், வேட்போனும் பட்டமையின், அவியைப் பெறுவோருள் முதல்வனாகிய இந்திரன் ஆங்கு நிற்க வல்லனோ' என்றபடி. முதற்கண் அவிபெறுவோனாகிய இந்திரனது எளிமை மிகுதியுணர்த்தற்கு அவன் குயிலாகி ஓடினமை முன்னர்க் கூறப் பட்டதாயினும், 'தோள்நெரிந்த பின்னரே அவ்வாறு ஓடினான்' என்றற்கு, இதனை அருளிச்செய்தார் என்க.

309. 'கண் பறிக்கப்பட்டான்' என முன்னர்க் கூறப் பட்ட (306) சூரியன், 'பகன்' என்னும் பெயரினன் என்பது அங்கு எடுத்தோதப்பட்டது. அதனால், இங்குப் பல் தகர்க்கப் பட்டவனாகக் குறிக்கப்படும் சூரியன் வேறொருவன் என்பது வெளிப்படை. இவன் பெயர், 'பூடன்' எனப்படுகின்றது.

310. "அன்றே" என்பது, 'முன்னரே' எனப் பொருள் தந்தது. 'தக்கன் முன்னரே இறந்தமையால், வேள்வி, பின்னர் அவன் மக்களைச் சூழ நின்று மடிந்தது' என்க. மடிதல் உயிர்கட்கன்றிப் பிறவற்றிற்கின்மையின், வேள்வியில் வந்தாரது தொழில் வேள்விமேல் ஏற்றி, "மடிந்தது வேள்வி" எனப் பட்டது. இதனானே, "சூழநின்று" என்றதும், அவ்வாற்றாற் கூறப்பட்டதேயாயிற்று. இதனுடன் தக்கன் வேள்வி பற்றிய வற்றை முடிக்கின்றாராகலின், இறுதிக்கண் இவ்வாறு தொகுத் தருளிச்செய்தார். தக்கன் வேள்வி செய்த ஞான்று அவன் மைந்தர் ஆண்டிருந்திலர் என்பது கந்தபுராணத்தால் அறியப் படுதல்பற்றி, ஈண்டு, "மக்கள்" எனப்பட்டார் பெண்மக்களே என்பர். எனினும், அடிகள் திருமொழிக்கு அவ்வரலாற்றினை அடியாகக்கொண்டு உரையாது, வேறுபட உரைத்தல் இழுக் காது.

311 பாலக னார்க்கன்று பாற்கடல் ஈந்திட்ட
கோலச் சடையற்கே யுந்தீபற
குமரன்தன் தாதைக்கே உந்தீபற. 17

312 நல்ல மலரின்மேல் நான்முக னார்தலை
ஒல்லை யரிந்ததென் றுந்தீபற
உகிரால் அரிந்ததென் றுந்தீபற. 18

---

311. பாலகனார், உபமன்னிய முனிவர். இவர் வியாக்கிர பாத முனிவர் மைந்தர். இவர் தம் தாய்மாமனாராகிய வசிட்ட முனிவர் இல்லத்தில் காமதேனுவின் பாலை உண்டு வளர்ந்து, பின் தம் தந்தையார் இல்லத்தை அடைந்தபொழுது பால்வேண்டி அழ, அவர், 'சிவபெருமானை வேண்டி அழுக' என, அவ்வாறே வேண்டி அழுதபொழுது, சிவபெருமான் திருப் பாற்கடலையே அச் சிறு முனிவரிடம் வரச்செய்தார் என்பது புராண வரலாறு. இதனைக் கோயிற் புராணம் விரித்து விளக்கும். இது, "பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்" எனத் திருப்பல்லாண்டினும், "அத்தர் தந்த அருட்பாற் கடல்உண்டு - சித்தம் ஆர்ந்து தெவிட்டி வளர்ந் தவன்" எனத் திருத்தொண்டர் புராணத்தினும் (திருமலைச் சிறப்பு - 15.) கூறப்பட்டது. கோலம் - அழகு. குமரன் - முருகன். 'மகனைப் பெற்றவனாதலின் மகவருமை அறிந்து அளித்தான்' என்றபடி. இரண்டிடத்தும், 'பாடி' என்பது வருவிக்க. 'பெரிதாகிய பாற்கடலைச் சிறுவர்பால் வருவித்தான்' என வெற்றி கூறியவாறு.

312. நன்மை - அழகு. 'அழகிய மலரின்மேல் அழகுடன் வீற்றிருந்த அவன், தலை இழத்தலாகிய பேரிழிவை எய்தினான்' என்பது நயம். ஒல்லை - விரைவு. உகிர் - நகம். பிரமனும், திருமாலும் தாங்களே முதற்கடவுளர் எனத் தருக்கித் தம்மிற் போர் செய்தபொழுது சிவபெருமான் ஒரு சோதி வடிவாய்த் தோன்ற, திருமால் அவரை வணங்கினார். பிரமனோ, தனது ஐந்து தலைகளுள் உச்சித் தலையினால் சிவபெருமானை இகழ, சிவபெருமான் வைரவக் கடவுளைத் தோற்றுவித்து, அவரால் அவ்வுச்சித் தலையைக் கிள்ளிவிடச் செய்தனர் என்னும் வரலாற் றைக் கந்த புராணம் ததீசி யுத்தரப் படலத்துட் காண்க.

313 தேரை நிறுத்தி மலையெடுத் தான்சிரம்
ஈரைந்தும் இற்றவா றுந்தீபற
இருபதும் இற்றதென் றுந்தீபற. 19

314 ஏகாச மிட்ட இருடிகள் போகாமல்
ஆகாசங் காவலென் றுந்தீபற
அதற் கப்பாலுங் காவலென் றுந்தீபற. 20

திருச்சிற்றம்பலம்

---

313. தேர் - புட்பக விமானம். இது, குபேரனிடத்தினின்றும் திக்குவிசயத்தில் கொண்டது. மலை, கயிலாயமலை. இராவணன் கயிலாய மலையைப் பெயர்த்தெடுத்தபொழுது சிவ பெருமான் தமது திருவடிப் பெருவிரல் ஒன்றினால் சிறிது ஊன்ற, அவன் அம்மலையின்கீழ் பன்னாள் அழுதுகொண்டு கிடந்தான் என்னும் வரலாறு நன்கறியப்பட்டது. "சிரம் ஈரைந்து" என்றமையால், "இருபது" என்றது தோள்களாதல் வெளிப்படை. "இருபதும்" என ஒருங்கு தொகுத்தமையின் "இற்றது" என்று அருளினார்.

"பொருள்மன்னனைப்பற்றிப் புட்பகங் கொண்ட
மருள்மன்னனை எற்றி"

என்று திருநாவுக்கரசர் அருளிச்செய்தமை காண்க (திருமுறை-4. 17. 11.).

314. ஏகாசம் - உத்தரியம். 'போர்வை' எனவுங் கூறுவர். முனிவர்கள் 'சூரிய மண்டலத்தருகில் இயங்குவர் என்பதனால், 'அங்கு அவர்களையும், அவர்கட்குமேல் உள்ள மற்றையோரையும் காப்பது சிவபெருமானது திருவருள்' என்பது இதன் திரண்டபொருள். முனிவர்கள் சூரிய மண்டலத்தருகில் இயங்குதலை, "நிலமிசை வாழ்நர் அலமரல் தீரத் - தெறுகதிர்க் கனலி வெம்மை தாங்கிக் - காலுண வாகச் சுடரொடு கொட்கும் அவிர்சடை முனிவர்" (புறம் - 43.) என்பதனானும் அறிக. 'ஆகாசத்தில்' என உருபு விரிக்க. இரண்டிடத்தும் "காவல்" என்ற எழுவாய்க்கு 'உள்ளது' என்னும் பயனிலை எஞ்சிநின்றது. 'அதற்கு' என்றது, கூன்.

15. திருத்தோணோக்கம்

[தோள் + நோக்கம் = தோணோக்கம். 'தோளை நோக்குதல் (பார்த்தல்)' என்பது பொருள். வாளா, 'நோக்கம்' என்றது, 'தோள் நோக்கம்' என்றமையின் இது, வினோதக் கூத்து எழனுள் ஒன்று எனப்படும் நோக்கு ஆமாறு இல்லை. மேற்காட்டிய (பக் - 371) அடியார்க்கு நல்லார் மேற்கோள் சூத்திரத் தொடராகிய "நல்லார்தந் தோள்வீச்சு" என்பதனுள் குறிக்கப்பட்ட 'தோள்வீச்சு' என்பதேயாதல் வேண்டும். 'வீச்சு' என்றது "நோக்கம்" என்றது, காலவேறுபாட்டான் அமைந்த வேறுபாடு எனலாம். பெண்கள் சிலர் முதலில் ஒருங்குகூடி நின்று ஒருவர் தோளை மற்றொருவர் சில பாட்டுக்களைச் சொல்லித் தொட்டு விளையாடி, முடிவில் இருவர் இருவர் சேர்ந்து ஒருவர் கைகளை மற்றொருவர் மாற்றிப் பிடித்துப் பாடிக்கொண்டே வேகமாகச் சுற்றி முடிக்கும் ஒருவகை விளையாட்டு இக்காலத்திலும் நிகழ்ந்து வந்தது. எனினும், இஃது இன்னவகை விளையாட்டு எனத் துணியக்கூடவில்லை

முன்னர் போந்த திருவுந்தியாரில் வந்தனவும், இதனுள் வருவனவும் ஆகிய பாட்டுக்கள், இவற்றிற்கு முன்னுள்ள விளையாட்டுக்களின் பாட்டுக்கள்போலக் காமப்பொருள்பற்றியவாகாது மகளிர் கடவுளை வாழ்த்திப் பாடும் கடவுள் வாழ்த்துப் பாடல்களேயாம் என்க. இதன் மூதல் திருப்பாட்டில் இறைவன் அடிகட்கு உலக மயக்கினை நீக்கியருளினமையை இனிதெடுத்தோதினமை பற்றியும், இறுதி நான்கு திருப்பாட்டுக்களுள் சிவபெருமான் தக்கன் முதலியோரைத் தூய்மை செய்தமை, பிரம விட்டுணுக்களது மயக்கத்தைப் போக்கினமை, அடிகளது பிறவியையும், தற்போதத்தையும் அறுத்தமை என்பவற்றை அருளிச்செய்தமைபற்றியும் இதற்கு, 'பிரபஞ்ச சுத்தி' எனக் குறிப்புரைத்தனர் முன்னோர். விளையாட்டின் இயல்புபற்றி இது தெள்ளேணத்தின் பின்னராதல், சாழலின் பின்னராதல் கோக்கற்பாலதாயினும், பதினன்கு திருப்பாட்டுக்களான் இயன்றமை பற்றி ஈண்டு வைத்துக்கோக்கப்பட்டது. இது, 'தில்லையில் அருளிச்செய்யப்பட்டது' என்பதே பதிப்புக்களில் காணப்படுவது. இது முழுவதும் நாலடித் தரவுக் கொச்சகக் கலிப்பாவினல் ஆயது. இதனுள்ளும், வேண்டும் இடங்களில், 'பாடி' என்பது வருவிக்க.]

நாலடித்தரவுக் கொச்சகக்கலிப்பா

திருச்சிற்றம்பலம்

315 பூத்தாரும் பொய்கைப் புனலிதுவே எனக்கருதிப்
பேய்த்தேர் முகக்குறும் பேதைகுண மாகாமே
தீர்த்தாய் திகழ்தில்லை அம்பலத்தே திருநடஞ்செய்
கூத்தா உன்சேவடி கூடும்வண்ணம் தோணோக்கம். 1

316 என்றும் பிறந்திறந் தாழாமே ஆண்டுகொண்டான்
கன்றால் விளவெறிந் தான்பிரமன் காண்பரிய
குன்றாத சீர்த்தில்லை அம்பலவன் குணம்பரவித்
துன்றார் குழலினீர் தோணோக்க மாடாமோ. 2

---

315. "பூத்து ஆரும்" என்றதற்கு, 'பூக்கள்' என்னும் வினைமுதல் வருவிக்க. இஃது, இடத்து நிகழ்பொருளின் தொழில் இடத்தின்மேல் நின்றவாறு. பேய்த்தேர் - கானல். உறு, துணைவினை. பேதை குணம் - அறிவிலியின் தன்மை. 'பேதைதன் குணம் எனக்கும் ஆகாமே எனது பேதைமையைத் தீர்த்தாய்' என்க. அஃதாவது 'நிலையில்லாத உலக இன்பத்தை நிலையானதாகக்கருதி நுகர விரும்பும் தன்மை உண்டாகாதபடி, அதற்கு ஏதுவாகிய பேதைமையைப் போக்கினாய்' என்றபடி. "தோணோக்கம்" என்னும் எழுவாய்க்குரிய, 'ஆடப்படுகின்றது' என்னும் பயனிலை எஞ்சிநின்றது. எனவே, 'உன் புகழையே பாடி ஆடுகின்றோம்' என்பது கருத்தாயிற்று' இது, முன்னிலைப் பரவல், இனி வருவன, படர்க்கைப் பரவல், "ஏனை யொன்றே, தேவர்ப் பராய முன்னிலைக் கண்ணே" என்றமைபற்றி, (தொல்.செய். 133.) முன்னிலைக்கண் வருதலை, 'பரவல்' என்றும், படர்க்கைக்கண் வருதலை, 'புகழ்தல்' என்றும் வேறுபடுத்தும் கூறுப.

316. 'ஆண்டுகொண்டானாகிய அம்பலவன்' என்க. திருமால் கண்ணனாய்த்தோன்றியிருந்தபொழுது கன்றால் விளங்கனியை எறிந்த வரலாற்றைக் கிருட்டின பாகவதத்துட் காண்க. துன்று ஆர் - நெருங்குதல் பொருந்திய.

317 பொருட்பற்றிச் செய்கின்ற பூசனைகள் போல்விளங்கச்
செருப்புற்ற சீரடி வாய்க்கலசம் ஊனமுதம்
விருப்புற்று வேடனார் சேடறிய மெய்குளிர்ந்தங்
கருட்பெற்று நின்றவா தோணோக்க மாடாமோ. 3

318 கற்போலும் நெஞ்சங் கசிந்துருகக் கருணையினால்
நிற்பானைப் போலஎன் நெஞ்சினுள்ளே புகுந்தருளி
நற்பாற் படுத்தென்னை நாடறியத் தானிங்ஙன்
சொற்பால தானவா தோணோக்க மாடாமோ. 4

---

317. 'பொருள்பற்றி, அருள்பெற்று' என நிற்கற்பாலன; எதுகை நோக்கி, ளகரம் திரிந்து நின்றன. பொருள் ஆகமங்களிற் சொல்லப்பட்ட விதிகள். 'அவற்றிற்கு மாறாகக் குற்றம்படச்செய்தும் அருளைப்பெற்று நின்ற வியப்பைப் பாடி ஆடுவோம்' என்றபடி. 'விளங்குமாறு அதனை விரும்பி' என உரைக்க. "கலசம்" என்றது, அதன்கண் நீரைக் குறித்தது' 'அடி, கலசம், அமுதம்' என்ற செவ்வெண்ணினையின் 'இவை' என்னும் பெயரும், 'இவற்றை' என்னும் உருபும் தொகுத்தலாயின. வாய்க்கலசம், இருபெயரொட்டு; உருவகம் அன்று. அமுதம் - உணவு. 'வேடனார், கண்ணப்ப நாயனார்' என்பது வெளிப்படை. 'வேடனாரது சேடு' என்க. சேடு - பெருமை. என்றது, அன்பின் சிறப்பை. "அறிய" என்றது, 'மதிக்க' என்னும் பொருட்டாய், மகிழ்தலைக் குறித்தது. முன்னைத் திருப்பாட்டில் 'தில்லை அம்பலவன்' என்றது இதற்கு எழுவாயாய் வந்து இயையும். காரணப் பொருளில் வந்த, "அறிய" என்ற எச்சம், "பெற்றுநின்றவா" என்றவற்றோடு முடியும். மெய் - உடல். நின்றவா - என்றும் இறைவன் வலப்பக்கத்தில் மாறிலாது நின்றவகை. 'கண்ணப்ப நாயனாரது அன்பின் சிறப்புக்கருதி அவரது பொருந்தாச் செயல்களை இறைவன் சிறந்த வேதாகம முறைப்படியே செய்கின்ற பூசைபோல ஏற்று மகிழ்ந்து அருள் புரிந்தான்' என, அன்பு ஒன்றையே விரும்பும் அவனது அருளின் பெருமையை வியந்தவாறு.

318. 'என் நெஞ்சம் கசிந்துருக' என உரைக்க. நிற்பானைப்போல - ஏனையோர்போல என்றும் புலப்பட்டு நிற்பவனைப் போல; இதற்கு, 'வந்து' என்னும் முடிபு வருவிக்க. நற்பால்-

319 நிலம்நீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன்
புலனாய மைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்து நின்றான்
உலகே ழெனத்திசை பத்தெனத்தான் ஒருவனுமே
பலவாகி நின்றவா தோணோக்க மாடாமோ.

நன்னெறி. 'நாடறிய நற்பாற்படுத்து' என, முன்னே கூட்டுக. "தான்" என்றதும், தில்லை அம்பலவனையே என்பது வெளிப்படை. சொற்பாலது ஆனவா - சொல்லின்கண்ணதாம் பொருளானவாற்றை(ப்பாடி); 'இது அவன் திருவுரு; இவன் அவன்' (திருப்பள்ளி - 7.) என உணர்ந்து சொல்லும்படி விளங்கியவாற்றைப்பாடி' என்றவாறு, 'தான், என் நெஞ்சம் உருகும்படி கருணையினால் வந்து புகுந்தருளி என்னை நற்பாற்படுத்து இங்ஙன் ஆனவா' என வினைமுடிக்க.

319. உயிர் - காற்று. விசும்பு - ஆகாயம். நிலா - சந்திரன். பகலோன் - சூரியன். புலன் - புலம்; அறிவு; போலி, ஆன்மாவை, "மைந்தன்" என்றார், 'புருடன்' என்னும் வடநூல் வழக்குப்பற்றி 'ஐம்பூதம், இருசுடர், ஆன்மா. என்னும் எட்டும் இறைவனுக்கு, 'அட்ட மூர்த்தம் - எட்டுரு' எனப்படுதலின், "எண்வகையாய்ப் புணர்ந்துநின்றான்" என்று அருளினார். திருநாவுக்கரசரும் இவ்வாறே,

"இருநிலனாய்த் தீயாகி நீரு மாகி
இயமான னாய்எறியுங் காற்று மாகி
அருநிலைய திங்களாய் ஞாயி றாகி
ஆகாச மாய்அட்ட மூர்த்தி யாகி"

என்று (திருமுறை - 6-94.1.) அருளிச்செய்தல் காண்க. 'தான் ஒருவனுமே ஏழ் உலகெனப் பத்துத் திசையெனப் பலவாகி நின்றவா (பாடி)' என்க. "என" என்றவை, 'எண்ணிடைச் சொற்கள்.

"ஈறாய்முத லொன்றாய்இரு பெண்ஆண்குணம் மூன்றாய்
மாறாமறை நான்காய்வரு பூதம்மவை ஐந்தாய்
ஆறார்சுவை ஏழோசையொ டெட்டுத்திசை தானாய்
வேறாய்உடன் ஆனான்இடம் வீழிம்மிழ லையே"

என்ற திருஞானசம்பந்தரது திருமொழியை (திருமுறை - 1-11.2.) இங்கு உடன்வைத்து நோக்குக.

320 புத்தன் முதலாய புல்லறிவிற் பல்சமயம்
தத்தம் மதங்களில் தட்டுளுப்புப் பட்டுநிற்கச்
சித்தஞ் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும்
அத்தன் கருணையினல் தோணோக்க மாடாமோ. 6

321 தீதில்லை மாணி சிவகருமஞ் சிதைத்தானைச்
சாதியும் வேதியன் தாதைதனைத் தாளிரண்டுஞ்
சேதிப்ப ஈசன் திருவருளால் தேவர்தொழப்
பாதகமே சோறு பற்றினவா தோணோக்கம். 7

---

320. திருவள்ளுவராற் செய்யப்பட்ட நூலை, 'திருவள்ளுவர்' என்றல்போல, புத்தனுல் ஆக்கப்பட்ட சமயத்தை, 'புத்தன்' என்றது, கருத்தாவாகுபெயர். இதனை, "வினை முதல் உரைக்கும் கிளவி" என்பர் தொல்காப்பியர் (சொல். 115.). மதம் - கொள்கை. தட்டுளுப்பு - நிலைதளர்தல்; அஃதாவது பயன்பெருதொழிதல். சமயிகளது செயல், சமயங்களின்மேல் ஏற்றப்பட்டது. 'நம் சித்தம்' எனவும், 'நாம் செய்தன' எனவும் எடுத்துக்கொண்டு உரைக்க. சிவம் - சிவகரணம். கருணையினல் - கருணையைப் பாடும் பாட்டோடு.

321. தீது - குற்றம். 'இல்' என்பது, 'இல்லென் கிளவி' என்னும் நூற்பாவின்வழி, (தொல் - எழுத்து. 373.) ஈற்றில் ஐகாரச் சாரியை பெற்றது. மாணி - பிரமசாரி; விசாரசருமர். இவரே பின் சண்டேசுர பதவியைப் பெற்றுச் சண்டேசுர நாயனுராயினுர்; இவரது வரலாற்றைத் திருத்தொண்டர் புராணத்துள் விளங்கக் காண்க. "மாணி" என்றதில் தொக்குநின்ற ஆறனுருபு, 'சாத்தனது செலவு' என்பது போல, வினைக் கிழமைக்கண் வந்தது. "கருமம்" என்றது, தொண்டினை. 'சாதியாலும்' என்னும், ஏதுப் பொருட்டாகிய மூன்றும் உருபு, தொகுத்தலாயிற்று. 'வேதியனுகிய தாதை' என்க. "சிதைத்தான், தாதை" என்றவை, ஒருபொருள்மேற் பல பெயர். "தாதைதனைத் தாள் இரண்டு சேதிப்ப" என்றது, 'யானையைக் கோடு குறைத்தான்' என்பதுபோல நின்றது. சேதித்தல் - வெட்டுதல். 'அப்பாதகமே' எனச் சுட்டு வருவித்து, "சேதிப்ப" என்றதன் பின்னர்க் கூட்டுக. பாதகத்தைத் தரும் செயலை, "பாதகம்" என்றது, காரியவாகுபெயர்.

322 மானம் அழிந்தோம், மதிமறந்தோம், மங்கைநல்லீர்
வானந் தொழுந்தென்னன் வார்கழலே நினைந்தடியோம் ;
ஆனந்தக் கூத்தன் அருள்பெறில்நாம் அவ்வணமே
ஆனந்த மாகிநின் றூடாமோ தோணோக்கம். 8

323 என்னுடை மூவர் இராக்கதர்கள் எரிபிழைத்துக்
கன்னுதல் எந்தை கடைத்தலைமுன் நின்றதற்பின்
எண்ணிலி இந்திரர் எத்தனையோ பிரமர்களும்
மண்மிசை மால்பலர் மாண்டனர்காண் தோணோக்கம். 9

'கூழ்' என்பதுபோல, 'சோறு' என்பதும் உணவைக் குறிப்பதொரு சொல்; அஃது இங்கு, 'பயன்' என்னும் பொருட்டாய் நின்றது. இனி, 'சிவபிரானுக்கு நிவேதிக்கப்பட்ட திருவமுதின் பகுதியையே குறித்தது' என்றலுமாம்; என்னை? இந்நாயனார்க்குச் சிவபெருமான்,

"நாம் - உண்டகலமும் உடுப்பனவும்
சூடு வனவும் உனக்காக"

என அருள் புரிந்தமையான் என்க (பெ. பு. சண். 56.). "பாதகமே பற்றினவா" எனக் கருவி வினைமுதல்போலக் கூறப்பட்டது. எனவே, 'பாதகந்தானே சிறந்த நன்மையைப் பெறுதற்கு வழியாயினவாற்றைப் பாடி' என்பது பொருளாயிற்று.

322. "மானம் அழிந்தோம்; மதிமறந்தோம்" என்றதனை, "அடியோம்" என்றதன்பின்னர்க் கூட்டி, அதன் பின்னர், 'இவ்வாறு' என்பது வருவிக்க. மானம், உலகத்தாரால் நன்கு மதிக்கப்படும் நிலை. மதி - அதனைப் பெறுதற்கு ஆவனவற்றை அறியும் அறிவு. தென்னன் - தென்னாட்டில் விளங்குபவன். நினைந்து - நினைதலால். "பெறில்" என்றது, "நீரின் றமையா துலகெனின்" (குறள் - 20) என்பதுபோல, 'பெற்றது உண்மையாயின்' எனப் பொருள் தந்தது. அவ்வண்ணமே - அவ்வருள்வழியே.

323. என் உடை - என்றும் சிவபெருமானை மறவாது நினைத்தலையுடைய. அசுரர்களை, "இராக்கதர்" என்று அருளினார். இவர், திரிபுரத்தில் அழியாது உய்ந்தவர். இவரைப் பற்றிய குறிப்பை மேலே (பக். 410-12.) காண்க. 'எண்ணிலி'

324 பங்கயம் ஆயிரம் பூவினிலோர் பூக்குறையத்
தங்கண் இடந்தரன் சேவடிமேல் சாத்தலுமே
சங்கரன் எம்பிரான் சக்கரம்மாற் கருளியவா
றெங்கும் பரவிநாம் தோணோக்க மாடாமோ. 10

325 காமன் உடலுயிர் காலன்பல் காய்கதிரோன்
நாமகள் நாசிசிரம் பிரமன் கரம்எரியைச்
சோமன் கலைதலை தக்கனையும் எச்சனையும்
தூய்மைகள் செய்தவா தோணோக்க மாடாமோ. 11

என்பதே ஓர் எண்போல அருளினார். மண் மிசை - மண்ணை உண்கின்ற. 'மால்கள்' என்பதில் கள்விகுதி தொகுத்தலாயிற்று. இதனால், இறைவனது திருவருளைப் பெறாதோர் காலவயப்பட்டு இறத்தலையும், அதனைப் பெற்றோர் காலத்தைக் கடந்து வீடு பெறுதலையும் கூறியவாறு.

324. "ஆயிரம்" என்றதன்பின், 'எனக்கொண்ட' என்பது வருவிக்க. 'திருமால் சிவபெருமானிடம் சக்கரம் பெறுதற்கு நாள்தோறும் ஆயிரந் தாமரை மலர் கொண்டு அருச்சிப்பேன் எனக் கருதிக்கொண்டு அவ்வாறு அருச்சித்துவருகையில், ஒருநாள் ஒரு மலரைச் சிவபெருமான் மறைத்துவிட, அதற்கு ஈடாகத் திருமால் தனது கண்ணைப் பறித்து அருச்சித்ததனால் சிவபெருமான் மகிழ்ச்சியுற்றுச் சக்கரத்தை அளித்தருளினார்' என்பது புராண வரலாறு. இதனை, காஞ்சிப் புராணத் திருமாற்றுப் படலத்திற் காண்க. இவ்வாறு திருச்சாழல் பதினெட்டாம் திருப்பாட்டிலும் குறிக்கப்பட்டது. "தம்கண்" என்றது, ஒருமைப் பன்மை மயக்கம். 'தன்கண்' என்றே பாடம் ஓதுதலுமாம். பரவி - துதித்து.

325. 'காலன் உயிர், கதிரோன் பல், பிரமன் சிரம், எரியைக் கரம், தக்கனையும் எச்சனையும், தலை' என மாறிக் கூட்டுக. பிற இடங்களிலும் ஐயுருபுகள் தொகுத்தலாயின. அவை அனைத்தும், 'தூய்மைகள் செய்த' என்பதனோடு முடியும். "எரியைக் கரம் தூய்மைகள் செய்த" என்றது, 'யானையைக் கோடு குறைத்த' என்பதுபோல நின்றது. 'எச்சன், வேள்வித் தேவன்' என்பதும், "அவனும் தலையறுக்கப்பட்டான்' என்பதும் மேலே (பக். 376-78.) கூறப்பட்டன. 'தக்கன் வேள்வி

326 பிரமன் அரியென் றிருவருந்தம் பேதைமையால்
பரமம் யாம்பரம் என்றவர்கள் பதைப்பொடுங்க
அரனார் அழலுருவாய் அங்கே அளவிறந்து
பரமாகி நின்றவா தோணோக்க மாடாமோ. 12

327 ஏழைத் தொழும்பனேன் எத்தனையோ காலமெல்லாம்
பாழுக் கிறைத்தேன் பரம்பரனைப் பணியாதே
ஊழிமுதற் சிந்தாத நன்மணிவந் தென்பிறவித்
தாழைப் பறித்தவா தோணோக்க மாடாமோ. 13

328 உரைமாண்ட உள்ளொளி உத்தமன்வந் துளம்புகலும்
கரைமாண்ட காமப் பெருங்கடலைக் கடத்தலுமே
இரைமாண்ட இந்திரியப் பறவை இரிந்தோடத்
துரைமாண்ட வாபாடித் தோணோக்க மாடாமோ. 14

திருச்சிற்றம்பலம்

யிலும், பிறவிடங்களிலும் தேவர்கள் ஒறுக்கப்பட்டமையால், குற்றம் நீங்கித் தூயராயினர்' என்றபடி.

326. பரமம், பரம் - முதற்பொருள். 'என்று அவர்கள்' எனப் பிரித்து, "என்று" என்றதனை, 'என' எனத் திரிக்க. பதைப்பு - முனைப்பு. இதனுட் குறிக்கப்பட்ட வரலாறு முன்னர்த் திருச்சாழல் ஆறுந் திருப்பாட்டிலும் குறிக்கப்பட்டமை காண்க.

327. ஏழை - அறிவிலி. தொழும்பனேன் - தொண்டனேன். பாழ் - வறுநிலம். 'பாம்பரனைப் பணியாதே பாழுக் கிறைத்தேன்' என இயைக்க. "பாழுக்கிறைத்தேன்" என்றது, 'அன்ன செயலைச் செய்தேன்' என்ற பான்மை வழக்கு. அஃதாவது, 'உலகியலில் நின்று உழைத்தேன்' என்றபடி. ஊழி முதல் - ஊழிக்கு முதலாய் நிற்கும் பொருள். சிந்தாத - கெடாத. தாழ் - பூட்டு. இது, தனையிடத்துள்ளது என்க. பறித்த - தகர்த்த. "பாசமெனுந் தாழ் உருவி" எனப் பின்னரும் (அச்சோ - 7.) அருளுவார்.

328. உரை மாண்ட - சொல் அற்ற; என்றது, 'அதற்கு அப்பாற்பட்ட' என்றபடி. 'உள்ளொளியாகிய உத்தமன்'

என்க. ஆன்மா ஒளியும், இறைவன் அதன் உள்ளொளியும் ஆதல் அறிக. ''சோதியுட் சோதி'' (திருமுறை - 5. 97. 3.) என்றலும் இதுபற்றி. கரை மாண்ட - கரை அற்ற. காமம் - ஆசை ; உலகியல் பற்றித் தோன்றும் ஆசை. ஒருகாலும் நிரம்பாது மேன்மேல் வளர்வதாகலின், அது கரையற்ற கடல் போல்வதும், இறைவன் திருவருள் உணரப்பட்ட பின்னர், அவ்வாசை தீர்ந்தொழிதலின், அவ்வாற்றாற் கடக்கப்படுவதும் ஆயினவாறு கண்டுகொள்க. 'இந்திரியமாகிய பறவைகட்கு இரை' என்றது, மனத்தை. உலகியல் ஆசையற்றபின் மனம் இந்திரியத்தின் வழிப்படாமையின், அப்பறவைகள் இரிந்தோட லாயின. இரிந்து - நீங்கி. 'துரை, மிகுதிப்பாடு' என்பர், மாதவச் சிவஞான யோகிகள் (சிவஞான சித்தி. சூ. 2. 32. உரை.). எனவே, 'தன் முனைப்பு' என்பது பொருளாயிற்று.

காதலித் தறஞ்செய் வோர்க்குக் கவசமுங் கண்ணு மாகி
ஏதிலர்க் கிடும்பை யாகி யிறைஞ்சினர்க் கின்ப மாகி
ஆதுலர்க் கன்னை யாகி யரனடிக் கன்பு மிக்கார்
பூதலத் திறைவ னாணை பொதுவற நடத்து நாளில், 18

பற்பல பொருளா யுள்ள பாசமு மதனை மேவி
உற்பவ பேத மான வுடம்புயி ரொடுங்கு மாறும்
அற்புத புத்தி முத்தி யளித்தரு ளாலே மேலாந்
தற்பர னடத்து மாறு முணர்ந்தனர் சைவ நூலில். 19

அவ்விய மனத்தி னாலே யனைத்துரு வங்கள் கூடி
இவ்வுயிர் பிறந்து மீள விறந்திடு மென்றி ரங்கி
வெவ்வெயில் வருத்த முற்றார் மென்னிழல் விரும்பு மாபோல்
நவ்வியு மழுவு மேந்து நம்பனுக் கன்பு மிக்கார். 20

தீத்திற வினையி னாலே சிறைப்படு முயிரை யெல்லாம்
பார்த்தன ருலக வாழ்விற் பயனிலை யென்று தேர்ந்து
கூத்தினர் தன்மை வேறு கோலம்வே றாகு மாபோல்
நீத்தனர் மனத்தின் முன்போ னிகழ்த்தினர் வழுதி நீதி. 21

— திருவாதவூரடிகள் புராணம்.

16. திருப்பொன்னூசல்

['மகளிர் விளையாட்டுக்களில், ஊசலாடுதல் ஒன்று' என்பதும், இதனைப் பொழில் விளையாட்டில் கொடிகளாலாகிய ஊசலில் ஏறியும், இல்லங்களில் சங்கிலியிற் கோக்கப்பட்ட பலகையில் ஏறியும் ஆடுவர்' என்பதும், 'அங்ஙனம் ஆடுங்கால் இனியதொரு பாடலைப் பாடிக்கொண்டு ஆடுவர்' என்பதும் நன்கறியப்பட்டவை. பொழில் விளையாட்டு ஊசல் கலித்தொகை முதலியவற்றிலும், ஏனையது பிற்கால இலக்கியங்களிலும் காணப்படும். ஊசலாட்டில் பாடும் பாடல் '**ஊசல்வரி**' எனப்படும் என்பதும், பாடாண்பாட்டும் அவ் வரிப்பாட்டு வகையில் பாடப்படும் என்பதும் சிலப்பதிகாரத்து ஊசல்வரியால் இனிதுவிளங்கும். மேற்கூறிய இருவகை ஊசல்களுள் இஃது இல்லத்துள் பொற்பலகைமீது ஏறியாடும் ஊசல் வகையாக அருளிச் செய்யப்பெற்றமையால், '**பொன்னூசல்**' எனப்பட்டது. ஊசலை இக்காலத்தில், 'உஞ்சல்' என்றும், 'ஊஞ்சல்' என்றும் வழங்குப, இதன்கண் கூற்று நிகழ்த்தும் தலைவி, இறைவன்பால் பேரின்பம் பெற்றவள் என்றே கொள்க. ஒன்பது திருப்பாட்டுக்களான் இயன்றிருத்தலின், இது, பின் வரும் பத்துக்கள் சிலவற்றின்பின் வைக்கற்பாலதாயினும், எட்டடிகளான் இயன்ற கொச்சகக் கலிப்பாக்களான் இயன்றிருத்தல்பற்றி அவற்றிற்கு முன்வைத்துக் கோக்கப்பட்டது. 'இது **தில்லையில்** அருளிச்செய்யப்பட்டது' என்பதே பதிப்புக்களில் காணப்படுவது. திருத்தோணோக்கத்தில் சில திருப்பாட்டுக்களுள் இறைவனது மறக் கருணையைக் கூறியவாறு போலாது இங்கு முழுதும் அறக்கருணையைக் கூறுதலின், இதற்கு, '**அருட்சுத்தி**' எனக் குறிப்புரைத்தனர் முன்னோர். அருட்சுத்தி - அருளால் உண்டாகிய தூய்மை.]

ஆறடித்தரவுக் கொச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

329 சீரார் பவளங்கால் முத்தங் கயிறாக
ஏராரும் பொற்பலகை ஏறி இனிதமர்ந்து
நாரா யணன்அறியா நாண்மலர்த்தாள் நாயடியேற்
கூராகத் தந்தருளும் உத்தர கோசமங்கை
ஆரா அமுதின் அருட்டா ளிணைபாடிப்
போரார்வேற் கண்மடவீர் பொன்னூச லாடாமோ. 1

330 மூன்றங் கிலங்கு நயனத்தன் மூவாத
வான்றங்கு தேவர்களுங் காணா மலரடிகள்
தேன்றங்கித் தித்தித் தமுதூறித் தான்தெளிந்தங்
கூன்றங்கி நின்றுருக்கும் உத்தர கோசமங்கைக்
கோன்றங் கிடைமருது பாடிக் குலமஞ்ஞை
போன்றங் கனநடையீர் பொன்னூச லாடாமோ. 2

---

329. "கால், கயிறு" என்பவற்றின் பின் தனித்தனி எச்ச உம்மை விரித்து, அவற்றை "ஆக" என்றதனோடு முடிக்க. 'ஆக, அமர்ந்து, பாடி ஆடாமோ' என வினைமுடிக்க. நாள் மலர் - அன்றலர்ந்த தாமரை மலர்போலும். ஊராக - வாழும் இடமாகும்படி.

330. 'அங்கு இலங்கு மூன்றாகிய நயனத்தான்' என மாற்றியுரைக்க. "அங்கு" என்றது பண்டறி சுட்டாய், ஆகாயத்தைக் குறித்தது. மூன்று; முச்சுடர். முச்சுடர்களுள் தீ நிலத்தின்கண் உள்ளதாயினும், பெரும்பான்மைபற்றி, "அங்கு" என்று அருளிச்செய்தார். 'தேன், தங்கியாங்கு' எனவும், 'அமுதூறியாங்கு' எனவும் உவம உருபு விரிக்க. "தித்தித்து" என்றதனை, 'தித்திக்க' எனத் திரிக்க, தெளிந்து - தெளியப் பட்டு. 'தான் தெளிந்து ஊன் தங்கி நின்று அங்கு அமுதூறி உருக்கும்கோன்' என இயைக்க. குலம் - மேன்மை. 'போன்ற' என்பதன் இறுதி அகரம் தொகுத்தலாயிற்று. "போன்றங்கு" என்றதில் "அங்கு" என்ற அசைநிலை இடைச்சொல், "பொன் னூசல் ஆடாமோ" என்றதன் முன்னர்க் கூட்டப்படும்.

331 முன்னீறும் ஆதியும் இல்லான் முனிவர்குழாம்
பன்னூறு கோடி இமையோர்கள் தாம்நிற்பத்
தன்னீ றெனக்கருளித் தன்கருணை வெள்ளத்து
மன்னூற மன்னுமணி உத்தர கோசமங்கை
மின்னேறு மாட வியன்மா ளிகைபாடிப்
பொன்னேறு பூண்முலையீர் பொன்னூச லாடாமோ. 3

332 நஞ்சமர் கண்டத்தன் அண்டத் தவர்நாதன்
மஞ்சுதோய் மாடமணி உத்தர கோசமங்கை
அஞ்சொலாள் தன்னோடுங் கூடி அடியவர்கள்
நெஞ்சுளே நின்றமுதம் ஊறிக் கருணைசெய்து
துஞ்சல் பிறப்பறுப்பான் தூய புகழ்பாடிப்
புஞ்சமார் வெள்வளையீர் பொன்னூச லாடாமோ. 4

---

331. முன் - 'நினைக்கப்படுகின்ற. ' ஈறும் ஆதியும் இல்லானாகிய மணி ' என்க. 'முனிவர் குழாமும், பல்நூறுகோடி இமையவர்கள்தாமும் நிற்பத் தனது திருநீற்றை எனக்கு அருளித் தனது கருணையாகிய வெள்ளத்தில் யான் பெரிதும் ஊறிக் கிடக்குமாறு என் உள்ளத்தில் நிலைபெற்று நிற்கும் மாணிக்கம் போல்பவனது உத்தரகோச மங்கைத் தலத்தின் மாளிகையைப் பாடி ஆடாமோ' என்றபடி. திருநீறு, சிவபெருமானது திருவருளின் வடிவாகலின், "தன்நீறு" என்று அருளினார். "திருவடி நீறு" என்று அருளிச்செய்தார் திருநாவுக்கரசரும் (திருமுறை - 4. 109. 6.). "மணி" உவமையாகுபெயர். மின் - ஒளி. "மாளிகை" என்றது, கோயிலை.

332. மஞ்சு - மேகம். இங்கும், "அமுதம் ஊறி" என்றதற்கு, மேல் (330) உரைத்தவாறே உரைக்க. துஞ்சல் - இறத்தல். "பிறப்பு" என்றதும், 'பிறத்தல்' என அத் தொழிலையே குறித்தது. புஞ்சம் - தொகுதி.

333 ஆனோ அலியோ அரிவையோ என்றிருவர்
காணாக் கடவுள் கருணையினால் தேவர்குழாம்
நாணாமே உய்யஆட் கொண்டருளி நஞ்சுதனை
ஊணாக உண்டருளும் உத்தர கோசமங்கைக்
கோணார் பிறைச்சென்னிக் கூத்தன் குணம்பரவிப்
பூணார் வனமுலையீர் பொன்னூச லாடாமோ. 5

334 மாதாடு பாகத்தன் உத்தர கோசமங்கைத்
தாதாடு கொன்றைச் சடையான் அடியாருள்
கோதாட்டி நாயேனை ஆட்கொண்டென் தொல்பிறவித்
தீதோடா வண்ணந் திகழப் பிறப்பறுப்பான்
காதாடு குண்டலங்கள் பாடிக் கசிந்தன்பால்
போதாடு பூண்முலையீர் பொன்னூச லாடாமோ. 6

---

333. அரிவை - பெண். " இருவர் " என்றது, தொகைக் குறிப்பாய், அயன் மாலைக் குறித்தது. ' இருவர்தாமும் ' என உயர்வு சிறப்பும்மை விரிக்க. அவர்தாமே காணாராயின பின், பிறர் காணாமை சொல்லவேண்டாவாயிற்று. " நாணுதல் " இங்குத் தோல்வியுறுதல். அது, ' தோற்று அழியாதபடி ' எனப் பொருள்தந்தது. " ஆட்கொண்டு " என்றது, அபயம் அளித்தமையை. கோண் ஆர் - வளைவு பொருந்திய.

334. முதற்கண் உள்ள " ஆடு " இரண்டும், 'பொருந்திய' எனப் பொருள்தந்தன. ' நாயேனை ஆட்கொண்டு தன் அடியாருள் வைத்துக் கோதாட்டி ' என்க. பிறவித் தீது - பிறவிக்கு ஏதுவாய தீமை; என்றது ஆகாமிய வினையை. ஓடா வண்ணம் - இளைக்காத நிலைமை; அஃதாவது, திருவடி ஞானம் அல்லது திருவருள் உணர்வு. திகழ - திகழ்தலால்; எனவே. ' அவ்வுணர்வு திகழுமாறு செய்பவனும் அவனே ' என்றதாயிற்று. காதணி, இறைவற்கும், ஆசிரியர்க்கும் சிறப்புடையதோர் அணிகலமாகலின், " காதாடு குண்டலங்கள் பாடி " என அதனையே விதந்தருளிச் செய்தார். போது - பூமாலை; ஆகு பெயர்.

335 உன்னற் கரியதிரு உத்தர கோசமங்கை
மன்னிப் பொலிந்திருந்த மாமறையோன் தன்புகழே
பன்னிப் பணிந்திறைஞ்சப் பாவங்கள் பற்றறுப்பான்
அன்னத்தின் மேலேறி ஆடும்அணி மயில்போல்
என்னத்தன் என்னையும்ஆட் கொண்டான் எழில்பாடிப்
பொன்னொத்த பூண்முலையீர் பொன்னூசலாடாமோ. 7

336 கோல வரைக்குடுமி வந்து குவலயத்துச்
சால அமுதுண்டு தாழ்கடலின் மீதெழுந்து
ஞால மிகப்பரிமேற் கொண்டு நமையாண்டான்
சீலந் திகழுந் திருவுத்தர கோசமங்கை
மாலுக் கரியானை வாயார நாம்பாடிப்
பூலித் தகங்குழைந்து பொன்னூசலாடாமோ. 8

---

335. மறையோன் - அந்தணன். 'மறையோனும், அறுப்பானும், ஆட்கொண்டானும் ஆகிய அவனது எழிலைப்பாடி' என்க. நான்காம் அடியை, "பொன்னூசல்" என்றதற்கு முன்னர்க் கூட்டுக. இவ்வடி, இல்பொருள் உவமை. மெல்ல அசைந்தாடும் ஊசலுக்கு, அத்தன்மையான நடையை உடைய அன்னம் உவமையாயிற்று. 'சுணங்கு' எனப்படும் அழகிய தேமலால், தனங்கள் பொன்போல விளங்குவவாயின என்க.

336 கோலவரைக் குடுமி வந்து - அழகிய திருக்கைலை மலைச் சிகரத்தினின்றும் போந்து. "அமுது" என்றது, வந்தி தந்த பிட்டினை. "சிவபுரத்தார் போரேறு - மண்பால் மதுரையில் பிட்டமுது செய்தருளி" என முன்னர் (290) அருளிச் செய்தது காண்க. கடலின்மீது எழுந்து சென்றது, வலைவீசிய திருவிளையாடலிலாம். "உண்டு, எழுந்து" என்ற எச்சங்கள், எண்ணின்கண் வந்தன. ஞாலம் மிக - மண்ணுலகமே மேலான உலகமாம்படி. "பரிமேற்கொண்டு நமை ஆண்டான்" என்றதனால், இறைவன் மதுரையில் குதிரை வாணிகனாய் வந்தது, அடிகள் பொருட்டே என்பது ஐயமின்றித் துணியப்படுவதாம். 'ஆண்டானாகிய அரியானை' என்க. 'பூரித்து' என்பது. எதுகைநோக்கி, 'பூலித்து' எனத் திரிந்தது. பூரித்தல் - மகிழ்தல்.

337 தெங்குலவு சோலைத் திருஉத்தர கோசமங்கை
தங்குலவு சோதித் தனியுருவம் வந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமும் ஆட்கொள்வான்
பங்குலவு கோதையுந் தானும் பணிகொண்ட
கொங்குலவு கொன்றைச் சடையான் குணம்பரவிப்
பொங்குலவு பூண்முலையீர் பொன்னூச லாடாமோ. 9

திருச்சிற்றம்பலம்

---

337. இதனுள், "உலவு" என்றன பலவும், 'பொருந்திய' எனப் பொருள் தந்தன. தெங்கு - தென்னை மரம். தங்கு - தங்குதல்; முதனிலைத் தொழிற்பெயர். "சோதி உருவம்" என்றது, இலிங்க வடிவத்தை. ஆட்கொள்வான் - ஆட்கொள்ளுதற்பொருட்டு. 'எங்களைப் பணிகொண்ட' என்க. "கொண்ட" என்றது, கொண்டதுபோன்ற' என்னும் பொருளது. கொங்கு-தேன். திருவுத்தரகோச மங்கைத் தலத்தில் உள்ள இலிங்க மூர்த்தி முன்னர் நின்று, "என்னை விடுதிகண்டாய்" என அடிகள் வேண்டிய உடன் இறைவன் முன்போலவே ஆசிரியத் திருமேனியுடன் எழுந்தருளிவந்து அருள் செய்தமையின், அவ்வுருவமே வந்து பணிகொண்டதுபோன்ற கொன்றைச் சடையான்' என்று அருளிச்செய்தார். பொங்கு - பொங்குதல்; பூரித்தல்.

வரமுடன் புவியிற் றோன்று மறையவர்க் கிறைவ ருண்மை
தருமுணர் வென்னு நாலாஞ் சத்திநி பாத மெய்திப்
பரமவஞ் செழுத்து மொன்றும் பராபர மூணர்த்து ஞான
குருபரன் திருத்தாள் சென்று கூடுதல் வேண்டு மென்று. 22

மற்கட விலங்கு தன்னால் வளங்கெழு விளவின் மேவு
நற்கனி கொள்ள வேண்டி நயந்துகல் லெறிவார் போலச்
சற்குரு வுளனோ வென்று நாடுவார் தர்க்க மெல்லாஞ்
சொற்கலை ஞான சைவர் தம்முடன் சொல்ல லுற்றார். 23

வளங்கெழு புவியி லுள்ள வாவியுங் காவு மோடி
விளங்கிசை வண்டு தண்டேன் மிகுமலர் தேடு மாபோல்
உளங்கொள நிமல னன்னூ லோதின ருண்மை யெல்லாம்
அளந்தறி வுணர்ந்த நீரர் யாவரென் றாயு நாளில், 24

— திருவாதவூரடிகள் புராணம்.

17. அன்னைப் பத்து

[அன்னைப் பத்து - 'அன்னே' என்னும் சொல்லையுடைய பத்துத் திருப்பாட்டுக்களான் இயன்ற பகுதி. இதன்கண் வரும், 'அன்னே' என்பது, தலைவி தோழியைக் கூறும் சொல்லாய் அமைவது. அதனை, "**அன்னை என்னை என்றலும் உளவே**" என்னும் இலக்கணத்தானும் (தொல்.பொருள்-242), "**அன்னாய் இவனோர் இளமா ணாக்கன்**" (குறுந்தொகை - 33) என்னும் இலக்கியத்தானும் அறிக. ஐங்குறுநூற்று அன்னாய்ப் பத்தினும் சிலவிடத்து, 'அன்னாய்' என்பது தலைவி தோழியைக் கூறியவாறாக வருதல் காண்க.

இப்பகுதி முழுவதும், தலைவியது வேறுபாடு கண்டு வினவிய செவிலிக்குத் தோழி, எழுவகை அறத்தொடு நிலையுள், 'வேட்கை யுரைத்தல்' வகையால் அறத்தொடு நின்றதாம். ஆகவே, இத்திருப்பாட்டுக்கள் யாவும் தலைவியது கூற்றைத் தான் கொண்டு கூறியவாறாகத் தோழி கூறியனவாம். எழுவகை அறத்தொடு நிலையை, "**எளித்தல் ஏத்தல்**" (தொல். பொருள் - 204) என்னும் நூற்பாவினால் அறிக. "அன்னே" என்பவற்றைக் கொண்டுகூட்டாக முன்னர்க்கூட்டி, தோழி செவிலியை விளித்தவாறாக உரைப்பாரும் உளர்.

பத்திற்குமேற்பட்ட திருப்பாட்டுக்களான் இயன்றவைகளை யெல்லாம் முன்னர் வைத்து, அவற்றது இறுதிக்கண் நான்கடிகளின் மிக்க அடிகளையுடைய திருப்பாட்டுக்களான் இயன்றதனை வைத்தபின்னர்ப் பத்துத் திருப்பாட்டுக்களான் இயன்ற பகுதிகளை வைக்கப்புகுந்து, அவற்றுள் நேரே காமப்பொருள் பற்றி வருதலின் முன்னவற்றோடு இனிதியைதல் பற்றி இதனை முதற்கண் வைத்துக் கோத்தனர் முன்னோர். இது வேட்கை மீதூர்தல் கூறுதலாதலின், இதன் உள்ளுறைப்பொருள் உயிரினிடத்து இறையின்பம் (சிவானந்தம்) நிறைதலே என்பது பற்றி, இதற்கு, '**ஆத்தும பூரணம்**' எனக் குறிப்புரைத்தனர். '**இது, தில்லையில் அருளிச்செய்யப்பட்டது**' என்பதே பதிப்புக்களிற் காணப்படுவது.

இதனுள் வரும் திருப்பாட்டுக்கள் அனைத்தும் அளவடி நான்கினால் ஆயினமைபற்றி இவற்றை, '**கலிவிருத்தம்**' என்றே

கூறினராயினும், அடிகள் அளவொவ்வாதும், இடைமடங்கியும் வருதலின், இவற்றை ஆசிரியத்துறைப் பாற்படுத்தலே சிறப்பு. இன்னோரன்னவைகளையெல்லாம் உண்மையில் '**பண்ணத்தி**' (தொல். பொருள் - 482.) எனக் கூறிப்போதலே நன்று. தாழிசை, துறை, விருத்தம் அனைத்தையும் கொச்சகக்கலியுள் அடக்குவர் பேராசிரியர்.

பாடல் தொகையும், பிறவும் வேறுபட வருதலின், இங்கு நின்றும் வரும் பகுதிகள், 'திரு' என்னும் அடைபுணர்க்கப் பட்டும், புணர்க்கப்படாதும் ஏற்றபெற்றியான் வரும்.

இதனுள், "**என்னும்**" என்பவற்றிற்கெல்லாம், '**என்று எப்பொழுதும் சொல்வாள்**' என்பது பொருள். தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்குமிடத்து, செவிலி நற்றாய்க்குக் கூறுமாறுபோலத் தலைவியது காதலை நிரம்பக் கூறாது, தோற்று வாய் செய்யுமளவே கூறுவாளாகலின், (தொ. பொருள் 112. உரை – இளம்.) இவட்கு இந்நிலை இவ்வாற்றான் ஆயது எனக் காரணத்தொடு கூறாது, கேள்வியான் ஆயதோ, காட்சியான் ஆயதோ, கூடிப்பிரிந்த பிரிவாற்றாமையான் ஆயதோ என, ஒன்றில் துணிவு பிறவாது ஐயுறுமாறே கூறினாள். அத்தகைய குறிப்புரையுள், 'நின்மகள்' எனக் கிளந்து கூறுதல் பொருந் தாது' என்னுந் திருவுள்ளத்தால், அப்பெயர் இதனுள் யாண்டும் தோன்றா எழுவாயாய் எஞ்சி நிற்கவே வைக்கப்பட்டது.]

கலி விருத்தம்

திருச்சிற்றம்பலம்

338 வேத மொழியர்வெண் ணீற்றர்செம் மேனியர்
நாதப் பறையினர் அன்னே என்னும்;
நாதப் பறையினர் நான்முகன் மாலுக்கும்
நாதர்இந் நாதனார் அன்னே என்னும். 1

---

338. வேத மொழியர் - வேதமாகிய சொல்லை உடையவர்; என்றது, 'அவரது சொல்லே வேதம்' என்றபடி. நாதப் பறையினர் - நாததத்துவமாகிய பறையை யுடையவர். இத் தத்துவம், வாக்குக்களுக்குக் காரணமாதல்பற்றி, 'பறை' என்றார். இதனானே, சிவபெருமான்கரத்தில் துடியாய் இருப்பது

339 கண்ணஞ் சனத்தர் கருணைக் கடலினர்
உண்ணின் றுருக்குவர் அன்னே என்னும்;
உண்ணின் றுருக்கி உலப்பிலா ஆனந்தக்
கண்ணீர் தருவரால் அன்னே என்னும். 2

340 நித்த மணாளர் நிரம்ப அழகியர்
சித்தத் திருப்பரால் அன்னே என்னும்;
சித்தத் திருப்பவர் தென்னன் பெருந்துறை
அத்தர்ஆ னந்தரால் அன்னே என்னும். 3

இத்தத்துவமே என்பதும் பெறப்படும். பின்னர் வரும் இத் தொடருக்கு, 'நாதப் பறையினராயதன் மேலும்' என வழி மொழிந்ததாக உரைக்க. 'இந்நாதனார்' எனச் சுட்டியது உருவெளியை. இப்பெயர், மொழியர் முதலிய பயனிலைகட்கு எழுவாயாய் இறுதிக்கண் நின்றது. 'இவ்வாறெல்லாம் தலைவி தனது காதல் மிகுதியால் தலைவனையே நினைந்து பிதற்று கின்றாள்' எனப் படைத்து மொழியாலும், மெய்ந்நிலை வகையாலும் தோழி செவிலிக்கு அறத்தொடுநிற்கின்றாள் என்க. "நான்முகன் மால்" என்றதன் இறுதியில், 'இருவர்' என்னும் தொகை எஞ்சிநின்றது.

339. 'எனது கண்ணில் திட்டியுள்ள அஞ்சனத்தில் உள்ளார்' என்க. அஞ்சனம் - மை. மை திட்டுதல் கண்ணினுள் ஆதலும், அவ்விடமே தலைவர் நிற்குமிடம் ஆதலும் பற்றி, "கண் அஞ்சனத்தர்" என்றாள். இதனை,

"கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்
எழுதேம் கரப்பாக் கறிந்து"

என்பதனானும் (குறள் - 1127.) அறிக. கருணைக் கடலினர் - கருணையாகிய கடலை உடையவர்; என்றது, 'கடல்போலும் கருணையுடையவர்' என்றவாறாம். உலப்பு - கெடுதல்; வற்றுதல்.

340. நித்த மணாளர் - அழிவில்லாத மணவாளக்கோலம் உடையவர்; 'என்றும் ஒரு பெற்றியராய் உள்ளவர்' என்றபடி. அத்தர் - தலைவர்.

341 ஆடரப் பூணுடைத் தோல்பொடிப் பூசிற்றோர்
வேடம் இருந்தவா றன்னே என்னும் ;
வேடம் இருந்தவா கண்டுகண் டென்னுள்ளம்
வாடும் இதுஎன்னே அன்னே என்னும். 4

342 நீண்ட கரத்தர் நெறிதரு குஞ்சியர்
பாண்டிநன் னாடரால் அன்னே என்னும் ;
பாண்டிநன் னாடர் பரந்தெழு சிந்தையை
ஆண்டன்பு செய்வரால் அன்னே என்னும். 5

343 உன்னற் கரியசீர் உத்தர மங்கையர்
மன்னுவ தென்நெஞ்சில் அன்னே என்னும் ;
மன்னுவ தென்நெஞ்சில் மாலயன் காண்கிலார்
என்ன அதிசயம் அன்னே என்னும். 6

---

341. 'அரா' என்பதன் ஈற்று அகரம், செய்யுளிடத்துக் குறுகிநின்றது. 'தோல் உடை' என்பது. பின்முன்னாகி நின்றது. 'பூணும் உடையும் உடைய பொடிபூசிற்றோர் வேடம் இருந்தவாறு' என்க. "பொடிப் பூசிற்று" என்னும் பகரம் விரித்தல். வாடுதல், காதல் மிகுதியாலாம். "என்னே" என்றதனை, முன்னுள்ள, "இருந்தவாறு" என்றதனோடும் கூட்டுக.

342. "நீண்ட கரம்" என்றது, நீட்டிய தனால் நீண்டமையைக் குறித்தவாறு; இஃது ஆடல் நிகழ்த்தும் நிலையைக் குறித்தபடி. நெறிதல் - சுருளுதல். சடையையே இங்கு, 'குஞ்சி - தலைமயிர்' என்றார். பரந்தெழு சிந்தை - பலவழியானும் ஓடுகின்ற உள்ளம். ஆளுதல் - ஒருவழிப்படச் செலுத்துதல். ஆள்வோனும், ஆளப்படுவோருமாய் நிற்கும் இயைபு பற்றி இறைவனது அருளை, 'அன்பு' எனினும் இழுக்காது என்னும் கருத்தால், "அன்பு செய்வர்" என்று அருளினார்.

343. 'உத்தரகோச மங்கை' என்பதனை, "உத்தர மங்கை" எனத் தொகுத்து அருளிச்செய்தார். "என்நெஞ்சில்" என்றது, 'இசையெச்சத்தால்', 'நாயினுங் கடையேனாகிய எனது நெஞ்சில்' எனப் பொருள் தந்தது. மறித்துவந்த

344 வெள்ளைக் கலிங்கத்தர் வெண்டிரு முண்டத்தர்
பள்ளிக்குப் பாயத்தர் அன்னே என்னும்;
பள்ளிக்குப் பாயத்தர் பாய்பரி மேற்கொண்டென்
உள்ளங் கவர்வரால் அன்னே என்னும். 7

345 தாளி அறுகினர் சந்தனச் சாந்தினர்
ஆளெம்மை ஆள்வரால் அன்னே என்னும்;
ஆளெம்மை ஆளும் அடிகளார் தங்கையில்
தாள மிருந்தவா றன்னே என்னும். 8

346 தையலோர் பங்கினர் தாபத வேடத்தர்
ஐயம் புகுவரால் அன்னே என்னும்;
ஐயம் புகுந்தவர் போதலும் என்னுள்ளம்
நையும்இது என்னே அன்னே என்னும். 9

தொடர்க்கண், 'என் நெஞ்சில் மன்னுவதாக' என ஆக்கம் வருவிக்க.

344. கலிங்கம் - ஆடை. முண்டம் - நெற்றி. அது, திருநீற்றால் வெள்ளிதாயிற்று. பள்ளி - படுக்கையாதற்குரிய. குப்பாயம் - போர்வை. வெள்ளைக் கலிங்கமும், பள்ளிக் குப்பாயமும் சிவபெருமான், குதிரைமேல் வந்த காலத்துக் காணப் பட்டவை என்க. எனவே, இத் திருப்பாட்டு, பாய்பரிமேல் வந்த திருக்கோலத்தின் இயல்புரைத்ததாயிற்று. குதிரை வாணிகர், தாம் தங்குமிடத்தில் தமது போர்வையையே நிலத் தின்மேல் விரித்து அதன்மேற் கிடந்து உறங்குதல் தோன்ற, "பள்ளிக் குப்பாயத்தர்" என்று அருளினர்.

345. 'தாளியறுகு' என்பது பற்றி மேலே கூறப்பட்டது (பக். 145.). 'ஆளாக' என ஆக்கம் விரிக்க. அடிகளார் - தலைவர். தாளம், பிச்சைக் கோலத்திற் கொள்ளப்படுவது. "இருந்தவாறு" என்றதன்பின், 'என்னே' என்பது எஞ்சி நின்றது. 'எம்மை ஆளாகக் கொண்டு ஆளுகின்ற தலைவர் எனப்படுவார், பிச்சைக் கோலத்தராய் நிற்றல் என்' என்று மருண்டவாறு.

346. தாபத வேடம் - தவக் கோலம். 'வேடத்தராய்' என எச்சமாக்குக. ஐயம் புகுதல் - பிச்சைக்குச் செல்லுதல்.

347 கொன்றை மதியமுங் கூவிள மத்தமும்
துன்றிய சென்னியர் அன்னே என்னும் ;
துன்றிய சென்னியின் மத்தம்உன் மத்தமே
இன்றெனக் கானவா றன்னே என்னும்.

திருச்சிற்றம்பலம்

'தையலோர் பங்கும், தாபத வேடமும் ஒன்றோடொன்றொவ்வாத கோலங்கள்; அவற்றை ஒருவனே உடையனாயிருத்தல் வியப்பு' என்றபடி. நைதல் - உருகுதல்.

347. ''கொன்றை, கூவிளம்'' என்றவற்றில் உம்மை தொகுத்தலாயிற்று. கூவிளை - வில்வம். துன்றிய - நெருங்கிய. மத்தம் - ஊமத்தம் பூ. உன்மத்தம் - பித்து; அஃது ஆகுபெயராய், அதற்கு ஏதுவைக் குறித்தது. ''ஆனவாறு'' என்றதன்பின், 'என்னே' என்பது எஞ்சிநின்றது. 'சிவபெருமானது சென்னியில் உள்ள ஊமத்த மலர். இன்று எனக்கு பித்துத் தருவதாயினமை வியப்பு' என்றபடி. இதனால், பொருள் யாதாயினும், அதனை யுடையாரது தன்மையால் அதன் தன்மை வேறுபடும் என்பது பெறப்பட்டது. படவே, தலைவியது பித்திற்குச் சிவபெருமான் ஏதுவாயினமையால், அவன் அணிந்துள்ள ஊமத்த மலரும் அன்னதாயிற்று என்பது போதரும்.

மேதகு வனிதைய ரெங்கணும் வீசிய கவரி யசைந்தெழ
மாதவ முனிவர்க ளந்தணர் மாசறு கவிஞர் செறிந்திட
ஏதமின் மதிகுல புங்கவ னேர்கெழு மணிமுடி யின்றிரள்
ஆதவன் மிசையெழ வந்தரி யாசன மதனி லிருந்தனன். 25

தாதகி மார்ப னெடும்புவி சார்தரு மாழ்கட லின்கரை
தீதில மாதுர கங்கொடு சீர்கெழு மாரியர் வந்தனர்
ஏதமி லாயது கண்டனம் யாமென வேதொழு தன்பொடு
மேதினி காவலன் முன்சில மேதகு தூதர்வி ளம்பினர். 26

ஏவல்செய் வார்களி லிங்கிவ ரேபரி வானவ ரென்றிகன்
மேவிய தூதரை வன்றிறன் மீனவர் கோனு மகிழ்ந்துபின்
வாவுநன் மாதுர கங்கொடு வாருமெ னாவுட லுந்தன
தாவியு மாயர னன்புடை யார்முக நாடி மொழிந்தனன். 27

— திருவாதவூரடிகள் புராணம்.

18. குயிற் பத்து

[குயிற் பத்து - குயிலை நோக்கிக் கூறும் பத்துத் திருப் பாட்டுக்களின் தொகுதி. இது பற்றிய விளக்கங்களையும், இதன் பின்னர் வரும் திருத்தசாங்கம் பற்றிய விளக்கங்களையும், திருக்கோத்தும்பியில் குறித்தவாறு பற்றி உணர்ந்து கொள்க.

தலைவனது பிரிவாற்றாமையால் இரங்கும் தலைவியது கூற்றாய் அமைந்த இதன் உண்மைப் பொருள், இறைவனைப் பெற்றும் பெறாதவாறாய் இவ்வுலகில் நின்று வருந்தும் உயிரினது இரக்கமே யாகலின், இதற்கு, '**ஆத்தும இரக்கம்**' எனக் குறிப்புரைத்தனர் முன்னோர். குயிலை நோக்கிக் கூறுதல் இனிது விளங்க, 'குயிற் பத்து' எனப் பெயர் பெற்றிருத்தலின், பின்னர் வரும் திருத்தசாங்கத்திற்கு முன்னே இதனை முன்னர்ச் சென்ற அன்னைப் பத்தோடு இனிதியையக் கோத்தனர். இப் பகுதி முழுவதும் பெரும்பான்மையும் ஈரசை அறுசீரடி விருத்தத் தால் ஆயது. அறுசீரடியுள் மூன்றாவதனையொழித்து ஒழிந்த நான்குதளையும் இயற்சீர் வெண்டளையாய் நிற்கும். இது, **தில்லையில் அருளிச்செய்தது** என்பதே பதிப்புக்களில் காணப் படுவது.]

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

348 கீதம் இனிய குயிலே
கேட்டியேல் எங்கள் பெருமான்
பாத மிரண்டும் வினவில்
பாதாள மேழினுக் கப்பால்
சோதி மணிமுடி சொல்லிற்
சொல்லிறந் துந்நின்ற தொன்மை
ஆதி குணமொன்று மில்லான்
அந்தமி லான்வரக் கூவாய். 1

---

348. "கேட்டியேல்" என்றதனை, "நின்ற" என்றதன் பின்னரும், "ஆதி" என்றதனை, "அந்தம்" என்றதன் முன்னரும் கூட்டுக. கீதம் - இசை. "இனிய" என்ற

349 ஏர்தரும் ஏழுல கேத்த
எவ்வுரு வுந்தன் னுருவாம்
ஆர்கலி சூழ்தென் னிலங்கை
அழகமர் வண்டோ தரிக்குப்
பேரரு ளின்ப மளித்த
பெருந்துறை மேய பிரானைச்
சீரிய வாயாற் குயிலே
தென்பாண்டி நாடனைக் கூவாய். 2

பெயரெச்சக் குறிப்பு, இடப்பெயர் கொண்டது. கேட்டியேல் - இவற்றைக் கேட்டுணர்ந்தாயாயின் (அவன் வரக்கூவாய் என்க). 'இரண்டு, முடி' என்றவை, அவற்றின் அளவைக் குறித்தன. பாதாளம், 'பாதலம்' என்பதன் மரூஉ; 'கீழுலகம்' என்பது பொருள். 'அப்பாலும், இறந்தும்' என உம்மை விரித்து, அவற்றை, "நின்ற" என்றதனோடு முடிக்க. மணி - அழகு. தொன்மை - அனாதி. இஃது, ஒரு பெயர்த் தன்மைப்பட்டு நின்ற, "ஆதி குணம் ஒன்றும் இல்லான் அந்தம் இல்லான்," என்றதனோடு, இரண்டாவதன் பொருள்படத் தொக்கது. 'தொன்மை ஆதி' என்றே இயைத்து, 'அதனையே வேறொரு பெயராகக்கொண்டு உணர்த்தலுமாம். குணம், மாயையின் காரியமாகிய குணம். "ஒன்றும்" என்றது, 'ஒன்றேனும்' என்ற இழிவு சிறப்பு. எனவே, 'சாத்துவிகம், இராசதம், தாமதம்' என்னும் முக்குணங்களுள் ஒன்றேனும் இல்லாதவன் என்றதாம். முக்குணங்களுள் ஒன்றேனும் இல்லாதவன் என்றற்கே முதல்வனை, 'நிற்குணன்' என்றதன்றி, அறு குணம் அல்லது எண் குணம் எனப்படும் அருட்குணமும் இல்லாதவன் என்றற்கு அன்று. இஃதறியாதார் 'நிற்குணம்' என்பதுபற்றி, முதற்பொருட்கு குணகுணித்தன்மையால் வேறுபாடு கூறுதல்தானும் குற்றமாம்' எனவும், அதனால் அங்ஙனங் கூறுவோர் சகுணோபாசனையாகிய கீழ்நிலையில் நிற்பவர் எனவும் கூறித் தமது ஞானத்தின் தன்மையைப் புலப்படுப்பர்.

349. ஏர் தரும் - அழகைப் புலப்படுத்துகின்ற. எவ்வுருவும் தன் உருவாய் நிற்றலாவது, எப்பொருளிலும் தான் அவையேயாய்க் கலந்திருத்தல், "உருவாய்" என்ற வினையெச்சம், எண்ணின்கண் வந்தது. 'உருவாம்' என்பதும் பாடம்.

ஆர்கலி-கடல். வண்டோதரி, இராவணன் மனைவி. தசக்கிரீவன் சிவபெருமானது கயிலாய மலையைப் பெயர்த்து அப்பெருமானால் ஒறுக்கப்பட்டுப் பின்னர்ச் சாமகானம் பாடி வாளொடுநாளும், 'இராவணன்' என்னும் பெயரும் பெற்று மீண்டபின், இலங்கையில் சிவபூசையை விடாது செய்துவந்தமை, புராணங்களினும், இதிகாசங்களிலும் இனிது விளங்கிக்கிடப்பது. இராவணன் சிவபத்தன் ஆயினமையின், அவன் மனைவி மக்கள் முதலிய சுற்றத்தாரும், பிறரும் எல்லாம் சிவவழிபாட்டில் ஈடுபட்டிருந்தமை பெறப்படும். 'அவ்வாற்றால் சிவபெருமானிடத்து அன்பு கொண்டிருந்த, இராவணன் மனைவி வண்டோதரி, அப்பெருமானைக் குழந்தை வடிவில் எடுத்தணைத்து இன்புற வேண்டினாள்' எனவும், 'அவ்வாறே ஒருநாள் சிவபெருமான் அவளுக்குக் குழந்தை வடிவில் காட்சியளிக்க, வண்டோதரி எடுத்தணைத்து இன்புற்றிருக்கும்பொழுது இராவணன் வர, அவனிடமும் சிவபெருமானது திருவருட் செயலைக்கூறிக் குழந்தையைக் கொடுக்க அவனும் எடுத்தணைத்து மகிழ்கையில் சிவபெருமான் மறைந்தருளினார்' எனவும் சொல்லப்படும் பழைய வரலாறு பற்றி, "வண்டோதரிக்குப் பேரருள் இன்பம் அளித்தபிரான்" என்று அருளிச்செய்தார். அடிகள் திருமொழியுள்ளே இது காணப்படுதல்பற்றி, இவ்வரலாறு திருவுத்தரகோச மங்கைத் தலத்தோடு தொடர்புபடுத்திக் கூறப்படுகிறதுபோலும்!

'சிவபெருமான் வண்டோதரிக்குக் குழந்தையாகத்தோன்றி அவளது குறையை நிரப்பி இன்பம் அடையச் செய்தார்' என்னும் இதனைப் புறச்சமயிகள், 'காமாதுரராய் அவள்பாற் சென்று, இராவணன் வந்தபொழுது மறைந்தார்' எனத் திரித்துக் கூறுவர். திரிபுரத்தவர்போலாது இராவணன் தான் சாங்காறும் சிவவழிபாடுடையனாய் இருந்தனன் என்பதையும் அவர் நினைந்திலர்போலும்! அறநெறியிற் பிழைத்தவனை அழித்தமையால் புண்ணியம் ஒருபால் எய்திற்றாயினும், சிவவழிபாடுடையவனை அழித்தமையால் உளதாய பாதகமும் ஒருபால் வந்து பற்ற, அதனை நீக்கிக்கொள்ளுதற் பொருட்டு அத்தென் கடற் கரையிற்றானே, இராமன் தன் மனைவி முதலாயினாரோடும் சிவபிரானை வழிபட்டு நலம் பெற்றான் என யாண்டும் பெருவார்த்தையாய் விளங்கிவரும் வரலாற்றினை உடம்பட

350 நீல உருவிற் குயிலே
    நீள்மணி மாடம் நிலாவும்
கோல அழகிற் றிகழுங்
    கொடிமங்கை உள்ளுறை கோயிற்
சீலம் பெரிதும் இனிய
    திருவுத் தரகோச மங்கை
ஞாலம் விளங்க இருந்த
    நாயக னவரக் கூவாய். 3

மாட்டாது பிணங்குகின்ற அவர், இன்னோரன்னவற்றைப் படைத்துக்கொண்டு மொழிதல் வியப்பன்று. சிவபெருமான் காமனை எரித்தவர் என்பதையும், காமனுக்கு அத்தொழிலும் அப்பெருமானால் அளிக்கப்பட்டது என்பதையும் அவர் அறியார். ஈண்டு அடிகள், சிவபெருமான் அளித்த இன்பத்தை, "பேரின்பம்" எனவும், "அருள் இன்பம்" எனவும் விதந் தருளிச் செய்தமையானும், திருவார்த்தைப்பகுதி இரண்டாந் திருப்பாட்டினுள், "பந்தணை மெல்விரலாட்கு அருளும் பரிசு" என்றே அருளிப்போதலானும் புறச் சமயிகளது கூற்றுப்பற்றி மயங்குதற்கு இடனின்மை அறிந்துகொள்க. அன்றியும், இது சிவபிரான் புகழ்ப்பாடலே யன்றி, வேறாகாமையும் நோக்கி யுணர்க.

350, 'நிலாவும் கோயில், உள்ளுறை கோயில், எனத் தனித்தனி முடிக்க. கோல உருவின் - அழகிய உருவத்துடன். கொடி மங்கை - பூங்கொடிபோலும் உமையம்மை. 'அவள் உள்ளிடத்தே உறையும் கோயிலையுடைய உத்தரகோச மங்கைக்கண் இருந்த நாயகன்' என்க. இங்ஙனங் கூறவே, 'அவ்வம்மை உடனாக இருந்தவன்' என்பது பெறப்பட்டது, இத்தலத்தில் நல்லொழுக்கம் சிறந்து விளங்குதலின், 'சீலம் பெரிதும் இனிய திருவுத்தரகோச மங்கை" என்று அருளிச் செய்தார்.

351 தேன்பழச் சோலை பயிலுஞ்
சிறுகுயி லேஇது கேள்நீ
வான்பழித் திம்மண் புகுந்து
மனிதரை ஆட்கொண்ட வள்ளல்
ஊன்பழித் துள்ளம் புகுந்தென்
உணர்வது வாய ஒருத்தன்
மான்பழித் தாண்டமென் னோக்கி
மணாளனை நீவரக் கூவாய். 4

352 சுந்தரத் தின்பக் குயிலே
சூழ்சுடர் ஞாயிறு போல
அந்தரத் தேநின் றிழிந்திங்
கடியவர் ஆசை அறுப்பான்
முந்தும் நடுவும் முடிவு
மாகிய மூவ ரறியாச்
சிந்துரச் சேவடி யானைச்
சேவக னைவரக் கூவாய். 5

---

351. தேன்பழம், உம்மைத் தொகை. "சோலை பயிலும்" என ஏழாவதன் தொகைக்கண் வல்லினம் மிகாதாயிற்று. தேவர்களை ஆட்கொள்ளாமையால், "வான்பழித்து" என்று அருளினார். ஊன் பழித்து - உடம்பினை இழிந்தது எனச் சொல்லி. என் உணர்வு அது ஆய - என் அறிவாகிய அப் பொருளேயாய்க் கலந்துநின்ற. மான் பழித்து ஆண்ட - மானை வென்று அடிமைகொண்ட. மென்மை, இங்கு, தண்மை குறித்து நின்றது.

352. சுந்தரம் - அழகு, வருமொழி பெயராய இரண்டா வதன் தொகைக்கண், 'சுந்தரத்து' என அத்துச்சாரியை பெற்றது. சூழ் சுடர் ஞாயிறு, சுற்றிலும் பரவுகின்ற கதிர்களை யுடைய கதிரவன். ஆசையறுத்தல், பாசத்தை நீக்குமுகத்தான் என்க. முந்து முதலிய மூன்றும் உலகத்தினுடையன. அவற் றைச் செய்யும் பிரமன் முதலிய மூவரையும் அவையேயாக அருளினார். சிந்துரம் - செஞ்சாந்து. 'அதுபோலும் செவ்விய வாய அடிகளை உடையவன்' என்க. சேவகன் - பாசங்களை அழிக்கும் வீரன்.

353 இன்பந் தருவன் குயிலே
ஏழுல கும்முழு தாளி
அன்பன் அமுதளித் தூறும்
ஆனந்தன் வான்வந்த தேவன்
நன்பொன் மணிச்சுவ டொத்த
நற்பரி மேல்வரு வானைக்
கொம்பின் மிழற்றுங் குயிலே
கோகழி நாதனைக் கூவாய். 6

354 உன்னை உகப்பன் குயிலே
உன்துணைத் தோழியும் ஆவன்
பொன்னை அழித்தநன் மேனிப்
புகழில் திகழும் அழகன்

---

353. முதற்கண் நின்ற, "குயிலே" என்பதனை, 'உனக்கு இன்பம் தருவன்' என்றும், இறுதிக்கண் நின்ற, "குயிலே" என்பதனை, "கூவாய்" என்றும் முடிக்க. 'தருபவன் இவன்' என்பது பின்னர் வருகின்றமையின், 'இன்பந் தருவன்' என்பது வாளா கூறப்பட்டது. "ஏழுலகும்" என்ற முற்றும்மை, அவ்வுலகங்களை எஞ்சாமல் ஆளுதலையும், 'முழுது' என்றது, அவற்றுள் எல்லா இடங்களையும் எஞ்சாமல் ஆளுதலையும் குறித்தன. அன்பன் - அன்புடையவன். "அமுது" என்றது, இன்பப் பொருளாகிய அவனையேயாம். ஊறும் - மேன்மேல் மிகுகின்ற. ஆனந்தன் - இன்பவடிவினன். வான்வந்த தேவன்-வானத்தில் தேவர்களில் ஒருவனாயும் காணப்படுபவன். நன்பொன் மணிச்சுவடு - நல்ல பொன்னினது அழகிய உரை. இது, சிவபெருமானது திருமேனிக்கு உவமை. 'அழகிய இடத்தில் இருந்து, இனிமையாகக் கூவ வல்லாய்' என்பாள், 'கொம்பின் மிழற்றும் குயிலே' என மறித்துங் கூறினாள்.

354. "உகப்பன், ஆவன்" என்றவை, தன்மை வினை முற்றுக்கள். உகத்தல் - விரும்புதல். இங்குக் குயிலாவது, பெடைக்குயிலே, யாதலின், 'உனக்குத் துணையாகிய தோழியும் ஆவேன்' என்றாள். பெடைக்குயில் என்பதனை, "செய்யவாய்ப் பைஞ்சிறகிற் செல்வீ" என வருகின்ற பகுதியுட் கூறுமாற்றானும் (4) அறிக. இனிச் சேவல் என்றே கொண்டு, "துணை"

மன்னன் பரிமிசை வந்த
வள்ளல் பெருந்துறை மேய
தென்னவன் சேரலன் சோழன்
சீர்ப்புயங் கன்வரக் கூவாய். 7

355 வாவிங்கே நீகுயிற் பிள்ளாய்
மாலொடு நான்முகன் தேடி
ஓவி யவர் உன்னி நிற்ப
ஒண்டழல் விண்பிளந் தோங்கி
மேவிஅன் றண்டங் கடந்து
விரிசுட ராய்நின்ற மெய்யன்
தாவி வரும்பரிப் பாகன்
தாழ்சடை யோன்வரக் கூவாய். 8

356 காருடைப் பொன்திகழ் மேனிக்
கடிபொழில் வாழுங் குயிலே
சீருடைச் செங்கம லத்திற்
றிகழுரு வாகிய செல்வன்

என்றது அதன் பெடையை என வைத்து, 'உன் துணைக்குரிய தோழியும் ஆவன்' என உரைத்தலுமாம். இவற்றைப் படர்க்கை வினையாகக்கொண்டு, இறைவற்கு ஆக்கியும் உரைப்ப. "புகழின் திகழும் அழகன்" என்றது, 'புகழையே அழகாக உடையவன்' என்றபடி. "தென்னவன், சேரலன், சோழன்" என்றது, 'தமிழகத்தைச் சிறப்பிடமாகக் கொண்டவன்' என்றதாம்.

355. பிள்ளைப் பறவைகளிற் குயிலும் ஒன்றுதல் பற்றி, "குயிற் பிள்ளாய்" என விளித்தாள். "இங்கே வா" என அருகில் அழைத்தது, 'மறைபொருளைக் கேட்டற்குரிய நண்பினை' என்பது புலப்படவாம். தேடி ஓவி - தேடிக் காண மாட்டாது அத்தொழிலை விடுத்து, 'பின்பு அவர் அன்பால் நினைந்து நிற்குமாறு' என்க. "மேவி" என்றதனை, 'மேவ' எனத் திரிக்க.

356. கார் - கருமை நிறம். 'உடைய' என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. பொன் - அழகு. 'காருடை மேனி, பொன்திகழ் மேனி' எனத் தனித்தனி முடிக்க. கடி -

பாரிடைப் பாதங்கள் காட்டிப்
　　பாசம் அறுத்தெனை 'யாண்ட
ஆருடை அம்பொனின் மேனி
　　அமுதினை நீவரக் கூவாய். 9

357 கொந்தண வும்பொழிற் சோலைக்
　　கூங்குயி லேயிது கேள்நீ
அந்தண னாகிவந் திங்கே
　　அழகிய சேவடி காட்டி
எந்தம ராம்இவன் என்றிங்
　　கென்னையும் ஆட்கொண் டருளும
செந்தழல் போல்திரு மேனித்
　　தேவர் பிரான்வரக் கூவாய். 10

திருச்சிற்றம்பலம்

நறுமணம். செங்கமலத்தின் - செந்தாமரை மலர்போல; "செந்தாமரைக்காடு அனைய மேனித் தனிச் சுடரே" என்று அருளினர், திருச்சதகத்தினும் (26). ஆர் - ஆத்தி மாலை.

357. கொந்து - பூங்கொத்து. அணவும் - பொருந்திய. 'கூவும்' என்னும் பெயரெச்சத்து உயிர்மெய் கெட்டது. எம் தமர் - எம் உறவினர். "தமர்" என்றது பன்மை யொருமை மயக்கம். என்று - என்று இரங்கி.

மீனவர் கோன்மொழி யின்படி வேணிய னேச ரியைந்தபின்
ஆனன சோதியு டன்புவி யாள்பவன் வாசிகொ ளும்படி
வானவி மானமெ னுந்திரு வாழ்வுள கோயில் புகுந்துதன்
ஈனமி லாநெறி வந்தபொன் னேழெழு கோடி வழங்கினன். 28

விற்படை வெற்றி மடந்தையு மிக்க மலர்த்திரு வும்பயின்
மற்புய வெற்பின னங்கயல் வைத்த வலத்தன் வழங்கிய
பொற்பு மிகுத்த தனங்கொடு பொற்கவ னப்பரி கொண்டிட
நற்பய ணத்தை முயன்றனர் நக்கனை நெக்குணர் கின்றவர். 29

— திருவாதவூரடிகள் புராணம்.

19. திருத்தசாங்கம்

[தசாங்கம் - அரசர்க்கு உரிய பத்து உறுப்புக்கள். அவை, மேல், கீர்த்தித் திருஅகவலில் கூறப்பட்டன (103 - 124). அங்கு அடிகள் அவற்றை இறைவனது சிறப்புக்கள் பலவற்றி டையே தம் கூற்றாக அருளிச்செய்தார் ; இங்கு அவற்றைத் தலைவி கூற்றாகத் தனியே எடுத்து அருளிச்செய்கின்றார். இதனானே கிள்ளைவிடுதூது முதலிய தூதுப் பிரபந்தங்களில் இங்ஙனம் தசாங்கங் கூறுதலும் முறைமை ஆயிற்று. இது, மேல், 'குயிற் பத்து' என்றதுபோல, 'கிளிப் பத்து' எனப் பெயர்பெறுதலே தக்கதாயினும், நுதலிய பொருளின் சிறப்புப் பற்றி, 'தசாங்கம்' எனப் பெயர் பெற்றது. இறைவனுடைய தசாங்கமாகலின், 'திரு' என்னும் அடை, புணர்க்கப்பட்டது. இதனை ஈண்டு வைத்துக் கோத்தமைக்குக் காரணம், மேல், குயிற்பத்தின்கண்ணே சொல்லப்பட்டது. இதுவும் தில்லையில் அருளிச்செய்யப்பட்டது என்பதே பதிப்புக்களிற் காணப் படுவது. தசாங்கம், நாட்டை ஆளும் அரசர்க்கு உரியவை யாகலானும், மேல் கீர்த்தித் திருவகவலில் தசாங்கம் கூறு மிடத்து அடிகளே, "எந்தமை ஆண்ட பரிசது பகரில்" என்று அருளிச்செய்தமையானும், இதற்கு, 'அடிமைகொண்ட முறைமை' எனக் குறிப்புரைத்தனர் முன்னோர். இது, முழுவதும் நாலடி வெண்பாக்களால் ஆயது.]

நேரிசை வெண்பா

திருச்சிற்றம்பலம்

358 ஏரார் இளங்கிளியே எங்கள் பெருந்துறைக்கோன்
சீரார் திருநாமம் தேர்ந்துரையாய் — ஆரூரன்
செம்பெருமான் வெண்மலரான் பாற்கடலான் செப்புவபோல்
எம்பெருமான் தேவர்பிரான் என்று. 1

---

358. தசாங்கத்துள் இது பெயர்கூறுகின்றது. தலைவனது பிரிவினால் ஆற்றாளாய தலைவி தலைவனது பெயர் முதலிய வற்றைப் பிறர் சொல்லக்கேட்பினும் அவனைக்கூடி மகிழ்ந்தாற் போலும் இன்பம் உண்டாகும் என்னும் நினைவினளாய், அது கிடைக்கப் பெறாமையின், கிளியை நோக்கி அவற்றைக் கூறு மாறு வேண்டிக்கொள்கின்றாள். இவ்வாறே,

359 ஏதமிலா இன்சொல் மரகதமே ஏழ்பொழிற்கும்
நாதன்நமை ஆளுடையான் நாடுரையாய் — காதலவர்க்
கன்பாண்டு மீளா அருள்புரிவான் நாடென்றும்
தென்பாண்டி நாடே தெளி. 2

" சிறையாரும் மடக்கிளியே இங்கேவா தேனொடுபால்
முறையாலே உணத்தருவன் ; மொய்பவளத் தொடுதரளம்
துறையாரும் கடல்தோணி புரத்தீசன் துளங்குமிளம்
பிறையாளன் திருநாமம் எனக்கொருகால் பேசாயே "

என்றாற்போல (திருமுறை 1.60.10)த் தேவாரத் திருமுறைகளிலும் வருவன காண்க. ஏர் ஆர் - அழகு பொருந்திய. நாமம் - பெயர். ஆரூரன் - திருவாரூரில் எழுந்தருளியிருப்பவன். செம்பெருமான் - சிவந்த நிறத்தையுடைய பெருமான். வெண்மை, இங்கு, தூய்மைமேல் நின்றது. 'கிளியே, மலரானும், பாற்கடலானும் செப்புவபோல நீ, பெருந்துறைக்கோனது திருநாமங்கள் பலவற்றையும் ஆராய்ந்து, ஆரூரன், செம்பெருமான், எம்பெருமான், தேவர்பிரான் என்று உரையாய்' என வினைமுடிக்க. இங்ஙனம் பல பெயர்களைக் கூறினாராயினும், 'தேவர்பிரான்' என்பதே முதன்மைப் பெயர் என்றல் திருவுள்ளமாதலை, ' தேவதேவன் திருப்பெயராகவும்" என முன்னே (கீர்த்தி - 122.) அருளிச்செய்தமையான் அறிக.

359, ஏதம் - குற்றம். 'குற்றம் இல்லாத சொல்' என்க. " மரகதம்" என்றது உவமையாகுபெயராய்க் கிளியை உணர்த்திற்று. பொழில் - உலகம். 'காதலவர்க்கு அருள்புரிவான்' என இயையும். 'அன்பால் ஆண்டு' என மூன்றும் உருபு விரிக்க. 'நாடு உரையாய்; அங்ஙனம் உரைத்தற்கு அவன் நாடு யாதெனின்' என்று எடுத்துக்கொண்டு, 'அவன் நாடு தென்பாண்டி நாடே' என முடிக்க. இது பின்வருவனவற்றிற்கும் பொருந்தும். " தென்பாண்டி நாடு" என்றதனை, 'தென்குமரி' என்பதுபோலக் கொள்க. " பாண்டிநாடே பழம்பதியாகவும்" என்று முன்னரும் அருளினர் (கீர்த்தி-118.).

360 தாதாடு பூஞ்சோலைத் தத்தாய் நமையாளும்
மாதாடும் பாகத்தன் வாழ்பதிஎன் — கோதாட்டிப்
பத்தரெல்லாம் பார்மேற் சிவபுரம்போற் கொண்டாடும்
உத்தர கோசமங்கை யூர். 3

361 செய்யவாய்ப் பைஞ்சிறகிற் செல்வீநம் சிந்தைசேர்
ஐயன் பெருந்துறையான் ஆறுரையாய் — தையலாய்
வான்வந்த சிந்தை மலங்கழுவ வந்திழியும்
ஆனந்தங் காண்உடையான் ஆறு. 4

362 கிஞ்சுகவாய் அஞ்சுகமே கேடில் பெருந்துறைக்கோன்
மஞ்சன் மருவும் மலைபகராய் — நெஞ்சத்
திருளகல வாள்வீசி இன்பமரு முத்தி
அருளுமலை என்பதுகாண் ஆய்ந்து. 5

---

360. தாது ஆடு - மகரந்தம் நிறைந்த, தத்தை - கிளி. பதி - ஊர். என் - எது; இது, 'மெய்யவற்குக் காட்டல்' என்னும் வினா. 'உத்தரகோச மங்கையே அவனது ஊர்' என்க. அதனை அறிந்து சொல், என்பது குறிப்பெச்சம்.

361. "சிறகின்" என, வருமொழி பெயராதவின், சாரியை நிற்க இரண்டாம் உருபு தொக்கது. "செல்வி" என்னும் பெயரின் இறுதி இகரம், விளியேற்றற்கண் நீண்டது, "செல்வீ, தையலாய்" என்றவை உயர்த்தற்கண் அஃறிணை உயர்திணையாயவாறு. வான் - உயர்வு. 'உயர்வு வரப்பெற்ற சிந்தை' என்றது, ஞானம் கைவரப்பெற்ற உள்ளத்தை. 'சிந்தையது மலத்தை' என்க. கழுவுதல் - பற்றறக்களைதல். "ஆனந்தம்மே ஆறு" என்றே முன்னரும் அருளிச்செய்தார் (கீர்த்தி - *106.*).

362. கிஞ்சுகம் - முள்முருக்கு; அஃது ஆகுபெயராய், அதன் பூவைக் குறித்தது. அம் சுகம் - அழகிய கிளி. மஞ்சன், 'மைந்தன்' என்பதன் போலி; 'வலிமையுடையவன்' என்பது பொருள். வாள் - ஒளி. 'இருள், ஒளி' என்பன முறையே, அஞ்ஞானத்தையும், ஞானத்தையும் உணர்த்தி நின்றன. "அருளும்" என்னும் பெயரெச்சத்திற்கு முடிபாகிய 'அருள்'

363 இப்பாடே வந்தியம்பு கூடுபுகல் என்கிளியே
ஒப்பாடாச் சீருடையான் ஊர்வதென்னே — எப்போதும்
தேன்புரையுஞ் சிந்தையராய்த் தெய்வப்பெண் ணேத்
வான்புரவி யூரும் மகிழ்ந்து. [திசைப்ப

364 கோற்றேன் மொழிக்கிள்ளாய் கோதில்பெருந்துறைக்கோன்
மாற்றுரை வெல்லும் படைபகராய் — ஏற்றார்
அழுக்கடையா நெஞ்சுருக மும்மலங்கள் பாயுங்
கழுக்கடைகாண் கைக்கொள் படை. 7

என்பது தொகுத்தலாயிற்று. ''இருள்கடிந் தருளிய இன்ப ஊர்தி - அருளிய பெருமை அருள் மலையாகவும்'' என்று முன்னர் அருளியவாறு அறிக (கீர்த்தி - 123, 24.). 'அருளே, அறிவரால் ஆராய்ந்து மலை எனப்படுவது' என்க. ''காண்'' என்றதனை ஈண்டு அசையாக்காது, 'மலை என்பதனை ஆய்ந்து காண்' என முடிப்பாரும் உளர்.

363. இப்பாடு - இவ்விடம். ''இப்பாடே வந்து இயம்பு'' என்றதனை இறுதியிற் கூட்டுக. கூடுபுகல் - கூட்டினுள் புகுந்து விடாதே. ஒப்பு ஆடா - உவமை சொல்ல ஒண்ணாத. ஆடுதல், சொல்லாடுதல். சீர் - புகழ். ''தேன்புரையும் சிந்தை'' என்றது, 'இன்பத்தையுடைய மனம்' என்றவாறு. 'பெண்கள்' என்பதன் இறுதிநிலை தொகுக்கப்பட்டது. 'புரவியை வானத்து ஊரும்' என்க. வானத்து ஊர்தல், வானகதியாகச் செலுத்துதல். அதனானே தெய்வ மகளிர் இன்புற்று ஏத்துவர் என்க. ''பரிமா வின்மிசைப் பயின்ற வண்ணமும்'' என முன்னரும் (கீர்த்தி, 116.) அருளிச்செய்தார்.

364. கோல் தேன் - கொம்புத் தேன். ஏற்றார் - ஏற்றுக் கொள்ளப்பட்டார்; ஆட்கொள்ளப்பட்டார். 'ஏற்றாரது நெஞ்சு உருக' என்க. 'அவரது மும்மலங்களின்மேல் பாயும்' என வேண்டுஞ் சொற்களை விரித்துரைக்க. கழுக்கடை - சூலம். ''கழுக்கடை தன்னைக் கைக்கொண் டருளியும்'' என்றே முன்னரும் (கீர்த்தி. 110.) அருளிச்செய்தார்.

365 இன்பால் மொழிக்கிள்ளாய் எங்கள் பெருந்துறைக்கோன்
முன்பால் முழங்கும் முரசியம்பாய் — அன்பாற்
பிறவிப் பகைகலங்கப் பேரின்பத் தோங்கும்
பருமிக்க நாதப் பறை. 8

366 ஆய மொழிக்கிள்ளாய் அள்ளூறும் அன்பர்பால்
மேய பெருந்துறையான் மெய்த்தாரென் — தீயவினை
நாளுமணு காவண்ணம் நாயேனை ஆளுடையான்
தாளிஅறு காம்உவந்த தார். 9

367 சோலைப் பசுங்கிளியே தூநீர்ப் பெருந்துறைக்கோன்
கோலம் பொலியுங் கொடிகூறாய் — சாலவும்
ஏதிலார் துண்ணென்ன மேல்விளங்கி ஏர்காட்டுங்
கோதிலா ஏறும் கொடி. 10

திருச்சிற்றம்பலம்

---

365. பால்மொழி - பால்போலும் சொல். முன்பால் - முன்பக்கத்தில். 'முற்பால்' என்பது, மெலிந்து நின்றது. 'முன்பு' எனப் பிரித்து, 'ஆல், அசைநிலை' என்றலுமாம். பேரின்பத்து - பேரின்பத்துடன்; என்றது, 'பேரின்பம் உண்டாக' என்றபடி. ஓங்கும் - மிக ஒலிக்கின்ற. பருமையை உணர்த்தும், 'பரு' என்னும் உரிச்சொல், இங்குப் பெருமைமேல் நின்றது. நாதம் - நாத தத்துவம். இஃது ஏனை எல்லாத் தத்துவங்களினும் பெரிதாதலை அறிந்துகொள்க. "நாதப் பெரும்பறை நவின்று கறங்கவும்" என முன்னரும் (கீர்த்தி - 108) அருளிச்செய்தார். இதன் ஈற்றடி எதுகை யின்றி வந்தது; இதனை, 'இன்னிசை வெண்பா' என்பர்.

366. ஆய - கற்றதனால் உளதாய. அள் ஊறும் அன்பர் - மிகச் சுரக்கின்ற அன்பினை உடையவர். மெய் - திருமேனி. 'அவன் உவந்த தார்' எனச் சுட்டுப் பெயர் வருவிக்க. முன்னர்க் (கீர்த்தி-113.) கழுநீர்மாலை கூறியதற்குக் காரணம், ஆண்டுக் காட்டப்பட்டது.

367. ஏதிலார் - பகைவர். 'சாலவும் துண்ணென்ன' என இயையும். துண்ணெனல் - மனம் நடுங்கல், ஏர் - அழகு. ஏறு - இடபம். 'கொடி ஏறும்' என்க. முன்னர் (கீர்த்தி - 104.) நீற்றுக் கொடி கூறியதற்கும் காரணம் ஆண்டுக் கூறப் பட்டது.

20. திருப்பள்ளி யெழுச்சி

[பள்ளி எழுச்சி - படுக்கையினின்றும் எழுதல். எழுச்சியை விளக்கும் பாடலை, 'எழுச்சி' என்றது ஆகுபெயர். 'துயிலும் அரசரை அவர் எழுதற்குரிய காலமாகிய வைகறைக்கண் சென்று, 'சூதர்' எனப்படும், நின்றேத்துந் தொழிலவர் அவரைப் புகழ்ந்து கூறி எழுப்புதலாகிய மரபு பற்றி, அவர் கூற்றுகப் பாடாண் திணைப்பாட்டு, புலவரால் பாடப்படும்' என்பதும், 'அங்ஙனம் பாடப்படும் அத்துறை, அத்திணையுள், 'துயிலெடை நிலை' எனப்படும்' என்பதும்,

" தாவில் நல்லிசை கருதிய கிடந்தோர்க்குச்
சூதர் ஏத்திய துயிலெடை நிலையும் "

என்பதனுன் (தொல் - பொருள் 88.) அறியப்படும். மக்கட் பாடாண் பகுதியாக வரும் அதனை அடிகள் இங்குக் கடவுட் பாடாண் பகுதியாக அருளிச்செய்தார் என்க. இங்குச் சூதர் நிலையில் நிற்பார் அடியவர்களே. இவ்வாற்ருல் இது, வைகறைப் பொழுதில் எந்தையார் திருநாமமாகிய நமச்சிவாய (திருமுறை - 6. 93. 10.) என்பதனைச் சொல்லி விழித்தெழுவார், பின்னர் ஒருதலையாக ஓதும் திருமுறையாயிற்று.

உறக்கமும், விழிப்பும் இல்லாது எஞ்ஞான்றும் ஒருநிலையே யுடைய இறைவனை இங்ஙனம் உறக்கத்தில் ஆழ்ந்து கண் விழியாதான்போலவைத்துப் பாடுதல் குற்றமாகாதோ எனின், ஆகாது; என்னையெனின், உலகத்துத் தலைவராயினுர்க்கு அவர் தம் தொண்டர் செய்யும் பணிவிடைகளை எல்லாம், இறைவற்குத் தொண்டராயினர், தாம் அவனிடத்துச் செய்து மகிழ விரும்பும் வேட்கை காரணமாகப் பாடுதலானும், அவர்தம் வேட்கை யுணர்ந்து இறைவனும் அவர்தம் செய்கைக்கு' உடம்பட்டு அருளுதலானும் என்க. இவ்வாறன்றி இதனைக் குற்றம் எனின், இறைவனைத் தூய்மையில்லாதான்போல வைத்து ஆனைந்தும், நீரும், பிறவும் ஆட்டுவித்தலும், அழகில்லாதான் போல மாலை முதலியவற்ருல் ஒப்பனை செய்வித்தலும், பசியுடையான்போல உணவூட்டுதலும், பிறவும் எல்லாம் குற்றமாய் ஒழியும்; அஃதின்மையால், இத்திருப்பள்ளியெழுச்சியும் அன்னதேயாம் என்க.

" என்னில் ஆகமம் இயம்பிய இறைவர், தாம் விரும்பும்
உண்மை யாவது பூசனை "

என உரைத்தருளினமையானும், (பெ. பு. திருக்குறிப்பு. 5.) பூசனையாவன இத் தொடக்கத்தனவன்றிப் பிறிதில்லையாகலானும், இவை இறைவற்கு உவப்பாவனவல்லது, குற்றமாதல் யாண்டையது என விடுக்க. இவற்றைப் பூசனை யென்னாது குற்றம் என்று இகழ்வோர், 'புறச்சமயிகள்' என்க. இதனானே, இவைதோர் வழிபாட்டுமுறை பற்றிப் பாடியருளியதன்றி, உண்மையாகவே, திருப்பெருந்துறையில் வந்து ஆட்கொண்டருளிய பெருமான் பள்ளிகொண்டிருந்த காலத்து அடிகள் ஏனைய அடியாரோடும் உடன் சென்று நின்றவிடத்துப் பாடியதாகாமையும் அறிக.

இனி, அகப்பாட்டுப் புறப்பாட்டுக்களிடை வேற்றுமை தெரியமாட்டாமையால், 'இத் திருவாசகம் முழுவதும் அகப்பாட்டே' எனத் திரியக்கொண்டு, யாண்டும் தம் மனம் சென்றவாறே உரைகூறுவார், இதனை, 'மேற்காட்டிய இலக்கணத்தை உடையது அன்று' எனவும், 'இதுவும் தலைவனிடத்துக் காதலுடைய தலைவியும், அவள்தன் தோழியும் முதலாயினரது கூற்றே' எனவும் கூறித் தம் கொள்கைக்கு மாறுவனவற்றையே தமக்கு மேற்கோளாக எடுத்துக்காட்டிப் பலபட உரைத்துப் போவர்; அவற்றை எல்லாம் ஈண்டு எடுத்துக்காட்டப்புகின், மிக விரியும் என்க,

திருக்கோத்தும்பி முதலாக, திருத்தசாங்கம் ஈறாக மகளிர் கூற்றாக வந்தன பலவற்றையும் முறைப்பட வைத்துக் கோத்து முடித்தமையின், 'சூதர்' என்னும் தொழிலவர் கூற்றாக வரும் இதனை இங்கு வைத்துக் கோத்தனர் என்க. துயிலெழுதல், அறியாமையின் நீங்கி அறிவு பெறுதலாதலின், இதற்கு, 'திரோதான சுத்தி' எனக் குறிப்புரைத்தனர் முன்னோர். இறைவனது சத்தி ஒன்றே, மலத்திற் கட்டுண்ட உயிர்களிடத்து அம்மலத்தின் ஆற்றலைத் தொழிற்படுத்தி அவைகளின் அறிவை மறைப்பதாயும், இம்மறைத்தல் தொழிலால் மலத்தினது சத்தி வலியிழந்து மெலியும் பக்குவகாலத்தில் உயிர்களின் அறிவை விளக்கும் சத்தியாயும் நிற்கும். அவ்விருநிலைகளுள், மறைக்கும் நிலையில் அது, 'திரோதான சத்தி' எனப் பெயர்பெறும். மலத்தைச்

செலுத்தி மறைப்பை உண்டாக்குதலால், இத்திரோதான சத்தி யும், 'ஒருமலம்' என்றும் சொல்லப்படும். அம் மறைப்பு நிலை நீங்குதலே, திரோதான மல நீக்கம். அந்நீக்கமே, இங்கு, 'திரோதான சுத்தி' என்றதன் பொருள் என்க.

இது, திருப்பெருந்துறையில் அருளிச்செய்யப்பட்டது என் பதே, பதிப்புக்களில் காணப்படுவது. 'அடிகள் எங்கிருப்பினும், தம் பணியைத் திருப்பெருந்துறையில் எழுந்தருளித் தம்மை ஆட் கொண்ட திருமேனியிடத்தே செய்யும் நினைவினராகலின், இதனுள் அவ்வாற்றானே, பலவிடத்தும் திருப்பெருந்துறை யுறைதலையே ஓதியருளினார்' என்றல் இழுக்காது. இது முழுதும், எண்சீரடி விருத்தத்தால் ஆயது. பள்ளியெழுச்சி பாடுதல், 'புறநீர்மை' என்னும் திறத்தினால் என்பது மரபாக லின், இதனை ஓதுவார் அத்திறத்தானே ஓதுப. 'பள்ளியெழுச்சி புறநீர்மையால் பாடப்படும்' என்பதனை, "பாண்வாய் வண்டு நோதிறம் பாட" (சிலப். அந்தி. 75.) என்பதில், "நோதிறம்" என்றதற்கு உரைக்கப்பட்ட உரைகளால் அறிக, இவ்வாற் றானே, இவை 'பண்ணத்தி' என்பதும் பெறப்படும். தாளத் தொடு கூட்டிப் பாடப்படாமையின், இவை இசைத்தமிழ் எனப்படாவாயின,]

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

368 போற்றிஎன் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்
டேற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாய்எனை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 1

---

368. முதல் - நிதி. "என்" என்றது, "முதல்" என்ற தனோடு இயைய, "வாழ்" என்றது இடைநிலையாய், ஏதுப் பொருண்மேல் வந்த வினைத்தொகைநிலைபட அதனோடு தொக்கது. இனி, "வாழ்" என்றதனை முதனிலைத் தொழிற்

369 அருணன்இந் திரன்திசை அணுகினன்; இருள்போய்
அகன்றது ; உதயநின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணல்அங் கண்ணாம்
திரள்நிரை அறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகட லேபள்ளி எழுந்தரு ளாயே. 2

பெயராகக் கொண்டு, 'வாழ்விற்கு' என உருபு விரித்தலுமாம். இப்பொருட்கு, முதல், 'காரணம்' என்னும் பொருளதாம். 'நின் பூங்கழற்கு இணையான துணைமலர்களைக் கையில் கொண்டு ஏற்றி' என்க. "துணை" என்றது கூட்டத்தை. "மலர்கள்" என்றது, பலவகை மலர்களையும். பொலிவு பற்றி எம்மலரும் இறைவனது திருவடிகளுக்கு ஒப்பாவனவாம். ஏற்றி - தூவி. மலரும் - வெளிப்படுகின்ற. 'மலரைக் கொடுத்து, நகையைப் பெறுவோம்' என்பது நயம். 'சேற்றின்கண் மலரும்' என இயையும். 'ஏற்றுக் கொடி, உயர் கொடி' எனத் தனித்தனி இயைக்க. 'முதலாகிய பொருளே, சிவபெருமானே, கொடி உடையாய், எனை உடையாய்,' எம்பெருமானே, போற்றி! (நீ எழுந்தருளினால் நாங்கள்) மலர்கொண்டு ஏற்றி, நகை கொண்டு நின் திருவடி தொழுகோம்; பள்ளி எழுந்தருளாய்' என வினைமுடிக்க. "போற்றி" என்றது, தலைவர்க்கு ஒரு காரியம் சொல்லுவார், முதற்கண் அவர்க்கு வாழ்த்தும், வணக்கமும் கூறுதலாகிய மரபுபற்றியாம். "எனை உடையாய்" என்றதனால், இஃது ஒருவர் கூற்றாகவே அருளிச்செய்யப்பட்டதாம்.

369. சூரிய உதயத்திற்கு முன்னர்த் தோன்றும் சிவந்த நிறத்தை, 'அருணன்' என்றும், 'அவன் சூரியனது தேரை ஓட்டுபவன்' என்றும், 'அவன் கால் இல்லாதவன்' என்றும் கூறுதல் புராண வழக்கு. "போய் அகன்றது" என்றது, ஒரு பொருட் பன்மொழி. "சூரியன்" என்றதனை, இறுதியொற்றுக் கெட்டு நின்ற, "உதயம்" என்றதன் பின்னர்க் கூட்டுக. 'முகத்தினது' என்பதில், சாரியை நிற்க, உருபு தொக்கது. ஒப்புப் பொருட்கண் வந்த, "கருணையின்" என்னும் இன்னுருபின் ஈறு திரிந்த றகரம், ஓசையின்பம் நோக்கி மெலிந்துநின்றது.

370 கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை யொளிஒளி உதயத்
தொருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யாவரும் அறிவரி யாய்எமக் கெளியாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 3

நயனக் கடிமலர் - உனது கண்போலும் விளக்கம் பொருந்திய தாமரை மலர். 'உதயஞ் செய்த சூரியன், நின் திருமுகத்தினது கருணையைப் போல, மேன்மேல் எழுந்தோறும் தாமரை மலர் மேலும் மேலும் மலர்தலைச் செய்ய' என்பது பொருள். அண்ணல் - தலைமையை யுடைய (அறுபதம்). முன்னர், 'கோத்தும்பீ' என்றது காண்க. இதனை விளியாக்கி, இறைவனைக் குறித்ததாக உரைப்பாரும் உளர். அங்கண் ஆம் - அவ்விடத்து அடைந்த. திரள் நிரை - திரண்ட வரிசைப்பட்ட. அறு பதம் - ஆறுகால்களை யுடையவை; வண்டுகள். இவ்வாறே, "அறுபதம் முரலும் வேணுபுரம்" எனத் திருஞான சம்பந்தரும் அருளிச்செய்தார் (திருவெழுகூற்றிருக்கை - 25.), அலைகடல் - அலையும் கடல்; இஃது, உவம ஆகுபெயர். 'புலரிக் காலமும் நீங்கி, அருணோதயமும், சூரியோதமும் ஆகித் தாமரை மலர்களும் மலர்ந்துவிட்டன; பெருமானே, பள்ளி எழுந்தருள்' என்பது இதன் திரண்ட பொருள்.

370. குருகுகள் - (பிற) பறவைகள். இயம்பின - ஒலித்தன. ஓவின - நீங்கின. தாரகை - விண்மீன். 'தாரகைகள் ஒளி நீங்கின' என உரைக்க. 'உதயத்து ஒளி ஒருப்படுகின்றது' என மாற்றிக்கொள்க. ஒருப்படுகின்றது - நிலத்தின்கண் வந்து பொருந்தாநின்றது. "ஒருப்படுகின்றது" என ஒருமையாற் கூறினமையின், "ஒளி" என்றதற்கு, 'கதிர்கள்' என்றும், "ஒருப்படுகின்றது" என்றதற்கு, 'ஒருங்கு திரண்டன' என்றும் உரைத்தல் கூடாமை யறிக.

371 இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 4

372 பூதங்கள் தோறும்நின் றாயெனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம்உனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்அரி யாய்,எங்கள் முன்வந்
தேதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 5

---

371. இதனால், வீணையும், யாழும் வேறுவேறு என்பது விளங்கும். "பண்ணொடியாழ் வீணை பயின்றாய் போற்றி". என்ற திருநாவுக்கரசர் திருமொழியும் காண்க. "இன்னிசை" என்றது, இரண்டையுங் குறித்தேயாம். இருக்கு - வேதம், தோத்திரம் - பிற பாட்டுக்கள். 'திருப்பதிகம்' என்னாது, பொதுப்பட, "தோத்திரம்" என்றமையால், இது, தேவாரத் திருமுறைகளைக் குறியாமை அறிக. துன்னிய - பிணைத்துக் கட்டிய. பிணை - மாலை. 'மலர்ப் பிணைக் கையினர்' என மாற்றுக. "ஒருபால்" என்றதனை, "தொழுகையர், அழுகையர்" என்பவற்றுக்கும் கூட்டுக. தொழுதல் - மார்பிற்கும், முகத்திற்கும் நேராகக் கைகுவித்துக் கும்பிடுதல். துவள்கை - மெலிதல்; இஃது அருள் பெருமையால் வருவது. ஒருபால் என்பவற்றின்பின்னர், 'நிற்கின்றனர்' என்பன, எஞ்சிநின்றன.

372. பின்னர், "புலவோர்" என்றலின், முதற்கண் 'பலரும்' என்பது வருவிக்கப்படும். இடைக்குறையாய் நின்ற, 'நின்னை' என்பதை முதலிற் கூட்டுக. "எனின்" என்றதன் பின், 'என்றல்' என்பது எஞ்சிநின்றது. "புலவோர்" என்றது,

373 பப்பற வீட்டிருந் துணரும்நின் அடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றார்;அணங் கின்மண வாளா
செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.   6

ஆடல் வல்லாரையும் குறித்தாதலின், வாளா, "ஆடுதல்" என்றார். "அல்லால்" இரண்டும், வினைக்குறிப்புச் செவ்வெண்ணாய் நின்றன. "உனைக் கண்டறிவாரை" என்றது, 'ஏனைப் பொருள்களைக் கண்டறிதல்போல, பாச அறிவு பசு அறிவுகளால் உன்னையும் கண்டறிவாரை' என்றபடி. 'இவ்வாறு சிந்தனைக்கும் அரியவனாய் இருப்பவனே, இருந்தும் எங்கள் முன்வந்து எம்மை ஆண்டு அருள்புரியும் எம்பெருமானே, பள்ளி எழுந்தருளாய்' என்க.

373. 'பரப்பு' என்பது இடைக் குறைந்து, 'பப்பு' என நின்றது. பரப்பு - பரத்தல்; விரிதல், இதற்கு வினைமுதலாகிய 'மனம்' என்பது வருவிக்க. 'மனம் பரப்பற' எனவே, 'குவிந்து ஒருவழிப்பட்டு' என்றதாயிற்று. வீடு - வீட்டுநிலை; என்றது, நிட்டையை. வந்து - பிறந்து. 'பிறந்து பந்தனை அறுத்தார்' என்றது, 'பிறப்பின் பயனைப் பெற்றுவிட்டார்' என்றவாறு. இதன்பின், 'அவ்வாறாயினும்' என்பது எஞ்சி நின்றது. மைப்பு - மைத்தல்; மைதீட்டப்படுதல். "மைப்புறு கண்ணியர்" என்றதன்பின், ஒடு உருபு விரிக்க. மானுடத்து இயல்பின் - மகளிர்மேல் நிகழும் மானுடரது இயல்பை உடையவராய்; என்றது, 'காமத்தை வெறுதார்போல' என்றவாறு. இன்னோரன்ன வழிபாடுகள் எல்லாம், இல்லறத்தைத் துறவாது அதனோடு கூடிநிற்பார்க்கே இயல்வனவாகலின், அவ்வாற்றான் வந்துநின்ற அடியார்களைக்கண்டு, அவரது உண்மை நிலையையும் உற்றுணர்ந்து அடிகள் இவ்வாறு அருளிச் செய்தார் என்க. செப்பு உறு - கிண்ணத்தின் தன்மையை எய்தும் (தாமரை மலர்கள்). மலரும் - அவ்வாற்றான் - மலர்கின்ற. இப்பிறப்பு - எடுத்துள்ள இவ்வுடம்பு. அதனை அறுத்துப்

374 அதுபழச் சுவையென அமுதென அறிதற்
 கரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு இவன்அவன் எனவே
 எங்களை ஆண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில்திரு வுத்தர கோச
 மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுஎமைப் பணிகொளு மாறது கேட்போம்
 எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 7

பரமுத்தியை அருளுதல் மேல் நிகழற்பாலதாகலின், "அருள் புரியும்" என எதிர்காலத்தாற் கூறியருளினார்.

374. முதற் பொருளை, 'அது' என்றல் வடமொழி வழக்கும், 'அவன்' என்றல் தமிழ் வழக்குமாதலின், 'முதற்பொருள் பழத்தின் சுவைபோல்வது என்றுதல், அமுதம் போல்வது என்றுதல், அறிதற்கு அரியது என்றுதல், அறிதற்கு எளியது என்றுதல் தேவரும் அறியாராக, யாங்கள் அம்முதல்வன் இவனே என்றும், அவன் பெற்றியும் இதுவே என்றும் இனிதுணர்ந்து உரைக்குமாறு, இந்நிலவுலகத்தின்கண்ணே எழுந்தருளிவந்து எங்களை ஆண்டுகொள்ளும், உத்தரகோசமங்கைக்கண் உள்ளவனே, திருப்பெருந்துறைத் தலைவனே, எம்பெருமானே, இன்று நீ எம்மைப் பணிகொள்ளுமாறு எதுவோ அதனைக்கேட்டு நாங்கள் மேற்கொள்வோம்; பள்ளி எழுந்தருள் என்பது இத்திருப்பாட்டின் பொருளாயிற்று.

"பழச்சுவையென" என்றது முதலிய நான்கும், 'கறுப்பென்றோ சிவப்பென்றோ அறியேன்' என்பதுபோல, இன்னதென ஒருவாற்றானும் அறியாமையைக் குறிக்கும் குறிப்பு மொழிகளாய் நின்றன. அதனால், "என" நான்கும் விகற்பப் பொருளவாயின. 'அறியாராக' என, ஆக்கம் வருவித்து உரைக்க. செய்யுட்கு ஏற்ப அருளிச் செய்தாராயினும், 'அவன் இவன்' என மாற்றி முன்னர் வைத்துரைத்தலும், 'இங்கெழுந்தருளி எங்களை ஆண்டுகொள்ளும்' என மாற்றி உரைத்தலுமே கருத்தாதல் அறிந்துகொள்க. 'அமரரும் அறியாராக இங்கு எழுந்தருளி எம்மை ஆண்டு கொள்ளும்' என்றது, அத்தகைய அவனது அருளின் பெருமையை விதந்தவாறு. இவ்வாறு

375 முந்திய முதல்நடு இறுதியு மானாய்
மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்
பந்தணை விரலியும் நீயும்நின் அடியார்
பழங்குடில் தொறும்எழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி
அந்தண னாவதுங் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே. 8

திருவருளின் சிறப்பை விதந்தோதி, 'எது எமைப் பணிகொளு மாறு அது கேட்போம்' என, அத் திருவருளின்வழி நிற்றலையே பொருளாக வைத்து அருளிச் செய்தமையின், அங்ஙனம் நிற்க விரும்புவார்க்கு இப்பகுதியுள் இத்திருப்பாட்டு இன்றியமையாச் சிறப்பிற்றாதலை ஓர்ந்துணர்ந்துகொள்க.

375. முந்திய முதல் - முத்தொழில்களுள் முற்பட்ட தோற்றம். உலகிற்கு, 'தோற்றம், நிலை, இறுதி' என்னும் முத்தொழிலையும் உளவாக்குதல் பற்றி இறைவனை அவையே யாக அருளிச்செய்தார். இதனானே, ஒருவனேயாய் நிற்கின்ற அவன், மூவராய் நிற்றலும் கூறியவாறாயிற்று. ஆகவே, "மூவரும் அறிகிலர்' எனப் பின்னர்க் கூறிய மூவர், அம் முத் தொழிலுள் ஒரோவொன்றைச்செய்யும் தொழிற்கடவுளராதல் இனிது விளங்கும். முத்தொழிலின் முதன்மையையும் ஒருங் குடைய முதல்வன் அருள்காரணமாக மூவராய் நிற்கும் நிலை களை, 'சம்பு பட்சம்' எனவும், புண்ணியங் காரணமாக முதற் கடவுளது தொழில்களுள் ஒரோவொன்றைப் பெற்றுநிற்கும் கடவுளர் பகுதியை, 'அணு பட்சம்' என்றும் ஆகமங்கள் தெரித்துக் கூறும். அதனால்,

"ஆதி - அரியாகிக் காப்பான் அயனாய்ப் படைப்பான்
அரனாய் அழிப்பவனும் தானே", (ஞானஉலா - 5.)

"விரன் அயன்அரி, வெற்பலர் நீர்,எரி பொன்எழிலார்
கார்,ஒண் கடுக்கை கமலம் துழாய்,விடை தொல்பறவை -
பேர்,ஒண் பதி,நிறம், தார்,இவர் ஊர்திவெவ் வேறென்பரால்,
ஆரும் அறியா வகைஎங்கள் ஈசர் பரிசுகளே"

(பொன்வண்ணத்தந்தாதி - 95.)

என்றாற்போலும் திருமொழிகள், சம்புபட்சம் பற்றி வந்தனவும்,

" திருமாலும் நான்முகனும் தேர்ந்துணரா தன்றங்
கருமா லுறஅழலாய் நின்ற — பெருமான் "

(ஞான உலா 1.)

என்றாற்போலும் திருமொழிகள் **அணு பட்சம்** பற்றி வந்தனவு மாதல் தெளிவாம்.

"மூவரும்" என்ற உம்மை, சிறப்பு. "அறிகிலர்" என்றதன்பின், 'எனின்' என்பது வருவித்து, 'உன்னை மூவர்தாமே அறியமாட்டார்எனின், மற்று யாவர் அறிய வல்லார்' என உரைக்க. இத்துணை அரியவனாகிய நீ, உன் அடியவரது எளிய குடில்தோறும் உன் தேவியோடும் சென்று வீற்றிருக்கின்றாய்' என்பார், "பந்தணை விரலியும்.........எழுந்தருளிய பரனே" என்று அருளினார். பந்து அணை விரலி - பந்தைப் பற்றி ஆடும் விரலை உடையவள். 'பந்து - கை' எனக் கொண்டு, அதன்கண் பொருந்திய விரல் என்று உரைப்பினுமாம். இவ்வாறு உரைப்பின், கையினது அழகைப் புகழ்ந்தவாறும். அடியார் பழங்குடில் தோறும் எழுந்தருளியிருத்தல், அங்கு அவர்கள் நாள்தோறும் வழிபடுமாறு திருவுருக்கொண்டு விளங்குதல். இவ்வுருவத்தை, '**ஆன்மார்த்த மூர்த்தி**' என ஆகமங்கள் கூறினும், இஃது அவ்வில்லத்துள்ளார் அனைவர்க்கும் அருள்புரிதற்கு எழுந்தருளிய மூர்த்தி என்பதே கருத்து என்க. இதனானே, 'என்றும் உள்ள மூர்த்தியாக எழுந்தருள்வித்துச் செய்யும் ஆன்மார்த்த பூசை, இல்லறத்தார்க்கும், மாணாக்கர் வழிபட இருக்கும் ஆசிரியர்க்குமே உரியது' என்பதும், 'ஏனையோர்க்கு அவ்வப்பொழுது அமைத்து வழிபட்டுப் பின் விடப்படும் திருவுருவத்திலும், திருக்கோயில்களில் விளங்கும் திருவுருவத்திலும் செய்யும் ஆன்மார்த்த பூசையே உரியது' என்பதும் பெறப்படும். இனி, 'பழங்குடில்தொறும்' எழுந்தருளுதல், விழாக் காலத்து' என்றும் சொல்லுப ; "எழுந்தருளிய" என இறந்த காலத்தாற் கூறினமையின், அது, பொருந்துமாறு இல்லை என்க. "பழங்குடில்தொறும்" என எஞ்சாது கொண்டு கூறினமையின், 'இது, சில திருவிளையாடல்களைக் குறிக்கும்' என்றலும் பொருந்தாமை அறிக.

திருப்பெருந்துறையில் இறைவன் குருந்தமர நிழலில் எழுந்தருளியிருந்து அடிகட்குக் காட்சி வழங்கிய இடத்தையே

376 விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொரு ளேயுன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாய்உல குக்குயி ரானாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 9

377 புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றோம்அவ மேஇந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்

அடிகள், ''திருப்பெருந்துறை உறைகோயில்'' என்று அருளினார்; இது, 'திருப்பெருந்துறைக்கோயில்' என்னாது, ''திருப்பெருந்துறை உறை கோயில்'' என்றதனானே பெறப்படும். 'திருப்பெருந்துறைக்கண் நீ எழுந்தருளியிருந்த கோயில்' என்பது இதன் பொருளாதல் வெளிப்படை. இவ்விடத்தையே பின்னர் அடிகள் கோயில் ஆக்கினார் என்க.

376. 'அருள்பெற மாட்டாமையேயன்றி அணுகவும் மாட்டார்' என்றமையின், ''நண்ணவும்'' என்ற உம்மை இழிவு சிறப்பு. விழுப்பொருள் - சிரிய பொருள். 'தொழும்பு' என்னும் மென்றொடர்க் குற்றுகரத்தின் மெல்லெழுத்து, வேற்றுமைப் புணர்ச்சிக்கண் வல்லொற்றாய்த் திரிந்தது. 'தொழும்பினை உடைய அடியோங்கள்' என்க. தொழும்பு - தொண்டு. ''வந்து'' என்னும் வினையெச்சம், 'வருதலால்' எனக் காரணப் பொருட்டாய் நின்றது. எனவே, 'வாழ்தற்பொருட்டு அடியோங்களை மண்ணகத்தே வரச்செய்தாய்' என்பது கருத்தாயிற்று. 'மண்ணுலகத்திலன்றி விண்ணுலகத்தில் ஞானங் கூடாது' என்பதனை அடிகள் யாண்டும் குறிப்பித்தல் அறிக. களி - களிப்பு. ''எண்'' என்னும் முதனிலைத் தொழிற்பெயர் ஆகுபெயராய், எண்ணுதற் கருவியாகிய மனத்தைக் குறித்தது.

377. பொருள்கோள்; 'திருப்பெருந்துறை உறைவாய், சிவன் உய்யக்கொள்கின்ற ஆறு இந்தப்பூமி; ஆதலின் புவனியில்

அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே. 10

திருச்சிற்றம்பலம்

போய்ப் பிறவாமையின், நாம் நாள் அவமே போக்குகின்றோம் என்று நோக்கித் திருமாலாம்.........எழுந்தருளாயே'

புவனி - புவனம்; என்றது, மண்ணுலகத்தை. 'இந்த' என்றது, அடிகள் தம் கூற்றாக அருளியது. இடத்தை, "ஆறு" என்றார், வாயிலாதல் பற்றி. அவர்தம் ஏக்கறவு மிகுதியை உணர்த்தற்கு, "விருப்பெய்தவும், ஆசைப்படவும்" எனத் தனி விதந்தோதியருளினார். அலர்ந்த - பரந்த; மெய்ம்மை - நிலைபேறு. 'கருணையொடு' என அடையாக்காது, "கருணையும்" என வேறு பொருளாக ஓதினார், அதன் அருமை புலப்படுத்தற்கு. அவனி - மண்ணுலகு. பாசத்தை அறுத்து ஞானத்தை எய்துவிக்கும் திறன் நோக்கி, "வல்லாய்" என்றும், ஞானத்தை எய்தியபின், இன்ப உருவாய் விளங்குதல் பற்றி, "ஆரமுதே" என்றும் அருளிச்செய்தார்.

மெய்த்தவ ருற்ற பெருந்துறை வித்தக ரைக்குறு கும்படி
இத்தகு நற்பொருள் கொண்டுநி ரிப்படி யிற்செலு மென்றலின்
அத்தகு புத்தி யொழிந்துயி ரற்புத முத்தி பெறும்படி
உய்த்துள சத்தி யுடன்பொரு வொத்தன னுத்தம பஞ்சவன். 30

பற்றிலர் பெற்ற சிவன்கழல் பற்றின ரைக்கலை வண்டமிழ்
உற்ற மலைக்கிறை வன்றனை யொக்க மதித்தருள் கொண்டலை
விற்றுவ சத்த னெடும்படை மிக்க புலிக்கொடி யன்படை
மற்றுள கொற்றவர் தம்படை வர்க்கமு முற்கொ டெழுந்தன. 31

உக்கிர நச்சுர கங்களி னுச்சி பனிப்ப வசைத்தடி
வைக்கு முரத்தன வெங்கய மைக்கிரி யொக்க மலிந்தன
பக்கமு முற்பிற குந்துடி பற்பல கொட்ட வியங்குவ
தக்கம னத்தில் விரைந்துள தத்து பரித்திரள் வந்தன. 32

— திருவாதவூரடிகள் புராணம்.



சிதம்பரம்

21. கோயில் மூத்த திருப்பதிகம்

['கோயில்' என்பது, தில்லைப் பொன்னம்பலமே என்பது நன்கறியப்பட்டது. இதன்மேல் அருளிச்செய்யப்பட்டமையின், இதுவும் அடுத்த திருப்பதிகமும், 'கோயில் திருப்பதிகம்' எனப் பெயர்பெற்றன. இவற்றுள், 'மூத்த திருப்பதிகம்' எனப்பட்டமையால், 'இது, முதற்கண் அருளிச்செய்யப்பட்டது' என்பது பெறுதும். 'பொன்னம்பலம்' என்பது இதன் கண் எல்லாத் திருப்பாட்டுக்களினும் எடுத்தோதப்பட்டிருத்த லும், இதனை அறிவுறுத்தும். முன்னர் வந்த சில திருப்பதிகங் களும், இனிவருகின்ற சில திருப்பதிகங்களும் அவற்றின்கண் அமைந்த வேறு வேறு சொல்லும் பொருளும் பற்றிப் பிற வாற்றாற் பெயர்பெற்றன ; இவை யிரண்டும் அவ்வாறின்றி ஒன்றில் 'பொன்னம்பலம்' என்பது யாண்டும் எடுத்தோதப் பட்டமையாலும், மற்றொன்றில் பலவகைப் பொருளும் கலந்து வருதலானும், 'கோயில்' திருப்பதிகம் என்றே பெயர் பெற லாயின.

'மூத்த திருப்பதிகம்' என்பதனுள், 'மூப்பு' என்பது, உயர்வு குறிக்கும் என்பர், மாதவச் சிவஞான யோகிகள் (சிவஞான சித்தி. சூ. 2. 9. உரை). இதன்கண் அடிகள், ஏனைய அடியார்களுடன் தாமும் சென்று சேர்ந்து இறையின் பத்தை நுகரும் பெரிய பேறு ஒன்றையே வற்புறுத்தி வேண்டி அருளிச் செய்திருத்தலின், ஏனைய திருப்பதிகங்களினும் இஃது உயர்வுடையது என்பது அவரது கருத்துப்போலும் !

திருவெம்பாவை முதலாகத் திருப்பள்ளி எழுச்சியீறாக வந்தவை, அடிகள் தம் கருத்தைப் பிறர் கூற்றாக வைத்துப் பிறிதோராற்றால் அருளிச்செய்தன ; இனி வருவன அனைத்தும் அடிகள் தம் கூற்றாக நேரே அருளிச்செய்தனவேயாம். அவற் றுள், கோயில் திருப்பதிகமாதல் பற்றி இவ்விரண்டனையும் முன்வைத்துக் கோத்தனர். இதுவும், அடுத்த திருப்பதிகமும் 'தில்லையில் அருளிச் செய்யப்பட்டன' என்பதே பதிப்புக்களில் காணப்படுவது.

இத் திருப்பதிகத்தின் முதலடி பற்றியே இதற்கு, 'அநாதி யாகிய சற்காரியம்' எனக் குறிப்புரைத்தனர் முன்னோர்.

இங்கு, 'சற்காரியம்' என்பது, அளவை முறையிற் சொல்லப் படும் சற்காரியம் அன்று; 'என்றும் உள்ள நல்ல செயல் - திருவருட்செயல்' என்பதேயாம். அச்செயலாவது இறைவன், சிவமும், சத்தியுமாய் நின்று உயிர்களோடு உடனாகி அவற்றை உய்வித்தல். இதன்கண் நான்காம் திருப்பாட்டுத் தவிர ஏனைய திருப்பாட்டுக்கள் யாவும் அறுசீரடி ஆசிரிய விருத்தமாவன. நான்காம் திருப்பாட்டு ஐஞ்சீரடி மயங்கிய விருத்தமாம். இத னுள்ளும், அடுத்த திருப்பதிகத்தினும் எல்லாத் திருப்பாட்டுக் களும் அந்தாதியாய் வருவன.]

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

378 உடையாள் உன்றன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்ப தானால் அடியேன்உன்
அடியார் நடுவு ளிருக்கும்
அருளைப் புரியாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே என்கருத்து
முடியும் வண்ணம் முன்னின்றே. 1

---

378. உடையாள் - எல்லாவற்றையும் தனக்கு அடிமை யாகவும், உடைமையாகவும் உடையவள்; இறைவி. அகத்தை "நடு" என்று அருளிச்செய்தார். 'அகம், புறம்' என்பன முறையே, வியாப்பிய நிலையையும், வியாபக நிலையையும் குறிக்கும். "உடையாள் உன்றன் நடுவிருக்கும்; உடையாள் நடுவுள் நீஇருத்தி" என்றது, 'சிவமும், சத்தியும் எவ்வாற்றானும் தம்முள் வேறல்ல' என்றற்கு. இதனை எடுத்தோதியது, இறைவன் பேரருளும், பேராற்றலும் உடையனாதலைக் குறிப்பித்தற்கு. "அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பதானால்" என்றது, பதிப்பொருள், எஞ்ஞான்றும் உயிரி னிடத்து நீங்காது நிற்றலைக் குறித்தபடி. இதனை எடுத்தோதி யது, அத்தன்மையனாகிய இறைவன் தமக்கு அருள்புரிதற்கு இயைபுண்மையைக் குறித்தற்பொருட்டாம். "இருப்பது"

என்பதன்பின் தொகுக்கப்பட்ட, 'மெய்ம்மை' என்பது, இவ் விருதிறனும், 'மெய்ம்மையானுல்' எனப் பின்னர் வருவதனை வற்புறுத்தற்கு ஏதுவாய் நின்றது. "அடியார்" என்றது, தமக்கு முன்னே, இறைவனை அடைந்தவர்களை. 'எம் முதல்' என இயையும். 'அவர்கட்கு மட்டும் அன்றி, எனக்கும் நீ தலைவன் ஆதலின், என்னையும் உன்பால் வருவித்துக்கொள்ளற் பாலை' என்பார், "எம் முதலே" என்று அழைத்தார். முடியா - அழியாத. 'என் இக்கருத்து' எனச் சுட்டு வருவித்து உரைக்க. முன்நிற்றலாவது, முடித்தலை மேற்கொண்டு நிற்றல்.

"முன்னவனே முன்னின்ருல் முடியாத பொருள்உளதோ"

என்றருளினுர், சேக்கிழார் நாயனுரும் (பெ. பு. மனு - 47.). அதனுள், 'பொருள்' என்றது, செயலை.

இத்திருப்பாட்டுள், முதல் மூன்று தொடர்களையும் திருவைந்தெழுத்தின் (பஞ்சாக்கரத்தின்) பேதங்களைக் குறிக்கும் குழூஉக்குறியாக ஆள்வாரும் உளர். அவற்றுள் முதல் இரண்டு தொடர்களும், திருவைந்தெழுத்துள் சிவத்தைக் குறிக்கும் சிகாரமும், சத்தியைக் குறிக்கும் வகாரமுமாகிய இரண்டெழுத்துக்களாலாகிய சொல்லைப் பலமுறை சொல்லுங்கால் அமையும் நிலையைக் குறித்தற்கும், மூன்ருவது தொடர், அவ்விரண்டு எழுத்துக்களுடன், ஆன்மாவைக் குறிக்கும் யகாரத்தையும் உடன் சேர்த்துப் பலமுறை கூறுங்கால் அமையும் முறையைக் குறித்தற்கும் ஏற்புடையவாதல் அறிக. இனி, 'சிவம், சத்தி, ஆன்மா' என்னும் மூன்றையும் குறிக்கும் சிகார வகார யகாரங்கட்குப் பின்னர் முதல் இரண்டெழுத்தைப் பின்முன்னுக மாறி வகார சிகாரங்களாக வைத்து ஒரு தொடராகக் கூறும் முறையும் உண்டு. அது, முதலிலும், முடிவிலும் சிவத்தைக் குறிக்கும் சிகாரத்தைக் கொண்டு நிற்றலால், 'இருதலை மாணிக்கம்' என்றும், அதனுள் உள்ள எழுத்துக்களை முதற்ருெடங்கி இறுதிகாறும் வரச்சொல்லினும், இறுதி தொடங்கி முதல்காறும் வரச் சொல்லினும், 'விகடகவி' என்பதுபோல, வேறுபடாது ஒருவகையாகவே யமைதலின், அதனை, 'விகட கவி' என்றும் குறியீடாக வழங்குவர்; அம்முறை, இத்தொடர்களில் யாண்டும் அமைந்திலது என்க.

379 முன்னின் றாண்டாய் எனைமுன்னம்
யானும் அதுவே முயல்வுற்றுப்
பின்னின்றேவல் செய்கின்றேன்
பிற்பட் டொழிந்தேன் பெம்மானே
என்னின் றருளி வர நின்று
போந்தி டென்னு விடில்அடியார்
உன்னின் றிவனூர் என்னுரோ
பொன்னம் பலக்கூத் துகந்தானே. 2

380 உகந்தா னேஅன் புடைஅடிமைக்
குருகா உள்ளத் துணர்விலியேன்
சகந்தான் அறிய முறையிட்டால்
தக்க வாறன் றென்னுரோ

---

379. முன்னம் - முன்பு. 'முன்னம் என்னை முன்நின்று ஆண்டாய்' எனக் கூட்டுக. யானும் அதுவே முயல்வுற்று - நானும் அங்ஙனம் உனக்கு ஆளாய் இருக்கவே முயன்று. பின் நின்று - உன்வழி நின்று. ஏவல் செய்கின்றேன் - பணிபுரிந்து நிற்கின்றேன். இதன்பின், 'ஆயினும்' என்பது எஞ்சிநின்றது. பிற்பட்டொழிந்தேன் - உன் அடியாரோடு உடன்செல்லாமல் பின் தங்கிவிட்டேன். இதன்பின், 'ஆதலால்' என்பது வருவிக்க. என் - என்னை. 'வர இன்று அருளிநின்று' என மாற்றுக. வர - உன்பால் வருமாறு. அருளிநின்று - அருள்செய்து. அடியார் - முன்பு உன்னுடன் வந்த அடியார்கள். உன் நின்று - உன்பால் நின்று. இவன் ஆர் என்னுரோ - இப்பொழுது இங்கு வருவதற்கு இவன் என்ன உரிமையுடையவன் என்று சொல்ல மாட்டார்களோ. 'இங்கில்லை நீ, என்னை இங்கு விட்டுச் சென்றதனுல் உண்டாயது என்பது கருத்து. 'ஆதலின், என்னை விரைந்து உன்பால் அழைத்துக்கொள்ளவேண்டும்' என்பது குறிப் பெச்சம்.

380. 'அன்புடை அடிமைக்கு உகந்தானே' என மாற்றி, குவ்வுருபை, ஐயுருபாகத் திரிக்க. 'நான், உருகா உள்ளத்து உணர்விலியாதலின், என்னை நீ விடுத்துச் சென்றதைப் பலரிடமும் சொல்லி முறையிட்டால், அம்முறையீடு தகுதிவாய்ந்த முறையீடன்று என்றுதான் சொல்வார்கள்; ஆதலின், நீயே

மகந்தான் செய்து வழிவந்தார்
வாழ வாழ்ந்தாய் அடியேற்குன்
முகந்தான் தாரா விடின்முடிவேன்
பொன்னம் பலத்தெம் முழுமுதலே. 3

381 முழுமுத லேஐம் புலனுக்கும்
மூவர்க்கும் என்றனக்கும்
வழிமுத லேநின் பழவடி யார்திரள்
வான்குழுமிக்
கெழுமுத லேயருள் தந்திருக்க
இரங்குங் கொல்லோஎன்
றழுமது வேயன்றி மற்றென்
செய்கேன் பொன்னம் பலத்தரைசே. 4

என்னை மறித்து நோக்கி அழையாவிடில், யான், தீயில் வீழ்தல், திண்வரை பாய்தல் முதலியவற்றைச்செய்து உயிரைப்போக்கிக் கொள்வேன்' என்பது இங்குக் கூறப்பட்டதாம். 'தீயில் வீழ்தல் முதலியவற்றால் உயிரைத் துறத்தலும் ஒருவகை வேள்வியே' என்றும், 'அங்ஙனம் செய்து நின்பால் வந்தாரும் சிலர் உளர்' என்றும் கூறுவார், "மகந்தான் செய்து வழிவந்தார் வாழ வாழ்ந்தாய்" என்று அருளினார். 'எய்தவந்திலாதார் எரியிற் பாய்ந்து இறைவனை அடைந்தார்' என அடிகள் முன்னர் அருளிச்செய்தது காண்க (கீர்த்தி - 131.). முகம் தருதல் - புறங்காட்டாது திரும்பி நோக்குதல்.

381. மூவர் - 'அயன், அரி, அரன்' என்பவர். முன் நிற்கற்பாலதாய, 'மூவர்' என்பது. செய்யுள் நோக்கிப் பின் நின்றது. "ஐம்புலன்" என்றது, பூதம் முதலிய பிரகிருதி காரியம் அனைத்திற்கும் உபலக்கணமாய் நின்றது. "மூவர்க்கும் ஐம்புலனுக்கும் முதல்" என்றது, 'செய்வார்க்கும், செயப்படு பொருட்கும் முதல்' என்றபடி. "முழுமுதல்" என்றது இரட்டுற மொழிதலாய், 'பெருந்தலைவன்' எனவும், சிறந்த நிலைக்களம் (பரம ஆதாரம் - தாரகம்) எனவும், பொருள் தந்து, முறையே "மூவர்" என்றதனோடும், "ஐம்புலன்" என்றதனோடும் இயைந்தது. "என்றனக்கும் வழிமுதலே" என்றது,

382 அரைசே பொன்னம் பலத்தாடும்
அமுதே என்றுன் அருள்நோக்கி
இரைதேர் கொக்கொத் திரவுபகல்
ஏசற் றிருந்தே வேசற்றேன்
கரைசேர் அடியார் களிசிறப்பக்
காட்சி கொடுத்துன் னடியேன்பால்
பிரைசேர் பாலின் நெய்போலப்
பேசா திருந்தால் ஏசாரோ. 5

'எனக்கும், வழிவழியாய் நின்ற தலைவனே' என்றபடி. "என் குடிமுழுதாண்டு வாழ்வற வாழ்வித்த மருந்தே" என்பர் பின்னரும் (பிடித்த பத்து - 1.). 'திரளோடு' எனவும், 'வானின்கண்' எனவும், 'கெழுமுதற்கு' எனவும், உருபுகள் விரிக்க. கெழுமுதல் - கூடுதல். "தந்திருக்க" என்றதில் இரு, அசைநிலை. "மற்றென் செய்கேன்" என்றது, 'உன்னை வற்புறுத்துதற்கு என்ன உரிமை உடையேன்' என்றவாறு. இத்திருப்பாட்டுள் அடியும் சீரும் வேறுவேறாய் வந்து மயங்கின.

382. அருள் நோக்கி - அருள் வரும் என்று கருதி. "இரைதேர் கொக்கொத்து" என்றது, 'பதைப்பின்றி அடங்கி இருந்து' என்றபடி. 'கொக்கொக்க கூம்பும் பருவத்து என்றவாறு, (குறள் - 490) பயன் கிடைக்கும் காலத்தை நோக்கியிருந்து அலுத்து விட்டேன்' என்றபடி. ஏசறுதல் - வருந்துதல். வேசறுதல் - இளைத்தல். வேசறுதலை இக்காலத்தார், 'வேசாறுதல்' என்ப. கரை - பிறவிக் கடலின் கரை; முத்தி. "பிரைசேர் பால்" என்றது, 'முதிராத தயிர்' என்றபடி. இது, பிரையிட்ட உடனே காணப்படும் நிலை. பிரையிடாத பாலில் நெய் வெளிப்படும் என நோக்கப்படாமையின் வாளா, 'பாலின் நெய்போல' என்னாது, இவ்வாறு அருளிச்செய்தார். ஆகவே, 'பிரையிட்டு அது தோய்ந்து முதிர்ந்து வெண்ணெய் வெளிப்படும் என நோக்கியிருப்பார்முன், அஃது அங்ஙனம் முதிராது, பிரையிட்ட நிலையிலே இருப்பது போல இருக்கின்றாய்' என்றதாயிற்று. ஒன்றும் செய்யாதிருத்தலை, 'பேசாதிருத்தல் - மௌனம் சாதித்தல்' என்றல் வழக்கு. 'அடியாரானுள் சிலருக்குக் காட்சி வழங்கிக் களிப்பையும், சிலருக்குப் பேசாதிருந்து துயரையும் தரின், நடுவுநிலையாளர் உன்னை ஏச மாட்டார்களோ' என்றபடி.

383 ஏசா நிற்பர் என்னைஉனக்
கடியான் என்று பிறரெல்லாம்
பேசா நிற்பர் யான்தானும்
பேண நிற்பேன் நின்னருளே
தேசா நேசர் சூழ்ந்திருக்குந்
திருவோ லக்கம் சேவிக்க
ஈசா பொன்னம் பலத்தாடும்
எந்தாய் இனித்தான் இரங்காயே. 6

384 இரங்கும் நமக்கம் பலக்கூத்தன்
என்றென் றேமாந் திருப்பேனை
அருங்கற் பனைகற் பித்தாண்டாய்
ஆள்வா ரிலிமா டாவேனோ
நெருங்கும் அடியார் களும்நியும்
நின்று நிலாவி விளையாடும்
மருங்கே சார்ந்து வரஎங்கள்
வாழ்வே வாவென் றருளாயே. 7

---

383. "ஏசாநிற்பர்" என்றது, எதிர்காலத்தில் நிகழ் காலம். "பேண" என்றது, 'செய்யா' என்னும் வினையெச்சம். "இனித்தான்" என்றதில், தான், அசைநிலை. திருவோலக்கம் - கொலு. பிறர் எல்லாம் - உலகத்தார் அனைவரும். "ஏசா நிற்பர்" என்றதற்குமுன், 'ஆதலின்' என்பது வருவித்துக் கூட்டி, அத்தொடரை, இரண்டாம் அடியின் இறுதிக்கண் வைத்து உரைக்க. தேசன் - ஒளியுடையவன். 'உலகத்தார் எல்லாம் என்னை உனக்கு அடியவன் என்றே சொல்லுவர்; யானும் உனது அருள் ஒன்றையே விரும்பி நிற்பேன்; ஆதலின், யான் உன்னை அடையாது அல்லல் உறின், யாவரும் இருவரையும் ஏசுவர்; அவ்வாறாகாமல் உன் திருவோலக்கம் சேவிக்க இப்பொழுதே இரங்கியருள்' என்பது இதன் திரண்டபொருள்.

384. பொருள்கோள்: 'எங்கள் வாழ்வே, (என்னை முன்பு) அருங்கற்பனை கற்பித்து ஆண்டாய்; (இப்பொழுது) ஆள்வார் இலிமாடு ஆவேனோ! ஏமாந்திருப்பேனை வா என்று அருளாய்'.

385 அருளா தொழிந்தால் அடியேனை
அஞ்சேல் என்பார் ஆர்இங்குப்
பொருளா என்னைப் புகுந்தாண்ட
பொன்னே பொன்னம் பலக்கூத்தா
மருளார் மனத்தோ டுனைப்பிரிந்து
வருந்து வேனை வாவென்றுன்
தெருளார் கூட்டங் காட்டாயேல்
செத்தே போனாற் சிரியாரோ. 8

ஏமாந்து - களிப்புக்கொண்டு. அரிய போதனை; அருங் கற்பனை - அறிதற்கரிய உண்மையை உரைத்தல். மாடு - செல்வம். செல்வம் பயன்படும் பொருளாயினும், அதற்கு உரிமை யுடையவர் அருகில் இல்லாதபொழுது அது பயனில்லாத வாறுபோல, என்னை உடையவனாகிய நீ என்னைப் புறக்கணித் திருப்பேன். நான் கெடுவேன்' என்றது இவ்வுவமையின் பொருள். பசுக்களை, 'மாடு' என வழங்குதல் உயர்ந்தோர் வழக்கிற் காணப்படாமையின், "மாடு" என்றதற்கு. 'பசு' என்று உரைத்தல் ஆகாது என்க. "ஆள்வார் இலி மாடு ஆவேனோ" என்றதில் ஆக்கம், 'உவமை குறித்தது' என்பர், மாதவச் சிவஞான யோகிகள் (சிவஞானபோதம்-சூ.7, அதி.3, சிவஞானசித்தி - சூ. 8.29.) 'ஏமாத்தல், ஏமாறுதல்' என்னும் சொற்களிடை வேறுபாடு அறியாதார், 'ஏமாத்தல்' என்பதற் கும், 'ஏமாறுதல்' என்பதன் பொருளே பொருளாக உரைப்பர்; அது பொருந்தாமையை, சான்றோர் செய்யுட்கள் நோக்கி அறிந்துகொள்க. 'ஏமாறுதல்' என்பது, 'ஏமம் மாறுதல்' என்பதன் மரூஉ. எனவே, இது, பிற்கால மரூஉ மொழிகளுள் ஒன்று என்க.

385. மருள் ஆர் மனம் - மயக்கம் பொருந்திய மனம். "தெருளார்" என்றது, 'தெளிவையுடைய அடியார்' என்னும் பொருட்டாய், "உன்" என்றதற்கு முடிபாயிற்று. "செத்தே போனல்" என்றது, அனுவாதமாக அருளிச்செய்ததாகலின். 'காட்டாயேல் செத்தேபோவேன்; அவ்வாறு போனல் சிரியாரோ' என்று உரை உரைக்கப்படும். "செத்தே" என்ற ஏகாரம், தேற்றம். பிராரத்த கன்ம முடிவின்கண் சூக்கும உடம்பு நீங்காது தூல உடம்பு மாத்திரை நீங்குதலே.

386 சிரிப்பார் களிப்பார் தேனிப்பார்
திரண்டு திரண்டுன் திருவார்த்தை
விரிப்பார் கேட்பார் மெச்சுவார்
வெவ்வே றிருந்துன் திருநாமந்
தரிப்பார் பொன்னம் பலத்தாடுந்
தலைவா என்பார் அவர்முன்னே
நரிப்பாய் நாயேன் இருப்பேனோ
நம்பி இனித்தான் நல்காயே. 9

'சாதல்' எனப்படும். இரண்டு உடம்பும் ஒருங்கு நீங்குதல், 'சாதல்' எனப்படாது; என்னையெனின், முன்னது ஒருபிறப்பை விடுத்து மற்றொரு பிறப்பிற் செல்வதேயாகலானும், பின்னது பிறவியிற் செல்லாது, வீடு பெறுதலேயாகலானும் என்க. எனவே, "சாவா வரம் பெறுதல்" என்பதற்கும், 'மீளப் பிறக்கும்நிலையில் உடம்பு நீங்கப் பெறாத வரம்' என்பதே கருத்தாவதன்றி, எப்பொழுதும் உடம்பொடு கூடியிருத்தல் என்பது கருத்தன்றாம். என்னை? அறிவுடையோர், யாதானும் ஒருகாரணம் பற்றிச் சிலநாள் மிகுதியாக உடம்பொடு நிற்க விரும்புதலன்றி, எஞ்ஞான்றும் உடம்பொடுகூடி நிற்க விரும்பா ராதலின். 'உடம்பு அருவருக்கத்தக்கதன்றி விரும்பத்தக்க பொருளன்று' என்பது மேல் இனிது விளக்கப்பட்டது. இவ் வாற்றால் அடிகள், 'செத்தே போவேன்' என்றது, 'நீ என்னைப் புறக்கணிப்பின், மீளப் பிறவியில் வீழ்வேன்; அதுகண்டு உன் அடியார்கள், அருள் பெற்ற பின்னரும் அதனைப் பேணாது பிறவியில் வீழ்ந்தான்; என்னே இவனது அறிவிருந்தவாறு என எள்ளி நகையாடுவாரல்லரோ' என்று அருளிச்செய்த வாறாம். இறைவனால் ஆட்கொள்ளப்பட்டார் பின்னர்ப் பிறவி யில் வீழ்தல் எஞ்ஞான்றும் இல்லையாயினும், அடிகளது வீடு பேற்று அவா, அவ்வாறு அவரை அஞ்சப்பண்ணியது என்க.


386. முன்னைத் திருப்பாட்டில் வந்ததனை இத்திருப்பாட் டில் வந்த, "உன் தெருளார்" என்பதனை இங்கும் உய்த்து, "திரண்டு திரண்டு" என்றதனை முதலில் வைத்துரைக்க. தேனிப்பார் - இன்புறுவார். இதனை, 'தியானிப்பு' என்பதன் மரூஉ என்பாரும் உளர். 'தியானித்தல்' என்பது, 'சானித்தல்' என வருவதனையே காண்கின்றோம். "ஒண்கருட சானத்தால்

387 நல்கா தொழியான் நமக்கென்றுன்
நாமம் பிதற்றி நயன நீர்
மல்கா வாழ்த்தா வாய்குழறு
வணங்கா மனத்தால் நினைந்துருகிப்
பல்கால் உன்னைப் பாவித்துப்
பரவிப் பொன்னம் பலமென்றே
ஒல்கா நிற்கும் உயிர்க்கிரங்கி
யருளாய் என்னை உடையானே. 10

திருச்சிற்றம்பலம்.

தீர்விடப்போல்", "கோதண்டம் சானிக்கில்" (சிவஞான போதம். சூ. 9. அதி. 2, 3.). வார்த்தை - புகழ். மெச்சுவார் - பாராட்டுவார். வெவ்வேறிருந்து - தனித்தனியே இருந்து. "நாமம்"; திருவைந்தெழுத்து, தரித்தல், நாவினும், மனத்தினும். நரிப்பாய் - துன்பம் உடையவனாய். இறை உலகத்தை அடைந்த அடியார்கள்தூய உடம்பு உடையராய் எங்கும் இயங்குவராதலின், என்னைக் கண்டு இரங்குவர் என்பார், "அவர்முன் நரிப்பாய் இருப்பேனோ" என்று அருளிச் செய்தார். நரிப்பு - துன்பத்தால் தாக்கப்படுதல். இது, 'நெரிப்பு' என்பதன் மரூஉப்போலும்! அன்றி ஒருதேய வழக்கெனினுமாம். ஓகாரம் இரக்கப்பொருட்டு. நல்காய்-இரங்காய்.

387. 'பொருளறிந்து நன்கு போற்றுது அறிந்த அளவில் எப்பொழுதும், எவ்விடத்தும் சொல்லுகின்றேன்' என்பார், "பிதற்றி" என்ருர். "மல்கா" முதலிய நான்கும், 'செய்யா' என்னும் வினையெச்சங்கள். பாவித்து - நினைத்து. பரவி - துதித்து. ஒல்காநிற்கும் - மெலிகின்ற. தம்மையே தமது எளிமையும் அயன்மையும் தோன்ற, 'உயிர்க்கு' எனத் திணையும், இடமும், வேருக அருளிச்செய்தார்.



தில்லைக்கூத்தன்

22. கோயில் திருப்பதிகம்

[இதுபற்றிய குறிப்புக்கள் முன்னைத் திருப்பதிகத்தின் முகத்தே கொடுக்கப்பட்டன. இதன்கண், அடிகளது அநுபவம் இனிது விளங்கி நிற்றல்பற்றி, இதற்கு 'அனுபோக இலக்கணம்' எனக் குறிப்புரைத்தனர் முன்னோர். இது 'தில்லையில் அருளிச்செய்யப்பட்டது' என்பதே பதிப்புக்களில் காணப்படுவது. இது, முழுவதும் எழுசீரடி விருத்தத்தால் ஆயது. இது, கோயில் திருப்பதிகமாகவும், இதனுள் எல்லாத் திருப்பாட்டுக்களிலும், "திருப்பெருந்துறையுறை சிவனே" என்றே அடிகள் அழைத்தருளிச்செய்தல் கருதத்தக்கது. 'கோயில் என்பது திருப்பெருந்துறையே' எனச் சாதிப்பாரும் உளர்.]

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

388 மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத் தமுதே
ஊறிநின் றென்னுள் எழுபரஞ் சோதி
உள்ளவா காணவந் தருளாய்
தேறலின் தெளிவே சிவபெரு மானே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த
இன்பமே என்னுடை அன்பே. 1

---

388. மாறிநின்று - தம்முள் ஒன்றோடு மற்றொன்று மாறுபட்டு நின்று; என்றது, 'ஒன்று வந்து பற்றும்பொழுது. மற்றொன்று அதனை விலக்கி வந்து இவ்வாறு இடையறாது சூழ்ந்து நின்று' என்றபடி. இதற்கு இவ்வாறன்றி, 'என்னோடு பகைத்து நின்று' என உரைப்பின், "மயக்கிடும்" எனவும் "வஞ்சம்" எனவும் வருவனவற்றாற் பெறப்படுவதற்கு வேறாய்ப் பெறப்படுவது ஒன்று இன்மை அறிக. வஞ்சம், அற்றம் பார்த்து வருதல். "ஒருவனை வஞ்சிப்பதோரும் அவா" (குறள் - 366) என்றதும் காண்க. "வழி" என்றது, பொறிகளை; "பொறிவாயில் ஐந்து" என்றது காண்க (குறள் - 6).

"அமுது" என்றது, அதன் இன்பம்போலும் இன்பத்தை. "அமுதே" என்ற ஏகாரம், பிரிநிலை. "ஊறிநின்று" என்றதனை, 'ஊறி நிற்க' எனத் திரிக்க. எழுதல் - தோன்றி வளர்தல். ஆசான் மூர்த்தியாய் வந்து ஆட்கொண்ட கோலம், இறைவனது இயற்கைக் கோலம் அன்றாதலின், இயற்கைக் கோலத்தில் காணுதலை, "உள்ளவா காணுதல்" என்றார், இக்காட்சி, சிவலோகத்தே காணப்படும்.

'சிவலோகம் அல்லது சிவபுரம்' என்பது, சுத்த தத்துவ புவனங்கள், அனைத்திற்கும் பெயர். இப்புவனங்கள் ஏனைய அசுத்த தத்துவ புவனங்கட்கு உள்ளீடாய் அவற்றோடு உடன் நிற்பனவும், அவை அனைத்திற்கும் மேலாய் அவற்றைக் கடந்து நிற்பனவும் என இரு கூறுபட்டு நிற்கும். அவ் இருகூற்றுள், அசுத்த தத்துவ புவனங்களோடு உடனாய் நிற்கும் சிவலோகம், '**பதமுத்தித் தானம்**' என்றும், அவற்றிக்கு அப்பாற்பட்டு நிற்கும் சிவலோகம், '**அபரமுத்தித் தானம்**' என்றும் சொல்லப் படும். அவற்றுள் பதமுத்தித்தானம், 'சரியை, கிரியை, யோகம்' என்னும் மூன்று நிலைகளின் நின்றோர் சென்று அடையும் இடமும், அபரமுத்தித்தானம், ஞானத்தில், 'கேட்டல், சிந்தித்தல், தெளிதல்' என்னும் நிலைகளில் நின்றோர் சென்று அடையும் இடமுமாம். நிட்டையை அடைந்து மீளாது நின்றோர், இவை. அனைத்தையும் கடந்து சிவனோடு இரண்டறக் கலப்பர்.

நிட்டையிலே நிலைத்து நில்லாது மீட்சி எய்துவோர், அபர முத்தித் தானத்திற் சென்று தடத்த சிவனை அடைந்து, அவனது அருள்வழியே பின்னர்ச் சொரூப சிவனை அடைவர், பதமுத்தித் தானத்தை அடைந்தோர் தாம் செய்த சரியை முதலியவாகிய தவத்தின் வன்மை மென்மைகட்கு ஏற்ப அங்கு நின்றே ஞானத்தை அடைந்து, அபரமுத்தி, பரமுத்திகளில் ஏற்ற பெற்றியாற் செல்லுதலும், மீள இந்நிலவுலகிற் பிறந்து ஞானத்தை அடைந்து, கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல் என்பவற்றால் பின்னர் அபரமுத்தி பரமுத்திகளை அவ்வாற்றான், அடைதலும் உடையராவர். அபரமுத்தித் தானத்தை அடைந்தோருள் அசுத்தவுலகை நோக்குவோர் அரியராகலின், அவர்க்குப் பிறப்பு உண்டாதல் மிகச் சிறு பான்மையே. 'அபர முத்தர்க்குப் பிறப்பில்லை' என்பதும்

பெரும்பான்மை பற்றியேயாம். ஆயினும் நீட்டை கூடாதவழி, அசுத்த உலகை நோக்கும் நோக்கு ஒழியாது ஆகலானும், அந் நோக்கினை, கேட்டல் முதலிய மூன்று ஞானங்களும் மெலிவித்த லும், கெடுத்தலும் பெரும்பான்மையாயினும், சிறுபான்மை அது தப்புதலும் கூடுமாகலின், பிறத்தல் அவர்க்கும் சிறு பான்மை உளதேயாம்.

'காண அருளாய்' என இயையும். வந்து - மீளத் தோன்றி, தேறல் - தேன். தெளிவு - வடித்தெடுத்தது. ஈறிலாப் பதங்கள் - அளவில்லாத உலகங்கள். "ஈறிலா" என்றதனை, இன்பத்திற்கு அடையாக்குவாரும் உளர். "யாவையும்" என்றதனால், அபர முத்தித்தானமாகிய சுத்த மாயா புவனங்களும் அடங்கின. 'இவை அனைத்தையும் கடந்த இன்பம்' என்றதனால், அது பரமுத்தி இன்பமாதல் வெளிப்படை. இவ்வின்பத்தைப் பயக்கும் அன்பு, 'காண்பான், காட்சி, காட்சிப்பொருள்' என்னும் வேற்றுமை தோன்றாது காட்சிப் பொருளாகிய சிவம் ஒன்றே தோன்ற நிற்கும் அதீத நிலைக்கண்ணதாகிய பேரன்பாகலின், அதனை இறைவனின் வேறாக அருளாது. "என்னுடை அன்பே" என, ஒன்றாகவே அருளிச்செய்தார். எனவே,

"அன்பு சிவம்இரண் டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே"

என்றருளிய அன்பும் (திருமந்திரம் - 270.) இதுவேயாதல் பெறப்பட்டது,

அடிகள் இறைவனை இவ்வாறு விளித்தமையால் அவர் விரும்பியது பரமுத்தி இன்பத்தையன்றி வேறொன்றையன்று என்பது தெள்ளிதாதலின், அவர் பலவிடத்தும் தமக்குத் தருமாறு வேண்டும் சிவலோகம் அல்லது சிவபுரம் என்பது, அப்ரமுத்தித் தானத்தையன்றிப் பதமுத்தித் தானத்தையன் றென்பது இனிது விளங்கும். அன்னதாயினும், அடிகள் பரமுத்தியை வேண்டாது, அபர முத்தியையே வேண்டுதல்

389 அன்பினால் அடியேன் ஆவியோ டாக்கை
ஆனந்த மாய்க்கசிந் துருக
என்பரம் அல்லா இன்னருள் தந்தாய்
யான்இதற் கிலன்ஓர் கைம்மாறு
முன்புமாய்ப் பின்பும் முழுதுமாய்ப் பரந்த
முத்தனே முடிவிலா முதலே
தென்பெருந் துறையாய் சிவபெரு மானே
சீருடைச் சிவபுரத் தரைசே. 2

390 அரைசனே அன்பர்க் கடியனே னுடைய
அப்பனே ஆவியோ டாக்கை
புரைபுரை கனியப் புகுந்துநின் றுருக்கிப்
பொய்யிருள் கடிந்தமெய்ச் சுடரே

என்னையெனின், திருப்பெருந்துறையில் தம்மோடு உடன் இருந்து அருள்பெற்ற அடியார்கள் பலரும் அடைந்தது அபரமுத்தியே என்னும் கருத்தினால், தமக்கும் அதுவே தரற்பாலது என்னும் உணர்வினாற்போலும் என்க. அபரமுத்தித் தானத்தில் அடையும் நிலைகள் வாளா, 'சாலோகம், சாமீபம், சாரூபம்' எனக் கூறப்படாது, 'சுத்த சாலோகம், சுத்த சாமீபம், சுத்த சாரூபம்' என வேறு வைத்துக் கூறப்படும்; அந்நிலையே அடிகளால் குறிப்பிடப்படுவது என்க. அதனை அடிகள் வேண்டுவதும் அவற்றில் உள்ள விருப்பத்தால் அன்று; அதனையடைந்துவிடின், பின்னர்ப் பிறப்பில்லையாய் ஒழியும் என்னும் துணிவினாலேயாம் என்க.

389. ஆக்கை (உடம்பு) உயிரின் வழியே நிற்பதாகலின், அதனை, "ஆவியோடு" என, உயிரொடு சார்த்திக் கூறினார். பரம் - தரம்; தகுதி. "முன்பு, பின்பு" என்றவை, காலப் பெயராய், அவற்றின் கண்ணவாகிய பொருளைக் குறித்தன. "பின்பும்" என்றதன்பின்னும், 'ஆய்' என்பது விரிக்க. இனி' முன்பும் பின்புமாய்' என மாறிக் கூட்டலும் ஒன்று. "முழுதும்", என்றது, இடம்பற்றி. "முன்புமாய்" முதலியவற்றை முதற்கண் கூட்டி உரைக்க.

390. 'அன்பர்க்கு அரைசனே' எனக் கூட்டுக. அரைசன்-அரசன்; போலி. 'காவல் குழவி கொள்பவரின் ஓம்பும்' (புறம் - 5.) அரசர்போல, இறைவன் தன் அன்பரை ஓம்பு'

திரைபொரா மன்னும் அமுதத்தெண் கடலே
திருப்பெருந் துறையுறை சிவனே
உரையுணர் விறந்துநின் றுணர்வதோர் உணர்வே
யானுன்னை உரைக்குமா றுணர்த்தே. 3

தலின், அவனே அவர்க்கு அரசன் என்று அருளினார். "உடைய" என்றது, ஆறும் வேற்றுமைப் பொருள் தருவதோர் இடைச்சொல்; அஃது இங்கு நான்காவதன் பொருட்கண் மயங்கி வந்தது. புரை - உள்ளறை. அஃது, ஆக்கையிடத்து தூல தேகத்தின்கண் உள்ள சத்த தாதுக்களையும், மற்றும், சூக்கும தேகம், பரதேகம் என்பவற்றையும், உயிரிடத்து, பாசஞான பசுஞான பதிஞானங்களையும் குறித்தற்பொருட்டு, அடுக்கி நின்றது. கனிய - இளகும்படி. பதிஞானத்தால் இறைவனை உணரும் பொழுதன்றியும், பாசஞானங்களால் உலகினை உணரும் பொழுதும், பசுஞானத்தால் தம்மை உணரும் பொழுதும் அன்பர்கட்கு இறையன்பே. இனி, "புரைபுரை" என்றதனை ஆக்கை ஒன்றிற்கே கொள்ளுதலுமாம். மிகுதலின், ஆவியும் புரைபுரை கனிவதாக அருளிச்செய்தார். 'இருள் - அறியாமை; ஆணவ மலம்' என்பதும், 'அது முத்திக் காலத்தில் சத்தி கெட்டு நிற்கும் இயல்புடையதாதலின் இப்பொருள்போல வைத்துப் பொய் எனப்பட்டது' என்பதும் சிவஞானபோதத்து ஆறும் சூத்திர மாபாடியத் தொடக்கத்துக் கூறப்பட்டமை காண்க. மெய்ச்சுடர் - அழிவில்லாத என்றும் நிலைபெற்று நிற்கும் ஒளி. 'பொராது' என்னும் எதிர்மறை வினையெச்சத்து ஈறு கெட்டது. மன்னுதல் - நிலைபெறுதல். "திரை பொரா மன்னும் அமுதத் தெண்கடல்" என்னும் இப்பொருள் உவமப் பெயர், ஆகுபெயராய் உவமிக்கப்படும் பொருளை உணர்த்திற்று. இறைவன் என்றும் ஒருபெற்றியனாய் நிற்றலைக் குறிக்க, "திரைபொரா மன்னும்" என்றும், இன்ப மயனாதலைக் குறிக்க, "அமுதம்" என்றும், அறிவு வடிவினனாதலைக் குறிக்க. "தெள்" என்றும் அடைபுணர்த்து அருளிச்செய்தார். எனவே, இம்மூன்று அடைகளானும் முறையே, 'சத்து, ஆனந்தம், சித்து' என்னும் இயல்புகள் குறிக்கப்பட்டவாறு அறிக. இது, மெய்ச் சுடராதலைப் பிறிதோராற்றான் இனிது விளக்கியவாறு.

391 உணர்ந்தமா முனிவர் உம்பரோ டொழிந்தார்
உணர்வுக்குந் தெரிவரும் பொருளே
இணங்கிலி எல்லா உயிர்கட்கும் உயிரே
எனைப்பிறப் பறுக்கும்எம் மருந்தே

'உரையுணர்வு' என்னும் உம்மைத் தொகை, "இறந்து" என்றதனோடு இரண்டாவதன் பொருள்படத் தொக்கது. 'இறைவன் வாக்குமனாதீதன்' என்பதில் 'வாக்கு' என்பது பாசஞானத்தையும், 'மனம்' என்பது பசுஞானத்தையுமே குறிக்கும் என்பது சிவஞானபோதத்து ஆறும் சூத்திரத்தின் இரண்டாம் அதிகரண மாபாடியத்தான் இனிது விளங்கிக் கிடப்பது. அதனால், இங்கு, "உரை" என்றது பாச ஞானத்தையும், "உணர்வு" என்றது பசுஞானத்தையுமாதல் தெளிவு. இறத்தல் - கடத்தல். இவ்விருஞானத்தானும் இறைவன் உணரப்படானாகலின், "**உரையுணர்வு இறந்து நின்று**" எனவும். இவற்றான் உணரப்படானாயினும், பதிஞானத்தால் உணரப் படுதலின், "**உணர்வது**" எனவும், அவன் இங்ஙனம் நிற்றல், சூக்கும சித்தாய் நிற்கும் தனது தனித் தன்மையாலாதலின், "**ஓர் உணர்வே**" என்றும் அருளிச்செய்தார். திருக்கோவையுள், (9) "**உணர்ந்தார்க்கு உணர்வரியோன்**" என்பதில், "**உணர்ந்தார்க்கு**" என்பதற்கு, 'அருள்நிலையில் நின்று வேறாக உணர்ந்தார்க்கு' என்பதும், "**உணர்வரியோன்**" என்பதற்கு, 'அங்ஙனம் வேறு நில்லாது அவரைத் தன் திருவடி வியாபகத் துள் அடக்கி ஆனந்தத்துள் திளைத்திருக்கச் செய்பவன்' என்பதுமே பொருளாகலின், அஃது இதனோடு மலையாமை அறிக. இத்திருக்கோவைப் பகுதிக்குப் பேராசிரியர் உரைத்த உரைக்கும் இதுவே கருத்தாதல் அறிந்துகொள்க. "உணர்ந் தார்க்கு "என்பதற்குப் பிறிதொரு பொருளும் அவர் இரண்டாவ தாகவே உரைப்பார். 'உரையுணர்வு இறந்தவனாதலின், உன்னை உரைக்குமாறு இல்லை' என்பார், "**யான் உன்னை உரைக்குமாறு உணர்த்து**" என்று அருளினார், எனவே, 'இயன்ற அளவில் உன்னைப் பாடுவேன்' என்றதாம்.

391. உணர்ந்த - கலைஞானத்தைப்பெற்ற. உம்பர்-தேவர். ஒழிந்தார் - ஏனையோர்; என்றது, அயன் மால் முதலியோரை. தேவர் பூதனுசரீரம் இன்றிப் பூதசார சரீரமே உடையராதலும்,

திணிந்ததோர் இருளில் தெளிந்ததூ வெளியே
திருப்பெருந் துறையுறை சிவனே
குணங்கள்தா மில்லா இன்பமே உன்னைக்
குறுகினேற் கினியென்ன குறையே. 4

அயன் மால் முதலியோர் காரணக் கடவுளராதலும் பற்றி, அவர் தம் "உணர்விற்கும் தெரிவரும் பொருளே" என எடுத்தோதினார். இணங்கிலி – நிகரில்லாதவனே; அண்மை விளி. 'இணங்கிலி' எனப் பாடம் ஓதுதலுமாம். "பிறப்பறுக்கும்" என்றது, 'ஆட்கொள்கின்ற' என்னும் பொருளது. பிறவி, நோயாகலின், 'அதற்கு மருந்தாய் இருப்பவனே' என்றார். திணிந்தது - செறிந்தது. ஓர் இருள் - பேர் இருள். தெளிந்த - இனிது விளங்கிய. வெளி - ஒளி. இஃது உவமையாகுபெயர். எனவே, 'செறிந்த இருளில் கிடந்து அலமருவோர்க்கு, அங்கு இனிது தோன்றிய ஒளிபோன்றவனே' என்பது பொருளாயிற்று. 'அறியாமையில் மூழ்கியிருந்த என்முன் நீ பொருக்கெனத் தோன்றி என்னை அறிவனாக்கினாய்' என்பதனை, இவ்வாறு அருளிச்செய்தார். குணங்கள் - முக் குணங்கள். இல்லா - கலவாத. முக் குணங்களுள் சாத்துவிகத்தால் தோன்றிப் பின் ஏனை இரண்டனாலும் வரும் துன்பத்தாலும் மயக்கத்தாலும் அழிவெய்தும் இன்பமன்றி, என்றும் நிலைபெற்று, துன்பம் மயக்கம் என்பவற்றோடு கலவாத பேரின்பமாகலின், "குணங்கள் தாம் இல்லா இன்பமே" என்றும் அருளினார். குறுகினேற்கு- அடைந்த எனக்கு. 'என்ன' எனத் திரிந்து நின்ற, 'எவன்' என்னும் வினாப் பெயர், இன்மை குறித்து நின்றது, "கற்றதனாலாய பயனென்கொல்" (குறள் - 2.) என்புழிப்போல. பொன்மலையைச் சார்ந்த காக்கையும் பொன்னிறத்ததாவது போல, ("கனக மலையருகே - போயின காக்கையும். அன்றே படைத்தது பொன்வண்ணமே" பொன்வண்ணத்தந்தாதி - 100.) உன்னை அடைந்தோரும் உன்னைப்போலவே குணங்கள் தாம் இல்லா இன்ப வடிவினராவராதலின், உன்னை அடைந்த எனக்கு இனிப் பெறக்கடவதாய் எஞ்சிநிற்கும் பொருள் யாது உளது என்பார், "உன்னைக் குறுகினேற்கு இனி என்ன குறை" என்று அருளினார்.

392 குறைவிலா நிறைவே கோதிலா அமுதே
ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே
சிறைபெறு நீர்போல் சிந்தைவாய்ப் பாயுந்
திருப்பெருந் துறையுறை சிவனே
இறைவனே நீயென் உடலிடங் கொண்டாய்
இனியுன்னை யென்னிரக் கேனே.

---

392. எவ்வாற்றானும் யாதொரு பொருளையும் வேண்டுந் தன்மை இல்லாத பேரின்பமயன் என்பதை நன்கு வலியுறுத்தற் பொருட்டு, 'நிறைவே' என்று போகாது, "**குறைவிலா நிறைவே**" என்று எதிர்மறை முகத்தானும் அருளினார். தீமை சிறிதும் இல்லாது நன்மையே வடிவாய பொருள் இறைவனை யன்றிப் பிறிதில்லாமை அறிக. இதுபற்றியே இறைவனுக்குரிய பெயர்கள் பலவற்றுள்ளும், '**சிவன்**' என்னும் பெயர் தலையாய தாயிற்று. இப்பெயர் பிறர் ஒருவருக்கும் பொருந்தாமையை, "**சிவன்எனும் நாமம் தனக்கே யுடைய செம் மேனியெம்மான்**" (திருமுறை - 4.112.9.) என்று எடுத்தோதியருளினார் நாவுக்கரசர். "**குறைவிலா நிறைவே**" என்னும் இவ்வரிய தொடரை ஆளுடைய நம்பிகளும் எடுத்தருளிச்செய்தல் (திருமுறை - 7. 70. 6.) அறிந்துகொள்ளத்தக்கது. கோது - பயன்படாத பகுதி; இஃது அமுதின்கண் இன்மையால், "கோதிலா அமுதே" என்றார். ஈறு - அழிவு. கொழுஞ் சுடர்க் குன்று - பேரொளி யுடைய மலை; இஃது ஆகுபெயராய், ஞானமே உருவாய் உள்ள இறைவனைக் குறித்தது. "மறை" என்றது கலை ஞானத்தை யும், "மறையின் பொருள்" என்றது அநுபவஞானத்தையுமாம். மன் - தலைவன். சிறை - அணை. "நீர்" என்றது, வெள்ளத்தை. தண்மையும் பெருமையும் பற்றிப் பேரின்ப வடிவினனாகிய இறை வனுக்கு வெள்ளநீர் உவமையாயிற்று. "சிந்தைவாய்" என்ற தில் வாய், ஏழனுருபு. "சிந்தை" என்றது, தெளிவுபெற்ற சிந்தையை என்பது, ஆற்றலான் விளங்கிற்று. "உடல்" என்றது உள்ளத்தை. "நிலாவாத புலால் உடம்பே புகுந்து நின்ற - கற்பகமே" என்று அருளிச்செய்தார் திருநாவுக்கரசரும் (திருமுறை - 6.95 4.) "இனி உன்னை என் இரக்கேன்"

393 இரந்திரந் துருக என்மனத் துள்ளே
எழுகின்ற சோதியே இமையோர்
சிரந்தனிற் பொலியுங் கமலச்சே வடியாய்
திருப்பெருந் துறையுறை சிவனே
நிரந்தஆ காயம் நீர்நிலம் தீகால்
ஆய்அவை அல்லையாய் ஆங்கே
கரந்ததோர் உருவே களித்தனன் உன்னைக்
கண்ணுறக் கண்டுகொண் டின்றே. 6

என்றது, 'இன்பமே வடிவான நீ, இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காது நின்றபின், உன்பால் யான் வேண்டிக் கொள்ளத்தக்கது யாதுளது' என்றபடி.

393. இரந்து இரந்து - முனைப்பு நீங்கி உன்னைப் பல்கா லும் வேண்டிநின்று. உருக - அன்பு செய்ய. "இரந்திரந்து" என்ற அடுக்கினால், "உருக" என்றதனையும் அடுக்காக வைத் துரைத்தல் பெறப்பட்டது. அடுக்குக்களில் முன்னது பன்மைப் பொருளிலும், பின்னது தொறுப்பொருளிலும் வந்தன. இவற்றால் இறைவனை அனுபவமாகப் பெறுமாறு அருளிச் செய்யப்பட்டது. "ஆரேனும் அன்புசெயின் அங்கே தலைப் படுங்காண் - ஆரேனும் காணா அரன்" என்ற திருக்களிற்றுப் படியை நோக்குக (15.). "இமையோர் சிரந்தனிற் பொலியும் சேவடியாய்" என்றதனால், அவர்க்கு ஒரோஒருகால் புறத்துக் காணப்படுவதன்றி, அகத்தே எஞ்ஞான்றும் நின்று நிலவும் அனு பவப் பொருளாகாமை பெறப்படும். நிரந்த - முறைப்பட்ட. இறுதிக்கண் நிற்றற்குரிய, "ஆகாயம்" என்பது, செய்யுள் நோக்கி முன் நின்றது. நீர், இரண்டாவதாகும். இறைவன் எல்லாப் பொருளிலும், கலப்பினால் அவையேயாயும், பொருள் தன்மையால் அவற்றின் வேறாகியும் நிற்றலின், 'ஐம்பூதங்களாய் அல்லையாய்' என்றும், 'இங்ஙனம் கலந்துநிற்பினும் ஒருவர்க்கும் தோன்றாதே நிற்கின்ற உன்னை நான் என் கண்ணாரக்கண்டு களித்தேன்' என்பார், "ஆங்கே.........இன்றே" என்றும் அருளிச்செய்தார். ஓர் உரு - ஒப்பற்ற பொருள்.

394 இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலால் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றும்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றும் நீ யல்லை அன்றியொன் றில்லை
யாருன்னை அறியகிற் பாரே. 7

---

394. "சென்று சென்று" என்பது முதலிய பகுதிகளை முதலிற் கூட்டி, 'சிவனே, ஒன்றும் நீயல்லை; அன்றி ஒன்றில்லை; ஆதலின், உன்னை அறியகிற்பார் யார்? ஆயினும், நீ இன்று எனக்கு அருளி என் உள்ளத்து நின்ற நின்தன்மையால், நீயலால் பிறிது இன்மையை யான் நினைப்பற நினைந்துநின்றேன்' என வினை முடிக்க.

இன்று - எனக்கு அருளும் காலம் எய்திய இந்நாளில். எனக்கு அருளி - என்மேல் கருணைகூர்ந்து. "இருள் கடிந்து" என்றதனை, "நின்ற" என்பதற்கு முன்னே கூட்டுக. "எழு கின்ற ஞாயிறு" என்றமையால், பொருட்கண்ணும், 'எழுந்து' என்பது பெறப்படும்.

முன்னைத் திருப்பாட்டில், இறைவன் தன் அடியார்களது உள்ளத்தில் தோன்றுகின்ற முறையை விளக்கியவாற்றிற் கேற்பவே இங்கும், 'ஞாயிறே' என்னாது, "எழுகின்ற ஞாயிறே போன்று" எனக் காலையில் முளைத்தெழுந்து மேலே செல்லு கின்ற கதிரவனையே உவமையாகக் கூறினார். "மன்னும் இருளை மதிதுரந்தவாறு" என்னும் சிவஞானபோதத்தையும், (சூ. 11. அதி. 2.) அதன் உரையையும் காண்க. 'உள்ளத்து எழுந்து நின்ற' என இயையும். "தன்மை" என்றது செயலை. 'தன் மையால்' என்னும் உருபு தொகுத்தலாயிற்று. நினைப்பு அற - கருவிகளின்வழியும், தற்போதத்தின்வழியும் உணர்தல் அற்றுப் போக. நினைந்தேன் - உனது திருவருளின் வழியே உணரப் பெற்றேன். பிறிது - வேறொருபொருள். மற்று, அசைநிலை. "இன்மை" என்றவிடத்து இரண்டாம் வேற்றுமை இறுதிக் கண் தொக்கது. 'நீயலால் பிறிது இன்மையை உணர்ந்தேன் -

என்றது, உன்னையன்றிப் பிறிதொருபொருளும் மெய்ப்பொருளாகாமையை உணர்ந்தேன்; அஃதாவது உண்மை ஞானத்தைப் பெற்றேன்' என்றவாறு. எனவே, "காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக்காலே" (திருமுறை - 6 - 95. 3.) என்றதுபோல, இதுவும், 'நீ கருணை கூர்ந்து என் உள்ளத்தில் தோன்றி அறியாமையைப் போக்கி நீங்காது நிலைபெற்றமையால், யான் நினது மெய்ம்மையை உணர்ந்தேனல்லது, வேறு எவ்வாற்றான் உணர்வேன்' என்று அருளிச்செய்ததாம், 'பிறிதொருபொருள் இல்லை' எனப் பொதுப்படக் கூறப்பட்டதாயினும், "பொருளல்லவற்றைப் பொருள்என் றுணரும் - மருள்" (குறள் - 351.) என்புழிப்போல, 'பிறிதொரு மெய்ப்பொருள்' என்று சிறப்பு வகையாகவே கொள்ளப்படும். அல்லாக்கால், "எனக்கு அருளி," "இருள் கடிந்து", "நின் தன்மையை நான் நினைந்தேன்" என்றற்றொடக்கத்துத் திருமொழிகள் பலவும் மாறுகொளக் கூறலாய் முடியும்.

சென்று சென்று - பாசக்கூட்டங்களினின்றும் நீங்கி நீங்கி; அடுக்கு, சிறிது சிறிதாக நீங்குதல்பற்றி வந்தது. "யாதனின் யாதனின் நீங்கியான்" என்றார் திருவள்ளுவ நாயனாரும் (குறள் - 341). 'தேய்ந்து தேய்ந்து அணுவாய் ஒன்றும்' என மாறிக்கூட்டுக தேய்வதும், அணுவாவதும், ஒன்றுவதும் ஆன்மாவே என்க. ஆன்மா நித்தப்பொருளாதலின், தேய்தல் முதலியன அதன் வியாபாரமாம். முத்தி நிலையில் ஆன்மா இறைவனைத்தவிர பிறிதொரு பொருளை அறிதலும், இச்சித்தலும், அனுபவித்தலும் இன்றி, இறைவனையே அறிந்து, இறைவனையே இச்சித்து, இறைவனையே அனுபவித்து நிற்குமாதலின், அவ்விடத்து அஃது உலகை மறந்திருத்தலேயன்றித் தன்னையே தான் மறந்து நிற்கும், அதனால், அந்நிலையில் அதற்கு இறை அனுபவம் ஒன்றைத் தவிர்த்து, ஏனையவியாபாரங்களுள் ஒன்றும் இல்லையாதல் அறிக. இந்நிலையில், "உயிர்தானும் சிவானுபவம் ஒன்றினுக்கும் உரித்தே" என்கின்றது சிவஞானசித்தி (சூ, 11-10.) இவ்வாறு ஆன்மா சிவனது திருவடி வியாபகத்துள் அடங்கித் தனித்த ஒரு முதலாய்க் காணப்படாது நிற்றலே ஆன்மா சிவத்தொடு ஒன்றுதல் அல்லது இரண்டறக் கலத்தல்' எனவும், 'இவ்வாறன்றி, ஆன்மா முத்தியில்தானே பிரமமாம் என்னும் ஏகான்ம வாதம் முதலியன பொருள்படுமாறில்லை'

எனவும் சித்தாந்த நூல்கள் பலவிடத்தும், பலபடியாக இனிது விளங்க விளக்குதலை அறிந்துகொள்க. "சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றும்" என்னும் தொடரை உமாபதிசிவனர், தமது சங்கற்ப நிராகரண நூலுள் சைவவாதி நிராகரணத்துள் எடுத்தோதினமையையும், அதுவே, 'பரம சித்தாந்தம்' எனச் சிவஞானபோதத்துப் பத்தாம் சூத்திர முதல் அதிகரண பாடியத்துள் கூறப்பட்டமையும் அவ்விடங் களிற் காண்க. இத்திருப்பாட்டுள் இங்ஙனம் பரம சித்தாந் தத்தை அருளிச்செய்தமையின், இதனை, 'திருவாசகத்தின் இருதயமான பாட்டு' என்பர் அறிஞர்.

"அணு" புலனுகாமைபற்றிக் கூறப்பட்ட உவமையாகு பெயர், சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தெய்ந்து ஒன்றும் நிலையை, திருவைந்தெழுத்தை மூன்றெழுத்தாகவும், பின்னர் இரண்டெழுத்தாகவும், பின்னர் ஓர் எழுத்தாகவும் கணிக்கும் முறையில் வைத்து உணருமாறு அருளப்பட்டது என்பதும் அப்பாடியத்தே கூறினமை காண்க. திருவைந் தெழுத்தை ஓர் எழுத்தாகக் கணித்தல் இங்குப் பிறர்மதம் பற்றிக் கூறப்பட்டது. "ஆம்" என்னும் பெயரெச்சம், "சிவன்" என்னும் செயப்படுபொருட் பெயர்கொண்டது. 'ஒன்றுதல்' என்பது, 'ஒற்றித்து நின்று உணர்தல்' என்னும் பொருட்டாக லின், அதற்குச் செயப்படுபொருள் உண்மை அறிக. எனவே, 'இவ்வாற்றானன்றி வேறாய் நின்று அறியப்படுவாயல்லை' என்பதை எடுத்தோதி, 'யார் உன்னை அறிய வல்லார்' என்ற தாயிற்று. 'யார்' என்னும் வினா, 'ஒருவரும் இலர்' எனப் பொருள்தந்ததாயினும், 'பெரிதும் அரியர்' என்றல் திருவுள்ள மாதல் அறிக. இங்ஙனங் கூறவே, 'பெரிதும் அரியவருள் நாயேனையும் ஒருவனுக்கிய நின் கருணையை என்னென்று புகழ் வேன்' என்பதும் பெறப்பட்டது. "ஒன்றும் நீயல்லை, அன்றி ஒன்று இல்லை" என்ற இரண்டிடத்தும், 'ஆயினும்' என்பது வருவித்து, 'நீ இவ்வுலகப் பொருள்களுள் ஒன்றும் அல்லையாயி னும், நீ இல்லாத பொருளே இல்லை; ஆயினும், உன்னைக் காண்பவர் எவரேனும் உளரோ' என உரைக்க.

395 பார்பதம் அண்டம் அனைத்துமாய் முளைத்துப்
பரந்ததோர் படரொளிப் பரப்பே
நீருறு தீயே நினைவதேல் அரிய
நின்மலா நின்னருள் வெள்ளச்
சீருறு சிந்தை எழுந்ததோர் தேனே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாருற வெனக்கிங் கார்அய லுள்ளார்
ஆனந்த மாக்குமென் சோதீ. 8

395, பார் - பூமி, "பதம்" என்றது, சுவர்க்கத்தை. 'தன் நிலையில் தான் ஒருவனேயாய் இருந்த இறைவன் நான் பலவாகுவேனாக எனச் சங்கற்பித்து, அனைத்தையும் உண்டாக்கி அவற்றினுள் நிறைந்து நின்றான்' என்பதே இறைவனது அருட் செயலாகச் சொல்லப்படுதலின், "பார்பதம் அண்டம் அனைத்துமாய் முளைத்துப் பரந்ததோர் படரொளிப் பரப்பே" என்று அருளினார். "தீயே" என்றதனால், "நீர்", வெந்நீர் என்பது வெளிப்படை. தீ, வெந்நீரில் பொருளாய்ப் புலப்பட்டு நில்லாது, ஆற்றல் வடிவமாய்ப் புலப்படாது யாண்டும் நிறைந்து வேறற நிற்றல்போல, இறைவன் எல்லாப் பொருளிலும் புலப்பட்டு நில்லாது சத்தி வடிவமாய் யாண்டும் நீக்கமற நிறைந்து நிற்றல் பற்றி, "நீருறு தீயே" என்றார்.

> "எங்கும் எவையும் எரியுறு நீர்போல் ஏகம்
> தங்குமவன் தானே தனி"

எனத் திருவருட் பயனும் கூறிற்று (3). நினைவதேல் - நினைவது என்றால், 'நின் அருள்வெள்ளமாகிய சீரிய பொருளின்கண் பொருந்திய சிந்தைக்கண் எழுந்த ஒப்பற்ற தேனே' என்க. இங்கு - இவ்வுலகத்தில், 'உறவினராதல் அயலவராதல் யார் உள்ளார்; ஒருவரும் இல்லை' எனவே, "நீயே எனக்கு எல்லாம்' என்பது குறிப்பெச்சமாயிற்று. ஆக்கும் - விளக்கின்ற.

396 சோதியாய்த் தோன்றும் உருவமே அருவாம்
ஒருவனே சொல்லுதற் கரிய
ஆதியே நடுவே அந்தமே பந்தம்
அறுக்கும் ஆனந்தமா கடலே
தீதிலா நன்மைத் திருவருட் குன்றே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாதுநீ போவதோர் வகையெனக் கருளாய்
வந்துநின் இணையடி தந்தே. 9

397 தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்!
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்;
யாதுநீ பெற்றதொன் றென்பால்?

---

396. இறைவன் கொள்ளுகின்ற திருமேனி ஒளிவடிவாய்த் தோன்றலின், "சோதியாய்த் தோன்றும் உருவமே" என்றார். அருவமே - அருவமாயும் நிற்பவனே. "ஆதி" முதலிய மூன்றும் ஒரு பொருள்மேற் பல பெயர்களாதலின், அவை அனைத்தும், "அரிய" என்றதற்கு முடிபாயின. அம்மூன்றும் அவற்றைச் செய்பவன்மேல்நின்றன. "தீதிலா நன்மைத் திருவருட்குன்றே" என்றது, மேல். (392), "குறைவிலா நிறைவே" என்றாற் போல்வது. 'வந்து நின் இணையடி தந்து நீ போவது ஓர்வகை யாது' எனக்கூட்டுக. இஃது, இறைவன் தம்மை இந்நிலவுலகில் விடுத்துப்போயினமை பற்றிய ஆற்றாமையால் அருளியது.

397. இறைவன் தன் அடியார்க்குத் தன்னையே பரிசாகத் தருதலின், "தந்தது உன்றன்னை" என்றார். இங்ஙனம் அடியார்களுக்குத் தன்னையே தருகின்ற இறைவன், அவர்கள்மேல் வைத்த கருணை காரணமாக, 'இவன் செய்தியெல்லாம் என் செய்தி' என்றும், 'செய்தது எனக்கு இவனுக்குச் செய்தது' என்றும் கொண்டு, 'பாதகத்தைச் செய்திடினும் அதனைப் பணியே யாக்கி' (சிவஞான சித்தி. சூ. 10-1.) அவர்க்கு வருவதொரு துன்பமும் இல்லாமல், அவர்தம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் தானே தன்னுடையனவாக ஏன்றுகொண்டு நிற்றலை ஈண்டு நயம்படக் கூறுதற் பொருட்டு, தன்னைத் தந்ததற்கு மாற்றாகத் தம்மைக் கொண்டதாக அருளிச்செய்தார்.

சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே!
எந்தையே! ஈசா! உடலிடங் கொண்டாய்;
யான்இதற் கிலன் ஓர்கைம் மாறே. 10

திருச்சிற்றம்பலம்

இறைவன் தன் அடியார்களை இங்ஙனம் யாதொரு தொடக்கும் உறாமல் காத்தலையே, "கிடைக்கத் தருமேநற் கேண்மையார்க் கல்லால் - எடுத்துச் சுமப்பானை இன்று" என்றது திருவருட் பயன் (65). "ஆர்கொலோ சதுரர்" என்றதனை, "என்பால்" என்றதன் பின்னர் எஞ்சி நின்ற, 'ஆதலின்' என்பதன் பின்னர்க் கூட்டுக. "நீ" எனவும் "என்பால்" எனவும் பின்னர் வருகின்றமையின், முன்னர். 'யான்' என்பதும். 'நின் பால்' என்பதும் வருவித்து, 'இப்பண்டமாற்றில் யான் நின்பால் அந்தம் ஒன்று இல்லா ஆனந்தம் பெற்றேன்; நீ என்பால் பெற்றது ஒன்று யாது? ஒன்றும் இல்லை; ஆதலின், நம்முள் சதுரர் யார்' என உரைக்கப்படுமாறு அறிக. 'நெல்லைக் கொடுத்துப் பதரைப்பெற்ற பித்தன்போல் ஆயினை நீ' எனப் பழிப்பதுபோலக்கூறி, இறைவனது கைம்மாறு கருதாப் பெருங் கருணைத் திறத்தைப் போற்றியவாறு, கொல், ஓ இரண்டும் அசைநிலைகள். சதுரர் - திறல் படைத்தவர். "சிந்தையே" என்றதற்கு, 'அடியவரது சிந்தையையே' எனவும், "உடல் இடம் கொண்டாய் என்றதற்கு, 'என் உடலையும் இடமாகக் கொண்டாய்' எனவும் உரைக்க. "நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்" (திருமுறை-5. 2. 1.) எனவும். "காலையும் மாலையும் கைதொழுவார் மனம் - ஆலயம் ஆரூர் அரனெறி யார்க்கே" (திருமுறை-4. 17. 8.) எனவும் அப்பரும் அருளிச்செய்தார். "உடலிடங் கொண்டாய்" என்பதுபற்றி மேலே (392) கூறப்பட்டவைகளைக் காண்க.

கொங்கணர் கலிங்கரொடு கொங்கர்துளு நாடர்
சிங்களர்க ளொட்டியர் தெலுங்கரொடு சீனர்
தங்குதிறன் மாளவர் மலாடர்தமி லொன்றாய்
எங்கணு மிடைந்தவர்க ளெண்ணமுடி வில்லார். 33

— திருவாதவூரடிகள் புராணம்.

23. செத்திலாப் பத்து

[இறைவனது பிரிவாற்றாமையால் அடிகள் தாம் இறந்து படாதிருந்ததன்மையை நினைந்து இரங்கிக்கூறும்பகுதியாதலின், இது, 'செத்திலாப் பத்து' எனப்பட்டது. இது, சொல்லொடு பொருட்கு உள்ள ஒற்றுமை பற்றி, செத்திலாமையாகிய பொருளைச் சொன்மேல் ஏற்றி, 'செத்திலாப் பத்து' என்றவாறு. "ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும்" (தொல்-சொல். 4.) என்றாற்போல. எனவே, 'செத்திலாமையைக் கூறும் பத்துப் பாடல்களின் தொகுதி' என்பது இதன் பொருளாயிற்று. இனி வருகின்ற பத்துக்களுள் ஏற்பனவற்றிற்கும் இம் முறை கொள்க. உடம்பொடு நின்றவிடத்தும் அடிகள் சிவானந்தத்தையே அனுபவித்திருப்பினும், அது, கருவி கரணங்களால் அளவுபட்டு நிற்றல்பற்றி, அங்ஙனம் அளவுபடாத பேரின்ப அனுபவ வேட்கையே இப்பகுதியின் உள்ளீடு என்னும் கருத்தால், இதற்கு, "சிவானந்தம் அளவறுக்கொணாமை" எனக் குறிப்புரைத்தனர் முன்னோர். இது, 'திருப்பெருந்துறையில் அருளியது' என்பதே, பதிப்புக்களில் காணப்படுவது. இப்பகுதி முழுதும் இடையிடையே சில சீர்கள் வேறுபட வந்த எண்சீரடி விருத்தத்தால் ஆயது.]

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

398 பொய்யனேன் அகம்நெகப் புகுந்தமு தூறும்
புதும லர்க்கழ லிணையடி பிரிந்துங்
கையனேன் இன்னுஞ் செத்திலேன் அந்தோ
விழித்திருந் துள்ளக் கருத்தினை இழந்தேன்
ஐயனே அரசே அருட்பெருங் கடலே
அத்த னேஅயன் மாற்கறி யொண்ணாச்
செய்யமே னியனே செய்வகை அறியேன்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. 1

---

398. பொய்யனேன் - உண்மை அன்பு (நிரம்பிய அன்பு) இல்லாதவன். புகுந்தும், அமுதம் ஊறுவதுபோல ஊறியதும்.

399 புற்று மாய்மர மாய்ப்புனல் காலே
உண்டி யாய்அண்ட வாணரும் பிறரும்
வற்றி யாரும்நின் மலரடி காணு
மன்ன என்னையோர் வார்த்தையுட் படுத்துப்
பற்றி னாய் பதையேன் மனம்மிக உருகேன்
பரிகி லேன்பரி யாவுடல் தன்னைச்
செற்றி லேன்இன் னுந் திரிதரு கின்றேன்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. 2

அகத்தேயாம். கையனேன் - சிறியனேன்; 'வஞ்சன்' எனப் பொருள்தரும் திசைச்சொல் வேறு. 'விழித்திருந்தும்' என்னும் சிறப்பும்மை தொகுத்தலாயிற்று. "கருத்து" என்றது, கருதப் பட்ட பொருள்மேல் நின்றது. 'தூங்குவோர் தாம் விரும்பிய பொருளை இழந்து ஏமாறுதல் இயல்பு. நான் அவ்வாறின்றி விழித்திருந்தே இழந்தேன்' எனத் தம் ஊழ்வலியை நினைந்து நொந்துகொண்டவாறு. 'தூங்குதல், விழித்தல்' என்பன, ஞானம்பெறுமையையும், பெற்றமையையும் குறித்துநின்றன. 'இனி அதனைப் பெறுதற்குச் செய்யும் வகையை அறிந்திலேன்' என்க.

399. தவம் செய்யுமிடத்துத் தம் உடம்பின்மேல் வளரும் புற்றுக்களுள்ளும், மரங்களுள்ளும் தம் உடம்பு மறைந்து கிடத்தல் பற்றி, அவரையே புற்றும், மரமும் ஆயினார்போலக் கூறினார். உம்மை, சிறப்பு. கால் - காற்று, "உண்டியாய்" என, செயப்படுபொருளின்தொழில் வினைமுதல்மேல் ஏற்றிக் கூறப்பட்டது. இவ்வாறன்றி, "ஆய்" என்றவற்றை எல்லாம் 'ஆக' எனத் திரிப்பினுமாம். வற்றி - உடல் மெலிந்து. 'வற்றியும்' என்னும் சிறப்பும்மை தொகுத்தல். ஓர் வார்த்தை- ஒரு தொடர்மொழி. அது, திருவைந்தெழுத்து மந்திரம். அதன் கருத்து, 'நீ என் அடியவன்' என்பது. 'நம்பியாரூரர் திரு மணத்தில் வல்வழக்கிட்டுச் சென்றபொழுது இறைவன் கூறிய தம் அந்த வார்த்தையே என்பது, "என் அடியான் - இந் நாவல்நகர் ஊரன்" எனவும், அது முற்றிலும் பொருள் பொதிந்த மெய்ம்மொழியே என்பது,

"தேவரையும் மாலயன் முதல்திருவின் மிக்கார்
யாவரையும் வேறடிமை யாஉடைய எம்மான்"

400 புலைய னேனையும் பொருளென நினைந்துன்
அருள்பு ரிந்தனை புரிதலுங் களித்துத்
தலையி னால்நடந் தேன்விடைப் பாகா
சங்க ராஎண்ணில் வானவர்க் கெல்லாம்
நிலைய னேஅலை நீர்விட முண்ட
நித்த னேஅடை யார்புர மெரித்த
சிலைய னேஎனைச் செத்திடப் பணியாய்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. 3

401 அன்ப ராகிமற் றருந்தவம் முயல்வார்
அயனும் மாலுமற் றழலுறு மெழுகாம்
என்ப ராய்நினை வார்எனைப் பலர்
நிற்க இங்கெனை எற்றினுக் காண்டாய்

எனவும் அருளிய சேக்கிழார் திருமொழிகளால் நன்கு தெளிவாதல் காண்க. ‘ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்து’ எனச் சிவஞான போதமும், (சூ. 8.) இதனையே குறிப்பிடுதலை அறிக. ‘இங்ஙனம் உணர்த்தாத முன்னர் பதைத்தலும், உருகலும் போல்வன இல்லாமை குற்றமன்று; உணர்த்திய பின்னரும், அவை இல்லாதிருக்கின்றேன்’ என இரங்கியவாறு. பரிதல் - அன்புமிகுதல். பரியா உடல் - அன்பிற்குரிய மெய்ப்பாடுகள் இல்லாத உடம்பு. செற்றிலேன் - அழித்திலேன்.

400. ‘‘தலையினால் நடந்தேன்’’ என்றது, அன்னதொரு செயலைச் செய்தமையைக் குறித்து, ஒப்புமை பற்றிவந்த இலக்கணைச் சொல். இதனை, ‘தலைகால் தெரியாமல் களிக்கின்றான்’ என்பர் உலகோர். ‘‘அருள்புரிந்தனை புரிதலும் களித்துத் தலையினால் நடந்தேன்’’ என்று அடிகள் அருளிச்செய்தமையால், அவர், ‘தாம் விரும்புங் காலத்துத் தம்மை இறைவன் தன்பால் வருவித்துக் கொள்வான்’ என்னும் துணிவினராய் இருந்தமையும், அதற்கு மாறாக அது நிகழ்தற்குக் காலம் பெரிதும் நீட்டித்தமையும் பெறப்படும். மேல் (143) ‘தருக்கித் தலையால் நடந்த வினைத்துணையேன்’ என்றது, வேறொரு கருத்துப் பற்றி என்க. நிலையன்-நிலைபெற்றைத்தருபவன்; பற்றுக்கோடாய் இருப்பவன்.

401. பொருள்கோள் : ‘தென்பராய்த் துறையாய்...... சிவனே’ என் சிந்தை வன்பராய் முருடொக்கும்; (என்கண்)

வன்ப ராய்முரு டொக்கும்என் சிந்தை
　　மரக்கண் என்செவி இரும்பினும் வலிது
தென்ப ராய்த்துறை யாய்சிவ லோகா
　　திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. 4

402 ஆட்டுத் தேவர்தம் விதியொழிந் தன்பால்
　　ஐயனே என்றுன் அருள்வழி யிருப்பேன்
நாட்டுத் தேவரும் நாடரும் பொருளே
　　நாத னேஉனைப் பிரிவுறு அருளைக்
காட்டித் தேவநின் கழலிணை காட்டிக்
　　காய மாயத்தைக் கழித்தருள் செய்யாய்
சேட்டைத் தேவர்தந் தேவர் பிரானே
　　திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. 5

மரக்கண்; என்செவி இரும்பினும் வலிது; (அங்ஙனமாக) அருந்தவம் முயல்வாராய அயனும் மாலும், அழலுறு மெழுகாம் என்பராய் நினைவார் மற்று எனைப் பலரும் நிற்க இங்கு எனை எற்றினுக்கு ஆண்டாய்? (ஆண்டதற்குக் காரணம் உண்டெனின், அக்காரணத்தானே இன்றும் என்னை நின்பால் வந்திடப்பணி.)'

"அழலுறு மெழுகாம் என்பராய்" என்றது, 'எலும்பும் உருகப்பெறும் நிலையினையுடையவராய்' என்றபடி. வன் பராய்-வலிய பராய் மரம். இது சிறிதும் செம்மையின்றி எங்கும் முடங்கியும், திருகியும் முருடுபட்டிருக்கும் என்பது அறியப்படுகின்றது. 'என்கண்' என்பது எஞ்சிநின்றது. "கண்ணிணையும் மரமாம் தீவினையினேற்கே" (25.) என முன்னே வந்தது காண்க. "மரக்கண்" என்றது மரத்தின்கண் உள்ள துளையை. பராய்த்துறை, ஒருதலம். "பராய்த்துறை மேவிய பரனே போற்றி" என்றார் முன்னரும் (போற்றித். 153.).

402. தேவர் தம் விதி - தேவரை வழிபட்டு அத்தேவராம் முறை; அவை சுவர்க்கபோகத்தைப் பயக்கும் காமிய வேள்விகள். அவற்றால் அப்பதவியை அடைந்தோரது இழிபினை உணர்த்துவார், "ஆட்டுத் தேவர்" என்று அருளினார். ஆட்டுத் தேவர் - ஆட்டினை உண்ணும் தேவர். ஆடு, வேள்வியில்

தரப்படுவது. "முன்னாள் தக்கன் வேள்வித் தகர்தின்று" என முன்னரும் அருளினார் (8). அருள்வழி இருத்தலே, "அன்பால்" என்றமையின், தேவர் விதிவழிச் செல்லுதலுக்கு, "ஆசையால்" என்பது வருவிக்கப்படும். எனவே, 'ஆசையால் கைக்கொள்ளப் படும் நாட்டுத் தேவர் தம் விதிகளை ஒழித்து, அன்பால், உன்னையே ஐயனே - யாவர்க்கும் முதல்வனே என்று அழைத்து உன் அருள்வழியே இருப்பேனாகிய எனக்கு, முன்போலப் பிரிவுறும் அருளைக் காட்டாமல் என்றும் பிரிவுறா அருளைக் காட்டிக் காயமாயத்தைக் கழித்தருள் செய்யாய்' என வேண்டியவாறாயிற்று.

"கழலிணை காட்டி" என்றது மீளவும் எதிர்ப்படுதலை. அதனால், அதனை, அருளைக் காட்டுதலுக்கு முற்பட வைத்துரைக்க. காய மாயம் - உடம்பாகிய இவ் அழிபொருளை. கழித்தருள் செய்யாய் - விரைவில் நீக்கியருள்.

நாட்டுத் தேவர் - நிலத் தேவர்; பூசுரர். "மண்மேல் தேவர் என்றே இறுமாந்து" என முன்னரும் கூறினார் (8). காமியங்கருதி அவரையே தெய்வமாக மதிக்கும் உலகினர் கருத்துப் பற்றி, "நாட்டுத் தேவரும்" எனச் சிறப்பும்மை கொடுத்து, நாட்டுத்தேவர் தம் விதிவழியன்றிப் பிறிதொன்றை அறியாராகிய அவர், "ஆவ எந்தாய் என்று அவிதாவிடும் நம்மவராகிய அவரையே எம்பிரானென்றும் தேவர் என, ஒருங்கு வைத்தெண்ணி உண்மை உணர்ந்தாராக இறுமாந்து ஒழிதலன்றிச் சிவபிரானைப் பொதுநீக்கி அறியும்பேறு சிறிதேனும் இலராதல்பற்றி, "நாட்டுத் தேவரும் நாடரும் பொருளே" என்றும் அருளிச்செய்தார். சேட்டைத் தேவர் - தொழிற்படும் தேவர். இவரை, "பிரதி தேவர்" என்பர். அவர்தம் தேவர். அதிதேவர்; இவர் தம் பிரதி தேவரைத் தொழிற்படுத்துவோர். மால் அயன் என்போரும் இவருள் அடங்குவர். சிவபெருமானை, 'இவர் அனைவர்க்கும் பிரானே' என்று அழைத்து இன்புறுகின்றார் அடிகள். "தேவர்பிரானே" எனப் பொதுப்பட அருளிப்போகாது, "சேட்டைத் தேவர் தம் தேவர்பிரானே." என வகுத்தோதியருளினார், 'பெருந்தேவர் எனப்படுவாரது இன்பமெல்லாம், தம்கீழ்ச் சிலரைத் தொழிற்படுத்தி அதனால் மகிழும் சிறிய இன்பமே' என்பது விளங்குதற் பொருட்டு.

403 அறுக்கி லேன்உடல் துணிபடத் தீப்புக்
கார்கி லேன்திரு வருள்வகை யறியேன்
பொறுக்கி லேன்உடல் போக்கிடங் காணேன்
போற்றி போற்றியென் போர்விடைப் பாகா
இறக்கி லேன்உனைப் பிரிந்தினி திருக்க
என்செய் கேன்இது செய்கஎன் றருளாய்
சிறைக்க ணேபுனல் நிலவிய வயல்சூழ்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. 6

404 மாய னேமறி கடல்விடம் உண்ட
வான வாமணி கண்டத்தெம் அமுதே
நாயி னேன்உனை நினையவும் மாட்டேன்
நமச்சி வாயஎன் றுன்னடி பணியாப்
பேய னாகிலும் பெருநெறி காட்டாய்
பிறைகு லாஞ்சடைப் பிஞ்ஞக னேயோ
சேய னாகிநின் றலறுவ தழகோ
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. 7

இவரைத்தான், 'தேவர்' என எம்பிரானொடும் எண்ணித் தாமும் மயக்கத்தில் ஆழ்ந்து, பிறரையும் மயக்கத்தில் ஆழ்த்தி யொழிகின்றது வேதியர் குழாம் என்றற்கே, "நாட்டுத்தேவரும் நாடரும் பொருளே" என முற்பட அருளிச்செய்தார். இத் திருப்பாட்டுள், "தேவர்" என வந்தன பலவற்றிற்குப் பலரும் பலப்பலவாறு உரைகாண்பர் ; அவற்றையெல்லாம் அவரவர் உரையிற் காண்க.

403, 'உடலைத் துணிபட அறுக்கிலேன்' என இயைக்க. ஆர்கிலேன் - நிறைவு பெறமாட்டேன். 'திருவருளுக்கு வகை அறியேன்' என உருபு விரித்துரைக்க. 'உடலைப் பொறுக் கிலேன் ; உடல் போக்கிடங் காணேன் என்க. போக்கு இடம்- போதற்கு வழி. சிறைக்கண் - வரம்பின்மீது.

404. மாயனே - மாயம்செய்ய வல்லவனே ; என்றது. கண்முன் தோன்றி மறைந்தருளி மீண்டும் தோன்றாதிருந்தமை பற்றி. பெருநெறி - வீட்டையும் வழி. சேயன் - தூரத்தில் உள்ளவன்.

405 போது சேரயன் பொருகடற் கிடந்தோன்
புரந்த ராதிகள் நிற்கமற் றென்னைக்
கோது மாட்டி நின் குரைகழல் காட்டிக்
குறிக்கொள் கென்று நின் தொண்டரிற் கூட்டாய்
யாது செய்வதென் றிருந்தனன் மருந்தே
அடிய னேன்இடர்ப் படுவதும் இனிதோ
சீத வார்புனல் நிலவிய வயல்சூழ்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. 8

406 ஞாலம் இந்திரன் நான்முகன் வானவர்
நிற்க மற்றெனை நயந்தினி தாண்டாய்
காலன் ஆர்உயிர் கொண்டபூங் கழலாய்
கங்கை யாய்அங்கி தங்கிய கையாய்
மாலும் ஓலமிட் டலறும்அம் மலர்க்கே
மரக்க ணேனையும் வந்திடப் பணியாய்
சேலும் நீலமும் நிலவிய வயல்சூழ்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. 9

---

405. 'அயன் முதலியோர் நிற்க என்னைக் கோது மாட்டியவனே' என்க. கோது மாட்டுதல் - குற்றங்களைந்து ஆட்கொள்ளுதல். 'குறிக்கொள்க' என்பது, தொண்டருக்கு இடும் ஆணை. இருந்தேன் - திகைத்திருக்கின்றேன். மருந்தே - அமுதமே. 'கோதுமாட்டியவனே' மருந்தே, சிவனே, யான் யாது செய்வது என்று இருந்தனன்; உன் அடியேன் இவ்வாறு இடருள் அகப்பட்டுக்கிடத்தல் உனக்கு இன்பம் தருவதோ! நின் தொண்டரிற் கூட்டாய்' என வினைமுடிவு செய்க.

406. ஞாலம் - நிலவுலகத்துப் பெரியோர். 'எனை நயந்தினி தாண்டாய்; ஆதலின், மாலும் ஓலம் இட்டு அலறும் அத்தகைய நின்மலர் போலும் திருவடி நிழற்கண்ணே, மரத்தினது கண்போன்று அன்புநீர் மல்காத கண்களையுடைய என்னையும் வருமாறு பணித்தருள்: (விட்டிடாதே)' என முடிக்க. நீலம் - நீலப் பூ; குவளை மலர்.

407 அளித்து வந்தெனக் காவஎன் றருளி
அச்சந் தீர்த்தநின் அருட்பெருங் கடலில்
திளைத்துந் தேக்கியும் பருகியும் உருகேன்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே
வளைக்கை யானொடு மலரவன் அறியா
வான வாமலை மாதொரு பாகா
களிப்பெ லாம்மிகக் கலங்கிடு கின்றேன்
கயிலை மாமலை மேவிய கடலே

திருச்சிற்றம்பலம்.

---

407. அளித்து - என்மேல் இரக்கங்கொண்டு. 'ஆவ' என்னும் இரக்கச்சொல், 'அஞ்சேல்' என அபயமளித்தலைக் குறித்தது. திளைத்தல் - மூழ்கி ஆடுதல். தேக்குதல் - உண்டு தேக்கெறிதல். உருகுதல், இங்கு, 'இன்புறுதல்' என்னும் பொருளது. 'நீ இரங்கிவந்து அருள்செய்தும், உனது பேரின் பத்தினை வேண்டியவாறு நுகரும் பேறு பெற்றிலேன்' என்றபடி. இத்தொடரைச் சிறப்பாகக் கொண்டே, இப்பகுதிக்கு, 'சிவானந்தம் அளவறுக்கொணுமை' என்ற குறிப்பினைக் கூறினர் முன்னோர் என்க. வளை - சங்கு. "களிப்பெலாம்" என்ற எழுவாய்க்கு, 'கெட' என்னும் பயனிலை எஞ்சிநின்றது. களிப்பு, இறைவன் கடிதே தம்மைத் தன் திருவடிக்கீழ்ச் சேர்த்துக்கொள்வான் என்னும் துணிவினுல் நிகழ்ந்தது.

இத்திற மெழுந்தபடை யெங்கணுநெ ருங்கத்
தத்துபரி மீதுள தமிழ்க்கவிஞர் சூழச்
சித்திர மடந்தையர் திரண்டிரும ருங்கும்
மொய்த்துவர வீணைகுழன் முன்னரிசை கொள்ள. 34

கட்டுமள கத்தினர் கனத்துளத னத்தர்
பட்டுடை மருங்கினர் பனிக்கவரி வீச
வட்டமதி வெண்குடை வயங்கமுர செங்குங்
கொட்டவுயர் காளமொடு கோடுகள்க றங்க. 35

— திருவாதவூரடிகள் புராணம்

24. அடைக்கலப் பத்து

[அடைக்கலப் பத்து - இறைவனுக்குத் தாம் அடைக்கலம் என்பதைக் கூறும் பத்துப் பாடல்களின் தொகுதி. கலம் - பாத்திரம். அடைக்கலம் - தம்மை அடைதலை உடைத்தாய்க் கிடக்கும் பாத்திரம்; இஃது ஒற்றிக் கலம் அன்று; ஒற்றிக் கலமாயின் கடனாகக் கொள்ளும் பொருட்கு ஈடாக வைத்துப் பின்னர் மீட்கப்படும். விலை பெற்றுக் கொடாமையின் விலைக் கலமும் அன்று; மற்று, அதன்கண் பற்றுடையார் தம்மால் அதனைக் காக்க இயலாதபொழுது தம்மால் தெளியப்பட்டவர் பாற் கையடையாகக் கொடுத்து ஓம்படை செய்துபோதல். 'சின்னாள் அடைக்கலமும், என்றும் அடைக்கலமும்' என அடைக்கலம் இருவகைத்து. திருநீலகண்ட நாயனாரிடத்து இறைவன் வைத்துச் சென்ற ஓடுபோல்வன சின்னாள் அடைக் கலம். பிறவாறு தரப்படுவன என்றும் அடைக்கலம். சின் னாள் அடைக்கலமாகத் தரப்படுவதனை, 'இடைக்கலம்' என்ற லும் உண்டு என்பது, ''இடைக்கலம் அல்லேன்'' என்ற அப்பர் திருமொழியால் (திருமுறை - 4. 81. 8.) அறியப்படு கின்றது. கலம் என்பது பாத்திரத்தைக் குறிக்கும் பெயரா யினும், அதுபோன்ற தன்மையுடையாராகக் கொடுக்கப்படு வோரும் அப்பெயரால் பான்மை வழக்காகக் கூறப்படுவர். அங்ஙனம் சிலரைச் சிலர்பால் சிலர் அடைக்கலமாகத்தந்தமை இலக்கியங்களில் வெளிப்படை. அடைக்கலப் பொருளைப் பாது காவாது ஒழிதலும், அதற்குக் கேடு சூழ்தலும் பாதகங்கள் எல்லாவற்றினும் அதிபாதகமாம். அதுபற்றியே இறைவன், திருநீலகண்ட நாயனாரை, அடைக்கலப் பொருளை வெளவினு ராகக் காட்டி அவரை மருளப்பண்ணினன். எனினும், அடைக் கலப் பொருளைக் கெடாது பாதுகாத்தல் அங்ஙனங் கொடுக்கப் பட்டோரது பண்பும், ஆற்றலும் ஆகியவைக்கு ஏற்பவே நிகழும். ஒருவரை மற்றொருவர் அடைக்கலமாகப் பிறரிடத்துத் தருதலேயன்றி ஒருவர் தாமே தம்மைப் பிறருக்கு அடைக்கல மாகத் தருதலும் நன்கறியப்பட்டதே. இது, 'அடைக்கலம் புகுதல் அல்லது தஞ்சம் புகுதல்' எனப்படும். அடியார்கள் இறைவனிடம் அடைக்கலம் இவ்வகையினதேயாம். ஆயினும், இது புதிதாகக் கொடுக்கப்படுவதன்று; எல்லா உயிர்களும், எல்லாப் பொருள்களும் என்றும் இறைவனுக்கு அடைக்கலப்

பொருள்களே. அவ்வுண்மையை உணர்ந்து நிற்பதொன்றே அடியார்கள் செய்வது. அங்ஙனம் உள்ள தமது நிலையையே அடிகள் இப் பகுதியில் எடுத்து அருளிச்செய்கின்றார். 'இறைவனுக்குத் தாம் அடைக்கலப் பொருளேயன்றித் தமக்கென ஒரு செயல் இல்லை' என உணரும் உணர்வு பக்குவர்களுக்கன்றி வாராமையின், இதற்கு, 'பக்குவ நிண்ணயம்' எனக் குறிப்புரைத்தனர் முன்னோர். நிண்ணயம் - துணிபு. இது, 'திருப்பெருந்துறையில் அருளிச்செய்யப்பட்டது' என்பதே பதிப்புக்களில் காணப்படுவது. இப் பகுதி பலவகை யாப்புக்களான் இயன்றது; அதனான், இதனை, 'கலவைப் பாட்டு' என்கின்றனர். எனினும், பெரும்பாலன, கட்டளைக் கலித்துறைகள்.]

கலவைப் பாட்டு

திருச்சிற்றம்பலம்

408 செழுக்கமலத் திரளனநின் சேவடிசேர்ந்
தமைந்த
பழுத்தமனத் தடியர்உடன் போயினர்யான்
பாவியேன்
புழுக்கணுடைப் புன்குரம்பைப் பொல்லாக்கல்வி
ஞானமிலா
அழுக்குமனத் தடியேன் உடையாய்உன்
அடைக்கலமே 1

---

408. இம் முதல் திருப்பாட்டு, நாலடித் தரவுக் கொச்சகக் கலிப்பா.

'செழுங்கமலம்' என்பது, எதுகைநோக்கி வலிந்துநின்றது. செழுங்கமலம் - செங்கமலம். 'அடியர் போயினர்' என இயையும். உடன் - விரைவாக. போயினர் - சிவலோகம் சென்றனர். புழுக் கண் உடை - புழுக்கள் வாழ்வதற்கு இடத்தைக் கொண்டுள்ள. குரம்பை - குடில்போலும் உடம்பு. 'குரம்பையை உடைய, பொல்லாத, அழுக்கு மனத்தை உடைய அடியேன்' என்க.

409 வெறுப்பனவே செய்யும்என் சிறுமையைநின்
பெருமையினாற்
பொறுப்பவ னேஅராப் பூண்பவ னேபொங்கு
கங்கைசடைச்
செறுப்பவ னேநின் திருவரு ளால்என்
பிறவியைவேர்
அறுப்பவ னேஉடை யாய்அடி யேன்உன்
அடைக்கலமே. 2

410 பெரும்பெரு மான்என் பிறவியை வேரறுத்
துப்பெரும்பிச்சுத்
தரும்பெரு மான்சது ரப்பெரு மான்என்
மனத்தினுள்ளே
வரும்பெரு மான்மல ரோன்நெடு மாலறி
யாமல்நின்ற
அரும்பெரு மான்உடை யாய்அடி யேன்உன்
அடைக்கலமே. 3

---

409. இவ்விரண்டாம் திருப்பாட்டு, முதலடி சிறிதே வேறுபடவந்த கட்டளைக் கலித்துறை. இங்ஙனம் சிறுபான்மை வேறுபட வரும் யாப்புக்களை, 'ஒப்பியல்' என வழங்குவர். அவ்வாற்றான் இஃது, ஒப்பியற் கட்டளைக் கலித்துறையாம்.

சிறுமை - குற்றம். பெருமை - பிறர் குற்றத்தை உளங்கொள்ளாமை. கங்கை சடைச் செறுப்பவன் - கங்கை நீரைச் சடையில் தடுத்து நிறுத்துபவன்.

410. இதுவும் முன்னைத் திருப்பாட்டுப்போன்றது.

"பெரும்பெருமான்" என்றதில், "பெருமான்" என்றது, 'கடவுள்' என்னும் பொருட்டாய், 'பெருமை' என்னும் அடைபெற்று, 'முதற் கடவுள்' எனப் பொருள் தந்தது. பிச்சு - பித்து. சதுர் - திறல். "பெருமான்" என வந்தன பலவும் விளிகளே.

411 பொழிகின்ற துன்பப் புயல்வெள்ளத் தில்நின்
கழற்புணைகொண்
டிழிகின்ற அன்பர்கள் ஏறினர் வான்யான்
இடர்க்கடல்வாய்ச்
சுழிசென்று மாதர்த் திரைபொரக் காமச்
சுறவெறிய
அழிகின் றனன்உடை யாய்அடி யேன்உன்
அடைக்கலமே. 4

---

411. இதுமுதல் மூன்று திருப்பாட்டுக்கள் கட்டளைக் கலித்துறை இலக்கணம் நிரம்பின.

'துன்பப் புயல் பொழிகின்ற வெள்ளம்' என்க. துன்பப் புயல் - துன்பத்தைச் சொரிகின்ற மேகம்; இஃது இல்பொருள் பற்றிவந்த உருவகமாய் நின்றது. 'துன்பத்தைச் சொரிகின்ற மேகம்' எனவே, 'அதன் பொழிவால் உளதாகும் வெள்ளம் துன்ப வெள்ளமே' என்பது சொல்ல வேண்டாவாயிற்று. 'வெள்ளத்தில் இழிகின்ற அன்பர்கள், நின்கழற்புணை கொண்டு வான் ஏறினர்' என்க. 'இழிகின்ற அன்பர்கள்' என்றோடு ஒருங்கிருந்த அடியார்கள் என்னும் பொருளது. இதனுள்வானைக் கரையாக உருவகம் செய்யாமையின், இது வியநிலை உருவகத்தின் பாற்படும். 'இடர்க்கடல்' என்பது, 'அவ்வெள்ளம்' என்னும் பொருட்டாய் நின்றது. "மாதர்" என்றது ஆகுபெயராய் அவர்மேல் உள்ள ஆசையைக் குறித்து அஃறிணையாய்நின்றமை யின், தகர ஒற்று மிக்கது.

"தனியனேன் பெரும்பிறவிப் பௌவத்து எவ்வத்
தடந்திரையால் எற்றுண்டு பற்றொன் றின்றிக்
கனியைநேர் துவர்வாயார் என்னும் காலால்
கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்டு"

என முன்னர் வந்ததனை (31.) நோக்குக.

412 சுருள்புரி கூழையர் சூழலிற் பட்டுன்
திறம்மறந்திங்
கிருள்புரி யாக்கையி லேகிடந் தெய்த்தனன்
மைத்தடங்கண்
வெருள்புரி மான்அன்ன நோக்கிதன் பங்கவிண்
ணோர்பெருமான்
அருள்புரி யாய்உடை யாய்அடி யேன்உன்
அடைக்கலமே. 5

413 மாழைமைப் பாவிய கண்ணியர் வன்மத்
திடவுடைந்து
தாழியைப் பாவு தயிர்போல் தளர்ந்தேன்
தடமலர்த்தாள்
வாழியெப் போதுவந் தெந்நாள் வணங்குவன்
வல்வினையேன்
ஆழியப் பாஉடை யாய்அடி யேன்உன்
அடைக்கலமே. 6

414 மின்கணினார் நுடங்கும்இடையார் வெகுளிவலையில்
அகப்பட்டுப்
புன்கண னாய்ப் புரள்வேனைப் புரளாமற்
புகுந்தருளி

---

412. சுருள் புரி - சுருளைச் செய்யும். கூழை - கூந்தல். இருள் - அறியாமை; மயக்கம். "பெருமான்", விளி.

413. 'மாழைக் கண், மை பாவு கண்' என்க, மாழை - மா வடு. "மைப் பாவிய" என்னும் பகரமெய், விரித்தல். 'கண்ணியரது ஆசையாகிய மத்து' என்றபடி. "வாழி", அசை. ஆழி அப்பன் - ஆழ்ந்திருக்கின்ற இறைவன். 'பெரியோன' என்றபடி. 'பெரியோனாதலின், அடைக்கலம் என்று வந்தேனைக் கைவிடமாட்டாய்' என்பது குறிப்பு.

414. இத் திருப்பாட்டு, ஒருவாற்றான் அமைந்த கொச்சகக் கலிப்பா.

என்கணிலே அமுதூறித் தித்தித்தென்
பிழைக்கிரங்கும்
அங்கணனே உடையாய் அடியேன்உன்
அடைக்கலமே. 7

415 மாவடு வகிரன்ன கண்ணிபங் காநின்
மலரடிக்கே
கூவிடுவாய் கும்பிக் கேயிடு வாய்நின்
குறிப்பறியேன்
பாவிடை யாடுகுழல் போற் கரந்து
பரந்ததுள்ளம்
ஆகெடு வேன்உடை யாய் அடியேன்உன்
அடைக்கலமே. 8

மின்கண் - ஒளி வீசும் கண். "வெகுளி" என்றது ஊடலை. "ஊடுதல் காமத்திற்கின்பம்" (குறள்-1330) ஆதலின், அஃது ஆடவரை அவரின் நீங்காது பிணிக்கும் வலையாயிற்று. புன்கண்-துன்பம். புரளுதல்-துடித்தல்; துன்புறுதல். "அமுது" என்றது முன்னர்க் கண்ட திருவுருவத்தின் தோற்றத்தை. இடையறுது நிற்றலை, "ஊறுதல்" என்றார். "இரங்கும்" என்றது, தெளிவின்கண் வந்த எதிர்காலவினை, "இரங்கும் நமக்கம் பலக் கூத்தன்" (384.) என்றாற்போல.

415. இதுவும், முதலடி சிறிதே சிதைந்த கட்டளைக் கலித்துறை.

" மலரடிக்கே கூவிடுவாய்; கும்பிக்கே இடுவாய்" என்ற விகற்பத் தொடர், 'நீ என்னை எவ்வாறும் செய்வதன்றி, நான் இன்னதே செய்க எனக் கட்டளை செய்ய உரியேனோ' என்றபடி. கூவுதல் - அழைத்தல். கும்பி - நரகம். குறிப்பு - திருவுள்ளம். பா - ஆடையாக்குதற்கண் நேரே நீண்டு கிடக்கும் இழைகளின் தொகுதி. குழல், அத் தொகுதியின் ஊடே குறுக்காக இழைகளைப் புகுத்தும் கருவி. இஃது ஒரு பால் நில்லாது, ஆடை ஆக்குவோனது வலத்தினும் இடத்தினும் மாறி மாறி ஓடும். இஃது இங்ஙனம் ஓடினாலன்றி ஆடை தோன்றாதாகலின், ஆடை ஆக்குவோன் தன்னால் இயன்ற

416 பிறிவறி யாஅன்பர் நின்அருட் பெய்கழல்
தாளிணைக்கீழ்
மறிவறி யாச்செல்வம் வந்துபெற் றார்உன்னை
வந்திப்பதோர்
நெறியறி யேன்நின்னை யேஅறி யேன்நின்னை
யேஅறியும்
அறிவறி யேன்உடை யாய்அடி யேன்உன்
அடைக்கலமே. 9

417 வழங்குகின் றாய்க்குன் அருளா ரமுதத்தை
வாரிக்கொண்டு
விழுங்குகின்றேன் விக்கி னேன்வினை யேன்என்
விதியின்மையால்

அளவில் இதனை விரைய ஓட்டுவான். அதனால், ஓரிடத்தில் நில்லாது விரைய ஓடும் இதனைத் தம் அலமரலுக்கு அடிகள் எடுத்துக்காட்டி இறைவன்பால் முறையிட்டருளினார். கரத்தலை, குழலுக்குப் பாவின் ஊடே கரந்து செல்லுதலாகவும், உள்ளத்திற்கு, மூவாசைகளின் மூழ்கிச் செல்லுதலாகவும் உரைக்க. பரத்தல் - சுழலல்.

416. இதுவும், இறுதித் திருப்பாட்டும் கட்டளைக் கலித் துறைகளே.

'பிரிவு' என்பதில் றகரம் சிறுபான்மை உறழ்ந்து வரும். "பிறிவறியா" என்றது, 'பிரிந்திருக்க மாட்டாத' எனப் பொருள்தந்தது. 'அருள் தாள், பெய்கழல் தாள்' என்க. மறிவு - மீளுதல், "வந்து" என்றதனை, "கீழ்" என்றதன் பின்னர்க் கூட்டுக. முன்னர், "அன்பர்" என்றமையின், "பெற்றார்" என்றதன்பின், 'யான்' என்பது கிளந்தெடுத்துக் கூறற்பாற்று. "நின்னையே அறியும் அறிவு" என்றது, 'பிறி தொன்றையும் அறியாது உன்னையே அறிந்து நிற்கும் அறிவு' என்றபடி. இதனையே கேட்டல் முதலியவற்றுள் நான்காவ தாகிய, 'நிட்டை' என்பர்.

417. "வழங்குகின்றாய்க்கு" என்ற நான்கனுருபை ஏழனுருபாகத் திரிக்க. அருள் ஆர் அமுதம் - அருளாகிய அரிய

தழங்கருந் தேனன்ன தண்ணீர் பருகத்தந்
துய்யக்கொள்ளாய்
அழுங்குகின் றேன்உடை யாய்அடி யேன்உன்
அடைக்கலமே. 10

திருச்சிற்றம்பலம்

உணவு. இறைவனது திருவருளை அடிகள் வாரிவிழுங்கியது, துன்ப மிகுதியாலாம். துன்பம், உலகியலைத் துறக்கமாட்டாத நிலையால் உண்டாயது. அதனால், ஏனை அடியார்களைப்போல உடன் செல்லாது, பின்னர் இறைவனை அடையக் கருதிய பேருரிமை எண்ணத்தையே, வாரிக்கொண்டு விழுங்கியதாகவும், தம் எண்ணத்தின்படி அடையமாட்டாது நிற்றலையே, விக்கிய தாகவும் அருளிச் செய்தார். எனவே, "தண்ணீர்" என்பது, இறைவன் மீளத் தோன்றுதலையேயாயிற்று "வழங்குகின்றாய், விழுங்குகின்றேன்" என்றவை, இறந்தகாலத்தில் நிகழ்காலம். விதி - ஊழ். 'தழங்கு நீர்' என இயையும். தழங்குதல் - ஒலித்தல். அருந் தேன் - கிடைத்தற்கரிய தேன்; மலைத் தேன். இதனானே, இஃது அருமை பற்றி வந்த உவமை என்பது பெறுதும். உணவு மிடற்றுக்கிடையில் விக்கப்பெற்றவன், அதுபோழ்து கிடைக்கும் நீரை நீராக நினையாது, அரிய தேனாகவே நினைப்பான் என்பது தோன்ற, 'அருந்தேன் அன்ன தண்ணீர்' என்று அருளினார். உணவு மிடற்றில் விக்கி இறவாதபடி பருகத் தண்ணீர் தந்து காப்பாற்றுதல், உண்ண உணவு இட்டவனுக்குக் கடமை என்பார், "தண்ணீர் பருகத் தந்து உய்யக்கொள்ளாய்" என்று அருளிச் செய்தார். இஃது, 'ஒட்டு' என்னும் அணிவகையின்பாற்பட அருளியதாம்.

மிண்டியுள பாடகர் வியந்துகர வாரங்
கொண்டுபுடை சூழவெழில் சேர்குழலர் பாடத்
தண்டரள மல்கிய தனிச்சிவிகை மேல்கொண்
டெண்டிசை மிகப்புகழ் கயற்கொடியி லங்க. 36

— திருவாதவூரடிகள் புராணம்.

25. ஆசைப் பத்து

[ஆசையை விண்ணப்பித்துக்கொள்ளும் பத்துத்திருப்பாடல்களின் தொகுதி ஆசைப் பத்து. வெயிலில் நிற்போர்க்கு நிழலை அடைய விரும்புதலே இயல்பாதல்போல, துன்பமயமாகிய உலகத்தில் நின்று இடருறும் உயிர்கட்கு இன்பமே வடிவான இறைவனை அடைய விரும்புதலே இயற்கையாதலானும், அவ் விருப்பத்தையே இப்பகுதி இனிது விளங்கக் கூறுதலானும் இதற்கு, 'ஆத்தும இலக்கணம்' எனக் குறிப்புரைத்தனர் முன்னோர். இது திருப்பெருந்துறையில் அருளிச் செய்யப் பட்டது என்பதே பதிப்புக்களில் காணப்படுவது. இப்பகுதி முழுவதும், வேறுபட்ட சீர்களையுடைய அறுசீரடி விருத்தத்தால் ஆயது.]

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

418 கருடக் கொடியோன் காண மாட்டாக்
கழற்சே வடியென்னும்
பொருளைத் தந்திங் கென்னை யாண்ட
பொல்லா மணியேயோ
இருளைத் துரந்திட் டிங்கேவா
வென்றங் கேகூவும்
அருளைப் பெறுவான் ஆசைப் பட்டேன்
கண்டாய் அம்மானே. 1

---

418. கருடக் கொடியோன், திருமால். பொல்லா மணி - துளையிடாத இரத்தினம். "அங்கே" என்றதன்பின், 'வர' என்பது வருவிக்க. "அங்கு" என்றது சிவலோகத்தை. ஆசைப்பட்டேன் - விருப்பத்துள் பொருந்தினேன்.

419 மொய்ப்பால் நரம்பு கயிறாக
மூளை என்பு தோல்போர்த்த
குப்பா யம்புக் கிருக்ககில்லேன்
கூவிக் கொள்ளாய் கோவேயோ
எப்பா லவர்க்கும் அப்பாலாம்
என்னா ரமுதேயோ
அப்பா காண ஆசைப் பட்டேன்
கண்டாய் அம்மானே. 2

420 சீவார்ந் தீமொய்த் தழுக்கொடு திரியுஞ்
சிறுகுடி லிதுசிதையக்
கூவாய் கோவே கூத்தா காத்தாட்
கொள்ளுங் குருமணியே
தேவா தேவர்க் கரியானே சிவனே
சிறிதென் முகநோக்கி
ஆவா என்ன ஆசைப் பட்டேன்
கண்டாய் அம்மானே. 3

421 மிடைந்தெலும் பூத்தைமிக் கழுக்கூறல்
வீறிலி நடைக்கூடந்
தொடர்ந்தெனை நலியத் துயருறு கின்றேன்
சோத்தம்எம் பெருமானே

---

419. மொய்ப்பால் நரம்பு - நெருங்கும் பகுதியவாகிய நரம்பு. 'மூளை என்புகளைத் தோலால் போர்த்த' என்க. குப்பாயம் - போர்வை; உடம்பு. 'உன்னைக் காண' என்க.

420. வார்ந்து - ஒழுகப்பட்டு. மொய்த்து - மொய்க்கப் பட்டு. ஆ - அந்தோ. வா - வருக. என்ன - என்று என்னை அழைக்க. இனி, 'ஆவா என இரங்கிக் கூற' என்றே உரைத்தலுமாம்.

421. மிடைந்து – நெருங்கி. மிடைந்து, மிக்கு என்னும் எச்சங்கள் எண்ணின்கண் வந்தன. ஊத்தை - அழுக்கு, "ஊறல்" என்றதனால், "அழுக்கு" என்றது, அழுக்கு நீரை யாயிற்று, 'ஊறலை யுடைய கூடம்' என்க, வீறு இலி -

உடைந்துநைந் துருகி உன்னொளி நோக்கி
உன்திரு மலர்ப்பாதம்
அடைந்துநின் றிடுவான் ஆசைப்பட்டேன்
கண்டாய் அம்மானே. 4

422 அளிபுண் ணகத்துப் புறந்தோல் மூடி
அடியே னுடையாக்கை
புளியம் பழமொத் திருந்தேன் இருந்தும்
விடையாய் பொடியாட
எளிவந் தென்னை ஆண்டு கொண்ட
என்னா ரமுதேயோ
அளியன் என்ன ஆசைப் பட்டேன்
கண்டாய் அம்மானே. 5

பெருமை இலதாகிய (இழிவை உடைய கூடம்). நடைக் கூடம் - இயங்குதலை யுடைய மாளிகை; உடம்பு, சோத்தம் - வணக்கம்.

422. 'யாக்கை, அகத்து உள்ள அளிந்த புண்ணைப் புறத்துத் தோலால் மூடியதனால் புளியம் பழம் ஒத்து' என்க. புளியம் பழம், உள்ளே நைந்து அழகின்றியிருந்தும், வெளியே உறுதியுடைதுபோல அழகாகக் காணப்படுதலால், அதனை, உள்ளே உதிரம் முதலியவற்றோடு கூடிய மெல்லிய உறுப்புக்கள் அழகின்றிக் கிடப்பவும், வெளியே ஒன்றும் தோன்றாது அழகாகக் காணப்படும் உடம்பிற்கு உவமையாகக் கூறினார். "ஒத்து" என்றதனை, 'ஒப்ப' எனத் திரிக்க. இருந்தேன் - இதனுள் அருவருப்பின்றியிருந்தேன் (இது முன்னைய நிலை). 'இருந்தும் எளிவந்து என்னை ஆண்டுகொண்ட என்னாரமுதே' என்க. 'இப்பொழுது, அந்தோ? இவன் இரங்கத் தக்கவன் என்று நீ சொல்ல ஆசைப்பட்டேன்' என்றதாம். இப்பாட்டின் முதற்சீரில் உள்ள எழுத்துக்களை நோக்கினும்' அளியேன்' என்பது பாடமாகாமை விளங்கும்.

423 எய்த்தேன் நாயேன் இனியிங்கிருக்க
கில்லேன் இவ்வாழ்க்கை
வைத்தாய் வாங்காய் வானோர் அறியா
மலர்ச்சே வடியானே
முத்தா உன்தன் முகவொளி நோக்கி
முறுவல் நகைகாண
அத்தா சால ஆசைப் பட்டேன்
கண்டாய் அம்மானே. 6

424 பாரோர் விண்ணோர் பரவி யேத்தும்
பரனே பரஞ்சோதீ
வாராய் வாரா உலகந் தந்து
வந்தாட் கொள்வானே
பேரா யிரமும் பரவித் திரிந்தெம்
பெருமான் எனஏத்த
ஆரா அமுதே ஆசைப் பட்டேன்
கண்டாய் அம்மானே. 7

425 கையால் தொழுதுன் கழற்சே வடிகள்
கழுமத் தழுவிக்கொண்
டெய்யா தென்றன் தலைமேல் வைத்தெம்
பெருமான் பெருமானென்

---

423. 'வைத்தவனே வாங்குதல் வேண்டுமன்றிப் பிறர் யார் அது செய்வார்' என்பார், "வைத்தாய் வாங்காய்" என்று அருளினர். இவ்வுலக வாழ்க்கையை வைத்தல் படைத்தலும், வாங்கல் அருளலுமாகும். "நகை" என்றதும் ஒளியேயாம்.

424. "வாராய்" என்பதனை இறுதியில் வைத்துரைக்க. "வந்து தந்து ஆட்கொள்வோன்" என்க. திரிந்து ஏத்துதல், சிவலோகத்திலாம்.

425. இதனுள் கூறப்படும் கையால் தொழுதல் முதலிய பலவும் சிவலோகத்தின்கண் வைத்து என்க. கழும - இறுக. எய்யாது - இளையாமல். ஒப்ப - ஒத்துநிற்க.

றையா என்றன் வாயா லரற்றி
அழல்சேர் மெழுகொப்ப
ஐயாற் றரசே ஆசைப் பட்டேன்
கண்டாய் அம்மானே. 8

426 செடியா ராக்கைத் திறமற வீசிச்
சிவபுர நகர்புக்குக்
கடியார் சோதி கண்டு கொண்டென்
கண்ணிணை களிகூரப்
படிதா னில்லாப் பரம்பர னேஉன்
பழஅடி யார்கூட்டம்
அடியேன் காண ஆசைப் பட்டேன்
கண்டாய் அம்மானே. 9

427 வெஞ்சே லனைய கண்ணார்தம்
வெகுளி வலையில் அகப்பட்டு
நைஞ்சேன் நாயேன் ஞானச்சுடரே
நானோர் துணைகாணேன்
பஞ்சே ரடியாள் பாகத் தொருவா
பவளத் திருவாயால்
அஞ்சேல் என்ன ஆசைப் பட்டேன்
கண்டாய் அம்மானே. 10

திருச்சிற்றம்பலம்

---

426. செடி - குற்றம். திறம் - கூறுபாடு. அற வீசி - முற்றிலும் கழித்து. கடி - விளக்கம். சோதி - இறைவன் திருமேனி. படி - ஒப்பு.

427. 'வெங் கண்' என இயையும். "வெகுளி வலையில் அகப்பட்டு" என்பது, முன்னும் *(414)* வந்தமை காண்க. நைஞ்சேன் - நைந்தேன்; வருந்தினேன்; போலி.

26. அதிசயப் பத்து

['செத்திலாப் பத்து' முதலிய மூன்று பத்துக்களும், இவ்வுலக வாழ்க்கையினின்றும் நீங்கி இறைவன் திருவடி கூடுதற்கண் அடிகளுக்கு இருந்த விரைவு கூறுதலாகவே அமைந்தன. இனி அப்பால் வரும் புணர்ச்சிப் பத்து முதலிய மூன்று பத்துக்களும் அன்ன. அவற்றது இடைக்கண் தம்மை இறைவன் ஆண்டுகொண்ட கருணைத் திறத்தை வியந்து கூறும் இதனை வைத்துக் கோத்தனர் முன்னோர். அவலச் சுவையே ஒருங்கு வாராது, வியப்புச் சுவை இடை மிடைந்து வருதல் நன்று என்னும் கருத்தினால் என்க. 'முத்தி இலக்கணம்' என்பது, இதற்கு முன்னோர் உரைத்த குறிப்பு. இதற்கு, 'இறைவன் முத்தியை வழங்கிய முறைமை' எனப் பொருள் கூறுக. 'முத்தி' என்றது முத்தி நிலையை. இது திருப்பெருந்துறையில் அருளிச்செய்யப்பட்டது என்பதே பதிப்புக்களில் காணப்படுவது. இஃது அறுசீரடி விருத்தத்தால் ஆயது.]

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

428 வைப்பு மாடென்று மாணிக்கத் தொளியென்று
மனத்திடை உருகாதே
செப்பு நேர்முலை மடவர லியர்தங்கள்
திறத்திடை நைவேனை
ஒப்பி லாதன உவமனி லிறந்தன
ஒண்மலர்த் திருப்பாதத்
தப்பன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய
அதிசயங் கண்டாமே. 1

---

428. வைப்பு மாடு - சேம வைப்பாக வைத்த செல்வம். என்றும் என்றும் என உம்மை கொடுத்து ஓதினுமாம். செப்பு - கிண்ணம். திறம் - கூறுபாடு; அவை கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று நின்று நுகரப்படுவன. ஒப்பு இலாதன - ஒருவாற்றாலேனும் ஒப்பாகக் கூறப்படும் பொருள் இல்லாதவாறு நிற்பன. உவமனில் இறந்தன - அரிதிற்கண்டு ஒருவாறு

429 நீதி யாவன யாவையும் நினைக்கிலேன்
நினைப்பவ ரொடுங்கூடேன்
ஏத மேபிறந் திறந்துழல் வேன்றனை
என்னடி யானென்று
பாதி மாதொடுங் கூடிய பரம்பரன்
நிரந்தர மாய்நின்ற
ஆதி ஆண்டுதன் அடியரிற் கூட்டிய
அதிசயங் கண்டாமே. 2

430 முன்னை என்னுடை வல்வினை போயிட
முக்கண துடையெந்தை
தன்னை யாவரும் அறிவதற் கரியவன்
எளியவன் அடியார்க்குப்
பொன்னை வென்றதோர் புரிசடை முடிதனில்
இளமதி யதுவைத்த
அன்னை ஆண்டுதன் அடியரிற் கூட்டிய
அதிசயங் கண்டாமே. 3

ஒப்புமைகூறும் பொருள்கள் அனைத்திற்கும் மேலாய் நிற்பன. கண்டாம் - கண்கூடாக யாம் கண்டோம். 'மடவரலியர் திறத்தைத் துச்சமாக வெறுத்து, தன்னை வைப்பு மாடென்றும் மாணிக்கத்தொளியென்றும் நினைந்து மனம் உருகிநிற்கும் அடியவர் கூட்டத்தில், அவர்க்கு நேர்மாறான குணத்தையுடைய என்னை இறைவன் சேர்த்தருளியது அதிசயம்' என்றவாறு.

429. "நீதி" என்றது, உலகியலிலும், மெய் ஒழுக்கங்களை ஏதமே (ஏதமாகவே) - துன்பமே மிகும்படி. நிரந்தர மாய் நின்ற ஆதி - என்றும் உள்ள பொருளாய் நிற்கும் முதல்வன். 'ஒழுக்கம் மிக்காராகிய தன் அடியவர் கூட்டத்தில், ஒழுக்கத்தோடு சிறிதும் இயைபில்லாத என்னையும் இறைவன் சேர்த்தருளியது அதிசயம்' என்றபடி.

430. 'முன்னை உள்ள என்னுடை வல்வினை' என்க. 'வல்வினை போயிட ஆண்டு' என இயையும். 'அடியார்க்கு எளியன்' எனக் கூட்டுக. "அன்னை" என்றது, உவமைக் கண் வந்த பால்வழுவமைதி, 'தவமிக்காராகிய தன் அடியவர்

431 பித்த னென்றெனை உலகவர் பகர்வதோர்
காரணம் இதுகேளீர்
ஒத்துச் சென்றுதன் திருவருள் கூடிடும்
உபாயம தறியாமே
செத்துப் போய்அரு நரகிடை வீழ்வதற்
கொருப்படு கின்றேனை
அத்தன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய
அதிசயங் கண்டாமே. 4

432 பரவு வாரவர் பாடுசென் றணைகிலேன்
பன்மலர் பறித்தேத்தேன்
குரவு வார்குழ லார்திறத் தேநின்று
குடிகெடு கின்றேனை

கூட்டத்தில், வினையே மிக்கேனாகிய என்னையும் இறைவன் சேர்த்தருளியது அதிசயம்' என்றபடி.

431. முதலடியை இறுதியிற் கூட்டுக.

ஒத்துச் செல்லுதல் - நூல்களானும், உபதேசத்தானும் உணரப்பட்ட இறைவன் திருவுளக் குறிப்போடு இயைந்து நடத்தல். 'இதுவே இறைவன் திருவருளைப் பெறும் முறை' என்பது உணர்த்தியவாறு. இதற்கு நேர்மாறான செயலே மூன்றும் அடியுட் கூறப்பட்டது. எனவே, 'திருவருளை அடையும் நெறியிற் சிறிதும் பிறழாது ஒழுகும் தன் அடியவர் கூட்டத்தில், அதற்கு நேர்மாறான ஒழுக்கத்தையே உடைய என்னை இறைவன் சேர்த்தருளியது அதிசயம்' என்றவாறாயிற்று. 'இங்ஙனம் சேர்த்தருளிய அதிசயச் செயலால் நானும் இறைவனையே நினைந்து பிதற்றும் பித்துடையேனாயினேன்; அஃது அறியாது உலகப் பித்தன்போல என்னையும் உலகவர் கருதுகின்றனர்' என்பது முதலடியின் பொருள். கேளீர் - அறிந்துகொண்மின். இது தம்மோடு ஒத்து நின்று தம் நிலையை அறிய விரும்பும் நன்மக்களை நோக்கிக் கூறியது.

432. பரவுதல் - துதித்தல்; இஃது இறைவனை என்க. பாடு - பக்கம். குரவு - குராமலரை அணிந்த. 'எரி நின்று ஆடிய' என மாற்றுக. அரவன் - பாம்பை அணிந்தவன்.

இரவு நின்றெரி யாடிய எம்மிறை
எரிசடை மிளிர்கின்ற
அரவன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய
அதிசயங் கண்டாமே. 5

433 என்னி லேன்திரு நாமஅஞ் செழுத்தும்என்
ஏழைமை யதனாலே
நன்னி லேன்கலை ஞானிகள் தம்மொடு
நல்வினை நயவாதே
மன்னி லேபிறந் திறந்துமண் ணாவதற்
கொருப்படு கின்றேனை
அண்ணல் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய
அதிசயங் கண்டாமே. 6

434 பொத்தை ஊன்சுவர் புழுப்பொதிந் துளுத்தசும்
பொழுகிய பொய்க்கூரை
இத்தை மெய்யெனக் கருதிநின் றிடர்க்கடற்
சுழித்தலைப் படுவேனை

தன்னைத் துதித்தலும், பன்மலர் பறித்துத் தூவி வழிபடுதலுமே தொழிலாக உடைய தன் அடியவர் கூட்டத்தில், அத்தகையோர் அருகிலும் சென்றறியாத என்னை இறைவன் சேர்த்தருளியது அதிசயம்' என்றவாறு.

433, 'திருநாமமாகிய அஞ்சு எழுத்தும்' என்க. ஏழைமை - அறியாமை. இத் திருநாமத்தின் பெருமையைக் கலைஞானிகளும் ஒருவாற்றான் உணர்ந்துரைப்பாராக, அவர் பாலும் அணுகிலேன்' என்றபடி. 'நல்வினையைச் செய்ய விரும்பாது மண்ணாவதற்கு ஒருப்படுகின்றேன்' என்க. 'அஞ்செழுத்தின் உண்மைப் பொருளை அறிந்து அந்நிலையிலே நிற்கும் தன் அடியவர் கூட்டத்தில், அதுபற்றிச் சிறிதும் அறிந்திலேனாகிய என்னையும் இறைவன் சேர்த்தருளியது அதிசயம்' என்றபடி.

434. 'பொத்து' என்பது ஈற்றில் ஐகாரம் பெற்றது. 'ஓட்டை' என்பது பொருள். இஃது அதனையுடையதற்காயிற்று.

முத்து மாமணி மாணிக்க வயிரத்த
பவளத்தின் முழுச்சோதி
அத்தன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய
அதிசயங் கண்டாமே. 7

435 நீக்கி முன்னெனைத் தன்னொடு நிலாவகை
குரம்பையிற் புகப்பெய்து
நோக்கி நுண்ணிய நொடியன சொற்செய்து
நுகமின்றி விளாக்கைத்துத்
தூக்கி முன்செய்த பொய்யறத் துகளறுத்
தெழுதரு சுடர்ச்சோதி
ஆக்கி ஆண்டுதன் அடியரிற் கூட்டிய
அதிசயங் கண்டாமே. 8

சுவர் - சுவர்களால் ஆகியது. இவை இரண்டும் ஒருபொருள்மேல் வந்தபெயர்கள். பொதிந்து - நிரம்பப் பெற்று. உளுத்து - உள் ளழிந்து. அசும்பு - மாசுகளின் கசிவு. பொய்க்கூரை - விரைவில் இடிந்துவிழும் வீடு. இத்தை, 'இதனை' என்பதன் மரூஉ. மெய்-நிலையானது. முத்துமாமணி-முத்தென்னும் சிறந்த இரத்தினம். ''மாமணி'' முதலிய நானகும், சோதி என்பதனோடு எற்ற பெற்றியான் வேற்றுமைத் தொகைநிலையாகவும், தொகா நிலை யாகவும் தொடர்ந்தன. 'சோதியை உடைய அத்தன்' என்க. சிவபிரான் திருநீற்றினால் வெள்ளொளியும் உடையனாய் இருத் தலின், முத்தின் ஒளியும், வயிரத்தின் ஒளியும் கூறப்பட்டன. 'காயத்தின் மெய்ம்மையை உணர்ந்து அதன்கண் பற்றின்றி இருக்கும் தன் அடியவர் கூட்டத்தில், அதனையே மெய்யென்று கொண்டு திரிந்த என்னையும் இறைவன் சேர்த்தருளியது அதிசயம்' என்றபடி.

435. 'முன் என்னைத் தன்னொடு நில்லாவகை நீங்கிக் குரம்பையில் (உடம்பினுள்) புகப்பெய்து' என அடிகள் மிகத் தெளிவுபட இங்கு அருளிச் செய்தமையின், 'இவர் முன்பு திருக்கயிலையில் உள்ள சிவகணநாதர்களுள் ஒருவராய் இருந்து, இறைவனது ஆணையாலே இவ்வுலகில் தோன்றியவர்' என்பது நன்கு தெளிவாகின்றது. ஆதலின், இவரை, 'கணநாதருள்

ஒருவர்' எனத் திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் கூறுதல், அங்ஙனமே கொள்ளத்தக்கதாம். இத்துணைத் தெளிவுபட எழுந்துள்ள இத் திருமொழிக்கு வேறு பொருளுரைத்துப் போக்குதல் நேர்மையாகாது. "தன்னொடு நில்லாவகை நீக்கி" என்றதற்கு, 'கேவல நிலையினின்றும் சகலத்திற் செலுத்தி' என உரைத்தல் பொருந்தாமையை விளக்கவேண்டுவது இன்று. நோக்கி - என்னை ஆண்டுகொள்ளும் காலத்தை எதிர்நோக்கியிருந்து. 'நுண்ணியனவும், நொடியனவும் ஆகிய சொல்' என்க. பொருள்களின் நுட்பம் சொல்மேல் ஏற்றப்பட்டது. நொடியன - 'நொடி' என்னும் கால அளவில் முடிவன; 'மிகச் சுருங்கிய சொற்கள் என்றபடி. 'சொல்சொல்லி' என்னாது, "சொற்செய்து" என்றார், அவை, தாம் என்றும் கேட்டிராத புதுமையுடையனவாய் இருந்தமை பற்றி. நுகம் - நுகத்தடி; இஃது ஏர் உழும் எருதுகள் இரண்டினையும் ஒருங்கிணைத்தற்கு அவற்றின் கழுத்தில் வைத்துப் பூட்டப்படுவது. விளாக்கை - உழுதல்; இது 'விளாவுகை' என்பதன் மரூஉ. "பாழ்ச்செய் விளாவி" எனப் பின்னரும் அருளிச் செய்வார், 567. 'விளாக்கை' என்னும் பெயரடியாகவே, 'விளாக்கைத்து' என்னும் வினையெச்சம் பிறந்தது, எனவே 'விளாவுகை செய்து - உழுது' என்பது அதன் பொருளாயிற்று. நுகமின்றி உழுது என்றது, நுகத்தடியின்றியே இரண்டெருதுகளை ஒன்றுபடப் பிணைத்து உழுதாற்போலப் பருப்பொருளாகிய கயிறு முதலியன இல்லாமலே என்னைத் தன் திருவடியை விட்டு நீங்காது அவற்றிடத்தே கட்டுண்டு கிடக்கச் செய்து நடத்தி' என்றதாம். தூக்கி - என்னை உலகியலினின்றும் எடுத்து. முன்செய்த பொய் அற - அங்ஙனம் எடுப்பதற்கு முன்னே யான் செய்து கொண்டிருந்த பயனில்லாத முயற்சிகள் நீங்கி யொழியும் வண்ணம். துகள் அறுத்து - அம்முயற்சிகட்குக் காரணமாய் இருந்த அறியாமையாகிய குற்றத்தைப் போக்கி. எழுதரு சுடர்ச்சோதி - என் உள்ளத்தில் மேன்மேல் ஓங்கி எழுந்த ஒளியை யுடைய விளக்காகிய இறைவன். "அறுத்து எழுதரு" என்றது, 'சுவைத்து உண்டான்' என்பதுபோல உடனிகழ்ச்சி வினையென்க. சோதி, ஆகுபெயர். ஆக்கி - என்னைச் செப்பம் செய்து. 'கிளவியாக்கம்' என்புழி (தொல். சொல்.) 'ஆக்கம்' என்பதற்கு இவ்வாறே

436 உற்ற ஆக்கையின் உறுபொருள் நறுமலர்
எழுதரு நாற்றம்போல்
பற்ற லாவதோர் நிலையிலாப் பரம்பொருள்
அப்பொருள் பாராதே
பெற்றவா பெற்ற பயனது நுகர்ந்திடும்
பித்தர்சொல் தெளியாமே
அத்தன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய
அதிசயங் கண்டாமே. 9

பொருளுரைப்பர் சேனாவரையர். 'முன்னர்த் தன்னிடத்தினின்றும் நீக்கிப் பின்னர்த் தானே வந்து என்னை ஆட்கொண்ட செயல்கள் வியக்கத்தக்கன' என்றவாறு.

436. உற்ற ஆக்கை - கிடைத்த உடம்பு; என்றது, மக்கள் உடம்பை. பரம்பொருளை உணரும் உணர்விற்கு மக்கட் பிறப்பினது இன்றியாமை உணர்த்துதற் பொருட்டு, "உற்ற ஆக்கையின் உறுபொருள்" என்றாரேனும், 'அவ்வாக்கையின்கண்ணதாகிய உயிரினிடத்து உறுபொருள்' என்பதே கருத்தாம். நறிய மலரின்கண் எழுதரு நாற்றத்தை அம்மலரிடமாகப் பற்றி நுகர்தலன்றி வேறாகப் பற்றி நுகரவாராமைபோல, பரம்பொருளை உயிர் தன்னிடத்து உணர்ந்து பற்றுதலன்றித் தனக்கு வேறாக உணர்ந்து பற்றுதல் கூடாமைபற்றி, "நறுமலர் எழுதரு நாற்றம்போல் பற்றலாவதோர் நிலையிலாப் பரம்பொருள்" என்று அருளினார். எனவே, "நறுமலர் எழுதரு நாற்றம்போல்" என்ற உவமை, வேறாக வைத்துப் பற்றலாகாமையை விளக்குதற்பொருட்டு வந்ததாம். இப் பொருளே,

"பூவினிற் கந்தம் பொருந்திய வாறுபோல்
சீவனுக் குள்ளே சிவமணம் பூத்தது"

என்ற திருமந்திரத்தினும் கூறப்பட்டது (1459.) 'ஆக்கையின் உறுபொருளும், பற்றலாவதொர் நிலையிலாப் பரம்பொருளும் ஆகிய அப்பொருள்" என்க. "அப்பொருள்" என்ற சுட்டு, என்றும், உள்ளதாய்ப் பேரறிவாயும், பேரின்பமாயும் நிற்கும்

437 இருள்தி ணிந்தெழுந் திட்டதோர் வல்வினைச்
சிறுகுடி லிதுஇத்தைப்
பொருளெ னக்களித் தருநர கத்திடை
விழப்புகு கின்றேனைத்
தெருளும் மும்மதில் நொடிவரை இடிதரச்
சினப்பதத் தொடுசெந்தீ
அருளும் மெய்ந்நெறி பொய்ந்நெறி நீக்கிய
அதிசயங் கண்டாமே. 10

திருச்சிற்றம்பலம்.

அத்தன்மையுடையது' என அதன் சிறப்பை எல்லாம் சுட்டி நின்ற பண்டறி சுட்டு; ஆதலின், 'அதனைப் பாராதே பெற்றவா பெற்ற பயனது நுகர்வோரை, 'பித்தர்' என்று அருளினார். 'பெற்ற பயனைப் பெற்றவா நுகர்ந்திடும்' என மாறுக. பெற்றது வினைவழியாகலின், 'அது பின்னர் இடர் விளைப்பது' என்பதும் போந்தது. அது, பகுதிப் பொருள் விகுதி. பயன் தோறும் இவ்வாறே நின்று நுகர்தலின் ஒருமையாற் கூறினார். "பெற்றவா" என்றது, 'அதன் மெய்ம்மையறிந்து வெறுத்துப் பிறிது பயனுக்கு முயலாது' என்றபடி. இவ்வாறு வினைப் பயனையே நுகர்ந்திருப்போர் உலகர்.' 'இப் பயனன்றிப் பிறிது பயன் உண்டு என்பதை யாவர் கண்டார்' என்பதே அவர் சொல்லும் சொல்லாதலின், அவர் சொல்வழி நில்லாதவாறு இறைவன் தம்மை ஆட்கொண்டருளினன் என்றார். 'பெற்றவா பெற்ற பயனது நுகர்ந்திடும் பித்தர் கூட்டத்தில் இருந்த என்னை, பற்றலாவதோர்' நிலையிலாப் பரம்பொருளாகிய தனைப் பற்றும் வண்ணம் செய்து, அத்தன்மையராகிய தன் அடியவர் கூட்டத்தில் இறைவன் சேர்த்தருளியது வியப்பு' என்றவாறு. இத்திருப்பாட்டுள் அருளப்பட்ட பரம்பொருளின் இயல்பைத் திருமுருகாற்றுப்படை உரை இறுதிக்கண் நச்சினார்க்கினியர் எடுத்துக்காட்டினமை காண்க.

437. இருள் - அறியாமை; ஆணவம். திணிதல் - செறிதல். திணிந்து - திணிதலால் 'எழுந்திட்டதோர் குடில்' என்க. 'இதனை தன்மை இதுவாக இதனை உயர்ந்த பொருள் என்று

எண்ணிக் களித்தேன்' என்றார். தெருளும் - பகைவரது புரமாதல் தெளியப்பட்ட. நொடி வரை - நொடி நேரத்துள். சினப் பதம் - வெகுளி நிலை. அருளும் - செலுத்திய. மெய்ந் நெறியைத் தருபவனை, பான்மை வழக்கால், 'மெய்ந்நெறி' என்று அருளினார். பொய்ந்நெறி - நிலையாமையைச் சேர்ப்பிக்கும் நெறி. ''முப்புரமாவது மும்மல காரியம்'' (திருமந்திரம்-343) என்று அருளியபடி. இறைவன் முப்புரம் எரித்தமை அவன் உயிர்களின் மும்மலங்களைப் போக்குவோனாதலை விளக்குதல் பற்றி, இங்கு அவன் முப்புரம் எரித்தமையை விரித்தோதி' யருளினார். 'முப்புரங்களையும் நொடிவரை இடிதர அழித்தாற் போல, இறைவன் எனது மலங்களையும் நொடிப்பொழுதில் போக்கினமை வியப்பு' என்றவாறு.

மங்கல தினத்திநெடு மாளிகை யகன்றே
துங்கமணி யக்கையணி சொக்கரை வணங்கி
அங்குவிடை பெற்றுமறை யந்தணரின் மிக்கார்
திங்கண்மர பிற்குரிசில் கோயிலுழை சென்றார். 37

சென்றுதமிழ் மாறனருள் பெற்றெழில் சிறக்கும்
வென்றிவள வன்புவியின் மேன்மையொடு செல்வார்
குன்றனைய மாடமொடு கோபுர நெருங்கும்
நன்றிமது ரைப்பதியை நன்கொடு கடந்தார். 38

நெடுங்குட திசைக்கட னிறைந்தொளி சிறந்தே
உடைந்துதய நற்றிசையி லுற்றுவரு மாபோன்
மிடைந்தபதி யுங்கடமும் வெற்புமிவை யெல்லாங்
கடந்துவதி சென்றுபல காவத மகன்றார். 39

என்றுமுள பொன்றுமுட லென்னுநகர் தோறுஞ்
சென்றவழி மாறியொரு தெய்வவழி செல்வார்
நன்றியுள முத்திபெற நம்பர்தம தன்பால்
அன்றுயர் பெருந்துறை யடைந்தபடி சொல்வாம். 40

— திருவாதவூரடிகள் புராணம்.

27. புணர்ச்சிப் பத்து

[" இன்றே போல்கநும் புணர்ச்சி" (புறம்-58.) என் புழிப்போல, 'புணர்ச்சி' என்பது இங்கு ஒருங்கிருத்தலைக் குறித்தது. எனவே, 'இறையுலகத்தில் சென்று இறைவன் திருமுன்பிருத்தலைக் கூறும் பத்துத் திருப்பாட்டுக்களின் தொகுதியே இப் புணர்ச்சிப்பத்து' என்பதாயிற்று. இதனுள், நான்காம் திருப்பாட்டுள், "புல்லிப் புணர்வது என்று கொல்லோ" என்னும் தொடரைச் சிறப்பாகக்கருதி இதற்கு, **'அத்துவித இலக்கணம்'** எனக் குறிப்புரைத்தனர் முன்னோர். அத்துவிதம் - இறைவனும் ஆன்மாவும் இரண்டற்று நிற்கும் நிலை. இது திருப்பெருந்துறையில் அருளிச்செய்யப்பட்டது என்பதே பதிப்புக்களில் காணப்படுவது. இஃது இடை இடையே சில அடிகள் சீர்குறைந்து வரும் எண்சீரடி விருத்தத் தால் ஆயது. சில அடிகள் இங்ஙனம் சீர் குறைந்து வருதல் பற்றி இவற்றைப் பொதுவே, 'ஆசிரிய விருத்தம்' என்றனர். இங்ஙனம் சில அடிகள் சீர் குறைந்துவரச் செய்தது, இவ்வாறு வருதலும் விருத்தத்திற்கு, இயல்பு என்பது பற்றி.

ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

438 சுடர்பொற் குன்றைத் தோளா முத்தை
வாளா தொழும்புகந்து
கடைபட் டேனை ஆண்டு கொண்ட
கருணா லயனைக் கருமால் பிரமன்
தடைபட் டின்னுஞ் சார மாட்டாத்
தன்னைத் தந்த என்னா ரமுதைப்
புடைபட் டிருப்ப தென்றுகொல் லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 1

---

438. சுடர் பொற்குன்று - ஒருகாலைக் கொருகால் ஒளியை மிக விடுகின்ற பொன்மலை. இப்பொருள் தோன்றுதற் பொருட்டு, 'சுடர்ப் பொற்குன்று' என வேற்றுமைத் தொகை பட ஓதாது, வினைத் தொகைபட ஓதியருளினார். அதனானே,

439 ஆற்ற கில்லேன் அடியேன் அரசே
அவனி தலத்தைம் புலனாய
சேற்றி லழுந்தாச் சிந்தை செய்து
சிவனெம் பெருமான் என்றேத்தி
ஊற்று மணல்போல் நெக்குநெக்
குள்ளே உருகி ஓலமிட்டுப்
போற்றி நிற்ப தென்றுகொல் லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 2

ஏனைய மூன்று அடிகளினும் மிகுத்தோதற்பாலனவாய பகர ஒற்றுக்களையும் தொகுத்தோதியருளினார். "பொற்குன்று" முதலிய பலவும், ஒருபொருள்மேல் வந்த பெயர்கள். வாளா தொழும்பு உகந்து - 'தகுதி' என்னும் காரணமின்றியே எனது தொண்டினை விரும்பி; இதனை, "கடைபட்டேனை" என்றதன் பின்னர்க் கூட்டுக. கருணாலயன் - அருளுக்கு இருப்பிடமானவன். தடை - மலத் தடை. பட்டு - அதனுட்படுதலால். 'தன்னை எனக்குத் தந்த' என்க. "புடைபட்டிருப்பது என்றுகொல்லோ" என்றதனை இறுதியில் வைத்து உரைக்க. இஃது ஏனைய திருப்பாட்டிற்கும் ஒக்கும். புணர்ந்து - தலைக் கூடி.

439. பொருள்கோள்: 'ஐம்புலனாய சேற்றில் அழுந்தாது என் பொல்லா மணியைப் புணர்ந்து சிந்தை செய்து, அரசே, சிவனே, எம்பெருமானே, அடியேன் அவனி தலத்து ஆற்றகில்லேன் என்று ஏத்தி, உள்ளே நெக்கு உருகி, ஓலமிட்டுப் போற்றி நிற்பது என்றுகொல்லோ.'

"ஆற்றகில்லேன்" என்றது, இறந்தகால மறைவினை. எனவே, 'அடியேன் நிலவுலகில் உன்னைப் பிரிந்து நின்று ஆற்றமாட்டாதவனாயினேன்' என்பது பொருளாயிற்று. ஆகவே 'என்னை அவ்வாறு நில்லாது நின்பால் வருவித்த நின் கருணைக்கு யாது கைம்மாறு செய்யவல்லேன்' என்று உருகி ஓலமிட்டுப் போற்றிநிற்றலை விரும்புதல் பெறப்பட்டது. ஊற்று மணல் - உள்ளே ஊற்றினை உடைய மணல்; இது செறிந்து நில்லாது நெக்குவிட்டுக் குழைதல் நன்கறியப்பட்டது. உள்ளே - உள்ளிடத்தே; மனத்தின்கண்,

440 நீண்ட மாலும் அயனும் வெருவ
நீண்ட நெருப்பை விருப்பி லேனை
ஆண்டு கொண்ட என்ஆ ரமுதை
அள்ளூ றுள்ளத் தடியார்முன்
வேண்டுந் தனையும் வாய்விட் டலறி
விரையார் மலர்தூவிப்
பூண்டு கிடப்ப தென்றுகொல் லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 3

441 அல்லிக் கமலத் தயனும் மாலும்
அல்லா தவரும் அமரர் கோனுஞ்
சொல்லிப் பரவும் நாமத் தானைச்
சொல்லும் பொருளும் இறந்த சுடரை
நெல்லிக் கனியைத் தேனைப் பாலை
நிறைஇன் அமுதை அமுதின் சுவையைப்
புல்லிப் புணர்வ தென்றுகொல் லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 4

---

440. 'நெடியவனினும் நெடியவன்' என்பார், 'நீண்ட மாலும் வெருவ நீண்ட நெருப்பு' என்றார். மாயோன் நீண்டது, உலகினை அளக்க. விருப்பு - அன்பு. அள்ளூறு உள்ளம் - அன்புமிகவும் சுரக்கின்ற மனம். 'அடியார்முன் அலறித் தூவிப் பூண்டுகிடப்பது' என இயையும். பூண்டு கிடத்தல் - திருவடியை விடாது பற்றிக்கொண்டு கிடத்தல்.

441. அல்லி - அகவிதழ். "அல்லாதவரும்" என்றதனை "அமரர் கோனும்" என்றதன் பின்னர்க் கூட்டுக. "பொருள்" என்றது, சொல்லால் உணர்த்தப்படும் பொருளை. 'சொல்லும், அதனுன் உணர்த்தப்படும் பொருளும் சடமே யாகலின், சித்தாகிய இறைவன் அவற்றினுள் அகப்படான்' என்பார் "சொல்லும் பொருளும் இறந்த சுடரை" என்றார். இங்ஙனம் கூறியதனால், அயன், மால் முதலிய பலரும் பல நாமங்களால் சொல்லிப் பரவுவன எல்லாம், அம்புலியைப்பற்ற விரும்பும் குழவிக்குக் கண்ணாடியிற் காட்டித் தரப்படும் அதன் நிழல்போல்வனவாய பொது வியல்புகளையேயாம் என்பது போதரும். இனி, அவன் சொல்லையும், பொருளையும் இறந்து நின்று உணர்வார்க்கு

442 திகழத் திகழும் அடியும் முடியுங்
காண்பான் கீழ்மேல் அயனும் மாலும்
அகழப் பறந்துங் காண மாட்டா
அம்மான் இம்மா நிலமுழுதும்
நிகழப் பணிகொண் டென்னை ஆட்கொண்
டாவா என்ற நீர்மை யெல்லாம்
புகழப் பெறுவ தென்றுகொல் லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 5

அறிவினுள்ளே இன்னதென உரைக்க வாராத இன்ப ஊற்றாய் நின்று இனித்தலை உணர்த்துவார், "நெல்லிக் கனியைத் தேனைப் பாலை நிறை இன்னமுதை அமுதின் சுவையை" எனப் பலவாறு அருளிச் செய்தார். புல்லிப் புணர்வது - பற்றிக் கூடுவது. பற்றாது வேறுநின்று அளவளாவுதலும், ஈருடலும் ஒருடலாம் படி தழுவுதலும் என்னும் கூடுதல் இரண்டனுள் ஒன்றுபடத் தழுவுதலைக் குறிப்பார், "புல்லிப் புணர்வது" என்று அருளினார். இங்ஙனம் உலகியல் வாய்பாட்டான் அருளிச் செய்தாராயினும், 'அப்டணைந்த உப்பேபோல் (சிவஞான சித்தி - சூ. 11. 12) அவனாகியே நிற்கும் அத்துவித நிலையைப் பெறுவது என்றுகொல்லோ' என்றலே திருவுள்ளம் என்க. "புணர்ந்து புணர்வது" என்றமையால், முன்னர்ச் சிவலோகத்தில் அடியார் குழாத்தொடு கூடி நின்று நுகரும் இன்பத்தை அடிகள் விரும்பினமை பெறப்படும்.

442. திகழத் திகழும் - பிறபொருள்கள் யாவும் ஒளிமயமாய்த் திகழுமாறு விளங்கிய, "அயனும் மாலும்" என்றதை எதிர்நிரல் நிறையாகக் கொள்க. "அகழ" என்றதனை 'அகழ்ந்து' எனத் திரித்து, தொகுக்கப்பட்ட உம்மையை விரிக்க. மாநில முழுதும் நிகழ்ந்தது, 'பணிகொண்டான்' என்னும் சொல். புகழப்பெறுவது - நேர்நின்று புகழுதலைப் பெறுவது.

443 பரிந்து வந்து பரமா னந்தம்
பண்டே அடியேற் கருள்செய்யப்
பிரிந்து போந்து பெருமா நிலத்தில்
அருமா லுற்றேன் என்றென்று
சொரிந்த கண்ணீர் சொரிய உள்நீர்
உரோமஞ் சிலிர்ப்ப உகந்தன்பாய்ப்
புரிந்து நிற்ப தென்றுகொல் லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 6

444 நினையப் பிறருக் கரிய நெருப்பை
நீரைக் காலை நிலனை விசும்பைத்
தனையொப் பாரை யில்லாத் தனியை
நோக்கித் தழைத்துத் தழுத்த கண்டங்
கனையக் கண்ணீர் அருவி பாயக்
கையுங் கூப்பிக் கடிமலராற்
புனையப் பெறுவ தென்றுகொல் லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 7

---

443. பரிந்து - இரங்கி. 'செய்யவும்' என்னும் சிறப்பும்மை தொகுத்தலாயிற்று. பெருமாநிலம், ஒரு பொருட் பன்மொழி. அருமால் - நீங்குதற்கு அரிய மயக்கம். சொரிய - சொரிந்தவாறே நிற்க. நீர்மை, நீர் என நின்றது. 'உள்நீரால்' என உருபு விரிக்க. புரிந்து - பணிசெய்து.

444. பிறர் - அயலார்; அடியரல்லாதவர். நெருப்பை முதலிய ஐந்தும் ''அரிய'' என்ற எச்சத்திற்குத் தனித்தனி முடிபாயின. தழைத்து - உடல் பூரித்து. 'தழுதழுத்து' எனற்பாலது, 'தழுத்து' என நின்றது. நாவிற்குரிய இதனைக் கண்டத்திற்கு ஏற்றினர். 'கனைப்ப' எனற்பாலது ''கனைய'' என நின்றது. ''தழுத்த கண்டம் கனைய'' என்றதனால், சொற்கள் நன்கெழாமை குறிக்கப்பட்டது.

445 நெக்கு நெக்குள் உருகி உருகி
நின்றும் இருந்துங் கிடந்தும் எழுந்தும்
நக்கும் அழுதுந் தொழுதும் வாழ்த்தி
நானு விதத்தாற் கூத்தும் நவிற்றிச்
சொக்கர் போலுந் திருமேனி
திகழ நோக்கிச் சிலிர்சி லிர்த்துப்
புக்கு நிற்ப தென்றுகொல் லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 8

446 தாதாய் மூவே ழுலகுக்குந்
தாயே நாயேன் தனையாண்ட
பேதாய் பிறவிப் பிணிக்கோர் மருந்தே
பெருந்தேன் பில்க எப்போது
மேதா மணியே என்றென் றேத்தி
இரவும் பகலும் எழிலார் பாதப்
போதாய்ந் தணைவ தென்றுகொல் லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 9

---

445. உள் நெக்கு நெக்கு - உள்ளம் நெகிழ்ந்து. நக்கும் - சிரித்தும். நானுவிதத்தால் - பற்பல வகையாக. நவிற்றி - செய்து. சொக்கர் - செவ்வானம். திகழ நோக்கி - நன்கு பார்த்து. புக்கு நிற்பது - அடியவர் கூட்டத்துள் புகுந்து நிற்பது.

446. தாதாய் - தாதையே. "மூவேழுலகம்" என்றதனை, 'மூவுலகம், ஏழுலகம்' என இரண்டாக்கியுரைக்க. 'ஈரேழுல கம்' என்னாது, 'ஏழுலகம்' என்றே கூறும்வழி, அது பூலோகம் முதலாக மேலுள்ளனவற்றையே குறிக்கும். "மூவுலகம்" என்றவற்றுள் மேலுலகங்களும் அடங்குமாயினும், அவற்றைப் பின்னரும் வேறுபிரித்தோதினர், அவை கீழுலகங்களினும் பல்லாற்றாற் சிறந்துநிற்றல் கருதி. இனி, 'மூத்த ஏழுலகங்கள்' என்று உரைப்பாரும் உளர். "பேதாய்" என்றது, 'பேரருளு டையவனே' என்னும் பொருளைத் தந்து, பழிப்பதுபோலப் புகழ்ந்த குறிப்புச் சொல்லாய் நின்றது. பெருந்தேன் - குறை யாது நிற்கும் தேன். பில்க - சிந்த. 'ஏதும் ஆம் மணியே'

447 காப்பாய் படைப்பாய் கரப்பாய் முழுதுங்
கண்ணார் விசும்பின் விண்ணோர்க் கெல்லாம்
மூப்பாய் மூவா முதலாய் நின்ற
முதல்வா முன்னே எனையாண்ட
பார்ப்பா னேஎம் பரமாஎன்று
பாடிப் பாடிப் பணிந்து பாதப்
பூப்போ தணைவ தென்றுகொல் லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 10

திருச்சிற்றம்பலம்

என்பது, உம்மை தொக, 'ஏதாம் மணியே' என நின்றது. 'எப்போதும் ஏதும் ஆம் மணியே' என்றதனால், இறைவன், வேண்டுவார் வேண்டும் பொருளாய் நின்று பயன் தருதல் குறிக்கப்பட்டது. இனி, 'மேதா மணியே' எனப் பிரிப்பின், மோனை நயம் கெடுதலேயன்றி, 'பில்க' என்னும் எச்சத் திற்கும் முடிபு இன்றாம் என்க. 'பாதப் போதினை ஆய்ந்து அணைவது என்றுகொல்லோ' என்க, 'பாதப் போதினை ஆய்ந்து அணைவது என்றுகொல்லோ' என்க. ஆய்தல் - அவற்றின் பெருமையைப் பல்காலும் நினைத்தல்.

447. இடைநிற்கற்பாலதாய, 'காப்பாய்' என்பது, செய் யுள் நோக்கி முன் நின்றது. "முழுதும்" என்றதில், இரண்டா வது இறுதிக்கண் தொக்கது. கண் ஆர் - இடம் நிறைந்த. மூப்பாய் - உயர்ந்து நிற்பவனே. இவ்விடத்து இச்சொற்கு இதுவே பொருளாகச் சிவஞானமுனிவரர், "பேறிழ வின்ப மோடு" என்னும் சிவஞானசித்திச் செய்யுள் (சூ. 2.9.) உரையில் குறித்தல் காண்க. மூவா - கெடாத. மூத்தொழியும் முதல் களாய் நிற்பவரும் உளராகலான் அவரிற் பிரித்தற்கு, "மூவா முதலாய் நின்ற முதல்வா" என்று அருளிச்செய்தார். பார்ப் பானே - பார்ப்பன வேடம் பூண்டவனே. பூ - பொலிவு. இது, 'பூம்போது' என மெல்லெழுத்து மிக்கு முடிதலேயன்றி. இவ்வாறு வல்லொற்று மிக்கு முடிதலும் இலக்கணமாதல் உணர்க.

28. வாழாப் பத்து

[இறைவனைப் பிரிந்து வாழமாட்டாமையைத் தெரிவிக்கும் பத்துப் பாடல்களின் தொகுதி வாழாப் பத்து. செத்திலாப் பத்து, 'உனது பிரிவாற்றுமையால் செத்தொழியும் மெய்யன்பில்லாதவன் யான்' என்றதாகலின், இஃது அதனின் வேறுதல் அறிக. இதன் பாடல்தோறும், இறைவனை, "வருக என்று அருள்புரியாய்" என வேண்டிக்கொள்ளுதலின், 'அதுவே வீடு பேற்றிற்கு வழி' என்னும் கருத்தினுல், இதற்கு, 'முத்தியுபாயம்' எனக் குறிப்புரைத்தனர் முன்னோர். இது திருப்பெருந்துறையில் அருளிச்செய்யப்பட்டது என்பதே பதிப்புக்களில் காணப்படுவது. இது முழுதும், எழுசீரடி விருத்தத்தால் ஆயது.]

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

448 பாரொடு விண்ணுய்ப் பரந்த எம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை யானுல்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே. 1

---

448. பார் - பூமி. "சிர்" என்றது, செம்மையை. 'என்றும் செம்மையொடு விளங்குபவனே' என்பது கருத்து. 'நான்மற்றுப் பற்றிலேன்' என இயையும், 'ஆண்ட நீ அருளிலையானுல் யாரொடு நோகேன்? ஆர்க்கெடுத்துரைக்கேன்' என்க. "ஆண்ட நீ" என்றதனுல், 'அபலராகிய பிறர் யாரொடு' என்பது பெறப்படும். 'உன்னைப் பிரிந்து வாழ்கிலேன்' என்க. கண்டாய், முன்னிலை யசை.

449 வம்பனேன் தன்னை ஆண்டமா மணியே
மற்றுநான் பற்றிலேன் கண்டாய்
உம்பரும் அறியா ஒருவனே இருவர்க்
குணர்விறந் துலகமூ டுருவுஞ்
செம்பெரு மானே சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
எம்பெரு மானே என்னையாள் வானே
என்னைநீ கூவிக்கொண் டருளே. 2

450 பாடிமால் புகழும் பாதமே அல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
தேடிநீ ஆண்டாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஊடுவ துன்னோ டுவப்பதும் உன்னை
உணர்த்துவ துனக்கெனக் குறுதி
வாடினேன் இங்கு வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே. 3

---

449. வம்பன் - வீணன். 'ஒன்றுக்கும் ஆகாத என்னை உயர்ந்தவனாகச் செய்த பெரியோனே' என்றபடி. இருவர், மாலும் அயனும். உணர்வு இறந்து - உணரும் நிலையைக் கடந்து. ''செம்பெருமானே'' என்றது, 'நெருப்புருவாகிய பெருமானே' என்றவாறு. கொண்டு - ஏற்றுக்கொண்டு.

450, 'ஊடுவதும்' என்ற உம்மை தொகுத்தல். ஊடுதல்- வருந்திப் பேசுதல். உவப்பது - மகிழ்ந்து புகழ்தல். 'இவை யிரண்டிற்கும் புலனாவார் உன்னையன்றி எனக்குப் பிறர் இலர்' என்றபடி. 'உறுதியே' என்னும் பிரிநிலை ஏகாரம், தொகுத் தல். 'உனக்கு யான் உணர்த்துவது, எனக்கு உறுதி (நன்மை) யாவனவற்றையே' என்க. நின் திருவுள்ளமும் எனக்கு உறுதி யருள்வதே யாகலின், எனது வேண்டுகோளைக்கேட்டு அருள் செய்' என்றவாறு.

451 வல்லைவா ளரக்கர் புரமெரித் தானே
மற்றுநான் பற்றிலேன் கண்டாய்
தில்லைவாழ் கூத்தா சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
எல்லைமூ வுலகும் உருவியன் றிருவர்
காணும்நாள் ஆதியீ றின்மை
வல்லையாய் வளர்ந்தாய் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே. 4

452 பண்ணினேர் மொழியாள் பங்கநீ யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
திண்ணமே ஆண்டாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
எண்ணமே உடல்வாய் மூக்கொடு செவிகண்
என்றிவை நின்கணே வைத்து
மண்ணின்மேல் அடியேன் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே. 5

---

451. 'அரக்கர் புரத்தை வல்லை எரித்தோனே' என இயையும். வல்லை - விரைவில். 'மூவுலகின் எல்லையையும் உருவி' என்க. 'ஆதி ஈறு என்னும் இரண்டும் இலனாக வல்லையாய்' என உரைக்க. இன்மை, ஆகுபெயர். 'இன்மையாக' என ஆக்கம் வருவிக்க.

452. "பண்ணின்" என்றதில் இன், வேண்டாவழிச் சாரியை. திண்ணமே ஆண்டாய் - ஐயத்திற்கிடனின்றி என்னை உனக்கு அடியவனாகக் கொண்டாய். "ஆண்டாய்" என்றது முற்று. இதன்பின், 'ஆதலால்' என்பது வருவித்து, அதனை, "வருக என்று அருள்புரியாய்" என்றதனோடு முடிக்க. எண்ணம் - மனம். 'மண்ணின்மேல் வாழினும், எண்ணம் முதலியவற்றை உன்பால் வைத்து வாழின் கேடில்லை; யான் அவ்வாறு வாழவல்லனல்லேன்; ஆதலின், நின்பால் வருக என்று அருள்புரியாய்' என்றவாறு.

453 பஞ்சின்மெல் லடியாள் பங்கநீ யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
செஞ்செவே ஆண்டாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
அஞ்சினேன் நாயேன் ஆண்டுநீ அளித்த
அருளினை மருளினால் மறந்த
வஞ்சனேன் இங்கு வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே. 6

454 பரிதிவாழ் ஒளியாய் பாதமே யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
திருவுயர் கோலச் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
கருணையே நோக்கிக் கசிந்துளம் உருகிக்
கலந்துநான் வாழுமா றறியா
மருளனேன் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே. 7

---

453. செஞ்செவே - மிகச் செம்மையாக; ஒருபொருட் பன்மொழி. 'அருளினை மறந்தமையால் மீளவும் முன்னை நிலையே ஆகுங்கொலோ என்று அஞ்சுகின்றேன்' என்பது பொருளாதல் அறிக. வஞ்சன் - நாடகமாத்திரையாக நடிப் பவன்.

454. பரிதி வாழ் - சூரிய மண்டலத்தின்கண் வாழ்கின்ற. ஒளியாய் - ஒளியுருவினனே, சூரிய மண்டலத்தின் நடுவில் 'இறைவன் சதாசிவ மூர்த்தியாய் எழுந்தருளியுள்ளான்' என்பது, சைவாகமநூல் துணிபு. சைவர் பகலவன்பால், இம் மூர்த்தியை நோக்கியே வணங்குவர்.

"அருக்கன் பாதம் வணங்குவர் அந்தியில்
அருக்க னாவான் அரனுரு அல்லனோ"

என்ற அப்பர் திருமொழியையும் காண்க (திருமுறை-5.100.8) 'காயத்திரி மறையின் பொருளும் இம்மூர்த்தியேயல்லது, சூரியனல்லன்' என்பதை,

455 பந்தணை விரலாள் பங்கநீ யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
செந்தழல் போல்வாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
அந்தமில் அமுதே அரும்பெரும் பொருளே
ஆரமு தேஅடி யேனை
வந்துய ஆண்டாய் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே. 8

456 பாவநா சாஉன் பாதமே யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
தேவர்தந் தேவே சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
மூவுல குருவ இருவர்கீழ் மேலாய்
முழங்கழ லாய்நிமிர்ந் தானே
மாவுரி யானே வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே. 9

" இருக்கு நான்மறை ஈசனை யேதொழும்
கருத்தி னைஅறி யார்கன் மனவரே "

என்னும் அத்திருப்பாட்டின் பிற்பகுதி உறுதிப்பட விளக்குகின்றது. இனி, 'பரிதியினிடத்துள்ள ஒளிபோலும் உருவினனே' என உரைப்பாரும் உளர். திரு - அழகு. கோலம் - வடிவம். "வாழுமாறு அறியா மருளனேன்" என்றது, முன்னர் உடன்செல்ல ஒருப்படாது நின்றமையை.

455. "அந்தம் இல் அமுது", "ஆரமுது" என்றவை, இல்பொருள் உவமைகள். அருமை, தேவரும் பெறுதற்கருமை. அஃது இனிது விளங்குதற்பொருட்டு இருதொடராக்கி அருளிச்செய்தார்.

456. பாவநாசன் - பாவத்தை அழிப்பவன். சிவனை மறந்து செய்வன பலவும் பாவமே என்பதே சிவஞானியர் கருத்து. "கீழ்மேலாய்" என்றதனை, 'கீழ்மேலாக' எனத் திரிக்க. மா - யானை.

457 பழுதில்தொல் புகழாள் பங்கநீ யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
செழுமதி அணிந்தாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
தொழுவனோ பிறரைத் துதிப்பனோ எனக்கோர்
துணையென நினைவனோ சொல்லாய்
மழவிடை யானே வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே. 10

திருச்சிற்றம்பலம்

---

457. பழுது, பதியைவிட்டு நீங்கியிருத்தல். அஃது உமையம்மைக்கு எக்காலத்தும் இன்மையால், "பழுதில்" என்றும், அங்ஙனம் நிற்றல் அனாதியாகலின், அதனை, "தொல்புகழ்" என்றும் அருளிச்செய்தார். செழுமை - இளமை. 'சொல்லாய்' என்றது, 'இவ்வுறுதிப்பாடு நீ அறிந்ததேயன்றோ' என்னும் குறிப்பினது.

பழமறை முழுதுண ரந்தணர் பலர்தொழ நடமுயல் கின்றவர்
மழுவுழை கரமிசை கொண்டிட மருவிய கவுரி மகிழ்ந்திட
விழைதகு மிரசித பொங்கொளி விடுமுயர் கயிலை விலங்கலில்
அழகுறு தபனிய மண்டப மதனிடை யருள்கொ டிருந்தனர். 41

மதுமலர் கரமிசை கொண்டுநின் வழிவழி யடியவ ரென்றுதம்
முதுமறை தெரிய மொழிந்தெதிர் முறைமுறை முனிவர் வணங்கினர்
இதுபர னருளை வழங்குவ தெனவரி பிரம ரெழுந்துநம்
பதநிலை பெறவரு ளென்றிரு பரிபுர கழல்கள் பணிந்தனர். 42

பரவரு மணிகள் விளங்கிய பணவர வணியர னங்கமு
மருவிய தரள வடந்திகழ் மதிநுதன் மலைமக ளங்கமும்
இரவியு மதியு மிருந்தென வெதிரெதி ரிலகுதல் கண்டனர்
அரகர சிவசிவ வென்றுள மயர்வுற வழுதன ரன்பினர். 43

— திருவாதவூரடிகள் புராணம்.

29. அருட் பத்து

[இறைவனது அருளை வேண்டும் பத்துப் பாடல்களின் தொகுதி அருட்பத்து. இதன் எட்டாம் திருப்பாடலில், 'பத்தியாய் நினைந்து பரவுவர் தமக்குப் பரகதி கொடுப்பவன் இறைவன்' எனக் குறித்தலாலும், பரகதியாவது மாமாயை யையும் கடந்தது ஆதலாலும் இதற்கு, 'மகாமாயா சுத்தி' எனக் குறிப்புரைத்தனர்போலும் முன்னோர். இது, திருப் பெருந்துறையில் அருளிச்செய்யப்பட்டது என்பதே பதிப்புக் களில் காணப்படுவது. இதுவும் முற்றிலும் எழுசீரடி விருத்தத் தால் ஆயது.]

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

458 சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள்வெண் ணீற்றாய்
பங்கயத் தயனுமா லறியா
நீதியே செல்வத் திருப்பெருந் துறையில்
நிறைமலர்க் குருந்தமே வியசீர்
ஆதியே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. 1

---

458. சோதி - எல்லாவற்றையும் அடக்கி விளங்கும் பேரொளி. இஃது இறைவனது தன்னியல்பாகிய, 'சிவம்' என்னும் நிலையைக் குறித்து அருளிச்செய்தது. சுடர் - அப் பேரொளியின் கூறு. இது, 'சத்தி' என்னும் நிலையைக் குறித்து அருளிச்செய்தது. சூழ் ஒளி விளக்கு - ஓர் எல்லையள வில் பரவும் ஒளியை உடைய விளக்கு. இது சத்தியின் வியாபாரத்தால் வரும் பலவகை நிலைகளைக் குறித்து அருளிச் செய்தது. இம்மூன்றும் உவமையாகு பெயர்கள். சுரி குழல் - கடை குழன்ற கூந்தல். 'மடந்தையது பாதியை உடைய வனே' என்க. பால்கொள் - பாலினது தன்மையைக்கொண்ட, தன்மையாவது, நிறம். 'மாலும்' என்னும் உம்மை தொகுத்

459 நிருத்தனே நிமலா நீற்றனே நெற்றிக்
கண்ணனே விண்ணுளோர் பிரானே
ஒருத்தனே உன்னை ஓலமிட் டலறி
உலகெலாந் தேடியுங் காணேன்
திருத்தமாம் பொய்கைத் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அருத்தனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. 2

460 எங்கணா யகனே என்னுயிர்த் தலைவா
ஏலவார் குழலிமார் இருவர்
தங்கணா யகனே தக்கநற் காமன்
தனதுடல் தழலெழ விழித்த

தல். "நீதி" என்றது, 'நீதியையே வடிவமாக உடைய கடவுள்' என்னும் பொருட்டாய் நின்ற ஆகுபெயர். எனவே, "அறியா" என்றது, ஆகுபெயர்ப் பொருளையே சிறப்பித்து நிற்றல் அறிக. செல்வம் - அருட் செல்வம். குருந்தம் - குருந்தமர நிழல். சீர் - புகழையுடைய. ஆதி - எப்பொருட்கும் முதல். ஆதரித்து - விரும்பி. "அழைத்தால்" என்றது, 'அழைக்கின்றேனாதலின்' என்னும் பொருட்டு. அதெந்து' என்பது, 'காரணம்' என்னும் பொருளையுடையதோர் திசைச்சொல் என்ப. எனவே, 'என் அழைப்புக் காரணம் உடையதே எனக் கருதி எனக்கு அருள் செய்' என்பது பொருளாம். இவ்வாறன்றி, 'அதெந்துவே என்பது, அஃது என் என்னும் பொருளையுடைய திசைச்சொல்' எனவும், 'அஞ்சாதே என்னும் பொருளையுடைய திசைச்சொல்' எனவும் பலவாறு கூறுவாரும் உளர்.

459. நிருத்தன் . நடனம் புரிபவன். ஒருத்தன் - ஒப்பற்றவன். திருத்தம், 'தீர்த்தம்' என்பதன் சிதைவு. அருத்தன் - மெய்ப்பொருளாய் உள்ளவன்.

460. "எங்கள்" என்றது, அடியவர் பலரையும். ஏலம் - மயிர்ச் சாந்து. இருவர், உமையும் கங்கையும். தக்க - மயக்குதல் தொழிலுக்குப் பொருந்திய. நற் காமன் - அழகிய மன்

செங்கணு யகனே திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அங்கணு அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. 3

461 கமலநான் முகனும் கார்முகில் நிறத்துக்
கண்ணனும் நண்ணுதற் கரிய
விமலனே எமக்கு வெளிப்படா யென்ன
வியன்தழல் வெளிப்பட்ட எந்தாய்
திமிலநான் மறைசேர் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அமலனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. 4

462 துடிகொள்நே ரிடையாள் சுரிகுழல் மடந்தை
துணைமுலைக் கண்கள்தோய் சுவடு
பொடிகொள்வான் தழலிற் புள்ளிபோல் இரண்டு
பொங்கொளி தங்குமார் பினனே

மதன். செங்கண் - நெருப்புருவாகிய கண். அங்கணன் - கருணையுடையவன்.

461. வெளிப்படாய் என்ன - வெளிப்பட்டு அருள்புரிவாயாக என்று வேண்ட. இங்ஙனம் வேண்டினோர் திருப்பெருந் துறையில் இருந்த அடியார்கள். எனவே, இதற்கு, 'அடியார்கள்' என்னும் தோன்றா எழுவாய் வருவிக்க. வியன்தழல் - பெரிய நெருப்பு. இது திருப்பெருந்துறையில் தோன்றியது. இவ்வாறன்றி 'நான்முகனும், கண்ணனும் வேண்ட அவர்கட்கு அவர் முன் நின்ற தழற்பிழம்பினின்றும வெளிப்பட்ட' என்று உரைப்பாரும் உளர். திமிலம் - பேரொலி.


462. துடிகொள் - உடுக்கையின் தன்மையைக்கொண்ட. தன்மை, வடிவம். பொடி - சாம்பல். 'நீறுபூத்த நெருப்பு' என்னும் இவ்வுவமை, திருநீற்றை யணித்த சிவபெருமானது செம்மேனியின் தன்மையை விளக்க வந்தது. 'நீறுபூத்த

செடிகொள்வான் பொழில்சூழ் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அடிகளே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. 5

463 துப்பனே தூயாய் தூயவெண் ணீறு
துதைந்தெழு துளங்கொளி வயிரத்
தொப்பனே உன்னை உள்குவார் மனத்தின்
உறுசுவை அளிக்கும்ஆ ரமுதே
செப்பமா மறைசேர் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அப்பனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. 6

நெருப்பின்மேல் இரண்டிடத்தில் சிறிது அந்நீற்றினை நீக்கினால், முழுவதும் வெண்மையாய் உள்ள அந்நெருப்பின் நடுவில், இரண்டு மாணிக்கங்களைப் பதித்ததுபோன்ற இரண்டு செம்புள்ளிகள் எவ்வாறு காணப்படுமோ அவ்வாறு காணப்படுகின்றன, உமையம்மை தழுவிய வடுவினையுடைய சிவபெருமானது திருநீற்றை யணிந்த மார்பில் தோன்றும் செம்புள்ளிகள்' என அடிகள் அருமையாக வியந்தருளிச்செய்கின்றார். கச்சியம்பதியில் கம்பையாற்றில் உமையமமை சிவபெருமானை இலிங்க உருவில் வழிபட்டிருக்குங்கால், சிவபெருமான் கம்பையாறு பெருக்கெடுத்து வரச் செய்ய, அதனைக்கண்ட அம்மை பெருமானது திருமேனிக்கு யாது நேருமோ என அஞ்சித் தனது இரு கைகளாலும், மார்பினாலும் பெருமானை அணைத்துத் தழுவிக்கொண்டமையைக் காஞ்சிப் புராணத்தில் விளங்கக் காண்க. ''எழுந்ததிரை நதித்திவலை' என்னும் திருத்தாண்டகத்துள் நாவுக்கரசரும், 'எள்க லின்றி இமையவர் கோனை'' என்னும் திருப்பாடலுள் நம்பியாரூரரும் இவ்வரலாற்றை இனிதெடுத்து அருளிச்செய்திருத்தலை அறிக. செடி - புதல்.

463. துப்பன் - உயிர்கட்குத் துணைவலியாய் உள்ளவன். துதைந்து - நிறைதலால். துளங்கு ஒளி - வீசுகின்ற ஒளியானது. ''வயிரம்'' என்றது அதன் ஒளியை, ''வயிரத்து''



திருக்கயிலை

464 மெய்யனே விகிர்தா மேருவே வில்்லா
மேவலர் புரங்கள்மூன் றெரித்த
கையனே காலாற் காலனைக் காய்ந்த
கடுந்தழற் பிழம்பன்ன மேனிச்
செய்யனே செல்வத் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
ஐயனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே, 7

465 முத்தனே முதல்வா முக்கணா முனிவா
மொட்டறு மலர்பறித் திறைஞ்சிப்
பத்தியாய் நினைந்து பரவுவார் தமக்குப்
பரகதி கொடுத்தருள் செய்யுஞ்
சித்தனே செல்வத் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அத்தனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. 8

என்றதில் அத்து, 'வேண்டாவழிச் சாரியை. உறுசுவை - மிக்க சுவை. 'தேவர் அமுதம், உண்பார் நாவிலன்றி உள்குவார் மனத்தில் சுவைதாராமைபோலாது, உள்குவார் மனத்தின் உறு சுவை அளிக்கும் அரிய அமுதம் நீ' என்றபடி. செப்பமாம்-திருத்தமாகிய.

464. விகிர்தன் - உலகியலின் வேறுபட்டவன், மேவலர் - பகைவர். வில் ஏந்தியது கையாகலின், அதுவே திரிபுரத்தை எரித்ததாக அருளிச்செய்தார்.

465. சிறந்த தவக்கோலம் உடைமை பற்றிச் சிவ பெருமானை, 'முனிவன்' எனக் கூறுவர் பெரியோர். "படர் புன்சடை - முனியாய் நீ உலகம் முழுதாளினும் - தனியாய்" (திருமுறை 5 - 96.3,) என்றாற்போலவரும் திருமொழிகளைக் காண்க. विश्वाधिको रुद्रो महर्षिः । என உபநிடதமும் கூறும். மொட்டு - அரும்பு; என்றது, போதினை (பேர ரும்பை). 'போதாய நிலையைக் கடவாத மலர்' என்க.

466 மருளனேன் மனத்தை மயக்கற நோக்கி
மறுமையோ டிம்மையுங் கெடுத்த
பொருளனே புனிதா பொங்குவா ளரவங்
கங்கைநீர் தங்குசெஞ் சடையாய்
தெருளுநான் மறைசேர் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அருளனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. 9

467 திருந்துவார் பொழில்சூழ் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
இருந்தவா றெண்ணி ஏசறு நினைந்திட்
டென்னுடை யெம்பிரான் என்றென்
றருந்தவா நினைந்தே ஆதரித் தழைத்தால்
அலைகடல் அதனுளே நின்று
பொருந்தவா கயிலை புகுநெறி இதுகாண்
போதராய் என்றரு ளாயே. 10

திருச்சிற்றம்பலம்

கதி - முத்தி. சித்தன் - வியத்தகு செயலைச் செய்பவன்; தாழ்நிலையில் நின்றாரை உயர்நிலையில் வைத்தல் பற்றி இங்ஙனம் அருளிச்செய்தார். அத்தன் - அப்பன்; தலைவனுமாம்.

466. நோக்குதல் - கருதுதல். மனத்தைக் கருதுதலாவது, ‘இஃது இவ்வாறு ஆகுக’ என எண்ணுதல். இங்ஙனம் எண்ணுதலை, ‘மான திக்கை’ என்ப. மறுமை - மறு பிறப்பு. இப்பிறப்பைக் கெடுத்தலாவது, உலகியலில் உழலாது சிவன் முத்தத்தன்மையை அடையச் செய்தல். பொருளன் - பரம் பொருளானவன். அருளன் - அருளுடையவன்.

467. திருந்து - திருந்திய; அழகுபெற்ற. சீர் - நிலை. இருந்தவாறு - இருந்த படியை. ஏசறு நினைந்து - துன்புற்று நினைத்து. இட்டு, அசைநிலை. ‘என்றென்று பன்முறை நினைந்து’ என்க. அருந் தவா - அரிய தவக்கோலத்தை

உடையவனே. ''எண்ணி, நினைந்திட்டு, நினைந்து'' என்றவை வேறுவேறு பொருளைச் சார்ந்து வந்தமை அறிக. ''அலைகடல்'' என்றது, பெருந் துன்பத்தைக் குறித்த சிறப்புருவகம். அது, பகுதிப்பொருள் விகுதி. ''நின்று'' என்றது, நீக்கப் பொருளின் வரும் ஐந்தாம் வேற்றுமைப் பொருளதாகிய இடைச்சொல். எனவே, அலைகடலின் அகத்தினின்றும் வா' என்பது பொருளாயிற்று. ''கயிலை'' எனப் பின்னர் வருகின்றமையின், வாளா, ''பொருந்த வா'' என்றார். எனவே, 'கயிலையைப் பொருந்த வா; அதன்கண் புகும் நெறி இது; அந்நெறியே போதராய் என்று அருளாய்' என்றதாயிற்று. ''இது'' என்றது, 'இது எனக் காட்டி' என்றபடி. போதராய் - வருவாயாக.

அடியொழி மரமென நொந்துபி னவனியில்விழுவதொழிந்துநின்
உடனுறை பெருமைவழங்குவ துளதுகொலெனநினைநெஞ்சொடு
மடலவிழ் கடிகமழ்ந்தரு மலர்பல முறைமுறை சிந்திமுன்
இடமிஃ தெனமகிழ்ந்திர னிமையவ ரெவருமிறைஞ்சினர், 44

திண்டிறன் மிகுஞ்சுரிகை யுந்திகழ் பிரம்புங்
கொண்டருகு நின்றுகுரு நந்தியருள் கூரப்
புண்டரிக மாதுபுவி மங்கையெழில் சிங்கா
அண்டர்மட வார்களுல கன்னைபுற மன்ன. 45

துன்னுபல பூதகண நாதர்புடை சூழக்
கின்னரர்கள் கந்தருவர் கீதவிசை பாட
மின்னுமுடி மன்னுநதி வீசுதிரை நன்னீர்
என்னவொளிர் சாமரை யெழுந்தழகு செய்ய, 46

இந்தவள மல்குசபை யின்னல்கெட மன்னுந்
தந்தைமணி மன்றிலுறை தாண்டவ பதத்தோன்
செந்தமிழின் வந்தசிவ ஞானவமு துண்டாம்
அந்தமி லருட்கடலை யாண்டருள் வேண்டி. 47

—திருவாதவூரடிகள் புராணம்.

30. திருக்கழுக்குன்றப் பதிகம்

[இது, திருக்கழுக்குன்றத்தைப் பற்றிய பதிகமாதல் வெளிப்படை. 'பதிகம்' எனப்பட்ட இது, ஏழு திருப்பாட்டுக்களையே உடையதாயிருத்தலின், ஏனைய பாட்டுக்கள் கிடைத்தில என்க இத்தலத்தில் அடிகட்கு இறைவன் முன்னர்த் திருப்பெருந்துறைக்கண் வந்து ஆட்கொண்ட கோலத்தையே காட்டினான் என்பது இதன்கண் இனிது விளங்கிக் கிடத்தலானும், புராணமும் அங்ஙனமே கூறுதலானும் இதற்கு, 'குருதரிசனம்' என்ற குறிப்புரைத்தனர் முன்னோர். இது திருக்கழுக்குன்றத்தில் அருளிச் செய்யப்பட்டது என்பது அனைவர்க்கும் ஒத்த துணிபு. இது முழுவதும் எழுசீரடிச் சந்த விருத்தத்தால் ஆயது.]

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

468 பிணக்கி லாதபெ ருந்து றைப்பெரு
மான்உன் நாமங்கள் பேசுவார்க்
கிணக்கி லாததோர் இன்ப மேவருந்
துன்ப மேதுடைத் தெம்பிரான்
உணக்கி லாததோர் வித்து மேல்வினை
யாமல் என்வினை ஒத்தபின்
கணக்கி லாத்திருக் கோலம் நீவந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே. 1

---

468. 'பிணக்கிலாத பெருமான்' என இயையும். பிணக்கிலாமை, சிறியோரையும் ஆட்கொள்ளும் வள்ளன்மை. இணக்கு - இணங்குதல்; பிறிதொன்றனோடு நிகர்த்தல். 'இன்பமே துன்பமே துடைத்து வரும்' என மாற்றியுரைக்க. ஏகாரம் இரண்டனுள் முன்னது பிரிநிலை; பின்னது தேற்றம். உணக்கிலாதது ஓர் வித்து - உலர்த்தப்படாத ஒரு விதை; 'ஒன்று' என்பது, ஒருவகையைக் குறித்தது. 'வினையாமையை ஒத்தபின்' என இயையும். 'வினையாமல்' என்பது பாடமன்று. விதைகள் யாவும் வினைவின் பின்னர் ஈரம் புலர

உலர்த்தப்பட்ட பின்பே முளையைத் தோற்றுவித்தற்குரிய பக்குவத்தை எய்தும்; அவ்வாறின்றி ஈரத்தோடே நிழலிலே கிடப்பின், அதன்கண் உள்ள முளைத்தற் சத்தி கெட்டொழியும். அவ்வாறே செய்யப்பட்ட வினையாகிய ஆகாமியம் அதன்கண் மேலுமேலும் நிகழும் விருப்பு, வெறுப்புக்களால் முறுகி நின்ற வழியே பின்னர்ப் பிறவியைத் தோற்றுவிக்கும். இவ்விருப்பு வெறுப்புக்கள் அஞ்ஞானத்தால் நிகழ்வன. இறைவன், அருளிய ஞானத்தில் உறைத்து நிற்பின், அஞ்ஞானங் கெட, விருப்பு வெறுப்புக்கள் எழமாட்டா. அவை எழாதொழியவே, ஒரோவழிப் பயிற்சி வயத்தால் செய்யப்படும் ஆகாமிய வினை முறுகிநின்று பின்னர்ப் பிறவியைத் தோற்றுவிக்கமாட்டாது கெட்டு விடுமாகலின், ''என்வினை உணக்கிலாததோர் வித்து மேல்விளையாமையை ஒத்தபின்'' என்று அருளிச்செய்தார். எனவே, அடிகள் தாம் முன்னைப் பயிற்சிகாரணமாக இறைவன் அருள்வழியினின்றும் சிறிது நீங்கினமையால் விளைந்த குற்றம், கடிதில் அந்நிலையினின்றும் நீங்கி முன்போலவே அருளில் உறைத்து நின்றமையாற் கெட்டொழிந்தபின்னர், இறைவன் தமக்கு முன்போலத் தோன்றியருளினமையைத் தெரித்தவாறு யிற்று. சஞ்சித வினை கெடுதலுக்கு, காய்ந்த விதை வறுக்கப் படுதலை உவமையாகக் கூறுவர். அடிகள் இங்கு ஆகாமிய வினை கெடுதலுக்கு, விதை உணக்கப்படா தொழிதலை உவமை கூறினர். ஞானியர்க்கு, 'சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமியம்' என்னும் மூவகை வினைகளும் கெடுமாற்றினை,

'' எல்லையில் பிறவி நல்கும்
 இருவினை எரிசேர் வித்தின்
ஒல்லையின் அகலும்; ஏன்ற
 உடல்பழ வினைய தூட்டும்;
தொல்லையின் வருதல் போலத்
 தோன்றிரு வினைய துண்டேல்,
அல்லொளி புரையு ஞானத்
 தழல்உற அழிந்து போமே ''

எனவும் (சிவப்பிரகாசம் - 89),

'' ஏன்ற வினை உடலோ டேகும்;இடை ஏறும்வினை
 தோன்றில், அருளே சுடும் ''

469 பிட்டு நேர்பட மண்சு மந்த
பெருந்து றைப்பெரும் பித்தனே
சட்ட நேர்பட வந்தி லாத
சழக்க னேன்உ னைச் சார்ந்திலேன்
சிட்ட னேசிவ லோக னேசிறு
நாயி னுங்கடை யாயவெங்
கட்ட னேனையும் ஆட்கொள் வான்வந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே. 2

எனவும் (திருவருட்பயன் - 98) மெய்ந்நூல்கள் விளக்குதல் காண்க.

"தன்னை அறிந்திடும் தத்துவ ஞானிகள்
முன்னை வினையின் முடிச்சை அவிழ்ப்பர்கள்,
பின்னை வினையைப் பிடித்துப் பிசைவர்கள் :
சென்னியில் வைத்த சிவனரு ளாலே"

என்ற திருமந்திரத்தையும் (2610) காண்க. முன்னை வினை, சஞ்சிதம். பின்னைவினை, ஆகாமியம். "வினை ஒத்தபின்" என்றதற்கு இவ்வாறன்றிப் பிராரத்த நுகர்ச்சிக்கண் வரும் இருவினையொப்பினைப் பொருளாகக் கூறின், அது திருவருள் பெறுதற்கு முன் நிகழ்ச்சியாதலின், அடிகள் நிலைக்குச் சிறிதும் ஒவ்வாமை யறிக. "கணக்கு" என்றது, முதலும், முடிவுமாய எல்லையை. இறைவன் அடியார்களுக்கு அருட்டிருமேனிகொண்டு அருளுதல் என்றும் உள்ள செயலாதல் அறிக. இனி, 'அளவில்லாத பெருமையையுடைய திருக்கோலம்' எனினுமாம். இறுதிக்கண், 'இதற்கு யான் செய்யும் கைம்மாறு யாது' என்னும் குறிப்பெச்சம் வருவித்து முடிக்க. இஃது ஏனைய திருப்பாட்டிற்கும் ஒக்கும்.

469. பிட்டு நேர்பட - உண்ட பிட்டுக்கு அளவொப்ப, 'சட்ட' என்பது பற்றிமேலே கூறப்பட்டது (பக் - 351). நேர்பட (உன்னோடு நன்கு) தலைக்கூட, சழக்கன் - பொய்யன். சிட்டன் - உயர்ந்தோன். வெங் கட்டன் - கொடிய துன்பத்தை யுடையவன். இதனுள், காட்டுதலுக்குச் செயப்படு பொருளாகிய, 'கோலம்' என்பதை, வேண்டும் இடங்களில் வருவிக்க.

470 மலங்கி னேன்கண்ணின் நீரை மாற்றி
மலங்கெ டுத்த பெருந்துறை
விலங்கி னேன்வினைக் கேட னேன்இனி
மேல்வி ளைவ தறிந்திலேன்
இலங்கு கின்ற நின் சேவ டிகள்
இரண்டும் வைப்பிட மின்றியே
கலங்கி னேன்கலங் காமலே வந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே. 3

471 பூணொ ணாததொ ரன்பு பூண்டு
பொருந்தி நாள்தொறும் போற்றவும்
நாணொ ணாததொர் நாணம் எய்தி
நடுக்கட லுள் அழுந்தி நான்
பேணொ ணாதபெ ருந்துறைப்பெருந்
தோணி பற்றி யுகைத்தலுங்
காணொ ணாத்திருக் கோலம் நீவந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே. 4

---

470. 'மலங்கினேனது கண்ணின்நீர்' என்க. மலங்குதல் - மயங்குதல். "கெடுத்த" என்ற பெயரெச்சம், "பெருந்துறை" என்ற இடப்பெயர் கொண்டது. 'பெருந்துறைக்கண் உன்னோடு வாராமல் நின்றுவிட்டேன்' என்க. வினைக் கேடன் - வினையாகிய கெடுநெறியை உடையேன். இனி - இப்பொழுது; இது, விலங்கினேன்" என்றதனோடு முடியும். மேல் விளைவது, நின்திருவடியைப் பெறுதல், பிறவிக்கடலில் வீழ்தல் என்னும் இரண்டில் இன்னது என்பது, 'சேவடிகள் வைப்பிடம் இன்றி' என்றது, 'நீ மீளத் தோன்றியருளும் இடம் கிடைக்கப் பெறாமல்' என்றபடி.

471. பூணொணாததொர் அன்பு - என் தரத்திற்கு மேற்பட்ட ஓர் அன்பு. நாணொணாததோர் நாணம் - என் நிலைக்கு வேண்டாத ஓர் நாணம். 'அந்நாணமாகிய கடல்' என்க, 'பேணொணாத தோணி' என இயையும். பேணொணாத - எளிதில் பாதுகாத்துக்கொள்ளுதற்கு இயலாத. பெருந்துறைப் பெருந் தோணி - திருப்பெருந்துறைக்கண் கிடைத்த திருவருளாகிய

472 கோல மேனிவ ராக மேகுண
மாம்பெ ருந்துறைக் கொண்டலே
சீல மேதும் அறிந்தி லாதஎன்
சிந்தை வைத்த சிகாமணி
ஞால மேகரி யாக நான்உனை
நச்சி நச்சிட வந்திடுங்
கால மேஉனை ஓதநீ வந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே.

தோணி. உகைத்தல் - ஓட்டுதல். காணொணா - ஒருவர்க்கும் காண இயலாத. 'யான் உன்மாட்டுப் பேரன்பு உடையேனாய் இருந்தும் உன்னொடு வரும் பேற்றினைப் பெறுமையால், அப்பேற்றினைப் பெற்றோர் எள்ளும் எள்ளலுக்குப் பெருநாணங் கொண்டு, அங்ஙிலை நீங்குதற்கு நீ திருப்பெருந்துறைக்கண், தில்லையில் வருக என்று அருளிச்செய்த திருவருளையே பற்றுக் கோடாகக் கொண்டு பல தலங்களிலும் சென்று உன்னை வணங்கிவர, திருக்கழுக்குன்றத்தில் உனது அரிய திருக் காட்சியை எனக்குக் காட்டியருளினாய்' என்பது இதன் திரண்ட பொருள். "கடல்" என்றது, துன்பத்தை எனினு மாம்.

472. கோலமேனி வராகமே-அழகிய திருமேனியைப்பன்றி யுருவாகக் கொண்டவனே, இது பன்றிக்குட்டிகட்கு இறைவன் தாய்ப்பன்றியாய்ச் சென்று பால்கொடுத்த திருவிளையாடல் பற்றி வந்தது. 'குணமாம் கொண்டலே' என இயையும். குணம், அருட் குணங்களாகிய தன்வயமுடைமை முதலியன. 'குணமே வடிவாகிய கொண்டல்' என்க. எனவே, 'அக்கொண்டலால் தரப்படுவதும் குணமே' என்பது போந்தது. 'என் சிந்தை தன் அகத்தே பொருந்தவைத்துக்கொண்ட சிகாமணியே' என்றபடி. கரி - சான்று. நச்சுதல் - விரும்புதல். நச்சி - நச்சுதலால். அடிகள் இறைவனையன்றிப் பிறிதொன்றையும் விரும்பாமையை உலகம் அறியுமாகலின், 'ஞாலமே கரியாக நான் உனை நச்சி' என்றார். "நச்சி" என்னும் எச்சம், "வந்திடும்" என்றதனோடு முடிந்தது. நச்சிட வந்திடும் காலமே என்றும் இடையறாது அன்பு செய்யுமாறு உன்பால் யான் வருதற்குரிய காலத்திலே; ஏகாரம், பிரிநிலை.

473 பேதம் இல்லதோர் கற்பளித்த
        பெருந்து றைப்பெரு வெள்ளமே
ஏத மேபல பேச நீஎனை
        ஏதி லார்முனம் என்செய்தாய்
சாதல் சாதல்பொல் லாமை யற்ற
        தனிச்ச ரண்சர ணாமெனக்
காத லால்உனை ஓத நீவந்து
        காட்டி னாய்கழுக் குன்றிலே. 6

474 இயக்கி மார்அறு பத்து நால்வரை
        எண்குணம் செய்த ஈசனே
மயக்க மாயதோர் மும்ம லப்பழ
        வல்வி னைக்குள் அழுந்தவுந்

'காலமே காட்டினாய்' என இயையும். ஓத - இங்ஙனம் மகிழ்ந்து பாடும்படி.

473. பேதம் - வேறுபடுதல். கற்பு - கல்வி; என்றது ஞானத்தை, உண்மை ஞானம் என்றும் வேறுபடாது நிலைத்து நிற்பதாதல் அறிக. வெள்ளம் - இன்ப வெள்ளம். ஏதம் - குற்றம்; இஃது அடிகள்மேல் ஏதிலார் ஏற்றிக் கூறுவது. ஏதிலார் - அயலார். இவர்கள் அடிகளது அன்பு நிலையையும், இறைவனது அருள் நிலையையும் அறியாராகலின், அடிகள் உலகியலின் நீங்கிய பின்னர் அல்லல் உறுவதை, அவர் செயத் தக்கது அறியாது செய்தமையால் விளைந்ததாக அவரைப் பழித்தனர் என்க. ''என்செய்தாய்'' என்றது, 'தகாதது செய்தாய்' என்னும் பொருட்டு. தகாதது, தன் அடியவரை அல்லல் உறுவித்தது. ''என்செய்தாய்'' என்றதன் பின்னர், 'ஆயினும்' என்பது வருவிக்க. ''சாதல் சாதல்'' என்ற அடுக்கு, பன்மை பற்றி வந்தது. 'சாதலாகிய பொல்லாமை, என்க. பொல்லாமை - தீங்கு. தனிச்சரண் - ஒப்பற்ற உனது திருவடியே. சரண் ஆம் என - நமக்குப் புகலிடமாகும் என்று. உனை ஓத - நான் உன்னைப் புகழ்ந்து பாடும்படி,

474. 'யட்சன்' என்னும் ஆரியச்சொல், தமிழில், 'இயக்கன்' எனத் திரிந்து வருதலின், 'இயக்கிமார்' என்றது,

துயக்க றுத்தெனை ஆண்டு கொண்டுநின்
தூய்ம லர்க்கழல் தந்தெனைக்
கயக்க வைத்தடி யார்மு னேவந்து
காட்டினாய் கழுக் குன்றிலே. 7

திருச்சிற்றம்பலம்

தேவ கணத்தவருள் ஒருவகையினராகிய 'இயக்கர்' என்பவருள் பெண்பாலாரை என்பது வெளிப்படை. இம்மாதர் அறுபத்து நால்வருக்குச் சிவபெருமான் ஞானோபதேசம் செய்து, தனது எண்குணங்களையும் அடையச் செய்தான் என்பது, இத்திருப் பாட்டின் முதலடியிற் கூறப்பட்டது. இத்தகைய வரலாறு ஒன்று உத்தரகோசமங்கைப் புராணத்தில் காணப்படுகின்றது. மயக்கத்தால் விளைந்ததனை, ''மயக்கம்'' என்றார். 'மயக்க மாயதோர் வினை' என இயையும். மும்மல வினை, மும்மலங் களால் உண்டாகிய வினை. ''இருவினைப் பாசம் மும்மலக்கல் ஆர்த்தலின்'' (பெ. பு. நாவுக் - 129.) என்புழிப்போல, மூல கன்மத்தை வேறு வைத்து, ''மும்மலம்'' என்று அருளினார். துயக்கு - மெலிவு. 'தூமலர்' என வருதலேயன்றி, 'தூய்மலர்' எனவருதலும் வழக்கென்க. 'கயங்க' என்பது வலித்து நின்றது. கயங்குதல் - கலங்குதல். 'அடியார் முன்னே கயக்க வைத்து' என்க. 'முன்பு கயக்க வைத்து, இப்பொழுது காட்டினாய்' என்க.

மைத்தகடன் மண்ணவர்க டம்முருவில் வம்மென்
றத்தகைய பத்தர்கண நாதரை யழைத்தே
சித்திதரு தேசிகர் சிறந்தவடி வங்கொண்
டுத்தம நெடுங்கயிலை யோங்கலது நீங்கி. 48

கொன்னெறுழி தன்னுருவு கொண்டொருவர் தேடும்
பொன்னடி யெனுஞ்சலச மண்மிசை பொருந்தப்
பன்னுமறை வல்லவர் பரிந்தழல் வளர்ப்பார்
மன்னுமொரு தெய்விக வளம்பதியில் வந்தார். 49

— திருவாதவூரடிகள் புராணம்.

31. கண்ட பத்து

[இஃது அடிகள் தில்லையில் சென்று சிவபெருமானது திருக்கூத்தைக் கண்டமையைக் கூறும் பத்துப் பாடல்களின் தொகுதி. இதனானே இதற்கு 'திருத்த தரிசனம்' எனக் குறிப்புரைத்தனர் முன்னோர். இது, தில்லையில் அருளிச் செய்யப்பட்டது என்பதே பதிப்புக்களில் காணப்படுவது. இஃது அடிகள் தில்லையை அடைந்து திருக்கூத்தைக் கண்டு வணங்கியபொழுது பாடப்பட்டது எனக் கொள்ளுதற்கு இடம் உண்டு. இது நாலடித் தரவுக் கொச்சகக் கலிப்பாவால் ஆகியது.]

கொச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

475 இந்திரிய வயமயங்கி இறப்பதற்கே காரணமாய்
அந்தரமே திரிந்துபோய் அருநரகில் வீழ்வேற்குச்
சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அந்தமிலா ஆனந்தம் அணிகொள் தில்லை கண்டேனே. 1

---

475. 'இந்திரிய வயத்தால் மயங்கி' என்க. காரணமாய்-காரணம் உண்டாகப்பெற்று. அந்தரம் - வானுலகம். இஃது இயமன் உலகத்தைக் குறித்தது. வீழ்வேற்கு - வீழ்தற்கு உரியவனாய் இருந்த எனக்கு. "தெளிவித்து" என்றது, 'தெளிவித்தலாகிய நலத்தைப் புரிந்து' என்னும் பொருட்டாய் நின்று, "வீழ்வேற்கு" என்னும் நான்காவதற்கு முடிபாயிற்று. 'எனைச் சிவமாக்கி ஆண்ட' என்க. "சிவமாக்கி "என வேறு போல அருளிச்செய்தாராயினும், 'தானாக்கி' என்பதே கருத்தாதல் அறிக. "ஆக்கி ஆண்ட" என்றது, 'ஓடி வந்தான்' என்பதுபோல, ஒருவினைப் பொருட்டு. ஆனந்தம் - ஆனந்த வடிவத்தை.

476 வினைப்பிறவி என்கின்ற வேதனையில் அகப்பட்டுத்
தனைச்சிறிதும் நினையாதே தளர்வெய்திக் கிடப்பேனை
எனைப்பெரிதும் ஆட்கொண்டென் பிறப்பறுத்த [இணையிலியை
அனைத்துலகுந் தொழுந்தில்லை அம்பலத்தே கண்டேனே. 2

477 உருத்தெரியாக் காலத்தே உள்புகுந்தென் உளம்மன்னிக்
கருத்திருத்தி ஊன்புக்குக் கருணையினால் ஆண்டுகொண்ட
திருத்துருத்தி மேயானைத் தித்திக்குஞ் சிவபதத்தை
அருத்தியினால் நாயடியேன் அணிகொள்தில்லை கண்டேனே.

---

476. வினைப் பிறவி - வினையால் வரும் பிறவி. எனைப் பெரிதும் - எத்துணையோ மிகுதியாக. மிகுதி, தம் தரம் நோக்கிக் கூறியது.

477. உருத் தெரியாக் காலம் - தாய்வயிற்றில் உடம்பு உருப்பெறுதிருந்த தொடக்கக் காலம். "காலத்தே" என்ற ஏகாரம், பிரிநிலை. உள்புகுந்து - கருவினுள் புகுந்து. உளம் - சூக்கும தேகமாய் நின்ற மனம் கரு திருத்தி - பின்னர்க் கருவைச் செம்மையாக வளர்த்து. ஊன் புக்கு - பின் பிறந்து வளர்ந்த உடம்பினுள்ளும் நின்று; என்றது, 'உலகியலில் உழன்ற காலத்தும் அதற்குத் துணையாய் நின்று' என்றபடி. இறைவனது திருமேனியை, 'ஊன்' என்றல் பொருந்தாமை யின், "ஊன்புக்கு" என்றதற்கு "ஆசான் மூர்த்தியாய் எழுந்தருளிவந்து' என உரைத்தல் கூடாமை அறிக. திருத் துருத்தி, சோழநாட்டுத் தலம். தித்திக்கும் - இனிக்கின்ற; என்றது, 'இன்பம் மிகுகின்ற' என்றபடி. சிவபதத்தை - வீடு பேறாய் உள்ளவனை. அருத்தி - விருப்பம். இதனுள் அடிகள் கருவிலே திருவுடையராய் இருந்தமை புலப்படுதல் காண்க. "கருவாய்க் கிடந்து உன்கழலே நினையும் கருத்துடையேன்" என்று நாவுக்கரசரும் அருளிச்செய்தார் (திருமுறை-4-94. 6.).

478 கல்லாத புல்லறிவிற் கடைப்பட்ட நாயேனை
வல்லாள னுய்வந்து வனப்பெய்தி யிருக்கும் வண்ணம்
பல்லோருங் காணஎன்றன் பசுபாசம் அறுத்தானை
எல்லோரும் இறைஞ்சுதில்லை அம்பலத்தே கண்டேனே. 4

479 சாதிகுலம் பிறப்பென்னுஞ் சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதமிலி நாயேனை அல்லலறுத் தாட்கொண்டு
பேதைகுணம் பிறருருவம் யானெனதென் னுரைமாய்த்துக்
கோதில்அமு தானானைக் குலாவுதில்லை கண்டேனே. 5

---

478 புல்லறிவின் - புல்லறிவினால். வல்லாளனாய் - வலியின் ஆளுதல் உடையவனாய். வனப்பு - அழகு; என்றது சிறப்பினை. 'யான் வனப்பெய்தி இருக்கும் வண்ணம்' என உரைக்க. பசு பாசம் - பசுவாம் தன்மையைச் செய்யும் பாசம்.

479. அந்தணர் முதலிய நான்கு வருணங்களும், பிறப்பினாலும், ஒழுக்கத்தினாலும் உளவாகும். அவற்றுள் ஒழுக்கத்தினால் உளவாவனவற்றை, "சாதி" எனறார், அவ்வவ்வருணத்துள்ளும் அவ்வவ்வொழுக்கமுடையாரை, 'சாதியந்தணர்' முதலியோராகக் கூறும் வழக்குப்பற்றி. குலம் - குடிமை; இஃது ஒவ்வொரு வருணத்தினும் உள்ள பகுதி; இதனை, 'கோத்திரம்' என்பர் வடமொழியாளர். பிறப்பு - பிறந்த வருணம். சுழிப்பட்டு - வெள்ளச் சுழலில் அகப்பட்டு. சாதி முதலிய மூன்றும் உலகியலில் தருக்கினை உண்டாக்கி அதனுள்ளே அழுந்தச் செய்தலின் இவற்றை, "சுழி" என்றார். ஆதம் - ஆதரவு. "குணம்" என்றது, தொழிலை. பேதையது தொழில், ஏதம் கொண்டு ஊதியம் போக விடல், நாணாமை, நாடாமை, நாரின்மை, யாதொன்றும் பேணாமை (குறள் - 831, 833.) முதலியன. "பிறர் உருவம்" என்றது, பிறர் எனக் கருதி உறவும், பகையும் கொள்ளுதற்கேற்ற உருவ வேறுபாட்டுணர்வினை. உரை - செருக்குச் சொல். 'இவைகளை மாய்த்து' என்க.

480 பிறவிதனை அறமாற்றிப் பிணிமூப்பென் றிவையிரண்டும்
உறவினொடும் ஒழியச்சென் றுலகுடைய ஒருமுதலைச்
செறிபொழில்சூழ் தில்லைநகர்த் திருச்சிற்றம் பலம்மன்னி
மறையவரும் வானவரும் வணங்கிட நான் கண்டேனே. 6

481 பத்திமையும் பரிசுமிலாப் பசுபாசம் அறுத்தருளிப்
பித்தன் இவன் எனஎன்னை ஆக்குவித்துப் பேராமே
சித்தமெனுந் திண்கயிற்றால் திருப்பாதங் கட்டுவித்த
வித்தகனார் விளையாடல் விளங்குதில்லை கண்டேனே. 7

482 அளவிலாப் பாவகத்தால் அமுக்குண்டிங் கறிவின்றி
விளைவொன்றும் அறியாதே வெறுவியனாய்க் கிடப்பேனுக்
களவிலா ஆனந்தம் அளித்தென்னை ஆண்டானைக்
களவிலா வானவருந் தொழுந்தில்லை கண்டேனே. 8

---

480. பிறவிக்கு ஏதுவாய மயக்கத்தை, 'பிறவி' என்றார். உறவு - கிளைஞர்மேல் செய்யும் பற்று. மன்னி - பொருந்தி. மறையவர், தில்லைவாழந்தணர். 'மாற்றி, சென்று, மன்னி, ஒருமுதலை மறையவரும் வானவரும் வணங்கிட நான் கண்டேன்,' என வினை முடிக்க.

481. பத்திமை - அன்பு. பரிசு - பக்குவம்; தகுதி. 'இவை இரண்டும் இல்லாமையாகிய பசுத்துவத்தைச் செய்யும் பாசம்' என்க 'பேராமே கட்டுவித்த' என இயையும். சித்தம் - மறவாத மனம். "நாயகன் சேவடி தைவரும் சிந்தையும்" என்றார் சேக்கிழாரும் (பெ. பு. நாவுக். 140), 'திருப் பாதத்தில் கட்டுவித்த' என்க.

482. பாவகம் - நினைவு; இஃது உள்ளத்தின் பண்பு. இது, 'தன்மம் ஞானம், வைராக்கியம், ஐசுவரியம், அதன்மம், அஞ்ஞானம், அவைராக்கியம், அனைசுவரியம்' எனத் தொகையான் எட்டாகவும், வகையான் ஐம்பதாகவும் (சிவப்பிரகாசம் - 42.) விரியான் அறுநூற்றுப் பன்னிரண்டாகவும் (சிவஞான மாபாடியம் - சூ. 2.) ஒருவாற்றான் வரையறுத்துக் கூறப்படு மாயினும், அளவின்றிவிரிவது என்பதே உண்மையாகலின்,

483 பாங்கினொடு பரிசொன்றும் அறியாத நாயேனை
ஓங்கியுளத் தொளிவளர உலப்பிலா அன்பருளி
வாங்கிவினை மலம் அறுத்து வான்கருணை தந்தானை
நான்குமறை பயில்தில்லை அம்பலத்தே கண்டேனே. 9

"அளவிலாப் பாவகத்தால்" என்றும், இங்ஙினைவுகள் பலவும் கறங்கோலையின் முனைபோல உள்ளத்துக்கண் மாறி மாறி இடையறாது தோன்றி உயிரைப் பந்தித்தலின், "அழுக்குண்டு" என்றும், இப் பந்தத்தான் உண்மை ஞானம் தோன்றுதற்கு வழி இல்லாது போதலின், "அறிவின்றி" என்றும் அருளினார். "அளவிலாப் பாவகம்" என்றது அறுநூற்றுப் பன்னிரண்டாய பேரெண் பற்றியே எனச் சிவாகமங்களோடு ஒருங்கியைய உரைத்தலும் ஒன்று.

> "ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
> கோடியும் அல்ல பல"

எனவும் (குறள் 334,),

> "உண்பது நாழி உடுப்பது நான்குமுழம்
> எண்பது கோடிநினைந் தெண்ணுவன"

எனவும் (நல்வழி) பிறவிடங்களில் பொதுப்படவே கூறப்பட்டன. வெறுவியன் - ஒருபயனும் இல்லாதவன். களவு - நல்லோரை வஞ்சித்தல்.

483. பாங்கு - நன்மை. பரிசு - அதனை அடையும் முறை. 'ஒளி உள்ளத்து ஓங்கி வளர' என்க. வாங்குதல் - நீக்குதல். 'வினை வாங்கி' என மாறிக் கூட்டுக. மலம், ஆணவம். 'அருமறை நான்கினோடு ஆறங்கமும் பயின்று வல்ல' (பெ. பு. தில்லைவாழ் - 5.) அந்தணர்கள் நிறைந்திருத்தலின், "நான்கு மறை பயில் தில்லை" என்றார்.

484 பூதங்கள் ஐந்தாகிப் புலனுகிப் பொருளாகிப்
பேதங்கள் அனைத்துமாய்ப் பேதமிலாப் பெருமையனைக்
கேதங்கள் கெடுத்தாண்ட கிளிரொளியை மரகதத்தை
வேதங்கள் தொழுதேத்தும் விளங்குதில்லை கண்டேனே. 10

திருச்சிற்றம்பலம்

---

484. "புலன்" என்றது, பொறியை. பொருள், 'ஓசை. ஊறு, ஒளி, சுவை, நாற்றம்' என்பவற்றை. பேதங்கள் உடையவற்றை, "பேதங்கள்" என்ருர். எனவே, 'பல்வேறு வகைப்பட்ட பொருள்கள் எல்லாமாகியும்' என்றதாயிற்று. பேதமிலாப் பெருமை, பேதங்களையுடைய பொருள்கள் எல்லாவற்றிலும் அவையேயாய்க் கலந்து நிற்பினும், தன் தன்மை திரியாத பெருமை. கேதங்கள் - துன்பங்கள்.

வெம்பிறவி வேலைதனில் வீழ்பவர்க ளெல்லாம்
நம்புசிவ நாமமெனு நற்புணை பிடித்தால்
எம்பர னருட்கரையி லேறுதுறை யாமால்
அம்புவி மொழிந்துள பெருந்துறை யதன்பேர். 50

ஈனமில் பெருந்துறை யெனும்பதியின் ஞாங்கர்க்
கானமிகு புன்னைவளர் கந்தமுள சந்தம்
வானமுயர் சண்பக மரந்திகழ் நரந்தந்
தேனின முரன்றெழு செருந்திகள் பொருந்தி. 51

கோடுகவி னும்பெரிய கோங்குமிக வோங்கும்
பாடல நெடும்பலவு பைங்கமுகு தெங்கு
நீடளி யிரைத்தெழு நிரைக்குரவு சூதம்
ஏடவிழ் செழுங்கவி ரிலஞ்சிகண் மலிந்து. 52

—திருவாதவூரடிகள் புராணம்.

32. பிரார்த்தனைப் பத்து

[பிரார்த்தனை - இரந்துநிற்றல். அடிகள் தம்மை ஏனை அடியார்களோடு உடன் சேரச் சேர்த்துக்கொள்ளுதல் வேண்டும் என இறைவனை இரந்து நிற்கும் செய்தியைக் கூறும் பத்துப் பாடல்களின் தொகுதியே இப் பகுதி. இங்ஙனம் இரக்கப்படுவது இடையறாத பேரின்ப நிலையே யாதல் பற்றி இதற்கு, 'சதா முத்தி' எனக் குறிப்புரைத்தனர் முன்னோர். சதா - இடைவிடாமை. இது, திருப்பெருந்துறையில் அருளிச் செய்யப்பட்டது என்பது பதிப்புக்களில் காணப்படுவது. இதன்கண் உள்ள எல்லாத் திருப்பாட்டுக்களும் அறுசீரடி விருத்தங்கள். முதல் திருப்பாட்டில் முதற்கண் ஐஞ்சீரடி வந்து மயங்கிற்று. இப்பகுதி அந்தாதியாய் அமைந்தது.]

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

485 கலந்து நின்னடியா ரோடன்று
வாளா களித்தி ருந்தேன்
புலர்ந்து போன காலங்கள்
புகுந்து நின்ற திடர்பின்னாள்
உலர்ந்து போனேன் உடையானே
உலவா இன்பச் சுடர்காண்பான்
அலந்து போனேன் அருள்செய்யாய்
ஆர்வங் கூர அடியேற்கே. 1

---

485. பொருள்கோள் ; 'உடையானே, அன்று நின் அடியாரோடு கலந்து வாளா களித்திருந்தேன் ; காலங்கள் புலர்ந்து போன ; பின்னாள் இடர் புகுந்து நின்றது ; அதனால், உலவா இன்பச் சுடர் காண்பான் அலந்து போனேன்' அடியேற்கு ஆர்வம் கூர அருள்செய்யாய்'.

அன்று - என்னை ஆட்கொண்ட அந்நாள். வாளா - கவலையின்றி. இறைவன் ஆட்கொண்ட காலத்தில் அடிகள்

486 அடியார் சிலர்உன் அருள்பெற்ஞர்
ஆர்வங் கூர ; யான்அவமே
முடையார் பிணத்தின் முடிவின்றி
முனிவால் அடியேன் மூக்கின்றேன் ;
கடியேனுடைய கடுவினையைக்
களைந்துன் கருணைக் கடல்பொங்க
உடையாய் அடியேன் உள்ளத்தே
ஓவா துருக அருள்வாயே. 2

487 அருளா ரமுதப் பெருங்கடல்வாய்
அடியா ரெல்லாம் புக்கழுந்த
இருளார் ஆக்கை இதுபொறுத்தே
எய்த்தேன் கண்டாய் எம்மானே

அடியார் பலரோடும் கலந்து கவலையின்றிக் களித்திருந்ததாக அருளினமையால், பின்னே அவர் இறைவனேடு செல்லாது நின்றது, உலகியல் மயக்கத்தாலன்றிப் பிறர்மாட்டு வைத்த இரக்கத்தால் என்பது பெறப்படும். காலங்கள் புலர்ந்துபோன- இத்தகைய களிப்பு நிலையிலே பல காலங்கள் கழிந்தன. பின்னுள் - நீ அடியாருடன் மறைந்தருளியதற்குப் பின்னைய நாட்களில். இடர் - உலகியல் துன்பம். உலர்ந்து போனேன் - உள்ளமும், உடலும் வலியற்றுப் போயினேன். ''இன்பச் சுடர்'' எனப் படர்க்கையாகச் சொல்லப்பட்டதாயினும், 'இன்பச் சுடராகிய உன்னை' என்பதே பொருள். அலந்துபோனேன் - அலந்துநின்றேன். ஆர்வம் கூர - உன்மாட்டு எனக்கு அன்பு மிக. 'அன்பு மிகுமாயின் நான் உன்னை அடைதல் திண்ணம்' என்பது கருத்து.

486. 'ஆர்வம் கூர்தலால் அருள் பெற்ஞர்' என்க. அவமே மூக்கின்றேன் - வீணுக மூப்படைகின்றேன். பிணத்தின் - பிணத்தின்கண். வெறுப்புக் காரணமாக உடம்பை, 'பிணம்' என்ஞர். 'முடிவின்றி இருந்து' என ஒருசொல் வருவிக்க. முனிவால் - அந்த வெறுப்போடே. 'கருணைக் கடல் பொங்குமாறு உருக' என்க. ''உருக'' என்றது, 'உருக்கம் உண்டாக' எனப் பொருள் தந்து நின்றது.

487. அருள் ஆரமுதப் பெருங்கடல்வாய் - அருளாகிய அரிய அமுதப் பெருங்கடலின்கண். 'அமுதப் பெருங்கடல்'

மருளார் மனத்தோர் உன்மத்தன்
வருமால் என்றிங் கெனைக்கண்டார்
வெருளா வண்ணம் மெய்யன்பை
உடையாய் பெறநான் வேண்டுமே. 3

488 வேண்டும் வேண்டு மெய்யடியா
ருள்ளே விரும்பி எனைஅருளால்
ஆண்டாய் அடியேன் இடர்களைந்த
அமுதே அருமா மணிமுத்தே
தூண்டா விளக்கின் சுடரனையாய்
தொண்ட னேற்கும் உண்டாங்கொல்
வேண்டா தொன்றும் வேண்டாது
மிக்க அன்பே மேவுதலே. 4

என்பது இல்பொருள் உவமையாய், அருளுக்கு உருவகமாயிற்று. உன்மத்தன் - பித்தன். 'உன்னை அடையும் மெய்யன்பை யான் பெறுவிடில், உலகியலோடு தொடர்பின்றி ஒழுகும் எனது ஒழுக்கத்திற்குப் பயன், என்னைக் கண்டவர்கள், 'இஃதோ பித்தன் ஒருவன் வருகின்றான்' என்று அஞ்சி ஓடுவதன்றி வேறில்லை' என்பதாம்.

488. "வேண்டும்" இரண்டனுள், முன்னது விரும்புதற் பொருளையும், பின்னது இன்றியமையாமைப் பொருளையும் தந்தன. மெய்யடியாரை ஆட்கொள்ளுதலை இறைவன் தனக்கு இன்றியமையாக் கடனாகக் கொள்வன் என்க. இரண்டும் பெயரெச்சங்கள். 'மெய்யடியாருள்ளே ஒருவனாக' என ஒரு சொல் வருவிக்க. "அருளால், ஆண்டாய்" என்றதனால், 'தகுதியால் ஆண்டிலை' என்பது பெறப்பட்டது. 'அவ்வாறு ஆண்டு இடர்களைந்த அமுதே' என்க. "உண்டாங்கொல்" என்றதனை இறுதிக்கண் கூட்டுக. கொல், அசைநிலை. "வேண்டாதொன்றும்" என்றதில், 'வேண்டாத' என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. வேண்டாதது - பயனில்லாதது. வேண்டாது - விரும்பாமல். மேவுதல் - பொருந்துதல்.

489 மேவும் உன்றன் அடியாருள்
விரும்பி யானும் மெய்ம்மையே
காவி சேருங் கயற்கண்ணாள்
பங்கா உன்றன் கருணையினால்
பாவி யேற்கும் உண்டாமோ
பரமா னந்தப் பழங்கடல்சேர்ந்
தாவி யாக்கை யானெனதென்
றியாது மின்றி அறுதலே. 5

490 அறவே பெற்றார் நின்னன்பர்
அந்த மின்றி அகநெகவும்
புறமே கிடந்து புலைநாயேன்
புலம்பு கின்றேன் உடையானே
பெறவே வேண்டும் மெய்யன்பு
பேரா ஒழியாப் பிரிவில்லா
மறவா நினையா அளவிலா
மாளா இன்ப மாகடலே. 6

---

489. பொருள்கோள்: காவிசேரும் கயற்கண்ணாள் பங்கா, உன்றன் கருணையினால், யானும மெய்ம்மையே விரும்பி, மேவும் உன்றன் அடியாருள் பரமானந்தப் பழங்கடல் சேர்ந்து, ஆவி, யாக்கை, யான், எனது என்ற யாதும இன்றி அறுதல் பாவியேற்கும் உண்டாமோ.

மேவும் - (உன்னை உண்மையாகவே) விரும்புகின்ற. மெய்ம்மையே விரும்பி. மெய்யாகவே அன்பு செய்து. 'காவியும் கயலும்போலும் கண்ணாள்' என்பதனை இவ்வாறு ஓதினார். காவி - நீலோற்பலம். 'என்ற' என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. "யானும்" என்றது, "அறுதல்" என்ற தொழிற்பெயர் எழுவாய்க்கு அடையாய் வந்தது. 'என்றவற்றுள் யாதும் இன்றி' என்க

490. அறவே - முழுதும். 'பெற்றாராகிய அன்பர்' என்க. பெறுதலுக்கு, 'அருள்' என்னும் செயப்படுபொருள் வருவிக்க. அந்தம் இன்றி - இடையறாது. 'யான் மெய்யன்பு பெறவே வேண்டும்' என்க. "பேரா" முதலிய எழும் இன்பத்திற்கு

491 கடலே அனைய ஆனந்தம்
கண்டா ரெல்லாங் கவர்ந்துண்ண
இடரே பெருக்கி ஏசற்றிங்
கிருத்த லழகோ அடிநாயேன்
உடையாய் நீயே அருளுதியென்
றுணர்த்தா தொழிந்தே கழிந்தொழிந்தேன்
சுடரார் அருளால் இருள் நீங்கச்
சோதீ இனித்தான் துணியாயே. 7

492 துணியா உருகா அருள்பெருகத்
தோன்றுந் தொண்ட ரிடைப்புகுந்து
திணியார் மூங்கிற் சிந்தையேன்
சிவனே நின்று தேய்கின்றேன்
அணியா ரடியார் உனக்குள்ள
அன்புந் தாராய் அருளளியத்
தணியா தொல்லை வந்தருளித்
தளிர்பொற் பாதந் தாராயே. 8

அடை. போர்தல், அடைந்தோர் பின் நீங்குதலும், ஒழிதல் தான் நீங்குதலுமாம். பிரிவு - வேறுதல். அளவு - எல்லை. மாளுதல் - அழிதல். ஏழ் அடையாலும், ஏழ் இன்பக்கடல் கூறியவாறுக இதற்கு நயம் உரைப்பர். "கடலே" என்றது, விளி. 'அன்பைப் பெற்றால், அவ் வின்பக்கடலைப் பெறலாம்' என்றதாம்.

491. கண்டார், உன்னைக் கண்டவர். "இடர்" என்றது அதற்கு ஏதுவாவனவற்றை. ஏசற்று-துன்புற்று. நீயே அருளுதி என்று - நான் கேளாமல் நீயே தருவாய் என்று நினைத்து. உணர்த்தாதொழிந்து - கேளாமல்விட்டு. கழிந்தொழிந்தேன்- இத்துணை நாளும் விலகிவிட்டேன். "சுடர் ஆர் அருளால்" என்றதனை, 'அருள் அருஞ்சுடரால்' எனப் பின்முன்னுக்கி உரைக்க. இருள், 'அறியாமையாகிய இருள்' எனச்சிறப்புருவக்ம். துணியாய் - சிதைத்துவிடு. அறியாமை நீங்கின், உளதாம் என்க.

492. துணியா - உன்னையே பொருளாகத் துணிந்து. உருக - மனம் உருகி. அருள் பெருக - அதனுல் உனது

493 தாரா அருளொன் றின்றியே
தந்தாய் என்றுன் தமரெல்லாம்
ஆரா நின்றார் அடியேனும்
அயலார் போல அயர்வேனோ
சீரார் அருளாற் சிந்தனையைத்
திருத்தி ஆண்ட சிவலோகா
பேரா னந்தம் பேராமை
வைக்க வேண்டும் பெருமானே. 9

494 மானேர் பங்கா வந்திப்பார்
மதுரக் கனியே மனநெகா
நானேர் தோளாச் சுரையொத்தால்
நம்பி இத்தால் வாழ்ந்தாயே
ஊனே புகுந்த உனையுணர்ந்தே
உருகிப் பெருகும் உள்ளத்தைக்
கோனே அருளுங் காலந்தான்
கொடியேற் கென்றோ கூடுவதே. 10

திருவருள் பெருகப்பெற்று. தோன்றும் - காணப்படுகின்ற. 'இத்தகைய அடியாரிடையே அன்பில்லாத யான் புகுந்தேன்' என்றது, முன்பு ஆட்கொள்ளப்பட்டமையை. திணி ஆர் மூங்கில் - உட்டுளை இல்லாத மூங்கில்; இது வலியமனத்திற்கு உவமையாயிற்று. உனக்கு உள்ள - உன் பொருட்டுக் கொண்டுள்ள. 'அடியார்க்கு' என்பதே பாடம் போலும்! ''அன்பும்'' என்ற உம்மை எதிரது தழுவிய எச்சம். அருள் அளிய - உனது கருணை மிக்கு நிகழ. இதனைத் தாப்பிசையாய் முன்னுங்கூட்டி, முன்னர் எதிர்காலமாகவும், பின்னர் இறந்த காலமாகவும் உரைக்க. தணியாது - மெத்தென வாராது.

493. தமர் - சுற்றத்தார்; அடியவர். ஆராநின்றார் - இன்பத்தை நிரம்பத் துய்க்கின்றார்கள். அடியேனும் - அடியேன் ஒருவன் மட்டும். பேராமை-நீங்காமல்.

494. மான் - பெண். வந்திப்பார் - வணங்குவார்க்கு. மனம் நெகா - மனம் உருகாது, தோளாச்சுரை - துளையிடாத சுரைக் குடுக்கை. இதனுள் ஒன்றும் புகாது; ஆதலின். அன்பும்

495 கூடிக் கூடி உன்னடியார்
குனிப்பார் சிரிப்பார் களிப்பாரா
வாடி வாடி வழியற்றேன்
வற்றல் மரம்போல் நிற்பேனே
ஊடி ஊடி உடையாயொடு
கலந்துள் ளுருகிப் பெருகிநெக்
காடி ஆடி ஆனந்தம்
அதுவே யாக அருள்கலந்தே. 11

திருச்சிற்றம்பலம்

அருளும் புகும் நிலையில்லாதவர்கட்கு இஃது உவமையாகச் சொல்லப்படும். நம்பி - நம்பியே. இத்தால் வாழ்ந்தாயே- என்னை இந்நிலையில் வைத்துவிட்ட இதனால் நீ வாழ்ந்தே விட்டாய்போலும்! இஃது ஊடியுரைக்கும் சொல்.

" ஆளாய் இருக்கும் அடியார் தங்கள்
அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவா ரூரீர்
வாழ்ந்து போதீரே "

என்றார் நம்பியாரூரரும் (திருமுறை - 7.95.1.)

495. குனிப்பார் - கூத்தாடுவார். 'களிப்பாராக' என்பது ஈறுகெட்டு நின்றது. வழியற்றேன் - பிழைக்கும் வழியாதும் இல்லாத யான். 'வாடி வாடி வற்றல் மரம்போல் நிற்பேனே' என்க. வற்றல் மரம் - உயிரற்றுக் காய்ந்துபோன மரம். 'வற்றல்' என்பது மரவகைகளுள் ஒன்று எனவும், அவ் வகையினதாகிய மரம், தளிர் முதலியன இன்றி வறுங்கொம்பா கவே வளரும் எனவும் கூறுவாரும் உளர். ஓகாரம், இரக்கப் பொருட்டு. 'உடையாயொடு ஊடி ஊடிக் கலந்து' என்க. உடையாயொடு - தலைவனாகிய உன்னோடு. "ஊடுதல் காமத்திற் கின்பம்" (குறள் - 1330.) என்பது பற்றி இறை இன்பத்தை அவ்வின்பத்தோடு ஒப்பிப்பார், இங்ஙனம் அருளிச்செய்தார்.

இறை இன்பத்தை இவ்வாறு காம இன்பத்தோடு ஒப்பித்துக் கூறுதல், உலகத்தார் உணரும் பேரின்பமாகிய அவ்வின்பத்தி னியல்பு பற்றி, உண்மைப் பேரின்பமாகிய இறையின்பத்தினது சிறப்பை உணர்தற் பொருட்டாம். இறை இன்பத்தில் ஊடுதலாவது, ''உங்களுக்காள் செய்யமாட்டோம்'' திரு முறை - 7-5-2.) என்றாற்போல, உரிமை தோன்றச் சிலவற்றை வலியுறுத்தி வேண்டல். ''அருள் கலந்து'' என்றதனை, 'கலந்து அருள்' எனமாற்றிப் பொருள் கொள்க. கலந்து - என்முன் தோன்றி. அருள் - அருள்செய். இதன் ஈற்றுச்சொல், முதல் திருப்பாட்டின் முதற்சொல்லாய் அமைந்து நிற்றல் காண்க.

மாக்கவின் மிகுங்கலப மஞ்ஞைசிறை யன்னங்
கூக்குரல் செயுங்கரிய கோகில நெருங்க
மீக்குலவு மந்தியின முந்துதொறு மென்மேல்
ஆர்க்குளிமி றெங்கணு மடர்ந்திசை தொடங்க. 53

வீழ்ந்தநற வந்துளி விழிப்புனல தாகச்
சூழ்ந்துமுரல் வண்டினிசை தோத்திரம தாகத்
தாழ்ந்துமல ரேந்தியிறை தன்றிருமு னின்றே
வாழ்ந்துருகு மன்பரென மன்னுமொரு பூங்கா. 54

வாய்த்தவள மிவ்வகை வயங்குமத னுப்பண்
ஏத்தரு தவச்சினைக ளெங்கணு நெருங்க
மீத்திக ழறக்குழை தழைத்துமிளிர் மெய்ம்மை
பூத்தறிஞர் போன்றெழில் பொருந்துமோர் குருந்தம். 55

ஆர்வமுடன் வந்தின மகப்பட வளைக்கும்
பார்வையென மாந்தர்படி வங்கொடு நடந்தார்
ஏர்வரு குருந்தமொ டிலங்குமுயர் காவிற்
சேர்குவ மெனத்திரு வுளத்தருள் சிறந்து. 56

வந்துதிகழ் தொண்டர்புடை சூழமகிழ் வெய்திக்
கொந்தலர் மலர்ப்பொலி குருந்தடி பொருந்தி
அந்தமுத லில்லவ ரருட்டமி ழுரைப்பார்
பந்தமறு மெல்லையது பார்த்தினி திருந்தார். 57

— திருவாதவூரடிகள் புராணம்.

33. குழைத்த பத்து

[பெரிதும் பணிந்த மொழிகளால் இறைவன் திருவுள்ளத்தைக் குழைவித்த பத்துப் பாடல்களின் தொகுதி குழைத்த பத்து. அம்மொழிகளாவன, தம் சுதந்திரம் இன்மையைப் பலவாற்றானும் எடுத்துக் கூறும் சொற்கள். இப்பொருள் பற்றியே இதற்கு, 'ஆத்தும நிவேதனம்' எனக் குறிப்புரைத்தனர் முன்னோர். ஆத்தும நிவேதனம் - 'யான்' என்று எழும் சீவபோதத்தை இறைவனுக்கு உணவாகக் கொடுத்தல். இறைவன் சீவபோதத்தை உண்ணுதலாவது, அதனை விழுங்குதல்; அஃதாவது அருட்போதத்துள் அடக்கிக்கொள்ளுதல். வாயிலார் நாயனார் தமது மனவழிபாட்டில் தமது ஆன்ம போதத்தைப் பாகம் பண்ணியதனால் ஆகிய அன்பையே இறைவனுக்குத் திருவமுதாக நிவேதித்தார் என்க. இஃது அந்தாதியாய் முதலிலும், முடிவிலும், 'குழைத்தல்' என்னும் சொல்லைப்பெற்று விளங்குதலின், அச்சொற்பற்றியும், குழைத்த பத்து' எனப் பெயர்பெற்றது. இது, திருப்பெருந்துறையில் அருளிச்செய்யப்பட்டது என்பதே பதிப்புக்களில் காணப்படுவது. இப்பகுதி முழுவதும், அறுசீரடி விருத்தத்தால் ஆயது.]

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

496 குழைத்தாற் பண்டைக் கொடுவினைநோய்
காவாய் உடையாய் கொடுவினையேன்
உழைத்தால் உறுதி யுண்டோதான்
உமையாள் கணவா எனைஆள்வாய்
பிழைத்தாற் பொறுக்க வேண்டாவோ
பிறைசேர் சடையாய் முறையோஎன்
றழைத்தால் அருளா தொழிவதே
அம்மா னேஉன் னடியேற்கே. 1

---

496. 'கொடுவினையேன் (உன்னைக்) குழைத்தால், பண்டைக் கொடுவினைநோய் காவாய்' எனக் கூட்டுக. குழைத்தால் - உன் உள்ளம் குழையுமாறு இரந்து வேண்டுவேனாயின்;

497 அடியேன் அல்லல் எல்லாம்முன்
அகல ஆண்டாய் என்றிருந்தேன்
கொடியே ரிடையாள் கூறுஎம்
கோவே ஆவா என்றருளிச்
செடிசேர் உடலைச் சிதையாத
தெத்துக் கெங்கள் சிவலோகா
உடையாய் கூவிப் பணிகொள்ளா
தொறுத்தால் ஒன்றும் போதுமே. 2

என்றது, 'அங்ஙனம் வேண்டி நிற்கின்றேனாதலின்' என்றபடி. வினைநோய் - வினையாகிய நோய். காவாய் - வந்து சாராதபடி தடுத்தருள். உழைத்தால் - அவ்வினையால் நான் துன்புறுவேனாயின். உறுதி உண்டோ - உனக்காயினும், எனக்காயினும் யாதேனும் நன்மை உண்டோ. பிழைத்தால் - வினைவந்து மீளப் பற்றுதற்கு ஏதுவாக யான் பிழைசெய்துவிட்டேன் என்றால். அருளாதொழிவதே - கருணை செய்யாதுவிடுதல் பொருந்துவதோ. "அம்மானே", "உன் அடியேற்கே" என்றவை, 'அடிமையாகிய யான் பிழைசெய்தால் அதனைப் பொறுதொழிதலும், முறையோ என்று அழைத்தால் கேளாதொழிதலும் தலைவனாகிய உனக்குப் பொருந்துவதோ' என்னும் குறிப்பினதாகிய உடம்பொடு புணர்த்தல்.

497. "முன்" என்றதனை முதலிற் கூட்டுக. "அல்லல் எல்லாம் அகல ஆண்டாய் என்று இருந்தேன்" என்றது, 'ஆண்டபின்பும் என்னை அல்லற்பட வைப்பாய்' என்பதை அறிந்திலேன்' என்றபடி. எத்துக்கு, 'எற்றுக்கு' என்பதன் மரூஉ. 'அடிமையைக் குற்றம் நோக்கி ஒறுத்தலும், மற்றுப் பற்று இன்மை நோக்கி அருளுதலும் ஆகிய இரண்டும் செயற்பாலனவாக, அவற்றுள் ஒறுத்தலாகிய ஒன்றைமட்டும் செய்தொழிவது தலைவராயினார்க்கு நிரம்புமோ' என்பார், "கூவிப் பணிகொள்ளாது ஒறுத்தால் ஒன்றும் போதுமோ" என்று அருளிச்செய்தார். "ஒன்றும்" என்றதற்கு முன்னர், 'அஃது' என்னும் சுட்டுப் பெயர் வருவிக்க. 'போது' என்பது, 'நிரம்பு' என்பதனோடு ஒரு பொருட்டாய வினையடி. இதனினின்றும் பல வினைவிகற்பங்களும் பிறக்கும். இதற்கு, 'பற்று' என்னும்

498 ஒன்றும் போதா நாயேனை
உய்யக் கொண்ட நின்கருணை
இன்றே இன்றிப் போய்த்தோதான்
ஏழை பங்கா எம்கோவே
குன்றே அனைய குற்றங்கள்
குணமாம் என்றே நீகொண்டால்
என்றான் கெட்ட திரங்கிடாய்
எண்தோள் முக்கண் எம்மானே. 3

முதனிலை ஒரு பொருட் கிளவியாகக் கூறப்படும். 'போதாது, பற்றாது' என்பவற்றை, 'காணாது' என வழங்குவர் இக்காலத்தார்.

498. 'ஒன்றற்கும்' என உருபு விரிக்க. 'ஒன்றற்கும் நிரம்பாத' என்றது, ஒருபொருளோடும் ஒருநிகராதற்கு நிரம் பாத; எல்லாப் பொருளினும் கீழ்ப்பட்ட' என்றபடி. 'இன்று இன்றிப் போய்த்தோ'' எனப் பின்னர் வருதலின், "உய்யக் கொண்ட'' என்பதற்கு, 'அன்று' என்பது வருவிக்கப்படும். 'போயிற்று' என்பது, 'போயித்து' என மருவிப் பின் 'போய்த்து' என்றாயிற்று. 'ஆயிற்று' என்பதும் இவ்வாறே 'ஆய்த்து' என வருதல் உண்டு. இவ்விரண்டும் இவ்வாறன்றி, இடைக்கண் இன் பெறற்பாலன சிறுபான்மை தகர ஒற்றுப் பெற்று வந்தன என்றலும் ஒன்று. ஓவும். தானும் அசை நிலைகள். ஏழை - பெண், 'எளியவர் என்பது நயம். 'நீ கொண்டால் என்தான் கெட்டது' என்றது, இறைவனது தன்வயம் உடைமை மாத்திரையே குறித்ததன்றிக் கோட்ட முடையனாகக் கூறியதன்றாம். அஃது அவன் அங்ஙனங் கொள்ளாமை பற்றிக் கூறியவதனானே பெறப்படும். இறைவன் தன் அடியார்கள், 'பாதகத்தைச் செய்திடினும் பணியாக்கி விடும்' (சிவஞானசித்தி சூ. 10.1.) என்பவாகலின், அவற்கும் கோட்டமுண்மை பெறப்படுமன்றோ எனின், படாது; என்னை யெனின், பாதகத்தைச் செய்திடினும்' என்பது, அருள் வழிக்கண் தம்மிழப்பில் நின்று செய்தலை யாகலானும் அவ்வாறு தம்மை இழவாது, 'பிழையுளன பொறுத்திடுவர் என்று கருதிப் பிழைப்பின்' (திருமுறை - 7.89.1.) பொறாது,

499 மானேர் நோக்கி மணவாளா
மன்னே நின்சீர் மறப்பித்திவ்
வூனே புகஎன் றனை நூக்கி
உழலப் பண்ணு வித்திட்டாய்
ஆனால் அடியேன் அறியாமை
அறிந்து நீயே அருள்செய்து
கோனே கூவிக் கொள்ளும்நாள்
என்றென் றுன்னைக் கூறுவதே. 4

ஒன்னலரைக் கண்டாற்போல் (டி. டி. 9.) உதாசீனம் செய்து போதல் ஆளுடைய நம்பிகளிடத்து நிகழ்ந்த நிகழ்ச்சியான் நன்கறியப்படுதலானும் என்க. எனவே, அடிகள் தாம் செய்தனவாகக் கூறும் குற்றங்களைத் தம் வழியினின்று செய்தனவாகவே அவர் கூறுதலின், 'அவற்றைக் குணமாகக் கொண்டால் கெடுவதொன்றில்லை' என்றது, இறைவனது தன்வயமுடைமை மாத்திரையே பற்றித் தமது ஆற்றாமை மிகுதியாற் கூறியதேயாம். அன்னதாயினும், முன்னும், பின்னும் உளவாகிய அவரது திருமொழிகள் அவர் திருவருள் வழிநிற்றலிற் பிறழாமை நன்குணரப்படுதலின், அவரைத் தற்போதமுடையரெனக் கருதி மலைதல் கூடாமை யறிக. 'கெடுவது' என்னும் எதிர்காலச்சொல், 'கெட்டது' எனத் தெளிவுபற்றி இறந்தகாலமாகச் சொல்லப்பட்டது.

499. மன்னே - தலைவனே. சீர் - புகழ், என்றது, அதனைச் சொல்லுதலை. நூக்கி - வீழ்த்தி. மலசத்திகளைத் தூண்டிவிடுவதையும் இறைவனே செய்வதாகக் கூறுவர் ஆசிரியராகலின், "நின்சீர் மறப்பித்து" எனவும், "ஊனேபுக நூக்கி" எனவும், "உழலப் பண்ணுவித்திட்டாய்" எனவும் அருளிச்செய்தார்,

"சிந்தையைத் திகைப்பி யாதே
செறிவுடை அடிமை செய்ய
வஞ்சமே செய்தி யாலோ
வானவர் தலைவ னே நீ"

எனவும் (திருமுறை - 4.23.4.),

500 கூறும் நாவே முதலாகக்
கூறுங் கரணம் எல்லாம்நீ
தேறும் வகைநீ திகைப்பும்நீ
தீமை நன்மை முழுதும்நீ
வேறோர் பரிசிங் கொன்றில்லை
மெய்ம்மை உன்னை விரித்துரைக்கில்
தேறும் வகைஎன் சிவலோகா
திகைத்தால் தேற்ற வேண்டாவோ. 5

"நின்னை எப்போதும் நினையலொட்டாய்நீ
நினையப்புகின்
பின்னை அப்போதே மறப்பித்துப் பேர்த்தொன்று
நாடுவித்தி"

எனவும் (ஷை 112.4) அருளிச்செய்தனவும் காண்க. இங்ஙனம் மலசத்திகளைத் தூண்டி, அவை உயிரினது அறிவை மறைக்குமாறு செய்யும் சத்தியையே, 'திரோதான சத்தி' என்றும், அவ்வாற்றால் நிகழும் மறைப்பையே, ஐந்தொழில்களுள் ஒன்றாய மறைத்தல் என்றும் மெய்ந்நூல்கள் கூறும்.

ஆனால் - நிகழ்ச்சி இதுவாகுமாயின். "என்று" இரண்டனுள் பின்னதனை இறுதிக்கண் கூட்டுக. கூறுவது - மறவாது நின்று புகழ்வது.

500. "உன்னை விரித்துரைக்கில்" என்றதனை, "கூறும் நாவே" என்றதற்கு முன்னர்க் கூட்டி, "உன்னை" என்றதற்கு, 'உன் இயல்பை' என உரைக்க. "உரைக்கில்', என்றமையான், அங்ஙனம் உரைக்கும் நாவை முதலாவதாகக் கூறினார். 'மனம், மொழி, மெய்' எனக் கரணம் மூன்றாகலின் நாவொழிந்த பிற கரணங்கள் இவை என்பது உணர்க. 'கரணம்' எனினும், 'கருவி' எனினும் ஒக்கும். தேறுதல் - தெளிதல். வகை - வழி; உபாயம். திகைத்தல் - கலங்குதல், "தேறும் வகை" என்றதனால், "திகைப்பு" என்றதும் திகைக்கும் வழியையாயிற்று. முன்னிற்கற்பாலனவாகிய திகைப்பும் தீமையும், செய்யுள் நோக்கிப் பின்னின்றன. வேறு ஓர் பரிசு - உனக்கு வேறாய் நிற்பதொரு தன்மை. தன்மையுடையதனை, 'தன்மை' என்றார். "ஒன்றில்லை" என்றது

501 வேண்டத் தக்க தறிவோய்நீ
வேண்ட முழுதுந் தருவோய்நீ
வேண்டும் அயன்மாற் கரியோய்நீ
வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள்செய்தாய்
யானும் அதுவே வேண்டின்அல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே. 6

'யாதும் இல்லை' என்னும் பொருட்டு; உம்மை, தொகுத்தல். "மெய்ம்மை" என்றதன்பின், 'ஆதலின்' என்பது வருவித்து, 'இஃது உண்மையாதலின், நீ தேற்றினலன்றி யான் தேறும் வகையாது' என உரைக்க. இதன்பின்னும், 'அதனால்' என்பது வருவிக்க. "தேற்ற" என்ற செயவெனெச்சம். தொழிற்பெயர்ப் பொருள் தந்தது. "வேண்டாவோ" என்னும் எதிர்மறை வாய்பாடு, 'உனக்கு இன்றியமையாக் கடனன்றோ, என்பதை விளக்கி நின்றது. இஃது இறைவனது எல்லாமாய் நிற்கும் இயல்பை எடுத்தோதி, தமது மயக்கத்தைப் போக்கி யருள வேண்டும் என வேண்டியது.

501. வேண்டத் தக்கது - இரந்து பெறத்தக்க பொருள். 'தாம் சாவ மருந்துண்ணார்' என்பதுபோலத் தமக்கு நன்மை பயப்பதனை யன்றித் தீமை பயப்பதனை ஒருவரும் இறைவன்பால் வேண்டார் எனினும், தீமைபயப்பதனைத் தீமைபயப்பது என்று அறியும் ஆற்றல் இலராகலின், இறைவன்பால் வேண்டத் தக்கது இதுவென்பதனையும் அவனே அறிதலன்றி, உயிரினத் தவருள் ஒருவரும் அறியார் என்க. "வேண்ட" என்றது, 'தம் அறியாமையால் உயிர்கள் எவற்றை வேண்டினும்' என்றவாறு. தீமைபயப்பதனையும் இறைவன் மறுது தருதல்' அவற்றின்கண் பற்று நீங்குதற்பொருட்டாம். வேண்டும் அயன் மால் - உன்னை அளவிட்டறிய விரும்பிய பிரமனும் மாலும். இவர்க்கு அரியனாதலைக் கூறியது, தமக்கு எளி வந்தனமையைப் புலப்படுத்தற்கு. எனவே, 'அரியோயாகிய நீ' என ஒரு சொற்றன்மைப் படுத்து உரைக்கப்படும். "பணி கொண்டாய்" என்றதன்பின், 'ஆதலின்' என்னும் சொல்லெச்சம் வருவிக்க. வேண்டி - எனக்கு உரியதாகக் கருதி

502 அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை ஆட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூ றெனக்குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே. 7

அருள்செய்தாய் - உணர்த்தியருளினாய். 'அதுவே யானும் வேண்டினல்லால்' என மாற்றுக. வேண்டும் பரிசு ஒன்று உண்டென்னில்-பயிற்சிவயத்தால் ஒரோவொருகால் நான் உன்பால் இரக்கும் பொருள் வேறு ஒன்று இருக்குமாயின். அதுவும் உன்றன் விருப்பன்றே-அவ்வாறிருத்தலும் உன்றன் திருவருளே யன்றோ; என்றது, 'வேண்டத் தக்கது அறிவோய் நீ என்பது முதலியவற்றை யான் அறிந்து உன் அருள்வழியே நிற்பேனாயி னும், ஒரோவொருகால் பயிற்சி வயத்தால் அந்நிலையினின்றும் பிறழ்தலும் உனது திரோதான சத்தியின் செயலே' என்பதை விண்ணப்பித்து, 'அக்குற்றத்தைப் பொறுத்து என்னை நின்பால் வருவித்துக்கொள்ளுதல் வேண்டும்' என வேண்டியதாம். இதன் இறுதிப் பகுதிக்கு மாதவச் சிவஞானயோகிகள் இவ் வாறே பொருள்கொள்ளுதல் காண்க (சிவஞான சித்தி. சூ. 10.3.)

502. "அன்றே" என்றதனை இறுதிக்கண் கூட்டி, அதன்பின், 'ஆதலின், நின் திருவுள்ளத்திற்கு ஏற்றது செய்க' என்னும் கையறு கிளவியாகிய குறிப்பெச்சம் வருவித்து முடிக்க. இவ்வாறன்றி, வலியுறுத்தற் பொருட்டு, 'அன்றே, என்னை ஆட்கொண்ட போதே' என இருகாற் கூறினார் என்றலுமாம். ஆவியாவது, சீவபோதம். உடைமையாவது, பிராரத்தமும், ஆகாமியமும் ஆகிய வினைகள். இறைவனுக்கு ஆட்பட்டார் பிற உடைமையை முன்னரே துறந்தமையின், அவர்க்கு உடைமையாவன இவையன்றி இல்லை என்க. சிறுபான்மை எக்காரணத்தாலேனும் பிற உடைமை உளவாயின், அவையும், 'உடைமை' என்பதனுள் அடங்கும். உடைமையை,

503 நாயிற் கடையாம் நாயேனை
நயந்து நீயே ஆட்கொண்டாய்
மாயப் பிறவி உன்வசமே
வைத்திட் டிருக்கும் அதுவன்றி
ஆயக் கடவேன் நானோதான்
என்ன தோஇங் கதிகாரம்
காயத் திடுவாய் உன்னுடைய
கழற்கீழ் வைப்பாய் கண்ணுதலே. 8

'பொருள்' என்று கூறி, 'உடல், பொருள், ஆவி மூன்றையும் இறைவன்பால் ஆக்குவிப்பவரே ஞானியர்' என்பது வழக்கு. 'ஆவியும் உன்னுடையதாயினமையின், இப்பொழுது எனக்கென்று வரும் இடையூறு ஒன்று இல்லை' எனவும், 'வருகின்ற இடையூற்றைத் தடுத்தும், வந்த இடையூற்றைப் போக்கியும் என்னை நான் காத்துக்கொள்ளுதலும், காவாது தீமையுறுதலும் ஆகிய செயல்களும் எனக்கு இல்லை; எல்லாவற்றிற்கும் உரியவன் நீயே' எனவும் கூறுவார், இன்று ஓர் இடையூறு எனக்கு உண்டோ? நன்றே செய்வாய்; பிழை செய்வாய்; நானோ இதற்கு நாயகம்' என்றும் அருளினார். ''செய்வாய்'' என்றவை, 'உன் விருப்பப்படி செய்தற்குரியை' என்னும் பொருளன. நன்று, பிழை என்னும் இரண்டனுள் தம்பால் செய்யப்படுவது ஒன்றேயாதலின், ''இதற்கு'' என ஒருமையாற் கூறப்பட்டது. நாயகம் - தலைமை; இஃது ஆகுபெயராய், 'தலைவன்' எனப் பொருள் தந்தது.

503. நயந்து - விரும்பி. 'நீயே நயந்து முன்பு என்னை ஆட்கொண்டாய்; அதனால், இன்றும் நீ என்னைப் பிறப்பில் விடினும் விடுவாய்; உன் திருவடிநிழலில் இருத்தினும் இருத்துவாய்; ஆதலின், உடம்பையும் உனக்குரியதாகவே வைத்து நான் வாளா இருப்பதன்றி, என்னை என்னசெய்தல் வேண்டும் என்று ஆராய்ந்து முடிவு செய்தற்கு உரியவன் நான்தானோ? அதிகாரம் இங்கு என்னதோ? உன் விருப்பப்படி செய்தருள்' என்க. 'உன் விருப்பப்படி செய்தருள்' என்பது குறிப்பெச்சம். மாயப் பிறவி - நிலையில்லாத உடம்பு. ஓகாரம் வினாப் பொருளினும், தான் பிரிநிலை ஏகாரப் பொருளிலும் வந்தன. அதிகாரம் - தலைமை.

504 கண்ணார் நுதலோய் கழலிணைகள்
கண்டேன் கண்கள் களிகூர
எண்ணாதிரவும் பகலும்நா
னவையே எண்ணும் அதுவல்லால்
மண்மேல் யாக்கை விடுமாறும்
வந்துன் கழற்கே புகுமாறும்
அண்ணா எண்ணக் கடவேனே
அடிமை சால அழகுடைத்தே. 9

505 அழகே புரிந்திட் டடிநாயேன்
அரற்று கின்றேன் உடையானே
திகழா நின்ற திருமேனி
காட்டி என்னைப் பணிகொண்டாய்
புகழே பெரிய பதம்எனக்குப்
புராண நீதந் தருளாதே
குழகா கோல மறையோனே
கோனே என்னைக் குழைத்தாயே. 10

திருச்சிற்றம்பலம்

---

504. 'கண்கள் களிகூரக் கண்டேன்' என்க. "எண்ணாது" என்றதற்கு, 'வேறொன்றையும் எண்ணாது' எனச் செயப்படுபொருள் வருவித்துரைக்க. 'யாக்கையை மண்மேல் விடுவது எவ்வாறு என்றும், நான் வானில் வந்து உன் கழற்குப் புகுவது எவ்வாறு என்றும் ஆராய்தற்கு உரிமை உடையேனோ? உடையேனாயின், நான் உன்னிடத்துப்பட்ட அடிமைத் தன்மை மிகவும் அழகுடையதாமன்றோ' என்றபடி. 'இங்ஙனங் கூறவே, இவற்றை எண்ணி, பொருந்துவது செய்தற்குரியவன் தலைவனாகிய நீயே' என்பது பெறப்படும். "கழற்கு" என்றதனை, 'கழற்கண்' எனத் திரிக்க. "அழகுடைத்து" என்றது, 'அழகிலது' என்னும் குறிப்புமொழி.

505. இங்கும், "அழகு" என்றது, அழகல்லாததையே என்க. புகழே பெரிய பதம் - புகழ் பெரிதாகிய நிலை; சிவலோகம். குழைத்தாய் - வாடச்செய்தாய்; 'இது, பணி கொண்ட உனக்கு அழகோ' என்பது குறிப்பெச்சம். இதனுள் மூன்றாமெழுத்தெதுகை வந்தது. இடையிரண்டடிகளில் ஏனையடிகளின் மூன்றாமெழுத்து வந்தமையும் நோக்கற்பாற்று.

34. உயிருண்ணிப் பத்து

[ஆன்மாவைத் தூய்மைப்படுத்துவது சிவனது அருளும், அதனைத் தன்னுட்படுத்துக்கொள்வது சிவனது ஆனந்தமும் ஆதல்பற்றிச் சிவானந்தத்திற்கு 'உயிர் உண்ணி' என்னும் ஆக்கப் பெயர்கொடுத்து, அதனைப் பொருளாக உடைய பத்துப் பாடல்களை இப்பகுதியில் அருளிச்செய்கின்றார். எனவே, 'உயிருண்ணிப் பத்து என்பது, 'உயிருண்ணியின்மேற் பாடப் பட்ட பத்துப்பாடல்கள்' என்றும், உயிருண்ணியைப் பற்றிய பத்துப் பாடல்கள் என்றும் பொருள்தருவதாம். 'உயிருண்ணி' என்பது, மிக்கெழும் சிவானந்தம் என்பது பற்றியே இதற்கு, 'சிவானந்தம் மேலிடுதல்' எனக் குறிப் புரைத்தனர் முன்னோர். இது, திருப்பெருந்துறையில் அருளிச் செய்யப்பட்டது என்பதே பதிப்புக்களில் காணப்படுவது. இது முழுதும் கலிவிருத்தத்தால் ஆயது.]

கலிவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

506 பைந்நாப்பட அரவேரல்குல் உமைபாகம தாய்என்
மெய்ந்நாள்தொறும் பிரியாவினைக் கேடாவிடைப் பாகா
செந்நாவலர் பரசும்புகழ்த் திருப்பெருந்துறை உறைவாய்
எந்நாட்களித் தெந்நாள்இறு மாக்கேன் இனியானே. 1

---

506. பைந்நா - பசிய நாக்கு. 'அரவப் படவேரல்குல்' என்பது பின்முன்னாக மாறிநின்றது. "பையரவல்குற்பாண்டிமா தேவி" (திருமுறை 3. 120. 5.) "பையிள அரவல்குற் பானவை யோடும் உடனே" (திருமுறை - 7 85. 2.) என்று இங்ஙனம் வருதல் பெரும்பான்மை. ஏர், உவம உருபு. மெய் - உடல். வினைக் கேடா - வினையைக் கெடுத்தல் உடையவனே. செந் நாவலர் - செவ்விய நாவன்மையுடைய புலவர். இல்லது கூறிப் புகழாத நாவினையுடையவர் என்பார், அவரது நாவினை, "செந்நா" என்றார். "செய்யா கூறிக் கிளத்தல் - எய்யா தாகின்றெஞ் சிறுசெந் நாவே" (புறம் - 148.) என்ற சான்றோர் செய்யுளும் காண்க. பரசும் - புகழ்கின்ற. அடிகட்குக்

507 நானுரடி அணைவான்ஒரு நாய்க்குத் தவிசிட்டிங்
கூனுருடல் புகுந்தான்உயிர் கலந்தான் உளம்பிரியான்
தேனுர்சடைமுடியான்மன்னு திருப்பெருந்துறை உறைவான்
வானோர்களும் அறியததோர் வளம்ஈந்தனன் எனக்கே. 2

508 எனைநானென்ப தறியேன்பகல் இரவாவதும் அறியேன்
மனவாசகங் கடந்தான்எனை மத்தோன்மத்த னுக்கிச்
சினமால்விடை உடையான் மன்னு திருப்பெருந்துறை
[உறையும்
பனவன்எனைச் செய்தபடி றறியேன் பரஞ்சுடரே. 3

களிப்பும், இறுமாப்பும் சிவானந்த மேலிட்டாலன்றி உளவாகா வாகலின், 'அதனைப் பெறுதல் எந்நாள்' என்பதே கருத்தாதல் தெளிவு. ''எந்நாள்'' என மறித்தும் கூறியது, களித்த பின்னும் இறுமாப்புண்டாதற்குச் சிறிது காலம் இடையிடுதலும் கூடும் என்னும் கருத்தினுலாம்.

507. பொருள்கோள்: 'அடியணைவான் நான் ஆர்! திருப்பெருந்துறை உறைவான், ஒரு நாய்க்குத் தவிசிட்டது போன்று இங்கு எனக்கு வானோர்களும் அறியாததோர் வளம் ஈந்தனன்; உடல்புகுந்தான்; உயிர்கலந்தான்; உளம்பிரியான்; அதனுல், அப்பேற்றைப்பெற 'உரியனுனேன்' அடி அணைவான் நான் ஆர் - அவனது திருவடியை அடைவதற்கு நான் என்ன உரிமையுடையேன், 'அதனுல் அப்பேற்றைப்பெற உரியனுனேன்' என்பது குறிப்பெச்சம்.

508. நான் என்பது - நான் என்று உணர்வதை. பகல் இரவு ஆவது - பகல் இரவு என்னும் வேறுபாடு. 'இங்ஙனம் ஏதும் தோன்றுதபடி இறைவன் என்னைப் பெரும்பித்தனுகச் செய்து என்னை வேறுபடுத்த மாயத்தை யான் அறிகின்றிலேன்' என்க. உன்மத்தம், பித்து ஆகலின், மத்தோன்மத்தம், பெரும் பித்து. பனவன் - பார்ப்பான். ''செய்த'' என்றது, 'வேறு படுத்த' என்னும் பொருட்டு. ''படிறு'' என்றது, பழிப்பது போலப் புகழ்ந்தது. பரஞ்சுடர் - மேலான ஒளி; இதுவும் இறைவனையே குறித்தது.

509 வினைக்கேடரும் உளரோபிறர் சொல்லீர்விய னுலகில்
எனைத்தான்புகுந் தாண்டான்என தென்பின்புரை யுருக்கிப்
பினைத்தான்புகுந் தெல்லேபெருந் துறையில்உறை
[பெம்மான்
மனத்தான் கண்ணின் அகத்தான்மறு மாற்றத்திடையானே

510 பற்றாங்கவை அற்றீர்பற்றும் பற்றாங்கது பற்றி
நற்றாங்கதி அடைவோமெனிற் கெடுவீரோடி வம்மின்
தெற்றார்சடை முடியான்மன்னு திருப்பெருந்துறை இறைசீர்
கற்றாங்கவன் கழல்பேணின ரொடுங்கூடுமின் கலந்தே. 5

---

509. வினைக்கேடரும் - வினையைக் கெடுப்பவரும்; 'பிறர் உளரோ' என மாற்றுக. 'வியனுலகில் உளரோ' என இயையும். புரை - துளை. பினைத்தான் புகுந்து - பின்னும் வந்து; எல்லே - பகலிற்றானே; என்றது, 'யாங்கள் கனவிலன்றி நனவிலும் இனிது காணும்படி' என்றவாறு. 'எல்லே பெருந்துறையில் உறைபெம்மான்' என்றதை, இரண்டாம் அடியின் முதலிற் கூட்டுக. மறு மாற்றம் - பின்னும் தொடர்ந்து எழும்சொல். "மறு" என்றதனை, 'மற்று' என்பதன் இடைக்குறை என்பாரும் உளர்.

510. பற்று அவை அற்றீர் - மனைவி, மக்கள் முதலிய பற்றுக்களாகிய அவை அனைத்தையும் விட்டவர்களே. பின் வரும் பற்றினை, "பற்றும் பற்று" என்றலின், இவை, பற்றலாகாத பற்றுக்கள் என்பது போந்தது. பற்றலாகாத பற்றுக்களாவன, தன்னைப் பற்றினவனை யாற்றுள் ஆழ்த்தும் அம்மிபோலப் பிறவிக் கடலுள் ஆழ்த்தும் பற்றுக்கள். 'அம்மி துணையாக ஆறிழிந்த வாறொக்கும்" (நல்வழி) என்பது காண்க. பற்றும் பற்றாவது, தன்னைப் பற்றினவனைக் கரை சேர்க்கும் புணைபோலப் பிறவிக் கடலைக் கடப்பிக்கும் பற்று, அஃது இறைவன் திருவடி. 'யான்' என்னும் அகப்பற்று' பற்றற்றானது பற்றினைப் பற்றியன்றி நீங்கலாகாமையின், "பற்றற்றீர்" என்ற பற்றுக்கள், சிறுபான்மை அஃது இன்றியும் நிலையின்மை, தூய்மையின்மை முதலியவற்றை உணர்ந்த துணையானே நீங்கற் பாலனவாய மனைவி, மக்கள் முதலாய எனது என்னும் புறப்பற்றுக்கள் சிலவேயாம். இரண்டிடத்தும்,

"பற்று" என்றது, பற்றப்படும் பொருளைக் குறித்தது. 'நன்று' என்பது, "நற்று" என வலித்தல் பெற்றது. இனி ஒருமொழி முடிபு வரையறைப்படாமையின், 'நல்' என்னும் முதனிலை யீற்று லகரம் றகரமாய்த் திரிதலும் உண்டு என்றலு மாம். அடைவோமெனின் - நாம் அனைவரும் அடையவேண்டு மாயின்; தம்மையும் அவர்களோடு வைத்து, இவ்வாறு ஓதினார். 'அடைவோமெனின் வம்மின்' என இயையும், "கெடுவீர்" என்றது,

"விடுத்த தூதுவர் வந்து வினைக்குழிப்
படுத்த போது பயனிலை பாவிகாள்"

(திருமுறை 5 - 86.2.)

"ஆவிதான் போயினபின் யாரே யனுபவிப்பார்
பாவிகாள் அந்தப் பணம்"

(நல்வழி)

என்றாற்போலும் இடங்களில், "பாவிகாள்" என்றற் றொடக்கத்தனபோல, இரக்கம் பற்றி வந்த வெஞ்சொல்; இன்னோரன்ன சொற்கள், வேம்பும் கடுவும்போல வெய்யவாயி னும் (தொல் - பொருள் 427.) தாங்குதலின்றி வழிநனி பயத்தல்பற்றிப் பெருமக்களால் ஒரோவிடத்துக் கூறப்படுமா றுணர்க. தெற்று ஆர் - பின்னுதல் பொருந்திய. பின்னுதல் - ஒன்றையொன்று பற்றிக்கிடத்தல். சீர் - புகழ். கற்று - பலகாலும் ஓதி. "ஆங்கு" மூன்றும் அசைநிலைகள். கலந்து கூடுமின்' என்க; இவை ஒருபொருட் சொற்கள். நிலையாமை முதலியவை நோக்கிச் சுற்றம் முதலியவைகளைத் துறந்தோர், பின்னர்ப் பற்றற்றான் பற்றினைப் பற்ற நினையாது அவற்றைத் துறந்த அளவிலே நிற்பின், இகம், பரம் என்னும் இரண்டனை யும் வீணே இழந்து நிற்பராதலின் அத்தன்மையாரை நோக்கி யிரங்கி இங்ஙனம் கூறினார். இத்தன்மையோரை, "பாக்கியம் இன்றி இருதலைப் போகமும் பற்றும் விட்டார்" என ஞான சம்பந்தப்பெருமானார் அருளிச்செய்தல் காண்க. (திருமுறை 1. 110. 10.) இது தம்மோடு ஒத்தாரது நிலைக்கு இரங்குமுகத் தான், தமது நிலையையும் குறித்தவாறு.

511 கடலின்திரை யதுபோல்வரு கலக்கம்மலம் அறுத்தென்
உடலும்என துயிரும்புகுந் தொழியாவணம் நிறைந்தான்
சுடருஞ்சுடர் மதிசூடிய திருப்பெருந்துறை உறையும்
படருஞ்சடை மகுடத்தெங்கள் பரன்தான் செய்தபடிறே. 6

512 வேண்டேன்புகழ் வேண்டேன் செல்வம் வேண்டேன் மண்ணும் விண்ணும்
வேண்டேன்பிறப் பிறப்புச்சிவம் வேண்டார் தமைநாளும்
தீண்டேன்சென்று சேர்ந்தேன்மன்னு திருப்பெருந்துறை [இறைதாள்
பூண்டேன்புறம் போகேன்இனிப் புறம்போகலொட் டேனே.

---

511. கடலின் திரை, இடையறுது தொடர்ந்து வருதல் குறித்து வந்த வினையுவமை. கலக்கம் - துன்பம். 'கலக்கமும் மலமும் அறுத்து' என்க. 'உடலின்கண்ணும், உயிரின்கண்ணும்' என உருபு விரிக்க. ஒழியா வண்ணம் - யாதோர் இடமும் எஞ்சாதபடி. சுடரும் சுடர் மதி - வீசுகின்ற ஒளியை யுடைய சந்திரன். படிறு - மாய வித்தை. தாம் அறியாத வாறே தம்மிடத்து இவற்றைச் செய்தமையின், "படிறு" என்றார். 'செய்த படிறு இது' என ஒருசொல் வருவித்து முடிக்க.

512, முதற்றொட்டு, "பிறப்பிறப்பு" என்றது காறும் உள்ள தொடர்களில் இரண்டாம்வேற்றுமையும், "சேர்ந்தேன் மன்னு திருப்பெருந்துறை" என்றதில் ஏழாம் வேற்றுமையும் இறுதிக்கண் தொக்கன. வேண்டேன் - விரும்பமாட்டேன். சிவம் - மங்கலமே உடையதாகிய முதற்பொருளை. நாளும் தீண்டேன் - எந்நாளும் மனத்தால் தீண்டேன்; இங்ஙனம் உரைப்பவே, மெய்யால் தீண்டாமை தானே பெறப்படும். 'அங்கு இறைதாள் பூண்டேன்' என்க. பூணுதல் - மேற் கொள்ளுதல். 'அதனால் நானும் அவற்றிற்குப் புறமாகச் செல்லேன்; அவற்றையும் எனக்குப் புறமாகச் செல்லவிடேன்' என்க. இதனுள், அடிகள் இம்மை மறுமை இன்பங்களைச் சிறிதும் விரும்பாத பெருமை இனிது பெறப்பட்டது.

513 கோற்றேன்எனக் கென்கோகுரை கடல்வாய்அமு தென்கோ
ஆற்றேன்எங்கள் அரனேஅரு மருந்தேஎன தரசே
சேற்றூர்வயல் புடைசூழ்தரு திருப்பெருந்துறை உறையும்
நீற்றூர்தரு திருமேனிநின் மலனேஉனை யானே. 8

514 எச்சம்அறி வேன்நான்எனக் கிருக்கின்றதை அறியேன்
அச்சோஎங்கள் அரனேஅரு மருந்தேஎன தமுதே
செச்சைமலர் புரைமேனியன் திருப்பெருந்துறை உறைவான்
நிச்சம்என நெஞ்சில்மன்னி யானாகி நின்றானே. 9

---

513. இதனுள், "எங்கள் அரனே" என்பது முதலாகத் தொடங்கி நேரே சென்று பொருள் உரைக்க. அங்ஙனம் உரைக்கும் வழி, "எனக்கு" என்றதனை, "கோற்றேன்" என்றதற்கு முன்னர் வைத்துரைக்க. கோல்தேன் - கொம்புத் தேன். என்கோ - என்று சொல்வேனோ. குரைகடல்வாய் - ஒலிக்கின்ற கடலின்கண் தோன்றிய. ஆற்றேன் - உனது இன்பத்தை முழுதும் துய்க்க வல்லே னல்லேன். அரன் - பாசத்தை அரிப்பவன். நீற்று ஆர்தரு - திருநீற்றினால் நிறைந்த.

514. "எச்சம்" என்றது முதலாக, "அச்சோ" என்பது ஈறாக உள்ள பகுதியை இறுதியிலும், மூன்றாம் அடியை முதலிலும் கூட்டுக. ஏகாரங்கள், தேற்றம். எச்சம் - பெறாத பொருள். இருக்கின்றது - பெற்றுள்ள பொருள். அச்சோ, வியப்பிடைச் சொல். செச்சை - வெட்சி, "நித்தம்" என்பது, 'நிச்சம்' எனப் போலியாயிற்று. 'திருப்பெருந்துறையில் உறையும் பெருமான் எனக்குப் பெருநலம் விளைப்பவன்; அவன் என் நெஞ்சில் மன்னித் தோன்றாது நிற்கின்றான்; இதனை நான் அறியாமல் துன்புறுகின்றேன்' என்பது இதன் திரண்ட பொருள். 'சீவன் முத்தி நிலையில் இருப்பினும் அதனால் அமைதி பெறாமல், பரமுத்தியை விரும்புகின்றேன்' என்றபடி. இது சிறப்புடையதேயாயினும், உடம்புள்ள அளவும் இறைவன் அருள்வழியே அமைந்திராது, விரைந்து வலியுறுத்தி அவனை இரந்து நிற்கும் நிலைபற்றி இவ்வாறு கூறினார். பெற்றுள்ளதை அறியாத ஒன்றை வியப்பாகக் கொண்டு, 'அச்சோ' என்றார்.

515 வான்பாவிய உலகத்தவர் தவமேசெய அவமே
ஊன்பாவிய உடலைச்சுமந் தடவிம்மர மானேன்
தேன்பாய்மலர்க் கொன்றைமன்னு திருப்பெருந்துறை [உறைவாய்
நான்பாவியன் ஆனால்உனை நல்காய்என லாமே. 10

திருச்சிற்றம்பலம்

---

515. வான் பாவிய - விண்ணிற் பரந்துள்ள. 'உலகத்தவரும்' என்னும் சிறப்பும்மை தொகுத்தலாயிற்று. தேவரும் உன்னை அடையத் தவம் செய்துநிற்க, நான், வாளாதே உன்னை அடைய முயன்று வேண்டுகின்றேன்; எனது தவமின்மை குறித்து அருள்பண்ணாதிருத்தல் முறையேயாக, நான் பாவியாகவே இருந்துகொண்டு, உன்னை மனம் இரங்காதவன் என்று வெறுத்தல் முறையோ' என்கின்றார். அடவி - காடு. காட்டில் உள்ள மரம் ஒன்றற்கும் பயன்படாது வீணே முதிர்ந்து வற்றி மட்கி மடியும்; அல்லது எரிந்தொழியும் என்க.

பொங்குபுனல் யாறுபல போய்விழு கடற்போல்
எங்குமுள நல்லுயிர்க ளெய்துமொளி யாகுந்
திங்களணி வேணிய ரிருப்பவடி சேருந்
துங்கமறை யாளர்பலர் துன்றுநெறி சென்றார். 58

செம்மனத்து வாதவூர்ச் செல்வர்தமைப் புல்லாத
பொய்ம்மயக்கந் தரும்பாசம் போலமர்ந் தனபூவை
எம்மயக்கு மொழிப்பாருக் கினிப்பிறவி யில்லையெனக்
கைம்மறிக்கு மவர்போல மலர்ந்தனவங் குளகாந்தள். 59

விற்காட்டுங் கரத்துமத னம்பாகி வெம்பிறவி
யிற்காட்டி யாவரையு மாகுலஞ்செ யெம்பாவம்
நிற்காட்டி லொழிப்பவர்யார் நீயருள்க வெமக்கென்று
பற்காட்டி நிற்பவர்போன் மலர்ந்தனமென் பனிமுல்லை. 60

— திருவாதவூரடிகள் புராணம்.

35. அச்சப் பத்து

[திருவருள் உணர்வை அழிப்பனவற்றுக்கு அஞ்சுதலைக் கூறும் பத்துப் பாடல்களின் தொகுதி அச்சப்பத்து. இவ்வச்சம் சிவானந்தத்தை இடையறாது நுகர்தற்கு வழியாதல் பற்றி, இதற்கு 'ஆனந்தமுறுதல்' எனக் குறிப்புரைத்தனர் முன்னோர். இக் குறிப்புப்பற்றிக் காணப்படுவதொரு சூத்திரம்,

" அருளுரு நச்சார்க் கச்சப் பத்துத்
தெருடரு சிவானந் தத்தின் முறுகுதல்'

என்றிருத்தலால், 'ஆனந்த முறுகுதல்' என்பதும் பாடம் போலும்! இது, தில்லையில் அருளிச்செய்யப்பட்டது என்பதே பதிப்புக்களிலும் காணப்படுவது. இப்பகுதி முழுவதும், அறுசீரடி விருத்தத்தால் ஆயது.]

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்.

516 புற்றில்வா ளரவும் அஞ்சேன்
பொய்யர்தம் மெய்யும் அஞ்சேன்
கற்றைவார் சடைஎம் அண்ணல்
கண்ணுதல் பாதம் நண்ணி
மற்றுமோர் தெய்வந் தன்னை
உண்டென நினைந்தெம் பெம்மாற்
கற்றிலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே. 1

516, புற்றில் அரவு - புற்றில் வாழும் பாம்பு. வாளரவு - கொடிய பாம்பு. மெய் - மெய்யென்று காட்ட முயலும் சொல்; இச்சொல், தன்னைத் தெளிந்தாரை வஞ்சித்துக் கேட்டின்கண் வீழ்த்தலின் அஞ்சப்படுவதாயிற்று. 'நண்ணியபின்' என்பது, 'நண்ணி' எனத் திரிந்து நின்றது. தெய்வப் பிறவியை எய்தினோர் யாவரிடத்தும் உள்ள தெய்வத்தன்மைகள் பலவும் சிவபெருமானது அருளாற்றலின் கூறேயாதலின், அவனை

517 வெருவரேன் வேட்கை வந்தால்
வினைக்கடல் கொளினும் அஞ்சேன்
இருவரால் மாறு காணா
எம்பிரான் தம்பி ரானும்
திருவுரு அன்றி மற்றோர்
தேவர்எத் தேவரென்ன
அருவரா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே. 2

உணர்ந்த பின்னர்ப் பிறிதொரு தெய்வத்தைச் சுதந்திரமாய் நின்று அருள்செய்வதாகக் கருதுதல் குற்றமாயிற்று. எனவே, பிறிதொரு தெய்வத்தை அவன் அருள்வழிநின்று அருள் செய்யும் அதிகார தெய்வமாகக் கருதின் குற்றமின்றாதல் பெறப்படும். இப் பகுதியின் எல்லாத் திருப்பாடல்களின் ஈற்றடியும் மோனை நயம் கெடாதே வருதலின், இங்கும், 'பெம்மான் கற்றிலாதவர்' எனப் பாடங்கொண்டு, 'அவனது பெருமையை உணராதவர் என்று உரையாது, 'பெம்மாற்கு அற்றிலாதவர்' என்றே பாடங்கொண்டு, 'அவன் பொருட்டுப் பிற தெய்வங்களிடத்துள்ள பற்றுக்கள் நீங்கப்பெறாதவர்' என்றே உரைக்க. அம்ம, வியப்பிடைச் சொல்' 'அஞ்சுமாறு' பெரிது' எனச் சொல்லெச்சம் வருவித்து முடிக்க. இதனானே, "அஞ்சேன்" என்றதும், 'மிக அஞ்சேன்' என்னும்கருத்துடைய தாம். முன்னர், "அஞ்சேன்" என்று கூறிப் பின்னர், "நாம் அஞ்சுமாறு" என்றது, உயர்வு பற்றி வந்த பால்வழுவமைதி. உயர்வு, அஞ்சுவது அஞ்சல் (குறள் 428.). 'இங்ஙனம் நெறி பிறழாது நிற்கும்பேறு எமக்கு வாய்த்தது' என மகிழ்ந்தருளிச் செய்தவாறு. இதனுள், "அஞ்சேன்" என்பன பலவும், அவ்வச் சத்திற்குக் காரணமாகிய பொருள்களால் கெடுவது உடல் நலத்தைத்தரும் உலகியலேயன்றி உயிர்நலம் அன்றாதல் பற்றி யும், "அஞ்சுமாறுபெரிது" என்றது, அவ்வச்சத்திற்குக் காரண மாகியபொருள்கள் அவ்வாறன்றி உயிர்நலத்தைத் தரும் சிவஞானத்தைஅழித்தல் பற்றியுமாதல் வெளிப்படை.

517. வெருவரேன் - அஞ்சேன். வேட்கை - ஐம்புல ஆசை. "வினை" என்றது, பிராரத்தத்தை, அது. சிவஞானத் தில் உறைத்து நிற்பாரை யாதும் செய்யமாட்டாதாகலின்,

518 வன்புலால் வேலும் அஞ்சேன்
வளைக்கையார் கடைக்கணஞ்சேன்
என்பெலாம் உருக நோக்கி
அம்பலத் தாடு கின்ற
என்பொலா மணியை ஏத்தி
இனிதருள் பருக மாட்டா
அன்பிலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே. 3

அது பற்றி எழும் ஐம்புல வேட்கையும் அவர்க்கு உடல் ஊழாயே கழியும்; ஆதலின், அகத்து நிற்கும் நுண் பொருளாகிய அவை இரண்டும் அத்துணையாக அஞ்சப்படாவாம். இனிச் சிவஞானிகள் அல்லாதாரது கூட்டுறவு உண்டாயின், அது புறத்துத்தூலமாய் நின்று சிவஞானத்தைக் கெடுக்குமாகலின், அது பெரிதும் அஞ்சத் தக்கதாம். 'தேவருட் சிறந்தார் மூவர்' என்பது பலர்க்கும் உடன்பாடாக அவருள் ஏனை இருவரால் அளவிட்டறிய ஒண்ணாதவன் சிவபெருமான் என்பது தெரியப் பட்ட பின்னர், பிற தேவரைத் தலைவராக எண்ணுதல் என் என்பார், இருவரால் அறியப்படாமையை எடுத்தோதினர். சிவபெருமானை மூவருள் ஒருவனாக வைத்தெண்ணுவார் கொள்கைபற்றியே நோக்கினும், இவ்வரலாற்றால் அவனது முதன்மை தெற்றென விளங்கும் என்பது கருத்து. மாறு - பகைமை. 'மாற்றின்கண்' என்னும் ஏழாம் வேற்றுமைத் தொகைக்கண் றகரம் இரட்டாமை இலேசினாற் கொள்க. எம்பிரான்-எமக்குத் தலைவன். தம்பிரான் - எல்லா உயிர்க்கும் "தேவர்" எனப் பின்னர் வருகின்றமையின், 'திருவுருவே தேவரன்றி' என உரைக்க. சிவபெருமானது சொரூபநிலை புறச்சமயிகளால் உணரவாராமையின், அவனது தடத்தமாகிய திருவுருவையே குறித்தருளினர். எத்தேவர் - என்ன முதன்மை யுடைய தேவர். அருவருத்தல் - வெறுத்தல்.

518. 'வல் வேல்' என இயையும். புலால் - எதிர்ந்தவரது மார்பின் தசை. வளைக் கையார், மாதர்; என்றது, ஆடவர் பலரையும் வலிதின் மயக்கும் பொதுமகளிரை. அவர் கடைக் கண் அனைவராலும் பழிக்கப்படுதலின், அதன் மயக்கத்தின்கண் அகப்படாது நீங்குதல் எளிது; சிவபெருமானிடத்து அன்

519 கிளியனுர் கிளவி அஞ்சேன்
அவர்கிறி முறுவல் அஞ்சேன்
வெளியநீ ருடும் மேனி
வேதியன் பாதம் நண்ணித்
துளியுலாம் கண்ண ராகித்
தொழுதழு துள்ளம் நெக்கிங்
களியிலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே. 4

பில்லாதவர் அங்ஙனமன்றித் தம்மை உய்யும் நெறியுடையோராக மதித்துப் பிறர்க்கு உறுதிகூற முற்படுதலின், அவரது மயக்கின்கண் அகப்படாது நீங்குதல் அரிது' என்பது கருத்து. வளைக்கையார் கடைக்கணும் ஒருவகை வேலாதல் அறிக.

519. கிளவி - சொல். 'மயக்கும் மகளிரது கிளிபோலும் மொழி' என்பதனை, கிளியனுர் கிளவி எனச்சுருங்க ஓதினுர். கிறி - பொய். முறுவல், அவர் சிரிப்பது, உண்மை மகிழ்ச்சி பற்றியன்றி, மயக்குதல் மாத்திரைக்கேயாகலின், "கிறி முறுவல்" என்று அருளினுர். அவர்க்குக் கண்ணினும் இவை சிறந்தமையின், இவற்றை இங்கு வேறெடுத்தருளிச்செய்தார். அளி - அன்பு. முன்னைத் திருப்பாட்டில், அன்பு சிறிதும் இல்லாதவரைக் குறித்து அருளிச் செய்தார்; இதன்கண் பேரன்பு இல்லாதவரைக் குறித்து அருளிச்செய்தார் என்க. எனவே, இவரும் ஓராற்ருன் அஞ்சுதற்கு உரியராதல் அறிக. பயனில் சொல்லை விலக்க வந்த திருவள்ளுவ நாயனுரும்,

" அரும்பயன் ஆயும் அறிவினுர் சொல்லார்
பெரும்பயன் இல்லாத சொல் "

என, சிறுபயன் தரும் சொல்லையும் விலக்கியவாறு அறிக. (குறள் - 198).

520 பிணியெலாம் வரினும் அஞ்சேன்
பிறப்பினோ டிறப்பும் அஞ்சேன்
துணிநிலா அணியி னான்றன்
தொழும்ப ரோடழுந்தி அம்மால்
திணிநிலம் பிளந்துங் காணாச்
சேவடி பரவி வெண்ணீ
றணிகிலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே. 5

521 வாளுலாம் எரியும் அஞ்சேன்
வரைபுரண் டிடினும் அஞ்சேன்
தோளுலாம் நீற்றன் ஏற்றன்
சொற்பதம் கடந்த அப்பன்
தாளதா மரைக ளேத்தித்
தடமலர் புனைந்து நையும்
ஆளலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே. 6

---

520. துணி நிலா - துண்டாகிய சந்திரன். அழுந்தி - அன்பில் திளைத்து. மால் - திருமால்; "அம்மால்" என்றது, பண்டறிசுட்டு. வெண்ணீறணிகிலாதவரைக் கூறுவார் அதனை அணியும் முறையை விதந்தோதினார். எனவே, அம்முறையால் அணியாது, வாளா கோலஞ்செய்தல் மாத்திரையாக அணிபவரும் ஒருவாற்றான் அஞ்சத்தக்கவராதல் பெறப்படும். "வேட நெறிநில்லார் வேடம்பூண் டென்பயன்" என்று அருளிச்செய்தார் திருமூலரும் (திருமந்திரம் - *240*). "பயன்" என்ற பொதுமையால், தமக்கும், பிறர்க்கும் பயன்படாமை பெறப்படும்; படவே, அப்பயனுக்கு அவர்தம் வேடம் ஒராற்றால் தடையாதலும் பெறுதும். திணி - திணிந்த; உறுதியான.

521. வாள் - ஒளி. வரை - மலை, "தாள" என்ற அகரம், விரித்தல். பெருமையை உணர்த்தும் தட என்னும் உரிச்சொல், இங்கு மிகுதியை உணர்த்திற்று. நைதல் - உருகுதல். "ஆள்" என்றது, 'அடிமை' என்னும் பொருட்டு.

522 தகைவிலாப் பழியும் அஞ்சேன்
சாதலை முன்னம் அஞ்சேன்
புகைமுகந் தெரிகை வீசிப்
பொலிந்தஅம் பலத்து ளாடும்
முகைநகைக் கொன்றை மாலை
முன்னவன் பாத மேத்தி
அகம்நெகா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே. 7

523 தறிசெறி களிறும் அஞ்சேன்
தழல்விழி உழுவை அஞ்சேன்
வெறிகமழ் சடையன் அப்பன்
விண்ணவர் நண்ணா மாட்டாச்
செறிதரு கழல்க ளேத்திச்
சிறந்தினி திருக்க மாட்டா
அறிவிலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே. 8

---

522. தகைவு இலா - தடுக்கலாகாத; ஒருதலையாக வரற்பாலதாய. முன்னம் அஞ்சேன் - முதற்கண் அஞ்சேன்; என்றது, 'யான் அஞ்சாத பொருள்களுள் அதுவே முதற்கண்ணது' என்றபடி. 'முகந்த' என்பதன் ஈற்றகரம், தொகுத்தல். முகைநகை - அரும்பவிழ்கின்ற. இஃது வாயார வாழ்த்தாதவரைக் கூறியது,

523. தறி செறி களிறு - தறியின்கண் கட்டிவைக்கப்படுகின்ற யானை; என்றது, 'பெரும்பாலும் அவிழ்த்து ஓட்டப்படாத, அவிழ்த்து ஓட்டின், கொலைத் தண்டத்திற்கு உரியார் மீது ஓட்டப்படுகின்ற கொலையானை' என்றபடி. இன்னதொன்றே பல்லவ மன்னன் ஆணையால் நாவுக்கரசர்மீது ஏவப்பட்டது. 'தறிசெறு களிறு' என்பதே பாடம் என்பாரும் உளர். உழுவை - புலி. வெறி - வாசனை. 'அப்பன் கழல்கள்' என இயையும். செறிதரு - கட்டப்பட்ட. 'அப்பன், நண்ணமாட்டா' என்பன, 'கழல்கள்' என்பதன் ஆகுபெயர்ப் பொருளையே சிறப்பித்தன. இது சிவஞானத்தால் இன்புற்றிருக்கமாட்டாதவரைக் குறித்தது.

524 மஞ்சுலாம் உருமும் அஞ்சேன்
மன்னரோ டுறவும் அஞ்சேன்
நஞ்சமே அமுத மாக்கும்
நம்பிரான் எம்பிரானுய்ச்
செஞ்செவே ஆண்டு கொண்டான்
திருமுண்டம் தீட்ட மாட்டா
தஞ்சுவா ரவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே. 9

525 கோணிலா வாளி அஞ்சேன்
கூற்றுவன் சீற்றம் அஞ்சேன்
நீணிலா அணியி னானை
நினைந்துநைந் துருகி நெக்கு

---

524. மஞ்சு உலாம் - மேகத்தின்கண் பொருந்திய. உரும்- இடி, மன்னரோடு உறவு தீக்காய்தல் போல்வதொன்ருகலின், (குறள்691) அதுவும் அஞ்சப்படுவதாதல் அறிக. நம்பிரான் - பலர்க்கும் தலைவன். எம்பிரானுய் - எமக்குத் தலைவனுய் வந்து. "செஞ்செவே" என்றதனை முன்னரும் (453) காண்க. "திரு" என்றது, 'விபூதி' என்னும் பொருட்டாய், திருநீற்றை யுணர்த்திற்று. முண்டம் - நெற்றியினிடத்து. தீட்டுதல் - பூசுதலாதலை, "தீட்டார் மதில்" (180) என்றதனானும் அறிக. இனி, 'முண்டம் என்பதே, ஆகுபெயராய், அதன்கண் தீட்டப்படும் திருநீற்றை உணர்த்தும்' என்பாரும் உளர். "அஞ்சுவர்" என்றது, 'கூசுவார்' என்றபடி. முன்னர், "வெண்ணீறு அணிகிலாதவரை" (520) என்றது, அதனைப் புறக்கணித்திருப்பாரையும், இஃது, அதனை அணியக் கூசுவாரையும் கூறியன என்க. திருவெண்ணீற்றை அணியக்கூசுதல், உலகவர் இகழ்ச்சிக்கு ஏதுவாய் நிற்கும் சாம்பலாதல்பற்றி.

525. கோண் இலா வாளி - வளைதல் இல்லாத அம்பு. 'கோள் நிலா வாளி' எனப் பிரித்து, 'உயிரைக் கொள்ளுதல் பொருந்திய அம்பு' என்று உரைப்பாரும் உளர். நீள் - வளர்தற் குரிய. வாள் நிலாம் - ஒளி பொருந்திய, 'நீர் சோர' என

வாணிலாங் கண்கள் சோர
வாழ்த்திநின் றேத்த மாட்டா
ஆணலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே. 10

திருச்சிற்றம்பலம்

ஒரு சொல் வருவிக்க. ஆண் - புருடத்தன்மை; அஃது அதனை யுடையாரைக் குறித்தது. சிறந்த புருடார்த்தத்தை அறியாமையின், சிவபெருமானை வாழ்த்தாதவரை, 'புருடத்தன்மை உடையரல்லாதவர்' என்றார் எனவே, இது, மக்கட் பிறப்பின் பயனை அடைய நினையாதவரைக் குறித்தவாறாயிற்று.

பொற்புடைய தமிழ்பாடும் புண்ணியரெப் பொருளினுமாஞ்
சிற்பரனுண் மையில்விழிக்குந் திருநயனஞ் சேர்தலினால்
நிற்பதுவாம் பிறவியிது வென்றிரங்கி நீண்மரங்கள்
கற்பனையை யுணர்ந்துமலர்க் கண்ணீர்கள் பொழிந்தனவால். 61

முன்னைவினைப் பெருங்காடு மூடுறவைம் புலவேடர்
துன்னியலைத் திடர்செய்யுந் துன்பவழிச் செல்லாமல்
உன்னருநற் சிவஞான வுபதேசந் தமிழ்செய்வார்
இன்னவகைத் துளகான மெய்தியவந் நெறிநீங்கி. 62

விரிந்தகட லுக்கிடை விழுந்திட ருழந்தே
திரிந்தவர் நயந்துகரை சென்றணுகு மாபோல்
வருந்தவுழல் வித்தவினை யொத்தருள் வசத்தால்
அருந்தவர் பெருந்துறை மருங்கினி லணைந்தார். 63

இந்தவுல கஞ்சிவ னிருக்குமுல காகச்
சிந்தையருள் கொண்டுதிரு வாசக முரைப்பார்
பந்தமற வந்தமில் பரங்குறுக வென்றே
வந்துள பெருந்துறையின் வண்மையுரை செய்வாம். 64

— திருவாதவூரடிகள் புராணம்.

36. திருப்பாண்டிப் பதிகம்

['பாண்டியன் நாடு' என்பது, 'பாண்டி நாடு' என மருவியவழி, 'பாண்டி' என்பதே அந்நாட்டின் சிறப்புப் பெயர்போல நிற்றலின், அதன்கண் நிகழ்ந்த நிகழ்ச்சியைக் கூறும் பதிகத்தை, 'பாண்டிப் பதிகம்' என்றார். இதனை, 'புகார்க் காண்டம் (சிலப்பதிகாரம்), அயோத்தியா காண்டம்' (இராமாயணம்) முதலியனபோலக் கொள்க. அங்கு நிகழ்ந்த நிகழ்ச்சியாவது, இறைவன் நரியைக் குதிரையாக்கித் தானும் ஒரு குதிரைமேல் வந்து காட்சி வழங்கியது. பாண்டி நாட்டை அடிகள் இறைவன் வெளிப்பட்டருளும் நாடாகக் கருதுதலின், 'திரு' என்னும் அடையும் புணர்த்தருளினார். இறைவன் அடிகள் பொருட்டுக் குதிரை கொணர்ந்தளித்தமையை, அவர் அவனது அருள் இன்பத்தின் தொடக்கமாகக்கருதி இதற்கு, 'சிவானந்த விளைவு' எனக் குறிப்புரைத்தனர் முன்னோர். விளைவு - தோற்றம். இதன் மூன்றாந் திருப்பாட்டின் பொருள், இதற்கு அரண் செய்யும். இறைவன் மதுரையில் குதிரை கொணர்ந்தளித்தமை அனைவராலும் உணரப்பெற்றபின், அவ் விடத்தே அடிகள் இதனை அருளிச்செய்தார் எனக் கருதுதற்கு இடம் உண்டு. இதன்கண் அடிகள் தம்மை இவ்வுலக வாழ்க்கையின் நீக்கித் தன்பால் வரவழைத்துக்கொள்ளல் வேண்டும் என இறைவனை நோக்கி விண்ணப்பியாமை, இக் கருத்தை வலியுறுத்தும். இது, திருப்பெருந்துறையில் அருளிச் செய்யப்பட்டது, என்பதே பதிப்புக்களில் காணப்படுவது. இது முழுவதும் கட்டளைக் கலித்துறையால் ஆயது.]

கட்டளைக் கலித்துறை

திருச்சிற்றம்பலம்

526 பருவரை மங்கைதன் பங்கரைப் பாண்டியற்
காரமுதாம்
ஒருவரை ஒன்று மிலாதவ ரைக்கழற்
போதிறைஞ்சித்

---

526. பரு வரை - பரியதாகிய (பருத்த உருவினதாகிய) மலை. இதனுள் இறைவனைப் பன்மை வாய்பாட்டால் அருளிச்

தெரிவர நின்றுருக் கிப்பரி மேற்கொண்ட
சேவகனார்
ஒருவரை யன்றி உருவறி யாதென்றன்
உள்ளமதே. 1

527 சதுரை மறந்தறி மால்கொள்வர் சார்ந்தவர்
சாற்றிச்சொன்னோம்
கதிரை மறைத்தன்ன சோதி கழுக்கடை
கைப்பிடித்துக்
குதிரையின் மேல்வந்து கூடிடு மேற்குடி
கேடுகண்டீர்
மதுரையர் மன்னன் மறுபிறப் போட
மறித்திடுமே. 2

செய்கின்றார். பாண்டியனுக்குப் பேரின்பத்தை அளித்தமை பற்றி, '' பாண்டியற்கு ஆரமுதாம் ஒருவர் '' என்றார். மேல்,

'' நரகொடு சுவர்க்க நானிலம் புகாமல்
பரகதி பாண்டியற் கருளினை போற்றி ''

என்று (போற்றித். 213 - 14.) அருளிச் செய்தமை காண்க. ஒருவர் - ஒப்பற்றவர். ஒன்றும் இலாதவர் - உயிரியல்புகளுள் ஒன்றும் இல்லாதவர். கழல் போது இறைஞ்சித் தெரிவர நின்று - மக்கள் தமது திருவடிமலரை வணங்கித் தம்மைக் கண்களால் காணுதல் உண்டாகும்படி வெளிநின்று. உருக்கி - அனைவரது உள்ளங்களையும் உருகச்செய்து. 'சேவகனாராகிய ஒருவர்' என இருபெயரொட்டாக்குக. 'உருவாக' என ஆக்கம் வருவிக்க. பொருளை, 'உரு' என்றல் வழக்காதல் உணர்க. இனி, ஐயுருபை அது வுருபாகக்கொண்டு, 'ஒருவரது உருவை நினைதலன்றிப் பிறரது உருவத்தை என் உள்ளம் நினையாது' என்று உரைத்தலும் ஒன்று.

527. பொருள்கோள் :- 'சோதி, மதுரையர் மன்னன் மறுபிறப்பு ஓட மறித்திடும்; ஆதலின், அவன் கழுக்கடை தன்னைக் கைப்பிடித்துக் குதிரையின்மேல் வந்து கூடிடுமேல்

528 நீரின்ப வெள்ளத்துள் நீந்திக் குளிக்கின்ற
நெஞ்சங்கொண்டீர்
பாரின்ப வெள்ளங் கொளப்பரி மேற்கொண்ட
பாண்டியனார்
ஓரின்ப வெள்ளத் துருக்கொண்டு தொண்டரை
உள்ளங்கொண்டார்
பேரின்ப வெள்ளத்துட் பெய்கழ லேசென்று
பேணுமினே. 3

இங்குள்ளாரது குடிகெடுதலை நீயிருங்கண்டீர்; அதனால் சொன்னோம்; அவனைச் சார்ந்தவர் சதுரை மறந்து அறிமால் கொள்வர்'

சதுரை மறந்து - தம் பெருமையை மறந்து. அறிமால் கொள்வர் - ஞானப் பித்துக் கொள்வார்கள். முன்னர், "சதுரிழந் தறிமால் கொண்டு" (போற்றித் - 71.) என்று அருளியது காண்க. சாற்றிச் சொன்னோம் - பறை சாற்றிச் சொல்கின்றோம். கதிரை மறைத்தன்ன சோதி - பகலவன் ஒளியை விழுங்கினாலொத்த பேரொளியை உடைய இறைவன். கழுக்கடை - சூலம். குடிகெடுதல், உயகியலைத் துறத்தலால் நிகழ்வது. மதுரையர் மன்னன் - பாண்டியன். 'அவனை மறித்திடும்' என்க. மறித்தல் - தடுத்தாட்கொள்ளல். மறுபிறப்பு ஓட மறித்து ஆட்கொள்ளுதல் அவனது இயல்பாதலை விளக்க, 'மறித்தனன்' என்னாது, "மறித்திடும்" என்று அருளினார். பழிப்பதுபோலப் புகழ்ந்த இது, தமது நிலையைப் பிறர்மேல் வைத்து அருளிச்செய்ததாம்.

528. நீர் இன்ப வெள்ளத்துள் நீந்திக் குளிக்கின்ற நெஞ்சங் கொண்டீர் - வெயில் வெப்பம் நீங்க நீராகிய இனிய வெள்ளத்துள் விருப்பம்போல விளையாடி முழுகுகின்ற விருப்பத்தை உடையவர்களே; என்றது, 'அஃதே அமையுமோ' என்றபடி. பார் - பூமியில் உள்ளவர்கள். கொள்ள - பெறும்படி, பாண்டிநாட்டை உடைமைபற்றி, "பாண்டியனார்" என்றார். 'ஓர் உரு' என இயையும். "தொண்டரை உள்ளங்கொண்டார்" என்றதனை, 'யானையைக் கோடு குறைத்தான்' என்பதுபோலக் கொள்க. இது, தமது நிலையைப் பிறர்மேல் வைத்து அருளிச் செய்தது.

529 செறியும் பிறவிக்கு நல்லவர் செல்லன்மின்
தென்னன் நன்னாட்
டிறைவன் கிளர்கின்ற காலம்இக் காலம்எக்
காலத்துள்ளும்
அறிவொண் கதிர்வாள் உறைகழித் தானந்த
மாக்கடவி
எறியும் பிறப்பை எதிர்ந்தார் புரள
இருநிலத்தே. 4

---

529. பொருள் கோள்:- 'இறைவன், எக்காலத்துள்ளும் வாள் உறை கழித்து மாக்கடவி, எதிர்ந்தார் புரள இருநிலத்தே பிறப்பை எறியும்; ஆயினும், அவன் கிளர்கின்ற காலம் இக் காலம்; ஆதலின், பிறவிக்கு நல்லவர் அவன் எதிரில் செல்லன்மின்'

நல்லர் - நண்பர். செறியும் - நெருங்கிய. 'அவன்காட்சியைக் காணாதார் பிறப்பில் வீழ்வர்' என்னும் இகழ்ச்சி தோன்ற, "பிறவிக்கு நல்லவர் செல்லன்மின்" என்றார். தென்னன் நன்னாட்டுக்கு இறைவன்' என்க. கிளர்கின்ற காலம் - எழுச்சியோடு வருகின்ற காலம். எக்காலத்துள்ளும் - எப்பொழுதும். அறிவு ஒண்கதிர் வாள் - ஞானமாகிய ஒள்ளிய சுடரை உடைய வாள். உறை கழித்தல் - வெளிப்படுத்தல். ஆனந்த மாக்கடவி - பேரின்பமாகிய குதிரையை ஊர்ந்து. திருவுருவம் இன்ப வெள்ளத்தின் இடைநிற்பதாகத் தோன்றலின், அதனைக் குதிரையாக உருவகம் செய்தார். "பிறவி" என்றதற்கு, 'பிறவியாகிய பகைப் படையை' என உரைக்க. "அறிவொண் கதிர்வாள் உறைகழித்து ஆனந்தமாக் கடவி" என்ற உருவகங்கள், இஞ்ஞான்று அவன் உண்மையாகவே சூலத்தை ஏந்திக் குதிரைமேல் வருதலை உட்கொண்டு நின்றது. எறியும் - வெட்டி யொழிப்பான். எதிர்ந்தார் - தம் எதிரே வந்தவர். புரள - தன் அடியில் வீழ்ந்து பணியும்படி. "பிறப்பு" என்றது, 'உடம்பு' எனவும், "புரள" என்றது, 'மாண்டொழிய' எனவும் மற்றும் ஓரோர் பொருளைத் தோற்றுவித்தன. 'எக்காலத்துள்ளும் இக்காலம் கிளர்கின்ற காலம்' என முன்னே கூட்டி உரைப்பாரும் உளர்; அவ்வாறுரைப்பின், உருவகங்களைக்கொண்ட இறுதி இரண்டடிகள் நின்று வற்றுதல்

530 காலமுண் டாகவே காதல்செய் துய்ம்மின்
கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன் வானவர்
நண்ணரிய
ஆலமுண் டான்எங்கள் பாண்டிப் பிரான்தன்
அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின் றான்வந்து
முந்துமினே. 5

531 ஈண்டிய மாயா இருள்கெட எப்பொரு
ளும்விளங்கத்
தூண்டிய சோதியை மீனவ னுஞ்சொல்ல
வல்லன்அல்லன்

காண்க. "பிறப்பிற்கு நல்லவர்" என்றதும், "செல்லன்மின்" என்றதும், 'எதிர்ந்தார் புரளப் பிறப்பை ஏறியும்' என்றதும், பழிப்பது போலப் புகழ்தல். இஃது இறைவன் குதிரைமேல் வருதலை முன் அறிந்து கூறுவார் ஒருவரது கூற்றாக அருளிச் செய்தது.

530. காலம் உண்டாக - காலம் மிகவும் உளதாகும்படி; என்றது, 'மிகவும் முன்னதாக' என்றதாம். "வேண்டின் உண்டாகத் துறக்க" என்றார் திருவள்ளுவரும் (குறள் - 342.). இதனை, 'காலையில் எழுக' என்பதனை, 'காலம் பெற எழுக' எனக் கூறும் வழக்குப் பற்றியும் அறிக. மூல பண்டாரம் - சேம நிதிக் கருவூலம்; இஃது ஆகுபெயராய், அதன்கண் உள்ள பொருளைக் குறித்தது. கருவூலத்தைத் திறந்து வாரி வழங்குதல் ஓரோர் சிறப்புக் காலத்திலன்றி எப்பொழுதும் அன்றாகலானும், அக்காலந்தான் விரைந்து நீங்கிப் பின்னர் வந்து கூடுதல் அரிதாகலானும், "வந்து முந்துமின்" என்று அருளிச்செய்தார். 'இறைவனது மூல பண்டாரப் பொருள்' என்றது, அவனது திருவருட் செல்வத்தை. அதனை வழங்கும் சிறப்புக் காலம், அவன் மதுரையில் குதிரைமேல் வந்து நின்ற காலம். இஃது அவன் அவ்வாறு நின்ற பொழுதை எதிர்பெய்து கொண்டு அருளிச்செய்தது.

531. ஈண்டிய - நெருங்கியுள்ள. மாயா இருள் - மாயையின் காரியங்களாகிய பொருளால் உண்டாகும் மயக்கம்.

வேண்டிய போதே விலக்கிலை வாய்தல்
விரும்புமின்தாள்
பாண்டிய னார்அருள் செய்கின்ற முத்திப்
பரிசிதுவே. 6

532 மாயவ னப்பரி மேல்கொண்டு மற்றவர்
கைக்கொளலும்
போயறும் இப்பிறப் பென்னும் பகைகள்
புகுந்தவருக்
காய அரும்பெருஞ் சீருடைத் தன்னரு
ளேஅருளுஞ்
சேய நெடுங்கொடைத் தென்னவன் சேவடி
சேர்மின்களே. 7

தூண்டிய - மெய்யுணர்வை எழுப்பிய. சோதியை - ஒளியாகிய இறைவனை. மயக்கத்தை, "இருள்" என்றமைக்கேற்ப, இறைவனை, "சோதி" என்றார். மீனவன் - பாண்டியன். அவன், இறைவன் குதிரைமேல் நேரே வந்து நிற்கக் கண்ட பேறுடையனாகலின், "பாண்டியனும்" எனச் சிறப்பும்மை கொடுத்தோதினார். சொல்ல வல்லனல்லன் - இவன் இறைவன்தான் என்று அறிந்து போற்ற வல்லனல்லனாய் இருந்தான். இதன்பின், 'ஆதலின்' என்பது வருவிக்க. வேண்டியபோதே வாய்தல் விலக்கிலை - அவன் அருள்செய்ய விரும்பும்பொழுதே அது நமக்குக் கைகூடுதற்குத் தடை இல்லை. தாள் விரும்புமின் - அவனது திருவடியை விரும்பியிருங்கள். "அருள்செய்கின்ற முத்திப் பரிசு இதுவே" என்றாராயினும், 'முத்தி அருள் செய்கின்ற பரிசு இதுவே' என்பது கருத்தென்க. "இது" என்றது, பாண்டியனுக்கு வந்து அருள்செய்ததுபோல, உரிய காலத்தில் தானே வந்து அருள்செய்தலை. இதனால், 'என்றேனும் நமக்கு அருள்செய்தலை இறைவன் தனக்குக் கடனாக் கொண்டிருத்தலின், என்றும் அவனது திருவடியை விரும்பியிருத்தலே நமக்குக் கடன்' என்பது உணர்த்தியவாறு.

532. மாய வனப்பரி - மாயமான காட்டுக் குதிரை; என்றது, 'நரியாகிய குதிரை' என்றபடி. இறைவன் ஏறி வந்தது வேறு குதிரையாயினும், கொடுக்கக் கொணர்ந்தவை

533 அழிவின்றி நின்றதொர் ஆனந்த வெள்ளத்
திடையழுத்திக்
கழிவில் கருணையைக் காட்டிக் கடிய
வினையகற்றிப்
பழமலம் பற்றறுத் தாண்டவன் பாண்டிப்
பெரும்பதமே
முழுதுல குந்தரு வான்கொடை யேசென்று
முந்துமினே. 8

அன்னவாதல் பற்றி, அதனையும் இதுவாகக் கூறினர். மற்றவர் கைக்கொளலும் - பிறர் அக்குதிரையைப் பெற்றுக்கொண்டவுடன். 'அவருக்கு இப்பிறப்பென்னும் பகைகள் போயறும்' என்க. ''இப்பிறப்பு'' என்றது, 'இதுபோலும், பிறப்புக்கள்' என்றவாறு. ''போயறும்'' என்றதன்பின், 'எனின்' என்பது வருவித்து, 'தென்னவன் சேவடி சேர்மின்கள்' என முடிக்க. புகுந்தவருக்கு - தன்னிடத்து அடைக்கலம் புகுந்தவர்கட்கு. 'இவ்வாறு தன் அருளையே அருளும் கொடைத் தென்னவன்' என்க. ஆய - பொருந்திய. சேய நெடுங்கொடை - அகன்ற பெரிய கொடை. ''தென்னவன்'' என்றது இறைவனை. இதனுள், ''மற்றவர்'' எனப் பாண்டியனையும், ''புகுந்தவருக்கு'' எனத் தம்மையும் பிறர்போலக் கூறினர். பாண்டியன் குதிரையைப் பெற்றுக்கொண்ட பின்னரும் சில நிகழ்ந்தன எனினும், அவை விரைய நிகழ்ந்தமை பற்றி, ''கைக்கொளலும் பிறப்பென்னும் பகைகள் போயறும்'' என்று அருளிச்செய்தார்.

533. அழுத்தி - அழுத்துமாற்றல் கழிவில் கருணை - என்றும் நீங்காத அருள். பாண்டிப் பெரும்பதம் - பாண்டி நாட்டு ஆட்சியாகிய பெரிய நிலை. ''பதமே'' என்ற ஏகாரம், 'அஃதொன்றோ' என்னும் எண்ணிடைச்சொல். முழுதுலகும் - எல்லா உலகங்களின் ஆட்சியையும். 'அவன் கொடையே சென்று முந்துமின்' என்க. ''கொடையே'' என்றதில் 'எதிர்' என்னும் பொருட்டாய கண்ணுருபு விரிக்க. இது, பாண்டியனுக்கு அருள்புரிந்தவாற்றை உட்கொண்டு அருளிச்செய்தது.

534 விரவிய தீவினை மேலைப் பிறப்புமுந்
நீர்கடக்கப்
பரவிய அன்பரை என்புருக் கும்பரம்
பாண்டியனார்
புரவியின் மேல்வரப் புந்திகொ ளப்பட்ட
பூங்கொடியார்
மரவியன் மேல்கொண்டு தம்மையுந் தாம்அறி
யார்மறந்தே. 9

535 கூற்றைவென் றாங்கைவர் கோக்களை யும்வென்
றிருந்தழகால்
வீற்றிருந் தான்பெருந் தேவியுந் தானும்ஓர்
மீனவன்பால்

---

534. விரவிய - பொருந்திய. 'வினையும் பிறப்புமாகிய மூந்நீர்' என்க. மூந்நீர் - கடல். "வினைக்கடல் கொளினும் அஞ்சேன்". என அடிகள் வினையையும் கடலாக உருவகித்தமை காண்க. (517), கடக்க - கடத்தற்பொருட்டு. பரவிய - துதித்த. பரம் - மேலான பொருளாகிய. புரவி - குதிரை. புந்தி கொளப்பட்ட பூங்கொடியார் - அவ் வருகையால் உள்ளம் கொள்ளை கொளப்பட்ட பூங்கொடிபோலும் மகளிர். மர இயல், நிலைபெயராது நிற்கும் தன்மை. 'நாண் முதலிய பல வற்றையும் மறந்து தம்மையும் தாம் அறியார்' என்க. குதிரை மேல் வந்த இறைவனது திருமேனி யழகினை இவ்வாறு புலப் படுத்தருளினார். முன்னர் வந்தன பலவற்றாலும், இதனாலும் இறைவன் குதிரைமேல் வந்து அளித்தருளிய காட்சி, எத்திறத் தோர் நெஞ்சையும் உருகச் செய்வதாய் இருந்ததென்பது இனிது பெறப்படுகின்றது.

535. 'ஒற்றைச் சேவகனே, கூற்றைவென்று, ஐவர் கோக்களையும் வென்று, தானும் தேவியுமாய் வீற்றிருந்தான்; அவன் சேவடி சேர்மின்கள்' என்க. கோக்கள் - அரசர். 'ஐவர் அரசர்' என்றது, ஐம்பொறிகளை. "இருந்து" என்றது, அசைநிலை. ஏற்று - குதிரை வாணிகனாய் வருதலை மேற்

ஏற்றுவந் தாருயிர் உண்ட திறல்ஒற்றைச்
சேவகனே
தேற்றமி லாதவர் சேவடி சிக்கெனச்
சேர்மின்களே. 10

திருச்சிற்றம்பலம்

கொண்டு. ஆருயிர் உண்ட - அவனது அரிய உயிரை உண்ட; என்றது, 'சிவபோதத்தை நீக்கிய' என்றபடி. திறல் - ஆற்றலை உடைய. ஒற்றைச் சேவகன் - தான் ஒருவனேயாகிய வீரன். 'ஒருவனே பலரை வென்றது வியப்பன்றோ' என்றபடி. அப்பலருள் பாண்டியனையும் ஒருவனுக்குதற்பொருட்டு, "ஆருயிர் உண்ட" என்றார். தேற்றம் இலாதவர் - தெளிவில்லாதவர்களே, 'தெளிவில்லாதவராகிய நீவிர் இந் நிகழ்ச்சிகளால் தெளிந்து சேர்மின்கள்' என்றபடி. சிக்கென - உறுதியாக.

மாத்தியர் குலத்தலைவர் வன்பிறவி யெவ்வந்
தீர்த்துலக வையரருள் செய்யுமிட மென்றே
தோத்திர முரைத்துமிசை வந்துசுரர் சிந்தும்
பூத்திர ளுயர்ந்தவகை போன்றதலர் பூங்கா. 65

பேறறிந்து தவமுயல்வோ மென்றுபெருந் துறைநாடி
ஆறியங்கி யிளைக்குமவர்க் களிக்கவெதிர் நிற்பவர்போற்
கூறுமின்ப நிழல்செய்து குறையாத பத்தியுடன்
நீறணிந்து சோறேந்தி நின்றனதுன் றியகைதை. 66

நிலந்தனில்வந் தொருகுருந்த நீழலிலே யெவ்வுலகுங்
கலந்தபொரு ளிருந்தபடி கண்டுமனங் களிப்பெய்தித்
துலங்கியதங் கண்ணீருஞ் சொரிந்துகரங் குவித்துமுகம்
மலர்ந்தபெருந் தவர்போல மலர்ந்தனபுண் டரிகங்கள். 67

—திருவாதவூரடிகள் புராணம்.

37. பிடித்த பத்து

[இறைவனைச் சிக்கெனப் பிடித்தமையைக் கூறும் பத்துப் பாடல்களின் தொகுதி பிடித்த பத்து. இறைவனை விடாது பற்றிநிற்றலே முத்திப் பேறு ஆதலின், இதற்கு, 'முத்திக் கலப்பு உரைத்தல்' எனக் குறிப்புரைத்தனர் முன்னோர். இது, தோணிபுரத்தில் அருளிச்செய்யப்பட்டது என்பதே பதிப்புக்களில் காணப்படுவது. இதனை இங்ஙனம் கொண்டமைக்குக் காரணம், இதன் மூன்றாவது திருப்பாட்டில் இறைவனை அடிகள், "அம்மையே அப்பா" என அழைத்திருத்தலே போலும்! ஞானசம்பந்தர் சீகாழியில் திருத்தோணிச் சிகரத்தைப் பார்த்து இவ்வாறு அழைக்க, இறைவன் அங்ஙனமே அம்மையப்பனாய் வந்து அருள்புரிந்தமையும், திருத்தோணியில் என்றும் அவ்வம்மையப்பர் வடிவமாயே இறைவன் எழுந்தருளியிருத்தலும் யாவரும் அறியப்பட்டனவாதல் அறிக. இது, முழுதும் எழுசீரடி விருத்தத்தால் ஆயது.]

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

536 உம்பர்கட் கரசே ஒழிவற நிறைந்த
யோகமே ஊற்றையேன் றனக்கு
வம்பெனப் பழுத்தென் குடிமுழு தாண்டு
வாழ்வற வாழ்வித்த மருந்தே
செம்பொருட் டுணிவே சீருடைக் கழலே
செல்வமே சிவபெரு மானே
எம்பொருட் டுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 1

---

536. ஒழிவற - யாதொருபொருளும் எஞ்சாதவாறு எல்லாப்பொருளிலும். யோகம் - கலப்பு. கலப்புடைய பொருளை, 'கலப்பு' என்றார். ஊற்றையேன் - அழுக்கினை உடையேன். 'அழுக்கு' என்றது, அழுக்குடைய உடம்பை. ஊத்தை, ஊற்றை எனத் திரிந்து வந்தது. 'ஊத்தையேன்' என்றே ஓதினுமாம். வம்புஎனப் பழுத்து - புதிய பொருள் போல மிக்குத் தோன்றி. மிக்குத் தோன்றல் - வெளிநிற்றல்.

என்றும் உள்நின்று உணர்த்திவந்த பொருளேயாதலின், "வம்பென" என்றும், தம்மை ஆண்டமையால் தம் குடி முழுதும் உய்ந்தமையின், "என் குடிமுழுதாண்டு" என்றும் கூறினர். வாழ்வு அற - வினைவாழ்க்கை நீங்க. வாழ்வித்த - அருள்வாழ்வு வாழச் செய்த. மருந்து - அமுதம். செம்பொருள் துணிவு - மெய்ப்பொருளாகிய துணிபொருள். 'துணிவு' என்னும் தொழிற்பெயர், துணியப்படும் பொருளுக்கு ஆகி வந்தது. 'மெய்ப்பொருளை ஆராய்ந்துணர்வார் பலரானும் ஒருபடித்தாக மெய்ப்பொருள் என்று துணியப்படுபவனே' என்பது பொருள். கழல் - திருவடி. திருவடியையுடையவனை, 'திருவடி' என்றது பான்மை வழக்கு. "தில்லை மூதூர் ஆடிய திருவடி" எனவும் (கீர்த்தித் - 1.), "ஆண்டுகொண் டருள அழகுறு திருவடி" எனவும் (ஷை 37.) முன்னரும் கூறப்பட்டன. இனி, "சீருடைக் கடலே" என்பதே பாடம் என்பாரும் உளர். செல்வமே - அடியார்க்குச் செல்வமான வனே, தம் குடிமுழுது ஆண்டமையின், அவர் அனைவரையும் உளப்படுத்து, "எம்பொருட்டு" என்றூர். எம் பொருட்டு - எமக்குத் தீங்கு உண்டாகாமைப் பொருட்டு. தீங்கு, வினையும், அது காரணமாக வரும் பிறப்பும். சிக்கென - உறுதியாக. 'இனி எங்கு எழுந்தருளுவது' என்க. எழுந்தருளுவது - செல்வது. 'என்னைவிட்டு இனி நீ எவ்வாறு நீங்க முடியும்? முடியாது' என்பது கருத்து. இங்ஙனம் தமது உறுதிப்பாட் டினைப் புலப்படுத்தியவாறு.

"அழலார் வண்ணத் தம்மானை
அன்பில் அணைத்து வைத்தேனே."

"மேலை வானோர் பெருமானை
விருப்பால் விழுங்கி யிட்டேனே"

(திருமுறை - 4 - 15. 7, 8.)

"ஆர்வல்லார் காண அரனவனை அன்பென்னும்
போர்வை யதனாலே போர்த்தமைத்துச் - சீர்வல்ல
தாயத்தால் நாமும் தனிநெஞ்சி னுள்அடைத்து
மாயத்தால் வைத்தோம் மறைத்து"

எனப் (அற்புதத் திருவந்தாதி - 96) பிறவிடங்களினும் இவ்வாறே ஓதியருளுதல் காண்க.

537 விடைவிடா துகந்த விண்ணவர் கோவே
வினையனே னுடையமெய்ப் பொருளே
முடைவிடா தடியேன் மூத்தற மண்ணாய்
முழுப்புழுக் குரம்பையிற் கிடந்து
கடைபடா வண்ணம் காத்தெனை ஆண்ட
கடவுளே கருணைமா கடலே
இடைவிடா துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே, 2

538 அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்தஆ ரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 3

---

537. விடை விடாது - எருதை நீக்காமல். உகந்த - விரும்பிய. ஊர்தி வேண்டுவார் எருதை விரும்பாமை குறித்தவாறு. "முடை" என்றது, முடை நாற்றம் உடைய உடம்பை. "மண்ணாய்" என்றது, 'இறந்து' என்றபடி. பின் வருவன அடுத்த பிறப்பைக் குறிப்பன. 'கடைப்படா' என்பது, தொகுத்தல் பெற்றது.

538. அம்மையும் அப்பனுமாதல் எவ்வுயிர்க்கும் என்க. "ஆரமுது" என்றது, இன்பத்தை. சிவபிரானிடத்தில் வைக்கும் அன்பின் விளைவே சிவானந்தமாதல் அறிந்துகொள்க. பொய்ம்மை - உலக வாழ்க்கை. சுருக்கும் - வீணாக்குகின்ற. புழுத்தலைப் புலையன் - புழுவையுடைய தலையையுடைய கீழ்மகன்; 'உடலைத்தானும் தூய்மைசெய்து கொள்ளமாட்டாத கீழ்மகன்' என்றபடி. 'புழுத்து அலை' எனப் பிரிப்பின் பகரம் மிகலாகாமையும், பொருள்படாமையும் அறிக. செம்மை - மெய்ம்மை; திரிபின்மை. செம்மை யுடையதனை, "செம்மை"

539 அருளுடைச் சுடரே அளிந்ததோர் கனியே
பெருந்திறல் அருந்தவர்க் கரசே
பொருளுடைக் கலையே புகழ்ச்சியைக் கடந்த
போகமே யோகத்தின் பொலிவே
தெருளிடத் தடியார் சிந்தையுட் புகுந்த
செல்வமே சிவபெரு மானே
இருளிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 4

540 ஒப்புனக் கில்லா ஒருவனே அடியேன்
உள்ளத்துள் ஒளிர்கின்ற ஒளியே
மெய்ப்பதம் அறியா வீறிலி யேற்கு
விழுமிய தளித்ததோ ரன்பே
செப்புதற் கரிய செழுஞ்சுடர் மூர்த்தீ
செல்வமே சிவபெரு மானே
எய்ப்பிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 5

என்றார். சிவபதம் - இன்பநிலை. 'செம்பொருளை ஆய்ந்துணர் தற்கு, 'சிவ' என்னும் மந்திரத்தை உபதேசித்தருளிய செல்வமே' எனவும் உரைப்பர்.

539. இரக்கம் இல்லாத சுடரின் வேறுபடுத்தற்கு, 'அருளுடைச் சுடரே' என்றார். "சுடர்" என்றது, அறிவு பற்றி. "கனி" என்றது, இன்பம் பற்றி. பொருளுடைக்கலை - மெய்ந்நூல்; 'அவற்றின் பொருளாய் இருப்பவனே' என்றபடி. புகழ்ச்சி - 'இவ்வாறு இருந்தது' என எடுத்துரைத்தல். யோகம் - ஒன்றிநிற்றல். பொலிவு - அவ்வாறு நிற்குமிடத்தில் விளங்குதல். தெருள் - தெளிவு. இருள் இடம் - அறியாமையை உடைய இவ்வுலகம்.

540. மெய்ப் பதம் - உண்மைப் பொருள். வீறு - பெருமை. விழுமியது - சிறப்புடைய பேறு. எய்ப்பிடத்து - இளைப்பின்கண். இளைப்பு, எல்லாப் பிறப்பும் பிறந்ததனாலாயது.

541 அறவையேன் மனமே கோயிலாக் கொண்டாண்
டளவிலா ஆனந்த மருளிப்
பிறவிவே ரறுத்தேன் குடிமுழு தாண்ட
பிஞ்ஞகா பெரியஎம் பொருளே
திறவிலே கண்ட காட்சியே அடியேன்
செல்வமே சிவபெரு மானே
இறவிலே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 6

542 பாசவே ரறுக்கும் பழம்பொருள் தன்னைப்
பற்றுமா றடியனேற் கருளிப்
பூசனை உகந்தென் சிந்தையுட் புகுந்து
பூங்கழல் காட்டிய பொருளே
தேசுடை விளக்கே செழுஞ்சுடர் மூர்த்தி
செல்வமே சிவபெரு மானே
ஈசனே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 7

543 அத்தனே அண்டர் அண்டமாய் நின்ற
ஆதியே யாதுமீ றில்லாச்
சித்தனே பத்தர் சிக்கெனப் பிடித்த
செல்வமே சிவபெரு மானே

---

541. அறவை - துணையிலி. திறவு - திறப்பு; அறியாமை நீங்கிய நிலை. இறவு - அழிவு; பயனின்றிக் கெடும் நிலை. 'உறு' என்பதடியாக, 'உறவு' என வருதல் போல, 'இறு' என்பதடியாக, 'இறவு' என வந்தது.

542. 'பாசவேர் அறுக்கும் பழம்பொருள்' என்பது, முன்னிலைக்கண் படர்க்கை வந்த இடவழுவமைதி. பூசனை, ஆசிரியக் கோலத்திற்கண்டு செய்தது. 'பூங்கழல்' என்றது, பான்மை வழக்கால், அருள் இன்பத்தைக் குறித்தது. செழுஞ் சுடர் மூர்த்தி - பேரொளி வடிவே.

543. அண்டர் அண்டம் - தேவர் உலகம். ஆதி - முதல் வன். யாதும் - 'இடம், காலம்' என்பவற்றுள் ஒன்றுனும்.

பித்தனே எல்லா உயிருமாய்த் தழைத்துப்
　　பிழைத்தவை அல்லையாய் நிற்கும்
எத்தனே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
　　எங்கெழுந் தருளுவ தினியே. 8

544 பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப்
　　பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
　　உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
　　செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
　　எங்கெழுந் தருளுவ தினியே. 9

சித்தன் - வியத்தகு நிலையினன். 'அவை அல்லையாய்ப் பிழைத்து நிற்கும் எத்தனே' எனக் கூட்டுக. பிழைத்து நிற்றல் - அவற்றின் நீங்கிநிற்றல். எத்தன் - சூழ்ச்சியுடையவன்.

544. நினைந்து ஊட்டுதல் - பச்சிளங் குழவிக்குக் கால மறிந்து தானே ஊட்டுதல். தாய் தனது முக்குண வேறுபாட்டால் ஒரோவழித் தன் குழவியைப் புறக்கணித்தலும் உடையளாதலின், அக்குணங்கள் இல்லாது அருள் வடிவினனாகிய இறைவன், தாயினும் மிகப் பரிவுடையனாதல் அறிக. ஊன் - உடம்பு; உள்ளமேயன்றி உடலும் அன்பினால் உருகப் பண்ணினமையின், ''ஊனினை உருக்கி'' என்று அருளிச் செய்தார். உள்ளொளி - ஒளியினுள் ஒளி. ஒளி - உயிரினது அறிவு. அதனுள் ஒளியாய் நிற்பது சிவம். அதனைப் பெருக்குதலாவது, இனிது விளங்கச் செய்தல்; 'இவ்வாறு அருளிச் செய்யினும் உள்ளொளியாகிய உன்னை இனிது உணரச்செய்து' என்பதே கருத்து. உலப்பு - அழிவு. ''அழிவிலா ஆனந்த வாரி'' என முன்னரும் அருளிச் செய்தார் (போற்றித் - 132.). உலப்பிலா ஆனந்தத்தைத் தேனாக உருவகித்தது, அறிந்திலாத அதனியல்பை ஒருவாற்றான் அறிந்து கொள்ளுதற்பொருட்டு. தொடர்ந்து - முயன்று. முயற்சி, சிந்தித்தலும் தெளிதலும்.

545 புன்புலால் யாக்கை புரைபுரை கனியப்
பொன்னெடுங் கோயிலாப் புகுந்தென்
என்பெலாம் உருக்கி எளியையாய் ஆண்ட
ஈசனே மாசிலா மணியே
துன்பமே பிறப்பே இறப்பொடு மயக்காந்
தொடக்கெலாம் அறுத்தநற் சோதீ
இன்பமே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 10

திருச்சிற்றம்பலம்

---


545. "புரைபுரை கனிய" என்றதை முன்னருங் காண்க (390). யாக்கையையே, 'கோயில்" என்றார் என்க. "காயமே கோயிலாக" (திருமுறை - 4 - 76. 4) என்று அருளினார் நாவுக்கரசரும். "மயக்கு" என்றதிலும், எண்ணேகாரம் விரிக்க. "ஆம்" என்றது எண்ணின் தொகைப் பொருட்டாய் நின்றது. தொடக்கு - கட்டு. நற்சோதி - ஞான ஒளி.

ஆன்றபயன் பிறர்நுகர வகத்தினிமை யுளதாகத்
தோன்றியநல் லறிவினர்போற் றுவன்றியெழுந் தனகன்னல்
ஏன்றகுல மாதர்தம திறைவர்முக நாடிலவர்
வான்றகைய நிலைபோல வளைந்துவிளைந் தனசெந்நெல். 68

முலைக்கிரியுங் கருங்கூந்தன் மொய்வனமு மரணாகக்
கொலைப்புருவ வெஞ்சாபங் குனித்துவிழிக் கணையேவி
நிலைப்படுநற் பொருடேட நினைந்துதவ நீணெறியிற்
றலைப்படுவார் தமைவருத்துந் தன்மையினர் வயன்மாதர். 69

இன்னவகை மன்னிவளர் காவுமெழின் மேவுங்
கன்னல்வய லுந்திகழ்தல் கண்டுவகை கொண்டே
இன்னலுட லம்பெற வினிப்புவியில் வாரா
மன்னவர் பெருந்துறை வளம்பதியில் வந்தார். 70

— திருவாதவூரடிகள் புராணம்.



கழுமலம் (சீகாழி)

38. திருவேசறவு

[ஏசறவு - நாணம். தமது சிறுமை கருதாது தமக்கு அருள்புரிந்த இறைவனது கருணையின் பெருமையை அப்பொழுது உணராதொழிந்த தம் சிறுமையைக் கருதி வெள்கிப் பாடுதலின், இப்பகுதி, 'திருஏசறவு' எனப்பட்டது. "நாணொதோர் நாணம்எய்தி" என முன்னருங்கூறினர் (471.) இதுவும் பத்துத் திருப்பாட்டுக்களையுடையதே. சிறுமையாவது ஏகதேசக் காட்சியால் உலக வயப்பட்டு மயங்குதலே யாகலின், அந்நிலைக்கு வெள்கிப்பாடும் இதற்கு, 'சுட்டறி வொழித்தல்' எனக் குறிப்புரைத்தனர் முன்னோர். இது. திருப்பெருந்துறையில் அருளிச் செய்யப்பட்டது என்பதே பதிப்புக்களில் காணப் படுவது. இது முழுவதும் நாலடித் தரவுக் கொச்சகக் கலிப் பாவால் ஆயது.]

கொச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

546 இரும்புதரு மனத்தேனை ஈர்த்தீர்த்தென் என்புருக்கிக்
கரும்புதரு சுவைஎனக்குக் காட்டினைஉன் கழலிணைகள்
ஒருங்குதிரை உலவுசடை உடையானே நரிகளெல்லாம்
பெருங்குதிரை ஆக்கியவா றன்றேஉன் பேரருளே. 1

---

546. தரும், உவம உருபு - 'இணைக் கழல்கள்' என மாற்றிக்கொள்க. இரண்டாம் அடியில் ஏழாவது இறுதிக்கண் தொக்கது. ஒருங்கு திரை - அடங்கியுள்ள அலை. உலவு - பொருந்திய. 'இப்பேரருள்' எனச் சுட்டு வருவித்து, 'உனது இப்பேரருள், நரிகளை எல்லாம் குதிரைகளாக்கிய அதனோடு ஒத்ததேயன்றோ' என உரைக்க. இறுதிக்கண், 'அப்பேரருளின் பெருமையை முன்பு உணராது இப்பொழுதே உணர்கின்றேன்' எனக் குறிப்பெச்சம் வருவித்து, ஏசறவாக முடிக்க. இஃது இதனுள் ஏற்குமிடங்கட்கும் பொருந்தும்.

547 பண்ணுர்ந்த மொழிமங்கை பங்கா நின் ஆளானுர்க்
குண்ணுர்ந்த ஆரமுதே உடையானே அடியேனை
மண்ணுர்ந்த பிறப்பறுத்திட் டாள்வாய்நீ வாஎன்னக்
கண்ணுர உய்ந்தவா றன்றேஉன் கழல்கண்டே. 2

548 ஆதமிலி யான்பிறப் பிறப்பென்னும் அருநரகில்
ஆர்தமரும் இன்றியே அழுந்துவேற் காவாஎன்
ருேதமலி நஞ்சுண்ட உடையானே அடியேற்குன்
பாதமலர் காட்டியவா றன்றேஎம் பரம்பரனே. 3

549 பச்சைத்தால் அரவாட்டி படர்சடையாய் பாதமலர்
உச்சத்தார் பெருமானே அடியேனை உய்யக்கொண்
டெச்சத்தார் சிறுதெய்வம் ஏத்தாதே அச்சோஎன்
சித்தத்தா றுய்ந்தவா றன்றேஉன் திறம்நினைந்தே. 4

---

547. உண் ஆர்ந்த - உண்ணுதல் பொருந்திய. மண் ஆர்ந்த பிறப்பு - இப்பிறப்பு. "மண் ஆர்ந்த பிறப்பு அறுத்திட்டு ஆள்வாய்" என்றதை இறுதிக்கண் கூட்டுக. வா என்ன - வா என்று அழைத்தமையால். 'நான் உய்ந்தவாறு, நீ வா என்று அழைத்தலால் உன் கழல்கள் கண்ணுரக் கண்டன்றே' என்க. முன்னைத் திருப்பாட்டில் குறிப்பெச்சமாக உரைத்த தனை இங்கு இறுதியடியின்பின் இசையெச்சமாக வைத்துரைக்க.

548. 'யான் ஆதமிலி' எனத் தனித்தொடராக்குக. ஆதம்- ஆதரவு. நரகம்போலும் துன்பம் உடைமைபற்றிப் பிறப்பிறப் புக்களை நரகமாக உருவகம் செய்தார். 'தமர் ஆரும் இன்றி' என மாற்றுக. "அடியேற்கு" என மறித்தும் கூறியது, தம் சிறுமையை வலியுறுத்தற்கு. 'பாதமலர் காட்டியவாறு உன் அருளேயன்ருே' என சில சொல் வருவிக்க.

549. பச்சைத் தால் அரவு - பசிய நாவையுடைய பாம்பு. தால், 'தாலு' என்னும் ஆரியச்சொற் சிதைவு. 'பச்சைத் தாள் அரவு என்பது பாடம் ஆகாமையில்லை' எனக்கொண்டு, 'தாள்' என்பதற்கு, 'புற்று' என உரைத்துப்போவாரும் உளர். 'பாதமலரை உச்சியில் உடையவர்' என்க. எச்சத்தார்- வேள்வியை உடையவர்கள்; இவர்கள் தேவர் பலரையும்

550 கற்றறியேன் கலைஞானம் கசிந்துருகேன் ஆயிடினும்
மற்றறியேன் பிறதெய்வம் வாக்கியலால் வார்கழல்வந்
துற்றிறுமாந் திருந்தேன்எம் பெருமானே அடியேற்குப்
பொற்றவிசு நாய்க்கிடுமா றன்றேநின் பொன்னருளே. 5

551 பஞ்சாய அடிமடவார் கடைக்கண்ணால் இடர்ப்பட்டு
நஞ்சாய துயர்கூர நடுங்குவேன் நின்னருளால்
உய்ஞ்சேன்எம் பெருமானே உடையானே அடியேனை
அஞ்சேலென் றாண்டவா றன்றேஅம் பலத்தமுதே. 6

552 என்பாலைப் பிறப்பறுத்திங் கிமையவர்க்கும் [அறியவொண்ணாத்
தென்பாலைத் திருப்பெருந் துறையுறையுஞ் சிவபெருமான்
அன்பால்நீ அகம்நெகவே புகுந்தருளி ஆட்கொண்ட
தென்பாலே நோக்கியவா றன்றேஎம் பெருமானே. 7

வழிபடுவர். அச்சோ, வியப்பிடைச்சொல். சித்தத்தாறு - விருப்பப்படியே. 'உய்ந்தவாறு உன் திறம் நினைந்தேயன்றோ' எனக் கூட்டுக. உய்ந்தவாறு - இறவாமல் பிழைத்திருக்கும் வகை. திறம் - முன்னே வந்து ஆண்ட திருவருள். இதன் கண் இறந்துபடாமையால் வந்த நாணம் புலப்படும்.

550. மற்று, அசைநிலை. 'பிறதெய்வம் அறியேன்' என மாற்றி, அதன்பின், 'அதனால்' என்பது வருவிக்க. வாக்கியலால் - உனது உபதேசத்தால். 'அன்று இறுமாந்திருந்தேன்; இன்று அஃது இல்லை' என்றபடி. இறுமாப்பு, அரசனையும் மதியாமை. இங்கும், 'அப் பொன்னருள்' எனச் சுட்டு வருவிக்க.

551. 'அவ்வருளாவது, அஞ்சேல் என்று ஆண்டவாறன்றே' என்க.

552. ஐகாரம் இரண்டும் சாரியை. சிவபெருமான், விளி. நோக்கியவாறு - கடைக்கண்ணால் பார்த்தபடி. "அன்றே" என்றதை, "ஆட்கொண்டது" என்றதன்பின் கூட்டுக.

553 மூத்தானே மூவாத முதலானே முடிவில்லா
ஓத்தானே பொருளானே உண்மையுமாய் இன்மையுமாய்ப்
பூத்தானே புகுந்திங்குப் புரள்வேனைக் கருணையினால்
பேர்த்தேநீ ஆண்டவா றன்றேஎம் பெருமானே. 8

554 மருவினிய மலர்ப்பாதம் மனத்தில்வளர்ந் துள்ளுருகத்
தெருவுதொறும் மிகஅலறிச் சிவபெருமா னென்றேத்திப்
பருகியநின் பரங்கருணைத் தடங்கடலிற் படிவாமா
றருளெனக்கிங் கிடைமருதே இடங்கொண்ட அம்மானே. 9

555 நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனாய்இன் அமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே. 10

திருச்சிற்றம்பலம்

---

553. மூத்தான் - உயர்ந்தவன். மூவாத - மூப்படையாத. ஓத்து - வேதம். பொருள் - அதன் பொருள். உண்மை - உள்ள பொருளாய் அனுபவமாதல். இன்மை - இல்பொருள் போலக் கரந்துநிற்றல். பூத்தான் - விளங்குபவன். புரள்வேன் - கெடுவேன். பேர்த்து - உலகியலினின்று நீக்கி. 'நீ ஆண்டவாறு கருணையினாலன்றே' என்க.

554. 'மருவ இனிய பாதம்' என்க. வளர்ந்து - வளர்தலால். வளர்தல் - விளங்குதல். உள் உருக - உள்ளம் உருக. படிவு ஆமாறு - மூழ்குதல் உண்டாகும்படி. 'படிவாமாறு அருள்' என்றதும், ''படியுமாறு அறியாதவனாயினேன்'' என ஏசற்றதாம் என்க.

555. முதல் அடியை இறுதியிற் கூட்டுக. 'உயிர் வாழ்க்கையை ஒறுத்து அன்றே வெறுத்திட அருள் செய்தான்; அதனால், சிவாயநம எனப் பெற்றேன்; அதற்கு அன்னதொரு தவத்தை நான் செய்தேனோ' என்க. ஒறுத்தல் - வருத்துதல்.

39. திருப்புலம்பல்

['புலம்பல்' என்பது, இங்கு அன்பினால் அழுதலைக் குறித்தது. 'அழுமலர்க் கண்ணிணை அடியவர்க் கல்லால் அறிவரி தவன்திரு வடியிணை இரண்டும்' (திருமுறை - 7.58-10) என்று அருளியதும் காண்க. அன்புமீதூர மீதூரச் சிவானந்தம் மேன்மேல் விளையுமாகலின், இதற்கு, 'சிவானந்த முதிர்வு' எனக் குறிப்புரைத்தனர் முன்னோர். இது, திருவாரூரில் அருளிச் செய்யப்பட்டது என்பதே பதிப்புக்களிற் காணப்படுவது. இதன் முதற்பாட்டில், "ஓங்கெயில்சூழ் திருவாரூர் உடையானே" என வருதல் காண்க. இரண்டாந் திருப்பாட்டில் திருப்பெருந்துறையும், இறுதித் திருப்பாட்டில் திருக்குற்றாலமும் குறிக்கப்படுகின்றன. பின்னர் வரும் திருப்படையெழுச்சிக்கு முன் நிற்கற்பாலதாய இது, பின்னர் ஏடுபடித்தோரால் இவ்விடத்து வைத்துப் பிறழக் கோக்கப்பட்டதுபோலும்! இதுவும் முன்னையதுபோலக் கொச்சகக்கலிப்பாவினால் ஆயது.]

கொச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

556 பூங்கமலத் தயனெடுமால் அறியாத நெறியானே
கோங்கலர்சேர் குவிமுலையாள் கூறாவெண் ணீறாடி
ஓங்கெயில்சூழ் திருவாரூர் உடையானே அடியேன்நின்
பூங்கழல்கள் அவையல்லா தெவையாதும் புகழேனே. 1

557 சடையானே தழலாடீ தயங்குமூ விலைச்சூலப்
படையானே பரஞ்சோதி பசுபதீ மழவெள்ளை
விடையானே விரிபொழில்சூழ் பெருந்துறையாய் [அடியேன்நான்
உடையானே உனையல்லா துறுதுணைமற் றறியேனே. 2

---

556. நெறி - நிலை. கோங்கலர் - கோங்கம் பூ. சேர், உவம உருபு. ஓங்கு எயில் - உயர்ந்த மதில். 'எவற்றையும் சிறிதும் புகழேன்' என்க.

557. தயங்கும் - விளங்குகின்ற. மழ - இளமை. 'அடியேனாகிய நான் உறுதுணை மற்று அறியேன்' என்க.

558 உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனியமையும்
குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தாஉன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே. 3

திருச்சிற்றம்பலம்

---

558. உற்றார் - கிளைஞர். வேண்டேன் - விரும்பமாட்டேன். ஊர் - யான் பிறந்த ஊர். பேர் - புகழ். கற்றார் - கல்வியைமட்டும் கற்று, அதன் பயனை அறியாதவர். கற்பன - கற்கத் தகும் நூல்கள். அமையும் - போதும். 'கல்வியின் பயன் கிடைத்துவிட்டபின் கல்வி எதற்கு' என்றபடி. குரை கழல் - ஒலிக்கின்ற கழல் அணிந்த திருவடி. கற்றா - கன்று ஆ; கன்றையுடைய பசு. 'இதன் மனம் கன்றை நினைந்து கசிந்து உருகுதல்போல உருக விரும்புகின்றேன்' என்க.

மாதவர் மிகும்பதி புகுந்துழி மருங்கே
நாதனுறை தண்டலையி னன்குபுனை தொண்டர்
ஓதுறு சிவாகம வொலிப்பொலிவு கேளா
யாதிஃ தறிந்துரைமி னேவலர்க ளென்றார். 71

சென்றவர்கள் வந்துசிவ பத்தர்பலர் சூழக்
கொன்றைமுடி வைத்தகுண வெற்பைநிக ரொப்பார்
நின்றதொர் குருந்தமர நீழலி லிருந்தார்
என்றலு மகிழ்ந்தன ரினிப்பிறவி யில்லார். 72

ஏவல ருரைத்தமொழி கேட்டரனை யெய்தும்
ஆவலொடு காவினை யணைந்தக மலர்ந்து
மேவிய மணிச்சிவிகை விட்டினி திழிந்தே
தேவர்பர வும்பரமர் தெய்வசபை கண்டார். 73

— திருவாதவூரடிகள் புராணம்.

40. குலாப் பத்து

[குலாப் பத்து - தாம் பெற்ற பேற்றைக் கொண்டாடிக் கூறும் பத்துப் பாடல்களின் தொகுதி. ஒவ்வொரு பாடலிலும், குலாவென்னும் சொல் வருதலும் காணத்தக்கது. இதனுள் அடிகள், 'சிவப் பேற்றைப் பெற்றுவிட்டேன்' எனக் கூறுதலின், இதற்கு, 'அனுபவம் இடையீடு படாமை' எனக் குறிப்புரைத்தனர் முன்னோர். இடையீடு - தடை. இது, தில்லையில் அருளிச் செய்யப்பட்டது என்பதே பதிப்புக்களிற் காணப்படுவது. இதுவும், கொச்சகக் கலிப்பாவினால் ஆயது.]

கொச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

559 ஓடுங் கவந்தியுமே உறவென்றிட் டுள்கசிந்து
தேடும் பொருளுஞ் சிவன்கழலே எனத்தெளிந்து
கூடும் உயிருங் குமண்டையிடக் குனித்தடியேன்
ஆடுங் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 1

560 துடியேர் இடுகிடைத் தூய்மொழியார் தோள்நசையால்
செடியேறு தீமைகள் எத்தனையுஞ் செய்திடினும்
முடியேன் பிறவேன் எனைத்தனதாள் முயங்குவித்த
அடியேன் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 2

---

559. ஓடு - பிச்சைப் பாத்திரம். கவந்தி - கோவணம்; வட்டுடையுமாம். உறவு - பற்று; என்றது, ஒருபொருளிலும் பற்றில்லாமையைக் குறித்தது. தேடும் பொருள் - முயன்று பெறும் பொருள். "கழலே" என்னும் ஏகாரம், 'பிறிதியாதும் அன்று' என்பதை விளக்கி நின்றது. கூடு-உடம்பு. குமண்டை-களியாட்டம். குனித்து - கூத்தாடி. குலாத் தில்லை-விளக்கத்தை உடைய தில்லை. கொண்டு - கொண்டேன்; பெற்றுவிட்டேன். இஃது இறந்தகாலத் தன்மையொருமை வினைமுற்று. 'இஃது என் தவம் இருந்தவாறு' எனக் குறிப்பெச்சம் வருவித்து முடிக்க. அன்றே, அசைநிலை.

560. துடியேர் இடுகிடை - உடுக்கைபோலும் சுருங்கிய இடை. செடி ஏறு - குற்றம் மிகுதற்குக் காரணமான.

561 என்புள் ளுருக்கி இருவினையை ஈடழித்துத்
துன்பங் களைந்து துவந்துவங்கள் தூய்மைசெய்து
முன்புள்ள வற்றை முழுதழிய உள்புகுந்த
அன்பன் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 3

562 குறியும் நெறியுங் குணமுமிலார் குழாங்கள்தமைப்
பிறியும் மனத்தார் பிறிவரிய பெற்றியனைச்
செறியுங் கருத்தில் உருத்தமுதாஞ் சிவபதத்தை
அறியுங் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 4

563 பேருங் குணமும் பிணிப்புறும்இப் பிறவிதனைத்
தூரும் பரிசு துரிசறுத்துத் தொண்டரெல்லாஞ்
சேரும் வகையாற் சிவன்கருணைத் தேன்பருகி
ஆருங் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 5

'முடியேனுயும், பிறவேனுயும் தில்லை ஆண்டானைக் கொண்டேன்' என்க. முடிதல் இறத்தல். "அடியேன்" என்றதை முதலிற் கொள்க.

561. ஈடு - வலிமை. துவந்துவம் - பற்று. முன்பு உள்ள - முன்பு உள்ளன; அவை மலங் காரணமாக வந்த குற்றங்கள். அற்றை - அன்றே. 'அன்பின் என்பது பாடமாயின், னகரம் திரிதல் வேண்டும்.

562. குறி - குறிக்கோள். செறியும் கருத்து - தன்னையே பற்றி நிற்கும் உள்ளம். உருத்து - உருப்பட்டுத் தோன்றி. அறியும் - எல்லாவற்றையும் அறிகின்ற. 'அறியும் ஆண்டான்' என இயையும்.

563. பேர் - பெயர். இஃது உடம்பிற்கு இடப்படுவது. குணம், முக்குணம். இவை இரண்டும் உயிரைப் பிணித்தல் செய்வது, பிறவியினுலாம். பேரால் வரும் பிணிப்பாவது, உடம்பையே தான் என மயங்கி நிற்றல். குறிப்புருவகமாதலின், "பிறவி" என்றதற்கு, 'பிறவியாகிய குழி' என உரைக்க. "சிவன்" என்றது, 'தன்' என்றபடி. 'சிவன் கருணைத் தேன் பருகிச் சேரும் வகையால்' என மாற்றியுரைக்க.

564 கொம்பில் அரும்பாய்க் குவிமலராய்க் காயாகி
வம்பு பழுத்துடலம் மாண்டிங்ஙன் போகாமே
நம்புமென் சிந்தை நணுகும்வண்ணம் நானணுகும்
அம்பொன் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 6

565 மதிக்குந் திறலுடைய வல்அரக்கன் தோள்நெரிய
மிதிக்குந் திருவடி என் தலைமேல் வீற்றிருப்பக்
கதிக்கும் பசுபாசம் ஒன்றுமிலோம் எனக்களித்திங்
கதிர்க்குங் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 7

566 இடக்குங் கருமுருட் டேனப்பின் கானகத்தே
நடக்குந் திருவடி என் தலைமேல் நட்டமையாற்
கடக்குந் திறல்ஐவர் கண்டகர்தம் வல்லரட்டை
அடக்குங் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 8

---

564. வாளா, 'அரும்பாய்' என்ற வழிப் பொருள் இனிது விளங்காமையின், "கொம்பில் அரும்பாய்" என்று அருளினார். குவிமலராய் - முன்னர்ப் போதாய்க் குவிந்து நின்ற மலராய். 'வம்பாக' என ஆக்கம் வருவிக்க. வம்பு - வீண். இங்ஙன் - இவ்வாறு. நம்பும் - (பிற பொருள்களை) விரும்புகின்ற. நணுகும் வகை - தன்னைச் சேரும்படி. 'உலகத்தார் போல யானும் வளர்ந்து மூத்து வாளா இறந்தொழியாமல், யான் சேர்ந்திருக்கின்ற தில்லை ஆண்டான்' என்றபடி.

565. அரக்கன், இராவணன். 'அவன் தோள் நெரிய மிதிக்கும் திருவடி' என்றது, 'பசுபாசத்தை மேலெழாத வாறு அடர்க்கும் திருவடி.' எனக் குறிப்பான் உணர்த்திய வாறு. வீற்றிருப்ப - வீற்றிருத்தலால். கதிக்கும் - மேல் எழுகின்ற. 'களித்துக் கொண்டு' என இயையும். அதிர்த்தல், ஆடலில் சிலம்பை ஒலிப்பித்தல்.

566. இடக்கும் - நிலத்தைக் கிண்டுகின்ற, 'முருடு' என்பதை, இக்காலத்தார், 'முரடு' என வழங்குப. ஏனம் - பன்றி. இறைவன் கானகத்தில் பன்றிப் பின் சென்றது, அருச்சுனன் பொருட்டு. 'நட்டமையால் கொண்டு' என முடிக்க. கண்டகர் - கொடியவர். "ஐவர் கண்டகர்" என்றது,

567 பாழ்ச்செய் விளாவிப் பயனிலியாய்க் கிடப்பேற்குக்
கீழ்ச்செய் தவத்தாற் கிழியிடு நேர்பட்டுத்
தாட்செய்ய தாமரைச் சைவனுக்கென் புன்தலையால்
ஆட்செய் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 9

568 கொம்மை வரிமுலைக் கொம்பனையாள் கூறனுக்குச்
செம்மை மனத்தால் திருப்பணிகள் செய்வேனுக்
கிம்மை தரும்பயன் இத்தனையும் ஈங்கொழிக்கும்
அம்மை குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 10

திருச்சிற்றம்பலம்

ஐம்பொறிகளை. வல் அரட்டு - வலிய குறும்பு. "அரட்டர் ஐவர்" என நாவுக்கரசரும் ஓதியருளுதல் காண்க. (திருமுறை-5-7, 6.) 'வல்லாட்டை' என்பது பாடமன்று.

567. செய் - வயல். விளாவி - உழுது. கீழ் - முற்பிறப்புக்கள். கிழி ஈடு - பொன் முடிப்பு வழியில் இடப்பட்டுக் கிடத்தல். நேர்பட்டு - எதிர்ப்பட்டாற்போல. தாள் - திருவடி. 'தாளாகிய செய்ய தாமரை' என்க. சைவன் - சிவம் உடையவன். 'சிவநெறித் தலைவன்' எனலுமாம். ஆட்செய்தல் - பணிசெய்தல்.

568. கொம்மை - திரட்சி, வரி - சந்தனம் முதலியவற்றால் எழுதும் கோலம்; தேமலுமாம். இம்மை தரும் பயன் - இப் பிறப்போடு ஒழியும் பயன்கள்; அவை, ஐம்புல இன்பங்கள். அம்மை - தாய்.

அண்டமெலாங் கடந்தபொருள் பகரு நூலி
னளவுரைப்பார் தெளிந்தயர்வா ராய்வா ராகித்
தொண்டுபடு மடியார்க ளூற்றொன் பான்மேற்
றெண்ணூற்றொன் பானென்னுந் தொகுதி சூழ
ஒண்டொடிபங் கினனிருப்ப விருப்பா லெய்தி
யுடனுரைத்துச் சிவஞான முணர்வா ரன்பு
மண்டியநெஞ் சினில்வணங்கி வணங்கார் போல
மந்திரியார் மேன்மையுடன் வந்து நின்றார். 74

— திருவாதவூரடிகள் புராணம்.

41. அற்புதப் பத்து

[அற்புதம் - அதிசயம். வியப்பு, இறைவன் தம்மை ஆண்டருளியது இயற்கையில் நிகழத் தக்க ஒன்றாக நினையாது, என்றும், எங்கும் இல்லாததொரு புதுமை யுடையதாகக் கருதுதலின், அதனை எடுத்தோதியருளிய பத்துப் பாடல்களின் தொகுதி இது. இஃது அடிகள் உள்ளத்தில் அடங்காததோர் அற்புதமாய்த் தோன்றலின், முன்னர் 'அதிசயப் பத்து' என அருளிச்செய்ததனோடு அமையாது, பின்னும் 'அற்புதப் பத்து' எனப் பத்துத் திருப்பாடல்கள் அருளிச்செய்தார். யாப்பு வகையும் வேறுபடாமை காண்க. இங்ஙனமே, 'கல்வி' எனக் கூறிய பத்துக் குறள்களில் கல்வியின் பெருமை அடங்காமை கருதித் திருவள்ளுவ நாயனாரும், அதனையே 'கல்லாமை' என வேறு பத்துக் குறள்களாற் கூறுதல் காண்க. 'கல்வி, கல்லாமை' என்பன உடன்பாடும், எதிர்மறையுமாய்ச் சொல் வேறுபாடுடைய எனினும், பொருட்கண் வேறுபாடின்மை யறிக. அதிசயப்பத்திற்கு, 'முத்தி இலக்கணம்' என குறிப் புரைத்த முன்னோர் இதற்கு, 'அனுபவம் ஆற்றாமை' என உரைத்தனர். ஆற்றாமை, தம் தகுதிக்கு மேற்பட்டதாதல்' 'அங்ஙனமாயின், இஃது அதிசயப்பத்தின் பின்வைக்கற்பாலது. எனின், பிறபொருள் இடையிட்டு வருதலே நன்றெனக் கருதினராகலின், இங்கு வைத்துக் கோத்தனர் என்க.]

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

569 மைய லாய்இந்த மண்ணிடை வாழ்வெனும்
ஆழியுள் அகப்பட்டுத்
தைய லாரெனுஞ் சுழித்தலைப் பட்டுநான்
தலைதடு மாறாமே
பொய்யெ லாம்விடத் திருவருள் தந்துதன்
பொன்னடி யிணைகாட்டி
மெய்ய னாய்வெளி காட்டிமுன் நின்றதோர்
அற்புதம் விளம்பேனே. 1

---

569. மையல் - மயக்கம். ஆழி - கடல். சுழி - கடற்

570 ஏய்ந்த மாமல ரிட்டுமுட் டாததோர்
இயல்பொடும் வணங்காதே
சாந்த மார்முலைத் தையல்நல் லாரொடுந்
தலைதடு மாறாகிப்
போந்தி யான்துயர் புகாவணம் அருள்செய்து
பொற்கழ லிணைகாட்டி
வேந்த னாய்வெளி யேஎன்முன் நின்றதோர்
அற்புதம் விளம்பேனே. 2

571 நடித்து மண்ணிடைப் பொய்யினைப் பலசெய்து
நானென தெனும்மாயக்
கடித்த வாயிலே நின்றுமுன் வினைமிகக்
கழறியே திரிவேனைப்
பிடித்து முன்னின்றப் பெருமறை தேடிய
அரும்பொருள் அடியேனை
அடித்த டித்துவக் காரமுன் தீற்றிய
அற்புதம் அறியேனே. 3

குறி. தலைதடுமாறல் - நெறிபிறழ்ந்து நடத்தல். மெய்யனாய் - மெய்யுணர்வைத் தரும் ஆசிரியனாய். வெளி - பரவெளி. திருவருள் தருதல் முதலியவற்றிற்கு, 'எம்பெருமான்' என்னும் வினைமுதல் வருவிக்க. விளம்பேன் - சொல்லும் வகையை அறியேன். 'சொற்கு அடங்காதது' என்றபடி.

570. ஏய்ந்த - பொருந்திய. வேந்தனாய் - ஞானஅரசனாய்.

571. நடித்து - உண்மையுடையவன் போலக் காட்டி. மாயம் - பொய்; அது பொய்யாகிய செருக்கினைக் குறித்தது. 'மாயத்தினது வாய்' என்க. கடித்த வாய் - பல்லினால் இறுகப் பிடித்த வாய். மிக - மிக்கு விளைய, கழறுதல், இங்கு, பிதற்றலின்மேற்று. 'அரும்பொருள் அடியேனை முன்னின்று பிடித்து' என மாற்றுக. அக்காரம் - கண்டம் (சர்க்கரை). முன் தீற்றிய - முன்பு (விரைந்து) தின்னச் செய்த. 'மருந்தை

572 பொருந்தும் இப்பிறப் பிறப்பிவை நினையாது
பொய்களே புகன்றுபோய்க்
கருங்குழலினார் கண்களால் ஏறுண்டு
கலங்கியே கிடப்பேனைத்
திருந்து சேவடிச் சிலம்பவை சிலம்பிடத்
திருவொடும் அகலாதே
அருந்துணைவனாய் ஆண்டுகொண் டருளிய
அற்புதம் அறியேனே. 4

573 மாடுஞ் சுற்றமும் மற்றுள போகமும்
மங்கையர் தம்மோடுங்
கூடி அங்குள குணங்களால் ஏறுண்டு
குலாவியே திரிவேனை
வீடுதந் தென்றன் வெந்தொழில் வீட்டிட
மென்மலர்க் கழல்காட்டி
ஆடுவித்தென தகம்புகுந் தாண்டதோர்
அற்புதம் அறியேனே. 5

அடித்தடித்து ஊட்டுவர்; இவன் இனிப்பை எனக்கு அடித்தடித்து ஊட்டினான்' என்றபடி. 'அக்காரம்' என்றது, திருவடி இன்பத்தை. குற்றியலுகரம் உயிர்வரக்கெடாது, உடம்படுமெய் பெற்றது. அற்புதம் - அற்புதச் செயலுக்குக் காரணம். "அறியேன்" என்றது, 'அருளல்லது வேறில்லை' என்றபடி.

572. "இவை" என்றது, 'இவற்றினால் விளையும் துன்பங்கள்' என்றபடி. ஏறுண்டு - தாக்குண்டு. திரு - திருவருள்.

573. மாடு - பொன்னும், மணியும். அங்குள குணங்கள் - அவரிடம் உள்ள தன்மைகள். "மங்கையர்.........ஏறுண்டு" என்றதை முதற்கண் கூட்டுக. குலாவி - கொண்டாடி. வெந்தொழில், இங்குக் கூறியன. ஆடுதல், களிப்பினால் என்க. அகம் - மனம்.

574 வணங்கும் இப்பிறப் பிறப்பிவை நினையாது
மங்கையர் தம்மோடும்
பிணைந்து வாயிதழ்ப் பெருவெள்ளத் தழுந்திநான்
பித்தனாய்த் திரிவேனைக்
குணங்க ளுங்குறி களுமிலாக் குணக்கடல்
கோமளத் தொடுங்கூடி
அணைந்து வந்தெனை ஆண்டுகொண் டருளிய
அற்புதம் அறியேனே. 6

575 இப்பி றப்பினில் இணைமலர் கொய்துநான்
இயல்பொடஞ் செழுத்தோதித்
தப்பி லாதுபொற் கழல்களுக் கிடாதுநான்
தடமுலை யார்தங்கள்
மைப்பு லாங்கண்ணால் ஏறுண்டு கிடப்பேனை
மலரடி யிணைகாட்டி
அப்பன் என்னைவந் தாண்டுகொண் டருளிய
அற்புதம் அறியேனே. 7

576 ஊச லாட்டுமிவ் வுடலுயி ராயின
இருவினை அறுத்தென்னை
ஓசை யாலுணர் வார்க்குணர் வரியவன்
உணர்வுதந் தொளியாக்கிப்
பாச மானவை பற்றறுத் துயர்ந்ததன்
பரம்பெருங் கருணையால்
ஆசை தீர்த்தடி யாரடிக் கூட்டிய
அற்புதம் அறியேனே. 8

---

574. வணங்கும் - தாழ்கின்ற; இழிகின்ற. இதழ் - இதழூறல் நுகர்ச்சியால் விளையும் இன்பம். கோமளம் - அழகு; அஃது அம்மையைக் குறித்தது.

575. இணை மலர் - இணைத்தற்கு (தொடுத்தற்கு) உரிய பூ. தப்பிலாது - தவறாது. மைப்பு உலாம் - மைதீட்டுதல் பொருந்திய. 'கிடப்பேனை' என்றதை, 'கிடப்பேற்கு' எனத் திரிக்க.

576. 'உடல் உயிராயினவற்றை ஊசல் ஆட்டும் இரு-

577 பொச்சை யான இப் பிறவியிற் கிடந்துநான்
புழுத்தலை நாய்போல
இச்சை யாயின ஏழையர்க் கேசெய்தங்
கிணங்கியே திரிவேனை
இச்ச கத்தரி அயனுமெட் டாததன்
விரைமலர்க் கழல்காட்டி
அச்சன் என்னையும் ஆண்டுகொண் டருளிய
அற்புதம் அறியேனே. 9

வினை' என்க. 'ஓசை' என்பது, 'சொல்' என்னும் பொருளதாய், சொல்லாலாகிய நூலைக் குறித்தது. ஒளி ஆக்கி - ஒளிப் பொருளாகிய மெய்ப்பொருளைத் தோற்றுவித்து. பரம் - மேன்மை. 'உலகப் பற்றை அறுத்து அடிக்கீழ்க் கூட்டிய' என்க.

577. பொச்சையான - காடாகிய. இருளும், பிற துன்பங்களும், பரப்பும் உடைமை பற்றிப் பிறப்பினைக் காடாக உருவகம் செய்தார். புழுத்தலை நாய் - புழுவையுடைய தலையையுடைய நாய். பிற உறுப்புக்களிற் புழுக் கொள்வதினும், தலையிற் புழுக்கொள்ளுதல், துன்பமும், இழிவும் தருவதாகலின், தலையையே கூறினார். 'இனி, புழுத்து அலை நாய்' என்பாரும் உளர். ஏழையர்க்கு - ஏழையர்மாட்டு; உருபு மயக்கம். ஏழையர் - பெண்கள். இச் சகம் - இவ்வுலகம். 'இச்சகத்து' எனின், வாளாதே மோனை கெடுதலாலும், பொருட் சிறப்பும் இன்மையானும், 'விச்சகத்து' என்பதே பாடம் போலும்! 'விச்சையகத்து' என்பது தொகுத்தலாய், 'விச்சகத்து' என வருதல் பொருந்துவதே. அச்சன் - தந்தை.

578 செறியும் இப்பிறப் பிறப்பிவை நினையாது
செறிகுழ லார்செய்யுங்
கிறியுங் கீழ்மையுங் கெண்டையங் கண்களும்
உன்னியே கிடப்பேனை
இறைவன் எம்பிரான் எல்லையில் லாததன்
இணைமலர்க் கழல்காட்டி
அறிவு தந்தெனை ஆண்டுகொண் டருளிய
அற்புதம் அறியேனே. 10

திருச்சிற்றம்பலம்

---

578. செறியும் - அடர்ந்துள்ள. கிறி - பொய்ம்மை; அவை இன்மொழியும், இனிப செயலும் போல்வன. அவற்றுள் பார்வை சிறப்புடைமையின், அதனை வேறு கூறினர். கீழ்மை - நாணமின்றி யொழுகுதல்.

உருத்திர நற் றிருமணியை யிலங்கு காதி
லொண்சிரத்திற் கந்தரத்தி லொளிகொண் மார்பிற்
கரத்திலணிந் திலகுதிரு முண்ட மங்கிக்
கண்கரந்த நன்னுதன்மேற் கவினச் சாத்தித்
திருத்திகழும் வேதியனா ரம்பொன் மேனி
திகழ்வதுகண் டகமகிழ்வார் செங்கை மீது
பொருத்தமுறும் புத்தகமே தையா வென்னப்
பொய்ம்மையிலாச் சிவஞான போத மென்றார்: 75

என்றலுமே சிவமேது ஞான மேதிங்
கிலங்கியிடும் போதமே தியம்பு வீரேல்
அன்றுவட நீழலில்வந் திருந்தார் நீரே
யடியேனு முமக்கடிமை யாவே னென்ன
நின்றசிவ மொன்றதனைத் தேர்தன் ஞான
நிகழ்போதந் தேர்ந்ததனைத் தெளிதலாமென்
றொன்றிய நற்பொருள்வினவி நிற்பார் சிந்தை
யுருகும்வகை யுரைசெய்தா ருவமையில்லார். 76

— திருவாதவூரடிகள் புராணம்.

42. சென்னிப் பத்து

[சென்னி - தலை. சிவபெருமான் குருவாகிவந்து அடிகள்தம் முடிமேல் தனது திருவடிகளைச் சூட்டியருள, அத்திருவடிகளைத் தாம் என்றும் அகலாது புனைந்துநிற்கும் நிலையினை அருளிச்செய்த பத்துப் பாடல்களின் தொகுதி இது. திருவடிப் பேறே சிவப்பேறுதலின், இதற்கு, 'சிவ விளைவு' எனக் குறிப் புரைத்தனர் முன்னோர். விளைவு - பேறு. இது, திருப்பெருந் துறையில் அருளிச் செய்யப்பட்டது என்பதே பதிப்புக்களில் காணப்படுவது. இஃது, இடையே சில அடிகள் அறுசீராய் நிற்ப வந்த எழுசீரடி விருத்தத்தால் ஆயது.]

ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

579 தேவ தேவன்மெய்ச் சேவகன்
தென்பெ ருந்துறை நாயகன்
மூவ ராலும் அறியொ ணாமுத
லாய ஆனந்த மூர்த்தியான்
யாவ ராயினும் அன்ப ரன்றி
அறியொ ணாமலர்ச் சோதியான்
தூய மாமலர்ச் சேவ டிக்கண்நம்
சென்னி மன்னிச் சுடருமே. 1

580 அட்ட மூர்த்தி அழகன் இன்னமு
தாய ஆனந்த வெள்ளத்தான்
சிட்டன் மெய்ச்சிவ லோக நாயகன்
தென்பெ ருந்துறைச் சேவகன்

---

579. தேவ தேவன் - தேவர்கட்குத் தேவன். மெய்ச் சேவகன் - உண்மை வீரன். உண்மை வீரமாவது அஞ்ஞானத்தை அழித்தல். யாவராயினும் - எத்துணை உயர்ந்தோராயினும். மன்னி - மன்னுதலால். சுடரும் - ஒளிவிடும். "தூய" என்றது, இனவெதுகை.

580. சிட்டன் - மேலானவன். மட்டு - தேன். வட்ட மாமலர் - தாமரை மலர். மலரும் - பொலிவுபெறும்.

மட்டு வார்குழல் மங்கை யாளையோர்
பாகம் வைத்த அழகன்றன்
வட்ட மாமலர்ச் சேவ டிக்கண்நம்
சென்னி மன்னி மலருமே. 2

581 நங்கை மீரெனை நோக்கு மின்நங்கள்
நாதன் நம்பணி கொண்டவன்
தெங்கு சோலைகள் சூழ்பெ ருந்துறை
மேய சேவகன் நாயகன்
மங்கை மார்கையில் வளையுங் கொண்டெம்
உயிருங் கொண்டெம் பணிகொள்வான்
பொங்கு மாமலர்ச் சேவ டிக்கண்நம்
சென்னி மன்னிப் பொலியுமே. 3

582 பத்தர் சூழப் பராபரன்
பாரில் வந்துபார்ப் பானெனச்
சித்தர் சூழச் சிவபிரான்
தில்லை மூதூர் நடஞ்செய்வான்

---

581. இத்திருப்பாட்டு, அகப்பொருள் நெறிபற்றி அருளிச் செய்தது. மங்கைமார், தாருகாவன முனிவர் பத்தினியர். 'அவர்பால் வளையே கொண்டொழிந்தான்; எம்பால் உயிரையே கொண்டான்' என்றாள். இஃது அடிகளை இறைவன் தன் அடிமையாக் கொண்டதைக் குறித்தது. முதற்கண், "நம் பணி கொண்டவன்" என்றது, பொதுவாகவும், இறுதியில், "எம் பணிகொள்வான்" என்றது, சிறப்பாகவும் அருளிச் செய்தன. அன்றியும், "எம் பணிகொள்வான்" என்றது, 'எம்மை ஆட்கொள்வான்' என்னும் பொருளதேயாம். ஆயினும், "நம் பணிகொண்டவன்" எனப் பாடம் ஓதாது, 'அம் பணிகொண்டவன்' எனப் பாடம் ஓதி. 'நீரை அணியாகக் கொண்டவன்' என்று உரைப்பாரும் உளர்.

582. சித்தர் - யோகிகள்; பதஞ்சலி முதலியோர். வலிய வந்து ஆட்கொண்டமையை, 'இல் புகுந்து" என்றார். வைத்த - சூட்டிய.

எத்த ளுகிவந் தில்பு குந்தெமை
ஆளுங் கொண்டெம் பணிகொள்வான்
வைத்த மாமலர்ச் சேவடிக்கண் நம்
சென்னி மன்னி மலருமே. 4

583 மாய வாழ்க்கையை மெய்யென் றெண்ணி
மதித்தி டாவகை நல்கினுன்
வேய தோளுமை பங்கன் எங்கள்
திருப் பெருந்துறை மேவினுன்
காயத் துள்ளமு தூற ஊறநீ
கண்டு கொள்ளென்று காட்டிய
சேய மாமலர்ச் சேவ டிக்கண் நம்
சென்னி மன்னித் திகழுமே. 5

584 சித்த மேபுகுந் தெம்மை யாட்கொண்டு
தீவி ஊகெடுத் துய்யலாம்
பத்தி தந்துதன் பொறக மூறகணே
பன்ம லர்கொய்து சேர்த்தலும்

---

583. நல்கினுன் - அருள்செய்தான். "திருப்பெருந்துறை மேவினுன்" என்பது, 'இறைவன்' என ஒரு சொல் தன்மைப் பட்டு நின்று, "எங்கள்" என்றததனேடு நான்காவதன் பொருள் படத் தொக்கது. நீட்டை கைவந்த பின்னர், உடம்புள்ள பொழுதே உயிரினிடத்துச் சிவானந்தம் பெருகுமாதலின், அதனைக் காயத்துள் ஊறுவதாக அருளிச் செய்தார். கண்டு கொள் – இத்திருவடிகளின் இயல்பை அறிந்துகொள். சேய - செம்மையான.

584. "ஆம்" என்றது பெயரெச்சம். அது, "பத்தி" என்னும் கருவிப் பெயர்கொண்டது. மூத்தி - சிவன் முத்திநிலை. மத்தன் - ஊமத்த மலரைச் சூடியவன். மோனை கெடுதலின், 'அத்தன்' எனப் பாடமோதுதல் சிறப்பன்று.

முத்தி தந்திந்த மூவு லகுக்கும்
அப்பு றத்தெமை வைத்திடு
மத்தன் மாமலர்ச் சேவ டிக்கண்நம்
சென்னி மன்னி மலருமே. 6

585 பிறவி யென்னுமிக் கடலை நீந்தத்தன்
பேர ருள்தந் தருளினன்
அறவை யென்றடி யார்கள் தங்க
ளருட்கு ழாம்புக விட்டுநல்
உறவு செய்தெனை உய்யக் கொண்ட
பிரான்தன் உண்மைப் பெருக்கமாம்
திறமை காட்டிய சேவ டிக்கண்நம்
சென்னி மன்னித் திகழுமே. 7

586 புழுவி னாற்பொதிந் திடுகு ரம்பையிற்
பொய்த னையொழி வித்திடும்
எழில்கொள் சோதியெம் ஈசன் எம்பிரான்
என்னுடை யப்பன் என்றென்று
தொழுத கையின ராகித் தூய்மலர்க்
கண்கள் நீர்மல்குந் தொண்டர்க்கு
வழுவிலாமலர்ச் சேவ டிக்கண்நம்
சென்னி மன்னி மலருமே. 8

---

585. அறவை என்று - இவன் துணையிலி என்று இரங்கி. உண்மைப் பெருக்கமாம் திறமை - உண்மையினது மிகுதியாகிய ஆற்றல். அதனைக் காட்டினமை, சென்னியிற் சூட்டிய பொழுதே மயக்கெலாம் அற்று அன்பு பிழம்பாகச் செய்தது.

586. பொதிந்து - நிறைத்து. இடு, துணைவினை. பொய் - நிலையாத வாழ்வு. வழுவிலா - தவறாத ஒருதலையாகக் கிடைக்கின்ற.

587 வம்ப னாய்த்திரி வேனை வாவென்று
வல்வி னைப்பகை மாய்த்திடும்
உம்ப ரான்உல கூட றுத்தப்
புறத்த னாய்நின்ற எம்பிரான்
அன்ப ரானவர்க் கருளி மெய்யடி
யார்கட் கின்பந் தழைத்திடுஞ்
செம்பொன் மாமலர்ச் சேவ டிக்கண்நம்
சென்னி மன்னித் திகழுமே. 9

588 முத்த னைமுதற் சோதியை முக்கண்
அப்ப னைமுதல் வித்தினைச்
சித்த னைச்சிவ லோக னைத்திரு
நாமம் பாடித் திரிதரும்
பத்தர் காள்இங்கே வம்மின் நீர்உங்கள்
பாசந் தீரப் பணிமினோ
சித்த மார்தருஞ் சேவ டிக்கண்நம்
சென்னி மன்னித் திகழுமே. 10

திருச்சிற்றம்பலம்

---

587. வம்பன் - வீணன். "அருளி" என்றது பெயர். 'அருளிதன் சேவடி' என்க.

588. முதற் சோதி - ஒளிப் பொருள்கட்கெல்லாம் ஒளி வழங்கும் ஒளி. இதனானே, 'எவ்வுயிர்க்கும் அறிவைப் பயப்பிக்கும் அறிவு' என்பதும் முடிந்தது. முதல் வித்து - முதற் காரணன்; 'பரம காரணன்' என்றபடி. இடைநிலைக் காரணர் பலர் உளராதல் அறிந்துகொள்க. "பணிமின்" என்றதன் பின், 'என்னையெனின்' என்பது வருவிக்க. ஓகாரம், அசை நிலை. 'என்றும் உள்ளத்திருக்கும் சேவடி, பணிவார்க்கு வெளி நிற்கும்' என்றபடி.

43. திருவார்த்தை

[வார்த்தை - நிகழ்ச்சி. இது, வர்த்தித்தல், வர்த்தமானம் என்பனபோல்வது. நிகழ்ச்சியைத் தெரிவிக்கும் சொல்லும் ஆகுபெயரால், 'வார்த்தை' எனப்படும். இறைவனது அருள் நிகழ்ச்சிகளை அருளிச்செய்த பாடல்களின் தொகுதியாதலின், இது, 'திருவார்த்தை' எனப்பட்டது. இவ்வருள் நிகழ்ச்சியது பெருமையை யாவரும் அறியுமாற்றால் எடுத்துச் சொல்லுதல், அடிகளது அன்பின் பெருக்காலாதலின், இதற்கு, 'அறிவித் தன்புறுதல்' எனக் குறிப்புரைத்தனர் முன்னோர். இது, திருப் பெருந்துறையில் அருளிச்செய்யப்பட்டது என்பதே பதிப்புக் களில் காணப்படுவது. இஃது, அறுசீரடி விருத்தத்தால் ஆயது எனக் கொள்வர். எனினும், எண்சீரடி விருத்தத்தால் ஆய தெனவே வேண்டும். சிலவிடத்து இரு மாச்சீர்கட்கு ஈடாக ஒரு விளங்காய்ச்சீர் நிற்கின்றது. சில இடங்களில் உயிரள பெடை ஒற்றளபெடைகள் கொள்ளற்பாலன.]

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

589 மாதிவர் பாகன் மறைப யின்ற
வாசகன் மாமலர் மேய சோதி
கோதில் பரங்கரு ணையடி யார்
குலாவுநீ திகுண மாக நல்கும்
போதலர் சோலைப் பெருந்து றையெம்
புண்ணியன் மண்ணிடை வந்திழிந்த்
தாதிப் பிரமம் வெளிப்ப டுத்த
அருளறி வார்எம் பிரானு வாரே. 1

---

589. இவர்-மேம்பட்டுவிளங்குகின்ற. வாசகன் - சொல்லை யுடையவன். 'சோதி, நீதி' என்பனபோல, 'கருணை' என் பதும் இறைவனையே குறித்தது. போது அலர் - போதுகள் மலர்கின்ற. 'வந்திழிந்து' என அளபெடையின்றி ஓதுதல் பொருந்தாமை யறிக. ஆதிப் பிரமம் - எல்லாவற்றிற்கும்

590 மாலயன் வானவர் கோனும் வந்து
வணங்க அவர்க்கருள் செய்த ஈசன்
ஞாலமதனிடை வந்தி ழிந்து
நன்னெறி காட்டி நலம்திகழுங்
கோல மணியணி மாட நீடு
குலாவு மிடவை மடநல் லாட்குச்
சீல மிகக்கரு ணையளிக்குந்
திறமறி வார்எம் பிரானு வாரே. 2

591 அணிமுடி ஆதி அமரர் கோமான்
ஆனந்தக் கூத்தன் அறுசமயம்
பணிவகை செய்து படவ தேறிப்
பாரொடு விண்ணும் பரவி யேத்தப்

முதலாகிய பெரும்பொருளை. வெளிப்படுத்த - எமக்குப் புலப்படுத்திய. இப்பெயரெச்சம், 'அருள்' என்னும் காரணப் பெயர் கொண்டது. 'அருளினது பெருமையை உணர்பவர் எமக்குக் கடவுளாவார்' என்க. இங்ஙனங் கூறியது, 'அவரே சிவனடியார்' என்றபடி. "கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில் — அவர்கண்டீர் நாம்வணங்குங் கடவுளாரே" என்னும் திருத்தாண்டகத்தைக்காண்க (திருமுறை 6. 95. 10.).

590. நீடு குலாவும் - நெடிது விளங்குகின்ற. 'இடவை' என்பது, 'வந்தி' என்பவள் வாழ்ந்த இடத்தின் பெயர் போலும்! வந்திபொருட்டு இறைவன் மண்சுமந்த வரலாறு வெளிப்படை. 'இடவை - இடைமருது' என உரைத்து, 'அதன்கண் மடநல்லாட்கு அருள்புரிந்த வரலாறு அறியப்பட்டிலது' என்று போவாரும், இடைமருதில் வரகுணன் அன்பிற்காக இறைவன் அவன் மனைவியை ஏற்றதனைப் பொருத்துவாரும் உளர்.

591. பிஞ்ஞகனாகலின், அவனது முடியை, "அணிமுடி" என்றார். ஆதி - முதல்வன். அறுசமயம், அகச்சமயங்கள். 'அவை தன்னைப் பணியும் வகைசெய்து' என்றது, 'அறுசமயங்களை வகுத்து என்றபடி. படவை, இக்காலத்தார், 'படகு' என்ப. மணி - அழகு. 'வலைகொண்டு விசிறும்' என

பிணிகெட நல்கும் பெருந்து றையெம்
பேரரு ளாளன்பெண் பாலு கந்து
மணிவலை கொண்டுவான் மீன்விசிறும்
வகையறி வார்எம் பிரானு வாரே. 3

592 வேடுரு வாகி மகேந்தி ரத்து
மிகுகுறை வானவர் வந்து தன்னைத்
தேட இருந்த சிவபெரு மான்
சிந்தனை செய்தடி யோங்க ளுய்ய
ஆடல் அமர்ந்த பரிமா ஏறி
ஐயன் பெருந்துறை ஆதி அந்நாள்
ஏடர் களையெங்கும் ஆண்டு கொண்ட
இயல்பறி வார்எம் பிரானு வாரே. 4

593 வந்திமை யோர்கள் வணங்கி யேத்த
மாக்கரு ணைக்கட லாய்அடியார்
பந்தனை விண்டற நல்கும் எங்கள்
பரமன் பெருந்துறை ஆதி அந்நாள்

இயைக்க. வான் மீன் - பெரிய மீன். 'மீன்மேல் விசிறும்' என்க. இறைவன் வலை வீசிய திருவிளையாடல் வெளிப்படை.

592. மிகு குறை வானவர் - மிக்க குறையுடைய தேவர். சிந்தனைசெய்து- தனது திருவருளை நினைந்து. ஏடர்கள் - தோழர் கள்; அடியார்கள். 'வானவர்தேட மகேந்திரத்துஇருந்த சிவபெரு மான், ஐயன், பெருந்துறை ஆதி, அடியோங்கள் சிந்தனைசெய்து உய்ய, அந்நாள் வேடுருவாகி, பரிமா ஏறி எங்கும் ஏடர்களை ஆண்டுகொண்ட இயல்பு அறிவார் எம்பிரானுவார்' எனக் கொண்டு கூட்டி முடிக்க. குதிரை வீரன் வடிவத்தை, ''வேடுரு'' என்றார். சிவபிரான் மதுரையில் குதிரை கொணர்ந்த திருவிளை யாடல் வெளிப்படை.

593. இலங்கையில் வண்டோதரிக்கு அருள்புரிந்த வரலாறு முன்னர்க் கூறப்பட்டது (பக். 442.).

உந்து திரைக்கட லைக்கடந்தன்
　　றோங்கு மதிலிலங் கைஅதனிற்
பந்தணை மெல்விர லாட்கருளும்
　　பரிசறி வார்எம் பிரானா வாரே. 5

594 வேவத் திரிபுரம் செற்ற வில்லி
　　வேடுவ னாய்க்கடி நாய்கள் சூழ
ஏவற்செ யல்செய்யுந் தேவர் முன்னே
　　எம்பெரு மான்தான் இயங்கு காட்டில்
ஏவுண்ட பன்றிக் கிரங்கி யீசன்
　　எந்தை பெருந்துறை ஆதி அன்று
கேவலங் கேழலாய்ப் பால்கொ டுத்த
　　கிடப்பறி வார்எம் பிரானா வாரே. 6

---

594. "வேடுவனாய்" என்றது முதல், "இயங்கு காட்டில்" என்றதுகாறும் உள்ளவை, சிவபெருமான் அருச்சுனன் பொருட்டுப் பன்றிப்பின் வேடனாய்ச் சென்ற வரலாற்றைக் குறிப்பன. அக்காலத்தில் தேவர்கள் ஏவல் செய்யும் வேடுவராய் வந்தனர் என்பதும் வரலாறு. சிவபெருமான் பன்றிக்குட்டிகட்குப் பால் கொடுத்த காட்டினை, அருச்சுனன் பொருட்டுச் சென்ற காடாகக் கூறியது, 'நீவிர் உண்ணும் சோறே யாம் உண்பதும்' என்றல்போல, 'காடு' என்னும் பொதுமை பற்றி ஏவுண்ட பன்றி - அம்பு தைக்கப்பட்டு இறந்த தாய்ப் பன்றி. கேவலம் - தனிமை; சிறப்புச் சிறிதும் இன்மை. 'கேவலமாக' என ஆக்கம் வருவித்துரைக்க. இங்ஙனம் ஆக்க வினை தொகுக்கப்பட்ட தொகாநிலை யாதலின், "கேவலங் கேழலாய்" என, மகரம் இனமெல்லெழுத்தாய்த் திரிந்தது. கேழல் - பன்றி. 'பன்றியுள் ஒருவகை கேழல்' என்பதன்றி, 'கேழல் ஆண் பன்றி' என்றல் எங்கும் இல்லை. அதனால், 'ஒருசாரார் அங்ஙனம் கூறுப' என்னும் துணையே குறித்துப்போவர் தொல்காப்பிய உரையாளர். கிடப்பு - கிடை. தாய்ப்பன்றி கிடந்தவழியன்றி அதன் இளங்குட்டிகள் பாலுண்ணமாட்டாமையறிக. "கிடை" என்றது, கிடத்தற்கு ஏதுவாய அருளைக் குறித்தது. இறைவன் பன்றிக் குட்டிகட்குப் பால் கொடுத்த திருவிளையாடல் வெளிப்படை.

595 நாதம் உடையதோர் நற்கமலப்
போதினில் நண்ணிய நன்னுதலார்
ஓதிப் பணிந்தலர் தூவி யேத்த
ஒளிவளர் சோதியெம் ஈசன் மன்னும்
போதலர் சோலைப் பெருந்து றையெம்
புண்ணியன் மண்ணிடை வந்து தோன்றிப்
பேதங் கெடுத்தருள் செய்பெருமை
அறியவல் லார்எம் பிரானு வாரே. 7

596 பூவலர் கொன்றைய மாலை மார்பன்
போருகிர் வன்புலி கொன்ற வீரன்
மாதுநல் லாளுமை மங்கை பங்கன்
வண்பொழில் சூழ்தென் பெருந்து றைக்கோன்
ஏதில் பெரும்புகழ் எங்கள் ஈசன்
இருங்கடல் வாணற்குத் தீயில் தோன்றும்
ஓவிய மங்கையர் தோள்புணரும்
உருவறி வார்எம் பிரானு வாரே. 8

---

595. நாதம் - வண்டுகளின் ஒலி. கமலப்போதினில் நண்ணிய நன்னுதலார் - திருமகளும், கலைமகளும். அவ்விருவரும் முறையே திருவாரூரிலும், திருக்கண்டியூரிலும் சிவபெருமானை வழிபட்டுத் தத்தம் கணவர் உயிர்பெற்றெழும் வரத்தைப் பெற்றமையை அவ்வத் தல புராணங்களுட் காண்க. இவற்றுள், திருமகள் திருவாரூரில் வழிபட்டு வரம் பெற்ற வரலாறு பலரும் அறிந்தது. கண்டியூர் அட்ட வீரட்டங்களுள் ஒன்றுதலும், அது பிரமனது சிரத்தைக் கொய்த வீரட்டமாதலும் அறியற்பாலன. ''காபாலி - போரார் புரம்பாடிப் பூவல்லி கொய்யாமோ'' (284.) என்றதில், அடிகள் அட்ட வீரட்டங்களைக் குறித்தல் நினைவுகூரற்பாலது. மாலுக்கும், அயனுக்கும் சிவபெருமான் அருள்புரிந்தமையைப் பலவிடத்தும் அருளிச்செய்த அடிகள், இங்கு. அவர்தம் தேவியர்க்கு அருள் புரிந்தமையை அருளிச்செய்தார் என்க.

596. 'கொன்றைய பூ அலரும் மாலை' என்க. 'போர்ப் புலி' என இயையும். 'ஏதம் இல்' என்பது கடைக் குறைந்து,

597 தூவெள்ளை நீறணி எம்பெருமான்
　　சோதிமகேந்திர நாதன் வந்து
தேவர் தொழும்பதம் வைத்த ஈசன்
　　தென்னன் பெருந்துறை ஆளி அன்று
காதல் பெருகக் கருணை காட்டித்
　　தன்கழல் காட்டிக் கசிந்துருகக்
கேதங் கெடுத்தென்னை ஆண்டருளுங்
　　கிடப்பறி வார்எம் பிரானு வாரே.　　9

'ஏதில்' என்றுயிற்று. கடல் வாணன் - கடல் வாழ்க்கை யுடையவன்; வலைஞன். தீயில் தோன்றும் - தீயிடத்துத் தோன்றிய. ஓவிய மங்கையர் - சித்திரம் போலும் அழகுடைய மகள். வலைஞர்கோனிடத்து மகளாகியிருந்த உமையம்மையைச் சிவபிரான் வலைஞர் மகனுய்ச் சென்று மணந்த திருவிளையாடல் வெளிப்படை. முன்பு மூன்றுந் திருப்பாட்டில், வலை வீசி நந்தி சாபத்தை நீக்கினமை கூறினுர். இங்கு வலையர் மகளாகியிருந்த அம்மையை மணந்தமை கூறினுர். இங்குக் குறிக்கப்பட்ட வரலாறு பற்றி யாதும் கூருது போவார் போக, கூறப் புகுந்தோர் யாவரும் இங்குக் கூறிய இவ்வரலாற்றையே கூறினுர்; எனினும், ''தீயில் தோன்றும்'' என்ற வேறுபாடு ஒருபால் நிற்பினும், ''மங்கையர்'' எனப் பன்மை கூறினமை யின், இவ்வரலாறு இன்னும் ஆய்ந்துணரற்பாலதே. ''ஓவிய'' என்பது, நீங்கிய எனவும் பொருள்கொளற்குரியது. 'மங்கைதன் தோள்' என்பது பாடமாயின் மேற்குறித்த வரலாற்றைக் கொள்ளத் தடையில்லை.

597. 'தேவர் தொழும் பாதத்தை எம் முடிமேல் வைத்த ஈசன்' என்க. கேதம் - துன்பம். ''ஆண்டருளும்'' என்றது, 'இனியும் வந்து ஆட்கொண்டருளுகின்ற' என எதிர்காலச் சொல்லாம். கிடப்பு - கிடைப்பு. 'கிடைப்பு' என்பதே பாடம் என்றலுமாம். இறைவன் தம்மைத் தில்லைக்கு வருக எனப் பணித்தமையின், காலம் நீட்டித் தொழியினும் என்றே னும் ஒருநாள் தோன்றித் தம்மை ஏற்றருளல் ஒருதலை என்பது பற்றி இங்ஙனம் அருளிச்செய்தார். இதனுல், அடிகளை இறுதிக் கண் இறைவன் எவ்வாற்ருலேனும் தானே நேர்நின்று தன்பால் அழைத்துக்கொண்டான் என முடித்தலே முடிபாமன்றி,

598 அங்கணன் எங்கள் அமரர் பெம்மான்
அடியார்க் கமுதன் அவனி வந்த
எங்கள் பிரான்இரும் பாசந் தீர
இகபர மாயதோர் இன்ப மெய்தச்
சங்கங் கவர்ந்துவண் சாத்தி னோடுஞ்
சதுரன் பெருந்துறை ஆளி அன்று
மங்கையர் மல்கும் மதுரை சேர்ந்த
வகையறி வார்எம் பிரானு வாரே.

திருச்சிற்றம்பலம்

அவரது வாழ்க்கை வரலாற்றினைப் பிறிதோராற்றால் முடித்தல் முடியாகாது. பிற முடிபே முடிபாயின், திருப்பெருந்துறையில் இறைவனுடன் செல்ல விரும்பிய அடிகளை, 'தில்லைக்கு வருக' என இறைவன் பணித்த சொல்லும், அடிகள் திருவாசகம் முழுதும் தம்மை மீளத் தோன்றி அழைத்துக் கொள்ளல் வேண்டும் எனச் செய்துகொண்ட விண்ணப்ப மொழிகளும் எல்லாம் பயனில் சொற்களாய்ப் போமாறு அறிக.

598. '(யாங்கள்) பாசந் தீரவும், இன்பம் எய்தவும் மதுரை சேர்ந்த வகை' என்க. சங்கம் - வளையல். 'வளையலைக் கவர்ந்து' என்றது, 'மங்கையரைக் காதல் கூரப் பண்ணினான்' என்றபடி. சாத்து - வாணிகக் குழாம். சதுரன் - திறமை யுடையவன். நான்காம் திருப்பாட்டில் குதிரை கொணர்ந்த மையை அருளிச்செய்தார்; இதனுள், குதிரை வாணிகத் தலைவனாய் வந்தபொழுது காணப்பட்ட அவனது பேரழகினை அருளிச்செய்தார்.

உத்தம ரின்ன வாறிங் குரைத்தலு முவந்து நாலாஞ்
சத்திநி பாத மெய்துந் தன்மைய ராத லாலே
அத்திரு மன்றி லாடு மையரிங் கென்னை யாள
இத்திரு மேனி கொண்டா ரென்பது மனத்தி லெண்ணி. 77

— திருவாதவூரடிகள் புராணம்.

44. எண்ணப்பதிகம்

[அடிகள் தம் எண்ணத்தினை விண்ணப்பித்த பதிகம் எண்ணப் பதிகம். 'எண்ணம்' என்பது இங்கு விருப்பத்தினைக் குறித்தது. 'ஒழியா இன்பத்து உவகை' என்ற முன்னோர் குறிப்பிலும், 'உவகை' என்பது விருப்பத்தையே குறிக்கும். 'இன்பத்து உவகை, இன்பத்தின்கண் விருப்பம்' என்க. ஒழியா இன்பம் - நீங்காத இன்பம்; நிலைத்த இன்பம் - பேரின்பம். முன்பு ஆசைப்பத்தினுட் கூறியவற்றினும் வேறாகச் சிலவற்றை இதன்கண் அருளிச்செய்வார். இது, தில்லையில் அருளிச்செய்யப்பட்டது என்பதே பதிப்புக்களில் காணப்படுவது. இது, சீர்வரையறையில்லா விருத்தத்தால் ஆயது. 'பதிகம்' என்றமையின், பத்துத் திருப்பாட்டுக்களை யுடையது என்பது தேற்றம். அதனால், இஞ்ஞான்று காணப் படுவன ஆறு திருப்பாட்டுக்களேயாதலின், 'எஞ்சிய திருப் பாட்டுக்கள் விடுபட்டன' என்பாரது கூற்று உண்மையேயாம்; இவ்வாறன்றிப் பாயிரத்தின் பெயர்களுள் ஒன்றாகிய 'பதிகம்' என்னும் சொல்லோடு இப்' பதிகம்' என்னும் சொல்லை ஒட்டித் திரித்து, ஆறு செய்யுளோடே அமைதல் கூடாமை அறிக.]

ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

599 பாருரு வாய பிறப்பற வேண்டும்
பத்திமை யும்பெற வேண்டும்
சீருரு வாய சிவபெரு மானே
செங்கம லம்மலர்போல்
ஆருரு வாயஎன் ஆரமு தேஉன்
அடியவர் தொகைநடுவே
ஒருரு வாயநின் திருவருள் காட்டி
என்னையும் உய்யக்கொண் டருளே. 1

---

599. பார் உரு - நிலவுலகத்திற்கு ஒத்த உடம்பு; என்றது, இப்பிறப்பினை. இஃது அற்றவழி இறைவன் திருவடி கூடுதல் திண்ணமாதலின், இப்பிறப்பறுதல் மாத்திரையே கூறினார்.

600 உரியேன் அல்லேன் உனக்கடிமை
உன்னைப் பிரிந்திங் கொருபொழுதுந்
தரியேன் நாயேன் இன்னதென்
றறியேன் சங்கரா கருணையினாற்
பெரியோன் ஒருவன் கண்டுகொள்
என்றுன் பெய்கழல் அடிகாட்டிப்
பிரியேன் என்றென் றருளிய அருளும்
பொய்யோ எங்கள் பெருமானே. 2

"வேண்டும்" என்றது, 'இன்றியமையாதது' என்றதாம். பத்திமை பெறுதல், பிறப்பு அறுந்துணையும் என்க. இதனால், 'பிறப்பு அற்றபின் பத்திமை வேண்டா' என்றதன்று. ஆண்டுப் பத்திமைக்குத் தடையின்மையின் அது தானே நிகழும்; பிறப்பு உள்ளபொழுதே அஃது அரிதாகலின், அங்ஙனம் அரிதாகற்கு ஏதுவாய தடைகள் நீங்குதல் வேண்டும் என்றவாறு. சீர் உரு - சிறப்புடைய பொருள். 'செங்கமல மலர் போல்' என விகாரமின்றி யோதுதல் பாடமாகாமை யறிக. 'செங்கமல மலர்போலும்' எனப் பாடம் ஓதுவாரும் உளர். ஆர் உரு - பொருந்திய வடிவம். ஓர் உரு - ஒப்பற்ற வடிவம். இறைவனது வடிவம் அருளேயாதலின், அதனை, "திருவருள்" என்றார்.

600. 'செய்ய' என ஒருசொல் வருவித்து, 'உனக்கு அடிமை செய்ய உரியேன் அல்லேன்' என மாற்றிக் கொள்க. "பொழுது" என்றது மிகச் சிறிய நொடிப்பொழுதை. 'இதற்குக் காரணம் இன்னது என்று அறியேன்' எனவும், 'நீ, கருணையினால் யான் பெரியோன் ஒருவன் கண்டுகொள்க என்று' எனவும் கொள்க. 'என்றென்று' என்ற அடுக்கு வலியுறுத்தற்கண் வந்தது. தாம் வேண்டியும் வாராது பிரிந்து நிற்றலின், "பிரியேன் என்று அருளிய அருளும் பொய்யோ" என்றார்.

601 என்பே உருக நின்அருள் அளித்துன்
இணைமலர் அடிகாட்டி
முன்பே என்னை ஆண்டு கொண்ட
முனிவா முனிவர் முழுமுதலே
இன்பே அருளி எனையுருக்கி
உயிருண் கின்ற எம்மானே
நண்பே யருளாய் என்னுயிர்
நாதா நின்னருள் நாணுமே. 3

602 பத்தில னேனும் பணிந்தில னேனும்உன்
உயர்ந்தபைங் கழல்காணப்
பித்தில னேனும் பிதற்றில னேனும்
பிறப்பறுப் பாய்எம் பெருமானே
முத்தனை யானே மணியனை யானே
முதல்வனே முறையோஎன்
றெத்தனை யானும் யான்தொடர்ந் துன்னை
இனிப்பிரிந் தாற்றேனே. 4

---

601. முனிவன் - ஆசிரியன். முனிவர் முழுமுதல் - முற்றத் துறந்த முனிவர் பற்றும் முழுமுதற் கடவுள். "உயிர்" என்றது, அதன் போதத்தை. நண்பே - நண்பனே 'நின் அருளை அடியேனுக்கு நீ நாணுமே அருளாய்' என்க. நாணுதல், இறைவன் தனது பெருமையையும் இவரது சிறுமையையும் கருதியாம். "நண்பே" என்றது இனவெதுகை.

602. பற்று, 'பத்து' எனத் திரிந்தது. "முத்தனை யானே" என்பது முதலியன வேறு தொடர். 'எத்தனைவகை யானும் உன்னைத் தொடர்ந்து' என்க. பிரிந்து ஆற்றேன் - பிரிந்து ஆற்றேனாவேன்; என்றது, 'பிரியேனாவேன்' என்றபடி.

603 காணும தொழிந்தேன் நின்திருப் பாதங்
கண்டுகண் களிகூரப்
பேணும தொழிந்தேன் பிதற்றும தொழிந்தேன்
பின்னைஎம் பெருமானே
தாணுவே அழிந்தேன் நின்னினைந் துருகுந்
தன்மைஎன் புன்மைகளாற்
காணும தொழிந்தேன் நீயினி வரினுங்
காணவும் நாணுவனே. 5

604 பாற்றிரு நீற்றெம் பரமனைப்
பரங்கரு ணையோடும் எதிர்ந்து
தோற்றிமெய் யடியார்க் கருட்டுறை யளிக்குஞ்
சோதியை நீதியிலேன்
போற்றியென் அமுதே எனநினைந் தேத்திப்
புகழ்ந்தழைத் தலறியென் னுள்ளே
ஆற்றுவனாக உடையவ னேஎனை
ஆவஎன் றருளாயே. 6

திருச்சிற்றம்பலம்

---

603. "காணும் அது" என்றற்றொடக்கத்தனவற்றுள், முற்றியலுகரமும் குற்றியலுகரம்போல உயிர்வருமிடத்துக் கெட்டது. 'நின் திருப்பாதத்தைக் காணும் அது' எனவும், 'உருகும் தன்மையைக் காணும் அது' எனவும், இயைக்க. "என் புன்மைகளால்" என்றது, 'ஒழிந்தேன்" என்றன பலவற்றிற்கு மாம். "வரினும்" என்ற உம்மை, எதிர்மறை. "காணவும்" என்ற உம்மை, இழிவு சிறப்பு. நாணுதல், முன்பெல்லாம் ஒழிந்தமை பற்றி.

604. பால் திருநீறு - பால்போலும் திருநீறு. எதிர்ந்து தோற்றி - முன்வந்து தோன்றி. அருள் துறை - அருளாகிய திசை. ஆற்றுவனாக - ஆற்றுவேனாதலின். "எம் பரமனை" முதலியன, முன்னிலைக்கண் படர்க்கை வந்த இடவழுவமைதி.

45. யாத்திரைப் பத்து

[இவ் யாத்திரை, சிவலோக யாத்திரை. திருப்பெருந் துறையில் இறைவன் இட்ட ஆணையின்படி தில்லை சென்று தங்கிப் பன்னாளும் தம்மை அவன்பால் அழைத்துக்கொள்ளு மாறு முறையிட்ட அடிகட்கு ஒருநாள் இறைவன் அவரைத் தம் உடனிருந்தாரோடும் தன்னிடம் அழைத்துக்கொள்ளும் குறிப்பினைத் தோற்றுவிக்க, அடிகள் மகிழ்ச்சியுற்று உடனிருந்த அடியார்களை நோக்கி அருளிச்செய்தது இப்பகுதி. எனவே, அடிகள் அருளியவற்றுள் இதுவே இறுதியானதாகும். ஆயினும், பல பத்துக்களோடும் இயைய இதனை இவ்விடத்து வைத்துக் கோத்தனர் முன்னோர். சுந்தரமூர்த்தி நாயனார் இறுதிக்கண் அருளிய, ''தலைக்குத் தலைமாலை'' என்னும் திருப்பதிகமும், பண்வகை பற்றி முதற்கண்ணே வைத்துக் கோக்கப்பட்டவா றறிக. இதனானே இதற்கு, 'அனுபவாதீதம் உரைத்தல்' எனக் குறிப்புரைத்தனர் முன்னோர். இறைவனோடு இரண்டறக் கலத்தலையே அவர், 'அதீதம்' என்றனர் என்க. அடியவர் பலரை நோக்கி அருளிச்செய் தமையால். அடிகளை முதல்வராகக் கொண்டு உடனிருந்த அடியார்களும் பலர் இருந்தனர் என்பது அறியப்படும். இது, தில்லையில் அருளிச்செய்யப்பட்டது என்பதே பதிப்புக்களிற் காணப்படுவது. இஃது அறுசீரடி விருத்தத்தால் ஆயது; அந்தாதியாக அமைந்தது.]

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

605 பூவார் சென்னி மன்னனெம்
புயங்கப் பெருமான் சிறியோமை
ஓவா துள்ளம் கலந்துணர்வாய்
உருக்கும் வெள்ளக் கருணையினால்
ஆவா என்னப் பட்டன்பாய்
ஆட்பட் டீர்வந் தொருப் படுமின்!
போவோம்; காலம் வந்ததுகாண்
பொய்விட் டுடையான் கழல்புகவே. 1

---

605. புயங்கம் - பாம்பு; 'ஒருவகை நடனம்' எனவும் கூறுப. சிறியோமை ஓவாது - சிறியேங்களை விட்டு நீங்காது.

606 புகவே வேண்டா புலன்களில் நீர் !
புயங்கப் பெருமான் பூங்கழல்கள்
மிகவே நினைமின் ! மிக்கவெல்லாம்
வேண்டா போக விடுமின்கள் !
நகவே ஞாலத் துள்புகுந்து
நாயே அனைய நமையாண்ட
தகவே யுடையான் தனைச்சாரத்
தளரா திருப்பார் தாந்தாமே. 2

607 தாமே தமக்குச் சுற்றமும் ;
தாமே தமக்கு விதிவகையும் ;
யாமார் ! எமதார் ! பாசமார் !
என்ன மாயம் ! இவைபோகக்
கோமான் பண்டைத் தொண்டரொடும்
அவன்தன் குறிப்பே குறிக்கொண்டு
போமா றமைமின் பொய்நீக்கிப்
புயங்கன் ஆள்வான் பொன்னடிக்கே. 3

என்னப்பட்டு - என்று இரங்கி அருள்செய்யப்பட்டு. காண், முன்னிலையசை. பொய் - நிலையில்லாத உடம்பு. 'ஆட்பட்டீர் பொய்விட்டு உடையான் கழல் புகக் காலம் வந்தது, போவோம் ; ஒருப்படுமின்' என வினை முடிக்க.

606. பின் இரண்டடிகளை முதலிற் கொள்க. மிக்க - எஞ்சியவை. நக - தன்னைத் தன் அடியார்கள் எல்லாம் நகைக்கும்படி. சார - சார்ந்தால், தாம் தாம் தளராது இருப்பார் - யாவரும் துன்பமின்றியிருப்பார்கள் ; இவ்விடத்து; 'ஆதலால்' என்னும் சொல்லெச்சம் வருவிக்க.

607. "தாமே" என்றது, பொதுமையில் மக்களைச் சுட்டியது. அதனால், 'அவரவரே அவரவர்க்கு உறவினரும், விதி முறையும் ஆவர்' என்பது, முதல் அடியின் பொருளாகும். சுற்றத்தையும், விதியையும் கூறவே, 'அவற்றின் மறுதலையாய பகையும், விலக்கும் அவரவர்க்கு அவரவரே' என்பதும் போந்தது. 'பிறப்பு வீடு என்னும் இருவகைப் பயன்களையும் முறையே தருவனவாகிய வினையையும், தவத்தையும் செய்து

அப்பயன்களைப் பெறுவார் அவரவரே' என்பதனை இவ்வாறு அருளிச்செய்தார்.

" பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல் "

என்னும் திருக்குறளும் (505.) இப்பொருளையுடையது.

இவ்வாறாயின், "ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே" (திருமுறை - 95. 3.) என்றாற்போலும் திருமொழிகட்குக் கருத்தென்னையோ என்றெழும் ஐயப்பாட்டின்கண் பலர் பலபடத் தம்கருத்தினைப் புலப்படுப்பர். ஆட்டுவிப்பான் ஒருவன் பிறனை ஆட்டுவிக்கின்றுழி, ஆடுவான், முதற்கண்ணே ஆட்டுவிப்பான் குறிப்பின்வழியே ஆடல் இலக்கணம் எல்லாம் நிரம்ப ஆடுதல் இல்லை ; முதற்கண் ஆட்டுவிப்பானது குறிப்பினின்றும் பெரிதும் வேறுபட ஆடிப் பின்னரே சிறிது சிறிதாக அவன் குறிப்பின் வழி நிற்கும் நிலையினைப் பெறுவன். அவ்வாறே ஈண்டுமாகலின், அதுபற்றி, '' தாமே தமக்குச் சுற்றமும், தாமே தமக்கு விதி வகையும் '' என்றற்கு இழுக்கென்னை என்க. இங்ஙனமல்லாக்கால், 'ஆட்டுவிப்பான்' எனவும், 'ஆடுவான்' எனவும் பொருள்களை இருவேறாகப் பகுத்துக் கூறுதற்குப் பயன் என்னையோ என்பது. எனவே, '' ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே'' என்றாற்போலும் திருமொழிகட்கு, 'ஆடுந்தன்மை யுடையானிடத்து அவ் வாடுதற்றொழில் ஆட்டுவிப்பானையின்றி அமையாதவாறுபோல, அறியுந்தன்மையும் செய்யுந் தன்மையும் உடைய உயிர்களிடத்து அவ்வறிதலும் செய்தலும், அறிவிப்பவனும், செய்விப்பவனுமாகிய இறைவனையின்றி அமையா' என்பதும், 'அவ்வாறாயினும், ஆடுதற்றொழிற்கண் உளவாகும் குறைவு நிறைவுகள் ஆடுவானுடையனவன்றி ஆட்டுவிப்பானுடையனவாகாமைபோல, அறிதல் செய்தலின் கண் உளவாகும் தீமை நன்மைகள் உயிரினுடையனவன்றி இறைவனுடையன ஆகா' என்பதும், 'அங்ஙனமாயினும், அறிவு செயல்களுக்கு இறைவனது அருள் இன்றியமையாமை பற்றி, அவற்றால் விளையும் தீமை நன்மைகளையும் அவனுடையன போல ஓரோவழி முகமனாகக் கூறுவர்' என்பதும், 'இறைவன் இவ்வாறு உயிர்களை அறிவித்தும், செய்வித்தும் நிற்பது அவற்றிற்கு எவ்வாற்றானும் நன்மை பயப்பதே யாதலின்,

608 அடியார் ஆனீர் எல்லீரும்
அகல விடுமின் விளையாட்டைக்
கடிசே ரடியே வந்தடைந்து
கடைக்கொண் டிருமின் திருக்குறிப்பைச்
செடிசே ருடலைச் செலநீக்கிச்
சிவலோ கத்தே நமைவைப்பான்
பொடிசேர் மேனிப் புயங்கன்தன்
பூவார் கழற்கே புகவிடுமே. 4

அவற்றை அவன் எஞ்ஞான்றும் அங்ஙனம் செயற்படுத்தி நிற்பன்' என்பதுமே கருத்தாதல அறிந்துகொள்க.

'யார்' என்பதன் மரூஉவாகிய 'ஆர்' என்பன பலவும், 'என்ன பொருள்' என்னும் கருத்தின. 'இறைவன் முன்னே, உயிர்களும், அவைகள் 'எமது' என்று பற்றுச்செய்தற்கு உரியனவும், அங்ஙனம் பற்றுச் செய்தற்கு ஏதுவாய் அவற்றை மறைத்து நிற்கும் பாசங்களும் பொருளோ' என்றதாம். என்ன மாயம் - இவையெல்லாம் எத்துணை மயக்கங்கள் உயிர், தன்னையே தலைமைப் பொருளாக நினைத்தல் மயக்க உணர்வே யாதல்பற்றி அதனையும், "மாயம்" என்றார். 'இவை போகப் போமாறு' என இயையும். 'பண்டைத் தொண்டர் முன்பே போயினராயினும், அவர் போயினவழியே போவோம்' என்பார், "பண்டைத் தொண்டரொடும் போமாறு" எனவும், அவன்றன் குறிப்பு, நம்மைப் பிரிதல் அன்று' என்பார், "அவன்றன் குறிப்பே குறிக்கொண்டு போமாறு எனவும் கூறினர். அமைமின் - ஒருப்படுங்கள். பொய், உலகியல்; 'புயங்கனும் ஆள்வானும் ஆகியவனது பொன்னடி' என்க.

608. விளையாட்டு - கவலையின்றிக் களித்திருத்தல். கடி - நறுமணம். கடைக்கொண்டு - கடைபோகக் கொண்டு. செடி - தீமை. பொடி - திருவெண்ணீறு. 'பொடிசேர் மேனிப் புயங்கன், நம்மை, முன்னர்ச் சிவலோகத்தே வைப்பான்; பின்னர்த் தன் கழற்கே புகவிடுவான்' என்க. "கழற்கு" என்றது உருபு மயக்கம். ஏகாரம், பிரிநிலை. "வைப்பான்; புகவிடும்" என்றவை, 'இவை நிகழ்தல் திண்ணம்' என்னும் பொருளன. அதனால், இறுதியிரண்டடிகளை முதலில்வைத்து.

609 விடுமின் வெகுளி வேட்கைநோய்
 மிகஒர் காலம் இனியில்லை
உடையான் அடிக்கீழ்ப் பெருஞ்சாத்தோ
 டுடன்போ வதற்கே ஒருப்படுமின்!
அடைவோம் நாம்போய்ச் சிவபுரத்துள்
 அணியார் கதவ தடையாமே
புடைபட் டுருகிப் போற்றுவோம்
 புயங்கன் ஆள்வான் புகழ்களையே. 5

610 புகழ்மின் தொழுமின் பூப்புனைமின்
 புயங்கன் தாளே புந்திவைத்திட்
டிகழ்மின் எல்லா அல்லலையும்
 இனியோர் இடையூ றடையாமே
திகழுஞ் சீரார் சிவபுரத்துச்
 சென்று சிவன்தாள் வணங்கிநாம்
நிகழும் அடியார் முன்சென்று
 நெஞ்சம் உருகி நிற்போமே. 6

"புகவிடும்" என்றதன்பின்னர், 'ஆதலின்' என்னும் சொல் லெச்சம் வருவித்துரைத்தல் கருத்தாயிற்று.

609. 'வெகுளியையும், வேட்கை நோயையும் விடுமின்;' எனவும், 'சிவபுரத்துள் அடைவோம்; அதற்குமுன்னே அதன் அணியார் கதவது அடையாமே, ஆள்வான் புகழ்களைப் போற்றுவோம்' எனவும் கொள்க. வேட்கை - ஆசை. மிக - நாம் உயர்வடைவதற்கு. சாத்து - கூட்டம். "அடைவோம்" என்றது, 'அடைப்பதற்குள் அடைவோம்' என்றதாம். புடைபட்டு - அதன் அருகிற்பொருந்தி. "புடைபட்டு உருகிப் போற்றுவோம்" என்றது, 'நுழைவோம்' என்றபடி.

610. 'புயங்கன் தாளே புந்தி வைத்திட்டுப் புகழ்மின்! தொழுமின்! பூப்புனைமின்!' எனவும், 'எல்லா அல்லலையும் இகழ்மின்' எனவும் கூட்டுக. முன்னைத் திருப்பாட்டிலும், இத்திருப்பாட்டிலும், "விடுமின்" முதலிய பயனிலைகளை முதலில் வைத்து அருளிச்செய்தமை, உணர்ச்சி மீதூர்வினலா தல் அறிக. அடையாமே - வாராதபடி; இது, "சென்று"

611 நிற்பார் நிற்கநில் லாவுலகில்
நில்லோம் இனிநாம் செல்வோமே
பொற்பால் ஒப்பாந் திருமேனிப்
புயங்கன் ஆள்வான் பொன்னடிக்கே
நிற்பீர் எல்லாந் தாழாதே
நிற்கும் பரிசே ஒருப்படுமின்
பிற்பால் நின்று பேழ்கணித்தாற்
பெறுதற் கரியன் பெருமானே. 7

என்பதனோடு முடியும். "நிற்போம்" என்றதும், "அடியார் ஆனீர் எல்லாரும்" என்ற திருப்பாட்டில், "வைப்பான் புகவிடும்" என்றன போல, 'நிற்றல் திண்ணம்' என்னும் பொருளது. அதனால், இத்திருப்பாட்டிலும் "இனியோர் இடையூ றடையாமே" என்றது முதலாகத் தொடங்கி, "நிற்போம்" என்றதன்பின், 'ஆதலின்' என்னும் சொல்லெச்சம் வருவித்து மேலே கூட்டியுரைத்தல் கருத்தாயிற்று. ஆகவே, புகழ்தல் முதலியன, இதுகாறும் பொதுப்படச் செய்துவந்தாற் போல்வனவாகாது, சிவபெருமான் தம்மைத் தன்பால் வருவிக்கத் திருவுளம்பற்றிய திருவருள் நோக்கிச் சிறப்புறச் செய்வன வாதல் விளங்கும்.

611. பொருள்கோள் : 'நில்லா உலகில் நிற்பார் நிற்க; நாம் இனி நில்லோம்; ஆள்வான் பொன்னடிக்கே செல்வோம்; பிற்பால் நின்று பேழ்கணித்தால், பெருமான் பெறுதற்கரியன்; அதனால், நிற்பீர் எல்லாம் நிற்கும் பரிசே தாழாது ஒருப் படுமின்'

பொற்பு - அழகு. 'அழகால் தன்னையே - தான் ஒப்பாம் திருமேனி' என்க. பால் - பகுதி; அது காலப் பகுதியை நோக்கிற்று. பேழ்கணித்தல் - கழிந்ததற்கு இரங்கல். நிற்பீர் - ஆள்வான் பொன்னடியே நோக்கிநிற்பீர். 'அங்ஙனம் நிற்கும் பரிசுக்கே தாழாது ஒருப்படுமின்' என்க. ஒருப்படுதல் - இசைதல். பொன்னடியையே பொதுவாக நோக்கிநிற்பினும், அதன்கிழ்ச் செல்லுதற்குச் சிறப்பாக ஒருப்படச் சிறிது தாழ்க்கினும், அவன் திருக்குறிப்பைப் பெற்ற காலம் கழிந்தொழியு மாதலின், "தாழாதே ஒருப்படுமின்" என்றார்.

612 பெருமான் பேரா னந்தத்துப்
பிரியா திருக்கப் பெற்றீர்காள் !
அருமா லுற்றுப் பின்னை நீர்
அம்மா அழுங்கி அரற்றாதே
திருமா மணிசேர் திருக்கதவந்
திறந்த போதே சிவபுரத்துத்
திருமா லறியாத் திருப்புயங்கன்
திருத்தாள் சென்று சேர்வோமே. 8

613 சேரக் கருதிச் சிந்தனையைத்
திருந்த வைத்துச் சிந்திமின்
போரிற் பொலியும் வேற்கண்ணாள்
பங்கன் புயங்கன் அருளமுதம்
ஆரப் பருகி ஆராத
ஆர்வங் கூர அழுந்துவீர்
போரப் புரிமின் சிவன்கழற்கே
பொய்யிற் கிடந்து புரளாதே. 9

---

612. "இருக்கப்பெற்றீர்கள்" என்றது, 'இருக்க விரும்புதலைப் பெற்றீர்கள்' என்றவாறு. "திருக்கதவம் திறந்த போதே" என்றதனால், இறைவன் அடிகளைத் தன்பால் வரப் பணித்தமை பெறப்பட்டது. "சிவபுரத்துத் திருத்தாள் சென்று சேர்வோம்" என்றதனால், சிவலோகஞ் சேர்தலையும் திருவடி கூடுதலாக அடிகள் அருளிச்செய்தல் பெறப்பட்டது.

613. இடையிரண்டடிகளை முதலிற் கொள்க.

போரிற் பொலியும் வேல், சிவந்த நிறத்தொடு நிற்கும். அழுந்துவீர் - பேரின்பத்தில் அழுந்துதற்குரியவர்களே. போர, 'போத' என்பதன் மரூஉ. இதனை, 'போதும்' என்பதனை, 'போரும்' என்னும் வழக்கால் உணர்க. போத - மிகவும், புரிமின் - விரும்புங்கள். "கழற்கே" என்பதனை, 'கழலையே' எனத் திரிக்க. பொய் - பொய்யான உலக வாழ்க்கை.

614 புரள்வார் தொழுவார் புகழ்வாராய்
இன்றே வந்தாள் ஆகாதீர்
மருள்வீர் பின்னை மதிப்பாரார்
மதிஉட் கலங்கி மயங்குவீர்
தெருள்வீ ராகில் இதுசெய்மின்
சிவலோ கக்கோன் திருப்புயங்கன்
அருள்ஆர் பெறுவார் அகலிடத்தே
அந்தோ ! அந்தோ ! அந்தோவே. ! 10

திருச்சிற்றம்பலம்

---

614. புரளுதலும், அன்பினால் என்க. "பூதலமதனிற் புரண்டு விழ்ந்து" என்றார் முன்னரும் (கீர்த்தித் - 134.). விரையாது நிற்றல் நோக்கி, "இன்றே வந்து ஆள் ஆகாதீர்" என்றார். ஆகாதீர் - ஆகாதிருப்பவர்களே. இதன்பின், 'இவ் வாறிருப்பின்" என்பது வருவித்து, 'பின்னை மருள்வீர்; உம்மை மதிப்பார் ஆர்! மதி உட் கலங்கி மயங்குவீர்!' என்க. 'சிவலோகக் கோன், திருப்புயங்கன் அருள், அகலிடத்தே ஆர் பெறுவார்! அந்தோ! இஃது அரும்பெறற் பேறு என்பதனைத் தெருள்வீராகில், இதனையே (அவன் அழைக்கும் பொழுதே அவனை அடைதல் ஒன்றையே) செய்மின்' என்க. 'அகலிடத்தே ஆர் பெறுவார்' என்றதனால், அடிகள் உலகத்தார் அறிய இறைவனை அடைந்தமை பெற்றாம்.

மின்னினு நிலைமை யில்லா விழுப்பொருள் யாவும் வேண்டேன்
உன்னடி யணைந்து நாயே னுறுபவ மொழித்தல் வேண்டும்
என்னையின் றடிமைக் கொள்வா யெம்முயிர்க் கிறைவா வென்று
முன்னுற வணங்கி நின்றார் முகமெலாங் கண்ணீர் வார. 78

இவ்வகை புகன்று முன்னோன் முன்னுற விரங்கி நிற்பத்
திவ்விய தரமேயான செய்திய ரென்று நாடி
அவ்வடி யவரின் மிக்கா ரொருவரிவ் வடிமை தன்னை
வெவ்வினை யகற்றி யாள வேண்டுமென் றிறைஞ்சி நின்றார். 79

— திருவாதவூரடிகள் புராணம்.

46. திருப்படையெழுச்சி

[திருப்படை - தொண்டர் படை. அதனது எழுச்சியைக் கூறும் பகுதி இது. இது, முன்வந்த யாத்திரைப் பத்தினை அடுத்து அருளிச்செய்ததாகும். யாத்திரைப் பத்தினால் அடியார் அனைவரையும் அழைத்துத் திரட்டிக்கொண்ட அடிகள், அவர்கள் பின்னரும் மயங்காமைப் பொருட்டு இதனை அருளிச்செய்து அருளாண்மையை எழுப்பிக்கொண்டு, அவர்களோடு இறைவன் திருவருளிற் கலந்தார் என்க. இதற்கு, 'பிரபஞ்சப் போர்' என முன்னோர் குறிப்புரைத்ததும், இது பற்றி. வெண்பா யாப்பினால் இயன்றவற்றை இறுதிக்கண் ஒருங்கு வைத்துக் கோத்தனராதலின், அளவிற் சிறிதாயினும் முன்னை யாப்புக்களோடு இயைய இதனை அவற்றிற்கு முன்வைத்துக் கோத்தனர். 'பத்து' என்றாலும், 'பதிகம்' என்றாலும் கூறுமையின், உள்ளவாறு, இஃது இரண்டு திருப்பாட்டுக்களான் இயன்றது என்றே கொள்ளற்பாற்று. இது, தில்லையில் அருளிச்செய்யப் பட்டது என்பதே பதிப்புக்களிற் காணப்படுவது.]

கலி விருத்தம்

திருச்சிற்றம்பலம்

615 ஞானவாள் ஏந்தும்ஐயர் நாதப் பறையறைமின்!
மானமா ஏறும்ஐயர் மதிவெண் குடைகவிமின்!
ஆனநீற் றுக்கவசம் அடையப் புகுமின்கள்!
வானஊர் கொள்வோம்நாம் மாயப்படை வாராமே. 1

---

615. "மாயப் படை வாராமே" என்றதை முதற்கண் கூட்டுக.

அறியாமையும், மயக்க உணர்வும் ஆகிய பகையை அழிப்பது மெய்யறிவே யாதலின், அவ்வாற்றால் அவற்றைப் போக்குகின்ற இறைவனுக்கு, 'ஞானமே வாள்' என்று அருளினார். 'இறைவனுக்கு நாதமே பறை' என முன்னர் அருளியவற்றைக் காண்க (கீர்த்தித். 108. திருத்தசாங்கம். 8). அதனை அறைதலாவது, "நமச்சிவாய வாழ்க" என்றற் றொடக்கத்தன போல, வாழ்த்து வகையானும், வணக்க வகையானும், வெற்றி

616 தொண்டர்காள் தூசிசெல்லிர்! பத்தர்காள் சூழப்போகீர்!
ஒண்டிறல் யோகிகளே பேரணி உந்தீர்கள்!
திண்டிறல் சித்தர்களே கடைக்கூழை சென்மின்கள்!
அண்டர்நா டாள்வோம்நாம் அல்லற்படை வாராமே. 2

திருச்சிற்றம்பலம்

வகையானும் சிவநாமங்களை வானளாவ முழக்குதல். மான மா - பெருமை யமைந்த குதிரை; இஃது அடிகள் தமக்கு வந்து அருள்செய்த வகைபற்றிக் கூறியது. மதிவெண்குடை, சிலேடை. வெண்மை கூறினமையின், மதி, மலந்தீர்ந்த உயிரினது அறிவு; அதனுள் இறைவன் சோதிக்குட் சோதியாய்த் தோன்றலின், அதனை அவற்குக் குடையாகக் கூறினார். ஆன - பொருந்திய. 'கவசம் புகுமின்கள்' என இயையும். அடைய - முழுதும். 'இவ்வாற்றால் நாம் வானஊரைத் தப்பாது கொள்வோம்' என்க. வானம் - சிவலோகம் மாயப் படை - நிலையாமையாகிய படை.

616. இங்கும், "அல்லற்படை வாராமே" என்றதை முதலிற் கூட்டுக.

தொண்டர்கள் - கைத்தொண்டு செய்வோர்; விரைந்து செயலாற்றுவதே தூசிப்படையாதலின், அதற்குத் தொண்டர்களை அமைத்தார். தூசிப் படை - முன்னணிப் படை. பத்தர்கள் - அன்புமிக்கவர்கள். இறைவனது புகழைப்பாடுதலிலும், கேட்டலிலும், விரித்துரைத்தலிலும் ஆர்வம் மிக்கவர்கள். இவர்களை இருமருங்கும் அமைத்தார், படைஞர்கள் உள்ளம் அயராது விறுகொண்டிருத்தற்கு. யோகிகள் - சிவயோகத்தில் இருப்பவர்கள்; இவர்கள் மனத்தைத் தம்வழி நிறுத்தும் வன்மை யுடையராதலின், "ஒண் திறல் யோகிகள்" என்றார். இவ்வாற்றால் இவரை இறுதி வெற்றிக்குரிய நடுப் படையாகிய பெரிய அணிகளில் நிறுத்தினார். 'அணியை உந்திர்கள்' என்றது, 'அணி என்னும் முறையை நிகழ்த்துங்கள்' என்றபடி. சித்தர்கள் - இறைவனது அருளால் வியத்தகு செயல்கள் செய்து அவ்வருளின் பெருமையை உலகிற்கு

உணர்த்துபவர்கள். இவர்களைப் பின்னணிப் படையில் நிறுத்தினர், பின்னிடுவார் உளராயின், அவரது தளர்ச்சியைப்போக்கி முன்செல்லச் செய்தற் பொருட்டு. கடைக் கூழை - பின்னணிப் படை. தூசிப் படைதானே வெல்லற்பாலதாயினும், ஏனைப் படைகளும் முறைப்படி அமைத்தல் செயற்பாலதாகலின், இங்ஙனம் அனைத்தையும் வகுத்தமைத்தார் என்க. தொண்டர் முதலாக இங்குக் கூறப்பட்டோர் அனைவரும் ஞானநிலைக்கண் நிற்பவர்களேயன்றிப் பிறரல்லர் என்க. அண்டர் - சிவபெருமானர்; அவரது நாடு சிவலோகம். '' அண்டர்நாடு ஆள்வோம் நாம்'' என்றதற்கு, மேல், '' வானவூர் கொள்வோம் நாம்'' என்றதற்கு உரைத்தவாறு உரைக்க. அல்லற் படை - துன்பமாகிய படை.

கருப்புக நினையார் தம்மேற் கண்ணருள் செய்து நெஞ்சிற்
பரப்பற மிதித்தல்வேண்டி யெடுத்தபொற் பாதங் கொண்டு
திருப்புனை மறையோர் போற்றுந் தில்லையம் பலத்தே நின்ற
அருட்பரா னந்த வாரி யாதலி னதற்கி சைந்தார். 80

அத்தகு பகலோன் முன்ன ரலர்செயு மம்பு சாதம்
ஒத்தவர் தம்மை நாடி யுன்னையின் றடிமை கொள்ள
இத்தலத் தணைந்தோ நீமுன் னியற்றிய தவத்தி னாலே
சித்தம திரங்கல் வேண்டா மெனத்திரு வாய்ம லர்ந்தார். 81

வந்துநான் வறுமை யுற்றேன் மாற்றென திலம்பா டென்று
சிந்தையா குலமுற் றோன்கைச் செழும்பொரு ளீதல் செய்வார்க்
கிந்தநா ளளிக்க வேண்டு மெனவிதி யின்மை யாலே
அந்தநா ளிந்நா ளாக வடிமைகொண் டருள வெண்ணி. 82

அத்தகு தொண்டர்க் கெல்லா மதிபரா மவரை நோக்கி
இத்தவ முடையோ னெய்து மிடரொழித் தாழ்வ திந்நாள்
வித்தக விதற்கு வேண்டுங் கருமநீ விரைவிற் செய்கென்
றுத்தம வடிவங் காட்டு முண்மையா ருரைத்தல் செய்தார். 83

— திருவாதவூரடிகள் புராணம்.

47. திருவெண்பா

[வெண்பா யாப்பினால் ஆகிய பகுதி, 'திருவெண்பா' எனப்பட்டது. இதற்குப் பொருள்பற்றிப் பெயரிடாமையின், இது, பல்வகைப் பொருள்பற்றியும் வருவதாகும். 'அணைந்தோர் தன்மை' என்ற முன்னோர் குறிப்பும் இதனை ஒருவாறு விளக்குவதேயாம். அணைந்தோர் - சிவனை இவ்வுலகத்தில் பெற்றோர். இவரை, 'சீவன் முத்தர்' என்ப. வெண்பா யாப்பினால் ஆயவற்றை இறுதிக்கண் வைக்கக் கருதி இங்குச் சேர்த்தனர். திருத்தசாங்கமும் வெண்பா யாப்பினாலாயிற்றாயினும், பொருளியைபு பற்றி அதனைக் குயிற்பத்தின் பின்னாகக் கோத்தனர். இது, திருப்பெருந்துறையில் அருளிச்செய்யப் பட்டது என்பதே பதிப்புக்களில் காணப்படுவது. இது, திருப்பாட்டுக்களையுடையது.]

நேரிசை வெண்பா

திருச்சிற்றம்பலம்

617 வெய்ய வினையிரண்டும் வெந்தகல மெய்யுருகிப்
பொய்யும் பொடியாகா தென்செய்கேன் — செய்ய
திருவார் பெருந்துறையான் தேனுந்து செந்தீ
மருவா திருந்தேன் மனத்து. 1

---

617. "செய்ய" என்றது முதலாகத் தொடங்கியுரைக்க

மெய் - வடிவம். பொய் - பொய்யான உடல். 'வினை கெட, உடல் தன்வடிவு கரைந்து பொடியாயிற்றில்லை; யான் என்செய்வேன்' என்க. செய்ய - செப்பமாகிய (திருப்பெருந் துறை). 'பெருந்துறையானாகிய தேன் உந்து செந்தீயை மனத்து மருவாதிருந்தேன்' என்க. 'இவ்வாறிருந்தும் இறவாதிருக்கின்றேன்' என்றபடி.

618 ஆர்க்கோ அரற்றுகோ ஆடுகோ பாடுகோ
பார்க்கோ பரம்பரனே என்செய்கேன் — தீர்ப்பரிய
ஆனந்த மாலேற்றும் அத்தன் பெருந்துறையான்
தானென்பார் ஆரொருவர் தாழ்ந்து. 2

619 செய்த பிழையறியேன் சேவடியே கைதொழுதே
உய்யும் வகையின் உயிர்ப்பறியேன் — வையத்
திருந்துறையுள் வேல்மடுத்தென் சிந்தனைக்கே கோத்தான்
பெருந்துறையில் மேய பிரான். 5

---

618. இங்கும், "தீர்ப்பரிய" என்றது முதலாகத் தொடங்கி உரைக்க. "பரம்பரனே" என்றது, இயல்பானே முன்னிற்கும்.

"ஆர்க்கோ" என்றது முதலிய ஐந்தும், ஐயத்தின்கண் வந்த ஓகாரம் ஏற்ற, குவ்வீற்றுத் தன்மை யொருமை வினை முற்றுக்கள். ஆர்த்தல் - புகழ்தல். அரற்றுதல் - அன்பினால் வாய்விட்டழுதல். பார்த்தல் - உற்றுநோக்குதல். என்செய் கேன்" என்றது, களிப்பு மிகுதிவால் வந்த செயலறுதி. தீர்ப்பரிய மால் - நீக்குதற்கரிய பித்து. ஆனந்த மால் - பேரின்பப் பித்து. தான், அசைநிலை. "ஆரொருவர்" என்றதன்பின், 'அவரை' என்பது எஞ்சிநின்றது. தாழ்ந்து - வணங்கி.

619. 'பெருந்துறையில் மேயபிரான், வையத்து இருந்து உறையுள் இருந்த வேலை மடுத்து என் சிந்தனைக்கே கோத்தான்; யான் செய்த பிழையறியேன், உய்யும் வகையறியேன்' உயிர்ப்பும் அறியேன், என வினைமுடிக்க. இது, ஞானத்தை அருளினமையை, பழிப்பதுபோலப் புகழ்ந்தது.

உய்யும் வகை - பிழைக்கும் வழி; அதனின்றும் தப்பு மாறு. உயிர்ப்பு - ச்வாசித்தல்; தற்போதம் எழுதல். "உறை" என்றது, திரோதான சத்தியையும், "வேல்" என்றது, சிவஞானத்தையும் என்க. சிந்தனைக்கு, உருபு மயக்கம். சிந்தனை - மார்பு; மனம். மடுத்துக்கோத்தான் - நுழைத்து உருவச்செய்தான்.

620 முன்னை வினையிரண்டும் வேரறுத்து முன்னின்றான்
பின்னைப் பிறப்பறுக்கும் பேராளன் — தென்னன்
பெருந்துறையில் மேய பெருங்கருணை யாளன்
வருந்துயரந் தீர்க்கும் மருந்து. 4

621 அறையோ அறிவார்க் கனைத்துலகும் ஈன்ற
மறையோனும் மாலும்மால் கொள்ளும் — இறையோன்
பெருந்துறையுள் மேய பெருமான் பிரியா
திருந்துறையும் என்நெஞ்சத் தின்று. 5

622 பித்தென்னை ஏற்றும் பிறப்பறுக்கும் பேச்சரிதாம்
மத்தமே யாக்கும்வந் தென்மனத்தை — அத்தன்
பெருந்துறையான் ஆட்கொண்டு பேரருளால் நோக்கும்
மருந்திறவாப் பேரின்பம் வந்து. 6

---

620. பொருள்கோள்:- 'பெருங்கருணையாளனாகிய இறைவன், முன்னின்றான்; பேராளன்; துயரந் தீர்க்கும் மருந்து'

பேராளன் - பெருமையுடையவன். வரும் துயரம் - இனி வருகின்ற துன்பங்கள். ''துயரம் தீர்க்கும் மருந்து'' என்றது, ஏகதேச உருவகம்.

621 'அறிவார்க்கு அறையோ' என மாற்றி, இறுதிக்கண் வைத்துரைக்க. அறையோ - அறைகூவல் விடுகின்றேன். மால் கொள்ளும் - காணாமல் மயங்குகின்ற. இன்று - இந்நாள். இறைவன் தம் நெஞ்சத்து உறைதலை அறிவுடையோர் எளிதில் உடன்படார் என்று கருதி 'அவர்க்கு அறையோ' என்றார்.

622. ''அத்தன்'' என்றது முதலாகத் தொடங்கி உரைக்க.

'என்னைப் பித்தேற்றும்' எனவும் 'என் மனத்தைப் பேச்சரிதாம் மத்தம் ஆக்கும்' எனவும் மாற்றுக. ''பித்து'' என்றது, அன்பை. மத்தம் - களிப்பு. ''அத்தன், பெருந்துறையான், மருந்து பேரின்பம்'' என்றவை, ஒருபொருள்மேல் வந்த பல பெயர்கள்

623 வாரா வழியருளி வந்தெனக்கு மாறின்றி
ஆரா அமுதாய் அமைந்தன்றே — சீரார்
திருத்தென் பெருந்துறையான் என்சிந்தை மேய
ஒருத்தன் பெருக்கும் ஒளி. 7

624 யாவர்க்கும் மேலாம் அளவிலாச் சீருடையான்
யாவர்க்குங் கீழாம் அடியேனை — யாவரும்
பெற்றறியா இன்பத்துள் வைத்தாய்க்கென் எம்பெருமான்
மற்றறியேன் செய்யும் வகை. 8

625 மூவரும் முப்பத்து மூவரும் மற்றொழிந்த
தேவருங் காணுச் சிவபெருமான் — மாவேறி
வையகத்தே வந்திழிந்த வார்கழல்கள் வந்திக்க
மெய்யகத்தே இன்பம் மிகும். 9

---

623. 'ஒளி அமைந்தன்று' என வினைமுடிக்க. அருளி - கொடுத்து "எனக்கு" என்றதை, 'என்கண்' எனத் திரிக்க. 'என்கண் வந்து மாறின்றி' என்க. மாறின்றி - நீங்காது நின்று. அமைந்தன்று - அமைந்தது. ஏகாரம், தேற்றம்.

624. "சீருடையான்" என்றதும், விளி. "எம்பெருமான்" என்றது, 'தலைவன்' என்னுந் துணையாய் நின்று, "என் எம்பெருமான்" என வந்தது. மற்று - மாறு; கைம்மாறு. 'மற்றுச் செய்யும் வகை அறியேன்' என இயையும்.

625. மூவர் - மும்மூர்த்திகள் முப்பத்து மூவர் - உருத்திரர் பதினொருவர்; ஆதித்தர் பன்னிருவர்; மருத்துவர் இருவர்; வசுக்கள் எண்மர். மற்றொழிந்த தேவர், இவர்தம் பரிவாரங்களும், இந்திரன் முதலிய திசைக்காவலரும். இனி, பதினெண் கணங்களுட் சில கூட்டத்தினரும் தேவர் எனப்படுவர் எனக். மா - குதிரை. மெய்யகத்தே - உடம்பினிடத்திற்றானே உடம்பின்கண் இன்பம் மிகுதல் கூறவே; உயிரின்கண் இன்பம் மிகுதல் சொல்லவேண்டாவாயிற்று.

626 இருந்தென்னை ஆண்டான் இணையடியே சிந்தித்
திருந்திரந்து கொள்நெஞ்சே எல்லாந் — தருங்காண்
பெருந்துறையின் மேய பெருங்கருணை யாளன்
மருந்துருவாய் என்மனத்தே வந்து. 10

627 இன்பம் பெருக்கி இருளகற்றி எஞ்ஞான்றுந்
துன்பந் தொடர்வறுத்துச் சோதியாய் — அன்பமைத்துச்
சீரார் பெருந்துறையான் என்னுடைய சிந்தையே
ஊராகக் கொண்டான் உவந்து. 11

திருச்சிற்றம்பலம்

---

626. "பெருந்துறையின் மேய" என்றது தொடங்கி உரைக்க.

"ஆண்டான்" என்றதனை முற்றாக்கி, 'அவன் இணையடியே' என எடுத்துக்கொண்டு உரைக்க "கொள்" என்றது, துணைவினை. 'கொண்டால், எல்லாம் தரும்' என்க. காண், முன்னிலையசை. மருந்துருவாய் - அமுதமாய்.

627. **பொருள்கோள் :-** 'பெருந்துறையான், சோதியாய் இருளகற்றித் துன்பம் தொடர்வு அறுத்து, அன்பமைத்து இன்பம் பெருக்கி, என்னுடைய சிந்தையே உவந்து எஞ்ஞான்றும் ஊராகக் கொண்டான்.

தொடர்வு - தொடர்தல்.

முன்னவர் புகன்ற வாறு முயல்குவ மென்றே யந்த
மன்னுறு தவத்தின் மிக்கார் வகைமலர்த் தெரிய லாலும்
பொன்னிடை யழுத்தி முத்தம் புனைந்தபல் பட்டி னாலும்
அந்நெடுங் காவி னூடங் கானபூங் கோயில் செய்தே. 84

செய்தநற் கோயி லூடு சிறந்தவா சனமுஞ் சேர்த்து
மெய்தகு தொண்டர்க் கெல்லா மிக்கவ ரிறைவற் சார்ந்து
கைதவ முடையார் நெஞ்சிற் கனவிலுங் காணா நில்லா
மைதரு களத்தாய் கோட்டஞ் சமைந்தது வாய்ப்ப வென்றார். 85

— திருவாதவூரடிகள் புராணம்.

48. பண்டாய நான்மறை

[இது, முதற்குறிப்பாற் பெற்ற பெயர். எனவே, இதுவும் பொருளாற் பெயர் பெறாது, சொல்லாற் பெயர் பெற்றதாதலின், இதன்கண்ணும் பல பொருளும் கலந்து வருதல் பெறப்பட்டது. 'அனுபவத்திற்கு ஐயமின்மை உரைத்தல்' என்னும் முன்னோர் குறிப்பு, இரண்டாவதும், ஏழாவதுமாய் நின்ற வெண்பாக்களின் பொருளைச் சிறப்பாகக்கொண்டு உரைத்தது. ஏனைய திருப்பாட்டின் பொருளும் ஒருவாற்றான் இதற்கு இயைந்து நிற்கும். இது, திருப்பெருந்துறையில் அருளிச்செய்யப்பட்டது என்பதே பதிப்புக்களில் காணப்படுவது. இதன்கண் ஏழு திருப்பாட்டுக்களே காணப்படுகின்றன. இப்பாட்டுக்கள் அந்தாதியாய் வருவன.]

நேரிசை வெண்பா

திருச்சிற்றம்பலம்

628 பண்டாய நான்மறையும் பாலணுகா மாலயனுங்
கண்டாரு மில்லைக் கடையேனைத் — தொண்டாகக்
கொண்டருளுங் கோகழிஎங் கோமாற்கு நெஞ்சமே
உண்டாமோ கைம்மா றுரை. 1

629 உள்ள மலமூன்றும் மாய உகுபெருந்தேன்
வெள்ளந் தரும்பரியின் மேல்வந்த — வள்ளல்
மருவும் பெருந்துறையை வாழ்த்துமின்கள் வாழ்த்தக்
கருவுங் கெடும்பிறவிக் காடு. 2

---

628. பண்டையதாய பொருளை, 'பண்டு' என்றார். 'அவன்பால் அணுகா' எனவும், 'அவனைக் கண்டார் இல்லை' எனவும், செய்யுட்கண் முன்வரற்பாலனவாய சுட்டுப் பெயர்கள் வருவிக்க. "கண்டாரும்" என்ற உம்மை, இழிவு சிறப்பு. "இல்லை" என்றதன்பின், 'அங்ஙனமாக' என்பது வருவிக்க.

629. உள்ள மலம் - அறிவின்கண் பற்றிய மலம். மாய-கெட. 'பிறவிக் காடு கருவும் கெடும்' என மாற்றுக. கருவுங் கெடுதலாவது, முதலும் இல்லாது அழிதல்.

630 காட்டகத்து வேடன் கடலில் வலைவாணன்
நாட்டிற் பரிபாகன் நம்வினையை — வீட்டி
அருளும் பெருந்துறையான் அங்கமல பாதம்
மருளுங் கெடநெஞ்சே வாழ்த்து. 3

631 வாழ்ந்தார்கள் ஆவாரும் வல்வினையை மாய்ப்பாருந்
தாழ்ந்துலகம் ஏத்தத் தருவாருஞ் — சூழ்ந்தமரர்
சென்றிறைஞ்சி ஏத்தும் திருவார் பெருந்துறையை
நன்றிறைஞ்சி ஏத்தும் நமர். 4

632 நண்ணிப் பெருந்துறையை நம்மிடர்கள் போயகல
எண்ணி எழுகோ கழிக்கரசைப் — பண்ணின்
மொழியாளோ டுத்தர கோசமங்கை மன்னிக்
கழியா திருந்தவனைக் காண். 5

---

630. காட்டகத்து வேடனாயது, அருச்சுனன் பொருட்டு, கடலில் வலைவாணனாயது, நந்திபெருமான், உமையம்மை இவர்களது சாபந்தீர்த்து ஏற்றருளுதற்பொருட்டு. பரி பாகன் (குதிரை செலுத்துவோன்) ஆயது அடிகட்கு அருளுதற்பொருட்டு. "காடு" என்றதில் குறிஞ்சியும் அடங்குதலின், 'நானிலத்தும் தோன்றி அருள்செய்பவன்' என அருளிச்செய்தவாறு. நெஞ்சே அருளும் பெருந்துறையான், வேடன்; வலைவணன்; பரிபாகன்; அவன் அம் கமல பாதம் வாழ்த்து' என வினைமுடிக்க. மருள் - மயக்கம்; திரிபுணர்வு. "மருளும்" என்ற உம்மை, முன்போந்த, "வினை" என்றதைத் தழுவி நின்ற எச்சம்.

631. 'உலகம் தாழ்ந்து ஏத்த' என்க. தாழ்தல் - வணங்குதல்,

632. 'நம் இடர்கள் போயகல எண்ணிப் பெருந்துறையை நண்ணி எழு கோகழிக்கரசை' என மாறிக் கூட்டுக. எழு - எழுந்தருளியிருந்த. "கோகழிக்கரசை" என்றது, 'அப்பெருமானை' என்னும் பொருளதாய் நின்றது. 'கோகழிக்கரசனும், உத்தரகோசமங்கை மன்னிக் கழியாதிருந்தவனும் ஆகிய பெருமானைக் காண்' என்பது பொருள். 'காணின், நலம் பெறலாம்' என்பது குறிப்பெச்சம்.

633 காணுங் கரணங்கள் எல்லாம்பே ரின்பமெனப்
பேணும் அடியார் பிறப்பகலக் — காணும்
பெரியானை நெஞ்சே பெருந்துறையில் என்றும்
பிரியானை வாயாரப் பேசு. 6

634 பேசும் பொருளுக் கிலக்கிதமாம் பேச்சிறந்த
மாசின் மணியின் மணிவார்த்தை — பேசிப்
பெருந்துறையே என்று பிறப்பறுத்தேன் நல்ல
மருந்தினடி என்மனத்தே வைத்து 7

திருச்சிற்றம்பலம்

---

633. காணும் கரணங்கள் எல்லாம் - அறிதற்குரிய கருவிகள் யாவும். பேரின்பமெனப் பேணும் அடியார் - பேரின்பத்தை நுகரும் கருவிகளேயாகும் வண்ணம் குறிக்கொண்டு நிற்கும் அடியார்களது; என்றது, 'பிராரத்த வினை நுகர்ச்சி தோன்றும்வழி அதனைத் தம் செயலும் பிறர் செயலுமாகக் கொண்டு நுகராது. முதல்வன் செயலேயாகக்கொண்டு நுகரும் அடியார்கள்' என்றபடி. அங்ஙனம் நுகரும்வழிப் பெற்ற சிற்றின்பந்தானே பேரின்பமாய் விளையுமாகலின் (திருவுந்தியார் - 33), அவர்க்கு ஆகாமியம் இல்லையாம். அஃது இல்லையாகவே பிறப்பும் இல்லாதொழியும். அங்ஙனம் செய்வது திருவருளேயாகலின், 'அவரது பிறப்பு அகலக் காணும் பெரியான்' என்று அருளிச்செய்தார். காணுதல் - நோக்குதல். பேரின்பம் நுகர்தற்கருவிகளை, பேரின்பம்" என்றார். இவ்வனுபவ நிலைக்கு இத்திருப்பாட்டினைச் சிவஞானமாபாடியத்துள் எடுத்துக்காட்டினமை காண்க (சூ. 11, அதி. 1.)

634. பேசும் பொருளுக்கு - பேசுதற்குக் கொள்ளப்படும் பொருளின் இயல்பிற்கு. "பொருள்" என்றது அதன் இயல்பிற் காயிற்று. 'இலக்கியம்' என்பது 'இலக்கிதம்' என வந்தது. 'இலக்கிதமாம் மணி' என இயையும். எனவே, 'மக்கள் தம் வாயாற் பேசுதற்கு உரிய பொருள் இறைவனே' என்றவாறாயிற்று. "பெருந்துறையே என்று பிறப்பறுத்தேன்" என்றதை இறுதிக்கண் கூட்டுக. பிறவியாகிய தீராப் பெரும் பிணியை நீக்கும் மருந்து ஆதலின், "நல்ல மருந்து,' என்று அருளிச்செய்தார். "அடி" என்றது, மருந்திற்கும் ஏற்புடையதாமாறு அறிக.

49. திருப்படையாட்சி

['திருப்படை' என்பது, 'தொண்டர்படை' எனத் திருப்படை யெழுச்சிக்கண்ணே கூறப்பட்டது. அப்படையை இறைவன் குற்றங்கள் பலவும் போக்கிக் குணங்கள் பலவும் ஆக்கி ஆளும் திறம் இதன்கண் கூறப்படுகின்றது. இதனானே இதற்கு, 'சிவோபாதி ஒழிதல்' எனக் குறிப்புரைத்தனர் முன்னோர். உபாதி - குற்றம். இதன்கண், "ஆகாதே" என வருவன பலவும், 'ஆகும்' எனற்பாலதனை, வலியுறுத்தற் பொருட்டு எதிர்மறை முகத்தான் அருளிச்செய்தார் என்றே கொள்ளப்படும். இது, தில்லையில் அருளிச்செய்யப்பட்டது என்பதே பதிப்புக்களில் காணப்படுவது. இதன்கண் எட்டுத் திருப்பாடல்களே காணப்படுகின்றன. அனைத்தும் பன்னிரு சீரடி விருத்தங்கள். பதினொரு சீரின் மிக்கவற்றைப் பொதுவே, 'ஆசிரிய விருத்தம்' என வழங்குப. அவற்றை, 'பெருங் கழி நெடில் விருத்தம்' எனவும், பன்னிருசீரிற் குறைந்தவற்றை, 'குறுங் கழி நெடில் விருத்தம்' எனவும் வழங்குவாரும் உளர். இது முதலாக வரும் மூன்று பகுதிகளும் பின்னர்க் கிடைத்துக் கிடைத்தவாறே இறுதிக்கண் கோக்கப்பட்டனபோலும்! அல்லாக்கால், அச்சோப்பதிகம் ஏனைப் பதிகங்களோடும், ஏனைய இரண்டும் வெண்பாக்கட்கு முன்னர் ஏற்புடைய இடத்திலும் கோக்கப்பட்டிருக்கும் என்க.]

பன்னிருசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

635 கண்க ளிரண்டும் அவன்கழல் கண்டு
களிப்பன ஆகாதே
காரிகை யார்கள்தம் வாழ்வில்என் வாழ்வு
கடைப்படும் ஆகாதே
மண்களில் வந்து பிறந்திடு மாறு
மறந்திடும் ஆகாதே
மாலறி யாமலர்ப் பாதம் இரண்டும்
வணங்குதும் ஆகாதே

---

635. இதன்கண் எல்லாத் திருப்பாட்டுக்களிலும், ஈற்றடியை முதலிற்கொள்க.

பண்களி கூர்தரு பாடலொ டாடல்
பயின்றிடு மாகாதே
பாண்டிநன் னாடுடை யான்படை யாட்சிகள்
பாடுது மாகாதே
விண்களி கூர்வதோர் வேதகம் வந்து
வெளிப்படு மாகாதே
மீன்வலை வீசிய கானவன் வந்து
வெளிப்படு மாயிடிலே. 1

ஆகாது - உண்டாகாது; நிகழாது. "ஆகாதே" என்றது, பன்மை ஒருமை மயக்கம். இவ்வாறு பின்னும் வருவன காண்க. ஏகாரம், எதிர்மறுத்துரைத்தற்கண் வந்த வினைப்பொருட்டு (தொல். சொல். 246.). இது, பின்வருவன பலவற்றிற்கும் ஒக்கும். வாழ்வில் - வாழ்வுபோல. கடைப்படும் - சுதந்திர மின்றி இறைவன் வழிப்படும. இதனைப் பெயரெச்சமாக்கி, 'அது' என்னும் சொல்லெச்சம் வருவித்து முடிக்க. இன்னோ ரன்ன வினைமுற்றுக்கள் பலவும், இங்குத் தொழிற்பெயர்ப் பொருள் தந்தன என்று போவாரும் உளர். பிறந்திடுமாற்றை மறத்தல், இனி அது நிகழாது என்னும் துணிவினாலாம். பாதம் வணங்குதலாக இங்கு அருளிச்செய்வன பலவும், 'நேர்படக் கண்டு வணங்குதலாகிய அனுபவ வணக்கத்தையே என்க. அவற்றுள் இது, பாதம் மாலறியா அருமையுடைமையை நினைந்து அருளிச் செய்தது. "வணங்குதும்" என்றதன்பின், 'அஃது' என்னும் தோன்றா எழுவாய் வருவித்து, "ஆகாதே" என்றதனை வேறு தொடராக்கி உரைக்க. இவ்வாறும் வருவன பின்னும் உள. 'களிகூர்தரு பண் பாடலொடு' என மாறுக. பயின்றிடும் - பயிலப்பட்டிடும். 'பாண்டிநன்னாடுடையானாகிய சிவபிரான், தன்தொண்டர்களாகிய படையை ஆளும் திறங்கள் பாடுதும்' என்க. விண் - விண்ணோர். "களி" என்றது, வியப்பினை. வேதகம் - வேறுபடுத்தும் பொருள்; அஃது, இங்குத் திருவருள். அது வெளிப்படுதல் - தனது செயலைப் புலப்படுத்தல். விண்ணோர் வியத்தல், மண்ணோர், தம்மினும் மேலோராய் மாறினமை குறித்தாம். வலைவாணரை அடிகள் வேடர் எனவும் குறித்தலை, "கிராத வேடமொடு" (கீர்த்தித்- 15.) என்றவிடத்தும் காண்க.

636 ஒன்றினெ டொன் றுமோரைந்தி னேடைந்தும்
உயிர்ப்பறு மாகாதே
உன்னடி யார்அடி யார்அடி யோமென
உய்ந்தன வாகாதே
கன்றை நினைந்தெழு தாயென வந்த
கணக்கது வாகாதே
காரண மாகு மனாதி குணங்கள்
கருத்துறு மாகாதே
நன்றிது தீதென வந்த நடுக்கம்
நடந்தன ஆகாதே
நாமுமெ லாம்அடி யாருட னேசெல
நண்ணுது மாகாதே
என்றுமென் அன்பு நிறைந்த பராவமு
தெய்துவ தாகாதே
ஏறுடை யான்எனை ஆளுடை நாயகன்
என்னுள் புகுந்திடிலே. 2

---

636. ஒன்றினெடு ஒன்றும் - ஒன்றாகிய உயிரோடு பொருந்துகின்ற. ஐந்தினெடு ஐந்து - ஞானேந்திரியங்களும், கன்மேந்திரியங்களும். உயிர்ப்பு அறும் - செயலறும். 'அடியா ரடியோம்' என்றது, "அடியா ரடியா ரடியோம்" என்றார், 'தமது தகுதி அத்துணையதே' என்றற்கு. என - என்று சொல்லி. உய்ந்தன - உய்ந்த செயல்கள்; இது, துணிவினால் எதிர்காலம் இறந்தகாலம் ஆயவாறு; இவ்வாறு பின்னும் வருவன உள. வந்தவன் இறைவன். கணக்கு - நிலைமை. அது, பகுதிப்பொருள் விகுதி. காரணமாகும் - எப்பொருட்கும் காரணன் ஆகின்ற. அனாதி - ஆதியில்லாதவன்; இறைவன். 'அவனது குணங்கள் எட்டு' என்பதைப் பின்னர் (7) அருளிச் செய்தல் காண்க. கருத்து உறும் - எம் உள்ளத்தில் பொருந்தும். "இது" என்றது, தாப்பிசையாய், முன்னரும் சென்று இயையும். நடுக்கம் - துன்பம்; அது, துன்பத்திற்கு ஏதுவாகிய விருப்பு வெறுப்புக்களைக் குறித்தது. நடந்தன - விலகுவன. செல - இறையுலகத்திற்குச் செல்ல. நண்ணுதும் - தொடங்குவோம். அன்பு நிறைந்த - அன்பு சென்று நிறைந்ததாகிய பராவமுது - எங்கும் நிறைந்த இன்பம்.

637 பந்த விகார குணங்கள் பறிந்து
மறிந்திடு மாகாதே
பாவனை யாய கருத்தினில் வந்த
பராவமு தாகாதே
அந்த மிலாத அகண்டமும் நம்முள்
அகப்படு மாகாதே
ஆதி முதற்பர மாய பரஞ்சுடர்
அண்ணுவ தாகாதே
செந்துவர் வாய்மட வாரிட ரானவை
சிந்திடு மாகாதே
சேலன கண்கள் அவன்திரு மேனி
திளைப்பன ஆகாதே
இந்திர ஞால இடர்ப்பிற வித்துயர்
ஏகுவ தாகாதே
என்னுடை நாயக னாகிய ஈசன்
எதிர்ப்படு மாயிடிலே. 3

---

637. பந்த விகார குணங்கள் - கட்டுண்டற்கு ஏதுவாகிய வேறுபட்ட குணங்கள்; அவை முக்குணங்கள். பறிந்து - தொடர்பு அற்று. மறிந்திடும் - வந்தவழியே நீங்கும். பாவனை யாய கருத்து - பாவிப்பதாகிய உள்ளம். "வந்த பராவமுது" என்றதனை, 'பராவமுது வந்தது' என மாற்றி யுரைக்க. வந்தது - அனுபவமாயது. அந்தம் - அழிவு. அகண்டம் - பூரணப் பொருள். உம்மை, சிறப்பு; 'அது, நம்முள் அகப் பட்டுத் தோன்றும்' என்க. ஆதிமுதற் பரமாய பரஞ்சுடர் அண்ணுவது - எப்பொருட்கும் முதலும், எல்லா முதன்மையும் உடையதும் ஆகிய மேலான ஒளியை நாம் அணுகுவது. தம் கண்களை, "சேலன கண்கள்" என்றார், அவன் திருமேனி அழகு எம்மைப் பெண்மைப் படுத்தியது என்றற்கு. 'இந்திர ஞாலம் போலும் பிறவி' என்க. இது, கடிதின் மறைந்தும் தோன்றியும் வருதல் பற்றி வந்த உவமை. "இடர்" என்றது, பிறவியது தன்மையையும், "துயர்" என்றது அதனால் விளையும் நிலையையும் கூறியவாறு.

638 என்னணி யார்முலை ஆகம் அளைந்துடன்
இன்புறு மாகாதே
எல்லையில் மாக்கரு ணைக்கடல் இன்றினி
நாடுது மாகாதே
நன்மணி நாதம் முழங்கியென் உள்ளுற
நண்ணுவ தாகாதே
நாதன் அணித்திரு நீற்றினை நித்தலும்
நண்ணுவ தாகாதே
மன்னிய அன்பரில் என்பணி முந்துற
வைகுவ தாகாதே
மாமறை யும்அறி யாமலர்ப் பாதம்
வணங்குது மாகாதே
இன்னியற் செங்கழு நீர்மலர் என்தலை
எய்துவ தாகாதே
என்னை யுடைப்பெரு மான்அருள் ஈசன்
எழுந்தரு ளப்பெறிலே. 4

---

638. ஆகம் - இறைவனது மார்பு. அளைந்து - கலந்து; இதனை, 'அளைய' எனத் திரிக்க. உடன் - ஒருங்கு. 'யான் பெண்மை யுடையேனாய் அவனொடு கலந்தாற்போலும் இன்பத்தை அடையும் அத்தன்மை ஆகாதே' என்பது முதலடியின் பொருள். இதுவும், மேல், "சேலன கண்கள் அவன் திருமேனி திளைப்பன" என்றாற்போல, இறைவன் திருமேனியது அழகைச் சிறப்பித்ததாம். "நன்மணி .... நண்ணுவது" என்றது, 'யோகநிலை தானே கைவரும்' என்றதாம். நித்தலும் "நண்ணுவது" என்றது, நண்ணுதலாகிய அதன் பயன்மேல் நின்றது; அப்பயனாவது மும்மலங்களும் நீங்கப் பெறுதல். வைகுவது - பொருந்துவது. அடிகள் சிவபிரானுக்குச் செங்கழு நீர் மாலை கூறுவராகலின் (கீர்த்தித் - 113, 115.) அது நேரே தமக்குக் கிடைக்கப்பெறும் என்றார். பெறில் - அப்பேற்றினை யாம் பெற்றால்.

639 மண்ணினில் மாயை மதித்து வகுத்த
மயக்கறு மாகாதே
வானவ ரும்அறி யாமலர்ப் பாதம்
வணங்குது மாகாதே
கண்ணிலி காலம் அனைத்தினும் வந்த
கலக்கறு மாகாதே
காதல்செ யும்அடி யார்மனம் இன்று
களித்திடு மாகாதே
பெண்ணலி ஆணென நாமென வந்த
பிணக்கறு மாகாதே
பேரறி யாத அனேக பவங்கள்
பிழைத்தன ஆகாதே
எண்ணிலி யாகிய சித்திகள் வந்தெனை
எய்துவ தாகாதே
என்னை யுடைப்பெரு மான்அருள் ஈசன்
எழுந்தரு ளப்பெறிலே. 5

---

639 இறைவன் மதித்து வகுத்த மாயா காரியங்களை, மாயையே மதித்து வகுத்ததுபோல அருளிச்செய்தார். இங்கு, பாதம், வானவரும் அறியாத அருமையுடைமையை நினைந்து அருளிச் செய்தார். கண் இலி - கண்ணோட்டம் இல்லாத கூற்றுவன். "ஆட்பார்த் துழலும் அருளில் கூற்று" (நாலடி - 20) என்றார் பிறரும். காலம் - இறுதிக் காலம். வந்த கலக்கு - வந்ததனால் உண்டாகிய கலக்கம். அடியார் மனம் களித்தல், தாம் பெற்ற பேறு தம் தமர்க்கும் கிடைத்தமை பற்றி. 'பிறர்' என்பதனை, "பெண் அலி ஆண்" என வகுத்தோதினார். உணர்வு அங்ஙனம் வேறுபடுதல் பற்றி. பிணக்கு - ஞானத்திற்கு மாறாய உணர்வு. பேர் அறியாத - இன்ன என அறிந்து சொல்ல இயலாத. இனி பேர்தல், (நீங்குதல்) அறியாத என்றுமாம். பவங்கள் - பிறப்புக்கள். பிழைத்தன - தப்பிய செயல்கள். பிறவியினின்றும் நீங்குதல் ஒன்றேயாயினும், பல பிறவிகட்கும் காரணமாய வினைகளை நோக்கப் பலவாம் என்பது பற்றி, 'பிழைத்தன' என்றார். சித்திகள் தாமே வருவன என்க.

640 பொன்னிய லுந்திரு மேனிவெண் ணீறு
பொலிந்திடு மாகாதே
பூமழை மாதவர் கைகள் குவிந்து
பொழிந்திடு மாகாதே
மின்னியல் நுண்ணிடை யார்கள் கருத்து
வெளிப்படு மாகாதே
வீணை முரன்றெழும் ஓசையில் இன்பம்
மிகுத்திடு மாகாதே
தன்னடி யார்அடி என்தலை மீது
தழைப்பன ஆகாதே
தானடி யோம்உட னேஉய்ய வந்து
தலைப்படு மாகாதே
இன்னியம் எங்கும் நிறைந்தினி தாக
இயம்பிடு மாகாதே
என்னைமுன் ஆளுடை ஈசன்என் அத்தன்
எழுந்தரு ளப்பெறிலே. 6

641 சொல்லிய லாதெழு தூமணி யோசை
சுவைதரு மாகாதே
துன்னொன என்னுளம் மன்னிய சோதி
தொடர்ந்தெழு மாகாதே
பல்லியல் பாய பரப்பற வந்த
பராபர மாகாதே
பண்டறி யாதப ரானுப வங்கள்
பரந்தெழு மாகாதே

---

640. திருமேனி, இறைவனுடையது. பொலிந்திடும் - கண்முன் விளங்கும். 'பூமழையைப் பொழிந்திடும்' என்க. நல்லன நிகழுங்கால், தேவரும், முனிவரும் பூமழை பொழிந்து வாழ்த்துவர் என்க. "கருத்து" என்றது, வஞ்சனையை. தான் - இறைவன். உடனே - ஒருசேர. தலைப்படுதல் - அளவளாவுதல். இயம் - வாச்சியம்.

641. சொல் இயலாது - சொல் நிகழ்ச்சி அற்றவிடத்து. 'இயலாதவழி' என்பது, 'இயலாது' எனத் திரிந்தது.

வில்லியல் நன்னுத லார்மயல் இன்று
    விளைந்திடு மாகாதே
  விண்ணவ ரும்அறி யாத விழுப்பொருள்
    இப்பொரு ளாகாதே
எல்லையி லாதன எண்குண மானவை
    எய்திடு மாகாதே
  இந்து சிகாமணி எங்களை ஆள
    எழுந்தரு ளப்பெறிலே. 7

தூமணி ஓசை - திருச்சிலம்பின் நாதம் இது நிராதார யோகத்திற் கேட்கப்படும் என்பதனை,

> " ஓசையெலாம் அற்றால் ஒலிக்கும் திருச்சிலம்பின்
> ஓசை வழியேசென் றொத்தொடுங்கின் "

என்னும் திருக்களிற்றுப் படியான் உணர்க (33). துண்ணென - விரைவாக. பல்லியல்பு - மாயாகாரியங்களான் விளைவன. பராபரம் - மேலும் கீழுமாய் (எங்குமாய்) நிற்கும் பொருள். இங்கும், 'பராபரம் வந்தது' என மாற்றி உரைக்க. பர அனுபவங்கள் - மேலான அனுபவங்கள். 'நன்னுதலார் மயல் போலும் மயல் எனக்கு விளைந்திடும்' என்றபடி. இஃது இறைவனிடத்தே தமக்கு உளதாகும் காதலைப் புலப்படுத்தியது. இப்பொருள் - இங்கு வந்து நிற்கும் பொருள். எல்லை இலாதன - அழிவில்லாத. எண் குணங்கள், 'தன் வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கை யுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், முடிவிலாற்றலுடைமை, பேரருளுடைமை, வரம்பிலின்பமுடைமை' என்னும் இவை. இவை இறைவனுடைய அருட் குணங்களாகும்.

> " எட்டு வான்குணத் தீசன்எம் மான்றனை "
>
> (திருமுறை - 5-89-8)

எனவும்,

> " இறையவனை மறையவனை எண்குணத்தி னானை "

எனவும் (திருமுறை - 7.40.3.) போந்த திருமொழிகளையும் காண்க.

642 சங்கு திரண்டு முரன்றெழும் ஓசை
தழைப்பன ஆகாதே
சாதி விடாத குணங்கள் நம்மோடு
சலித்திடு மாகாதே
அங்கிது நன்றிது நன்றெனு மாயை
அடங்கிடு மாகாதே
ஆசை யெலாம்அடி யாரடி யோம்எனும்
அத்தனை யாகாதே
செங்கயல் ஒண்கண் மடந்தையர் சிந்தை
திளைப்பன ஆகாதே
சீரடி யார்கள் சிவானு பவங்கள்
தெரிந்திடு மாகாதே
எங்கும் நிறைந்தமு தூறு பரஞ்சுடர்
எய்துவ தாகாதே
ஈறறி யாமறை யோன்எனை ஆள
எழுந்தரு ளப்பெறிலே. 8

திருச்சிற்றம்பலம்

"கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை"

எனத் திருவள்ளுவரும் கூறினார். இந்து சிகாமணி - சந்திரனைத் தலைமணியாகச் சூடியவன்.

642. "சங்கு திரண்டு........தழைப்பன" என்றதும், மேல், "நன்மணி நாதம் முழங்கி" (4) என்றாற்போல, யோகப் பயனைக் கூறியதாம். சாதி விடாத குணங்கள் - சாதிபற்றி நீங்காதிருக்கின்ற குணங்கள். நம்மோடு - நம்பால். சலித்திடும் - தளர்ச்சியெய்தும். அங்கு - அவை சலித்த விடத்து. "இது, இது" என வந்த சுட்டுக்கள் வேறு வேறு பொருளைச் சுட்டின. 'அங்கது' எனப்பாடம் ஓதுதலே சிறக்கும். மாயை - மயக்கம். "அத்தனை" என்றது, 'அதற்குமேற் செல்லாது' என்றவாறு. சிந்தை திளைத்தல் - எண்ணத்தை நன்குணர்தல். தெரிந்திடும் - நம் அறிவிலும நன்கு விளங்கும்,

50. ஆனந்த மாலை

['ஆனந்தத்தை வேண்டும் பாமாலை ஆனந்த மாலை' என்க. 'ஆனந்தமாவது சிவானந்தமே' என்பது வெளிப்படை. 'சிவானந்த விருப்பம்' என்னும் முன்னோர் குறிப்பும் இதுவேயாதல் அறிக. 'மாலை' என்றமையால், பத்துத் திருப்பாட்டுக்களேனும் இதன்கண் இருந்திருத்தல் வேண்டும். இப்பொழுது காணப்படுபவை ஏழு திருப்பாட்டுக்களே. இவை அனைத்தும் அறுசீரடி விருத்தங்கள். இது, தில்லையில் அருளிச் செய்யப்பட்டது என்பதே பதிப்புக்களில் காணப்படுவதும்.]

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

643 மின்னே ரனைய பூங்கழல்க
ளடைந்தார் கடந்தார் வியனுலகம்
பொன்னே ரனைய மலர்கொண்டு
போற்றா நின்றார் அமரரெல்லாம்
கன்னே ரனைய மனக்கடையாய்க்
கழிப்புண் டவலக் கடல்வீழ்ந்த
என்னே ரனையேன் இனியுன்னைக்
கூடும் வண்ணம் இயம்பாயே. 1

---

643. மின் ஏர் அனைய - மின்னலினது அழகையொத்த. உலகம், மண்ணுலகம். பொன் ஏர் அனைய மலர் - பொன்னினது அழகையொத்த பூக்கள்; இவை கற்பகத் தருக்களில் உள்ளவை. அமரர் போற்றியது, அடியார்கள் அடைந்த பெரும்பேற்றினை. 'கடையேனாய்' என உயர்திணையாக ஓதற்பாலதனை, "கடையாய்" என அஃறிணையாக ஓதினார், இழிவு பற்றி. கழிப்புண்டு- உன்னால் நீக்கப்பட்டு. "என்னேர் அனையேன்" என்றது, இழிவினால் எனக்கு ஒப்பார் பிறரின்றி, என்னையே ஒத்த யான்' என்றபடி.

644 என்னால் அறியாப் பதம்தந்தாய்
யான தறியா தேகெட்டேன்
உன்னால் ஒன்றுங் குறைவில்லை
உடையாய் அடிமைக் காரென்பேன்
பன்னாள் உன்னைப் பணிந்தேத்தும்
பழைய அடிய ரொடுங்கூடா
தென்னா யகமே பிற்பட்டிங்
கிருந்தேன் நோய்க்கு விருந்தாயே. 2

645 சீல மின்றி நோன்பின்றிச்
செறிவே யின்றி அறிவின்றித்
தோலின் பாவைக் கூத்தாட்டாய்ச்
சுழன்று விழுந்து கிடப்பேனை
மாலுங் காட்டி வழிகாட்டி
வாரா உலக நெறியேறக்
கோலங் காட்டி ஆண்டானைக்
கொடியேன் என்றோ கூடுவதே. 3

---

644. அறியா - அறிதற்கியலாத. பதம் - நிலை. 'அஃது அறியாதே கெட்டேன்' என்றது, 'மழக் கை இலங்கு பொற் கிண்ணத்தின் அருமையை அம்மழவு அறியாததுபோல (96,) அறியாது கெட்டேன்' என்றபடி. "உன்னால் ஒன்றும் குறை வில்லை" என்றதனை, "தந்தாய்" என்றதன் பின்னர்க் கூட்டுக. 'உனக்கு அடிமை செய்தற்கு நான் யார் (என்ன உரிமை யுடையேன்)' என்க. இவ்வாறன்றி. 'உன் அடிமை யாகிய எனக்குத் துணை யார்' என்பது பொருளாயின், இதனை இறுதிக்கண் கூட்டுக. மேலைப் பொருளே பொருளாயவழி, 'என்செய்கேன்' எனக் குறிப்பெச்சம் வருவித்து முடிக்க.

645. செறிவு - உறவு; அன்பு. சீலம் முதலிய நான்கும், சரியை முதலிய நான்குமாக உரைப்பாரும் உளர். மால் - அன்பு. வழி - ஞானம், "மாலுங் காட்டி, வழி காட்டி" என்றதனை, "கோலங் காட்டி" என்றதன் பின்னர்க் கூட்டுக. "ஏற ஆண்டான்" என இயையும். கோலம் - திருமேனி. ஏனையவற்றொடு நோக்க 'ஆண்டாயை' என்பதே பாடம் என்றல் கூடும்.

646 கெடுவேன் கெடுமா கெடுகின்றேன்
கேடி லாதாய் பழிகொண்டாய்
படுவேன் படுவ தெல்லாம்நான்
பட்டாற் பின்னைப் பயனென்னே
கொடுமா நரகத் தழுந்தாமே
காத்தாட் கொள்ளுங் குருமணியே
நடுவாய் நில்லா தொழிந்தக்கால்
நன்றோ எங்கள் நாயகமே. 4

647 தாயாய் முலையைத் தருவானே
தாரா தொழிந்தாற் சவலையாய்
நாயேன் கழிந்து போவேனோ
நம்பி யினித்தான் நல்குதியே
தாயே யென்றுன் தாளடைந்தேன்
தயா நீ என்பால் இல்லையே
நாயேன் அடிமை உடனாக
ஆண்டாய் நான்தான் வேண்டாவோ? 5

---

646. 'கெடும் இயல்புடையேனாகிய யான், அங்ஙனம் கெடுமாற்றானே கெடுகின்றேன்; அஃது என் குற்றமாயின், இக்குற்றமுடையேனை ஆட்கொண்டாய் என்ற பழியைக் கேடு சிறிதும் இல்லாத நீ பெற்றாயாவாய்; நான் படவேண்டுவனவாய துன்பங்கள் அனைத்தையும் பட்டுக்கிடப்பேனாயின், அதனால் உனக்கு உளதாம் பயன் யாது?' என்க. நடுவாய் நிற்றல் - ஆட்கொண்ட அடிமையை எவ்வாற்றாலேனும் அணைத்துக்கொள்ளல் வேண்டும் என்னும் முறைமைக்கண் வழுவாது நிற்றல்.

647. தாயாய் - உயிர்கட்கெல்லாந் தாயாய்நின்று. முலையைத் தருவானே - அவள் பாலூட்டுதல்போல நலம் செய்பவனே. சவலையாய் - சவலைப் பிள்ளை - தாய் இருந்தும் அவள் பாலை உண்ணப் பெறாத பிள்ளை. தயா - தயவுடையவன்; ஆகுபெயர். இதன்பின், 'தயாவாய்' என ஆக்கம் வருவிக்க. 'இல்லையே' என்னும் ஏகாரம், தேற்றம். 'நாயேனாகிய அடிமை உன் உடனாம்படி முன்பு ஆண்டாய்; இப்பொழுது நான் வேண்டாவோ' என்க.

648 கோவே யருள வேண்டாவோ?
கொடியேன் கெடவே அமையுமே?
ஆவா என்று விடில்என்னை
அஞ்சேல் என்பார் ஆரோதான்!
சாவா ரெல்லாம் என்னளவோ
தக்க வாறன் றென்றாரோ?
தேவே, தில்லை நடமாடி,
திகைத்தேன் இனித்தான் தேற்றாயே. 6

649 நரியைக் குதிரைப் பரியாக்கி
ஞால மெல்லாம் நிகழ்வித்துப்
பெரிய தென்னன் மதுரையெல்லாம்
பிச்ச தேற்றும் பெருந்துறையாய்
அரிய பொருளே! அவிநாசி
அப்பா! பாண்டி வெள்ளமே!
தெரிய அரிய பரஞ்சோதீ!
செய்வ தொன்றும் அறியேனே. 7

திருச்சிற்றம்பலம்

---

648. கோவே - தலைவனே. கெடவே - கெடுதல்தான். அமையுமே - தகுமோ. சாவார் - உலகில் வாளா இறப்பவர். என் அளவோ - எனது நிலைமையினரோ; 'உன்னால் ஆட்கொள்ளப்பட்டவர்களோ' என்றபடி. 'அல்லராதலின், அவர்களைப்போலவே நானும் இறத்தல் பொருந்துவதோ' என்பது குறிப்பு. 'அவ்வாறு இறந்தால், உனது அருட்செயலுக்குப் பொருந்தும் முறைமை அன்று என்று உயர்ந்தோர் கூறமாட்டாரோ' என்க.

649. பரி - ஊர்தி. அவிநாசி, கொங்குநாட்டுத் தலம். இனி, 'அழிவில்லாதவன் என்றுமாம். பாண்டி - பாண்டிநாடு. வெள்ளம் - கருணை வெள்ளம்.

51. அச்சோப் பதிகம்

['அச்சோ' என்னும் முடிபினையுடைய பத்துப் பாடல் களின் தொகுதி அச்சோப் பதிகம். 'அச்சோ' என்பது வியப்பிடைச் சொல். முன் வந்த அதிசயப் பத்து, அற்புதப் பத்துக்களில் இறைவனது திருவருளின் பெருமையே கூறினர்; இதன்கண் தாம் பெற்ற பேறு பலர்க்குப் பெறுதற்கரிதாதலையே கூறுகின்றார். இதனையே பிறிதோராற்றால், 'அனுபவவழி அறியாமை' எனக் குறித்தனர் முன்னோர். அஃதாவது, 'தமக்குக் கிடைத்த ஆனந்தத்தை அனுபவிக்க வழி அறியாமை' என்றனர். 'அனுபவிப்பார் ஒருவரையும் காணாமையின், அனுபவிக்கும் வழியை அறிந்திலர்' என்றனர். இதன்கண் உள்ள பாடலை, 'கலிவிருத்தம்' என்றனர். எனினும், நாலடித் தரவுக் கொச்சகக் கலிப்பா' என்றலே பொருத்தமுடையதாம். இதன்கண் ஒன்பது திருப்பாட்டுக்களே உள்ளன. மற்றொரு பாட்டுப் பிற்காலத்தில் ஓர் ஏட்டிற் காணப்பட்டது எனக் காட்டினர் உளர்.]

கலி விருத்தம்

திருச்சிற்றம்பலம்

650 முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணஞ்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட
அத்தன்எனக் கருளியவா ரூர்பெறுவார் அச்சோவே! 1

---

650. முயலுதல் - செயல்செய்தல். மூர்க்கரோடு சேர்ந்து செய்யும் செயல் தீதாம் என்பது சொல்லவேண்டா. பாறும் வண்ணம் - அழியும்படி. சித்தம் - உள்ளம்; என்றது, அறிவை. 'தானாக்கி' என்பதனை' 'சிவமாக்கி' என்றார். ஆளுதல் - தன் இன்பத்தை நுகரச் செய்தல். 'அருளிய முறைமையை இவ் வுலகில் யார் பெறுவார்' என்க. அச்சோ - இது வியப்பு.

651 நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்
சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும்வண்ணம்
குறியொன்றும் இல்லாத கூத்தன்தன் கூத்தையெனக்
கறியும் வண்ணம் அருளியவா றார்பெறுவார் அச்சோவே! 2

652 பொய்யெல்லாம் மெய்யென்று புணர்முலையார் போகத்தே
மையலுறக் கடவேனை மாளாமே காத்தருளித்
தையலிடங் கொண்டபிரான் தன்கழலே சேரும்வண்ணம்
ஐயன்எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே! 3

653 மண்ணதனிற் பிறந்தெய்த்து மாண்டுவிழக் கடவேனை
எண்ணமிலா அன்பருளி எனையாண்டிட் டென்னையுந்தன்
சுண்ணவெண்ணீ றணிவித்துத் தூய்நெறியே சேரும்
[வண்ணம்
அண்ணல்எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே! 4

654 பஞ்சாய அடிமடவார் கடைக்கண்ணால் இடர்ப்பட்டு
நெஞ்சாய துயர்கூர நிற்பேன்உன் அருள்பெற்றேன்
உய்ஞ்சேன்நான் உடையானே அடியேனை வருகஎன்
றஞ்சேலென் றருளியவா றார்பெறுவார் அச்சோவே! 5

---

651. குறி - அறிதற்குரிய அடையாளம்; அவை, உருவும் பெயரும் முதலாயின. 'அவற்றுள் ஒன்றும் இல்லாத என்றபடி. தன் கூத்து - தனது திருவிளையாட்டு; அஃது அனைவரையும் தானாகச் செய்யும் செயல். அறியும் வண்ணம் அருளியது, அஃது அனுபவமாம்படி செய்தது.

652. பொய் - நிலையாதனவாய இவ்வுலகப் பொருள்கள். "கழலே" என்னும் ஏகாரம், பிரிநிலை. "ஐயன்" என்றதனை, "பிரான்" என்றதன்பின் கூட்டுக.

653. எண்ணம் இலா அன்பு - நான் எதிர்பாராத அன்பு.

654. பஞ்சு ஆய - பஞ்சு பொருந்திய. நெஞ்சு ஆய - உள்ளத்திற் பொருந்திய. கூர - மிக்கெழ. 'நீ எனக்கு அருளியவாறு ஆர் பெறுவார்' என்க.

655 வெந்துவிழும் உடற்பிறவி மெய்யென்று வினைபெருக்கிக்
கொந்துகுழல் கோல்வளையார் குவிமுலைமேல் விழ்வேனைப்
பந்தமறுத் தெனையாண்டு பரிசறஎன் துரிசுமறுத்
தந்தமெனக் கருளியவா ருர்பெறுவார் அச்சோவே! 6

656 தையலார் மையலிலே தாழ்ந்துவிழக் கடவேனைப்
பையவே கொடுபோந்து பாசமெனுந் தாமுருவி
உய்யுநெறி காட்டுவித்திட் டோங்காரத் துட்பொருளை
ஐயனெனக் கருளியவா ருர்பெறுவார் அச்சோவே! 7

657 சாதல்பிறப் பென்னுந் தடஞ்சுழியில் தடுமாறிக்
காதலின்மிக் கணியிழையார் கலவியிலே விழுவேனை
மாதொருகூ றுடையபிரான் தன்கழலே சேரும்வண்ணம்
ஆதியெனக் கருளியவா ருர்பெறுவார் அச்சோவே! 8

---

655. 'உடலாகிய இப்பிறவி' எனச் சுட்டு வருவிக்க. பரிசு - கைம்மாறு. துரிசு - குற்றம். அந்தம் - அருள வேண்டும் அளவு.

656. பையக்கொடுபோந்து-மெல்லத் தன்பால் வருவித்து; இது குதிரை வாங்குதல் முன்னிலையாகத் திருப்பெருந்துறையை அடையச் செய்தமையைக் குறித்தல் கூடும். தாம் - பூட்டு; விலங்கு. உருவி - நீக்கி. "தாள், தாம்' என வந்தது என்பாரும் உளர்; அதற்குப் 'பாசத்தின்' என்னாது, "பாசம் எனும்" என்ற பாடம் ஏலாமை அறிக. ஓங்காரத்து உட்பொருள், உயிர்களின் அறிவுக்கு அறிவாய் நின்று அறிவிப்பவன்தானே (இறைவனே) என்னும் உண்மை. அருளியது, அனுபவமாக உணரச் செய்தது.

657. தடஞ்சுழி - பெரிய சுழல் "ஆதி" என்றதனை, "பிரான்" என்றதன் பின் கூட்டுக.

658 செம்மைநலம் அறியாத சிதடரொடுந் திரிவேனை
மும்மைமலம் அறுவித்து முதலாய முதல்வன்தான்
நம்மையுமோர் பொருளாக்கி நாய்சிவிகை ஏற்றுவித்த
அம்மையெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே ! 9

திருச்சிற்றம்பலம்

திருவாசகம் முற்றிற்று.

---

658. செம்மை நலம் - செப்பத்தின் நன்மை. செப்பமாவது, திருவருள்நெறி, இதற்கு மாறுவது, கொடுமை (கோணல்) அது, தற்போத நெறி. சிதடர் - குருடர்; ஞானம் இல்லாதவர் என்றபடி. "மும்மை" என்றது, 'மூன்று' என்னுந் துணை நின்றது, "தெரிமாண் தமிழ் மும்மைத் தென்னம் பொருப்பன்" (பரிபாடல்) என்புழிப்போல, முதலாய முதல்வன் - முதல்வர்க்கெல்லாம் முதல்வனாகிய முதல்வன்; ஏற்றுவித்த - ஏற்றுவித்தாற்போன்ற செயலைச் செய்த. அம்மை - தாய் போல்பவன்.

ஆயிடைக் குடபால் வெற்பி லாதவன் கரந்து ஞாலம்
பாயிருள் பரந்த பின்னர்க் கடிகையோர் பதினைந் தாகி
மேயநல் லுயிர்க ளெல்லாம் விழித்துயில் பயிலுங் காலைத்
தூயதொண் டர்க்கு மாயை தொலையுநல் லமயந் தோன்ற. 86

இங்கிவன் றன்னை யாளுங் காலமீ தென்று தெய்வச்
சங்கம தகன்று முன்னோன் மஞ்சனச் சாலை சார்ந்து
குங்குமம் புழுகு சாந்தங் குழைத்துமெய்ம் முழுதும் பூசிக்
கங்கையி னன்னீர் வாசங் கலந்தமென் பனிநீ ராடி. 87

மெய்ப்புன றுகிலான் மாற்றி விலைமதிப் பில்லா நல்ல
ஒப்பருஞ் செம்பட் டாடை யுடுத்துயர் கோட்ட மெய்திச்
செப்பிள முலையாள் பாகன் றென்றிசை யதனை நோக்கி
அப்பெருந் தவிசின் மேலங் கழகுற விருந்த பின்னர். 88

— திருவாதவூரடிகள் புராணம்.

சிவமயம்

திருவாசகம்

பாட்டு முதற்குறிப்பு அகராதி



மணிவாசகர் தில்லைச் சிற்றம்பலவன் திருவடிகளில்
திருக்கோவையான் என்னும் சொற்றாமரை மலர் சூட்டல்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருக்கோவையார்

கற்பக விநாயகர் வணக்கம்

நேரிசை வெண்பா

எண்ணிறைந்த தில்லை எழுகோ புரந்திகழக்
கண்ணிறைந்து நின்றோளிருங் கற்பகமே — நண்ணியசீர்த்
தேனூறு செஞ்சோல் திருக்கோவை என்கின்ற
நானூறும் என்மனத்தே நல்கு. (1)

நூற் சிறப்பு

கட்டளைக் கலித்துறை

ஆரணங் காண்என்பர் அந்தணர் ; யோகியர் ஆகமத்தின்
காரணங் காண்என்பர் ; காமுகர் காமநன் னூலதென்பர் ;
ஏரணங் காண்என்பர் எண்ணர்; எழுத்தென்பர் இன்புலவோர்
சீரணங் காயசிற் றம்பலக் கோவையைச் செப்பிடினே. (2)

---

1. எழுகோபுரம் - உயர்ந்து தோன்றும் கோபுரம். கண் நிறைவது அருள் என்க.

2. ஆரணம் - வேதம். காரணம் - முதல். ஏரணம் - அளவைநூல் (தருக்கம்). எண்ணர் - அளவைநூல் வல்லவர் ; (தார்க்கிகர்). எழுத்து - இயற்றமிழ் இலக்கணம்.

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

உருவாரும் தமிழ்ச்சங்கத் தடம்போய்கைத் தோன்றி,
உயர்ந்தோங்கு மெய்ஞ்ஞான ஒளியையுடைத் தாகி,
மருவாருங் கிளவிஇதழ் நானூ ருகி,
மதுப்பொருள்வாய் மதிப்புலவர் வண்டாய் உண்ணத்
தருவாரும் புலியூரின் உலகுய்யக் குனிப்போன்
தடங்கருணை யெனும்இரவி தன்கதிரால் அலரும்,
திருவாத வூராளி திருச்சிற்றம் பலவன்
திருவடித்தா மரைச்சாத்துந் திருவளர்தா மரையே. (3)

[இச் செய்யுட்கள், பிற்காலத்து ஆன்றோரால் செய்யப் பட்டவை.]

---

3. உரு ஆரும் - அழகு நிறைந்த. ஒளி - பொலிவு. மரு - வாசனை. 'மரு ஆரும் இதழ்' என்க. 'பொருளாகிய மதுவை' எனவும், 'மதியாகிய வாயால்' எனவும் உரைக்க. தரு - மரங்கள்; சோலைகள். குனிப்போன் - நடனம் செய்யும் பெருமான். தட - பெரிய. இரவி - சூரியன். "திருவளர் தாமரை" என்பது, முன்னர் அம்மொழியால் தொடங்கும் நூலைக் குறித்துப் பின் உருவகமாயிற்று.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

எட்டாந் திருமுறை

திருக்கோவையார்

[' கோவை ' என்பது அகப்பொருள் துறைகள் பலவற்றையும் அவை நிகழும் முறையானே நிரல்படக் கோத்துச் செய்யப்படும் செய்யுள் வகை. ' அறம், பொருள், இன்பம், வீடு ' என்னும் உறுதிப்பொருள் நான்கனுள் வீட்டை அறத்தினுள் அடக்கி, இன்பத்தை, ' அகப்பொருள் ' எனவும், ஏனைய இரண்டையும், ' புறப்பொருள் ' எனவும் கூறுதல் இயல்நூல் மரபு. அவற்றுள் அகப்பொருளாகிய ' இன்பம் ' என்பது, ஒருவனும் ஒருத்தியும் கூடி நுகரும் இன்பத்தையே குறிக்கும். அவ்வின்பம், அவ்விருவரும் ஒத்த உருவமும், ஒத்த செல்வமும், ஒத்த பருவமும் முதலியவற்றோடு ஒத்த அன்பும் உடையராய வழியே சிறந்துநிற்கும். அவ்வன்பு, அன்ன தன்மையராய அவ்விருவரும், கொடுப்பார் அடுப்பார் பிறர் இன்றித் தாமே ஒரு தனியிடத்து எதிர்ப்பட்டுக் கலந்தவழி நன்கு தெளியப்படுமாகலின், அதனையே சிறப்புடைய அகப்பொருளாகக்கொண்டு அதுவே நால்வகை நிலத்தும் ஐந்திணைவகையால் நிகழ்வது என வைத்துப் புலவர் செய்யுள் செய்வர். மணவினைக்குரிய ஒருவனும், ஒருத்தியும் இம்முறையாற் கலத்தலையும், ' கந்திருவ மணம் ' எனக் கூறி, வேதம் உடம்பட்டமையின், இவ்வைந்திணை அகப்பொருள் சான்றோரால் கொள்ளப்பட்டது.

இனி, இயல்பால் நிகழும் கந்திருவ மணத்தோடு புலவரது செய்யுட்களில் வரும் ஐந்திணை அகப்பொருட் கூட்டம் ஒருபுடை ஒத்ததாயினும், அவற்றிடை உள்ள வேறுபாடும் பெரிது. புலவரது செய்யுட்கண் வரும் ஒருவனும், ஒருத்தியும் ஒத்த உருவம் முதலாயினவற்றோடு, பல பிறப்புக்களில் தொடர்ந்து வரும் ஒத்த அன்பினையும், பிற அரும்பெருஞ் சிறப்புக்களையும்

உடையர். அவையெல்லாம் உலகத்தில் காணுதல் அரிது. ஆகவே, அகப்பொருட் செய்யுட்கள் ஒருவன், ஒருத்தி என்னும் அனைவர்க்கும் பொதுவாய் நிற்றலல்லது, சிறப்பாக ஓர் இருவரையே குறித்து நிற்றல் இல்லை. எனவே, அகப்பொருட் பாட்டுக்களின் நிகழ்ச்சிக்குத் தலைமை பூண்டு நிற்கும் ஒருவனுக்கும், ஒருத்திக்கும் இயற்பெயர் கூறப்படுதல் இல்லை. இவற்றால், இவ்வகப்பொருளை '**இல்லோன் தலைவனாக இல்லது புணர்த்தல்**' எனக் கூறுவர் அறிந்தோர். அங்ஙனங் கூறுதல் பற்றியே, 'அகப்பொருட் பாடலின் பொருட்கும், உலகியலுக்கும் யாதொரு தொடர்பும் இன்று' என்பது பொருளன்று; மற்று, 'அப்பாடல்களிற் காணுமாறே உலகிடை நிகழாது; ஒருபுடை ஒத்த நிகழ்ச்சிகள் நிகழும்' என்பதே பொருளாம்.

இத்தன்மையவான அகப்பொருட் பாடல்களைப் பாடுமிடத்து அவற்றைப் பாடும் புலவர், தாம் புகழக் கருதும் தலைவரை அவற்றிடைச் சார்த்துவகையாற் புணர்த்தி அவர்தம் புகழ் புலப்படப் பாடுதலும் உண்டு. அம்முறைபற்றித் திருவாதவூரடிகள் தில்லைக் கூத்தப்பெருமானைப் பாட்டுத்தோறும் சார்த்துவகையாற் புகழ்ந்து இத்திருக்கோவையை அருளிச்செய்கின்றார். எனவே, அடிகள் சிவபெருமானைத் திருவாசகத்தில் புறத்திணை வகையால் தலைமை வகையாகவும், திருக்கோவையால் சார்த்து வகையாகவும் பாடினாராதல் உணர்க. இதனானே, அடிகள் தில்லையை அடைந்து திருவாசகத்துட் சிலவற்றை அருளிச்செய்திருந்த பின்னாளிலே இத் திருக்கோவையை அருளிச்செய்தாரெனக் கொள்ளுதற்கிடனுண்டு. என்னை? தில்லையை அடைந்த பின்பும் இறைவன் தம்மைத் தன்பால் வருவித்துக்கொள்ளக் காலம் நீட்டித்தல் கண்டு வருந்திப் பாடுங்காலத்து இன்னோரன்ன செய்யுட்களைப் பாடுதற்கண் அவர்க்கு மனம் செல்லாதாகலின்.

இங்ஙனம் தமிழ்ச் செய்யுளின் மரபு எல்லாவற்றாலும் சிவபெருமானைப் பாடுதல் அடிகளது கருத்தாகவே, ஏனைய அகப்பாட்டுக்களிற்போல இன்பப்பொருளையும் உடன் அருளிச்செய்தார் என்பது பெறப்படுதலின், பிற்காலத்தில் பெயர் அறியப்படாத ஒருவர், இத்திருக்கோவைக்கண் வரும் அகப்பொருள் துறைக்கெல்லாம் தத்துவத்துறை கூறித் தத்துவப் பொருள்காண விழைந்தாற்போல விழைதல் வேண்டாமை

பெறப்படும். தத்துவப் பொருட் கேற்ற சொற் குறிப்பும் இதன்கண் உள்ள அகப் பொருட் பகுதிக்கண் இல்லை. சொற் குறிப்பின்றியே உரை கூறப்புகின், ஏனைக் கோவைகட்கும் அவ்வாறு உரைத்தல் கூடும்.

திருக்கோவையார்க்கு யாவரானும் அறிந்து போற்றப்படும், சிறந்த பேருரை, பேராசிரியர் * உரைத்த உரையே. அவர் திருவாதவூரடிகள் திருக்கோவையை,

"அறிவன் நூற் பொருளும் உலகியற் பொருளும்என
இருபொருளும் நுதலி எடுத்துக் கொண்டனர்"

என்றே கூறினர். தத்துவத்துறைக்கொளுக் கூறிய அவரை யன்றிப் பேராசிரியராதல், பிறராதல் முன்னோர் ஒருவரும் திருக்கோவையாரின்கண் உள்ள அகப்பொருட் பகுதிக்கும் தத்துவப் பொருள் கூறக் கருதினர் இல்லை. கருதினராயின், அதனை எவ்வாற்றாலேனும் புலப்படுத்தாது போகார். ஆகவே, முன்னோர் ஒருவரும் அங்ஙனங் கருதினர் இல்லை என்பதே துணிவு. இன்னும் இதனை மிக விரித்தல் வேண்டா.

இனித் திருவாசகத்தள் விளையாட்டு மகளிரை அடிகள் உலகியல்மட்டிலே நின்றாராக அருளிச்செய்யாது, இறைவன் திருவருளைத் தலைப்பட்டு நின்றாராகவும் அருளிச்செய்தாற் போல, திருக்கோவைக்கண்ணும் தலைவன் தலைவியரை அப் பெற்றியராகவே அருளிச்செய்தார். அதனால் திருக்கோவைக்

---

* பேராசிரியர் உரை நச்சினார்க்கினியர் உரை என்று முன்னர்க் கருதப்பட்டது. சேனாவரையருடையது என்றாரும் உளர். ஆயினும், பின்னர்ப் பேராசிரியர் உரை என்பதே முடிபாயிற்று. இவர் தொல்காப்பியத்திற்கு உரை வகுத்த பேராசிரியர் அல்லர் எனத் தெரிந்தும், இவரையும், 'பேராசிரியர்' என்னும் பெயரானே குறிப்பர். இவர் தொல்காப்பியத்திற்கு உரை வகுத்தவர் அல்லர் என்பது, திருக்கோவையாரின் இடந்தலைப்பாட்டுக் கிளவிக்கொத்தின் உரையினையும், தொல்காப்பியச் செய்யுளியலின், "காமப் புணர்ச்சியும் இடந்தலைப் பாடும்" என்னும் சூத்திரத்தின் உரையினையும் புடைபட வைத்து நோக்குதல் ஒன்றானே நன்கறியப்படும்.

கன் வரும் தலைவன் தலைவியர் ஏனை அகப்பாட்டுக்களில் வரும் தலைவன் தலைவியர்போலாது, நம்பியாரூரரையும், பரவையாரை யும் போல்பவராவார் என்று உணர்க.

நம்பியாரூரர் பரவையாரைக்கண்டு காதல் மீதூரப்பெற்ற பொழுது, பரவையாரைப் பலவகையாற் சிறப்பிக்கும் சிறப்புக் களிடையே, '' பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ '' எனவும், '' அற்புதமோ சிவனருளோ '' எனவும், இறைவன் திருவருட்டொடர்பையும் கூறிச் சிறப்பித்தவாறும், அங்ஙனமே பரவையாரும் நம்பியாரூரரைச்சிறப்பிக்கும் சிறப்புக்களிடையே, '' மின்னேர்செஞ் சடையண்ணல் மெய்யருள்பெற் றுடைய வனோ '' எனவும், '' எம்பிரான் தமரேயோ '' எனவும், பிறவா றும் சிறப்பித்துக் கூறியவாறும் நன்கறியப்பட்டவை (பெ. பு. தடுத்தாட். 140, 144, 172.). எனவே, திருக்கோவைத் துறைத் தலைவனும், தலைவியரும் நிகழ்த்தும் கூற்றுக்களும் அப்பெற்றி யனவாயே நிகழும். அதனால் அவ்விருவோர்க்கும் அவர் பெற்ற சிற்றின்பமே அவர்க்குப் பேரின்பமாய் விளையும் என்பதும் உணர்க.

இத் திருக்கோவை முழுதும் கட்டளைக் கலித்துறையால் ஆயது. இதனானே பின்னர் வந்த கோவைகள் பலவும் கட்டளைக் கலித்துறையானே இயல்வவாயின. அதனால், கட்டளைக் கலித்துறைக்கு, 'கோவைக் கலித்துறை' என்னும் பெயரும் உளதாயிற்று. நாற்சீரின்மிக்க சீர்களை உடைய அடிகள் நான்கினால் ஆய யாப்புக்கள் பலவும் முற்காலத்தில், 'விருத்தம்' என்றே வழங்கப்பட்டன.

களவு

கந்திருவ மணத்தோடு ஒருபுடை ஒத்த ஐந்திணை அகப் பொருள், 'களவு, கற்பு' என்னும் இரு கைகோள்களை யுடைத்து. அவற்றுள் களவாவது, மேற்குறித்த இயல்பினராய தலைவனும், தலைவியும் ஊழ்வயத்தால் தமியராய் ஒருபொழி லின்கண் எதிர்ப்பட்டு, முன்னைப்பிறப்புக்களினின்றேதொடர்ந்து வந்து தோன்றாநிருந்த அன்பு, ஒருவரை ஒருவர்காணுங் காட்சி ஒன்றானே, ''ஓர் ஆவிற்கு இருகோடும் முற்பிற்பாடின்றி ஒருங்கே தோன்றினாற்போல, இருவர்மாட்டும் ஒருங்கே

தோன்றிநிற்ப, ஒருவர்க்கு ஒருவர் உரியராய், உடல் இரண்டும் உயிரொன்றும் ஆயினாற்போல ஒற்றுமைப்பட்டு, அங்ஙனம் பட்டமையைப் பிறர் அறியாவாறு ஒழுகுதல். தலைவன் தலைவியரது இவ்வொருமைப்பாடு பிறர் அறியாவாறு மறைக்கப் படுதல் பற்றி இது, 'களவு' எனப்பட்டதன்றி, ஒருவர்க்குரிய பொருளை அவர் அறியாவாறு சிலர் வஞ்சித்துக் கொள்ளும் களவே இது என்னும் கருத்தால் அங்ஙனம் கூறப்பட்டதன்று; என்னை? இவ்விருவரும் என்றேனும் ஒருநாள் எவ்வாற்றாலே னும் ஒருவர்க்கொருவர் உரியராகற்பாலரேயன்றிப் பிறர்க்கு உரியரல்லராகலின்.

1. இயற்கைப் புணர்ச்சி

'இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம், பாங்கியிற் கூட்டம்' எனக் களவு நான்கு பகுதியுடைத்து. அவற்றுள் இயற்கைப் புணர்ச்சியாவது, தலைவனும், தலைவியும் முன்னர் நிகழ்ந்த நிகழ்ச்சியாதும் காரணமாகவன்றி, இயல்பானே கூடும் கூட்டம். முதற்கண் நிகழ்தல் பற்றி இது, 'முன்னுறு புணர்ச்சி' என்றும் கூறப்படும்.

இயற்கைப் புணர்ச்சி, தெய்வத்தின் முடிதலும், தலைவியின் முடிதலும் என இருவகைத்து. அவற்றுள் அடிகள் தெய்வத்தின் முடிதலையே எடுத்துக்கொண்டு, அதனைப் பதினெட்டுத்துறைகளாக வகுத்து அருளிச்செய்கின்றார்.

துறைகள் 'கிளவி' என்றும், அவை பல கூடியது, 'கிளவிக் கொத்து அல்லது அதிகாரம்' என்றும் சொல்லப் படும். இத் திருக்கோவைக்கண் உள்ள அதிகாரங்கள் இயற்கைப் புணர்ச்சி முதலாகப் பரத்தையிற் பிரிவு ஈறாக இருபத்தைந்து. திருவாசகப் பகுதிகட்குக் குறிப்புரைத்தாற்போல, இத் திருக்கோவைக்கும், அதிகாரவகை, கிளவி வகை, துறைக் கொளு' என்பவற்றை முன்னோர் நூற்பாவகையிற் கூறிப் போந்தனர். அவற்றுள் அதிகாரவகை கூறிய நூற்பா வருமாறு :-

[1] இயற்கை, [2] பாங்கன், [3] இடந்தலை, [4] மதியுடன்,
[5] இருவரும் உள்வழி அவன்வர உணர்தல்,
[6] முன்னுற வுணர்தல், [7] குறையுற உணர்தல்,
[8] நன்னிலை நாண, [9] நடுங்க நாடல்,
[10] மடல், [11] குறை நயப்பு, [12] வழிச்சேட் படுத்தல்
[13] இடமிகு [14] பகற்குறி, [15] இரவுக் குறியோ,
[16] டொருவழித் தணத்தல், [17] உடன்கொண் டேகல்,
[18] வரைவு முடுக்கம், [19] வரைபொருட் பிரிதல்,
[20] மணஞ்சிறப் போதல், [21] வார்புவி காவல்,
[22] இணங்கலர்ப் பொருத்தல், [23] வேந்தற் குற்றுழி,
[24] பொருள்வயிற் பிரிதல், [25] பரத்தையிற் பிரிதல்என்
றருள்வயிற் சிறந்த அகத்திணை மருங்கின்
இருளறு நிகழ்ச்சி இவையென மொழிப.

இதனுள், முதற்கண், 'இயற்கை' எனக் குறிப்பாற் கூறப்பட்ட இயற்கைப் புணர்ச்சியின் பதினெட்டுத் துறைகளை யும் கூறிய நூற்பா வருமாறு;

[1] காட்சி, [2] ஐயம், [3] தெளிதல், [4] நயப்பே,
[5] உட்கோள் [6] தெய்வம் [7] துணிதல் கைக் கிளையொடு
[8] கலவி யுரைத்தல், [9] இருவயின் ஒத்தல்,
[10] கிளவி வேட்டல், [11] நலம்புனைந் துரைத்தல்,
[12] பிரிவுணர்த் தல்லொடு, [13] பருவரல் அறிதல்,
[14] அருட்குணம் உரைத்தல், [15] அணிமை கூறல்,
[16] ஆடிடத் துய்த்தல், [17] அருமை அறிதல்,
[18] பாங்கியை அறிதல் எனஈ ரொன்பான்
நீங்கா இயற்கை நெறிஎன மொழிப.

தொல்காப்பியத்துள், "மெய்தொட்டுப் பயிறல்" என்னும் நூற்பாவினுட் கருதப்பட்ட இயற்கைப் புணர்ச்சி தலைவியிற் புணர்ச்சியாகலானும், அவ்விடத்துப், "போராச்சிறப்பின் இருநான்கு கிளவியும்" என்றது இன்றியமையாத எட்டு என்னும் துணையேயாதலானும், அதன் முன்னைச் சூத்திரத்துப் பொதுப்படக் கூறிய முன்னிலையாக்கல் முதலியவற்றொடும் பிறவற்றொடும் கூட்டி இப்பதினெட்டுத்துறை கூறினார். அவை மேற்கூறிய முறையானே வருதல் காண்க.]

1. காட்சி

திருவளர் தாமரை, சீர்வளர் காவிகள், ஈசர்தில்லைக்
குருவளர் பூங்குமிழ், கோங்குபைங் காந்தள்கொண் டோங்கு
மருவளர் மாலையோர் வல்லியின் ஒல்கி அனநடைவாய்ந் [தெய்வ
துருவளர் காமன்றன் வென்றிக் கொடிபோன் றொளிர்கின்றதே!

---

1. காட்சியாவது, தன்னேடொத்த இளையர் பலரோடும் வேட்டைமேற்போந்த தலைவன், ஊழ்வயத்தால் அவரின் நீங்கித் தனிமைப்பட்டு ஒரு பொழிலிடைச் செல்கின்றுழி, பலவகை விளையாட்டுக்களையுங் கருதி ஆயத்தாருடன் போந்த தலைவியும் அவ்வாறே அவரின் நீங்கி ஆண்டுத் தனித்துநிற்ப, அவளை அவன் காணுதல். இதன் கொளு வருமாறு :-

மதிவாணுதல் வளர்வஞ்சியைக்
கதிர்வேலவன் கண்ணுற்றது.

இத்தொகைநிலைச் செய்யுள், மெய்ந்நெறிப் பொருளும், உலகியற் பொருளும் என்னும் இருபொருளும்பட நிகழ்வதாயினும், தலைமை வகையால் நிகழ்வது உலகியற் பொருளே என்பது தோன்ற, 'திரு' என்னும் சொல்லால் தொடங்க வேண்டி, "திருவளர் தாமரை" எனத் தொடங்கினாராயினும், "ஈசர் தில்லை" எனத் தொடங்குதலே அடிகள் திருவுள்ளம் என்பது, இதன் பொருள்நோக்கி உணர்ந்துகொள்க. 'ஈசர்' என்பதும் அவ்விரு பொருட்கும் உரித்தாயினும், அஃது உலகியற்கும் உரித்தாதலை உலகர் தெற்றெனத் தெளியாராதலின், இவ்வாறு தொடங்கினர் என்க. சிறப்புடைய உபநிடதங்களுள், 'ஈசாவாசியம்' என்பது ஒன்று; அஃது, 'ஈசாவாசியம்' என்றே தொடங்குகின்றது. அதனால், இத் திருக்கோவையார், பொருள் வகையால் 'ஈசர்' எனத் தொடங்குதல் அதனொடு வைத்து நோக்கற்பாலதாம்.

திரு - அழகு. 'இதற்குத் திருமகள் என்று பொருள் உரைப்பின், ஒருத்திக்கு இருக்கையாகித் தாழ்ந்த மலரினை உவமை கூறியதாய், உவமிக்கப்படும் பொருட்கு இழிவை

உண்டாக்கும்' எனவும், 'அவ்வாறு உரைக்க வேண்டின், அழகிற் பிறந்த அவளும் அழகிதென்று விரும்பி இருக்கும் தாமரை என உரைப்பின் அமையும்' என்றும் கூறுவர் பேராசிரியர்.

சீர் - சிறப்பு; இதற்கும், 'அழகு' என்றே உரைப்பர் பேராசிரியர். காவி - நீலம்; நெய்தல். குரு - நிறம். ஓங்கு - உயர்ந்த. 'ஓங்கு மாலை' என இயையும். மரு - வாசனை. வல்லி - கொடி. ஒல்கி - துவண்டு. 'அன்னம' என்பது 'அனம்' என இடைக்குறைந்துநின்றது. உரு - வடிவு. 'காமன் உருவிலி (அனங்கன்) ஆகலின், "உருவளர் காமன்" என்றது, அவன் இறைவனது நெற்றிவிழியால் எரிக்கப்பட்டு உருவிழத்தற்கு முன்னர் நின்ற நிலையை நோக்கியது' எனவும், 'அதனால், "வென்றிக் கொடி" என்றதும், அக்காலத்து அவன் தன்னை வெல்வார் இன்றிக் கட்டிய கொடியையே, என்றும் உரைப்பர் பேராசிரியர். "உரு" என்றதற்கும்' 'அழகு' என்றே உரைத்து, 'இறைவனிடத்தும் அவன் அடிய வரது நிலையறியாது சென்றவிடத்துமன்றிக் காமனுக்குத் தோல்வி நிகழாமையின், அவன் வென்றிக் கொடியையுடையன் என்றற்கு இழுக்கில்லை' எனப் போதலே பொருந்துவது போலும்!

பாட்டின் இறுதிக்கண், 'இஃது என்ன வியப்போ' என்னும் குறிப்பெச்சம வருவித்து முடிக்க தலைவியத, 'முகம், கண், மூக்கு, தனம், கை' என்னும் உறுப்புக்களையே அவற்றது அழகின் மிகுதியால், தலைவன், 'தாமரை, நீலம், குமிழ் கோங்கு, காந்தள்' என்னும் மலர்களாகக் கூறினான். அவற் றோடு அவளது இயற்கை மணமும் கமழ, அதனைப் புதுவதாய் அறிதலால் அவளை, 'ஒரு தெய்வமணம் கமழும் மலர் மாலை' என்றான். வல்லி, துவட்சி பற்றிவந்த தொழில் உவமம். மலர் மாலை நடவாதாகலின், "அனநடை வாய்ந்து" என்றது முன்னை உருவகங்களோடு இயையாது என்னும் கருத்தால், 'நடை உளதாகக் கண்டு கூறினான் அல்லன்; நடையைப் பெறுமாயின் அன்னநடையைப் பெறுமென்றானும்' என்றார் பேராசிரியர். 'உலகிற் காணப்படாததொரு புதுமை இது' என்பதுபடக் கூறுகின்றானாகலின், தலைவி சிறிதே புடைபெயர்ந்த நடை

கண்டே இவ்வாறு கூறினான் என்க. எனவே, இதன் மெய்ப் பாடு, ' மருட்கை ' என்னும் மெய்ப்பாடுபோலத் தோன்றினும், தலைவியது பேரழகினையே இங்ஙனம் வியந்து கூறினான் ஆகலின், ' உவகை ' என்னும் மெய்ப்பாடேயாம். இதுவே பேராசிரியர் கருத்தாதல் அறிந்துகொள்க. இங்ஙனமாகவே, உருவக வகை யால், தலைவியை, " ஒளிர்கின்றதே " என அஃறிணையாகக் கூறினானாயினும், ' இஃதோ பெண்டிர் ஒருவர் நிற்கின்றார்; இவரது பேரழகுதான் என்னே ' என்றதே பொருளாயிற்று. இங்ஙனம் அல்லாக்கால், தலைவன் தான்கண்ட உருவிடத்து விரையச் செல்லாது மந்திரத்தால் தடையுண்ட பாம்பு போலத் தடையுண்டு செய்மைக்கண் நிற்றலும், நின்று, பின்னர், ' மாதோ மடமயிலோ எனநின்ற இவர் வாழ்பதிதான் யாதோ ' என்றலும் கூடாவாம். தலைவியின் உருவத்தைப் பலவகை மலர்களும் விரவத் தொடுத்த மாலைபோல்வதாகக் கூறுதல், " கோடல் எதிர்முகை " என்னும் குறுந்தொகைப் பாட்டினுள் ளும் வந்தது (62).

இவ்வியற்கைப் புணர்ச்சிக்கண் முதற்கண் நின்ற பத்துத் துறைகள் தலைவன் தன்னெஞ்சொடு கூறியனவே. அவற்றுள் கைக்கிளைப் பகுதியாக முன்னின்ற ஆறுதுறைகள் தன்னளவில் நிற்கக் கூறியனவும், ஏனைய தலைவி கேட்கக் கூறியனவுமாம்' அதனால், இவற்றுள் வேண்டுவனவற்றிற்கு, ' நெஞ்சே. என்பது வருவித்துக் கொள்ளப்படும் இனி,

" காமத் திணையிற் கண்ணின்று வரூஉம்
நாணும் மடனும் பெண்மைய ஆகலின்
குறிப் ?னும் இடத்தினு மல்லது வேட்கை
நெறிப்பட வாரா அவள்வயி னான "

என்பது இலக்கணமாகலின், (தொல். பொருள். 106) இவ் வியற்கைப் புணர்ச்சிக்கண் தலைவி கூற்று வாராதாம். அடுத்து வரும் பாங்கற் கூட்டம், இடந்தலைப்பாடு என்பவற்றுள்ளும் அருகியல்லது வாராது.

இம் முதல்திருப்பாட்டின்கண் மருதம், நெய்தல், முல்லை, பாலை, குறிஞ்சி என்னும் ஐந்து நிலங்கட்கும் உரிய தாமரை

முதலிய ஐந்து பூக்களையும் கூறியது. இத்தொகை நிலைச் செய்யுள் ஐந்திணை பற்றி வருமென்பது குறிப்பான் உணர்த்தற் பொருட்டாம்.

இத்துணையும், அகத்திணைப் பாட்டென்பது பற்றி உலகியற் பொருளே கூறப்பட்டது. இனி இதன்கண் சொல்லப்பட்ட மெய்ந்நெறிப் பொருள் வருமாறு :—

தலைவியைத் தனியிடத்திற்கண்டு அவள் அழகை வியந்து, அவளது உறுப்புக்களைப் பல மலர்களாக உருவகிக்கின்ற தலைவனது நெஞ்சத்தை அவட்கு முன்னே தில்லைக்கூத்தப் பெருமான் இடங்கொண்டு நீங்காது நிற்றலின், அத்தில்லைக்கண் உள்ள தாமரை முதலியனவே பிறதாமரை முதலியவற்றிற் சிறந்தனவாய்த் தோன்ற, அவள் உறுப்புக்களை அவையேயாகக் கண்டு உருவகித்தான். அதனால் அவற்கு உலக இன்பத்தின் கண்ணும் இறைவன் இன்பமே உளதாதல் எய்திற்று. அவ் வின்ப மீதூர்வால் அப்பெருமானைக் குறிக்கின்றவன், 'எல்லாப் பொருள்களையும் உடையவன் அவனேயாதலின், அவனே நிரம்பிய செல்வன்' எனவும், 'அதனால், என்றும் அழியாத செல்வத்தை வேண்டுவோர் அவனையே அடையற்பாலர்' எனவும் கூறுவான், "ஈசர்" என்றான். ஈசன்-ஐசுவரியம் உடையவன். "சிற்றம்பலம் மேய - செல்வன் கழல் ஏத்தும் செல்வம் செல்வமே" (திருமுறை - 1.80.5.) என்றருளிச்செய்தார் திருஞானசம்பந்தரும்.

இனித் தில்லையை 'அவரது தில்லை' எனக் கூறியவதனான். அங்கு வாழ்வோரும் எல்லாச் செல்வமும் எய்தி இன்புறுதல் கூறுமுகத்தான், சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் தலங்களிற் பிறத்தலும், வாழ்தலும் தவமுடையார்க்கல்லது வாயாமையும் கூறப்பட்டது. எல்லா நிலப்பூக்களும் தில்லையின் உளவாகக் கூறியதும், அங்குள்ளார்க்கு எல்லா நிலத்தின்பமும் உள என்றற்கேயாம். இவ்வாற்றால், இத்திருப்பாட்டுள், சிவபெருமான், சென்றடையாத திருவுடையனாதல் உணர்த்தப்பட்டவாறறிக.

உ. ஐயம்

போதோ! விசும்போ! புனலோ! பணிக ளதுபதியோ!
யாதோ அறிகுவ தேதும் அரிதி யமன்விடுத்த
தூதோ, அனங்கன் துணையோ, இணையிலி தொல்லைத்தில்லை
மாதோ, மடமயி லோஎன நின்றவர் வாழ்பதியே. 2

---

2. ஐயமாவது, தலைமகளைக் கண்ணுற்ற தலைமகன், அவளது தோற்றம், நிற்கும் இடம் முதலியவற்றது சிறப்பால் அவளை, 'தெய்வ மகளோ! அன்றி மானுட மகளோ' என ஐயுறுதல். இதற்குக் கொளு:-

தெரியவரியதோர் தெய்வமென்ன
அருவரைநாடன் ஐயுற்றது.

"யமன் விடுத்த தூதோ" என்பது முதலாகத் தொடங்கி யுரைக்க. போது-(தாமரை) மலர். பணிகளது பதி-பாம்பு களது ஊர்; நாகர் உலகம். யாதோ-வேறு எதுவோ. ஏதும் - சிறிதும். அனங்கன் - காமன். துணை - அவற்கு வெற்றியைத் தரும் படைத் துணை. இணையிலி - நிகரில்லாதவன். தொல்லை - பழைமை. மடம் - மடப்பம்; இளமை. "நின்றவர்" என்றது, 'நின்ற இவர்' எனப் பொருள் தந்தது. தலைமகளைத் திருமகள், வான் அரமகள், நீர் அரமகள், நாகர் மகள் என்பவ ராக ஐயுறுவான், அவர் வாழுமிடங்களைக் கூறினான், அவர் தம்மையே சுட்டிக்கூறுதல், நன்மகனாகிய தனக்கு அழகன் றென்பது கருதி. "யமன் விடுத்த தூதோ" என்றது, இளைஞர் உயிரை வருத்துதல் கருதி. தூது முதலிய நான்கினாலும் தலைவியது அழகின் சிறப்புக் கூறிப் போது முதலிய நான்கினா லும் தனக்குளதாய ஐயங் கூறினான் என்க 'தில்லைக்கண் வாழும் மாதர் தேவமாதர்போலும் அழகினையுடையர்' என்பது கருத்தாகலான், தலைவியது அழகினைச் சிறப்பிக்குமிடத்து, "தில்லை மாதோ" எனவும் கூறினான். அதனானே, 'மானுட மகள்கொல்லோ' என ஐயுற்றமையும் பெறப்பட்டது, இது சிறுபான்மையாகலின், ஈண்டே கூறினான் என்க. "அணங்கு கொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை - மாதர்கொல் மாலு மென் நெஞ்சு" எனத் திருக்குறளினும் கூறப்பட்டது. (1081)

3. தெளிதல்

பாயும் விடைஅரன் தில்லையன் னாள்படைக் கண்ணிமைக்கும்;
தோயும் நிலத்தடி; தூமலர் வாடும்; துயரமெய்தி
ஆயும் மனனே, அணங்கல்லள் அம்மா முலைசுமந்து
தேயும் மருங்குற் பெரும்பணைத் தோள்இச் சிறுநுதலே. 3

'தனக்குவமை இல்லாதான்' (குறள் - 7.) என்பான். இறைவனை, "இணையிலி" என்றும். 'அவன், ஆதியும், முடிவும் இல்லாது அற்புதத் தனிக்கூத்தியற்றும் இடம்-தில்லை' என்பான், "தொல்லைத் தில்லை" என்றும் கூறினான். 'தில்லை' என்பது உண்மை வகையால் பரவெளியையே குறிக்கும். இதனால், சிவபெருமானது தனிப்பெருந் தன்மையும், அவன் எழுந்தருளியிருக்கும் தலம் பரவெளியேயாம் என்பதும் உணர்த்தப்பட்டன.

3. தெளிதலாவது, தலைவியை, 'தெய்வமகளோ' என ஐயுற்ற தலைமகன், அவளது இயற்கையை நன்கு நோக்கி, 'தெய்வமகளல்லள்; மானுட மகளே' எனத் தெளிதல். இதற்குக் கொளு:-

அணங்கல்லளென் றயில்வேலவன்
குணங்களைநோக்கிக் குறித்துரைத்தது.

"துயரம் எய்தி ஆயும் மனனே" என்றதை முதலினும், "அணங்கல்லள்" என்றதை இறுதியினும் கூட்டுக. 'அடி நிலத்துத் தோயும்' என மாற்றுக. பாயும் - தாவிச் செல்கின்ற. விடை அரன் - இடபவாகனத்தை உடைய சிவபெருமான். படை, வேல். மனன் - மனம்; போலி. அணங்கு - தெய்வமகள். அம் - அழகு. மா - பெரிய. சுமந்து - சுமத்தலால். தேயும் - மெலிகின்ற. மருங்குல் - இடை. பணை - மூங்கில். 'மருங்குலையும் தோளினையும் உடைய இச்சிறுநுதல்' என்க. இங்ஙனம் கூறப்பட்டதாயினும், 'சிறுநுதலினையும் உடைய இவள்' என்பதே பொருளாம். கண் இமைத்தலும், அடி நிலந்தோய்தலும், சூடிய மலர் வாடுதலும் மக்களிடத்

4. நயப்பு

அகல்கின்ற அல்குற் றடம்அது ; கொங்கை அவை ;அவம்நீ
புகல்கின்ற தென்னைநெஞ் சுண்டே இடை;அடை யார்புரங்கள்
இகல்குன்ற வில்லிற்செற் றோன்தில்லை யீசன்எம் மான்எதிர்ந்த
பகல்குன்றப் பல்லுகுத் தோன்பழ னம்மன்ன பல்வளைக்கே. 4

தன்றித் தேவரிடத்து இன்மையானும், தலைமகளிடத்து இவை காணப்பட்டமையாலும், அவளை, 'தெய்வமகளல்லள்; மானுட மகளே' எனத் தெளிந்தான் என்க.

சிவபிரானுக்கு விடையூர்தியாய் நிற்பது, அறக்கடவுளே யாகலானும், தீயோரை ஒறுத்து, நல்லோரைக் காத்தல் அறக்கடவுட்கியல்பாகலானும், "பாயும் விடை" என்றது, விடை தீயோர் முன் சினந்தும், நல்லோர்முன் அருளியும் விரைந்து செல்லும் தன்மையைக் குறித்தவாறாயிற்று. ஆகவே, இதனால், சிவபெருமான் இவ்வுலகை ஆளுமாறு உணர்த்தப்பட்டதாம். "பாயுமால்விடை மேலொரு பாகனே" (திருமுறை-3.114.1.) எனத் திருஞானசம்பந்தரும் அருளிச்செய்தார். தில்லையினும் உயர்ந்தது வேறொன்றுளதாகத் தலைவன் அறிந்திலனாதலின், யாவரினும் சிறந்தாளாகிய தலைவியை அத்தில்லையோடே ஒப்புமைப்படுத்திக் கூறினான். அக்கூற்றால் அவற்குச் சிவானந்தம் மிகுவதாயிற்று.

4. நயப்பாவது, தலைவன், தலைவியை, 'மானுட மகளே எனத் துணிந்தபின்னர் அவள்மேற் சென்ற விருப்பத்தால், அவளது உறுப்பமைதியை வியந்து கூறுதல். இதற்குக் கொளு:-

வண்டமர் புரிகுழல் ஒண்டொடி மடந்தையை
நயந்த அண்ணல் வியந்துள் ளியது.

தடம் - பரப்பு; பரப்பைச் சுட்டினமையின், "அது" என்றான். அவம் - பயனில் சொல்; அஃது, 'இடை இல்லை' என்றல். 'இடை உண்டே' என மாற்றி, இறுதிக்கண் கூட்டுக. அடையார் - பகைவர். இகல் - வலிமை. 'இகல் செற்றோன்' என இயையும். குன்ற வில் - மலையாகிய வில். எதிர்ந்த - மாறுபட்ட. பகல் - பகலவன்; சூரியன். குன்ற - பெருமை

5. உட்கோள்

அணியும் அமிழ்தும்என் ஆவியும் ஆயவன், தில்லைச்சிந்தா
மணி, உம்ப ரார்அறி யாமறை யோன்அடி வாழ்த்தலரிற்
பிணியும் அதற்கு மருந்தும் பிறழப் பிறழமின்னும்
பணியும் புரைமருங் குற்பெருந் தோளி படைக்கண்களே. 5

கெடுப்பாடிப்பழனப் - 'திருப்பழனம்' என்னும் தலம். பரந்த அல்குலும் ‡ பெருத்த தனங்களும் உண்மையாகிய ஏதுப்பற்றி இடையுண்மையை நெஞ்சினைத் துணிவிப் பான்போல அவற்றை வியந்தான் என்க. இத் திருப்பாட்டின் பொருள் பற்றிச் சிவப் பிரகாசர், "மாயை இடையை உளள் முலையால் மற்றை மாதர் போலென்று - தூயமதிஞர் அனுமிதித்துச் சொல்லற் குரியாள்" எனக் கூறினர் (பிரபுலிங்கலீலை - பிரபுதேவர்வந்த. கதி - 37)

சிவபெருமான் முப்புரம் எரித்ததும், சூரியனைப் பல்தகர்த்ததும் ஆகியவற்றைக் கூறியதனால், முன்னைத் திருப்பாட்டில், "பாயும் விடை அரன்" என்றதனுட் குறிக்கப்பட்டவற்றில், மறக்கருணை செய்தலை விளக்கியவாறாயிற்று.

5 உட்கோளாவது, தலைமகளை அடைய விரும்பிய தலைமகன், அவளது குறிப்பும் தன் குறிப்போடு ஒத்திருத்தலை அவளது நோக்கினால் உளங்கொண்டு கூறுதல். இதற்குக் கொளு :-

இறைதிருக் கரத்து மறிமான் நோக்கி
உள்ளக் கருத்து வள்ளல் அறிந்தது.

'பிணியும் அதற்கு மருந்தும்' என்பதனை இறுதிக்கண் கூட்டுக. இதன்பின், 'ஆகாநின்றன' என்பது சொல்லெச்சமாய்நின்றது

---

‡ 'அல்குல்' என்பதற்கு இக்காலத்தார் கருதும்பொருள் பொருளன்று; வேறு என்பது ஏழாந் திருமுறைக் குறிப்பிற் கூறப்பட்டது. (பக்17, 18.). அதனை இத் திருப்பாட்டிற்குப் பேராசிரியர் உரைத்த உரைகொண்டும் தெளிக.

அணி - ஆபரணம். "என்" என்றதனை முதலிற்கொள்க. உம்பரார் - தேவர். மறையோன் - வேதத்தை ஓதுபவன், 'வாழ்த்தலர்போலப் பிறழ' என்க. 'வாழ்த்தலரைப்போல உறுகின்ற பிணி' என்பர் பேராசிரியர். மின்னும் பணியும்புரை மருங்குல் - மின்னலையும், பாம்பையும் ஒக்கும் இடை. மருந்தாவது பிறிதில்லை என்கின்றுளாகலின், 'கண்களே' என்னும் ஏகாரம் பிரிநிலை.

கண்கள் பிணியாதல் ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதலானும், (குறள் 1099) மருந்தாதல், அன்பொடு நோக்குதலானும் என்க. இவற்றுள், 'பிணியாதல் பொது நோக்கு' என்பதனைப் பரிமேலழகர், "இருநோக் கிவளுண் கண் உள்ள தொருநோக்கு - நோய்நோக்கொன் றந்நோய் மருந்து" என்னும் குறள் (1091) உரையில், 'நோய் செய்யும் நோக்கினைப் பொதுநோக் கென்பாரும் உளர்; அது நோய் செயின், கைக்கிளையாவதல்லது, அகமாகாமை யறிக' என மறுத்து, 'நோய்செய்யும் நோக்கு, அவள் மனத்தினை காமக் குறிப்பினை வெளிப்படுக்கின்ற நோக்கு; மருந்தாய நோக்கு, தன்கண் நிகழ்கின்ற அற்பு நோக்கு' என்றுர். அற்பு நோக்கு ஈண்டுக் காமநோக்கின் வேறுகாமையானும், அகத்திற்கு நிமித்தமாய்த் தலைவனிடத்து முதற்கண் சிறிதுபொழுது ஒரு தலையாக நிகழும் கைக்கிளையே இதுவன்றி வேறன்று ஆகலானும், இவ்வாற்றுன் இதனை அகம் என்றலல்லது, புறம் என்றல் இல்லையாகலானும் அஃது உரையாகாமை யறிக.

தில்லைக் கூத்தன் திருவடிகளையே தன் தலைக்கு அணியாகப் புனைந்து நிற்றலின், அவனை, "அணி" எனவும், தனக்குப் பேரின்பந் தருதலின், "அமிழ்து" எனவும், நினைத்தவற்றை எல்லாம் தருதலின், "சிந்தாமணி" எனவும், தனக்குத் தன் கருணையால் இங்ஙனம் எளிவந்ததல்லது யாவர்க்கும் அரியோனுதல் பற்றி, "உம்பரார் அறியா" எனவும், தன்னை ஆண்டது அந்தணனுய் என்பான், "மறையோன்" எனவும் கூறி மகிழ்ந்தான். இவற்றுனே இதன்கண் இறைவனது திருவருள் தன்மைகள் பல உணர்த்தப்பட்டவாறு அறிக.

6. தெய்வத்தை மகிழ்தல்

வளைபயில் கீழ்கடல் நின்றிட மேல்கடல் வான்நுகத்தின்
துளைவழி நேர்கழி கோத்தெனத் தில்லைத்தொல் லோன்கயிலைக்
கிளைவயின் நீக்கிஇக் கெண்டையங் கண்ணியைக் கொண்டுதந்த
விளைவையல் லால்விய வேன்நய வேன்தெய்வம் மிக்கனவே! 6

---

6. தெய்வத்தை மகிழ்தலாவது, தலைவியது குறிப்புத் தன் குறிப்போடு ஒத்துநிற்றலை உட்கொண்ட தலைவன், அவளை அங்ஙனம் தனக்குத் தந்த தெய்வத்தை மகிழ்ந்து கூறுதல். இதற்குக் கொளு :-

அன்ன மென்னடை அரிவையைத் தந்த
மன்னிருந் தெய்வத்தை மகிழ்ந் துரைத்தது.

வளை பயில் - சங்குகள் நிறைந்த. இட - போகட "மேல்கடல்" என்றதன்பின்னும், 'இட்ட' என்பது வருவிக்க. வான் நுகம் - பெரிய நுகத் தடி. நேர்கழி - அதற்கு ஒத்த கழி. கோத்தென - கோத்தாற்போல. இஃது அருமை பற்றி வந்த உவமை. 'கயிலைக்கண்' என உருபு விரிக்க. 'கயிலைக் கண் தந்த' என இயையும். கிளை - சுற்றம்; ஆயம். 'இவ் விளைவு' எனச் சுட்டு வருவிக்க. விளைவு - செயல்; இஃது ஆகுபெயராய், அதனைச் செய்த தெய்வத்தைக் குறித்தது. வியத்தல் - புகழ்தல். நயத்தல் - விரும்புதல். "தெய்வம்', என்றதற்கு, 'பிற தெய்வம்' எனவும், "மிக்கன" என்றதற்கு 'மிக்கன உளவாக நினைந்து' எனவும் உரைக்க. தெய்வம், இங்குப் பால்வரை தெய்வம். தான் என்றும் வழிபடும் பெருமான் தில்லைப் பெருமானாதல்பற்றி அவனையே யாண்டும் கூறுகின்ற தலைவன், அப்பெருமான் எழுந்தருளியிருக்கும் தலங்கள் பலவும் அவனுடையனவேயாதல் பற்றி இடை இடையே அவற்றையும் நினைந்து கூறுகின்றானாகலின், ஈண்டுக் கயிலையைக் கூறினான். முன்னர்ப் பழனத்தைக் கூறினமையும், பின்னரும் இவ்வாறு பிற தலங்களைக் கூறுதலும் காண்க.

தொல்லோன் - பழையவன், என்றது, முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளாய்ப் பின்னைப் புதுமைக்

7. புணர்ச்சி துணிதல்

ஏழுடை யான்பொழில், எட்டுடை யான்புயம், என்னைமுன் ஆள்
ஊழுடை யான்,புலி யூரன்ன பொன் இவ் வுயர்பொழில்வாய்ச்
சூழுடை ஆயத்தை நீக்கும் விதிதுணை யாமனனே
யாழுடை யார்மணங் காண்அணங் காய்வந் தகப்பட்டதே. 7

கும் பேர்த்தும்அப் பெற்றியனுவோன்' (திருவா - 163) என்றாம். இதனுல், இறைவனது அறுநித் தன்மை உணர்த்தப் பட்டது.

7. புணர்ச்சி துணிதலாவது :- தலைமகளைத் தனக்குக் கூட்டுவித்த தெய்வத்தை மகிழ்ந்த தலைவன், பின் கந்திருவமண முறையால் அவளைக் கூடத் துணிதல். இதற்குக் கொளு :-

கோவ்வைச் செவ்வாய்க் கொடியிடைப் பேதையைத்
தெய்வப் புணர்ச்சி செம்மல் துணிந்தது.

"யாழுடையார் மணங்காண்" என்றதனை இறுதிக்கண் வைத்துரைக்க. "ஏழ், எட்டு" என்றவற்றில் ஆக என்பது வருவிக்க. பொழில் - உலகம். புயம - தோள். இவ்விரண்டிடத்தும் இரண்டாவது இறுதிக்கண் தொக்கது. ஆள் - ஆளுதற்கு ஏதுவாகிய. ஊழ் - முறைமை; என்றது அருளை. புலியூர் - தில்லை. பொன் - பொன்போல்வாள். இதுவும், அருமைபற்றிவந்த உவமை. உயர் பொழில் - ஓங்கிய சோலை. 'துணையாக' என்பது, கடைக் குறைந்து நின்றது. யாழ் உடையார், கந்திருவர். அணங்கு - வருத்தும் பொருள். விருப்பம் செல்லவும், தன் பெருமைக்கு இஃது ஆகாது என்று நெஞ்சம் தடுத்தலின், தலைவியை "அணங்கு" என்றுன். அகப்பட்டது - கிடைத்த முறை. அகப்பட்டதனை வேறொன்ருகத் துணியாது, யாழுடையார் மணமாகத் துணிந்தமையின், புணர்ச்சி துணிந்தமை பெறப்பட்டது. அதனுனே, 'இனிப் புணர்ச்சிக்கு உடம்படுவாயாக' என்னும் குறிப்பெச்சமும் பெறப்படும்.

8. கலவி யுரைத்தல்

சொற்பால் அமுதிவள் யான்சுவை யென்னத் துணிந்திங்ஙனே
நற்பால் வினைத்தெய்வந் தந்தின்று நான்இவ ளாம்பகுதிப்
பொற்பா ரறிவார், புலியூர்ப் புனிதன் பொதியில்வெற்பிற்
கற்பா வியவரை வாய்க்கடி தோட்ட களவகத்தே ! 8

"புயம் எட்டுடையான்" என்றது, 'எட்டுத் திசைகளே அவனுக்குக் கை' என்னுங் குறிப்பினது. எனவே, 'பொழில் ஏழுடையான்' என்றதனால், இறைவனது தலைமையும், "புயம் எட்டுடையான்" என்றதனால், அவனது எங்கும் நிறைந்த தன்மையும், "என்னை முன் ஆள் ஊழ் உடையான்" என்றதனால், அவனது பேரருட்டன்மையும் உணர்த்தப்பட்டவாறு அறிக.

இத்துணையும் தலைவன் தனிமையின் நின்று கூறியனவாக லின், கைக்கிளை. கைக்கிளையாவது, தலைவன், தலைவியர் என்னும் இருவருள் ஒருவரிடத்தே தோன்றி நிற்கும் காதல். தலைவியது குறிப்பினைத் தலைவன் உணர்ந்த பின்னர் வந்த துறை இரண்டும், தலைவியிடத்தும் காதல் உண்மை பெறப்பட்டபின் வந்தனவாயினும், கூட்டம் நிகழ்ந்திலதாகலின், கைக்கிளைப்பால வாயின.

8. கலவியுரைத்தலாவது, தலைவன் தலைவியது கலவி யின்பத்தைப் பெற்றபின்பு அதன் இயல்பைக் கூறுதல். எனவே, 'கலவி' என்றது, அதன் இன்பத்தையாயிற்று. இதற்குக் கொளு :-

கோலவேலவன் கொடியிடையொடு
கலவியின்பங் கட்டுரைந்தது.

'புலியூர் .. ..களவகத்தே நற்பால் வினைத்தெய்வம் தந்து, சொற்பால்...... . சுவை என்று துணிந்து சொல்லும்படி இங்ஙனே இன்று....... ஆரறிவார்' எனக் கொண்டு கூட்டி யுரைக்க.

சொற்பால் - சொல்லாகிய பகுதிக்கண் பகுதி - வகை. துணிந்து என்ன - என்று துணிந்து சொல்லும்படி. இங்ஙனே - இவ்வகையாகவே. நற்பால் வினைத் தெய்வம் - நல்ல பகுதியதாகிய வினைக்கு உரிய தெய்வம். ''தந்து'' என்றதனைத் 'தர' எனத் திரிக்க. இன்று - இந்நாளில். நான் இவளாம் பகுதிப் பொற்பு - நான் இவளேயாகின்ற ஒற்றுமைப் பகுதியாகிய அழகு. 'இவள் அமுது, நான் சுவை என்று சொல்லும்படி' என்ற உவமை, தான்வேறு அவள்வேறாய் நில்லாது தானே அவளாம் தன்மைக்கு எடுத்துக்காட்டியது. இதனை, 'அமுதும், அதன்கண் கரந்துநின்ற சுவையும் என்ன என் நெஞ்சம் இவள்கண்ணே ஒடுங்க யானென்பதோர் தன்மை காணாதொழிய' என விளக்கினார் பேராசிரியர். எனினும், ''நான் இவளாம் பகுதிப் பொற்பு'' என்றதற்கு, 'இன்பந் துய்த்தற் பொருட்டாக யானென்றும், இவனென்றும் வேறுபாட்டோடு கூடிய அழகு' என உரைத்தார்; அது, 'பெறுவானும், பேறும் வேறாகாதவழி இன்பம் உளதாமாறில்லை' என்னும் உண்மையை விளக்கிற்றாயினும், ஈண்டைக்குச் சிறப்பின்று, என்னை? உலகத்துள்ள துணைமையோர் யாவரும் அவ்வாறு நின்றே இன்பந் துய்த்தலின், இவரிடைச் சிறப்பொன்றும் இன்மையான் என்க. அமுதும் சுவையும்போல இருவர் உள்ளங்களும் ஒன்றாயதே இவரிடைச் சிறப்பெனின் அச்சிறப்பு, ''என்னத் துணிந்து'' என்றதனை, ''தெய்வம் தர'' என்றதனோடு இயைப்பின், பெறப்படுமாறில்லை. அன்றியும், 'இவனோடு இவளிடையுள்ள அன்பிற்குக் காரணம் விதியன்று' என்பதனைப் புணர்ச்சி துணிதல் துறைக்கண் அவர் தடைவிடைகளான் விரித்துரைத்தமையின், ''அமுதிவள் யான்சுவை என்ன'' என்பது, தெய்வந்தருதற்குப் பயனாதலாதல், உவமையாதலாதல் கூடாதாம். ஆகவே, ''என்ன'' என்றது. ''தந்து'' என்றதனோடு இயையாது நின்று வற்றும். அதனான் அஃது உரையன்றாம்.

'துய்ப்பானது உணர்வு துய்க்கப்படும் பொருளின் வேறாய் நின்றவழி இன்பத்தினது தோற்றம் உளதாவதல்லது இன்ப நுகர்ச்சி உளதாதல் இல்லை. அவ்வாறன்றி அவனது உணர்வு அப்பொருளின்வேறாகாது அதனுள் மூழ்கி ஒடுங்கி அதுவாய வழியே அந்நுகர்ச்சி உளதாம்' என்னும் உண்மையை வெளிப்

படுத்தற் பொருட்டே அடிகள், இங்கு இத் தலைவன் கூற்றில், "நான் இவள் ஆம் பகுதி" என்றும், அதனைப், "பொற்பு" என்றும் அருளிச்செய்தார். என்னை? பேரின்ப நுகர்ச்சியாய சிவானந்தானுபவமும், இவ்வாறே உயிரினது உணர்வு சிவத்தின் வேறாய் நில்லாது அதன்கண் அழுந்தி ஒடுங்கியவழியே உளதாவது என்பதனையும் இதுபற்றி உணர்ந்து கோடல் எளிதாம் என்பதுபற்றி. எனவே, "நான் இவள் ஆம்" என்றதனால், 'நான் பிரமம் ஆகின்றேன்' (अहं ब्रह्मास्मि) எனவும், 'அது நீ ஆகின்றாய்' (तत्त्वमसि) எனவும் பிறவாறும் வரும் உபநிடத மகாவாக்கியங்களின் பொருளையே அறிவுறுத்தமை அறிந்துகொள்க.

உயிர், தான் என வேறு தோன்றாது சிவானந்தத்தின்கண் அழுந்தி அதன்கண் ஒடுங்கிநிற்கும் நிலையே 'அதீதநிலை' எனப்படும். இதனையே,

"அந்நிலை கரண மாகா வகையதில் அறிவடங்கி
மன்னிட வியாபியாய வான்பயன் தோன்றுமன்றே"

என்றது சிவப்பிரகாசம் (78). 'சிவமாந் தன்மைப் பெருவாழ்வு' எனப்படுவதும் இதுவேயாதலின், திருவாசகத்துள், "நாம் ஒழிந்து சிவமான வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ" (238) என்றும், "சிவமாக்கி எனைஆண்ட அத்தன்" (650) என்றும் கூறியதும் இந்நிலையேயாதல் அறிக. ஞானசம்பந்தரும் "பத்திப்பேர் வித்திட்டே" என்னும் திருப்பாடலுள் பலவற்றையும் பலபடியாக விரித்து, முடிவில், "மெய்ப் பரம்பொருள் - சேர்வார் தாமே தானகச் செயும் அவன்" என்று அருளிச்செய்தமை காண்க (திருமுறை - 1. 126. 7.). இவ்வாறன்றி உயிரினது உணர்வு சிவத்தின்வேறாய் நின்று அவ்வின்பத்தினை உணர்ந்தும், சொல்லியும் நிற்கும் நிலை துரிய நிலை என்றே கூறப்படும்.

இத்துரிய நிலைக்கண் நின்றவுயிரை அங்கு நின்றவாறே அதீதத்திற் செல்லவொட்டாது மீளவும் அதனைக் கீழ் நிலையில் செலுத்துவது வாதனாமலம்; அதனின் நீங்கி அதீதத்தைத் தலைப்படுதற்கு வழியாக விதிக்கப்படுவன சிவோகம் பாவனையும், திருவைந்தெழுத்துக் கணிப்பும், அந்தரியாகமுமாம்.

அவற்றுள் சிவோகம் பாவனையும் இங்குக் கூறிய "நான் இவள் ஆம் பகுதி" என்றதனாற் குறிக்கப்படும் இயல்பினதாதல் அறிக.

சிவோகம் பாவனையை உபநிடதங்கள் 'சோகம்பாவனை' எனக் கூறும். அதனை, "பண்டைமறைகளும் அதுநான் ஆனேன் என்று - பாவிக்கச் சொல்லுவதிப் பாவகத்தைக் காணே" என்னும் சிவஞான சித்தியால் (சு. 9. 7.) உணர்க.

இவற்றுலெல்லாம், மேற்காட்டிய உபநிடதவாக்கியங்கட்கு இங்ஙனம் சித்தாந்தத்துட் கூறப்பட்ட பொருளே பொருளாதலும், இவ்வாறன்றி அவ் வாக்கியங்கட்கெல்லாம், 'பிரமமே உயிர்; உயிரே பிரமம்; இவை இரண்டும் வேறு வேறு இல்லை' என்னும் மாயாவாதப் பொருள் பொருளாகாமையும் உய்த்துணர்ந்துகொள்க. இதனால், இத்திருப்பாட்டின்கண் உலகியற் பகுதிக்கண்ணும் மெய்ந்நெறிப்பொருள் ஒருவாற்றான் உணர வைத்தமை பெறப்படும்.

கல் பாவிய வரைவாய் - கற்கள் பரந்துள்ள தாழ்வரைக் கண். கடிதோட்ட - காவலை நீக்கிய. 'துளைத்தல்' என்னும் பொருளதாகிய, 'தோள்' என்னும் முதனிலை, இங்கு, நீக்குதல் மேல் நின்றது. 'கடிதொட்ட' என்பதும் பாடம். அதற்கு, 'மணம் தொடங்கிய' என்பது பொருளாம். களவகத்து - களவொழுக்கத்தின்கண். 'களவகத்து நான் இவளாம் பகுதி' என இயையும். 'ஆய பகுதி' என்னாது, "ஆம் பகுதி" என்றான்; இனியும் அஃது உளதாக விரும்பி.

இறைவனை, "புனிதன்" என்றமையால், அவன் இயல்பாகவே பாசங்களின் நீங்கிய அனாதிமுத்த சித்துருவினனாதல் உணர்த்துமுகத்தால், 'இயல்பாகவே பாசங்களுட் பட்ட அனாதி பெத்த சித்துருவினவாகிய உயிர்கட்கு அவனையன்றிப் புகலில்லை' என்பது உணர்த்தப்பட்டது.

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்"

எனத் திருவள்ளுவ நாயனாரும் அருளிச்செய்தார். என்னை? "வாலறிவன்" என்றதில், வான்மையாவது தூய்மையாகலின் என்க.

9. இருவயின் ஒத்தல்

உணர்ந்தார்க் குணர்வரி யோன்தில்லைச் சிற்றம் பலத்தொருத்தன்
குணந்தான் வெளிப்பட்ட கொவ்வைச்செவ் வாய்இக் [கொடியிடைதோள்
புணர்ந்தாற் புணருந் தொறும்பெரும் போகம்பின் னும்புதிதாய்
மணந்தாழ் புரிகுழ லாள்அல்குல் போல வளர்கின்றதே! 9

---

9. இருவயின் ஒத்தலாவது, தலைமகளிடத்துத் தலைமகனுக்கு உள்ள காதல், கூட்டம் நிகழ்தற்குமுன் உள்ளவாறே, கூட்டம் நிகழ்ந்த பின்னும் உளதாதல். எனவே, "வயின்" என்றது, இங்குக் காலத்தின்மேலதாதல் அறிக. இதற்குக் கொளு :-

ஆராவின்பத் தன்புமிகூர
வாரார் முலையை மகிழ்ந்துரைந்தது.

"உணர்ந்தார்க்கு உணர்வரியோன்" என்றதற்கு, 'தன்னை உணர்ந்தவர்கட்குப் பின் உணர்தற் கருவியாகிய சித்த விருத்தியும் ஒடுங்குதலான் மீட்டு உணர்வரியோன்' என முதற்கண் உரைத்து, பின்னர், 'உணர்ந்தார்க்குக் குணந்தான் வெளிப்பட்ட என இயைத்துரைப்பினும் அமையும்' என்றும், 'உணர்ந்தார்க்கும்' என உம்மை வருவித்து, 'தவத்தானும், தியானத்தானும் எல்லாப் பொருள்களையும் உணர்ந்தவர்க்கும் உணர்வரியோன் எனினும் அமையும்' என்றும் உரைத்தார் பேராசிரியர். அவை அனைத்தும் கொள்ளற்பாலனவே. அவற்றுள் முதற்கண் உரைக்கப்பட்ட பொருள், முன்னைத் திருப்பாட்டில், 'நான் இவளாம் பகுதி" என்றதில் குறிப்பான் உணர்த்தப்பட்டது. "சிற்றம்பலம்" என்றதில் சிறுமை நுண்மை மேலதாய் ஞானத்தைக் குறிப்பதாம். ஆகவே, "சிற்றம்பலம்' என்றது, 'ஞான அம்பலம்' என்னும் பொருட்டாய்ப் பரவெளியைக் குறித்தது. ஒருத்தன் - ஒப்பில்லாதவன். "வெளிப்பட்ட" என்ற பெயரெச்சம், 'இவள்' என்னும் பொருட்டாய் நின்ற "இக்கொடியிடை" என்றதனேடு முடியும். உவமையோடு உவமிக்கப்படும் பொருட்குள்ள

ஒற்றுமைபற்றி, 'வெளிப்பட்ட இவள்' என உவமவினை, பொருள்மேல் ஏற்றப்பட்டது. இதனையும் அவர்தம் உரையான் அறிக 'புணர்ந்தால் வளர்கின்றதே' என இயையும். எனவே, "புணர்ந்தால்" என்றதன்பின், 'போகம் பழைதாய்ச் சிறிதாய்க் குறையாது' என்பது வருவிக்கப்படும் என்பதும் பின்னர், "பெரும்போகம் பின்னும் புதிதாய் வளர்கின்றதே" என வருதலாற் பெறப்படும். படவே, "புணர்ந்தால்" என்றது, புணர்ச்சியது இயல்பு கூறுதற்குத் தோற்றுவாயாதல் விளங்கும். "பெரும்போகம் புதிதாய் வளர்கின்றது" என்றாரேனும், 'போகம் புதிதாய்ப் பெரிதாய் வளர்கின்றது' என்றலே கருத்து. "குணந்தான் வெளிப்பட்ட" என்ற உவமை, போகம் இவ்வாறு வளர்தலை விளக்குதற்கேயாம். "ஒருத்தன் குணம்" என்றதில் "குணம்" என்றது இன்பத்தை. அதனால் சிவபோகம் இவ்வாறு என்றும் புதிதாய்ப் பெருகுதலை இதனால் வலியுறுத்தவாறாயிற்று. திருவள்ளுவரும்,

"அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன் றில்லை
ஒழுக்க மிலான்கண் உயர்வு"

(குறள் 135) எனத் தாம் கூறக் கருதிய பொருளை வலியுறுத்தற்கு இங்ஙனம் உவமையாக்கிக் கூறுதல் காண்க. இறைவனது நிலை முழுவதும் உயிர்களது அறிவின் ஒருங்கே அடங்கி நில்லாமையின், சிவபோகம் என்றும் புதிதுபுதிதாய் எல்லையின்றிப் பெருகி நிற்பதாம். இறைவனது இயல்பு உயிரறிவில் அடங்குவதன்று என்பதனை, "நின்னளந் தறிதல் மன்னுயிர்க் கருமையின்" (முருகு - 278.) எனவும், "கடல் அலைத்தே ஆடுதற்குக் கைவந்து நின்றும் - கடல் அளக்க வாராதாற் போல" (திருக்களிற்றுப்படி 90) என்றும்,

"அன்றும் திருவுருவம் காணாதே ஆட்பட்டேன்
இன்றும் திருவுருவங் காண்கிலேன் — என்றுந்தான்
எவ்வுருவோ நும்பெருமான் என்பார்கட் கேதுரைப்பேன்
எவ்வுருவே நின்னுருவம் ஏது"

(அற்புதத் 61) என்றும் இன்னோரன்னவாகவரும் திருமொழிகள் பற்றி அறிந்துகொள்க. தலைமகனுக்கும் அவன் தலைமகளைப் புணருந்தொறும் போகம் பின்னும் புதிதாய்ப்

10. கிளவி வேட்டல்

அலவியை யார்க்கும் அறிவரி யோன்தில்லை யம்பலம்போல்
வளவிய வான்கொங்கை; வாட்டடங் கண்; நுதல் மாமதியின்
பிளவியல்; மின் இடை; பேரமை தோள்; இது பெற்றியென்றால்,
கிளவியை என்றோ இனிக்கிள்ளை யார்வாயிற் கேட்கின்றதே. 10

பெருகுதல் அவளது குணநலங்கள் பலவும் புதிதுபுதிதாய் வெளிப்பட்டுத் தோன்றலானே என்க. எனவே, இன்பம் விளைதல் அன்பானே என்பது பெறப்பட்டது.

> " எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
> தானமர்ந்து வருஉம் மேவற் றாகும் "

என்றார் தொல்காப்பியனாரும் (பொருள் 219).

மணம் தாழ் - நறுமணம் தங்கிய. அல்குல் வரம்பின்றி வளர்தல்போலக் கூறினார், இவ்விலக்கியம் புணர்ந்துரை வகை யானும் வருவது என்பதுபற்றி. ஏகாரம், தேற்றம். இனி, வாளாதே, 'போகம் வளர்கின்றது' என்னாது, " புரிகுழலாள் அல்குல்போல வளர்கின்றதே " என்றார், உலகின்பம் இங்ஙனம் என்றும் உளதாதல்போலத் தோன்றுதல் போலி யல்லது, இறையின்பம் போல உண்மையன்றென்பது தோன்றுதற்கு.

இதன்கண் இறைவனது இயல்புகள் பல உணர்த்தப் பட்ட வாறு அறிக.

10. கிளவி வேட்டலாவது, தலைமகளிடத்துக் கண்டும், உண்டும், உயிர்த்தும், உற்றும் அறியும் இன்பங்களை நுகர்ந்த தலைமகன் கேட்டறியும் இன்பம் ஒன்றனையும் அதுகாறும் பெருமையின் வருந்தி அதனைப்பெற விரும்பிக் கூறுதல். இதற்குக் கொளு:-

அன்னமன்னவள் அவயவங்கண்டு
மென்மொழிகேட்க விருப்புற்றது.

இதனுள் 'அவயவம் கண்டு' என்றது, 'உறுப்புக்களை நுகர்ந்து' என்றவாறு. நுகர்ச்சி, கேள்வி யொழிந்த நான்கும் என்க.

'வான்கொங்கை அம்பலம்போல் வளவிய; தடங்கண் வாள்; நுதல் மதியின் பிளவு இயல்; இடை மின்; தோள் அமை; இது (இவரது உறுப்புக்களின்) பெற்றி என்றால், இனிக் கிள்ளையார் வாயிற் கிளவியைக் கேட்கின்றது என்னோ' எனக் கூட்டி முடிக்க.

அளவி - அளவு. இது, 'துறவு, துறவியென வருதல் போன்றது' என்றார் பேராசிரியர். வளவிய - வளத்தை யுடையன. வளம், பெருமையும், பொலிவும். 'அம்பலம் எல்லையில்லாததாய்ப் பொன்மயமாய் நிற்றலின், அது போன்றன கொங்கை' என்றான். வேற்றுமைப் புணர்ச்சியன் மையின், ''வாட்டடங்கண்'' என்றதில் டகர ஒற்று விரித்தல் பெற்றது என்க. அன்றி, 'வேற்றுமை யல்வழி வேற்றுமை நிலையல்' (தொல். எழுத்து - 401) எனினுமாம். பிளவு இயல் - பிளவின் இயல்பினை யுடைத்து. மின் - மின்னல். பேரமை - பெரிய மூங்கில். கிள்ளை போல்வாளைக் 'கிள்ளை' எனக் கூறுவான், உயர்வுபற்றி, ''கிள்ளையார்'' என்றான். 'வாயின்' என்பது ஈண்டு இன்னோசை தாராமையின், 'வயின்' என்பது பாடம் எனவும் கூறுப. மேல் உறுப்புக்கள் பலவற்றையும் கூறினான், வாயினைக் கூறலே இயல்பாகலின், அதுவே பாடமாயி னும், 'வாயின்' என்பது குறுகின்றது எனக் கொள்ளுதலே சிறப்பாம். கேட்கின்றது - கேட்க விரும்புகின்றது. ''என்னோ'' என்றது, 'ஏனைய உறுப்புக்கள் இப்பெற்றியவாயின், மொழி யும் அன்னதேயாம் என்பது கேளாதே விளங்கும்' என்றதாம். மொழி கிளிமொழியோடொக்கும் என்றற்கே, ''கிள்ளையார்'' என்றான். ''கேட்கின்றது என்னோ'' என்றதனால், கேட்டற் கண் விருப்பம் நீங்கினானல்லன்; கேளாமையானாகிய வருத்தம் புலப்படுத்தான் என்க. எனவே, அவ்விருப்பத்தினை அவள் நிரப்புவாளாவது இதன் பயனாயிற்று.

இறைவன், ஒருவராலும் அளவறியப்படாதவன், எனவே, அவனது பெருமையும், உயிர்களது சிறுமையும் இதன்கண் உணர்த்தியவாறு அறிக.

11. நலம்புனைந்துரைத்தல்

கூம்பலங் கைத்தலத் தன்பர்என் பூடுரு கக்குனிக்கும்
பாம்பலங் காரப் பரன்தில்லை யம்பலம் பாடலரின்
தேம்பலஞ் சிற்றிடை யீங்கிவள் தீங்கனி வாய்கமழும்
ஆம்பலம் போதுள வோஅளி காள்நும் அகன்பணையே. 11

12. பிரிவுணர்த்தல்

சிந்தா மணிதெண் கடலமிர் தம்தில்லை யான்அருளால்
வந்தால் இகழப் படுமே? மடமான் விழிமயிலே,
அந்தாமரையன்ன மேநின்னை யானகன் றுற்றுவனோ?
சிந்தா குலமுற்றென் னோஎன்னை வாட்டந் திருத்துவதே? 12

---

11. நலம்புனைந்துரைத்தலாவது, களவி வேட்டுத் தலைமகன் வருந்தியது கண்டு தலைமகள் புன்முறுவல் செய்ய அதனால் அவ் வருத்தம் நீங்கிய தலைமகன், அம்முறுவலையுடைய அவளது வாயினைப் புனைந்துரைத்து மகிழ்தல். இதற்குக் கொளு :-

பொங்கிழையைப் புனைநலம்புகழ்ந்
தங்கதிர் வேலோன் அயர்வுநீங் கியது.

கூம்பல் அங்கைத் தலத்து அன்பர் - குவிதலையுடைய அகங் கைகளை யுடைய அடியார். 'அல்லும், அம்மும், சாரியை' என விடுத்து, 'கூம்பு கைத்தலம்' என்பர் பேராசிரியர். குனிக்கும் - நடனம் செய்கின்ற. 'தில்லையம்பலம் பாடாதவரைப் போலத் தேம்புதலையுடைய இடை' என்றான். "ஈங்கிவள்" என்றது, ஒருசொல் நீர்மைத்து. 'வாய்போலக் கமழும் ஆம்பற்போது' என்க. அம், சாரியை. அளிகாள் - வண்டுகளே. பணை - மருதநிலம். இவ்விடத்து ஏழாவது இறுதிக்கண் தொக்கது. "கொங்குதேர் வாழ்க்கை" என்னும் குறுந்தொகைப் பாட்டினை (2) இதனுடன் வைத்து நோக்குக. 'சிவபெருமான் தன் அன்பர்க்கு ஆனந்தத்தைப் பொழிபவன்' என்பதும், 'அவனது அம்பலத்தைப் பாடாதவர் தேம்புவர்' என்பதும் கூறப்பட்டன. தேம்புதல் - மெலிதல்.

12. பிரிவுணர்த்தலாவது, தலைமகளது நலத்தைத் தலைமகன் பெரிதும் புகழக் கேட்ட தலைமகள் நாணினால் வருந்த,

13. பருவரல் அறிதல்

கோங்கிற் பொலிஅரும் பேய்கொங்கை பங்கன் குறுகலர்ஊர்
தீங்கிற் புகச்செற்ற கொற்றவன் சிற்றம் பலம்அனையாள்
நீங்கிற் புணர்வரி தென்றோ, நெடிதிங்ங னேயிருந்தால்
ஆங்கிற் பழியா மெனவோ அறியேன் அயர்கின்றதே. 13

'இவள் வருந்துகின்றது, யான் பிரிவேன் என்னும் கருத்தினாற் போலும்' என நினைந்த தலைமகன், தான பிரியாது பிரிதலைக் கூறுதல். இதற்குக் கொளு :-

பனிவளர் அல்குலைப் பயிர்ப்புறுத்திப்
பிணிமலர்த் தாரோன் பிரிவுணர்த் தியது.

இகழப் படுமே - இகழப்படுமோ. மடமான் - இளையமான். "மயிலே, அன்னமே" என்றவை, உருவகங்கள். "நின்னை" என்றது, 'அச் சிந்தாமணி, அமிர்தம் என்பவற்றினும் சிறந்து தெய்வத்தால் தரப்பட்ட உன்னை' எனப் பொருள் தரும். சிந்தாகுலம் - மன வருத்தம். "வாட்டந் திருத்துவது" என்றது, வாட்டுவது' என்னும் பொருட்டாய் ஒருசொல் நீர் மைத்து.

'சிந்தாமணியும், தெண்கடல் அமிர்தும் பெற்றுத் தேவரா தற்குத் தில்லையான் அருள் வேண்டும்' என்பது கூறப்பட்டது.

13. பருவரலறிதலாவது, "நின்னை யான் அகன்று ஆற்று வனோ" என்று தலைவன் கூறக் கேட்ட தலைவி, 'அகலுதலும் (பிரிதலும்) உண்டுபோலும்' என்று அறிந்து பெரிதும் வருந்த, அவ்வருத்தம் எதனான் ஆயிற்று எனத் தலைவன் ஆராயாநிற்றல் இதற்குக் கொளு :-

பிரிவுணர்ந்த பெண்கொடிதன்
பருவரலின் பரிசுநினைந்தது.

'சிற்றப்பலம் அனையாள் அயர்கின்றது, நீங்கிற் புணர்வரி தென்றோ, இங்ஙனே நெடிது இருந்தால், ஆங்கு இற்பழியாம் எனவோ, அறியேன்' எனக் கூட்டி யுரைக்க.

14. அருட்குணம் உரைத்தல்

தேவரிற் பெற்றநஞ் செல்வக் கடிவடி வார்திருவே,
யாவரிற் பெற்றினி யார்சிதைப் பார்! இமை யாதமுக்கண்
மூவரிற் பெற்றவர் சிற்றம் பலமணி மொய்பொழில்வாய்ப்
பூவரிற் பெற்ற குழலிஎன் வாடிப் புலம்புவதே? 14

கோங்கின் பொலி - கோங்க மரத்தின்கண் விளங்குகின்ற. அரும்பு ஏய் - அரும்புபோலும். "கொங்கை" என்றது, அதனை யுடைய உமாதேவியைக் குறித்தது. குறுகலர் - பகைவர்; திரிபுரத்தவர். ஆங்கு - ஆயத்திடத்து. இல் - குடி.

'சிவபெருமான் மாதொருகூறனாகிய அருளாளனாயினும், திரிபுரத்தை அழித்த மறக்கருணையையும் உடையவன்' என்பது கூறப்பட்டது.

14. அருட்குணம் உரைத்தலாவது, "நெடிது இங்ஙனே இருந்தால் இற்பழியாம் எனவோ" எனத் தலைவன் கூறியதனானே தலைவி அதனை நினைந்து வருந்த, அஃது ஆகாமை கருதி அவள் உடம்படுமாற்றால் நம் பிரிவு பிரிவாகாது; அவ்வாறுள்ளது தெய்வத்தின் அருள் எனக் கூறுதல். இதற்குக் கொளு :-

கூட்டிய தெய்வத் தின்னருட் குணம்
வாட்ட மின்மை வள்ள லுரைத்தது.

தேவரின் - தேவரால். செல்வக்கடி - சிறப்புடைய மணம். 'செல்வக்கடியை இனி யார் சிதைப்பார்' என்க. வடிவு ஆர் திருவே - என் கண்ணிற் காணும் வடிவு பொருந்திய திருமகளே. யாவரிற் பெற்று - சிதைக்கும் வழியை யாவராலே பெற்று. மூவர் - சூரியன், சந்திரன், அக்கினி. முக்கண்களை மூவரால் பெற்றவர் என்க. 'பொழில்வாய்ப் பூ' என இயையும். பூ அரில் - பூக்களினது பிணக்கம்.

'உலகிடைத் தோன்றும் ஒளிகள் யாவும் சிவபெருமானது திருமேனியின் ஒளியே' என்பது கூறப்பட்டது.

15. இடமணித்துக் கூறி வற்புறுத்தல்

வருங்குன்றம் ஒன்றுரித் தோன்தில்லை யம்பல வன்மலயத்
திருங்குன்ற வாண ரிளங்கொடி யேஇட ரெய்தல்;எம்மூர்ப்
பருங்குன்ற மாளிகை நுண்களபத்தொளி பாயநும்மூர்க்
கருங்குன்றம் வெண்ணிறக் கஞ்சுகம் ஏய்க்குங் கனங்குழையே.

16. ஆடிடத்துய்த்தல்

தெளிவளர் வான்சிலை செங்கனி வெண்முத்தந் திங்களின்வாய்ந்
தளிவளர் வல்லியன் னய்முன்னி யாடுபின் யான்அளவா
ஒளிவளர் தில்லை ஒருவன் கயிலை உகுபெருந்தேன்
துளிவளர் சாரற் கரந்துங்க னேவந்து தோன்றுவனே. 16

---

15. இடம் அணித்துக் கூறி வற்புறுத்தலாவது, அருட் குணம் உரைத்து வற்புறுத்தவும் ஆற்ருளாய தலைமகளைத் தலைமகன் அவள் ஊர்க்குத் தன் ஊர் அணித்தாதலைக் கூறி வற்புறுத்தல். இதற்குக் கொளு ;-

மடவரலை வற்புறுத்தி
இடமணித்தென் றவனியம்பியது.

வரும் குன்றம் – நடக்கும் மலை ; யானை. 'இருடிகள் யாகத்திலே தோன்றிவரும் மலைபோன்ற யானை' என்பது பழைய உரை. மலயம் - பொதிய மலை. இரு - பெரிய. குன்ற மாளிகை- மலைபோன்ற மாளிகைகள். களபம் - சாந்து. சுதை. கஞ்சுகம்- சட்டை. ஏய்க்கும் – ஒக்கும். கனங்குழை - கனமான குழையையுடையவள்.

'சிவபெருமான் தீயோரை அழித்து நல்லோரைக் காப்பவன்' என்பது கூறப்பட்டது.

16. ஆடிடத்து உய்த்தலாவது, 'யான் விரைவில் வருவேன்; நீ ஆயத்தாருடன் சென்று விளையாடு' எனத் தலைவன் தலைவியை அவர் ஆரும் இடத்தில் செலுத்துதல் இதற்குக் கொளு ;-

17. அருமை அறிதல்

புணர்ப்போன் நிலனும் விசும்பும் பொருப்புந்தன் பூங்கழலின்
துணர்ப்போ தெனக்கணி யாக்குந்தொல் லோன்தில்லைச்
[சூழ்பொழில்வாய்
இணர்ப்போ தணிகுழல் ஏழைதன் னீர்மைஇந் நீர்மையென்றாற்
புணர்ப்போ! கனவோ! பிறிதோ! அறியேன் புகுந்ததுவே. 17

வன்புறையின் வற்புறுத்தி
அன்புறு மொழியை அருககன்றது.

தெளி வளர் - விளக்கம் மிகுந்த. சிலை, கனி, முத்தம், திங்கள் இவை முறையே புருவம், வாய், பல், முகம் என்பவற்றைக் குறித்தன. அதனால், சிலை முதலிய மூன்றும் திங்களிடத்தே உளவாகக் கூறினான். வாய்ந்து - வாய்க்கப் பெற்று அளி - வண்டுகள். வல்லி - கொடி. முன்னி - முற்பட்டு 'பின் யான் தோன்றுவன்' என்க. அளவா ஒளி - அளக்கப்படாத ஒளி, என்றது, பேரறிவை. 'கயிலைச் சாரல்' என இயையும், உங்ஙன் - உவ்விடத்து.

சிவபெருமானது திருச்சிற்றம்பலம் சிற்பர வியோமமாதல் கூறப்பட்டது.

17. அருமையறிதலாவது, தலைவியை அவள் ஆடிடத் துய்த்த தலைவன், அவ்விடத்து அவளைச் சூழ்ந்து நிற்கும் ஆய வெள்ளத்தையும், பிறவற்றையும் கண்டு அவள் தனக்குக் கிடைத்த அருமையை அறிந்து கூறுதல். இதற்குக் கொளு:-

சுற்றமும் இடனும் சூழலும் நோக்கி
மற்றவள் அருமை மன்னன் அறிந்தது.

புணர்ப்போன் - படைப்போன். நிலன் முதலிய மூன்றினும் இரண்டாவது இறுதிக்கண், தொக்கது. பூ - பொலிவு. "கழலின்" என்ற இன், அல்வழிக்கண் வந்த சாரியை. துணர்ப் போது - கொத்தாகிய பூ. இரண்டு திருவடிகளையும் சுட்டி, 'துணர்ப் போது' என்றான். அணி - தலைக்கு அணியும் அணி. இணர்ப் போது - கொத்தாகிய மலர். ஏழை - பெண்.

18. பாங்கியையறிதல்

உயிரொன் றுளமுமொன் றென்றே சிறப்பிவட் [கென்னெடென்னப்
பயில்கின்ற, சென்று செவியுற நீள்படைக் கண்கள்விண்வாய்ச்
செயிரொன்று முப்புரஞ் செற்றவன் தில்லைச்சிற் றம்பலத்துப்
பயில்கின்ற கூத்தன் அருளென லாகும் பணிமொழிக்கே. 18

புணர்ப்போ - மாயமோ. 'ஏழைதன் நீர்மை இந்நீர்மை என்றால், சூழ்பொழில்வாய் இவள் புகுந்தது யாதோ அறியேன்' என்க.

'சிவபெருமானே உலகைத் தோற்றுவிக்கும், முதல்வன்' என்பதும், அவன் தன் அடியவர் சென்னிக்கே தனது திருவடி மலர்களைச் சூட்டியருளுவன்' என்பதும் கூறப்பட்டன.

18. பாங்கியை அறிதலாவது, தலைவியது அருமை யறிந்த தலைமகன், அவளது நோக்கத்தால், அவளுக்கு உற்ற காதல் தோழி இவள் என அறிதல். இதற்குக் கொளு :-

கடல்புரை ஆயத்துக் காதற் றோழியை
மடவரல் காட்ட மன்னன் அறிந்தது.

'இவட்கு என்னொடு உயிர் ஒன்று; உளமும் ஒன்று; சிறப்பு ஒன்று' என்றது, தலைவியது கருத்தைத் தலைவன் கொண்டு கூறியது. சிறப்பு, இருமுதுகுரவர் செய்வன. என்ன- என்று கருதுதலால். 'கண்கள் பயில்கின்ற' எனக் கூட்டுக. செயிர் ஒன்று - குற்றம் பொருந்திய. பயில்கின்ற - இடை விடாது செல்கின்றன. கூத்தப்பெருமான் திருவருள் பேரானந் தத்தைத் தருவதாகலின், தனக்கு இனியளாகிய அவளை அதனோடு ஒப்பித்தான். 'பணிமொழிக்குப் பயில்கின்ற' என்றது, 'நம்பிக்கு மூக்கு கூரிது' என்றாற்போல நின்றது. இத்துணையும் இயற்கைப் புணர்ச்சி,

சிவபெருமான் விண்ணில் திரியும் முப்புரம் தீயெழச் செற்றுத் தேவர்க்கு அருள்புரிந்த திறலினனாதல் கூறப்பட்டது.

2. பாங்கற் கூட்டம்

[பாங்கற் கூட்டமாவது; தெய்வத்தாறுய இயற்கைப் புணர்ச்சியைப் புணர்ந்த தலைமகன் அதனேடே களவொழுக்கத்தை விடுத்துத் தலைமகளை அவள் தமர் கொடுப்ப வரைந்து கொள்ளுதல் சிறப்புடைத்து' அவ்வாறன்றிப் பிற்றைநாளும் அவ்வாற்ருனை கூடக் கருதுவனுயின், 'இடந்தலைப்பாடு. பாங்கற் கூட்டம், பாங்கியிற் கூட்டம்' என்னும் முறைகளாற் கூடுவனுதலின், அவற்றுள் பாங்கன் துணையாகக் கூடும் கூட்டம் பாங்கற் கூட்டமாம். எனவே, பாங்கனுற் கூடுதல் பாங்கற் கூட்டம் என்பதாயிற்று. 'பாங்கன்' என்னும் உயர்திணைப் பெயரின் ஈறு திரிதல், இரண்டாவதற்குத் திரிபோதிய அக் குறிப்பானே பெறப்படும். இவ்வாறன்றி, 'பாங்கற் கூட்டமாவது பாங்கனைக் கூடுதல்' என உரைத்தல் ஏற்புடைத்தாமாறில்லை. பாங்கற் கூட்டத்தை அடிகள் முப்பது துறைகளாக வகுத்தருளிச் செய்கின்ருர். அவற்றிற்கு நூற்பா வருமாறு ;-

[1] நினைதல், [2] வினுதல், [3] உற்ற துரைத்தல்,
[4] கழறல், [5] மறுத்தல். [6] கவன்றுரைத் தல்லே,
[7] வலியழி வுரைத்தல். [8] விதியொடு வெறுத்தல்,
[9] நொந்து கூறல், நோதல் நீங்கி
[10] இயலிடங் கேட்டல், [11] இயலிடங் கூறல்,
[12] வற்புறுத் தல், [13] குறி வழிச்சேறல், [14] காண்டல்,
[15] வியந்துரைத் தல், [16] அம் மெல்லியல் தன்னைக்
சண்டமை கூறல், கருத்துக் கேற்பச்
[17] செவ்வி செப்பல், [18] அவ்விடத் தேகல்,
ஈங்கிவை நிற்க இடந்தலை தனக்கும்
[19] ஆங்கவள் மெலிதல், [20] பொழில் கண்டு மகிழ்தல்,
நீங்கா மகிழ்வொடு, [21] நிலைகண்டு வியத்தல்,
[23] தளர்வகன் றுரைத்தல், [24] மொழிபெற வருந்தல்,
[22] கண்புதை, [25] வருத்தம், காவல் [26] நாண்விடல்,
நண்பொடு சென்று [27] நன்மருங் கணைதல்,
[28] இன்றியமையாமை, [29] ஆயத் துய்த்தல்,
[30] நின்று வருந்தல் நிகழ்ஆறைந்தும்
துன்று பாங்கற் றலைபயென மொழிப]

1. பாங்கனை நினைதல்

பூங்கனை யார்புனல் தென்புலி யூர்புரிந் தம்பலத்துள்
ஆங்கெனை யாண்டுகொண் டாடும் பிரான்அடித் தாமரைக்கே
பாங்கனை யான்அன்ன பண்பனைக் கண்டிப் பரிசுரைத்தால்
ஈங்கெனை யார்தடுப் பார்மடப் பாவையை எய்துதற்கே. 19

உ. பாங்கன் வினுதல்

சிறைவான் புனல்தில்லைச் சிற்றம் பலத்தும்என் சிந்தையுள்ளும்
உறைவான் உயர்மதிற் கூடலின் ஆய்ந்தஒண் டீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனை யோ ? அன்றி ஏழிசைச் சூழல்புக்கோ ?
இறைவா தடவரைத் தோட்கென்கொ லாம்புகுந் தெய்தியதே.

---

19 பாங்கனை நினைதலாவது, தலைவியது அருமையை அறிந்த தலைமகன், அவளை மீட்டும் எய்துதற்கு அவள்தன் காதல் தோழியையும் அறிந்து, அவள் எளிதின் தன் குறை முடிக்க இசையாளாகலின், தன் உயிர்ப்பாங்கனை நினைதல். இதற்குச் செய்யுள் :-

எய்துதற் கருமை ஏழையிற் றேன்றப்
பையுள் உற்றவன் பாங்கனை நினைந்தது

' பூம் புனல், கனை ஆர் புனல் ' எனத் தனித்தனி இயையும். கனை ஆர் - ஒலித்தல் நிறைந்த. ' புலியூரைப் புரிந்து ' என்க. புரிந்து - விரும்பி. ஆங்கு - அவ்வாறு; என்றது பண்டறி சுட்டு. பாங்கன் - பாங்குடையவன். பாங்கு - உரிமை இதனால், இத்தலைவன்றன் பாங்கனும் தில்லைக் கூத்தப் பெருமான் திருவடிக்கு அன்பன் என்பது பெறப்பட்டது. யான் அன்ன பண்பன் - யானேபோலும் தன்மையுடையவன்.

ஆடும் பிரானுக்கு ஆட்படும் சிறப்புக் கூறப்பட்டது.

20. பாங்கன் வினுதலாவது தன்னை நினைந்துவருகின்ற தலைவனைக் கண்ட பாங்கன், அவனது மெலிவிற்குக் காரணத்தை வினவுதல். இதற்குச் செய்யுள் :-

கலிகெழு திரள்தோள் மெலிவது கண்ட
இன்னுயிர்ப் பாங்கன் மன்னனை வினயது.

'சிறைப் புனல், வான் புனல்' என்க. சிறை - அணையை யுடைய. வான் - மிக்க. இறைவன், புறத்தில் சிற்றம்பலத்தி லும், அகத்தில் இதய வெளியிலும் நிற்றலைக் குறித்தவாறு. சிற்றம்பலம், வடமொழியில், 'தகராகாசம்' எனப்படும். தகரம், சிறுமை. இதயத்தின்கண் உள்ள சிறு வெளியில் சிற்றொளி வடிவாயுள்ள இறைவனைத் தியானிக்கும் முறையை உபநிடதம் தகரவித்தை எனக் கூறுதல் முதலியன, ஆறாந் திருமுறைக் குறிப்பிற் கூறப்பட்டன (பக். 128). 'சிற்றம்பலமாகிய நல்ல இடத்தும், என் நெஞ்சமாகிய தீய இடத்தும் ஒப்பத் தங்கும்' என்பது பேராசிரியர் உரை. இக்குறிப்புப் பழைய உரையிலும் உளது. 'உறைவான் ஆய்ந்த தமிழ்' என்பது பழைய உரை. 'உறைவானது கூடல்' என்பது பேராசிரியர் உரை. கூடற் பெருமானை, "தலைச்சங்கப் புலவனார்" எனச் சிறந்தெடுத்தோதுப (பெ. பு. ஞானசம். 667.) ஆதலின், பழைய உரையே சிறப்புடைத்து. "இசை" எனப் பின் வருதலின், "தமிழ்" என்றது, இயற்றமிழையாயிற்று. இயற் றமிழின் துறைகளாவன, அகப்பொருள் துறைகளும், புறப் பொருள் துறைகளுமாம். ஏழிசையாவன, 'குரல் துத்தம், கைக்கிளை, விளரி, தாரம், உழை, இளி' என்பன. இவற்றின் குழலாவன, இவை நிறைந்தும், குறைந்தும், நிறத்தொடு பொருந்தி, 'பண், திறம், திறத்திறம்' என்னும் வகையில் மத்திமம், மந்தப், தாரம் என்பவற்றால் பயின்று வரும் நிலைகள். இயலும், இசையும் கூறியவாற்றால் நாடகமும் இனம்பற்றிக் கொள்ளப்படும். "நுழைந்தனையோ, புக்கோ" எனத் தனித்தனி வினயவாற்றால், மூத்தமிழுள் ஒன்றை உணரப் புக்க வழியும் உடல் மெலிவு உளதாதல் பெறப்பட்டது. 'நின் தோள்கள் மெலிவன அல்ல என்பான், "தடவரைத் தோள்" என்றான். 'நின்தோள்' எனச் சொல்லெச்சம் வருவிக்க. என் - எதனினுடைய மெலிவு. கொல், ஆம் அசைநிலைகள். புகுந்து எய்தியது - வந்து பொருந்தியது.

சிவபெருமான், உயிர்களின் புறத்தும், அகத்தும் நின்று அருள்புரியுமாறு கூறப்பட்டது.

3. உற்றதுரைத்தல்

கோம்பிக் கொதுங்கிமே யாமஞ்ஞை குஞ்சரங் கோளிழைக்கும்
பாம்பைப் பிடித்துப் படங்கிழித் தாங்கப் பணைமுலைக்கே
தேம்பற் றுடியிடை மான்மட நோக்கிதில் லைச்சிவன்தா
ளாம்பொற் றடமலர் சூடுமென் ஆற்றல் அகற்றியதே. 21

4. கழறியுரைத்தல்

உளமாம் வகைநம்மை உய்யவந் தாண்டுசென் றும்பருய்யக்
களமாம் விடம்அமிர் தாக்கிய தில்லைத்தொல் லோன்கயிலை
வளமாம் பொதும்பரின் வஞ்சித்து நின்றொர்வஞ் சிம்மருங்குல்
இளமான் விழித்ததென் றேஇன்றெம் அண்ணல் இரங்கியதே.

---

21. உற்றதுரைத்தலாவது, அங்ஙனம் வினவிய பாங்கனுக்குத் தலைவன், தனக்கு உண்டாய மெலிவினைக் கூறுதல். இதற்குச் செய்யுள்:-

மற்றவன் வினவ — உற்ற துரைத்தது.

கோம்பி - பச்சோந்தி. மஞ்ஞை - மயில். பச்சோந்தியால் மயில் கொல்லப்படும் என்ப. 'குஞ்சரத்தை' என உருபு விரிக்க. கோள் - கொலை. பணை - பருத்த. 'மான் மட நோக்கி துடி இடை என் ஆற்றல் அகற்றியது' எனக் கூட்டுக. மான் மட நோக்கி - மானினது மடநோக்கத்தை யுடையவள். 'கோம்பிக்கு அஞ்சி ஒளிந்து கிடக்கும் மயில், யானையைக் கொல்லும் ஆற்றல் வாய்ந்த பாம்பைக் கொன்றாற்போல, கொங்கைகட்கு மெலியும் இடை, தில்லைச் சிவன் தாளைச் சூடிப் புறப்பகையோடு அகப்பகையாகிய வினையையும் வெல்லவல்ல எனது ஆற்றலைக் கெடுத்தது' என்றான். பொன் தட மலர் - பொன் போலச் சிறந்த பெரிய தாமரை மலர்.

சிவபெருமானது திருவடி மலரைச் சூடிக்கொள்வார், பகையையும், வினையையும் வெல்லுதல் கூறப்பட்டது.

22. கழறியுரைத்தலாவது, தலைவன், தனக்கு உற்ற துரைப்பக் கேட்ட பாங்கன், 'இது நின் பெருந் தகைமைக்கு ஏலாது' என நெருங்கிக் கூறுதல். இதற்குச் செய்யுள்:-

5. கழற்றெதிர்மறுத்தல்

சேணிற் பொலிசெம்பொன் மாளிகைத் தில்லைச்சிற் றம்பலத்து
மாணிக்கக் கூத்தன் வடவான் கயிலை மயிலை,மன்னும்
பூணிற் பொலிகொங்கை ஆவியை, ஓவியப் பொற்கொழுந்தைக்.
காணிற் கழறலை ; கண்டிலை மென்றோட் கரும்பினையே. 23

வெற்பனைத்தன் மெய்ப்பாங்கன்
கற்பனையிற் கழறியது.

உளமாம் வகை உய்ய - இவ்வுலகில் உள்ளேமாகின்ற வகையினின்றும் (பிறத்தலினின்றும்) தப்புமாறு. இனி, 'உளமாம் வகை ஆண்டு' என இயைத்து, 'நம் பிறப்புப் பயனுடையதாமாறு ஆட்கொண்டு' என உரைத்தலுமாம். சென்று - தன் இடத்திற்குச் சென்று, "வந்து ஆண்டு" எனவும், "சென்று விடம் அமிர் தாக்கிய" எனவும் கூறிய தனுல், அடியார்க்கு எளியனுயும், பிறர்க்கு அரியனுயும் நிற்றல் தோற்றுவிக்கப்பட்டது. களம் - கண்டம்; மிடறு. அமிர் தாக்கியது - தீங்கிழையாததாகச் செய்தது. பொதும்பர் - சோலை. வஞ்சித்து - மறைந்து. மறைந்தது, நாணினுல். "எம் அண்ணல்" என்றது, 'எவற்றிற்கும் தளர்வடையாத எங்கள் தலைவன்' எனப் பொருள் தந்தது. இது, முன்னிலைக்கண் படர்க்கை வந்தவாறு. 'எம் அண்ணல் இரங்கியது ஓர் இள மான் வஞ்சித்து நின்று விழித்ததென்றோ' என இயையும். 'இது பெரிதும் நகையாம்' என்பது குறிப்பெச்சம்.

சிவபெருமான், ஞானத்தை, தானே முன்வந்தும் பிறவற்றை; அவரவர் வேண்டவும் அருளுதல் கூறப் பட்டது.

23, கழற்றெதிர் மறுத்தலாவது, காதற் பாங்கன் கழறியது கேட்ட தலைவன், 'யான் கண்ட வடிவை நீ கண்டா யாயின் இங்ஙனம் கழருய்' என மறுத்துரைத்தல். இதற்குச் கொளு :-

ஆங்குயி ரன்ன பாங்கன் கழற
வளந்தரு வெற்பன் உளந்தளர்ந் துரைத்தது.

6. கவன்றுரைத்தல்

விலங்கலைக் கால்விண்டு மேன்மே லிடவிண்ணும் மண்ணும்
[முந்நீர்க்
கலங்கலைச் சென்றஅன் றுங்கலங் காய்;கமழ் கொன்றைதுன்றும்
அலங்கலைச் சூழ்ந்தசிற் றம்பலத் தான்அரு ளில்லவர்போல்
துலங்கலைச் சென்றிதென் னோ வள்ளல், உள்ளந் துயர்கின்றதே!

'மென்றோட் கரும்பினைக் கண்டிலை; காணிற் கழறலை' எனக் கூட்டுக.

சேண் - ஆகாயம். மாணிக்கக் கூத்தன் - மாணிக்கம் போல உயர்ந்த கூத்தினை உடையவன். ''வடகயிலை'' என்றது, இயைபின்மை நீக்கிய விசேடணம். 'அம் மயிலை' எனச் சுட்டு வருவிக்க. மன்னும் - நிலைபெற்ற. பூணிற் பொலி - அணி கலங்களோடு விளங்குகின்ற. 'என் ஆவியை' என ஒரு சொல் வருவிக்க. ஓவியப் பொற் கொழுந்து - ஓவியங்களுட் பொன்னால் புனையப்பட்ட ஓவியம். ''மயில், ஆவி, கொழுந்து'' என்றன ஒரு பொருள்மேற் பல பெயர். இவற்றால் பலவற்றினும் அத் தன்மை யுடையாளையே கருதினுகலின், இவை ஒப்புமை பற்றி வந்த பான்மை வழக்குக்கள். மேல், 'மான்' என்றது இழிவு குறித்து நின்றமையின் உருவகமாம். இவ்வாறு இனியும் வருவன உள; அவற்றை அறிந்துகொள்க. தோட் கரும்பு - தோளை யுடைய கரும்பு. ''மென்றோட் கரும்பினை'' என்றதற்கு 'மெல்லிய தோளில் எழுதிய கரும்பினை யுடையாளை எனினும் அமையும்' என்பர் பேராசிரியர்.

சிவபெருமானது கூத்தினது உயர்வு கூறப் பட்டது.

24 கவன்றுரைத்தலாவது, தலைவன் கழற்றெதிர் மறுத்த பின்னர்ப் பாங்கன், 'எதற்கும் கலங்காத நீ கலங்குவது என்னோ' எனக் கவலையுற்றுரைத்தல். இதற்குக் கொளு :-

கோலக்களிற் றன்னல் குறைநயந் துரைப்பக்
கலக்கஞ்செய் பாங்கன் கவன்று ரைந்தது.

7. வலியழிவுரைத்தல்

தலைப்படு சால்பினுக் குந்தள ரேன்சித்தம் ; பித்தன்என்று
மலைத்தறி வாரில்லை ; யாரையுந் தேற்றுவன் ; எத்துணையும்
கலைச்சிறு திங்கள் மிலைத்தசிற் றம்பல வன்கயிலை
மலைச்சிறு மான்விழி யால்அழி வுற்று மயங்கினனே. 25

விலங்கல்-மலை. கால்-காற்று. விண்டு, ‘விள்வித்து’ எனப் பிறவினைப் பொருள் தந்தது, ‘பிளந்து’ என்றபடி. இதனை, ‘பிளந்து’ என்பதுபோல, தன்வினை, பிறவினை இரண்டற்கும் பொது என்பர் பேராசிரியர். இட - எறிய. அழிவின் விரைவு தோன்ற விண்ணினை முற்கூறினார். முந்நீர் - கடல். ‘முந்நீரால்’ என உருபு விரிக்க. சென்ற - பொருந்தின ; இதனை ‘அவன் நாளை வாளொடு வெகுண்டு வந்தான் ; நீ என் செய்வை’ என்பதுபோலக் கொள்க. கொன்றை - கொன்றைப்பூ. அலங்கல் - மாலை. சூழ்ந்த - சுற்றிக்கொண்ட. ‘துளங்கல்’ என்பது எதுகை நோக்கித் திரிந்தது. துளங்கல் - நடுங்குதல். சென்று - அடைந்து. வள்ளல், விளி.

சிவபெருமானது அடையாள மாலை கூறப்பட்டது. கொன்றை, பிரணவத்தின் வடிவம் என்ப.

25. வலியழிவுரைத்தலாவது, பாங்கன் கவன்றுரைத்த பின்னும் தலைவன் தான் வலி இழந்தமையைக் கூறுதல் இதற்குக் கொளு :-

நிறைபொறை தேற்றம் நீதியோடு சால்பு
மறியுறு நோக்கிற்கு வாடினேன் என்றது.

தலைப்படு சால்பு - எல்லாவற்றினும் மேலாய நிறைவு ; என்றது சான்றோர் இயல்பினை, அதற்கும் தளராமை, அவரால் இகழப்படாது நன்கு மதிக்கப்படும் பெருமையுடைமை. சித்தம்- சிந்தித்துத் துணிந்த பொருள். ‘சித்தத்தால்’ என உருபு விரிக்க. சித்தத்தால் பித்தனாதலாவது, ஒன்றை மற்றொன்றாகத் துணிதல். மலைத்து - என்னோடு மாறுபட்டு, ‘யாரையும் எத்துணையும் தேற்றுவன்’ என்க. “தளரேன்” முதலிய

8. விதியோடு வெறுத்தல்

நல்வினை யுந்நயந் தந்தின் று வந்து ; நடுங்குமின்மேற்
கொல்வினை வல்லன கோங்கரும் பாம்என்று பாங்கன்சொல்ல,
வில்வினை மேருவில் வைத்தவன் தில்லை தொழாரின்வெள்கித்
தொல்வினை யால்துய ரும்மென தாருயிர் துப்புறவே. 26

மூன்ருனும், முறையே, சான்ருண்மை, நல்லறிவு, உலகநடை என்னும் மூன்றையும் முன்னர் உடையனுய் இருந்தமை கூறினுன். இவற்றைக் கூறியது, அவற்றை இழந்து நிற்கும் நிலை கருதி. கலை - ஒருகலையாகிய. சிறுமான் - இளமான்,

" ஒண்ணுதற் கோஒ உடைந்ததே ஞாட்பினுள்
நண்ணுரும் உட்கும்என் பீடு "

என வந்த திருக்குறளும் காண்க (1088).

சந்திரனைத் தரித்தமை கூறுமுகத்தான், சிவபிரானது அருட் குணம் கூறப்பட்டது.

கிளவிகளைக் கூறும் நூற்பாக்களைக் கொள்ளாமையின், பழைய வுரையுள் இதுவும், அடுத்த திருப்பாட்டும் பின் முன்னுக மாறிக் காணப்படுகின் றன.

26. விதியோடு வெறுத்தலாவது, தலைவன் வலியழி வுரைக்கக் கேட்ட பாங்கன், 'ஊழிபெயரினும் பெயராத எம் பெருமானது சால்பு முதலியவற்றைச் சில கோங்கரும்புகள் தகர்த்து விட்டன; காண்மின்' என நகையாடிக்கூறத் தலை மகன் தனக்குத் துணை செய்ய நினையாத பாங்கன்முன் தன் விதியொடு வெறுத்துக் கூறுதல். இதற்குக் கொளு :-

கல்விமிகு பாங்கன் கழற வெள்கிச்
செல்வமிகு சிலம்பன் தெளிந்து செப்பியது.

" நடுங்கு மின்மேல் " என்றதனை, " கோங்கரும்பு " என்றதன் முன்னர்க் கூட்டுக. நடுங்கும் மின், இடை. அதன் மேல் உள்ள கோங்கரும்பு, தலைவியின் தனங்கள். 'இவையே

9. பாங்கன் நோந்துரைத்தல்

ஆலத்தி னால்அமிர் தாக்கிய கோன்தில்லை யம்பலம்போல்
கோலத்தி னாள்பொருட் டாக அமிர்தங் குணங்கெடினும்
காலத்தி னன்மழை மாறினும் மாறுக் கவிகைநின்பொற்
சீலத்தை நீயும் நினையா தொழிவதென் தீவினையே. 27

கொல்லுந்தொழில் வல்லனவாயின என்று பாங்கன் சொல்ல வெள்கி' என்க. வில்வினை - வில் செய்யும் தொழிலை. துப்பு உற - ஒரு வலிமையைப்பெற்று உய்யும்படி. 'துப்புற நல்வினையும் நயம் தந்தின்று' எனக் கூட்டுக. நயம் - பயன். தந்தின்று - தந்ததில்லை.

சிவபிரானது தலத்தைத் தொழாதவர் தீங்கெய்துதல் கூறப்பட்டது.

27. பாங்கன் நொந்துரைத்தலாவது, தலைமகன் விதியொடு வெறுத்து வருந்த, பாங்கன், தானும் அவனோடு தன் விதியை நொந்து வருந்துதல். இதற்குக் கொளு :-

இன்னுயிர்ப் பாங்கன் ஏழையைச் சுட்டி
நின்னது தன்மை நினைந்திலை யென்றது.

ஆலம் - நஞ்சு. அமிர்தம் - உணவு, "ஆலத்தினால் அமிர்தாக்கிய" என்றது, 'பாலால் தயிர் ஆக்கிய' என்பது போல நின்று, ஒரு நயம் தோற்றுவித்தது. தில்லையம்பலம் என்றும் பொன்னாய்நின்று கெடாத பேரழகுடையதாதலின், 'அதுபோலும் கோலத்தினாள்' என்றான். கோலம் - அழகு. 'பொருட்டாக ஒழிவது' என இயையும். "காலத்தினான்" என்றதனை, 'காலத்தின்கண்' எனத்திரிக்க. 'மாறுக் கவி கை' என இயையும். 'மாறுச் சீலம்' எனினுமாம். கவி கை - கொடுக்கும் கையையுடைய. பொன், பெறுதற்கருமை பற்றி வந்த உவமை. சீலம் - ஒழுக்கம்.

10. இயலிடங்கேட்டல்

நின்னுடை நீர்மையும் நீயும்இவ் வாறு நினைத்தெருட்டும்
என்னுடை நீர்மைஇ தென்னென்ப தே?தில்லை ஏர்கொள்முக்கண்
மன்னுடை மால்வரை யோ?மல ரோ?விசும் போ?சிலம்பா,
என்னிடம்? யாதியல்? நின்னைஇன் னேசெய்த ஈர்ங்கொடிக்கே.

11. இயலிடங்கூறல்

விழியாற் பிணையாம்; விளங்கிய லான்மயி லாம்; மிழற்று
மொழியாற் கிளியாம்; முதுவா னவர்தம் முடித்தொகைகள்
கழியாக் கழல்தில்லைக் கூத்தன் கயிலைமுத் தம்மலைத்தேன்
கொழியாத் திகழும் பொழிற்கெழி லாம்எங் குலதெய்வமே. 29

---

28. இயலிடங் கேட்டலாவது, தலைவனொடு நொந்து நின்ற பாங்கன், 'இவனை ஆற்றுவிக்கற் பாலார்யானன்றி இல்லையன்றே, எனத் தான் ஆற்றிநின்று, 'இனி அது கிடக்க, நின்னாற் காணப்பட்ட வடிவின், இயல்பும், இடமும் யாவை' என வினவுதல். இதற்குக் கொளு :-

கழுமல் எய்திய காதல் தோழன்
செழுமலை நாடனைத் தெரிந்து வினாயது.

'உடைய' என்பவற்றின் ஈறு தொகுத்தல், "இவ்வாறு" என்றது, 'ஆயிற்று, ஆயினை' என்னும் சொல்லெச்சங்களுடன் "நீர்மையும், நீயும்" என்பவற்றோடு தனித்தனி இயைந்தது. 'என்னுடைய நீர்மையாகிய இதனை' என்க. மன்னுடைமால் வரை, கயிலை; என்றது, அதன் சாரலை. மலர், தாமரை மலர்; இதனை வினாயதனால், 'திருமகளோடு ஒப்பாகிற்பதோ' என்ற வாறும். இயல் - இயல்பு. இன் - இத்தன்மை.

சிவபெருமானது கயிலை மால்வரை உயர்ந்தோர்க்குரிய இடமாதல் கூறப்பட்டது.

29. இயலிடம் கூறலாவது, இயலும், இடமும் வினாவிய பாங்கனுக்குத் தலைவன் அவற்றைக் கூறுதல். இதற்குக் கொளு :-

12. வற்புறுத்தல்

குயிலைச், சிலம்படிக் கொம்பினைத், தில்லையெங் கூத்தப்பிரான்
கயிலைச் சிலம்பிற்பைம் பூம்புனங் காக்குங் கருங்கட்செவ்வாய்
மயிலைச், சிலம்பகன் டியான்போய் வருவன்,வண் பூங்கொடிகள்
பயிலச் சிலம்பெதிர் கூய்ப்பண்ணை நண்ணும் பளிக்கறையே. 30

அழுங்க லெய்திய ஆருயிர்ப் பாங்கற்குச்
செழுங்கதிர் வேலோன் தெரிந்து செப்பியது.

பிணை - பெண்மான். கழியா - நீங்காத. 'கயிலைப் பொழில், திகழும் பொழில்' என்க, 'மலைத்தேன் முத்தம் கொழியாத் திகழும்' எனக் கூட்டுக. திகழும் - திகழ்தற்கு இடமாகிய.

சிவபெருமான், தேவதேவனுதல் கூறப்பட்டது.

30. வற்புறுத்தலாவது, தலைவன் இயலிடம் கூறக்கேட்ட பாங்கன், 'அவ்விடத்து அப்பெற்றியாளைக் கண்டு கடிதே வருவேன்; அத்துணை நீ ஆற்றல் வேண்டும்' என வற்புறுத்துதல். இதற்குக் கொளு :-

பெயர்ந்துரைத்த பெருவரைநாடனை
வயங்கெழுபுகழோன் வற்புறுத்தியது.

குயில் முதலியன உருவகங்கள். சிலம்பு அடிக் கொம்பு, கருங்கட் செவ்வாய் மயில் அற்புத உருவகங்கள். பூங்கொடிகள் என்றதும், தோழியரை. பண்ணை - விளையாட்டு, நண்ணும் - பொருந்துகின்ற. அறை - பாறை 'பளிக்கறைக்கண் கண்டு வருவன்' என்க. 'வருவன்' என்றது, 'கடிதின் வருவேன்' என்றபடி. 'அத்துணை ஆற்றியிரு' என்பது குறிப்பெச்சம்.

13. குறிவழிச் சேறல்

கொடுங்கால் குலவரை ஏழ்ஏழ் பொழில்எழில் குன்றும்அன்றும்
நடுங்கா தவனை நடுங்க நுடங்கு நடுவுடைய
விடங்கால் அயிற்கண்ணி மேவுங்கொ லாம்தில்லை ஈசன்வெற்பில்
தடங்கார் தருபெரு வான்பொழில் நிழலந் தண்புனத்தே. 31

14. குறிவழிக் காண்டல்

வடிக்கண் இவை ; வஞ்சி யஞ்சும் இடையிது ; வாய்பவளந்
துடிக்கின்ற வா !வெற்பன் சொற்பரி சேயான் தொடர்ந்துவிடா
அடிச்சந்த மாமலர் அண்ணல்விண் ணோர்வணங் கம்பலம்போற்
படிச்சந் தமும்இது வே ;இவ ளேஅப் பணிமொழியே. 32

---

31. குறிவழிச் சேறலாவது, தலைமகனை வற்புறுத்திய பாங்கன், அவன் குறித்த இடத்திற்குரிய வழியில், 'அவ்விடத்து அவளைக் காண்டல் கூடுமோ' என நினைந்து செல்லுதல். இதற்குக் கொளு :-

அறைகழ லண்ணல் அருளின வழியே
நிறையுடைப் பாங்கன் நினைவொடு சென்றது.

கால் - காற்று. 'காலால்' என உருபு விரிக்க. 'ஏழ் குலவரையும், ஏழ்பொழிலும் எழில் குன்றும் அன்றும்' என்க. ''நடுங்க'' என்றதன் பின்னர், 'பண்ண' என்னும் சொல் எஞ்சி நின்றது. நடு - இடை. தரு, உவம உருபு இருள் நிறைவால் பொழில் முகில்போல்வதாயிற்று.

சிவபெருமானது மலை, வளம் குன்றுத தன்மைத்தாதல் கூறுமுகத்தான், அவனது ஆணையது ஆற்றல் கூறப்பட்டது.

32. குறிவழிக் காண்டலாவது, வழிச்சென்ற பாங்கன், குறியிடத்துத் தலைவியை அவள் காணுதவாறு நின்று, அவளை ஐயமறக் காணுதல். இதற்குக் கொளு ;-

குளிர்வரை நாடன் குறிவழிச் சென்று
தளிர்புரை மெல்லடித் தையலைக் கண்டது.

15. தலைவனை வியந்துரைத்தல்

குவளைக் களத்தம் பலவன் குரைகழல் போற்கமலத்
தவளைப் பயங்கர மாகநின் றாண்ட அவயவத்தின்
இவளைக்கண் டிங்குநின் றங்குவந் தத்துணை யும்பகர்ந்த
கவளக் களிற்றண்ணலேதிண்ணரி யான்இக் கடலிடத்தே. 33

வடி - மாவடு வகிர். 'வெற்பன் சொற்பரிசே வாய் பவளம் போலத் துடிக்கின்றவாறு வியப்பு' என்க. 'அடிமலர்' என இயையும். சந்தம் - அழகு. படிச்சந்தம் - ஒப்பச்செய்த அழகு. 'பிரதி யழகு' என்றபடி. சுட்டு, தலைவன் சொல்லியதைக் குறித்தது. பணிமொழி - பணிந்த சொல்லையுடையாள்.

சிவபெருமான் படைப்புக் கடவுளும், பிறருமாகிய தேவரால் வணங்கப்படும் முதல்வனாதல் கூறப்பட்டது.

33. தலைவனை வியந்துரைத்தலாவது, தலைவியைக் குறிவழிக்கண்ட பாங்கன், 'இப்பெற்றியாளை இங்குக் கண்ட பின் இங்கே தாழ்ந்தொழியாது ஆற்றி மீண்டு வந்து எனக்கறிவித்து, யான் கழறவும் ஆற்றி, அனைத்தும் தவறுமற் சொன்ன எம் அண்ணலே திண்ணியான்; பிறராயின் அது வல்லரோ' எனத் தலைமகனை வியந்து கூறுதல். இதற்குக் கொளு :-

நயந்த உருவும் நலனுங் கண்டு
வியந்த வனையே மிகுத்துரைத் தது.

குவளை - நீலோற்பலம். களம் - கண்டம். கழல், கமலத்திற்கு உவமை. பயங்கரமாக - அச்சத்தைச் செய்வன ஆகும்படி. ஆண்ட - பணிகொண்ட. அவயவத்து இவளை - உறுப்புக்களையுடைய இவளை. 'அண்ணலே இக்கடல்சூழ்ந்த இடத்தில் திண்ணியான்; பிறர் ஒருவர் இல்லை' என உரைக்க. 'இவளை' என்பதற்கு வேறுரை உரைப்பர் பேராசிரியர். உட்கோள் நிகழ்ந்த பின்னர் மெய்யுறு புணர்ச்சி எய்தாதே பாங்கற் கூட்டம் நிகழ்தலும் உண்டு; அந்நிலைமைக்குப் பொருந்துவனவே ஈண்டு வரும் துறைகள் என்க

கூத்தப் பெருமானது திருவடித் தாமரைகளின் சிறப்புக் கூறப்பட்டது.

16. கண்டமை கூறல்

பணந்தாழ் அரவரைச் சிற்றம் பலவர்பைம் பொற்கயிலைப்
புணர்ந்தாங் ககன்ற பொருகரி யுன்னிப் புனத்தயலே
மணந்தாழ் பொழிற்கண் வடிக்கண் பரப்பி மடப்பிடிவாய்
நிணந்தாழ் சுடரிலை வேலகண் டேனென்று நின்றதுவே. 34

17. செவ்வி செப்பல்

கயலுள வேகம லத்தலர் மீது ; கனிபவளத்
தயலுள வேமுத்தம் ஒத்த நிரை ;அரன் அம்பலத்தின்
இயலுள வேஇணைச் செப்பு ;வெற் பா,நின தீர்ங்கொடிமேற்
புயலுள வேமலர் சூழ்ந்திருள் தூங்கிப் புரள்வனவே. 35

---

34. கண்டமை கூறலாவது, தலைமகனை வியந்தபின் பாங்கன் தலைவனிடம் விரைந்து சென்று, தான் தலைவியைக் கண்டமை கூறுதல். இதற்குக் கொளு :-

பிடிமிசை வைத்துப் பேதையது நிலைமை
அடுதிற லன்னற் கறிய வுரைத்தது.

"வாய் நிணந்தாழ் சுடரிலை வேல" என்றதனை முதலிற் கொள்க. பணம் - படம். தாழ் - முடிச்சுப்போலத் தொங்கும். 'கயிலைக்கண் புனத்தயலே பொழிற்கண் மடப்பிடி ஒன்று, தன்னைப் புணர்ந்து ஆங்குநின்றும் அகன்ற பொருகரியை உன்னி வடிக்கண் பரப்பி, நின்றது கண்டேன்' எனக் கூட்டி முடிக்க. 'பொன்னையுடைய கயிலை' என்க, "புனத்தயல்" என்றதனால் தனித்து நிற்றலும், "பரப்பி" என்றதனால் வரும் திசை யறியாது சுற்று முற்றும் பார்த்தலும் பெறப்பட்டன. பொருகரி - போர்வல்ல களிறு. "வடிக்கண்" என்றதனால் 'இஃது ஓர் அதிசயப்பிடி' என்றுனும்.

பாம்பணி கூறுமுகத்தால், சிவபெருமான் பகைவரால் நலிவுற்றடைவோரைக் காத்தல் கூறப்பட்டது.

35. செவ்வி செப்பலாவது, 'மடப்பிடி' என்றல் மாத்திரமாய்ப் பிறிதோர் சொலலானும் பாங்கன் கூறினமையின்,

18. அவ்விடத்தேகல்

எயிற்குல மூன்றிருந் தீஎய்த எய்தவன் தில்லையொத்துக்
குயிற்குலங் கொண்டுதொண் டைக்கனி வாய்க்குளிர் முத்த
நயிற்குல வேல்கம லத்திற் கிடத்தி அனம்நடக்கும் [நிரைத்
மயிற்குலங் கண்டதுண் டேல்அது என்னுடை மன்னுயிரே. 36

'இவன் கண்டது நம் காதலியையோ, பிறளையோ' என நினைந்து தலைவன் ஆற்றுனாக, அதுகண்ட பாங்கன், தலைவியது செவ்வியின் சிறப்பைக் கூறுதல், இதற்குக் கொளு :-

அற்புதன் கைலை மற்பொலி சிலம்பற்
கவ்வுருக் கண்டவன் செவ்வி செப்பியது.

'வெற்பா, நினது ஈர்ங்கொடிமேல் மலர் ....புரள்வன புயல் உளவே ; (அதன்) கமலத்து அலர்மீது கயல் உளவே ; கனி பவளத்து அயல் ஒத்த நிரை முத்தம் உளவே ; இணைச் செப்பு அரன் அம்பலத்தின் இயல் உளவே' எனக் கூட்டி, 'நீ ஐயுறுகின்றது என்' எனக் குறிப்பெச்சம் வருவித்து முடிக்க. கயல், கமலம், பவளம், முத்தம், செப்பு, புயல் இவை முறையே, கண், முகம், வாய், பல், தனம், கூந்தல் இவற்றைக் குறித்தன. ஈர்ங்கொடி - தண்ணிய கொடி. செப்பு - கிண்ணம். 'செப்பின்கண்' என உருபு விரிக்க. அம்பலத்தின் இயல், தன்னைச் சார்ந்தாரைப்போக விடாமை. அது, போதற்கு வாயிலாவனவற்றை நோக்கப் பலவாதல் பற்றி, "உள" என்ருன். சூழ்ந்து - சூழப்பெற்று. தூங்கி - தூங்கப்பெற்று. முகில்கள் பல திரண்டாலொத்துத் தோன்றலின், 'புரள்வன' என்ருன்.

சிவபிரானது அம்பலத்தினது வசிகரித்தல் தன்மை கூறப்பட்டது.

36. அவ்விடத்தேகலாவது, பாங்கன் தலைவியது செவ்வி செப்பியபின் தலைவன் ஐயம் நீங்கி அவன் சொல்லிய இடத்துச் செல்லுதல். இதற்குக் கொளு -

அரிவையது நிலைமை யறிந்தவன் உரைப்ப
எரிகதிர் வேலோன் ஏகியது.

19. மின்னிடை மேலிதல்

ஆவியன் னுய்கவ லேல்;அக லேம்என் றளித்தொளித்த
ஆவியன் னார்மிக் கவாவின ராய்க்கெழு மற்கழிவுற்
றாவியன் னார்மன்னி ஆடிடஞ் சேர்வர்கொல் அம்பலத்தெம்
ஆவியன் னான்பயி லுங்கயி லாயத் தருவரையே. 37

எயில் - மதில். "குலம்" என்றது, இரும்பும், வெள்ளியும், பொன்னும் ஆகிய சாதியை, 'தில்லையை ஒத்து' என்றது, 'எல்லாம் உடைத்தாய்' என்றபடி. இருந் தீ எய்த - பெரிப திப் பற்றுமாறு. குயிலின் சாதியைப் பெற்றது, குரலால், 'வாய்க்கண் நிரைத்து' என்க. அயில் - கூர்மை. குல வேல் - சிறந்த வேல். 'அன்னம்போல நடக்கும்' என்க. மன் உயிர்- நிலைபெற்ற உயிர். "கண்டதுண்டேல் அது என்னுடை உயிர்" என்றது, 'பிறிதொன்று அவ்வாறில்லை' என்னும் கருத்தால்.

தில்லைத் தலத்தது சிறப்புக் கூறும் முகத்தால், சிவபெருமான் எல்லாம் தருபவனாதல் கூறப்பட்டது.

இத்துணையும் பாங்கற் கூட்டத்திற்கே உரியன; இனி வருவன, பாங்கற்கூட்டம், இடந்தலைப்பாடு இரண்டற்கும் உரியன. இதனை மேற்காட்டிய நூற்பாவானும் அறிக.

37. மின்னிடை மெலிதலாவது, தலைவன் நிலை மேற் கூறியவாறாக, தலைவி, 'நேற்று, நின்னைப் பிரியேன்; பிரியின் ஆற்றேன் என்று சொல்லிச் சென்றவர், இன்று தம் ஆற்றாமையால், ஆயத்திடை வருவாரோ' என்னும் பெருநாணினாலும், 'அன்றி ஆற்றாமை மீதூரலான் இறந்தே பட்டாரோ' என்னும் பேரவலத்தானும் தனித்து நின்று தலைமகனை நினைந்து வருந்துதல். இதற்குச் செய்யுள்:-

மன்னனை நினைந்து — மின்னிடை மெலிந்தது.

கவலேல் - கவலையுறாதே. என்று அளித்து - என்று சொல்லி அன்புச் செயல்கள் செய்த. 'மிக்க அவாவினராய்' என்பதில் நிலைமொழி ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று' 'அவாவினராய்க் கெழுமற்கு' என்றே இயைக்க. கெழுமற்கு-

20. பொழில் கண்டு மகிழ்தல்

காம்பிணை யால்,களி மாமயி லால்,கதிர் மாமணியால்,
வாம்பிணை, யால் வல்லி ஒல்குத லால்,மன்னும் அம்பலவன்
பாம்பிணை யாக்குழை கொண்டோன் கயிலைப் பயில்புனமும்
தேம்பிணை வார்குழ லாள்எனத் தோன்றும்என் சிந்தனைக்கே.38

கூடுதற்கு. அழிவுற்று - நெஞ்சழிந்து. 'கயிலைப் பெருமானைத் தம் இருவர்க்கும் ஆவியன்னான்' என்பாள் 'எம் ஆவியன்னான்' என்றாள். தலைவனுக்கு ஆவியன்னானுதலை, நெருநல் அவன் கூறிய கூற்றுக்களால் தலைவி அறிந்தமை அறிக. இதனால், 'இவளும் கயிலைப் பெருமானை உயிர்போலச் சிறந்தவனாகக் கொண்டிருப்பவள்' என்பது பெறப்பட்டது. 'அருவரைக் கண்' என ஏழாவது இறுதிக்கண் தொக்கது. இது, சொற் பொருட்பின் வருநிலை.

சிவபெருமான், உயர்ந்தோர்க்கு, உயிரெனச் சிறந்து நிற்பவன் என்பது கூறப்பட்டது.

38. பொழில்கண்டு மகிழ்தலாவது, சென்ற தலைமகன், தலைமகளை முதல்நாட் கண்ட பொழிலை அடைந்து, அதனை அவளேயாகக் கண்டு மகிழ்ந்து கூறுதல். இதற்குக் கொளு:-

மனங்கமழ் பொழிலின் வடிவுகண்
டனங்கெனநினைந் தயர்வுநீங் கியது.

காம்பு இணை - மூங்கிலின் இணை. மணி, நீலமணி. வாம் பிணை - தாவுகின்ற பெண் மான். வல்லி - கொடி. ஒல்குதல் - துவளுதல். 'பாம்பு இணையைக் குழையாக் கொண்டோன்' என ஆக்கச் சொல் மாற்றி உரைக்க. தேம் பிணை - தேன் பொருந்திய மாலை. காம்பிணை முதலியவை தலைவியது தோளிணை சாயல், மேனி, நோக்கு, வடிவு இவையாகிக் காட்டின.

２１. உயிரென வியத்தல்

நேயத்த தாய்நென்னல் என்னைப் புணர்ந்துநெஞ் சம்நெகப்
[போய்
ஆயத்த தாய்அமிழ் தாய்அணங் காய்அரன் அம்பலம்போல்
தேயத்த தாய்என்றன் சிந்தைய தாய்த்தெரி யிற்பெரிதும்
மாயத்த தாகி இதோவந்து நின்றதென் மன்னுயிரே. 39

---

39. உயிரென வியத்தலாவது, தலைவன் பொழில் கண்டு மகிழ்ந்தபின் அதனுட் சென்று தலைவியைக் கண்டு, 'இதோ என் உயிர் நிற்கின்றது' எனக் கூறி வியத்தல். இதற்குக் கொளு :-

வெறியுறு பொழிலின் வியன் பொதும்பரின்
நெறியுறு குழலி நிலைமை கண்டது.

"நென்னல்" என்றதை முதலிற் கொள்க. நென்னல் - நேற்று. நெஞ்சம் நெக - என் மனம் உடையும்படி. இவ்வாறு கூறியதனால், 'நேயம் இல்லதுபோல' என்பது வருவிக்கப்படும். இவ்வாற்றால் மாறுபட்டதுபோலப் பிறிதோராற்றால் மாறு பட்டது கூறுவான், "அமிழ்தாய், அணங்காய்" என்றான். அணங்கு - வருத்தும் தெய்வம். இனி மற்றோராற்றானும் மாறு பட்டமை கூறுவான், "தேயத்ததாய், என்றன் சிந்தையதாய்" என்றான். தேயத்தது - உலகிற்காணப்படுவது. இம் மாறு பாட்டிற்கே அரனது அம்பலத்தை உவமை கூறினான். அதனால், அது பொதுநிலையில் தில்லைத் தலத்தின்கண் புலப்பட்டும், உண்மை நிலையில் அறிவுக்கறிவாய்ப் புலப்படாதும் நிற்பதா தல் பெறப்பட்டன. படவே, "தேயம்" என்றது, 'தேசசு, என்னும் வடமொழித் திரிபாகக் கொண்டு பழைய உரையை மேற்கொண்டுரைத்த உரையினும், பேராசிரியர் தாமாக உரைத்த உரையே சிறப்புடைத்தாதல் விளங்கும். மேலும் இவ்விடத்து அவர்,

'என்மாட்டு அருளுடைத்தாய் முற்காலத்து என்னை வந்து கூடி (முன்னின்று) அருளில்லதுபோல என் நெஞ்சுடையும் வண்ணம் போய்த் தன் பெய்யடியார் குழாத்ததாய், நினை தோறும் அமிர்தம்போல இன்பம் செய்து, கட்புலனாகாமையின்

22. தளர்வகன் றுரைத்தல்

தாதிவர் போதுகொய் யார்;தைய லார்அங்கை கூப்பநின்று
சோதி வரிப்பந் தடியார் ; சுனைப்புன லாடல்செய்யார் ;
போதிவர் கற்பக நாடுபுல் லென்னத்தம் பொன்னடிப்பாய்
யாதிவர் மாதவம் அம்பலத் தான்மலை எய்துதற்கே ! 40

துன்பம் செய்து, அம்பலம் போலும் நல்ல தேசங்களின்கண்ண தாய், வந்து என் மனத்தகத்ததாய், இத்தன்மைத் தாகலின் பெரிதும் மாயத்தை யுடைத்தாய் எனது நிலைபெறும் உயிர் வந்து தோன்றாநின்றது என வேறும் ஒரு பொருள் விளங்கியவாறு கண்டுகொள்க' என ஓர் அரிய உண்மையுரை உரைத்தார். வேறும் ஒரு பொருள் என்றது, அடிகள் சிவபெருமான் தம் மாட்டு நிகழ்த்திய செயல்களையும், அவனது வரவின், பொருட்டே தாம் தில்லையில் இருத்தலையும் நினைந்து கூறியதையாம். இதனானே இவர்க்கு அவனே உயிரானமை இனிது விளங்கிக் கிடப்பது.

சிவபிரானது அம்பலத்தின் பொதுவியல்பும் உண்மை இயல்பும் கூறப்பட்டன.

40. தளர்வகன் றுரைத்தலாவது, தலைவியைத் தன் உயிரென வியந்த தலைமகன், அவளது நிலையைத் தவம் செய்வாரது நிலையோடு ஒப்பித்துக் கூறித் தன் தளர்ச்சி நீங்குதல். இதற்குக் கொளு :-

பனிமதி நுதலியைப் பைம்பொழிலிடைத்
தனிநிலை கண்டு தளர்வகன் றுரைத்தது.

தாது இவர் - மகரந்தம் பரந்த. சோதி - ஒளியையுடைய. வரிப் பந்து - கட்டுதல் அமைந்த பந்து. புல்லென்ன - ஒளி இழக்க. ''பொன்னடிப் பாய்'' என்புழிப் பகர ஒற்று, சந்த இன்பம் நோக்கி வந்தது. பாய் - பரவச் செய்து: இஃது, ''இவர்'' என்புழி எஞ்சிநின்ற, 'செய்யும்' என்பதனோடு முடிந்தது. மலை, கயிலை. 'எய்துதற்கு இவர் செய்யும் தவம் யாது' என்க.

உ3. மொழிபெற வருந்தல்

காவிநின் றேர்தரு கண்டர்வண் டில்லைக்கண் ணார்கமலத்
தேவியென் றேஐயஞ் சென்றதன் றே?அறி யச்சிறிது
மாவியன் றன்னமென் னோக்கிநின் வாய்திற வாவிடின்என்
ஆவியன் றேஅமிழ் தேஅணங் கேஇன் றழிகின்றதே. 41

உ4 நாணிக் கண்புதைத்தல்

அகலிடந் தாவிய வானோன் அறிந்திறைஞ் சம்பலத்தின்
இகலிடந் தாவிடை யீசற் றொழாரின்இன் னற்கிடமாய்
உகலிடந் தான்சென் றெனதுயிர் நையா வகைஒதுங்கப்
புகலிடந் தா,பொழில் வாய்எழில் வாய்தரு பூங்கொடியே. 42

சிவபிரானது கயிலாய மலை தவம் செய்தார்க்கன்றி எய்து தல் கூடாமை கூறப்பட்டது.

41. மொழி பெற வருந்தலாவது, தளர்வகன்றுரைத்த தலைவன் அவளை மெய்யுறுதற்கு அவள் வாயினின்றும் ஒருசொற் பெற்று உற வேண்டி வருந்துதல். இதற்குக் கொளு :-

கூடற் கரிதென — வாடி யுரைத்தது.

"மா இயன் றன்ன மென்னோக்கி" என்றதனை முதலிற் கொள்க. காவி - நீலப் பூ; அது நின்று அழகைக் கொடுப்பது போலும் கண்டத்தை யுடையவர் என்றபடி. கண் ஆர் - கண் ணிற்கு நிறைந்த; இது, கமலத்தொடு முடிந்தது. கமலத் தேவி - திருமகள். சென்றது - நிகழ்ந்தது. அறிய - தெளிய. மா இயன் றன்ன - மானினது நோக்கத்தால் இயன்றாலொத்த. "என் ஆவியன்றே" என்றதனை, இறுதிக்கண் கூட்டுக. 'உன்னைத் திருமகளோ என மருண்டேன்; அம் மருட்சி நீங்க ஒரு சொல் தருக' என்றான் என்க.

சிவபெருமானது நஞ்சுண்ட கண்டத்தின் அழகு கூறப் பட்டது.

42. நாணிக் கண்புதைத்தலாவது, தலைமகன் தன்னைத் திருமகளோடு ஒப்பித்துப் பெரிதும் புகழ்ந்தமை கேட்ட தலைவி

25. கண்புதைக்க வருந்தல்

தாழச்செய் தார்முடி தன்னடிக் கீழ்வைத் தவரைவிண்ணோர்
சூழச்செய் தான்அம் பலங்கை தொழாரின்உள் ளந்துளங்கப்
போழச்செய் யாமல்வை வேற்கண் புதைத்துப்பொன்
[னேஎன்னை நீ
வாழச்செய் தாய்;சுற்றும் முற்றும் புதைநின்னை வாணுதலே. 43

பெரிதும் உண்டாகிய நாணத்தால் அவன்முன் நிற்கமாட்டாது ஒருகொடிக்கீழ் ஒதுங்கித் தன் கண்களைக் கைகளால் புதைத்துக் கொள்ளுதல். இதற்குக் கொளு :-

ஆயிடைத் தவிநின் றூற்று தழிந்து
வேயுடைந் தோளிஓர் மென்கொடி மறைந்தது.

அகலிடம் - உலகம். தாவிய - அளந்த. வானோன் - தேவன். அறிந்து - இது நம்மால் வணங்கத்தக்கதென்று அறிந்து. 'அம்பலத்தின் ஈசன்' என இயையும். இகல் இடம் தா விடை - பகையுள்ள இடங்களில் தாவிச் செல்லுகின்ற இடபம். உகல் இடம் தான் சென்று - அழியும் நிலையைத் தான் அடைந்து.

சிவபெருமானது திருவம்பலம் யாவராலும் வணங்கத் தக்கது என்பது கூறப்பட்டது.

43. **கண்புதைக்க வருந்தலாவது**, தலைவி நாணிக் கண் புதைத்துக் கொள்ளத் தலைவன், அவள் மொழியேயன்றி முகமும் பெறாது வருந்தி, அவள் அப் புதைப்பு நீக்குமாற்றால், 'நின்மேனியைப் புதையாது (மறையாது) கண்ணைப் புதைத்த தென்னை எனக் கூறுதல். இதற்குக் கொளு :-

வேற்றருங் கண்ணிணை மிளிர்வன அன்றுநின்
கூற்றரு மேனியே கூற்றெனக் கென்றது.

"தாழ, போழ" என்ற செயவெனெச்சங்கள், தொழிற் பெயர்ப் பொருள் தந்தன. 'அவரை விண்ணோர் சூழச் செய் தான்' என்க. கை தொழாரின் - கை தொழாதாரைப்போல.

உ௬. நாண்விட வருந்தல்

குருநாண் மலர்ப்பொழில் சூழ்தில்லைக் கூத்தனை ஏத்தலர்போல்
வருநாள் பிறவற்க ; வாழியரோ ! மற்றென் கண்மணிபோன்
றொருநாள் பிரியா துயிரிற் பழகி உடன்வளர்ந்த
அருநாண் அளிய அழல்சேர் மெழுகொத் தழிகின்றதே. 44

'என் உள்ளம்' என ஒருசொல் வருவிக்க - துளங்க - கலங்கும் படி. 'இது நிரம்பாது; நின்னைச் சுற்றும் முற்றும் புதை' என்றான். "நின் கண்ணே கதுவ அல்ல .....நின் - கரும்புடைத் தோளும் உடையவால் அணங்கே" என்ற நற்றிணையையும் காண்க (39).

சிவபெருமான் தன் அடியவர்க்கு அருள்புரியும் சிறப்பும், அவனது அம்பலத்தைக் கைதொழாதவர் நெஞ்சுடைந்து துயருறுதலும் கூறப்பட்டன.

44 நாண்விட வருந்தலாவது, தன் கண் புதைப்பிற்குத் தலைமகன் பெரிதும் ஆற்றானாயது கண்ட தலைமகளது காட்சி யால், அவளது நாண் அவளை யறியாமல் நீங்குவதாக, அந்நீக்கத் திற்கு அவள் வருந்திக் கூறுதல். இதற்குக் கொளு :-

ஆங்க வெம்கன் டாற்று ளாகி
நீங்கின நாணொடு நேரிழை நின்றது.

"என் கண்மணிபோன்று" என்பது முதலாகத் தொடங்கி யுரைக்க. 'அளிய அருநாண்' என மாற்றியுரைக்க. அளிய- அளிக்கத்தக்க; இரங்கத்தக்க. "அழிகின்றது" என்றதன்பின், 'ஆதலின்' என்பது வருவிக்க. குரு - நிறம். ஏத்தாதார்க்கு வரும் நாள் துன்ப நாள்களேயாம்; அத்தன்மையான நாள் எனக்கு வாராதொழிக' என்றாள். இதற்குப் பிறவாறும் உரைப்ப.

தில்லைக் கூத்தனை ஏத்தாதவர் துன்புறுதல் கூறப்பட்டது.

27 மருங்கணைதல்

கோலத் தனிக்கொம்பர் உம்பர்புக் கஃதே குறைப்பவர்தஞ்
சீலத் தனகொங்கை; தேற்றகி லேம்; சிவன் தில்லையன்னுள்
நூலொத்த நேரிடை நொய்ம்மையெண் ணாதுநுண் தேன் [நசையாற்
சாலத் தகாதுகண் டீர்வண்டு காள்கொண்டை சார்வதுவே. 45

28. இன்றியமையாமை கூறல்

நீங்கரும் பொற்கழற் சிற்றம் பலவர் நெடுவிசும்பும்
வாங்கிருந் தெண்கடல் வையமும் எய்தினும் யான்மறவேன்,
தீங்கரும் பும்மமிழ் துஞ்செழுந் தேனும் பொதிந்துசெப்பும்
கோங்கரும் புந்தொலைத் தென்னையும் ஆட்கொண்ட கொங்கை [களே. 46

---

45. மருங்கணைதலாவது, தலைவி நாண்விட வருந்துதலைக் கண்ட தலைமகன், அவளோடு ஒன்று சொல்லி அணையாது, பிறி தொன்றனெடு சொல்லி அவளை அணைதல். இதற்குக் கொளு ;-

ஒளிதிகழ் வார்குழல் அளிகுலம் விலக்கிக்
கருங்கலிற் றன்னல் மருங்கணைந்தது,

கோலம் - அழகு. கொம்பர் - கொம்பு. மேற்புக்கு எனக் கொள்க. 'அதனையே குறைப்பவர்தம் சீலத்தன' என்க. சீலம் - தன்மை. 'கொங்கைகள் இடைமேல் இருந்தே அதனை முரிக்கப்பார்க்கின்றன; அதனுல் அவற்றை நாம் தெளியோம்' என்றுன். நேரிடை - நுணுகிய இடை. நொய்ம்மை - மென்மை. 'தேன் நசையால் நீவிர் இவள் கொண்டை சார்வது சாலத் தகாது' என்க. 'சிறுதேன் நுகரப் போய்ப் பெருந்துன்பம் எய்தாதிர்' என்பான், 'நுண் தேன் நசையால்' என்றுன். நசை - விருப்பம்.

சிவபெருமானது தில்லையம்பலம் நுண்ணிதாய் நிற்றல் கூறப்பட்டது.

46. இன்றியமையாமை கூறலாவது, வண்டோச்சி மருங்கணைந்து தலைவியது நலத்தைத் துய்த்த தலைவன், அந் நலத்தை இன்றியமையமாட்டாமை கூறுதல். இதற்குக் கொளு :-

29. ஆயத்துய்த்தல்

சூளா மணிஉம்பர்க் காயவன் சூழ்பொழிற் றில்லையன்னுய்க்
காளா யொழிந்ததென் னுருயிர் ; ஆரமிழ் தே.அணங்கே,
தோளா மணியே, பிணையே, பலசொல்லி என்னை ? துன்னும்
நாளார் மலர்ப்பொழில் வாய்எழில் ஆயம் நணுகுகவே. 47

வென்றிவேலவன் மெல்லியல்தனக்
கின்றி யமையாமை எடுத்துரைத்தது.

வாங்கு - வளைந்த. இரு - பெரிய. எய்தினும் - பெறினும். பொதிந்து - நிரம்பி. இஃது இடத்து நிகழ்பொருளின் தொழில் இடத்தின்மேல் நின்றவாறு. தொலைத்து - வென்று, "என்னை யும்" என்ற உம்மை, எச்சம். கொங்கைகள்" என்றதில் இரண்டாவது இறுதிக்கண் தொக்கது.

சிற்றம்பலவர் கழல், மேவினுர் பிரியமாட்டாத இனிமை யுடைத்தென்பது கூறப்பட்டது.

47. ஆயத்துய்த்தலாவது, 'விசும்பும், வையமும் எய்தினும் மறவேன்' என்றதனுல் ஒருவாறு தனது பிரிவை உணர்த்திய தலைவன், 'என் உயிர் உனக்கு ஆளாயொழிந்தமையின், இனி நீ கவலாது சென்று நின் ஆயத்திடைச் சேர்க' எனக் கூறுதல். இதற்குக் கொளு :-

தேங்கமழ் சிலம்பன், — பாங்கிற் கூட்டியது.

'உம்பர்க்குச் சூளாமணி ஆயவன்' என்க. சூளாமணி தலையில் அணியும் மணி. தில்லை அன்னுய்க்கு - தில்லையை ஒத்த உனக்கு. தோளா மணியே - துளையிடாதமாணிக்கமே.

சிவபெருமான் தேவரது உச்சிமேற் பொலிபவனுதல் கூறப் பட்டது.

30. நின்று வருந்தல்

பொய்யுடை யார்க்கரன் போலக லும்மகன் றூற்;புணரின்
மெய்யுடை யார்க்கவன் அம்பலம் போல மிகநணுகும் ;
மையுடை வாட்கண் மணியுடைப் பூண்முலை வாணுதல்வான்
பையுடை வாளர வத்தல்குல் காக்கும்பைம் பூம்புனமே. 48

---

48. நின்று வருந்தலாவது, தலைமகளை ஆயத்துய்த்த தலைமகன் தான் அவ்விடத்தினின்றும் நீங்கமாட்டாது நின்று வருந்துதல். இதற்குக் கொளு:-

பாங்கிற் கூட்டிப் பதிவயிற் பெயர்வோன்
நீங்கற் கருமை நின்று நினைந்தது.

'(என் காதலி) காக்கும் புனம், அகன்றால் அகலும்; புணரின் நணுகும்' என்க. பொய் - அறியாமை. மெய் - அறிவு.

சிவபெருமான் பொய்யர்க்குச் சேயனாயும், மெய்யர்க்கு அணியனாயும் நிற்றல் கூறப்பட்டது.

அண்டரு மலர்தூ யேத்து மன்பருந் தூநீ ராடி
வெண்டுகில் புனைந்து நீறு விளங்கிய மெய்ய ராகி
முண்டக மலர்த்தாள் வைத்து முத்திதந் தருள மேனி
கொண்டவர் திருமுன் சென்று குறுகியங் குவகை கூர்ந்து. 89

விண்ணவ ரதிபன் பொற்றாள் விளக்கியர்ச் சனைமுன் செய்து
தண்ணறும் பனிநீர் தோய்ந்த சாந்தமெய்ம் முழுதுஞ் சாத்தி
வண்ணமென் கழுநீர் மாலை வளம்பெற வணிந்து பின்னர்க்
கண்ணுறு பரிவு தீரக் கண்டுள மகிழ்ச்சி கொண்டு. 90

பருப்புட னுளிகேரப் பழச்செழுந் துருவல் சேர்த்துச்
சருக்கரை கலந்து பாலிற் சமைத்தநல் லமுது தன்னை
இருத்திய கனகக் கான்மே லிலங்குபொற் கலத்தின் மீது
விருப்பொடு படைத்து நெய்யு மிக்கமுக் கனியும் பெய்து. 91

— திருவாதவூரடிகள் புராணம்.

3. இடந்தலைப்பாடு

[‘இடந்தலைப்பாடு’ என்பது, பாங்கற் கூட்டத்திற்கு முன் நிகழற்பாலது. அது,

“காமப் புணர்ச்சியும், இடந்தலைப்படலும்,
பாங்கொடு தழாஅலும், தோழியிற் புணர்வும்”

என்னும் செய்யுளியற் சூத்திரத்தால் நன்கறியப்பட்டது (487). ‘பாங்கற் கூட்டம், இடந்தலைப்பாடு’ என்னும் இரண்டனுள் ஒன்றே நிகழும்; இரண்டும் ஒரு துணைமையர்பால் நிகழா எனக் கொண்டார் அதன் உரையாளர். அவ்வாறே கொண்டனர் இத் திருக்கோவையின் உரையாளரும்.

“முந்நா ளல்லது துணையின்று கழியா ;
அந்நா ளகத்தும் அதுவரை வின்றே”

என்னும் தொல்காப்பியக் களவியற் சூத்திரத்தால், (32) பிறரொருவரும் துணையாகாத களவொழுக்கம் மூன்று நாள்காறும் நிகழ்தல் இழுக்கல்லாமை பெறப்பட்டது. படவே, முதனாட் கூட்டம், ‘இயற்கைப் புணர்ச்சி’ எனப்படும் என்பதும், ஏனை இருநாட் கூட்டமும் ‘இடந்தலைப்பாடு’ எனப்படும் என்பதும், அதன்பின்னரும் தலைவன் களவொழுக்கம் வேண்டுவனாயின், பாங்கற் கூட்டமும், பாங்கியிற் கூட்டமும் நிகழும் என்பதும் தெளிவாம். இயற்கைப் புணர்ச்சி முதலிய நான்கும் ஒருங்கு நிகழுமாயின், இம் முறையால் நிகழும் என்பதன்றி, எல்லாம், எல்லாரிடத்தும் ஒருதலையாக நிகழும் என்பது கருத்தன்று. அதனால், பாங்கற் கூட்டத்தின்பின் இடந்தலைப்பாடும், பாங்கியிற் கூட்டத்தின்பின் பாங்கற் கூட்டமும் யாரிடத்தும் நிகழா என்பதே பொருள். இனிப் பாங்கியிற் கூட்டம், பாங்கற் கூட்டம் நிகழ்ந்தன்றி நிகழாது எனவும் வேண்டும் என்க.

இயற்கைப் புணர்ச்சி முதலிய நான்கனுள் இடந்தலைப்பாடு சிறுபான்மையாம். என்னை ? தெய்வச்செயலால் தானும் தலைவியும் முதல்நாள் தனித்துக் கண்டாற்போல வழிமுறை நாளினும் அவ்வாறே பாங்கன் துணையின்றித் தானே அவள் தனித்து நிற்கும் செவ்வியறிந்து சார்தல் கூடுமென்றாயினும், பாங்கியது துணையின்றி அவள் தனித்து நிற்றல் கூடுமென்றாயினும் தலைவன்

துணிதல் அரிதாகலின். அதனால், அதன் சிறப்பின்மை கருதி அடிகள் வினவுதல், உற்றதுரைத்தல், கழறல் முதலிய துறைகளால் மிகச் சுவைபட வரும் பாங்கற் கூட்டத்தை முன் வைத்து, அதனுள் ஒரு பகுதியை இடந்தலைப்பாட்டிற்கும் பொருந்தச் செய்து, பின்னர் இடந்தலைப்பாட்டினை ஒரு திருப் பாட்டால முடித்தருளுகின்றார் என்க.

இனி, இடந்தலைப்பாடாவது, முதல்நாள் தலைவியைத் தெய்வம் தர, இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைமகன், பிற்றை நாளும் 'நேற்றுத் தந்த தெய்வம், இன்றும் தரும்' என அவ்விடத்துச் சென்று தலைமகளை எதிர்ப்படுதல். இதற்குச் சிறப்புத் துறையாக இங்குக் கூறப்படுவது, 'பொழிலிடைச் சேறல்' என்னும் ஒருதுறையே. இத்துறையை மேற் பாங்கற் கூட்டத்துக் கூறிய, மின்னிடை மெலிதல் முதலிய பன்னிரு துறைகளோடும் கூட்டிக் கொள்ளல் வேண்டும் என்பதனை,

"பொழிலிடைச் சேறல், இடந்தலை சொன்ன
வழியொடு கூட்டி வகுத்திசி னோரே"

என்ற நூற்பாவான் அறிக.]

1. பொழிலிடைச்சேறல்

என்னறி வால்வந்த தன்றிது முன்னும்;இன் னும்முயன்றால்,
மன்னெறி தந்த திருந்தன்று தெய்வம்; வருந்தல்; நெஞ்சே,
மின்னெறி செஞ்சடைக் கூத்தப் பிரான்வியன் தில்லைமுந்நீர்
பொன்னெறி வார்துறை வாய்ச்சென்று மின்தோய்
[பொழிலிடத்தே. 49

---

49. பொழிலிடைச் சேறலாவது, முதல் நாள் தலைவியைக் கண்ட பொழிலின்கண் தலைவன், வழிநாளும் அத்தெய்வத்தின் அருள் கருதிச் செல்லுதல். இதற்குக் கொளு :-

ஐயரிக் கண்ணியை யாடிடத் தேசென்
றெய்துவன் எனத்தனைந் தேந்தல் சென்றது.

"முயன்றால்" என்ற எச்சத்திற்கு, 'முடியும்' என ஒரு சொல் வருவித்து முடிக்க. மன் நெறி தந்தது - நிலைபெற்ற நெறியாகிய தலைவியது தொடர்பைத் தந்த தெய்வம். இருந் தன்று - இருந்தது. மின் எறி - மின்னலைப் போல ஒளிவிடு கின்ற. 'மின்னலை வெல்கின்ற' என்பர் பேராசிரியர். 'நெறித்த சடை' என்பது பழைய உரை. "சென்று" என்ற தன்பின், 'மகிழ்வேம்' என ஒரு சொல் வருவித்து முடிக்க. இதுவே பழைய உரை. 'சென்றும்' எனக் கொண்டு, 'செல் லூதும்' என்பர் பேராசிரியர்.

கூத்தப் பெருமான் தனது விரிசடை ஒளிவீசிச் சுழல ஆடும் சிறப்புக் கூறப்பட்டது.

மாலயன் வலாரி மற்றை வானவர் பிழைக்க முன்னாள்
ஆலமுண் டவனே நல்ல வமுதமுண் டருளா யென்று
சீலமா மகிழ்ச்சி பொங்குஞ் சிந்தையி னுரைப்பக் கால
காலனு முண்டு நீராற் கரமலர் கழீஇய பின்னர். 92

வெள்ளிலை பழுக்காய் நல்கி விரைதரு தூபந் தீபங்
கொள்ளுநற் றீபங் காட்டிக் கோலநன் னீறு சாத்தித்
தெள்ளொளி விளங்கு மாடி திருந்தமுன் திகழ்வித் தெங்கும்
உள்ளவர் முடிமே லோங்க வொண்குடை கவித்தல் செய்து. 93

கற்றைவெண் கவரி செம்பொற் காம்புநீ ளால வட்டம்
பற்றியன் புடனே வீசிப் பரிவுட னடியார் சூழப்
பொற்றவி சிடையே மேவும் புண்ணியன் றிருமுன் பைம்போ
துற்றகை யுடனே வாத வூராங் கிருந்த பின்னர். 94

மந்திரம் பதங்கள் வன்னம் புவனங்க டத்து வங்கள்
ஐந்துநற் கலைகளென்னு மறுவகை யகற்றி யந்தச்
சிந்தனைக் கரிய மேலைச் சிவத்துட னறிவு சேரப்
பந்தனை யொழிவார் தம்மேற் பரிந்தருட் பார்வை செய்து. 95

— திருவாதவூரடிகள் புராணம்.

4. மதியுடம் படுத்தல்

[இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம் என்னும் இவற்றானாதல், அல்லது பாங்கற் கூட்டம் ஒன்றானாதல் தலைமகளைப் பின்னும் கூடிய தலைமகன், அதன்பின்னர்த் தெருண்டு வரைதல் சிறப்பு. தெருளாதொழியின், தலைவியது நோக்கினால் அறிந்த அவள்தன் காதல் தோழியைத் துணையாகப் பெற்றுக் களவொழுக்கத்தில் ஒழுகுவான். அவ்வாறு ஒழுகுவதற்கு அவள்பால் பணிவொடு சென்று சில சொற்சொல்லி அவளை முன்னர் ஐயுறச் செய்து, பின்னர் அவள் அறிவைத் தனக்கு உடம்படுமாறு செய்தல். இதனை அடிகள் பத்துத் துறைகளால் அருளிச் செய்கின்றார். அவற்றைக் கூறும் நூற்பா வருமாறு :-

[1] சேறல், [2] துணிதல், [3] வேழம் வினாதல்,
[4] கலைமான், [5] வழி, [6] பதி, [7] பெயர்வினா தல்லே,
[8] மொழிபெறா துரைத்தல், [9] கருத்தறி வித்தல்,
[10] இடைவி னாதலோ டிவையீ ரைந்தும்
மடவரற் றோழிக்கு மதியுடம் படுத்தல்.]

1. பாங்கியிடைச் சேறல்

எளிதன் றினிக்கனி வாய்வல்லி புல்லல்; எழில்மதிக்கீற்
றொளிசென்ற செஞ்சடைக் கூத்தப் பிரானைஉன் னாரின்என்கண்
தெளிசென்ற வேற்கண் வருவித்த செல்லல்எல் லாம்தெளிவித்
தளிசென்ற பூங்குழற் றோழிக்கு வாழி அறிவிப்பனே. 50

---

50. பாங்கியிடைச் சேறலாவது, பாங்கற் கூட்டத்தால் தலைவியை எய்திப் பிரிந்த தலைமகன், 'இனி யாம் இவளை இவ்வாற்றால் கூடுதல் அரிது; ஆதலின், அவள் கண்ணால் காட்டப்பட்ட தோழியைத் துணைக்கொண்டு கூடுதும்' எனக் கருதி அவள்பாற் செல்லுதல். இதற்குக் கொளு :-

கரந்துறை கிளவியிற் காதற் றோழியை
இரந்துகுறை யுறவல்என் றேந்தல் சென்றது.

வல்லியைப் புல்ல' என்க. சென்ற - அடைந்த. கூத்தப் பிரானை உன்னாதார் பிறர்க்குத் துன்பம் செய்வோராய் இருப்பர்

உ. குறையுறத் துணிதல்

குவளைக் கருங்கட் கொடியே ரிடைஇக் கொடிகடைக்கண்
உவளைத் தனதுயி ரென்றது ; தன்னே டுவமையில்லா
தவளைத்தன் பால்வைத்த சிற்றம் பலத்தான் அருளிலர்போல்
துவளத் தலைவந்த இன்னல்இன் னேஇனிச் சொல்லுவனே. 51

என்க. 'என்கண் வருவித்த' என இயையும், தெளி - விளக்கம். செல்லல் - துன்பம். வாழி, அசைநிலை. தெளிவித்து அறிவிப்பன் - தெளியப் பண்ணுமாற்றால் அறிவிப்பேன். இது, தலைமகன் தன் நெஞ்சொடு சொல்லியது.

கூத்தப்பிரானை நினையாதார் பிறர்க்குத் துன்பம் செய்யும் இயல்பினராதல் கூறப்பட்டது.

51. குறையுறத் துணிதலாவது, பாங்கியை நினைந்து சென்ற தலைவன், பாங்கியும், தலைவியும் ஓர் இடத்திருப்பக் கண்டு தனது குறையைப் பாங்கியிடம் கூறத் துணிதல். இதற்குக் கொளு :-

ஓரிடத் தவரை ஒருங்கு கண்டுதன்
பேரிடர் பெருந்தகை பேசத் துணிந்தது.

"என்றது" என்றது முற்று. இதன்பின், 'ஆதலின்' என்பது வருவிக்க. தலைவந்த - என்னிடம் வந்த. இன்னே - இப்பொழுதே. 'உவளைத் தனது உயிர் என்று காட்டிற்று' என்றது, 'துன்பம் தந்த கண்ணே, அதனின் நீங்கும் வாயிலையும் தந்தது' என்றபடி.

சிவபெருமானது சத்தி இணையில்லாத சத்தி என்பதும், அதனை அடையாதார்க்குத் துன்பம் நீங்கும் வாயில் இல்லை என்பதும் கூறப்பட்டன.

3. வேழம் வினுதல்

இருங்களி யாய்இன் றியானிறு மாப்பஇன் பம்பணிவோர்
மருங்களி யாஅன லாடவல் லோன்தில்லை யான்மலைஈங்
கொருங்களி யார்ப்ப உமிழ்மும் மதத்திரு கோட்டொருநீள்
கருங்களி யார்மத யானையுண் டோவரக் கண்டதுவே. 52

4. கலைமான் வினுதல்

கருங்கண் ணனையறி யாமைநின் றோன்றில்லைக்
[கார்ப்பொழில்வாய்
வருங்கண் ணனையவண் டாடும் வளரிள வல்லியன்னீர்,
இருங்கண் ணனைய கணைபொரு புண்புணர் இப்புனத்தின்
மருங்கண் ணனையதுண் டோவந்த தீங்கொரு வான்கலையே. 53

---

52. **வேழம் வினுதலாவது**, தனது குறையைக் கூறத் துணிந்த தலைமகன், முன்னர் வெளிப்படக் கூறத் துணியானுய், 'என் குறை இன்னதென இவள் தானே உணருமளவும் மறைத்துச் சில கூறுவேன்' என உட்கொண்டு, வேட்டைமேற் சென்ருன்போல அவரை அணுகி நின்று, 'இவ்விடத்து மத யானை வந்தது கண்டீரோ' என வினவுதல். இதற்குக் கொளு:-

ஏழையர் இருவரும் இருந்த செவ்வியுள்
வேழம் வினுஅய் வெற்பன் சென்றது.

"பணிவோர் மருங்கு" என்றதனை முதலிற் கூட்டுக, பணிவோர் - அடியார். இருங் களியாய் - பெரிய களிப்பினேனுய். அளியா - அளித்து. "உண்டோ" என்றதனை இறுதிக்கண் கூட்டுக.

சிவபெருமான் தன் அருட்குரியாரைத் தன் அடியாரோடு கூட்டி மகிழ்விப்பான் என்பது கூறப்பட்டது.

53, **கலைமான் வினுதலாவது**, வேழம் வினய தலைவற்கு அவர் ஒன்றும் உரையாமையின், அவன், 'கலைமான் வந்தது கண்டீரோ' என வினவுதல். இதற்குக் கொளு :-

5. வழி வினுதல்

சிலம்பணி கொண்டசெஞ் சீறடி பங்கன்றன் சீரடியார்
குலம்பணி கொள்ள எனைக்கொடுத் தோன்கொண்டு
[தான்அணியும்
கலம்பணி கொண்டிடம் அம்பலங் கொண்டவன் கார்க்கயிலைச்
சிலம்பணி கொண்டநுஞ் சீறூர்க் குரைமின்கள் சென்னெறியே.

சிலைமான் அண்ணல் — கலைமான் வினுயது.

"கருங் கண்ணன்" என்றதில் கண்ணன், வாளா பெய ராய் நின்றது; இவ்விடத்து ஐகாரம் சாரியை. 'வரும் கள் நனைய' எனப் பிரித்து, 'கள்ளால் தம் உடம்பு நனையும்படி' என உரைக்க. 'வண்டாடும் வல்லி' என இயையும். 'நும் இருங் கண் அனைய கணை' என்க. இதனுல் தலைவியது கண் ணுல் தான் இடர்ப்பட்டமை குறித்தான். 'கணை பொரு புண் புணர் ஒரு வான்கலை ஈங்கு இப்புனத்து அண் அணையது வந்தது உண்டோ' என மாறிக் கூட்டுக. அண் அணையது - அணுகு வது போல்வதாய். 'மருங்கண்ணணையது' என்றதற்குப் பல பொருள் உரைப்பர் பேராசிரியர்.

சிவபெருமான், தன் முனைப்பு உடையோர்க்கு அறியலாகா தவன் என்பது கூறப்பட்டது.

54. **வழி வினுதலாவது**, வேழம் வினுதல், கலைமான் வினுதல் இரண்டானும் தோழி, 'இவன் கருத்து வேறு' என்று உணர அஃதறிந்த தலைவன், வேட்டைமேற் சென்ருனய் நின்று வினவிய நிலையின் வேறுபட்டு, 'நும் ஊர்க்குச் செல்லும் வழி யாது' என வினுதல். இதற்குக் கொளு :-

கலைமான் வினுய கருத்துவேறறிய
மலைமான் அண்ணல் வழிவினுயது.

'அணியப் படுதலால், சிலப்பு தான் அழகு பெற்ற சீறடி' என்க. 'தான் கொண்டு அணியும் கலம்' என்க. கலம் - அணிகலம். இவ்விடத்துப் பணி - பாம்பு. 'கயிலைக்கண் உள்ள நும் சீறூர்' என்க. சிலம்பு அணிகொண்ட - மலைகள் நிரைகொண்டு நிற்கின்ற.

6 பதி வினுதல்

ஒருங்கட மூவெயில் ஒற்றைக் கணைகொள்சிற் றம்பலவன்
கருங்கடம் மூன்றுகு நால்வாய்க் கரியுரித் தோன்கயிலை
இருங்கடம் மூடும் பொழில்எழிற் கொம்பரன் னீர்கள், இன்னே
வருங்கடம் ஊர்பகர்ந் தாற்பழி யோஇங்கு வாழ்பவர்க்கே. 55

சிவபெருமானுக்கு அடியராய் உள்ளார்க்குப் பணிசெய்யப் பெறும் பேற்றினது சிறப்புக் கூறப்பட்டது.

55. பதிவினுதலாவது, முன்னொரு நிலையினனும், பின்னொரு நிலையினனும் மாறுபட்டுநின்று வினவிய தலைவனுக்கு ஒருவரும் எதிர் மொழி கொடாமையின், தலைவன், 'நும் ஊர்க்கு வழி கூறுதல் ஆகாதாயின், நும் ஊர் யாது? கூறுமின்' என வினுதல். இதற்குக் கொளு:-

பதியொடு பிறவினுய் மொழிபவ மொழிந்து
மதியுடம் படுக்க மன்னவன் வலித்தது.

'மூ எயில் ஒருங்கு அட' என்க. அட - அழித்தற்கு. 'ஈரம்பு கண்டிலம் ஏகம்பர் தம்கையில் - ஓரம்பே முப்புரம்' என்றார் திருவாசகத்தும் (296.). "ஒருகணை கொண்டு மூவெயில் உடற்றி" எனப் புறப் பாட்டும் (55) கூறிற்று. கருங் கடம் - கரிய மதநீர். 'கயிலைப் பொழில்' என இயையும். இருங் கடம் - பெரிய காடு. இன்னே - இவ்விடத்து. 'வாருங்கள்' என்பது, முதல் குறுகின்றது. இங்கு 'வாழ்பவர்க்குத் தம் ஊர் பகர்ந்தால் பழியோ' எனக் கூட்டுக. இது, முன் னின்றுரைப் படர்க்கையார் போலக் கூறியது.

சிவபெருமான், எல்லாவற்றையும் கரணத்தானன்றிச் சங்கற்ப மாத்திரையாற் செய்பவன் என்பது கூறப்பட்டது.

7. பெயர் வினுதல்

தாரென்ன ஓங்குஞ் சடைமுடி மேல்தனித் திங்கள்வைத்த
காரென்ன ஆருங் கறைமிடற் றம்பல வன்கயிலை
ஊரென்ன என்னவும் வாய்திற விர்;ஒழி விர்பழியேற்
பேரென்ன வோஉரை யிர்விரை யிர்ங்குழற் பேதையரே. 56

8. மொழிபெறுதுகூறல்

இரத முடைய நடமாட் டுடையவர் எம்முடையர்
வரத முடைய அணிதில்லை யன்னவர் இப்புனத்தார்
விரத முடையர் விருந்தொடு பேச்சின்மை; மீட்டதன்றேற்
சரத முடையர் மணிவாய் திறக்கிற் சலக்கென்பவே. 57

---

56 பெயர்வினுதலாவது, ஊர் வினவிய தலைவனுக்கு அவர் அது கூருதொழிய, 'ஊர் கூறுதல் குற்றமாயின், நும் பேர் கூறுமின்' என்று வினவுதல். இதற்குக் கொளு :-

பேரமைத் தோழியர் — பேர்வினயது.

"தாரென்ன" என்றது, "வைத்த" என்றதனேடு முடியும். "தார்" என்றது, 'கண்ணி' என்னும் பொருட்டாய் நின்றது. கார் - மேகம். 'கயிலைக்கண் என்னவும்' என இயையும். என்ன - எத்தன்மையன. இப் பன்மையால், தோழியையும், தலைவியையும் வேறு வேறு வாழ்வார்போல நினைந்தானுக வினவினன். 'அது பழியேல் ஒழிவிர்' என்க. ஊர் கூறுதலினும் பேர் கூறுதலே பழியாதல் அறிக. விரை - வாசனை. ஈர்ங்குழல் - நெய்ப்புடைய கூந்தல்.

வெண்மையும், அமுதமுமாய திங்களையும், கருமையான நஞ்சினையும் உடையோன்' என்றமையால், சிவபெருமான் நல்லனவும், தியனவுமாய எல்லாப் பொருள்களையும் உடைமையாகக் கொண்டுள்ளவன் என்பது கூறப்பட்டது.

57. மொழிபெறுது கூறலாவது, தன் வினவிற்கு, எதிர்மொழி ஒன்றும் கொடாத அவரைத் தலைவன், 'இவர் விருந்தினரோடு வாய்திறவாத விரதத்தை யுடையராதல் வேண்டும்; அல்லது, வாய் திறந்தால் கீழே சிந்தும் முத்துக்களை உடையராதல் வேண்டும்' எனக் கூறுதல். இதற்குக் கொளு :-

9. கருத்தறிவித்தல்

வின்னிற வாணுதல் வேல்நிறக் கண்மெல் லியலைமல்லல்
தன்னிறம் ஒன்றில் இருத்திநின் றேன்றன தம்பலம்போல்
மின்னிற நுண்ணிடைப் பேரெழில் வெண்ணகைப்
[பைந்தொடியீர்
பொன்னிற அல்குலுக் காமோ மணிநிறப் பூந்தழையே. 58

தேமொழியவர் வாய்மொழி பெருது
மட்டவிழ் தாரோன் கட்டுரைத்தது.

இரதம் - இனிமை. ஆட்டு - ஆடுதல். 'எம்மை உடையர்' என்னும் இரண்டாவது தொகுத்தல் பெற்றது. வரதம் - விரும்பியவற்றைக் கொடுக்கும் தன்மை. 'அன்னவராகிய இப் புனத்தார்' என்க. 'விரதமாக, சரதமாக' என ஆக்கம் வருவிக்க. விருந்து - விருந்தினர். "பேச்சின்மை" என்றதில் இரண்டாவது இறுதிக்கண் தொக்கது. "மீட்டு" என்றது 'மற்று' என்னும் பொருளது. சரதம் - மெய்ம்மை. "மணி" என்றது, முத்துக்களை. சலக்கெனல், விரைவுக் குறிப்பு. 'வாய் திறக்கின் சலக்கென்பனவாகிய மணிகளைச் சரதமாக உடையர்' என்க.

சிவபெருமான் ஆனந்த நடனத்தை யுடையவன் என்பதும் வேண்டுவார் வேண்டுவனவற்றைத் தருபவன் என்பதும் கூறப்பட்டன.

58. **கருத்தறிவித்தலாவது**, தனது கூற்றுக்கள் பலவற்றானும் தோழி தன் கருத்து இதுவென உணர்ந்து சொல்லாடாது நிற்றலின், பின்னர்த் தன் கருத்தைத் தழை காட்டுமுகத்தால் தலைமகன் புலப்படக் கூறல். இதற்குக் கொளு :-

உரைத்த துரையாது — கருத்தறி வித்தது.

"வில் நிறம், மின் நிறம்" என்றதில் நிறம், இயல்பு. மல்லல் - அழகு. தன் நிறம் - தன் மேனி. 'பொன் நிறத்துக்கு மணிநிறம் பொருத்தம்' என்றவாறு. அல்குலின் பரப்புக் கூறுது, நிறம் கூறினுன், முன்னைக் கூட்டம் உண்மை புலப்படுதற்கு.

10. இடைவினுதல்

கலைக்கீழ் அகலல்குற் பாரம தாரம்கண் ணார்ந்திலங்கு
முலைக்கீழ்ச் சிறிதின்றி நிற்றல்முற் ருதன் றிலங்கையர்கோன்
மலைக்கீழ் விழச்செற்ற சிற்றம் பலவர்வண் பூங்கயிலைச்
சிலைக்கீழ்க் கணையன்ன கண்ணீர் எதுநுங்கள் சிற்றிடையே. 59

சிவபெருமான், ஓர் உடம்பு இருவராய் நிற்பவன் என்பது கூறப்பட்டது.

59. இடை வினுதலாவது, 'இப் பூந்தழை ஆமோ, என்றதற்கும் எதிர்மொழியின்மையின், தலைவன் அவரது இடை பற்றி வினுதல். இதற்குக் கொளு:-

வழிபதி பிறவினுய் — மொழிபல மொழிந்தது.

கலை - மேகலை, ''அல்குற் பாரமது'' என்றது, ''நிற்றல்'' என்பதனேடு முடியும். ஆரம் - முத்து. சிறிது - சிறிதாய யாதானும் ஒன்று. முற்ருது - முடியாது. 'ஆதலின், நுங்கள் சிற்றிடை எது' என்க. 'அது காணப்படுகின்ற தில்லையே' என்பது குறிப்பெச்சம். சிலை - வில். சிலைக் கீழ்க் கண் - புருவத்தின் கீழ் உள்ள கண்ணிற்கு உவமை.

அரக்கனை முன்னர் மலைக்கீழ் விழச் செற்றுப் பின் அவனது பாடலைக் கேட்டு அருள் புரிந்தமையின், சிவபெருமான், பிழை செய்தாரும் பின்னர் அது தவிர்ந்து வேண்டின், பொறுத்து அருளுதல் கூறப்பட்டது.

எவர்க்குமெய்ஞ் ஞான மாமஞ் செழுத்தையு முணர்த்த வேண்டி
அவத்தொழி லகற்றி யாளுஞ் சிவத்தைமுன் னுக மாறித்
தவப்பெரு வடிவங் கொண்டார் தண்டமிழ்ப் பாடு மன்பர்
செவிப்புலன் வழியே சிந்தை யுறத்திரு வாய்ம லர்ந்தார். 96

— திருவாதவூரடிகள் புராணம்.

5. இருவரும் உள்வழி அவன்வர உணர்தல்

[இருவரும் உள்வழி அவன்வர உணர்தலாவது, தலைமகன் தோழியும், தலைவியும் தனித்திருக்கும் செவ்வியறிந்து சென்று, வேழம் விறுதல் முதலியவற்றைச் செய்ய, அவைபற்றி அவனது கருத்தைத் தோழி அறிதல். இதனை அடிகள் இரண்டு துறைகளால் இங்கு அருளிச்செய்கின்றார். அவற்றிற்குரிய நூற்பா வருமாறு:-

[1] ஐயம், [2] நாடல் ஆங்கவை இரண்டும்
மையறு தோழி அவன்வர உணர்தல்.]

1. ஐயுறுதல்

பல்லில னாகப் பகலைவென் றோன் தில்லை பாடலர்போல்
எல்லில்லன்; நாகத்தொ டேனம் வினு;இவன் யாவன்கொலாம்!
வில்லிலன்: நாகத் தழைகையில்; வேட்டைகொண் டாட்டம்;
[மெய்யோர்
சொல்லிலன்; ஆகற்ற வாகட வான்இச் சுனைப்புனமே. 60

---

60. ஐயுறுதலாவது, கையில் தழை கொண்டு, பொலிவின்றி நின்று, வேழம் முதலாக வினவிய தலைவனை, 'இவன் யாவன்' எனத் தோழி ஐயுற்றுக் கூறுதல். இதற்குக் கொளு:-

அடற்கதிர் வேலோன் தொடர்ச்சி நோக்கித்
தையற் பாங்கி ஐய முற்றது.

பல் இலனாக - பல் இல்லாதவனாகும்படி. பகல் - சூரியன். எல் - ஒளி. 'வினு நாகத்தொடு ஏனம்' எனவும், 'கையில் வில் இலன்' எனவும், 'கொண்டாட்டம் வேட்டை' எனவும் மாறுக. நாகம் இரண்டனுள் முன்னது யானை; பின்னது புன்னை மரம். 'இவன் யாவன் கொலாம்' என்பதனை இறுதிக்கண் கூட்டுக. "தழை" என்றதன்பின் பிரிநிலை ஏகாரமும், 'உடையன்' என்பதும் வருவிக்க. 'கற்றவா வியப்பு' என்க.

சிவபெருமானுக்குக் குற்றம் செய்தோர் நன்கு ஒறுக்கப் படுவர் என்பதும், அவன் தலத்தைப் பாடாதவர் ஒளியிழப்பர் என்பதும் கூறப்பட்டன.

2. அறிவுநாடல்

ஆழம்மன் னேவுடைத் திவ்வையர் வார்த்தை; அனங்கனைந்து
விழமுன் நோக்கிய அம்பலத் தான்வெற்பின் இப்புனத்தே
வேழமுன் னுய்க்கலை யாய்ப்பிற வாய்ப்பின்னும் மென்றழையாய்
மாழைமென் னேக்கி இடையாய்க் கழிந்தது வந்துவந்தே. 61

---

61. அறிவு நாடலாவது, தலைமகனை 'இவன் யாவன்' என ஐயுற்ற தோழி, அவன் வினுக்களை அடைவுபட ஓர்ந்து அவன் கருத்தினை அறிதல். 'அறிவால் நாடல்' என மூன்ருவது விரித்துக்கொள்க. இதற்குக் கொளு :-

வெற்பன் வினுய சொற்பதம் நோக்கி
நெறிகுழற் பாங்கி அறிவு நாடியது.

'இவ்வையர் வார்த்தை ...... இப்புனத்தே முன் வேழமாய், (பின்) கலையாய், (பின்) பிறவாய், பின்னும் மென்றழையாய் வந்து வந்து, (முடிவில்) மாழைமென்னேக்கி இடையாய்க் கழிந்தது; (அதனுல்) ஆழம் மன் ஓ உடைத்து' எனக் கூட்டுக.

மாழை - மாவடு. 'பேதைமை' என்பர் பேராசிரியர். 'குளிர்ந்த' என்பது பழைய உரை. மன், மிகுதிப் பொருட்டு, ஓகாரம், சிறப்பு.

சிவபெருமான், காமம் முதலிய குணங்களுட்படாதவன் என்பது கூறப்பட்டது.

6. முன்னுறவுணர்தல்

[முன்னுற வுணர்தலாவது, தலைமகளுக்குக் கூட்டம் உண்டாயினமையைத் தோழி அறிதல். முன் உறவு - முன் உற்றது. இது, மேற்கூறிய இருவரும் உள்வழி அவன்வர உணர்தலின்முன் நிகழ்வதாயினும், மதியுடம்படுத்தலோடு இயைய, இருவரும் உள்வழி அவன்வர உணர்தலை முன்வைத்தார். முன்னுறவுணர்தல், 'இடந்தலைப் பாட்டின் பின்னன்றி நிகழாது' என வரையறுப்பர் களவியல் உரையாளரும், திருக்கோவையுரைப் பேராசிரியரும். அது பெரும்பான்மையேயாம். சிறுபான்மை இயற்கைப் புணர்ச்சியை யடுத்தும் நிகழ்தல் கூடும். அங்ஙனமாயின், அது, பின் நிகழ்ச்சியொடு கூட்டி யுணர்தற்கு ஏதுவாதல் பயனும்.

முன்னுற வுணர்தலை ஒரு துறையானே முடிப்பர் அடிகள். அதனைக் கூறும் நூற்பா வருமாறு:-

வாட்டம் வினுதல் முன்னுற வுணர்தல்
கூட்டி யுணரும் குறிப்புரை யாகும்.]

1. வாட்டம் வினுதல்

நிருத்தம் பயின்றவன் சிற்றம் பலத்துநெற் றித்தனிக்கண்
ஒருத்தன் பயிலுங் கயிலை மலையின் உயர்குடுமித்
திருத்தம் பயிலுஞ் சுனைகுடைந் தாடிச் சிலம்பெதிர்கூய்
வருத்தம் பயின்றுகொல் லோவல்லி மெல்லியல் வாடியதே. 62

---

62. வாட்டம் வினுதலாவது, தலைவன் பாங்கியிற் கூட்டத்திற்கு முயலுதற்கு முன்னுதல், முயன்ற பின்னுதல் தோழி தலைமகளது வாட்டத்தை வினவுதல். தலைவன் முயன்ற பின்னுயின், 'எம்பெருமான் என்பொருட்டு இத்துணை இடர்ப்பாடு எய்துகின்றுன்' எனத் தலைவிக்கு வாட்டம் மிகும் என்க. இத்துறைக்குக் கொளு:-

மின்னிடை மடந்தை தன்னியலி நோக்கி
வீங்கு மென்முலைப் பாங்கி பகர்ந்தது.

நிருத்தம் - நடனம். "சிற்றம்பலத்து" என்றதனை முதலிற் கூட்டுக. திருத்தம் - தீர்த்தம்; தெய்வ நீர். பயிலும் - நீங்காது நிற்கும். சிலம்பு - மலை. மலையின் முன்னே நின்று அழைத்து அதன்கண் உண்டாகும் எதிரொலியைக் கேட்டு மகிழ்தல், மகளிர் விளையாட்டுக்களுள் ஒன்று. மெல்லியல் விளி. 'நீ வாடியது வருத்தம் பயின்றுகொல்லோ' என்க.

சிவபெருமானது கயிலைத் தீர்த்தத்தின் சிறப்புக் கூறப்பட்டது.

விரவு மன்பொரு வடிவுகொண் டணைவார்
　　விழித்த பார்வையின் விளக்கின்முன் னிருள்போற்
சுருதி செந்தமி ழாக்கிய மொழியார்
　　தொலைவி லாதவெந் துயர்ப்பவ மொழிந்து
பரவி மென்பதம் பணிபவர் படிமேற்
　　படிய வீழ்ந்தனர் வாழ்ந்தனர் பரிவான்
மருவு மிங்கிவர் சென்னியி லிருதாண்
　　மகிழ வைத்தனர் மதிநதி முடிப்பார்.　　97

மன்னு முன்னுள வுயிர்க்கர ணங்கண்
　　மாய்ந்து பொய்முத லறிவிழந் தருளாற்
றுன்னு மின்னருட் சிவகர ணங்க
　　டோன்ற லாற்சுக வறிவதிற் றோன்றச்
சென்னி யின்மிசை மேவிய பாதந்
　　திருந்து கண்ணிணை சேர்த்திரு கரத்தால்
உன்னல் செய்திடு மிதயமே லணைவித்
　　துவகை கூர்ந்துமெய் யுணர்ச்சியி னெழுந்தார்.　　98

— திருவாதவூரடிகள் புராணம்.

7. குறையுற உணர்தல்

[குறையுற உணர்தலாவது, தலைமகன், முன்னர்த் தான் தலைமைப்பாடுடையனாய்ச் சென்று வேழம் வினாதல் முதலியன செய்தாற்போலன்றி வழிபாடு செய்யும் இயல்பினனாய் நின்று தன் குறை புலப்படுத்த, அதனால், தோழி அவன் கருத்தறிதல். இதனை அடிகள் நான்கு துறைகளாக வகுத்தருளிச் செய்வர். அவற்றிற்குரிய நூற்பா வருமாறு :-

[1] குறையுற்று நிற்றல், [2] அவன்குறிப் பறிதல்,
[3] அவள்குறிப் பறிதலோ, [4] டவர்நினை வுண்ணல்
கூறிய நான்கும் குறையுற உணர்வெனத்
தேறிய பொருளின் தெளிந்திசி னோரே.]

1. குறையுற்றுநிற்றல்

மடுக்கோ கடலின் விடுதிமில்? அன்றி மறிதிரைமீன்
படுக்கோ? பணிலம் பலகுளிக் கோபரன் தில்லைமுன்றிற்
கொடுக்கோ வளைமற்று நும்மையர்க் காயகுற் றேவல்செய்கோ?
தொடுக்கோ? பணியீர் அணியீர் மலர்நுஞ் சுரிகுழற்கே. 63

---

63. குறையுற்று நிற்றலாவது, தலைவியது வாட்டங் கண்டு ஐயுறாநின்ற தோழியிடத்துத் தலைமகன் சென்று வழி பாடு சொல்லித் தன் கருத்துத் தோன்றக் கூறுதல். இதற்குக் கொளு :-

கறையுற்ற வேலவன் — குறையுற்றது

'கடலின் மடுக்கோ' என்க. மடுத்தல் - செலுத்துதல். "மடுக்கோ, படுக்கோ" முதலியவற்றிற்கு, 'மடுக்கவோ; படுக்கவோ' முதலியன பொருளாம். திமில் - படகு. பணிலம் - சங்கு. கொடுத்தல், இங்கு விற்றல். "தொடுக்கோ, பணியீர்" என்பவற்றை இறுதியிற் கூட்டுக.

தில்லைப் பெருமானே பரம்பொருள் என்பது கூறப்பட்டது.

2. அவன் குறிப்பறிதல்

அளியமன் னும்மொன் றுடைத்தண்ணல் எண்ணரன்
[தில்லையன்னாள்
கிளியைமன் னுங்கடி யச்செல்ல நிற்பிற், கிளரளகத்
தளியமர்ந் தேறின், வறிதே யிருப்பிற் பளிங்கடுத்த
ஒளியமர்ந் தாங்கொன்று போன்றொன்று தோன்று மொளி
[முகத்தே. 64

---

64. அவன்குறிப்பறிதலாவது, வழிபாடு சொல்லி நிற்கின்ற தலைமகன் முகத்துத் தலைமகளது தன்மைக்கேற்ப வேறுபாடு தோன்றுதலைக் கண்டு, தோழி அவன் கருத்தினை அறிதல். இதற்குக் கொளு:-

பொற்றொடித்தோழிதன் சிற்றிடைப்பாங்கி
வெறிப்பூஞ்சிலம்பன் குறிப்பறிந்தது.

'அளிய அண்ணல் எண் மன்னும் ஒன்றுடைத்து' என மாற்றி, இறுதிக்கண் வைத்துரைக்க. அளிய - இரங்கத்தக்க. மன்னும் - நிலைபெற்ற. ஒன்று - ஒருபொருள். எண் - எண்ணம், 'எண்ணின்கண்' என்க. அரன் - பாசத்தை அரிப்பவன். 'செல்ல நிற்பின், ஏறின், இருப்பின்' என்றவை வினைச் செவ்வெண்களாதலின், உம்மை பெய்து உரைத்துக் கொள்க. "கிளியை" என்றவிடத்து நின்ற மன், உம் அசைநிலைகள். 'பளிங்கின்கண் அதனை அடுத்த ஒளி அமர்ந்தாங்கு' என்க. ஒன்றபோன்று - முதற்கண் ஒருபொருள்போல நின்று. ஒன்று தோன்றும் - பின் வேறொன்று தோன்றுகின்றது. 'முகத்தே ஒளி ஒன்று போன்று ஒன்று தோன்றும்' என மாற்றிக்கொள்க. 'தலைவி கிளியகடியச் செல்லின் ஆற்றுமையும், அவளது அளகத்து அளிகள் ஏறின் அவற்றை ஒச்ச விரைதலும், அவள் வாளா இருப்பின் மகிழ்தலும் தலைவன் முகத்து உளவாயின' என்றபடி.

சிவபெருமான் பாசத்தை அரிப்பவனுதல் கூறப்பட்டது,

3. அவள் குறிப்பறிதல்

பிறைகொண் டொருவிக் கெடாதன்பு செய்யிற் பிறவியென்னும்
முறைகொண் டொருவன்செல் லாமைநின் றம்பலந் தாடுமுன்னேன்
உழைகொண் டொருங்கிரு நோக்கம் பயின்றஎம் [ஒண்ணுதல்மாந்
தழைகொண் டொருவன்என் னுமுன்னம் உள்ளந் தழைத்திடுமே.

4. இருவர் நினைவு மொருவழி யுணர்தல்

மெய்யே யிவற்கில்லை வேட்டையின் மேன்மனம்; மீட்டிவளும்
பொய்யே புனத்தினை காப்ப; திறைபுலி யூரனையாள்
மையேர் குவளைக்கண் வண்டினம் வாழுஞ்செந் தாமரைவாய்
எய்யே மெனினும் குடைந்தின்பத் தேனுண் டெழில்தருமே. 66

---

65. அவள் குறிப்பறிதலாவது, தலைவனது முகம் நோக்கி அவன் குறிப்பறிந்த தோழி, தலைமகளது முகத்தையும் நோக்கி, அவளது குறிப்பை அறிதல். இதற்குக் கொளு:-

ஆங்கவள் குறிப்புப் — பாங்கி பகர்ந்தது.

பிறை கொண்டு - குற்றத்தை மேற்கொண்டு. ஒருவி - தன்னை நீங்கி. கெடாது - கெட்டொழியாமல். முறை - குழி. 'முறைக்கு' என நான்காவது விரிக்க. ஒருவன், பிரமன். 'ஒருவன்' என்பதை, 'அன்பு செய்மின்' என்பதனோடு இயைப்பர் பேராசிரியர். இன்னும் அவர், "பிறைகொண்டு ஒருவிக் கெடாது" என்றதற்கு, 'பிறையை உள்ளத்துட் கொள்ளுதலும், அதனால் பிறை செய்தவனை நீக்குதலும், நீக்குதலோடமையாது அவனைக் கெடுத்தலும் செய்யாது நின்று ஆடும் மூன்னேன்' என ஒரு நயவுரையும் கூறுவர். உழை - மான்; என்றது, அதன் நோக்கினை. "மாந்தழை கொண்டு ஒருவன்" என்றது, 'அச்சொற்றொடரை யான் முடிக்குமுன்னே' என்றதாம், 'ஒண்ணுதல் உள்ளம் தழைத்திடும்' என்க.

சிவபெருமான் தன் அடியவரைப் பிறவிக்குழியில் வீழாமல் எடுப்பவன் என்பது கூறப்பட்டது.

66. இருவர் நினைவும் ஒருவழி உணர்தலாவது, தலைவன், தலைவி இருவரது குறிப்பினையும் அறிந்த தோழி, அவை

இரண்டும் தாம்மேற்கொண்ட செயல் பிறிதொன்றின் பொருட்டாம் நிலையில் நிற்றலை அறிதல். இதற்குக் கொளு :-

அன்புறுநோக் காங்கறிந் — தின்புறுதோழி என்னியது.

'மீட்டு' என்பது இங்கும், 'மற்று' என்னும் பொருளது. இறை - எவ்விடத்தும் இருப்பவன். 'புலியூரனையாளது கண்ணாகிய வண்டு, அவள் வாழ்தற்கு ஏதுவாகிய ஒரு தாமரை இடத்துச் சென்று முழுகி இன்பத் தேன் உண்டு எழில் பெற்று விளங்குகின்றது' என்க. வண்டென்னாது, "வண்டினம்" என்றது, நோக்கின் பன்மை கருதி. எய்யேம் - யாம் அறியேம். 'எய்யேம் எனினும் குடைந்து உண்டு' எழில் தரும்என்க.

சிவபெருமான், எங்கும் நிறைந்து நிற்பவனாதல் கூறப்பட்டது.

மேலை யத்தலத் திந்திர னிமையோர்
  மீதெ லாம்பொழி விரைமலர் மழையே
போல வித்தலம் புதையவந் துதிரப்
  பூதருங்கண நாதரும் புகழச்
சால நற்குணம் புனையுநல் லடியார்
  தங்கள் செங்கையி லொலியலுந் தயங்கும்
ஆல வட்டமுங் கவரியு மிருபா
  லசைய மாமுனிக் கணமடி வணங்க 99

இருந்த வப்பெருங் கருணைய னெதிரே
  யெய்தி யன்புடை யியல்பின ரிறைஞ்சிச்
சிரந்த னிற்றம திருகரங் குவியச்
  சிறந்த பேரரு ணிறைந்தசெய் கையராய்
வருந்தி யித்தல மகழ்ந்துமேற் பறந்து
  மால யன்றெழ வரிய நீ யடியேன்
அருந்து யர்ப்பவ மகற்றவிங் குருவ
  மாவ தேயென வழுதுநெஞ் சழிந்தார். 100

— திருவாதவூரடிகள் புராணம்.

8. நாண நாட்டம்

[நாண நாட்டமாவது, தலைவிக்குத் தலைவனொடு கூட்டம் உண்மையைத் துணிதற்பொருட்டுத் தோழி அவட்கு நாணம் உண்டாகுமாறு சில சொற்களைச் சொல்லி ஆராய்தல். நடுங்க நாடுதல் பின்னர் வரும்.

"மெய்யினும் பொய்யினும் வழிநிலை பிழையாது
பல்வேறு கவர்பொருள் நாட்டத் தானும்"

என்றமையின் (தொல். பொருள். 112.) தோழி தலைவியை நாணவும், நடுங்கவும் நாடும் பொழுது ஒரு பொருளே பயந்து துணிவுண்டாக்கும் சொற்களால் நாடாது பலபொருள் பயந்து ஐயமாக்கும் சொற்களால் நாடுதல் வேண்டும் என்பது பெறப் பட்டது. படவே,

"நாணவும் நடுங்கவும் நாடாள் தோழி
காணுங் காலைத் தலைமகள் தேத்து"

என்ற பழைய சூத்திரம், ஒருபொருள் பயக்கும் சொற்களால் நாடுதலையே விலக்கிற்றுதல் அறியப்படும். துணிவுபடக் கூறின், பெருநாணத்தாலும், பெருநடுக்கத்தாலும் தலைவி இறந்துபடுவ ளாதலின், தோழி அவள்மாட்டு அன்பிலள் என்பது படும். நாண நாட்டமும், நடுங்க நாட்டமும் மூன்றுறவுணர்தலின் பகுதி யாயினும் இச்சிறப்பின்மை பற்றி, வேறுபடுத்திக் குறையுற உணர்தலின் பின்வைத்தார் என்க.

அடிகள் நாணநாட்டத்தினை ஐந்து துறைகளாகவும், நடுங்க நாட்டத்தினை ஒருதுறையாகவும் அருளிச் செய்வர். அவற்றைக் கூறும் நூற்பா வருமாறு :-

[1] பிறைதொழு கென்றல், பின்னும் அவனை
[2] உறவென வேறு படுத்தி யுரைத்தல்,
[3] சுனையாடல் கூறல் தோற்றங் கண்டு
[4] புணர்ச்சி யுரைத்தல், போதுவெனக் கூறி
[5] மதியுடம் படுதல வழிநாணல; நடுங்கல்
[6] புலிமிசை வைத்தல் புகலுங் காலே.

இவற்றுள் இறுதிக்கண் உள்ள ஒன்று நடுங்க நாட்டம்; ஏனையவை நாண நாட்டம்.]

1. பிறைதொழுகென்றல்

மைவார் கருங்கண்ணி செங்கரங் கூப்பு: மறந்தும் மற்றப்
பொய்வா னவரிற் புகாதுதன் பொற்கழற் கேஅடியேன்
உய்வான் புகவொளிர் தில்லைநின் ருேன்சடை மேலதொத்துச்
செவ்வான் அடைந்த பசுங்கதிர் வெள்ளைச் சிறுபிறைக்கே. 67

67, பிறைதொழுகென்றலாவது, திங்கள் தோறும் தோன்றும் பிறையைக் கன்னிமைப் பெண்கள் தொழும் முறையே அன்று தோன்றிய பிறையைத் தோழி தான் தொழுதுநின்று, தலைவியை, 'நீயும் தொழுக' எனக் கூறுதல். இதற்குக் கொளு :-

பிறைதொழு கென்று பேதை மாதரை
நறுநுதற் பாங்கி நாண நாட்டியது.

'மைக் கண், வார் கண், கருங் கண்' எனத் தனித்தனி இயையும். வார் - நீண்ட. வானவ ரல்லாதாரை வானவர் எனச் சிலர் கூறுதல் பற்றி, "பொய்வானவர்" என்ருள். மற்று, வினைமாற்று. 'மற்றைப் பொய்வானவர்' என்பதும் பாடம. "உய்வான் புக" என்றமையின், "புகாது" என்ற விடத்தும் 'புக்கு அழியாது' என்றுரைக்கப்படும். உய்தல், பிறவிக் கட லினின்றும் ஏறல்.

" கற்றைவார் சடைஎம் அண்ணல்
　　கண்ணுதல் பாதம் நண்ணி
மற்றும்ஓர் தெய்வந் தன்னை
　　உண்டென நினைந்தெம் பெம்மாற்
கற்றிலா தவரைக் கண்டால்
　　அம்மநாம் அஞ்சு மாறே "

" இருவரால் மாறு காணு
　　எம்பிரான் தம்பி ரானும்
திருவுரு அன்றி மற்ருேர்
　　தேவர்எத் தேவர் என்ன
அருவரா தவரைக் கண்டால்
　　அம்மநாம் அஞ்சு மாறே "

2. வேறுபடுத்துக் கூறல்

அக்கின்ற வாமணி சேர்கண்டன் அம்பல வன்மலயத்
திக்குன்ற வாணர் கொழுந்திச் செழுந்தண் புனமுடையாள்
அக்குன்ற ஆறமர்ந் தாடச்சென் ருள்அங்கம் அவ்வவையே
ஒக்கின்ற வாறணங் கேஇணங் காகு முனக்கவளே. 68

என்ற திருவாசகங்களைக் காண்க (516, 517.). சடைமேலது - சடையின்மேல் உள்ளதாகிய பிறை. பிறை தோன்றினமையை அறிவிக்கும் மாத்திரையே கூறுவாள்போலக் கூறி நீங்கலின், தலைவிக்குப் பெருநாண் விளையாதாயிற்று. தலைவனைப் பெற்றுக் கன்னிமை நீங்கிய பெண்டிர் பின்னர்த் தாம் தலைவனோடு நின்றன்றித் தனித்து நின்று பிறையைத் தொழார். அதனால், தலைவி சிறிதே நாணி ஒருபால் ஒதுங்கி நிற்பாள்.

சிவபிரானை யன்றிப் பிறர் தேவராகாமை கூறப்பட்டது.

68. வேறுபடுத்துக் கூறலாவது. தோழி தலைவியை, 'சுனையாடிவா' என விடுத்து, அவள் தலைவனைக் கூடி வந்த பின், அவளைத் தெய்வ மகள் என்று கருதுவதாக வேறுபடுத்து, சுனையாடச் சென்ற எம் தலைவி எங்கே? எனக் கூறுதல். இதற்குக் கொளு:-

வேய்வளைத் தோளியை வேறு பாடுகண்
டாய்வளைத் தோழி அணங்கென்றது.

'அக்கின் தவா மணி' எனப் பிரிக்க. அக்கு - எலும்பு. இன், அல்வழிக்கண் வந்த சாரியை. தவா - கெடாத. 'எலும்பாகிய மணியை அணிந்த கண்டன்' என்க. 'மலயத்து வாணர்' என்க. உடையாள் - காவலுடையாள் அக்குன்ற ஆறு - அஃதோ உள்ள மலையின்கண் உளதாகிய ஆறு. அமர்ந்து - விரும்பி. அங்கம் - உறுப்பு. 'உன் அங்கம்' என்க. அவ்வவையே - எம் தலைவிதன் உறுப்புக்களே. 'ஒக்கின்றவாற்ருல்' என உருபு விரிக்க. இணங்கு - இணங்குதற்குரிபாள். ''இணங்காகும்'' என்றதனை இறுதியிற் கூட்டி, 'அவளைக் கண்டுசெல்' எனக் குறிப்பெச்சம் வருவித்து முடிக்க. இதனால்

3. சுனையாடல் கூறி நகைத்தல்

செந்நிற மேனிவெண் ணீறணி வோன்தில்லை யம்பலம்போல்
அந்நிற மேனிநின் கொங்கையில் அங்கழி குங்குமமும்
மைந்நிற வார்குழல் மாலையும் தாதும் வளாய்மதஞ்சேர்
இந்நிற மும்பெறின் யானுங் குடைவன் இருஞ்சுனையே. 69

தலைவிக்கு ஒருபுடை நாண் வரினும், மற்றொருபுடை, 'இவள், உண்மையாகவே மருண்டு கூறுகின்றாளோ' என்று ஐயமாம்.

அக்குமணி கூறிய முகத்தால், பிறரொருவரும் அறிவில ரல்லராகச் சிவபிரான் ஒருவனே அறிவிலனாதல் கூறப்பட்டது.

69. சுனையாடல் கூறி நகைத்தலாவது, சுனையாடச் சென்று தலைவனைக் கூடி வந்த தலைவியைத் தோழி, 'சுனையாட்டத்தால் நீ பெற்ற அழகை யானும் ஆடிப் பெறுவேன்' எனக் கூறி நகைத்தல். இதற்குக் கொளு :-

மான நாட்டிய வார்குழற் பேதையை
நான நாட்டி நகைசெய்தது.

'அம் நிற மேனி' எனப் பிரிக்க. மேனி நின் - மேனியை உடைய நினது. அங்கு - சுனையாடுமிடத்து. "மாலை" என்றது. அதனின்றும் சிதைந்த பூவினை. வளாய் - மேனி முழுதும் சூழப்பெற்று. மதம் - களிப்பு. இதனால், தலைவிக்கு ஒருபுடை, 'இவள் தன் களவொழுக்கத்தை யறிந்தாளோ' என நாண் வரினும், மற்றொருபுடை, இவளது அறியாமையால், இவ்வேறு பாடு சுனையாட்டத்தாலாயது என்றே கருதுகின்றாள்போலும் என்று ஐயமாம்.

செந்நிற மேனியில் வெண்ணீறணிந்து விளங்கும் சிவபெரு மானது திருமேனி யழகு கூறப்பட்டது.

4. புணர்ச்சி யுரைத்தல்

பருங்கண் கவர்கொலை வேழப் படையோன் படப்படர்தீத்
தருங்கண் ணுதல்தில்லை யம்பலத் தோன்தட மால்வரைவாய்க்
கருங்கண் சிவப்பக் கனிவாய் விளர்ப்பக்கண் ணாளிபின்
வருங்கண் மலைமலர் சூட்டவற் றேமற்றவ் வான்சுனையே. 70

5. மதியுடம்படுதல்

காகந் திருகண்ணிற் கொன்றே மணிகலந் தாங்கிருவர்
ஆகத்துள் ஓருயிர் கண்டனம் யாம்;இன் றியாவையுமாம்
ஏகத் தொருவன் இரும்பொழில் அம்பல வன்மலையில்
தோகைக்கும் தோன்றற்கும் ஒன்றாய் வரும்இன்பத் துன்பங்களே. 71

---

70. புணர்ச்சி யுரைத்தலாவது, தோழி சுனை யாடல் கூறி நகையாது, 'நின்கண் உளவாகிய இவ் வேறுபாடுகளை யெல்லாம் நீ ஆடிய சுனைசெய்யவல்லதோ' எனப் பிறிதோ ராற்றாற் கூறுதல். இதற்குக் கொளு :-

மனக்குறி நோக்கிப் — புணர்ச்சி யுரைத்தது.

பருங்கண் - மிதந்த கண். கவர் கொலை - மனத்தைக் கவர்தலாகிய கொலை. வேழம் - கரும்பு. கள் மலை மலர் - தேன் நிறைந்த, மலையிடத்து மலர்களாலாகிய மாலை. வற்றே - வல்லதோ. வான் சுனை - பெரிய சுனை. இதனாலும் மேற் கூறியவாறு தலைவிக்கு ஐயமே உளதாம். 'தோழி இவ்வா றெல்லாம் நாடுதற்குரியாள்' என்பதல்லது, 'இவையெல்லாம் ஒருங்கே நிகழும்' என்பது கருத்தன்று.

71. மதியுடம்படுதலாவது, பலபடியானும் நாடித் தலைவிக்குக் கூட்டம் உண்மை துணிந்த தோழி, பின் இருவரும் உள்வழி அவன்வர உணருமிடத்து, இருவர்க்கும் உயிர் ஒன்றா யிருந்தது என வியந்து கூறுதல். இதற்குக் கொளு :-

அயில்வேற் கண்ணியோ டாடவன் றனக் குயிரொன் றென
மயிலியல் தோழி மதியுடம் பட்டது.

"யாவையுமாம்" என்றது முதலாகத் தொடங்கியுரைக்க. ஆகம் - உடம்பு. யாவையுமாம் ஏகத்து ஒருவன் - எல்லாப் பொருளுமாய் நிறைந்து நிற்கும் ஒன்றுகிய சத்தியை உடைய ஒப்பற்றவன். 'இரும்பொழிலால் சூழப்பட்ட அம்பலம்' என்க. ஒன்ருய் - பொதுவாய். மதியுடம்படுதல் நடுங்க நாட்டத்தின் பின் நிற்றற்குரியது. எனினும், நடுங்க நாட்டம் நிகழ்தல் ஒருதலையன்று என்றற்கு அதன் மூன் வைக்கப்பட்டது.

சிவபெருமானது சத்தியின் சிறப்புக் கூறப்பட்டது.

ஐய னேயெனை யாண்டருள் புரியு
 மாதி யேயுழை யணிமழு விருக்குங்
கைய னேகொடுங் காலனை முனியுங்
 கால னேயிரு கண்ணினுண் மணியே
செய்ய னேயடி போற்றியென் பெரிய
 செல்வ மேயடி போற்றிபொய் யினர்தம்
பொய்யனேயடி போற்றி யெவ் வுயிர்க்கும்
 போத மேயடி போற்றியென் றழுதார். 101

அற்றை ஞான்றிருள் வைகறை யெனும்போ
 தணைத லும்பா னருட்குரு வடிவந்
துற்ற சாந்துடன் முயங்குசெங் கழுநீர்த்
 தொடைய லின்சுமை பொருதெனத் துளங்கிக்
கற்று மான்கரத் தேந்திய விறைவன்
 கவின்கொண் மார்பணி மலர்த்தொடை கழித்தங்
குற்ற வான்றுய ரகன்றுநல் லடியா
 ருடன்விளங்கினர் களங்க மொன் றில்லார். 102

— திருவாதவூரடிகள் புராணம்.

9. நடுங்க நாட்டம்

[நடுங்கநாட்டமாவது இது என்பதும், அஃது ஒருதுறையாற் கூறப்படுகின்றது என்பதும் மேலே கூறப்பட்டன]

புலிமிசைவைத் துரைத்தது

ஆவா! இருவர் அறியா அடிதில்லை யம்பலத்து
மூவா யிரவர் வணங்கநின் றோனைஉன் னாரின்முன்னித்
தீவாய் உழுவை கிழித்ததந் தோ! சிறிதேபிழைப்பித்
தாவா மணிவேல் பணிகொண்ட வாறின்றோர் ஆண்டகையே.

---

72. நடுங்கநாட்டம் பலவற்றுள் இது, புலிமிசை வைத்து நாடியது.

நடங்கிடைப் பாங்கி — நடுங்க நாடியது.

முதற்கண் நின்ற "ஆவா" என்பது இருவரது நிலைபற்றி எழுந்த பரிவுக் குறிப்பு. மூவாயிரவர், தில்லைவாழ் அந்தணர். உன்னாதவர், புலிக்கு உவமை. உழுவை - புலி. "தீவாய் உழுவை கிழித்தது" என்னும் தொடர், 'உழுவை தனது தீய வாயைத் திறந்தது' எனவும், 'தீவாயை உடைய உழுவை மற்றொன்றைக் கிழித்தது' எனவும், 'தீவாயை உடைய உழுவையை மற்றொன்று கிழித்தது' எனவும் மூன்று பொருளைத் தருதலால், தலைவிக்குத் துணிவு பிறவாது ஐயமே தோன்றும். அவ்விடத்து, 'என்பொருட்டு இங்குப் பல்காலும் வந்து உலாவா நின்ற எம்பெருமானைத்தான் தீவாய் உழுவை கிழித்து விட்டதோ' என நடுக்கமும் ஒருபால் உளதாம். ஆயினும், பின்னர், 'சிறிதே பிழைப்பித்து, ஆவா! இன்று ஓர் ஆண்டகை மணிவேல் பணிகொண்டவா' என்றதனால் தலைவி நடுக்கம் நீங்கினாளாம். பிழைப்பித்து - தப்புவித்து. இவ்விடத்து, 'ஆவா' என்றது வியப்பு. வேலைப் பணிகொண்டமையாவது, அதனால் தீவாய் உழுவையைக் கொன்றது.

சிவபெருமான் இருவர்க்கும் அரியனாய், மூவாயிரவர்க்கு எளியனாய் நிற்றல் கூறப்பட்டது.

10 மடற்றிறம்

[தோழி முன்னுற உணர்தல் முதலிய பலவாற்றானும் தலைவிக்குக் கூட்டம் உண்மை துணிந்தபின், 'தலைவி பெருநாணினளாதலின் இதனினாஉங்கு வினவின் இறந்துபடுதலுங் கூடும்' என்று வெளிப்பட வினவாது, தானும் பெருநாணின ளாதலாலும், தலைவியை எளியளாகச் செய்தல் கூடாது என்னும் கருத்தினானும் தானும், தலைவியும் ஒருங்கிருந்த விடத்துத்தலைவன் வந்து கூறிய குறிப்பு மொழிகட்கு எதிர் மொழி யொன்றும் கொடாது, 'இவன் தன் கருத்தை வெளிப்படக் கூறுக' என்றிருப்பாள். அவ்வழித் தலைமகன், தன் ஆற்றாமை யால் தோழியைத் தனியிடத்திற் கண்டு வெளிப்பட இரப்பான். அங்ஙனம் வெளிப்பட இரத்தல் பலவகைய. அவற்றுள், ஒன்று மடற்றிறம். அஃதாவது, 'இதுகாறும் என் குறை நின்னான் முடியும்என் றிருந்தேன்; முடியாமையின், இனி மடல் ஏறியா யினும் முடித்துக்கொள்வேன்' எனக் கூறுதல்.

மடல் ஏறுதலாவது, ஒருத்தியைக் காதலித்தான் ஒருவன் அவளைப் பெறுதொழிந்து, அவ்வாற்றாமையால் அவன் இறந்து படும் நிலை உண்டாகுமாயின், அவன் பனங்கருக்கு மடலாற் குதிரை செய்து, தன்னால் காதலிக்கப்பட்டாளது உருவத்தை ஒரு படத்தில் எழுதி அதன் மேலே அவள் பெயரையும், தன் பெயரையும் பொறித்து, தான் சாம்பற்பூசி, எருக்க மாலையை அணிந்து, 'இவளால் யான் இறந்தொழிகின்றேன்' எனப் பறையடித்துப் பாடிக்கொண்டு தெருவின்கண் வருதல். இவ் வாறு வருவானாயின், அரசன், 'இவளைப் பெறுதொழியின் நீ இறந்துபடுதல் உண்மை என்றற்குச் சோதனை தருவாயோ! எனக் கேட்டு, 'தருவேன்' என அவன் உடன்படின் சோதித்து, அவற்கு அவளைத் தன் ஆணையாற் சேர்ப்பிப்பான். அங்ஙனம் சேர்ப்பித்தல் அக்காலத்து அரச நீதியில் இடம்பெற்றிருந்தமை பற்றி இம் மடற்றிறம் அகப்பொருள் இலக்கியங்களில் பயில்வ தாயிற்று. இனி, இதனைப் 'புலவர்கள் படைத்துக்கொண்டது' என்பாரும் உளர். மடற்றிறத்தை அடிகள் ஒன்பது துறை களாக அருளிச்செய்வர். அவற்றிற்குரிய நூற்பா வருமாறு:-

[1] ஆற்றா துரைத்தல், [2] உலகின்மேல் வைத்தல்,
[3] தன்துணி புரைத்த லொடு, [4] வகை உரைத்தல்,

[5] அருளால் அரிதெனல், [6] நடையால் அரிதெனல்,
[7] அவயவம் எழுதல் அரிதென விலக்கல்,
[8] உடம்படாது விலக்கல், [9] உடம்பட்டு விலக்கல்
திடம்பட ஒன்பதும் செப்புங் காலை
வடம்படு முலைமேன் மடலா கும்மே.]

1. ஆற்றுதுரைத்தல்

பொருளா எனைப்புகுந் தாண்டு புரந்தரன் மால்அயன்பால்
இருளாய் இருக்கும் ஒளிநின்ற சிற்றம் பலம் எனலாம்
சுருளார் கருங்குழல் வெண்ணகைச் செவ்வாய்த் துடியிடையீர்,
அருளா தொழியின் ஒழியா தழியும்என் னுருயிரே. 73

2. உலகின்மேல் வைத்துரைத்தல்

காய்சின வேலன்ன மின்னியல் கண்ணின் வலைகலந்து
வீசின போதுள்ள மீனிழந் தார்,வியன் தென்புலியூர்
ஈசன சாந்தும் எருக்கும் அணிந்தோர் கிழிபிடித்துப்
பாய்சின மாஎன ஏறுவர் சீறூர்ப் பனைமடலே. 74

---

73. ஆற்றுதுரைத்தலாவது, இருவரும் உள்வழிச்சென்று தோழியைக் குறிப்பு மொழிகளால் மதியுடம்படுத்த தலைமகன் பின் தோழியைத் தனியிடத்திற் கண்டு தனது ஆற்றாமையைக் கூறுதல். இதற்குக் கொளு ;-

மல்லல்திரள் வரைந்தோளவன்
சொல்லாற்றுது சொல்லியது.

'எனைப் பொருளாகக் கொண்டு' என மொழி மாற்றியும், ஒருசொல் வருவித்தும் உரைக்க. இருளாய் இருத்தல் - அறியப் படாதிருத்தல். 'சிற்றம்பலம் எனலாம் துடிஇடையீர்' என்க. 'நீவிர் அருளாதொழியின் என் ஆருயிர் அழியும்' என்க. ஒழியாது - தப்பாமல்.

சிவபெருமானது திருவருள் தேவர்கட்கு இருளாயும், அடியவர்கட்கு ஒளியாயும் நிற்றல் கூறப்பட்டது.

74. உலகின்மேல்வைத் துரைத்தலாவது, ஆற்றுமை கூறிய தலைமகன் அது வழியாகத் தன் மடலேற்றினை உலகின் மேல் வைத்துக் கூறுதல். இதற்குக் கொளு :-

3. தன்துணிபுரைத்தல்

விண்ணை மடங்க விரிநீர் பரந்துவெற் புக்கரப்ப
மண்ணை மடங்க வருமொரு காலத்து மன்னிநிற்கும்
அண்ணல் மடங்கல் அதள்அம் பலவன் அருளிலர்போற்
பெண்ணை மடன்மிசை யான்வரப் பண்ணிற்ருேர்
[பெண்கொடியே. 75

புலவேல்அண்ணல் புனைமடலேற்
றுலகின் மேல்வைத் துய்த்துரைத்தது.

காய் சினம் - காய்கின்ற சினம். உடையானது சினம், வேல்மேல் ஏற்றப்பட்டது. சினமுடையானது வேல் எதிர்ந்தார் உடலைப் பிளந்து செல்லுமாறு பண்ணப்பட்டிருக்கும். மின் இயல் கண் - ஒளி திகழும் கண். "கண்ணின்" என்றதில் இன், அல்வழிச் சாரியை. 'கண்ணுகிய வலையை வீசினபோது, உள்ளமாகிய மீனை இழந்தார், பனை மடல் ஏறுவர்' என்க. வீசுதற்கு வினைமுதலாகிய 'மகளிர்' என்பது, ஆற்றலான் வந்தியையும். இயையவே, "இழந்தார்" என்றது ஆடவரை யாதல் தெளிவு. "ஈசன்" என்றதில் அகரம், ஆறுவதன் பன்மையுருபு. ஈசன சாந்து, நீறு. எருக்கும் சிவபிரானுக்கு உரித்தாதல் அறிக. கிழி - தலைமகள் உருவம் எழுதப்பட்ட படம். பாய்சின மா - குதிரை. 'பனைமடலைப் பாய்சின மா என ஏறுவர்' என்க.

நீறு, எருக்கு என்ற இவற்ருல் சிவபெருமான் எல்லாப் பொருளையும் பற்றி நின்றே பற்றிலனுதல் கூறப்பட்டது.

75. தன்துணிபுரைத்தலாவது, மடலேற்றினை உலகின் மேல் வைத்துரைத்த தலைமகன், பின் அதனைத் தன்மேல்வைத் துரைத்தல். இதற்குக் கொளு :-

மான வேலவன் மடன்மாமிசை
யானும் ஏறுவன் என்ன உரைத்தது.

"விண்ணை, மண்ணை" என்பவற்றில் ஐகாரம் சாரியை. ஒருகாலம், ஊழி. உம்மை, சிறப்பு. மடங்கல் - சிங்கம்

4. மடலேறும் வகை யுரைத்தல்

கழிகின்ற என்னையும், நின்றநின் கார்மயில் தன்னையும்யான்
கிழியொன்ற நாடி எழுதிக்கைக் கொண்டேன் பிறவிகெட்டின்
றழிகின்ற நாக்கிய தாள்அம் பலவன் கயிலைஅந்தேன்
பொழிகின்ற சாரல்நுஞ் சீறூர்த் தெருவிடைப் போதுவனே. 76

(நரசிங்கம்). அதள் - தோல். திருமால் கொண்ட நரசிங்க உருவைச் சிவபெருமான் தோல் உரித்துப் போர்த்தனன் என்பது வரலாறு. 'அண்ணலும், அம்பலவனும் ஆகியவனது அருளிலர்போல் வர' என்க. பெண்ணை - பனை. பெண் கொடி - பெண்ணாகிய கொடி ; உருவகம்.

சிவபெருமான் உலகிற்கு நலிவு செய்வோர் யாவராயினும் அவரை ஒறுத்தலும், அவன் அருள் இல்லாதவர் நாண் இழந்து துன்பம் எய்தலும் கூறப்பட்டன.

76. மடலேறும்வகை யுரைத்தலாவது, மடலேற்றினை உலகின்மேல்வைத் துரைத்ததன்றித் தன்மேல் வைத்துரைத்த பின்னும் தோழி சொல்லாடாமை கண்ட தலைவன், 'நானே யான் மடலேறி நும்mூர்த் தெருவின்கண் வருவேன் ; காண்மின்' எனக் கூறுதல். இதற்குக் கொளு :-

அடல்வேலவன் அழிவுற்று
மடலேறும் வகையுரைத்தது.

கழிகின்ற - இறந்துகொண்டிருக்கின்ற. நின்ற - சிறிதும் இரங்காது நிற்கின்ற. கார் மயில் - கார் காலத்து மயில். தன்னை ஓவியமாக எழுதாவிடினும் இருவரது பெயரையும் எழுதுதல் பற்றி, "என்னையும், தன்னையும் எழுதி" என்றான். 'கைக்கொண்டு போதுவன்' என இயையும். "பிறவி" என்ற பொதுப் பெயரால், வரும் பிறவியும், இப்பிறவியும் சுட்டப் பட்டன. கெட்டது வரும் பிறவி எனவும், அழிகின்றது இப் பிறவி எனவும் கொள்க. தமக்கு இப்பிறவியும் விரைய அழிதல் வேண்டும் என்பதே அடிகள் கருத்தாதல் அறிக. தாள் - திருவடி. 'கயிலைக்கண் உள்ள சாரலில் நும் சீறூர்த் தெரு

5. அருளால் அரிதென விலக்கல்

நடனும் வணங்குந்தொல் லோன்,எல்லை நான்முகன் மாலறியாக்
கடனும் உருவத் தரன்தில்லை மல்லற்கண் ணூர்ந்தபெண்ணை
உடனும் பெடையொடொண் சேவலும் முட்டையுங் கட்டழித்து
மடனும் புனைதரின் யார்கண்ண தோமன்ன இன்னருளே. 77

விடைப் போதுவன்' என்க. 'பின்னர்க் காண்மின்' என்னும் குறிப்பெச்சம் இறுதிக்கண் வந்தியையும்.

சிவபெருமானது திருவடி பிறவி நோய்க்கு மருந்தாதல் கூறப்பட்டது.

77, அருளால் அரிதென விலக்கலாவது, தலைமகன் தான் மடல் ஏறுதலை வெளிப்படையாகக் கூறக்கேட்ட தோழி' 'இனி இவன் இது செய்தலுங் கூடும்' என்னும் அச்சத்தால் நாண் நீங்கப் பெற்றவளாய் அவனொடு சொல்லாடத் தொடங்குவாள். தம்பொருட்டு ஒருவன் மடலேறுதலை எம் மகளிரும் விரும்பார், அது தமக்குப் பெருமையாகாமை கருதி. அவ்வாற்றால் மடல் விலக்கலுறுந்தோழி, 'நீவிர் பெரிதும் அருளுடையீராக லின், அன்றிலின் பெடை, சேவல், முட்டை இவை அழியும்படி பனை மடலை அழித்து மடலேறுதல் நுமக்கு இயலாது' என்று கூறி விலக்குதல். இதற்குக் கொளு :-

அடல்வேல் அண்ணல் அருளுடைமையின்
மடலேற்றுனக் கரிதென்றது.

நடன் - நடத்தினை யுடையவன். எல்லை - அளவு. கடன் ஆம் - இயல்பு பொருந்திய. மல்லல் - வளம். 'பெண்ணைக் கண்' என உருபு விரிக்க. ''பெடை, சேவல்'' எனப்பட்டன அன்றில்கள். கட்டழித்து - காவல் அழித்து. குறைநேர்தல் குறிக்கின்றாளாதலின், ''நாம்'' எனத் தலைவனைத் தன்னோடு உளப்படுத்திக் கூறினாள். யார்கண்ணது - யாரிடத்திருப்பதாகும். 'நின்னருளே' என்பதும் பாடம். ஓகாரம், சிறப்பு.

6. மொழிநடை எழுதல் அரிதென விலக்கல்

அடிச்சந்த மால்கண் டிலாதன காட்டிவந் தாண்டுகொண்டென்
முடிச்சந்த மாமல ராக்கும்முன் னோன்புலி யூர்புரையும்
கடிச்சந்த யாழ்கற்ற மென்மொழிக் கன்னி அனநடைக்குப்
படிச்சந்த மாக்கும் படம்உள வோநும் பரிசகத்தே. 78

சிவபெருமான், தன் அடியவர் நாள்தோறும் வணங்கவும், அயன் மால் அறியாராகவும் நிற்கும் திருவுருவுடையன் என்பது கூறப்பட்டது.

78. மொழி நடை எழுதல் அரிதென விலக்கலாவது, அருள் கூறி விலக்க விலங்காறுயது கண்ட தோழி, 'அது கிடக்க; நீர் மடலேறுவீராயின், எம் தலைவியைக் கிழியெழுதிக் கொண்டன்றே ஏறல் வேண்டும்! அவள் உருவினை நீர் எழுதி னும், அவள் மொழியையும், நடையையும் எவ்வாறு எழுதுவீர்?' எனக் கூறுதல். இதற்குச் செய்யுள் :-

அவயவம் அரிதின் அண்ணல் தீட்டினும்
இவைஇவை தீட்டல் இயலா தென்றது.

சந்தம் - அழகு. 'மால் கண்டிலாதனவாகிய தன் அடிச் சந்தத்தினை எனக்குக் காட்டி வந்து ஆண்டுகொண்டு, அவற்றை என் முடிக்குச் சந்தமாமலராக்கும் முன்னோன்' என்க. புரையும் - ஒக்கின்ற. கடிச் சந்தம் - மிக்க அழகு. "யாழ்" என்றது, அதன் இசையை. "கற்ற" என்றது, இயற்கையைச் செயற்கை போலக் கூறிய பான்மை வழக்கு. "மென்மொழிக் கன்னி அனநடைக்கு" என்றாராயினும், 'கன்னியது மென் மொழிக்கும், அனநடைக்கும்' என்பது கருத்தென்க. 'படிச் சந்தம்' என்பது முன்னரும் கூறப்பட்டது (32). சித்திரச் சாலையை, "பரிசகம்" என்றார்.

சிவபெருமான் அடியவரை வந்து ஆட்கொள்ளும் முறை கூறப்பட்டது.

7. அவயவம் எழுதல் அரிதென விலக்கல்

யாழும்எழுதி, எழில்முத் தெழுதி, இருளின்மென்பூச்
சூழும் எழுதி,ஓர் தொண்டையுந் தீட்டி,என் தொல்பிறவி
ஏழும் எழுதா வகைசிதைத் தோன்புலி யூர்இளமாம்
போழும் எழுதிற்றொர் கொம்பர்உண் டேற்கொண்டு போதுகவே

8. உடம்படாது விலக்கல்

ஊர்வாய், ஒழிவாய் உயர்பெண்ணைத் திண்மடல்; நின்குறிப்புச்
சீர்வாய் சிலம்ப, திருத்த இருந்திலம், ஈசர்தில்லைக்
கார்வாய் குழலிக்குன் ஆதர வோதிக்கற் பித்துக்கண்டால்,
ஆர்வாய் தரின்அறி வார்பின்னைச் செய்க அறிந்தனவே. 80

---

79. அவயவம் எழுதல் அரிதென விலக்கலாவது, மொழியும், நடையும் எழுதற்கரியன எனக் கூறி, விலக்கிய தோழி, 'அவையொழியினும், இவளது உறுப்புக்களைத் தாமும் இவளே எனத் தோன்றும் வண்ணம் எழுதவல்லிரோ' எனக் கூறி விலக்குதல். இதற்குக் கொளு :-

அவயவ மானவை — இவைஇவை யென்றது.

'முத்தும்' என்னும் உம்மை தொகுத்தலாயிற்று. சூழ் - சுற்று ; பெயர். தொண்டை - கொவ்வைக் கனி. என் பிறவி ஏழ் - எனக்குரியவாகிய எழுவகைப் பிறவிகள். அவற்றை எழுத நினைப்பவன் நான்முகன். மாம் போழ் - வாவடு வகிர். எழுதிற்று - எழுதப்பட்டது. யாழ், முத்து, இருள், தொண்டை, மாம்போழ் இவை தலைவியது முன்கை, பல், கூந்தல், வாய், கண் என்பவற்றைக் குறித்தன. கை முதலியவற்றை எழுத வேண்டுமாயின், 'யாழ் முதலியன போல எழுதல் வேண்டும் ; அஃது அரிது' என்றவாறு. "எழுதி" என்ற செய்தெனெச்சங்கள், "எழுதிற்று" என்றதில் உள்ள எழுதுதல் வினையோடு முடிந்தன.

சிவபெருமான் தன் அடியவரது எழுவகைப் பிறவியையும் அறுப்பவன் என்பது கூறப்பட்டது.

80. உடம்படாது விலக்கலாவது, எழுதுதல் அரிதென்ற தோழி, தலைவன் அதனால் விலங்காமைகண்டு, 'நீவிர் யாதேனும்

9. உடம்பட்டு விலக்கல்

பைந்நாண் அரவன் படுகடல் வாய்ப்படு நஞ்சமுதாம்
மைந்நாண் மணிகண்டன் மன்னும் புலியூர் மணந்தபொன் இம்
மொய்ந்நாண் முதுதிரை வாய்யான் அழுந்தினும் என்னின் [முன்னும்
இந்நாள் இதுமது வார்குழ லாட்கென் கண் இன்னருளே. 81

செய்ம்மின் ; நும்மை யாம் விலக்குகின்றேமல்லேம் ; ஆயினும், நும் கருத்தை எம் தலைவிக்கு அறிவித்து வந்து நுமக்கறிவிப்பேன் ; அத்துணை ஆற்றுமின்' என அவன் கருத்திற்கு உடம்படாதே விலக்குதல். இதற்குக் கொளு :-

அடுபடைஅண்ணல் அழிதுயர் ஒழிகென
மடநடைத் தோழி மடல்விலக்கியது.

சீர் - அழகு. தில்லைக் கார் வாய் குழலி - தில்லைக்கண் உளவாகிய மேகத்தினது தன்மை வாய்க்கப்பெற்ற கூந்தலையுடையாள். தில்லைக்கண் உளவாகிய மேகங்கள் தம்மை அவாவி நிற்கும் உலகிற்குத் தப்பாமல் பொழியும் தன்மையுடையனவாம். அவற்றின் தன்மைவாய்ந்த குழலையுடையாள் என்றாள், 'யான் இரப்பின் நேராதொழியாள்' என்பது தோன்றுதற்கு. ஆதரவு - விருப்பம். கற்பித்து - யானும் சில சொல்லி. கண்டால் - முயன்றுபார்த்தால். வாய்தரின் ஆர் அறிவார் - இடம் தருவாளாயின் அதனை யார் அறிதல் கூடும். "பின்னை" என்றது, வினைமாற்றுப் பொருட்டாய், 'இடம் தாராதொழியின்' எனப் பொருள் தந்தது.

சிவபெருமான் தன்னை இரப்பார்க்கு ஈந்தருளும் வள்ளலாதல் கூறப்பட்டது.

81. உடம்பட்டு விலக்கலாவது, முன் உடம்படாதாள் போல மடல் விலக்கிய தோழி, பின், 'நின் குறைமுடித்துத் தருவேன்; வருந்தற்க' என உடம்பட்டு நின்று அதனை விலக்குதல். இதற்குக் கொளு :-

அரவரு நுன்னிடைக் குரவரு கூந்தலென்
னுள்ளக் கருத்து விள்ளா ளென்றது.

"பை நாண் அரவன்" என்றதை, 'பையரவு நாணன்' என மாற்றிக் கொள்க. நாண் - அரைநாண். 'நஞ்சு அமுதாம் கண்டன்' என்க. 'மை நாணும் கண்டன்' என்றபடி. 'புலியூரைப் போலப் பொருந்திய பொன்' என்க. "பொன்" என்றது, தலைவியை. மொய் - நெருங்கிய. நாள் - நாட்காலையில் ஆடும் நீர். என்னின் முன்னும் - என்னினும் முற்படுவாள். "இந்நாள் இது" என்றதனை இறுதிக்கண் கூட்டுக. இது, இத்தன்மையது.

அரவ நாணும், நஞ்சமுதும் கூறிய முகத்தால், சிவபெருமான் பிறரொடு வேறாந் தன்மையனாதல் கூறப்பட்டது.

வாத வூருறை யிறைவர்தம் பெரிய
　　மாயை போலிருண் மாய்ந்துபின் னவர்பாற்
போத மாகவந் துறுசுடர் விளக்கம்
　　போல வெய்யவன் புணரியிற் றேன்ற
வேத நாதர்த மிருபத மிறைஞ்சு
　　மேன்மை யாளரை வேறுகொண் டிருந்தங்
கோது மாகமத் தறிவரும் பொருளை
　　யுரைக்க வேநினைந் தாரற முறைத்தார். 103

களிம்பு தோய்ந்தசெம் பெனவுனை மருவுங்
　　கருமை கூர்மலம் கண்டது கலக்கும்
பளிங்கு போன்றதுன் றன்மையம் மலத்தின்
　　பற்றி னுடல் பலவெடுத் துழன்றாய்
வளங்கு லாம்புவ னந்தொ றுஞ் செயுமுன்
　　வல்வி னைப்பயன் வருமுறை நெறியே
அளந்து நாந்தர நுகர்ந்துமே னுகர்வு
　　மாக்கி யேதிரிந் தனைமன வழுக்கால். 104

— திருவாதவூரடிகள் புராணம்.

11. குறைநயப்புக் கூறல்

[குறைநயப்புக் கூறலாவது மடல்விலக்கித் தலைமகற்குக் குறைநேர்ந்த தோழி, தலைவியிடம் குறைநயப்பக் கூறுதல். இதனை அடிகள் எட்டுத் துறைகளாக அருளிச்செய்வர். அதற்குரிய நூற்பா வருமாறு :-

[1] குறிப்பறித லோடு, [2] மென்மொழி கூறல்,
[3] விரவிக் கூறல், [4] அறியாள் போறல்,
[5] வஞ்சித் துரைத்தல், [6] புலந்து கூறல்.
[7] வன்மொழி கூறல், [8] மனத்தொடு நேர்தல்
சொன்ன இருநான்கும் துறைகுறை நயப்பென
மன்னிய பொருளில் வகுத்திசி னோரே.]

1. குறிப்பறிதல்

தாதேய் மலர்க்குஞ்சி அஞ்சிறை வண்டுதண் தேன்பருகித்
தேதே எனுந்தில்லை யோன்சேய் எனச்சின வேல்ஒருவர்
மாதே புனத்திடை வாளா வருவர்; வந் தியாதும்சொல்லார்;
யாதே செயத்தக் கது? மது வார்குழல் ஏந்திழையே. 82

---

82. குறிப்பறிதலாவது, தலைமகனது குறையைத் தலைமகளிடம் கூறத்துணிந்த தோழி, அதனைத் தெற்றெனக் கூறாது, அவளோடு ஒன்று உசாவி, அவளது குறிப்பையறிதல். இதற்குக் கொளு :-

நறைவளர் கோதையைக் குறைநயப் பித்தற்
குள்ளறி குற்ற ஒள்ளிழை யுரைத்தது.

தாது ஏய் - மகரந்தம் பொருந்திய. குஞ்சி - ஆண்மயிர். இங்கு அதுபோலும் கேசரத்தைக் குறித்தது. 'குஞ்சிக்கண்' என உருபு விரிக்க. "தேதே" என்றது, ஒலிக் குறிப்பு. சேய் - மகன்; தில்லையோன் சேய் - முருகன். அழகினாலும், வேலேந்தி வருதலாலும் தலைவனை, 'முருகன்போல்வான்' என்றாள். "வாளா வருவர்; வந்து யாதும் சொல்லார்" என்றதனால், அவர் 'என்மாட்டு ஒரு குறையுடையராய் அதனைக் கூறமாட்டாது போகின்றார்' என்றாளாம். "வாளா"

உ. மென்மொழியாற் கூறல்

வரிசேர் தடங்கண்ணி மம்மர்கைம் மிக்கென்ன மாயங்கொலோ!
எரிசேர் தளிரன்ன மேனியன், ஈர்ந்தழை யன்புலியூர்ப்
புரிசேர் சடையோன் புதல்வன்கொல் பூங்கணை
[வேள்கொல்என்னத்
தெரியேம் உரையான் பிரியான் ஒருவன்இத் தேம்புனமே. 83

என்றது, பிறிது காரியம் இன்மையைக் குறித்தது. "யாதே" என்ற ஏகாரம், அசைநிலை. 'அவரிடத்து நாம் செயத்தக்கது யாது' என்க.

தில்லையது வளங்கூறிய முகத்தால், சிவபெருமானது திருவருள், உலகின்பத்தையும் தருவதாதல் கூறப்பட்டது.

83. மென்மொழியாற் கூறலாவது, 'யாதே செயத் தக்கது' என்றது கேட்டுச் சினவாமையின் தலைவியது செவ்வி யைப் பெற்ற தோழி, தலைவனது ஆண்மையையும், அழகினை யும் புகழ்ந்து, அவனுக்காக நொந்து கூறுதல், இதற்குக் கொளு :-

ஒளிருறு வேலவன் தளர்வுறு கின்றமை
இன்மொழி யவட்கு மென்மொழி மொழிந்தது.

மம்மர் - மயக்கம். கை, இடைச்சொல். 'என்ன மாயங் கொலோ" என்றதனை இறுதியிற் கூட்டுக. 'வாடிய மேனி யன், வாடாத் தழையன்' என்றபடி. புரிசடையோன் புதல்வன், முருகன். பூங்கணைவேள், காமன். இவரோடு மயங் கிக் கூறியவாற்றால், முறையே தலைவனது ஆண்மையையும், அழகினையும் குறித்தாள். ஆண்மையால், 'கருதியதனை மட லேறியாயினும் முடிப்பன்' என்பது தோற்றுவித்தாள். தெரி யேம் - துணியேம். 'அவன் தன் தன்மைக்குத் தகவொழுகாது இவ்வாறு எளிவந்தொழுகுதல் என்னோ' என்றற்கு, 'என்ன மாயங்கொலோ' என்றாள். மாயம் - வஞ்சனை.

சிவபெருமான் ஆண்மைமிக்க முருகனை உலகிற்குத் தந்த வள்ளலாதல் கூறப்பட்டது.

3. விரவிக் கூறல்

நீகண் டனையெனின் வாழலை; நேரிழை, அம்பலத்தான்
சேய்கண் டனையன்சென் றுங்கோர் அலவன்றன் சீர்ப்பெடையின்
வாய்வண் டனையதோர் நாவற் கனிநனி நல்கக்கண்டு
பேய்கண் டனையதொன் றுகிநின் றுன்அப் பெருந்தகையே. 84

4. அறியாள் போறல்

சங்கந் தருமுத்தி யாம்பெற வான்கழி தான்கெழுமிப்
பொங்கும் புனற்கங்கை தாங்கிப் பொலிகலிப் பாறுலவு
துங்க மலிதலை யேந்தலின் ஏந்திழை, தொல்லைப்பன்மா
வங்கம் மலிகலி நீர்தில்லை வானவன் நேர்வருமே. 85

---

84. விரவிக் கூறலாவது, மென்மொழியாற் கூறிய தோழி, சிறிது வன்மொழியும் விரவிக் கூறிக் குறை நயப்பித்தல். இதற்குக் கொளு:-

வன்மொழியின் மனம்மெலிவ தஞ்சி
மென்மொழி விரவி மிகுத்துரைத்தது.

"நீ கண்டனையெனின் வாழலை" என்றதனை இறுதிக்கண் கூட்டுக. நேரிழை, விளி. 'சேய் கண்டனையனாகிய அப் பெருந்தகை' எனக் கூட்டுக, அலவன் - ஆண் நண்டு. 'தன் பெடையின் வாய் நல்கக்கண்டு' என்க. பேய்கண்டனையது ஒன்றாகி - பேயாற் காணப்பட்டதொரு வேறுபாட்டையுடைய வனாகி. 'கலங்கி' என்பது பொருள். 'நான் கண்டு வன்கண் மையால் வாழ்கின்றேன்; நீ கண்டாயாயின் வாழலை' என்றாள். இதனால், 'இத்துணை சொல்லவும் வன்கண்மையையாகின்றாய்' எனச் சிறிது வன்மொழியும் விரவியவாறு காண்க.

இதனுள் முருகன் அருளுடையனாதல் பெறக் கூறினமை யின், சிவபெருமான் அத்தன்மையனை உலகிற்குத் தந்த வள்ளலாதல் கூறப்பட்டது.

85. அறியாள் போறலாவது, 'என் செய்வாம்' எனின், 'பொன் செய்வாம்' என்பதுபோல, தோழி கூறியவற்றை

எல்லாம் மதியாதாள்போலத் தலைவி, இயைபில்லாத வேறொன்றைக் கூறுதல். இதற்குக் கொளு :-

அறியாள் போன்று — குறியாள் கூறியது.

இத் திருப்பாட்டு, தில்லைப் பெருமானுக்கும், கடலுக்கும் சிலேடை. இது கடலுக்கு ஆகுங்கால் சங்கம் - சங்கு. முத்து - மணிகளில் ஒன்றாய முத்து. வான் - பெரிய. கழி - உப்பங்கழி. தான் கெழுமி - தான் பொருந்தி. கங்கை - கங்கை யென்னும் ஆறு. பாறு - மரக்கலம். துங்கம் - அலை. மலிதலை ஏந்தல் - நிறைதலையுடைத்தாதல்.

சிவபெருமானுக்கு ஆகுங்கால், சங்கம் - கூடுதல்; திருவடிப் பற்று. முத்தி - வீடு. வான் கழி தான் கெழுமி - ஆகாயத்தையும் கடந்த தான் எதிர்வந்து. கங்கை - கங்கை வடிவாகிய தேவி. பாறு - பருந்து. துங்கம் மலிதலை ஏந்தல் - உயர்வு மிகுந்த தலை ஓட்டினை ஏந்துதல்.

தோழி கூற்றிற்கு மறுமொழி கொடாது, 'இக் கடல் நீர் சிவபெருமான்போல வாராநின்றது; காண்' என வேறொன்று கூறினாள். வேறொன்று கூறுங்கால் எளிமைப்படக் கூறாது, சிலேடைவகையால் அரிதின் ஆய்ந்துணருமாறு கூறினமையின்' இன்னும் ஆழ்ந்து நோக்கின் தோழி கூற்றிற்கு மறுமொழியும் பெறுமாறு கூறினளாம். அஃதாமாறு, 'பெரிதாகிய கடல் தன்னிடத்து உளதாகிய முத்தினை நாம் பெறும்படி சிறிய கழியிடத்தே எளிவந்தாற்போல, புரிசடையோன் புதல்வன் கொல், பூங்கணை வேள்கொல் என்று ஐயுறத் தக்க பெரியோனாகிய தலைவன், தன்னிடத்துள்ள புணர்ச்சி இன்பத்தினை நான் பெறும்படி இவ்வாறெல்லாம் உன்னிடத்து எளிவந்தொழுகாநின்றான்; ஆதலின், நீ வேண்டியது செய்வாயாக' என உள்ளுறை உவமத்தால் பொருள் முடியுமாறு காண்க.

இதனுள் பல்லாற்றானும் சிவபெருமானது பெருமை கூறப்பட்டவாறு அறிக.

5. வஞ்சித் துரைத்தல்

புரங்கடந் தான்அடி காண்பான் புவிவிண்டு புக்கறியா
திரங்கிடெந் தாய்என் றிரப்பத்தன் ஈரடிக் கென்இரண்டு
கரங்கடந் தான்ஒன் றுகாட்டமற் றாங்கதுங் காட்டிடென்று
வரங்கிடந் தான்தில்லை யம்பல முன்றில்அம் மாயவனே. 86

---

86. வஞ்சித்துரைத்தலாவது, அறியாள்போன்று கூறிய தலைவி, 'இவள், நாணத்தால் செய்வது இது என்பதனைத் தான் கூறாது, என்னையே கொண்டு சொல்விக்கக் கருதுகின்றாள். யான் ஒன்றுங் கூறாதொழிந்தால் எம்பெருமான் இறந்துபடுவன்; எனக் கருதி மறுமொழி கூறுவாள், அதனை நேரே கூறாது மறைத்துப் பிறிதோராற்றால் கூறுதல். இதற்குக் கொளு :-

நெஞ்சம் நெகிழ்வகை வஞ்சித் தீவையிவை
செஞ்சடை யோன்புகழ் வஞ்சிக் குரைத்தது.

விண்டு - பிளந்து, "என் இரண்டு கரங்கள் தந்தான்" என்றது, தலைவி தான் பெற்ற பேற்றினைக் கூறியது, ஒன்று - ஒரு திருவடி, 'திருமால் தில்லையம்பல முன்றிற் கிடத்தல், கூத்தப் பெருமானது ஒரு திருவடியையே கண்டு மற்றொன்றைக் காண வரங்கிடத்தலாம்' எனத் தற்குறிப் பேற்றமாகக் கூறியவாறு. இங்ஙனம் கூறியவாற்றால், 'பாங்கற் கூட்டத்தாற் கூடிய தலைமகன், இனி உன்னாலாய கூட்டத்திற்கு முயல்கின்றான்' என்பது புலப்படும்.

"காண்பான் புக்கு அறியாது" என்றமையால், காணத் தகும் முறையில் முயன்றிலன் என்றதாம். அஃது, அயனும் மாலும் அன்னமும், ஏனமும் ஆய வழியும், அன்னம் திருவடி யாகிய தாமரை மலரையும், ஏனம் சடையாகிய காட்டினையும் நோக்கிச் செல்லாது மாறிச் சென்றமையாம்.

இவ்வாற்றாலெல்லாம் சிவபெருமானது பெருமைகள் சொல்லப்பட்டவாறறிக.

'இதனைத் தோழி கூற்றாக உரைப்பாரும் உளர்' என வுரைத்து, பின் வரும் பாட்டிற்கு ஒவ்வாமையின், அது பொருந் தாது என்பர் பேராசிரியர்.

6. புலந்து கூறல்

உள்ளப் படுவன உள்ளி உரைத்தக் கவர்க்குரைத்து
மெள்ளப் படிறு துணி;துணி யேல்;இது வேண்டுவல்யான்;
கள்ளப் படிறர்க் கருளா அரன்தில்லை காணலர்போற்
கொள்ளப் படாது மறப்ப தறிவில்என் கூற்றுக்களே. 87

87, புலந்து கூறலாவது, தலைவி தன் கருத்தை வெளிப் படக் கூறாது வஞ்சித்துக் கூறக் கேட்ட தோழி, அது பற்றித் தலைவியொடு புலந்து கூறுதல். இதற்குக் கொளு ;-

திருந்திய சொல்லிற் செவ்வி பெருது
வருந்திய சொல்லின் வகுத்துரைத்தது.

உள்ளப்படுவன உள்ளி - ஆராயப்படுவனவற்றை ஆராய்ந்து, உரைத்தக்கவர்க்கு உரைத்து - வெளிப்பட உரைக் கத் தக்க காதல் தோழியருக்குச் சொல்லி. படிறு - என்னிடம் மறைத்துக் கூறும் இதனை. மெள்ளத் துணி துணியேல் - மெத் தென நீ துணிந்துகொள்; அல்லது துணியாதொழி; (அது பற்றி யான் ஒன்றும் கூறிலேன்; ஆயினும்;) இது யான் வேண்டுவல் - இஃதொன்றை நின்னிடம் இரக்கின்றேன். தில்லைகாணுதவர் உயர்ந்தோரால் பொருளெனக் கொள்ளப் படார் என்க. 'அறிவில் என் கூற்றுக்கள் கொள்ளப்படாது; மறப்பது' என மாற்றுக. "கொள்ளப் படாது" என்றது இருசொல் விழுக்காடாய், முன்நின்ற செயவெனெச்சம் தொழிற் பெயர்ப் பொருள் தந்தது. "அகத்தின்னு - வஞ்சரை அஞ்சப் படும்" என்னும திருக்குறளிலும் (824) "அஞ்சப்படும்" என்றது அவ்வாறு நின்றது. 'படுதல்' என்பது, இன்னோரன்ன இடங்களில், 'பொருந்துதல்' எனப் பொருள்தரும். "மறப் பது" என்றது, 'மறத்தல்' என்பதுபோல வியங்கோள்.

சிவபெருமான் கள்ளத்தையுடைய வஞ்சகர்க்கு அருள் செய்யாமையும், அவன் தலத்தைக் காணுதவர் மதிக்கப் படா மையும் கூறப்பட்டன.

"கரவாடும் வன்னெஞ்சர்க் கரியானைக் கரவார்பால்
விரவாடும் பெருமானை"

எனவும், (திருமுறை - 4. 7. 1.)

7. வன்மொழியாற் கூறல்

மேவியந் தோல்உடுக் குந்தில்லை யான்பொடி மெய்யிற்கையில்
ஓவியந் தோன்றும்; கிழிநின் எழில்என் றுரையுளதால்;
தூவியந் தோகையன் னய்என்ன பாவம்சொல் லாடல்செய்யான்;
பாவிஅந் தோபனை மாமட லேறக்கொல் பாவித்ததே. 88

" உள்ளம் உள்கலந் தேத்தவல் லார்க்கலால்
கள்ளம் உள்ளவ ருக்கருள் வானலன்.
வெள்ள முஞ்அர வும்விர வுஞ்சடை
வள்ள லாகிய வான்மியூர் ஈசனே "

எனவும் (திருமுறை - 5. 82. 4.) திருநாவுக்கரசரும் அருளிச் செய்தல் காண்க.

88. வன்மொழியாற் கூறலாவது, புலந்து கூறிய தோழி, 'அவன் மடலேறத் துணிந்தான்; அவன் கையில் உள்ள கிழி நின் வடிவென்ற சொல் உலகத்து உலாவுகின்றது; ஒன்றும் யான் அறியேன்' என வன்சொல்லாற் கூறுதல். இதற்குக் கொளு :-

கடலுல கறியக் கமழலந் துறைவன்
மடலே றும்மென வன்மொழி மொழிந்தது.

'அம் தோலை மேவி உடுக்கும் தில்லையான்' என்க. மேவி - விரும்பி. அம் - அழகு. "தோன்றும்" என்றதனை, "பொடி" என்றதனோடும் கூட்டுக. எழில் - எழிலையுடைய வடிவம். தூவி - சிறகு. தோகை - மயில். என்ன பாவம் - இதற்குக் காரணம் என்ன தீவினையோ. "பாவி" என்றது, இரக்கத்தினுலாம். அதனால், அவன்பொருட்டுத் தான் ஆற்றுளாகின்றமை கூறினாளாம். பாவித்தது - நினைத்தது.

தோல் உடை பற்றின்மையையும், திருநீற்றுப் பூச்சு அழிவின்மையையும் உணர்த்தலின், அவற்றால் சிவபெருமான் அத் தன்மையனாதல் கூறப்பட்டது.

8. மனத்தோடு நேர்தல்

பொன்னார் சடையோன் புலியூர் புகழா ரெனப்புரிநோய்
என்னால் அறிவில்லை; யான்ஒன் றுரைக்கிலன்; வந்தயலார்
சொன்னார் எனும்இத் துரிசுதுன் னமைத் துணைமனனே,
என்னாழ் துயர்வல்லை யேற்சொல்லு நீர்மை இனியவர்க்கே. 89

---

89. மனத்தொடு நேர்தலாவது, தலைவன் மடல் ஏறத் துணிந்தான் எனத் தோழி கூறக் கேட்ட தலைமகள் ஆற்றாமை உடையளாய்த் தன் குறைநயப்பினை நெஞ்சொடு கூறுதல். இதற்குக் கொளு :-

அடல்வேலவன் ஆற்றான்எனக்
கடலமிழ் தன்னவள் கரண லுற்றது.

புலியூர் புகழாதவர் பிறர்க்கு நோய் புரிவர் என்க. புரி நோய் - தலைவர் செய்த வருத்தம். அறிவில்லை - அறியும் அளவினை யுடைத் தன்று; பெரிது. 'ஆயினும் அதுபற்றி யான் ஒன்றும் உரையேன்; அயலார் வந்து சொன்னார் எனும் இத் துரிசு துன்னாதவாறு, எனக்குத் துணையாகின்ற மனமே, வல்லையாயின், இனியவர்க்கு என் ஆழ் துயர் சொல்லு' என முடிக்க. அயலார் வந்து சொல்லியது, "மெய்யிற் பொடி" என்றது முதலியன. எனும் துரிசு - என்று தோழி கூறிய குற்றம். துன்னாமை - என்பால் வாராதபடி; எனவே, 'தலைவன் மடலேறாதபடி' என்றதாம். இனி, "அயலார்" என்றது தோழியை எனக் கொண்டு, 'தலைவரது துயரை யானே அறியாது, பிறர் சொல்ல அறிந்தேன் என்னும் குற்றம் என்பால் வாராதபடி' என்று உரைத்தலும் பொருந்தும். எவ்வாற்றானும், இதனால் தலைவி, தான் குறைநேர்ந்தமையைத் தோழிக்கு வெளிப்படக் கூறி, மடல் விலக்கச் சொல்லினாளாதல் அறிக. ஆழ் துயர் - ஆழ்தற்கு இடமான துன்பம்.

12. சேட் படை

[சேட்படை - சேணிடத்து நீக்கி நிறுத்துதல். அஃதாவது, தன்மாட்டுக் குறையிரந்த தலைவனுக்குத் தோழி குறைநயந்தா ளாயினும் தலைவியது அருமையை அவன் உணர்தற்பொருட்டும், களவொழுக்கத்தில் நீட்டியாது விரைய வரைதற் பொருட்டும் அவன் கூறுவனவற்றிற்கெல்லாம் மாறு சொல்லிப் போக்குதல். மேற் கூறிப்போந்த மடற்றிறமும் இச்சேட்படையின் பகுதியே யாம். சேட்படை தோழி தலைவியைக் குறைநயப்பித்தற்கு முன் நிகழ்தலும் உண்டு; பின் நிகழ்தலும் உண்டு. ஈண்டுப் பின் நிகழ்வதாக வைக்கின்றார், அதன் ஒரு பகுதியாகிய மடற் றிறத்தை வேறோர் அதிகாரமாக்கி முன்வைத்து, ஒழிந்தவற்றை ஈண்டு வைத்தார் என்க. மடற்றிறம் ஒழிந்த சேட்படையை அடிகள் இருபத்தாறு துறைகளாக அருளிச்செய்வர். அவற்றிற் குரிய நூற்பா வருமாறு:-

[1] தழைகொண்டு சேறல், [2] தகாதென்று மறுத்தல்,
[3] நிலத்தின்மை கூறல், [4] நினைவறிவு கூறல்,
[5] படைத்து மொழிதலொடு, பனிமதி நுதலியை
எடுத்து [6] நாண் உரைத்தல், [7] இசையாமை கூறல்,
[8] செவ்வி யிலளென்றல், [9] சேட்பட நிறுத்தல்,
[10] அவ்வினிய மொழிக் அவட்குரை என்றல்,
[11] குலமுறை கிளத்தல், [12] கோதண் டத்தொழில்
வலிசொல்லி மறுத்தல், [13] மற்றவற் கிரங்கல்.
[14] சிறப்பின்மை கூறல், [15] சிறியளென் றுரைத்தல்,
[16] மறைத்தமை கூறி நகைத்துரை செய்தல்,
[17] நகைகண்டு மகிழ்தல், [18] நான்அவள் தன்னை
அறியேன் என்றல், [19] அவயவங் கூறல்,
[20] கண்நயக் துரைத்தல், [21] கையுறை எதிர்தல்,
[22] முகம்புக உரைத்தல், [23] முகங்கொண்டு கூறல்,
[24] வகுத்துரைத் தல்லொடு, [25] வண்டமை அவட்கு
மிகுத்துரை செய்து விரும்பிக் கொடுத்தல்,
[26] தழைவிருப் புரைத்தல் தான்இரு பத்தா
றிழைவளர் முலையாய் இவைசேட் படையே.]

1. தழைகொண்டு சேறல்

தேமென் கிளவிதன் பங்கத் திறையுறை தில்லையன்னீர்,
பூமென் தழையும்அம் போதுங்கொள் ளீர்;தமி யேன்புலம்ப
ஆமென் றருங்கொடும் பாடுகள் செய்துநும் கண்மலராங்
காமன் கணைகொண் டலைகொள்ள வோமுற்றக் கற்றதுவே. 90

---

90. தழைகொண்டு சேறலாவது, மடல் விலக்கிச் சென்ற தோழியிடத்துத் தலைவன் மற்றைநாள் தழையொடு சென்று கூறுதல். இதற்குக் கொளு :-

கொய்ம்மலர்க் குழலி குறைந யந்தபின்
கையுறை யோடு காளை சென்றது.

'தேன் கிளவி, மென் கிளவி' என இயையும் "கிளவி" என்றது, அதனை உடைய உமையவளைக் குறித்தது. 'பங்கு' என்னும் குற்றியலுகர ஈறு, 'கொங்கத்துழவு' என்றாற் போல, அத்துப் பெற்றது. 'பங்கினையுடைய இறைவன் உறையும் தில்லை என்க, 'பங்கத்துறை இறை என்பதூஉம் பாடம்' என்ப. 'பூவையுடைய மெல்லிய தழை' என்க. மகளிர் இடைக்கண் உடைமேல் மேகலைபோல அழகுபெற அணியுமாறு பூவும், பச்சிலையும் விரவிப் பொலிவும், மணமும்படத் தொடுப்பதோர் உடைவகையே, 'தழை' எனப்படுவது. இதனை, 'பூவாடை' என்னும் வழக்கானும் உணரலாம். "புலம்ப" என்றது, "செய்து" என்பதனோடு முடியும். ஆம் என்று - செய்யத் தகாதனவற்றைத் தகும் என்று கருதி. கொடும்பாடுகள் - கொடுமையுண்டாகும் செயல்கள். அலைகொள்ளல் - அலைத்தல். "அலைகொள்ள" என்ற செய வெனெச்சம் தொழிற் பெயர்ப் பொருள் தந்தது. 'அருளலைச் சிறிதும் கற்றிலிரோ' என்றபடி.

இனிய சொல்லால் தேவியது அருள்கூறினமையின், அவ்வாற்றால் சிவபெருமான் அருளை உடையவனாதல் கூறப்பட்டது.

2. சந்தனத் தழை தகாதென்று மறுத்தல்

ஆரத் தழையராப் பூண்டம் பலத்தன லாடிஅன்பர்க்
காரத் தழைஅன் பருளிநின் றேன்சென்ற மாமலயத்
தாரத் தழைஅண் ணல் தந்தால் இவைஅவள் அல்குற்கண்டால்,
ஆரத் தழைகொடு வந்தார் எனவரும் ஐயுறவே. 91

3. நிலத்தின்மை கூறி மறுத்தல்

முன்றகர்த் தெல்லா இமையோரை யும்பின்னைத் தக்கன்முத்தீச்
சென்றகத் தில்லா வகைசிதைத் தோன்திருந் தம்பலவன்
குன்றகத் தில்லாத் தழைஅண் ணல்தந்தாற் கொடிச்சியருக்
கின்றகத் தில்லாப் பழிவந்து மூடும்என் றெள்குதுமே. 92

---

91. சந்தனத் தழை, தகாதென்று மறுத்தலாவது, *தலைமகன்கொண்டு சென்ற சந்தனத் தழையைத் தோழி, ' இத் தழை எமக்கு ஆகாது' என மறுத்துக் கூறுதல்.* இதற்குக் கொளு :-

பிறைநுதற் பேதையைக் குறைநயப் பித்தபின்
வாட்படை அண்ணலைச் சேட்படுத் தது.

'*ஆர அரா. தழை அரா*' என இயையும். ஆரம் - மணி வடம். '*தழை அன்பு ஆர அருளிநின்றேன்*'. ஆர - நிரம்ப ; '*நுகர*' எனினுமாம். சென்ற - சேர்ந்த. ஆரத் தழை - சந்தனத் தழை. '*அத்தழை ஆர் கொடுவந்தார் என ஐயுறவு வரும்*' எனக் கூட்டுக. " அண்ணல் " என்பது முன்னிலைக் கண் வந்தது. இது, சொற் பின்வருநிலை.

சிவபெருமான் தன் அன்பர்க்கு அளவிலா அன்பை அருளி, அதுவழியாக அத்தகைய இன்பத்தையும் தருபவன் என்பது கூறப்பட்டது.

92. நிலத்தின்மை கூறி மறுத்தலாவது, சந்தனத் தழை தகாதென்றதல்லது பிறிதொரு தழை தகாதென்றிலள் எனத் தலைவன் மற்றொரு தழை கொண்டு செல்ல, எம் குன்றில் இல்லாத தழையை நீவிர் தந்தால் எம் குடிக்குப் பழியாம் என்று கூறி மறுத்தல். இதற்குக் கொளு :-

4. நினைவறிவுகூறி மறுத்தல்

யாழார் மொழிமங்கை பங்கத் திறைவன், எறிதிரைநீர்
ஏழாய் எழுபொழி லாய்இருந் தோன்நின்ற தில்லையன்ன
சூழார் குழல்எழில் தொண்டைச்செவ் வாய்நவ்வி சொல்லறிந்தால்
தாழா தெதிர்வந்து கோடும் சிலம்ப தருந்தழையே. 93

கொங்கலர் தாரோய் கொணர்ந்த கொய்தழை
எங்குலத் தாருக் கேலா தென்றது.

'முன் எல்லா இமையோரையும் தகர்த்து, பின்னைச்சென்று தக்கன் முத்தீ குண்டத்தகத்து இல்லாவகை சிதைத்தோன்' என்க. அகத்து இல்லாப் பழி - குடிக்கண் இல்லாத பழி. எள்குதும் - அஞ்சுவேம். 'கூசுதும்' என்பர் பேராசிரியர். '' அண்ணல், கொடிச்சியர் '' என்றவை, படர்க்கைச் சொல் முன்னிலையினும், தன்மையினும் வந்தவாறு.

93. நினைவறிவு கூறி மறுத்தலாவது, 'இக்குன்றகத்தில் லாத தழைதரின் இற்பழியாம்' என்றதுகேட்டு, அக்குன்றகத் துத் தழையே தலைவன் கொண்டு செல்ல, தோழி, 'யான் என் தோழிக்குச்சொல்லி, அவள் உடம்பட்டால் வந்து கொள்வேன்; யானே கொள்ள அஞ்சுகின்றேன்' எனக் கூறி மறுத்தல். இதற்குக் கொளு ;-

மைதழை கண்ணி மனமறிந் தல்லது
கொய்தழை தந்தாற் கொள்ளேம் என்றது.

நீர் - கடல். பொழில் - உலகம். 'தில்லையன்ன நவ்வி' என்க. சூழ் ஆர் - சுருளுதல் பொருந்திய. நவ்வி - மான். கோடும் - கொள்வேம். 'யானே கொள்ள அஞ்சுகின்றேன்' என்பது குறிப்பெச்சம்.

சிவபெருமான் ஏழ்கடலும், ஏழ்பொழிலுமாய் நிற்றல் கூறப்பட்டது.

5. படைத்து மொழியான் மறுத்தல்

எழில்வாய் இளவஞ்சி யும்விரும் பும்மற் றிறைகுறையுண்
டழல்வாய் அவிரொளி அம்பலத் தாடும்அம்சோதி.அந்தீங்
குழல்வாய் மொழிமங்கை பங்கன்குற் றாலத்துக் கோலப்பிண்டிப்
பொழில்வாய் தடவரை வாயல்ல தில்லையிப் பூந்தழையே. 94

6. நாணுரைத்து மறுத்தல்

உறுங்கண்ணி வந்த கணையுர வோன்பொடி யாய்ஒடுங்கத்
தெறுங்கண்ணி வந்தசிற் றம்பல வன்மலைச் சிற்றிலின்வாய்
நறுங்கண்ணி சூட்டினும் நாணும்என் வாணுதல்
[நாகத்தொண்பூங்
குறுங்கண்ணி வேய்ந்திள மந்திகள் நாணுமிக் குன்றிடத்தே. 95

---

94. படைத்துமொழியான் மறுத்தலாவது, அவள் உடம்பட்டபின் ஏற்பேன், எனத் தோழி கூறக் கேட்ட தலைமகன், அவளை எதிர்நோக்கி நிற்கத் தோழி சிறிது அப்பாற்சென்று மீண்டு வந்து, 'நீவிர் தரும் தழையை அவளும் விரும்புகின்றாள்: ஆயினும், சிறிது குறையுளது; இது குற்றாலத்துத் தழையாய் இராநின்றது; அதனால், இது வந்தவாறு எங்ஙனம் என்று ஆராயப்படும்' எனப் படைத்துக் கூறி மறுத்தல். இதற்குக் கொளு :-

அருந்தழை மேன்மேற் பெருந்தகை கொணரப்
படைந்துமொழி கிளவியிற் றடுத்தவன் மொழிந்தது.

எழில்வாய் - அழகுவாய்ந்த. விரும்புதற்குச் செயப்படு பொருளாகிய 'நீவிர் தரும் தழை' என்பது ஆற்றலான் வந்தியையும். மற்று, வினைமாற்று. இறை - சிறிது. அழல்வாய் அவிர் ஒளி - அழலினிடத்து விளங்கும் ஒளிபோல்பவன் "சோதி" என்றது, ஞானத்தைக் குறிக்கும். குற்றாலத்தில் அம்மை பெயர். 'குழல்வாய்மொழியம்மை' என வழங்குதல் இங்கு நினைக்கத்தக்கது. கோலம் - அழகு. பிண்டி - அசோக மரம். பொழில்வாய் - சோலை வாய்ந்த. வரை - தாழ்வரை.

சிவபெருமானது திருமேனி ஒளி வடிவும், ஞான வடிவும், அருள் வடிவுமாதல் கூறப்பட்டது.

95. நாணுரைத்து மறுத்தலாவது, பலகாலும் தழை கொண்டு சென்று மறுக்கப்பட்ட தலைவன், அதனை ஒழித்து,

7. இசையாமை கூறி மறுத்தல்

நறமனை வேங்கையின் பூப்பயில் பாறையை நாகம்நண்ணி
மறமனை வேங்கை யெனநனி யஞ்சும்மஞ் சார்சிலம்பா,
குறமனை வேங்கைச் சுணங்கொ டணங்கலர் கூட்டுபவோ ?
நிறமனை வேங்கை யதள்அம் பலவன் நெடுவரையே. 96

'இனிக் கண்ணிகொண்டு சென்றால் மறுக்கும் வகை இல்லை' எனக் கழுநீர் மலரைக் கண்ணியாக வனைந்து கொண்டு செல்ல, அதுகண்ட தோழி, 'தாயர் சூட்டிய கண்ணியன்றி வேறொன்று யான் சூட்டினும் என் தோழி நாணுவள்' எனக் கூறி மறுத்தல். இதற்குக் கொளு ;-

வானுதற் பேதையை — நாணுதல் உரைத்தது.

'உறும் கள் கணை, நிவந்த கணை' எனத் தனித்தனி இயைக்க. உறும் கள் - மிக்க தேனை யுடைய. நிவந்த - பிறர் கணைகளினும் உயர்ந்த. உரவோன் - வலியோன்; காமன். ஒடுங்க - அழிய. தெறும் கண் - உலகை அழிக்கின்ற கண். நிவந்த - விழித்த. 'மலைக்கண் மந்திகள் நாணும் இக் குன்றி டத்தே சிற்றிலின்வாய் நறுங்கண்ணி சூட்டினும் என் வாள் நுதல் நாணும்' என்க. "சூட்டினும்" என்றதற்கு, 'யான் சூட்டினும்' என உரைக்க. நாகம் - புன்னை, இது திணை மயக்கம். தமக்கு ஏலாக் கண்ணியாதலின், மந்திகள் நாணுவ வாயின. 'இந்நிலத்து மந்திகளே நாணுடையவாயின், மகளி ரைச் சொல்வதென்' என்றாளாம்.

சிவபெருமான் நெற்றிக்கண் உடையனாய சிறப்புக் கூறப் பட்டது.

96. இசையாமை கூறி மறுத்தலாவது, நாண் உரைத்து மறுத்த தோழி, 'அவள் நாணுதல் கிடக்க, நாங்கள் வேங்கை மலரல்லது தெய்வத்திற்குரிய பிற மலரைச் சூடோம்; ஆதலின், இக்கண்ணி எமக்கிசையாது' எனக் கூறி மறுத்தல். இதற்குக் கொளு :-

வசைதீர் குலத்திற் — கிசையா தென்றது.

8. செவ்வியிலளென்று மறுத்தல்

கற்றில கண்டன்னம் மென்னடை ; கண்மலர் நோக்கருளப்
பெற்றில மென்பிணை ; பேச்சுப் பெருகிள்ளை: பிள்ளை இன்றொன்
றுற்றிலள் ; உற்ற தறிந்திலள் ; ஆகத் தொளிமிளிரும்
புற்றில வாளர வன்புலி யூரன்ன பூங்கொடியே. 97

நற மனை - தேனுக்கு இருப்பிடமாகிய. நாகம் - யானை. மற மனை வேங்கை - வீரத்திற்கு இருப்பிடமாகிய புலி. மஞ்சு - மேகம். மூன்றும் அடியை இறுதிக்கண் கூட்டுக. "நிறம் மன் ஐ" என்ற ஐ, சாரியை, 'நெடுவரைக்கண் கூட்டுபவோ' என்க. குற மனை வேங்கை - குறச் சாதியின் மனைகளில் உள்ள வேங்கை மரம். அதன் மலர் சுணங்குபோறலின், அப் பெயராற் கூறப்பட்டது, அணங்கு அலர் - தெய்வத்திற்கு உரியவாகிய மலர். இதனுள், 'வேங்கையின் பூக்கள் நிறைந்த பாறையை யானை புலி என்று அஞ்சும் மலை நாடன்' என்றது' இறைச்சி. அதனால், 'ஒன்றை மற்றொன்றாக நினைக்கும் நாடனா தலின், யாம் சூடாத மலரைச் சூடும் மலராக நினைந்தாய்', என்றாளாம்.

சிவபெருமான், தாருகாவனத்து முனிவர் விடுத்த புலியை உரித்தமை கூறுமுகத்தான், அவன் ஆணையன்றிப் பிறிதோராற் றல் செல்லாமை கூறப்பட்டது.

97. செவ்வியிலள் என்று மறுத்தலாவது, தோழி 'அணங்கலர் சூடேம்' என மறுக்கக் கேட்ட தலைவன், மாந் தழையும், பிற மலரும் கொண்டு செல்ல, தோழி, 'எம் பிள்ளை இன்று நின் குறை சொல்லுதற்கேற்ற செவ்வியிலளாய் இருந்தாள் ; செவ்வி பெறிற் கொள்வேன்' எனக் கூறி மறுத் தல். இதற்குக் கொளு :-

நவ்வி நோக்கி — செவ்வியிலள் என்றது.

"பிள்ளை இன்று ஒன்று உற்றிலள்" என்றதனை முதலிற் கூட்டி, 'அதனால்' என்பது வருவித்து, அதனை, 'அன்னம் மென்னடை கண்டு கற்றில ; மென்பிணை கண்மலர் நோக்கு அருளப் பெற்றில ; கிள்ளை பேச்சுப் பெறுவாயின' என

9. காப்புடைத்தென்று மறுத்தல்

முனிதரும் அன்னையும்; என்னையர் சாலவும் மூர்க்கர் இன்னே
தனிதரும்; இந்நிலத் தன்றைய குன்றமும்; தாழ்சடைமேற்
பனிதரு திங்கள் அணிஅம் பலவர் பகைசெகுக்குங்
குனிதரு திண்சிலைக் கோடுசென் றுன்சுடர்க் கொற்றவனே. 98

முடிக்க. ஒன்று - ஒரு விளையாட்டு. 'ஒன்றும்' என்னும் இழிவு சிறப்பும்மை தொகுத்தலாயிற்று. 'ஆகத்து அரவன்' என்க. 'ஆரத்து ஒளி மிளிரும் என்பதும் பாடம்' என்பர். புற்று இல வாள் அரவு - புற்றின்கண் இல்லாத ஒளியுடைய பாம்பு. ''வாளரவு'' என்றது வாளா பெயராய் நின்றது. மேற்கூறியவாறு முடித்த பின்னர், 'அதுவேயுமன்றி' புலியூ ரன்ன பூங்கொடி, நீவிர் உற்றது அறிந்திலள்' என வேறுமொரு முடிபு செய்க. உற்றது - தலைவன் தழையும், கண்ணியும் கொடுவந்தது.

புற்றில் வாழ்தற்குரிய வாளரவு அதனையிலவாயின என் றமையின், அவ்வாற்றால், சிவபெருமானை யடைந்தோர் தாழ் கதியின் நீங்கி, உயர்கதியை அடைதல் கூறப்பட்டது.

98. காப்புடைத்தென்று மறுத்தலாவது, 'செவ்வியிலள்' என்றது கேட்ட தலைவன், 'இவள் இனிச் செவ்விபெற்று வருவாளாம்' என நினைந்து நிற்பத் தோழி, 'கதிரவன் மறைந் தான்; இவ்விடம் மிக்க காவலுடைத்து; எம் ஐயன்மார் கடியர்; இனி இங்கு நிற்கத் தகாது' எனக் கூறி மறுத்தல். இதற்குக் கொளு :-

காப்புடைத் தென்று — சேட்படுத்தது

'ஐய, சுடர்க்கொற்றவன், அம்பலவர் சிலைக்கோடு சென் றுன்; அன்னையும் முனிதரும்; என் ஐயர் சாலவும் மூர்க்கர்; இன்னே தனி தரும்; குன்றமும் இந்நிலத்தன்று' எனக் கூட்டி முடிக்க.

தலைவன் அஞ்சுமாற்றுல், ''மூர்க்கர்'' என்றதல்லது, இகழ்ந்து கூறினாளல்லள். தனி - தனிமை. 'நிலத்தது' என்பது

10. நீயே கூறென்று மறுத்தல்

அந்தியின் வாய்எழில் அம்பலத் தெம்பரன் அம்பொன்வெற்பிற்
பந்தியின் வாய்ப்பல வின்சுளை பைந்தே னொடுங்கடுவன்
மந்தியின் வாய்க்கொடுத் தோம்புஞ் சிலம்ப, மனங்கனிய
முந்தியின் வாய்மொழி நீயே மொழிசென் றம் மொய்குழற்கே. 99

இடைக் குறைந்து நின்றது. குன்றமும் - நும் குன்றமும். உம்மை, இறந்தது தழுவிய எச்சம். சுடர்க் கொற்றவன் - ஒளிகளுள் தலைவன்; பகலவன் அம்பலவர் சிலைக் கோடு, மகா மேரு.

மேருவை வில்லாக்கினமை கூறியமுகத்தால், சிவபெருமான் எவற்றையும் தன்வயமாக்கும் ஆற்றலுடையனாதல் கூறப் பட்டது.

99. நீயே கூறென்று மறுத்தலாவது, 'இவ்விடம் காப் புடைத்து; என் ஐயர் கடியர்' எனத் தோழி கூறக் கேட்ட தலைவன், 'இவள் இங்ஙனம் உண்மையை மறையாது கூறுதல் என்னிடத்துள்ள பரிவினாலன்றே! அதனால், இனி இவள் என் குறையை முடியாதொழியாள்' என நினைந்து போய், மற்றை நாள் செல்ல, தோழி, 'யான் பணிசெய்பவள்; நின்குறையை எம் பெருமாட்டிக்குச் சொல்லும் துணிவிலேன்; ஆதலின், நீயே சென்று நின் குறையை அவட்குச் சொல்' எனக் கூறி மறுத்தல். இதற்குக் கொளு :-

அஞ்சதும் பெரும பஞ்சின்மேல் லடியைக்
கூறுவ நீயே கூறுகென் றது.

அந்தி - அந்திவானம். 'அதன்கண் வாய்ந்த எழிலையுடைய அம்பலவன்' என்க. பரன் - அப்பாற்பட்டவன். 'எல்லாப் பொருட்கும் அப்பாற் பட்டவனாயினும் எமக்கு அண்ணியன்' என்பாள் "எம் பரன்" என்றாள். பந்தியின் வாய் - குரங்கு களின் அணி இடத்து. "சிலம்பு" என்றது, பெருமலைப் பக்கத் துக் குன்றொன்றை. மனம் கனிய - அவள் மனம் மகிழுமாறு. 'முந்திச் சென்று மொழி' என்க. இன வாய்மொழி - இனிய

11. குலமுறை கூறிமறுத்தல்

தெங்கம் பழங்கமு கின்குலே சாடிக் கதலிசெற்றுக்
கொங்கம் பழனத் தொளிர்குளிர் நாட்டினை நீ; உமைகூர்
பங்கம் பலவன் பரங்குன்றிற் குன்றன்ன மாபதைப்பச்
சிங்கந் திரிதரு சீறூர்ச் சிறுமிஎம் தேமொழியே. 100

சொல். 'மனங்கனியும் என்பதூஉம், நின் வாய்மொழி என்பதூஉம் பாடம்' என்பர் பேராசிரியர். 'கடுவன் மந்தியின்கண் பலாச்சுளையைப் பைந்தேனெடும் மந்தியின் வாய்க் கொடுத்து அதனை ஓம்புக சிலம்ப' என்ற உள்ளுறை யுவமத்தால், 'ஆயத்தாரிடை நீ சென்று நின் இனிய மொழியை அன்பொடுங்கலந்து அவட்குக் கூறி அவள் பெலிவை நீக்குவாயாக' எனத் தோழி கூறினள் என்க.

சிவபெருமான் எப்பொருட்கும் அப்பாற்பட்டவனுய்த் தன் அன்பர்க்கு அணியனுய் இருப்பன் என்பது கூறப்பட்டது.

100. குல முறை கூறி மறுத்தலாவது, 'நின் குறையை நீயே சென்று கூறுக' எனத் தோழி கூறக் கேட்ட தலைவன், 'இவள் இதுகாறும் என் குறையைத் தான் முடித்துத் தருவாள் போலக் காட்டி என்னை வீணே உழலப்பண்ணி, இன்று, 'நின் குறையை நீயே முடித்துக்கொள்' என்கின்ருள்; இனி யான் செய்வது யாது' என நினைந்து ஆற்ருமை எய்த, அவற்கு அவ்வாற்ருமை தணியுமாற்ருல், தோழி, 'நீவிர் உயர் குலத்தீர்; யாம் தாழ்குலத்தோம்; எம்மோடு சொல்லாடுதல் நுமக்குத் தகாது' எனக் கூறி மறுத்தல். இதற்குக் கொளு :-

தொழுகுலத்தீர் சொற்காகேம்
இழிகுலத்தேம் எனஉரைத்தது.

'உதிர்கின்ற தெங்கம் பழம்' என்க. கதலி - வாழை. கொங்கு அம் பழனம் - பூந்தாதினையுடைய அழகிய வயல். நாட்டினை - நாட்டின்கண் உள்ளாய். உமை கூர் பங்கு - உமாதேவி சிறந்து விளங்கும் பாகம். 'பரங்குன்றிற் சீறூர்' என இயையும். குன்றன்ன மா - யானை. 'பெருங்காட்டில்

12. நகையாடி மறுத்தல்

சிலையொன்று வாணுதல் பங்கன்சிற் றம்பல வன்கயிலை
மலையொன்று மாமுகத் தெம்ஐயர் எய்கணை மண்குளிக்கும்;
கலையொன்று வெங்கணை யோடு கடுகிட்ட தென்னிற், கெட்டேன்!
கொலையொன்று திண்ணிய வாறையர் கையிற் கொடுஞ்சிலையே.

உள்ள பிறியதோர் ஊர்' என்பாள், "சிங்கம் சிரிதரு சீறூர்", என்றாள். 'அதனால், நீர் எம்மொடு சொல்லாடுதல் தகாது' என்னும் குறிப்பெச்சம் வருவிக்க.

'உமை கூர் பங்கன்' எனக் கூறுமுகத்தால், சிவபெருமான் உயிர்களிடத்து ஒருகாலைக் கொருகால் அருள்மிகுந்து நிற்பவன் என்பது கூறப்பட்டது.

101. நகையாடி மறுத்தலாவது, தோழி குலமுறை கிளக்கக் கேட்ட தலைவன், 'இவள் இக் கருத்தினைற்போலும் எனக் கியையாது நின்றது' என ஆற்றாமை தணிந்து நிற்க' தோழி, 'இனி இவன் ஆற்றுவன்' என அறிந்து, தழை ஏலாது, அவன் விற்றொழிலை நகையாடி மறுத்தல். நூற்பாவுள் இது, 'வில்வலி சொல்லி மறுத்தல்' எனப்பட்டது. இதற்குக் கொளு :-

வாட்டமை யெதிராது சேட்படுத் தற்கு
மென்னகைத் தோழி யின்னகை செய்தது.

"சிலையொன்று, மலையொன்று" என்றவற்றில் 'ஒன்று' உவம உருபு. கலை - ஆண் மான். கடுகிட்டது - விரைந்தோடிற்று. கெட்டேன், வியப்புக் குறிப்பு. 'ஐயர் கையிற் கொடுஞ்சிலை கொலையைச் செய்தலாகிய ஒன்று திண்ணிதாய வாறு வியப்பு' என்க. 'எம் ஐயர் மலைபோன்ற யானைகள் முகத்து எய்யும் கணைகள் அவற்றை உருவி அப்பாற்போய் மண்ணுள் மூழ்கும்; இவர் மான் ஒன்றின்மேல் எய்த கணையை அது தன் உடலில் ஏற்று விரைந்தோடிற்று எனின், இவர் விற்றொழில் இருந்தவாறு வியப்பு' எனத்தோழி நகையாடினாள் என்க.

13. இரக்கந்தோடு மறுத்தல்

மைத்தழை யாநின்ற மாமிடற் றம்பல வன்கழற்கே
மெய்த்தழை யாநின்ற அன்பினர் போல விதிர்விதிர்த்துக்
கைத்தழை யேந்திக் கடமா வினுய்க்கையில் வில்லின்றியே
பித்தழை யாநிற்ப ரால்;என்ன பாவம் பெரியவரே ! 102

உமைபாகம் கூறுமுகத்தால், சிவபெருமானது வல்லமை கூறப்பட்டது.

102. இரக்கத்தொடு மறுத்தலாவது, தன் விற்றெழிலைத் தோழி நகையாடக் கண்ட தலைவன், 'இவள் இங்ஙனம் என்னிடம் நகையாடிக் கூறுகின்றது தழை வாங்குதற் பொருட்டாம்' என மகிழ்ந்து நிற்க, தோழி பின்னும் தழை ஏலாது, 'இவர் இங்ஙனம் பித்துக்கொண்டு கூப்பீடு செய்வது என்னையோ' என இரங்கிக் கூறி மறுத்தல். இதற்குக் கொளு :-

கையுறை யெதிராது காதற் றோழி
யைய நீபெரி தயர்த்தனை யென்றது.

"மைத்துத் தழையாநின்ற" என்பது குறைந்து நின்றது. மைத்தல் - கறுத்தல். மா மிடறு - சிறந்த கண்டம். 'தழையாநின்ற மெய் அன்பு' என மாற்றுக. 'கைக்கண் வில் இன்றியே தழை ஏந்தி' எனக் கூட்டுக. கடமா - யானை. பித்து - பித்துக்கொண்டவர் செய்யும் கூப்பீடு. 'அழையாநிற்பர்' என்றது, 'செய்யாநிற்பர்' என்னும் அளவாய் நின்றது. "என்ன பாவம்" என்றது இரக்கக் குறிப்பு. "இப் பெரியவர்" எனச் சுட்டு வருவிக்க. "அன்பினர் போல விதிர்விதிர்த்து" என்றதனையும், "என்ன பாவம்" என்றதனையும், "மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்து", "என்ன பாவம் திரிதவரே" என்னும் திருவாசகத்தொடு வைத்துக் காண்க (5, 8,).

சிவபெருமானுக்கு அன்பராய் உள்ளார் இயல்பு கூறப்பட்டது.

14. சிறப்பின்மை கூறிமறுத்தல்

அக்கும் அரவும் அணிமணிக் கூத்தன்சிற் றம்பலமே
ஒக்கு மிவள தொளிர்உரு அஞ்சிமஞ் சார்சிலம்பா,
கொக்கும் சுனையும் குளிர்தளி ரும்கொழும் போதுகளும்
இக்குன் றில் என்றும் மலர்ந்தறி யாத இயல்பினவே. 103

---

103. சிறப்பின்மை கூறி மறுத்தலாவது, தலைவனது ஆற்றாமைக்கு இரங்கினாள் போலத் தோழி கூறினமை கேட்ட தலைவன், 'இவள் என் ஆற்றாமைக்குக் கவல்கின்றாளாகலின் என் குறை முடியாநிராள்' என நினைந்து நிற்க, தோழி, 'இவள் வடிவிற்கு அஞ்சி இக் குன்றிடத்து மாமரங்களும் - சுனைகளும், தளிரும் - மலரும் காட்டுதலை யொழிந்தன' எனத், தழையது சிறப்பின்மை கூறி மறுத்தல். இதற்குச் சொலு :-

மாந்தளிரும் மலர்நீலமும்
ஏந்தல் இம்மலை யில்லை என்றது.

கொக்கு - மாமரம். "கொக்கும் சுனையும்" என்றது ஒரு நயம். "தளிரும், போதுகளும்" என்றவற்றை நிரனிறை வகையாற் கொள்க. 'மேனிக்கு அஞ்சி மாமரம் தளிரையும், கண்ணிற்கு அஞ்சிச் சுனை குவளைப் பூவையும் காட்டாதொழிந் தன' என்றபடி. 'மலர்தல்' என்றது, தளிர், போது இரண் டற்கும் பொதுவாய், 'தோன்றுதல்' என்னும் அளவாய் நின்றது. 'மலர்ந்து' எனச் சினை வினை முதன்மேலும், இடத்து நிகழ்பொருளின் தொழில் இடத்தின்மேலும் நின்றன. 'இத் தழை அவள் வடிவினும் சிறந்ததன்று' எனக் கூறி மறுத்தாள் என்க.

பொன்னம்பலத்தில் ஆடுகின்றவன் அக்குப், அரவும்அணிந் தாடுகின்றான் எனக் கூறிய புகழத்தால், சிவபெருமானது வேறு பட்ட தன்மை கூறப்பட்டது.

15. இளமை கூறி மறுத்தல்

உருகு தலைச்சென்ற உள்ளத்தும் அம்பலத் தும்ஒளியே
பெருகு தலைச்சென்று நின்றோன் பெருந்துறைப் பிள்ளைகள்ளார்
முருகு தலைச்சென்ற கூழை முடியா ; முலைபொடியா ;
ஒருகு தலைச்சின் மழலைக்கென் னோஐய ஓதுவதே. 104

16. மறைத்தமை கூறி நகைத்துரைத்தல்

பண்டால் இயலும் இலைவளர் பாலகன் பார்கிழித்துத்
தொண்டால் இயலும் சுடர்க்கழ லோன்தொல்லைத் தில்லையின்வாய்
வண்டால் இயலும் வளர்பூந் துறைவ, மறைக்கின்என்னைக்
கண்டால் இயலுங் கடனில்லை கொல்லோ கருதியதே. 105

---

104. இளமை கூறி மறுத்தலாவது, தோழி இத்தழை சிறப்பின்று எனக் கூறினமை கேட்ட தலைவன், வேறு சிறப்புடைத் தழை கொண்டு செல்ல, தோழி, 'என் பெண்பிள்ளை மிகவும் இளையளாயிருப்ப, அவளைப்பற்றி நீ சொல்லுகின்ற காரியம் பொருந்துவதன்று' எனக் கூறி மறுத்தல். இதற்குக் கொளு ;-

முளையெயிற் றரிவை — விளைவிலள் என்றது.

"சென்ற" என்றவற்றிற்கு, 'அடைந்த' எனப் பொருள் உரைக்க "சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்பலத்தும்என் சிந்தையுள்ளும் - உறைவான்" என்றார் முன்னரும் (20). பிள்ளை - பெண்பிள்ளை. 'கள் ஆர் கூழை முருகு தலைச்சென்ற கூழை' என இயையும். முருகு - வாசனை. தலை, இடைச் சொல். கூழை - கூந்தல். முடியா - முடிக்கப்படா. பொடியா - முகிழா. 'ஒரு மழலை' என இயையும். குதலை - விளங் காமை. மழலை - இளமை. இவை இத் தன்மைவாய சொற் களைக் குறித்து நின்றன.

சிவபெருமான் உயிர்களின் அகத்தும், புறத்தும் நின்று ஞானத்தையே பெருக்குதல் கூறப்பட்டது.

105. மறைத்தமை கூறி நகைத்துரைத்தலாவது, தோழி, 'என் பெண்பிள்ளை மிக இளையள்' எனக் கூறக் கேட்ட தலைமகன், 'இவள் இந்நாள்காறும் எனக்கு இயைந்துநின்று,

17. நகை கண்டு மகிழ்தல்

மத்தகஞ் சேர்தனி நோக்கினன் வாக்கிறந் தூறமுதே
ஒத்தகஞ் சேர்ந்தென்னை உய்யநின் றோன்றில்லை யொத்திலங்கு
முத்தகஞ் சேர்மென் னகைப்பெருந் தோளி முகமதியின்
வித்தகஞ் சேர்மெல்லென் நோக்கமன் றோஎன் விழுத்துணையே.

இன்று இயையாது நிற்றல் என்னை? இனி இவளை நீங்கிப் பிறவாறு ஒழுகுவேன்' என நினைந்து நிற்ப, தோழி அக் குறிப் பறிந்து, 'நீ என்னை மறைத்து ஒழுகல் இயலாது' என நகைத் துரைத்தல். இதற்குக் கொளு :-

என்னை மறைத்தபின் எண்ணிய தரிதென
நன்னுதல் தோழி நகைசெய்தது.

'பண்டு பார்கிழித்து' எனவும், 'தில்லையின்வாய் துறை' எனவும், இயையும். ஆல் இயலும் இலை - ஆலமரத்தின்கண் உளதாம் இலை. "கிழித்து" என்றதன்பின், 'பின்' என்பது வருவிக்க. தொண்டால் - தொண்டொடு. இயலும் - ஒழுகு கின்ற. வண்டு ஆல் இயலும் - வண்டுகள் ஆலிப்பொடு (ஆர வாரத்தொடு) திரியும். 'என்னை மறைக்கின்' என மாற்றுக. கண்டால் - ஆராய்ந்தால்; இதனை, 'என்னை மறைக்கின்' என்பதற்கு முன் கூட்டுக. 'நீ கருதியது இயலும் கடன் இல்லை' என்க. கடன் - முறைமை. கொல், ஓ அசைநிலைகள்.

சிவபெருமானது திருவடி செருக்குடையோர்க்கு அகப் படாது, தொண்டு செய்வோர்க்கு அகப்பட்டுநிற்கும் என்பது கூறப்பட்டது.

106. நகை கண்டு மகிழ்தலாவது, தோழி, 'என்னை மறைக்கின் இயலாது' எனக் கூறக் கேட்ட தலைவன், 'இவள் இனி யானே முடிக்கின்றேன் என்றாள்' எனக் கொண்டு, அவளது நகைப்பிற்கு மகிழ்ந்து கூறுதல். இதற்குக் கொளு ;-

இன்னகைத் தோழி மென்னகை கண்டு
வன்னக் கதிர்வேல் அண்ணல் உரைத்தது.

18 அறியாள் போன்று நினைவு கேட்டல்

விண்ணிறந் தார்நிலம் விண்டவர் என்றுமிக் கார்இருவர்
கண்ணிறந் தார்தில்லை யம்பலத் தார்கழுக் குன்றினின்று
தண்ணறுந் தாதிவர் சந்தனச் சோலைப்பந் தாடுகின்றார்
எண்ணிறந் தாரவர் யார்கண்ண தோமன்ன நின்னருளே. 107

மத்தகம் - நெற்றி. தனி நோக்கு - ஒற்றைக் கண். "வாக்கிறந் தமுதம் மயிர்க்கால் தோறும் - தேக்கிடச் செய்தனன்" என்றார் திருவாசகத்தும் (திருவண். 170, 171). "உய்ய" என்றதன்பின், 'கொள்ள' என்னும் சொல் எஞ்சி நின்றது. 'இலங்கும் முகம்' என இயையும். முத்து அகம் சேர் மெல் நகை - முத்துப்போலும் பற்கள் வெளித் தோன்றாத புன்முறுவல். வித்தகம் - திறமை. தான் அவளை மறைத் தொழுகக் கருதிய குறிப்புணர்ந்தாளாகலின், தோழியது நோக்கத்தை, 'வித்தகம் சேர் நோக்கம்' என்றான். 'இந்நோக்கமே எனக்கு விழுத்துணை' என்றான் என்க. இது தலைவன் தன் நெஞ்சொடு சொல்லியது.

சிவபெருமான் வாக்கிறந்த அமுதமாதல் கூறப்பட்டது.

107. அறியாள் போன்று நினைவு கேட்டலாவது, தலைவனது மகிழ்ச்சியைக் கண்ட தோழி, பின் தமை வாங்குங் குறிப்பைப் புலப்படுத்துவாளாய், 'என் தோழியர் எண்ணிறந்தார் உளர்; அவருள் நின் கருத்து யார்கண்ணது' என, அறியாள் போன்று அவன் கருத்தை வினவுதல். இதற்குச் செய்யுள் :-

வேந்தன் சொன்ன மாந்தளிர் மேனியை
வெறியார் கோதை அறியேன் என்றது.

விண் இறந்தார் - அன்னப் பறவையாகி விசும்பைக் கடந்தார். நிலம் விண்டவர் - வராகமாகி நிலத்தைப் பிளந்தவர். என்று, எண்ணிடைச் சொல். மிக்கார் - பெரியோர். இருவர் கண் இறந்தார் - இருவருடைய கண்ணைக் கடந்தவர். தாது இவர் - மகரந்தம் பரந்த. "அவர்" என்றதில் 'உள்' என்பது விரிக்க.

19. அவயவங்கூறல்

குவவின கொங்கை குரும்பை; குழல்கொன்றை;
[கொவ்வைசெவ்வாய்;
கவவின வாணகை வெண்முத்தம்; கண்மலர் செங்கழுநீர்;
தவவினை தீர்ப்பவன் தாழ்பொழிற் சிற்றம் பலமனையாட்
குவவின நாண்மதி போன்றொளிர் கின்ற தொளிமுகமே. 108

20. கண்ணயந் துரைத்தல்

ஈசற் கியான்வைத்த வன்பி னகன்றவன் வாங்கியவென்
பாசத்திற் காரென் றவன்தில்லை யின்னொளி போன்றவன்தோள்
பூசத் திருநீ றெனவெளுத் தாங்கவன் பூங்கழல்யாம்
பேசத் திருவார்த்தை யிற்பெரு நீளம் பெருங்கண்களே. 109

சிவபெருமான், பெரியோர்க்கெல்லாம் பெரியோன் என்பது கூறப்பட்டது.

108. அவயவம் கூறலாவது, 'யார்கண்ணதோ மன்ன நின்னருள்' எனத் தோழி வினவக் கேட்ட தலைமகன், 'என் கருத்தை இவள் நன்கறிந்திலள்; அறிந்தாளாயின் தழை வாங்குவாள்' எனக் கொண்டு, தலைமகளது உறுப்பு நலங்களைக் கூறுதல். இதற்குக் கொளு :-

அவயவம் அவளுக் — கிவையிவை என்றது.

மூன்றும் அடியை முதற்கண் கூட்டுக. குவவின - குவிந்த குரும்பை - தென்னங் குரும்பை. கொன்றை - கொன்றைப் பழம். கொவ்வை - கொவ்வைக் கனி. 'செவ்வாய் கொவ்வை' என மாறுக. கவவின - அவ்வாயின் அகத்திட்ட. வினை தவத் தீர்ப்பவன் - வினையை மிக நீக்குபவன். வினைகளின் மிகுதி, நீக்குதல்மேல் ஏற்றப்பட்டது. 'தன் அன்பர்க்குத் தவத் தொழிலை நீக்கி இன்புறு நெறி அருளினவன்' என்பதையே சிறந்த உரையாகக் கொள்வர் பேராசிரியர். உவவின நாள் - பல கலைகளும் கூடி நிரம்பிய நாள்.

சிவபெருமான் வினை தீர்ப்பவனாதல் கூறப்பட்டது.

109. கண்ணயந் துரைத்தலாவது, தலைவியது, அவயவங் கூறிய தலைமகன், அதனோடமையாது, தனக்கு அன்று தோழி

21. தழையேதிர்தல்

தோலாக் கரிவென்ற தற்கும் துவள்விற்கும் இல்லின்தொன்மைக்
கேலாப் பரிசுள வேயன்றி ஏலேம் இருஞ்சிலம்ப,
மாலார்க் கரிய மலர்க்கழல் அம்பல வன்மலையிற்
கோலாப் பிரசமன் னுட்கைய நீதந்த கொய்தழையே. 110

யைக் காட்டிய அவளது கண்ணை விரும்பி அதனது நலத்தைக் கூறுதல். இதற்குக் கொளு :-

கன்னியை பிறழ்வன — வண்ணம் உரைத்தது.

அன்பின் - அன்புபோல. வாங்கிய - நீக்கிய. காரென்று - கறுத்து. ''தில்லையின்னொளி'' என்றதில் னகரவொற்று, விரித்தல். ''தில்லையினொளிபோன்று'' என்றாராயினும், 'தில்லைபோல ஒளியுடையவாய்' என்பது கருத்தென்க. தில்லைக்கு ஒளி, புகழ். 'பூசு அத்திருநீறு' எனவும், 'பேசு அத்திருவார்த்தை' எனவும் பிரிக்க. சிவபெருமானைப் பேசும் வார்த்தையை இவர் 'திருவார்த்தை' என்றமையின், இவரது பாட்டுக்கள் 'திருவாசகம்' எனப் பெயர் பெற்றனபோலும்! திருநீற்றை ''அவன் தோள் பூசும் திருநீறு'' என்றது, செந் நிறமும் தோன்றுதற் பொருட்டு. 'அகன்று, காரென்று, வெளுத்து' என்றவற்றோடு இயைய, ''நீளம்'' என்றதற்கும் 'நீளம் ஆகும்' எனத் தொழிற்படுத்துரைக்க. ''முன்னிக் கடலைச் சுருக்கி'' என்னும் திருவெம்பாவைப் பாட்டுள் மழையின் பல பகுதிகட்கும் அம்மைதன் தோற்றப் பகுதிகளையே உவமை கூறினாற்போல, இங்குத் தலைவியின் கண்களின் இயல்புகள் பலவற்றிற்கும் தில்லைப் பெருமானது திருவருள் தொடர்பாயுள்ளவற்றையே உவமை கூறியது அறிக.

சிவபெருமான், தன்னிடத்து மிக்க அன்புடையார்முன் நீறணிந்த சிவந்த திருமேனியுடன் தோன்றி அவர்தம் இருள் வடிவாகிய பாசத்தை நீக்கி, தனது அளவிறந்த புகழைப் பேசிக் களிக்குமாறு செய்தல் கூறப்பட்டது. ஆளுடையபிள்ளையாரும் ''காடுடைய சுடலைப் பொடிபூசிஎன் உள்ளம் கவர் கள்வன்'' என்று அருளிச்செய்தமை காண்க. (திருமுறை - 1. 1, 1.).

110. தழை எதிர்தலாவது, தலைவன், தலைமகளது கண் நயந்து உரைக்கக்கேட்ட தோழி, 'இவ்வாறு நீ தரும் தழையை

22. குறிப்பறிதல்

கழைகாண் டலும்சுளி யுங்களி யானையன் ஞன்கரத்தில்
தழைகாண் டலும்பொய் தழைப்பமுன் காண்பன் ;இன்
[றம்பலத்தான்
உழைகாண் டலும்நினைப் பாகுமென் னேக்கிமன்
[நோக்கங்கண்டால்
இழைகாண் பணைமுலை யாய்அறி யேன்சொல்லும் ஈடவற்கே.

யாங்கள் ஏற்றல் எங்கள் குடிக்கு ஏலாதாயினும், நீ செய்த உதவியும், நின் வருத்தமும் நோக்கி ஏற்குதும்' எனக் கூறி, அவன் தரும் தழையை ஏற்றல். இதற்குக் கொளு :-

அகன்றவிடத் தாற்ருமை கண்டு
கவன்ற தோழி கையுறை எதிர்ந்தது.

'நீ கரிவென்று காத்ததற்கும், நின் துவள்விற்கும் எதிராக எம் இல்லின் தொன்மைக்கு ஏலாப் பரிசுகள் எம்மிடத்து உளவாகின்றனவன்றி நீ தந்த தழை ஏலேம்' என வேண்டும் சொற்கள் வருவித்து முடிக்க. ஏலாப் பரிசுகள், தழையேற்றலும், அதனைப் பலர் காண உடுத்தலும், பிறவுமாம். கோலாப் பிரசம் - வண்டுகளால் சேர்த்துவைக்கப்படாத தேன். 'உளவேலன்றி' என்பதும், 'கோலாற் பிரசம்' என்பதும் பாடம் என்பர் பேராசிரியர். 'தலைவன் கரிவென்று தலைவியைக் காத்ததின்ருல்' எனின், 'பாங்கியிற் கூட்டத்திற்குமுன் அவ்வாறு நிகழ்தலும் உண்டு' என்றற்கு அஃதுளதாகக் கூறினர் என்க. "மாலார்க் கரிய" என்றது, 'மயக்கத்தை உடையவர்க்கு அரிய' எனவும், 'மயங்காதார்க்கும் அரிய' எனவும் பிற பொருள்பட்டு, மெய்யுணர்வில்லாதார்க்குச் சிறிதும் அறியப்படாமையையும், மெய்யுணர்வுடையார்க்கும் முற்றும் அறியப்படாமையையும் குறித்தது.

சிவபெருமானுடைய திருவடிச் சிறப்புக் கூறப்பட்டது.

111. குறிப்பறிதலாவது, தலைமகனிடத்துத் தழையேற்ற தோழி, அதனைத் தலைமகளிடம் தெற்றெனக் கூறின் அவள் மறுக்கவும் கூடும் என்னும் கருத்தால், சில சொற் சொல்லி

23. குறிப்பறிந்து கூறல்

தவளத்த நீறணி யுந்தடந் தோளண்ணல், தன்னொருபால்
அவளத்த னும்மக னுந்தில்லை யான்அன் றுரித்ததன்ன
கவளத்த யானை கடிந்தார் கரத்தகண் ணார்தழையுந்
துவளத் தருவன வோசுரும் பார்குழல் தூமொழியே. 112

அவளது குறிப்பினை அறிதல். நூற்பாவினுள் இது, 'முகம்புக உரைத்தல்' எனக் கூறப்பட்டது. இதற்குக் கொளு:-

தழையெதிரா தோழிவதற்கோர்
சொல்லறி யேனெனப் பல்வளைக் குரைத்தது.

கழை - மூங்கில்; குத்துக் கோல். சுளியும் - வெகுளும் முன் பொய் தழைப்பக் காண்பன் - முன்னெல்லாம் அவற்குக் கூறுதற்குரிய பொய்ம்மொழிகளை மிகுதியாகக் காண்பேன். 'காண்பன்' என்றது, தன் இயல்பு கூறியது. உழை காண்டலும் நினைப்பாகும் - மானைக் காண்டலும் ஒப்புமையால் நினைப் பின்கண் தோன்றுகின்ற. மன் - தலைவன் 'இனிக் கண்டால் அவற்குச் சொல்லும் ஈடு அறியேன்' என்க. அவனது வருந்திய நோக்கம் அவ்வாறிருந்தது என்றபடி.

இழை காண் - அணிகலங்கள் காணப்படும், பொய்யை, 'ஈடு' என்றாள். 'இனி யாது செய்வோம்' என்பது குறிப்பெச்சம். "யானை அன்னான்" என்றது வெளிப்படையுவமமாய்ப் பெருவலியுடைமை தோற்றிற்றாயினும், "கழைகாண்டலும் சுளியும் களி" என்றது, 'யானை குத்துக்கோல் வரைக்கண் நில்லாது. களிப்பு வயத்ததாயினாற்போல, இவனும் கழறுவார் வரைக்கண் நில்லாது வேட்கை வயத்தனாயினான்' என இறைச்சிப் பொருள் தந்து நின்றது.

சிவபெருமான் தாருகாவன முனிவர் விடுத்த மானை ஏந்தி நின்றமை கூறப்பட்டது.

112. குறிப்பறிந்து கூறலாவது, 'இனி யாம் செய்வது யாது' என்ற தோழியைத் தலைவி மறுத்துக் கூறாமையின், அவள் குறிப்பறிந்துகொண்டு, 'யானையைக் கடிந்து நம்மைக்

24 வகுத்துரைத்தல்

ஏறும் பழிதழை யேற்பின் ;மற் றேலா விடின்மடன்மா
ஏறும் அவன் ;இட பம்கொடி யேற்றிவந் தம்பலத்துள்
ஏறும் அரன்மன்னும் ஈங்கோய் மலைநம் மிரும்புனம்காய்ந்
தேறு மலைதொலைத் தாற்கென்னை யாம்செய்வ தேந்திழையே.

காத்த பேருதவியாளர் கைக்கண் உள்ள தழை வாடத் தகுமோ' எனத் தழையேற்றல் வேண்டும் என்பதனைத் தோழி வெளிப்படக் கூறல். நூற்பாவுள் இது, 'முகங் கொண்டு கூறல்' எனப்பட்டது. இதற்குக் கொளு,-

ஏழைக் கிருந்தழை — தோழிகொண் டுரைந்தது.

தவளத்த - வெண்ணிறத்தையுடைய. தன் ஒருபாலவள் - உமை. உமைக்குச் சிவன், அத்தனும் மகனும் கூறப்படுதல் பற்றி, "மின்னிடைச் செந்துவர்வாய்" என்று திருவாசகக் குறிப்பில் (207) கூறப்பட்டது. "கவளத்த யானை" என்றது, 'கட்டின்றித் தானே திரிந்து தான் விரும்பும் கவளத்தை உண்டு மதத்த யானை' என்றதாம். கண் ஆர் தழையும் - கண்ணிற்கு நிறைந்த தழையும். உம்மை - சிறப்பு. "தழை துவளத் தகுமோ" என்றதனால், 'அவர் உள்ளமும் துவளத் தகுமோ' எனக் கூறினாளாம்.

சிவபெருமான் தானும் தன் சத்தியுமாய் உலகினை நடத்தும் முறைமைகள் கூறப்பட்டன.

113. வகுத்துரைத்தலாவது, தோழி தலைவியது குறிப் பறிந்துரைத்த பின்னும் நாணினால் அவள் தழை வாங்காது நிற்க, அஃதறிந்து, 'இனி நாம் தழைவாங்குதலே தக்கது' என் பதைத் தோழி வகுத்துரைத்தல். இதற்குக் கொளு :-

கடித்தழை கொணர்ந்த காதற் றோழி
மடக்கொடி மாதர்க்கு வகுத்துரைத்தது.

'தழை ஏற்பின் பழி ஏறும்; மற்று ஏலாவிடின் அவன் மடலேறும்' எனக் கூட்டுக. எனவே, 'இருவகையானும் நமக்குப் பழியே எனினும், தழையேற்றால் உளதாகும் பழியை

25. தழையேற்பித்தல்

தெவ்வரை மெய்யெரி காய்சிலையாண்டென்னை யாண்டுகொண்ட
செவ்வரை மேனியன் சிற்றம் பலவன் செழுங்கயிலை
அவ்வரை மேலன்றி யில்லைகண் டாய்;உள்ள வாறருளான்
இவ்வரை மேற்சிலம் பன்எளி திற்றந்த ஈர்ந்தழையே. 114

அறத்தொடுநிலை முதலியவற்றால் போக்கிக்கொள்ளுதல் கூடும்; அவன் மடல் ஏறின் வரும்பழியை எவ்வாற்றானும் போக்குதல் கூடாதாம்' என வகுத்துரைத்தாளாதல் அறிக. "கொடிக் கண் ஏற்றி" எனவும், 'ஈங்கோய் மலைக்கண் காய்ந்து' என வும் உருபு விரிக்க 'அறமாகிய இடபக் கொடியை உயர்த்தி, அம்பலத்தின்கண் தோன்றிநிற்றல், அடைந்தார்க்கு அருளுதற் பொருட்டு' என்பது கருத்து. புனங் காய்ந்து ஏறும் மலை, யானை. செய்வது - செய்யும் கைம்மாறு.

சிவபெருமான் தன்னை அடைந்தார்க்கு அருள்செய்ய நிற்றல் கூறப்பட்டது.

114. தழை ஏற்பித்தலாவது, 'இருவகையானும் நமக்குப் பழியே; ஆயினும், தழையேலாமையால் வரும்பழி போக்கு தற்கு அரிது' எனத் தோழி கூறக் கேட்ட தலைவி, 'அங்ஙன மாயின், தழை ஏற்பதே தக்கது' எனக் கருதுகின்றுழி, தோழி அக் குறிப்பறிந்து, 'இதனை ஏற்றுக்கொள்க' எனத் தலைவன் தந்த தழையை ஏற்பித்தல். இதற்குக் கொளு:-

கருங்குழன் மடந்தைக் கரும்பெறல் தோழி
இருந்தழை கொள்கென விரும்பிக் கொடுத்தது.

'தெவ்வரை மெய் எரி' என்றது, 'யானையைக் கோடு குறைத்தல்' என்பதுபோல நின்றது. மெய் - உடம்பு. எரி - எரிக்கும். "காய் சிலை" என்றது, வாளா பெயராய் நின்றது. "சிலை ஆண்டு என்னை ஆண்டுகொண்ட" என்றது, "தேவர்க்கு அருள் செய்து, என்னையும் ஆண்டு கொண்ட' என்றபடி.

இதற்கு, 'என்னை நெஞ்சை வளைத்தற்கு, முன்னர்க் கல்லை வளைத்துப் பயின்றான்' எனவும், 'அதன்பொருட்டு முப்புரத்தை

௨௬. தழைவிருப்புரைத்தல்

பாசத் தளையறுத் தாண்டுகொண் டோன்தில்லை யம்பலஞ்சூழ்
தேசத் தன,செம்மல் நீதந் தனசென் றியான்கொடுத்தேன் ;
பேசிற் பெருகும் , சுருங்கு மருங்குல் பெயர்ந்தரைத்துப்
பூசிற் றிலளன்றிச் செய்யா தனஇல்லை பூந்தழையே. 115

முன்னிலையாகக் கொண்டதல்லது தனக்கொரு பகையுளதாக அது செய்ததன்றுபோலும்' எனவும் சிறப்புரை கூறி, '' கல்லை மென்கனி யாக்கும் விச்சைகொண் டென்னை நின்கழற் கன்ப னாக்கினாய்'' என்னும் திருவாசகத்தை (98) மேற்கோள் காட்டினார் பேராசிரியர்.

செவ்வரை - பவளமலை. 'கயிலையாகிய அவ்வரை' என்க. கண்டாய், முன்னிலை யசை. உள்ளவாறு - இஃது உள்ளபடியாம். அருளான் - நம்மேல் உள்ள அருளினால். 'சிலம்பன் அருளான் இவ்வரைமேல் எளிதில் தந்த ஈர்ந்தழை கயிலையாய அவ்வரைமேலன்றி இல்லை கண்டாய்' என வினை முடிக்க. 'ஆதலின் இது கொள்வாயாக' என்பது குறிப்பெச்சம். 'கைலைத் தழையை எளிதில் தந்தான்' என்றதனால், தமர் மறுப்பினும் வரைந்துகொள்ள வல்லன் என்பது கூறினாள்.

சிவபெருமான் எளியவரையும் அருள்செய்து ஆண்டுகொள்ளுதல் கூறப்பட்டது.

115. தழைவிருப்புரைத்தலாவது, தலைமகளைத் தழையேற்பித்த தோழி தலைமகனிடம் சென்று, அவள் அத்தழையை விரும்பியேற்ற விருப்பத்தைக் கூறுதல். இதற்குக் கொளு :-

விருப்பவள் தோழி — பொருப்பற் குரைத்தது.

"பாசம்" என்றது வாளா பெயராய் நின்று, மும்மலங்களைக் குறித்தது. தளை - கட்டு. 'என்னை ஆண்டுகொண்டோன்' என்க. தேசத்தன - இடத்தின்கண் உள்ளன. 'தேசத்தனவும், நீ தந்தனவுமாகிய அவற்றை' என்க. "பேசின்" என்றதற்கு, 'அவற்றை அவள்செய்தவாற்றை' என்னும்,

செயப்படுபொருள் வருவித்துக்கொள்க. மருங்குல் - மருங்குலை யுடையாள். பெயர்ந்து - பின்னும். இதனை, 'பெயர்த்து' எனப் பிறிதின்மேல் வைத்துக் கூறுதலன்றி, இவ்வாறு, தன் மேலே வைத்துக் கூறினும் பொருந்தும் என்க. 'அரைத்துப் பூசிக்கொள்ளுதல் ஒன்றும் செய்திலள்; பிறவெல்லாம் செய் தாள்' என்றபடி.

சிவபெருமான், உயிர்களது பாசத்தை அறுத்து ஆண்டு கொள்வோனாதல் கூறப்பட்டது.

செய்து ளோர்பெறும் வினைப்பய னொருவர்
　　சேர்க்க வேண்டுவ தில்லெனி னிதுமேல்
எய்து மேலிது நுகர்வதென் றறிவ
　　தில்லை நீவினை யெனிற்சட மறியா
துய்த லாகிய நன்னெறி யுணரா
　　வுனையு முன்வினைப் பயனையு முணர்ந்து
மைத வாமல மொழித்தரு ளகலா
　　வாழ்வு நல்குவம் யாமென மதிப்பாய். 105

எவர்க்கு மிம்மலஞ் சேரவிங் கொழியா
　　திருப்ப தென்னெனி லின்னல்கொள் பிறவித்
துவக்கெ னுந்தம திருவினைப் பயனுந்
　　துலைபு கும்பொரு ளெனநிறை நிகர்த்தால்
அவர்க்கு நம்பதங் கொடுத்திட ரொழிப்போ
　　மதுவி லாதவ ரழுங்கியவ்வளவும்
பவப் பெருங்கடல் வீழ்வர்தம் பருவம்
　　பார்க்கு மெம்மையுந் தம்மையும் பாரார். 106

— திருவாதவூரடிகள் புராணம்.

13. பகற் குறி

[பகற்குறியாவது, தலைமகளைத் தழையேற்பித்த தோழி, பின் அவளைப் பகற்காலத்து இடங் குறித்து அவ்விடத்துத் தலைமகனோடு கூட்டுவித்தல். அதனை அடிகள் முப்பத்திரண்டு துறைகளாக அருளிச்செய்வர். அவற்றைக் கூறும் நூற்பா வருமாறு:-

[1] குறியிடங் கூறல், [2] ஆடிடம் படர்தல்,
[3] குறியிடைச் சேறல், [4] இடத்துய்த்து நீங்கல்,
[5] உவந்துரைத் தல்லொடு, [6] மருங்கணை தல்லே,
[7] அறிவறி வித்தல், [8] அவன்உள் மகிழ்தல்,
[9] ஆயத் துய்த்தல், [10] தோழிவந்து கூடல்,
[11] ஆடி டம் புகுதல், [12] தனிகண் டுரைத்தல்
தடமென் முலையாள் [13] பருவங் கூறி
வரவு விலக்கல், [14] வரைவுடம் படாது
மிகுத்துரைத் தல்லொடு, [15] மெய்ம்மை யுரைத்தல்,
[16] வருத்தங் கூறல். [17] தாயச்சங் கூறல்,
[18] இற்செறி வறிவித்தல், [19] தமர்நினை வுரைத்தல்,
[20] எதிர்கோள் கூறல், [21] ஏறுகோள் கூறல்,
[22] ஏதிலார் தார்முரை கூறல், அவளொடு
கூறுவாள் போன்று [23] தினைமுதிர் வுரைத்தல்,
[24] பகல்வரல் விலக்கல், பையுள் எய்தித்
[25] தினையொடு வெறுத்தல், சிறைப்புற மாக
[26] வேங்கையொடு வெறுத்தல், [27] வெற்பமர் நாடற்குக்
கழுமலுற் றிரங்கல், [28] கடிப்புனங் கையறக்
கொய்தமை கூறல், [29] பிரிவருமை கூறல்,
[30] மயிலொடு கூறல், [31] வறும்புனங் காண்டல்,
[32] பயில்பதி நோக்கிப் பதிமிக வாடல்,
சொன்னநா லெட்டும் தோன்றும் இயற்கை
மன்னிய பகற்குறி வகையா கும்மே.]

1. குறியிடங் கூடல்

வானுழை வாளம்ப லத்தரன் குன்றென்று வட்கிவெய்யோன்
தானுழை யாஇரு ளாய்ப்புறம் நாப்பண்வண் தாரகைபோல்
தேனுழை நாக மலர்ந்து திகழ்பளிங் கான்மதியோன்
கானுழை வாழ்வுபெற் றுங்கெழில் காட்டுமோர் கார்ப்பொழிலே.

---

116. குறியிடங் கூறலாவது, தலைவனிடம் தழைவிருப் புரைத்த தோழி, தாம் விளையாடுமிடத்து அவன் தலைமகளைக் கூடுதற்குரிய இடம் இதுவெனக் கூறுதல். இதற்குக் கொளு :-

வாடிடந் தன்னல் வந்தழை யெதிர்ந்தவள்
ஆடிடத் தின்வியல் பறிய வுரைத்தது.

வான் உழை வாள் - அண்டங்கட்கு மேல் உள்ள ஒளிப் பொருளாய் உள்ளவன்.

" அண்டம் ஆரிரு ளூடு கடந்தும்பர்
உண்டு போலும்ஓர் ஒண்சுடர்; அச்சுடர்
கண்டிங் காரறி வார்! அறி வாரெலாம்
வெண்டிங்கட் கண்ணி வேதியன என்பரே "

(திருமுறை - 5-97. 1.)

" ....இருநிலனும் விசும்பும் விண்ணும்
ஏழுலகுங் கடந்தண்டத் தப்பால் நின்ற
பேரொளியை "

(திருமுறை - 6. 1. 10.) என்ற அப்பர் திருவாக்குக்களையும் காண்க. அண்டங்கடந்த பொருளாயினும், உயிர்கள் பொருட்டு இங்குக் காணப்படுகின்றான் என்பாள், " அம்பலத்தரன் " என்றாள். வட்கி - நாணி. வெய்யோன் - பகலவன். நுழையா இருள் - நுழையாமையால் நீங்காத இருள். நாப்பண் - நடுவிடம். தாரகை - விண்மீன். தேன் - வண்டுகள். மதியோன் - சந்திரன். கானுழை - காட்டிடத்தில். கார்ப் பொழில் - கரிய சோலை. கருமை, இருள் செறிதலால் உளதாவது. " நாப்பண் வண் தாரகைபோல் " என்கின்றாளாதலின், இருளாய்த் தோன்

உ. ஆடிடம் படர்தல்

புயல்வளர் ஊசல்முன் ஆடிப்பொன் னேயின்னப்
[போய்ப்பொலியும்
அயல்வளர் குன்றில்நின் றேற்றும் அருவி திருவுருவிற்
கயல்வளர் வாட்கண்ணி போதரு காதரந் தீர்த்தருளுந்
தயல்வளர் மேனியன் அம்பலத் தான்வரைத் தண்புனத்தே.

றல் புறத்தே என்றற்கு, "புறம் இருளாய்" என்றாள். அதனான் அது கூறியது கூறலன்று. 'ஓர்கார்ப் பொழில், புறம் வெய்யோன் நுழையா இருளாய், நாப்பண் பளிங்கால் மதியோன் வாழ்வு பெற்றாங்கு எழில் காட்டும்' என வினை முடிக்க. 'அங்கு வா' என்பது குறிப்பெச்சம். 'பொழில் புறம் இருளாய், நாப்பண் எழில் காட்டும்' என்றவை சினைவினை முதல்மேல் நின்றனவாம். "மலர்ந்து" என்றதனை, 'மலர' எனத் திரிக்க.

சிவபெருமான் உலகினைக் கடந்து நிற்பவன் என்பதும், அவ்வாறாயினும் உயிர்கள் பொருட்டு உலகினுள் நின்று விளங்குவான் என்பதும் கூறப்பட்டன.

117. ஆடிடம் படர்தலாவது, தலைவற்குக் குறியிடங் கூறிய தோழி, தலைவியை, 'நாம் விளையாடப் போவோம்; போதுக' என ஆயத்தொடுங் கொண்டு, ஆடிடம் செல்லுதல். இதற்குக் கொளு :-

வண்தழை யெதிர்ந்த ஒண்டொடிப் பாங்கி
நீடமைத் தோளியோ டாடிடம் படர்ந்தது.

"போதரு" என்றதனை, "அருவி" என்றதன் பின்னர் வைத்து, "திருவுருவின்" என்பது முதலாகத் தொடங்கியுரைக்க. "புயல் வளர் ஊசல்" என்றதனால், உயர் மரத்தின் மேற் கிளையில் தொடுக்கப்பட்டிருத்தல் பெறும். ஏற்றும் - ஏற்போம். "அருவி" என்றவிடத்து, இரண்டாவது இறுதிக்கண் தொக்கது. திரு உருவின் - திருமகள் போலும் உருவினையுடைய. வாள் - ஒளி. காதரம் - பிறவித் துன்பம். 'அச்சம்'

3. குறியிடத்துக்கொண்டு சேறல்

தினைவளங் காத்துச் சிலம்பெதிர் கூஉய்ச்சிற்றில் முற்றிழைத்துச்
சுனைவளம் பாய்ந்து துணைமலர் கொய்து தொழுதெழுவார்
வினைவளம் நீறெழ நீறணி யம்பல வன்றன்வெற்பிற்
புனைவளர் கொம்பரன் னாய்அன்ன காண்டும் புனமயிலே. 118

என்பர் பேராசிரியர். 'தையல்' என்பது, 'தய்யல்' எனப் போலியாமிடத்து, எதுகைநோக்கி, யகரமெய் குறைந்துநின்றது.

சிவபெருமான் பிறவித் துன்பத்தை நீக்குபவனாதல் கூறப் பட்டது.

118. குறியிடத்துக் கொண்டு சேறலாவது, தலைவியை ஆயத்துடன் கொண்டு ஆடிடம் படர்ந்த தோழி, ஆயத்தை அவளினின்றும் பிரியப்பண்ணி, அவளைத் தலைவற்குத் தான் சொன்ன குறியிடத்துக் கொண்டு செல்லுதல். இதற்குக் கொளு :-

அணிவளர் ஆடிடந் தாய வெள்ளம்
மணிவளர் கொங்கையை மருங்ககன்றது.

"தொழுதெழுவார் ....அன்னாய்" என்றதனை முதலிற் கூட்டுக. தினைவளம் - தினையாகிய செல்வம். மலைநிலத்தார்க்கு இது செல்வமாதல் அறிக. 'முற்ற' என்பதன் ஈறு தொகுத் தலாயிற்று. 'முற்றும்' என உம்மை விரிப்பர் பேராசிரியர். சுனைவளம் - சுனைநீர். துணைமலர் - இனம் ஒத்த பூக்கள். "தொழுது எழுவார்" என்றது, 'நோக்கி வருவார்' என்பது போல, உடனிகழ்ச்சியாய் நின்றது. எழுதல் - துயில் உணர்தல். 'எழுந்து தொழுவார்' எனப் பின்முன்னாக்கி யுரைத்தல் சிறவாமை யறிக. வினைவளம் நீறு எழ - வினையது மிகுதிக்கண் நீறுண்டாம் படி. என்றது, 'வினைவளம் தானே நீறும்படி' என்றவாறு. இனி, 'நீறாய் எழ' என ஆக்கம் வருவித்து, "எழ" என்றதற்கு, 'நீங்க' என்று உரைப்பினும் அமையும். நீறணிந்த கோலம் நெஞ்சம் பிணிக்கும் எழிலுடைமையான், அக்கோலம் தொழுதெழுவார் உள்ளத்து நீங்காது நிற்கும். அதனால், அவர் உள்ளத்தைப் பற்றிநிற்கும் வினை நீறும் என்க.

4. இடத்துய்த்து நீங்கல்

நரல்வே யினநின தோட்குடைந் துக்கநன் முத்தஞ்சிந்திப்
பரல்வேய் அறையுறைக் கும்பஞ் சடிப்பரன் தில்லையன்னாய்
வரல்வேய் தருவன்இங் கேநில்உங் கேசென்றுன் வார்குழற்கீர்ங்
குரல்வேய் அளிமுரல் கொங்கார் தடமலர் கொண்டுவந்தே. 119

"சிவனவன் திரள்தோள்மேல் - நீறுநின்றது கண்டனை யாயினும் நேக்கிலை" என்றதனால், (திருவாசகம் - 37.) சிவபெருமானது நீறணிந்த திருக்கோலம் நெஞ்சம் பிணிக்கும் எழிலுடைத்தாதல் அறிக. புனைதல் - அலங்கரித்தல். 'புனை கொம்பு, வளர் கொம்பு' எனத் தனித்தனி சென்று இயையும். "புனை கொம்பர் அன்னாய்" என்றது, இல்பொருள் உவமை. "மயில்" என்றது, அதன் ஆட்டத்தை. தினைவளங் காத்தல் முதலிய பலவற்றையும் எடுத்துக் கூறினமையின், ஆயத்தாருள் அவ்வத் தொழிற் குரியார், 'தலைவி பின்னர் வருவாள்' என்று முன்னர் அவ்வவற்றின்மேல் செல்ல, தோழியும், தலைவியும் தனித்து நின்றமையின், தோழி, 'யாம் மயிலாடுதலைக் காண்பேம்; வா' எனத் தலைவியைக் குறியிடத்துக் கொண்டு சென்றாள் என்க.

சிவபெருமான் நீறணியும் சிறப்பும், அவனைத் தொழுதெழுவார் வினை நீறுபடுதலும் கூறப்பட்டன.

119. இடத்துய்த்து நீங்கலாவது, தலைவியைக் குறியிடத்துக் கொண்டு சென்ற தோழி, 'யான் அவ்விடத்துச் சென்று நின் கூந்தற்குப் பூக்கொய்து வருவேன்; அவ்விடம் பரலுடைத்தாதலின், நீ இங்கே பூக்கொய்வாயாக' எனக் குறியிடத்து உய்த்து நீங்குதல். இதற்குக் கொளு :-

மடத்தகை மாதரை இடத்தகத் துய்த்து
நீங்க லுற்ற பாங்கி பகர்ந்தது.

'பரன் தில்லையன்னாய், உங்கே சென்று ஈர்ங்குரல்வேய் அளிமுரல் கொங்கு ஆர் தட மலர் கொண்டு வந்து உன் வார் குழற்கு வேய்தருவன்; முத்தம் சிந்திப் பரல் வேய் அறை பஞ்சடி உறைக்கும்; வரல்; இங்கே நில்' எனக் கூட்டுக.

5. உவந்துரைத்தல்

படமா சுணப்பள்ளி இக்குவ டாக்கிஅப் பங்கயக்கண்
நெடுமால் எனஎன்னை நீநினைந் தோநெஞ்சத் தாமரையே
இடமா இருக்கலுற் றேதில்லை நின்றவன் ஈர்ங்கயிலை
வடமார் முலைமட வாய்வந்து வைகிற்றிவ் வார்பொழிற்கே. 120

நரல் வேய் இனம் - உராய்ந்து ஒலிக்கின்ற மூங்கிலின் கூட்டம். சிந்தி - சிந்துதலால். பரல் வேய் அறை - பரல் மூடிய பாறை. உறைக்கும் - உறுத்தும். 'தில்லையன்னாய்" என்றதனால், 'எமக்குப் பெறற்கரியாய்' என்றாள். 'வாரல்' என்பது குறுகின்றது. வேய்தருவன் - சூட்டுவன். ஈர்ங் குரல் வேய் அளி - குளிர்ந்த பூங்கொத்தினை மூடிய வண்டுகள். கொங்கு ஆர் தடமலர் - மகரந்தம் நிறைந்த பெரிய பூக்கள் தோழி இங்ஙனம் ஒன்று சொல்லித் தலைவியைக் குறியிடத்து நிறுத்தி நீங்கினாள் என்க.

சிவபெருமானது தலம் பெறுதற்கரிய தலமாதல் கூறப் பட்டது.

120. உவந்துரைத்தலாவது, தலைமகளைத் தோழி குறி யிடத்து உய்த்து நீங்கத் தலைமகன் சென்று அவளை எதிர்ப்பட்டு மகிழ்ந்து கூறுதல். இதற்குக் கொளு :-

களிமயிற் சாயலை யொருசிறைக் கண்ட
ஒளிமலர்த் தாரோன் உவந்துரைத்தது.

"தில்லை நின்றவன்" என்றது முதலாகத் தொடங்கி யுரைக்க. 'இக்குவடு மாசுணப் பள்ளியாக்கி' எனக் கூட்டுக. குவடு - மலை. "ஆக்கி" என்றது, 'ஆக நினைத்து' என்ற வாறு. 'என் நெஞ்சத் தாமரை' என்க. 'கயிலைப் பொழில்' என இயையும். வைகிற்று - தங்கியது. "பொழிற்கு" என்ற தனை, 'பொழிற்கண்' எனத் திரிக்க. 'மடவாய் நீ கயிலைப் பொழிற்கண் வைகிற்று, நினைந்தோ, இருக்கலுற்றோ' என வினை முடிக்க. தலைவியைத் திருமகள் என்பான், 'தன்னைத் திருமாலாக நினைந்தோ' என்றும், தன் நெஞ்சத்தை, 'தாமரை"

6. மருங்கணைதல்

தொத்தின் மலர்ப்பொழில் தில்லைத்தொல் லோனருள் [என்னமுன்னி
முத்தின் குவளைமென் காந்தளின் மூடித்தன் ஏரளப்பாள்
ஒத்தீர்ங் கொடியின் ஒதுங்குகின் றுள்மருங் குல்நெருங்கப்
பித்தீர் பணைமுலை காள்என்னுக் கின்னும் பெருக்கின்றதே. 121

என்றும் கூறினன். "நெஞ்சத் தாமரையே இடமா இருக்க லுற்றோ" என்றதனுல், தலைவியைத்தான் மறவாமை கூறினன்.

சிவபெருமானது கயிலை மலையை 'ஈர்ங்கயிலை' எனக் கூறிய முகத்தால், அதனை அடைந்தார் பேரின்பம் எய்துதல் கூறப் பட்டது.

121. மருங்கணைதலாவது, தலைமகன் உவந்துரைப்பக் கேட்ட தலைமகள், நாணத்தால் கண்புதைத்து ஒரு கொடியின் பாங்கர் ஒதுங்கி நின்று வருந்த, அவளைச் சார்தல் கூடாமையின், அவள் முகம் நோக்கிக் கூறுது, வேறென்று சொல்லி அவளை அணைதல். இதற்குக் கொளு :-

வாணுதல் அரிவை நாணுதல் கண்ட
கோதை வேலவன் ஆதர வுரைத்தது.

தொத்து - கொத்து. 'மலர்த் தொத்து ஈன் பொழில்' எனற்பாலதனை இவ்வாறு ஓதினர். முன்னி - முன்வந்து நின்று. "முத்து ஈன் குவளை" என்றது, அற்புத உருவகமாய், நீர்த் துளிகளைச் சிந்தும் கண்களைக் குறித்தது. காந்தள், கை. "தன் ஏர் அளப்பாள் ஒத்து" என்றது, 'கொடியின் அழகோடு தன் அழகை ஒப்பு நோக்கி அளப்பாள் போன்று' என்றவாறு. கொடியின் - கொடியினிடத்து. நெருங்க - தாக்குண்ண. 'பணைமுலைகாள், இன்னும் பெருக்கின்றது என்னுக்கு? பித்தீர்' எனக் கூட்டுக. பெருத்தால் நுமக்கே ஏதாமாம் என்பதனை அறிகின்றிலீர் என்பாள், "பித்தீர்" என்முள். பித்தீர் - நீவிர் பித்துடையீரே. 'ஈன்கொடி, ஈன்பணைமுலை என்பனவும் பாடம்' என்பர் பேராசிரியர். 'இங்ஙனம் கூறி அவள் இடை யைத் தாங்குவான்போன்று அணைவான்' என்க.

7. பாங்கியறி வுரைத்தல்

அளிநீ டளகத்தின் அட்டிய தாதும் அணியணியும்
ஒளிநீள் சுரிகுழற் சூழ்ந்தஒண் மாலையும் தண்நறவுண்
களிநீ யெனச்செய் தவன்கடற் றில்லையன் னாய்கலங்கல்
தெளிநீ யனையபொன் னேபன்னு கோலந் திருநுதலே. 122

8. உண்மகிழ்ந் துரைத்தல்

செழுநீர் மதிக்கண்ணி சிற்றம் பலவன் திருக்கழலே
கெழுநீர் மையிற்சென்று கிண்கிணி வாய்க்கொள்ளுங் கள்ளகத்த
கழுநீர் மலர்இவள்; யான்அதன் கண்மரு விப்பிரியாக்
கொழுநீர் நறப்பருகும்பெரு நீர்மை யளிகுலமே. 123

---

122. பாங்கியறிவுரைத்தலாவது, தலைமகன் தலைமகளை அணைந்து மகிழ்ந்த பின்னர், அவளது அணியும், மணியும் முதலாயினவற்றை முன்போலத் திருத்திக் கோலம் செய்து, 'இது, முன் நினக்கு நின் தோழி செய்த கோலமே; கவலற்க' எனக் கூறுமுகத்தான், தான் பாங்கியைக் கண்டமை கூறி, அவள் இவ்வொழுக்கத்தினை அறிந்தமை கூறுதல். இதற்குக் கொளு :-

நெறிகுழற் பாங்கி — அறிவறி வித்தது.

'தண்ணறவுண்................அன்னாய்' என்றதனை முதலிற் கொள்க. நீடு - இடையறாது தங்குகின்ற. அட்டிய - இட்ட. தண் நறவு உண் களி நீ எனச் செய்தவன் - குளிர்ந்த மதுவை உண்ட களிமகன் நீ எனப் பிறர் சொல்லுமாறு என்னைக் களிப்படையச் செய்தவன். 'கலங்கல்; தெளி' என்றவற்றை, "கோலம்" என்றதன்பின்னர்க் கூட்டுக. நீ அனைய பொன் பன்னு கோலமே - உன்னையே ஒத்த உன் தோழி செய்த கோலமே; வேறன்று. ஏகாரத்தை இங்ஙனம் மாற்றியுரைக்க.

சிவபெருமான் தன் அன்பர்க்கு மிக்க களிப்பினை அருளுதல் கூறப்பட்டது.

123. உள்மகிழ்ந்துரைத்தலாவது, தலைவன் பாங்கியறிந்தமையைக் கூறக் கேட்ட தலைவி, 'இனி நமக்கு இடையூறொன்றில்லை' எனக் கொண்டு முகம் மலர்ந்து நிற்க, அம்மலர்ச்சி

9. ஆயத்துய்த்தல்

கொழுந்தா ரகைமுகை கொண்டலம் பாசடை விண்மடுவில்
எழுந்தார் மதிக்கம லம்மெழில் தந்தென இப்பிறப்பில்
அழுந்தா வகைஎனை ஆண்டவன் சிற்றம் பலமனையாய்
செழுந்தா தவிழ்பொழில் ஆயத்துச் சேர்க திருத்தகவே. 124

கண்டு தலைவன் தான் மனம் மகிழ்ந்து கூறுதல். இதற்குக் கொளு :-

தன்மலர்க் கோதையை — உன்மகிழ்ந் துரைத்தது.

"இவள்" என்பதனை முதலிற் கொள்க. 'செழுமையான நீரையும், மதியாகிய கண்ணியையும் உடைய சிற்றம்பலவன்' என்க. "நீர்" என்றதனை. 'நீர்மை' எனக் கொண்டு, மதிக்கு அடையாக்கியும் உரைப்பர் பேராசிரியர். "கழலே" என்ற ஏகாரம், பிரிநிலை. கெழுநீர்மையின் - பொருந்தும் தன்மையோடு. சென்று - முதிர்ந்து. தன்மையாவது, போதாய் இருத்தல். சிற்றம்பலவன் கழலைப் பொருந்தும் மலர் போதாய் இருத்தலே தக்கதாதல் அறிக. கிண்கிணிவாய்க் கொள்ளுதல் - மலர்தல். 'கொள்ளும் மலர்' என இயையும். கள் அகத்த - தேனை அகத்தே கொண்டுள்ள. 'பிரியா அளிகுலம்' என இயையும். 'நறு' என்பது, "நற" எனக் குறுகிச் செய்யுள் முடிபு ஏற்றது. நறு - தேன். பெருநீர்மை - பெருந்தன்மை: அது, கழுநீர்ப் பூவையன்றிப் பிற பூக்களை ஊதாமை. குலம் - சாதி. எனவே, 'குல அளி' என்பது. கருத்தாயிற்று. 'கழலே கெழுநீர்மையிற் சென்று கிண்கிணிவாய்க் கொள்ளும்' என்றதனால், 'என்னை அடைதற்குரிய விதியோடே வளர்ந்து பருவம் எய்தினாள்' எனவும், 'பெருநீர்மைக் குல அளி' என்றதனால், 'இவளிடத்தன்றிச் செல்லாத உள்ளமுடைய சிறப்பினேன்' எனவும் கூறியவாறும். இது தன்னைப் புகழ்ந்ததன்று; மகிழ்ந்துரைத்தது.

சிவபெருமான் கங்கையைத் தாங்கி உலகத்தைக் காத்தும், மதியைப் புனைந்து அதனைக் காத்தும் நின்றமை கூறிய முகத்தால் அவனது அருளுடைமையும், அவன் திருக்கழல் போதுகளைக் கொண்டு அருச்சிக்கத் தக்கன என்பதும் கூறப்பட்டன.

124 ஆயத்துய்த்தலாவது, 'நீ மலர்; யான் வண்டு' எனக் கூறிய முகத்தால், தமது பிரிவின்மை கூறித் தனது

பிரிவை ஒருவாற்றாற் புலப்படுத்திய தலைமகன், 'இனி நீ நின் ஆயத்துச் சேர்ந்து விளையாடுக' எனத் தலைமகளை ஆயத்துச் செலுத்துதல். இதற்குக் கொளு:-

கனைகட லன்ன கார்மயிற் கணத்துப்
புனைமட மானைப் புகவிட் டது.

" இப் பிறப்பில் ...... அனையாய்" என்றதனை முதற்கண் கூட்டுக. தாரகை முகை - விண்மீனாகிய அரும்புகளையும். கொண்டல் பாசடை - மேகமாகிய பசிய இலைகளையும் உடைய. அம், சாரியை. விண் மடுவில் - விசும்பாகிய மடுவின்கண். இஃது, " எழில் தங்கெதன " என்பதனோடு இயையும். " எழுந்து ஆர் மதி" என்றதனை, 'ஆர்ந்து எழு மதி' எனப் பின் முன்னாக்கி, இறுதிநிலை பிரித்துக் கூட்டியுரைக்க. ஆர்ந்து - கலைகள் நிரம்பி; இது சினைவினை முதல்மேல் நின்றவாறு. மதிக்கமலம் - திங்களாகிய வெண்டாமரை மலர். வெண்டாமரை முகையோடு தாரகைக்கு உள்ள பொதுத்தன்மையாகிய வெண்மை, வடிவு, பன்மை சிறுமை என்பவற்றுள் வெண்மையும், வடிவும் ஆயத்தார்க்கு இன்மையானும், கொண்டலோடு பாசடைக்கு உள்ள பொதுத்தன்மையாகிய கருமை, வடிவு என்னும் இரண்டனுள் வடிவு பொழிலுக்கு இன்மையானும், விண்ணோடு மடுவிற்கு உள்ள பொதுத்தன்மையாகிய பரப்பும், ஆழமும் என்னும் இரண்டனுள் ஆழம் பொழில் நின்ற இடத்திற்கு இன்மையானும், மதியோடு வெண்கமலத்திற்கு உள்ள பொதுத் தன்மையாகிய வெண்மை, வடிவு, பெருமை என்னும் மூன்றனுள் வெண்மையும், வடிவும் தலைவிக்கு இன்மையானும் இவை உவமைக்கு உவமை புணர்த்தன ஆகாமை அறிந்துகொள்க. இது, 'மரகதம் போலும் கிளிபோல்வாள் ஒருத்தி' என்றவழி, மரகதத்தோடு கிளிக்குள்ள பொதுத்தன்மை, ஒருத்திக்கு இன்மையின் உவமைக்குவமையாகாமை போல்வது என்க.

இப்பிறப்பு - எடுத்த பிறப்பு. இதில் அழுந்துதல், உலகியலின்மூழ்கி நிற்றல். திருத்தக - பொலிவு தகுதிபெற. 'திருத்தகச் சேர்க' என்க.

சிவபெருமான் தன் அடியவரை, எடுத்த பிறப்பிலே சீவன் முத்தராம் வண்ணம் செய்தல் கூறப்பட்டது.

10. தோழிவந்து கூடல்

பொன்னனை யான்தில்லைப் பொங்கர வம்புன் சடைமிடைந்த
மின்னனை யான்அருள் மேவலர் போல்மெல் விரல்வருந்த
மென்னனை யாய்மறி யேபறி யேல்வெறி யார்மலர்கள்
இன்னன யான்கொணர்ந் தேனமணந் தாழ்குழற் கேய்வனவே

---

125. தோழிவந்து கூடலாவது, தலைமகன் பிரிந்து சென்ற பின் தலைவி அவனது பிரிவாற்றுமையால் வருத்தமும், அவன் செய்த கோலத்தால் நாணமும் உடையாளாய் நெஞ்சு தடுமாறி மொட்டுக்களைப் பறித்துக்கொண்டு நிற்க, அவ்விடத்துத் தோழிவந்து கூடுதல். இதற்குக் கொளு ;-

நெறியுறு குழலியை நின்றிடத் துய்த்துப்
பிறைநுதற் பாங்கி பெயர்ந்தவட் குரைத்தது.

"பொன் அனையான்" என்றது, பொன் எல்லாவற்றையும் தருதல் போல, போகம், மோக்கம் இரண்டையுந் தருபவன் என்றதாம், பொங்கு அரவம் - சீற்றத்தையுடைய பாம்பு. இஃது, இன அடை. மிடைந்த - மிடையக் கொண்ட. இதற்கு வேறுரைப்பர் பேராசிரியர். மெல் நனை - மெல்லிய மொட்டுக்கள். ஆய் மறியே - மெலிந்த மான்போன்றவளே. பறியேல் - கொய்யாதே. 'யான் குழற்கு ஏய்வன வெறியார்மலர் இன்னன கொணர்ந்தேன்; ஆதலின், மெல்நனை பறியேல்' என்க. "ஆய் மறியே", என்றது, முதலியவற்ருல், 'நின் தடுமாற்றம் யான் அறிவேன்' என்று தோழி உடம்பாடு கூறினுள். 'என்னனையாய் கொணர்ந்தேன் என்பதும் பாடம்' என்பர் பேராசிரியர்.

சிவபெருமான் எல்லாவற்றையும் தருபவனுதல் கூறப்பட்டது.

11. ஆடிடம் புகுதல்

அறுகால் நிறைமலர் ஐம்பால் நிறையணிந் தேன் அணியார்
துறுகான் மலர்த்தொத் துத் தோகைதொல் லாயமெல் லப்புகுக
சிறுகால் மருங்குல் வருந்தா வகைமிக என்சிரத்தின்
உறுகால் பிறர்க்கரி யோன்புலி யூரன்ன ஒண்ணுதலே, 126

12. தனிகண் டுரைத்தல்

தழங்கும் அருவிஎம் சீறூர் பெரும இது ; மதுவும்
கிழங்கும் அருந்தி இருந்தெம்மொ டின்று கிளர்ந்துகுன்றர்
முழங்குங் குரவை இரவிற்கண் டேகுக, முத்தன்முத்தி
வழங்கும் பிரான்எரி யாடிதென் றில்லை மணிநகர்க்கே. 127

---

126. ஆடிடம் புகுதலாவது, தோழி தான் கொய்து வந்த மலரைத் தலைவி கூந்தலில் அணிந்து அவளைக்கொண்டு ஆயத்தார் ஆடுமிடத்துப் புகுதல். இதற்குக் கொளு :-

தலிவினை யாடிய தாழ்குழற் றோழி
பனிமதி நுதலியோ டாடிடம் படர்ந்தது.

'தோகை, என்சிரத்தின் உறுகால் பிறர்க்கு மிக அரியோன் புலியூரன்ன ஒண்ணுதலே, அணியார் துறு கான் மலர்த் தொத்து, அறுகால் நிறைமலர் ஐம்பால் நிறைய அணிந்தேன்; சிறுகால் மருங்குல் வருந்தா வகை தொல் ஆயம் மெல்லப் புகுக' எனக் கூட்டுக.

ஐம்பால் - கூந்தல். அவ்விடத்து, 'நிறைய' என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. துறு - நெருங்கிய. கான் - வாசனை. சிறுகால் - சிறிய இடமாகிய. "கால் அரியோன்" எனச் சினைவினை முதல்மேல் நின்றது.

சிவபெருமானது திருவடி அவன் அடியவர் சென்னியில் நீங்காது நிற்பினும், பிறர்க்கு மிகவும் அரியனவாதல் கூறப் பட்டது.

127. தனிகண்டுரைத்தலாவது, தோழி, தலைமகளை ஆயத்தாரிடைப் புகுவித்தபின், தலைமகனைத் தனியிடத்திற்

13. பருவங்கூறி வரவுவிலக்கல்

தள்ளி மணிசந்தம் உந்தித் தறுகட் கரிமருப்புத்
தெள்ளி நறவந் திசைதிசை பாயும் மலைச்சிலம்பா,
வெள்ளி மலையன்ன மால்விடை யோன்புலி யூர்விளங்கும்
வள்ளி மருங்குல் வருந்துவ போன்ற வனமுலையே. 128

கண்டு, வரைவு தோன்ற, 'பெருமானே, நீ இன்று எம் இல்லில் விருந்தாய்த்தங்கி, நாளை நின்னூர்க்குச் செல்க' எனக் கூறுதல். இதற்குக் கொளு :-

வேயொத்த தோளியை ஆயந் துய்த்துக்
குவிகிலை யன்னலைந் தவிகன் டுரைத்தது.

"பெரும" என்றதனை முதலிற் கொள்க. 'இன்று எம்மொடு இருந்து' எனவும், 'குன்றர் கிளர்ந்து' எனவும், 'ம்ணி நகர்க்கு ஏகுக' எனவும் கூட்டுக.

தழங்கும் - ஒலிக்கின்ற. முத்தன் - இயல்பாகவே பாசங்களின்றி இருப்பவன். முத்தி வழங்கும் பிரான் - அதனால், இயல்பாகவே பாசங்களிற் கட்டுண்டு நிற்பார்க்கு அவற்றினின்றும் வீடு பெறுதலை வழங்கும் தலைவன். "வழங்கும் பிரான்" என்றதனால், 'கைம்மாறு கருதாது அளிப்பவன்' என்பதும், அதனால், 'அவனே முதல்வன்' என்பதும் பெறப்பட்டன. எரி ஆடி - தீயின்கண் நின்று ஆடுபவன். இஃது ஊழிக் காலத்து எங்கும் திப்பரந்து நிற்க, அதனிடை அவன் ஆடுதலைக் குறித்தது. குறிக்கவே, அவன் எல்லாவற்றையும் ஒடுக்கித் தான் ஒடுங்காது நின்று, மீளவும் உலகைத் தோற்றுவித்தற்கு முயறல் பெறப்பட்டது. 'இன்று எம்மொடு இருந்து ஏகுக' என்றதனால், 'இவள் நின்னைப் பிரிந்து ஆற்றகிலாள்' எனக் கூறி, வரைவு கடாயினாள். வரைவு கடாதலாவது, மணவினை பற்றி அறிவித்தல்.

சிவபெருமானது அனாதி முத்தத் தன்மை, பேரருள் உடைமை, முடிவிலாற்றல் உடைமை கூறப்பட்டன.

128. பருவங் கூறி வரவு விலக்கலாவது, விருந்தெதிர் கொள்வாள்போலக் கூறித் தலைவனை வரைவு கடாய தோழி,

14. வரைவுடம்படாது மிகுத்துக்கூறல்

மாடஞ்செய் பொன்னக ரும்நிக ரில்லை இம் மாதர்க்கென்னப்
பீடஞ்செய் தாமரை யோன்பெற்ற பிள்ளையை. உள்ளலரைக்
கீடஞ்செய் தென்பிறப் புக்கெடத் தில்லைநின் றோன்கயிலைக்
கூடஞ்செய் சாரற் கொடிச்சியென் றேநின்று கூறுவதே. 129

'நின் கூட்டத்தால் இவள் பருவ நலம் மிகாநின்றது; அதனால் இனி அலராகும்; ஆதலின், இனி இவ்வாறொழுகாது வரைவொடு வருவாயாக' எனக் கூறுதல். வரைவொடு வருதல் - மணவினைக்குரிய நிலைமையொடு வருதல். இதற்குக் கொளு ;-

மாந்தளிர் மேனியை வரைந்தெய்தா
தேந்தல் இவ்வா றியங்கல் என்றது.

'மணி தள்ளி' என மாற்றுக. நறவம் - தேன். ''சிலம்பன்' என்றது, வாளா பெயராய் நின்றது. 'வெள்ளி மலையன்ன மால்விடை' என்றது, அறத்தின் சிறப்புக் கூறியவாறும். 'புலியூர்போல விளங்கும் வள்ளி' என்க. 'வள்ளி' எனினும், 'கொடி' எனினும் ஒக்கும் ஆதலால், ''வள்ளி'' என்றது, 'கொடிச்சி' எனப் பொருள் தந்தது. வனம் - அழகு. 'ஆதலின், இனி வரைவொடு வா' என்பது குறிப்பெச்சம்.

'வண்டுகள் மறைய வைத்த தேன், மணியும், சந்தனக் கட்டையும், யானை மருப்பும் ஆகியவற்றைச் சிதறிப் பலதிசைகளினும் பலருங்காணப் பரந்தொழுகும் நாடன்' என்றதனால், 'நுமது களவொழுக்கம், யானும், தலைவியும், நீயும் மறைக்கும் மறைப்புக்களையெல்லாம் கடந்து, எவ்விடத்தும், யாவரும் அறிய அலராம்படி பண்ணும் இயல்பினைபோலும்' என இறைச்சிப் பொருள் தோற்றியவாறு அறிக.

சிவபெருமான், அறத்தினை நடத்துவோனாதல் கூறப்பட்டது.

129. வரைவுடம்படாது மிகுத்துக் கூறலாவது, தோழி, தலைமகளது பருவங்கூறிக் குறிப்பால் வரைவு கடாவக் கேட்ட தலைமகன், 'நின் தோழியை ஏனைக் கொடிச்சியரோடு ஒப்ப

15. உண்மைகூறி வரைவுகடாதல்

வேய்தந்த வெண்முத்தஞ் சிந்துபைங் கார்வரை மீன்பரப்பிச்
சேய்தந்த வானகம் மானுஞ் சிலம்ப, தன் சேவடிக்கே
ஆய்தந்த அன்புதந் தாட்கொண்ட அம்பல வன்மலையில்
தாய்தந்தை கானவர்; ஏனல்எம் காவல்இத் தாழ்வரையே 130

வைத்து யான் எளிதில் வரைந்து கொள்ளத் தக்கவளாகக் கூறியது என்னையோ' என, வரைவுடம்படாது, தலைவியை மிகுத்துக் கூறுதல். இதற்குக் கொளு ;-

வரைவு கடாய வாணுதல் தோழிக்கு
விரைமலர்த் தாரோன் மிகுத்துரைத்தது.

மாடம் செய் - மேல் மாடங்களை யுடைய மாளிகைகளால் செய்யப்பட்டு விளங்குகின்ற. 'பல மாடமாளிகைகளால் ஆய பொன்நகர்' என்றபடி. பொன் நகர் - இந்திரனது அமராவதி. 'பொன்நகர்க் கண்ணும்' என உருபு விரிக்க. என்ன - என்று சொல்லும்படி. பீடம் செய் - ஆசனமாகக் கொண்ட, பெற்ற - படைத்த. 'பிறரொருவரும் ஒப்பாகாதவாறு படைத்தல் வேண்டும் எனக் கருதிப் படைத்த' என்றபடி. உள்ளலர் - தன்னை நினையாதவர். கீடம் - புழு. 'கீடமாக' என, ஆக்கம் வருவிக்க. 'கயிலைச் சாரல்' என இயையும். கூடம் செய் - மரச் செறிவால், கூடம் செய்தாற்போல உள்ள. கொடிச்சி - கொடிச்சியருள் உள்ளாள் ஒருத்தி. "என்றோ" என்னும் ஓகாரம் எதிர்மறை. நின்று - என் முன் நின்று. 'இங்ஙனம் கூறுதல் ஆகாது' என்பது எதிர்மறை எச்சம்.

சிவபெருமான் தன்னை நினையாதவரைப் புழுப் பிறப்பினராகச் செய்து, நினைபவரைத் தேவரினும் உயர்ந்த முத்தராகச் செய்தல் கூறப்பட்டது. திருநாவுக்கரசு நாயனாரும், "திருநாகேச் சரத்துளானைச் சேராதார் நன்னெறிக்கட் சேராதாரே", "திருவீழி மிழலையானைச் சேராதார் தீநெறிக்கே சேர்கின்றாரே" எனவும், "கீழ்வேளூர் ஆளும் கோவைக் கேடிலியை நாடுமவர் கேடி லாரே" எனவும் அருளிச் செய்தல் காண்க (திருமுறை - 6. திருப்பதிகம் - 66, 50, 67.).

130. உண்மை கூறி வரைவு கடாதலாவது, வரைவுடம்படாது தலைமகளை மிகுத்துக் கூறிய தலைமகனுக்குத் தோழி

'நீ வரைவு வேண்டாமைக்கு எம்மை மிகுத்துரைத்தல் வேண்டா; எம் தாய் தந்தையர் கானவரே; யாமும் புனம் காக்கும் சிலரே' என உண்மை கூறி வரைவு கடாதல். இதற்குக் கொளு:-

கல்வரை நாடன் இல்ல துரைப்ப
ஆங்கவள் உண்மை பாங்கி பகர்ந்தது.

வேய் - மூங்கில். பசுமை, புதர்களாலாயது. கார் வரை - கரிய தாழ்வரை; பாறை. மீன், விண்மீன். வானகம் மீன் பரத்தற்கிடமாதல் பற்றி, அதனை மீனைப் பரப்புவதாக அருளிச் செய்தார். சேய் தந்த - சேய்மையைக் காட்டி நின்ற. ஆய் தந்த அன்பு - திருவடியின் இயல்பை ஆராய்ந்தமையால் உளதாம் அன்பு. 'தாய்தந்தை அம்பலவன் மலையிற் கானவர்' எனவும், 'எம் காவல், இத் தாழ்வரை ஏனல்' எனவும் கூட்டுக. "உயர்திணை மருங்கின் உம்மைத் தொகையே - பலர் சொல் நடைத்தென மொழிமனார் புலவர்" (தொல். சொல். 421) என்புழி, 'உயர்திணை மருங்கின் உம்மைத் தொகையே' எனப் பிரித்து வாங்கி ஓதினமையின், விரவுப் பெயர் உயர்திணைக்கண் வருமிடத்துப் பலர்சொல் நடைத் தாகாது நின்றாங்கு நின்று பலரறி சொல்லொடு முடிதலும் அமைதல் பெறுதுமாகலின், "தாய் தந்தை கானவர்" என நின்றாங்கு நின்று, பலரறிசொல்லொடு முடிந்தது. 'சாத்தன், கொற்றன்' என்றாற்போலும் னகரவீற்றுப் பெயர்கள் உயர் திணைப் பெயராய் நின்று அஃறிணைக்கட் சென்று விரவுதலின் அவை, உம்மைத் தொகைக்கண் பலர் சொல் நடையவாயன்றி நில்லா என்க. 'எம் காவல் இத்தாழ்வரை ஏனல்' என்றது, 'எமக்குத் தொழில் இத் தாழ்வரையிடத்து ஏனல் காப்பது' என்றபடி. 'ஆதலின் நீ புனைந்துரைத்தல் வேண்டா' என்பது குறிப்பெச்சம்.

'கீழாற் கிடக்கும் பாறையை மேலால் விளங்கும் வானகம் போலக் காட்டும் நாடனாதலின், கானவராகிய எம்மை வானவர் போலக் கூறுவாயாயினை' என இறைச்சிப் பொருள் தோற்றிய வாறு அறிக.

சிவபெருமான் தன்னை நினைவார்க்குத் தன்னையே விரும்பி நிற்கும் அன்பினைத் தந்தருளுதல் கூறப்பட்டது.

16. வருத்தங்கூறி வரைவுகடாதல்

மன்னுந் திருவருந் தும்வரை யாவிடின்; நீர்வரைவென்
றுன்னும் அதற்குத் தளர்ந்தொளி வாடுதிர்; உம்பரெல்லாம்
பன்னும் புகழ்ப்பர மன்பரஞ் சோதிசிற் றம்பலத்தான்
பொன்னங் கழல்வழுத் தார்புல னென்னப் புலம்புவனே. 131

---

131. வருத்தங் கூறி வரைவு கடாதலாவது, உண்மை யுரைத்து வரைவு கடாவவும் தலைவன் வரைவுடம்படாதது கண்டு, 'வரைவு நேராமை கருதி அவள் வருந்துகின்றாள்; வரைவு என்றால் நீவிர் வருந்துகின்றீர்; நும் இருவரிடைப்பட்டு யான் வருந்துகின்றேன்' எனத் தோழி, தலைமகனுக்குத் தன் வருத்தம் கூறி வரைவு கடாதல். இதற்குக் கொளு :-

களங்குழை முகந்தவள் மனங்குழை வுணர்த்தி
நிரைவளைத் தோழி வரைவு கடாயது.

'வரையாவிடின் திரு வருந்தும்' என மாற்றுக. "மன்னும்" என்றதற்கு, 'எம்மிடத்து மன்னும்' என உரைத்து, 'வரையாது இங்ஙனம் மன்னுதற்கு உரியளல்லாத திரு' என்பது அதனாற் குறிக்கப்பட்ட பொருளாகக் கொள்க. பன்னும் - துதிக்கின்ற. பரமன் - மேலானவன். பரஞ் சோதி - எல்லாப் பொருட்கும் அப்பால் உள்ள ஒளி. 'இவ்வாறுயினும் அருளால் ஈண்டு நிற்கின்றான்' என்றற்கு, "சிற்றம்பலத்தான்" என்றாள். புலன் - அறிவு. வழுத்தாதார் அறிவு ஒரு துணையைப் பெறாது வருந்தும் என்க. வழுத்தார் என்ன என்னாது, 'புலன் என்ன' என்றாள், 'செய்வதறியாது புலம்புகின்றேன்' என்றற்கு. 'யான் புலம்புவன்' என்பது சொன்று எழுவாய் வருவிக்க. உள்ளன கூறுவாள் போன்று. தலைமகளது ஆற்றாமை கூறி வரைவு கடாயினாள்,

சிவபெருமானை வழுத்தாதவர் துணையின்றித் துயர் உறுதல் கூறப்பட்டது.

17. தாய்அச்சங் கூறி வரைவுகடாதல்

பனித்துண்டஞ் சூடும் படர்சடை அம்பலஃவன்,உலகந்
தனித்துண் டவன்தொழுந் தாளோன் கயிலைப் பயில்சிலம்பா,
கனித்தொண்டை வாய்ச்சி கதிர்முலைப் பாரிப்புக் கண்டழிவுற்
றினிக்கண் டிலம்பற்றுச் சிற்றிடைக் கென்றஞ்சும் எம்மனையே.

---

132. தாய் அச்சம் கூறி வரைவு கடாதலாவது, வருத்தம் கூறி வரைவு கடாவவும் தலைமகன் வரைவுடம்படாமை கண்டு, 'இவள் பருவ முதிர்வு பற்றித் தாய் அஞ்சாநின்றாள்; அதனால் இனி மகட்பேச வருவார்க்கு மறுது கொடுக்கவும் கூடும்' எனத் தோழி, தாய் அஞ்சுதல் கூறி வரைவு கடாதல். இதற்குக் கொளு ;-

மடத்தகை மாதர்க் கடுப்பன அறியா
வேற்கண் பாங்கி ஏற்க வுரைத்தது.

பனி - குளிர்ச்சி. ''துண்டம்'' என்றது, பிறையை. தனித்து - தான் ஒருவனுமே எஞ்சி நின்று. உலக முழுவதையும் உண்டோன்; திருமால். ''அவன் தொழும் தாளோன்'' என்றதனால், அவனையும் தன் அடிக்கீழ் ஒடுக்குவோனாதல் பெறப் பட்டது. 'சிலம்பன்' என்பது, 'தலைவன்' என்னும் பொருட் டாய் நின்றது. பாரிப்பு - பருத்தல். 'எம் அன்னை அழிவுற்று சிற்றிடைக்கு இனிப் பற்றுக் கண்டிலம் என்று அஞ்சும்' எனக் கூட்டி, 'இனி நிகழ்வது அறியேம்' என்னும் குறிப்பெச்சம் வருவித்து முடிக்க.

அழிவுற்று - நெஞ்சழிந்து. 'இவள் சிற்றிடைக்குப் பற்றுக் கண்டிலம்' என உரைக்க.

பிறைக்கு முடியையும், மாயோனுக்கு அடியையும் கொடுத்தமை கூறிய முகத்தால், சிவபெருமான், வலியோரினும், மெலியோர்க்கு மிக அருளுதல் கூறப்பட்டது.

18. இற்சேறி வறிவித்து வரைவுகடாதல்

ஈவிளை யாட நறவிளை வோர்ந்தெமர் மால்பியற்றும்
வேய்விளை யாடும்வெற் பாஉற்று நோக்கிஎம் மெல்லியலைப்
போய்விளை யாடல்என் றாள்அன்னை அம்பலத் தான்புரத்தில்
தீவிளை யாடநின் றேவிளை யாடி திருமலைக்கே. 133

---

133. இற்செறிவு அறிவித்து வரைவு கடாதலாவது, தாயச்சங் கூறி வரைவு கடாவவும் தலைமகன் வரைவுடம் படாமை கண்டு, தோழி, 'இனி எம்மைத் தாய் இற்செறிப்பாள் போலும்' எனக் கூறி வரைவு கடாதல். இதற்குக் கொளு :-

விற்செறி நுதலியை — இற்செறி வுரைத்தது.

ஈ விளையாட - தேனிக்கள் பறந்து விளையாடுதலால். நற விளைவு ஓர்ந்து - தேன் விளைந்தமையை ஆராய்ந்தறிந்து. மால்பு- கண்ணேணி. அஃதாவது மூங்கிற் புதரிடத்துத் தக்கதொரு மூங்கிலைக் கணுக்களில் கால்வைத்து ஏறுதற்குரியதாகச் செய் யப்படுவது. 'இயற்றும் வெற்பு' என இயையும். 'அன்னை எம் மெல்லியலை உற்று நோக்கித் திருமலைக்குப் போய் விளை யாடல் என்றாள்' என்க. புரம், முப்புரம். ஏ விளையாடி - அம்புகொண்டு விளையாடுபவன். 'இனி எம்மை இற்செறிப் பாள் போலும்' என்பது குறிப்பெச்சம்.

'ஈ விளையாடக் கானவர் நற விளைவு ஓர்ந்து மால்பு இயற் றுதல்போல, அன்னை இவள் வேறுபாட்டால் இவளது உள்ளத் துள்ள காமத்தை உணர்ந்து, மேற்செய்வன ஆராய்கின்றாள்' என உள்ளுறை யுவமம் கொள்க. "எமர் மால்பியற்றும் வெற்பா" என்றதனால், இவர் அந்நிலத்து மக்களாதலும், அவன் அந்நிலத்துத் தலைவனாதலும் குறித்தவாறு அறிக.

"ஏ விளையாடி" என்றதனால், சிவபெருமான் எல்லாவற் றையும் தனக்கு விளையாட்டாகக் கொண்டு எளிதிற் செய்தல் கூறப்பட்டது.

19. தமர்நினை வுரைத்து வரைவு கடாதல்

சுற்றுஞ் சடைக்கற்றைச் சிற்றம் பலவற் றொழாது,தொல்சீர்
கற்றும் அறியல ரிற்சிலம் பா,இடை நைவதுகண்
டெற்றுந் திரைஇன் னமிர்தை இளித்தமர் இற்செறிப்பார்
மற்றுஞ் சிலபல சீறூர் பகர்பெரு வார்த்தைகளே. 134

20. எதிர்கோள்கூறி வரைவுகடாதல்

வழியும் அது ;அன்னை யென்னின் மகிழும் ;வந் தெந்தையும்நின்
மொழியின் வழிநிற்கும் ; சுற்றமுன் னேவயம் ; அம்பலத்துக்
குழியும்ப ரேத்துமெம் கூத்தன்குற் றாலம்முற் றும்மறியக்
கெழியும்ம வேபணைத் தோள் ;பல என்னோ கிளக்கின்றதே. 135

---

134. தமர் நினைவுரைத்து வரைவு கடாதலாவது, தாய் இற்செறித்தல் அறிவித்து வரைவு கடாவவும் தலைவன் வரைவுடம் படாதது கண்டு, தோழி, தமரும் அங்ஙனம் நினைதல் கூறி வரைவு கடாதல். இதற்குக் கொளு :-

விற்செறி நுதலியை இற்செறி விப்பரென்
றொளிவே லவற்கு வெளியே யுரைத்தது.

'சுற்றும் கற்றை' என இயையும். தொழாது - முற்பிறப்பில் தொழாமையால். 'இப்பிறப்பில் பல நூல்களைக் கற்றும் அவன் சீர் அறியலர்' என்க. எற்றுந் திரை - கடல் ; அடையடுத்த ஆகுபெயர். இன்னமிர்தை - இனிய அமிழ்தம் போல்வாளை. மற்று, வினைமாற்று. உம்மை, இறந்தது தழுவிய எச்சம். 'சில பல' என்பது, 'பத்தெட்டு' என்றல் போலத் துணிவின்மை பற்றிய வழக்கு. இதனை இறுதிக்கண் கூட்டி, 'உள' என்னும் சொல்லெச்சம் வருவித்து முடிக்க.

சிவபெருமானது பெருமையை உணர்தல், முன்னைத் தவமுடையோர்க்கன்றி ஆகாமை கூறப்பட்டது.

135. எதிர்கோள் கூறி வரைவு கடாதலாவது, தோழி தமர் நினைவு கூறி வரைவு கடாயவழித் தலைமகன், 'யான் வரைவொடு வரின் நுமர் எதிர்வார் கொல்லோ' என்னும் குறிப்பினனாக, அவனுக்கு, 'அவள் அவர் எதிர் கொள்வர்' எனக் கூறி வரைவு கடாதல். இதற்குக் கொளு :-

21. ஏறுகோள் கூறி வரைவு கடாதல்

படையார் கருங்கண்ணி வண்ணப் பயோதரப் பாரமும்,நுண்
இடையார் மெலிவும்கண் டண்டர்கள் ஈர்முல்லை வேலிஎம்மூர்
விடையார் மருப்புத் திருத்திவிட் டார் ;வியன் தென்புலியூர்
உடையார் கடவி வருவது போலும் உருவினதே. 136

ஏந்திழைத் தோழி ஏந்தலை முன்னிக்
கடியா மாறு நொடிகென்றது

வழியும் அது - உபாயமே யன்றி முறைமையும் வரைவு வேண்டுதலே. 'அதுவே' என்னும் பிரிநிலை ஏகாரம் தொகுத்தலாயிற்று. என்னின் - என்னைப்போல. 'எந்தையும் வந்து' என மாற்றுக. "வந்து" என்றது, 'உலகியல் பற்றி முன்னர் மறுத்துப் போயினேனும், பின்னர் நின் தகுதி நோக்கி வந்து' என்றதாம். முன்னே - முன்னரே. வயம் - நின்வயமாயிற்று. இதற்குக்காரணம், இவர் ஒழுக்கத்தைக் குறிப்பான் அறிந்தமை யாம். 'ஆகவே, பல கிளக்கின்றது என்? பணைத்தோள் உம்மவே; ஐயுற வேண்டா' என்க. 'குழீஇ' என்பதும், 'கெழீஇய' என்பதும் திரிந்து நின்றன. 'முற்றும் அறிய உம்மவே' என இயையும். "உம்ம" என்றதில் மகர ஒற்று விரித்தல். துணிவு பற்றி, 'ஆம்' என்னாது, "உம்மவே" என்றொழிந்தாள்.

சிவபெருமான் தேவர் பலரும் திரண்டு ஏத்தும் முதல்வன் என்பது கூறப்பட்டது,

136. ஏறுகோள் கூறி வரைவு கடாதலாவது, எதிர்கோள் கூறி வரைவு கடாவவும் தலைவன் வரைவுடன்படாமை கண்டு, தோழி, 'எம் ஐயன்மார் எம் ஊர்க்கண் போர்க்காளையின் கொம்புகளைக் கூர்மைபெறச் சிவிப் புறத்தே வெருட்டி விட்டார்; இனி என்னுமோ! அறியேன்' என, 'அதனைப் பிடித்து அடக்கினாற்கு இவளைத் தருவர்' என்பது தோன்றக் கூறி வரைவு கடாதல். இதற்குக் கொளு :-

என்னை யர்துணி — வின்ன தென்றது.

ஏறு தழுவினாற்கு மகளைக் கொடுத்தல் என்பது முல்லை நிலத்துள்ள ஆயரது மரபு. அஃதாவது, முல்லைநிலத்து ஆயர்

களில் ஓர் இல்லிற் பெண் பிறந்தால், அவளைப் பெற்றவர், தம் தொழுவில் அன்று பிறந்த சேக்கன்றுகளை எல்லாம் அவற்றின் தாய்ப் பசுவிடத்துத் தாம் பால் கறவாது அக்கன்றுகளே முற்ற உண்ணுமாறு அவற்றைத் தம் தாயோடே விட்டு நன்கு வலுப் பெற்று வளரச் செய்து, அப்பெண் பருவமடைந்த பொழுது, வளர்ந்துள்ள அக் காளைகளைக் கொம்பு சீவி வெருட்டி விட்டு, அவற்றைப் பிடித்து அடக்கிக் கொணர்ந்தவனுக்கு அவளைத் தருதலாம். ஆகவே, இத் திருப்பாட்டு முல்லைத் திணையாய் நிற்றலானும், மேல் வந்த திருப்பாட்டுக்கள் குறிஞ்சித் திணைய வாதலானும், இதனை அவற்றோடு இயைய அருளிச்செய்தா ரல்லர். மற்று, 'மேல்வந்த துறைகள் முல்லைத் திணையாக வருதலும் உண்டு; அவ்வாறு வரின் இத் திணை கூறற்பாற்று' என்பதுபற்றி அருளிச்செய்தார் என்க. அங்ஙனமாயின், பிற திணைகளைக் கூறுதவாறு என்னை எனின், அவற்றுள் இது போலும் சிறந்தெடுத்துக் கூறுவதொரு மரபின்மையின், அது கடாவன்று என்க.

படை - வேல். ஆர், உவம உருபு. பயோதரம் - தனம். இடையை, "இடையார்" என உயர்திணையாகக் கூறியது, இழிவு பற்றி. இழிவாவது, தன்னால் இயல்வது செய்யப்புகாமல், இயலாத பயோதரப் பாரத்தைத் தாங்கப் புக்கது. அண்டர் கள் - ஆயர்கள். முல்லை வேலி - முல்லையாகிய வேலியையுடைய. 'எம் ஊர்க்கண்' என உருபு விரிக்க. விடையை, "விடையார்". என்றது, உயர்வுபற்றி. மருப்பு - கொம்பு. திருத்துதல் - சீவுதல்' "விட்டார்" என்றதன்பின், 'அது' என்னும் தோன்ரு எழு வாய் வருவிக்க. கடவி - செலுத்தி.

'புலியூர் உடையார் கடவி வரும் விடையைப் பிறர் தழுவ மாட்டாமை போல, இதனையும் பிறர் யாரும் தழுவமாட்டார்; நீ அவர் அருளைப்பெற்றுள்ளாய் ஆதலின் அது நினக்கு வயமாம்' என்பாள், "தென் புலியூர் உடையார் கடவி வருவதுபோலும் உருவினது" என்றாள். இதற்குப் பேராசிரியர், பொருவிறந்த தலைவற்கு இழிவு தோன்றக் கருத்துரைத்தார். 'எம் தமர் இது தழுவுவார் இல்லை என வருந்திப் பிறிதொன்று நினைவ தற்குமுன் சென்று தழுவி வரைவாயாக' என்பது குறிப் பெச்சம்

சிவபெருமானது ஊர்தியினது ஆற்றல் கூறப்பட்டது

22. அயல்உரை யுரைத்து வரைவு கடாதல்

உருப்பனை அன்னகைக் குன்றென் றுரித்துர வூரெரித்த
நெருப்பனை யம்பலத் தாதியை உம்பர்சென் றேத்திநிற்குந்
திருப்பனை யூரனை யானைப்பொன் னானைப் புனைதல்செப்பிப்
பொருப்பனை முன்நின்றென் னேவினை யேன்யான் புகல்வதுவே.

---

137. அயல் உரை உரைத்து வரைவு கடாதலாவது' தோழி, 'அயலவர் எம் தலைவிக்கு நானை பொன் புனைவான் வந்திருக்கின்றார்; நினக்கு யான் என் சொல்லுவேன்' எனக் கூறி வரைவு கடாதல். இதற்குக் கொளு :-

கயல்புரை கண்ணியை — அயலுரை யுரைத்தது.

அயல் உரை - அயலார் உரைத்த உரை; 'அது பொன் புனைவோம்' என்றது.

உரு - வடிவம். கைக் குன்று - யானை. உரவு - வலிமை. நெருப்பன்-நெருப்பையுடையவன். 'எரித்தநெருப்பு' என்றானும், 'கையில் எந்திய நெருப்பு' என்றானும் கொள்க. திருப்பனையூர். சிவதலங்களுள் ஒன்று. பொன் புனைதல் - பொன்னணி பூணுவித்தல். இது, மகட்பேசவந்தார். இருமுதுகுரவர் மகளுடம் பட்ட பின்னர் அம்மகட்குச்செய்வது. எனவே, இதனால் தோழி, அயலவர் வரைதல் கூறினாளாம். "செப்பி" என்றதன்பின், 'பின்' என்பது வருவிக்க. "பொருப்பனை" என்ற ஐகாரம், முன்னிலைப் பொருட்டு. சாரியை எனின், படர்க்கைச்சொல் முன்னிலைக்கண் வந்ததாம். உருபாகக்கொண்டு, 'பொருப்பனை என் புகல்வது' என இயைத்து, அவ்வாறு உரைப்பர் பேராசிரியர். இனி, அவர் இதனை, 'சிறைப்புறமாகக் கொள்ளுதல் சிறப்பு' என்பர். அங்ஙனங்கொள்ளின், தலைவன் கேட்பத் தோழி தன் நெஞ்சொடு சொல்லியதாகல் வேண்டும். அன்றி, "திருப்பனையூரனை யானை" என்பது, படர்க்கைச் சொல் முன்னிலைக்கண் வந்ததாகல் வேண்டும். முன்னைத் திருப்பாட்டு இடைநிலையாய் வேறு நிற்ப, இத் திருப்பாட்டு அதற்கு முன் உள்ள திருப்பாட்டோடு இயைந்தது என்க.

சிவபெருமானது தலத்தின் சிறப்புக் கூறப்பட்டது.

23. தினைமுதிர் வுரைத்து வரைவு கடாதல்

மாதிடங் கொண்டம் பலத்துநின் றோன்வட வான்கயிலைப்
போதிடங் கொண்டபொன் வேங்கை தினைப்புனங் கொய்கவென்று
தாதிடங் கொண்டுபொன் வீசித்தன் கள்வாய் சொரியநின்று
சோதிடங் கொண்டிதெம் மைக்கெடு வித்தது தூமொழியே. 138

---

138. தினைமுதிர் வுரைத்து வரைவு கடாதலாவது, தோழி அயலுரை உரைத்து வரைவு கடாவ, தலைவன், 'தினை முதிராமையான் இது வரையுங் காலம் அன்றாதலின், அயலார் பொன்புனைதலை விரைந்து செய்யார்' என நினைந்து செல்ல, மற்றைநாள் தோழி தினைமுதிர்ந்தமை கூறி வரைவு கடாதல். இதற்குக் கொளு :-

ஏனல் விளையாட் டினியில் லையென
மானற் றோழி மடந்தைக் குரைத்தது.

'மாது இடம் கொண்டு' எனப் பிரிக்க. போது - மலை. பொன் - பொன்போலும் பூவை உடைய. வேங்கை - வேங்கை மரம். தாது இடம் கொண்டு - மகரந்தத்தைத் தன்னிடத்தே கொண்டு. பொன் - மலராகிய பொன். கள் - தேன். வாய்- இடமெங்கும். "சொரிய" என்பது, 'ஒழுக' என்னும் பொருட்டாய் நின்றது. இனி, 'இரும்பு முதலிய தாதுக்களை விடாது கொண்டு, பொன்னைப் புறத்து வீசித் தான் உண்ட கள்ளைத் தான் வாய் சொரிய நிற்கும் மது மயக்கத்துடனே சோதிடம் கூறுதலை மேற்கொண்டது' எனச் சிலேடை வகையால் வேங்கை மரத்தை இழித்துரைத்தாள் என்க. வேங்கை பூப்பின், தினையை அறுக்கும் காலமாம் என்பது அறிக. 'இஃது' என்னும் ஆய்தம் தொகுத்தலாயிற்று. இது, தலைவன் சிறைப் புறமாகத் தோழி தலைவிக்கு உரைத்தது.

மாதினை இடங்கொண்டு அம்பலத்து நின்றது, தன் எல்லையில் தனிப்பெருங் கூத்தின் வரும் பேரின்ப வெள்ளத்தினை நேரே பெறமாட்டாத உயிர்கட்கு அவள் பெற்று வழங்குதற் பொருட்டாதலின், சிவபெருமான் தனது அருளின் வழியே ஆனந்தத்தினை வழங்குதல் கூறப்பட்டதாம்.

24. பகல்வரல் விலக்கி வரைவு கடாதல்

வடிவார் வயற்றில்லை யோன்மல யத்துநின் றும்வருதேன்
கடிவார் களிவண்டு நின்றலர் தூற்றப் பெருங்கணியார்
நொடிவார் நமக்கினி நோதக; யானுமக் கென்னுரைக்கேன் !
தடிவார் தினைஎமர்; காவேம் பெருமஇத் தண்புனமே. 139

---

139. பகல் வரவு விலக்கி வரைவு கடாதலாவது, தலைவன் சிறைப்புறமாகத் தினைமுதிர்வுரைத்து வரைவு கடாய தோழி, பின் அவனை எதிர்ப்பட்டு நின்று, 'எமர் இனித் தினையைக் கொய்வர் ; ஆதலின் எமக்குத் தினைப்புனங் காவல் இல்லை; இனி நீவிர் பகல் வரல் வேண்டா' என விலக்கி வரைவு கடாதல். இதற்குக் கொளு :–

அகல்வரை நாடனைப் — பகல்வரல் என்றது.

வடிவு - அழகு. 'தில்லையோன் மலயத்து நின்றும், பெருங் கணியார் நோதக நொடிவார்' என்றதனால், மலயத்து வாழ் வார் பிறர்க்குத் துன்பம் செய்யாமை பெறப்பட்டது. "பிறந்த தெங்கள் பிரான்மல யத்திடை ....மறம்ப யின்றதெங் கோதமிழ் மாருதம்" எனத் திருத்தொண்டர் புராணத்துள்ளும் கூறப்பட்டது. (தடுத் - 167.). இனிக் கணி செய்வது துன்பமாய்த் தோன்றினும், பின் வரைந்தெய்தி இல்லறம் நிகழ்த்துதற்கு ஏதுவாகலின், அதுவும் நன்றேயாதல் அறிக. வரு தேன் - நறுமணத்தைத் தேடிவரும் 'தேன்' என்னும் வண்டு. கடி - விளக்கம் பொருந்திய, வார் - நீண்ட ஒழுங்கினையுடைய. 'தேனும் வண்டும் அலர்தூற்ற' என்க. "அலர் தூற்ற" என்றது, 'மலரைச் சிந்த' எனவும், 'புறங் கூற' எனவும் இருபொருள் தருதலானும், "பெருங்கணியார்" என்றது, 'நெடிய வேங்கை மரம்' எனவும், 'பெரியசோதிடர்' எனவும் இருபொருள் தருதலானும் இவை சிலேடை. தேனும், வண்டும் புறங்கூறலாவது, 'வேங்கை, தன்னோடு பயின்றுரைக் கண்ணோடாது வருத்துகின்றது' என்றலாம். நொடிவார் - காலம் சொல்லுவார். 'இனி நமக்கு நோதக நொடிவார்' எனக் கூட்டுக. நோதக - வருத்தம் பொருந்த. இச் சிலேடைப் பொருளானே, 'நின் களவொழுக்கம் அறிந்து

25. தினையோடு வெறுத்து வரைவு கடாதல்

நினைவித்துத் தன்னைஎன் நெஞ்சத் திருந்தம் பலத்துநின்று
புனைவித்த ஈசன் பொதியின் மலைப்பொருப் பன்விருப்பில்
தினைவித்திக் காத்துச் சிறந்துநின் றேமுக்குச் சென்றுசென்று
வினைவித்திக் காத்து விளைவுண்ட தாகி விளைந்ததுவே. 140

அயலார் பெருங்கணிகளைப் பழிக்க, அவர்கள் பிறர் வரைவுக்கு நாள் சொல்ல, இவையெல்லாம் விளையச் செய்கின்றாய்' என்பதும் கூறினாளாம். தலைவனது ஆற்றாமைக்குத் தான் ஆற்றாளாய், இடைக்கண், 'யான் நுமக்கு என் உரைக்கேன்' என்றாள். இறுதிக்கண் 'இனி நீ பகல் வரல் வேண்டா' என்னும் குறிப்பெச்சம் வருவிக்க.

மலயத்து வாழ்வார் சிறப்புக் கூறிய முகத்தால், சிவபெருமானை அடைந்தோர் பிறர்க்கு இன்னா செய்யாமையும், செய்யின், அது செய்யப்பட்டாரது நன்மை கருதியாதலும் கூறப்பட்டன.

140, தினையொடு வெறுத்து வரைவு கடாதலாவது, தலைவனைப் பகல் வரல் விலக்கி வரைவு கடாய தோழி, பின், முதிர்ந்து விளைந்த தினையொடு வெறுத்து வரைவு கடாதல். இதற்குக் கொளு :-

தன்புனத் தோடு தளர்வுற்றுப்
பண்புனைமொழிப் பாங்கி பகர்ந்தது.

தன்னை நினைவித்து - யாதானும் ஒருவகையால் முன்னர்த் தன்னை நினையப் பண்ணி. நெஞ்சத்து இருந்து - பின்னர் அந் நினைவே பற்றுக்கோடாக என் நெஞ்சத்து நீங்காது நின்று. புனைவித்த - என்னைத் தன்னையே புகழுமாறு செய்வித்த. 'பொதியில் மலைக்கண் உள்ள பொருப்பன்' என்க, பொருப்பன் விருப்பு - பொருப்பனிடத்து வைத்த விருப்பம். விருப்பின் - விருப்பத்தால். தமர் வித்திய தினையைக் காத்தற்குத் தாம் உடம்பட்டதனை, தாம் வித்திக் காத்தவாறாக உரைத்தாள். "சென்று சென்று" என்றதனை இருமருங்கும் இயைத்து, முன்னர், 'பலகாற் சென்று' எனவும், பின்னர், 'பல பிறப்புக்

௨௯. வேங்கையோடு வெறுத்து வரைவு கடாதல்

கனைகடற் செய்தநஞ் சுண்டுகண் டார்க்கம் பலத்தமிழ்தாய்
வினைகெடச் செய்தவன் விண்தோய் கயிலை மயிலனையாய்,
நனைகெடச் செய்தன மாயின் நமைக்கெடச் செய்திடுவான்
தினைகெடச் செய்திடு மாறுமுண் டோஇத் திருக்கணியே. 141

களிற் சென்று' எனவும் உரைக்க. விளைவு - அவ்வினையின் பயன். உண்டது - நுகர்ந்தது, விளைந்தது - முடிந்தது. இது, தலைவன் சிறைப்புறமாகத் தோழி தலைவிக்குச் சொல்லியது.

சிவபெருமான் தன் திருவருட்கு உரியவரை ஆட்கொள்ளு மாறு கூறப்பட்டது.

141. வேங்கையொடு வெறுத்து வரைவு கடாதலாவது, தலைவன் சிறைப்புறமாகத் தினையொடு வெறுத்து வரைவு கடாய தோழி, பின் அவ்வாற்றால், வேங்கை மரத்தொடு வெறுத்து வரைவு கடாதல். இதற்குக் கொளு :-

நீங்குக இவி நெடுந்த கையென
வேங்கைமேல் வைத்து விளம்பியது.

கனை கடல் - ஒலிக்கும் கடற்கண். செய்த - தேவர் உண்டாக்கிய. அமிழ்தாய் - இன்பப் பொருளாய். "கண்டார்க்கு" என்றதனால், உண்டார்க்கு இன்பம் தரும் அமிழ்தத்திற் சிறந்தமை பெறப்பட்டது. "கண்டார்க்கு அமிழ்தாய்" என்றதனால், தில்லை, காண முத்திதரும் தலமாதலும் பெற்றாம். நனை - அரும்பு. 'அவற்றை அரும்பிய ஞான்றே கெடச் செய்தோமாயின், இத் திருக்கணி நம்மைக் கெடச் செய்திடுவான் தினைகெடச் செய்திடுமாறும் உண்டோ' என்க. 'அழகிய வேங்கைமரம்' எனப் பொருள் தருவதாய, 'திருக்கணி' என்பது, சிலேடை வகையால், சோதிடங் கூறும் சாதிக்கண் பிறந்து அத் தொழிலையே செய்வான் ஒருவனைக் குறித்து நின்றது.

தில்லைப் பெருமான் தன்னைக் கண்டு தொழுவார்க்குப் பேரின்பம் அளித்தல கூறப்பட்டது.

27. இரக்கமுற்று வரைவு கடாதல்

வழுவா இயல்எம் மலையர் விதைப்பமற் றியாம்வளர்த்த
கொழுவார் தினையின் குழாங்களெல் லாம்,எம் குழாம்வணங்கும்
செழுவார் கழற்றில்லைச் சிற்றம் பலவரைச் சென்றுநின்று
தொழுவார் வினைநிற்கி லேநிற்ப தாவதித் தொல்புனத்தே. 142

28 கோய்தமை கூறி வரைவு கடாதல்

பொருப்பர்க் கியாமொன்று மாட்டேம் புகலப்; புகல்எமக்காம்
விருப்பர்க், கியாவர்க்கு மேலர்க்கு, மேல்வரும் ஊர்எரித்த
நெருப்பர்க்கு, நீடம் பலவருக் கன்பர் குலம்நிலத்துக்
கருப்பற்று விட்டெனக் கொய்தற்ற தின்றிக் கடிப்புனமே. 143

---

142. இரக்கமுற்று வரைவு கடாதலாவது, தலைவன் சிறைப்புறமாக, வேங்கையொடு வெறுத்து வரைவு கடாய தோழி, அவ்வாற்றால், இனித் தினை கொய்யப்படும் எனக் கூறி, அதற்கு இரக்கமுற்று வரைவு கடாதல். இதற்குக் கொளு:-

செழுமலை நாடற்குக் — கழுமலுற் றிரங்கியது.

'வழுவா இயல் மலையர்' என்க. வழுவா இயல்பு, தினையை விதைக்குங் காலத்தும், அதனைக் கொய்யும் காலத்தும் அவற்றை வழுவாது செய்யும் தன்மை. வார் - நெடிய. 'குழாங்களெல்லாம் நிற்பதாவது' என இயையும். "எம்" என்றது, அடியார் பலரையும் உளப்படுத்து. "நிற்பது" என்றது தொழிற்பெயர். 'தினையின் குழாங்களெல்லாம் இனி நிற்றல் உளதாவது, தொழுவார் வினைநிற்கிலே' என முடிக்க. இதனால், 'இனித் தினை நில்லாமை ஒருதலை' என்றாள்.

தில்லைப் பெருமானைத் தொழுவாரது வினை நில்லாதொழிதல் ஒருதலையாதல் கூறப்பட்டது.

143. கொய்தமை கூறி வரைவு கடாதலாவது, தலைவன் சிறைப்புறமாக, இரக்கமுற்று வரைவு கடாய தோழி, அவ்வாற்றால், தினை கொய்தமை கூறி வரைவு கடாதல். இதற்குக் கொளு:-

29. பிரிவருமை கூறி வரைவு கடாதல்

பரிவுசெய் தாண்டம் பலத்துப் பயில்வோன் பரங்குன்றின்வாய்
அருவிசெய் தாழ்புனத் தைவனங் கொய்யவும் இவ்வனத்தே
பிரிவுசெய் தால்அரி தேகொள்க பேயோடும் என்னும்பெற்றி
இருவிசெய் தாளின் இருந்தின்று காட்டும் இளங்கிளியே. 144

நீடிரும் புனத்தினி ஆடேம் என்று
வரைவு தோன்ற உரைசெய்தது.

"பொருப்பர்க்கு யாம் ஒன்றும் மாட்டேம் புகல" என்றதனை இறுதிக்கண் கூட்டுக. 'புகல மாட்டேம்' என மாற்றிக் கொள்ளப்படும். 'எமக்குப் புகல் ஆம் விருப்பர்' என்க. 'எமக்குப் புகலாதல், தம் விருப்பத்தால் அல்லது, எம் குணத்தால் அன்று' என்றதாம். மேல் வரும் - விண்ணில் எழுந்து வருகின்ற. 'அன்பர் குலம் விட்டென' இயையும். நிலத்துக் கருப்பற்று - நிலத்துப் பிறக்கும் பிறவிக்குக் காரணமான பற்றுக்கள். கொய்து - கொய்யப்பட்டு. அற்றது - தீர்ந்தது. கடிப்புனம் - காவலையுடைய புனம். 'புனம் கொய்தற்றது' என, இடத்து நிகழ் பொருளின் தொழில் இடத்தின்மேல் நின்றது. இதனை எதிர்ப்பட்டுக் கூறியவாறாக உரைப்பர் பேராசிரியர்.

அம்பலவரது பெருமைகளும், அவர்க்கு அன்பராயினர் பற்றற்றவராதலும் கூறப்பட்டன.

144. பிரிவருமை கூறி வரைவு கடாதலாவது, தலைவன் சிறைப்புறமாக, கொய்தமை கூறி வரைவு கடாய தோழி, அவ்வாற்றால், 'புனம் கொய்தற்ற பின்னும் கிளிகள் இதனை நீங்குகின்றில; அவ்வாறே நாம் போயபின்னும் நம் காதலர் இவ்விடத்தே வந்து நம்மைத் தேடுவார் கொல்' எனத் தாம் அங்கு நின்றும் பிரிதற்கு அருமை கூறி வரைவு கடாதல். இதற்குக் கொளு :-

மறைப்புறக் கிளவியிற் — சிறைப்புறத் துரைத்தது.

பரிவு செய்து - கருணை செய்து. 'எம்மை ஆண்டு' என்க. அருவி செய் தாழ் புனம் - அருவியால் வளம் செய்யப்பட்ட

30. மயிலோடு கூறி வரைவுகடாதல்

கணியார் கருத்தின்று முற்றிற் ; றியாஞ்சென்றும்; கார்ப்புனமே,
மணியார் பொழில்காள், மறத்திர்கண் டீர் ;மன்னும்]
[அம்பலத்தோன்
அணியார் கயிலை மயில்காள், அயில்வேல் ஒருவர்வந்தால்
துணியா தனதுணிந் தார்என்னும் நீர்மைகள் சொல்லுமினே.

தாழ்வரையிடத்துப் புனம். 'ஐவனம்' என்பது மலை நெல்லா யினும், இங்கு அதனோடொத்த தினையைக் குறித்தது. இருவி - தினை கொய்யப்பட்டபின் நிற்கும் தாளடி. இருவி செய் தாள் - இருவியாகச் செய்யப்பட்ட தாள். 'ஐவனம் கொய்யவும், இளங்கிளி, இவ்வனத்தே இருவிசெய் தாளின் இருந்து, பேயொடும் செய்தால் பிரிவு அரிதே கொள்க என்னும் பெற்றி இன்று காட்டும்' எனக் கூட்டுக. செய்தால் - நட்புச் செய் தால். 'பேயொடும் பிரிவு செய்தால், அஃது அரிதே' எனலு மாம். கொள்க - இதனை உள்ளத்துக் கொள்க. "பேயோ டேனும் பிரிவான் றின்னாது" என்றார் சுந்தரமூர்த்தி நாயனா ரும் (திருமுறை - 7 - 95 - 9). இவ்வாறு கூறியதனால், 'நம் காதலரும் நம்மைப் பிரியலாற்றாதவராய் நாம் போயபின்னும் இங்கு வந்து வருந்துவர்போலும்' என்றாள் என்க.

சிவபெருமான் தன் திருவருட்குரியாரைத் தானே சென்று ஆட்கொள்ளுதல் கூறப்பட்டது.

145. மயிலொடு கூறி வரைவு கடாதலாவது, தலைவன் சிறைப்புறமாகப் பிரிவருமை கூறி வரைவு கடாய தோழி, அவ்வாற்றால், தாம் புனத்தினின்றும் போதலை மயலொடு கூறி வரைவு கடாதல். இதற்குச் செய்யுள் :-

நீங்கரும் புனம்விடு நீள்பெருந் துயரம்
பாங்கி பகர்ந்து பருவரல் உற்றது.

"கார்ப் புனமே, மணியார் பொழில்காள்" என்றவற்றை முதலிற் கொள்க. சென்றும் - செல்வோம். மறத்திர் - நீவிர் கணியாரொடு பயின்றிராதலின், எம்மை மறப்பீர். கண்டீர், முன்னிலை யசை. கயிலை மயில்காள் - கயிலையினின்றும் வந்த

31. வறும்புனங் கண்டு வருந்தல்

பொதுவிற் றிருநடம் ஆடும்பிரான் ...

பொதுவிற் றீர்த்தென்னை யாண்டோன் புலியூர் அரன்பொருப்பே
இதுவெனில் என்னின் றிருக்கின்ற வாறெம் இரும்பொழிலே
எதுநுமக் கெய்திய? தென்னுற் றனிர்?அறை ஈண்டருவி
மதுவினிற் கைப்புவைத் தாலொத்த வாமற்றிவ் வான்புனமே.

மயில்களே. 'கயிலையினுள்ளிராகலின் நீவிர் கண்ணோட்டம் உடையீர்' என்பது கருத்து. "அயில்வேல் ஒருவர்" என்றது. 'பிறர் துணையின்றி வேலே துணையாக வருபவர்' என்றதாம். துணியாதன - அன்புடையார் செய்யத் துணியாதவை. அவை, பிரிதலும், பிரிந்து ஆற்றி இருத்தலுமாம். 'துணியாதன துணிந்தார் எனச் சொல்லுமின்' என்றதற்குப் பயன், தலைவன் ஆற்றுதலும், வரைவொடு புகுதலுமாம். புனமும், பொழிலும் மறக்கும் எனக் கூறிப் பின் மயிலை நோக்கி, "சொல்லுமின்" என்றாள் என்க.

மயில்களது கண்ணோட்டம் கூறிய முகத்தால், சிவ பெருமான் அங்கணனாதல் கூறப்பட்டது.

146. வறும்புனங் கண்டு வருந்தலாவது, தலைமகளும், தோழியும் புனத்தினின்றும் போயபின்னர்த் தலைமகன் அவ் விடத்துச் சென்று அதன் வறுமை கண்டு வருந்தல். இதற்குக் கொளு :-

மென்புனம் விடுத்து மெல்லியல் செல்ல
மின்போலி வேலோன் மெலிவுற்றது.

"இது" என்றதனை முதலிற் கொள்க. 'சிறப்பென்னும் செம்பொருள்" (குறள் - 358,) என்றாற்போல, வீட்டினைச் சிறப்பென்ப ஆகலான்,'பொது' என்பது கட்டாம். எல்லாப் பேற்றினும் சிறத்தல் பற்றி வீடு சிறப்பெனப்படுதலின், சிறப் பின்றிப் பலர்க்கும் உளதாகும் கட்டு, 'பொது' எனப்படுதல் பொருந்துவதேயாதல் அறிக. 'வழியறியாது பொதுமையின் நிற்கும் நிலைமை' என்ற பேராசிரியர்க்கும் இதுவே கருத் தென்க. 'இன்று இருக்கின்றவாறு என்' என்க. 'பொலிவு நீங்காதது நீங்கியது என்னோ' என்றான். எது - என்ன திங்கு.

32. பதிநோக்கி வருந்தல்

ஆனந்த மாக்கடல் ஆடுசிற் றம்பலம் அன்னபொன்னின்
தேனுந்து மாமலைச் சீறூர் இது ;செய்ய லாவதில்லை ;
வானுந்து மாமதி வேண்டி அழுமழப் போலும் மன்னே
நானுந் தளர்ந்தனன் ; நீயுந் தளர்ந்தனை நன்னெஞ்சமே. 147

என் - எத்தன்மைத்தாய துன்பம். அறை ஈண்டு அருவி - ஒலிக்கின்ற நிறைந்த அருவிகளே. 'இவ் வான்புனம் மதுவினிற் கைப்பு வைத்தல் ஒத்தவா என்' என்க. அருவிகள் புனத்தை வளப்படுத்துவனவாகலின், 'நீவிர் உள்ளபொழுதும் இப்புனம் வளம் இன்றி இருந்தவாறு என்' என்றான். மதுவினிற் கைப்பு வைத்தால் ஒத்தலாவது, மதுவுளதாக அதன்கண் இனிமையை நீக்கிக் கைப்பை வைத்தாற்போல, புனம் உளதாக அதன்கண் இனியார் இன்றி இன்னாத மரங்கள் இருத்தலாம். மற்று, அசைநிலை.

சிவபெருமான் கட்டுநீக்கி மெய்யுணர்வைத் தருபவனாதல் கூறப்பட்டது.

147. பதிநோக்கி வருந்தலாவது, வறும்புனங் கண்டு வருந்திய தலைவன், பின் ஆங்கு அணித்தே தலைவியது ஊர் தோன்றக் கண்டு வருந்துதல். இதற்குக் கொளு:-

மதிநுத லரிவை பதிபுகல் அரிதென
மதிநனி கலங்கிப் பதிமிக வாடியது.

ஆனந்த மாக்கடல், இறைவன். பொன், தலைவி; உருவகம். 'பொன்னின் சீறூர்' என்க. 'தேன் உந்து ஊர், மாமலை ஊர்' எனத் தனித்தனி இயைக்க. இது - இத்துணை அணித்து. 'ஆயினும் நம்மாற் செய்யலாவது இல்லை' என்க. 'மழப் போலும் நன்னெஞ்சமே, நீயும் தளர்ந்தனை; நானும் தளர்ந்தனன்' என்க. வான் உந்து மாமதி வேண்டிய அழும மழப் போல எய்துதற்கரியதனை அவாவினமையால் நியும் தளர்ந்தனை; உன் வழி நின்ற நானும் அதனால் தளர்வெய்தினேன்' என்றபடி.

சிவபெருமான், ஆனந்த மாக்கடலாதல் கூறப்பட்டது.

14. இரவுக் குறி

[இரவுக் குறியாவது, பகற்காலத்துத் தோழி குறித்த குறியிடத்துத் தலைமகளைக் கூடியும், பின் தோழியால் பகற்குறி விலக்கப்பட்டும் நின்ற தலைமகன் அதனோடே தெருண்டு வரைதல் சிறப்பு. தெருளானாயின், தலைவி புனங்காத்தலை விட்டு இற்செறிக்கப்பட்ட பின்னும் தோழியை இரவுக் குறி வேண்டி ஒழுகுவன், இதனை மூப்பத்துமூன்று துறைகளாக அடிகள் வகுத்தருளிச் செய்வர். அவற்றைக் கூறும் நூற்பா வருமாறு:-

1 இரவுக்குறி வேண்டல், 2 ஆற்றருமை கூறல்,
3 நின்றுநெஞ் சுடைதல், 4 நிலைகண்டு நேர்தல்,
5 உட்கொள வினுதல், 6 உட்கொண்டு வினுதல்,
7 குறியிடங் கூறல், 8 குறியேற் பித்தல்,
9 இரவுவர வுரைத்தல். 10 ஏதங் கூறல்,
11 குறைநேர் தலோடு, 12 குறைநயப் புரைத்தல்,
13 மயில்மேல் இசைத்து வரவுணர்ந் துரைத்தல்.
14 தாய்துயில் அறிதல், 15 தலைவிதுயில் எடுத்தல்,
16 இடத்துய்த்து நீங்கல், 17 தளர்வகன் றுரைத்தல்,
18 மருங்கணைத லோடு, 19 முகங்கண்டு மகிழ்தல்,
20 பள்ளியிடத் துய்த்தல், 21 பள்ளியிடத் துய்த்து
வரைவு கடாவி வரவு விலக்கல்,
22 வரைவுடம் படாஅ தாற்று துரைத்தல்,
23 அதரிடைச் செலவிற் கிரக்கங் கூறல்,
24 இருளற நிலவு வெளிப்பட வருந்தல்,
25 வேற்றுக் குறி கூறல், 26 கடலிடை வைத்துத்
துயரறி வித்தல், தோழியும் இன்றித்
தானே கிடந்து தனிமையுற ருற்றும்
27 காம மிக்க கழிபடர் கிளவி,
28 காப்புச்சிறை மிக்க கையறு கிளவி,
29 ஆறுபார்த் துற்ற அச்சக் கிளவி,
30 தன்னுட் கையா றெய்திடு கிளவி,
31 நிலைகண் டுரைத்தல், 32 நெடுங் கடற் சேர்த்தல்,
33 அலர்அறி வித்தலோ டாறைம் மூன்றும்
இரவுக் குறியிவை என்றிசி னோரே.]

1. இரவுக்குறி வேண்டல்

மருந்துநம் அல்லற் பிறவிப் பிணிக்கம் பலத்தமிர்தாய்
இருந்தனர் குன்றின்நின் றேங்கும் அருவிசென் றேர்திகழப்
பொருந்தின மேகம்;புதைந்திருள் தூங்கும் புனையிறும்பின்
விருந்தினன் யானுங்கள் சீறூ ரதனுக்கு வெள்வளையே. 148

2. வழியருமைகூறிமறுத்தல்

விசும்பினுக் கேணி நெறியன்ன சின்னெறி மேன்மழைதூங்
கசும்பினிற் றுன்னின் அளைநுழைந் தாலொக்கும்; ஐய,மெய்யே
இசும்பினிற் சிந்தைக்கு மேறற் கரிதெழில் அம்பலத்துப்
பசும்பனிக் கோடு மிலைந்தான் மலயத்தெம் வாழ்பதியே. 149

---

148. இரவுக்குறி வேண்டலாவது, பதி நோக்கி வருந்திய தலைவன், பின் ஆங்குச் சென்று மாலைக் காலத்தில் தோழியைக் கண்டு, 'இன்றைய இரவிற்கு யான் உங்கள் ஊர்க்கு விருந்தினனாயினேன்' என்று இரவுக்குறி வேண்டி நிற்றல். இதற்குக் கொளு:-

நள்ளிருட் குறியை வள்ளல் நினைந்து
விங்கு மென்முலைப் பாங்கிக் குரைத்தது.

"மருந்து" என்றதன்பின்னும், 'ஆய்' என்பது வருவிக்க. ஏங்கும் - ஒலிக்கின்ற. சென்று - பாய்ந்து. 'அருவி மிக்குப் பாய்ந்து ஏர்திகழும்படி மேகம் பொருந்தின' என்க. புதைந்து - அம்மேகத்தில் அழுந்தி. புனை இறும்பு - நன்கு ஆக்கப்பட்ட காடு. 'மேகம் பொருந்தின, இருள் தூங்கும்' என்பவற்றால் 'இனி யான் என் ஊர்க்குப் போதல் அரிது' என்பது கூறுவான் போலக் கூறினனாயினும், 'இரவுக் குறி இன்பந் தரும்' என்றும், 'குறியிடம் வாய்த்தல் எளிது' என்றும் கூறினான் என்க. 'அருவி ஏர் பெற மேகம் பொருந்தின' என்றதனால், 'யான் ஏர்பெற நின்னை யடைந்தேன்' என்றானும்.

சிவபெருமான், துன்பம் களைந்து, இன்பம் தருதல் கூறப்பட்டது.

149. வழியருமை கூறி மறுத்தலாவது தலைவன் இரவுக் குறி வேண்டியதற்குத் தோழி உடன்படாளாய், 'எம் ஊர்க்கு

3. நின்று நெஞ்சுடைதல்

மாற்றேன் எனவந்த காலனை ஓல மிடஅடர்த்த
கோற்றேன் குளிர்தில்லைக் கூத்தன் கொடுங்குன்றின் நீள்குடுமி
மேற்றேன் விரும்பு முடவனைப் போல மெலியும்நெஞ்சே
ஆற்றேன் அரிய அரிவைக்கு நீவைத்த அன்பினுக்கே. 150

வரும் வழி மிகக் கடுமையானது' எனக் கூறி மறுத்தல். இதற்குக் கொளு :-

இரவரல் ஏந்தல் கருதி யுரைப்பப்
பருவரற் பாங்கி அருமை யுரைத்தது.

சில் நெறி - 'சிலவாகிய வழிகள். 'சில்நெறிமேல் துன்னின்' என இயையும். அசும்பு - சிறுதுளி, 'துன்னி' என்பது பாடம் அன்று. அளை - சிறு புழை ; வளை. இசும்பு - வழுக்குதல். பசும் பனி - குளிர்ந்த பனியையுடைய. 'கோடு' என்றது வளைந்த பிறையை. 'பதி ஏறற்கு அரிது' என இயையும். 'ஆதலின், ஆங்கு வருதல் வேண்டா' என்பது குறிப்பெச்சம். 'சிந்தைக்கும் அரிது' என்றதனால், 'இவ்வொழுக்கத்தை எம் ஊர் சிறிது அறியுமாயின் நினைத்தற்கரிய துயரத்தைத் தரும் என்றாள்' என்க. 'பசும் பனிக்கோடு மிலைந்தான்' என்ற குறிப்பினால் சிவபெருமானது தண்ணளியும், என்றும் ஒரு பெற்றியனாய தன்மையும் கூறப்பட்டன.

150. நின்று நெஞ்சுடைதலாவது, தோழி வழியருமை கூறக் கேட்ட தலைமகன், தன் நெஞ்சொடு சொல்லி வருந்துதல். இதற்குக் கொளு :-

பாங்கி விலங்கப் பருவரை நாடன்
நீங்கி விலங்காது நெஞ்சுடைந்தது.

மாற்றேன் - எனது கொள்கையை நீக்கேன். இதற்கு, 'மாற்றப் படேன்' என்றும், 'மாறேன்' என்றும் உரைப்பர் பேராசிரியர். கோல் தேன் - கொம்புத் தேன் போல்பவன். கொடுங்குன்று, ஒரு மலைத் தலம். 'அதன் சிகரத்தின் மேல் உள்ள தேன்' என்க. அரிவைக்கு - அரிவையிடத்து. அன்பினுக்கு - அன்பினால், "ஆற்றேன்" என்றது, 'இனி இறந்துபடுவேன்' என்றவாறாம். இங்ஙனம் கூறியதற்குப் பயன், தோழி இரவுக்குறி நேர்தலாம்.

4. இரவுக்குறி நேர்தல்

கூளி நிரைக்கநின் றம்பலத் தாடி குரைகழற்கிழ்த்
தூளி நிரைத்த சுடர்முடி யோய்,இவள் தோள்நசையால்
ஆளி நிரைத்தட லானைகள் தேரும் இரவில்வந்து
மீளி உரைத்தி வினையேன் உரைப்பதென் மெல்லியற்கே. 151

சிவபெருமான் தன்னைச் சார்ந்தாரைக் காத்தலும், காலகாலனாதலும் கூறப்பட்டன. 'காலகாலன்' என்பது, காலத்துட் படாமையையே தெரிவிக்கும்.

151. இரவுக்குறி நேர்தலாவது, தலைமகன் நெஞ்சுடைந்து வருந்தக்கண்ட தோழி, 'இனி இவன் இறந்துபடவும் கூடும்' என நினைந்து, 'யாளிகள் யானைகளைத் தேடித் திரிகின்ற இராக்காலத்தில் வருவேன் என்கின்றாய்; இதற்குத் தீவினையேனாகிய யான் என் சொல்லுவேன்' என உடன்பாடு தோன்றக் கூறுதல். இதற்குக் கொளு :-

> தடவரை நாடன் தளர்வு தீர
> மடநடைப் பாங்கி வகுத்துரைத்தது.

கூளி - பேய். நிரைக்க - வரிசைப்பட்டு நிற்க. 'இவை நிற்றற்குக் காரணம் கூத்தில் உளதாகிய சுவை' என்பர் பேராசிரியர். "கீழ்" என்றது, 'கண்' என்னும் பொருளில் வந்தது. தூளி - துகள். 'ஆனைகளைத் தேரும்' என்க. தேர்தல் - தேடுதல். "மீளி" என்றது, தொழிற்பெயர். ஒன்றையும் துணியமாட்டாது வருந்துதல் தோன்ற, 'வினையேன்' என்றாள். 'உரைப்பது என்' என்றது, 'அவனை உடம்படுக என்பேனோ, வேண்டா என்பேனோ' என்றபடி. இதனால் உடன்பாடு தோன்றவே கூறினாள் என்க. "அம்பலத்தாடி குரைகழற் கீழ்த் தூளிநிரைத்த சுடர்முடியோய்" என்றதனால், 'நினக்கு ஏதம் வாராது' என்பது குறித்தாள் என்க.

சிவபெருமான் பேயோடாடுதலும், அவன் திருவடித் துகளே அடியார்களைக் காக்கவல்லதாதலும் கூறப்பட்டன. 'பேய்' என்பது முத்தர்களையும், சங்கார காலத்துக் கேவலத்தில் நிற்கின்ற உயிர்களையும் குறிக்கும்.

5. உட்கோள வினுதல்

வரையன் றொருகால் இருகால் வளைய நிமிர்த்துவட்கார்
நிரையன் றழலெழ எய்துநின் றோன்தில்லை யன்னநின்னூர்
விரையென்ன ? மென்னிழ லென்ன ? வெறியுறு தாதிவர்போ
துரையென்ன வோசிலம் பாநலம் பாவி யொளிர்வனவே. 152

---

152. உட்கொள வினுதலாவது, இரவுக்குறி நேர்ந்த தோழி, தலைவன் தம் ஊர்க்கு வருங்கால் இன்னகோலத்தோடு வருதல் வேண்டும் என்பதனை அறிந்துகொள்ளுதற் பொருட்டு, 'நின் ஊரில் உள்ளார் சூடும் மலர் முதலியன யாவை' என வினுவுதல். இதற்குக் கொளு :-

நெறிவிலக் குற்றவன் உறுதுயர் நோக்கி
ஆங்கொரு சூழல் பாங்கி பகர்ந்தது.

'அன்று ஒருகால் வரை இருகாலும் வளைய நிமிர்த்து' என்க. நிமிர்த்தது, தனது மார்பையும், தோளையும், எனவே 'வளைத்து' என்பது பொருளாயிற்று, வட்கார் - பகைவர் திரிபுரத்தவர். நிரை - படை. ஊர் - ஊர்க்கண் உள்ள. விரை - வாசனை. நிழல், விளையாடும் இடம். வெறி - வாசனை. தாது இவர் போது - மகரந்தம் பரந்த மலர். 'என்னவோ? உரை' என்க. பாவி - பரந்து. "நலம் பாவி ஒளிர்வன" என்றது, 'விரை, நிழல், போது' என்னும் அனைத்திற்கும் பொருந்தும். இங்ஙனம் இவள் வினுவியதால், அவன் இவளை, 'நும் ஊர்க்கண் பூசப்படும் வாசனை முதலியவை யாவை' என வினுவுவான் என்பது கருத்து.

மேருவை வில்லாக வளைத்த முறைமை கூறியமுகத்தால், சிவபெருமானது தன்வயமுடைமை கூறப்பட்டது.

6. உட்கோண்டு வினுதல்

செம்மலர் ஆயிரந் தூய்க்கரு மால்திருக் கண்ணணியும்
மொய்ம்மலர் ஈர்ங்கழல் அம்பலத் தோன்மன்னு தென்மலயத்
தெம்மலர் சூடிநின் ? றெச்சாந் தணிந் ?தென்ன நன்னிழல்வாய்
அம்மலர் வாட்கண்நல் லாய்,எல்லி வாய்நும ராடுவதே. 153

7. குறியிடங் கூறல்

பனைவளர் கைம்மாப் படாத்தம் பலத்தரன் பாதம்விண்ணோர்
புனைவளர் சாரற் பொதியில் மலைப்பொலி சந்தணிந்து
சுனைவளர் காவிகள் சூடிப்பைந் தோகை துயில்பயிலுஞ்
சினைவளர் வேங்கைகள் யாங்கள்நின் ருடுஞ் செழும்பொழிலே.

---

153. உட்கொண்டு வினுதலாவது, தோழி வினவிய குறிப்பைத் தலைவன் உட்கொண்டு, அவள் ஊரிலுள்ளார் செய்துகொள்ளும் கோலத்தோடே செல்லக் கருதி, 'நும் ஊரில் உள்ளார் சூடும் மலர் முதலியன யாவை' என வினவுதல், இதற்குக் கொளு :-

தன்னை வினவத் தானவள் குறிப்பறிந்
தென்னை நின்னுட் டியலணி யென்றது.

"பங்கயம் ஆயிரம் பூவினில்ஓர் பூக்குறையத்
தங்கண் இடந்தரன் சேவடிமேற் சாத்தலுமே
சங்கரன் எம்பிரான் சக்கரம்மாற் கருளியவா
றெங்கும் பரவிநாம் தோணோக்கம் ஆடாமோ"

என்ற திருவாசகத்தைக் காண்க (324). மொய்ம்மலர் - பெரிய மலர்போலும். "நுமர் ஆடுவது" என்றதனை, "எம்மலர் சூடிநின்று" என்றதற்கு முன்னே கூட்டுக. அம்மலர் - அழகிய மலர் போலும். வாள் - ஒளி.

சிவபெருமானைத் திருமால் வழிபட்டுச் சக்கரம் பெற்ற முறைமை கூறப்பட்டது.

154 குறியிடங் கூறலாவது, தனது குறிப்பை உட்கொண்டு வினவிய தலைவனுக்குத் தோழி, தாங்கள் அணியும் சாந்து முதலியவற்றைக் கூறி, விளையாடுமிடத்தையும் கூறு

8. இரவுக்குறி ஏற்பித்தல்

மலவன் குரம்பையை மாற்றிஅம் மால்முதல் வானர்க்கப்பாற்
செலவன்பர்க் கோக்குஞ் சிவன் தில்லைக் கானலிற் சீர்ப்பெடையோ
டலவன் பயில்வது கண்டஞர் கூர்ந்தயில் வேல்உரவோன்
செலவந்தி வாய்க்கண் டனன்என்ன தாங்கொல்மன் சேர்துயிலே'

மாற்றுல் இரவுப் பொழுதிற்குரிய குறியிடத்தைக் கூறல். இதற்குக் கொளு :-

இரவுக் குறிஇவன் என்று பாங்கி
அரவக் கழலவற் கறிய வுரைத்தது.

பணை வளர் கை - பணைபோல வளர்ந்த தும்பிக்கை. ''மா'' என்றது, அதன் தோலை. படாம் - போர்வை. புனை - முடி மேற் சூடிக்கொள்ளும். 'புனை சாரல்' என இயையும். வளர் - மரங்கள் வளரும். 'மலைக்கண்' என உருபு விரிக்க. சந்து - சந்தனமரம்; என்றது, அதனை அரைத்த சாந்தினை காவிகள் - நீலப் பூக்கள். ''வேங்கைகள்'' என்றது, 'வேங்கைகளின் நிழல்' என்றபடி. இதனுல், 'ஆண்டு வருக' என்றுளாம். அன்றியும், ''பைந்தோகை துயில் பயிலும்'' என்றதனுல், 'நின் வரவை யாங்கள் அறிதற்கு மயிலை எழுப்புவாயாக' எனவும் கூறினுள்.

சிவபெருமானை அவன் இருக்கும் தலங்களில் தேவர்கள் சென்று பணிதல் கூறப்பட்டது.

155. இரவுக்குறி ஏற்பித்தலாவது, தலைமகனுக்கு இரவுக் குறியிடம் கூறிய தோழி, தலைவியிடம் சென்று அவனது ஆற்ருமையைக் கூறி இரவுக் குறி ஏற்பித்தல். இதற்குக் கொளு :-

அரவக் கழலவன் ஆற்ருன்என
இரவுக்குறி ஏற்பித்தது.

'மலக் குரம்பை, வன் குரம்பை' என்க. ''குரம்பை'' என்றது, உடம்பை. ''செலவு'' என்றது, செல்லும் இடமாகிய

೨. இரவரவுரைத்தல்

மோட்டங் கதிர்முலைப் பங்குடைத் தில்லைமுன் னோன்கழற்கே
கோட்டந் தருநங் குருமுடி வெற்பன் மழைகுழுமி
நாட்டம் புதைத்தன்ன நள்ளிருள் நாகம் நடுங்கச்சிங்கம்
வேட்டந் திரிசரி வாய்வரு வான்சொல்லும் ; மெல்லியலே; 156

பதவிகள். அன்பர்க்கு - அன்பர்கட்கென்றே. ஒக்கும் - உயர்த்து அமைத்து வைக்கும். கானல் - கடற்கரை. உரவோன் - திண்ணியோன்; இதனால் உயிர் தாங்கினான் என்பதாம். அலவன் - ஆண் நண்டு. அனர் - துன்பம். 'அந்திவாய்ச் செலக் கண்டனன்' என்க. மன் - தலைவன். மன் சேர் துயில் என்னது ஆம் கொல்' என்றது, 'இரவு அவன் துயிலான்' என்றதாம். ஆகவே, 'நீ இரவுக் குறி நேர்தல் வேண்டும்' என்றதாயிற்று.

சிவபெருமான் தன் அன்பரை மால், அயன் முதலியோர் பதத்திற்கும் அப்பால் வைத்தல் கூறப்பட்டது.

156. இரவுவர வுரைத்தலாவது, அலவன்மேல்வைத்து தலைமகன் ஆற்றாமை கூறி முகம் பெற்றதோழி, பின் தலைவன் இரவுக் குறி வேண்டுதலைக் கூறுதல். இதற்குக் கொளு :-

குரவரு குழலிக் — கிரவர வுரைத்தது.

மோடு - பெருமை. அம் - அழகு. கதிர் - ஒளி. "முலைப் பங்குடை முன்னோன்" என்றது, 'ஒருபங்கிற் பெண்ணுருவாய் நிற்கும் பழையோன்' என்றதாம். "தொன்மைக் கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ" என்றார் திருவாசகத்தும் (232). கோட்டம் தரும் - வளைகின்ற; என்றது, தில்லைப் பெருமான் திருவடிக்கன்றி வணங்காத முடியை யுடையவன்' என்றதாம். 'இத்தகையோன் வழிமொழிந்து வேண்டுவதனை மறுத்தல் எவ்வாறு கூடும்' என்பது கருத்து. குரு - நிறம். 'வெற்பன் சொல்லும்' என இயையும். மழை - மேகம். நாட்டம் - கண். 'நள்ளிருட்கண்' என உருபு விரித்து, அதனை, 'வருவான்' என்பதனோடு முடிக்க. நாகம் - யானை. சரி - மலைச் சரிவு. வருவான் - வருதற் பொருட்டு. சொல்லும் - வேண்டுவான். 'இனி இதற்கு என்செய்வது' என்பது குறிப் பெச்சம்.

10. ஏதங்கூறி மறுத்தல்

செழுங்கார் முழவதிர் சிற்றம் பலத்துப் பெருந்திருமால்
கொழுங்கான் மலரிடக் கூத்தயர் வோன்கழல் ஏத்தலர்போல்
முழங்கா ரரிமுரண் வாரண வேட்டைசெய் மொய்யிருள்வாய்
வழங்கா அதரின் வழங்கென்று மோஇன்றெம் வள்ளலையே. 157

11. குறைநேர்தல்

ஓங்கும் ஒருவிடம் உண்டம் பலத்தும்பர் உய்யஅன்று
தாங்கும் ஒருவன் தடவரை வாய்த்தழங் கும்மருவி
வீங்குஞ் சுனைப்புனல் வீழ்ந்தன் றழுங்கப் பிடித்தெடுத்து
வாங்கு மவர்க்கறி யேன்சிறி யேன்சொல்லும் வாசகமே. 158

சிவபெருமான் திருவடியை யன்றிப் பிறிதொன்றையும் வணங்காத அன்பரது சிறப்புக் கூறப்பட்டது.

157. ஏதங்கூறி மறுத்தலாவது, தோழி தலைமகன் இரவு வருதல் கூறக்கேட்ட தலைமகள், 'நம் வள்ளலை நாம் சிங்கங்கள் யானை வேட்டை யாடும் இருட்காலத்தில் வா என்று கூறுதல் தகுமோ' என அவனுக்கு உளதாகும் துன்பம் கூறி மறுத்தல். இதற்குக் கொளு :-

இழுக்கம்பெரி திரவரின்என
அழுக்கம்எய்தி அரிவையுரைத்தது.

'கார்போல முழவு அதிர் சிற்றம்பலம்' என்க. கான் - வாசனை. மலர் இட - மலரை இட்டுப் போற்ற. 'ஏத்தலர் போல் வழங்கென்றுமோ' என இயையும். ஆர் அரி - கிட்டு தற்கு அரிய சிங்கம். வழங்கா அதரின் - ஒருவரும் செல்லலா காத வழியின்கண். வழங்கு - வா. என்றுமோ - என்று சொல்வோமோ. 'வள்ளலை வழங்கென்றுமோ' என்றதனால், 'நாமன்றோ அவர் இருக்கு மிடத்திற்குச் செல்லல் வேண்டும்' என்றாள்.

தில்லைப் பெருமானது நடனச் சிறப்புக் கூறப்பட்டது.

158. குறைநேர்தலாவது, ஏதங் கூறி மறுத்த தலைமகள், பின் அவன் ஆற்றானாயது கேட்டு, 'என் உயிர்தந்த அவர்க்கு

12. குறைநேர்ந்தமை கூறல்

ஏனற் பசுங்கதிர் என்றூழ்க் கழிய எழிலிஉன்னிக்
கானக் குறவர்கள் கம்பலை செய்யும்வம் பார்சிலம்பா,
யானிற்றை யாமத்து நின்னருள் மேல்நிற்க லுற்றுச்சென்றேன்
தேனக்க கொன்றையன் தில்லை யுரர்செல்லுஞ் செல்லல்களே.

இனி யான் சொல்லுவது அறியேன்' என உடம்பட்டுக் கூறுதல். இதற்குக் கொளு :-

அலைவேல்அண்ணல் நிலைமை கேட்டுக்
கொலைவேற் கண்ணி குறைநயந்தது.

"அம்பலத்து" என்றதனை, "ஒருவன்" என்பதற்குமுன் கூட்டுக. 'தடவரைவாய்ச் சுனை' என இயையும். தழங்கும் - ஒலிக்கின்ற. 'அருவியால்' என உருபு விரிக்க. வீங்கும் - பெருகுகின்ற. 'யான் வீழ்ந்து அழுங்க' என எழுவாய் வருவிக்க. 'அன்று சுனையினின்றும் காப்பாற்றியவரே இன்றும் எனக்கு வரும் துன்பத்தைக் களைதல் வேண்டும்' என்றபடி. 'சொல்லும் வாசகம் அறியேன்' என்றதனுல், மறுக்க மாட்டாமை கூறி நேர்ந்தாள் என்க.

சிவபெருமான் எங்ஙிலையிலும், யாவரையும் தாங்கும் இயல் பினனுதல் கூறப்பட்டது.

159. குறை நேர்ந்தமை கூறலாவது, தலைமகள், குறை நேர்தலின், தோழி தலைவனிடம் சென்று, 'நின் ஏவலை முடிக்க வேண்டிப் படாத துன்பங்களை எல்லாம் பட்டேன்' என்று கூறுதல். இதற்குக் கொளு ;-

குறைநயந்தனள் நேரிகுழலியென
எரிவேல் அண்ணற் கறிய உரைத்தது.

ஏனல் - தினை. என்றூழ்க்கு - வெயிலால். எழிலி - மழையைப் பெற. கம்பலை - ஆரவாரம். இது, தெய்வத்திற்குப் பலியிட்டுச் செய்வது. வம்பு - காலம் அல்லாக் காலத்து மழை

13. வரவுணர்ந் துரைத்தல்

முன்னும் ஒருவர் இரும்பொழில் மூன்றற்கும் முற்றும்இற்றால்
பின்னும் ஒருவர்சிற் றம்பலத் தார்தரும் பேரருள்போல்
துன்னுமோர் இன்பமென் றேகைதந் தோகைக்குச்
[சொல்லுவபோல்
மன்னும் அரவத்த வாய்த்துயில் பேரும் மயிலினமே. 160

பெய்யும் நிகழ்ச்சி. அருள் - ஏவல். சென்றேன் - அடைந்தேன். செல்லல்கள் - துன்பங்கள். 'செல்லல்கள் சென்றேன்' என்க. இதனால், காரியம் முடிந்ததும் கூறினாளாம். 'கானவர் தினையை முயன்று காத்தாற்போல, நீயும் இவளை முயன்று காப்பாயாக' என உள்ளுறை யுவமம் கொள்க.

தில்லையை அடையாதவர்கள், தாம் அடையத்தகாத இன்னல்களை யெல்லாம் அடைதல் கூறப்பட்டது.

160. வரவுணர்ந் துரைத்தலாவது, தலைமகள் குறை நேர்ந்தமையைத் தலைவனுக்குக் கூறிய தோழி, பின், வந்தமை யறிந்து தலைவிக்குக் கூறுதல். இதற்குக் கொளு:-

வளமயில்எடுப்ப இளமயிற் பாங்கி
செருவேல் அண்ணல் வரவுரைத்தது.

"முன்னும் ஒருவர்" என்றதனை, "மூன்றற்கும்" என்பதன்பின் கூட்டுக. பொழில் - உலகம். இற்றால் - அழிந்தால். இங்கு இங்ஙனம் கூறியவாற்றால், முன்பு, 'இரும்பொழில் மூன்றும் தோன்றுதற்கு முன்னும்' என்பது கொள்ளப்படும். "ஒருவர்" இரண்டும், 'தனிமையர்' எனப் பொருள்படும். எனவே ஈரிடத்தும் பிறர் ஒருவரும் இல்லாமை பெறப்படும். இதனை,"முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம்பொருளே- பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும்அப் பெற்றியனே" என்ற திருவாசகத்துடன் வைத்துக் காண்க (*163*). 'ஓர் இன்பம் துன்னும் என்று' எனக் கூட்டுக. ஓகை - மகிழ்ச்சியான செய்தி. தம் தோகை - தம் இனமாகிய மயில். அரவத்த வாய் - ஆரவாரத்தை உடையனவாய். துயில் பேரும் - துயில் நீங்கும். 'இஃது என்னோ' என்பது குறிப்பெச்சம். 'மயிலினம்

14. தாய்துயில் அறிதல்

கூடார் அரண்எரி கூடக் கொடுஞ்சிலை கொண்டஅண்டன்
சேடார் மதில்மல்லற் றில்லையன் ஞய்,சிறு கட்பெருவெண்
கோடார் கரிகுரு மாமணி யூசலைக் கோப்பழித்துத்
தோடார் மதுமலர் நாகத்தை நூக்கும்நம் சூழ்பொழிற்கே. 161

இயல்பாக ஒருகால் வெருண்டு எழும் ஓசை அன்று இது; தலைவன் எழுப்ப எழுந்த ஓசையே' என்றற்கு, ''மன்னும் அரவத்த'' என்ருள்.

சிவபெருமானே உலகிற்கு ஆதியும், அந்தமும் என்பது கூறப்பட்டது.

161. தாய் துயில் அறிதலாவது, தலைமகன் வரவுணர்ந் துரைத்த தோழி, தலைவியைக் குறியிடத்துக் கொண்டு செல்லு தற் பொருட்டுத் தாய் துயில்கின்ருளோ என்று அறிதற்கு வேருென்று கூறுதல். இதற்குக் கொளு:-

ஊசன் மிசைவைத் தொள்ளமளியில்
தாயதுதுயில் தானறிந்தது.

கூடார் - பகைவர்; திரிபுரத்தவர். அரண் - மதில். 'அவற்றின்கண் எரி சென்று கூடுமாறு' என்க. அண்டன் - தேவன். சேடு - பெருமை. மல்லல் - வளம். 'சிறுகட் கரி' எனவும், 'பெருங்கோடு, வெண்கோடு' எனவும் இயையும். ஆர் - நிரம்பிய. குரு - நிறம். கோப்பு - அமைப்பு. தோடு - இதழ். ''மலரை யுடைய நாகம்' என்க. நாகம் - புன்னுகம். இது பெயரொற்றுமையால், சுரபுன்னையைக் குறித்தது. நூக்கும் - அழிக்கின்றது. பொழிற்கு - பொழிற்கண். 'இதற்கு என்செய்வேம்' என்பது குறிப்பெச்சம். இதற்குத் தாய் ஒன்றும் கூருது கிடப்பாளாயின், 'அவள் துயில்கின்ருள்' என்று அறிவர்.

சிவபெருமான் கொடியோரைத் தெறுதல் கூறப்பட்டது.

15. துயிலெடுத்துச் சேறல்

விண்ணுக்கு மேல்,வியன் பாதலக் கீழ்,விரி நீருடுத்த
மண்ணுக்கு நாப்பண், நயந்துதென் றில்லைநின் ரோன்மிடற்றின்
வண்ணக் குவளை மலர்கின் றன;சின வாள்மிளிர் நின்
கண்ணுக்கு மேற்கண்டு காண்வண்டு வாழுங் கருங்குழலே.

---

162. துயிலெடுத்துச் சேறலாவது, தாய் துயில் அறிந்த தோழி, தலைவியை ஒன்று சொல்லி எழுப்பிக் கொண்டு செல்லுதல். இதற்குக் கொளு :-

தாய்துயிலறிந் தாய்ந்தருபவள்
மெல்லியற்குச் சொல்லியது.

"மேல், கீழ், நாப்பண்" என்றவை, அவ்விடத்து இருப்பவனைக் குறித்தன. 'மேலுக்கு மேலாயும், கீழுக்குக் கீழாயும், நடுவுக்கு நடுவாயும் இருப்பவன்' என்பது உணர்த்துகின்றாராதலின், "மண்ணுக்கு நாப்பண்" என்றார். நாப்பண் - நடுவிடம். 'இங்ஙனம் வரையறையின்றிப் பரந்து நின்றானாயினும், அருள் காரணமாகத் தில்லைக்கண் திருமேனி கொண்டு நிற்கின்றான்' என்பாள், 'தில்லை நயந்து நின்றான்' என்றாள். மிடற்றின் - மிடற்றைப்போல. சின வாள் மிளிர் - சினத்தை யுடைய வாள் பிறழ்வது போலப் பிறழ்கின்ற. இது தொழில் உவமமாகலின், உவமைக்கு உவமை அன்றாயிற்று. "கண்டு காண்" என்பது, 'நினைத்துப் பார், செய்து பார், கேட்டுப் பார்' என்பனபோல, 'காணுமாற்றால் அதன் இயல்பை ஆய்ந்துணர்வாயாக' எனப் பொருள் தந்தது. குழலே - குழலை உடையவளே. இங்ஙனங் கூறித் தலைவியைக் குறியிடத்துக் கொண்டு செல்வாள் என்க.

சிவபெருமானது வியாபக நிலையும், அருட்டிருமேனி நிலையும் கூறப்பட்டன.

16. இடத்துய்த்து நீங்கல்

'நந்தீ, வரம்'என்னும் நாரணன் நாண்மலர்க் கண்ணிற்கெஃகந்
தந்தீ வரன்புலி யூரனை யாய்,தடங் கண்கடந்த
இந்தீ வரமிவை காண்;நின் இருள்சேர் குழற்கெழில்சேர்
சந்தீ வரமுறி யும்வெறி வீயுந் தருகுவனே. 163

17. தளர்வகன் றுரைத்தல்

காமரை வென்றகண் ணோன்தில்லைப் பல்கதி ரோன்அடைத்த
தாமரை இல்லின் இதழ்க்கத வந்திறந் தோதமியே
பாமரை மேகலை பற்றிச் சிலம்பொதுக் கிப்பையவே
நாமரை யாமத்தென் னேவந்து வைகி நயந்ததுவே. 164

---

163. இடத்துய்த்து நீங்கலாவது, *தலைவியைத் துயிலெடுத்*துக்கொண்டு சென்ற தோழி, அவளை ஒன்று சொல்லி அக் குறியிடத்து நிறுத்தி நீங்குதல். இதற்குக் கொளு:-

> மைந்தடங் கண்ணியை யுய்த்திடத் தொருபால்
> நீங்க லுற்ற பாங்கி பகர்ந்தது.

நந்தி - சிவபெருமான். நந்தீ வரம் - நந்தியே வரம் அருள்' என்னும் நாரணன் - என்று வேண்டிய திருமால். கண்ணிற்கு சாத்திய கண்ணிற்குப் பயனாக. எஃகம் - கூர்மையான படைக் கலம்; சக்கரம். தந்து - படைத்து. ஈ வரன் - கொடுத்த மேன்மையுடையவன். கண் கடந்த - கண்ணை வென்ற, 'கண் வென்ற' என்றலுமாம். இந்தீவரம் - நீலப் பூ. காண் - கண்டு கொய்து இரு. 'குழற்குத் தருகுவன்' என இயையும். சந்து ஈ - சந்தனமரம் தந்த. வர முறியும் வெறி வீயும் - சிறந்த தளிர்களையும், மணம் பொருந்திய மலர்களையும். இங்ஙனம் சொல்லித் தோழி நீங்கினள் என்க. இத் திருப்பாட்டு 'திரிபு' என்னும் எழுத்தணிபெற்று சிறப்பது அறிக.

சிவபெருமான் காமிய பூசையை ஏற்று, அவற்றிற்கேற்ற பயன் தருதல் கூறப்பட்டது.

164. தளர்வகன் றுரைத்தலாவது, தலைவியைத் தோழி குறியிடை நிறுத்திச் செல்ல, அவளைத் தலைவன் வந்து எதிர்ப் பட்டு மகிழ்ந்து கூறுதல். இதற்குக் கொளு:-

18. மருங்கணைதல்

அகிலின் புகைவிம்மி ஆய்மலர் வேய்ந்தஞ் சனமெழுதத்
தகிலுந் தனிவடம் பூட்டத் தகாள்;சங் கரன்புலியூர்
இகலு மவரிற் றளருமித் தேம்பல் இடைஞெமியப்
புகிலும் மிகஇங்ங னேஇறு மாக்கும் புணர்முலையே. 165

வடுவகி ரனைய வரிநெடுங் கண்ணியைத்
தடுவரி யன்போடு தளர்வகன் றுரைத்தது.

காமனை, இழிவு தோன்ற, 'காமர்' எனப் பன்மையாற் கூறினார். 'தில்லைக்கண் வைகி' என இயைக்க. "அடைத்த" என்றதனால், கதிரோனை வாயிலோனாகக் குறித்தமை போதரும். தாமரை இல் - தாமரை மலராகிய இல்லம். திறந்தோ - நீயே திறந்துகொண்டோ. 'தமியே வந்து' என இயையும். இதனால் தலைவன், தலைவியைத் திருமகளாகக் கூறினான். பாம் - பரவும்; பரந்த. அரை - இடை. பற்றி - ஒலியாதவாறு பிடித்து. ஒதுக்கி - அசையாதவாறு காலின்மேலால் ஏற்றி. 'நீ' என்பதனை, ஒற்றுமை தோன்ற "நாம்" என்றான். 'வந்து வைகி நயந்தது கதவம் திறந்தோ' எனவும், 'இஃது என்னோ' எனவும் வேறு வேறு முடிபு செய்க.

காமனை வென்றமை கூறிய முகத்தால், சிவபெருமான் உயிர் வருக்கத்துட்படாமை கூறப்பட்டது.

165. மருங்கணைதலாவது, தலைமகன் தன்னைத் திருமகளாக உயர்த்துக் கூறக்கேட்ட தலைவி நாணத்தால் தலை இறங்கி நிற்க, அந் நாண் நீங்குமாறு தலைவன் பிறிதொன்று சொல்லி அவளை அணைதல். இதற்குக் கொளு :-

அன்பு மிகுதியின் அவவளாய்அவளைப்
பொன்புனை வேலோன் புகழ்ந்துரைத்தது.

விம்மி - மிகுந்து. வேய்ந்து - சூட்டப்பட்டு. இவற்றால் 'கூந்தல்' என்பது இனிது பெறப்பட்டுக் கிடந்தது. 'விம்மி' என, இடத்து நிகழ்பொருளின் தொழில் இடத்தின்மேல் ஏற்றப்பட்டது. "அஞ்சனம்" என்றதனால், 'கண்' என்பது

19. முகங்கண்டு மகிழ்தல்

அழுந்தேன் நரகத் தியானென் றிருப்பவந் தாண்டுகொண்ட
செழுந்தேன் திகழ்பொழிற் றில்லைப் புறவிற் செறுவகத்த
கொழுந்தேன் மலர்வாய்க் குமுதம் இவள் ;யான்
[குரூஉச்சுடர்கொண்
டெழுந்தாங் கதுமலர்த் தும்உயர் வானத் திளமதியே. 166

விளங்கிற்று. தகிலும் - தக்கவளாயினும்; உம்மையால், அவை தகாமை கூறியவாறாயிற்று. 'இவை தகிலும், வடம் பூட்டத் தகாள்' என்க. இதன்பின், 'அங்ஙனமாக' என்பது வருவிக்க. புலியூர் இகலும் - புலியூரோடு மாறுபடுகின்ற. மாறுபடுதல் - வணங்க மறுத்தல். மறுப்பவர் தளர்ச்சி எய்துவர் என்க. தேம்பல் இடை - மெலிந்த இடை. ஞெமியப் புகிலும் - ஒடியப் புகுந்தாலும். இங்ஙனே - இவ்வாறே; 'இரக்கமின்றி' என்பது கருத்து. 'இனி என்னாம்' என்பது குறிப்பெச்சம். 'இங்ஙனம் கூறி அவள் இடையைத் தாங்கி அணைந்தான்' என்க.

"சங்கரன்" என்றதனால், அவனது தலத்தை வணங்கு பவர் இன்பத்தையும், வணங்க மறுப்பவர் துன்பத்தையும் எய்துதல் கூறப்பட்டது.

166. முகங்கண்டு மகிழ்தலாவது, தலைவன் தலைவியை அணைந்து இன்புற்றபின், அவள் முகமலர்ச்சி கண்டு தான் மகிழ்ந்து கூறுதல். இதற்குச் செய்யுள் ;-

முகையவிழ் குழலி முகமதி கண்டு
திகழ்வேல் அண்ணல் மகிழ்வுற் றது.

"செழுந்தேன்" என்றது, இறைவனை. 'ஆண்டுகொண் டான்' என்பதும் பாடம் என்றார் பேராசிரியர். புறவு - இளங் காடு. செறு - வயல். 'செறுவகத்த குமுதம்' என்க. மலர் வாய் - மலர்கின்ற வாய். குரூஉச் சுடர் - நிறத்தையுடைய நிலவு. 'இவள் குமுதம்; யான் மதி' என்றதனால், காட்சி யானே அவள் மகிழ்தல் பெறப்பட்டது.

20. பள்ளியிடத் துய்த்தல்

சுரும்புறு நீலங்கொய் யல்தமி நின்று; துயில்பயின்மோ;
அரும்பெறற் றோழியோ டாயத்து நாப்பண் அமரரொன்னார்
இரும்புறு மாமதில் பொன் இஞ்சி வெள்ளிப் புரிசையன்றோர்
துரும்புறச் செற்றகொற் றத்தெம் பிரான்தில்லைச்
[சூழ்பொழிற்கே. 167

சிவபெருமான் தன் அடியவரை நரகத்தழுந்தாது எடுத்தல் கூறப்பட்டது.

167. பள்ளியிடத்து உய்த்தலாவது, தலைவியை முகங் கண்டு மகிழ்ந்து கூறியவாற்றால் பிரிவுணர்த்திய தலைவன், 'நீ இனிச் சென்று ஆயத்திடை நின் தோழியொடு துயில்க' என அவளைப் பள்ளியிடத்துச் செலுத்துதல். இதற்குக் கொளு:-

பிரிவது கருதிய பெருவரை நாடன்
ஒவ்விழைப் பாங்கியோடு பள்ளிகோள் கேன்றது.

"அமரர் ஒன்னார்" என்பது முதலாகத் தொடங்கி யுரைக்க. அவ்விடத்து, 'தமிநின்று கொய்தல்' எனவும், 'ஆயத்து நாப்பண் தோழியொடு துயில் பயில்' எனவும் கூட்டுக. மோ, முன்னிலை அசை. அமரர் ஒன்னார், அசுரர். 'மதில், இஞ்சி, புரிசை' என்பன பொருட்பின் வருநிலை. துரும்பு உற - துரும்பின் தன்மையை அடைய. கொற்றத்து - வெற்றியை உடைய. பொழிற்கு பொழிற்கண்.

இரும்பு, பொன், வெள்ளிஎன்பவற்றாலாகியமதில்கள் துரும் பாயின எனக் கூறிய முகத்தால் சிவபெருமானது ஆற்றலின் முன் பிற ஆற்றல்கள் படும் சிறுமை கூறப்பட்டது.

21. வரவு விலக்கல்

நற்பகற் சோமன் எரிதரு நாட்டத்தன் தில்லையன்ன
விற்பகைத் தோங்கும் புருவத் திவளின்மெய் யேஎளிதே
வெற்பகச் சோலையின் வேய்வளர் தீச்சென்று விண்ணின்நின்ற
கற்பகச் சோலை கதுவுங்கல் நாடஇக் கல்லதரே. 168

---

168. வரவு விலக்கலாவது, தோழி தலைமகளைப் பள்ளியிடத்துச் சேர்த்துப் பின் தலைவனிடம் சென்று, 'இவள் காரணமாக இக் கல்லதர் நினக்கு எளிதாயினும், இனி இவ்வாறு வாரற்க' என வரைவு தோன்றக் கூறுதல். இதற்குக் கொளு:-

தெய்வமன் னுளைத் திருந்தமளி சேர்த்தி
மைவரை நாடனை வரவுவிலக் கியது.

பகல் - பகலவன். சோமன் - சந்திரன். எரி - அக்கினி. 'இம் மூவரையும் தரும் நாட்டத்தன்' என்க. நாட்டம் - கண். 'பகற் சோமன்' என்றது, செய்யுள் நோக்கி வந்த திரிபு. 'தில்லையன்ன இவள்' என இயையும். 'வில்லைப் பகைத்து அதனின் மிக்க புருவம்' என உரைக்க. 'இவளின்' எனக் காரணம் அடுத்தமையின், "எளிதே" என்றவிடத்து; 'ஆயிற்று' என்னும் ஆக்கம் தொகுக்கப்பட்டமை பெற்றும். வேய் வளர் தீ - மூங்கிலின்கண் தோன்றி வளரும் தீ. கதுவும் - பற்றுகின்ற. கல் நாட - மலை நாடனே. 'இக் கல்லதர், தில்லையன்ன இவளின் எளிதே' என முடிக்க. 'ஆயினும், இனி இங்ஙனம் வாரற்க' என்பது குறிப்பெச்சம்.

'வேய்வளர் தீ விண்ணிற் சென்று கற்பகச் சோலை கதுவும் நாட' என்றதனால், 'இவ்வூரிற் பிறக்கும் அலர் நின் ஊரினும் பரந்து நின் பெருமையைக் கெடுக்கும்' என்றுளாக உள்ளுறை உவமம் கொள்க.

சிவபெருமான் ஒளியுடைப் பொருள்கட்கும் ஒளியைத் தரும் முதல் ஒளியாதல் கூறப்பட்டது.

22. ஆற்ருதுரைத்தல்

பைவாய் அரவரை அம்பலத் தெம்பரன் பைங்கயிலைச்
செவ்வாய்க் கருங்கட் பெரும்பணைத் தோட்சிற் றிடைக்கொடியை
மொய்வார் கமலத்து முற்றிழை இன்றென் முன் னைத்தவத்தால்
இவ்வா றிருக்குமென் றேநிற்ப தென்றும்என் இன்னுயிரே. 169

23. இரக்கங்கூறி வரைவு கடாதல்

பைவாய் அரவும் மறியும் மழுவும் பயில்மலர்க்கை
மொய்வார் சடைமுடி முன்னவன் தில்லையின் முன்னினக்கால்
செவ்வாய் கருவயிர்ச் சேர்த்,திச் சிறியாள் பெருமலர்க்கண்
மைவார் குவளை விடும்மன்ன, நீள்முத்த மாலைகளே. 170

---

169. ஆற்ருதுரைத்தலாவது, தோழி வரவு விலக்கி வரைவு கடாவ, தலைவன் அதற்கு ஆற்ருது, 'இவளை நான் வரையும் எளிமையள் என நீ கூறுகின்றது என்னை' எனக் கூறுதல். இதற்குக் கொளு :-

வரைவு கடாய வாணுதற் றேழிக்
கருவரை நாடன் ஆற்ரு துரைத்தது.

பை வாய் - படத்தின்மேல் உள்ள வாயை உடைய; 'படம் வாய்ந்த' எனலுமாம். பசுமை, சோலையாற் காணப்படுவது. 'கயிலைக் கொடி' என இயையும். மொய் - இதழ்கள் நெருங்கிய. வார் - தாள் நெடிய. கமலத்து முற்றிழை, திருமகள். "இன்று" என்றதனை, "இவ்வாறு" என்பதன்முன் கூட்டுக. இவ்வாறு - இவ்வடிவு கொண்டு. என்றே - என்று கருதுவதனாலே. 'என்றும் என் இன் உயிர் நிற்பது' என்க. "கொடியை" என்னும் இரண்டாவது, "என்று" என்பதன் கண் எஞ்சி நிற்கும். 'கருதி' என்பதனோடு முடியும், 'இங்ஙனமாகலின், நீ இவளை யான் வரையும் அளவிற்கு எளியளாகக் கூறுகின்றது என் கருதி' என்பது குறிப்பெச்சம்.

ஆர்க்கலாகாத பாம்பினை அரையிடத்து ஆர்த்தமை கூறிய முகத்தால், சிவபெருமானது எல்லாம் வல்ல தன்மை கூறப்பட்டது.

170. இரக்கங் கூறி வரைவு கடாதலாவது, வரைவுடம்படாது தலைவன் களவொழுக்கம் வேண்ட, தோழி, 'நீ செல்லும்

24. நிலவு வெளிப்பட வருந்தல்

நாகந் தொழஎழில் அம்பலம் நண்ணி நடம்நவில்வோன்
நாகம் இது;மதி யே,மதி யே?நவில் வேற்கையெங்கள்
நாகம் வரவெதிர் நாங்கொள்ளும் நள்ளிருள் வாய்நறவார்
நாகம் மலிபொழில் வாய்எழில் வாய்த்தநின் நாயகமே. 171

வழியின் கொடுமையை நினைந்து இவள் அழுகின்றாள் ; ஆதலின், நீ நின் ஊரை அடைந்தவுடன் ஒரு குறி செய்வாயாக' எனக் கூறுமுகத்தான் வரைவு கடாதல். இதற்குக் கொளு :-

அதிர்கழலவன் அகன்றவழி
எதிர்வதறியா திரங்கியுரைத்தது.

மறி - மான் கன்று. முன்னவன் - எப்பொருட்கும் முன்னோன் முன்னினக்கால் - அடைந்தபொழுது. செவ்வாய் - உன்னுடைய செவ்விய வாயை. கரு வயிர்ச் சேர்த்து - கரிய கொம்பிடத்துப் பொருத்துவாயாக; என்றது, 'கொம்பினை வாய்வைத்து ஊதுவாயாக' என்றபடி. "இச் சிறியாள்........ மாலைகளே" என்றதனை முதலிற் கூட்டுக மலர்க் கண் - மலர்தலை யுடைய கண். 'கண்ணாகிய குவளை, நீள் முத்த மாலைகளை விடும்' என இயையும்.

மேற்கூறிய வல்லமையே வகுத்துக் கூறப்பட்டது.

171, நிலவு வெளிப்பட வருந்தலாவது, இரக்கங் கூறி வரைவு கடாய தோழி, பிற்றை நாள் அவன் இரவுக் குறியிடத்து வந்து நிற்க, நிலவு வெளிப்பட்டமையால் தாங்கள் புறப்படமாட்டாமையைத் தலைவன் சிறைப்புறமாகக் கூறி வருந்துதல். இதற்குக் கொளு :-

தனிவே லவற்குத் தந்தளர் வறியப்
பனிமதி விளக்கம் பரங்கி பகர்ந்தது

"நாகம்" நான்கனுள் முதலது, பாம்பு; பதஞ்சலி. இரண்டாவது, மலை. மூன்றாவது, யானை. நான்காவது, சுரபுன்னைமரம். இது, சொற்பின்வருநிலை. "மதியே மதியே" என்றதும் அது.

25. அல்லகுறி யறிவித்தல்

மின்னங் கலருஞ் சடைமுடி யோன்வியன் தில்லையன்னாய்,
என்னங் கலமரல் எய்திய தோ! எழில் முத்தந்தொத்திப்
பொன்னங் கலர்புன்னைச் சேக்கையின் வாய்ப்புலம் புற்றுமுற்றும்
அன்னம் புலரு மளவுந் துயிலா தழுங்கினவே. 172

"மதியே" ஒன்றை முதலிலும், மற்றொன்றை இறுதியிலும் கூட்டி, யுரைக்க. 'நாகம் தொழ நடம் நவில்வோன் மலை இது' என்றது, 'நின்னை விழுங்கும் நாகம் உள்ள மலையிடத்து வந்து நீ செருக்கொடு நிற்றல் நினக்குத் திங்காய் முடியும்' என்றதாம். மதியே - திங்களே. மதியே - அறிவுடைய செயலோ. நவில் - பயின்ற. 'நின் நாயகம் நினக்கு அறிவே' என்க. "நானே இதற்கு நாயகம்" எனவும், "என் நாயகமே" எனவும் 'நாயகம்' என்னும் சொல்லை அடிகள் திருவாசகத்திலும் ஆளுதல் காண்க. (502, 644.).

சிவபெருமானது திருக்கூத்துத் தவம் உடையார்க்கே காண்டல் வாய்ப்பது என்பது கூறப்பட்டது.

172. அல்லகுறி அறிவித்தலாவது, இரவுக் குறிக்கண் தலைவன் செய்யும் குறியல்லாதவற்றை அவன் செய்த குறியென நினைந்து சென்று மீண்டமையைப் பிற்றைநாள் அவன் வந்து சிறைப்புறமாக நிற்க, தோழி தலைமகளுக்குக் கூறுவாள் போன்று அறிவித்தல். இதற்குக் கொளு:-

வல்லி யன்னவள் அல்ல குறிப்பாடு
அறைப்புனல் துறைவற்குச் சிறைப்புறத் துரைத்தது.

"என் அங்கு அலமரல் எய்தியதோ" என்றதனை இறுதிக்கண் கூட்டி, 'அங்கு எய்தியது அலமரல் என்னோ' என மாற்றி யுரைக்க மின் - ஒளி; மின்னலுமாம். "முத்தம்" என்றது புன்னையரும்பை. தொத்தி - கொத்தாக ஈன்று. பொன், அதன் தாது. 'சேக்கையின்வாய் அன்னம் முற்றும் புலம்புற்றுப் புலருமளவும் துயிலாது அழுங்கின' என்க. புலம்புற்று - துன்புற்று. அழுங்கின - ஆரவாரித்தன.

சிவபெருமானது தவக் கோலச் சிறப்புக் கூறப்பட்டது.

௨௬. கடலிடை வைத்துத் துயரறிவித்தல்

சோத்துன் அடியம்என் றோரைக் குழுமித்தொல் வானவர்சூழ்ந்
தேத்தும் படிநிற் பவன்தில்லை யன்னாள் இவள்துவள
ஆர்த்துன் னமிழ்தும் திருவும் மதியும் இழந்தவம்நீ
பேர்த்தும் இரைப்பொழி யாய்பழி நோக்காய் பெருங்கடலே.

---

173. கடலிடை வைத்துத் துயர் அறிவித்தலாவது, தலைவன் சிறைப்புறமாக அல்லகுறியறிவித்த தோழி, தலைமகள் இரவில் உறும் துன்பத்தை அவன் கேட்பக் கடலொடு புலந்து கூறுதல். இதற்குக் கொளு :-

எறிகடல் மேல்வைத் திரவரு துயரம்
அறைகழலவற் கறிய வுரைந்தது.

சோத்தம், இழிந்தார் கூறும் வணக்கச் சொல். அஃது ஈற்று அம்முக் குறைந்து நின்றது. சூழ்ந்து - வலம் வந்து. ஆர்த்து - ஆரவாரித்தலால். திரு - திருமகள். மதி - சந்திரன். அமிழ்து முதலிய மூன்றும் பாற்கடலில் பிறந்தும் அதற்குப் பயன்படாது பிறருக்குப் பயன்பட்டமையை, '' இழந்து '' எனக் கூறினாள். 'உணவும், செல்வமும், அறிவும் இழந்தாய்' என ஒரு நயம் தோன்றியவாறு காண்க. அவம் - வீணே. முன் ஆர்த்து இழந்து, பேர்த்தும் நீ அவமே இவள் துவள இரைப் பொழியாய்; பழிநோக்காய்' என்க. பழி - பிறரை வீணே வருத்துதலால் வருவது.

சிவபெருமான் தன்னை வணங்கினோரைத் தேவரும் சூழ்ந்து வணங்கும்படி வைத்தல் கூறப்பட்டது.

''தொழப்படுந் தேவர்தம் மால்தொழு விக்கும்தன் தொண்டரையே'' என்றருளிச் செய்தார் திருநாவுக்கரசரும். (திருமுறை - *4 - 112 - 5.*)

27. காமம் மிக்க கழிபடர் கிளவி

மாதுற்ற மேனி வரையுற்ற வில்லிதில் லைநகர்சூழ்
போதுற்ற பூம்பொழில் காள்,கழி காள்,எழிற் புள்ளினங்காள்,
ஏதுற் றழிதியென் னீர்மன்னும்; ஈர்ந்துறை வர்க்கிவளோ
தீதுற்ற தென்னுக்கென் னீர்;இதுவோநன்மை செப்புமினே. 174

---

174. காமம் மிக்க கழிபடர் கிளவியாவது, அல்ல குறியும், நிலவு வெளிப்பாடும் போல்வனவற்றால் தலைமகனை எதிர்ப்படமாட்டாத தலைவி, அவ்வேட்கை மிகுதியால், கேட்பதும், சொல்வதும் இல்லாதனவற்றொடு சிலவற்றைச் சொல்லுதல். கழிபடர் - மிக்க துன்பம், கிளவி - கிளத்தல். இதற்குக் கொளு:-

தாமம் மிக்க தாழ்குழல் ஏழை
காமம் மிக்க கழிபடர் கிளவி

'மேனியையுடைய வில்லி' என இயையும். ஏது உற்று அழிதி - என்ன துன்பத்தை எய்தி வருந்துகின்றாய். என்னீர் - என்று வினவுகின்றிலிர். துறைவர்க்கு - துறைவர் பொருட்டு. நன்மை - நன்மைதருவது. 'நட்டாரது துயர்பற்றிக் கேளாமை நன்மை பயவாது' என்றதாம். "ஏதுற்றழிதி என்னீர்" என்றது, 'என்னையும் வினவுகின்றிலிர்' எனவும், 'இவள் தீதுற்றது என்னுக்கு என்னீர்' என்றது, 'நுமக்குள்ளேயும் உசாவுகின்றிலிர்' எனவும் கூறியவாறும். மன், உம், ஓ அசைநிலைகள்.

"மாதுற்ற மேனி" என்றதனால் இன்பமும், "வரையுற்ற வில்லி" என்றதனால் அறம் பொருள்களும்குறித்த முகத்தால், சிவபெருமான் வீடேயன்றி, ஏனை மூன்றையும் தருவோனாதல் கூறப்பட்டது.

28. காப்புச் சிறைமிக்க கையறுகிளவி

இன்னற வார்பொழில் தில்லை நகர்இறை சீர்விழவிற்
பன்னிற மாலைத் தொகைபக லாம்பல் விளக்கிருளின்
துன்னற உய்க்கும்;இல் லோருந் துயிலின், துறைவர்மிக்க
கொன்னிற வேலொடு வந்திடின் ஞாளி குரைதருமே. 175

29. ஆறுபார்த்துற்ற அச்சக்கிளவி

தாருறு கொன்றையன் தில்லைச் சடைமுடி யோன்கயிலை
நீருறு கான்யா றளவில நீந்திவந் தால்நின து
போருறு வேல்வயப் பொங்குரும் அஞ்சுக; மஞ்சிவருஞ்
சூருறு சோலையின் வாய்வரற் பாற்றன்று தூங்கிருளே. 176

---

175. காப்புச் சிறைமிக்க கையறு கிளவியாவது, காமம் மிக்க கழிபடர் கிளந்து வருந்துகின்ற தலைவி நாய்துஞ்சாமை பற்றிக் கையற்றுக் கூறுதல். இதற்குக் கொளு :-

மெய்யுறு காவலிற் — கையறு கிளவி.

நறவு - தேன். விழாவின் - விழாவின்கண். பன்னிற மாலை, மணி மாலைகள். "தொகையால்" என உருபு விரிக்க. 'இரா' என்பது ஆற்றலான் வந்து இயையும். இருளின் துன் - இருளினது நெருங்குதல் தொழில். இல்லோர் - இல்லின்கண் உள்ளார். "இல்லோரும்" என்ற உம்மை, அவர் ஒருகாலும் துயிலாமை காட்டிற்று. எனவே, அதுவும் ஓர் இடையீடாயிற்று. 'கொல் வேல், நிறவேல்' என இயையும். 'கொன் வேல்' என்றலுமாம். "துறைவர் கொன்னிற வேலோடு வந்திடின்" என்றதனை முதற்கண் கூட்டுக. ஞாளி - நாய். 'இனி அவரை எதிர்ப்படுதல் இயலாது போலும்' என்பது குறிப்பெச்சம். இத்துறை இரண்டற்கும் பயன் தலைவன் வரைந்து கோடல், தோழி வரைவுகடாதல், தான் ஆற்றுதல் என்ற இவற்றுள் ஒன்றாகும்.

சிவபெருமானது தலம் விழவறாது நிற்றல் கூறப்பட்டது.

176. ஆறு பார்த்துற்ற அச்சக் கிளவியாவது, காப்புச் சிறைமிக்கமையால் தலைமகள் கையறவு எய்திக் கூறுதலைச்

30. தன்னுட் கையா றெய்திடு கிளவி

விண்டலை யாவர்க்கும் வேந்தர்வண் தில்லைமெல் லங்கழிசூழ்
கண்டலை யேகரி யாக்கன்னிப் புன்னைக் கலந்தகள்வர்
கண்டிலை யேவரக் கங்குலெல் லாம்மங்குல் வாய்விளக்கும்
மண்டல மே.பணி யாய்தமி யேற்கொரு வாசகமே. 177

சிறைப்புறமாக நின்று கேட்ட தலைமகன் குறியிடைச் சென்று நிற்க அவனைத் தோழி எதிர்ப்பட்டு, 'நீ இவ்வாறு அச்சந்தரும் தெய்வம் உள்ள காட்டில் கான்யாறு பலவும் நீந்தி வருதற்கு நாங்கள் அஞ்சுகின்றேம்; ஆதலின், வாரற்க' என வழியருமை பற்றி அஞ்சும் அச்சத்தைக் கூறுதல். இதற்குக் கொளு :-

நாறு வார்குழல் நவ்வி நோக்கி
ஆறுபார்த் துற்ற அச்சக் கிளவி.

தார் உறு - தாராகப் பொருந்திய. நான்கடிகளிலும், 'உறு' என்றது. 'உறை' என்பதும் பாடம் என்பர் பேராசிரியர். 'கயிலைக் கான்யாறு' என இயையும். 'நினது வேலை உரும் அஞ்சுக' என்க. வய - வலிமை. பொங்கு - சினம் மிக்க. உரும் - இடியேறு. ''அஞ்சுக'' என்றது, 'அஞ்சுவதாகவே இருக்கட்டும்' என உடம்படாது உரைத்த தாம். ஆகவே, 'அங்ஙனமாயினும், சூர் உறு சோலையின் வாய்த் தூங்கிருளில் வரற்பாற்றன்று' என்றுளாம். மஞ்சு இவரும் - மேகம் பரக்கும். சூர் உறு - அச்சந்தரும் தெய்வம் பொருந்திய. வரல் பாற்று அன்று - வருதல் செய்யற்பாலது அன்று. தூங்கிருள் - செறிந்த இருள். 'இருட் கண்' என ஏழாவது இறுதிக்கண் தொக்கது.

போக மாலையாகிய தாரும், தவக்கோலமாகிய சடைமுடியும் கூறிய முகத்தால், சிவபெருமான் ஒன்றொடொன்று ஒவ்வாத வேடத்தைத் தான் ஒருவனே உலகின்பொருட்டுக் கொண்டு நிற்றல் கூறப்பட்டது. அதனானே, அவனது உண்மை இயல்பு வேறு என்பதும் குறிக்கப்பட்டதாம்.

177. தன்னுட் கையாறு எய்திடு கிளவியாவது, ஆறு பார்த்துற்ற அச்சம் கூறியபின்னும் தலைமகன் வரையாது ஒழுக,

31. நிலைகண் டுரைத்தல்

பற்றுன் றிலார்பற்றுந் தில்லைப் பரன்பரங் குன்றில்நின்ற
புற்றேன் றரவன் புதல்வன் என நீ புகுந்துநின்றால்,
மற்றுன்று மாமலர் இட்டுன்னை வாழ்த்திவந் தித்தலன்றி
மற்றென்று சிந்திப்ப ரேல்வல்ல ளோமங்கை வாழ்வகையே. 178

அல்ல குறி முதலியவற்றான் அவனை எதிர்ப்படமாட்டாது வருந்தி, அவ் வருத்தத்தை யாதானும் ஒன்றினிடத்துக் கூறுதல், இதற்குக் கொளு :-

மின்னுப் புரையும் அந்நுண் மருங்குல்
தன்னுட் கையா றெய்திடு கிளவி.

''விண்தலை'' என்பதில் தலை, ஏழாவதன் பொருட்கண் வந்த இடைச்சொல். இவ்விடத்து நிலைமொழி, ஈற்று ணகரம் திரியாமை, இரண்டாவதற்குத் திரிபோதிய குறிப்பானே பெறப்படும், 'விண்தலை உள்ள யாவர்க்கும் வேந்தர்' என்க. ''மெல்லங் கழி'' என்றதில் அம் சாரியை. 'கழியைச் சூழ்ந்த புன்னை' என்க. கண்டல் - தாழை. ''கண்டலையே'' என்ற பிரிநிலை ஏகாரம், சான்றாகமாட்டாத அதன் தன்மையைக் குறித்தது. கரி - சான்று, 'கரியாகக் கொண்டு' என ஒருசொல் வருவிக்க, ''புன்னை'' என்றதில், 'கீழ்' என்னும் பொருள் பட வரும் கண் ணுருபு விரிக்க. 'கள்வர் வரக் கண்டிலையே' என்க. 'கண்டலையே கரியாக் கொண்டு கலந்தது, தம் சொற் பிழைத்தற்கேபோலும்' என்னும் கருத்தினால், 'கள்வர்' என்றாள். மங்குல் வாய் - ஆகாயத்திடத்தை. மண்டலம் - சந்திர மண்டலம். ஒரு வாசகம் - உய்யும் வழி ஒன்று. இதற்கும் பயன், மேற் கூறப்பட்டனவே.

'எல்லாத்தேவர்க்கும் வேந்தர்' என்றதனால், சிவபெருமான் தனது அதிகார சத்தியின் கூறுகளில் ஒவ்வொன்றை ஒவ்வொரு தேவரிடம் வைத்து நடத்தும் முதற் கடவுளாதல் கூறப்பட்டது.

178. நிலைகண்டுரைத்தலாவது, தலைமகள் தன்னுட் கையாறு எய்திக் கிளந்ததனைச் சிறைப் புறமாக நின்று கேட்ட தலைமகன் ஆற்றாளாய் அவளது இல்லத்து எல்லைக்கண் புகுந்து

நிற்க, தோழி அவனை எதிர்ப்பட்டுநின்று, 'நின்னை இங்குள்ளார் காணின் பெரியோருகை நினைந்து வழிபடாது பிறவாறு கருதின், இவள் உயிர் வாழாள் ; ஆதலின், இவ்வாறு ஒழுகற்க' என வரைவு தோன்றக் கூறுதல். இதற்குக் கொளு :-

நீன்வின் அழிந்தவள் மின்னிடை மாதென
வரைவு தோன்ற உரைசெய்தது.

பற்று ஒன்று இல்லார் - உலகப் பொருள்களில் விருப்பம் சிறிதும் இல்லாதவர். பற்றும் - அது நீங்குதற் பொருட்டுப் பற்றுகின்ற. விருப்பமின்மையாவது, உவர்ப்பு. உலகப் பொருள்களில் உவர்ப்புத் தோன்றியவழியும் அவற்றை முற்றத் துறத்தலும், பின்னும் 'யான்' என்பது நீங்குதலும் எல்லாப்பொருட்கும் பற்றாய இறைவனைப் பற்றியவழியன்றிக் கூடாமையின், 'அவர் பற்றும் பரன்' என்று அருளிச் செய்தார். "பற்றுக பற்றற்றான் பற்றினை" என்ற திருவள்ளுவர், பின்னும் "அப் பற்றைப் பற்றுக விடற்கு" என்றருளியதும் இக் கருத்தே பற்றியாம் (குறள் - 350).

" முற்று வெண்டிங்கள் முதல்வன் பாதமே
பற்று நின்றாரைப் பற்று பாவமே "

என்று அருளிச் செய்தார் திருஞானசம்பந்தர் (திருமுறை - 1 - 80 - 1.). இதன்கண், "பாவம்" என்றது, 'யான்' என்னும் முனைப்பை என்பது,

" காண்பான் ஒளிஇருளிற் காட்டிடவும் தான்கண்ட
விண்பாவம் என்னுள் விடும் "

என்னும் திருவருட்பயனுல் அறியப்படும் (63). எல்லாப் பொருட்கும் பற்றுக்கோடாய் நிற்பவன் என்பதனை உணர்த்தவே இறைவனை, "முற்று வேண்டிங்கள் முதல்வன்" என்றார் என்க.

"பற்றும்" என்னும் பெயரெச்சம், "பரன்" என்னும் செயப்படுபொருட்பெயர் கொண்டது. "புற்று ஒன்று அரவன் புதல்வன்" என்றது, 'முருகன்' என்னுந் துணையாய் நின்றது. மல் துன்று மாமலர் - வளம் பொருந்திய சிறந்த மலர்

32. இரவுறு துயரங் கடலோடு சேர்த்தல்

பூங்கணை வேளைப் பொடியாய் விழவிழித் தோன்புலியூர்
ஓங்கணை மேவிப் புரண்டு விழுந்தெழுந் தோலமிட்டுத்
தீங்கணைந் தோர்அல்லுந் தேருய் கலங்கிச் செறிகடலே
ஆங்கணைந் தார்நின்னை யும்முள ரோசென் றகன்றவரே. 179

வந்தித்தல் அன்றி - வணங்குதலை யொழித்து. மற்றொன்று - இவள் காரணமாக வந்தாய் என்று. 'இவ்வாறு இங்குள்ளார் நினைப்பராயின், நின் பெருமை சிதையும்; அச் சிதைவிற்கு இவள் உயிர் வாழாது இறந்து படுவாள்' எனக் கூறினாள் என்க. 'வந்தித்தலே பெரும்பான்மை' என்பாள், "வந்தித்தலன்றி" என்றாள்.

சிவபெருமான் பற்றற்றவரால் பற்றப்படுபவன் என்பது கூறப்பட்டது.

179. இரவுறு துயரம் கடலொடு சேர்த்தலாவது, இடையீடுகள் பலவற்றால் தலைமகனை எதிர்ப்படாது வருந்துகின்ற தலைவி, தான் இரவுறு துயரத்தைக் கடல்மேல் வைத்துக் கூறுதல். இதற்குக் கொளு :-

எறிவேற் கன்னி இரவுறு துயரம்
செறிகடலிடைச் சேர்த்தி யுரைத்தது.

'வேளை விழித்தோன்' என இயையும். விழித்தோன் - பார்த்தவன். 'புலியூரின்கண்' என உருபு விரித்து, புரண்டு விழுதல் முதலியவற்றோடு இயைக்க. 'கலங்காது தெளிவு பெறுதற்குரிய புலியூரில் இருந்தும், தெளியாது கலங்குகின்றாய்' என்பாள், "புலியூரின்கண் புரண்டு விழுந்து" என்றாள். "பூங்கணை வேளைப் பொடியாய் விழ விழித்தோன் புலியூர்" என்றதும், 'காமத்தாற் கலங்கலாகாத இடம்' என்பது உணர்த்துதற்பொருட்டேயாம். இவற்றாலெல்லாம் தன்னிலைமை கூறினாளாயினும், சிறைப்புறமாக நிற்கும் தலைவன் தெருண்டு வரையாமையும் கூறினாள் என்க. புரண்டு விழுதல் முதலிய பலவும் தனிமை எய்தினார்க்கும் உரியவாய்ப் பொதுப்பட வருவன ஆகலின், "அணை" என்றதற்கு, 'கரை' எனவும், 'பஞ்சணை

33. அலர் அறிவுறுத்தல்

அலரா யிரந்தந்து வந்தித்து மால்ஆ யிரங்கரத்தால்
அலரார் கழல்வழி பாடுசெய் தாற்கள வில்லொளிகள்
அலரா இருக்கும் படைகொடுத் தோன்தில்லை யான்அருள்போன்
றலராய் விளைகின்ற தம்பல்கைம் மிக்கைய மெய்யருளே. 180

எனவும் இருபொருள் கொள்க. "ஓர் அல்லும்" என்றது, 'இரவு முழுதும்' என்றதன்றி, எண் குறித்ததன்று. 'கலங்கித் தேருய்' என மாற்றி, 'ஆதலின்' என்னும் சொல்லெச்சம் வருவிக்க. செறி கடல் - கரைகடவாது நிற்கும் கடல். "செறி கடலே" என்றதனை முதலிற் கொள்க. 'நின்னையும் அணைந்தார் சென்று அகன்றவர் ஆங்கு உளரோ' எனக் கூட்டி, 'நின்னை அணைந்தாரும் அகன்று சென்றவர்' என உம்மை பிரித்துக் கூட்டியும், பின்முன்னுக்கியும் உரைக்க. "சென்றவர்" என்றதனை, 'சென்றவராய்' என எச்சப்படுத்துக. "ஆங்கு" என்றது, 'சேய்மையதாகிய தம் இடத்து' என்றவாறு; இதனை, 'அசைநிலை' எனினுமாம்.

சிவபெருமானை அடைந்தோர் காமவெகுளி மயக்கங்களால் தாக்குண்ணுர் என்பது கூறப்பட்டது. இதனை, "பொய்ம் மாயப் பெருங்கடலில்" என்னும் திருத்தாண்டகப் பதிகத்தா னும் உணர்க. (திருமுறை - 6. 27.).

180. அலர் அறிவுறுத்தலாவது, தலைமகள் இரவுறு துயரம் கடலொடு சேர்த்தி யுரைத்தலைச் சிறைப்புறமாக நின்று கேட்ட தலைமகன் குறியிடத்துச் சென்று நிற்க, தோழி அவனை எதிர்ப்பட்டு நின்று, 'நின் ஒழுக்கம் எமக்கு அலராகின்றது' எனக் கூறி வரவு விலக்கல். இதற்குக் கொளு :-

அலைவேல் அண்ணல் மனமகிழ்அருள்
பலரால் அறியப் பட்டதென்றது.

அலர், தாமரை மலர். "மால்" என்றதனை முதலிற் கொள்க. அலர் ஆர் கழல் - மலர்போலும் திருவடி. மாலுக்கு ஆயிரம் கரம் கூறியது, வேண்டிய வடிவம் கொள்வோனுதல் பற்றி. 'மால் செய்தாற்கு' என்றது, 'செய்தானுகிய

மாலுக்கு' என்னும் பொருளது. ''ஒளிகள்'' என்றது கதிர்களை. அலரா இருக்கும் - விரியாநின்ற. படை, சக்கரம். 'ஐய நின் மெய்யருள்' என்று எடுத்துக்கொண்டு, 'அம்பல் கைம்மிக்கு அலராய் விளைகின்றது' என முடிக்க. ''ஆய்'' என்றது, 'அம்பல்' என்றதனோடும் இயையும். 'அரும்பல்' என்பது, 'அம்பல்' என மரூஉவாயிற்று. இது, பழிச்சொல் சிறிதே தோன்றுதலாம். அலர், அஃது எங்கும் பெருகிப் பரத்தல். 'இது நீங்குதற்கு ஆவது செய்க' என்பது குறிப்பெச்சம். ஆவது, வரைதல்.

காரணக் கடவுளர் என்பார் சிவபெருமானது ஆணைபெற்று நிற்பவரேயாதல் கூறப்பட்டது.

என்று கூடுமப் பருவமென் றியம்பில்
யாமி ருந்துள விடந்தொறு மிறைஞ்சி
நன்றி சேர்சிவ புண்ணியம் புரியு
நன்மை யாலது நணுகுமென் றறிநீ
மன்றி லானவெம் மியல்புனக் குரைக்கின்
மாசி லாவுரு மூன்றவற் றருவம்
ஒன்று பேரொளி யொன்றருவுருவ மொன்று
தானரு ளுருவ மென் றுணர்வாய். 107

இந்த மூன்றினி லுருவுனக் கறிய
விசைந்த பேரரு ளியம்புமிவ் வுருவம்
வந்தி யாவரும் பணிவதற் கெளிதாய்
வரமெலாந்தர வருமரு வுருவம்
பந்த மாகிய மலவிரு ளகற்றும்
பரிதியாவுள பல் லுயிர்க் குயிராய்
அந்த மாதிக ளளப்பரு மொளியா
யமல மாகுமவ் வருவெனு முருவம். 108

— திருவாதவூரடிகள் புராணம்.

15 ஒருவழித் தணத்தல்

[ஒருவழித் தணத்தலாவது யாதெனின், இரவுக்குறிக்கண் தோழியால் அலர் அறிவுக்கப்பட்ட தலைமகன், அதன்பின் தெருண்டு வரைதல் சிறப்பு; தெருளானாயின், அவ்வலர் அடங்குதற் பொருட்டுச் சிலநாள் வாராது ஓரிடத்தே பிரிந்திருப்பான்; அல்லது தலைவியை உடன்கொண்டு செல்வான்; அல்லது தோழியால் வரைவு முடுக்கப்படுவான். அவற்றுள் ஓரிடத்துப் பிரிந்திருத்தலே ஒருவழித் தணத்தலாம். ஓரிடமாவது, வேற்று நாடாகாது, தம் நாடேயாகிய தலைவன் ஊர். இதனை அடிகள் பதின்மூன்று துறைகளாக அருளிச் செய்வர். அவற்றைக் கூறும் நூற்பா வருமாறு :-

1 அகன்றணைவு கூறல், 2 ஆழியொடு கேட்டல்,
3 ஆழியொடு புலத்தல், 4 அன்னமொ டாய்தல்,
5 ஆழிக் குரைத்தல், 6 ஆழி இழைத்தல்,
7 சுடரொடு புலம்பல், 8 பொழுதுகண்டு மயங்கல்,
9 பையு ளெய்தல், 10 பரிவுற் றுரைத்தல்,
11 அன்னமொ டழிதல், 12 வரவுணர்ந் துரைத்தல்,
13 வருத்தங் கூறல் வருபதின் மூன்றும்
திருத்திய ஒருவழித் திறனு குமே.]

1. அகன்றணைவு கூறல்

புகழும் பழியும் பெருக்கிற் பெருகும்; பெருகிநின்று
நிகழும் நிகழா நிகழ்த்தின்,அல் லால்:இது நீநினைப்பின்,
அகழும் மதிலும் அணிதில்லை யோன்அடிப் போதுசென்னித்
திகழும் அவர்செல்லல் போல்இல்லை யாம்பழி சின்மொழிக்கே.

---

181. அகன்றணைவு கூறலாவது, தலைமகனுக்கு அலர் அறிவுறுத்த தோழி, 'நீ சிலநாள் நீங்கி நின்று வருவையாயின் இவ்வலர் அடங்கும்' என வரைவு தோன்றக் கூறுதல். இதற்குக் கொளு :-

வழிவேறு படமன்னும் — பழிவேறு படுமென்றது.

"நிகழ்த்தின்" என்றதை "நின்று" என்றதன் முன்னும், 'அல்லால்" என்றதை, "நிகழா" என்றதன் முன்னும்

உ. கடலோடு வரவுகேட்டல்

ஆரம் பரந்து திரைபொரு நீர்முகில் மீன்பரப்பிச்
சீரம் பரத்திற் றிகழ்ந்தொளி தோன்றுந் துறைவர்சென்றார்;
போரும் பரிசு புகன்றன ரோ? புலி யூர்ப்புனிதன்
சீரம்பர் சுற்றி எற்றிச்சிறந் தார்க்குஞ் செறிகடலே. 182

கூட்டுக. நின்று நிகழும் - என்றும் அழியாது நின்று விளங்கும். நிகழா - அவ்வாறு விளங்கா. நிகழ்த்தின் - அவற்றிற்கு ஏதுவானவற்றை இடைவிடாது செய்தால். இது நீ நினைப்பின் - இவ்வுண்மையை நீ அறிந்தால். அஃதாவது, 'அறிந்து அலருக்குக் காரணமாவனவற்றைச் செய்யாதொழிந்தால்' என்றபடி அணி - அழகு செய்கின்ற. செல்லல் - துன்பம்.

சிவபெருமானது திருவடிப்போதினைச் சென்னியில் வைத்திருப்பவருக்குத் துன்பங்கள் நிகழா என்பது கூறப்பட்டது.

182. கடலொடு வரவு கேட்டலாவது, தோழி அகன்றணைவு கூறியவாற்றால் தலைவன் ஒருவழித் தணப்ப, அதற்கு ஆற்றாத தலைமகள், அவன் வரவு பற்றிக் கடலொடு வினவுதல். இதற்குக் கொளு :-

மணந்தவர் ஒருவழித் தணந்ததற் கிரங்கி
மறிதிரை சேரும் எறிகடற் கியம்பியது.

ஆரம் - முத்து. 'நீர் திகழ்ந்து' என இயையும். 'முகிலையும், மீனையும் பரப்பிச் சீர்த்த அம்பரத்தைப்போல' என்க. சீர்த்த - அழகிய. அம்பரம் - ஆகாயம். 'சேய்த்தாகிய ஆகாயம், அணித்தாய் வந்ததுபோலத் தோன்றும் துறையை உடையவர்' என்றதனால், 'சேய்மையிடத்தாராகிய அவர், அணிய இடத்தார் போல வரும இயல்புடையார்' என உள்ளுறை யுவமங் கூறினாள். "நீர் அம்பரத்தின் திகழ்ந்து ஒளிதோன்றும்" என்ற ஏனை உவமம் தலைவனுக்காகாது, துறைக்கு ஆயினமையின் உள்ளுறை யுவமம் கொள்ளுதற்கு இழுக்கின்று. "சென்றார்", என்றதன்பின், 'சென்ற ஞான்று' என்பது வருவிக்க. 'போதரும்' என்பது, இடைக்குறைந்து நின்றது. புனிதன் - தூயோன்; மலம் இல்லாதவன். அம்பர், ஒரு சிவ தலம்.

சிவபிரானது புனிதத் தன்மை கூறப்பட்டது.

3. கடலோடு புலத்தல்

பாணிகர் வண்டினம் பாடப்பைம் பொன்தரு வெண்கிழிதம்
சேணிகர் காவின் வழங்கும்புன் னைத்துறைச் சேர்ப்பர்திங்கள்
வாணிகர் வெள்வளை கொண்டகன் றார்;திறம் வாய்திறவாய் ;
பூணிகர் வாளர வன்புலி யூர்சுற்றும் போர்க்கடலே. 183

4. அன்னமோ டாய்தல்

பகன்றா மரைக்கண் கெடக்கடந் தோன்புலி யூர்ப்பழனத்
தகன்றா மரைஅன்ன மே,வண்டு நீல மணியணிந்து
முகன்றாழ் குழைச்செம்பொன் முத்தணி புன்னைஇன் னும்உரையா
தகன்றார் அகன்றே யொழிவர்கொல் லோ நம் அகன்துறையே.

---

183. கடலொடு புலத்தலாவது கடலொடு வரவு கேட்ட தலைமகள், அது வாய்திறவாமையின், அதனொடு வெறுத்துக் கூறுதல். இதற்குக் கொளு :-

செறிவளைச் சின்மொழி — எறிகடற் கியம்பியது.

பாண் - பாணர் சாதி. "பொன்" என்றது தாதினையும், "கிழி" என்றது மலரையும் என்க. சேண் நிகர் - உயர்ந்து விளங்கும். காவின் - சோலையினின்றும். "வழங்கும்" என்றது, "புன்னை" என்றததனோடே முடியும். 'அவர் திறம்' என ஒருசொல் வருவிக்க. "பாண் ... .சேர்ப்பர்" என்றதில், 'தம் துறைப் புன்னையும் இங்ஙனம் கொடையுடையதாக, தாம் என் நலத்தைக் கொண்டு போயினர்; அவர் திறத்து நீ ஒன்று கூறுகின்றிலை' எனவும், "பூண்நிகர் .... கடலே" என்றதில், 'கொடிய அரவிற்கும் அருள்செய்தவனது புலியூரைச் சூழ்ந்திருந்தும் நீ நாள்தோறும் பயிலும் என்மாட்டு அன்பிலையாகின்றாய்' எனவும் இறைச்சிப் பொருள் கொள்க

சிவபெருமான் தன்னை அடைந்தவரை நலப்படுத்தி அருள் புரிதல் கூறப்பட்டது.

184. அன்னமொடு ஆய்தலாவது, கடலோடு புலந்து கூறிய தலைமகள், தான் வளர்த்த புன்னை தானே ஒன்று

5. தேர்வழி நோக்கிக் கடலோடு கூறல்

உள்ளும் உருகி, உரோமஞ் சிலிர்ப்ப உடையவன் ஆட்
கொள்ளும் அவரில்ஓர் கூட்டந்தந் தான்குனிக் கும்புலியூர்
விள்ளும் பரிசுசென் றூர்வியன் தேர்வழி தூரல்கண்டாய் ;
புள்ளுந் திரையும் பொரச்சங்கம் ஆர்க்கும் பொருகடலே. 185

சொலற்பாலதாக, ஒன்றும் சொல்லாது மகிழ்ந்து நிற்றல்கண்டு, அதனோடு ஒன்றும் கூறாது, அதன்மேல் உள்ள அன்னத்தோடு உசாவிநிற்றல். "இடைநின் றியலும் சாரியை இயற்கை உடைமையும் இன்மையும் ஒடுவயின் ஒக்கும்" (தொல் எழுத்து132) என்பதனால், 'அன்னத்தொடு' என வருதலே யன்றி, 'அன்னமொடு' என வருதலும் வழக்காயிற்று இதற்குக் கொளு :-

மின்னிடை மடந்தை — அன்னமோ டாய்ந்தது.

பகன் - ஆதித்தர் பன்னிருவருள் ஒருவன். தக்கன் வேள்வி யில் அவன் கண்ணைப் பறித்தமையை,

"உண்ணப் புகுந்த பகன்ஒளித் தோடாமே
கண்ணைப் பறித்தவா றுந்தீபற"

என்ற திருவாசகத்தானும் அறிக (306). கடந்தோன் - வென்றவன். பழனம்-வயல். "முகன், குழை" என்றவை 'முகம், முன்' எனவும், 'காதணி, தளிர்' எனவும் இருபொருள் தந்து சிலேடையாயின. நீலமணியாவது வண்டும், செம்பொன்னாவது தாதும், முத்தாவது அரும்புமாகக் குறிக்கப்படுதற்கண், வண்டு, பிறிதின்கிழமையாய் இனிது விளங்காமையின் அதனை எடுத்துக் கூறி, ஏனையவற்றை வாளாதே கூறினர். "குழை" என்பது சிலேடையால் இருபொருளும் உணர்த்திற்று. இன்னும் - இந் நிலையிலும். 'உரையாது; அதுகிடக்க' என்க. 'நம் அகன் துறை அகன்றார் அகன்றே ஒழிவரோ? நீ சொல்' என உரைக்க.

சிவபெருமான் தன் ஆணைவழி நில்லாதவரை ஒறுத்தும் நிற்பித்தல் கூறப்பட்டது.

185. தேர்வழி நோக்கிக் கடலோடு கூறலாவது, அன்ன மொடு உசாவியவிடத்து அதுவும் ஒன்றும் கூறாமையின்,

6. கூடல் இழைத்தல்

ஆழி திருந்தும் புலியூ ருடையான் அருளின்அளித்
தாழி திருத்தும் மணற்குன்றின் நீத்தகன் றூர்வருகென்
றூழி திருந்திச் சுழிக்கணக் கோதிநை யாமல்ஐய
வாழி திருத்தித் தரக்கிற்றி யோஉள்ளம் வள்ளலையே. 186

'தலைவர் இனி வாரார்; ஆதலின், அவர் முன் வந்து சென்ற தேர்வழிச் சுவட்டை நோக்கி உயிர்வாழ்வேன்; ஆதலின் இதனை அழியாதொழி' எனக் கடலொடு கூறுதல். இதற்குக் கொளு ;-

மீன்தோய் துறைவர் மீளு மளவும்
மான்தேர் வழியை அழியேல் என்றது.

"உள்ளும்" என்ற உம்மையால், 'மெய்யும்' என்பது தழுவப்பட்டது. "சிலிர்ப்ப" என்றது, "ஆட்கொள்ளும்" என்பதனோடு முடியும். "உடையவன்" என்றது, 'தான்' என்னும் பொருட்டாய் நின்றது. அவரில் - அவரிடத்து, ஓர் கூட்டம் - ஒரு நட்பு. 'பலருக்குத் தந்ததுபோல எனக்கும் ஒரு நட்புத் தந்தான்' என்றதாம். 'எனக்கும் தந்தான்' என வருவித் துரைக்க. புலியூர் விள்ளும் பரிசு சென்றார் - புலியூர் எம்மை விட்டு நீங்கினாற்போல நீங்கினர்; என்றது இல் பொருள் உவமையாய், 'இனி எனக்கு வாழ்வில்லையாம்படி செய்தார்' என்னும் பொருளைத் தந்தது. தூரல் - தூர்க்காதே. கண்டாய், முன்னிலையசை. புள் - பறவைகள். பொர - போர் செய்ய. புள்ளும், திரையும் போர் செய்ய, அதற்குச் சங்கினை எடுத் தொலிக்கும் கடலாகையால், நீ இதுவும் செய்வாய்' என்பாள், "புள்ளும் திரையும் பொரச் சங்கம் ஆர்க்கும் பொருகடலே" என்றாள். இது தற்குறிப்பேற்றம்.

சிவபெருமான் தன் அடியவரை உள்ளம் உருக ஆட்கொள் ளும் முறைமையும், அங்ஙனம் ஆட்கொள்ளப்பட்டாரது நட்புப் பெறற்கரிதாதலும், அவன் காட்சியின்றி அவன் அடியார் வாழ்வு பெருமையும் கூறப்பட்டன.

183. கூடல் இழைத்தலாவது, தேர் வழி நோக்கிக் கடலோடு கூறிய தலைமகள், பின் கூடல் தெய்வத்தை வாழ்த்திக் கூடல் இழைத்தல். 'கூடல்' என்பது, கண்ணை மூடிக்கொண்டு

7. சுடரோடு புலம்பல்

கார்த்தரங் கந்திரை தோணி சுருக்கடல் மின்எறிவோர்
போர்த்தரங் கந்துறை மானுந் துறைவர்தம் போக்கும்மிக்க
தீர்த்தரங் கன்தில்லைப் பல்பூம் பொழிற்செப்பும் வஞ்சினமும்
ஆர்த்தரங் கஞ்செய்யு மால்;உய்யு மாறென்கொல் ஆழ்சுடரே.

கைவிரலால் மணலில் வரையும் வட்டம். அவ்வட்டம் தொடங்கிய இடம் தோன்றுதவாறு இருமுனையும் கூடி ஒன்றாகிவிடுமாயின், பிரிந்தவர் வந்து கூடுவார் எனவும், அவ்வாறு கூடாது வேறு காணப்பட்டு நிற்குமாயின், பிரிந்தவர் வாரார் எனவும் கொள்ளுதல் மகளிர் வழக்கு. அவ்வட்டம் அங்ஙனம் மேல் நிகழ்வதை அறிவித்தல், அதற்குத் தலைமை பூண்டு நிற்கும் தெய்வத்தால் என்பது கொள்கையாதலின், அத்தெய்வமே கூடல் தெய்வம் என்க. இதற்குக் கொளு :-

நீடலந் துறையிற் — கூடல் இழைத்தது

ஆழி, ஆகுபெயர்; கடலிடத்தாகிய நிலவுலகம். நிலவுலகத்துள்ளாரை, 'நிலவுலகம்' என்றது பான்மை வழக்கு. திருத்தும் - ஆட்கொள்ளும். 'இந்தப் பூமி - சிவன் உய்யக் கொள்கின்றவாறு'' என்ற திருவாசகத்தை நோக்குக (377). அருளின் - அருளைப்போல. அளித்து - இன்பம் உண்டாகத் தலையளிசெய்து. ஆழி திருத்தும் மணற்குன்று, கடலால் செப்பம் செய்யப்படுகின்ற மணற்குன்று. 'குன்றின்கண் நித்து அகன்றார்' என்க. வருக என்று - 'வருவாராக' என்று சொல்லி. ஆழி திருத்தி - கூடல் இழைத்து, சுழிக்கணக்கு ஓதி - அங்ஙனம் இழைக்கப்பட்டவை எத்தனை என்பதை எண்ணிச் சொல்லிக்கொண்டு. நையாமல் - வருந்தாதபடி. ''ஐய'' என்றது கூடல் தெய்வத்தை. வாழி - வாழ்வாயாக. வள்ளலை உள்ளம் திருத்தித் தரக்கிற்றியோ - தலைவரை மனம் மாற்றிக் கொணர்ந்து தரவல்லாயோ. ''வள்ளல்'' என்றது, பன்மை ஒருமை மயக்கம். சொற்பின் வருநிலை.

சிவபெருமான் நிலவுலகத்துள்ளார்க்குப் பேரருள் செய்தல் கூறப்பட்டது.

187. சுடரொடு புலம்பலாவது, கூடல் இழைத்து வருந்திய தலைமகள், ஞாயிறு மறைதலைக் கண்டு, 'நீயும் போகின்

8. பொழுதுகண்டு மயங்கல்

பகலோன் கரந்தனன்; காப்பவர் சேயர் ;பற் றற்றவர்க்குப்
புகலோன் புகுநர்க்குப் போக்கரி யோன்எவ ரும்புகலத்
தகலோன் பயில்தில்லைப் பைம்பொழிற் சேக்கைகள்
[நோக்கினவால்
அகலோங் கிருங்கழி வாய்க்கொழு மீனுண்ட அன்னங்களே. 188

ருய்; நான் உய்வது எவ்வாறு' என அதனொடு புலம்புதல்.
இதற்குக் கொளு :-

குணகடல் எழுசுடர் குடகடற் குளிப்ப
மணமலி குழலி மனம்புலம் பியது.

கார்த் தரங்கம் - கரிய அலை. திரை - அலைகின்ற. கடல் என்றதை, ''மீனெறிவோர்'' என்றதன்பின் கூட்டுக, ''போரை'' என்னும் ஐயுருபும், ''தரும்'' என்னும் உம்மையும் தொகுக்கும் வழித் தொகுத்தலாயின. போரைத் தரும் அங்கம், சதுரங்க சேனை: அவை இவை என்பதும், தரங்கம் முதலியவற்றுக்கு அவற்றுள் உவமையாவன இவை என்பதும் இளந்து கூறுதவழியும் உய்த்துணர்தல் எளிதாதல் பற்றி வகுத்துக் கூறுது, 'போர்த் தரங்கம் மானும்' எனத் தொகுத்தோதிப் போயினர், 'கடல் போர்த் துறைமானும்' என்க. 'சார்ந்தார்க்கு அச்சந்தரும் துறை வராதலின், இவரும் தம்மைச் சார்ந்தவர்க்கு அச்சம் விளைத்தார்' என இறைச்சிப் பொருள் கொள்க. போக்கு - பிரிவு. இர்த்தர் - தூயோர்; என்றது மால் அயன் முதலிய தேவர்களை. அங்கன் - எலும்பை அணிந்தவன், 'பொழிற்கண்' என உருபு விரிக்க. வஞ்சினம் - சூள். ஆர்த்தர் - நோயுடையவர். 'அவரது மேனி போலும் மேனியை எனக்கு உண்டாக்கும்' என்க. ஆழ்சுடர் - கடலுள் மறைகின்ற ஞாயிறு.

சிவபெருமான் காரணக் கடவுளர் முதலிய கடவுளரையும் ஒடுக்கித் தான் ஒடுங்காது நிற்றல் கூறப்பட்டது.

188. பொழுதுகண்டு மயங்கலாவது, சுடரொடு புலம்பிய தலைவி, பின் மாலைப் பொழுதைக கண்டு கலங்கிக் கூறுதல். இதற்குக் கொளு :-

9. பறவையோடு வருந்தல்

பொன்னும் மணியும் பவளமும் போன்று பொலிந்திலங்கி
மின்னுஞ் சடையோன் புலியூர் விரவா தவரின்உள்நோய்
இன்னும் அறிகில வால்என்னை பாவம், இருங்கழிவாய்
மன்னும் பகலே மகிழ்ந்திரை தேரும்வண் டானங்களே. 189

மயல்தரு மாலை வருவது கண்டு
கயல்தரு கன்னி கவலை யுற்றது.

காப்பவர் - எனக்கு வரும் துன்பத்தை வாராமற் காப்பவர் ; தலைவர். சேயர் - சேய்மையிடத்தராயினர். புகலோன் - புகலிடமாய் இருப்பவன். போக்கு அரியோன் - நீங்குதற்கு அரியோன். புகல - புகழ்ந்து பேச, தகலோன் - தகுதலை உடையவன். சேக்கைகள் - இருப்பிடங்கள். அகல் ஓங்கு இருங்கழிவாய் - அகன்ற அலை ஓங்குகின்ற, பெரிய கழிக்கண். 'இனி செய்வேன்' என்பது குறிப்பெச்சம்.

சிவபெருமானது பெருமைகள் பல இதனுட் கூறப்பட்டமை வெளிப்படை.

189. பறவையோடு வருந்தலாவது, பொழுதுகண்டு மயங்கிய தலைவி, பின் நீர்ப்பறவையொடு வருந்திக் கூறுதல். இதற்குக் கொளு :-

செறிபிணி கைம்மிகச் சிற்றிடைப் பேதை
பறவைமேல் வைத்துப் பையுள்எய் தியது.

மணி - மாணிக்கம். பொன் முதலிய மூன்றனோடும், பொலிதல் முதலிய மூன்றையும் நிரல் நிறையாக இயைத்துக் கொள்க. 'விரவாதவரைப்போல உறும் உள்நோய்' என ஒரு சொல் வருவித்துக் கொள்க. "என்னை பாவம்" என்றது, அவற்றின் அறியாமை நோக்கி இரங்கியதாம். மன்னும் பகலே - மிக்க பகலிடத்தே 'பகற்காலமெல்லாம் இரை தேர்தலால் அறிந்தனவில்லை எனினும், இப்பொழுது அறியல் வேண்டும்' என்பது கருத்து. 'வண்டானங்கள் அறிந்தில' என இயையும்.

சிவபெருமானது தவக்கோலமாகிய சடைமுடியின் சிறப்பு வகுத்துரைக்கப்பட்டது.

10. பங்கயத்தோடு பரிவுற்றுரைத்தல்

கருங்கழி காதற்பைங் கானலில் தில்லையெங் கண்டர் விண்டார்
ஒருங்கழி காதர மூவெயில் செற்றஒற் றைச்சிலைசூழ்ந்
தருங்கழி காதம் அகலும்என் றூழ்என் றலந்து கண்ணீர்
வருங்கழி காதல் வனசங்கள் கூப்பும் மலர்க்கைகளே. 190

11. அன்னமொ டழிதல்

மூவல் தழீஇய அருள்முத லோன் தில்லைச் செல்வன்முந்நீர்
நாவல் தழீஇயஇந் நானிலந் துஞ்சும்; நயந்தஇன்பச்
சேவல் தழீஇச்சென்று தான் துஞ்சும், யான்துயி லாச்செயிர்எம்
காவல் தழீஇயவர்க் கோதா தளிய களியன்னமே. 191

---

190. பங்கயத்தொடு பரிவுற்றுரைத்தலாவது, பறவையொடு வருந்திய தலைமகள், பின், தாமரை மலர்கள் குவிதலைக் கண்டு, 'இவை, யான் வருந்தாதபடி விரைய வரவேண்டும் என ஞாயிற்றைத் தொழுகின்றன' என அவற்றின்மேல் அன்புற்றுக் கூறுதல். இதற்குக் கொளு;-

முருகவிழ் கானல் — லோடுபரி வுற்றது.

'கழியினும், கானலினும் வனசங்கள் மலர்க் கைகள் கூப்பும்' என்க. கண்டர் - சிறந்த மிடற்றையுடையவர். விண்டார் - பகைவர். "ஒருங்கு அழி" என்றதில், 'அழிய' என்பதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. காதரம் - அச்சத்தைத் தருகின்ற. சிலை, மேருமலை, அருங் கழி காதம் அகலும் - கடத்தற்கரிய மிக்க (பல) காத தூரங்களைக் கடக்கும். என்றூழ் - ஞாயிறு. அலந்து - எனக்காக வருந்தி. இதுவே, 'அலர்ந்து' என்பதன் இடைக் குறையாய், 'மலர்ந்து' என்னும் பொருளையும் தந்தது. கண்ணீர் - கண்ணினின்றும் வரும் நீர்; கள்ளாகிய நீர்; இவ்விருபொருளும் கொள்க. வரும் கழி காதல் வனசங்கள் - வருதற்கு ஏதுவாகிய மிக்க காதலையுடைய தாமரைகள். மலர்க்கைகள் - மலராகிய கைகள், 'இது விருப்புதற்குரியது' என்பது குறிப்பெச்சம்.

சிவபெருமானது வில், சூரிய சந்திரர் முதலியோர் வலம் வரும் பெருமை யுடையதாதல் கூறப்பட்டது

191. அன்னமொடு அழிதலாவது, பங்கயத்தோடு பரிவுற்றுரைத்த தலைவி, இடையாமத்துக்கண் யாவரும் உறங்கத்

12. வரவுணர்ந் துரைத்தல்

நில்லா வளை :நெஞ்சம் நெக்குரு கும்;நெடுங் கண்துயிலக்
கல்லா, கதிர்முத்தங் காற்றும் எனக்கட் டுரைக்க,தில்லைத்
தொல்லோன் அருள்கள்இல் லாரிற்சென் றூர்சென்ற
[செல்லல்கண்டாய்
எல்லார் மதியே, இதுநின்னை யான்இன் றிரக்கின்றதே. 192

தான் உறங்காது அன்னத்தை நினைத்து அழிந்து கூறுதல். இதற்குக் கொளு :-

இன்னகையவள் இரவருதுயரம்
அன்னத்தோ டழிந்துரைத்தது.

மூவல், ஒரு வைப்புத் தலம். முந்நீர் - கடல்சூழ்ந்த. நாவல் தழீஇய நானிலம் - நாவலந்தீவாகிய இந்நாடு. '' நானிலம் துஞ்சும்'' என்றதன்பின், ' அளிய களியன்னம், யான் துயிலாத செயிர் எம் காவல் தழீஇயவர்க்கு ஓதாது சென்று நயந்த இன்பச் சேவல் தழீஇத் தான் துஞ்சும்' எனக் கூட்டுக. துயிலாச் செயிர் - உறங்காமைக்குக் காரணமான துன்பத்தை, எம் காவல் தழீஇயவர் எம்மைக் காத்தல் பொருந்தியவர் ; தலைவர். அளிய - இரங்கத்தக்க. இரக்கம், பண்பின்மைபற்றி வருவது. ' இனி என் துன்பத்தை அவர்க்குக் கூறுவார் யார் ' என்பது குறிப்பெச்சம்.

சிவபெருமான் உயிர்கள் பொருட்டுப் பல இடங்களிலும் திருமேனிகொண்டு எழுந்தருளியிருக்கின்ற அருட்சிறப்புக் கூறப்பட்டது.

முதற்றொட்டு இதுகாறும் இரங்கற் பொருளே வந்தமையின் நெய்தற்றிணையாகவே அருளிச்செய்தார். இவை அனைத்திற்கும் பயன் ஆற்றாமை துணிதலே.

192. வரவுணர்ந்துரைத்தலாவது, தலைமகள் இடையாமத்தும் துயிலாதிருக்க, தலைமகன் ஒருவழித்தணந்து வந்து சிறைப்புறமாயினமை உணர்ந்த தோழி புறமொழி கூறுதல். இதற்குக் கொளு :-

13. வருத்தமிகுதி கூறல்

வளருங் கறிஅறி யாமந்தி தின்றுமம் மர்க்கிடமாய்த்
தளருந் தடவரைத் தண்சிலம் பா,தன தங்கமெங்கும்
விளரும் ; விழும் ; எழும் ; விம்மும் ; மெலியும் ;வெண் மாமதிநின்
றெளிருஞ் சடைமுடி யோன்புலி யூரன்ன ஒண்ணுதலே. 193

சென்றவர் வரவுணர்ந்து நின்றவள் நிலைமை
சிறப்புடைப் பாங்கி சிறைப்புறத் துரைத்தது.

'எல்லார் மதியே, செல்லல் கண்டாய் ; நில்லாவலை .... எனக் கட்டுரைக்க; இது நின்னையான் இரக்கின்றது' எனக் கூட்டுக.

துயிலக் கல்லா - உறங்க அறியாதனவாய் காற்றும் - வெளிவிடும். கட்டுரைக்க - சொல்லுக. 'தில்லையான் அருள்கள் இல்லார் கண்ணோட்டம் உடையராகாமைபோலக் கண்ணோட்டமின்றிச் சென்றார்' என்க. சென்றார் சென்ற செல்லல் - சென்றவர் அங்ஙனம் சென்றதனால் உளவாகிய துன்பங்கள். எல் - ஒளி.

சிவபெருமானது திருவருள் இல்லாதவர் கண்ணோட்டம் முதலிய பண்புடையராகாமை கூறப்பட்டது.

193. வருத்த மிகுதி கூறலாவது, தலைமகன் சிறைப்புறமாக வரவுணர்ந்துரைத்த தோழி, பின் தலைமகனைக் கண்டு; தலைமகளது வருத்த மிகுதியைக் கூறுதல். இதற்குக் கொளு :-

நீங்கி யணைந்தவற்குப் — பாங்கி பகர்ந்தது.

வளரும் கறி - வளர்ந்து செல்லும் மிளகு கொடி ; இஃது அடையடுத்த ஆகுபெயராய் அதன் காயைக் குறித்தது. மம்மர்-மயக்கம். "சிலம்பா" என்றதன்பின், "வெண்மாமதி .... ஒண்ணுதல்" என்றதனைக் கூட்டுக. அங்கம் - மேனி. 'விளர்க்கும்' என்பது "விளரும்" என வந்தது. விழுதல், அணைமேல் என்க. 'அவள் வருத்தம் சொல்லுதற்கு அரிது' என்பது குறிப்பெச்சம்.

'வளரும் கறி கண்ணுக்கு இனிதாயிருந்தமை பற்றி அதன் தன்மையறியாது தின்ற இளமந்தி, பின் அதனால் வருத்தம் எய்தினாற்போல, கண்ணுக்கு இனிதாயிருந்த நின் தோற்றத்தால் நின் தன்மை யறியாது இவள் நின்னொடு கலந்து வருந்தாநின்றாள்' என உள்ளுறை உவமம் கொள்க.

சிறிய பிறை அழியாது நிலைபெற்று நின்று விளங்கும் சடைமுடியுடைமை கூறிய முகத்தால், சிவபெருமானை அடைந்தோர் அழியாது நீடுவாழ்தல் கூறப்பட்டது.

ஆவ லாலெமக் காமலர் மரங்க
ளாக்க லம்மலர் பறித்தலம் மலராற்
ருவி லாவகை தார்பல சமைத்த
றணப்பி லெம்புகழ் சாற்றலன் புடனு
மேவு மாலய மலகிடன் மெழுகல்
விளங்க நல்விளக் கிடுதலெம் மடியார்க்
கேவ லானவை செய்தலிச் சரியை
யியற்ற வல்லவர்க் கெம்முல களிப்போம். 109

கந்த வர்க்கமுங் கிளர்மணப் புகையுங்
கவின்கொ டீபமும் புனிதமஞ் சனமும்
கொந்த விழ்ந்தநன் மலருமற் றுளவுங்
கொண்டு மாயையின் குணங்களொன் றிலராய்
ஐந்து சுத்திசெய் தகம்புற மிறைஞ்சி
யங்கி யின்கடன் முடித்தருள் வழிநின்
றிந்த நற்பெருங் கிரியையன் புடனே
யியற்ற வல்லவ ரெம்மரு கிருப்பார், 110

— திருவாதவூரடிகள் புராணம்.

16. உடன்போக்கு

[உடன்போக்காவது, தலைவன் தலைவியைத் தன்னுடன் கொண்டு செல்லுதல். தோழி இரவுக் குறிக்கண் அலர் அறிவுறுத்த பின்னும் தலைவன் தெருண்டு வரையானாயின், மேற் கூறியவாறு ஒருவழித் தணந்தும் நிற்பன். தணவாது தலைவியைத் தன்னுடன் கொண்டும் செல்வன். அங்ஙனம் கொண்டு செல்வதாகிய உடன்போக்கினை அடிகள், ஐம்பத்தாறு துறைகளாக வகுத்தருளிச் செய்வர். அவற்றைக் கூறும் நூற்பா வருமாறு :-

[1] பருவங் கூறல், படைமொழி தல்லொடு,
மருவமர் கோதையை [2] மகட்பேச் சுரைத்தல்,
[3] பொன்னணி வுரைத்தல், [4] பொருள்விலை கூறல்,
[5] அன்னமென் னடையாள் அருமைகேட் டழிதல்,
[6] தளர்வறிந் துரைத்தல், [7] தாழ்குழ லாள்தன்
உளநினை வுரைத்தல், [8] உடன்கொண்டு சேறற்
கருமையுரைத்தல், [9] ஆதரம் கூறல்,
[10] மருவிய தடங்கயல் வாழாள் என்றல்,
[11] பொருவரு கற்பின் புனைநலன் உரைத்தல்,
[12] துணிந்தமை கூறல், [13] துணிவு கேட்டல்,
[14] துணிவறி வித்தல், [15] தொல்லை நாண்விடல்,
[16] துணிவெடுத் துரைத்தல், [17] கொண் டகலென உரைத்தல்,
[18] அடிவழி நினைந்துநின் றவனுளம் வாடல்,
[19] கொடியிடை யாளைக் கொண்டுசென் றுய்த்தல்,
[20] ஓம்படுத் துரைத்தல், [21] வழிப்படுத் துரைத்தல்,
தேம்படு கோதையைத் திறலடு வேலோன்
[22] பையக்கொண் டேகல், [23] பயங்கெட உரைத்தல்,
மையமர் கண்ணியை [24] வழியயர் வகற்றல்,
[25] நெறிவிலக் கல்லொடு, [26] நெறியிடைக் கண்டவர்
செறிவெடுத் துரைத்தல், [27] சேயிழை யாளுடன்
வழிவிளை யாடல், [28] வழியெதிர் வருவோர்
எழில்நகர் அணிமை இதுவென உரைத்தல்,
[29] நகர்காட் டல்லொடு, [30] நகரிடைப் புக்குப்
பதிபரி சுரைத்தல், [31] பாங்கியைக் கிட்டி
மதிநுத லாளை வளர்த்தவள் கேட்டல்,
[32] அறத்தொடு நிற்றல், [33] அதுகேட் டழுங்கல்,

[34] திறப்பா டுன்னிச் செவிலிகவன் றுரைத்தல்,
[35] அடிநினைந் திரங்கல், [36] அதுதாய்க் குரைத்தல்,
[37] மடவரல் போக வாடி யுரைத்தல்,
[38] கிளிமொழிக் கிரங்கல், [39] கிளர்சுடர்ப் பராய்தல்,
[40] அளிபெறு பருவத்திற் கவள்கவன் றுரைத்தல்,
[41] நாடத் துணிதல், [42] நற்றாய் நயந்தவர்
கூடக் கரையெனக் கொடிக்குறி பார்த்தல்,
[43] சோதிடங் கேட்டல், [44] சுவடுகண் டறிதல்,
[45] ஏதமுற் றவைகண் டிரங்கி யுரைத்தல்,
[46] வேட்ட மாதரைக் கண்டு வினவல்,
[47] புறவொடு புலத்தல், [48] குரவொடு வருந்தல்,
[49] திறலருந் தவத்தொடு செல்லா நின்ற
மாவிர தியரை வழியிடை வினவல்,
[50] வேதியர் தம்மை விரும்பி வினவல்,
[51] புணர்ந்துடன் வருவோரைப் பொருந்தி வினவல்,
[52] மணந்தரு குழலாள் மன்னிய நிலையொடு
வேங்கை பட்டது கண்டு வியத்தல்,
[53] ஆங்கவர் இயைபணி அவட்கெடுத் துரைத்தல்,
[54] மீள உரைத்தல், [55] மீளா தவளுக்
கூழ்முறை யிதுவென உலகியல் புரைத்தல்,
[56] அழுங்குதாய்க் குரைத்தல் ஐம்பதோ டாறும்
உழுங்கொலை வேலோன் உடன்போக் காகும்.]

1. பருவங் கூறல்

ஓராகம் இரண்டெழி லாய்ஒளிர் வோன்தில்லை ஒண்ணுதல்அங்
கராகம் பயின்றமிழ் தம்பொதிந் தீர்ஞ்சுணங் காடகத்தின்
பராகஞ் சிதர்ந்த பயோதரம் இப்பரி சேபணைத்த
இராகங்கண் டால்வள்ள லேஇல்லை யேஎமர் எண்ணுவதே.

---

194. பருவங் கூறலாவது, தலைமகனுக்கு அலர் அறிவுறுத்த தோழி, இவள் பருவ முதிர்வு காண்டலால் எமர் இனி மகட்பேசுவார்க்கு மறுது கொடுக்கவும் கூடும் எனத் தலைவியின் பருவத்தை அவற்குக் கூறுதல். இதற்குக் கொளு :-

உருவது கண்டவள் — அருமை யுரைத்தது.

2. மகட்பேச் சுரைத்தல்

மணியக் கணியும் அரன்,நஞ்சம் அஞ்சி மறுகிவிண்ணோர்
பணியக் கருணை தரும்பரன் தில்லையன் னாள்திறத்துத்
துணியக் கருதுவ தின்றே துணி:துறை வா,நிறைபொன்
அணியக் கருதுகின் றார்பலர் மேன்மேல் அயலவரே. 195

ஓர் ஆகம் - ஒரு திருமேனி. இரண்டு எழில் - பெண்ணும் ஆணும் ஆய அழகு. "ஒருடம் பிருவராகி" என்றார் திருநாவுக்கரசு நாயனாரும் (திருமுறை - 4. 22. 6.). அங்கராகம் - மேனிமேற் பூசப்படுவது. ஈர் - குளிர்ந்த. 'சுணங்காகிய ஆடகம்' என்க. பராகம் - பொடி. சிதர்ந்த - சிதறிய; தன்மேல் பரக்கத் தோன்றிய. பயோதரம் - கொங்கை. இப் பரிசே பணைத்த இராகம் கண்டால் - இவ்வாறே பெருகின்ற விரைவைக் கண்டால். எமர் எண்ணுவது இல்லையே - எம்மவர் இதுபற்றிச் செய்ய நினைப்பது ஒன்றும் இல்லையோ? 'சில உள' என்பதாம். அவை, மகட்பேசுவார்க்குக் கொடுத்தல் பற்றி நினைவனவாம். தில்லை ஒண்ணுதல் பயோதரம்' என' இயையும்.

சிவபெருமான், பொருளால் ஒன்றாய், 'சிவமும், சத்தியும்' எனத் தன்மையால் இரண்டாய் நிற்றல் கூறப்பட்டது.

195. மகட்பேச்சுரைத்தலாவது, தலைவனுக்குத் தலைவியது பருவங் கூறிய தோழி, பின், 'அயலார் பலர் வந்து மகட்பேசிப் பொன்னணியக் கருதுகின்றார்' எனப் படைத்து மொழிபாற் கூறுதல். இதற்குக் கொளு :-

படைத்துமொழி கிளவியிற் பணிமொழிப் பாங்கி
அடற்கதிர் வேலோற் கறிய வுரைத்தது.

மணி அக்கு - அக்குமணி; எலும்பாகிய இரத்தினம். 'விண்ணோர் நஞ்சம் அஞ்சி மறுகிப் பணிய' என்க. "சாவ முன்னாள் தக்கன் வேள்வித் தகர் தின்று நஞ்சம் அஞ்சி" என்ற திருவாசகத்தைக் காண்க (8). மறுகி - சுழன்று; மயங்கி. கருணை தரும் பரமன் - அம் மயக்கம் நீக்கும் மருந்தாகத் தன் திருவருளைத் தந்த மேலோன். "துணியக் கருதுவது இன்றே

3. பொன்னணி வுரைத்தல்

பாப்பணி யோன்தில்லைப் பல்பூ மருவுசில் லோதியைநற்
காப்பணிந் தார் :பொன் னணிவார் இனிக் ;கமழ் பூந்துறைவ,
கோப்பணி வான்தோய் கொடிமுன்றில் நின்றிவை ஏர்குழுமி
மாப்பணி லங்கள் முழங்கத் தழங்கும் மணமுரசே.　　196

துணி" என்றதன்பின், 'என்னையெனின்' என்று எடுத்துக் கொண்டு உரைக்க. துணியக் கருதுவது, 'வரைதல், உடன் கொண்டு போதல்' என்னும் இரண்டனுள் ஒன்று. 'மேன் மேல் அயலவர் பலர் நிறை பொன் அணியக் கருதுகின்றார்' எனக் கூட்டி முடிக்க. "கருதுகின்றார்" என்றதனால், 'மகட் பேச வருகின்றார்' என்றது காண்க.

சிவபெருமான் விண்ணோரையும் காக்கும் விண்ணோனாதல் கூறப்பட்டது.

196. பொன்னணி வுரைத்தலாவது, படைத்து மொழியால் மகட்பேச்சுரைத்த தோழி, பின், அவ்வாற்றால் 'தமர் மகளுடம் பட்டார்; இனி நின் கருத்து யாது' எனக் கூறுதல். இதற்குக் கொளு :-

பலபரிசி னாலும் மலர்நெடுங் கண்ணியை
நன்னுதற் பாங்கி பொன்னணிவர் என்றது.

பாப்பணி - பாம்பு அணி. 'தில்லைச் சில்லோதி' என இயையும். சில் ஓதி - சிலவாகிய கூந்தலை உடையாள். நற் காப்பு - நல்ல காவல் நூல். தெய்வக் காவலாதல்பற்றி, "நற் காப்பு" என்றாள். இத்தகைய தெய்வக் காப்பு நூல், மண வினை முதலிய நல்லனவற்றுக்கு அவை இடையூறின்றி இனிது முற்றுதற்பொருட்டு அணிதல் மரபு. 'காப்பணிந்தார் என்பது, காப்பை அணிந்து காவற்படுத்தினார்' என்னும் பொருளதாய், "ஓதியை" என்ற இரண்டாவதற்கு முடிபாயிற்று. 'இனிப் பொன் அணிவார்' என மாற்றுக. கோப்பு - மணவினை அலங் காரம். 'கொடியை யுடைய முன்றில்' என்க. 'மண முரசு இவை ஏரொடு குழுமி முன்றிலின்கண் நின்று, மாப் பணிலங்

4. அருவிலை உரைத்தல்

எலும்பால் அணிஇறை அம்பலத் தோன்எல்லை செல்குறுவோர்
நலம்பா வியமுற்றும் நல்கினுங் கல்வரை நாடர்,அம்ம !
சிலம்பா, வடிக்கண்ணி சிற்றிடைக் கேவிலை செப்பலொட்டார் ;
கலம்பா வியமுலை யின்விலை என்நீ கருதுவதே. 197

கள் முழங்கத் தழங்கும்' என்க. பணிலம் - சங்கு. தழங்கும் - ஒலிக்கும். அதனால், 'மணவினை நிகழ்தல் உறுதி; இனி நீ பொருந்துவது செய்க' என்பது குறிப்பெச்சம்.

சிவபெருமான் பாம்பை அணிகலமாகப் பூண்ட வெற்றியுடையனாதல் கூறப்பட்டது.

197. அருவிலையுரைத்தலாவது, தோழி அயலார் பொன்னணிவுரைப்பக் கேட்ட தலைமகன், 'யான் வரைவொடு வருதற்கு நின் தோழிக்குரிய பரிசம் யாது' எனக் கேட்க, தோழி, 'நீவிர் எல்லா உலகங்களையும் பரிசமாகக் கொடுத்தாலும் எமர் இவளுக்கு விலையாகக் கொள்ளார்' என, விலையருமை கூறுதல். இதற்குக் கொளு :-

பேதையர் அறிவு பேதைமை யுடைத்தென
ஆதரந் தோழி அருவிலை யுரைத்தது.

அணி - தன்னை அலங்கரித்துக்கொள்கின்ற. செல்குறுவோர் - செல்வோர் ; குகரம், சாரியை. நலம் பாவிய - நன்மை பரந்தவை ; என்றது, 'நல்ல உலகங்கள்' என்றபடி. சிலம்பா - வெற்பனே. வடிக்கண்ணி - மாவடு வகிர்போலும் கண்களையுடையவளது. கலம் பாவிய - அணிகலம் பரந்த. 'எல்லா உலகங்களையும் தரினும் அவள் சிற்றிடைக்கே ஈடாகா என்பராயின், அவள் கொங்கைக்கு விலையாக நீ எதனை நினைப்பாய்' என்றாள். 'அவர் வரைவு நேரார்' என்றவாறு. இத்துணையும் கூறப்பட்ட துறைகட்குப் பயன் உடன்போக்கறிவித்தலாம்.

'எலும்பால் தன்னை அலங்கரித்துக்கொள்பவன்' என்றதனால், சிவபெருமான் தன்பொருட்டு ஒன்றையும் விரும்புதல் இலனாதல் கூறப்பட்டது.

5. அருமைகேட் டழிதல்

விசும்புற்ற திங்கட் கழும்மழப் போன்றினி விம்மிவிம்மி
அசும்புற்ற கண்ணோ டலருய் கிடந் ;தரன் தில்லையன்னுள்
குயம்புற் றரவிடை கூரெயிற் றூறல் குழல்மொழியின்
நயம்பற்றி நின்று நடுங்கித் தளர்கின்ற நன்னெஞ்சமே. 198

6. தளர்வறிந் துரைத்தல்

மைதயங் குந்திரை வாரியை நோக்கி மடலவிழ்பூங்
கைதையங் கானலை நோக்கிக்கண் ணீர்கொண்டெங்
[கண்டர்தில்லைப்
பொய்தயங் குந்நுண் மருங்குல்நல் லாரையெல் லாம்புல்லினுள் ;
பைதயங் கும்அர வம்புரை யும்மல்குற் பைந்தொடியே. 199

---

198. அருமைகேட்டழிதலாவது, தோழி விலையருமை கூறக்கேட்ட தலைவன் தன் நெஞ்சொடு நொந்து கூறுதல். இதற்குக் கொளு :-

பெருமைநாட் டத்தவள் — அருமைகேட் டழிந்தது.

"அரன் தில்லையன்னுள்" என்பது முதலாகத் தொடங்கி யுரைக்க. 'வானுந்து மாமதி வேண்டி அழுமழப் போலும்' என முன்னரும் கூறினுர் (147). அசும்பு - நீர்த்துளி. அலருய் - அலறுவாயாக. 'கிடந்து அலருய்' என முன்னே கூட்டுக. "குயம் இடை எயிற்றுஊறல் மொழியின்" என்றதில், உம்மைத் தொகை ஒருசொல் நடைத்தாய் ஈற்றில் ஆரும் உருபு தொகப்பெற்றது. நயம் - இனிமை. பற்றி - பற்றுதலால். "நன்னெஞ்சமே" என்றது, பெறலாகாதவற்றைப் பெறுதற்கு வருந்தும் இழிவு குறித்து நின்றது. இதன் பின்னிரண்டடி களில் மூன்ருமெழுத்தெதுகை வந்தது.

சிவபெருமானது தலம் பலர்க்குக் கிட்டுதல் அரிது என்பது கூறப்பட்டது.

199. தளர்வறிந் துரைத்தலாவது, அருமைகேட்டழிந்த தலைவனை நோக்கித் தோழி, உடன்போக்குத் தோன்றத் தலைவி யது வருத்தம் கூறுதல். இதற்குக் கொளு :-

7. குறிப்புரைத்தல்

மாவைவந் தாண்டமென் னேக்கிதன் பங்கர்வண் தில்லைமல்லற்
கோவைவந் தாண்டசெவ் வாய்க்கருங் கண்ணி குறிப்பறியேன் ;
பூவைதந் தாள் ;பொன்னம் பந்துதந் தாள் ;என்னைப்
[புல்லிக்கொண்டு
பாவைதந் தாள் ;பைங் கிளியளித் தாள் ;இன்றென்
[பைந்தொடியே. 200

தண்டுறைவன் தளர்வறிந்து
கொண்டு நீங்கெனக் குறித்துரைத்தது.

ஈற்றடியை முதலிற் கொள்க. மை தயங்கும் - கருமை விளங்குகின்ற. வாரி - கடல். 'தில்லை நல்லார்' என இயையும். நல்லார், ஆயத்தார். 'இச் செயல்களால் அவள் உள்ளத்து ஒன்று உடையாள் போலும்' என்பது குறிப்பெச்சம். 'ஒன்று' என்றது, உடன்போக்கினை.

'எம் கண்டர்' என உரிமையொடு கூறிய முகத்தால், சிவபெருமான் தன் அடியவர்க்கு உரியவனாதல் கூறப்பட்டது.

200. குறிப்புரைத்தலாவது, தலைமகளது வருத்தங் கூறித் தலைவனுக்கு உடன்போக்கு உணர்த்தியதோழி பின், தலைமகள் செய்தவற்றைக் கூறி, அவள் கருத்தினை அறிவித்தல். இதற்குக் கொளு:-

நறைக் குழலி — குறிப் புரைத்தது.

முதல் இரண்டடிகளை இறுதிக்கண் கூட்டுக. மா - மான். "வந்து" என்றவை, இடவழுவமைதி. மானை ஆண்ட நோக்கு - மானை வென்ற பார்வை; இத்தகைய நோக்கினை உடையவள் உமையம்மை. 'தில்லைக் கோவை' என இயையும். கோவை - கொவ்வை; என்றது; அதன் கனியை. பூவை - நாகணவாய்ப்பறவை. "என்னைப்புல்லிக்கொண்டு" என்றதனை, "பூவை தந்தாள்" என்றதற்கு முன்னே கூட்டுக. "குறிப்பறியேன்" என்றது, 'அவள் கருத்து உடன்போக்குப் போலும்' என்றபடி.

8. அருமை யுரைத்தல்

மெல்லியல் கொங்கைபெரிய ;மின் நேர்இடை ; மெல்லடிபூக் ;
கல்லியல் வெம்மைக் கடங்கடுந் தீக் ;கற்று வானமெல்லாஞ்
சொல்லிய சீர்ச்சுடர்த் திங்களங் கண்ணித்தொல் லோன்புலியூர்
அல்லியங் கோதைநல் லாய்,எல்லை சேய்த்தெம் அகல்நகரே. 201

"மாவை வந்தாண்ட மென்னோக்கி பங்கர்" என்ற குறிப்பால், சிவபெருமான் போகியாய் இருந்து உலகிற்குப் போகத்தைத்தருதல் கூறப்பட்டது.

201. அருமையுரைத்தலாவது, தோழி தலைவியது குறிப்புரைத்து உடன்போக்குணர்த்த, தலைமகன், தான் செல்லும் வழியினது அருமையைக் கூறுதல். இதற்குக் கொளு:-

காவின் கடுமையும் மானின் மென்மையும்
பதியின் சேட்சியும் இதுவென உரைத்தது.

'மெல்லியலது கொங்கை பெரிய; நேர் இடை மின்; மெல்லடி பூ; கடம் கடுந்தீ; எம் அகனகர் எல்லை சேய்த்து; என்க. கல் இயல் வெம்மைக் கடம் - கல்லின்கண் உண்டாகிய வெப்பத்தையுடைய காடு. வானம் எல்லாம் கற்றுச் சொல்லிய சீர் - வானுலகமெல்லாம் நன்கு கற்றுச் சொல்லுகின்ற புகழ். வானுலகத்துள்ளாரை, 'வானுலகம் என்றது பான்மை வழக்கு. 'சீரினையும் கண்ணியையும் உடைய தொல்லோன்' என்க. "எல்லை சேய்த்து" எனச் சினைவினை முதன்மேலாயிற்று. 'அதனால் நீ கருதியது மிகவும் அரிது' என்பது குறிப்பெச்சம்.

'வானம் எல்லாம் கற்றுச் சொல்லிய சீரினை உடையவன்' என்றதனால், சிவபெருமானது புகழ், பொருள்சேர் புகழாதல் கூறப்பட்டது.

9. ஆதரங் கூறல்

பிணையுங் கலையும்வன் பேய்த்தே ரினைப்பெரு நீர்நசையால்
அணையும் முரம்பு நிரம்பிய அத்தமும் ஐய,மெய்யே
இணையும் அளவும்இல் லாஇறை யோன்உறை தில்லைத்தண்பூம்
பணையுந் தடமுமன் றேநின்னொ டேகின்எம் பைந்தொடிக்கே. 202

10. இறந்துபாடுரைத்தல்

இங்கயல் என்நீ பணிக்கின்ற தேந்தல், இணைப்பதில்லாக்
கங்கையஞ் செஞ்சடைக் கண்ணுதல் அண்ணல் கடிகொள்தில்லைப்
பங்கயப் பாசடைப் பாய்தடம் நீ; அப் படர்தடத்துச்
செங்கய லன்றே கருங்கயற் கண் இத் திருநுதலே. 203

---

202. ஆதரங் கூறலாவது, உடன்போக்கருமை கூறிய தலைமகனுக்குத் தோழி, 'நின்னொடு வரின் இவளுக்குப் பாலையும் மருதமாம்' எனத் தலைவியது அன்பினை எடுத்துக் கூறுதல். இதற்குக் கொளு :-

அழல்தடம் புரையும் அருஞ்சுர மதுவும்
நிழல்தட மவட்கு நின்னொ டேகின் என்றது.

பிணை - பெண்மான். கலை - ஆண்மான். பேய்த்தேர் - கானல். நசை - விருப்பம். "நீர்நசை" என்றது, ஒரு சொல்லாய், அடையடுத்தது. 'அணையும் அத்தம்' என இயையும். முரம்பு - மேடு. அத்தம் - சுரம். "அத்தமும்" என்ற உம்மை, இழிவு சிறப்பு. பணை - மருதநிலம். தடம் - பொய்கை. "நின்னொடு ஏகின்" என்ற வினையெச்சம், "பணையும் தடமும்" என்றவிடத்து எஞ்சிநிற்கும் 'ஆம்' என்பதனோடு முடியும்.

சிவபெருமான், இறைமைத் தன்மையாகிய இணையின்மையும், எல்லை இன்மையும் உடையவனாதல் கூறப்பட்டது.

203. இறந்துபாடுரைத்தலாவது, தலைவியது ஆதரத்தைத் தலைமகனுக்குக் கூறிய தோழி, பின்னும், 'நீ உடன்கொண்டு போகாவிடில், இவள் அலரானும், காவல் மிகுதியானும் உன்னை

11. கற்புநலன் உரைத்தல்

தாயிற் சிறந்தன்று நாண்தைய லாருக்;கந் நாண்தகைசால்
வேயிற் சிறந்தமென் றேளிதிண் கற்பின் விழுமிதன்றிங்
கோயிற் சிறந்துசிற் றம்பலத் தாடும்எங் கூத்தப்பிரான்
வாயிற் சிறந்த மதியிற் சிறந்த மதிநுதலே. 204

எதிர்ப்படமாட்டாது இறந்துபடுவாள்' எனக் கூறுதல். இதற்குக் கொளு :-

> கார்த் தடமுங் கயலும் போல்நீர்
> வார்த்தட முலையு மன்னனு மென்றது.

அயல் - அயன்மை. அஃதாவது, தலைவியைத் தன்னை இன்றியமைபவளாகக் கூறுதல். பணிக்கின்றது - சொல்கின்றது. ஏந்தல் - தலைவனே. 'நீ அயல் பணிக்கின்றது என்' எனக் கூட்டுக. இணைப்பது - இணைத்துக் கூறப்படும் பொருள். பாசடை - பசிய இலை. 'பாசடைத் தடம்' என இயையும். பாய தடம் - பரந்த பொய்கை. 'பாய' என்பதன் ஈற்று அகரம் தொகுத்தல். 'பாசடை பாய்தடம்' என்பதே பாடம் எனினும் ஆம். 'நீ தடம் ; இவள் அதில் வாழுங் கயல்' என்றமையால், 'நின்னொடு வருதலே இவள் வாழ்தற்கும், நின்னைப் பிரிதலே இவள் இறந்துபடுதற்கும் ஏது' என்றாள் என்க.

கங்கையை அடக்கினமையும், கண்ணுதல் உடைமையும் பற்றிச் சிவபெருமானது இணையிலாத் தன்மை உணரப்படும் என்பது கூறப்பட்டது.

204. கற்பு நலன் உரைத்தலாவது, தலைவனைப் போக்குடன்படச்செய்த தோழி, பின் தலைமகளிடத்துச் சென்று, அவள் போக்குடன்படுமாறு, 'மகளிர்க்கு நாணினும் சிறந்தது கற்பு' எனக் கூறுதல். இதற்குக் கொளு :-

> பொய்யொத்தஇடை போக்குத்துனிய
> வையத்திடை வழக்குரைத்தது.

தாயிற் சிறந்தன்று - தாய்போலச் சிறந்தது. இதன்பின், 'ஆயினும்' என்பது வருவிக்க. "தாய்" என்றது, பன்மை

12. துணிந்தமை கூறல்

குறப்பாவை நின்குழல் வேங்கையம் போதொடு கோங்கம்விராய்
நறப்பா டலம்புனை வார்நினை வார்தம் பிரான்புலியூர்
மறப்பான் அடுப்பதொர் தீவினை வந்திடிற் சென்றுசென்று
பிறப்பான் அடுப்பினும் பின்னுந்துன் னத்தகும் பெற்றியரே.

யொருமை மயக்கம். 'அந்நாளும்' என்னும் சிறப்பும்மை தொகுத்தலாயிற்று. தகைசால் - அழகு நிறைந்த. கற்பின் விழுமிது அன்று - கற்புப்போல மேம்பட்டதன்று; என்றது, 'கற்பை நோக்கத் தாழ்ப்பட்டதே' என்றபடி. "உயிரினும் சிறந்தன்று நாணே; நாணினும் - செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்றெனத் - தொல்லோர் கிளவி புல்லிய நெஞ்சமொடு" என்ற தொல்காப்பியத்தைக் காண்க (பொருள் - 111). இதனால், 'இன்றியமையாவிடத்துக் கற்பின்பொருட்டு நாண் இழக்கப் படும்' என்பதாம். ஈங்கோய், ஒருதலம். 'அதனுட் சிறந்து விளங்கி அம்பலத்து ஆடும் பிரான்' என்க. அவன் வாயில் சிறந்த மதி - அவனால் உபதேசிக்கப்பட்டு விளங்கிய ஞானம். "வாய்" என்றதனை ஆகுபெயராக்கி, 'கூத்தப்பிரான் வாய் மொழியாகிய ஆகமங்களிற் சிறந்து நிற்கின்ற ஞானம்' எனலுமாம்.

மெய்யுணர்வு சிவபெருமானால் தரப்படுவதே என்பது கூறப்பட்டது.

205. துணிந்தமை கூறலாவது, உலகியல் கூறுவாள் போன்று கற்புநலத்தை வலியுறுத்திய தோழி, பின், 'நம் காதலர் நின்னைச் சுரத்திடைக் கொண்டு போக நினைக்கின்றார்; நின் கருத்து யாது' எனத் தலைவனது கருத்தைத் தலைவிக்குக் கூறுதல். இதற்குக் கொளு:-

பொருவேல் அண்ணல் போக்குத் துணிந்தமை
செருவேற் கண்ணிக்குச் சென்று செப்பியது.

"குறப் பாவை" என்றது, தலைவியை. "கோங்கம், பாடலம்" என்றது, அவற்றின் மலரை. விராய் - கலந்து. நறு - தேன். அது, 'நற' எனச் செய்யுள் முடிபு எய்தி

13. துணிவோடு வினவல்

நிழற்றலை தீநெறி நீரில்லை; கானகம் ஓரிகத்தும்;
அழற்றலை வெம்பரற் றென்பர்;என் னோ,தில்லை யம்பலத்தான்
கழற்றலை வைத்துக்கைப் போதுகள் கூப்பக்கல் லாதவர்போற்
குழற்றலைச் சொல்லிசெல் லக்குறிப் பாகும்நம் கொற்றவர்க்கே.

யது. பாடலம் - பாதிரி. 'புனைவாராக' என, ஆக்கம் வருவிக்க. மறப்பான் - மறக்கும்படி. பிறப்பான் அடுப்பினும் - பிறக்கப் பொருந்தினும். பின்னும் - அப்பிறப்புக்களிலும். துன்னத்தகும் பெற்றியர் - சேரத்தகும் தன்மையை உடையவர்; என்றது, தலைவனை. 'பெற்றியர் நினைவார்' என மேலே கூட்டி முடிக்க. 'நின் கருத்து யாது' என்பது குறிப்பெச்சம்.

'சிவபெருமானது தலத்தை மறவாமை நல்வினையான் ஆவது, என்பதும், 'அதனை மறவாதார்க்குப் பிறவி அறும்' என்பதும், 'அதனை மறத்தல் தீவினையால் ஆவது' என்பதும், 'மறப்பார்க்குப் பிறவி அருது' என்பதும் கூறப்பட்டன. இங்கு, 'நல்வினை, தீவினை' என்பன முறையே சிவபுண்ணியத்தையும், உலக வினையையும் குறிக்கும்.

206. துணிவொடு வினவலாவது, தலைமகன் கருத்தைத் தோழி சொல்லக்கேட்ட தலைவி, தானும் துணிவுகொண்டு, 'அவர் இவ்வாறு கருதுதற்குக் காரணம் என்னோ' என வினுதல். இதற்குக் கொளு :-

சிலம்பன் துணிவொடு செல்சுரம் நினைந்து
கலம்புனை கொம்பர் கலக்க முற்றது.

'குழற்றலைச் சொல்லி' என்றதனை முதலிற்கொள்க. நிழல் தலை தீநெறி - நிழலை உடைய இடம் தீர்ந்துபோன வழிக்கண். ஓரி-நரி. "கானகம் ஓரிகத்தும்" என, இடத்து நிகழ்பொருளின் தொழில் இடத்தின்மேல் ஏற்றப்பட்டது. இதன்பின், 'அதுவேயுமன்றி' என்பது வருவிக்க. அழல்தலை வெம்பரற்று - நெருப்புப்பொருந்திய நுனியையுடைய கொடிய பரல்களையுடையது. "என்னோ" என்றதை, "குறிப்பாகும்" என்பதன்பின் கூட்டி, 'இதற்குக் காரணம் என்னோ' என

14. போக்கறிவித்தல்

காயமும் ஆவியும் நீங்கள் ;சிற் றம்பல வன்கயிலைச்
சீயமும் மாவும் வெரீஇ வரல் என்பல் ; செறிதிரை நீர்த்
தேயமும் யாவும் பெறினுங் கொடார்நமர் ; இன்னசெப்பின்
தோயமும் நாடுமில் லாச்சுரம் போக்குத் துணிவித்தவே. 207

உரைக்க. குழல்தலைச் சொல்லி - குழலிடத்துத் தோன்றும் இசைபோலும் சொல்லை உடையவளே. செல்ல - இத்தன்மைத் தாகிய வழியில் செல்லுதற்கு. குறிப்பு ஆகும் - கருத்து உண் டாகாநின்றது. 'நம் கொற்றவர்க்குக் குறிப்பு ஆகும்' என முன்னே கூட்டுக.

சிவபெருமான் திருவடியைச் சென்னியில் வைத்து வணங் காதவர், நீரும் நிழலும் அற்ற நெறியிற் செல்பவர்போல ஆவர் என்பது கூறப்பட்டது.

207. போக்கறிவித்தலாவது, 'அவர் இவ்வாறு கருது தற்குக் காரணம் என்னோ' என வினவிய தலைவிக்குத் தோழி, தலைமகன் அங்ஙனம் போதற்கு உண்டாகிய காரணத்தைக் கூறுதல். இதற்குக் கொளு :-

பொருசுடர் வேலவன் போக்குத் துணிந்தமை
அரிவைக்கவள் அறிய வுரைத்தது.

'நீங்கள் காயமும் ஆவியும்' என்க. இவ்வாறு பொதுப் படவே கூறினமையால், எதனையும் யாருக்கும் உவமையாகக் கொண்டு, ஒருவர் ஒருவரை இன்றியமையாமை மாத்திரையே கூறுதல் கருத்தாயிற்று. 'கயிலைக்கண் வரல்' என இயைக்க. 'வாரல்' என்பது குறுகிநின்றது. சீயம் - சிங்கம். மா - ஏனைய விலங்குகள். 'வெரீஇ என்பல்' என இயையும். "என்பல்" என்றதற்கு, 'அவரை' என்னும் செயப்படுபொருளும், "கொடார்" என்பதற்கு, 'நின்னை' என்னும் செயப்படுபொருளும் வருவிக்க. "செப்பின்" என்ற தனை, "இன்ன" என்றதற்கு முன்னே கூட்டி, 'இன்னவே' எனத் தேற்றேகாரம் விரித்து, 'இத்தன்மையவான கார ணங்களே சுரம்போக்குத் துணிவித்த' என முடிக்க. இனி,

15. நாணிழந்து வருந்தல்

மற்பாய் விடையோன் மகிழ்புலி யூர்என் னொடும்வளர்ந்த
பொற்பார் திருநாண் பொருப்பர் விருப்புப் புகுந்துநுந்தக்
கற்பார் கடுங்கால் கலக்கிப் பறித்தெறி யக்கழிக;
இற்பாற் பிறவற்க ஏழையர் வாழி எழுமையுமே. 208

'துணிவித்தன இன்னவே' என மாறிக் கூட்டினும் அமையும். தோயம் - நீர். நாடு - மக்கள் வாழும் இடம்.

'கயிலைக்கண் வரையாது வாரல்' என்ற குறிப்பினால், பிறர்க்குத் துன்பம் செய்யாத அறநெறியாளரே சிவபெருமானது திருமலையை அடைதற்குரியர் என்பது கூறப்பட்டது.

208. நாண்இழந்து வருந்தலாவது, தலைவன் உடன்கொண்டு போகக் கருதியதற்குக் காரணத்தைத் தோழி சொல்லக்கேட்ட தலைமகள், உடன்போகைக்குத் துணிந்தமையால் நாணினை இழந்து வருந்திக் கூறுதல். இதற்குக் கொளு :-

கற்பு நாணினும் முற்சிறந் தமையிற்
சேண்நெறி செல்ல வாணுதல் துணிந்தது.

மல் - திருமால் ஆடிய ஒரு கூத்து. 'மல்லொடு பாயும் விடை' என்க. 'புலியூரின்கண்' என உருபு விரிக்க. 'என்னொடும் வளர்ந்த நாண் கழிக' என முடிக்க. பொருப்பர் விருப்பு - பொருப்பர்மேல் வைத்த விருப்பம். நுந்த - அசைக்க. பின்னர்க் கற்பினைக் கடுங்காற்றாக உருவகம் செய்தலின், நாணினை மரம் எனவும், விருப்பத்தைச் சிறுகாற்று எனவும் கொள்க. ஏகதேச உருவகம். ஆர் கடுங்கால் - நிறைந்த கடுங்காற்று. கழிக - நீங்குவதாக. இல் - உயர்குடி. ஏழையர் - மகளிர். வாழி, அசைநிலை. 'ஏழையர் எழுமையும் இற்பால் பிறவற்க' எனக் கூட்டுக. தான் இற்பாற் பிறந்து அடையும் துன்பம் நோக்கி இவ்வாறு கூறினாள்.

சிவபெருமான் திருமாலாகிய விடையை உடையோனாதல் கூறப்பட்டது.

16. துணிவெடுத் துரைத்தல்

கம்பஞ் சிவந்த சலந்தரன் ஆகங் கறுத்ததில்லை
நம்பன் சிவநகர் நற்றளிர் கற்சுர மாகும் நம்பா,
அம்பஞ்சி ஆவம் புகமிக நீண்டரி சிந்துகண்ணாள்
செம்பஞ்சி யின்மிதிக் கிற்பதைக் கும்மலர்ச் சீறடிக்கே. 209

17. குறியிடங்கூறல்

முன்னோன் மணிகண்டம் ஒத்தவன் அம்பலந் தம்முடிதாழ்த்
துன்னா தவர்வினை போற்பரந் தோங்கும். எனதுயிரே
அன்னாள் அரும்பெறல் ஆவியன் னாய்,அருள் ஆசையினாற்
பொன்னார் மணிமகிழ்ப் பூவிழ யாம்விழை பொங்கிருளே. 210

---

209. துணிவெடுத்துரைத்தலாவது. தலைமகள் போக்குடன்பட்டமை கண்ட தோழி தலைவனிடம் சென்று, தலைவியது துணிவை எடுத்துக்கூறுதல். இதற்குக் கொளு :-

செல்வ மாதர் செல்லத் துணிந்தமை
தோல்வரை நாடற்குத் தோழிசொல் லியது.

கம்பம் சிவந்த - நடுக்கத்தை முனிந்த; என்றது, 'அச்சம் இல்லாத' என்றபடி. இது, சலந்தரனது தன்மை கூறியது. சலந்தரன், ஓர் அசுரன். ஆகம் - உடம்பு. கறுத்த - வெகுண்ட; என்றது, 'அழித்த' என்றபடி. சிவநகர் - சிவபுரம்; இஃது ஒரு சிவ தலம். ஆவம் - அம்புக்கூடு. அம்புகள் அம்புக் கூட்டில் மறைந்து கிடப்பது தலைவியின் கண்களுக்கு அஞ்சி' என்றது, தற்குறிப்பேற்றம். அரி - செவ்வரி. சிந்து - சிதறிய. 'மிதிக்கினும்' என்னும் சிறப்பும்மை தொகுத்தலாயிற்று. 'அரிசிந்து கண்ணாள் மலர்ச் சீறடிக்குக் கற்சுரம் நம்பன் சிவநகர் நற்றளிர் ஆகும்' எனக் கூட்டி முடிக்க. 'ஆகும்' என்பது சொல்லெச்சம். இதனால், 'அவள் உடன் போக்குத் துணிந்தாள்' என்பது கூறினாள்.

சிவபெருமான் சலந்தரனை அழித்த சிறப்புக் கூறப்பட்டது.

210. குறியிடங் கூறலாவது. தலைமகனுக்குத் தலைமகளது துணிவை எடுத்துரைத்த தோழி, பின், 'அவனைக் குறியிடத்து வருக' எனக் கூறுதல். இதற்குக் கொளு :-

18. அடியோடு வழிநினைந் தவன் உளம் வாடல்

பனிச்சந் திரனொடு பாய்புனல் சூடும் பரன்புலியூர்
அனிச்சந் திகழும்அஞ் சீறடி ஆவ! அழல்பழுத்த
கனிச்செந் திரளன்ன கற்கடம் போந்து கடக்குமென்றால்,
இனிச்சந்த மேகலை யாட்கென்கொ லாம்புகுந் தெய்துவதே. 211

மன்னிய இருளில் துன்னிய குறியிற்
கோங்கிவர் கொங்கையை நீங்குகொண் டென்றது.

'எனது உயிரே அன்னாள்' என்பது முதலாகத் தொடங்கி யுரைக்க. முன்னோன் - யாவர்க்கும் முன்னோன்; சிவபெருமான். 'அன்னான் ஆவி' என இயையும். அருள் ஆசையினால் - உனது அருள்மேல் உள்ள ஆசையால் இது, "விளை" என் பதனோடு இயையும். பொன் ஆர் பூ - பொன்போலும் நிறைந்த பூக்கள். மணி மகிழ் - அழகிய மகிழமரம். பூவிழும்பொழுது இருளை விளைதல், அது தலைவன் செய்த குறியென்னும் கருத்தி னாலாம்.

சிவபெருமானது அம்பலத்தை வணங்காதவர் இருள் செறிந்து பரந்த வினையால் சூழப்படுவர் என்பது கூறப் பட்டது.

211. அடியொடு வழிநினைந்து அவன் உளம் வாடலாவது, தோழி குறியிடங் கூறிச்சென்ற பின்னர் ஆங்குச் சென்று நிற்கும் தலைவன், தலைவியது அடியின் மென்மையையும், சுரத் தின் வெம்மையையும் நினைந்து மனம் மெலிதல். இதற்குக் கொளு :-

நெறியுறு குழலியொடு நீங்கத் துணிந்த
உறுசுடர் வேலோன் உள்ளம் வாடியது.

பனி - குளிர்ச்சி. அனிச்சம் திகழும் - அனிச்சம்பூப்போல விளங்குகின்ற. ஆவ, இரக்கக் குறிப்பு. அழல் பழுத்த - நெருப்பு, மரமாய் நின்று பழுத்ததுபோலும். "கனிச் செந்திரள் அன்ன கல்" என்றதனை, 'செங்கனித் திரள் அன்ன கல்' என மாற்றிக்கொள்க. கற்கடம் - பரற்கற்களையுடைய காடு.

19. கொண்டுசென் றுய்த்தல்

வைவந்த வேலவர் சூழ்வரத் தேர்வரும் வள்ளல்,உள்ளந்
தெய்வந் தரும்;இருள் தூங்கும் முழுதும். செழுமிடற்றின்
மைவந்த கோன்தில்லை வாழ்த்தார் மனத்தின்: வழுத்துநர்போல்
மொய்வந்த வாவி தெளியும்; துயிலும்இம் மூதெயிலே. 212

சந்தம் - அழகு. 'மேகலையாட்கு இனிப் புகுந்து எய்துவது என்கொல்' என்க. புகுந்து எய்துவது - வந்து சேரும் துன்பம். 'கொல்' என்னும் ஐயம், இரங்கலின் மேற்று. ஆம், அசை நிலை.

சந்திரனும், பாய்புனலும் நிலவுலகில் பயிர் விளைதற்கு ஏதுவாகலின், 'அவற்றைச் சூடும் பரன்' என்றதனால், சிவபெருமான் உலகினைக் காப்போனாதல் கூறப்பட்டது. "எல்லா உயிர்க்கும் ஏம மாகிய - நீரற வறியாக் கரகத்துத் - தாழ் சடைப் பொலிந்த அருந்தவத்தோன்" எனப் பிறருங் கூறுதல் காண்க. (புறம் - கடவுள் வாழ்த்து).

212. கொண்டுசென்று உய்த்தலாவது, தலைவன் குறியிடை நின்று, அடியொடு வழிநினைந்து உள்ளம் வாடியிருக்குங்கால், தோழி தலைவியை அவ்விடத்துக் கொண்டு சென்று, 'இஃது ஏற்ற பொழுதாய் இருக்கின்றது; இவளைக் கைக்கொள்' எனக் கூட்டுதல். இதற்குக் கொளு :-

வண்டமர் குழலியைக் — கண்டுகொள் கென்றது.

வைவந்த - கூர்மை பொருந்திய. வேலவர் - ஊர் காவலர். வரத்து - அவர்களது வருகை. ஓவரும் - ஒழியாநின்றது. 'வேலவர் சூழ்வரத் தேர்வரும் வள்ளல்' என்பதே பேராசிரியர்கொண்ட பாடம். அங்ஙனம்கொண்டு, 'வேலவரைத் தலைவன்றன் தோழராக உரைத்தார். உடன் போக்கின்கண் தேர் ஊர்ந்து செல்பவனாகக் கூறும் மரபு இன்மையின், அவர் குறித்த பிறிது பாடமே கொள்ளப்பட்டது. "உள்ளம்" என்றது, அதனுள் நின்ற கருத்தினை. 'தெய்வம் தாராநின்றது' என்றதனால், தான் தலைவியைக் கொணர்ந்தமையும், விரையச் செல்க என்பதும் கூறினாளாம். 'வாழ்த்தார் மனத்தின் இருள்

20. ஓம்படுத் துரைத்தல்

பறந்திருந் தும்பர் பதைப்பப் படரும் புரங்கரப்பச்
சிறந்தெரி யாடிதென் தில்லையன் ளுள்திறத் துச்சிலம்பா,
அறந்திருந் துன்னரு ளும்பிறி தாயின், அருமறையின்
திறந்திரிந் தார்கலி யும்முற்றும் வற்றும்இச் சேணிலத்தே. 213

தூங்கும்' என மாற்றியுரைக்க. ''மனம்'' என்றது 'வழுத்து நர்' என்பதனோடும் இயையும். மொய் வந்த - நிறைதல் பொருந்திய. ''மொய்வந்த வாவி தெளியும்'' என, இடத்து நிகழ் பொருளின்தொழில் இடத்தின்மேல் நின்றது. ''எயில்'' என்றது, அதனை உடைய ஊரினை.

சிவபெருமானை வாழ்த்தாதார் உள்ளம் இருள்செறிந்து அழுங்குதலும், வாழ்த்துவார் உள்ளம் தெளிவு பெற்று மகிழ் தலும் கூறப்பட்டன.

213. ஓம்படுத்துரைத்தலாவது, தலைவியைத் தலைமகனி டம் கொண்டுசென்று உய்த்த தோழி தலைவனை நோக்கி, 'நீ இன்றுபோலவே எந்நாளும் இவளிடத்து மாறுபடாத காத லுடையையாய் இவளைக் காப்பாயாக' என் அவனிடத்துக் காவற்படுத்துக் கூறுதல். 'ஓம்புப் படுத்து' என்பது, 'ஓம் படுத்து' என மருவிநின்றது. 'ஓம் என்பதே காவலை உணர்த்தும்' என்பாரும் உளர். இதற்குக் கொளு:-

தேம்படு கோதையை — ஓம்ப டுத்தது.

'உம்பர் இருந்து பதைப்பப் பறந்து படரும் புரம்' எனக் கூட்டுக. உம்பர் - தேவர். இருந்து - செயலற்று. சிறந்து - மேம்பட்டு நின்று. எரியாடி - நெருப்பால் விளையாடினவன். கரப்ப - அழிய, 'அறம் திருந்தும் இடமாகிய உன் அருள்' என்க. ''அருளும்'' என்ற சிறப்பும்மை, அது பிறிதாகாமை உணர்த்தி நின்றது. பிறிதாதல் - வேறுபடுதல். 'அருமறை யும் திறந்திரிந்து' என்பதும் பாடம் என்பர் பேராசிரியர்; ''திரிந்து'' என்னும் எச்சம், எண்ணின்கண் வந்தது. சேண் நிலம் - அகன்ற நிலம். 'நின் அருள் பிறிதாயின், இவை

21. வழிப்படுத் துரைத்தல்

ஈண்டொல்லை ஆயமும் ஔவையும் நீங்கஇவ் வூர்க்கவ்வைதீர்த்
தாண்டொல்லை கண்டிடக் கூடுக நும்மை;எம் மைப்பிடித்தின்
றுண்டெல்லை தீர்இன்பந் தந்தவன் சிற்றம் பலம்நிலவு
சேண்டில்லை மாநகர் வாய்ச்சென்று சேர்க திருத்தகவே. 214

இவ்வாறும்' என்றது, 'இவை எஞ்ஞான்றும் திரியாமைபோல, நின் அருளும் திரியாது' என்றதாம்.

" சான்றவர் சான்றாண்மை குன்றின், இருநிலந்தான்
தாங்காது மன்னோ பொறை "

என்றார் திருவள்ளுவ நாயனாரும் (குறள் - 990.).

'உம்பர் இருந்து பதைப்பப் படரும் புரத்தை விளையாடி அழித்தவன்' என்பதனால், ஏனைய தேவர் பலரினும் மிக்க சிவபெருமானது பேராற்றல் கூறப்பட்டது.

214. வழிப்படுத்துரைத்தலாவது, தலைவியைத் தலைவன் பால் உய்த்து ஓம்படுத்துரைத்த தோழி, 'இனி நீவிர் இனிதே நும் நகரிற் சென்று சேர்க; யானும் விரைய வந்து நும்மைக் காணுதல் கூடுவதாக' என வழிப்படுத்து விடுத்தல். இதற்குக் கொளு:-

மதிநுதலியை வழிப்படுத்துப்
பதிவயிற் பெயரும் பாங்கி பகர்ந்தது.

"எம்மைப் பிடித்து" என்பது முதலாகத் தொடங்கி உரைக்க. 'ஆயமும், ஔவையும் ஈண்டு ஒல்லை நீங்க' எனக் கூட்டுக. 'இவ்வூர்க் கவ்வை ஒல்லை தீர்த்து' எனக் கூட்டுவர் பேராசிரியர். "ஈண்டு" என்றது, தலைவியது ஊரையும், "ஆண்டு" என்றது தலைவனது ஊரையுமாம். ஔவை - தாய். கவ்வை - அலர். அதனைத் தீர்த்தலாவது, தலைவி கற்புக் கடம் பூண்டமையை அறிந்து அயலவர் வாயடங்கிய பின் புறப்படுதல். "கண்டிட" என்ற செயவெனெச்சம்,

22. மெல்லக்கொண் டேகல்

பேணத் திருத்திய சீறடி மெல்லச்செல் ; பேரரவம்
பூணத் திருத்திய பொங்கொளி யோன்புலி யூர்புரையும்
மாணத் திருத்திய வான்பதி சேரும் இருமருங்கும் ;
காணத் திருத்திய போலும்முன் னுமன்னு கானங்களே. 215

தொழிற்பெயர்ப் பொருள் தந்தது. 'யான் கண்டிட' எனத் தோன்ற எழுவாய் வருவிக்க. 'நும்மை யான் ஒல்லைக் கண்டிடக் கூடுக' என்க. பிடித்து - வலியப்பிடித்து. எல்லை தீர் இன்பம் - முடிவில்லாத இன்பம்; பேரின்பம். சிற்றம்பலம் நிலவு - திருசிற்றம்பலம் நிலைபெற்று விளங்குகின்ற. சேண் - அகன்ற. 'சென்று திருத்தகச் சேர்க' என்க. திருத் தக - பொலிவு தகுதி பெற்று விளங்க.

சிவபெருமான் தனது திருவருட்கு உரியாரை வலியச் சென்று ஆட்கொள்ளுதல் கூறப்பட்டது.

215. மெல்லக்கொண் டேகலாவது, தோழி வழிப்படுத்து நீங்கியபின்னர்த் தலைவன் தலைவியைச் சுரத்திடை வருந்தாத வாறு மெல்லக்கொண்டு செல்லுதல். இதற்குக் கொளு :-

பஞ்சின் மெல்லடிப் பணைத்தோளியை
வெஞ்சுரத்திடை மெலிவகற்றியது.

பேண - யான் விரும்பும்படி. திருத்திய - அழகு செய்யப் பட்ட. சீறடி - சிறிய பாதங்களை உடையவளே. 'மெல்லச் செல்' என்றதனை இறுதியிற் கூட்டுக. 'பேரரவங்களை, அணி கலமாகப் பூணும்படி திருத்திய' என்க. திருத்துதல், அவற்றின் தீய குணங்களை நீக்குதல். பொங்கு ஒளியோன் - மிக்க ஒளியையுடையவன். 'புலியூர் புரையும் பதி' என இயையும். மாண - மாட்சிமைப்பட. திருத்திய - திருத்தமாகச் செய்யப் பட்ட. 'வான்பதி இருமருங்கும் சேரும்' எனவும், 'கானங்கள் காணத்திருத்திய போலும்' எனவும் கூட்டுக. காண - நாம் கண்ணுக்கு இனியவாகக் காணும்படி. திருத்தியபோலும் - அழகாகச் செய்யப்பட்டன போலாநின்றன. முன்னு - நம்

23. அடலெடுத் துரைத்தல்

கொடித்தேர் மறவர் குழாம்வெங் கரிநிரை கூடின்என்கை
வடித்தேர் இலங்கெஃகின்வாய்க்குதவா;மன்னும் அம்பலத்தோன்
அடித்தேர் அலரென்ன அஞ்சுவன் நின்ஐய ரென்னின்;மன்னுங்
கடித்தேர் குழன்மங்கை கண்டிடிவ் விண்தோய் கனவரையே.216

முன்னுக. மன்னு - நிலைபெற்றுள்ள. "சிறடியாய் மெல்லச் செல்" என்றது, 'சிற்றடிகள் வருந்தாவண்ணம் மெல்ல நட, என்றவாறு.

"பேரரவம் பூணத் திருத்திய பொங்கொளியோன்" எனக் கூறியமுகத்தால், சிவபெருமான் தகுதியில்லாரையும் தகுதி பெறச் செய்வோனுதல் கூறப்பட்டது.

216. அடல் எடுத்துரைத்தலாவது, தலைவன் தலைவியை மெல்லக்கொண்டேகும்பொழுது சுரத்திடைச் சிலர் வில்லொடும் அம்பொடும் செய்மையில் தோன்றக்கண்டு தலைமகள் அச்சங் கொள்ள, அவட்குத் தலைவன் தனது வலியை எடுத்துக்கூறி, 'அஞ்சற்க' எனத் தேற்றுதல். இதற்குக் கொளு :-

வரிசிலையவர் வருகுவரெனப்
புரிதருகுழலிக் குரைவன் உரைத்தது.

'தேரும், மறவர் குழாமும், கரிநிரையும் கூடின்' என்க. மறவர் - வீரர். 'கூடினும்' என்னும் சிறப்பும்மை தொகுத்தலாயிற்று. கூடுதல் - திரளுதல். 'கூடினும்' என்றது, 'திரண்டுவரினும்' என்றவாறு. வடித்து - கூர்மை செய்யப்பட்டு 'வடித்து இலங்கும் எஃகு' என்க. ஏர் - அழகு. 'ஏர் இலங்கும் எஃகு' எனப் பண்பின் தொழில். பண்பிமேல் நின்றது. "வாய்க்கு உதவா" என்றது, 'இரை யாகப் போதா' என்றதாம். 'நின் ஐயர் என்னின், மன்னும் அம்பலத்தோன் அடித் தேரலர் என்ன அஞ்சுவன்' என மாற்றி, "கொடித் தேர்" என்றதற்கு முன்னே கூட்டுக. தேரலர் - நினையாதவர். 'அடித்தேர்பவர்' என்னும் பாடத் திற்கு, 'அம்பலத்தான் அடியவரைக் கண்டு அஞ்சுதல் போல

24. அயர் வகற்றல்

முன்னோன் அருள்முன்னும் முன்னு வினையின் முனகர்துன்னும்
இன்னாக் கடறிதிப் போழ்தே கடந்தின்று காண்டும்சென்று
பொன்னா ரணிமணி மாளிகைத் தென்புலி யூர்ப்புகழ்வார்
தென்னா எனஉடை யான்நட மாடுசிற் றம்பலமே. 217

அஞ்சுவேன்' என்க. ஐயர் - தமையன்மார். மன்னும் கடி - நிலைபெற்ற வாசனையை. 'வண்டு தேர் குழல்' என ஒரு சொல் வருவிக்க. மங்கை, விளி. 'இவ் விண்தோய் கனவரைக் கண் இதனைக் கண்டிடு' என்க. ''அடித் தேரலர், கடித் தேர் குழல்'' என்றவற்றில், தகரவொற்றுக்கள் விரித்தலாய் வந்தன. உடன்போக்கின்கண் தலைவி தன் தமர் இடைச் சுரத்துப் போந்து அவளை மீட்டுக்கொண்டு போதலும் உள தாதல் பற்றி, இத்துறை கூறினர்.

அம்பலத்தான் அடியை நினையாதவர், தமக்குப் பகையா வனவற்றிற்கெல்லாம் அஞ்சி மெலிவர் என்பது கூறப்பட்டது. 'அடித்தேர்பவர்' என்பது பாடமாயின், நன்மக்களாவார் சிவனடியாரிடத்து அச்சமும், பணிவும் உடையராய் இருத்தல் கூறப்பட்டதாம்.

217. அயர்வகற்றலாவது, அடலெடுத்துரைத்துத் தலைமகளை அச்சந் தீர்த்துக்கொண்டு போகின்ற தலைவன், 'இன்றே நம் ஊர் அடைவோம்; வருந்தற்க' எனக் கூறி, அவளது வழிவருத்தத்தை நீக்குதல். இதற்குக் கொளு ;-

இன்னல் வெங்கடத் தெரிவேலவன்
அன்னம் அன்னவள் அயர்வகற் றியது.

முன்னோன் - யாவர்க்கும் முன்னே உள்ளவன்; சிவபெருமான். முன்னும் முன்னு - முற்பிறப்பிலும் நினையாத. வினையின் - தீவினையையுடைய. முனகர் - கீழ்மக்கள். துன்னும் - அடையத் தகும். இன்னா - துன்பத்தைத் தருகின்ற. கடறு - பாலைநிலம். 'இஃது' என்னும் ஆய்தம், தொகுத்தலாயிற்று. ''இன்று காண்டும்'' என்றதனை இறுதிக்கண் கூட்டுக.

25. நெறிவிலக்கிக் கூறல்

விடலை,உற் றூர்இல்லை; வெம்முனை வேடர்; தமியை;மென்பூ
மடலையுற் றார்குழல் வாடினள்; மன்னுசிற் றம்பலவர்க்
கடலையுற் றாரின் எறிப்பொழிந் தாங்கருக் கன்சுருக்கிக்
கடலையுற் றான்;கடப் பார்இல்லை இன்றிக் கடுஞ்சுரமே. 218

'இன்றே' எனத் தேற்றேகாரம் விரித்துரைக்க 'புலியூர்ச் சிற்றம்பலம்' என இயையும். புகழ்வார் தென்னா என - துதிக்கின்றவர்கள், 'தென்னனே' என்று துதிக்க.

சிவபெருமானை நினையாதவர் தீய இடங்களிற் பட்டுத் துன்புறுதல் கூறப்பட்டது.

218. நெறிவிலக்கிக் கூறலாவது, தலைமகளைத் தலைமகன் அயர்வு நீக்கிக் கொண்டு செல்லுங்கால் ஞாயிறு மறைதலின், அவ்விடத்துள்ளார், 'இனி மேற்செல்லலாகாது; ஈண்டுத் தங்கிப் போவாயாக' என வழிப்போக்கினை விலக்கிக் கூறுதல். இதற்குக் கொளு :-

சுரந்நிடைக் கண்டவர் சுடர்க்குழை மாதொடு
சரந்தனி வில்லோய் தங்கு கென்றது.

விடலை, விளி. உற்றூர் - இடுக்கண் உற்றோர்க்கு உதவும் நன்மக்கள். 'இனிச் செல்லும் வழியில் உற்றூர் இல்லை; உள்ளார் வெம்முனை வேடரே; நீயும் தனியையாய் உள்ளாய்; இவளும் வழிவந்த வருத்தத்தால் பெலிவுற்றாள்! அருக்கனும் மேலைக் கடலைச் சார்ந்தான்; இப்பொழுதில் இவ்வாறு இக் கடிய சுரத்தை ஒருவரும் கடவார்' என்க. 'ஆதலின் ஈண்டுத் தங்கிப்போவாயாக' என்பது குறிப்பெச்சம். பூமடல் - பூவிதழ். ஆர் - நிறைந்த. அடலை உற்றாரின் - மாறுபடுதலைப் பொருந்தியவர்போல. எறிப்பு - ஒளி வீசுதலைத் தவிர்ந்து. அருக்கன் - சூரியன். "சுருக்கி" என்றதற்கு, 'தன் கதிர்களை' என்னும் சொல்லெச்சம் வருவிக்க.

சிவபெருமானை வணங்க மறுப்பவர், ஒளியிழந்து கெடுதல் கூறப்பட்டது.

26. கண்டவர் மகிழ்தல்

அன்பணைத் தஞ்சொல்லி பின்செல்லும் ஆடவன் ; நீடவன்றன்
பின்பணைத் தோளி வரும் ;இப் பெருஞ்சுரஞ் செல்வதன்று ;
பொன்பணைத் தன்ன இறையுறை தில்லைப் பொலிமலர்மேல்
நன்பணைத் தண்ணற வுண்அளி போன்றுளிர் நாடகமே. 219

---

219. கண்டவர் மகிழ்தலாவது, நெறிவிலக்கப்பட்ட தலைமகன், பிற்றைநாட் காலை எழுந்து தலைமகளைக் கொண்டு செல்லுங்கால், அவர் போக்கினைக் கண்டவர், இன்புற்று மகிழ்ந்து கூறுதல். இதற்குக் கொளு :-

மண்டழற் கடந்துக் — கண்டவர் உரைத்தது.

'ஆடவன் (ஒருகால்) அம்சொல்லிபின் செல்லும் ; பணைத் தோளி பலகால் அவன்பின் வரும்; (இவர்தம் போக்கு) இச் சுரத்தைக் கடப்பதன்று : ஒருநாடக நிகழ்ச்சியாய் இருந்தது' என்க. 'அன்பால்' என உருபு விரிக்க. "நீடு" எனப் பின்னர் வருகின்றமையின், 'அம் சொல்லிபின் செல்லும்' என்றதற்கு, 'ஒருகால்' என்பது வருவிக்கப்படும். 'நீடு' என்பது 'நீட' எனப் பொருள் தருதல் பயின்று வருவது என்பதனை, 'நீடு வாழ்க' என்பது முதலிய வழக்குக்களான் அறியலாம். "செல்வதன்று, நாடகம்" என்னும் பயனிலைகட்கு, 'இவர்தம் போக்கு' என்னும் எழுவாய் வருவிக்க. பொன் பணைத்தன்ன இறை - பொன் ஓர்வடிவு பெற்று நின்றாலொத்த இறைவன். இவ்வுவமை, பொலிவு மாத்திரையன்றிச் சிறப்புப் பற்றியும் வந்தது என்க. 'தில்லைக்கண் நன்பணையில் பொலி மலர்மேல் தண் நறவு' எனக் கூட்டுக. பணை - மரக்கிளை. நறவுண் அளி. களித்து ஆடுதலாகிய தொழில்பற்றி வந்த உவமை.

சிவபெருமான் தன் அன்பர்க்குப் பொற்குவைபோலப் பொலிந்து நிற்றல் கூறப்பட்டது.

27. வழி விளையாடல்

கண்கடம் மாற்பயன் கொண்டனம் கண்டினிக் காரிகை, நின்
பண்கட மென்மொழி ஆரப் பருக வருகஇன்னே ;
விண்கட நாயகன் தில்லையின் மெல்லியல் பங்கன்எங்கோன்
தண்கடம் பைத்தடம் போற்கடுங் கானகந் தண்ணெனவே. 220

28. நகர் அணிமை கூறல்

மின்றங் கிடையொடு நீவியன் தில்லைச்சிற் றம்பலவர்
குன்றங் கடந்துசென் றுல்நின்று தோன்றும், குரூஉக்கமலம்
துன்றங் கிடங்கும், துறைதுறை வள்ளைவெள் ளைநகையார்
சென்றங் கடைதட மும்புடை சூழ்தரு சேண்நகரே. 221

---

220. வழி விளையாடலாவது, கண்டவர் மகிழத் தலைமகளைக் கொண்டு செல்லாநின்ற தலைமகன், அவள் வருந்தாதவாறு அவளொடு விளையாடிச் செல்லுதல். இதற்குக் கொளு:-

வன்றழற் கடத்து வடிவேல் அண்ணல்
மின்றங் கிடையொடு விளையா டியது.

காரிகை, விளி; இதனை முதலிற் கொள்க. காரிகை - அழகு; ஆகுபெயராய், அதனை உடையாளைக் குறித்தது. 'கண்டு கண்கள் தம்மாற் பயன் கொண்டனம்' எனக் கூட்டுக. கண்டு - காண்டலால்; இதற்குச் செயப்படுபொருள், 'நின் காரிகை' என்பதாதல், உடம்பொடு புணர்த்தலாற் கூறப்பட்டமை அறிக. 'நின் பண் கட மென்மொழி ஆரப் பருக இன்னே வருக' என மாற்றி, அதனை இறுதிக்கண் கூட்டி யுரைக்க. பண் கடம் - பண்ணினது முறைமை. விண்கள் தம் நாயகன், எனப் பிரிக்க. விண்ணுலகங்கள் பலவாதலை அறிக. 'கடம்பை' என்பது, ஒரு சிவதலம். தடம் - பொய்கை. தண்என - குளிரும் அளவாக. 'கானகம் குளிருமளவும் நின் மென் மொழியை ஆரப்பருக (என்பால்) இன்னே வருக' என்க. "பருக" என்றது, மொழியைத் தேனாகக் கூறிய குறிப்புருவகம். கானகம் குளிர்வது, நண்பகற்குப் பின்னராம்.

சிவபெருமான் பல உலகங்கட்கும் முதல்வனாதல் கூறப் பட்டது.

221. நகர்அணிமை கூறலாவது, தலைவனும், தலைவியும் தம்முள் விளையாடிச் செல்லுங்கால் பொழுது செல்ல, கண்

29. நகர் காட்டல்

மின்போல் கொடிநெடு வானக் கடலுள் திரைவிரிப்பப்
பொன்போல் புரிசை வடவரை காட்டப் பொலிபுலியூர்
மன்போற் பிறையணி மாளிகை சூலத்த வாய்மடவாய்
நின்போல் நடையன்னந் துன்னிமுன் தோன்றும்நன்
[னீள்நகரே. 222

டோர், 'கடிது சென்மின்' என்றற்கு, 'நும் நகர் அக்குன்றத்தைக் கடந்தால் தோன்றும்' எனக் கூறுதல். இதற்குக்கொளு:-

வண்டமர் குழலியோடு — கண்டவர் உரைத்தது.

முதற்கண், 'விடலாய்' என்னும் விளி வருவிக்கப்படுதல்' நெறிவிலக்கலில் வந்தவாற்ருன் அறியப்படும். 'நீ மின் தங்கு இடையோடு குன்றம் கடந்து சென்ருல், சேண் நகர்' தோன்றும் என முடிக்க. மின் - மின்னலின் தன்மை. "தில்லைச் சிற்றம்பலவர் குன்றம் கடந்தால் தோன்றும்" என்றதனுல், "சேண் நகர்" என்றதும், அத் தில்லைநகரேயாயிற்று. நின்று - நிலைபெற்று. குரூஉ - நிறம். கமலம் துன்று அம் கிடங்கு - தாமரை மலர் நெருங்கிய அழகிய அகழி. வள்ளை - உரற்பாட்டு. 'அதனையுடைய மகளிர் துறைகள் பலவற்றிலும் சென்று அடை தடம்' என்க. நகை - முறுவல். 'கிடங்கும், தடமும் புடைசூழ்தரு நகர்' என்க. சேண் - அகற்சி.

சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் தலம், வளப்பமும், அழியாமையும் உடைத்தாதல் கூறப்பட்டது.

222. நகர் காட்டலாவது, கண்டோர், நகர் அணிமை கூறக் கேட்டு அயர்வகன்று வரும் தலைமகளை அன்புறக் கொண்டு சென்ற தலைமகன், 'இதுவே நம் நகர்காண்' எனத் தன்னுடைய நகரைக் காட்டுதல். இதற்குக் கொளு:-

கொடுங்கடங் கடந்த குழைமுக மாதர்க்குத்
தடங்கி டங்குசூழ் தன்நகர் காட்டியது.

'நின்போல் நடை அன்னம் துன்னி, மன்போல் பிறையணி மாளிகை சூலத்தவாய் முன்தோன்றும் நல் நீள்நகர்

30. பதிபரி சுரைத்தல்

செய்குன் றுவை ; இவை சீர்மலர் வாவி ; விசும்பியங்கி
நைகின்ற திங்கள்எய்ப் பாறும் பொழில்அவை ; ஞாங்கர்எங்கும்
பொய்குன்ற வேதியர் ஓதிடம் உந்திடம் ; இந்திடமும்
எய்குன்ற வார்சிலை அம்பல வற்கிடம் : ஏந்திழையே. 223

புலியூர்' எனக் கூட்டி முடிக்க. கொடி, துகிற்கொடி. அஃது ஒளியாலும், அசைவினாலும் மின்னல்போல்வதாயிற்று. அதனை வானத்தொடு பொருந்தும் வழியே திரையாகக் கூறுதலின், உவமைக்கு உவமை அன்றாயிற்று. திரை விரிப்ப - அலையைப் பரப்ப ; என்றது, 'அலைபோலப் பரந்துதோன்ற' என்ற படியாம். பொன்போல் புரிசை - நிறத்தால் பொன்னையொக் கும் மதில். வடவரை - மேருமலை. 'விரிப்ப, காட்ட' என்ற எச்சங்கள், பொலிதல் வினையொடு முடிந்தன. 'இது புலியூர்' என்றதனால், 'தொழுவாயாக' என்பது குறிப்பெச்சமாம். மன் - இறைவன். "சூலத்தவாய்" என்றதற்கும், அவனைப் போலச் சூலத்தை உடையனவாய்' என உரைக்க. சைவர் இல்லங்களில் வாயிலிடத்துச் சிவபெருமானது படைக்கலமாகிய சூலம், பொறித்தல் அல்லது உருவமைத்தல் செய்யப்பட்டிருக் கும் என்பது உணர்க. அன்னங்கள், வளர்க்கப்படுவன. துன்னி - நெருங்கப்பட்டு.

சிவபெருமானது தலமும் அவனைப்போலும் காட்சியதாய்த் தொழத்தகுவதாதல் கூறப்பட்டது.

223. பதிபரி சுரைத்தலாவது, முன்னர் நகர்காட்டிப் பின்னர் அதனுள் தலைமகளைக் கொண்டு சென்ற தலைமகன், அதனிடத்து ஆங்காங்குள்ள செய்குன்றுகள், வாவிகள், பொழில்கள் முதலியவற்றைக் காட்டித் தன்மனை புகுதல். இதற்குக் கொளு :-

கன்னிவர் வளநகர் கண்டுசேன் றடைந்து
பன்னிவர் மொழிக்குப் பதிபரி சுரைத்தது.

'ஏந்திழையே, உவை செய்குன்று ; இவை வாவி ; அவை பொழில் ; உந்த இடம் வேதியர் ஓதிடம் ; இந்த இடமும்

31. செவிலி தேடல்

மயிலெனப் பேர்ந்திள வல்லியின் ஒல்கிமென் மானவிழித்துப்
குயிலெனப் பேசுமெங் குட்டன்எங் குற்ற?தென் நெஞ்சகத்தே
பயிலெனப் பேர்ந்தறி யாதவன் தில்லைப்பல் பூங்குழலாய்,
அயிலெனப் பேருங்கண் ணாய்என் கொலாம்இன் றயர்கின்றதே

அம்பலவற்கு இடம்' என்க "இவை" என்றது தம்முன் உள்ளவற்றை. "உவை" என்றது, சிறிது அப்பால் தோன்று வனவற்றை "அவை" என்றது, மிகச் சேய்மையில் தோன்று வனவற்றை. இயங்கி நைகின்ற - இயங்குதலால் இளைக்கின்ற. தொடர்புயர்வு நவிற்சியணியும், தற்குறிப்பேற்றவணியும் வந்தன. ஞாங்கர் எங்கும் பொய்குன்ற - உலகம் எங்கணும் பொய் கெடும்படி, 'மறையை ஓது இடம்' என வருவித்துக்கொள்க. சுட்டின் மரூஉவாகிய, 'உந்த, இந்த' என்பவற்றின் ஈற்று அகரங்கள் தொகுத்தலாயின. "இந்நிடமும்" என்ற உம்மை, இறந்தது தழுவிற்று. எய் சிலை - எய்தற்குக் கருவியாகிய வில். வாளா, 'குன்ற வார்சிலை' என்னாது, "எய்குன்ற வார்சிலை" என்றது, எய்தற்கு ஏலாத மலையை ஏற்புடையதாகச் செய்த ஆற்றலுடைமை கூறினாள் என்க. 'இந்த இடம் அம்பலவற்கு இடம்' என இறுதிக்கண் கூறி முடித்தமையின், அதன் அருகில் உள்ளது அவன் மனை என்பது போந்தது.

சிவபெருமானது தன்வயமுடைமையும், அளவில் ஆற்றலும் கூறப்பட்டன.

224. செவிலி தேடலாவது, தலைமகனையும், தலைமகளை யும் வழிப்படுத்துவிட்ட தோழி தனிமையினின்று பிரிவாற்றாது கவன்றிருப்ப, செவிலி அவளைக் கண்டு, 'எம் பிள்ளை எங்கே? நீ கவல்கின்றது என்னை' எனத் தலைவியை நாடுதல். இதற்கு கொளு :-

கவலை யுற்ற காதற் றோழியைச்
செவிலி யுற்றுத் தெரிந்து வினயது.

பேர்ந்து - இடம்பெயர்ந்து. இளவல்லியின் ஒல்கி - இளைய கொடிபோலத் துவண்டு. மான் விழித்து - மான்போல விழித்து.

32. அறத்தோடு நிற்றல்

ஆளரிக் கும்அரி தாய்த்தில்லை யாவருக் கும்எளிதாம்
தாளரிக் குன்றில்தன் பாவைக்கு மேவித் தழல்திகழ்வேற்
கோளரிக் குந்நிக ரன்னுர் ஒருவர் குருஉமலர்த்தார்
வாளரிக் கண்ணிகொண் டாள்வண்ட லாயத்தெம் வாணுதலே.

குட்டன் - பிள்ளை. பயில் என - தனக்குப் பயிற்சி என்று சொல்லும்படி. பேருங் கண் - பிறழுங் கண்.

சிவபெருமானுக்குத் தன் அடியவர் நெஞ்சமே பயிலுமிடமாதல் கூறப்பட்டது.

225. அறத்தொடு நிற்றலாவது, 'தலைமகள் எங்குற்ருள்' எனத் தேடுகின்ற செவிலிக்குத் தோழி, 'பண்டொருநாள் நீ சொல்ல, நாங்கள் யாவரும்போய் இம்மலையிடத்து விளையாடிக் கொண்டிருக்க, அவ்வழியே பெரியோன் ஒருவன் தார் சூடிச் சென்ருன்; அத் தாரினைக்கண்ட நின் மகள், 'இதனை என் பாவைக்குத் தாரும்' எனக் கேட்டாள்; அவன், 'இல்லை' என்னும் சொல் அறியாதவன் ஆதலின், யாதொன்றும் எண்ணுது அதனைக் கொடுத்துப் போயினுன்; இஃது, அறியாப் பருவத்து நிகழ்ந்தது. இவ்வளவே யான் அறிவேன்; அறியாப் பருவத்து நிகழ்ந்ததனை இன்று நினைந்து கற்புக்கடம் பூண்டாள் போலும்' என உடன்போக்குத் தோன்றக் கூறி அறத்தொடு நிற்றல். அறமாவது, ஈண்டுக் கற்பு. 'கற்பொடு நிற்றல்' என்பது, அதனை வெளிப்படுத்தலைக் குறிப்பதாயிற்று. இதற்குக் கொளு :-

சுடர்க்குழைப் பாங்கி படைத்துமொழி கிளவியிற்
சிறப்புடைச் செவிலிக் கறத்தொடு நின்றது.

ஆள் - ஆட்செய்தற்கு. அரிக்கும் - திருமாலுக்கும், 'தில்லைக் கண்' என உருபு விரிக்க. 'தாளரது இக்குன்றில்' என்க. பாவைக்கு மேவி - பாவையின் பொருட்டு விரும்பி. கோள் அரி - கொள்ளுதல் வல்ல சிங்கம். "கோளரிக்குந்நிகர்" என்ற நகர ஒற்று விரித்தல். நிகர் - எதிராகின்ற மற்ருெரு கோளரி. குருஉ - நிறம். "வாளரிக் கண்ணி" என்றதனை, "குன்றில்"

33. கற்புநிலைக் கிரங்கல்

வடுத்தான் வகிர்மலர் கண்ணிக்குத் தக்கின்று ; தக்கன்முத்திக்
கெடுத்தான், கெடல்இல்தொல் லோன்தில்லைப் பன்மலர்
[கேழ்கிளர
மடுத்தான் குடைந்தன் றழுங்க அழுங்கித் தழிஇமகிழ்வுற்
றெடுத்தாற் கினியன வேஇனி யாவன எம்மனைக்கே. 226

என்றதன் பின்னர்க் கூட்டுக. வண்டல் - மகளிர் விளையாட்டு. 'வண்டலை உடைய ஆயத்திடத்து எம் வாணுதல் ஒருவர் தார் கொண்டாள்' எனக் கூட்டுக.

'இறைவர் குன்று' என்றதனால், 'இது தெய்வச் செயல்' எனவும், 'பாவைக்கு மேவி' என்றதனால், 'பாவையின் பொருட்டுப் பயிர்ப்பு நீங்கினாள்' எனவும், 'கோளரிக்கு நிகரன்னார்' என்றதனால், 'இவட்குத் தக்கான்' எனவும், 'வண்டலாயத்து' என்றதனால், 'அறியாப்பருவத்து' எனவும், 'தார்கொண்டாள்' என்றதனால், 'அது மெய்யுற்றதோடு ஒக்கு மன்றோ' எனவும் கூறினாளாம்.

சிவபெருமானது திருவடி பிறவிடத்துக் கிடைத்தற்கரிய தாய்த் தில்லையம்பலத்துள் எளிதாய் நிற்றல் கூறப்பட்டது.

226. கற்புநிலைக் கிரங்கலாவது, தோழி அறத்தொடு நிற்கக்கேட்ட செவிலி, 'என்மகட்கு இஃது அறமாயினும், தன் பருவத்திற்குத் தகாது' என இரங்கிக் கூறுதல். இதற்குக் கொளு :-

விற்புரை நுதலி கற்புநிலை கேட்டுக்
கோடா யுள்ளம் நீடாய் அழுங்கியது.

"வடுத்தான்" என்றதில் உள்ள தான், அசைநிலை. வகிரப்படுதலாகிய வடுவினது தொழில், அதனோடு உவமிக்கப் படும் பொருள்மேல் ஏற்றிக்கூறப்பட்டது. தக்கின்று - தக்க தாயிற்றில்லை. இதன்பின், 'ஆயினும்' என்பது வருவித்து, அதனை, 'எம் அனைக்கு இனி ஆவன, எடுத்தாற்கு இனியனவே' என முடிக்க. 'தில்லைக்கண் எடுத்தாற்கு' என இயையும்.

34. கவன்றுரைத்தல்

முறுவலக் கால்தந்து வந்தென் முலைமுழு வித்தழுவிச்
சிறுவலக் காரங்கள் செய்தஎல் லாம்முழு துஞ்சிதையத்
தெறுவலக் காலனைச் செற்றவன் சிற்றம் பலஞ்சிந்தியார்
உறுவலக் கானகந் தான்படர் வானும் ஒளியிழையே. 227

'மலர்கள் தம் நிறம் கிளர்ந்து தோன்றக் குடைந்து' என்க. "தான்" என்றது, தலைவியை. அழுங்க - அழுந்த. அழுங்கி - அழுந்தி. ஆவன - நாம் செய்யத் தகுவன.

சிவபெருமான், பிறரை அழித்தலும், தான் அழியாமையும் உடையனாதல் கூறப்பட்டது.

227. கவன்றுரைத்தலாவது, தலைவியது பருவம் நோக்கி அவளது கற்பு நிலைக்கு இரங்காநின்ற செவிலி, 'நெருநல் என் மகள் செய்த குறியெல்லாம் இவ்வாறு செல்லவேண்டிப் போலும்' எனக் கவன்று கூறுதல். இதற்குக் கொளு :-

அவள்நிலை நினைந்து — செவிலி கவன்றது.

முறுவல் அக்கால் தந்து - தனது முறுவலை எனக்கு அப் பொழுது தந்து. முழுவி - முத்தம் இட்டு. வலக்காரம், 'வலாற் காரம்' என்பதன் மரூஉ; 'வலியச்சென்று துன்புறுத்தல்' என்பது பொருள். இளமையாற் செய்தனவாதல் பற்றி, 'சிறு வலக்காரங்கள்' என்றாள். 'செய்த எல்லாம் தான் கானகம் படர்வான் ஆம்' என முடிக்க. முழுதும் சிதையத் தெறுவலக் காலன் - எல்லாப் பொருளும் அழியுமாறு தெறும் வல்லமை யுடைய கூற்றுவன். வலக்கானகம் - வலியகாடு.

'முழுவதும் தெறுவலக் காலனைச் செற்றவன்' எனக் கூறிய முகத்தால், சிவபெருமானது பேராற்றல் கூறப்பட்டது.

35. அடிநினைந் திரங்கல்

தாமே தமக்கொப்பு மற்றில் லவர்தில்லைத் தண்ணனிச்சப்
பூமேல் மிதிக்கிற் பதைத்தடி பொங்கும் ; நங் காய், எரியுந்
தீமேல் அயில்போற் செறிபரற் கானிற் சிலம்படிபாய்
ஆமே நடக்க அருவினை யேன்பெற்ற அம்மனைக்கே. 228

---

228. அடிநினைந்திரங்கலாவது, தலைமகள் முன்னாள் செய்த குறிகளைத் தான் அறியாமைக்குக் கவல்கின்ற செவிலி, தலைமகளது அடிகளின் மென்மையை நினைந்து, 'அவை பரல் நிறைந்த காட்டை எங்ஙனம் மிதிக்க வல்லனவாகும்' என இரங்குதல். இதற்குக் கொளு ;-

வெஞ்சுர மும்அவள் பஞ்சிமெல் லடியும்
செவிலி நினைந்து கவலை யுற்றது.

'நங்காய், அடி, அனிச்சப் பூமேல் மிதிக்கிற் பதைத்துப் பொங்கும் ; அச்சிலம்படி பரற்கானிற் பாய் நடக்க அம்மனைக்கு ஆமே' எனக் கூட்டிமுடிக்க. 'மிதிக்கினும்' என்ற இழிவு சிறப்பும்மை தொகுத்தலாயிற்று. "அம்மனைக்கு" எனப் பின் வருகின்றமையின், "அடி" என வாளா கூறப்பட்டது. "நங் காய்" என்றது தோழியை. பொங்கும் - கொப்புளிக்கும். தீமேல் அயில் - நெருப்பின்மேல் வைத்தவேல். "அயில்போற் செறி" என லகரம் றகரமாய்த் திரிந்து நிற்றலின், 'அயில் போலச் செறிந்த' என்பது பொருளாம். 'அயில்போல் செறி' எனத் திரியாது நின்றதே பாடம் எனின், 'அயில்போலும் பரல்' என்பது பொருளாகும். 'அச் சிலம்படி' எனச் சுட்டு வருவித்துரைக்க. பாய் - பாவி ; பொருந்தவைத்து. அம்மனை - தாய் ; என்றது, மரபு வழுவமைதி.

சிவபெருமான், தனக்கு ஒப்பார் பிறர் ஒருவரில்லாத ஒருவனாதல் கூறப்பட்டது.

36. நற்றாய்க் குரைத்தல்

தழுவின கைஇறை சோரின், தமியம்என் றேதளர்வுற்
றழுவினை செய்யுமந் நையாஅஞ்சொற் பேதை யறிவு,விண்ணோர்
குழுவினை உய்யநஞ் சுண்டம் பலத்துக் குனிக்கும்பிரான்
செழுவின தாள்பணி யார்பிணி யால்உற்றுத் தேய்வித்ததே. 229

37. நற்றாய் வருந்தல்

யாழியல் மென்மொழி வன்மனப் பேதைஒர் ஏதிலன்பின்
தோழியை நீத்தென்னை முன்னே துறந்துதுன் னூர்கள்முன்னே
வாழியம் மூதூர் மறுகச்சென் றாள்,அன்று மால்வணங்க
ஆழிதந் தான்அம் பலம்பணி யாரின் அருஞ்சுரமே. 230

---

229. நற்றாய்க்கு உரைத்தலாவது, அடிநினைந்திரங்கிய செவிலி பின் நற்றாயிடத்து, 'நம் மகளது முதுக்குறைவு என்னைத் தேய்விக்கின்றது' எனத் தலைவியது உடன்போக்குத் தோன்றக் கூறுதல். இதற்குக் கொளு :-

> முகிழ்முலை மடந்தைக்கு முள்ளிய தறியத்
> திகழ்மனைக் கிழத்திக்குச் செவிலி செப்பியது.

தழுவின கை, செவிலி தலைவியைத் தழுவிய கை. இறை சோரின் - சிறிது தளருமாயின். தமியம் என்று - நாம் தமியம் என்று கருதி. கருதி அழுந்தொழிலைச் செய்பவள் தலைவி என்க. 'உய்விக்க' என்னும் பிறவினையது விவ்விகுதி தொகுத்தல் பெற்று, 'உய்ய' என நின்றது. செழுவின - வளவிய; இன்பமான. பணியார் பிணி - பணியாதவர்க்கு உரிய துன்பம். உற்று - மிக்கு. 'அறிவு பிணியால் தேய்வித்தது' என்க.

சிவபெருமானது திருவடி இன்பமானது என்பதும், அதனை அடையாதவர்க்கு உரியது துன்பமே என்பதும் கூறப்பட்டன.

230. நற்றாய் வருந்தலாவது, தலைவியது உடன்போக்கினைச் செவிலி கூறக் கேட்ட நற்றாய், பிரிவாற்றாது வருந்துதல். இதற்குக் கொளு :-

> கோடாய் கூற — நீடாய் வாடியது.

38. கிளிமொழிக் கிரங்கல்

கொன்னுனை வேல்அம் பலவற் றொழாரிற்குன் றம்கொடியோள்
என்னணஞ் சென்றனள்! என்னணஞ் சேரும்! எனஅயரா
என்னனை போயினள்! யாண்டையள்! என்னைப் பருந்தடுமென்
றென்னனை போக்கன்றிக் கிள்ளைஎன் னுள்ளத்தை ஈர்கின்றதே.

யாழ் - யாழிசை. 'அதன் இயல்புபோலும் மென்மொழி' என்க. 'மொழி மென்மையாயினும், மனம் வன்மையாய் இருந்தது' என்றாள். ஏதிலன் - அயலான். 'பேதை ஓர் ஏதிலன் பின் அருஞ்சுரம் சென்றாள்' எனக் கூட்டி முடிக்க. இற்செறிக்கப்பட்டது முதலாகப் புறக்கணித்திருந்தமை பற்றி, 'தன்னை முன்னமே துறந்தாள்' என்றாள். துன்னார்கள் - பகைமையுடையவர்கள். 'அவர்கள் அலர் தூற்றச் சென்றாள்' என்பாள், 'துன்னார்கள் முன்னே சென்றாள்' என்றாள். வாழி, அசைநிலை. "மூதூர்" என்றது, அன்புடையாரை. மறுக - பிரிவாற்றாது வருந்த. ஆழி - சக்கரம். 'இனி, யான் எங்ஙனம் ஆற்றுவேன்' என்பது குறிப்பெச்சம்.

சிவபெருமான் வேண்டுவார் வேண்டுவதை ஈபவன் என்பதும், அவனை வணங்காதார் துன்பநெறிக்கண் சுழல்வர் என்பதும் கூறப்பட்டன.

231. கிளிமொழிக் கிரங்கலாவது, தலைமகளது பிரிவாற்றாது வருந்துகின்ற நற்றாய், அவள் வளர்த்த கிளி அவளை அழைத்து அரற்றுகின்ற சொற்கேட்டு, அதற்கு வருந்துதல். இதற்குக் கொளு :-

மெய்த்தகை மாது வெஞ்சுரஞ் செல்லத்
தந்தையை நோக்கித் தாய்புலம் பியது.

கொல் நுனை வேல் - கொல்லத் தொழிலால் அமைந்த நுனியையுடைய சூலம். 'கொல்லத் தொழிலால் அமைந்த' என்றது, இன அடை. 'கொன் நுனைவேல்' எனப் பிரித்து, 'அச்சத்தைத் தருகின்ற, கூர்மையையுடைய சூலம்' என உரைப்பினும் அமையும். "குன்றம்" என்றது, அதன்கண்

39. சுடரோ டிரத்தல்

பெற்றே றெடுங்கிள்ளை வாட முதுக்குறை பெற்றிமிக்கு
நற்றேன் மொழிஅழற் கான்நடந் தாள்முகம், நானனுகப்
பெற்றேன் பிறவி பெருமற்செய் தோன்தில்லைத் தேன்பிறங்கு
மற்றேன் மலரின் மலர்த்திர நந் தேன்சுடர் வானவனே. 232

வழியை. "குன்றத்தை" இரண்டாவது விரிக்க. "கொடியோள்" என்றது, தன்னைத் துறந்தமை பற்றியாம். என்னணம் சேரும் - தான் சென்றவிடத்தில் எங்ஙனம் தங்குவாள். என - என்று யான் சொல்லக்கேட்டு. அயரா - தான் தளர்ச்சியுற்று. 'என் அன்னை போயினள்! யாண்டையள்! என்னைப் பருந்து அடும்!' என்றவை கிளியின் கூற்று. 'போயினளே; அவள் யாண்டையளோ! என்னைப் பருந்து அடுமே' என உரைக்க. யாண்டையள் - எங்கே உள்ளாள். அடும் - கொல்லும். என்று - என்று சொல்லி. இஃது, "ஈர்கின்றது" என்பதனோடு முடியும். என் அனை போக்கன்றி - என்தாயது பிரிவன்றி; என்றது, 'அவள் பிரிவு என் உள்ளத்தை ஈர்கின்றிலது; கிளியே என் உள்ளத்தை ஈர்கின்றது' என அதன் துன்ப மிகுதி கூறியவாறு. மகளை, 'தாய்' என்றது, காதல் பற்றி வந்த மரபு வழுவமைதி.

சிவபெருமானது தலத்தை வணங்காதவர் தீய இடத்திற் கிடந்து அல்லல் உறுதல் கூறப்பட்டது.

232. சுடரோடு இரத்தலாவது, கிளிமொழி கேட்டு வருந்துகின்ற நற்றாய், பகலவனை நோக்கி, 'அழற்கடம் சென்ற என் மகள் முகத்தை நீ வாட்டாது, தாமரை மலரை மலரச் செய்தல்போல மலரச்செய்' என இரத்தல். இதற்குக் கொளு:-

> வெஞ்சுரந் தணிக்கெனச் செஞ்சுட ரவற்கு
> வேயமர் தோளி தாயர் பராயது.

'சுடர் வானவனே, பெற்றேறெனெடும் இருந்து கிள்ளை வாட நடந்தாள் முகம் மலரின் மலர்த்து; இரந்தேன்' என முடிக்க. "பெற்றேறெனெடும்" என்ற உம்மை, சிறப்பு. முதுக்குறை பெற்றி - அறிவு முதிர்ந்த தன்மை. "பெற்றி மிக்கு நடந்தாள்",

40. பருவம் நினைந்து கவறல்

வைம்மலர் வாட்படை ஊரற்குச் செய்யுங்குற் றேவல்மற்றென்
மைம்மலர் வாட்கண்ணி வல்லள்கொல் லாம்! தில்லை யான்
[மலைவாய்
மொய்ம்மலர்க் காந்தளைப் பாந்தளென் றெண்ணித்துண்
[ணென்றொளித்துக்
கைம்மல ராற்கண் புதைத்துப் பதைக்கும்எம் கார்மயிலே. 233

என, பண்பின் வினை பண்பிமேல் நின்றது. அணுக - தன்னை அடைய. 'அணுகப் பெற்றேனாகிய நான் பிறவி பெறாமல் செய்தோன்' என மாற்றுக. 'தில்லை மலரின்' என இயையும். "தேன்" இரண்டனுள் முன்னது வண்டு. மல் தேன் - வளவிய தேனை யுடைய. இரந்தேன் - யான் இதனையே நின்னை இரந்தேன்.

சிவபெருமானை அடையப் பெற்றோர், பின்னர்ப் பிறவியைப் பெறாமை கூறப்பட்டது.

233. பருவம் நினைந்து கவறலாவது, சுடரோடு இரந்து வருந்துகின்ற நற்றாய், தலைவியது இளமைப் பருவத்தை நினைந்து கவலுதல். இதற்குக் கொளு ;-

முற்று முலைக்கு — நற்றாய் கவன்றது.

'என் மைம்மலர் வாட்கண்ணி, எம் கார்மயில் ஊரற்குச் செய்யும் குற்றேவல் வல்லள் கொல்லாம்' எனக் கூட்டி முடிக்க. 'வை வாள், மலர் வாள்' எனத் தனித்தனி இயைக்க. வை - கூர்மை. மலர் வாள் - மலர் அணியப்பட்ட வாள். "மைம் மலர் வாட்கண்ணி" என்றது, 'மகள்' என்னும் அளவாய் நின்றது. மை மலர் - மை விளங்குகின்ற. கொல், ஐயம். ஆம், அசைநிலை. "வல்லள் கொல்லாம்" என்றது, 'அவட்குக் கற்பிக்கும் முதுபெண்டிர் ஆண்டு இல்லையே' என்னும் கருத்தினை லாம். "காந்தள்" என்றது அதன் பூவினை. பாந்தள் - பாம்பு. துண்ணென்று, அச்சக் குறிப்பு. கார் மயில் - கார்காலத்து மயில். மயில்போல்வாளை, "மயில்" என்றது ஆகுபெயர். இதனுள் அடிகள், மகளிர்க்குரிய கடமையையும், அதனை அவர் வல்லராகுமாறும் அருளிச்செய்திருத்தல் அறிக.

41. நாடத் துணிதல்

வேயின தோளி, மெலியல்; விண் ணோர்தக்கன் வேள்வியின்வாய்ப்
பாயின சீர்த்தியன் அம்பலத் தானைப் பழித்துமும்மைத்
தீயின தாற்றல், சிரம்,கண் ணிழந்து திசைதிசைதாம்
போயின எல்லையெல் லாம்புக்கு நாடுவன் பொன்னினையே. 234

சிவபெருமான் தன் அன்பர்க்கு அருள்செய்தற்பொருட்டுத் தில்லையுள் நிற்றல் கூறப்பட்டது.

234. நாடத் துணிதலாவது, தலைமகளது இளமைப் பருவத்தை நினைந்து கவல்கின்ற நற்றாய்க்குச் செவிலி, 'நீ கவல வேண்டா; யான் அவளைத் தேடிக் காண்பேன்' எனச் சொல்லித் தேடத்துணிதல். இதற்குக் கொளு :-

கோடாய் மடந்தையை — நாடத் துணிந்தது.

"மெலியல்" என்றதனை இறுதிக்கண்ணும், "பாயின சீர்த்தியன் அம்பலத்தானைப் பழித்து" என்றதனை, 'விண்ணோர்" என்றதன்பின்னும் கூட்டுக. பாயின சீர்த்தியன் - எங்கும் பரந்த மிக்க புகழையுடையவன். விண்ணோர் தமக்குரிய அவியைத் தீ வழியாகப் பெறுதலின், அதன் ஆற்றலை அவருடையதாகச் சார்த்திக் கூறினர். "சிரம் கண் இழந்து" எனப் பொதுப்படக் கூறினரேனும், அவை ஏற்ற பெற்றியாற் கொள்ளப்படும். அப்பெற்றிகள் முன்னர்க் கூறப்பட்டன. 'திசை திசைக்கண்' என உருபு விரிக்க. 'விண்ணோர் போயின எல்லையெல்லாம் புக்கு நாடுவன்' எனக் கூறிய முகத்தால், விண்ணோர் எவ்விடத்தும் பறந்தோடினமை குறிக்கப்பட்டது. பொன்னினை - திருமகள்போல்வாளை. 'நமக்குப் பொன்போல்வாளை' என்றும் ஆம்.

சிவபெருமானது ஆற்றலின்முன், ஏனைத் தேவர் பலரது ஆற்றலும் கெட்டொழிதல் கூறப்பட்டது.

42. கோடிக்குறி பார்த்தல்

பணங்களஞ் சாலும் பருவர வார்த்தவன் தில்லையன்ன
மணங்கொளஞ் சாயலும், மன்னனும் இன்னே வரக்கரைந்தால்,
உணங்கலஞ் சாதுண்ணலாம்;ஒண்ணிணப்பலியோக்குவல்மாக்
குணங்களஞ் சார்பொலி யும்நல சேட்டைக் குலக்கொடியே. 235

---

235. கொடிக்குறி பார்த்தலாவது, செவிலி தலைவியை நாடத் துணிந்தபொழுது, நற்றாய், காக்கை கரையும் நிமித்தத்தை விரும்பிப் பார்த்தல். 'இல்லின்கண் வந்து காக்கை கரைந்தால், அது விருந்தினர் வருதற்கு நிமித்தமாம்' என்பது உலக வழக்கு. இங்கு விருந்தாவான் தலைவன். தலைவியும் அவனுக்கு உரியளாயினமையின் விருந்தேயாவள். இதற்குக் கொளு :-

நற்றாய் நயந்து — சொற்புட் பராயது.

பணங்கள் அஞ்சு ஆலும் பரு அரவு - படங்கள் ஐந்தை எடுத்து ஆடுகின்ற பெரிய பாம்பு. மணம் கொள் - இயற்கை மணத்தைக் கொண்ட. அம் சாயல் - அழகிய மென்மையை உடையவள். உணங்கல் - உலர்த்தப்படும் பொருள்கள். 'அவற்றை அஞ்சாது உண்ணலாம்' என்றது, 'யாம் ஓட்ட மாட்டேம்' என்றபடி. பலி - தெய்வத்திற்குப் படைத்தது. ஒக்குவல் - ஒதுக்குவேன்; 'உனக்கென்று எடுத்துவைத்துக் கொடுப்பேன்' என்றதாம். மாக் குணங்கள் - சிறந்த குணங்கள். காக்கையிடத்துள்ள சிறந்த ஐந்து குணங்கள், 'பிறர் காணாது புணர்தல், மனம் கலங்காமை, காலம் கடவாமல் தன் இடத்தை அடைதல் தொலைப் பொருளைக் காணுதல், மடியின்மை' என்பர். சேட்டை - உறுப்புக்களை அசைத்தலையுடைய. குலக் கொடி - சிறந்த காக்கையே. 'குலக் கொடியே, நீ எம் குலக்கொடி வரக் கரை' என்பது நயம். 'சேட்டை குலக்கொடியே' எனக் ககர ஒற்றின்றி ஓதும் பாடமும் உளது எனக் கொண்டு, 'அதற்கு, தவ்வையின் ஊர்தியாகிய காக்கை என்பது பொருளாம்' என உரைப்பர் பேராசிரியர்.

43. சோதிடங் கேட்டல்

முன்னுங் கடுவிடம் உண்டதென் தில்லைமுன் னோன்அருளால்
இன்னுங் கடிஇக் கடிமனைக் கேமற் றியாம்அயர
மன்னுங் கடிமலர்க் கூந்தலைத் தான்பெறு மாறும்உண்டேல்,
உன்னுங்கள் ; தீதின்றி ஓதுங்கள் ; நான்மறை யுத்தமரே. 236

ஐந்தலை அரவத்தை ஆர்த்தமை கூறிய முகத்தால், சிவ பெருமான் நிவிர்த்தி முதலிய பஞ்ச கலைகளையும் இயக்குதல் கூறப்பட்டது. அரவம் சுத்த மாயையும், அதன் ஐந்தலை சுத்த மாயையின் காரியமாகிய பஞ்ச கலைகளையும் குறிக்கும்.

236. சோதிடங் கேட்டலாவது, நற்றாய் கொடிக்குறி பார்க்க, செவிலி, சோதிடரை அணுகி, 'எங்கள் மனையில் மணமயருமாறு எம் மகள் அவ் விடலையுடன் மீண்டு வரப்பெறு மாறும் உண்டோ? ஆராய்ந்து சொல்லுமின்' எனக் கேட்டல். இதற்குக் கொளு :-

சித்தந் தளர்ந்து தேடுங் கோடாய்
உய்த்துணர் வோரை உரைமின் என்றது.

'நான்மறை உத்தமரே, யாம் இக் கடிமனைக்கே கடி அயர முன்னோன் அருளால் மலர்க் கூந்தலை இன்னுந்தான் பெறு மாறும் உண்டேல், உன்னுங்கள்; ஓதுங்கள்' எனக் கூட்டி முடிக்க. முன்னும் - முற்பட்டுச் சென்ற. 'தன் கைக்கண் வருமாறு முன்னப்பட்ட - நினைக்கப்பட்ட' என்றுமாம். இதற்கு இவ்விரு பொருளும் கொள்க. 'இன்னுந்தான்' என்ற தில் தான், இனிப் பெறுதற்கருமை குறித்து நின்றது. ''கடி'' இரண்டனுள் முன்னது மணவினை; பின்னது நறுமணம். அயர - செய்ய. ''கூந்தல்'' என்றது, அதனை உடையாளை. தீது - குற்றம்,

சிவபெருமான் நினைவின்படியே யாவும் அமைவனவாதல் கூறப்பட்டது.

44. சுவடுகண் டறிதல்

தெள்வன் புனற்சென்னி யோன்அம் பலஞ்சிந்தி யார்இனஞ்சேர்
முள்வன் பரல்முரம் பத்தின்முன் செய்வினை யேன்எடுத்த
ஒள்வன் படைக்கண்ணி சீறடி இங்கிவை; உங்குவைஅக்
கள்வன் பகட்டுர வோன்அடி என்று கருதுவனே. 237

45. சுவடுகண் டிரங்கல்

பாலொத்த நீற்றம் பலவன் கழல்பணி யார்பிணிவாய்க்
கோலத் தவிசின் மிதிக்கிற் பதைத்தடி கொப்புள்கொள்ளும்;
வேலொத்த வெம்பரற் கானத்தின் நின்றெரர் விடலைபின்போங்
காலொத் தன,வினை யேன்பெற்ற மாணிழை கால்மலரே. 238

---

237. சுவடுகண்டறிதலாவது, சோதிடர் நற்பயன் கூறக் கேட்டபின் செவிலி தலைமகளைத் தேடிச் செல்கின்றவள், அவ்விருவரது அடிச்சுவட்டினைக் கண்டறிதல். இதற்குக் கொளு :-

சுவடுபடு கடத்துச் — செவிலிகண் டறிந்தது.

'தெள் புனல், வன் புனல்' என்க. நீருக்கு வன்மை மிகுதியால் உண்டாவது; "நீர்மிகிற் சிறையும் இல்லை" (புறம் 51) என்பது காண்க. எனவே, தடுக்கலாகாத நீரைத் தடுத்துச் சென்னியில் நிறுத்தினமை கூறியவாறாயிற்று. 'முள்ளையும், வலிய பரலையும் உடைய முரம்பு' என்க. முரம்பு - வன்னிலம். "முரம்பத்தின்" என்றதில் அத்தும், இன்னும் சாரியைகள். "இங்கிவை" என்பதை இதன்பின் கூட்டுக. 'கள்வனாகிய உரவோன்' என்க. பகடு - யானை, 'யானை போலும் வலிமை யுடையோன்' என்றவாறு. "இங்கிவை, உங்குவை" என்றவை ஒருசொல் நீர்மைய.

கங்கையைத் தாங்கினமை கூறியமுகத்தால், சிவபெருமானது ஆற்றலின் பெருமை கூறப்பட்டது.

238. சுவடுகண் டிரங்கலாவது, சுவடு கண்டறிந்த செவிலி, 'தவிசின்மேல் மிதிக்கினும் பதைக்கும் என் மகள் கால்மலர், இன்று பரல் நிறைந்த காட்டில் போதற்குப் பொருந்தியது எவ்வாறு' என இரங்குதல். இதற்குக் கொளு ;-

46. வேட்டமாதரைக் கேட்டல்

பேதைப் பருவம்பின் சென்றது முன்றில் எனைப்பிரிந்தால்
ஊதைக் கலமரும் வல்லியொப் பாள்,முத்தன் தில்லையன்னாள்
ஏதிற் சுரத்தய லானொடின் றேகினள் ; கண்டனையே ?
போதிற் பொலியுந் தொழிற்புலிப் பற்குரற் பொற்றொடியே. 239

கடத்திடைக் காரிகை அடித்தலங் கண்டு
மன்னருட் கோடாய் இன்னலெய் தியது.

"அடி" என்றதன்முன், செய்யுட்கண் முன்வரற்பாலதாய சுட்டுப் பெயரும், "கான்மலர்" என்றதன்முன் சுட்டும் வருவித்து, 'இவள் அடி முன்பு தவிசின் மிதிக்கின் பிணிவாய்ப் பதைத்துக் கொப்புள் கொள்ளும்; மாணிழையது அக் கால் மலர் இன்று வெம்பரல் கானத்தின் ஓர் விடலைபின் போம் கால் ஒத்தன ; இஃது எவ்வாறு' எனக் கூட்டி உரைக்க. "பிணி வாய்" என்றதற்கு, 'பிணிவாய்ப்பட்டது போல' என உரைக்க. "தவிசு" என்றது, தடுக்கு முதலியவற்றை. "இன்று" எனப் பின்னர் வருகின்றமையின் முன்னர், 'முன்பு' என்பது வருவிக்கப்படும். கால் ஒத்தன - காலோடு ஒருநிகர வாயின. காலை, 'மலர்' என்றாளாகலின், "காலொத்தன" என்றாள். 'இஃது எவ்வாறு' என்பது குறிப்பெச்சம்.

சிவபெருமானது திருவடியை வணங்காதவர், பதைத்து வருந்தும் பிணிவாய்ப் படுதல் கூறப்பட்டது.

239. வேட்ட மாதரைக் கேட்டலாவது, சுவடுகண் டிரங்கி அதனைப் பற்றிச் செல்கின்ற செவிலி சுரத்திடை வாழும் வேட்டுவப் பெண்ணை, 'அயலான் ஒருவனுடன் இவ்வழியே போந்த என் மகளைக் கண்டாயோ' எனக்கேட்டல். இதற்குக் கொளு :-

மென்மலர் கோய்யும் வேட்ட மாதரைப்
பின்வரு செவிலி பேற்றி வினையது.

'பேதைப் பருவம் சென்றது பின்' என மாற்றிக்கொள்க. சென்றது - நீங்கியது. 'பேதைப் பருவம் நீங்கியது' என்றது, முதுக்குறைவு எய்தினமையை. 'பின்' என்றது, 'அயலானோடு

47. புறவோடு புலத்தல்

புயலன் றலர்சடை ஏற்றவன் தில்லைப் பொருப்பரசி
பயலன் றனைப்பணி யாதவர் போல்மிகு பாவஞ்செய்தேற்
கயலன் தமியன்அஞ் சொற்றுணை வெஞ்சுரம் மாதர்சென்றால்
இயலன் றெனக்கிற் றிலைமற்று வாழி எழிற்புறவே. 240

போந்த பின்' என்றபடி. 'மற்று முன்பு எனைப் பிரிந்தால் ஊதைக்கு அலமரும் வல்லி ஒப்பாள்' என்க. ஊதைக்கு - காற்றினால். வல்லி - கொடி. முத்தன் - பாசம் இல்லாதவன். 'அவள் இன்று ஏதில் சுரத்து அயலானொடு ஏகினள்; கண்டனையோ' என்க. ஏதில் சுரம் - தனக்கு இயைபில்லாத சுரம். ''கண்டனையே'' என்ற ஏகாரம், வினா. போதிற் பொலியும் தொழில், பூப் பறித்தல் தொழில். குரல் - கழுத்து.

சிவபெருமானது இயல்பாகவே பாசங்களின் நீங்கிய தன்மை கூறப்பட்டது.

240. புறவொடு புலத்தலாவது வேட்ட மாதரைக்கேட்டு மேலும் செல்கின்ற செவிலி, சுரத்திடைப் புறுவைக் கண்டு, 'புறுவே, ஏதிலன்பின் செல்லுதல் தகாது என என்மகளை விலக்கிலை; நீ வாழ்வாயாக' எனப் புலந்து கூறுதல். இதற்குக் கொளு :-

சுரட்டுப் புறவொடு — வாட்ட முரைத்தது.

புயல் - மேகம்; அஃது இங்கு நீரைக் குறித்தது. தில்லை - தில்லைக்கண் உள்ள. பொருப்பின் மகளாதல் பற்றி, 'பொருப் பரசி' என்றார். பயலன் - கூற்றையுடையவன். 'பாவம் செய்தேற்கு இயலன்ற எனக்கிற்றிலை' என இயைத்து, 'நின் தாயது அன்பிற்குத் தக்கதன்று எனக்கூறிற்றிலை' என்பது கருத்தாக உரைக்க. 'எம்மிற் பிரித்துக் கொண்டு செல்லும் சொல்வல்லன்' என்பாள், 'அம் சொல்' என்றாள். 'எம் துணை இன்றியமையாதாக அதனை அறியாது. அவன் சொல்லே துணையாகச் சென்றாள்' என்றற்கு, 'சொற்றுணை சென்றால்' என்றாள். 'சொல்லே துணையாக' என ஏகாரமும் ஆக்கமும் விரிக்க.

48. குரவோடு வருந்தல்

பாயும் விடையோன் புலியூர் அனையஎன் பாவைமுன்னே
காயுங் கடத்திடை ஆடிக் கடப்பவுங் கண்டுநின்று
வாயுந் திறவாய்; குழையெழில் வீச,வண் டோலுறுத்த
நீயும்நின் பாவையும் நின்று நிலாவிடும் நீள்குரவே. 241

பாவம் உடையவர்க்குச் சிவபெருமானைப் பணிதல் கூடாமை கூறப்பட்டது.

241. குரவொடு வருந்தலாவது, புறவொடு புலந்து செல்கின்ற செவிலி, பாவைபோலப் பூத்து நிற்கும் குராமரத்தைக் கண்டு, 'என் பாவை இக் கொடிய சுரத்திடைச் செல்வாளை விலக்காது, நீ நின் பாவையொடு குலாவி நிற்கின்றாய்; இது நினக்குத் தகுவதோ' என வருந்துதல். இதற்குக் கொளு;-

தேடிச் சென்ற செவிலித் தாயர்
ஆடற் குரவோடு வாடி யுரைத்தது.

''குழை எழில் வீச'' என்றது முதலாகத் தொடங்கி உரைக்க. 'என் பாவை கடப்பவும்' என இயையும். முன்னே - நின் முன்னாக. ஆடி - தளர்ந்து. ''வாயும் திறவாய்'' என்றது, 'அவளையும் விலக்கிலை; எனக்கும் அவள் சென்ற வழியைக் கூறுகின்றிலை' என்றபடி. ''குழை எழில் வீச'' என்றது, சிலேடை வகையால், 'காதணி அழகைக் காட்ட எனப்பொருள் தந்தது. வண்டு ஓலுறுத்த - வண்டு நின் பாவையைத் தாலாட்ட. 'நீயும் நின்பாவையுமாய் நின்று' என ஆக்கம் வருவித்துரைக்க. 'நிலாவினை என்பதும் பாடம்' என்பர் பேராசிரியர்.

''பாயும் விடையோன்'' என்றதனால், சிவபெருமான், தன்னை நினைபவர்முன் விரையச் சென்று அருள்புரிதல் கூறப்பட்டது.

49. விரதியரை வினவல்

சுத்திய பொக்கணத் தென்பணி கட்டங்கஞ் சூழ்சடைவெண்
பொத்திய கோலத்தி னீர்,புலி யூர்அம் பலவர்க்குற்ற
பத்தியர் போலப் பணைத்திறு மாந்த பயோதரத்தோர்
பித்திதற் பின்வர முன்வரு மோஒர் பெருந்தகையே. 242

---

242. விரதியரை வினவலாவது, சுரவொடு வருந்திச் செல்கின்ற செவிலி, தன்முன் வரும் மாவிரதியரைக் கண்டு. 'பித்தி ஒருத்தி தன்பின் வர, பெருந்தகை யொருவன் நும்முன் வருவது கண்டீரோ' என வினவுதல். இவர் பலவிடத்திற்கும் யாத்திரை செல்வர். இதற்குக் கொளு:-

வழிவரு கின்ற மாவிர தியரை
மொழிமின்கள் என்று முன்னி மொழிந்தது.

சுத்திய - இப்பி வடிவாகச் செய்யப்பட்ட. பொக்கணம் - செப்பு. திருநீற்றை வைத்தற்கு இப்பி வடிவில் உள்ள இதனை, 'சம்புடம்' என்பர். இதனைத் தலையோட்டினால் செய்து கொள்ளுதல் மாவிரதியரது மரபு. 'வெண்மை' என்னும் பண்புப் பெயரது இறுதிநிலை தொகுக்கும் வழித் தொகுத்தலா யிற்று. "வெண்மை" என்பது ஆகுபெயரால், வெண்ணீற்றை உணர்த்திற்று. பொத்திய - போர்த்த. பணைத்து - பூரித்து. 'வஞ்சித்துக் கொண்டு செல்வான்' என்னும் கருத்தினள் ஆதலின், 'பெருந்தகை' என்றது, எள்ளற்கண் வந்த உள்ளுறை நகைப் பொருட்டாம். விரதியராகிய முன்னிலையாரொடு படுத்துக் கூறுகின்றாளாதலின், "வருமோ" என்றாள். இஃது இறந்த காலத்து நிகழ்காலம் என்க.

சிவபெருமானிடத்துப் பத்தியுடையோர், உலகிடை நிகழும் மாற்றங்கள் பற்றிக் கவலாது, தம் உள்ளத்து மிகும் பேரின்பத் தால் புளகமும், இறுமாப்பும் உடையராய் இருத்தல் கூறப் பட்டது.

50. வேதியரை வினவல்

வெதிரேய் கரத்துமென் தோலேய் சுவல்வெள்ளை நூலிற் [கொண்மூ
அதிரேய் மறையின்இவ் வாறுசெல் விர்,தில்லை அம்பலத்துக்
கதிரேய் சடையோன் கரமான் எனஒரு மான்மயில்போல்
எதிரே வருமே சுரமே வெறுப்பஎர் ஏந்தலொடே. 243

---

243. வேதியரை வினவலாவது, விரதியரை வினவி அவர் சொல்வழியே செல்கின்ற செவிலி, பின் அவ்விடத்து வரும் மறையவரைக் கண்டு வினவுதல். இவர் பிரமசாரிகள்; உஞ்சவிருத்தியின் பொருட்டு வழிச்செல்வர். இதற்குக் கொளு:-

மாதின்பின் வருஞ்செவிலி
வேதியரை விரும்பி வினயது.

வெதிர் - மூங்கில். பலாசத்தண்டேயன்றி மூங்கில் தண்டும் பிரமசாரிகள் கொள்வர். தோல், மான்தோல்; இதனை, 'கிருட்டிணாசினம்' என்பர். சுவல் - பிடர். 'வெதிர் ஏய் கரம், தோல் ஏய் சுவல்' என்றவற்றோடு இயைய, 'நூலின் மார்பு, மறையின் வாய்' என வருவித்துரைக்க. "கரத்து, சுவல்" என்றவற்றினும், ஒடுவுருபின் பொருட்கண் வந்த இன்னுருபு விரிக்க. கொண்மூ அதிர் ஏய் - மேகத்தின் முழக்கம்போலும். இது வெடிபட இடிக்கும் ஓசையன்று: மெல்ல முழங்குதலாம். 'இயயத் திண்டி இன்குரல் பயிற்றிக் - கொண்டல் மாமழை பொழிந்த" (புறம். 34) என்புழி. "இன்குரல்" என்றது காண்க. இவ் ஆறு - இவ்வழிக்கண். 'அம்பலத்துச் சடையோன்' என இயையும். கதிர் ஏய் சடை - ஞாயிற்றின் கதிர்போலும் சடை. 'மதி சேர்ந்த சடை' என பேராசிரியர் உரைப்பர். 'ஒளி பொருந்திய சடாபாரம்' என்பது பழைய உரை. தம்மிடத்துப் பிறக்கினும் தலைவனது தலையளி பெற்று அவற்கு உரியளாயினமை பற்றித் தலைவியை, தாருகாவன முனிவரிடத்துத் தோன்றினும் சிவபெருமானது திருநோக்கினைப் பெற்று அவற்கு உரித்தாயின மானோடு உவமித்தாள்.

51. புணர்ந்துடன் வருவோரைப் பொருந்தி வினவல்

மீண்டார் எனஉவந் தேன்கண்டு நும்மை;இம் மேதகவே
பூண்டார் இருவர்முன் போயின ரே ?புலி யூர்எனை நின்
ருண்டான் அருவரை ஆளியன் ருனைக்கண் டேன்;அயலே
தூண்டா விளக்கனை யாய்என்னை யோஅன்னை சொல்லியதே.

" ஒரு மான் " என்றது, மருண்ட நோக்கம் பற்றியும், " மயில் போல் " என்றது, சாயல் பற்றியுமாம். " ஒருமான் " என்றது பொதுவினும், கரமான் என்றது சிறப்பினும் என்க. சுரமே வெறுப்ப - வருத்தும் சுரந்தானே மனம் வருந்தும்படி, ' ஒருமான், சுரமே வெறுப்ப, சடையோன் கர மான் எனவும். மயில்போலவும் ஓர் ஏந்தலொடே எதிரே வருமே' எனக் கூட்டுக. " வருமே " என்றதற்கு, மேல் உரைத்தன உரைக்க. ஏகாரம், வினா.

சிவபெருமானைச் சார்தல் அவனது அருளாலே யாதல் கூறப்பட்டது.

244. புணர்ந்துடன் வருவோரைப் பொருந்தி வினவலாவது, வேதியரை வினவி அவர் சொல்லிய வழியே, செல்கின்ற செவிலி, பின் காதலனும், காதலியுமாய்க் கூடி வருவோர் இருவரை எதிர்ப்பட்டு வினவுதல். இதற்குக் கொளு :-

புணர்ந்துடன் வரும் புரவலன் ஒருபால்
அனங்கமர் கோதையை யாராய்ந்தது.

" இம் மேதகவே பூண்டார் இருவர் " எனப் பின்னர் வருகின்றமையின், வாளா, " மீண்டார் " என்ருள். ' நும்மைக் கண்டு அவர் மீண்டார் என உவந்தேன் ' என்க. இதனல், நும்மை என் மகளும், அவட்குத் தலைவனுமாக நினைத்தேன்' என்ருள். " இம் மேதகவு " என்றது, ஒத்த உருவும், திருவும் முதலாயினவற்றுடன் தாம் இருவரேயாய்ச் சுரத்திடைச்செல்லுதல். " முன் " என்றது, செவிலி தனக்கு முன்னுய இடத்தை. அவ்விடம் சேய்த்தாதலின், " போயினரே " என்ருள். ஏகாரம், வினா. முதற்ருெட்டு இதுகாறும் உள்ளவை செவிலி வினா; ஏனைய, வருகின்ற தலைவன் விடை. விடையையும்

52. வியந்துரைத்தல்

பூங்கயி லாயப் பொருப்பன் திருப்புலி யூரதென்னத்
தீங்கை இலாச்சிறி யாள்நின்ற திவ்விடம் ; சென்றெதிர்ந்த
வேங்கையின் வாயின் வியன்கைம் மடுத்துக் கிடந்தலற
ஆங்கயி லாற்பணி கொண்டது திண்டிறல் ஆண்டகையே. 245

இதன்கண் அருளிச்செய்தார், மேற்போந்த இரு துறைகள் உளப்பட இம் மூன்றினும் செவிலி எதிர்மொழி பெற்ருள் என்பது உணர்த்துதற்கு. 'புலியூர் நின்று எனை ஆண்டான்' எனக்கூட்டி உரைக்க. 'ஆண்டானது அருவரைக்கண் ஆளி' என்க. "ஆளியன்னுன்" என்றதனுல், 'அவனுடன் சென்ருளாயின், நின் மகள் இடையூறெய்தாள்' என்ருனும். அயல் - அவன் புடையாக. தூண்டா விளக்கு, இல்பொருள் உவமை. மணிவிளக்கைக் குறித்ததுமாம். "தூண்டா விளக்கனையாய்" என்றது, வருகின்ற தலைவன், தன் காதலியை விளித்தது. 'அயல் அன்னை சொல்லியது என்னையோ' எனக் கூட்டி, 'அதனை நீ கூறுவாயாக' என இசையெச்சம் வருவித்து முடிக்க. தான் அயலாள் ஒருத்தியது முகத்தை நோக்கி யறியாமையானும், தன் காதலியும் அயலான் ஒருவனிடத்து அத்தன்மையள் ஆகலானும் "ஆளியன்னுனைக் கண்டேன்" என அவனது பெற்றியைத் தான் கூறி, அவளது பெற்றியைத் தன் துணைவியைக் கூறுமாறு சொல்லினுன், எதிர்வருகின்ற தலைவன் என்க. இவ்வாற்ருல் அடிகள் தலைமக்களாய ஆடவர்க்கும், பெண்டிர்க்கும் உரிய நிறைச் சிறப்பைப் புலப்படுத்தியவகையை அறிக.

சிவபெருமான் தேவ வடிவும், ஆசான் வடிவும் கொண்டு அருள்புரிதல் கூறப்பட்டது.

245. வியந்துரைத்தலாவது, புணர்ந்துடன் வருவோரை வினவி அவர் சொல்லிய வழியே செல்கின்ற செவிலி, அவ்விடத்துத் தலைவனது ஆண்தகைமையினைச் சில குறிகளான் அறிந்து வியந்து கூறுதல். இதற்குக் கொளு :-

வேங்கை பட்டதும் பூங்கொடி நிலையும்
நாடாவருங் கோடாய் கூறியது.

53. இயைபெடுத் துரைத்தல்

மின்றொத் திடுகழல் நூபுரம் வெள்ளைசெம் பட்டுமின்ன
ஒன்றொத் திடஉடை யாளொடொன் றாம்புலி யூரன்என்றே
நன்றொத் தெழிலைத் தொழஉற் றனம்;என்னதோர் நன்மைதான்!
குன்றத் திடைக்கண் டனம்அன்னை நீசொன்ன கொள்கையரே.

'இவ்விடம் சிறியாள் நின்றது' எனவும், 'ஆங்கு ஆண்டகை அயிலாற் பணிகொண்டது' எனவும் கூட்டுக. "புலியூரது" என்றதில் அது, பகுதிப்பொருள் விகுதி. புலியூர், தீங்கின் மைக்கு உவமை. 'சென்று பணிகொண்டது' என இயையும். 'வேங்கை எதிர்ந்த ஞான்று முந்திச்சென்று ஏற்றான்' என்பது பற்றி, "சென்று" என்றாள். பணிகொண்டது வேங்கையை என்க. பணிகொண்டது, இங்கு மடிவித்ததேயாம்.

சிவபெருமானது தலம் அவன் முன்னின்று காப்பத் தீங் கின்றி யிருத்தல் கூறப்பட்டது.

246. இயைபெடுத் துரைத்தலாவது, வேங்கையை மடித்த தலைவனது ஆண்மையை வியந்து அப்பாற் செல்கின்ற செவிலி, எதிர் வருவார் சிலரை வினவ, அவர் அவ்விருவரது ஒற்றுமையை எடுத்துக் கூறுதல். இதற்குக் கொளு :-

சேயிழை யோடு செம்மல் போதர
ஆயிழை பங்கனென் றயிர்ந்தேம் என்றது.

இறுதி யடியை, 'அன்னை நீ சொன்ன கொள்கையரைக் குன்றத்திடைக் கண்டோம்' என மாற்றி, முதலிற் கொள்க. மின் தொத்து - மின்னலின் கொத்தினை. இடு - புறத்து இடுகின்ற. கழல் நூபுரம் - அவன் அணிந்த கழலும், அவள் அணிந்த சிலம்பும். "பட்டு" என்றது, "வெள்ளை" என்றத னோடும் இயையும். 'கழல் நூபுரம் என்னும் இவைகளும், வெள்ளைப் பட்டு, செம்பட்டு என்னும் இவைகளும் ஒன்றொத்திட' என இயையும். ஒன்று ஒத்திட-அவை இவ்விரண்டும் ஒவ் வொன்று போலத் தோன்றுதலால்; இது, "புலியூரன் என்று" என்பதனோடு முடியும். 'என்றே தொழ உற்றனம்' என்க.

54. மீள உரைத்தல்

மீள்வது செல்வதன் றன்னைஇவ் வெங்கடத் தக்கடமாக்
கீள்வது செய்த கிழவோ னெடுங்கிளர் கொண்டையன்ன
நீள்வது செய்தகன் றூள்இந் நெடுஞ்சுரம் நீந்திஎம்மை
ஆள்வது செய்தவன் தில்லையின் எல்லை அணுகுவரே. 247

'அவ்வெழிலை நன்று தொழ ஒத்து உற்றனம்' என்க. ஒத்து - யாங்கள் யாவரும் ஒருங்கொத்து. 'அதுதான என்னதோர் நன்மை' என எழுவாய் வருவித்து முடிக்க. 'அது' என்பது, அவ்வெழிலை. கொள்கை, இங்குச் செயலைக் குறித்தது. 'கொள்கையரை' என்னும் இரண்டனுருபு, தொகுக்கும் வழித் தொகுக்கப்பட்டது.

சிவபெருமானது மாதொரு கூறனுய வடிவின் சிறப்புக் கூறப்பட்டது.

247. மீள உரைத்தலாவது, செவிலிக்கு, தலைவன் தலைவிய ரது இயைபெடுத்துரைத்தவர், பின்னும், 'இவ்வளவில் அவ்விரு வரும் தலைவனது ஊர் எல்லையை அடைந்திருப்பர்; ஆதலின், நீ இனி மேற்செல்லாது மீள்வதே கடன்' என அவளை மீளுமாறு கூறுதல். இதற்குக் கொளு :-

கடுங்கடங் கடந்தமை கைத்தாய்க் குரைத்தது
நடுங்கன்மின் ; மீண்டு நடமின் என்றது.

'செல்வதன்று ; மீள்வது' என மாற்றி, இறுதிக்கண் கூட்டி, 'இனிச் செய்யத்தக்கது, மேற் செல்வதன்று ; மீள்வதே' என உரைக்க. அன்னை, விளி. கட மா - யானை. மேல் (245) வேங்கையை மடித்தமை கூறி, இங்கு, 'யானையைக் கீண்டான்' என்றதனுல், இப்பாட்டுக்கள் ஓர் இருவரைப் பொருளாகக் கொண்டு தொடர்ந்துவருவனபோலத் தோன்றி னும், தனித்தனிப் பொருளையுடைய தொகைநிலையாதல் அறியப் படும். முன்னரும் இவ்வாறு வந்தன சில உளவாதலை நோக்குக. ஒடு, எண்ணெடுவே. பேராசிரியர் மூன்றனுருபாகக் கொண்டு, "நீந்தி" என்னும் எச்சம் முடியுமாற்றிற்குக் கூறிய அமைதி பொருந்தாமை அறிக. இனி, "நீந்தி" என்ற எச்சத்தை

55. உலகியல் புரைத்தல்

சுரும்பிவர் சந்தும் தொடுகடல் முத்தும்வெண் சங்கும்எங்கும்
விரும்பினர் பாற்சென்று மெய்க்கணி யாம் ;வியன் கங்கை
[யென்னும்
பெரும்புனல் சூடும் பிரான்சிவன் சிற்றம் பலமனைய
கரும்பன மென்மொழி யாரும்அந் நீர்மையர் காணுநர்க்கே. 248

'நீந்த' எனத் திரித்து, 'அவர்' என்னும் எழுவாய் வருவித்துரைப்பினுமாம். ஓடுவை மூன்றனுருபாகக் கொண்ட பழைய உரையாளர் கொண்ட பாடம 'அணுகுவளே' என்பதே. 'கெண்டையன்ன கண்' என இயையும். "எம்மை" என்றது, இசையெச்சத்தால், 'தன் திருவருளுக்குத் தகுதியில்லாத எம்மை' எனப் பொருள் தந்தது.

சிவபெருமானுக்கு, உயிர்களை உய்வித்தற்கண் உள்ள அருளின் பெருமை கூறப்பட்டது.

248, உலகியல் புரைத்தலாவது, மீளக் கூறவும் மீளாது கவன்று நிற்கும் செவிலிக்கு, அவர், 'சந்தனமும், முத்தும், சங்கும் தம்மை அணிவார்க்கன்றிப் பிறந்த இடத்திற்குப் பயன்படாமைபோல, மகளிரும் தம்மைக் கொள்வார்க்கன்றிப் பிறந்த இடத்திற்குப் பயன்படார் ; ஆதலின், நீ கவன்று பயன் என்னை' என உலகியல்பைக் கூறித் தேற்றுதல். இதற்குக் கொளு ;-

செவிலியது கவலை தீர
மன்னிய உலகியல் முன்னி உரைத்தது.

சுரும்பு இவர் - வண்டுகள் மேலே பரந்து சூழ்கின்ற. சந்து – சந்தன மரம். தொடு கடல் - சகரரால் தோண்டப்பட்ட கடல். 'தொடு முத்து' என இயைத்து, 'தோட்கப்பட்ட முத்து' என உரைப்பர் பேராசிரியர். 'எங்கும் சென்று' என்பார், செல்லும் இடம் இது என்றற்கு, 'விரும்பினர்பால்' என்றனர். எனவே, இதனை 'இல்லிடத்துக் கூடத்தின்கண் இருந்தான்' என்பதுபோலக் கொள்க. 'அவர் மெய்க்கு

56. அழுங்குதாய்க் குரைத்தல்

ஆண்டில் எடுத்தவ ராம்இவர் தாம்அவர் அல்குவர்போய்த்
தீண்டில் எடுத்தவர் தீவினை தீர்ப்பவன் தில்லையின்வாய்த்
தூண்டில் எடுத்தவ ரால்தெங்கோ டெற்றப் பழம்விழுந்து
பாண்டில் எடுத்தபஃ றுமரை கீழும் பழனங்களே. 249

அணியாம்' எனச் சுட்டுப்பெயர் வருவித்துரைக்க. அணி - அழகு. சந்தன மரம், சாந்தாகி அழகு செய்வதும், முத்து, வடமாகி அழகு செய்வதும், சங்கு, வளையாகியும் மணியாகியும் அழகு செய்வதும் அறிந்துகொள்க. காணுநர்க்கு - ஆராய்ந்து அறிவார்க்கு. 'காணுநர்க்கு அந்நீர்மையர்' என்க. "அந்நீர்மையர்" என்றது, 'அந்நீர்மையராதல் தெளிவாம்' என்றபடி. 'ஆதலின், நீ கவலவேண்டா' என்பது குறிப்பெச்சம்.

"பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க் கல்லதை
மலையுளே பிறப்பினும் மலைக்கவைதாம் என்செய்யும்!
நினையுங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே.

சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க் கல்லதை
நீருளே பிறப்பினும் நீர்க்கவைதாம் என்செய்யும்!
தேருங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே"

என்னும் பாலைக்கலிப் பகுதியை (8) இங்கு நோக்குக.

சிவபிரான், 'வியன் கங்கை' என்னும் பெரும்புனலைத் தான் சூடுதலும் தனக்குப் பயன்படற்பொருட்டன்றிப் பிறர்க்குப் பயன்படற் பொருட்டே யாதலின், 'அவன் சிற்றம்பலமனைய கரும்பன மென்மொழியார்' என்றது' 'நீவிரும் நும்மகளைப் பெற்று வளர்த்தமை பிறர் பொருட்டன்றி நும்பொருட்டன்றன்றே, என இறைச்சிப்பொருள் தோற்றி நின்றது. இதனானே, சிவபெருமானது வரம்பிலின்பம் உடைமை பேரருளுடைமைகள் கூறப்பட்டவாறு அறிக.

249. அழுங்குதாய்க்குரைத்தலாவது, உலகியல்பு உரைக்கவும் மீளாது தான் எடுத்து வளர்த்த அருமை சொல்லிக் கவலின்ற செவிலிக்கு, அவர், 'அவ்விருவரையும் இவர் இனி வழியிடைக் காண்டல் இயலாது' என்பதைத் தம்முட்கூறும்

முன்னிலைப் புறமொழியாக உரைத்து மீட்டுக்கொண்டு ஏகுதல். இதற்குக் கொளு;-

செழும்பணை யணைந்தமை
அழுங்குதாய்க் குரைத்தது.

'இவர் தாம் ஆண்டு இல் எடுத்தவராம்' என மாற்றிக் கொள்க. ஆண்டு என்றது, தலைவியது ஊரை. இல் எடுத்தவ ராம் - இல்லின்கண் இருந்து எடுத்து வளர்த்த கைத்தாயர் ஆவர். ''ஆம்'' என்றது, உரையசைப் பொருட்டு. 'போய் அல்குவர்' என மாற்றி, 'தம் பதியில் தங்குவர்' என உரைக்க. ''திண்டில்'' என்றது, 'அணுகும் வகையில்லாதாரும் எவ்வாற்றானேனும் அணுகுவராயின்' என்றபடி. அணுகும் வகையாவது, அன்பு பெறுதல். பிறவாறுவன, அச்சமும், உலகியலும். எடுத்து - நரகில் வீழாதவாறு எடுத்து. 'தில்லையின்வாய்ப் பழனங்கள்' என இயைக்கும். வாய், ஏழனுருபு. ''தூண்டில் எடுத்த வரால்'' என்றது, தடுமாறு தொழிற் பெயர் (தொல் - சொல். 95); அது, ''தெங்கொடு எற்ற'' என வந்த மெய்யறி பனுவலால் (ஷை 93) இரண்டாவதன் தொகையாதல் அறியப்பட்டது. பாண் டில் - கிண்ணம். 'பாண்டில்போல' என உவம உருபு விரிக்க. எடுத்த - உயர்த்திய. 'பழனங்களிற் போய் அல்குவர்' என்க. இறுதியில், 'ஆதலின் மீள்க' எனக் குறிப்பெச்சம் வருவிக்க.

'வரால் மீன் தன்னை நீரினின்றும் நீக்குதற்கு வேட்டுவன் இட்ட தூண்டிலைத் தனது வலிமையால் அறுத்தெழுந்து கரைக் கண் உள்ள தென்னை மரத்தைத் தாக்கி, அதனினின்றும் விழும் நெற்றுக்களால் பல தாமரை மலர்கள் சிதையப் பண்ணும்' என்றதனால், 'தலைவனிடத்தினின்றும், தன்னைப் பிரித்தற்கு இற்செறித்து நற்றாய்செய்த காவல்களைத் தனது கற்பொழுக்கத் தால் கடந்து, உடன்போக்கினால் ஊர்க்கண் கௌவை கூறும் பெண்டிரை வாயடைத்துப் பின் அவர் தாமே தனது முதுக் குறைவைப் புகழ்ந்து கூறும் கூற்றால் தன்னையரது சினந்தணியச் செய்தாள் தலைவி' என, உள்ளுறை உவமம் கொள்க. இத் திருப்பாட்டு மருதத்துட் பாலை.

சிவபெருமான் எவ்வாற்றானேனும் தன்னை அடுத்தவரைக் காத்தல் கூறப்பட்டது.

17. வரைவு முடுக்கம்

[வரைவு முடுக்கம் என்பது, தோழி, தலைவன், தலைவியை வரைந்து கொள்ளுதற்கண் விரையப் பண்ணுதல். மேற்கூறிய வாறு உடன்போக்கு நிகழாதவழி, தோழி இது செய்வள் என்க. இதனை அடிகள், பதினாறு துறைகளாக வகுத்து அருளிச் செய்வர். அவற்றைக் கூறும் நூற்பா வருமாறு :-

[1] வருத்தங் கூறல், [2] அவன் மறுத் துரைத்தல்,
[3] உள்ளது கூறல், [4] ஏதங் கூறல்,
[5] பகல்வரல் என்றல், [6] தொழுதிரந் துரைத்தல்,
[7] சிறைப்புறங் கூறல், [8] மந்திமேல் வைத்தல்,
[9] கண் துயி லாமை, கண்டார் உரைத்தல்,
[10] பகலுடம் பட்டாள்போன் றிரவரல் என்றல்,
[11] இரவுடம் பட்டாள்போன்று பகல்வரல் என்றல்,
[12] இரவும் பகலும் வரவொழி கென்றல்,
[13] காலங் கூறல், [14] கூறுவிக் குற்றல்,
[15] செலவு கூறல், [16] பொலிவழி வுரைத்தலென்
றீரெண் கிளவியும் இயம்புங் காலை
வாரணி முலையாய் வரைவு முடுக்கம்.]

1. வருத்த மிகுதி கூறி வரைவு கடாதல்

எழுங்குலை வாழையின் இன்கனி தின்றிள மந்திஅந்தண்
செழுங்குலை வாழை நிழலில் துயில்சிலம் பாமுனைமேல்
உழுங்கொலை வேல்திருச் சிற்றம் பலவரை உன்னலர்போல்
அழுங்குலை வேலன்ன கண்ணிக்கென் னோநின் அருள்வகையே.

---

250. வருத்த மிகுதி கூறி வரைவு கடாதலாவது, இரவுக் குறியிடத்து அலர் அறிவுறுத்து வரைவு கடாய தோழி (பாட்டு - 180), பின்னும் அலர் மிகுதியாலும், காவல் மிகுதி யாலும் தலைவி தலைவனை எதிர்ப்படமாட்டாது வருந்துகின்ற வருத்தத்தின் மிகுதியைத் தலைவனிடம் கூறி வரைவு கடாதல். இதற்குக் கொளு ;-

இரவுக் குறியிடத் தேந்திழைப் பாங்கி
வரைவு வேண்டுதல் வரவு ரைத்தது.

2. பெரும்பான்மைகூறி மறுத்தல்

பரம்பயன் தன்அடி யேனுக்குப், பார்விசும் பூடுருவி
வரம்பயன் மால்அறி யாத்தில்லை வானவன் வானகஞ்சேர்
அரம்பையர் தம்மிட மோ?அன்றி வேழத்தின் என்புநட்ட
குரம்பையர் தம்மிட மோ?இடம் தோன்றும்இக் குன்றிடத்தே.

"இளமந்தி" என்பதை முதற்கண்ணும், "என்னோ" என்பதை இறுதிக்கண்ணும் வைத்து உரைக்க.

எழும் குலை - புறப்படுகின்ற குலை. செழுங்குலை - முதிர்ந்த குலை. இளைய குலைகளாலும், முதிய குலைகளாலும் இடையறுத கனியுடைமை கூறியவாறு. வாழை, மலைவாழை எனக. முனைமேல் - போரின்கண். உழும் - போழ்தற்குரிய. வேல், சூலம். அழுங்கு - வருந்துகின்ற. உலை வேல் - உலையிடத்து வடிக்கப்பட்ட வேல். "உலைவேலன்ன கண்ணி" என்றது ஒரு சொல் தன்மைப்பட்டு, "அழுங்கு" என்றதனோடு வினைத் தொகை படத் தொக்கது. 'அழும் கொலைவேலன்ன கண்ணிக்கு' என்பது பழைய உரையாசிரியர் கொண்ட பாடம். "அருள் வகை" என்றது, இரவுக் குறிக்கண் வந்து தலையளி செய்தலை. "என்னோ" என்றது, 'என்ன பயத்ததோ' என்னும் பொருட்டாய், 'இவள் வருத்தத்திற்கு மருந்தாகின்ற தில்லை' என்னும் கருத்தைத் தோற்றுவித்தது. இவ்வாறன்றி, 'இனி நின் கருத்து யாது' என வினவாக்கியுரைத்தலும் ஆம்.

'இளமந்தி, இடையூறின்றி வாழையின் இன்கனியைத் தின்று அதன் நிழலில் உறங்கும்' என்றதனால், 'இவள் இடையூறின்றி இன்பம் துய்த்து உனது தாள்நிழலில் இனிது வாழச் செய்தல் வேண்டும்' என உள்ளுறை கொள்க.

'முனைமேல் உழுங்கொலை வேல்' என்றதனால், சிவபெருமான் தனது வேகவடிவத்தால் உயிர்களது வினையை நீக்குதல் கூறப்பட்டது.

251. பெரும்பான்மை கூறி மறுத்தலாவது, வருத்த மிகுதி கூறி வரைவுகடாய தோழிக்குத் தலைவன், தலைவியை

3. உள்ளதுகூறி வரைவு கடாதல்

சிலூர்கவண் வாய்த்த பணியிற் சிதைபெருந் தேன்இழுமென்
றிழல்கழி வுற்றெம் சிறுகுடில் உந்தும் இடமிதெந்தை
உறுவரை; உற்றார் குறவர்;பெற்றாளும் கொடிச்சி;உம்பர்
பெருஅருளம்பல வன்மலைக் காத்தும் பெரும்புனமே. 252

உயர்த்துக் கூறமுகத்தால் வரைவு மறுத்தல். இதற்குக் கொளு ;-

குலம்புரி கொம்பர்க்குச் — சிலம்பன் செப்பியது.

'இக்குன்றிடத்தே தோன்றும் இடம்' என மாறிக் கூட்டி, அதனை முதற்கண் வைத்து உரைக்க.

பரம் - எல்லாப் பொருட்கும் அப்பாலாய் இருப்பவன். 'ஆயினும், அடியேனுக்குப் பயன்' என்க. "பயன்" என்றது, 'அனுபவப் பொருள்' என்றவாறு. "அயன் மால்" என்றதை, "பார் விசும்பு" என்றதற்கு முன்னர்க் கூட்டுக. 'தில்லை வானவனது வானகம்' என்றது, எல்லாப் பொருளும் அவனது உடைமையே யாதல் பற்றி. குரம்பையர் - குடிசையை உடையவர்; குறவர். ஓகாரங்கள் தெரிநிலைப் பொருள. இதனால், 'இவனை யான் எட்டவும், சுட்டவும் படாத தெய்வமாகக் கொள்கின்றேனல்லது பிறிதில்லை' என்றான் என்க.

சிவபெருமான், பரமும் பயனுமாதலும், தேவருலகத்தையும் தனதாக உடைமையும் கூறப்பட்டன.

252. உள்ளது கூறி வரைவு கடாதலாவது, தலைவியை உயர்த்துக் கூறிய தலைவற்குத் தோழி தங்களது உண்மை நிலையைக் கூறி அவன் கூற்றை மறுக்கு முகத்தால் வரைவுகடாதல், இதற்குக் கொளு :-

இன்மை யுரைத்த மன்ன னுக்கு
மாமை நோக்கி தோழி யுரைத்தது.

4. ஏதம்கூறி இரவரவு விலக்கல்

கடந்தொறும் வாரண வல்சியின் நாடிப்பல் சியம்கங்குல்
இடந்தொறும் பார்க்கும் இயவொரு நீஎழில் வேலின்வந்தால்,
படந்தொறுந் தீஅர வன்அம் பலம்பணி யாரின்எம்மைத்
தொடர்ந்தொறுந் துன்பென் பதேஅன்ப நின்னருள்
[தோன்றுவதே. 253

வாய்த்த மணி - குறி தவறாது தாக்கிய ஒளிக் கல். ''இழும்'' என்றது, ஓசைக் குறிப்பு. 'இறாலினின்றும்' என ஐந்தாவது விரிக்க. உந்தும் - தள்ளுகின்ற. உந்தும் இடமாகிய இஃது எந்தையது வரை' என்க. 'இஃது' என்னும் ஆய்தம் தொகுத்தலாயிற்று. உறு வரை - ஏறுதற்கரிய மலை. 'பிறர்க்கு உரித்தாகாத மலை' எனக் கொண்டு, 'முற்றூட்டு' என உரைப்பர் பேராசிரியர். 'எம் உற்றார் குறவர்; எம்மைப் பெற்றாளும் கொடிச்சி; யாமும் புனம் காத்தும்' என அச் சொற்களை வருவித்து உரைக்க. உம்பர் பெறு அருள் - தேவரும் பெறலாகாத அருளையுடைய. 'மலையின்கண்' என உருபு விரிக்க. 'ஆதலால், நீ வரையாமைக்கு எம்மைப் புனைந்துரைக்க வேண்டா' என்னும் குறிப்பெச்சம் வருவித்து முடிக்க.

'சிறாரது கவண் கல்லால் இறாலில் உள்ள தேன் புறம் வீழ்ந்து சிறுகுடிலிடத்துப் பரந்தாற்போல, அயலார் கூறும் அலரால் நின் களவொழுக்கம் வெளிப்பட்டுப் பலரும் அறிய ஊரிடத்துப் பரவாநின்றது, என உள்ளுறையுவமம் கொள்க.

சிவபெருமானது திருவருள் பெறற்கரும் பொருளாதல் கூறப்பட்டது.

253. ஏதம் கூறி இரவரவு விலக்கலாவது, உள்ளது கூறி வரைவு கடாய தோழி, பின், 'நீ வரையாது இங்ஙனம் இரவில் தனித்து வருதல் எங்கட்குத் துன்பமாகின்றது' என வழியது துன்பங்கூறி, இரவு வருதலை விலக்குதல். (துறைப் பெயரும் செய்யுள் நடையால் வருதலின், 'இரா' என்பது 'இர' என நின்றது.) இதற்குச் செய்யுள் :-

5. பழிவர வுரைத்துப் பகல்வரவு விலக்கல்

களிறுற்ற செல்லல் களைவயிற் பெண் மரம் கைஞ்ஞெமிர்த்துப்
பிளிறுற்ற வானப் பெருவரை நாட, பெடைநடையோ
டொளிறுற்ற மேனியன் சிற்றம் பலம்நெஞ் சுறாதவர்போல்
வெளிறுற்ற வான்பழி யாம்பகல் நீசெய்யும் மெய்யருளே. 254

இரவரு துயரம் ஏந்தலுக் கென்னிப்
பருவர லெய்திப் பாங்கி பகர்ந்தது.

"கடந்தொறும்" என்றதை, "இடந்தோறும்" என்பதற்கு முன்னே கூட்டுக. கடம் - காடு. வல்சியின் - உணவு நிமித்தத்தால். இடம் - காட்டின் பகுதிகள். இயவு - வழி. ஒரு நீ - துணையில்லாது ஒருவனாகிய நீ. "வேலின்" என்றதை, 'வேலாடு' எனத் திரித்து, 'வேலொடே' எனப் பிரிநிலை ஏகாரம் விரித்து, 'வேலே துணையாக' என உரைக்க. "படந்தொறும்" என்றது. தீ என்புழி எஞ்சி நின்ற 'உடைய' என்பதனோடு முடிந்தது. இறுதி யடிக்கண், 'ஒறுக்கும்' என்பது, இடைக் குறைந்து, "ஒறும்" என நின்றது. 'நின்னருள் தோன்றுவது' என்பதை, "வந்தால்" என்றதன் பின்னர்க் கூட்டி, 'நின் அருள் புலப்படும் வகை' என உரைக்க. "என்பதே" என்றதும், 'என்னும் வகையே' என்றபடியேயாம்.

சிவபெருமானது தலத்தைப் பணியாதவரைத் துன்பம் தொடர்ந்துநின்று ஒறுத்தல் கூறப்பட்டது.

254. பழிவரவுரைத்துப் பகல்வரவு விலக்கலாவது, தோழி ஏதங்கூறி இரவரவு விலக்கப்பட்ட தலைமகன், 'இது பகல்வரச் சொன்னவாறும்' எனக் கருதி அங்ஙனம் செல்ல, தோழி, நீ பகல் வருதல் எங்கட்குப் பழியாகாநின்றது; ஆதலின், பகல்வரற்பாலையல்லை' என விலக்குதல். இதற்குச் செய்யுள்:-

ஆய்பவம் ஒழுகும் அடல்வே லண்ணலைப்
பாங்கி ஐய, பகல்வரல் என்றது.

6. தோழுதிரந்து கூறல்

கழிகட் டலைமலை வோன்புலி யூர்கரு தாதவர்போல்
குழிகட் களிறு வெரீஇஅரி யாளி குழீஇவழங்காக்
கழிகட் டிரவின் வரல்;கழல் கைதொழு தேஇரந்தேன் ;
பொழிகட் புயலின் மயிலின் துவளும் இவள்பொருட்டே. 255

செல்லல் – துன்பம். அஃதாவது, சேற்று நிலத்துட்பட்டமை. களைவயின் - நீக்குமிடத்து. முன்னர் 'களிறு' என வந்தமையின், வாளா, 'பெண்' என்று போயினார். எனவே, 'பிடி' என்றதாயிற்று. 'மரம்' என்றது முரித்து வாங்கிய கிளையை. 'மரத்தைக் கையால் ஞெமிர்த்து' என்க. ஞெமிர்த்து - நீட்டி. பிடி பிளிறியது, களிற்றைக் கரையேற்றும் முயற்சியால். வானப் பெருவரை - வானத்தை அளாவிய பெரிய மலை. ''பெடை'' என்புழி, 'அன்னம்' என்பது, ஆற்றலாற் கொள்ளக் கிடந்தது. ''நடை'' என்றது அதனை உடைய உமையம்மையை உணர்த்திய ஆகுபெயர். ஒளிறுதல் - விளங்குதல். ''உருதவர்'' என, இடத்து நிகழ்பொருளின் தொழில் இடத்தின்மேல் நின்றது. 'நெஞ்சால் உருதவர்' என உருபு விரித்துரைப்பர் பேராசிரியர். 'உருதவர்க்கு' என்னும் நான்காவது, தொகுத்தல் பெற்றது. வெளிறு உற்ற - வெளிப்படுதலைப் பொருந்திய. வான் பழி - பெரிய பழி. 'அருள் பழியாம்' எனக் காரணம் காரியமாக்கிக் கூறப்பட்டது. 'பழிக்கு அஞ்சுகின்றோமல்லது, நின் அருளை இகழ்கின்றிலம்' என்பாள், 'நின் மெய்அருள்' என்றாள்.

'களிறு வழியை விடுத்துச் சென்று சேற்றில் அகப்படப் பிடி அதற்கு வருந்திக் கரையேற்ற முயலுதல்போல, யாமும் நினது களவொழுக்கத்திற்கு வருந்தி வரைவுடம்பட முயல்கின்றோம்' என உள்ளுறை உவமம் கொள்க.

சிவபெருமானை நினையாதவர் பெரும்பழியைப் பெறுவர் என்பது கூறப்பட்டது.

255. தொழுதிரந்து கூறலாவது, பழிவரவுரைத்துப் பகல்வரவு விலக்கிய தோழி, தலைவன் அதனை, 'இரவு வருக'

7. தாயறிவு கூறல்

விண்ணுஞ் செலவறி யாவெறி யார்கழல் வீழ்சடைத்தீ
வண்ணன் சிவன்தில்லை மல்லெழிற் கானல் அரையிரவில்
அண்ணல் மணிநெடுந் தேர்வந்த துண்டாம் எனச்சிறிது
கண்ணுஞ் சிவந்தன்னை என்னையும் நோக்கினள்; கார்மயிலே.256

என்றவாறாகக் கருதாதபடி, 'இரவு வருதலை ஒழிக என உன்னைத் தொழுதும் இரக்கின்றேன்' எனக் கூறுதல். இதற்குக் கொளு;-

இரவரவின் ஏதம்அஞ்சிச்
சுரிதருகுழல் தோழிசொல்லியது

'களிறு புலியூர் கருதாதவர்போல் அரி யாளி வெரீஇ, குழீஇ வழங்கா இரவு' எனக் கூட்டுக.

கழி கண் தலை - நீங்கிய கண்களையுடைய (கண் நீங்கப் பெற்ற) தலைகள். "களிறு" என்றது, இங்குப் பன்மை குறித்து நின்றது. 'குழி எனப் பாடம் ஓதி, குழியையும் வெருவி என்று உரைப்பாரும் உளர்' என்பர் பேராசிரியர். வழங்கா - திரியாதிருக்கின்ற. கழி கட்டு இரவு - மிகத் திணிந்த இருள். 'வாரல்' என்பது குறுகிநின்றது. பொழி கட் புயலின் - பொழிகின்ற கண்ணீர். 'கண்ணீரை யுடைய ஒரு மயில்போலத் துவளும் இவள்' என்க.

சிவபெருமானது தலத்தை நினையாதவர், பகைவர்களுக்கு அஞ்சி ஒடுங்குதல் கூறப்பட்டது.

256. தாயறிவு கூறலாவது, இரவு வருதலையும், பகல் வருதலையும் விலக்கியபின்னும் தலைவன் வேட்கை மிகுதியால் குறியிடத்துச் சென்று நிற்க, அஃது அறிந்த தோழி அவன் கேட்பத் தலைவிக்குச் சொல்லுவாளாய், 'தலைவன் வரவைத் தாய் அறிந்தாள்' எனப் படைத்துக்கொண்டு கூறுதல். இதற்குக் கொளு:-

சிறைப்பு றத்துச் செம்மல் கேட்ப
வெறிக்குழற் பாங்கி மெல்லியற் குரைத்தது

8. மந்திமேல் வைத்து வரைவு கடாதல்

வான்தோய் பொழில்எழில் மாங்கனி மந்தியின் வாய்க்கடுவன்
தேன்தோய்த் தருத்தி மகிழ்வகண் டாள்,திரு நீள்முடிமேல்
மீன்தோய் புனற்பெண்ணை வைத்துடை யாளையும் [மேனிவைத்தான்
வான்தோய் மதில்தில்லை மாநகர் போலும் வரிவளையே. 257

" விண் " என்றது, அவ்விடத்துவாழும் தேவரை. செலவு - நீளம். ' தனது நீளத்தை விண்ணும் அறியாதசிவன் ' என்க. வெறி - நறுமணம்; இஃது அடியவர் இடும் மலரினின்றும் பற்றியது. இது, ' விண்ணோர்க்கு அரியவாயினும், அடியார்க்கு எளிய ' என்பதனைக்குறித்தவாறு. வீழ் சடை - தாழ்ந்தசடை. ' கழலையும், சடையையும், வண்ணத்தையும் உடைய சிவன் ' என்க. மல் - வளம். கானல் - கடற்கரை ' தில்லைக் கடற்கரை ' என்க. அண்ணல் - தலைமை; இது தேர்க்குக் கூறப்பட்டது. " உண்டாம் " என்றதில், ' ஆம் ' என்பது உய்த்துணர்தலைக் காட்டிநின்றது. " கண் சிவந்து " என்றது, வெகுண்டு என்றதாம். கார் மயிலே - கார்காலத்து மயிலை ஒப்பவளே. ' இனி யாம் என்செய்தும் ' என்பது குறிப்பெச்சம். இங்ஙனம் கூறுதலும் வரைவு கடாதலேயாம்.

சிவபெருமானது தன்மைகள் பலவும் கூறப்பட்டன.

257. மந்தி மேல் வைத்து வரைவு கடாதலாவது:- தலைவன் சிறைப்புறமாகத் தாயறிவு கூறிய தோழி, பின் தலைவனை எதிர்ப்பட்டு, ' கடுவன்களால் புரந்தரப்பட்ட மந்திகளைக் கண்டு தலைவி, நமக்கு இப்பேறு அரிதாயிற்று என்று ஆற்றாளாயினள் ' என்று படைத்து மொழிந்து வரைவுகடாதல். இதற்குக் கொளு :-

வரிவளையை வரைவுகடாவி
அரிவைதோழி உரைபகர்ந்தது

' பொழிற்கண் ' என உருபு விரித்து, அதனை, " அருந்தி மகிழ்வ " என்பதனோடு முடிக்க. மந்தி - பெண்குரங்கு. கடுவன் - ஆண் குரங்கு. ' மந்தி, கடுவன் ' என்பன இங்குத்

9. காவல்மேல் வைத்துக் கண்துயிலாமை கூறல்

நறைக்கண் மலிகொன்றை யோன்நின்று நாடக மாடுதில்லைச்
சிறைக்கண் மலிபுனல் சீர்நகர் காக்கும்செவ் வேல்இளைஞர்
பறைக்கண் படும்படுந் தோறும் படாமுலைப் பைந்தொடியாள்
கறைக்கண் மலிகதிர் வேற்கண் படாது கலங்கினவே. 258

தனித்தனி பலவற்றைக் குறித்தன. ஒவ்வொன்றையே குறித்த தாக வைத்து, "மகிழ்வ" என்ற பன்மை பற்றி வேறு உரையும், இலக்கண அமைதியும் கூறுவர் பேராசிரியர். "கண்டாள்" என்றது, 'கண்டு, விலங்குகளும் தம் துணையைப் புறந்தராநிற்க, நம் காதலர் அதுசெய்கிலர் என்று ஆற்றா ளாயினாள் என்பதைத் தோற்றுவிக்கும் குறிப்பாய் நின்றது. புனற்பெண் - கங்காதேவி. "மீன்தோய்" என்றது, புனலுக்கு இன அடையாய் நின்றது. உடையாள் - உமையம்மை. "உடையாளையும்" என்ற உம்மை, வைத்தமை மாத்திரையைத் தழுவிற்று. "வரிவளை" என்றது, 'என் தோழி' என்னும் பொருட்டாய். "தில்லை மாநகர்போலும்" என்ற உவமைக்குப் பொருளாய் நின்றது.

சிவபெருமானது தலத்தின் அருமையும், பெருமையும் கூறப்பட்டன.

258 காவல்மேல் வைத்துக் கண்துயிலாமை கூறலாவது, மதிமேல்வைத்து வரைவு கடாவப்பட்ட தலைமகன் தலைமக ளது ஆற்றாமை கேட்டு ஆற்றானாய் இரவுக் குறிக்கண் சென்று நிற்க, அவன் கேட்குமாறு தோழி, தலைவி கண் துயிலாமையைக் காவலர்மேல் வைத்துத் தன்னுள்ளே கூறுதல். இதற்குக் கொளு:-

நகர்காவலின் — மிகுகழிகாதல்

நறைக் கள் - நறுநாற்றத்தை யுடைய தேன். 'தில்லை நகர்' என இயையும். சிறைக்கண் - அணைக்குள். செவ் வேல் - குருதியால் சிவந்துள்ள வேல். இளைஞர் - ஊர்க் காவலர். பறைக்கண் - பறையினது பக்கம். படும் - ஒலிக்கும். "படும் படும்" என்றது ஒருசொல் அடுக்கு. படா முலை - தளராத

10. பகலுடம்பட்டாள்போன்று இரவரவு விலக்கல்

கலரா யினர்நினை யாத்தில்லை அம்பலத் தான்கழற்கன்
பிலரா யினர்வினை போல்இருள் தூங்கி முழங்கிமின்னிப்
புலரா இரவும் பொழியா மழையும்புண் ணில்நுழைவேல்
மலரா வரும்;மருந் தும்மில்லை யோநும் வரையிடத்தே. 259

கொங்கை. கறைக்கண் மலி - நஞ்சிடத்து நிறைந்த; என்றது, 'நஞ்சு பூசப்பட்ட' என்றபடி. படாது - துயிலாது. 'பைந்தொடியாள் கண் படாது கலங்கின' என்க. 'இதற்குச் செய்வதென்' என்பது குறிப்பெச்சம்.

இதனைப் பேராசிரியர், அயலார் சிலர் கூற்றாகக் கருதி உரைத்தது பொருந்தாமை அறிக.

சிவபெருமானது நடனச் சிறப்பால் தில்லை நகர் சிறந்து நிற்குமாறு கூறப்பட்டது.

259. பகல் உடம்பட்டாள்போன்று இரவரவு விலக்கலாவது, தலைவி கண் துயிலாமையைச் சிறைப்புறமாகக் கேட்ட தலைவன் காதல் மிகுதியால் தலைவியை எதிர்ப்பட முயன்று நிற்கத் தோழி எதிர்ப்பட்டு, 'நீ இங்ஙனம் வரும் புலரா இரவும்' பொழியா மழையும் எங்கட்குப் புண்ணில் நுழையும் வேலும் மலராம்படி வருத்தும்; இதற்கு உங்கள் மலையிடத்து ஒரு மருந்து இல்லையோ' எனப் பகல் வருதலை உடம்பட்டாள் போன்று இரவு வருதலை விலக்குதல். இதற்குக் கொளு :-

விரைதரு தாரோய் — இரவரல் என்றது

கலர் - மயக்கம் உடையவர். தூங்கி - செறிந்து. 'இருள் தூங்கிப் புலரா இரவும், முழங்கி மின்னிப் பொழியா மழையும்' எனக் கூட்டுக. 'பொழியா மழை, இடியும் மின்னலும் மிகுந்து வருத்தும்' என்க. 'புண்ணில் நுழையும் வேலும் பூப்போல இன்பம் செய்யும் என்னும்படி மிகக் கொடியவாய் வரும்' என்க. மருந்து, 'இன்ன இரவும், மழையும் நீ வரையும் நாள் காறும் வாராது தடுக்கும் மருந்து' என்க. இவ்வாற்றால் இரவு விலக்கப்பட்டவாறு அறிக.

11. இரவுடம்பட்டாள்போன்று பகல்வரவு விலக்கல்

இறவரை உம்பர்க் கடவுட் பராய்நின் றெழிலியுன்னிக்
குறவரை ஆர்க்குங் குளிர்வரை நாட, கொழும்பவள
நிறவரை மேனியன் சிற்றம் பலம்நெஞ் சுருதவர்போல்
உறவரை மேகலை யாட்கல ராம்பகல் உன்னருளே. 260

சிவபெருமானது திருவடியில் அன்பில்லாதவர்கள் மிக்க தீவினையை அடைதல் கூறப்பட்டது.

260. இரவு உடம்பட்டாள்போன்று பகல் வரவு விலக்கலாவது, தோழி 'இதற்கு ஒரு மருந்து இல்லையோ' என்றதனால், தலைவன், 'இவள் இரவில் எதிர்ப்படல் அருமை கூறிப் பகல் உடம்பட்டாள்' எனக் கொண்டு அங்ஙனம் சென்று நிற்க, தோழி, 'நினது பகல்வரவால் அலராகாநின்றது' என. இரவு உடம்பட்டாள் போன்று பகல் வருதலை விலக்குதல். இதற்குக் கொளு :-

இகலடு வேலோய் — பகல்வரல் என்றது

இற - இறுதலால். உம்பர் - மலைமேல். "எழிலி" எனவும், "வரை" எனவும் பின்னர் வருகின்றமையின், வாளா, "இற" எனவும், "உம்பர்" எனவும் கூறி யொழிந்தார். "குறவரை" என்னும் ஐகாரம் சாரியை. 'நிறக் கொழும் பவளவரை மேனியன்' எனக் கூட்டுக. "நெஞ்சுருதவர்" என்பதற்கு மேலே உரைத்தாம். அரை - அரைக்கு அணியாகிய. பகல் உன் அருள் - பகலில் பெறும் உனது அருள்.

'குறவர் தெய்வம் பராவத்தக்க காலத்தில் பராவாது, மழைமாறியபின் அதற்கு முயலுதல்போல, நீ வரையுங் காலத்து வரையாது பின்னர் இவளை எய்துதல் அரிதாய காலத்து வரைய முயல்வை' என உள்ளுறை உவமம் கொள்க.

சிவபெருமானது திருக்கோலச் சிறப்புக் கூறப்பட்டது.

12. இரவும் பகலும் வரவு விலக்கல்

சுழியா வருபெரு நீர்சென்னி வைத்தென்னைத் தன்தொழும்பிற்
கழியா அருள்வைத்த சிற்றம் பலவன் கரம்தருமான்
விழியா வரும்புரி மென்குழ லாள்திறத் தையமெய்யே
பழியாம் பகல்வரில் நீஇர வேதும் பயனில்லையே. 261

---

261. இரவும் பகலும் வரவு விலக்கலாவது, தோழி இரவு உடம்பட்டாள்போன்று பகல் வரவு விலக்கியபின், 'நீ பகல்வரின் அலராகும்; இராவரின் எதிர்ப்படுதல் அருமையாம்' என்று கூறி 'இருபொழுதும் வரற்பாலையல்லை' என விலக்குதல். இதற்குக் கொளு :-

இரவும் பகலும் — வரவொழி கென்றது

'தன் தொழும்பின் வைத்த' என இயையும். கழியா அருள் - என்மாட்டு நீங்காத திருவருள். கரம் தரும் - கையின் கண் வைக்கப்பட்ட. மான் விழியா வரும் - மான்போல விழித்து வருகின்ற. "இரவு" என்றதன்பின், 'வரின்' என்பது எஞ்சி நின்றது. 'ஐய, நீ பகல்வரின், புரிமென் குழலாள் திறத்து மெய்யே பழியாம்; இரவு வரின் ஏதும் பயனில்லை' எனக் கூட்டி முடிக்க. 'அதனால், இருபொழுதும் வாரற்க' என்பது குறிப்பெச்சம்.

'சுழித்து வரும் பெருநீரின் வேகத்தைத் தணித்துச் சென்னியுள் அடக்கி வைத்தாற்போல, குதித்து ஓடும் நெஞ்சை யுடைய என்னைத் தனது அருளினுள் அடக்கினான்' என்பதை உடம்பொடு புணர்த்துக் கூறியவாறு உணர்க. "நில்லாத நீர்சடைமேல் நிற்பித்தானை, நினையா என் நெஞ்சை நினைவித் தானை" என்ற திருத்தாண்டகத்தைக் காண்க (43 1.) "வேகங் கெடுத்தாண்ட வேந்தன்" என்று சிவபுராணத் துள்ளும் அருளிச்செய்தார்.

சிவபெருமான் எல்லாப் பொருளையும் தன்னிடத்து வசிகரிப்பவனாதல் கூறப்பட்டது.

13. காலம் கூறி வரைவு கடாதல்

மையார் கதலி வனத்து வருக்கைப் பழம்விழுதேன்
எய்யா தயின்றிள மந்திகள் சோரும் இருஞ்சிலம்பா,
மெய்யா அரியதென் அம்பலத் தான்மதி யூர்கொள்வெற்பின்
மொய்யார் வளர்இள வேங்கைபொன் மாலையின் முன்னினவே.

---

262. காலம் கூறி வரைவு கடாதலாவது, இருபொழுதும் வரவு விலக்கின தோழி, 'நீ வரைவொடு வருதற்கு உரியகாலம் இதுவே' எனக் கூறி வரைவு கடாதல். இதற்குக் கொளு;-

முந்திய பொருளைச் சிந்தையில் வைத்து
வரைதரு கிளவியின் தெரிய வுரைத்தது.

மை - இருள். கதலி வனம் - வாழைக்காடு; இது மலை வாழையாதல் முன்னே கூறப்பட்டது. வருக்கை - பலா. விழு தேன் - விழுதலால் (இருல் உடைந்து) வருகின்ற தேன். எய்யாது - அறியாது. 'நீர்வேட்கையால் தேன் என்று அறி யாது' என்றபடி. "கதலி வனத்து வருக்கைப் பழம்விழு தேன்" என்றதனால், தேனோடு வாழைக்கனியும, பலாச்சுளையும் கலந்து நிற்றல் பெற்றும். சோர்தல், களியினாலாம். "மெய்யா அரியது என்" என்றதனை இறுதிக்கண் கூட்டி, 'இனி உனக்கு உண்மையாக அரியது யாது' என உரைக்க. 'வெற்பில் மதி ஊர் கொண்டது' எனற்பாலதனை, "மதி ஊர்கொள் வெற் பில்" எனச் சுருங்கக் கூறினாள். கொள் வெற்பு, இறந்தகால வினைத்தொகை. மதி - திங்கள். ஊர்கொள்ளல் - நிரம்பி நிற்றல். 'ஊர்கோளால் சூழப்பட்டது' எனவும் உரைப்பர். மாலையின் முன்னின - பொன்னரி மாலைகள் தூக்கினாற்போலத் தோன்றின. இவ்விரண்டினாலும், 'வரையுங்காலம் வந்து விட்டது' என்றபடி. "வேங்கையும் ஒள்ளிணர் விரிந்தன - நெடுவெண் டிங்களும் ஊர்கொண் டன்றே" என்ற களிற்றி யானை நிரையைக் காண்க (2). இன்னும் அப்பாட்டினுள்,

"கோழிலை வாழைக் கோள்மிகு பெருங்குலை
ஊழுறு தீங்கனி உண்ணுநர்த் தடுத்த
சாரற் பலவின் சுளையொ டூழ்படு
பாறை நெடுஞ்சுனை விளைந்த தேறல்

14. கூறுவிக்குற்றல்

தேமாம் பொழில்தில்லைச் சிற்றம் பலத்துவிண் ணோர்வணங்க
நாமா தரிக்க நடம்பயில் வோனைநண் ணாதவரின்
வாமாண் கலைசெல்ல நின்றார் கிடந்தநம் அல்லல்கண்டால்
தாமா அறிகில ராயின்என் நாம்சொல்லுந் தன்மைகளே. 263

அறியா துண்ட கடுவன் அயலது
கறிவளர் சாந்தம் ஏறல் செல்லாது
நறுவீ அடுக்கத்து மகிழ்ந்துகண் படுக்கும்
குறியா இன்பம் எளிதின் நின்மலைப்
பல்வேறு விலங்கும் எய்தும் நாட,
குறித்த இன்பம் நினக்கெவன் அரிய''

என்றவாறே, இதன்கண், 'விலங்குகளும் தாம் நினையாத இன்பம் தானே எளிதிற் கிடைக்கப்பெற்று மகிழும் மலையை யுடைய நினக்கு, நீ நினைத்த இன்பம் கிடையாதொழிதல் இல்லையாகலின், ஐயுறுது வரைவொடு வருக' என்னும் உள்ளுறைப் பொருள் அமைந்து கிடத்தலை அறிக.

'இளமந்திகள் நீர்வேட்கையால் கதலி வனத்து வருக்கைப் பழம் விழுதேன் அறியாது அயின்று சோரும்' என்றதனால், 'நீ வேட்கை மிகுதியால் களவொழுக்கத்தின் விளைவையறியாது மேற்கொண்டு ஒழுகி வரைய நினையாது மயங்காநின்றாய்' என உள்ளுறை உவமம் கொள்க.

தில்லை வெற்பின் இயல்பு கூறிய முகத்தால், சிவபெருமானை அடைந்தோர் எல்லா இன்பங்களும் எளிதின் எய்துதல் கூறப் பட்டது.

263. கூறுவிக்குற்றலாவது, தோழி, தான் காலங் கூறிக் கடாவவும் தலைவன் வரைவுடம் படாமையின், தலைவியைக் கொண்டே அவற்குக் கூறுவிக்க முயலுதல். 'கூறுவிக்க' என்னும் அகரம் தொகுத்து, உறல் என்பதில் றகர ஒற்று விரிந்து, 'கூறுவிக்குற்றல்' எனப்பட்டது. இதற்குக் கொளு :-

15. செலவுநினைந் துரைத்தல்

வல்சியின் எண்கு வளர்புற் றகழமல் கும்மிருள்வாய்ச்
செல்வரி தன்றுமன் சிற்றம் பலவரைச் சேரலர்போற்
கொல்கரி சீயம் குறுகா வகைபிடி தான்இடைச்செல்
கல்லதர் என்வந்த வாறென் பவர்ப்பெறிற் கார்மயிலே. 264

ஒந்த நெரவ்வா துரைந்த தோழி
கொந்தவிழ் கோதையாற் கூறுவிக் குற்றது.

'சிற்றம்பலத்து நடம்பயில்வோன்' என இயையும். "வணங்க" என்றது நிகழ்காலத்திலும், "ஆதரிக்க" என்றது எதிர்காலத்திலும் வந்தன. ஆதரித்தல் - விரும்புதல். சிவபெருமானை விரும்பும் விருப்பத்தால் வினைபோகுமாதலின், அது கருதி நடம் பயில்கின்றான் என்றபடி. 'நண்ணுதவரின் (அருளின்றி) நின்றார்' என இயையும். 'நண்ணுதவரின் வருந்த' என ஒரு சொல் வருவிப்பர் பேராசிரியர். 'வாமம்' என்பது இடைக்குறைந்து நின்றது. வாமம் - அழகு. 'அழகு மாட்சிமைப்பட்ட கலை (ஆடை)' என்க. கலையை, 'மேகலை' என்பர் முன்னை உரையாசிரியர்கள். செல்ல - நெகிழ்ந்து நீங்க. நின்றார் - அதனைக் கண்டும் அருள்பண்ணாது நின்றவர். "அல்லல்" என்றது வேட்கையால் உண்டாகிய வருத்தத்தை. "கண்டால்" என்றது, 'கண்டபொழுது' என்றவாறு. "நாம்" என்றது, தோழி பெரும்பான்மையும் தன்னையே குறித்து. அதனால், 'இனி நீயாகிலும் சென்று சொல்' என்றது குறிப்பாயிற்று.

சிவபெருமான் உயிர்கட்குத் தன்னை உணரும் ஞானத்தை அருளவே நிற்றலும், அவனை அடையாதவர் அருளற்ற உள்ளத்தை உடையராதலும் கூறப்பட்டன.

264. செலவுநினைந் துரைத்தலாவது, தோழி தலைமகனைப் புலந்து கூறக்கேட்ட தலைவி, அவளது குறிப்பு உடன்போக்காய் இருந்தமையை உணர்ந்து, 'தலைவரை உடன்படுவிப்பின் யாம் செல்லுதல் அரிதன்று' என்பதுபடத் தான் உடன்போக்கை நினைந்து கூறுதல். இதற்குச் செய்யுள் :-

பாங்கி நெருங்கப் பணிமொழி மொழிந்து
தேங்கமழ் சிலம்பற்குச் சிறைப்புறக் கிளவி.

16. பொலிவழி வுரைத்து வரைவு கடாதல்

வாரிக் களிற்றின் மருப்புகு முத்தம் வரைமகளிர்
வேரிக் களிக்கும் விழுமலை நாட, விரிதிரையின்
நாரிக் களிக்கமர் நன்மாச் சடைமுடி நம்பர்தில்லை
ஏரிக் களிக்கரு மஞ்ஞைஇந் நீர்மைஎன் எய்துவதே. 265

''சிற்றம்பலவரை'' என்பது முதலாகத் தொடங்கி யுரைக்க. அங்ஙனம் உரைக்கும் வழி, ''கார்மயிலே'' என்ற தனை முதலிற் கொள்க.

வல்சியின் - உணவு நிமித்தமாக. எண்கு - கரடி. புற்றை அகழ்தல் - புற்றுஞ் சோற்றினை உண்டற்பொருட்டு. உடன் போக்கின் அருமை கூறுவாள், ''வல்சியின் எண்கு வளர்புற் றகழ மல்கும் இருள்வாய்'' என்றாள். 'செலவு' என்பது 'செல்வு' எனவும் நிற்கும் என்க. 'உடம்படுவிப்பாரைப் பெறுமையின் வருந்தாநின்றேம்' என்பது பட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. 'போலும் படி' என்னும் பொருட்டாய 'போல' என்பதன் அகாம் தொகுத்தல் பெற்றது. 'சிற்றம்பலவரைச் சேரலர் போல ஆவது கொல்கரி' என்க. 'கொல்கரியைச் சியம் குறுகாவகை பிடி தானுக இடைச்சென்று கரியின் மாறுபாட்டை மறைக்கின்ற கல் அதர்' என்க. 'கல்லதரில் நீயிர் வந்தது எவ்வாறு என்று வினவுவாரைப் பெறின்' என்றவாறு. 'அங்ஙனம் வினவவே, அவரை நம்மையும் உடன்கொண்டு அக் கல்லதரின்கட் செல்ல உடம்படுவித்தல் கூடுவதாகும்' என்பது கருத்து.

'கொல்கரியைச் சியம் குறுகாவகை பிடி தானே இடைச் செல்லும்' என்றது, 'அலர் மிகுதியால் தமர் நும்மை நெருங் காதவாறு தலைவி நும்முடன் வரத் தானே கருதினாள்' என்பது உணர்த்தக்கூறிய உள்ளுறையாம்.

சிவபெருமானைச் சேராதவர் பகைவரால் நலியப்படுதல் கூறப்பட்டது.

265. பொலிவழிவுரைத்து வரைவு கடாதலாவது, தலை மகள் செலவுநினைந் துரைத்தபின்னும் தோழி தலைவனை வரைவே முடுக்குவாளாய், 'நின் இகழ்ச்சியால் இவள் பொலிவு

அறிந்தது' எனக் கூறி வரைவு கடாதல், தலைவன் வரை வுடம்படாமை பற்றித் தலைவி செலவு நினைந்ததல்லது, அதன் கண் விருப்பத்தாற் கூறினளல்லளாகலின், தோழி இது கூறுதல் குற்றேவல் பிழைத்ததாகாமை அறிக. இதற்குக் கொளு,-

வரைவு விரும்பு மன்னுயிர்ப் பாங்கி
விரைதரு குழலி மெலிவுரைத்தது.

'வரை மகளிர், களிற்றின் மருப்பு உகும் முத்தம் வேரிக்கு வாரி அளிக்கும் விழு மலைநாட' எனக் கூட்டுக.

'மருப்பினின்றும் உக்க முத்தம்' என்க. வேரி - கள். விருப்பம் - மேன்மை. திரை - அலை. நாரி - பெண். அலை யாகிய பெண், கங்கை. இன், அல்வழிக்கண் வந்த சாரியை. 'தில்லை மஞ்ஞை' என இயையும். 'அளிக்க' என்றதன் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. 'அவள் அமர்ந்த சடை முடி' என்க. ஏர் இக் களிக் கரு மஞ்ஞை - அழகிய இந்தக் களிப்புடைய கரிய மயில்போல்வாள். "இந்நீர்மை" என்றது, 'பொலிவழிந்து வருத்தும் இத்தன்மை' என்றவாறு. "என்" என்றது, 'தருமோ' என்றதாம்.

'நெருங்குதற்கரிய யானைமருப்பினின்றும் உதிர்ந்த முத்துக் களை அவற்றின் அருமையறியாது குறமகளிர் கள்ளுக்கு விலையாக வாரிக்கொடுக்கின்ற மலைநாடன்' என்றதனால், பிறர் அணுகுதற்கு அரிய தமரது காவல் முதலியவற்றைக் கடந்து நின் வயத்தளாகிய இவளை அருமை யறியாது நின் களவொழுக்கத்திற்கு உரியளாக்கி இகழ்கின்றாய்' என உள்ளுறை உவமம் கொள்க. இதனால் 'விழுமலை' என்றது, புகழ்வது போலப் பழித்த தாயிற்று.

'தனது நன்மாமுடியை ஒருநாரிக்கு அளித்தவன் தில்லைய ளாதலின், இவளும் நினது நோய் களையும் அன்பினள் ஆயினள், என இறைச்சிப்பொருள் கொள்க. சிவபெருமான் நிலத்தெய்வ மாகாது பாட்டுடைத் தலைவனாய் நிற்றலின், இவ்வாற்றான் இறைச்சிப் பொருள் தோற்றுவிக்கப்பட்டது என்க.

இதனானே சிவபெருமானது அருள் மிகுதி கூறப்பட்டதாம்.

18. வரைபொருட் பிரிதல்

[வரைபொருட் பிரிதல் என்பது, தோழியால் வரைவு முடுக்கப்பட்ட தலைமகன் வரைதற்கு வேண்டும் பொருளின் பொருட்டுத் தலைவியைப் பிரிந்துசெல்லுதல். இஃது இருவருங் கூடி இல்லறம் நிகழ்த்தும் கற்புக்காலம் அன்றாயினும், பகற் குறி இரவுக்குறிகளில் தலைவன் செல்லாமை பற்றிப் பிரிவு எனப்பட்டது. இவ்வாற்றானே முன்னர் 'ஒருவழித்தணத்தல்' என்றது காண்க. இவ் விரண்டிடத்தும் தலைவி ஆற்றாளாதலும் தோழி ஆற்றுவித்தலும் இயல்பாதலின், இவையும் கற்பின் பாலவாம். கற்பிடத்துப் பொருள்வயிற்பிரிவு உளதாகலின், இங்கு இப்பிரிவு கொள்ளப்பட்டது. இதனை அடிகள் முப்பத்து மூன்று துறைகளாக வகுத்து அருளிச்செய்வர் அவற்றைக் கூறும் நூற்பா வருமாறு ;-

[1] முலைவிலை கூறல், [2] வரைவுடம் படுத்தல்,
[3] வரைபொருட் கேகல் உரை அவட் கென்றல்,
[4] நீகூ றென்றல், [5] சொல்லா தேகல்,
[6] பிரிந்தமை கூறல், [7] நெஞ்சொடு கூறல்,
[8] நெஞ்சொடு வருந்தல், [9] வருத்தங்கண் டுரைத்தல்
[10] வற்புறுத் தல்லொடு [11] வன்புறை யழிதல்,
[12] வாய்மை கூறல், [13] மன்னவன் மெய்யுரை
தேறாது புலம்பல், [14] காலம்மறைத் துரைத்தல்,
[15] தூதுவர வுரைத்தல், [16] தூதுகண் டழுங்கல்,
[17] மெலிவு கண்டு செவிலி உரைத்தல்,
[18] மேவிய செவிலி கட்டுவைப் பித்தல்,
[19] கலக்குற்று நிற்றல், [20] கட்டுவித்தி கூறல்,
[21] வேலனை அழைத்தல், [22] இன்னல் எய்தல்,
[23] விலக்க நினைத்தல், [24] நிலைமை உரைத்தல்,
[25] அறத்தொடு நிற்றல், [26] ஐயந் தீர்த்தல்,
[27] அவன்வெறி விலக்கல், [28] செவிலிக் குத் தோழி
அறத்தொடு நிற்றல், [29] நற்றாய்க்குச் செவிலி
அறத்தொடு நிற்றல், [30] தேர்வர வுரைத்தல்,
[31] மணமுரசு கேட்டு மகிழ்ந்து ரைத்தல்,
[32] ஐயுற்றுக் கலங்கல், [33] அவன்நிதி காட்டல்
ஆறைந் துடனே கூறிய மூன்றும்
விரைமலர்க் குழலாய் வரைபொருட் பிரிதல்.]

1. முலைவிலை கூறல்

குறைவிற்கும் கல்விக்கும் செல்விற்கும் நின்குலத் [திற்கும்வந்தோர்
நிறைவிற்கும் மேதகு நீதிக்கும் ஏற்பின் அல் லால்நினையின்,
இறைவிற் குலாவரை யேந்திவண் தில்லையன் ஏழ்பொழிலும்
உறைவிற் குலாநுத லாள்விலை யோமெய்ம்மை ஓதுநர்க்கே. 266

---

266. முலைவிலை கூறலாவது, தோழியால் வரைவு முடுக்கப்பட்ட தலைமகன் வரைவுடம்பட்டு, நீ தலைவிதன் ஐயன்மாரிடம் சென்று அவள் முலைவிலை (பரிசம்) எவ்வளவிற்று எனக் கேட்டறிந்து வா' எனக் கூறத் தோழி, 'எமர் நின் பெருமை பற்றி வரைவுடம்படினல்லது, ஏழுலகுந் தரினும் அவள் முலைவிலையாகுமோ' எனக் கூறுதல். இதற்குக் கொளு ;-

கோலவேற் கன்னிக்கு — விலையிலை யென்றது.

"நின்" என்றதனை முதலிற் கொள்க. குறைவு - இரந்து நிற்கும் குறை. 'செல்வம்' என்பது, "செல்வு" எனக் குறைந்து நின்றது. செல்வமாவது உருவும் திருவும்போல்வன வற்றுள் ஒன்றுனுங் குறைவின்மை. வந்தோர் நிறைவு - மணம் பேச வந்தோரது சால்பு. மேதகு நீதி - மேவுதற்கு (விரும்புதற்கு)த் தக்க உலகியல் முறைமை; அது, "பிறப்பே குடிமை" (தொல். பொருள் - 269.) என்புழி எடுத்தோதப்பட்ட பத்து வகையானும் தலைவற்கும், தலைவிக்கும் உளவாய முறைமை. மணமக்களாம் இருவரது உள்ளங்களும் தம்முள் இயைதலும் இவற்றுள் அன்பு என்பதனுல் பெறப்படும். இஃது இருவரையும் பற்றிய தென்பதுணர்த்தற்கு. 'வந்தோரது நிறைவு' இடைக்கண் வைக்கப்பட்டது. "குறைவிற்கு" முதலிய நான்கனுருபுகள் ஏதுப்பொருட்டாய ஐந்தாவதன் பொருளில் வந்து, "ஏற்பின்" என்பதனேடு முடிந்தன. ஏற்றல் - உடன்படுதல். "இறை, ஏந்தி" என்பன, "தில்லையன்" என்னும் ஒரு பொருள்மேல் வந்த பெயர்கள். வில் குலா வரை ஏந்தி - வில்லாக வளைந்த மலையை ஏந்தி நின்றவன். 'தில்லையனது ஏழ்பொழிலும்' என்க. உறை வில் - மழையிடத்து வில்;

2. வரும்அது கூறி வரைவுடம்படுத்தல்

வடுத்தன நீள்வகிர்க் கண்ணிவெண் ணித்தில வாள்நகைக்குத்
தொடுத்தன நீவிடுத் தெய்தத் துணி;என்னைத் தன்தொழும்பிற்
படுத்தநன் னீள்கழல் ஈசர்சிற் றம்பலம் தாம்பணியார்க்
கடுத்தன தாம்வரிற் பொல்லா திரவில்நின் ஆரருளே. 267

இந்திர வில்; பொலிவு பற்றி அதனையே உவமை கூறினாள். "உறை" என்றதற்குத் தாம்தாம் வேண்டியவாறே உரைத்தனர் முன்னை உரையாளர். வில் குலா நுதலாள் - விற்போல வளைந்த நெற்றியை யுடையாள். 'நுதலாட்கு' என நான்காவது விரிக்க. 'நினது குறையிரப்பு முதலியவை நோக்கி எமர் உடம்படினல்லது, ஆராயுமிடத்து, மெய்ம்மை கூறுவார்முன் ஏழ்பொழிலும் விற்போலும் நுதலாட்கு விலையாகுமோ' என வினை முடிவு செய்க. இதனானே, உலகில் இருமுதுகுரவராயினார் மகளுடம்படுதல், குறையிரப்பு முதலிவை நோக்கியன்றிப் பரிசம் நோக்கியன்று என்பதனை அடிகள் உணர்த்தியருளியவாறு அறிக.

தலைவன் தான்விடும் அருங்கலம் முதலியவை பற்றித் தருக்குறுதவாறு உலகில் உள்ளார் பலரும் தனித்தனியே 'எனது எனது' என்று பற்றுச்செய்து, கொண்டுங் கொடுத்தும் நுகரும் பொருள்கள் யாவும் உண்மையில் சிவபெருமானுடையனவே என்பதை நினைப்பிப்பாள், வாளா 'ஏழ்பொழிலும்' என்னாது, "தில்லையன் ஏழ்பொழிலும்" என்றாள். இதனானே சிவபெருமான் எல்லாப் பொருள்களையும் உடையதலைவனாதல் கூறப்பட்டதாம்.

267. வரும் அது கூறி வரைவுடம்படுத்தலாவது, தலைவற்குத் தலைவியது முலைவிலை கூறிய தோழி, அதுபற்றி அவன் நீட்டியாமைப் பொருட்டு, 'நீ நீட்டிப்பையாயின் இருதிறத்தார்க்கும் பொல்லாங்காய் முடியும்' எனப் பின்னர் வருவதனை முன் உணர்த்தி அவனை விரைய வரைதலை உடம்படுவித்தல். இதற்குக் கொளு;-

தொடுத்தன விடுத்துத் தோகை தோளெய்
திடுக்கண்பெரி திரவினென்றது.

3. வரைபொருட் பிரிவை உரையெனக் கூறல்

குன்றங் கிடையும் கடந்துமர் கூறும் நிதிகொணர்ந்து
மின்றங் கிடைநும் மையும்வந் துமேவுவன் அம்பலஞ்சேர்
மன்றங் கிடைமரு தேகம்பம் வாஞ்சியம் அன்னபொன்னைச்
சென்றங் கிடைகொண்டு வாடா வகைசெப்பு தேமொழியே. 268

"என்னை" என்றது முதலாகத் தொடங்கி யுரைக்க.

"வடுத்தன" என்றதில் ஆறும்வேற்றுமையது அகர உருபு, 'தன்' என்னும் சாரியையொடு வந்தது. 'வடுவினுடைய நீண்ட வகிர்கள்போலும் கண்களையுடையவளாகிய வெள்ளிய முத்துப்போலும் ஒளியையுடைய முறுவலை உடையாள் பொருட்டு (எமர்) தொடுத்த பரிசங்களை' என்க. தொடுத்தல் - அடுக்கிக் கூறுதல். 'படுத்த கழல்' என இயையும். "கழல்" என்றது, தூக்கிய திருவடியை என்பது "தன்" என்றதனால் அறியப்படும். "ஆட எடுத்திட்ட பாதமன்றோ நம்மை ஆட்கொண்டதே" என அப்பர் அருளிச் செய்தலும் (4.81.10), "முத்தி - நான்ற மலர்ப்பதத்தே நாடு" எனச் சாத்திரம் கூறுதலும் (உண்மை விளக்கம் - 35) காண்க. அடுத்தன - ஏற்புடையன; சிற்றம்பலம் பணியார்க்கு ஏற்புடையவாவன, இளிவரவு முதலிய துன்பங்கள் அவை ஈண்டுத் தலைவி கருவுறுதல் முதலாயினவற்றால் வருவனவாம். "வரின்" என்னும் எச்சம், "பொல்லாது" என்பதனோடு முடிதலின், அவ்விடத்து, 'ஆம்' என்னும் ஆக்கம் வருவித்து, 'அஃது இருதிறத்தார்க்கும் பழியாய் முடியும்' என்றுரைக்க. 'இரவில் வந்து செய்யும் நின் ஆரருள் பொல்லாதாம்' என மாற்றியுரைக்க. 'பொல்லாங்கு தருவதாகும்' என்பது, 'பொல்லாதாம்' எனப்பட்டது. இதன்பின், 'ஆகலான்' என்னும் சொல்லெச்சம் வருவிக்க.

சிவபெருமான் தனது தூக்கிய திருவடியால் உயிர்கட்கு அருளல் தொழில் செய்தல் கூறப்பட்டது.

268. வரைபொருட் பிரிவை உரை எனக் கூறலாவது, வருமது கூறி வரைவுடம்படுத்தப்பட்ட தலைமகன், தோழியை நோக்கி, 'யான் நுமர் கூறும் நிதியைத் தேடிக்கொண்டு

4. நீயே கூறென்றல்

கேழே வரையும்இல் லோன்புலி யூர்ப்பயில் கிள்ளையன்ன
யாழேர் மொழியாள் இரவரி னும்பகற் சேறியென்று
வாழேன் எனஇருக் கும்வரிக் கண்ணியை நீவருட்டித்
தாழேன் எனஇடைக் கட்சொல்லி யேகு ; தனிவள்ளலே. 269

வருவேன் ; இதனை நின் தோழிக்கு நீ கூறி, அவளை ஆற்றுவிப் பாயாக' எனக் கூறுதல். இதற்குக் கொளு :-

ஆங்க வள்வயின் நீங்க லுற்றவன்
இன்னுயிர்த் தோழிக்கு முன்னி மொழிந்தது.

கிடை - கிடத்தல்; இஃது ஆகுபெயராய், அதற்கு இடமாகிய சுரத்தை யுணர்த்திற்று. 'நிதியுங் கொணர்ந்து' என, உம்மையை மாற்றி யுரைக்க. "மின்" என்றது, அதன் தன்மையை ; அன்றி, "தங்கு", உவம உருபு எனலுமாம். உம்மைகள் எச்சப் பொருள. "மேவுவன்" என்றதன்பின், 'இதனை' என்பது வருவிக்க. மன் - தலைவன். இடைமருது முதலிய மூன்றும் சிவதலங்கள் என்பது வெளிப்படை. இடை கொண்டு - செவ்வி பெற்று.

சிவபெருமான் தலங்கள் பலவற்றில் எழுந்தருளியிருந்து அருள் செய்தலும், அத் தலங்கள் கிடைத்தற்கரிய வாதலும் கூறப்பட்டன.

269. நீயே கூறு என்றலாவது, தலைவன் தன் பிரிவைத் தலைவிக்கு உரைத்து அவளை ஆற்றுவிக்குமாறு கூறக் கேட்ட தோழி, 'யான் அது மாட்டுகின்றிலேன் ; நீயே அதனை அவள் பால் அமையம் பெற்றுக் கூறிப் போ' எனக் கூறுதல். இதற்குக் கொளு :-

காய்கதிர் வேலோய் களங்குழை யவட்கு
நீயேயுரை நின்செல வென்றது.

கேழ் - ஒப்பு. ஏவர் - எவர். 'தனக்கு ஒப்பாக எவரையும் இல்லாதவன், "கிள்ளை, யாழ்" என்றவை, ஆகுபெயர்கள்.

5. சொல்லா தேகல்

வருட்டின் திகைக்கும்; வசிக்கின் துளங்கும்; மனமகிழ்ந்து
தெருட்டின் தெளியலள்; செப்பும் வகையில்லை; சீர்அருக்கன்
குருட்டிற் புகச்செற்ற கோன்புலி யூர்குறு கார்மனம்போன்
றிருட்டிற் புரிகுழ லாட்கெங்ங னேசொல்லி ஏகுவனே. 270

ஏர், உவம உருபு. மழலைத் தன்மை பற்றிக் கிளியினது மொழி யும், இனிமை பற்றி யாழினது இசையும் தலைவியது மொழிக்கு உவமையாயின; இது, பலபொருள் உவமை. சேறி என்று - பிரிகின்றாய் என்று கருதி. என - என்று சொல்லி. இருக்கும் - ஆற்றுமையோடிருப்பாள். 'அவ்வரிக்கண்ணியை' எனச் சுட்டு வருவித்து, 'அத்தன்மையளாய நின் காதலியை' என உரைக்க. "இருக்கும்" என்னும் முற்றினை எச்சமாகக் கொண்டு அதற் கியையவும் உரைப்பர் பேராசிரியர். 'தேறல்' என்பது. 'தேற்றல், என வருதல்போல, 'வருடி' என்பது, ஒற்றுப் பெற்று' "வருட்டி" என வந்தது. 'அவளது நுதலும், தோளும் முதலியவற்றைத் தடவித் தலையளிசெய்து' என்பது இதன் பொருள். இடைக்கண் - அவ்விடத்து அமையம் பார்த்து. 'நின் அன்புடைமையை அவள் தேறி நிற்கும் செவ்விபெறுது சொல்லின் இறந்துபடுவாளாதலின், அது பெற்றுச்சொல்' எனவும், 'அவ்விடத்தும் 'செல்வல்' என்னுது 'நீட்டியேன்' என்னு மாற்றுல் உணர்த்துக' எனவும் கூறுவாள், "நீ வருட்டி இடைக்கண் தாழேன் எனச் சொல்லி ஏகு" என்றுள். தோழி இங்ஙனம 'நீயே கூறு' என்றலும், 'கூறுமிடத்து இவ்வாற்றுற் கூறு' எனவும் கூறுவனவெல்லாம், 'தலைவன் தான் பிரிந்த விடத்துத் தலைவியது ஆற்றுமை இத்தன்மையதாம் என்பது உணர்ந்து நீட்டியாது மீளுதற்பொருட்டென்க. தனிமை - ஒப்பின்மை.

சிவபெருமானது தன்னிகரில்லாத தன்மைகூறப்பட்டது.

270. சொல்லாது ஏகலாவது. 'நீயேகூறு' எனத்தோழி கூறியதன் கருத்தைத் தலைவன் உணர்தலின், 'யான் எவ் வாற்றுற் கூறினும் அவள் உடம்படாள்; அதனுல், வரைவும் ஒருகாலும் நிகழாத; யான் விரைந்து வருவேன்; நீ அவளை

6. பிரிந்தமை கூறல்

நல்லாய் நமக்குற்ற தென்னென் றுரைக்கேன் நமர்தொடுத்த
எல்லா நிதியு முடன்விடுப் பான்இமை யோர்இறைஞ்சும்
மல்லார் கழல்அழல் வண்ணர்வண் தில்லை தொழார்களல்லாற்
செல்லா அழற்கடம் இன்றுசென் றார்நம் சிறந்தவரே. 271

ஆற்றுவி' எனக் கூறித் தலைவிக்குத் தன் பிரிவைத் தான் சொல்லாதே செல்லுதல். இதற்குக் கொளு :-

நிரைவளை வாட — உரையா தகன்றது.

'வருட்டல்' என்பதற்குப் பொருள் மேல் உரைக்கப் பட்டது. திகைக்கும் - கலங்குவாள். வசிக்கின் - இன்சொல்லால் வயப்படுத்தின். துளங்கும் - நடுங்குவாள். 'மனம் துளங்கும்' எனவும், 'மகிழ்ந்து தெளியலள்' எனவும் கூட்டுக. "பெரி தாற்றிப் பெட்பக் கலத்தல் அரிதாற்றி — அன்பின்மை சூழ்வ துடைத்து" என்றது காண்க. (குறள் - 1276). தெருட்டின் - குளுற்றுத் தெளிவிப்பின். செப்பும் வகையில்லை - இவ்வாற்றால், யான் அவளை உடம்படுவிக்கும் வகையாதும் இல்லை. சீர் - பெருமை. அருக்கன் - 'பகன்' என்னும் சூரியன். குருட்டில் புக - குருடாந் தன்மையில் விழுமாறு. செற்ற - ஒறுத்த. இருட்டிற் புரி குழல் - இருளால் ஆக்கப்பட்டதுபோலும் கூந்தல். புலியூர் குறுகாதார் மனத்தைத் தெருட்டுமாறு இல்லாமைபோல, இவளையும் தெருட்டுமாறு இல்லை என்பான், அவளது கூந்தலை அவர் மனத்தோடு உவமித்தான். இறுதியில், 'ஆகலான், யான் விரைந்து வருவல்; நீ அவளை ஆற்றுவி' என்னும் குறிப்பெச்சம் வருவித்து முடிக்க.

சிவபெருமானது தலத்தை யடைந்து வணங்காதவர்க்கு மெய்யுணர்வு தோன்றாமை கூறப்பட்டது.

271. பிரிந்தமை கூறலாவது, தலைவன் தலைவிமுன் நின்று பிரிவுணர்த்தமாட்டாமையின் சொல்லாது செல்ல, தோழி தலைவிமுன் சென்று தலைவன் பிரிந்தமையைத் திறம்படக் கூறுதல். இதற்குக் கொளு ;-

7. நெஞ்சோடு கூறல்

அருந்தும் விடம்அணி யாம்மணி கண்டன்மற்
[றண்டர்க்கெல்லாம்
மருந்தும்அமிர்தமு மாகுமுன் னோன்தில்லை வாழ்த்தும்வள்ளல்
திருந்துங் கடன்நெறி செல்லுமிவ் வாறு சிதைக்கும்என்றால்,
வருந்தும் மடநெஞ்ச மே,என்னை யாம்இனி வாழ்வகையே. 272

தேங்கமழ் குழலிக்குப் — பாங்கி பகர்ந்தது.

'நமக்கு உண்டாயது எத்துணை இன்பம் என்று சொல்லு வேன்' என்றற்கும் 'எத்துணைத் துன்பம் என்று சொல்லுவேன்' என்றற்கும் பொதுவாக, 'நமக்கு உற்றது என்னென்றுரைக் கேன்' என முன்னர்க்கூறி, பின்னர், 'நம் சிறந்தவர், நமர் தொடுத்த எல்லா நிதியும் உடன்விடுப்பான்' என இன்ப மாவதே கூறி, "இன்று அழற்கடம் சென்றார்" என்பதனை 'இறுதிக்கண் கூறினாள், அவள் ஆற்றும் திறம் கருதி. இவ் வாற்றால், 'நிதிவிடுப்பான் சென்றமையின் இன்பமும், அழற் கடம் சென்றமையால் துன்பமும் ஆயின; எனினும் எவ்வாற்றா னும் இது நமக்கு, இன்பமே' என ஆற்றுவித்தாள் என்க.

மல்லார் - வளம் நிறைந்த. அழல் கடம் - வெப்பத்தை யுடைய சுரம். 'நமக்குச் சிறந்தவர்' என நான்காவது விரிக்க. சிறந்தவர் - உயிர்போலச் சிறந்தவர்.

சிவபெருமானது தலத்தை வணங்காதவர், தீய இடத் தைச் சேர்தல் கூறப்பட்டது.

272 நெஞ்சொடு கூறலாவது தலைவன் வரைபொருட் பிரிந்தமையைத் தோழி கூறக்கேட்ட தலைவி, பிரிவாற்றாது வருந்துகின்ற தனது நெஞ்சினை நோக்கி, 'தலைவர், பழியைத் தரும் களவொழுக்கம் ஒழிந்து தமக்கு முறைமையாய வரைவின் பொருட்டுப் பிரிந்தபிரிவை நீ நம்மைக் கெடுப்ப தாகக் கருதின் நினக்கு யான் என்சொல்லுவேன்' எனக் கூறுதல். இதற்குக் கொளு :-

கல்வரை நாடன் சொல்லா தகல
மின்னேரி மருங்குல் தன்னெஞ்சி னவர்ந்தது.

8. நெஞ்சோடு வருந்தல்

ஏர்ப்பின்னை தோள்முன் மணந்தவன் ஏத்த எழில்திகழுஞ்
சீர்ப்பொன்னை வென்ற செறிகழ லோன்தில்லைச்
[சூழ்பொழில்வாய்க்
கார்ப்புன்னை பொன்அவிழ் முத்த மணலிற் கலந்தகன்றார்
தேர்ப்பின்னைச் சென்றஎன் நெஞ்சென் கொலாம்இன்று
[செய்கின்றதே. 273

"அருந்தும்" என்றது காலமயக்கம். அணியாம் - அழகாய்த் தோன்றுகின்ற. 'மணி கண்டம்' என்னும் உவமத் தொகை, வடநூல் முடிபு. மற்று, வினைமாற்று. மருந்து - இறப்பை நீக்கும் மருந்து. அமுதம் - இன்பப்பொருள். முன்னோன் - முன்னே உள்ளவன். "வள்ளல்" என்றது, தலைவனை. திருந்தும் - குற்றத்தினின்றும் நீங்குகின்ற. கடன்நெறி - முறையாகியவழி. 'நெறியைச்செல்லும்' என இரண்டாவது விரிக்கப் படும். செல்லும் இவ்வாறு - செல்வதாகிய இச்செயல். சிதைக்கும் என்றால் - நம்மை அழிக்கும் என்று நீ கருதுவையாயின். 'யாம் இனி வாழ்வகை என்னை' என மாற்றிக் கொள்க. 'என்ன' என்றே பாடம் ஓதினர் பேராசிரியரும்.

சிவபெருமானது நித்தத் தன்மை முதலிய பெருமைகள் கூறப்பட்டன.

273, நெஞ்சொடு வருந்தலாவது, பிரிவாற்றாது வருந்தும் நெஞ்சினை ஆற்றுவித்துக் கூறிய தலைமகள், பின்னும் அஃது ஆற்றாமையால், அதனொடு நொந்து கூறுதல். இதற்குக் கொளு:-

வெற்பன் நீங்கப் — பொற்பு வாடியது

ஏர் - அழகு. பின்னை - 'நப்பின்னை' என்பவள். அவள் தோளை மணந்தவன், மாயோன். சீர்ப் பொன் - அழகிய பொன்; செம்பொன். "செறி கழல்" என்றது 'திருவடி' என்னும் பொருட்டாய் நின்றது. 'தில்லைக்கண் சூழ்ந்த பொழி லிடத்து' என்க. பொன்அவிழ் - பொன்போல மலர்கின்ற, அவிழ்தலாகிய சினைவினை, முதல்மேல் நின்றது. முத்த மணல் - முத்துப்போலும் மணலை யுடைய இடம். 'அன்று அவர் தேர்ப்

௯. வருத்தங்கண் டுரைத்தல்

கானமர் குன்றர் செவியுற வாங்கு கணைதுணையா
மானமர் நோக்கியர் நோக்கென மான்நல் தொடைமடக்கும்
வானமர் வெற்பர்வண் தில்லையின் மன்னை வணங்கலர்போல்
தேனமர் சொல்லிசெல் லார்செல்லல் செல்லல் திருநுதலே. 274

பின் சென்ற என் நெஞ்சு, இன்று என்னிடத்தே நின்று செய்கின்றது என்' என்றவாறு. 'பிரியார் எனக் கருதி அன்று அவர்பின் சென்ற நெஞ்சம், இன்று அவர் பிரிந்தமையறிந்து என்னிடத்தே நின்று வருந்தாநின்றது' என்பதாம். கொல். ஆம் - அசைநிலைகள். 'உண்மை யுணராது ஓடிய நெஞ்சிற்கு இது தக்கதே' என்பது கருத்து. இதனை, "உழந்துழந் துண்ணீர் அறுக விழைந்திழைந்து - வேண்டி அவர்க்கண்ட கண்" என்றதனோடு வைத்துக் காண்க (குறள் - 1177.).

274. வருத்தம்கண் டுரைத்தலாவது, தலைவி தலைவனது பிரிவாற்றாது நெஞ்சொடு வருந்துதலைக் கண்டு தோழி, 'நம் தலைவர் வாய்மையும், அருளும் உடையராகலின், தாழாது விரைந்து வருவர்; நீ வருந்தற்க' எனக் கூறுதல். இதற்குக் கொளு;-

அழலுறு கோதையின் விழுமுறு பேதையை
நீங்கலரேவப் பாங்கி பகர்ந்தது.

'கணையை மடக்கும்' என இயையும். துணையாம் மானமர் நோக்கியர் - மனைவியர். நோக்கோடு ஒக்கும் அது, 'நோக்கு' எனப்பட்டது. என - என்று அருள்பண்ணி. மான் நல் தொடை மடக்கும் - மானைக் குறித்த நல்ல தொடையினின்றும் வாங்குகின்ற; இது, வெற்பினைச் சிறப்பித்தது. வான் - மேகம். 'வணங்கலர்போற் செல்லார்' என இயையும்; 'வணங்கார் போற் செல்லல்' என இயைப்பர் பேராசிரியர். 'வாய்மையையும் அருளும் இன்றி நீட்டியார்; விரைந்து வருவர்' என்றவாறு, செல்லல் செல்லல் - துன்பம் அடையாதே. இதன் முதலிரண் டடிகளை,

10. வழியொழுகி வற்புறுத்தல்

மதுமலர்ச் சோலையும் வாய்மையும் அன்பும் மருவிவெங்கான்
கதுமெனப் போக்கும் நிதியின் அருக்குமுன் னிக்கலுழ்ந்தால்,
நொதுமலர் நோக்கம்ஓர் மூன்றுடை யோன்தில்லை
　　　　　　　　　　　　　　　　[நோக்கலர்போல்
இதுமலர்ப் பாவைக்கென் னோவந்த வாறென்பர் ஏந்திழையே.

" எய்யக் குறித்தோன் குறத்திநோக் கேற்றதென
கையிற் கணைகளைந்து, கன்னிமான் - பையப்போ
என்றென்று பாவனை செய் ஈங்கோயே தூங்கெயில்கள்
சென்றன்று வென்றான் சிலம்பு."

என்பதனோடு வைத்துக் காண்க (திருமுறை 11, ஈங்கோய் எழுபது 12.).

'அருளில்லாத கானவரும் அருளுடையராய்நிற்கும் வெற்பினை யுடையவராகலின் நம்மை வருந்தவிடார்; விரைந்து வரைவொடு வருவார் என இறைச்சிப்பொருள் குறித்தவாறு.

சிவபெருமானை வணங்காதவர் வாய்மையும், அருளும் உடையராகாமை கூறப்பட்டது.

275 வழியொழுகி வற்புறுத்தலாவது, தலைமகளது வருத்தங்கண்டு, 'தலைவர் விரைந்துவருவர்' எனக் கூறியதோழி, பின்னும் அவள் ஆற்றாமைகண்டு, அவள் வழியொழுகி, 'நீ ஆற்றாது வேறுபட்டாயாயின், அயலவர், 'இவட்கு வந்தது என்' என்று ஐயுறுவராதலின், நீ ஆற்றல் வேண்டும்' என வற்புறுத்தல். அவள் வழி யொழுகலாவது அவள் ஆற்றாமைக்காய காரணத்தை அவளோடு சேர்ந்து கூறுதல். இதற்குச்செய்யுள் :-

சூழிருங் கூந்தலைத் — தோழி தெருட்டியது.

'சோலையும், வாய்மையும், அன்பும், போக்கும், அருக்கும் முன்னிக் கலுழ்ந்தால்' என்க. சோலை, தலைவனைத் தலைநாள் கண்ட இடம். வாய்மை, அவன் 'பிரியேன்' எனச் செய்த

11. வன்புறை யெதிரழிந் திரங்கல்

வந்தாய் பவரை இல் லாமயில் முட்டை இளையமந்தி
பந்தா டிரும்பொழிற் பல்வரை நாடன்பண் போஇனிதே!
கொந்தார் நறுங்கொன்றைக் கூத்தன்தென் தில்லை
[தொழார்குழுப்போல்
சிந்தா குலமுற்றுப் பற்றின்றி நையுந் திருவினர்க்கே 276

ருள். அன்பு, ஒருகாலைக் கொருகால் மிக்க அன்பு. "கது மென" என்றது விரைவுக் குறிப்பு. அது, "போக்கு" என் னும் தொழிற் பெயரொடு முடிந்தது. படிமுறையான் வளர்ந்த அன்பு அவ்வாற்ருல் நீங்காது கடிதின் நீங்கியது என்றற்கு, "கதுமெனப் போக்கு" என்ருள். அருக்கு - அருமை; இது நீட்டித்தலால் அறியப்பட்டது. 'நொதுமலர் என்பர்' என இயையும். தொகுக்கப்பட்ட 'நோக்கலர்க்குப்போல்' என்னும் நான்காவதை விரித்து, 'வந்தவாறு' என்பதனோடு முடிக்க. இது - இவ்வேறுபாடு. மலர்ப் பாவை - திருமகள். 'அவள் போல்வாட்கு' என்க. 'ஆதலால், நீ ஆற்றல் வேண்டும்' என்பது குறிப்பெச்சம்.

சிவபெருமானது தலத்தை நோக்காதவர் கவலையும், மெலி வும் எய்துதல் கூறப்பட்டது.

276, வன்புறை எதிரழிந்து இரங்கலாவது, தோழி வழி யொழுகி வற்புறுத்தின வன்புறைக்கு எதிர், தலைவி அதனை மறுத்து இரங்குதல். இதற்குக் கொளு :-

வன்கறை வேலோன் வரைவு நீட
வன்புறை யழிந்தவள் மனம்அழுங் கியது.

வந்து - தம்பால் வந்து. ஆய்பவர் - கருத்தோடு நோக்கு பவர். "இனிதே" என்றதனை இறுதிக்கண் கூட்டுக. 'தொழார்' என்ருெழியாது; "குழு" என்றது இகழ்ச்சிபற்றி. பற்று - பற்றுக்கோடு. "பற்றின்றி" என்றதனை, "சிந்தாகுலம் உற்று" என்றதற்கு முன்னர்க் கூட்டுக. திருவினர் - நல்வினை யுடையவர். 'தலைவர் பிரிந்தகாலத்து இறந்துபடாது நையும்

அளவாய் இருக்கும் நல்வினையுடையார்க்காயின், வரைநாடன் பண்பு பின்னர் இன்பம் பயந்து இனிதாம்; அவ்வாறன்றி இறந்துபடும் எமக்கு அஃது இனிதாமாறு யாங்ஙனம்' எனத் தலைவி வன்புறை எதிரழிந்து இரங்கினாள் என்க. இறந்து படாது வையுமளவினராதல் அன்பின்மையானாகலின், அத் தன்மையரை, "திருவினர்" என்றது புகழ்வதுபோலப் பழித்த உள்ளுறை நகை.

காப்பவர் இல்லாத மயில் முட்டை, தலைவனது அன்பை இழந்த தானாகவும், ஈனல் வருத்தம் அறியாத இளமந்தி, காம நோயை உற்றறியாத தோழியாகவும் அம்மந்தி, முட்டையை ஈன்ற மயிலின் வருத்தத்தையும், முட்டையினது மென்மையையும் நோக்காது பந்தடித்து விளையாடுதல், தோழி தனது வருத்தத் தையும், காமத்தினது மென்மையையும் நோக்காது தான் வேண்டியவாறெல்லாம் சொல்லித் தன்னை வற்புறுத்தலாகவும் வைத்துத் தலைவி உள்ளுறை உவமம் கூறினாள் என்க. இனி, காப்பவர் தோழியாகவும், இளமந்தி தலைவனாகவும், அது பந்தாடுதல் தலைவன் தான் வேண்டியவாறே ஒழுகுதலாகவும் வைத்தும் உள்ளுறை உவமம் கொள்ப. இதனை,

"கான மஞ்ஞை அறையீன் முட்டை
வெயிலாடு முசுவின் குருளை உருட்டும்
குன்ற நாடன் கேண்மை, என்றும்
நன்றுமன் வாழி தோழி, உண்கண்
நீரொ டொராங்குத் தணப்ப
உள்ளா தாற்றல் வல்லு வோர்க்கே"

என்னும் குறுந்தொகைப் பாட்டோடு (38) வைத்துக் காண்க. இக் குறுந்தொகைப் பாட்டில், 'அறையில் முட்டை' என்றும், 'உள்ளா தகறல்' என்றும், 'உள்ளாராதல்' என்றும் பாடங் கள் ஓதப்படுகின்றன. "நன்று" என்றதற்கு, "நன்று பெரி தாகும்" என்பது பற்றி (தொல், சொல், 343,) 'பெரிது' என்று உரைப்பாரும் உளர். எனினும், 'நன்றென்பது, அப் பொருட்கண் வினையெச்சமாயே வரும்' என்பர் சேனாவரையர்.

சிவபெருமானது தலத்தை வணங்காதவர் யாதொரு பற்றுக் கோடும் இன்றி ஆகுலம் உற்று வருந்துவர் என்பது கூறப் பட்டது.

12. வாய்மை கூறி வருத்தந் தணித்தல்

மொய்யென் பதேஇழை கொண்டவன் என்னைத்தன்
[மொய்கழற்காட்
செய்யென் பதேசெய் தவன்தில்லைச் சூழ்கடற் சேர்ப்பர்சொல்லும்
பொய்யென்ப தேகருத் தாயின் புரிகுழற் பொற்றொடியாய்
மெய்யென்ப தேதுமற் றில்லைகொ லாம்இவ் வியலிடத்தே. 277

---

277. வாய்மை கூறி வருத்தம் தணித்தலாவது வன்புறை எதிரழிந்து இரங்குந் தலைவிக்குத் தோழி, 'நம் தலைவர் சொல்லும் பொய் என்பதே நின் கருத்தாய்விடின், பின்னர் வாய்மை என்பதே இவ்வுலகத்து இல்லையாய்விடும்' எனத் தலைவனது வாய்மையைச் சிறப்பித்துக் கூறி, அவளது வருத்தத்தைத் தணித்தல். இதற்குக் கொளு :-

வேற்றடங் கண்ணியை — ஆற்றுவித்தது.

மொய் - வலிமை. "என்பது" நான்கனுள் முதலது, 'என்பு' என்னும் பெயர், 'அது' என்னும் பகுதிப் பொருள் விகுதி பெற்று நின்றது. 'அரிமுதலாயினர் என்பாகலின் மொய்யென்பென்றார்' என்பது பேராசிரியர் உரை. இழை - அணிகலம், ஆள் செய் என்பதே செய்தவன் - 'பணிசெய் எனப் பணிக்கும் ஒரு திருவருளையே செய்தவன்; அஃதாவது, 'புரந்தரன், மால், அயன் முதலியோராகிப் போகம் நுகரப் பணித்தல் முதலிய பிற பிற திருவருளைச் செய்யாது, இஃது ஒன்றையே செய்தவன்' என்றதாம். 'இழிந்தனகைக்கொள்வா னாதலின், என்பை அணியாகவும், என்னை அடிமையாகவும் கொண்டான் என்பது கருத்து' என்பர் பேராசிரியர். 'சேர்ப்பர்' எனத் தலைவன் செய்தற் றிணைப்பெயரால் கூறப்பட்டான். மெய் என்பது - மெய்ம்மை என்று சிறப்பித்துச் சொல்லப்படும் அது. ஏதும் - சிறிதும். கொல், ஆம், அசைநிலைகள்.

சிவபெருமான் தன் சீரடியார்கட்குத் தனது திருவடியொன்றையே தருதல் கூறப்பட்டது.

13. தேருது புலம்பல்

மன்செய்த முன்னுள் மொழிவழியே அன்ன வாய்மைகண்டும்
என்செய்த நெஞ்சும் நிறையும்நில் லா;என தின்னுயிரும்
பொன்செய்த மேனியன் தில்லை உறரின் பொறையரிதாம்;
முன்செய்த தீங்குகொல்! காலத்து நீர்மைகொல்! மொய்குழலே.

---

278. தேருது புலம்பலாவது, தலைமகனது வாய்மை கூறி வருத்தம் தணிப்பவும் தலைவி தணியாது நின்று, 'தலைவரது வாய்மையை நீ கூறியவாறே யானும் தேறி நிற்கவும், என் நெஞ்சும், நிறையும் நிற்கின்றில; இதற்குக் காரணம் யாதோ' எனக் கூறிப் புலம்புதல். இதற்குக் கொளு :-

தீதறுகன்னி தேற்றத் தேருது
போதுறு குழலி புலம்பியது.

'அன்ன வாய்மையை, மன் முன்னுள் செய்த மொழி வழியே கண்டும்' எனக் கூட்டுக. அன்ன - நீ கூறிய அப் பெற்றித்தாய. பெற்றி, ஊழி பெயரினும் தான் பெயராமை. மன் - தலைவன். செய்த - தெளிவித்த. மொழி வழியே காண்டலாவது, பிறிதொன்று நினையாது, சொல்லப்பட்டவாறே தெளிந்து நிற்றல். "என் செய்த" என்றதனை, "நில்லா" என்றதன் பின்னர்க் கூட்டி, 'இவை என் செய்தன' என உரைக்க. "எனது" என்றதனை, "நெஞ்சும், நிறையும்" என்றவற்றிற்கும் கொள்க. நெஞ்சு நில்லாமையாவது, ஐயுறு தல். நிறைநில்லாமையாவது, தனது நோய் புறத்தார்க்குப் புலனும்படி மெலிந்துநிற்றல். "பொன் செய்த" என்றதில், "செய்த" என்றது, உவம உருபு. "பொன் செய்த மேனி யினீர்" எனவும், "மின்செய்த நுண்ணிடையாள்" என வருவனவும் காண்க (திருமுறை. 7. 25, 1.). பொறை அரிதாம் - (உயிர் தான் எய்துகின்ற துன்ப மிகுதியால் இவ்வுடம்பால்) பொறுத்தற்கரிய பொருளாகின்றது. இதனுல், 'இனி இவ் வுடம்பு உயிரை வீழ்த்தே விடும்' என்றுள். "காமமும் நாணும் உயிர்காவாத் தூங்கும் என் - நோனு உடம்பி னகத்து" (குறள் - 1163) என்பது காண்க. 'இதற்குக் காரணம்

14. காலம் மறைத்துரைத்தல்

கருந்தினை யோம்பக் கடவுட் பராவி நமர்கலிப்பச்
சொரிந்தன கொண்மூச் சுரந்ததன் பேரரு ளால்தொழும்பிற்
பரிந்தெனை யாண்டசிற் றம்பலத் தான்பரங் குன்றில்துன்றி
விரிந்தன காந்தள் வெருவரல் காரென வெள்வளையே. 279

யான் முற்பிறப்பிற் செய்த தீவினையோ! அன்றிக் காலத்தின் தன்மையோ' என்க. 'எனது இறந்துபாட்டிற்குக் காரணம், அவர் வந்து வரையப்படுதற்குரிய நல்வினை எனக்கு இல்லாமையோ! அல்லது நீட்டித்தவழிக் காலம் செய்யும் தன் இயல்பாற் செய்யும் செயலோ' என்றாள் என்க.

சிவபெருமானது தலத்தை அணுகாதவர்க்கு உயிர் பெரும் பொறையாமாறு, கழிபெருந்துன்பங்கள் உளவாதல்.

279. காலம் மறைத்துரைத்தலாவது. தேருமை கூறிப் புலம்பிய தலைவி காந்தள் மலரக் கண்டு, 'கார் காலமும் ஆயிற்று: இன்னும் அவர் வந்திலர்' எனக் கலங்காநிற்ப, தோழி, 'இது நம் ஐயன்மார் தினை விளைதற் பொருட்டுத் தெய்வம் பராவ, அத் தெய்வத்தின் ஆணையால் பெய்த மழை; அதனை யறியாது காந்தள், 'கார் காலம் வந்தது' என்று மலராநின்றது: ஆதலின் இஃது அவர் குறித்த காலம் அன்று' என அக் காலத்தை மறைத்துக் கூறுதல். தலைவியின் இறந்துபாடகற்றுதற்குக் கூறலின், இப்பொய்ம்மையும் வாய்மையின் பாலதாம் என்க. இதற்குக் கொளு :-

காந்தள் கருவுறக் கடவுள் மழைக்கேன்
றேந்திழைப் பாங்கி இனிதியம் பியது.

கருந்தினை - பசிய தினைப் பயிர். கலிப்ப - ஆரவாரிக்க. கொண்மூ - மேகம். "பரிந்து ஆண்ட" என்றதற்கு, 'அடிமைக்குத் தகாத என்னை நடுவுநிலைமையின்றிப் பரிந்தாண்ட' எனப் பேராசிரியரும், 'தான் ஆளும் வாய்மை மறுத்து என்னை அடிமை கொண்ட' எனப் பழைய உரையாசிரியரும் உரைப்பர். "நானூர்என் உள்ளமார் ஞானங்க ளார்என்னை யாரறிவார் -

15. தூதுவர வுரைத்தல்

வென்றவர் முப்புரம் சிற்றம் பலத்துள்நின் ருடும்வெள்ளிக்
குன்றவர் குன்ரு அருள்தரக் கூடினர் நம்மகன்று
சென்றவர் தூதுகொல் லோஇருந் தேமையும் செல்லல்செப்பா
நின்றவர் தூதுகொல் லோவந்து தோன்றும் நிரைவளேயே. 280

வானேர் பிரான் என்னை ஆண்டிலனேல் மதிமயங்கி'' (திருக் கோத்தும்பி - 2) என்றும், ''தாதாய் மூவே ழுலகுக்குந் தாயே நாயேன் றனையாண்ட - பேதாய்'' (புணர்ச்சிப் பத்து - 9) என்றும் திருவாசகத்துட் கூறியன இங்கு நினைக்கத்தக்கன. பரங்குன்று, ஒரு சிவதலம். முருகன் படைவீடுகளில் ஒன்ருய் விளங்குவதும் இதுவே. கார் என வெருவரல் - இதனைக் கார் காலம் எனக் கருதி அஞ்சலை. கார்காலத் தொடக்கமாகிய ஆவணியும் வரைதற்காங காலமாதலின், 'அஞ்ஞான்று வருவல்' எனக் கூறிச் செல்லுதலும் தலைவர்க்கு இயல்பென்க.

சிவபெருமானது பேரருளின் திறம் கூறப்பட்டது.

280. தூதுவர வுரைத்தலாவது, தலைவிக்குக் காலம் மறைத்துரைத்த தோழி, அவ்விடத்து ஒரு தூது வரக்கண்டு, 'இது நம் அன்பர் தூதோ, வேருெரு தூதோ' எனக்கூறுதல். இதனுலும் தலைவி மகிழ்ச்சியுற்றுச் சிறிது ஆற்றுவாள் என்க. இதற்குக் கொளு :-

ஆங்கொரு தூதுவரப் — பாங்கிகண் டுரைத்தது.

''கூடினர்'' என்றது முற்றெச்சம்; பெயர் என்றலுமாம். இருந்தேமையும் - இறந்துபடாது இருந்த நம்மிடத்தும்; இது வேற்றுமை மயக்கம், உம்மை இழிவுசிறப்பு; இது. 'தேய்கின்ற உயிரோடிருக்கும் நம்மிடத்து முற்றும் நீங்குமாறு செய்யா நின்றவர்' என்னும் குறிப்புத்தோன்ற நின்றது. செல்லல் - துன்பம்; அஃதாவது பிறர்க்கு மணம்பேசுதல். ''வந்து தோன்றும்'' என்றதற்கு, 'தூதொன்று வந்து தோன்ரு நின்றது' என உரைக்க.

முப்புரம் வென்றமையால் வெற்றியையும், அதுவழியாக உலகவின்பத்தையும், சிற்றம்பலத்துள் நின்று ஆடுதலால்

16. தூதுகண் டழுங்கல்

வருவன செல்வன தூதுகள் ஏதில; வான்புலியூர்
ஒருவன தன்பரின் இன்பக் கலவிகள் உள்ளுருகத்
தருவன செய்தென தாவிகொண் டேகினன் நெஞ்சில்தம்மை
இருவின காதலர் ஏதுசெய் வான்இன் றிருக்கின்றதே. 281

ஞானத்தையும், வெள்ளிக் குன்றால் முத்தியையும் குறித்து, சிவபெருமான் இவற்றையெல்லாம் தருதல் கூறப்பட்டது.

281. தூதுகண்டழுங்கலாவது, தோழிதூதுவர வுரைப்பக் கேட்ட தலைமகள், அஃது அயலார் தூதாதல் அறிந்து, 'தூதுகள் பல வருவன செல்வனவாக, நம் காதலர் தூது வாராதது என்னோ' என இரங்கிக் கூறுதல். இதற்குக் கொளு :-

அயலுற்ற தூதுவரக் — கயலுற்ற கன்னி மயலுற்றது.

'ஏதில தூதுகள் வருவன; செல்வன' என்க. "ஒருவனது" என்ற ஆறுவது, "அன்பு" என்றதனோடு முடிந்தது. 'அன்பரின் உள்ளுருகத் தருவன இன்பக் கலவிகள் செய்து' எனக் கூட்டுக. தருவன - தரப்படுவன. இருவின - இருத்தின. 'காதலர் இருக்கின்றது என்செய்வான்' எனக் கூட்டி, 'தூது விடுதற்கு இல்லையோ' எனக் கருத்துரைக்க. "தூதுகள்" என்பது அடிகளிடத்து வந்து செல்லும் அடியவர் முதலியோரைக் குறிக்க, "ஒருவனது" என்றது 'தனது' என்னும் பொருட்டாய் நிற்க, இப்பாட்டு முழுவதும் அடிகள் தம் நிகழ்ச்சியும் தோன்றுமாறு செய்தமை நுண்ணுணர்வால் நோக்கியறிக.

சிவபெருமான் தன் அன்பரது உள்ளமும், உயிரும் உருகக் கலந்து நின்று பேரின்பந் தருதல் கூறப்பட்டது.

17. மெலிவு கண்டு செவிலி கூறல்

வேயின மென்தோள் மெலிந்தொளி வாடி விழிபிறிதாய்ப்
பாயின மேகலை பண்டைய அல்லள்; பவளச்செவ்வி
ஆயின ஈசன் அமரர்க் கமரன்,சிற் றம்பலத்தான்
சேயின தாட்சியிற் பட்டன ளாம்இத் திருந்திழையே. 282

18. கட்டு வைப்பித்தல்

சுணங்குற்ற கொங்கைகள் சூதுற் றில;சொல் தெளிவுற்றில;
குணங்குற்றங் கொள்ளும் பருவமு றாள்;குறு காஅசுரர்
நிணங்குற்ற வேற்சிவன் சிற்றம் பலம்நெஞ் சுறாதவர்போல்
அணங்குற்ற நோய்அறி வுற்றுரை யாடுமின் அன்னையரே. 283

---

282. மெலிவு கண்டு செவிலி கூறல், அயலவர் தூது கண்டு அழுங்காநின்ற தலைமகளைச் செவிலி கண்டு அடிமுதல் முடிகாறும் நோக்கி, 'இவள் வேறுபட்டது என்னோ' எனக் கூறுதல். இதற்குக் கொளு :-

வண்டமர் புரிகுழல் ஒண்டொடி மெலிய
வாடா நின்ற கோடாய் கூறியது.

வேய் இனம் - மூங்கிலோடு ஓர் இனமாகிய. ''மெலிந்து வாடி, பிறிதாய்'' என்ற சினைவினையாகிய எச்சங்கள் ''அல்லள்'' என்னும் முதலின் வினைக்குறிப்போடு முடிந்தன. எனவே, அவ்விடத்து 'ஆயினள்' என்னும் ஆக்கம் வருவிக்கப் படுவதாயிற்று. ''பாயின மேகலை'' என்றது, அடையடுத்த ஆகு பெயர். சிவபிரானது மேனி செம்மேனியாதலின் ''பவளச் செவ்வி யாயின ஈசன்'' என்றாள். செவ்வி - பொலிவு. அமரர்க்கு அமரன் - தேவர்க்குத் தேவன். அவன் சேய், முருகன். 'அவனது ஆட்சி' என்றது, அவன் விளங்கி நிற்கும் தலத்தை. 'அதனுட் பட்டனளாம்' என்றது, 'அவன் நோக்கிற் பட்டு வேறுபட்டாள் போலும்' என்றவாறு.

சிவபெருமான் அமரர்க்கு அமரனாய் நின்றும் சிற்றம்பலத்துக் காண நிற்கும் அருளுடைமை கூறப்பட்டது.

283. கட்டு வைப்பித்தலாவது, தலைவியது மெலிவு கண்டு 'அம் மெலிவு முருகற்குப் பிழைத்தமையான் ஆயிற்றுப்போலும்' என ஐயுற்ற செவிலி, அதனை அறிந்துசொல்லுமாறு கட்டுவித்தி

19. கலக்கமுற்று நிற்றல்

மாட்டியன் றேஎம் வயிற்பெரு நாண்இனி மாக்குடிமா
சூட்டியன் றேநிற்ப தோடிய வாறிவள் உள்ளமெல்லாங்
காட்டியன் றேநின்ற தில்லைத்தொல் லோனைக்கல் லாதவர்போல்
வாட்டியன் றேர்குழ லார்மொழி யாதன வாய்திறந்தே. 284

கட்டுக் கூறிக் கட்டுவைப்பித்தல். கட்டுவித்தி - குறிபார்ப்பவள். கட்டு - தெய்வத்தை வழிபாட்டால் நெல்லில் வளைத்து நிறுத்துதல். இதற்குக் கொளு ;-

மால்கொண்ட கட்டுக் — கால்கொண்டது.

சூது உற்றில - சூதாடு கருவிபோலும் வடிவைப் பெற்றில. தெளிவு உற்றில - திருத்தத்தைப் பெறவில்லை. இவ்விரண்டற்கும், 'இவட்கு' என்பது வருவிக்க. கொள்ளும் பருவம் - அறியும் பருவம். உறுள் - உற்றிலள். இதற்கு, 'இவளும்' என்பது வருவிக்க. நிணம் குற்ற வேல் - நிணத்தைக் குற்ற (சிதைத்த) சூலம். 'இளையளாகலின் இவள் உற்றநோய் தெய்வத்தானாயிற்றுதலே வேண்டும்; அதனைத் தெளிய அறிந்து சொல்லுமின்' என்றாள் என்க.

சிவபெருமான் கொடியோரைத் தெறுதல் கூறப்பட்டது.

284. கலக்கம்உற்று நிற்றலாவது, செவிலி கட்டுவைப்பிக்கக்கண்ட தோழி, 'இனி இக் கட்டுவித்திகளால் மறையெல்லாம் புலப்பட்டு அம்பல் அலராகி நம் குடிக்குப்பழி உண்டாம்போலும்' எனக் கலக்கமுற்று நிற்றல். இதற்குக் கொளு:-

தெய்வத்தின் தெரியுமென — எவ்வத்தின் மெலிவுற்றது.

பொருள் கோள்: 'இனி இவள் உள்ளம் ஓடியவாறெல்லாம் காட்டி, வாட்டி, ஏர்குழலார் அன்று மொழியாதனவற்றிற்கு வாய்திறந்து, எம்வயின் பெருநாணினை மாட்டியன்றே, மாக்குடி மாசு ஊட்டியன்றே (இக் கட்டுவித்திகள்) நிற்பது' தோன்றா எழுவாய் வருவிக்க.

20. கட்டுவித்தி கூறல்

குயில்இதன் றேயென்ன லாஞ்சொல்லி கூறன்சிற் றம்பலத்தான்
இயல்இதன் றேயென்ன லாகா இறைவிறற் சேய்கடவும்
மயில்இதன் றே;கொடி வாரணங் காண்க;வன் சூர்தடிந்த
அயில்இதன் றே;இதன் றேநெல்லிற் றோன்றும் அவன்வடிவே.

'மூள்வித்து' என்பது 'மூட்டின' என வருதல் போல 'மாள்வித்து' என்பது 'மாட்டி' எனவந்தது. 'மாட்டியும் ஊட்டியுமன்றே நிற்பது' என ஒரு தொடராகக் கூறற்பாலதனைக் கலக்க மிகுதியால் வேறு வேறு தொடராகக் கூறினாள். நிற்பது - ஒழிவது. உள்ளம் ஓடியவாறு - மனம் தலைவனிடத்துச் சென்ற வகை. தில்லைக்கண் நின்றகாலம் அறியப்படாமையை, "அன்றே" என்றதனாற் குறித்தாள். "தொல்லோன்" என்றது, அவன் இயல்பினை. கல்லார் - நல்லாசிரியரை அடைந்து அவர் அருளிச் செய்யக் கேட்டறியாதவர். 'மொழியாதனவற்றிற்கு' என்னும் நான்கனுருபு தொகுத்தலாயிற்று. 'அன்று வெளிப்படச் சொல்லாதனவற்றைச் சொல்லுதற்கு இன்று அவரது வாயைத் திறந்து' என உரைக்க, 'திறப்பித்து' என்னாது, 'திறந்து' என்றாள், 'கூறமாட்டாதாரையும் கூறச்செய்யும் இவர்களது செயல்' என்பது பற்றி,

சிவபெருமானது இயல்பு நல்லாசிரியரது அருளால் உணரற்பாலது என்பது கூறப்பட்டது.

285. கட்டுவித்தி கூறலாவது, செவிலி சொல்லின் வழியே கட்டுவைத்த கட்டுவித்தி அதன்கண் தோன்றும் காட்சியைக் கூறுதல் - இதற்குக் கொளு :-

கட்டு வித்தீ — விட்டு ரைத்தது

"இது" என்றது, உமையம்மையின் சொல்லை. தனது இயல், 'இதுவாம்' என்றும், 'இது அன்று' என்றும் சொல்லலாகாத இறைவன் சேய் என்க. "இது, அன்றே" என்றவற்றை, "வாரணம்" என்றதனோடும், "காண்க" என்றதனை எல்லாவற்றோடும் கூட்டுக. எல்லாத் தொடரிடத்தும், "இது"

என்றதனை முதலிற் கூட்டுக. இங்ஙனம் பலரும் அறியக் காட்டியது, நெல்லைப் பிடித்தெடுத்து வைத்து நந்நான்காக எண்ணுங்கால், மூன்று எஞ்சின் அது மயில் எனவும், இரண்டு எஞ்சின் அது கோழி எனவும், ஒன்று எஞ்சின் அதுவேல் எனவும் குறித்தலே. எஞ்சாது நான்காகியேவிடின், அவ்விடத்து முருகன் வந்திலன் என்பாள். இங்குமேற்கூறியவாறு மயில் முதலியவற்றைக் கண்டமையான், அவற்றை அனைவர்க்கும்காட்டி, 'இவட்கு உண்டாயது முருகனால் விளைந்த நோயே' என்றாள் என்க. மயில் முதலியவை தோன்றினமையின், பிடித்த பிடிநெல் முருகன் வடிவமாயிற்று. 'இது பொய்யன்றோ' எனின், அன்று; என்னை? தலைவன் தலைவியரது கூட்டம் தெய்வம் இடைநின்று நிகழ்த்தியதாக, அதுவே கட்டின்கண் கட்டுவித்தி முருகன் செயலெனக் கருதுமாறு தோற்றிற்றாகலின் என்க. இவ்வாறாயினும், 'சிற்றம்பலத்தான் இயல்பு இன்னதென அறியவாராது' எனச் சொல்வித்தமையால், உண்மையும் ஓராற்றான் புலப்படுத்திற்றாம்.

சிவபெருமான், 'இன்னன்' என்றாயினும், 'இன்னன் அல்லன்' என்றாயினும் அளவிட்டு அறியலாகாதவன் என்பது கூறப்பட்டது.

"இன்னவுரு இன்னநிறம் என்று அறிவதேல் அரிது" (திருமுறை - 3-71-4.) எனவும்,

"இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்
இவன் இறைவன் என்றெழுதிக் காட்டொணாதே"

(திருமுறை - 6-97-10) எனவும் வருவனவும்,

"அதுபழச் சுவையென அமுதென அறிதற்கு
அரிதென எளிதென அமரரும் அறியார்"

என அடிகள் திருவாசகத்துள் (திருப்பள்ளி - 7.) அருளிச்செய்தமையும் காண்க.

21. வேலனை அழைத்தல்

வேலன் புகுந்து வெறியா டுக;வெண் மறியறுக்க;
காலன் புகுந்தவி யக்கழல் வைத்தெழில் தில்லைநின்ற
மேலன் புகுந்தென்கண் நின்றான் இருந்தவெண் காடனைய
பாலன் புகுந்திப் பரிசினில் நிற்பித்த பண்பினுக்கே. 286

---

286. வேலனை அழைத்தலாவது, கட்டுவித்தி, 'தலைவி உற்றது முருகன் செய்த நோய்' எனக் கூறக்கேட்ட செவிலியும், நற்றாயும், 'இப்பிள்ளை இக்குடியிற் பிறந்து முருகனால் அணங்கப் பட்டவாற்றால் வேலன் வந்து வெறியாடுவானாக' என அவனை அழைத்தல். வேலன் - பூசாரி. முருகனது வேலை இவன் எப்பொழுதும் கையிற்கொண்டிருத்தலின், இவன், 'வேலன்' எனப்படுவான். இதற்குக் கொளு :-

வெறியாடிய வேலனைக்கூஉய்
நெறியார்குழலி தாயர்நின்றது.

வெறியாடுதல் - ஆவேசம் கொண்டு ஆடுதல். இதனை இக் காலத்தார், 'மருள் ஆடுதல்' என்பர். வேலன் இவ்வாறு ஆடுகின்றுழி ஆட்டுக்கிடாயைப் பலியாக அறுத்து ஆடுவனாக லின், அதற்கு இன்றியமையாததாயினமை பற்றி அக் கிடாய்க் கும் 'வெறி' என்பது பெயராயிற்று. இவ்வாறன்றி 'வெறி என்பது யாட்டின் பெயர்' எனவும், 'அதனை அறுத்து ஆடுதல் பற்றி வேலன் பலிக் கூத்து வெறியாட்டு எனப் பெயர் பெற்றது' எனவும் உரைப்பாரும் உளர். வேலன் வெறியாடும் முறைமை எல்லாம் முருகாற்றுப்படையுள் விரித்துக்கூறியவாற்றான் அறிக. மறி-செம்மறியாடு. இவ்வினத்துள் வெண்ணிறம் பெற்றுள்ளது அரிது. அதுவே வெறியாட்டிற்குச் சிறந்ததாதல்பற்றி, 'வெண் மறிஅறுக்க' என்றனர். இருமூன்றெய்தியஇயல்பினின்வழாஅது நிற்கும் வேதநெறியின்வழி ஆறெழுத் தடக்கிய அருமறைக் கேள்வி நாவியல் மருங்கின் நவிலப்பாடி, விரையுறு நறுமலர் (முருகாற்றுப்படை) தூவி வழிபடும் தூய வழிபாட்டானன்றி, முருகனை வேலன் புகுந்து வெறியாடுமாற்றால் வழிபட்டுப் பயன் கொள்ளுதல் தம்குடிக்கு ஏலாமை பற்றித் தாயர், 'வெண்கா டனையபாலன் இக்குடியிற் பிறந்துநம்மை இப்பரிசினின்நிற்பித்த

பண்பினல், வேலனும் இங்கு வருக; வந்து அவன் வெறியும் ஆடுக; அவ்விடத்து அவன் வெண்மறியையும் அறுக்க' என வருந்திக் கூறினர் என்க. எனவே, பெண்பிள்ளைக்கு உண்டாகிய அணங்கு நோய்க்கு இதுவே பரிகாரமாக வருதலின், அவள்மேல் அன்பினலே அவர் இவற்றிற்கெல்லாம் உடம்பட்டனர் என்பது தெளிவாயிற்று. இவ்விடத்து, "காலன் புகுந்து அவியக் கழல் வைத்து எழில் தில்லை நின்ற மேலன்" எனவும் 'அவன் புகுந்து என்கண் நின்ருன்' எனவும். 'அவன் வெண்காட்டினும் இருந்தான்' எனவும் கூறியவாற்ருல், 'அவனலே இந்நோய் போதல் அரிதன்று என்பது நன்கறிந்திருந்தும் உள்ளம் நின்றிலது' எனக் கருதினர் என்பது போந்தது. "என்கண்" என்றதை, பன்மை யொருமை மயக்கமாகக் கொள்க. புகுந்து அவிய - புகுந்ததனல் மடிய. "கழல் வைத்து" என்றது, 'எளிதிற் செய்து' என்னும் பொருளும் குறித்தது. தில்லைக்கண் நிற்றல் அருள்காரணமாக என்பாள், "மேலன்" என்ருள். மேலன் - எல்லாப் பொருட்கும் மேலாய் உள்ளவன். புகுந்து என்கண் நின்ருன் - கண்முன்தோன்றிப் பின் உள்ளத்து நீங்காது நின்ருன். வெண்காடு, ஒரு சிவதலம். "பெண்மை யடுத்த மகன் என் கிளவி" என்றதனல் (தொ. சொல்-164) பெண்பிள்ளையை, 'பெண்மகன்' என வழங்கும் வழக்குண்மை யறியப்படுதலின், அவ்வழக்குப் பற்றி, வடசொல்லை, 'பாலன்' என னகரஈருக ஓதினா. னஃகானெற்று ஆடூவை அறிய நிற்றல் பெயரிடத்து ஒருதலையாகாமை பற்றியன்றே, "இரு திணை மருங்கின் ஐம்பாலறிய - ஈற்றினின் றிசைக்கும் பதினே ரெழுத்தும் - தோற்றந் தாமே வினையொடு வருமே" என ஓதுவாராயிற்றென்பது (தொல். சொல்-10) "பாலன்புகுந்து" என்றதில் "புகுந்து" என்றது, இக் குடியில் பிறந்து" என்றவாறு. இப்பாிசின் - இந்நிலைமைக்கண்'. பரிசினின்றிபித்த என்புழி ஐந்தாவது ஏழாவதன் பொருட்கண் வந்து சிறு பான்மை இன் சாரியைபெற்று நின்றது' எனவும், 'ஏழா வதற்கு இன் என்பதோர் உருபு, புறநடையாற் கொள்ளினும் அமையும். எனவும் உரைப்பர் பேராசிரியர். அவற்றுள்பின்னர்க் கூறிய வகையால் பெற்ற இன் என்பதே பிற்காலத்து 'இல்' என மருவிநின்றது; அதனல், அதனையும் ஏழனுருபாக ஓதிப் பிற்காலத்தார் நூல்செய்தார் (நன்னூல் - 302). அவர் மூன்ருவதற்கு ஆல், ஒடு, என்பனவும், ஐந்தாவதற்கும் 'இல்'

௨௨. இன்னல் எய்தல்

அயர்ந்தும் வெறி மறி ஆவி செகுத்தும், விளர்ப்பயலார்
பெயர்ந்தும் ஒழியா விடின்என்னை பேசுவ? பேர்ந்திருவர்
உயர்ந்தும் பணிந்தும் உணரான தம்பலம் உன்னலரின்
துயர்ந்தும் பிறிதி னெறியின்என் ஆதும் துறைவனுக்கே. 287

என்பதொன்றும் உருபாக ஓதின வெல்லாம் (டி. 297, 299) ஆனும், ஒடுவும், இன்னும் என்பவற்றின் மரூஉ வாயினும், அவை பிற்காலத்துப் பயின்றுவருதல் பற்றி வேறுக வேண்டினர் என்க. ''பண்பினுக்கு'' என்றதனை, 'பண்பினால்' எனத் திரிக்க.

சிவபெருமான் தன் அடியவர்க்கு இறப்பை உள்ளிட்ட தீங்குகள் அனைத்தையும் நீக்கும் பேராற்றலும், அவர்க்கு யாண்டும் வெளிநிற்கும் பேரருளும் உடையவனாதல் கூறப் பட்டது.

287. இன்னல் எய்தலாவது, தாயர் வெறியாடுவிக்க வேலனை அழைப்பக் கேட்ட தலைமகள், 'வேலன் வெறியாடு மதனால் நம் வேறுபாடு நீங்காதொழியின், அயலார் வேறு சொல்லித் தூற்றுவர்; இனி அதனால் நம் வேறுபாடு நீங்குமா யின் நம் தலைவரால் தணியற்பாலதாய வேறுபாடு பிறிதொன்றால் தணிந்ததாக யாம் அவரிடத்து அன்பிலேமாவேம்; அதனால், இருவாற்றானும் நமக்கு உண்டாவது உயிர்க்கிறுதியே' எனத் தன்னுள் துன்பம் எய்துதல். இதற்குக் கொளு:-

ஆடிய வெறியிற் கூடுவ தறியாது
நன்னறுங் கோதை இன்னல் எய்தியது.

'வெறி அயர்ந்தும்' என மாற்றுக. ''ஆவி செகுத்தும்'' என்றாள், 'ஆடு கொன்னே கொல்லப்படுகின்றது' என்று இரங்கி 'அயலார் பேசுவது என்னை' எனக் கூட்டுக. 'பெயர்த் தும்' என்பது மெலிந்து நின்றது. பெயர்த்தும் - பின்னும். என்னை - யாதாயிருக்குமோ; 'அலராகும்' என்பதாம். இருவர் - அயனும், மாலும். 'உயர்ந்து பேர்ந்தும், பணிந்து பேர்ந்தும்' என்க. உயர்ந்தமை, விண்மேல் பறந்தது.

23. வெறி விலக்குவிக்க நினைதல்

சென்றார் திருத்திய செல்லல்நின் றார்கள் சிதைப்பரென்றால்
நன்று அழகிதன் றே! இறை தில்லை தொழாரின்நைந்தும்
ஒன்றும் இவட்கு; மொழிதல்கில் லேன்; மொழி யாதும்உய்யேன்
குன்றார் துறைவர்க் குறுவேன் உரைப்பன்இக் கூர்மறையே.

பணிந்தமை, நிலத்தினுள் அகழ்ந்து புகுந்ததது. பேர்ந்து - சென்று. துயர்ந்தும் - யாம்துயருற்றும்' என்றபடி. ''விளர்ப்பு'' என்றதை, ''பிறிதின் ஒழியின்'' என்றதற்கும் கொள்க. பிறிது தலைவனல்லாத வேறொன்று. ''துறைவனுக்கு என் ஆதும்'' என்றது, தலைவன் பொருட்டுக் கவலாதவராக அன்றோ ஆவேம்' என்றவாறு. 'அதனால் இருவாற்றானும் நமக்கு உண்டாவது இறந்துபாடே' என்பது குறிப்பெச்சம்.

சிவபெருமானைத் தம்முனைப்பால் 'அளந்து காண்பேம்' எனப் புகுவார் இடர் எய்துமாறு கூறப்பட்டது

288. வெறி விலக்குவிக்க நினைதலாவது. 'தாயர் வெறியாடுவித்தலால் எவ்வாற்றானும் நமக்கு ஏதமே' எனக் கருதி இன்னல் எய்திய தலைவி, 'அவ்வாற்றால் யான் இனி எனது நாணத்தைத் துறந்தாயினும் தோழியைக்கொண்டு தாயர் வெறியாடுவித்தலை விலக்குவிப்பேன்' என நினைதல். இதற்குக் கொளு :-

அயல்தரு வெறியின் மயல்தரும்என
விலக்க லுற்ற குலக்கொடி நினைந்தது.

சென்றார் - பிரிந்து சென்றவர். திருத்திய செல்லல் - முற்ற உண்டாக்கிய துன்பத்தை. நின்றார்கள் - அவரொழிந்த பிறர். சிதைப்பர் என்றால் - நீக்குவார் என்பது உளதாகுமானால். நன்று அழகிது அன்றே - அது மிகவும் அழகிதாமன்றோ; 'சென்றாரிடத்து அன்புடையார்க்கு அது சாலாதன்றோ' என்றபடி. இதன்பின், 'அவ்வாறாக' என்பது வருவிக்க. தொழாரின் - தொழாதாரைப்போல. நைந்தும் - ஆற்றாமை யால் வருந்தினேனாயினும்; 'நாணினால், என்னோடு சிறிதும்

24. அறத்தொடு நிற்றலை யுரைத்தல்

யாயுந் தெறுக; அயலவர் ஏசுக; ஊர்நகுக;
நீயும் முனிக; நிகழ்ந்தது கூறுவல் என்னுடைய
வாயும் மனமும் பிரியா இறைதில்லை வாழ்த்துநர்போல்
தூயன் நினக்குக் கடுஞ்சூள் தருவன் சுடர்க்குழையே. 289

வேற்றுமை இல்லாத இவட்கும் என நோயினைச் சொல்ல மாட்டுகின்றிலேன்; இனி நாணினும் மேம்பட்ட கற்பிற்கு மாறாய செயல் நிகழ்கையால், இதனை இவட்குச் சொல்லாதும் வாழமாட்டேன்; அதனால், துறைவர்க்கே உரியேனாவேனாகிய யான், இம் மிக்க மறையை இவட்குச் சொல்லுவேன்' என்க. குன்று ஆர் துறைவர் - மணற் குன்றுகள் நிறைந்த துறையினை உடையவர். இதனுள், 'தோழிக்கும் கூறேன்' என்றதனாலும், அடுத்து, "நீயும் முனிக; நிகழ்ந்தது கூறுவல்" என்பதனாலும் இது, பாங்கியிற் கூட்டம் நிகழாதே வரைவு முயலும் நிலையில் நின்ற தலைவியது கூற்றாதல் அறிந்துகொள்க.

சிவபெருமானது தலத்தை வணங்காதவர், உள்ளத்து உறு நோயுடையராதல் கூறப்பட்டது.

289. அறத்தொடுநிற்றலை உரைத்தலாவது, வெறிவிலக்கு விக்க நினைத்த தலைமகள், பின் தோழிக்குத் தான் அறத்தொடு நிற்கவேண்டி அதற்குத் தோற்றுவாயாகச் சில கூறுதல். இதற்குக் கொளு :-

வெறித்தலை வெரீஇ வெருவரு தோழிக்
கறத்தொடு நின்ற ஆயிழை யுரைத்தது.

"சுடர்க் குழையே" என்பதை முன்வைத்து, "என்னுடைய" என்பது முதலாகத் தொடங்கியுரைக்க.

யாய் - என் தாய். தெறுக - ஒறுக்க. அயலவர் - பக்கத்தில் உள்ளோர். 'ஒறுத்தல்' முதலிய நான்கிற்கும், 'என்னை' என்னும் செயப்படுபொருள் வருவிக்க. தூயன் - யான் குற்றம் இல்லேன். 'நீ தேறாயாயின் நினக்குக் கடுஞ்சூள் தருவன்' என்க. இது, மெய்யுறு புணர்ச்சியின்றி உள்ளப்புணர்ச்சியே

25. அறத்தொடு நிற்றல்

வண்டலுற் றேமெங்கண் வந்தொரு தோன்றல், 'வரிவளையீர்
உண்டலுற் றேம்'என்று நின்றதொர் போழ்துடை யான்புலியூர்க்
கொண்டலுற் றேறுங் கடல்வர எம்முயிர் கொண்டுதந்து
கண்டலுற் றேர்நின்ற சேரிச்சென் றன்னஓர் கழலவனே. 290

யுடையாள் கூற்றாயின், வாய்மையேயாம். அன்றி மெய்யுறு புணர்ச்சி எய்தினாள் கூற்றாயின், தலைவற்கும், தன் குடிக்கும் பழிவாராவகை காப்பக் கூறலின், வாய்மையின்பாலதாம். இப்பாட்டு,

" அன்னை அறியினும் அறிக; அலர்வாய்
அம்மென் சேரி கேட்பினும் கேட்க;
பிறிதொன் றின்மை அறியக் கூறிக்
கொடுஞ்சுழிப் புகாஅர்த் தெய்வம் நோக்கிக்
கடுஞ்சூள் தருகுவன் நினக்கே". (அகம் - 110)

என்பதனோடு வைத்து நோக்கற்பாலது. எனினும் அப்பாட்டினைத் தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றதாகவே பலரும் உரைத்தார்.

சிவனடியார்கள் அப்பெருமானை இடைவிடாது நினைதலும், வாழ்த்தலும் உடையராதல் கூறப்பட்டது.

290 அறத்தொடு நிற்றலாவது, தோழிக்குத் தான் அறத்தொடு நிற்றலைத் தோற்றுவாய் செய்த தலைவி, பின் அறத்தொடு நிற்றல். இதற்குக் கொளு :-

செய்த வெறியின் எய்துவ தறியாது
நிறந்தொடித் தோழிக் கறத்தொடு நின்றது.

வண்டல் உற்றேம் எங்கண் - விளையாட்டைப் பொருந்தி நின்றேமாகிய எம்மிடத்து. 'நங்கண்' என்னாது, "எங்கண்" என்றதனால், 'நீ பூக்கொய்யச் சென்றிருந்த நேரத்து ஆயத்தேமாகிய எம்மிடத்து' என உரைக்க. 'ஒரு தோன்றல் வந்து' என மாறுக. உண்டல் உற்றேம் - உங்கள் வண்டல் மனைக்கு யாம் விருந்தாகி உண்ணுதலை விரும்பினேம். உடையான் -

எம்மை ஆளாக உடையவன். 'புலியூர்க் கடல்' என இயையும். கொண்டல் - கீழ்க்காற்று. உற்று - மிகுதலால். ஏறும் - கரைமேல் ஏறுகின்ற. 'கொண்டு எம் உயிர் தந்து' என மாற்றியுரைக்க. கொள்ளுதல் - முகந்தெடுத்தல். "உயிர் தந்து" என்றதனால், 'அவன் அருளுடையனாகலின் எம் துன்பத்திற்கு ஆற்றானாய் இரங்கி எடுத்தான்' என்பதும், "கொண்டு" என்றதனால், 'யான் என்வயமின்றி அவன் கைப்பட்டேன்' என்பதும், 'இவ்வாறாகவே, இது தெய்வத்தான் ஆயதல்லது பிறிதில்லையாகலான், ஒருவரையும் குற்றங் கூறுதற்கில்லை; அதனால், இனி யான் அவற்கல்லது பிறர்க்கு உரியேனல்லேனாகலின், அவனை உறுதல் எவ்வாறு என்னும் கலக்கமே என் நோய்க்குக் காரணம்' என்பதும், 'ஆகவே, வெறியாட்டு நமக்கு ஏலாதாகலின் நீ அது விலகற்பாலை' என்பதும் கூறினாளாம்.

இன்னும் "வண்டல் உற்றேம்" என்றதனால், "இஃது அறியாப் பருவத்து நிகழ்ந்தது' எனத் தாய் காவலோடும், உலகியலோடும் மாறுகொள்ளாவாறும், ஆயத்தாரோடு இருந்தமை கூறியதனால் தோழி காவலொடு மாறுகொள்ளாவாறும், "உயிர் தந்து" என்றதனால், 'அருள் காரணமாக வந்து எடுத்தான்' எனத் தலைவனது பெருமையோடு மாறுகொள்ளாவாறும், "கொண்டு" என்றதனால் தான் அறியாமை கூறிக் கற்பினொடு மாறுகொள்ளாவாறும் கூறினாள் என்க. கண்டல் உற்று ஏர்நின்ற சேரி - தாழை மரங்கள் மிகுதலால் அழகு நிலைபெற்ற சேரி. 'தேரிற் சென்றான் என்பதும் பாடம்' எனவும், 'அப்பாடத்திற்கு, காண்டல் உற்று என்பது குறுகி நின்றதாம்' எனவும் உரைப்பர் பேராசிரியர். 'அவ் வொர் கழலவன்' எனச் சுட்டு வருவித்து, 'அவ்வொருவன்' என உரைக்க. "தோன்றல், கழலவன்" என்பவற்றால் அவனது உயர்ச்சி குறித்தாள் என்க.

"உடையான்" என்றதனால், உயர்ந்தோர் சிவபெருமானுக்கு ஆளாய் நிற்றலை மேலான பேறாக விரும்புதல் கூறப்பட்டது.

26. ஐயந்தீரக் கூறல்

குடிக்கலர் கூறினுங் கூறு வியன்தில்லைக் கூத்தனதாள்
முடிக்கல ராக்குமொய் பூந்துறை வற்கு முரிபுருவ
வடிக்கலர் வேற்கண்ணி வந்தன சென்றுநம் யாயறியும்
படிக்கல ராம்இவை; என்நாம் மறைக்கும் பரிசுகளே. 291

---

291. ஐயந் தீரக் கூறலாவது, தோழிக்கு அறத்தொடு நின்ற தலைவி, 'இவள் இனிச் செவிலிக்கு அறத்தொடுநிற்குங் கால், எம்பெருமாற்குப் பழியுண்டாகுமாறு நிற்பாள் கொல்லோ' என ஐயுற்று நிற்றலை அவள் தனக்கு அறத்தொடு நின்று கூறும் முறையால் அறிந்த தோழி, 'யான் அவ்வாறு தலைவற்குப் பழி உண்டாகுமாறு கூறேன்' என்பதுபட, அவளது ஐயம் தீரக் கூறுதல். இதற்குக் கொளு :-

விலங்குதல் விரும்பு மேதகு தோழி
அலங்கற் குழலிக் கறிய வுரைத்தது.

'வேற்கண்ணி, அலராம் இவை வந்தன; நாம் அலர் குடிக்குக் கூறினும் துறைவற்குக் கூறு மறைக்கும் பரிசுகள் என்' எனக் கூட்டுக.

குடிக்கு அலர் கூறுதலாவது, 'நின் மகள் ஏதிலாள் ஒருவன் வயப்பட்டாள்' எனக் கூறுதல். தலைவனுக்கு அலர் கூறுமை யாவது, 'அவன் பெருமையும் உரனும் இன்றி இவளை வயப் படுத்தினன்' எனக் கூறுதொழிதல். 'கூறுது' என்பது குறைந்துநின்றது. 'கூத்தன் தாள்களைத் தன் முடிக்கு அல ராக்கும் துறைவன்' என்க. 'முரிந்த புருவத்தையும் மாவடு வகிர்போலப் பரந்த வேல்போலும் கண்ணிணையும் உடையாய்' என்க. முரிந்த - வளைந்த. வந்தன - தெய்வத்தால் வந்தன. சென்று - பரந்து. அறியும் படிக்கு - அறியும் அளவிற்கும். 'நாம் மறைக்கும் பரிசுகள் என்' எனத் தலைவியோடு உசாவிய வாற்றால், மறைக்கும் பரிசினால் செவிலிக்குத் தான் அறத்தொடு நிற்றற்குத் தலைவியது உடம்பாடு பெற்றாள் என்க.

நன்மக்கள் சிவபெருமானது திருவடிகளைத் தங்கள் முடிக்கு மலராகப் புனைந்து நிற்பர் என்பது கூறப்பட்டது.

27. வெறி விலக்கல்

விதியுடை யார்உண்கவேரி; விலக்கலம்; அம்பலத்துப்
பதியுடை யான்பரங் குன்றினிற் பாய்புனல் யாம்ஒழுகக்
கதியுடை யான்கதிர்த் தோள்நிற்க வேறு கருதுநின்னின்
மதியுடை யார்தெய்வ மேஇல்லை கொல்இனி வையகத்தே. 292

---

292. வெறிவிலக்கலாவது, தலைமகளை ஐயம் தீர்த்து அவள் உடம்பாடு பெற்ற தோழி, பின் வெறிக்களத்துச் சென்று வேலன் கேட்ப அதனை விலக்கிக் கூறுதல். இதற்குக் கொளு :-

அறத்தொடு நின்ற திறத்தினிற் பாங்கி
வெறிவிலக்கிப் பிறிதுரைத்தது

'தெய்வமே, வேரி, விதியுடையார் உண்க; விலக்கலம்' எனத் தொடங்கி யுரைக்க. வேரி - கள். விதியுடையார் - அதனை உண்ணும் ஊழ் உடையார். உண்க - உண்பார்களாக; 'அதனை யாம் விலக்குகின்றிலேம்' என்க. தோழி இங்ஙனம் கூறியது, 'வெறியாட்டிடத்து எமக்கு வெறுப்பில்லை ; ஆயினும், இது தெய்வத்தானாய நோய்க்கன்றே பரிகாரமாவது! தலைவியது நோய் அன்னதன்றே' என்றற்காம். "அம்பலத்து" என்றதில், 'அத்து' தவிர்வழி வந்த சாரியை. புனல்யாம் ஒழுக - நீரோடே யாம் போக. கதியுடையான் - அவ்விடத்து எமக்குப் புகலாயின மையை உடைய ஒருவனது. கதிர்த்தோள் நிற்க - ஒளியை யுடைய தோள்களொழிய. வேறு கருதும் நின்னின் - வேறு பரிகாரத்தைத் தலைவியது நோய்க்குக் கருதுகின்ற உன்னைப் போல. கொல், அசைநிலை. 'கதிர்த்தோள் நிற்க வேறு கருதும்' என்ற குறிப்பால், "மதியுடையார்" என்றது, 'மதியிலார்' என்னும் பொருளைத் தந்தது. "தெய்வமே" என்றாளாயினும், வேலனையே கருதினாளாகலின், "நின்னின்" என்றதும் அவனையேயாம். "கடவு ளாயினும் ஆகுக - மடவை மன்ற வாழிய முருகே" என்றாற்போல்வனவும் அன்ன (நற்றிணை - 34).

சிவபெருமான் வரைவில்லாப் பெரியோனாயினும் தன் அருள் காரணமாக ஓர் இடத்தைத் தனதாக வரைந்து கொண்டு நிற்றல் கூறப்பட்டது.

28. செவிலிக்குத் தோழி அறத்தோடுநிற்றல்

மனக்களி யாய்இன் றியான்மகிழ் தூங்கத்தன் வார்கழல்கள்
எனக்களி யாநிற்கும் அம்பலத் தோன் இருந் தண்கயிலைச்
சினக்களி யானை கடிந்தார் ஒருவர்,செவ் வாய்ப்பசிய
புனக்கிளி யாம்கடி யும்வரைச் சாரற் பொருப்பிடத்தே. 293

---

293. செவிலிக்குத்தோழி அறத்தொடு நிற்றலாவது, தோழி வேலனை வெறிவிலக்கக்கண்ட செவிலி, 'நீ வெறிவிலக்கியது என்னோ' எனக்கேட்க, தோழி அவட்கு அறத்தொடுநிற்றல். இதற்குக் கொளு :-

சிறப்புடைச் செவிலிக் — கறந்தொடு நின்றது.

மனக்களியாய் - உள்ளக் களிப்பு உண்டாகி. மகிழ்தூங்கும் வண்ணம் - இன்புற்றிருக்கும்படி. தன்வார் கழல்கள் என்பது அவனது திருவருளே யாதலானும், அதனை அளித்தல் முடிவு பெறுமையானும், 'அளியாநிற்கும்' என நிகழ்காலத்தாற் கூறினான். 'கயிலைக்கண்' என உருபு விரிக்க. களியானை - மதயானை. வரை - இடம். பொருப்பு - பக்கமலை. 'கயிலைக்கண் சாரற் பொருப்பிடத்து யாம் கிளிகடியும் வரைக்கண் களியானை ஒருவர் கடிந்தார்' எனக் கூட்டியுரைக்கப்படும். 'ஆதலான் நீ தக்கது செய்க' என்பது குறிப்பெச்சம். "கிளி கடியும்" என்றதனால், "அறியாப்பருவத்து நிகழ்ந்தது" எனவும், "வரை" என்றதனால், 'காவல் பிழைத்திலேன்' எனவும், "சினக்களி யானை" என்றதனால், 'அவன் தன் அருட்கும், ஆண்மைக்கும் தக்கது செய்தான், எனவும், "கடிந்தார்" என்றதனால், 'உற்றுற்குரியர் (மெய்யுற்றவனுக்கு உரியவர்) பொற்றொடி மகளிர்' எனவும் கூறினாளாம். முன்னர், 'நீரினின் றெடுத்தான்' என்றுகூறி, இங்கு, 'யானைகடிந்தான்', என்றது முரணன்றோ வெனின், இதனை 'ஒருதொடர்' எனக்கூறுவார்க் கன்றே அது தடையாவது? இஃது இலக்கணம் பலவற்றிற்கும் இலக்கியமாதலின் முரணுமாறு இல்லை என்க.

சிவபெருமான் தன் அடியவரை இன்புறுத்துமாறு கூறப்பட்டது.

29. நற்றாய்க்குச் செவிலி அறத்தொடுநிற்றல்

இளையாள் இவளைஎன் சொல்லிப் பரவுதும் ஈரெயிறு
முளையா அளவில் முதுக்குறைந் தாள்;முடி சாய்த்திமையோர்
வளையா, வழுத்தா வருதிருச் சிற்றம் பலத்துமன்னன்
திளையா வரும்அரு விக்கயி லைப்பயில் செல்வியையே. 294

30. தேர்வரவு கூறல்

கள்ளினம் ஆர்த்துண்ணும் வண்கொன்றை யோன்தில்லைக்
[கார்க்கடல்வாய்ப்
புள்ளினம் ஆர்ப்பப் பொருதிரை ஆர்ப்பப் புலவர்கள்தம்
வள்ளினம் ஆர்ப்ப மதுகரம் ஆர்ப்ப வலம்புரியின்
வெள்ளினம் ஆர்ப்ப வரும்பெருந் தேர்இன்று மெல்லியலே. 295

---

294. நற்றாய்க்குச் செவிலி அறத்தொடு நிற்றலாவது, தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்ப, பின் செவிலி நற்றாய்க்கு அறத்தொடு நிற்றல். இதற்குக் கொளு :-

கற்பினின் வழாமை நிற்பித் தெடுத்தோள்
குலக்கொடி தாயர்க் கறத்தொடு நின்றது.

" இளையாள் இவளை என்சொல்லிப் பரவுதும் " என்றதனை இறுதிக்கண் கூட்டுக.

பரவுதும் - புகழ்வோம். ஈர் எயிறு - முதற்கண் முளைக்கும் இரண்டு பற்கள். முதுக்குறைந்தாள் - அறிவுமுதிர்ந்துவிட்டாள். இதன்பின், ' ஆதலின் ' என்பது வருவிக்க. வளையா - வணங்கி யும். வழுத்தா - துதித்தும் வரு - அடைகின்ற. ' மன்னன் கயிலை ' என இயையும். திளையா வரும் அருவி - என்றும் நீங்காது வரும் அருவி. " செல்வி " என்றதற்கு, ' திருவாட்டி ' என உரைப்பர் பேராசிரியர். ' செல்வத்தை ஆளுதல் உடை யவள் ' என்பது பொருள். ' செல்வியும், இளையாளும் ஆகிய இவளை ' என்க.

சிவபெருமானைத் தேவர் சென்று அடையுமாறெல்லாம் கூறப்பட்டன.

295. தேர்வரவு கூறலாவது, செவிலி நற்றாய்க்கு அறத் தொடு நின்ற நிலைமைக்கண் தலைவனது தேரொலி கேட்க,

31. மணமுரசு கேட்டு மகிழ்ந்துரைத்தல்

பூரண பொற்குடம் வைக்க ; மணிமுத்தம் பொன்பொதிந்த
தோரணம் நீடுக ; தூரியம் ஆர்க்க;தொல் மாலயற்கும்
காரணன் ஏரணி கண்ணுத லோன்கடல் தில்லையன்ன
வாரண வும்முலை மன்றல்என் றேங்கும் மணமுரசே. 296

தோழி உவகையோடு சென்று அத் தேர் வரவினைத் தலைவிக்குக் கூறுதல். இதற்குக் கொளு ;-

மணிநெடுந் தேரோன் அணிநீவின் வருமென
யாழியல் மொழிக்குத் தோழி சொல்லியது.

"கள்" என்றவிடத்து, "இனம்" என்றதனை, 'வண்டினம்' என்க. 'கள் என்பது ஒருவகை வண்டு' என்பாரும் உளர். கடற் புள் ஆர்த்தலும், கடல் திரை ஆர்த்தலும் தேர் வரவோடு இயைபிலவாயினும், ஏனை ஆர்ப்புக்களோடு இவற்றிடையேயும் வாராநின்றதென்றாள், உவகைமிகுதியால். வள் இனம் - வளவிய கூட்டம். மதுகரம் - வண்டு ; அவை ஆர்த்தல், தலைவனும், அவன் தேரும், அவன் தேர்ப் பரிகளும் அணிந்த மாலையிடத்து என்க. "பெருந்தேர்" என்றது, தலைவனது தேர் எனக் குறித்தவாறு. களவுக் காலத்துக் கரந்து வந்த தேர், இது பொழுது ஆரவாரத்துடன் வாராநின்றது' என மகிழ்ந்து கூறியவாறு. 'இனி, வரைவு நிகழ்வதாம்' என்பது குறிப்பெச்சம்.

வண்டுகள் தேனையுண்ணும் கொன்றை மாலையைக் குறித்த முகத்தால், சிவபெருமான் எல்லா உயிர்களையும் புறந்தருதல் கூறப்பட்டது.

296. மணமுரசு கேட்டு மகிழ்ந்துரைத்தலாவது, தோழி தலைவிக்குத் தலைவனது தேர்வரவு கூறுகின்ற நிலைமைக்கண் தமர் மணமுரசொலிப்பிக்க அது கேட்டு ஊரில் உள்ளார் மகிழ்ந்து கூறுதல். இதற்குக் கொளு :-

நிலங்காவலர் நீள்மணத்தின்
நலங்கண்டவர் நயந்துரைத்தது.

32. ஐயுற்றுக் கலங்கல்

அடற்களி யவர்க்கும் அன்பர்க் களிப்பவன், துன்பஇன்பம்
படக்களி யாவண் டறைபொழிற் றில்லைப் பரமன்வெற்பிற்
கடக்களி யானை கடிந்தவர்க் கோஅன்றி நின்றவர்க்கோ
விடக்களி யாம்நம் விழுநக ரார்க்கும் வியன்முரசே. 297

''தொல் மாலயன்'' என்பது முதலாகத் தொடங்கி யுரைக்க.

''பூரண பொற்குடம்'' என்புழி நிலைமொழி வடசொல்லா தலின் பகரம் மிகாதாயிற்று. பூரணம் - நீரால் நிறைந்திருத்தல். ''வைக்க'' என்றது, தன்மைப் பன்மைக்கண் வந்த வியங்கோள். பூரண கும்பமும், தோரணமும் வாயிலிடத்து வைக்கவும், நாட்டவும் படுவன என்க. தொல் மால் அயன் - பழையோ ராகிய மாலும், அயனும். 'அவர்கட்குக் காரணன்' என்றது, 'அவர்களையும், தோற்றியும், ஒடுக்கியும் நிற்பவன்' என்றவாறு. ஏர் அணி கண் நுதலோன் - அழகு செய்கின்ற கண்ணை யுடைய நெற்றியை யுடையவன். வார் அணவும் முலை - கச்சைப் பொருந்திய தனம். இம் மூன்று சொல்லும் ஒருசொல் தன்மைப் பட்டு ஆகுபெயராயின. ஏங்கும் - ஒலியாநின்றது.

சிவபெருமான் தொல்லோர்க்குந் தொல்லோனாய், மேம் பட்ட இயல்பினை யுடையனாதல் கூறப்பட்டது.

297. ஐயுற்றுக் கலங்கலாவது, ஊரவர் மணமுரசு கேட்டு ஊரை ஒப்பனை செய்கின்ற நிலைமைக்கண் தலைவி, 'நம் மனை யிடத்து ஒலிக்கும் இம் மணமுரசு, எம்பெருமான் பொருட்டோ, பிறர்பொருட்டோ' என ஐயமுற்றுக் கலங்குதல். இதற்குக் கொளு :-

நல்லவர் முரசுமற் றல்லவர் முரசெனத்
தெரிவரிதென அரிவை கலங்கியது.

''துன்ப இன்பம் பட'' என்றதனை முதலிற் கூட்டி, 'பிறவிக்கண் மாறிமாறி வருகின்ற துன்பமும், இன்பமும்கெட' என உரைக்க.

அடல் களி - உறுதியான இன்பம்; பேரின்பம். யாவர்க் கும் அன்பர்க்கு அளிப்பவன் - யாவர்க்கும், ஆனால், அன்புடைய

33. நிதிவரவு கூறுநிற்றல்

என்கடைக் கண்ணினும் யான்பிற ஏத்தா வகைஇரங்கித்
தன்கடைக் கண்வைத்த தண்தில்லைச் சங்கரன் தாழ்கயிலைக்
கொன்கடைக் கண்தரும் யானை கடிந்தார் கொணர்ந்திறுத்தார்
முன்கடைக் கண்இது காண்வந்து தோன்றும் முழுநிதியே. 298

வர்க்கு அளிப்பவன். கடக் களியானை - மதத்தாலாகிய மயக்கத்தை யுடைய யானை. நின்றவர்க்கோ - ஒழிந்து நின்றவர் பொருட்டோ. விடக் களி ஆம் - மிகவும் களிப்புடையதாகிய. விழு நகர் - மேலான மனை. வியன் முரசு - பெரிய முரசு.

சிவபெருமான் பிறவித்துன்பத்தைப் போக்கி வீட்டின்பத்தைத் தருவோனாதல் கூறப்பட்டது.

298. நிதிவரவு கூறுநிற்றலாவது, முரசொலிகேட்டு ஐயுற்றுக் கலங்கிய தலைவிக்குத் தோழி, 'நமர் வேண்டியவாறே நம் தலைவர்விடுத்த முழுநிதி இது; இதனை நீ காண்பாயாக' எனக் கூறுதல். இதற்குக் கொளு :-

மகிழ்தரு மனத்தொடு வன்புகழ்த் தோழி
நிகழ்நிதி மடந்தைக்குத் தெரிய வுரைத்தது.

என் கடைக்கண்ணினும் - எனது இறுதிக்காலத்திடத்தும். பிற - பிற தெய்வங்களை. "மற்றோர் தேவர் எத்தேவர் என்ன - அருவராதவரைக்கண்டால் அம்மநாம் அஞ்சுமாறே" என அடிகள் திருவாசகத்தும் (அச்சப்பத்து - 2) அருளியது காண்க. தாழ் - தாங்குகின்ற. 'கொன் கடிந்தான்' என இயைத்து, 'தமக்கு ஒரு பயன் கருதாது கடிந்தார்' என உரைக்க. கடைக்கண் தரும் - நமக்கு இறுதியில்லையைத் தருவதாகிய. இறுத்தார் - கொணர்ந்து வைத்தார். கடைக்கண் - வாயிலிடத்து. 'கடைக்கண் முன்வந்து தோன்றும் முழுநிதி இது; காண்' என்க. முழுநிதி - நமர் கூறிய அளவில் குறையாத நிதி. "கொன்" என்றதனை அச்சமாக்கி, 'அதனைத் தரும் கடைக்கண்ணையுடைய யானை' என்பர் பழைய உரையாசிரியர். அவர், இத்துறையை நற்றாய்க்கு உரைத்தலாக உரைப்பர்.

சிவபெருமான் பக்குவம் உடையார்க்கு என்றுந்திரிபில்லாத தனது ஞானத்தை வழங்குதல் கூறப்பட்டது.

கற்பு

[ஐந்திணை அகப்பொருளில் களவிற்குப்பின் நிகழ்வது கற்பு. அஃதாவது, தலைவன் தலைவியை இருமுதுகுரவர் முதலியோர் இயைந்து கொடுப்ப, அந்தணர், சான்றோர், சுற்றத்தோர் முதலியோர் சான்றாக எரி முன்னர்ச் சடங்கு முறையான் ஏற்றுப் பின் இல்லறம் நடாத்துதல். இது 'கந்திருவம் ஒழிந்த மணத்தினும் உளதாயினும், ஒத்த அன்புடைய சிறப்புப் பற்றி இவ்வைந் திணைக் கற்பே சிறந்தெடுத்துக் கூறப்படும்.

சடங்கியற்றிக்கொண்ட பின்னர் நிகழ்வனவே கற்பாயினும், உடன்போக்கும் அறத்தொடு நிலையும் களவை வெளிப்படுத் தலின் கற்பின்பால எனப்படும். உடன்போக்கு நிகழ்ந்த விடத்துத் தலைவன் தலைவியைத் தன் ஊரின்கண்ணே அவள் தமரின்றியும் வரைந்து கொள்ளுதல் உண்டு. மீண்டு வந்து அவள் தமர் கொடுப்பவரைந்துகொள்ளுதலும் உண்டு. இஃது உடன்போக்கின்றி நிகழ்ந்த கற்பாம்.

19. மணஞ்சிறப் புரைத்தல்

மணம் சிறப்புரைத்தல் என்பது, தலைவனது வரைவு சிறந்து நிற்றலைத் தோழி தலைமகட்குக் கூறலும், பின் தன் னுள்ளே கூறலும், வரைவு நிகழ்ந்த பின்னர் வாழ்மனை காண வந்த செவிலிக்குத் தோழி, வரைவிற்கு ஏதுவாய் நின்ற தலை மகனது காதல் சிறந்து நிற்றலைக் கூறுதலும், பின்னர்ச் செவிலி சென்று நற்றாய்க்கு அவரது மணவாழ்க்கை சிறந்து நிற்றலைக் கூறுதலுமாம். மணம் சிறப்பு - வரைவு மாட்சிமைப்படுதல். 'மணம் சிறப்பு உரைத்தல்' என்பது, இவ்வாறெல்லாம் பொருள்படுதற்கேற்றவாறு பொதுவாய் நின்றது. இதனை அடிகள் ஒன்பது துறையாக வகுத்து அருளிச்செய்வர். அதனைக் கூறும் நூற்பா வருமாறு :-

[1] மணமுரசு கூறல், [2] மகிழ்ந்துரைத் தல்லொடு
[3] வழிபாடு கூறல், [4] வாழ்க்கைநலங் கூறல்,
[5] காதல்கட் டுரைத்தல், [6] கற்பறி வித்தல்
[7] கற்புப்பயப் புரைத்தல், [8] காதல்மரு வுரைத்தல்,
[9] கலவி யுரைத்தல் கருதிய ஒன்பதும்
நலமிகு மணம்இவை நாடுங் காலே.]

1. மணமுரசு கூறல்

பிரசந் திகழும் வரைபுரை யானையின் பிடறித்தார்
முரசந் திகழும்; முருகியம் நீங்கும்; எவர்க்குமுன்னும்
அரசம் பலத்துநின் ருடும் பிரானருள் பெற்றவரின்
புரைசந்த மேகலை யாய்,துயர் தீரப் புகுந்துநின்றே. 299

---

299. மணமுரசு கூறலாவது, தலைவிக்கு நிதி வரவு கூறிய தோழி, பின் தலைவனது மணமுரசு முழங்குதலை மகிழ்ந்தெடுத்துக் கூறுதல். இதற்குக் கொளு :-

வரைவு தோன்ற மகிழ்வுறு தோழி
நிரைவளைக்கு நின்றுரைத்தது.

"எவர்க்கும் முன்னும் அரசு" என்பது முதலாகத் தொடங்கி, "புகுந்து நின்று" என்றதனை, "முரசம்" என்பதன் பின் கூட்டி யுரைக்க.

பிரசம் திகழும் - தேன் விளங்குகின்ற; இது, வரைக்குச் சிறப்பு. வரை புரை - மலையை ஒத்த. பிடு - ஆண்மை. முரசிற்குத் திகழ்ச்சி ஒலித்தலாதலின், "முரசம் திகழும்" என்றதற்கு, "முரசு ஒலியாநின்றது" என உரைக்க. முருகு இயம் நீங்கும் - வேலன் வெறியாட்டிற்கு முருகனுக்கு எனக் கொண்ட வாச்சியம் அகன்றது; 'இனி நாம் என்ன குறையுடையேம்' என்பது குறிப்பெச்சம். 'முருகுங் கமழும் என்று பாடம் ஓதி, கலியாணத்திற்கு உறுப்பாம் நறுவிரை நாறுகின்றன என்றுரைப்பாரும் உளர்' என்பர் பேராசிரியர். முன்னும் அரசு - முன்னுள்ள தலைவன். ஆடும் பிரான் - கூத்தப் பெருமான். புரை சந்த மேகலை - உயர்ந்த அழகிய மேகலை. 'நாம் துயர் தீர' என எழுவாய் வருவிக்க. புகுந்து நின்று - நம் இல்லின்கண் புக்குநின்று; என்றதனால் மண நிகழ்ச்சி கூறினாள்.

சிவபெருமானது திருவருளைப் பெற்றோர் வேண்டியவற்றை வேண்டியவாறே பெற்றுத் துன்பமின்றி இருத்தல் கூறப்பட்டது.

2. மகிழ்ந்துரைத்தல்

இருந்துதி என்வயிற் கொண்டவன், யான்எப் பொழுதுமுன்னும்
மருந்து, திசைமுகன் மாற்கரி யோன் தில்லை வாழ்த்தினர்போல்
இருந்து திவண்டன வால்,எரி முன்வலஞ் செய்திடப்பால்
அருந்துதி காணு மளவும் சிலம்பன் அருந்தழையே. 300

---

300. மகிழ்ந்துரைத்தலாவது, மணமுரசு கூறி மகிழ்ச்சி யுற்ற தோழி மணத்தின் சிறப்புக் கண்டு, அதுகாறும் தலைவி ஆற்றியிருந்த அருமையைத் தன்னுள்ளே மகிழ்ந்து கூறுதல். இதற்குக் கொளு :-

மன்னிய கடியிற் பொன்னறுங் கோதையை
நன்னுதற் றோழி தன்னின் மகிழ்ந்தது.

'சிலம்பன் அருந்தழை இடப்பால் எரிமுன் வலம் செய்து அருந்துதி காணும் அளவும் தில்லை வாழ்த்தினர்போல் இருந்து திவண்டன' எனக் கூட்டி யுரைக்க.

இருந் துதி - பெரிய புகழ்ப்பாட்டு. "என்வயின்" என்றது இசை யெச்சத்தால், 'கடையேனாகிய என்னிடத்து' எனப் பொருள் தந்து நிற்றலின், 'உயர்ந்தார் வாயிடத்து வைத்துத் தான்பெறும் பெரிய புகழ்ப்பாடல்களை, இழிந்தேனாகிய என் வாயிடத்தும் வைத்துப் பெற்றவன்' எனஉரைக்க. "நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனை" என்ற திருவாசகத்தை நோக்குக (திருக்கோத்தும்பி - *13*). உன்னும் மருந்து - நினைத்துப் பயன்கொள்ளும் மருந்து. 'இம்மருந்தால் தீர்க்கப் படும் நோய், பிறவி நோய்' என்க. உன்னும், உளதைய மிலதுணர்வாய் ஒவாது - மன்னுபவம் தீர்க்கும் மருந்து' என்பது காண்க (திருவருட்பயன் - *10*). இருந்து - வாடாது நின்று. திவண்டன - விளங்கின. ஆல், அசைநிலை. 'வாலெரி' என்பர் பழைய உரையாசிரியர். இடப்பால் - மணமன்றத்துக் கண்; 'வசிட்டனது இடப்பால் உள்ள' என்பர் உரையாளர். அருந்துதி, 'அருந்ததி' என்பதன் மரூஉ. "இடப்பால் எரி முன் வலம் செய்து அருந்துதி காணுமளவும்" என்றது, 'மணவினை நிகழுமளவும்' என்றதாம். இதனால், மணவினை

3. வழிபாடு கூறல்

சீரியல் ஆவியும் யாக்கையும் என்னச் சிறந்தமையால்
காரியல் வாட்கண்ணி எண்ணகலார்கம லங்கலந்த
வேரியுஞ் சந்தும் வியல்தந் தெனக்கற்பின் நிற்பர்அன்னே,
காரியல் கண்டர்வண் தில்லை வணங்குமெங் காவலரே. 301

முறைமைவகுத்துக் கூறப்பட்டவாறு அறிக. 'சிலம்பன் அருந்தழை இதுகாறும் இவள்பால் வாடாதுநின்று விளங்கின' என்றது. 'இவள் அத்தழையே பற்றுக்கோடாக இதுகாறும் ஆற்றி யிருப்பச்செய்தது தெய்வம்; இனி இவட்கு இடர் இல்லை' என மகிழ்ந்துரைத்தவாறு.

சிவபெருமானது தலத்தை வாழ்த்தினர் வாட்டமின்றி நீடு வாழ்தல் கூறப்பட்டது.

301. வழிபாடு கூறலாவது, மணம் செய்து மனையறம் படுத்தபின்னர் மணமனை காணவந்த செவிலிக்குத் தோழி தலைவன் தலைவியது வழிபாட்டின்கண் பொருந்தி நிற்றலைக் கூறுதல். இதற்குக் கொளு ;-

மணமனை காண வந்தசெவி லிக்குத்
துணைமலர்க் குழலி தோழி சொல்லியது.

"அன்னே" என்பது முதலாகத் தொடங்கி யுரைக்க.

என்ன - என்று, கண்டார் சொல்லும்படி. வாட்கண்ணியது எண் அகலார்' என்க. எண் - கருத்து. அகலார் - கடவார். வேரி - தேன். சந்து - சந்தனமரம். வியல்தந்தென - ஒன்றற்கு ஒன்று பெருமை தந்தாற்போல. சந்தன மரத்தில் வைக்கப்பட்ட தேன் மணமுடையதாய்ச் சிறக்கும்; தேன் வைக்கப்பட்ட சந்தனமரம் அது காரணமாகப் பெரிதும் போற்றப்படும் என்க. கற்பு தலைவி தனக்கு இருமுதுகுரவரும், சான்றோரும் கற்பித்தவழிச் செய்யும் வழிபாடுகள். அவற்றின் கண் தலைவன் நிற்றலாவது, மகிழ்ச்சியால் மனம் பிணிப்புண்டு நிற்றல். ஆவியும், தேனும் தலைவிக்கும், யாக்கையும், சந்தும் தலைவற்கும் உவமை என்க. கார்இயல் கண்டர் - மேகம்

4. வாழ்க்கை நலங் கூறல்

தொண்டின மேவுஞ் சுடர்க்கழ லோன்தில்லைத் தொல்நகரிற்
கண்டின மேவுமில்; நீஅவள்; நின்கொழு நன்செழுமென்
தண்டின மேவுதிண் தோளவன்; யானவள் தற்பணிவோள்;
வண்டின மேவுங் குழலாள் அயல்மன்னும் இவ்வயலே. 302

போலும் நிறத்தையுடைய கண்டத்தையுடையவர். 'இவரது தில்லை வணங்கும் காவலர்' என்றதனால், 'இவர் இன்றுபோலே என்றும் இருப்பர்' என்பது கூறினாள் என்க.

சிவபெருமானது தலத்தை வணங்குவோர் நிலைபெற்ற நல்லொழுக்கம் உடையராதல் கூறப்பட்டது.

302. வாழ்க்கைநலம் கூறலாவது, மணமனையிடத்துச் சென்று, தோழி தலைவியது வழிபாடு கூறக்கேட்ட செவிலி, பின் சென்று அவளது வாழ்க்கை நலத்தை நற்றாய்க்குக்கூறுதல். இதற்குக் கொளு :-

மணமனைச் சென்று மகிழ்தரு செவிலி
அணிமனைக் கிழத்திக் கதன்சிறப் புரைத்தது.

"தொண்டு இனம் மேவும்" என்றதற்கு, 'அடியார் கூட்டத்தைப் பொருந்துகின்ற' எனவும், 'அடியார் கூட்டத்தால் பொருந்தப்படுகின்ற' எனவும் இருபொருளும் கொள்க. மேவுதல், திருவடிக்குச் சிறப்பு. கண்டு - கண்டேன். 'கண்டவை யாவை எனின்' என்று எடுத்துக்கொண்டுரைக்க. 'இல், நம் மேவும் இல்; அவள், நீ; திண்தோளவன் நின் கொழுநன்; அவட்பணிவோள் யான்; அவள் அயல் இவ்வயல்' என்க. இவற்றால், 'நின்மகள் வாழ்க்கை நின்வாழ்க்கையோடே முழுவதும் ஒத்திராநின்றது' என்றாள் என்க. 'செழுமென் தோள்' எனவும், 'தண்டினம் மேவு தோள்' எனவும் தனித்தனி முடிக்க. மகளிர் உறுதற்கு இனியவாம் என்றற்கு, 'மென்றோள்' என்றாள். தண்டு இனம் மேவும் - தண்டின் இனத்தன்மையைப் பொருந்திய. "அவட் பணிவோள்" என்றது தோழியை, அவ்விடத்து வந்த 'தன்', சாரியை.

5. காதல் கட்டுரைத்தல்

பொட்டணி யான்நுதல் போய்இறும் பொய்போல்
[இடையெனப்;பூண்
இட்டணி யான்;தவி சின்மல ரின்றி மிதிப்பக்கொடான்;
மட்டணி வார்குழல் வையான் மலர்வண் டுறுதலஞ்சிக்;
கட்டணி வார்சடை யோன்தில்லை போலிதன் காதலனே. 303

மன், உம் அசைநிலைகள். அயல் - வாழ்வின்ற குழல். "கண்டில்" என்றதில், 'கண்ட' என்பதன் ஈற்றகரம் தொகுக்கப் பட்டதாக உரைப்பர் உரையாளர்.

சிவபெருமான் தன் அடியாரோடு அளவளாவி நிற்றல் கூறப்பட்டது.

303. காதல் கட்டுரைத்தலாவது. நற்றாய்க்குத் தலைவியது வாழ்க்கை நலம் கூறிய செவிலி, பின் தலைவன் தலைவியிடத்துக் கொள்ளும் காதல் மிகுதியை அவட்கு உறுதிப்படக் கூறுதல். இதற்குக் கொளு:-

சோதி வேலவன் — காதல்கட் டுரைத்தது.

ஈற்றடியை முதலிற்கொண்டு, "பொட்டணியான் நுதல்" என்றதனை முடிவின்கண் வைத்துரைக்க.

'பொய்போல் இடை போய் இறும் என்னப் பூண் இட்டு அணியான்' என்றும், 'வண்டு உறுதல் அஞ்சி மட்டு அணி வார்குழல் மலர் வையான்' என்றும் மாற்றிக் கொள்க. தவிசில் - கட்டிலிடத்து. மலர் இன்றி - மலர் இல்லாமல். 'மலர் அன்றி' எனப் பாடம் ஓதினர் பேராசிரியர். கொடான் - வாய்ப்புத் தரமாட்டான். மட்டு - தேன். அணி - அழகிய. "பொட்டு நுதல் அணியான்" என்றதற்கு, 'இவற்றையெல்லாம் சொல்லுவதென்னே, திலகமும் அவட்குப் பாரமாம் என்று அதனையும் அவளது நெற்றியில் அணிய மாட்டான்' என உரைக்க. கட்டு - முடியாகச் சேர்த்துக் கட்டிய.

சிவபெருமானது தவக்கோலச் சிறப்புக் கூறப்பட்டது.

6. கற்பறிவித்தல்

தெய்வம் பணிகழ லோன்தில்லைச் சிற்றம் பலம்அனையாள்
தெய்வம் பணிந்தறி யாள்என்றும்; நின்று திறைவழங்காத்
தெவ்வம் பணியச்சென் றாலுமன் வந்தன்றிச் சேர்ந்தறியான்;
பௌவம் பணிமணி யன்னார் பரிசின்ன பான்மைகளே. 304

---

304. கற்பறிவித்தலாவது, நற்றாய்க்குத் தலைவனது காதல் மிகுதி கட்டுரைத்த செவிலி, பின் தலைவியது கற்பின் சிறப்பை அவட்கு அறிவித்தல். இதற்குக் கொளு :-

விற்பொலி நுதலி — கற்பறி வித்தது.

"தெய்வம் பணி கழலோன்" என்றதற்குப் 'பிறரால் தொழப்படும் தெய்வங்களால் வணங்கப்படும் திருவடிகளை யுடையவன்' என உரைக்க. "தொழப்படுந் தேவர் தொழப் படுவானை" என்ற அப்பர் திருமொழியைக் காண்க (திருமுறை 4. 112. 5). என்றும் தெய்வம் பணிந்தறியாள் - எக்காலத்தும் தன் கொழுநனை யன்றி வேறு தெய்வத்தை வணங்கியறியாள். நின்று - முன்வந்துநின்று. தெவ் அம்பு அணியச் சென்றாலும் - பகைவர்மேல் அம்பைப் பொழியச் சென்ற காலத்தும். 'தெவ்வம் பணியச் சென்றாலும்' என்றே வைத்து, 'தெவ்வு தெவ்வம் என விரிக்கும் வழிவிரிந்து நின்றது என்பர் பேராசிரியர். மன் - தலைவன் : இதனை, "நின்று" என்றதற்கு முன்னே கூட்டுக. சேர்ந்தறியான் - அவ்விடத்து (பாசறையிடத்து)த் தங்கியறியான். பௌவம் பணி மணி அன்னார் பரிசு - கடல் பயந்த முத்துப்போல உயர்குடிப் பிறந்தாரது இயல்பு. இன்ன பான்மைகள் - இம்முறைமையாய் இருந்தன. பௌவம் பணி மணி என்பதற்கு, 'கடல் தந்த முத்தும், பாம்பு தந்த சிகாமணியும்' என்று உரைப்பர் பழைய உரையாசிரியர்.

சிவபெருமானது முழுமுதற்றன்மை கூறப்பட்டது.

7. கற்புப் பயப்புரைத்தல்

சிற்பந் திகழ்தரு திண்மதில் தில்லைச்சிற் றம்பலத்துப்
பொற்பந்தி யன்ன சடையவன் பூவணம் அன்னபொன்னின்
கற்பந்தி வாய்வட மீனுங் கடக்கும் படிகடந்தும்
இற்பந்தி வாயன்றி வைகல்செல் லாதவன் ஈர்ங்களிறே. 305

---

305. கற்புப் பயப்பு உரைத்தலாவது, நற்றாய்க்குத் தலைவியது கற்பின் பெருமையை அறிவித்த செவிலி, பின் அக்கற்புப் பயன் தருமாற்றை அவட்குக் கூறுதல். இதற்குக் கூறுதல்,

கற்புப் பயந்த — அற்புத முரைத்தது.

பொற்பு - சடையினது அழகு. அந்தி - அந்திவானத்தினது அழகு. 'பொன் பந்தி அன்ன சடை எனப்பிரித்து, 'பொற் றகட்டினது நிரைபோலும் சடை' என உரைப்பர் உரையாளர். பூவணம், ஒருசிவதலம். 'பொன்'' என்றது தலைவியை. 'அவளது கற்பு வடமீனின் கற்பையும் கடக்கும்' என்க. 'வடமீன் அந்திக்காலத்தன்றி வணங்கப்படாது; இவள் எப்பொழுதும் வணங்கப்படுவாள்' என்றற்கு, ''அந்திவாய் வடமீன்'' என்றாள். கடக்கும் - வெல்லும். இதன்பின் 'அதனால்' என்னும் சொல்லெச்சம் வருவிக்க. படி - வாயில். இதற்கு 'நிலம்' என்று உரைத்த பேராசிரியர் உரை சிறவாது. ''கடந்தும்'' என்றது, 'கடந்தாலும்' என்றவாறு. உம்மை எதிர்மறை. இல் பந்திவாய் அன்றி - இல்லின்கண் பந்தியிடத்தன்றி. வைகல் செல்லாது - வெளியிடத்தே தங்குதல் நிகழாது. ஈர்ங்களிறு - மதத்தால் நனைந்த களிறு, 'அவன் களிறு வாயில் கடந்துசெல்லுதல் இல்லை; ஒரோவொருகாற் செல்லினும், விரையவந்து புகும்' என்றது', தலைவியது கற்பின் ஆற்றலால் தலைவற்குப் பகைவர் உளராகாமையும், ஒருவர் இருவர் உளராயினும் அவரை எளிதின் வேறலும் நிகழும்' என அவளது கற்புப்பயத்தலைச் செவிலி கூறினாள் என்க. கற்புடை மனைவியை எய்தினார்க்கு இன்னபயன்கள் உளவாதல் பற்றியன்றே திருவள்ளுவரும், ''பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும் — திண்மையுண் டாகப் பெறின்'' என்றார் என்க (குறள் - 54.).

8. மருவுதல் உரைத்தல்

மன்னவன் தெம்முனை மேற்செல்லு மாயினும் மால்அரியே
றன்னவன் தேர்புறத் தல்கல்செல் லாது; வரகுணனுந்
தென்னவன் ஏத்துசிற் றம்பலத் தான்மற்றைத் தேவர்க்கெல்லாம்
முன்னவன் மூவலன் ஞாலும்மற் றோர்தெய்வ முன்னலளே. 306

சிவபெருமானது திருக்கோலம், கண்டாரது நெஞ்சை ஈர்க்கும் தன்மையதாதல் கூறப்பட்டது.

306. மருவுதல் உரைத்தலாவது, நற்றாய்க்குத் தலைவியது கற்புப்பயப்பு உரைத்த செவிலி, பின் அவ்விருவரும் ஒன்றி வாழும் முறைமையை அவட்குக் கூறுதல். இதற்குக் கொளு:-

இருவர் காதலும் — மருவுதல் உரைத்தது.

'மன்னவன் செல்லுமாயினும்' என்று இயைத்து, 'அம் மால் அரியேறு அன்னவன்' எனச்சுட்டு வருவித்து உரைக்க. இவ்வாறன்றி, 'மன்னவன் ஏவ, அவனது தெம்முனைமேற் செல்லுமாயினும்' என உரைத்தல், இங்குக் கூறப்படும் பொருவிறந்த தலைவற்கு ஏலாது என்க. அல்கல் செல்லாது - தங்குதல் நிகழாது. தென்னவன் - பாண்டியன். அடிகள் குறித்த வரகுணபாண்டியன், "பெரிய அன்பின் வரகுணதேவன்" எனப் பட்டினத்து அடிகளால் போற்றப்பட்ட (திருமுறை-11 திருவிடைமருதூர் மும்மணிக்கோவை - 28.) வரகுணனுவன். அவன் ஏத்து சிற்றம்பலத்தான் என்றாராயினும், 'அவன் சிவ பெருமானை ஏத்தியது மதுரையிடத்தும், இடைமருதிடத்தும்' எனப் பொதுவகையாற் கொள்ளுதலும் பொருந்துவதேயாம். இவனது வரலாறு திருவிளையாடற் புராணங்களுட் கூறப் பட்டது. மூவல், ஒரு சிவதலம். இது தேவார வைப்புத் தல மாம். முன்னலள் - நினையாள். 'இவ்வாறிருந்தது இவர் தம் ஒற்றித்த காதல்' என்றவாறு.

சிவபெருமான், அன்பர்க்கு இன்பப் பொருளாயும், தேவர்க்கெல்லாம் முன்னேனுயும் நிற்றல் கூறப்பட்டது.

66

9. கலவியின்பங் கூறல்

ஆனந்த வெள்ளத் தழுந்துமொர் ஆருயிர் ஈருருக்கொண்
டானந்த வெள்ளத் திடைத்திளைத் தாலொக்கும்; அம்பலஞ்சேர்
ஆனந்த வெள்ளத் தறைகழ லோன்அருள் பெற்றவரின்
ஆனந்த வெள்ளம்வற் றாதுமுற் றாதிவ் வணிநலமே. 307

---

307. கலவி இன்பம் கூறலாவது, இருவரும் மருவி வாழ்தலை நற்றாய்க்கு உரைத்த செவிலி, பின், அவ்விருவரது இன்ப மிகுதியை அவட்குக் கூறுதல். இதற்குக் கொளு :-

நன்னுதல் மடந்தை நன்னலங் கண்டு
மகிழ்தூங் குளத்தோ டிருமைகூ றியது.

அழுந்தும் ஓர் ஆருயிர் - திளைக்கின்ற ஓர் அரிய உயிர். ஈர் உரு கொண்டு (ஓர் உடம்பால் துய்த்து நிரம்பாமையின்) இரண்டுடம்பைக் கொண்டுநின்று. "ஒக்கும்" என்ற எச்சத் தின் பின், இறுதிக்கண் நிற்கும் "ஆனந்தவெள்ளம்" என்பத னைக், கூட்டுக. "திளைத்தாலொக்கும்" என்றாராயினும், 'திளைத்த ஆனந்தத்தை ஒக்கும்' என்பது கருத்தாகக் கொள்க. 'ஆனந்த வெள்ளத்தைப் பெருக்கும் கழலையுடையோன்' என்க. "பெற்றவரின்" என்றது, ஆகுபெயராய், 'பெற்றவ ரது ஆனந்த வெள்ளம்போல' எனப் பொருள் தந்து, "வற்றாது", என்பதனோடு முடிந்தது. 'இன்னும், இவ்வணிநலமும் முற்றாது' என உரைக்க. அணிநலம் - அழகாகிய நன்மை; இளமை. முற்றாது - முதிராது. "ஒக்கும்" என்றதனை முற்றாக்கி, அதற்கு, 'இருவரது காதலும் களிப்பும்' என எழுவாய்கள் வருவித்துரைப்பர் பேராசிரியர். இப்பாட்டு, சொற்பொருட் பின்வருநிலையணி.

சிவபெருமானது திருவடி ஆனந்த வெள்ளத்தைப் பெருக்கி நிற்றலும், அவ்வெள்ளம் எக்காலத்தும் வற்றும் நிலைமையின்றா தலும் கூறப்பட்டன. தலைமக்களது கலவி இன்பச் சிறப்புக் கூறுவார் போல அருளிச்செய்யினும், இப்பாட்டினுள் அடி கட்குச் சிவானந்த வெள்ளத்தின்மேல் உள்ள வேட்கை இனிது புலப்பட்டு நிற்றல் காண்க. 'அணிநலம் முற்றாது' என்றதும்,

சிவானந்தத்தை எய்திநின்ற உயிர், பின் வேறுபாடெய்தாமை கூறியதேயாம்.

மணம் சிறப்புரைத்தலாகிய இவ்வதிகாரத்துள் அடிகள், உயர்ந்தோர் வேண்டும் உலகியல் இதுவென்பது புலப்படுத்த வாறு அறிக.

களவின்கண் கூட்டமும், கற்பின்கண் பிரிவும் மிக்குத் தோன்றுமாதலின், இனி வருவன வெல்லாம் பிரிவே யாம் என்க.

முக்கு ணம்புல னைந்துட னடக்கி
மூல வாயுவை யெழுப்பிரு வழியைச்
சிக்கெ னும்படி யடைத்தொரு வழியைத்
திறந்து தாண்டவச் சிலம்பொலி யுடன்போய்த்
தக்க வஞ்செழுத் தோரெழுத் துருவாந்
தன்மை கண்டரு டரும்பெரு வெளிக்கே
புக்க ழுந்தின ரெமதுருப் பெறுவார்
புவியில் வேட்டுவ னெடுத்தமென் புழுப்போல். 111

பரந்த வான்கலை முழுதுமா கமநூற்
பகுதி யும்பல சமயசாத் திரமுந்
தெரிந்து தேர்ந்ததில் வாய்ந்தமுப் பொருளின்
செய்தி யேபொரு ளெனமனந் தெளிந்து
புரிந்து போந்துள சிற்றறி வனைத்தும்
போக்கி யவ்வறி வெனச்சிவ போதம்
விரிந்து தோன்றுநெஞ் சுடையவித் தகரே
மேன்மை யானநம் மெய்ப்பதம் பெறுவார். 112

— திருவாதவூரடிகள் புராணம்.

20. ஓதற் பிரிவு

[தலைவன் தலைவியை வரைந்துகொண்டு இல்லறம் நடாத்து தலாகிய கற்பொழுக்கத்தின்கண் இடையிடையே பலவாற்றால் தலைவியைத் தலைவன் நாடிடையிட்டும், காடிடையிட்டும் பிரிதல் உளவாகும். கடல் கடந்தும் பிரிந்து செல்லுதல் உண்டு. அப் பிரிவுகள், 'ஓதற் பிரிவு, காவற் பிரிவு, தூதிற் பிரிவு, துணை வயிற் பிரிவு, பொருள்வயிற் பிரிவு, பரத்தையிற் பிரிவு' என ஆறாகும்.

அவற்றுள் 'ஓதற் பிரிவு' என்பது, அறம் முதலிய நான் கனையும் கூறும் பொருள் நூல்களையும், அவற்றை அறிவிக்கும் கருவி நூல்களையும் கற்றற்பொருட்டுப் பிரிதல். இது கல்வியிற் பிரிவு 'எனவும் கூறப்படும். அன்னதாயின் தலைவன் வரையுங் காறுங் கல்வியின்றி யிருந்தானோவெனின், அவ்வாறன்று; தன் நாட்டிடத்துத் தன்மொழியில் உள்ள நூல்களைக் கற்றதன்மேல் பிறநாட்டுள் பிறமொழிகளில் உள்ள நூல்களுட் சிறந்தன வற்றைக் கற்கவே பிரிவான். இனி, 'ஓதல்' என்பதற்கு, 'தான் கற்ற நூலைப் பிறர் முன் ஓதிக் காட்டுதல்' என்பதும் பொரு ளாகக் கொள்வர் களவியல் உரையாளர். இதனை, அடிகள் நான்கு துறைகளாக வகுத்து அருளிச்செய்வர். அதனைக் கூறும் நூற்பா வருமாறு :-

[1] கல்விநலங் கூறல், [2] பிரிவுநினை வுரைத்தல்,
[3] கலக்கங்கண் டுரைத்தல், [4] காதலர் தமது
வாய்மொழி கூறல், வருவன நான்கும்
இமையில் கல்வி தேருங் காலே.]

1. கல்விநலங் கூறல்

சீரள வில்லாத் திகழ்தரு கல்விச்செம் பொன்வரையின்
ஆரள வில்லா அளவுசென் றார்அம் பலத்துள்நின்ற
ஓரள வில்லா ஒருவன் இருங்கழல் உன்னினர்போல்
ஏரள வில்லா அளவின ராகுவர் ஏந்திழையே. 308

---

308. கல்விநலங் கூறலாவது, தலைமகனை வரைந்து கொண்டு இல்லறம் நடாத்துகின்ற தலைவன் ஓத நினைந்து,

௨. பிரிவுநினை வுரைத்தல்

விதலுற் றார்தலை மாலையன் தில்லைமிக் கோன்கழற்கே
காதலுற் றார்நன்மை கல்விசெல் வி,தரும் என்பதுகொண்
டோதலுற் றருற் றுணர்தலுற் றார்செல்லல் மல்லழற்கான்
போதலுற் றார்நின் புணர்முலை யுற்ற புரவலரே. 309

அதன்பொருட்டுத் தான் பிரிதலை உணர்த்துவானுய்க் கல்வியி னது நலத்தைத் தோழிக்குக் கூறுதல். இதற்குக் கொளு :-

கல்விக் ககல்வர் செல்வத் தவரெனச்
செறிகுழற் பாங்கிக் கறிவறி வித்தது.

சீர் - மேன்மை. 'அஃது அளவில்லாத கல்வி' எனவும், 'நிகழ்தரு கல்வி' எனவும் தனித்தனி இயைக்க. கல்விச் செம் பொன்வரை, உருவகம்; வரை - மலை. ஆர் அளவு - மிக்க அளவுகள். அவை, காதம், யோசனை முதலிய பெரிய அளவுகள். 'புகை' என்ற ஓர் அளவையும் குறிப்பிடுகின்றனர் முன்னை உரையாளர். ''அவை இல்லா அளவு'' என்றது, 'அவ்வள விற்கும் அடங்காத அளவு' என்றதாம். 'அவ்வளவுகாறும் சென்றார், அம்பலத்துள் நின்ற ஒருவன் கழல் உன்னினர்போல் ஏர் அளவில்லா அளவினராகுவர்' என்க. ஓர் அளவு இல்லா ஒருவன் - காட்சியும், கருதலும் முதலாய அளவைகளுள் ஓரள வையும் அளத்தற்காகாத ஒருவன். ஏர் - நன்மை. அளவில்லா அளவு - எல்லையில்லாத தன்மை. 'அதனால் யானும் அது விரும்பாநின்றேன்' என்பது குறிப்பெச்சம். இதனைத் தோழி தலைவிக்குக் கூறிய கூற்றாக வைத்துரைப்பர் பழைய உரை யாசிரியர். கொளுவையும் அதற்கேற்பப் பாடம் ஓதுவர் அவர்.

சிவபெருமான் காட்சி முதலிய அளவைகளால் அளக்க வாராதவனாதல் கூறப்பட்டது

309. பிரிவுநினை வுரைத்தலாவது, தலைமகன் கல்விநலங் கூறுமாற்றால், தனது ஓதற்பிரிவைக் குறிப்பான் உணர்த்தக் கேட்ட தோழி அதனைத் தலைவிக்குக் கூறுதல். இதற்குக் கொளு :-

3. கலக்கங்கண் டுரைத்தல்

கற்பா மதிற்றில்லைச் சிற்றம் பலமது காதல்செய்த
விற்பா விலங்கல்எங் கோனை விரும்பலர் போலஅன்பர்
சொற்பா விரும்பினர் என்ன,மெல் லோதி செவிப்புறத்துக்
கொற்பா இலங்கிலை வேல்உளித் தாங்குக் குறுகியதே. 310

கல்விக் ககல்வர் செல்வத் தவரெனப்
பூங்குழல் மடந்தைக்குப் பாங்கி பகர்ந்தது.

விதல்உற்றார் - இறந்தவர். தலை மாலை - தலைகளான் இயன்ற மாலை. 'கழற்கே காதல் உற்றாரது நன்மையைக் கல்வி தரும்' என இயையும். 'அவரது நன்மை' என்றது, அவர் பெறும் நன்மையை. செல்வி - செல்வத்தை யுடையவளே. கொண்டு - உளத்துக்கொண்டு. ஓதல் உற்றார் - ஓதலான் மிக்கவர். 'அவரை உற்று உணர்தல் உற்றார்' என்க. ''உணர்தல்'' என்றது, 'அவரது கல்வியளவைக் காண்டல்' எனவும் பொருள்படுவதாம். ''உணர்தல் உற்றார்'' என்றது முற்றெச்சம். செல்லல் - இன்னலைத் தருகின்ற. மல் அழல் கான் - மிக்க நெருப்பையுடைய காடு. புணர் முலை - நெருங்கிய தனங்கள். 'அவற்றைப் பொருந்திய' என்றதனால், 'அவ் வின்பத்தை நினைந்து நீட்டியாது வருவர்' எனவும், ''புரவலர்'' என்றதனால், 'நின் நலந்தொலையாமற் காப்பர்' எனவும் கூறித் தலைவியைப் பிரிவுடம்படுத்தினாள் என்க.

சிவபெருமானது அறிவிலாத் தன்மையும், அவனது திருவடிக்கண் அன்பு செய்நூல்களை மிகவும் கற்றார்க்கே உளதாதலும் கூறப்பட்டன.

310. கலக்கங்கண் டுரைத்தலாவது, தலைமகனது பிரிவைத் தோழி உணர்த்தக் கேட்ட தலைவி கலக்கங்கொள்ள அதனைக்கண்ட தோழி தன்னுள்ளே கூறுதல். இதற்குக் கொளு :-

ஓதற் ககல்வர் மேதக் கவரெனப்
பூங்கொடி கலக்கம் பாங்கிகண் டுரைத்தது.

4. வாய்மொழி கூறித் தலைமகள் வருந்தல்

பிரியா மையும்,உயிர் ஒன்று வதும்,பிரி யிற்பெரிதுந்
தரியா மையும் ஒருங் கேநின்று சாற்றினர், தையல்மெய்யிற்
பிரியாமை செய்துநின் றோன்தில்லைப் பேரியல் ஊரர்அன்ன
புரியா மையும் இது வேஇனி யென் நாம புகல்வதுவே. 311

கல் பா - கற்கள் பரந்த. 'காதல் செய்த எங்கோன்' என இயையும். வில் பா விலங்கல் - வில்லைப் பரந்த மலையாக உடைய. 'மலைவில்லாரை அறிந்து அன்பு செய்யாதாரன்றே, கல்வியென்னும் பல்கடலிடைப்பட்டு அலமருவர்! நம் தலைவர் அதனை விரும்பியது என்னோ' என்பாள், "விரும்பலர்போல, அன்பர், சொற்பா விரும்பினர்" என்றாள். இனி, 'விரும்பலர்' போலும்படி (வருந்தும்படி) அச்சொல் குறுகியது' எனலுமாம். சொல பா - சொல்லாலாகிய பாக்கள். என்ன - என்று யான் சொல்ல. 'அச்சொல்' என்னும் எழுவாய் வருவிக்க. 'செவிப் புறத்துக் குறுகியது' என்க. "புறம்" என்றது, 'இடம்', என்னும் அளவாய் நின்றது. கொல் பா இலங்கு இலை வேல்- கொல்லனது தொழில் பரந்த, விளங்குகின்ற, இலைவடிவாகச் செய்யப்பட்ட வேல். 'இனி இவள் ஆற்றுமாறு என்னோ' என்பது குறிப்பெச்சம்.

சிவபெருமானை விரும்பினர்க்குத் துன்பம் இன்றாதலும், விருப்பாதவர்க்குத் துன்பம் உளதாதலும் கூறப்பட்டன.

311. வாய்மொழி கூறித் தலைமகள் வருந்தலாவது, தனது கலக்கங்கண்டு தன்னுள்ளே சில சொல்லிய தோழிக்குத் தலைமகள் முன்னிலைப் புறமொழியாகத் தலைவன் முன்னர்ச் சொல்லிய வாய்மைகளை எடுத்துக்கூறி வருந்துதல். இதற்குக் கொளு :-

> தீதறு கல்விக்குச் செல்வன் செல்லுமெனப்
> போதுறு குழலி புலம்பியது.

" தையல்..........ஊரர் " என்பதனை முதலிற் கொள்க.

தரியாமை - ஆற்றாமை. நின்று - நம்முன் நின்று. 'தையல் தன் மெய்யினின்று பிரியாமையைச் செய்துநின்றேன்' என்க. 'இத்தன்மை யுடையோனது இல்லைக்கண் பயில்வோராகியும், பிரியத்துணிந்தது எவ்வாறு' என்பது கருத்து. பேரியல் ஊரர் - பெருந்தன்மையை உடைய ஊரர். "அன்ன" என்றது, பிரியாமை யொழிந்த ஏனை இரண்டையும். "புரியாமையும்" என்ற உம்மை இறந்தது தழுவிய எச்சம். இதுவே - பிரியாமை கூறிய இது போன்றதேயாம்; 'இதுபோலப் பொய்யேயாம்' என்றவாறு. அங்ஙனமானபின், 'நாம் புகல்வது என்' என்க. இனி, "அன்ன" என்றது, பிரியாமை முதலிய மூன்றை யுமே குறித்ததாக வைத்து, 'அவற்றை அவர் புரியாமை இது வேயாம்' என்று உரைத்தலுமாம். இப்பொருட்கு உம்மை, சிறப்பும்மையாம். 'இன்னல் புரியாமையும் இதுவே என்பதும் பாடம்' என்பர் பேராசிரியர்.

சிவபெருமான் நீங்காத திருவருளை யுடையனாதல் கூறப் பட்டது.

உருப்பொ லாதவ ரிழிகுலத் தவர்நல்
 லொழுக்க மில்லவ ரென்றுநம் மளவில்
விருப்பி லாதவ ரெனினுமெய்ந் நீறு
 மிக்க சாதன வேடமுங் கண்டாற்
றரிப்பி லாதுசென் றெதிருற வணங்கித்
 தக்க போனக மளித்தவர்க் கெளிதாய்
இருப்பர் தாமவ ரடியவர்க் கடியா
 ரென்பர் யானென தெனுஞ்செருக் கறுப்பார். 113

— திருவாதவூரடிகள் புராணம்.

21. காவற் பிரிவு

['காவற் பிரிவு' என்பது, நாடு முழுதும் சென்று மூத்தார், இளையார், நோயுற்றார் முதலியோர்க்கு முறை வழங்கியும், வளமற்ற இடங்களை வளப்படுத்தியும், தேவ கோட்டம் முதலிய வற்றின் அறங்களைச் செவ்வனம் நிகழ்வித்தும், வேற்றுவேந்தர் தம் ஒற்றர்கள் உளராயின் அவர் தாமே தனது ஆண்மையையும், மக்களது அன்பையும் உணரப் பண்ணியும், பிறவாறும் எல்லாம் நாட்டினைக் குறையின்றி இருக்கச் செய்தற்குப் பிரிதல். இவ்வா றன்றி நாடு பகைவரால் நலிவெய்தாவாறு காத்தற்குப் பிரிதல் என்பது பொருவிறந்த தலைவற்கு ஒவ்வாது என்க. இதனை அடிகள் இரண்டு துறைகளாக வகுத்து அருளிச்செய்வர். அவற்றைக் கூறும் நூற்பா வருமாறு :-

[1] பிரிவறி வித்தல், [2] பிரிவுகேட் டிரங்கல்
வருபவை இரண்டும் வையம் காவல்.]

1. பிரிவறிவித்தல்

மூப்பான், இளையவன், முன்னவன், பின்னவன், முப்புரங்கள்
வீப்பான், வியன்தில்லை யான்அரு ளால்விரி நீர்உலகங்
காப்பான் பிரியக் கருதுகின் றார்நமர்; கார்க்கயற்கட்
பூப்பால் நலமொளி ரும்புரி தாழ்குழற் பூங்கொடியே. 312

---

312. பிரிவறிவித்தலாவது, 'நம் தலைவர் காவற்குப் பிரிகின்றார்' எனத் தோழி தலைமகளுக்கு அறிவித்தல். இதற்குக் கொளு ;-

இருநிலங் காவற் கேகுவர் நமரெனப்
பொருசுடர் வேலோன் போக்கறி வித்தது.

மூப்பான் - பிறரது உடம்புகளைப் படைத்தற்குமுன் தன் இச்சையாற் கொண்ட திருமேனியனாகலின், அவர் எல்லார்க்கும் மூத்தோனாய் விளங்குவான். இளையவன் - காலம் பல செல்லி னும் திருமேனி என்றும் ஒருபடித்தாய் இருத்தலின், எல்லார்க் கும் இளையோனாய் விளங்குவான். முன்னவன் - உலகம் தோன்றுதற்கு நிமித்தமாய் நின்றவன். பின்னவன் - அஃது

2. பிரிவுகேட் டிரங்கல்

சிறுகட் பெருங்கைத்தின் கோட்டுக் குழைசெவி செம்முகமாத்
தெறுகட் டழியமுன் உய்யச்செய் தோர்,கருப் புச்சிலையோன்
உறுகட் டழலுடை யோன்உறை அம்பலம் உன்னலரின்
துறுகட் புரிகுழ லாய்இது வோஇன்று சூழ்கின்றதே. 313

ஒடுங்கிய பின்னும் அதற்குப் பற்றுக் கோடாய் உள்ளவன். விப்பான் - அழிப்பான். 'அழித்தான்' என்னாது, 'அழிப் பான்' என்றது, முப்புரத்தவர்போலும் கொடியோரைத் தெறுதல் அவனுக்கியல்பு என்பது பற்றி. "தில்லையான் அருளால்" என்றது, 'ஆண்மை யுடையார் பிறர்க்குக் குறை நீக்கி முறை வழங்கல் வேண்டும் என்பது நூல்களின்வழி அவன் இட்ட கட்டளையாகையால்' என்றவாறு. இதனனே, 'அன் புடையாரை வருந்தப் பண்ணுதல் தகாது என்பதும் அவன் ஆணையாதலின், நீட்டியாது வருவர்' என்பதும் கூறினுளாம். 'கார்க்கண், கயற்கண்' எனத் தனித்தனி இயையும். 'பானலம் பூ' என்றது, "பூப் பானலம்" என நின்றது. பானல் - நெய் தல். 'கண் பானலம் பூப்போல ஒளிரும் பூங்கொடியே' என்க. 'பூப் பால் நலம் ஒளிரும் குழல்' என வைத்து, 'பூவினிடத்து உள்ள நறுநாற்றமாகிய நன்மை விளங்கும் கூந்தல்' என உரைப்பர் பேராசிரியர்.

சிவபெருமானது திருமேனிச் சிறப்பு முதலிய பல சிறப்புக் களும் கூறப்பட்டன.

313. பிரிவுகேட் டிரங்கலாவது, தலைவன் காவற்குப் பிரிதலைத் தோழி அறிவிக்கக் கேட்ட தலைவி, 'அன்று யானை யைக் கடிந்து நம்மைக் காத்தவர், இன்று நினைப்பது இதுவோ' என இரங்கிக் கூறுதல். இதற்குக் கொளு:-

மன்னவன் பிரிவு நன்னுதல் அறிந்து
பழங்கண் எய்தி அழுங்கல் சென்றது.

குழை செவி - குழைந்த (மடங்கிய) காதுகள். செம்முகம் - புள்ளிகள் வாய்ந்த முகம், 'மாவினது கட்டு அழிய' என்க. கட்டு - வளைப்பு. 'கருப்புச் சிலையோனை உற்ற தழல்' என இயையும். கன் தழல் - கண்ணில் உள்ள நெருப்பு. ''உன்னலரின்'' என்றது, 'நினையாதவர் போல அன்பின்றி' என்றவாறு. 'துறுகுழல், கட்குழல்' எனத் தனித்தனி இயைக்க. ''இன்று'' என்றதனை, உய்யச் செய்தோர்'' என்றதன் பின்னர்க் கூட்டுக. ''முன்'' என்றது, 'காப்பவர் பிறர் உளராய அக்காலத்து' எனவும், ''இன்று'' என்றது, 'காப்பவர் பிறர் இல்லாது தாமேயாய இக்காலத்து', எனவும் பொருள்கொள்ளநின்றன. 'இவை இசை யெச்சம்' என்க.

சிவபெருமானை நினையாதவர் அன்பு முதலிய பண்புகள் இலராதல் கூறப்பட்டது.

விரிந்த சஞ்சித வினைகளன் புடனும்
  விழிக்க வெந்தன விரவுமிப் பிறப்பிற்
பொருந்தும் வல்வினை யுடலுட னகலும்
  புந்தி சேரருள் வருவினை போக்கும்
அருந்து யர்ப்பொரு ளுயிருடன் புனவே
  யல்ல நம்மன வாகுமிங் குனைப்போல்
இருந்த நங்குரு வடிவைநின் கருத்தி
  லிருத்து வாய்பொரு ளிதுவென மொழிந்தார். 114

அத்த னூர்திரு வாய்மலர்ந் தருளு
  மமல வாசகங் கேட்டக மகிழும்
பத்த னூர்தமக் கெழுபிறப் பறுக்கும்
  பாத மீதுறப் பணிந்தெதி ரெழுந்து
பித்த னனவென் னைதனக் கிரங்கும்
  பிஞ்ஞ காமிகப் பேதைமை யுடையேன்
முத்த னுகமெய் காட்டினை யெனவே
  மொழிந்த ழிந்துகைம் முடிமிசைக் குவித்தார். 115

— திருவாதவூரடிகள் புராணம்.

22. பகைதணி வினைப்பிரிவு

[பகைதணி வினைப் பிரிவு என்பது, வேந்தர் இருவர் தம்மிற் பகைத்து நின்றுரை அவர் போரான் வரும் அழிவிற்கு இரங்கி அப்பகைமை யொழிந்து பொருந்தி வாழப் பண்ணுதற்குப் பிரிதல். தமக்கும் அரசனுய இவன், தம் பகை தணிவிக்கத் தானே முன்னின்றமை நோக்கியாயினும், 'இவனது சொற் கடப்பின் நமக்கு ஏதமாம்' என்று அஞ்சியாயினும் இருவரும் தம் பகை யொழிந்து பொருந்தவர் என்க. 'தூதிற் பிரிவு' எனப்படுவதும் இதுவே. 'தூது' என்பது, ஒருவர் உரைக்கும் சொல்லை அவர் ஏவல்வழிச் சென்று பிறர்க்கு உரைப்பார்க்கும் பெயராய் நிற்றலின், பொருவிறந்த தலைவன் செய்யும் இச்சந்து வினையை, 'பகைதணி வினை' என்றுர். இதனை அடிகள், இரண்டு துறைகளாக வகுத்து அருளிச்செய்வர். அதனைக் கூறும் நூற்பா வருமாறு :-

> [1] பிரிவு கூறல். [2] வருத்தந் தணித்தல்
> இருபகை தணித்தற் கேகல் என்ப

இதனுள், 'இரண்டு' என்பது தொகுத்தலாயிற்று. 'இருவர் பகை' என்பது, 'இருபகை' என நின்றது.]

1. பிரிவு கூறல்

மிகைதணித் தற்கரி தாம்இரு வேந்தர்வெம் போர்மிடைந்த
பகைதணித் தற்குப் படர்தலுற் ருர்நமர்; பல்பிறவித்
தொகைதணித் தற்கென்னை யாண்டுகொண் டோன்தில்லைச்
[சூழ்பொழில்வாய்
முகைதணித் தற்கரி தாம்புரி தாழ்தரு மொய்குழலே. 314

---

314. பிரிவு கூறலாவது, 'ஒத்த வலிமையுடையவர் தம்மிற் பகைத்து ஒருங்கு மடியப் புக்கார் எனக் கேட்டு அவர் அங்ஙனம் மடியாது ஒன்றி வாழப் பண்ணுதற்பொருட்டு நம் தலைவர் நின்னைப் பிரியக் கருதுகின்றுர்' எனத் தோழி தலைமகளுக்குத் தலைமகனது பகைதணி வினைப்பிரிவைக் கூறுதல். இதற்குக் கொளு :-

2. வருத்தந் தணித்தல்

நெருப்புறு வெண்ணெயும் நீருறும் உப்பு மெனஇங்ஙனே
பொருப்புறு தோகை, புலம்புறல்; பொய்அன்பர் போக்கு;மிக்க
விருப்புறு வோரைவிண் ணேரின் மிகுத்துநண் ணார்கழியத்
திருப்புறு சூலத்தி னோன்தில்லை போலுந் திருநுதலே. 315

துன்னுபகை தணிப்ப மன்னவன் பிரிவு
நன்னறுங் கோதைக்கு முன்னி மொழிந்தது.

"பல்பிறவி" என்பது முதலாகத் தொடங்கி யுரைக்க.

மிகை - ஊக்க மிகுதி; இது தம் வலியும், துணைவலியும் பற்றி உளதாவது. (ஒருவரது ஊக்க மிகுதி மற்றொருவரால் தணித்தற்கு (குறைத்தற்கு) அரிதாய இருவேந்தர்' என்க. இதனால், 'இருவரையும் சந்து செய்வித்தல் நம் தலைவராலன்றிப் பிறரால் ஆகாது' என்பதும், 'இவர் சென்றவழி எளிதிற் சந்து கூடுமாதலின் நீட்டியார்' என்பதும் கூறினாளாம். மிடைந்த பகை - மிடைதற்கு ஏதுவாய் நின்ற பகை. 'தான் பிறவி நோய் தீர்க்கும் மருத்துவனாதலை மிக்க பிறவியையுடைய என்னிடத்துப் புலப்படுத்திற் சிறக்கும் என்னும் கருத்தால் என்னை ஆட்கொண்டான்' என்பான், "பல்பிறவித் தொகை தணித்தற்கு என்னை ஆண்டுகொண்டோர்" என்றான். 'அடிகள் அமைத்த அருள்நயமாகிய இது, 'தற்குறிப் பேற்றம்' என்க. முகை - போது. 'போதுகளும் மாற்றலாகாத நறு நாற்றத்தை யுடைய கூந்தலை' என்றவாறு.

சிவபெருமான் பிறவியாகிய பெருங்கடலினின்றும் கரை யேற்றுபவனாதல் கூறப்பட்டது.

315. வருத்தந் தணித்தலாவது, தலைவனது பகைதணி வினைப்பிரிவைத் தலைவிக்குக் கூறிய தோழி, அவள் அஃது ணர்ந்து வருந்துதல் கண்டு, அவ்வருத்தத்தைத் தணித்தல். இதற்குக் கொளு ;-

மணிப்பூண் மன்னவன் தணப்ப தீர்லை
அஞ்சல் பொய்யென வஞ்சியைத் தணித்தது.

"மிக்க விருப்புறுவோரை" என்பது முதலாகத் தொடங்கி, "பொருப்புறு தோகை" என்றதை, "திருநுதலே" என்றதன் பின்னர்க் கூட்டி உரைக்க. நெருப்புறு வெண்ணெய், உருகுதல் உணர்த்தற்கும், நீர் உறும் உப்பு கரைந்து கெடுதல் உணர்த்தற்கும் உவமையாய் வந்தன. 'அன்பர் போக்குப் பொய்' என மாற்றி "நெருப்புறு வெண்ணெயும்" என்றதற்கு முன்னே கூட்டுக. 'அன்பர் போக்கு பொய்' என்று கூறினாள், தலைவி ஆற்றுதற்பொருட்டு. விருப்பு - அன்பு. மிகுத்து - மேம்படச் செய்து. நண்ணார் - பகைவர். கழிய - அழியும்படி. திருப்புதல் - சுழற்றுதல். "திருநுதல்" என்ற விளியேற்ற ஆகுபெயர், 'நங்காய்' எனப் பொருள் தந்து, தில்லையோடு உவமிக்கப் படும் பொருளை யுணர்த்திற்று.

சிவபெருமான் தன் அன்பரைத் தேவரினும் மேலாகச் செய்தல் கூறப்பட்டது. "எப்புன்மையரை - மிகவே உயர்த்தி விண்ணோரைப் பணித்தி" என்ற திருவாசகத்தையும் காண்க. (திருச்சதகம் - 10).

என்ன வாகமுன் னினைந்துள பொருளு
மில்ல தாகிய வுடலமும் யானு
நின்ன வாகநின் னருள்கொடு நினைந்தே
னின்ம லாவென நின்றுநின் றுரையா
மன்னு தானைதம் மேலணி கலன்
கண் மதுரைமீனவன் வான்பொரு ளிறையோன்
முன்ன தாகவைத் திறைஞ்சின ரறஞ்சேர்
முதல்வ னார்முக மலர்வுகொண் டிருந்தார். 116

பெருந்துறை யுறைவா ரன்பு பெறுந்திரு வடிவ ராகி
இருந்தவர் தம்மின் மேன்மை யெய்தினர் முகத்தை நோக்கித்
திருந்திய பொருளி தெல்லாந் திருப்பணிக் களியு மேலாம்
அருந்தவர்க் குதவு மில்லா தலந்தவர்க் கருளு மென்றார். 117

— திருவாதவூரடிகள் புராணம்.

23. வேந்தற்குற்றுழிப் பிரிவு

[வேந்தற்கு உற்றுழிப் பிரிவு என்பது. தலைவன், தனக்கு நட்பினனாய அரசன் மாற்றரசனால் வலியிழந்து தன்னை வந்து அடைய, அவனுக்குத் துன்பம் வந்த அவ்விடத்து அதுநீக்கி அவனை விளங்கச் செய்தற்பொருட்டுப் பிரிதல். 'துணைவயிற் பிரிவு' எனப்படுவதும் இதுவே. இதனை அடிகள் பதினாறு துறைகளாக வகுத்து அருளிச்செய்வர். அவற்றைக் கூறும் நூற்பா வருமாறு :-

[1] பிரிந்தமை கூறல், [2] பிரிவாற் றாமை,
கார்மிசை வைத்தல், [3] காரை நோக்கி
வருந்தி யுரைத்தல், [4] மலர்க்குழ லரிவை
கூதிர்கண்டு கவறல், [5] குளிர்முன் பனிக்கவள்
நொந்து கூறல், [6] நோக்கிப் பின்பனிக்
கிரங்கி யுரைத்தல், [7] இளவேனில் கண்டவள்
இன்னல் எய்தல், [8] இதுஅவர் குறித்த
பருவ மாமென வரவு கூறல்,
[9] பருவம்மறைத் துரைத்தல், [10] மறுத்துரைத் தல்லொடு,
[11] தேர்வரவு கூறல், [12] வினைமுற்றி நினைதல்,
[13] நிலைமைநினைந் துரைத்தல், [14] முகிலொடு கூறல்,
[15] வரவெடுத் துரைத்தல், [16] மறவாமை கூறல்
மற்றிவை ஈரெட்டும் உற்றுழிப் பிரிவாம்.]

1. பிரிந்தமை கூறல்

போது குலாய புனைமுடி வேந்தர்தம் போர்முனைமேல்
மாது குலாயமென் னோக்கி,சென் றார்நமர்; வண்புலியூர்க்
காது குலாய குழையெழி லோனைக் கருதலர்போல்
ஏதுகொ லாய்வினை கின்றதின் றென்னார் இடுமதிலே. 316

---

316. பிரிந்தமை கூறலாவது. தலைவன் தன்னைவந் தடைந்த நட்புடை வேந்தனுக்கு மாற்று வேந்தராய் உள்ளார் மேல் போர்முனை நோக்கிச் சென்றமையைத் தலைவிக்குக் கூறுதல். இதற்குக் கொளு :-

2. பிரிவாற்ருமை கார்மிசை வைத்தல்

பொன்னி வளைத்த புனல்சூழ் நிலவிப் பொலிபுலியூர்
வன்னி வளைத்த வளர்சடை யோனை வணங்கலர்போல்
துன்னி வளைத்தநம் தோன்றற்குப் பாசறைத்
[தோன்றுங்கொலோ
மின்னி வளைத்து விரிநீர் கவரும் வியன்முகிலே. 317

விறல்வேந்தர் வெம்முனைக்கண்
திறல்வேந்தர் செல்வரென்றது.

போது குலாய - பூக்கள் விளங்குகின்ற. புனைமுடி - அழகுபெறச் செய்யப்பட்ட முடி. மாது குலாய மெல்நோக்கி - அழகு விளங்குகின்ற இனிய பார்வையை யுடையவளே. காது குலாய - காதின்கண் விளங்குகின்ற. 'ஏதாய் வினைகின்றது கொல்' என மாற்றுக. வினைகின்றது - வேறுபடுகின்றது. இன்று - இப்பொழுது. 'ஒன்ருர் மதில்' என இயையும். இடு மதில் - காவலாக இடப்பட்ட மதில். 'இன்று ஏதாய் வினைகின்றது கொல்' என்றதனுல், 'வினை கடிதின் முடிய மீள்வார்' என்ருளாம். கொளுவில், 'செல்வர்' என வந்தது பற்றி, 'சென்ருர் என்றது துணிவுபற்றி' என்ருர் பேராசிரியர்

317. பிரிவாற்ருமை கார்மிசை வைத்தலாவது, தலைவன் வேந்தற்கு உற்றுழிப் பிரிந்தமையைத் தோழி சொல்லக் கேட்டுத் தலைவி ஆற்ருளாய் நிற்பத் தோழி, 'நினது ஆற்ருமை நம் தலைவர் வினைமுடியாமைக்கு ஏதுவாமாகலின் நீ ஆற்றல் வேண்டும்' எனக் கூறத் தலைவி, 'யான் அவர் பிரிந்தமைக்கு வருந்துகின்றேனல்லேன்; இங்கு எழுந்த கார்முகில் அவர் பாசறையிடத்தே சென்று தோன்றுங்கொலோ என்றே வருந்தாநின்றேன்' எனத் தனது ஆற்ருமையைக் கார்மிசை வைத்துக் கூறுதல். இதற்குக் கொளு:-

வேந்தற் குற்றுழி விறலோன் பிரிய
ஏந்திழை பாங்கிக் கெடுத்துரைத்தது.

பொன்னி - காவிரிநதி. 'பொன்னியது வளைத்த புனல், சுற்றிலும் நிலைபெறுதலால் விளங்குகின்ற புலியூர்ச் சடை

3. வான்நோக்கி வருந்தல்

கோலித் திகழ்சிற கொன்றின் ஒடுக்கிப் பெடைக்குருகு
பாலித் திரும்பனி பார்ப்பொடு சேவல் பயிலிரவின்
மாலித் தனையறி யாமறை யோன்உறை யம்பலமே
போலித் திருநுத லாட்கென்ன தாங்கொல்என் போதரவே. 318

யோன்' என்க. வன்னி - வன்னி என்னும் மரத்தின் தளிர். 'அதனால் சூழப்பட்ட சடை' என்றதாம். இனி, 'நெருப்பை வளைத்துக்கட்டினாற்போலும் சடை' என்று உரைத்தலுமாம். 'வணங்கலர்போல் தோன்றுங்கோலோ' என இயையும். வளர் சடையோனை வணங்காதவர் பிறர் வினைக்கு இடையூறு செய்யுந் தன்மையர் என்க. துன்னி - (பகைவரைக்) கிட்டி. ''மின்னி வளைத்து'' என்புழி, ''வளைத்து'' என்றதற்கு, 'உலகத்தை வந்து வளைத்து' என உரைக்க. 'முகில் பாசறையிடத்துத் தோன்றுமாயின், அவர் வினைமுடியாவாறு செய்யுமன்றோ எனக் கவல்கின்றேன்' என்றபடி. இவ்வாற்றால் தலைவி, 'கார்காலம் வந்தது, அவர் வாராமை என்னோ' என்று வன்புறை எதிரழிந்து கூறினாள் என்க.

சிவபெருமானை வணங்காதவர் பிறர்க்கு இடையூறிழைக்கும் தன்மையராதல் கூறப்பட்டது.

318. வான்நோக்கி வருந்தலாவது, வேந்தற்கு உற்றுழிப் பிரிந்த தலைமகன் கார்காலம் வர, வானை நோக்கி, 'இக்காலத்து இராப்பொழுதின்கண் நம் பிரிவு நம் காதலிக்கு என்னாய் முடியுமோ' எனத் தன்னுள்ளே வருந்துதல். இதற்குக் கொளு :-

மானேக்கி வடிவு நினைந்தோன்
வானேக்கி வருந்தியது.

'சேவல், சிறகு ஒன்றின், பார்ப்பொடு பெடைக் குருகு கோலி ஒடுக்கிப் பாலித்து இரும்பனி பயில் இரவு' என்க. கோலி - வரம்பு செய்து. பாலித்து - பாதுகாத்து. இரும்பனி - மிக்க குளிரை. பயில் - தான் அடைகின்ற. ''இத்தனை'' என்றது, 'சிறிது' என்னும் பொருட்டு. 'இத்தனையும்' என்னும் இழிவு சிறப்பும்மை தொகுத்தலாயிற்று.

4. கூதிர்கண்டு கவறல்

கருப்பினம் மேவும் பொழிற்றில்லை மன்னன்கண் ணாருளால்
விருப்பினம் மேவச்சென் றார்க்குஞ்சென் றல்குங்கொல் [விழ்பனிவாய்
நெருப்பினம் மேய்நெடு மால்எழில் தோன்றச்சென் றாங்குநின்ற
பொருப்பின மேறித் தமியரைப் பார்க்கும் புயலினமே. 319

இகரச் சுட்டு. ''திருநுதலாள்'' என்பதன் இறுதி நிலையோடு இயைந்தது. முதனிலையோடு இயைந்ததாகவும் உரைப்பர். மனத்துக் கண்டு கூறுகின்றானாகலின், 'இவட்கு' என்றான். என்னது ஆம் - எத்தன்மையதாம். போதரவு - வருகை; பிரிவு. 'சேவலுக்கு உள்ள தன்மைதானும் நமக்கில்லையாயிற்று' என நொந்து கூறுகின்றானாகலின், ''திகழ் சிறகு'' என அதன் சிறகைச் சிறப்பித்துக் கூறினான். அற்றேல் இது, ''கிழவி நிலையே வினையிடத் துரையார்'' (தொல். பொருள். 184.) என்பதனோடு மாறுகொள்ளும்பிற வெனின், கொள்ளாது; என்னை? அது, குறித்த பருவம் வாராத முன்னே உருவெளி கண்டு பிறர் கேட்ப உரைத்தலையே விலக்கிற்றாகலானும், இது குறித்த பருவம் வந்தமை கண்டு தன்னுள்ளே கூறியதாகலானும் என்க. குறித்த பருவம் வந்த பின்னர்த் தலைவன் இவ்வாறு கூறுதல் உண்டென்பது, ''பாசறைப் புலம்பலும்'' (ஷை. 44) என்றதனாற் கூறப்பட்டது. இது, மேல்வரும் பின்பனிநினைந்து இரங்கற்கும் ஒக்கும்.

சிவபெருமான் தன் முனைப்புடையோரால் சிறிதும் அறியப் படாமை கூறப்பட்டது.

319. கூதிர்கண்டு கவறலாவது, தலைமகன் வேந்தற்கு உற்றுழிப் பிரிந்து நின்றவிடத்துக் கூதிர்காலம் வர, அதனைக் கண்ட தலைவி, 'இப்பொழுது செறிந்து தோன்றும் இம் முகிற் கூட்டம் நம் தலைவர் முன்னும் தோன்றுங்கொலோ! தோன்றுமாயின் வினை முடிக்க மாட்டாரன்றே' எனக் கவலுதல். இதற்குக் கொளு :-

இருங்கூதிர் எதிர்வு கண்டு
கருங்குழலி கவலையுற்றது.

5. முன்பனிக்கு நொந்துரைத்தல்

சுற்றின விழ்பனி தாங்கத் துவண்டு துயர்களன்று
பெற்றவ ளேஎனைப் பெற்ருள் ; பெடைசிற கான்ஒடுக்கிப்
புற்றில வாளர வன்தில்லைப் புள்ளுந்தம் பிள்ளைதழீஇ
மற்றினஞ் சூழ்ந்து துயிலப் பெறும்இம் மயங்கிருளே. 320

"விழ் பனிவாய்" என்பது முதலாகத் தொடங்கியுரைக்க. கருப்பினம் - கரும்புக் கூட்டம். விருப்பு இனம் மேவ - தம்மிடத்து விருப்பத்தை யுடையாரது கூட்டம் தம் உதவி பெற்று மேலும் தம்மை விரும்பும்படி. சென்ருர்க்கும் - சென்றவர்க்கும் துயர் உண்டாகும் வண்ணம். அல்குங்கொல் - தங்குமோ. நெருப்பு இனம் மேய் - இடிக் கூட்டத்தைப் பொருந்தி. 'நெருப்பு, குளிர்காய்வாரது நெருப்பு' எனக்கொண்டு, "மேய்" என்றதனை, 'மேவ' எனத் திரிப்பர் பேராசிரியர். ஆங்கு - தாம் (முகிற் கூட்டம்) சென்ற விடத்துள்ள. "தமியரைப் பார்க்கும்" என்றது, தற்குறிப் பேற்றம். கூதிர்காலத்துத் தலைவரைப்பிரிந்த தலைவியர் வருத்தமுறுதலின், 'அவரை வருத்துதற்குத் தேடும்' என்ருள்.

மழையும் சிவபெருமானது ஆணையானே பெய்வதென்பது கூறப்பட்டது.

320. முன்பனிக்கு நொந்துரைத்தலாவது, தலைவன், வேந்தற்கு உற்றுழிப் பிரிந்தவிடத்து முன்பனிக்காலம் வர, அதனல் ஆற்ருமைமிக்க தலைவி, தன்னுள்ளே நொந்து கூறுதல். இதற்குக் கொளு :-

ஆன்றபனிக் காற்குதழிந்
தீன்றவளை ஏழைநொந்தது.

"பெடை சிறகான்" என்பது முதலாகத் தொடங்கி யுரைக்க. அவ்விடத்து, "புற்றில வாளரவன் தில்லைப் புள்ளும்" என்பதை முன்னர்க் கொள்க. "சுற்றின" என்றது முற்றெச்சம்; பெயரெச்சமாகவே வைத்து உரைப்பினும் அமையும். 'எனைப் பெற்றவள் துவண்டு துயர்க என்றே பெற்ருள்' என்க. 'துயருறுதலே எனக்கு விதியாயிற்று.

௬. பின்பனிநினைந் திரங்கல்

புரமன் றயரப் பொருப்புவில் லேந்திப்புத் தேளிர்நாப்பண்
சிரமன் றயனைச்செற் றோன்றில்லைச் சிற்றம் பலமனையாள்
பரமன் றிரும்பனி பாரித்த வாபரந் தெங்கும்வையம்
சரமன்றி வான்தரு மேல்ஒக்கும் மிக்க தமியருக்கே. 321

இனி யான் செய்வது என்' என்றபடி. புற்றில வாளரவு - புற்றாகிய இல்லத்தை உடைய வாளரவு, இன அடை. இதன் மற்றொரு பொருளைத் தொண்ணூற்றேழாம் பாட்டிற் காண்க. இனம் சூழ்ந்து - இனத்தாற் சூழப்பட்டு. இம் மயங்கிருள் - இச் செறிந்த இருளிடத்து.

"புற்றில வாளரவன்'' என்றதனால், சிவபெருமான் பற்றுக்கோடில்லாதவர்க்குப் பற்றுக்கோடாய் நின்று காத்தல் கூறப்பட்டது.

321. பின்பனிநினைந் திரங்கலாவது, வேந்தற்கு உற்றுழிப் பிரிந்த தலைமகன் பின்பனிக் காலம் வரக்கண்டு, தலைவி ஆற்றாள் என நினைந்து இரங்குதல். இதற்குக் கொளு;-

இரும்பனியின் எதிர்வு கண்டு
கரும்பிவர் குழலி துயர்நினைந்தது.

'இரும் பனி வையம் எங்கும் பரந்து பாரித்தவாறு, மிக்க தமியருக்கு வான் அன்றிச் சரம் தருமேல் ஒக்கும்; (அதனால் இது,) சிற்றம்பலம் அனையாள் பரமன்று' எனக் கூட்டி, வேண்டும் சொற்கள் வருவித்து முடிக்க.

புரம் - முப்புரத்தின் உள்ளோர். அயர - வருந்தும்படி. "ஏந்தி'' என்ற எச்சம் எண்ணின்கண் வந்தது. "புத்தேளிர் நாப்பண்'' என்றது, அவர் யாதும் செய்யமாட்டாராய் நின்ற மையைக் குறித்தது. பரம் அன்று - ஆற்றும் அளவினதன்று. பாரித்தல் - பரப்புதல்; இதற்கு, 'துவலைகளை' என்னும் செயப்படுபொருள் வருவிக்க. சரம் - அம்பு. அன்றி - (வையத் தைப்) பகைத்து. "தமியருக்கே'' என்றதனால், தனது

7. இளவேனில்கண் டின்னலெய்தல்

வாழும் படியொன்றுங் கண்டிலம்; வாழி ! இம் மாம்பொழில்தேன்
சூழும் முகச்சுற்றும் பற்றின வால், தொண்டை யங்கனிவாய்
யாழின் மொழிமங்கை பங்கன்சிற் றம்பலம் ஆதரியாக்
கூழின் மலிமனம் போன்றிரு ளாநின்ற கோகிலமே. 322

ஆற்றாமையைக் கூறி, 'யானே ஆற்றேனாயின், அவள் ஆற்றாமை சொல்லவேண்டுமோ' என்றான்.

சிவபெருமான் முதற்கடவுளாதல் கூறப்பட்டது.

322. இளவேனில் கண்டு இன்னல் எய்தலாவது, தலைவன் வேந்தற்கு உற்றுழிப் பிரிந்தவிடத்து இளவேனிற் காலம் வர, தலைவி குயிலின் குரல் கேட்டு ஆற்றாமை எய்திக் கூறுதல். இதற்குக் கொளு :-

இன்னிள வேனில் முன்னுவது கண்டு
மென்னகைப் பேதை இன்னலெய் தியது.

''தொண்டையங்கனிவாய்'' என்பது முதலாகத் தொடங்கி, ''வாழும் படியொன்றும் கண்டிலம்; வாழி'' என்பதை, ''பற்றினவால்'' என்பதன் பின்னர் வைத்து உரைக்க.

வாழும்படி - உயிர்வாழும் வகை. வாழி - (தமியராயினாரை இவ்வாறு வருந்தப்பண்ணும் இளவேனிலே, நீ வாழ்வாயாக. இஃது இகழ்ச்சிக் குறிப்பு. 'மாம்பொழிலின்கண் தேன் சூழும் முகமாகிய (இடமாகிய) சுற்றெங்கும் பற்றின' என்க. ஆல், அசைநிலை. ஆதரியா - விரும்பாத. கூழின் மலி - உணவால் மகிழ்வுறுகின்ற. இருளாநின்ற - நிறத்தால் இருள் எய்தி வளர்கின்ற. கோகிலம் - குயில். ''புறங் குன்றி கண்டனையரேனும் அகங்குன்றி, மூக்கிற் காரியா ருடைத்து'' என்னும் திருக்குறள் (277) உரையில் பரிமேலழகர், 'செம்மை, கருமை என்பன, பொருளின்கண் நிறத்தை விட்டுச் செப்பத்தினும், அறியாமையினும் சென்றனவாயினும் பண்பால் ஒத்தலின் இவை பண்புவமை; ''கூழின் மலிமனம் போன்றிருளாநின்ற கோகிலமே'' என்பதும் அது' என உரைத்தமை இங்கு அறியத்தக்கது.

8. பருவங்காட்டி வற்புறுத்தல்

பூண்பதென் றேகொண்ட பாம்பன், புலியூர் அரன்மிடற்றின்
மாண்பதென் றேஎண வானின் மலரும், மணந்தவர்தேர்
காண்பதன் றேஇன்று, நாளை இங் கேவரக் கார்மலர்த்தேன்
பாண்பதன் தேர்குழ லாய்,எழில் வாய்த்த பனிமுகிலே. 323

சிவபெருமானை விரும்பாதவரது மனம், அறியாமை மிகப் பெற்று உணவு ஒன்றையே விரும்புவதாய் இருளடைந்து நிற்கும் என்பது கூறப்பட்டது.

323. பருவம் காட்டி வற்புறுத்தலாவது, தலைவன் வேந்தற்கு உற்றுழிப் பிரிந்தபின் கார்காலம் வரத் தோழி அதனைக்காட்டி, 'இனி நம் தலைவர் இன்றாக, நாளையாக வருவர்; ஆதலின் நீ வருந்தற்பாலையல்லை' என வற்புறுத்துதல். இதனால் இது முன்னைப் பாட்டுக்களோடு தொடர்ந்து வந்ததாகாமை யறிக. இதற்குக் கொளு:-

கார்வருமெனக் கலங்கு மாதரைத்
தேர்வருமெனத் தெளிவித்தது.

"கார்மலர்த் தேன்" என்பது முதலாகத் தொடங்கி யுரைக்க. பூண்பது என்றே - அணியத்தக்கதாகிய அணிகலம் என்றே. மாண்பு - அழகு. அது, பகுதிப்பொருள் விகுதி. 'எண்ண' என்பது இடைக்குறைந்து நின்றது. 'எண்ணுவோர் அவன் அடியவர்' என்க. மலரும் - பரவாநின்றன. 'அதனால் மணந்தவர் தேர் இங்கே வரக் காண்பது இன்று, நாளையன்றே' என்க. கார் மலர்த் தேன் - கார்காலத்து மலரை ஊதுகின்ற வண்டுகள். பாண் பதன் தேர் குழலாய் - தமது பண்ணினை இசைத்தற்குச் செவ்வியை நோக்கும் கூந்தலை யுடையாய்; என்றது, 'கார்காலத்து மலராகிய முல்லை முதலியவற்றினது போதுகளை முடித்தற்குரிய கூந்தலை யுடையாய்' என்றவாறு. பனி முகில் - குளிர்ந்த மேகங்கள்,

சிவபெருமானுக்கு அடியவராயினர், எப்பொருளையும் அப் பெருமானது திருமேனியோடு ஒப்பித்துக் காணுதல் கூறப் பட்டது.

9. பருவம் அன்றென்று கூறல்

தெளிதரற் காரெனச்; சீர்அனம், சிற்றம் பலத்தடியேன்
களிதரக் கார்மிடற் றோன்நட மாடக்கண் ணார்முழவந்
துளிதரற் காரென ஆர்த்தன; ஆர்ப்பத்தொக் குன்குழல்போன்
றளிதரக் காந்தளும் பாந்தளைப் பாரித் தலர்ந்தனவே. 324

---

324. பருவம் அன்றென்று கூறலாவது, தலைமகன் வேந்தற்கு உற்றுழிப் பிரிந்து நின்றவிடத்து அவன் குறித்துச் சென்ற கார் காலம் வரத் தலைவி ஆற்றாளாயது கண்ட தோழி, 'இஃது அவர் குறித்த கார்காலம் அன்று' என மறைத்துக் கூறுதல். இதுவும் மேலதனோடு தொடர்ந்து வந்ததன்றாம். இதற்குக் கொளு :-

காரெனக் கலங்கும் ஏரெழிற் கன்னிக்
கின்றுணைத் தோழி அன்றென்று மறுத்தது.

"தெளிதரற் காரென" என்றதனை, 'காரெனத் தெளிதரல்' என மாற்றி, இறுதிக்கண் கூட்டுக. கார் எனத் தெளிதரல் - இதனைக் கார்காலம் என்று தெளியாதே. சீர் அனம் - அழகிய அன்னம் போன்றவளே. 'களித்தர' என்பது எதுகைநோக்கி, "களிதர" என நின்றது. 'களிப்ப' என்பதே பொருள். கண் ஆர் முழவம் - பக்கம் பொருந்திய மத்தளம். துளி தரல் கார் - மழையைத் தருதலை உடைய மேகம். "போன்று" என்றதன்பின், 'வர' என சொல் வருவிக்க. அளி தர - வண்டுகளை நறுமணம் கொணர. பாந்தள் - பாம்பு; என்றது, அதுபோலும் துடுப்பினை. பாரித்து - எங்கும் பரப்பி. 'தில்லையில் கூத்தப்பெருமானது நடனத்திற்கு முழக்கிய மத்தளத்தினது ஓசையை மேகத்தின் முழக்கம் என்று நினைத்துக் காந்தள்கள் மலர்ந்துவிட்டன; அதனால் இது அவர் குறித்த பருவம் அன்று' எனக் கூறினாள் என்க.

சிவபெருமானது நடனத்தால் அனைத்துயிரும் களிதூங்கி நிற்றல் கூறப்பட்டது.

10. மறுத்துக் கூறல்

தேன்றிக் கிலங்கு கழல்அழல் வண்ணன்,சிற் றம்பலத்தெங்
கோன்,றிக் கிலங்குதிண் டோட்கொண்டற் கண்டன்
[குழையெழில்நாண்
போன்றிக் கடிமலர்க் காந்தளும் போந்தவன் கையனல்போல்
தோன்றிக் கடிமல ரும்பொய்ம்மை யோமெய்யிற் றேன்றுவதே.

---

325. மறுத்துக் கூறலாவது, 'இது கார்காலம் அன்று' என்று கூறிய தோழிக்குத் தலைவி, தோன்றி மலரைக் காட்டி, 'இதுவும் பொய்யோ' என மறுத்துக் கூறுதல். இதற்குக் கொளு :-

பருவம்அன் றேன்று பாங்கி பகர
மருவமர்கோதை மறுத்துரைத்தது.

"தேன்" என்றதும், சிற்றம்பலத்துக் கோனையேயாம். கழல் திக்குகளில் இலங்குதல் ஒளியினாலும், திண்தோள்கள் திக்குகளில் இலங்குதல் திசைக்கு ஒன்றாக எட்டாய் இருத்தலாலுமாம். கொண்டல் கண்டன் - மேகம் போலும் கண்டத்தை யுடையவன். சிவபெருமானுக்குக் குழையும் அரைநாணும் பாம்பாதலின், 'அவனது குழையும், நாணும் போன்று' என்றது, 'பாம்பு போன்று' என்றவாறாயிற்று. காந்தள் அரும்பு பாம்பின் தலைபோலத் தோன்றுவதாகும். போந்து - புறப்பட்டு; இஃது எண்ணின்கண் வந்த வினையெச்சம். தோன்றிக் கடி மலர் - தோன்றியினது மணமுடைய மலர். மெய்யின் - உண்மை யாக. 'காந்தளும் புறப்பட்டுத் தோன்றி மலரும் தோன்றுவது பொய்யோ' என்க. 'ஒன்றையல்லது, எல்லாவற்றையும் வம் பென்னும் உரை பொருந்தாது' என்பதாம். வம்பு - நிலை யின்மை.

சிவபெருமானது திருவுருவின் அழகு பலவாற்றால் விளக்கப் பட்டது.

11. தேர்வரவு கூறல்

திருமால் அறியாச் செறிகழல் தில்லைச்சிற் றம்பலத்தெங்
கருமால் விடையுடை யோன்கண்டம் போற்கொண்டல்
[எண்டிசையும்
வருமால்; உடல்மன் பொருந்தல் திருந்த மணந்தவர்தேர்
பொருமால் அயிற்கண்நல் லாய்இன்று தோன்றும்நம்
[பொன்னகர்க்கே. 326

---

326. தேர் வரவு கூறலாவது, பருவம் அன்று என்றதனை மறுத்துக்கூறி வருந்துகின்ற தலைவிக்குத் தோழி, 'மேகங்கள் எல்லாத் திசைகளிலும் பரந்து வருகையால், இஃது அவர் குறித்த பருவமே; ஆதலின், நம் தலைவரது தேர் நம்மிடத்து இன்றே வந்து தோன்றும்' எனக் கூறுதல். மேற்கூறியவாறு (323) பருவங்காட்டி வற்புறுத்தலேயன்றி இவ்வாறும் வரும் என்பது உணர்க. இதற்குக் கொளு :-

பூங்கொடி மருளப் — பாங்கி தெருட்டியது.

"செறிகழல்" என்றது. 'திருவடி' என்னும் பொருட்டாய், "அறியா" என்றதற்கு முடிபாயிற்று. அங்ஙனமே, "கருமால் விடையுடையோன்" என்பதும் 'சிவபெருமான்' என்னும் பொருட்டாய், "எம்" என்பதற்கு முடிபாம். "கரு மால்" என்பதற்கு, 'கரிய மாலாகிய' எனப் பேராசிரியரும், 'மிகவும் பெரிய' எனப் பழைய உரையாசிரியரும் உரைப்பர். "வருமால்" என்றதில் ஆல், அசைநிலை. உடல் மன் பொருந்தல் திருந்த - மாறுபட்ட அரசன்மேல் தாம் சென்றமை திருத்தம் பெறுதலால்; 'வினை முடிந்தமையால்' என்றபடி. மணந்தவர் - நம்மைக் கூடினவர். பொரு மால் அயிற்கண் நல்லாய் - போர் செய்கின்ற பெரிய வேல்போலும் கண்களை யுடைய நல்லாய். "நகர்" என்பதற்கு, 'இல்' என உரைப்பர் பேராசிரியர்.

சிவபெருமானது திருவடி, ஊர்தி என்பவற்றது சிறப்புக்கள் கூறப்பட்டன.

12. வினைமுற்றி நினைதல்


புயலோங் கலர்சடை ஏற்றவன் சிற்றம் பலம்புகழும்
மயலோங் கிருங்களி யானை வரகுணன் வெற்பின்வைத்த
கயலோங் கிருஞ்சிலை கொண்டுமன் கோபமுங் காட்டிவரும்
செயலோங் கெயிலெரி செய்தபின் இன்றோர் திருமுகமே. 327

---

327. வினைமுற்றி நினைதலாவது, வேந்தற்கு உற்றுழிப் பிரிந்த தலைமகன் அவ்வினையை முடித்துத் தலைவியது உரு வெளித் தோற்றங் கண்டு கூறுதல். இத்தோற்றம், நினைவுமிக்க வழி வருதலான், 'நினைதல்' என்றார். இது முதல் மூன்று துறைகளும், "வென்றிக் காலத்து விளங்கித் தோன்றும்" எனக் (தொல். பொருள் - 184) கூறப்பட்டவாறு அறிக. இதனை 'முனைமுற்றி நினைதல்' என்பர் பழைய உரையாசிரியர். இதற்குக் கொளு :-

பாசறை முற்றிப் படைப்போர் வேந்தன்
மாசறு பூண்முலை மதிமுகம் நினைந்தது.

ஈற்றடியை முதலிற் கொள்க. 'புயல் ஏற்றவன்' எனவும், 'புகழும் வரகுணன்' எனவும், 'வரகுணன் வைத்த' எனவும் இயையும். புயல் - நீர். புகழும் - துதிக்கின்ற. "வெற்பு" என்றது, இமயத்தை. கயல் - மீன்; இது பாண்டியரது அடையாளம். சிலை - வில்; இதுவும் வரகுணன் சேரனை வென்று கொண்ட அடையாளம் என்க. வரும் - வாராநின்றது. செயல் ஓங்கு எயில் எரிசெய்தபின் - வேலைப்பாடு மிக்க மாற்றரசனது மதிலை நெருப்பாக்கிய பின்னர். 'ஓர் திருமுகம், கயலும் சிலையும் கொண்டு, கோபமும் காட்டி வரும்' என்றது, 'தலைவியது அழகிய முகம், கயல்போலும் கண்களையும், வில்போலும் புருவங்களையும் கொண்டு, இந்திர கோபம் போலும் இதழையும் காட்டி வாராநின்றது' என்றே பொருள்தரினும், சிலேடையால், 'வரகுணன் விடுத்த திருமுகம் (ஓலை), அவனது கயலும் சிலையுமாகிய அடையாளங்களைக் கொண்டு, பெரிய சினத்தையும் புலப்படுத்திவாராநின்றது' என வேறொரு பொருளையும் தோற்றுவித்தது. 'இனி நாம் இங்கு நிற்கை அரிது' என்னும் குறிப்பெச்சமும் இவ்விருபொருட்கும் ஏற்புடையதே. இதனால்,



திருப்பெருந்துறையில் மாணிக்கவாசகரிடம் பாண்டியன்
தூதுவன் திருமுகத்தை அளித்தல்

13. நிலைமை நினைந்து கூறல்

சிறப்பிற் றிகழ்சிவன் சிற்றம் பலம்சென்று சேர்ந்தவர்தம்
பிறப்பிற் றுணைந்து பெருகுக தேர்;பிறங் கும்மொளியார்
நிறப்பொற் புரிசை மறுகினில் துன்னி மடநடைப்புள்
இறப்பிற் றுயின்றுமுற் றத்திரை தேரும் எழில்நகர்க்கே. 328

'இப்பாண்டியன் அடிகளை அமைச்சராகப் பெற்றிருந்தான்' எனவும், 'அவனுக்கு நண்பனாகிய சோழ மன்னன் மாற்றரசரால் நலிவெய்திய காலத்து அவன் விரும்பியவாறே அடிகள் சென்று உதவி, மீண்டுவரத் தாழ்க்க, அவன் திருமுகம் விடுத்து அடிகளை அழைப்பித்தான்' எனவும் துணிதற்கு இடன் உண்டு.

'சிற்றம்பலம் புகழும் வரகுணன், வெற்பின் வைத்த கயலும், சிலையும் உடையவன்' எனக் கூறிய முகத்தால், சிவபெருமானுக்கு அன்பராயினார்க்கு வெற்றி உளதாதல் கூறப்பட்டது.

328. நிலைமை நினைந்து கூறலாவது, வினை முற்றித் தலைமகளை நினைந்த தலைமகன் தேர் ஏறி வருங்கால், கார்காலத்தில் கானந் தழைப்ப, மாவும், புள்ளும் ஆர்பதம் மிக்குத் தம் துணையொடு வதிதலைக்கண்டு, தலைவியது நிலைமையை நினைந்து பாகனொடு கூறுதல். இதற்குச் செய்யுள் :-

பொற்றொடி நிலைமை மற்றவன் நினைந்து
திருந்துதேர்ப் பாகற்கு வருந்துபு புகன்றது.

"பிறங்கும் ஒளியார்" என்பது முதலாகத் தொடங்கியுரைக்க. அவ்விடத்து, "மடநடைப் புள்" என்பதனை அதன் பின் வைக்க.

சிறப்பு - விழாக்கள். 'திகழ் சிற்றம்பலம்' என இயையும். பிறப்பின் துணைந்து பெருகுக - பிறப்புக் கெடுவதுபோல விரைய முடுகுக. தேர் - இத் தேர்தான். புரிசை மறுகு - மதில் சூழ்ந்த தெருக்கள். துன்னி - பெடையொடு நெருங்கி. மட நடைப்புள், மாடப்புறா. இறப்பு - இல்லத்தின் மேற்கட்டி. இதற்கு, 'பாகனே' என்னும் விளியை வருவித்துக்கொள்க.

14. முகிலோடு கூறல்

'அருந்தேர் அழிந்தனம் ஆலம்'என் றேல மிடும்இமையோர்
மருந்,தேர் அணிஅம் பலத்தோன் மலர்த்தாள் வணங்கலர்போல்
திருந்தேர் அழிந்து பழங்கண் தரும்செல்வி சீர்நகர்க்கென்
வருந்தேர் இதன்முன் வழங்கேல்; முழங்கேல்; வளமுகிலே. 329

'மாடப் புருக்கள் தம் பெடையொடு கூடி இறப்பில் துயில் வதையும், பின் அவை முற்றத்தில் இரை உண்ணுதலேயும் கண்டாளாயின் தலைவி ஆற்ருள்' என்றவாறும்.

'சிற்றம்பலஞ் சேர்ந்தவர் பிறவியை விரையக் கடந்து பேரின்பம் உறுமாறுபோல, யானும் இச்சுரத்தை விரையக் கடந்து தலைவியின் நலத்தைப் பெறுவேன்' என்னும் இறைச்சி யும் தோற்றியவாறு காண்க.

சிவபெருமானது தலத்தை வணங்கினேர் விரைவில் பிறவிநீங்கிப் பேரின்பம் எய்துதல் கூறப்பட்டது.

329. முகிலொடு கூறலாவது, வினைமுற்றி மீளுந் தலைமகன் பாகனை விரையத் தேர் செலுத்துவிப்பான், தனக்கு முன்னே செல்கின்ற மேகத்தை நோக்கிச் சில சொற்சொல்லு தல். இதற்குக் கொளு:-

முனைவற் குற்றுழி வினைமுற்றி வருவோன்
கழுமல் எய்திச் செழுமுகிற் குரைத்தது.

"ஆலம்" என்பதை முதலிற் கூட்டுக. ஏர் அழிந்தனம் - யாங்கள் இங்கஞ்சினல் அழகழிந்து, கெட்டோம். மருந்து - அவர்கள் துன்பத்திற்கு மருந்தாயினேன். ஏர் - எழுச்சியை உடைய. திருந்து ஏர் - செவ்விபெற்ற அழகு. பழங்கண் - துன் பம். "தரும்" என்பது, 'எய்துகின்ற' என்னும் பொருட்டாய் நின்றது. 'சீர்நகர்க்கு வரும் தேர் இதன் முன்' என மாற்றுக. "வரும்" என்றதனுல்மேகம் முன் செல்லுதல் பெறப்பட்டது. வழங்கேல் - செல்லாதே. 'வழங்கினும் முழங்கேல்' என்க.

சிவபெருமான் சார்ந்தாரைத் துன்பம் துடைத்துக் காக்கும் தலைவனுதலும், அவனைச்சாராதார் துன்பத்தின் நீங்காராதலும் கூறப்பட்டன.

15. வரவெடுத் துரைத்தல்

பணிவார் குழைஎழி லோன்தில்லைச் சிற்றம் பலம்அனைய
மணிவார் குழல்மட மாதே, பொலிக;நம் மன்னர்முன்னாப்
பணிவார் திறையும், பகைத்தவர் சின்னமுங் கொண்டு,வண்தேர்
அணிவார் முரசினொ டாலிக்கும் மாவோ டணுகினரே. 330

---

330. வரவெடுத் துரைத்தலாவது, தலைமகன் முழங்கு முகிலொடு வரக்கண்ட தோழி, 'நம் தலைவர், வினைமுற்றி வந்தார் ; இனி, நீ துயர்நீங்கிப் பொலிவு பெறுவாயாக' என அவனது வரவை எடுத்துக் கூறுதல். இதற்குக் கொளு :-

வினை முற்றிய வேந்தன் வரவு
புனையிழைத் தோழி பொற்றொடிக் குரைத்தது.

''பொலிக'' என்பதனை இறுதியிற் கூட்டுக.

பணி - அணிகலம். வார்குழை - நீண்டகுழை. 'தனக்கே உரிய பணியாகிய குழையானே எழிலுடையவன்' என்பது கருத்து. தனக்கே உரிய பணி, பாம்பு, சங்குமுதலியவை. இதனானே அழகுடைமையாவது, பொன்மணி முதலியன இன்றிப் பாம்பு முதலியவற்றானே அழகுமிக்கு நிற்றல். 'சிற்றம்பல மனையமாதே' என இயையும். மணி - நீலமணி. பொலிக - தொலைந்த நலத்தைப் பெற்றுப் பொலிவு பெறுவாயாக. முன்னாப் பணிவார் - தம்முன்னாகவந்து பணிந்த மன்னர்கள். சின்னம் - வெற்றி அடையாளங்கள். 'அணிமுரசு' என இயையும். முரசு, வெற்றிமுரசு. ஆலிக்கும் மா - ஆரவாரிக்கின்றகுதிரைகள். ஒடு இரண்டும் எண்ணுப்பொருள. இவற்றின் இறுதியில் 'வர' என்பது எஞ்சிநின்றது.

சிவபெருமான் பிறிதொன்றால் நிரம்பும் குறையிலனாதல் கூறப்பட்டது.

16. மறவாமை கூறல்

கருங்குவ ளைக்கடி மாமலர் முத்தம் கலந்திலங்க
நெருங்கு வளைக்கிள்ளை நீங்கிற் றிலள்நின் று; நான்முகனே
டொருங்கு வளைக்கரத் தான்உண ராதவன் தில்லையொப்பாய்,
மருங்கு வளைத்துமன் பாசறை நீடிய வைகலுமே. 331

---

331. மறவாமை கூறலாவது, வினைமுற்றி வந்த தலைமகன் தலைமகளுடன் பள்ளியிடத்தானாக, தோழி, 'நீவிர் எம்மை வினையிடத்து மறந்திருந்தீரன்றே' எனக்கூற, அவன், 'அவ் விடத்தும் யான் இவளை மறந்திலேன்' எனக் கூறுதல். இதற்குக் கொளு :-

பாசறை முற்றிப் பைந்தொடியோ டிருந்து
மாசறு தோழிக்கு வள்ளல் உரைத்தது.

"நான்முகனொடு" என்பது முதலாகத் தொடங்கியுரைக்க. 'நின்று நீக்கிற்றிலள்' எனக் கூட்டுக. 'கருங் குவளை மலரிடத்து முத்தம் கலந்திலங்க' என்க. குவளைமலர், தலைவி யது கண்களையும், முத்தம், கண்ணீர்த் துளிகளையும் குறித்தன. நெருங்கு வளைக் கிள்ளை - நெருங்கிய வளைகளை யணிந்த கிளி போல்வாள்; என்றது, 'கிளிபோல்வாளாகிய இவள்' எனப் பொருள் தந்தது. 'நின்று நீங்கிற்றிலளாகலின், யான் மறத்தல் எவ்வாறு' என்றபடி. ஒடு, எண்ணுப்பொருட்டு. 'ஒருங்கு உணராதவன்' எனக் கூட்டுக. இஃது, 'இருவருஞ் சேர முயன்று ஒருவனை அறிந்திலர்' என்றவாறும். "தில்லை யொப் பாய்" என்றது, தோழியை. மருங்கு வளைத்து - பகைப் புறத்துச் சூழ்ந்து. மன் - தமக்கு நட்பாய அரசன். வைக லும் - நாட்களிலும்.

சிவபெருமான் தானே தன்னைக்காட்டின் அல்லது எத்துணை யோர் குழுமி ஒருங்கு முயலினும் அவனைக் காணலாகாமை கூறப்பட்டது.

24. பொருள்வயிற் பிரிவு

[பொருள்வயிற் பிரிவு என்பது, தலைமகளொடு கூடி இல்லறம் நடத்தக்கருதிய தலைமகன், அதன்பொருட்டுப் பொருள் ஈட்டுதற்குப் பிரிதல். 'அங்ஙனமாயின் முன்னர்ப் பொருளுடையனல்லனோ' எனின், அவ்வாறன்று. பிறந்தநாள் தொட்டு இல்லறத்தை மேற்கொள்ளுங்காறும் இருமுதுகுரவர் தேடி வைத்த பொருளால் பயன்கொள்ளுதலன்றி, அதன் பின்னரும் அவர் தேடிவைத்த பொருளானே தென்புலத்தார், தெய்வம் முதலிய ஐம்புலத்தாறும் ஓம்பிவாழ்வானாயின், அவற்றின் பயன் பெரும்பான்மையும் அவர்க்கு ஆதலன்றித் தனக்கு ஆகாமையானும், தான் தேடிய பொருளால் தனக்கேயன்றித் தன் முன்னோர்க்கும் பயன் விளைத்தல் கூடுமாகலானும் தன்பொருளால் தான் இல்லறம் நடத்துதற் பொருட்டுப் பொருள் தேடப் பிரிவன் என்க. இதனை அடிகள் இருபது துறைகளாக வகுத்து அருளிச்செய்வர். அதனைக் கூறும் நூற்பா வருமாறு :-

[1] வாட்டங் கூறல், [2] பிரிவுநினை வுரைத்தல்,
[3] ஆற்றாது புலம்பல், [4] ஆற்றுமை கூறல்,
[5] திணைபெயர்த் துரைத்தல், [6] பொருத்தமறிந் துரைத்தல்,
[7] பிரிந்தமை கூறல், [8] பிரிவாற் றாமையான்
இரவுறு துயரத்திற் கிரங்கி யுரைத்தல்,
[9] இகழ்ச்சிநினைந் தழிதல், [10] உருவுவெளிப் படுதல்,
[11] நெஞ்சொடு நோதல், [12] நெஞ்சொடு புலத்தல்,
[13] நெஞ்சொடு மறுத்தல், [14] நாளெண்ணி வருந்தல்,
[15] ஏறு வரவுகண் டிரங்கி யுரைத்தல்,
[16] பருவங்கண் டிரங்கல், [17] முகிலொடு கூறல்,
[18] தேர்வரவு கூறல், [19] இளையர் எதிர் கோடல்,
[20] உள்மகிழ்ந் துரைத்தல் ஒதிய இருபதும்
மாமதி நுதலாய் வான்பொருட் பிரிதல்,]

1. வாட்டங் கூறல்

முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னுன் முடியும்எனப்
பனிவருங் கண் ;பர மன்திருச் சிற்றம் பலமனையாய்
துனிவரு நீர்மையி தென்னென்று தூநீர் தெளித்தளிப்ப
நனிவரு நாள்இது வோஎன்று வந்திக்கும் நன்னுதலே. 332

---

332. வாட்டங் கூறலாவது, பொருள்வயிற் பிரியும் தலைமகன் தோழியை நோக்கி, 'நின் தோழிக்கு எனது பொருட்

பிரிவு யான் உணர்த்துதற்கு அரிதாய் இருந்தது' என்று தலைவியது மெலிவைக் கூறுதல். இதற்குக் கொளு ;-

பிரிவு கேட்ட அரிவை வாட்டம்
நீங்க லுற்றவன் பாங்கிக் குரைத்தது.

"திருச்சிற்றம்பலம் அனையாள்" என்பதனை, "கண் பனி வரும்" எனவும், "வந்திக்கும்" எனவும் வருவனவற்றிற்கு இடைநிலைத் தீவகமாகக் கொள்க. 'திருச்சிற்றம்பலம் அனையாய்' எனப் பாடம் ஓதி விளியாக்கி, 'பரமன் திருச்சிற்றம்பல மனையாள் எனப் பாடம் ஓதுவாரும் உளர்' என உரைப்பர் பேராசிரியர். அவர், பிறர் ஓதும் பாடமாகக் குறித்த அதுவே பழைய உரையாசிரியர் கொண்ட பாடமாகும்.

"முனிவரும் மன்னரும் முன்னுவ" என்றது, 'முனிவர் முன்னுவதும், மன்னர் முன்னுவதுமாகிய இரண்டும்' என்றவாறு. 'முனிவர் முன்னுவது அறம்' என்பதும், 'மன்னர் முன்னுவது இன்பம்' என்பதும் இனிது விளங்கிக்கிடந்தன. வெற்றி முதலிய பலவும் (இன்பம்) என்பதனுள்ளே அடங்கும். "ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க் கெண் பொருள் - ஏனையிரண்டும் ஒருங்கு" (குறள்-770) என்பதனால், பொருளானே: ஏனை அறமும், இன்பமும் உளவாதல் நன்கு பெறப்பட்டது. இங்கு 'அறம்' என்றது, மெய்யுணர்விற்கு ஏதுவாவதனை. பொருள் இன்பங்களது நிலையாமையுணர்ந்து அவற்றின்கண் பற்றுவிட்டார்க்கல்லது இதன்கண் மனம் செல லாமையின் இது முனிவரால் முன்னப்படுவதாயிற்று. முன்னு தல்-கருதுதல். "அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால் - அற்குப ஆங்கே செயல்" (குறள் - 333). என்பதும் துறவறத் துள்ளே கூறினமை நோக்கற்பாலது. 'பொன்னனே முடியும்' எனப் பிரிநிலை ஏகாரம் விரித்து, 'அஃது இல்வழி முடியா' என்பது அதனாற் போந்த பொருள் என்க. எனவே, இன்மை யது, இளிவும், உடைமையது உயர்ச்சியும் (தொல் - பொருள் 44), கூறியவாறாயிற்று. 'இங்ஙனம் பொதுப்படக் கூறிய அளவிலே திருச்சிற்றம்பலம் அனையாள் கண் பனிவரும்; இது என் என்று (யான்) தாநீர் தெளித்துத் தெளிப்ப, (அவள் கலங்கிய சிறிது காலத்தையே யான் பிரிந்து நின்ற காலமாகக்

௨. பிரிவு நினைவுரைத்தல்

வரியார் இருமை யரியார் எனமன்னும் மாநிதிக்கு
நெறியா ரருஞ்சுரஞ் செல்லலுற் ருர்நமர் ; நீண்டிருவர்
அறியா அளவுநின் ருேன்தில்லைச் சிற்றம் பலமனைய
செறிவார் கருங்குழல் வெண்ணகைச் செவ்வாய்த் திருநுதலே.

கருதி, நீவிர் வரும் நாள் இதுவோ என்று (என்னை) நனி வந்திக்கும்' என்ருன். "நன்னுதல்" என்றது தோழியை. 'அதனுல் யான் பிரிவுணர்த்துமாறில்லை. நீ உணர்த்துமாற்ருன் உணர்த்துவாயாக' என்பது குறிப்பெச்சம். "திருச்சிற்றம் பலம் அனையாள்" என்றதனுல், அவள் தனக்கு அப்பொருளினும் சிறந்தவளாதல் குறித்தான்.

சிவபெருமானது திருச்சிற்றம்பலம் எல்லாவற்றையும் தருதல் கூறப்பட்டது.

333, பிரிவு நினைவுரைத்தலாவது, தலைவியது வாட்டத்தைத் தலைவன் உரைப்பக் கேட்ட தோழி, தான் சென்று தலைவன் பொருள்வயிற் பிரிய; நினைக்கும் நினைவைத் தலைவிக்குக் கூறுதல். இதற்குச் செய்யுள் :-

பொருள்வயிற் பிரியும் பொருவே லவன்எனச்
சுருளுறு குழலிக்குத் தோழி சொல்லியது.

"நீண்டிருவர்" என்பது முதலாகத் தொடங்கி யுரைக்க.

இருமை - இம்மையும், மறுமையும், இஃது அவற்றின்கண் பெறும் இன்பத்தைக் குறித்து நின்றது. நல்கூர்ந்தார்க்கு இருமை இன்பமும் இல்லை என்பதை. "இன்மை யென வொரு பாவி மறுமையும் - இம்மையும் இன்றி வரும்" என்பதனுனும் அறிக (குறள் - 1042). மன்னும் மாநிதி - நிலைபெற்ற மிக்க பொருள். நெறி அருஞ்சுரம் - வழி அறிதற்கரிய சுரம். 'ஆரருஞ் சுரம்' என்றது, 'மிகவும் அரிய சுரம்' என்றவாறு. அளவு நின்ருேன் - அளவினனுய் நின்றவன். ஈற்றடிக்கண் உள்ள தொகைகள் பலவும் தொக்கு ஒரு சொல்லாய், "அனைய". என்னும் எச்சத்திற்கு முடிபாயின. "நமர்"

3. ஆற்றாது புலம்பல்

சிறுவாள் உகிருற் றுருமுன்னஞ் சின்னப் படுங்குவளைக்
கெறிவாள் கழித்தனள் தோழி; எழுதிற் கரப்பதற்கே
அறிவாள் ஒழிகுவ தஞ்சனம்; அம்பல வர்ப்பணியார்
குறிவாழ் நெறிசெல்வர் அன்பர்என் றம்ம கொடியவளே. 334

என்றதனால், 'நம் வருத்தம் பொறார்' என்பதும், "சிற்றம்பலம் அனையாய்" என்றதனால், 'பிரியப்படுதற்கு உரியையல்லை' என்பதும் கூறி, 'நீட்டியார்' என ஆற்றுவித்தாள் என்க.

சிவபெருமானது திருத்தலம் பிரியலாகாதது என்பது கூறப்பட்டது.

334. ஆற்றாது புலம்பலாவது, தலைவன் பொருள்வயிற் பிரிய நினைக்கும் நினைவைத் தோழி சொல்லக் கேட்ட தலைமகள் ஆற்றாளாய் வருந்துதல். இதற்குக் கொளு :-

பொருள்தரப் பிரியும் அருள்தரு பவன்எனப்
பாங்கி பகரப் பூங்கொடி புலம்பியது.

பொருள்கோள் :- 'அஞ்சனம் எழுதின் கரப்பதற்கே ஒழிகுவது அறிவாள்; (அறிந்தும்) அன்பர், அம்பலவர்ப் பணியார் குறிவாழ் நெறிசெல்வர் என்று (சொல்லி) சிறு வாள் உகிர் உற்று உருமுன்னம் சின்னப்படும் குவளைக்கு எறிவாள் கழித்தனள் தோழி; அம்ம கொடியவள்'

வாள் உகிர் - ஒளியுடைய நகம் உற்று உருமுன்னம் - பட்டுப்படாதமுன்பு; 'சிறிது பட்டவுடன்' என்றபடி. சின்னப் படும் - சிதைவுபடுகின்ற. குவளைக்கு - குவளைப்பூவைச் சிதைத் தற்பொருட்டு. கழித்தனள் - உறையினின்றும் எடுத்தாள்; எடுத்து வீசினாள்; என்றது 'அதுபோலும் செயலைச் செய்தாள்' என்றபடி. கரப்பதற்கு - எழுதுமளவும் காதலர் மறைதல் பற்றி. ஒழிகுவது - எழுதாது விடுதல். இதனை, "கண்ணுள் ளார் காதலவராகக் கண்ணும் - எழுதேம் கரப்பாக் கறிந்து" என்பதனான் (குறள் - 1127.) அறிக. 'பணியார் வாழ்நெறி' என இயையும். குறி - இடம். 'குறியாக' என ஆக்கம்

4. ஆற்றுமை கூறல்

வானக் கடிமதில் தில்லைஎங் கூத்தனை ஏத்தலர்போற்
கானக் கடஞ்செல்வர் காதலர் என்னக் கதிர்முலைகள்
மானக் கனகந் தரும் ;மலர்க் கண்கள்முத் தம்வளர்க்கும் ;
தேனக்க தார்மன்ன னென்னே இனிச்சென்று தேர்பொருளே !

வருவிக்க. அம்ம கொடியவள் - (அதனால்) இவள் மிகவும் கொடியளாயிராநின்றாள்.

சிவபெருமானது தலத்தை வணங்காதவர், தீய இடத்திலே பிறத்தல் கூறப்பட்டது.

335. ஆற்றுமை கூறலாவது, தலைவியது ஆற்றுமை கண்ட தோழி, தலைவனுக்கு அதனைக் கூறுதல். இதற்குக் கொளு :-

ஏழை யழுங்கத் — தோழி சொல்லியது.

வான மதில் - வானத்தை அளாவிய மதில். கானக் கடம் - காட்டை யுடைய சுரம். கதிர் - கதிர்ப்பு; பொலிவு. மானம் - பெருமை. கனகம் - பொன்; என்றது, நிறவேறுபாட்டை. "முத்தம்" என்றது, நீர்த் துளிகளை. தேன் நக்க - தேனோடு மலர்ந்த. "மன்னன்" என்றது, முன்னிலைப் பொருளில் வந்தது. 'இனிச் சென்று தேர் பொருள் என்னே' என்றது, 'நீ கருதும் பொருள் வேறு என்' என நகைத்துக் கூறி, 'இவளை விட்டுச் சென்று நீ தேடிவரும் பொருள் உனக்கு என்ன பயனைச் செய்யும்' என்பது உணர்த்தியதாம்.

'வானக் கடிமதில் தில்லையனை வாழ்த்தாதவர் போலக் கானக்கடம் செல்வர்' என்றதனால், இன்பமெல்லாம் தரும் சிவபெருமானை ஏத்தாது சிலர் இன்னாமை எய்தி நிற்பர் என்பது கூறப்பட்டதாம்.

5. திணைபெயர்த் துரைத்தல்

சுருடரு செஞ்சடை வெண்சுடர் அம்பல வன்மலயத்
திருடரு பூம்பொழில் இன்னுயிர் போலக் கலந்திசைத்த
அருடரும் இன்சொற்கள் அத்தனை யும்மறந் தத்தஞ்சென்றே
பொருடரக் கிற்கின் றதுவினை யேற்குப் புரவலரே. 336

---

336. திணைபெயர்த் துரைத்தலாவது, தலைவியது ஆற்றாமையைத் தலைவற்குக் கூறிய தோழி, பின், 'நின் ஆற்றாமையை அவர்க்குக் கூறினேன்; ஆயினும் அவர் கருத்து யாதோ' எனத் தலைவிக்குக் கூற, அவள், தலைவன் முன் குறிஞ்சித் திணையனாய் நின்று, பின் பாலைத் திணையனாய்ப் பெயர்ந்தமையைக் கூறுதல். இதனால், 'அன்பிலனாயினான்' என்பது படும். இதற்குக் கொளு :-

துணைவன் பிரியத் துயருறு மனத்தொடு
திணைபெயர்த் திட்டுத் தேமொழி மொழிந்தது.

சுருள் தரு - சுருளுந்தலைக் கொண்ட. 'செஞ்சடைக்கண் அணிந்த வெண்சுடரை யுடைய அம்பலவன்' என்க. 'பொழிற்கண்' என உருபு விரிக்க. அருள் தரும் - அருளை வெளிப்படுத்துகின்ற. "அத்தனையும் மறந்து சென்றே" என்றது, 'சிறிதும் வாய்மை இல்லை' என்றவாறு. அத்தம் - அருஞ்சுரம். தரக்கிற்கின்றது - தரத் தொடங்குகின்றது. இது, தொழிற்பெயர். 'தனியேற்கு' என்றது பழைய உரையாசிரியர் கொண்ட பாடம். புரவலர் - புரப்பவர்; என்றதனால் 'இவர் நம்மைப் புரத்தல் அழகிதாயிருந்தது' என்றபடி. "மலயத்து" என்றதனால், 'குறிஞ்சித் திணையனாய் இருந்தான்' எனவும், 'அத்தம் சென்று' என்றதனால், 'பாலைத் திணையன் ஆயினான்' எனவும் கூறியவாறு அறிக. 'திணைபெயர்த்திடுதல், பிரிவுள்ளிப் பாலைநிலத்தனாகியானை மருதநிலத்தனாக்குதல்' என்றார் பேராசிரியர். 'வெள்ளிய பிறையை அதன் தாழ்வு நோக்காது செவ்விய சடையிலே அணிந்த பெருமானாதலின், இவனது பொய் கருதிச் சினவாதொழிதல் வேண்டும்' என வேண்டினாளாம்.

சிவபெருமான், குறைந்தடைந்தாரை ஆழாமல் காப்பவனாதல் (திருமுறை - 6. 6. 2.) கூறப்பட்டது.

6. பொருத்தமறிந் துரைத்தல்

மூவர்நின் றேத்த முதலவன் ஆட,முப் பத்துமும்மைத்
தேவர்சென் றேத்துஞ் சிவன்தில்லை யம்பலஞ் சீர்வழுத்தாப்
பாவர்சென் றல்கும் நரக மனைய புனையழற்கான்
போவர்நம் காதலர் என்நாம் உரைப்பது பூங்கொடியே. 337

---

337. பொருத்தமறிந் துரைத்தலாவது, திணைபெயர்த் துரைத்த தலைவிக்குத் தோழி, 'நம் தலைவர் கருத்து இதுவானால் நாம் செய்வதென்' என்று கூறுமுகத்தால், 'அவர் தகாதது செய்யாராகலின், அதற்கு இயைந்து நிற்றலே நாம் செய்யற் பாலது' எனத் தலைவன் கருத்தின் பொருத்தம் அறிந்து கூறுதல். 'பொருத்தம், உள்ளத்து நிகழ்ச்சி' என்பர் பேராசிரியர். இதற்குக் கொளு ;-

பொருள்வயிற் பிரிவோன் பொருத்தம் நினைந்து
சுருளுறு குழலிக்குத் தோழி சொல்லியது.

மூவர், 'அயன், அரி, அரன்' என்பவர். அரனுவான், உருத்திரன். இனி, உருத்திரனைக் கூறாது, இந்திரனைக் கூறி, 'மூவர்' என்பர் முன்னை உரையாசிரியர். எனினும், "செழும் பொழில்கள் பயந்து காத்து அழிக்கும் மற்றை மூவர்கோனாய் நின்ற முதல்வன்" என்பது முதலாக அடிகள் திருவாசகத்துள் (திருச்சதகம் - 30) பலவிடத்தும் எடுத்தோதி யருளினமையின், அது பொருந்தாமை யறிக. 'முதல்வன்' என்பதில் அகரம், வேண்டாவழிச் சாரியை. "முப்பத்து மும்மை" என்றது, அவ் வெண்ணின்மேல் நின்று, 'அவ் வெண்ணினையுடைய தேவர்' எனப்பொருள்கொள்ளநின்றது. 'ஏத்தும் அம்பலம்' என இயை யும். இரண்டாவது ஈருருபாய் இணைந்துவருமிடத்து முதற்கண் தொக்குநிற்றல் இன்மையின், 'அம்பலத்தைச் சொல்வழுத்தாமை யின்' என, "சீர்" என்பதில் மூன்றுருவது விரிக்க. 'பாவத்தர்' என்பது, "பாவர்" என வந்தது. அல்கும் - தங்குகின்ற; நெடுங் காலம் கிடத்தல் பற்றி, "அல்கும்" என்றாள். புனை அழல் - ஆக்கிவைத்தாற்போலும் நெருப்பு "நம் காதலர்" என்றத னால், 'அவர் நமக்கு ஆகாதன செய்யார்' என்பதும், "என் நாம் உரைப்பது" என்றதனால், 'அவர் வருந்துணையும் ஆற்றி யிருத்தலே தக்கது' என்பதும் கூறினாள் என்க.

7. பிரிந்தமை கூறல்

தென்மாத் திரைவசை தீர்தரத் தில்லைச்சிற் றம்பலத்துள்
என்மாத் தலைக்கழல் வைத்தெரி யாடும் இறைதிகழும்
பொன்மாப் புரிசைப் பொழில்திருப் பூவணம் அன்னபொன்னே!
வன்மாக் களிற்றொடு சென்றனர் இன்றுநம் மன்னவரே. 338

சிவபெருமானது பொருள்சேர் புகழைச் சொல்லாதவர் நரகத்துள் நெடுங்காலம் கிடத்தல் கூறப்பட்டது.

338. பிரிந்தமை கூறலாவது, தலைவிக்குப் பொருத்தம் அறிந்துரைத்த தோழி, பின், தலைவன் பொருள்வயிற் பிரிந்தமையைக் கூறுதல். இதற்குக் கொளு :-

எதிர்நின்று பிரியிற் கதிர்நீ வாடுதற்
குணர்த்தா தகன்றுன் மணித்தேரோ னென்றது.

"என் மாத்தலைக் கழல் வைத்து" என்றதனை முதலிற் கொள்க.

"வசைதீர்தர" என்றது, 'புகழ் பெற்று விளங்க' என்றவாறு. "மாத்தலை" என்றதற்கு, 'நாய்த்தலை' எனப் பழைய உரையாசிரியரும், 'கரிய தலை' எனப் பேராசிரியரும் உரைத்தனர். 'எரியோடு ஆடும்' என்க. எரி, கையில் ஏந்தப்பட்டது. வன் மாக் களிறு - வலிய பெரிய களிறு. "உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த் - தெறுபொருளும் வேந்தன் பொருள்" (குறள் - 756.) என்பதுபற்றி ஒன்னாரைத் தெறச் செல்லும் பகைவயிற் பிரிவை அடிகள் பொருள்வயிற் பிரிவின்கண் அடக்கினாராகலின், இங்கு "வன்மாக் களிற்றொடு சென்றார்" என்றாளாக அருளினார். சிறப்புடைய களிற்றைக் கூறவே, ஏனை மூவகைப் படையும் தழுவப்படும். "சென்றார்" என்றதனால், தலைவன் சொல்லாது சென்றமை பெறப்பட்டது.

சிவபெருமான் தென்னாட்டில் சிறந்து விளங்குதல் கூறப்பட்டது.

8. இரவுறுதுயரத்திற் கிரங்கியுரைத்தல்

ஆழியொன்; றீரடி யும்மிலன் பாகன்;முக் கட்டில்லையோன்
ஊழியொன் றாதன நான்கும்ஐம் பூதமும் ஆறொடுங்கும் ;
ஏழியன் றாழ்கட லும்மெண் டிசையுந் திரிந்திளைத்து
வாழியன் றோஅருக் கன்பெருந் தேர்வந்து வைகுவதே! 339

---

339 இரவுறு துயரத்திற் கிரங்கி யுரைத்தலாவது, தலைவன் பிரிந்தமை கூறக் கேட்ட தலைவி ஆற்றாளாய், இரவின் கண் அது மிக்குநிற்கக் கண்ட தோழி, இரங்கிக் கூறுதல். இதற்குக் கொளு :-

அயில்தரு கண்ணியைப் பயில்தரு மிரவினுள்
தாங்குவ தரிதெனப் பாங்கி பகர்ந்தது.

பொருள்கோள் :- "அருக்கன் தேர்" என வருவதனைக் குறிப்பதாகிய 'தனக்கு' என்பது வருவித்து, "ஒன்று, பாகன்" என்பவற்றை அதற்கு முடிபாக்கியும், 'நான்கும் ஊழி ஒவ்வா தன' என மாற்றி, 'நான்கு யாமங்களும் ஊழிக்காலத்தோடும் ஒவ்வாதனவாய் நெடியவாகாநின்றன' எனவும், 'ஐம்பூதமும் ஆறொடுங்கும் ஊழி' எனக் கூட்டி, 'ஐந்த பூதங்களும் முறை யானே தோன்றி ஒடுங்குங்காலமாகிய ஊழி' எனவும் உரைக்க.

ஆழி - சக்கரம். ஈரடியும் இலன் - இரண்டு கால்களும் இல்லாதவன். 'தில்லையோன் ஊழி' என்புழித் தொக்குநின்ற ஆறுவது, 'குயவனது குடம், வாளது வெட்டு' என்றாற்போலச் செயப்படுபொருட் கிழமைக்கண் வந்தது. 'இயன்ற' என்னும் பெயரெச்சத்து அகரம் தொகுத்தலாயிற்று. ஏழ் இயன்ற - ஏழாக அமைந்த. வாழி, அசைநிலை. 'அதுகாறும் இவள் ஆற்றுமாறு எங்ஙனம்' என்பது குறிப்பெச்சம். 'அருக்கன் தேரோ நன்கமையாதது; அவன் செல்லவேண்டும் இடமோ சாலப் பெரிது; அவன் வருங்காறும் இவள் எங்ஙனம் ஆற்று வாள்' என இரவு புலர்தற்கரிதாய் நிற்றலைக் கூறி இரங்கிய வாறு.

சிவபெருமான், ஊழி முதல்வனாய் (திருவெம்பாவை-8.) நிற்றல் கூறப்பட்டது.

9. இகழ்ச்சி நினைந்தழிதல்

பிரியார் எனஇகழ்ந் தேன்முன்னம் யான்;பின்னை எற்பிரியின்
தரியாள் எனஇகழ்ந் தார்மன்னர் தாம்;தக்கன் வேள்விமிக்க
எரியா ரெழிலழிக் கும்மெழில் அம்பலத் தோன்எவர்க்கும்
அரியான் அருளிலர் போல்;அன்ன என்னை அழிவித்தவே. 340

---

340 இகழ்ச்சிநினைந் தழிதலாவது, தலைவன் சொல்லாது பொருள்வயிற் பிரிந்த விடத்துத் தலைவி, முன்னர் அவன் ஒரு வாற்றான் உணர்த்தினமை அறியாது இகழ்ந்தமையும், பின்னர் அவன் உணர்த்தாது இகழ்ந்து சென்றமையும் ஆகிய இரண் டிகழ்ச்சிகளையும் நினைந்து நெஞ்சழிதல். இதற்குக் கொளு :-

உணர்த்தாது பிரிந்தாரென
மணித்தாழ் குழலி வாடியது.

'முன்னம்' என்றது, விளையாட்டிற்கிடையில் தலைவன், 'யான் சென்று பொருள்தேடிவருவேன்' எனக் கூறிய காலத்தை. "இகழ்ந்தேன்" என்றது, அதனை உண்மையென நினையாதொழிந்தமையை. 'பின்னை இகழ்ந்தார்' என இயையும். "பிரியின் தரியாள்" என்றது, 'இத்தன்மையளாகலின்' இவள் முன்னின்று எனது பிரிவை உணர்த்தமாட்டேன்' என்ற தாம். "இகழ்ந்தார்" என்றதும், 'சொல்லாதே பிரிந்து போயினார்' எனப் பொருள்தந்தது. தாம், அசைநிலை. 'வேள்வி எரி' என இயையும். 'அருளிலர் போல் வருந்த' என ஒரு சொல் வருவிக்க. அன்ன - அவை; என்றது, மேற்கூறிய இரண்டு இகழ்ச்சிகளையும்.

சிவபெருமான் எப்பொருளையும் அடக்கும் பேராற்றல் உடையனாதல் கூறப்பட்டது.

10. உருவுவெளிப்பட்டு நிற்றல்

சேணுந் திகழ்மதிற் சிற்றம் பலவன்,தெண் ணீர்க்கடல்நஞ்
சூணுந் திருத்தும் ஒருவன் திருத்தும் உலகினெல்லாம்
காணுந் திசைதொறும் கார்க்கய லும்செங் கனியொடுபைம்
பூணும் புணர்முலை யுங்கொண்டு தோன்றும்ஓர் பூங்கொடியே.

---

341. உருவு வெளிப்பட்டு நிற்றலாவது, தலைமகட்குச் சொல்லாதே பொருள்வயிற் பிரிந்துசெல்லுந் தலைமகன், இடைச் சுரத்து அவளது உருவெளித் தோற்றம் தோன்றிநிற்பக் கண்டு கூறுதல். இதற்குக் கொளு :-

பொருள்வயிற் பிரிந்த ஒளியுறு வேலவன்
ஓங்கழற் கடத்துப் பூங்கொடியை நினைந்தது.

சேணும் திகழ் - சேய்மைக்கண்ணும் தோன்றி விளங்கு கின்ற. இதற்குப் பழைய உரையாசிரியர், 'தேவர்கட்கு அருகிற் சென்றும் காணலாகாத அம்பலம் (அருள்) வியாக்கிரபாதர் முதலிய அன்பர்கட்குச் சேய்மைக்கண்ணும் விளங்குவதா யிற்று' என உரைப்பர். "ஊணும்" என்பதற்கு, 'உணவாக வும்' என ஆக்கம் வருவித்து உரைக்க. இனி, "ஊண்" என்றது தொழிலைக் குறித்ததாக வைத்து, 'அதனால் தனக்கு ஏதம் இன்றாகச் செய்யும்' என உரைத்தலுமாம். இத் தொடர்க்குப் பழைய உரையாசிரியர் சிறப்புரை மிகக் கூறுவர். நஞ்சு ஊணைத் திருத்தும் தன்மை அவனுக்கு என்றும் உண்மை யால், "திருத்தும் ஒருவன்" என்றாள். திருத்தும் உலகு - படைத்த உலகம். தலைவியாகிய அவயவியையும், அவளது கண் வாய் என்னும் அவயவங்களையும் 'கொடி, கயல், கனி' என உருவகம் செய்து, தனமாகிய அவயவத்தை வாளா கூறினமை யின் இது, வியநிலை உருவகம். "பூண்" என்பதும் தனத் தோடு ஒற்றுமைப்பட்டுநின்றது. "காணுந் திசைதொறும் தோன்றும்" என்றதனால், 'இனி மேற்செல்லுதல் எவ்வாறு' என்பது குறிப்பெச்சமாய்ச் செலவழுங்குதலை உணர்த்திற்று.

சிவபெருமான் எல்லாவற்றையும் திருத்துவோனாதல் கூறப் பட்டது.

11. நெஞ்சோடு நோதல்

பொன்னணி ஈட்டிய ஓட்டரும் நெஞ்சம்,இப் பொங்குவெங்கா
னின்னணி நிற்குமி தென்னென்ப தே!இமை யோர்இறைஞ்சும்
மன்னணி தில்லை வளநக ரன்னஅன் னந்நடையாள்
மின்னணி நுண்ணிடைக் கோ?பொருட் கோ? நீ விரைகின்றதே.

---

342. நெஞ்சொடு நோதலாவது, தலைவியது உருவு வெளிப்பாடுகண்டு மேலே செல்லவும் மாட்டாது, மீளவும் மாட்டாது நிற்கின்ற தலைமகன், தன் நெஞ்சினை நொந்து கூறுதல். இதற்குக் கொளு :-

வல்லழற் கடத்து மெல்லியலை நினைந்து
வெஞ்சுடர் வேலோன் நெஞ்சொடு நொந்தது.

பொன் அணி - பொற் குவியல். ஈட்டிய - ஈட்டுதற்கு. ஓட்டு - ஓடுதலையுடைய. 'ஓட்டு நெஞ்சம்' என இயையும். அரு நெஞ்சம் - பெறுதற்கரிய நெஞ்சமே ; என்றது, இகழ்ச்சிக் குறிப்பு. யாதாலும் ஒரு நெறியிலே போகாது, இருபக்கமும் ஓடுதலின், 'இவ்வாறு இகழ்ந்தான்' என்க. 'நண்ணி' என்பது இடைக்குறைந்துநின்றது. "வெங்கானின் னணி" என்பதில் னகர ஒற்றும், "அன்னந்நடையாள்" என்பதில் நகர ஒற்றும் விரித்தல். விரைகின்றது - ஓடுகின்றது. 'ஒன்றிற்கும் அன்று' என்பது குறிப்பெச்சம். இதனை,

" குன்றம் - இறந்துபொருள் தருதலும் ஆற்றாய் ; சிறந்த
சில்லைங் கூந்தல் நல்லகம் பொருந்தி
யொழியின் வறுமை அஞ்சுதி ; அழிதக
உடைமதி வாழிய நெஞ்சே..........
....
இறவொடு வந்து கோதையொடு பெயரும்
பெருங்கடல் ஓதம் போல
ஒன்றிற் கொள்ளாய் சென்றுதரு பொருட்கே."

(அகம் - 123.) என்பதனோடு வைத்துக் காண்க.

சிவபெருமானது தலம் தேவர்களாலும் வணங்கப்படும் பெருமை யுடையதாதல் கூறப்பட்டது.

12. நெஞ்சொடு புலத்தல்

நாய்வயின் உள்ள குணமும்இல் லேனைநற் றொண்டுகொண்ட
தீவயின் மேனியன் சிற்றம் பலம்அன்ன சின்மொழியைப்
பேய்வயி னும்மரி தாகும் பிரிவெளி தாக்குவித்துச்
சேய்வயிற் போந்தநெஞ் சே,அஞ்சத் தக்கதுன் சிக்கனவே. 343

---

343. நெஞ்சொடு புலத்தலாவது, நெஞ்சொடு நொந்து கூறிய தலைமகன், பின்னும் 'பிரிதற்கு அரியாளைப் பிரியச்செய்து இத்துணைச் சேய்மையிற் கொணர்ந்தநின் வன்கண்மை அஞ்சத் தக்கது' என அதனொடு புலந்து கூறுதல். இதற்குக் கொளு :-

அழற்கடத் தழுக்க மிக்கு
நிழற்கதிர் வேலோன் நீடு வாடியது.

'நாயினிடத்துள்ள நற்குணம் நன்றியறிதல்' என்பதனை எடுத்தோதி விரிவுரை கூறுவர் பழைய உரையாசிரியர். தொண்டு கொண்ட - அடிமை கொண்ட. "நற்றொண்டு" என்றது இன அடை என்றார் பேராசிரியர். தீவயின் மேனி - தீயினிடத்துள்ள நிறம். "சின்மொழியை" என்றதனை, 'சின்மொழியிடத்து' எனத் திரிக்க. பேய்வயினும் அரிதாகும் பிரிவு - நட்புச் செய்தால் பின் பேயினிடத்தும் செய்தற்கரிதாம் பிரிவை. இதனை முதலிற் கூட்டுக. "பேயோடேனும் பிரிவென்றின்னாது" (திருமுறை. 7. 95. 9.) என்பது காண்க. சேய்வயின் - தொலைவிடத்து. சிக்கனவு - உறுதிப்பாடு; இரக்கமின்மை.

சிவபெருமான், மிகக் கீழோரையும் திருத்தி ஆட்கொள்ளுதல் கூறப்பட்டது.

13. நெஞ்சொடு மறுத்தல்

தீமே வியநிருத் தன்திருச் சிற்றம் பலம்அனைய
பூமே வியபொன்னை விட்டுப்பொன் தேடிஇப் பொங்குவெங்கான்
நாமே நடக்க; ஒழிந்தனம் யாம்;நெஞ்சம், வஞ்சியன்ன
வாமே கலையைவிட் டோபொருள் தேர்ந்தெம்மை வாழ்விப்பதே!

---

344. நெஞ்சொடு மறுத்தலாவது, நெஞ்சொடு புலந்து கூறிய தலைவன், பின்னும் பொருள்வலித்த அதனொடு மறுத்துக் கூறுதல். இதற்குச் செய்யுள் :-

நீணெறி சென்ற நாரிணர்த் தாரோன்
சேணெறி அஞ்சி மீணெறி சென்றது.

"நெஞ்சம்" என்பது முதலாகத் தொடங்கியுரைக்க.

தீ மேவிய நிருத்தன் - தீயின்கண் பொருந்திச் செய்யும் நடனத்தை யுடையவன். இதனால் அவனது திருமேனியும் மாற்றுயர்ந்த பொன்போல்வதாதல் குறிக்கப்பட்டது. 'சிற்றம் பலம் அனைய பொன்' என இயையும். சிற்றம்பலம் மாற்று யர்ந்த பொன்னாயிருத்தல் இங்கு நினைக்கத் தக்கது. பூமேலாய்க் கிடைக்கும் பொன், புகழும் தருவதாம். இது, 'திருமகள் போல்வாள்' என வேறு பொருளும் தந்து நின்றது. "விட்டு" என்றதனால், அது, 'கையிடத்துள்ளதனை விடுத்து' எனவும், "பொன் தேடி" என்றது, 'வேறுபொன் தேடி' எனவும் கூறியவாறாயிற்று. 'நீயே' என்னும் முன்னிலையை, இழித்தற் குறிப்பால் "நாமே" எனத் தன்மையாகக் கூறினான். இழிவு, கையில் உள்ள பொன்னை விட்டுக் கடுங்கான் சென்று பொன் தேட நினைந்தமை. ஒழிந்தனம் - நின்னோடு வருதலொழிந் தோம். "நெஞ்சம்" என்றது விளி. விட்டோ - பிரிந்தோ. எதிர்மறை ஓகாரம், 'அது கூடாது' என்பது விளக்கிற்று.

சிவபெருமானது திருமேனியின் சிறப்பும், அவன் அத் திருமேனியோடு எழுந்தருளியிருக்கும் தலத்தின் சிறப்பும் கூறப்பட்டன.

14. நாள் எண்ணி வருந்தல்

தெண்ணீர் அணிசிவன் சிற்றம் பலம்சிந்தி யாதவரிற்
பண்ணீர் மொழிஇவ ளைப்பையுள் எய்தப், பனித்தடங்கண்
உண்ணீர் உக,ஒளி வாடிட நீடுசென் ருர்சென்றநாள்
எண்ணீர் மையின் நில னும்குழி யும்,விர லிட்டறவே. 345

---

345. நாள் எண்ணி வருந்தலாவது, தலைமகனது வரைவு நீட்டிப்பை நினைந்து வருந்தும் தலைமகளது வருத்தத்தைக் கண்ட தோழி, அவள் காண, தான் தலைமகன் சென்ற நாட்களை எண்ணி வருந்துதல். இவள் இங்ஙனம் வருந்துதல் கண்டு தலைவி சிறிது ஆற்றுவாள் என்க. இதற்குக் கொளு :-

சென்றவர் திறத்து நின்றுநனி வாடுஞ்
சூழிருங் கூந்தற்குத் தோழிநனி வாடியது.

சிந்தியாதவரின் - சிந்தியாதவரை எய்துதல்போல. பையுள் எய்த - துன்பம் சார. 'தடங்கண்கள் தம் உள்நீரையெல்லாம் உகுத்து வறியவாக' என்க. ஒளி - அழகு. "சென்ருர்" என்றது, 'வாராதிருந்தவர்' எனப் பொருள்தந்து நின்றது. எண் நீர்மையின் - எண்ணும் தன்மையால். 'எண் நீர்மையின் இட்டு விரல் அற நிலனும் குழியும்' எனக் கூட்டி, "இட்டு" என்றதனை, 'இட' எனத் திரிக்க. 'நிலன்' என்றது சுவர்த்தலத்தை. அற - தேய்ந்தொழிய. 'இனி அவர் வருவது என்ருே' என்பது குறிப்பெச்சம்.

தலைவன் பிரிந்து சென்றவிடத்து. அவன் சென்றநாள் முதலாக ஒரு நாளைக்கு ஒன்ருக நாள்தோறும் ஒரு சிறு கீற்றைச் சுவரின்கண் ஆக்கிவைத்து முதற்ருெட்டு இறுதிகாறும் எண்ணிப் பார்த்து நாளைக் கணக்கிடுதல் மகளிர் முறைமை. இதனை, "வாளற்றுப் புற்கென்ற கண்ணும் ; அவர்சென்ற - நாளொற் றித் தேய்ந்த விரல்" என்னும் திருக்குறளானும் அறிக (1261). நாள் எண்ணி விரல் தேய்வாள் தலைவியாக வைத்து, 'அவ் வாற்ருல் இத்துணை நாள்கள் சென்றனஎன எண்ணித் தோழி வருந்தாநின்ருள்' என உரைப்பர் பேராசிரியர். எனினும், பழைய உரையாசிரியர் இவ்வாறே உரைத்தார்.

15. ஏறு வரவுகண் டிரங்கி யுரைத்தல்

சுற்றம் பலம்இன்மை காட்டித்தன் றொல்கழல் தந்ததொல்லோன்
சிற்றம் பலமனை யாள்பர மன்று,திண் கோட்டின்வண்ணப்
புற்றங் குதர்ந்துநன் ஞகொடும் பொன்னுர் மணிபுலம்பக்
கொற்றம் மருவுகொல் லேறுசெல் லாநின்ற கூர்ஞ்செக்கரே. 346

சிவபெருமானது தலத்தை நினையாதவரைத் துன்பம் சென்று சார்தல் கூறப்பட்டது.

316. ஏறுவரவு கண்டு இரங்கியுரைத்தலாவது, பொருள் முடித்து மீளநினைத்த தலைமகன், மாலைக் காலத்தில் நாகொடு வந்த ஏற்றின் (காளையின்) வரவினைக் கண்டு, தலைவியது நிலைக்கு இரங்கிக் கூறுதல். இதற்குக் கொளு :-

நீடிய பொருள்வயின் நெஞ்சம் நெகிழ்ந்து
வாடியவள் வரவுற்றது.

" திண்கோட்டின் " என்பது முதலாகத் தொடங்கியுரைக்க.

பலம் இன்மை - பயனுடைத்தாகாமை. காட்டி - தெளிவித்து. தொல்லோன் - சுற்றம் எனக் கருதப்படுவார் பலர்க்கும் முன்னே உள்ளவன். பரமன்று - (பொறுக்கும்) அளவினதன்று. கோட்டின் - கொம்புகளால். " புற்று" என்றது, ஈற்றில் அம்முப் பெற்று நின்றது. குதர்ந்து - சிதைத்து. " தேன்முதிர் வேழத்தின் பூக் குதர் " எனப் பின்னரும் (369) 'குதர்' என்பது வருதல் காண்க. 'புற்று அங்கு உதர்ந்து' எனப் பிரிப்பர் பேராசிரியர். எனினும், பழைய உரையாசிரியர், 'குதர்ந்து' என்றே கொண்டார். கூர்ஞ் செக்கர் - மிகாநின்ற செக்கர் வானம். இஃது, ஆகுபெயராய், அதனையுடைய மாலைக் காலத்தின்மேல் நின்றது. 'ஆகலின் நாம் இனிக் கடிதிற் சேறும்' என்பது குறிப்பெச்சம். பாகன் தேரைத் திருப்பி ஊர்நோக்கிச் செலுத்துதல் இதன் பயன் என்க.

சிவபெருமான், உயிர்கள் பலவற்றிற்கும் உற்றான் தானல்லது, பிறரொருவரும் ஆகாமையை உணர்த்தி ஆட்கொள்ளும் அருளுடையோனாதல் கூறப்பட்டது.

16. பருவங்கண் டிரங்கல்

கண்ணுழை யாதுவிண் மேகங் கலந்து; கணமயில்தொக்
கெண்ணுழை யாத்தழை கோலிநின் றாலும் இனமலர்வாய்
மண்ணுழை; யாவும் அறிதில்லை மன்னன தின்னருள்போற்
பண்ணுழை யாமொழி யாள்என்ன ளாங்கொல்மன் பாவியற்கே.

---

347. பருவம் கண்டு இரங்கலாவது. ஏறு வரவுகண்டு இரங்கி மீள்கின்ற தலைமகன், முகில் பரந்து விளங்கும் கார் காலத்தைக் கண்டு தலைவியது நிலைக்கு இரங்கிக் கூறுதல். இதற்குக் கொளு :-

மன்னிய பருவம் முன்னிய செலவின்
இன்னல் எய்தி மன்னன் ஏகியது.

'மேகம் கலந்து விண்கண் நுழையாது' என மாற்றிக் கொள்க.

விண் கண் நுழையாது - ஆகாயம் கண் நுழையப்படாது. கலந்து - செறிதலால். கண மயில் - மயிற் கணம்; மயலினம். தொக்கு - பேடையொடு கூடிநின்று. எண் - 'எண்' என்னும் உணவுப் பொருள். 'எண் - இலக்கம்' என்பர் உரையாளர். தழைகோலி - தோகையை விரித்து. ஆலும் - ஆடாநிற்கும். இன மலர் வாய் - கூட்டமான மலர்களையுடைய இடமெல்லாம்; 'மண்ணுழை இன மலர் வாய் ஆலும்' என மாறி முன்னே கூட்டுக. மண்ணுழை - நிலத்தின்கண். இதனால், மழை பொழிந்து, காடுகள் பூத்து நிற்றல் குறித்தான். யாவும் அறி தில்லைமன்னன் - எல்லாவற்றையும் முற்ற உணரும் தில்லை இறைவன். இனி, 'யாவும் மறி' என்று பிரித்து, 'எல்லாம் ஒடுங்குதற்கு இடமான' என்று உரைத்தலுமாம். இதனால், அவனது மகாசங்காரத் தொழில் பெறப்படும். உழை, ஏழிசை களுள் ஒன்று. அதனை, "பண்" என்றது காரியவாகுபெயர். "உழை" என்றதனை ஆகுபெயராகக் கொண்டு, 'உழை குரலாக நிற்கும் பண்ணினைக் குறித்தது' என்றலுமாம். 'யாழ்மொழியாள்' எனப் பாடம் ஓதி, 'பண்ணப்பட்ட' யாழிடத்து உழை நரம்பிற்றோன்றும் இசைபோலும் மொழி யினையுடையாள்' எனப் பழைய உரையாசிரியரும், 'பண் நுழையா' என்றே பிரித்து, 'பண் அணையாத (ஒவ்வாத)

17. முகிலோடு கூறல்

அற்படு காட்டில்நின் றாடிசிற் றம்பலத் தான்மிடற்றின்
முற்படு நீள்முகில், என்னின்முன் னேல்,முது வோர்குழுமி
விற்படு வாணுத லாள்செல்லல் தீர்ப்பான் விரைமலர்தூய்
நெற்படு வான்பலி செய்தய ராநிற்கும் நீள்நகர்க்கே. 348

தேமொழியை யுடையாள்' எனப் பேராசிரியரும் உரைப்பர். என்னளாங்கொல் - எத்தன்மையளாவளோ. 'இனி எய்த லாகாதவளாம்' என்றவாறு. மன், அசைநிலை. பாவியற்கு - பாவியேனுக்கு. 'இனி விரைந்தெய்தல் வேண்டும்' என்பது குறிப்பெச்சம். பாகன் இது கேட்டுத் தேரை விரையச் செலுத்துவான். என்க

சிவபெருமானது முற்றுணர்வுடைமையும், சங்காரகாரண னாய் நிற்கும் தன்மையும் கூறப்பட்டன.

348. முகிலொடு கூறலாவது, பருவங் கண்டிரங்கி விரைந்து வருகின்ற தலைவன், தனக்கு முன்னே செல்லும் முகில்களை நோக்கிக் கூறுதல். இதற்குச் செய்யுள் :-

> வினைப்பல துயரமோ டேகா நின்றவன்
> துனைக்கா ரதற்குத் துணிந்துசொல் லியது.

"என்னின் முன்னேல்" என்பதனை இறுதிக்கண் கூட்டுக.

அல் படு காடு - இருள் உண்டாகிற காடு; சுடுகாடு. 'வாழ்வார் இன்மையின் விளக்கேற்றப்படாத காடு' என்பதாம். எனவே, 'இவ்விடத்து வாழ்வான் அவன் ஒருவனே' என அவனது நித்தத் தன்மை குறித்தவாறாயிற்று. 'ஆடு' எனப் பாடம் ஓதுவர் பழைய உரையாசிரியர். 'மிடற்றின் இருண்டு' என ஒருசொல் வருவிக்க. என்னின் முன்னேல் - என்னின் முற் பட்டுச் செல்லாதே. முதுவோர் - முதுபெண்டிர். செல்லல் - துன்பம். விரை மலர் தூய் நெற்படு வான்பலி செய்தல், இல்லுறை தெய்வங்கட்கு என்றாயினும், விரிச்சி கேட்டற்கு என்றாயினும் கொள்ளப்படும். "நெல்லும் மலரும் தூஉய்க்கை தொழுது - மல்லல் ஆவணம் மாலை அயர" (நெடுநல்வாடை - 43, 44) எனவும், "யாழிசை யினவண் டார்ப்ப நெல்லொடு -

18. தேர்வரவு கூறல்

பாவியை வெல்லும் பரிசில்லை யே;முகில் பாவைஅம்சீர்
ஆவியை வெல்லக் கறுக்கின்ற போழ்தத்தின் அம்பலத்துக்
காவியை வெல்லும் மிடற்றோன் அருளிற் கதுமெனப்போய்
மேவிய மாநிதி யோடன்பர் தேர்வந்து மேவினதே. 349

நாழி கொண்ட நறுவீ முல்லை - அரும்பவிழ் அலரி தூஉய்க்கை தொழுது - பெருமுது பெண்டிர் விரிச்சி கேட்ப'' (முல்லைப் பாட்டு - 8 - 11.) எனவும் வருதல் காண்க. தலைவன் இங்ஙனம் கூறியதற்கும் மேற் சொல்லியதே பயன்.

சிவபெருமானது நித்தத் தன்மை கூறப்பட்டது.

349 தேர் வரவு கூறலாவது, பொருள் வயிற் பிரிந்த தலைமகன் முகிலொடு வந்து புக, அவனது தேர் வரவைத் தோழி தலைமகளுக்குக் கூறுதல். இதற்குக் கொளு :-

வேந்தன் பொருளொடு விரும்பி வருமென
ஏந்திழைப் பாங்கி இனிதியம் பியது.

"பாவியை வெல்லும் பரிசில்லையே" என்பதனை இறுதிக் கண் கூட்டுக.

பாவி - வரக்கடவது; அனுபவப்படுதற்கு உரியது. இங்கு இஃது ஆக்கத்தைக் குறித்தது. "ஆவாரை யாரே அழிப்பர். அதுவன்றிச் சாவாரை யாரே தவிர்ப்பவர்!" (நல்வழி 13.) என்பது காண்க. 'முகில் கறுக்கின்ற போழ்தத்தின்' என இயையும். "பாவை" என்றது, தலைவியை 'அவளது அம் சீர் ஆவி' என்க. கறுத்தல், கருநிறம் பெறுதலையும், வெகுளு தலையும் குறித்த சிலேடை. "போழ்தத்தின்" என்றதில் அத்து, வேண்டாவழிச் சாரியை. காவி - நீலப் பூ. அருளின் - அருளைப்போல; என்றது, 'சிவபெருமானது திருவருள் நலி வெய்திறுரை விரையச் சென்று காத்தல்போல' என்றதாம். 'கதுமென மேவினது' என இயையும். போய் மேவிய - பிரிந்து சென்று தேடிய.

சிவபெருமானது திருவருளின் திறம் கூறப்பட்டது.

19. இளையர் எதிர்கோடல்

யாழின் மொழிமங்கை பங்கன்,சிற் றம்பலத் தான்அமைத்த
ஊழின் வலியதோன் றென்னை ! ஒளிமே கலைஉக ளும்;
விழும் வரிவளை; மெல்லியல் ஆவிசெல் லாதமுன்னே
சூழுந் தொகுநிதி யோடன்பர் தேர்வந்து தோன் றியதே. 350

---

350. இளையர் எதிர்கோடலாவது, தலைமகனது தேர் வரவைத் தோழி தலைமகளுக்குக் கூறிய நிலைமைக்கண் தோழர் சென்று தலைமகனை எதிர்கொள்ளுதல். இதற்குக் கொளு :-

செறிகழலவன் திருநகர் புகுதர
எறிவேல் இளைஞர் எதிர்கொண்டது.

"ஒளி மேகலை உகளும்" என்பது முதலாகத் தொடங்கி யுரைக்க.

'ஊழ் இறைவன் வகுத்தமைத்ததே' என்பதனையும், 'அது பிறிதொன்றான் வெல்லப்படாத வலியுடையது' என்ப தனையும், "வகுத்தான் வகுத்தவகை" எனவும், "ஊழிற் பெருவலி யாவுள ! மற்றொன்று - சூழினும் தான்முந் துறும்" எனவும் அருளியவாற்றான் (குறள் - 377, 380.) அறிக. "உகளும், விழும்" என்றவை முற்றுக்கள். உகளும் - நில்லாது சோரும். மீள மீள எடுத்து அணியவும் விழ்தல் பற்றி, 'உகளும், விழும்' என்றனர். "மெல்லியல்" என்றதனை, "மேகலை, வரிவளை" என்றவற்றிற்கும் கொள்க. 'இந்நிலை மைக்கண் ஆவி செல்லாதமுன்னே தேர்வந்து தோன்றியது' என்க.

சிவபெருமான் தனது ஆணையை வினைவழி வைத்து நடாத் துதல் கூறப்பட்டது.

20. உள்மகிழ்ந் துரைத்தல்

மயில்மன் னு சாயல்இம் மானைப் பிரிந்து பொருள்வளர்ப்பான்
வெயில்மன்னு வெஞ்சுரஞ் சென்றதெல் லாம்,விடை
[யோன்புலியூர்க்
குயில்மன்னு சொல்லிமென் கொங்கையென் அங்கத்
[திடைக்குளிப்பத்
துயில்மன்னு பூவணை மேல்அணை யாமுன் துவளுற்றதே. 351

---

351. உள்மகிழ்ந் துரைத்தலாவது, இளைஞர் எதிர்கொள்ள வந்து புகுந்த தலைமகன், தலைமகளுடன் பள்ளியிடத்தனுய்த் தன்னுள் மகிழ்ந்து கூறுதல். இதற்குக் கொளு :-

பெருநிதி யோடு திருமனை புகுந்தவன்
வளமனைக் கிழத்தியோ டுளமகிழ்ந் துரைத்தது.

"மயில்" என்றது, அதன் சாயலை. 'அது மன்னினுற் போலும் சாயல்' என்க. "எல்லாம்" என்பது பன்மை குறியாது, 'முழுதும்' என்னும் பொருட்டாய் நின்றது. 'புலியூர்க் குயில்' என இயையும். அடியாரொடு பயிலுதலின் இது, பொதுவகையானன்றி இறைவனிடத்து அன்பை விளைக்கும் இசையாற் சிறப்பு வகையில் இன்பந் தரும் என்க. அங்கம் - உடல்; என்றது, மார்பினை. துவளுற்றது - கெட்டது.

சிவபெருமானது தலத்துக்கண் வாழும் உயிர்களும் சிறப்புடையவாதல் கூறப்பட்டது.

தம்பெரு முதல்வர் சொல்லுந் தகுமொழிப் படியே யுள்ள
செம்பொருள் யாவு மன்பின் றிறத்துளார் தொலைத்த பின்னர்
அம்பர னளித்த ஞான மருந்தினை யருந்திப் பாச
வெம்பிணி யகற்று மந்த வித்தகர் முத்த ரானுர். 118

திருத்திகழ் கவிகைக் கீழுஞ் சிறந்தபொற் சிவிகை மேலும்
வரத்திரு மேவு தானை மன்னவ னென்ன வந்தார்
உருத்தெரி யாத நீறுங் கோவண வுடையுங் குஞ்சி
விரித்துள சிரமுந் தூநீர் மிகப்பொழி விழியு மானுர். 119

— திருவாதவூரடிகள் புராணம்.

25. பரத்தையிற் பிரிவு

[பரத்தையிற் பிரிவு என்பது, தலைவன், தலைவியை வரைந்து கொண்டு இல்லறம் நடாத்துங்கால், காவல் முதலிய அறம் நிமித்தமாகவும், பகைவரை வென்று திறைகோடல் முதலிய பொருள் நிமித்தமாகவும் பிரிதல்போல, ஆடல், பாடல், கூத்து முதலிய பொழுதுபோக்கு நிமித்தமாகவும் பிரிவானாகலின், அவ்விடத்து ஆடல் முதலியவற்றைச் செய்யும் மகளிர், தம்மையும் அவன் உடையனாதல்பற்றி அவன்மேல் உள்ளம் சென்ற வழி அவ்வாடல் முதலியவற்றானே அவனை அவர் தம்மாட்டுத் தாழ்விப்ப, அவரோடு தனக்கு உள்ள உரிமைபற்றி அவன் அவர்கண்ணே தங்குதல். அவ்வாறன்றித் தலைமகளினும் அவரை உயர்ந்தாராகக் கருதியாதல், அவர், தன்னையேயன்றிப் பொருளே காரணமாகப் பலரையும் நயப்பாராகத் தான் நிறையின்றித் தன் அறமும் பொருளுங் கெட அவர்கண்ணே நெஞ்சந் தாழ்ந்தாதல் பிரியாமையின், இது தலைவனது பெருமையோடு மாறுகொள்ளாது என்க. இதனான் இப்பரத்தையர், குலத்தாற் பொது மகளிரேயாயினும், சிலப்பதிகாரத்துச் சித்திராபதிபோலாது மாதவிபோல ஒழுக்கத்தால் வரைவுடையராகலின், தலைவன் இவர்மாட்டுத் தங்குதல் வரைவின் மகளிரிடத்துத் தங்குதலாகாமை அறிந்துகொள்க. எல்லாச் செல்வமும் உடையார்க்கு ஆடல் மகளிரை யுடையராயிருத்தலும் இயல்பென்னும் கருத்தால், ஏனைப் பிரிவுகளோடு இப்பரத்தையிற் பிரிவும் உலகியல் நூலுள் வேண்டப்பட்டது. அன்றியும், "ஊடுதல் காமத்திற்கின்பம்" (குறள் - 1330) எனவும் "உப்பமைந் தற்றாற் புலவி" (ஷ - 1302) எனவும், "துனியும் புலவியும் இல்லாயின் காமம் - கனியும் கருக்காயும் அற்று" (ஷ - 1306) எனவும் "ஊடி - உயங்காக்கால் உப்பின்றாங் காமம்" (நாலடி - 391.) எனவும், கூறுதலின், ஊடல் இல்வழி இன்பம் சிறந்துகாட்டாது என்பது பற்றி, இன்பச் சுவையை நுதலிவரும் இலக்கியங்களுள் ஊடற்குக் காரணமாகும் இப் பரத்தையிற் பிரிவு கூறப்படுவது என்க. இவ்வாறாயினும் இஃது ஒரு தலையாக நிகழ்வதன்றென்பதும் கடைப்பிடித்துணர்ந்து கொள்க. அறமன்றிப் பொருளும், இன்பமும் துன்ப மிகுதியும், குறைபாடும், நிலையாமையும் உடைய என்பது உணர்த்துதலே அவ்விரண்டையும் கூறும் நூல்கட்கு உண்மைக் கருத்தாதல்போல, பரத்தையிற் பிரிவு உளதாயின் இல்

வாழ்க்கை இனிதாகாது என்பது உணர்த்துதலே இதனை மேற்கொண்டு கூறுதற்கும் உண்மைக் கருத்தென்க. இதனை அடிகள், நாற்பத்தொன்பது துறைகளாக வகுத்து அருளிச் செய்வர். அவற்றைக்கூறும் நூற்பா வருமாறு :-

[1] கண்டவர் கூறல், [2] காதற் றோழி
பொறையுவந் துரைத்தல், [3] பொதுப்படக் கூறி
வாடி யழுங்கல், [4] மாறுகொண் டவனொடு
கனவிழந் துரைத்தல், [5] விளக்கொடு வெறுத்தல்
[6] வாரம் பகர்ந்து வாயில் மறுத்தல்,
[7] பள்ளியிடத் தூடல் [8] பணிமொழி யாள்தன்
செவ்வணி விடுக்க இல்லோர் கூறல்,
[9] அயல்அறி வுரைத்தவள் அழுக்கம் எய்தல்,
[10] செவ்வணி கண்ட வாயிலவர் கூறல்,
[11] மனைபுகல் கண்ட வாயிலவர் கூறல்,
[12] முகமலர்ச்சி கூறல், [13] முனிவ தென்னெனக்
காலநிகழ் வுரைத்தல், [14] கலவி எய்தலை
எடுத்துரைத் தல்லொடு, [15] கலவி கருதிப்
புலத்தல், [16] குறிப்பறிந்து புலந்தமை கூறல்,
[17] வாயிலவர் வாழ்த்தல், [18] புனல்வர வுரைத்தல்,
[19] தேர்கண்டு மகிழ்தல், [20] சேடியர் விழவில்
தம்மு ளுரைத்தல், [21] தன்னை வியத்தல்,
[22] நகைத்துரைத் தல்லொடு, [23] நாண்கண் டுரைத்தல்,
[24] பாணன்வர வுரைத்தல், [25] பாங்கி இயற் பழித்தல்,
[26] உழையர் இயற் பழித்தல், [27] ஒண்ணுத லாவளற்
கியற்பட மொழிதல், [28] இயல்புநினைந் துரைத்தல்,
[29] வாயில் பெறாது மகன்திறம் நினைதல்,
[30] வாயிற்க ணின்று தோழிக் குரைத்தல்,
[31] வாயில் வேண்டத் தோழி கூறல்,
[32] மன்னிய தோழி வாயில் வேண்டல்,
[33] மனையவர் மகிழ்தல், [34] வாயில் மறுத்தல்,
[35] பாணனொடு வெகுடல், [36] பாணன் புலத்தல்,
[37] விருந்தொடு செல்லத் துணிந்தமை கூறல்,
[38] ஊடல் தணிவித்தல், [39] அணைந்தவழி ஊடல்,
[40] புனலாட்டு வித்தமை கூறிப் புலத்தல்,
[41] கலவி கருதிப் புலவி புகறல்,
[42] மிகுத்துரைத் தூடல், [43] விறல்வேற் காளை

ஊடல் நீட வாடி உரைத்தல்,
44 துனியொழிந் துரைத்தல், 45 துகளொன் றில்லாப்
புதல்வன்மேல் வைத்துப் புலவி தீர்த்தல்
46 கலவியிடத் தூடல், 47 முன்னிகழ் வுரைத்தல்,
48 பரத்தையைக் கண்டமை பயன்படக் கூறல்,
49 ஊதிய மெடுத்துரைத் தூடல் தீர்த்தல்
எண்ணா றொன்றிவை பரத்தையிற் பிரிவெனப்
பண்ணார் மொழியாய் பகர்ந்திசி னோரே.]

1. கண்டவர் கூறல்

உடுத்தணி வாளர வன்தில்லை யூரன் வரஒருங்கே
எடுத்தணி கையே றினவளை யார்ப்ப, இளமயில்ஏர்
கடுத்தணி காமர் கரும்புரு வச்சிலை கண்மலரம்
படுத்தணி வாள்இளை யோர்சுற்றும் பற்றினர் மாதிரமே. 352

---

352. கண்டவர் கூறலாவது, தலைவன் பொழுதுபோக்காகப் பரத்தையர் சேரிக்கண் (தெருவினிடத்துச்) செல்ல, அவ்விடத்து அவனைப் பலர்சூழ்ந்து எதிர்கொண்டமையைக் கண்டவர் தம்முட் கூறுதல். இதற்குக் கொளு :-

உரத்தகு வேலோன் பரத்தையிற் பிரியத்
திண்டேர் வீதியிற் கண்டோர் உரைத்தது.

உடுத்து அணி வாளரவன் - உடையின்மேற் கச்சாகக் கட்டி, அணியாகவும் அணிந்த கொடிய பாம்பையுடையவன். ஊரன் - தலைமகன். இரண்டாவது முதலிய அடிகள் மகளிர்க்கும், போர்வீரர்க்கும் சிலேடை. 'அணிவாள் இளையோர்' என எடுத்து 'மாதிரம் சுற்றும் ஒருங்கே பற்றினர்' எனமுடிக்க.

மகளிர்மேற் செல்லுங்கால், வளை - கைவளை. இளமயில் ஏர் கடுத்து - இளமயிலினது அழகுபோன்று. கரும்புருவச் சிலை - கரிய புருவமாகிய வில். கண்மலர் அம்பு அடுத்து - கண்மலராகிய அம்புகளைப் பொருந்தி. அணி வாள் இளையோர் - அணிகளது ஒளியை உடைய இளைய மகளிர் எனவும்,

2. பொறை உவந் துரைத்தல்

சுரும்புறு கொன்றையன் தொல்புலி யூர்சுருங் கும்மருங்குற்
பெரும்பொறை யாட்டியை என் இன்று பேசுவ! பேரொலிநீர்க்
கரும்புறை யூரன் கலந்தகன் றுன்என்று கண்மணியும்
அரும்பொறை யாகும்;என் ஆவியும் தேய்வுற் றழிகின்றதே. 353

வீரர்மேற் செல்லுங்கால், வளை - வெற்றிச் சங்கு. "இளமயில்" என்றது, 'இளமையில்' என்பதன் போலி. இளமயில் ஏர் கடுத்து - இளமையில் உண்டாகின்ற உள்ள எழுச்சிமிகுந்து. கரும்பு உருவச்சிலைகள் மலர் அம்பு அடுத்து - கரும்பு போலும் வடிவினையுடைய விற்களையும், சிறகுவிரிந்த அம்புகளையும் ஏந்தி. அணி வாள் சிலையோர் - அரையிற்கட்டிய வாளையுடைய வீரர் எனவும் பொருள்கொள்க.

இவ்வாற்றால் மகளிர் காமப்போர் தொடுக்கலுற்றனர் என்பது குறித்தவாறு.

எடுத்து அணி கை ஏறு இனவளை - ஆராய்ந்தெடுத்து அணியக் கையின்கண் பொருந்தின கூட்டமாகிய வளை. அணி காமர், ஒருபொருட் பன்மொழி. மாதிரம் - திசை. இவை இரண்டற்கும் பொது. 'கருப்புருவச்சிலை, பற்றிய மாதிரமே' என்பனவும் பாடம் எனக்கொண்டு, அவற்றிற்கேற்பவும் உரைப்பர் பேராசிரியர். 'இஃது இவன் காதலிக்குயாதாகுமோ' என்பது குறிப்பெச்சம்,

'உடுக்கவும், அணியவும் வாராத பாம்பை உடுத்து அணிந்தவன், என்றதனால், சிவபெருமானது வியத்தகு வன்மை கூறப்பட்டது.

353. பொறை உவந் துரைத்தலாவது, பரத்தையர் தலைமகனை எதிர்கொண்டமை கேட்ட தலைமகள் தனது வருத்தத்தைப் புறத்து வெளிப்படுத்தாது அடக்கிக்கொள்ள, அவளது அப் பொறுமைக்கு மகிழ்ந்து தோழி கூறுதல். இதற்குக் கொளு :-

3. பொதுப்படக் கூறி வாடி அழுங்கல்

அப்புற்ற சென்னியன் தில்லை உருரின் அவர்உறுநோய்
ஒப்புற் றெழில்நலம் ஊரன் கவர.உள் ளும்புறம்பும்
வெப்புற்று, வெய்துயிர்ப் புற்றுத்தம் மெல்லணை யேதுணையாச்
செப்புற்ற கொங்கையர் யாவர்கொல் ஆருயிர் தேய்பவரே. 354

கள்ளவிழ் கோதையைக் காதற் றோழி
உள்ளவிழ் பொறைகண் டுவந்துரைத் தது.

"பேரொலி நீர்" என்பது முதலாகத் தொடங்கியுரைக்க.

'இன்று பேசுவ என்' எனக் கூட்டி, 'இவளைப் புகழ்தற் குரிய சொற்கள் யாவை' என உரைக்க. 'இவளது பொறையின் மிகுதி சொல்லுக்கடங்காது' என்பது கருத்து. "கலந் தகன்றான்" என்றது, 'கலந்தாரை வாட்டினான்' என்னும் பொருட்டு. என்று - என்று நினைக்குந்தோறும். அருப்பொறை யாதல் - பொறுத்தற்கரிய சுமையாதல். "என்" என்றதைக் கண்மணிக்கும் கூட்டுக. 'யான் இவ்வாறாகவும் தனது வருத் தத்தை மறைத்துக்கொண்ட பெரும் பொறையாட்டியை' என்க.

'பேரொலியை யுடைய நீரையும், கரும்பையும் உடைய ஊரன்' என்றதனால், 'மிக்க புகழும், கலந்தார்க்கு இனிமையும் உடையன் எனத் தெளியப்பட்ட தலைவன் இக் கொடுமை செய்தான்' எனவும், 'சுரும்புறு கொன்றையன் தொல்புலியூர்ப் பெரும்பொறையாட்டி' என்றதனால், 'புலியூரனது தாரிடத்தும், கண்ணியிடத்தும் தொன்றுதொட்டுச் சுரும்புகள் தேனை உண்டு இனிது வாழ்தல்போல வாழற்பாலளாகிய இவள் இன்னமை எய்துகின்றாள்' எனவும் இறைச்சிப் பொருள் கொள்க.

சிவபெருமானை அடைந்து பலர் நீடுவாழ்தல் கூறப்பட்டது.

354. பொதுப்படக் கூறி வாடி அழுங்கலாவது, தன் பொறை உவந்துரைத்த தோழிக்குத் தலைவி முன்னிலைப் புற மொழியாக, 'ஊரனால் நலங் கவரப்பட்டு வருந்துவோர் எத் துணை மகளிரோ' எனப் பரத்தையர்க்கு இரங்குவாள்போன்று,

4. கனவிழந் துரைத்தல்

தேவா சுரர்இறைஞ் சுங்கழ லோன்தில்லை சேரலர்போல்
ஆவா கனவும் இழந்தேன் நனவென்! றமளியின்மேற்
பூவார் அகலம்வந் தூரன் தரப்புலம் பாய்நலம்பாய்
பாவாய் தழுவிற் றிலேன்விழித் தேன்அரும் பாவியனே. 355

தன் வருத்தந்தோன்றப் பொதுப்படக் கூறி மெலிந்து வருந் துதல். இதற்குக் கொளு :-

பொற்றிக ழரவன் மற்றிகழ் தில்லைப்
பிரிந்த வூரனே டிருந்துவா டியது.

கொளுவினுள், "ஊரனேடிருந்து வாடியது" எனப்பட்டமையால், பழைய உரையாசிரியர் இத் துறையைத் தலைவி தலைவனுடன் பள்ளியிடத்திருந்து கூறியதாக உரைத்தார். இதற்கேற்ப முன்னைத் துறையையும் அவர், தோழி தலைவியது பொறுமை கூறி வாயில் நேர்ந்ததாகவே கூறினர். எனினும் பேராசிரியர், கொளுவினுள் வந்த 'ஊரன்' என்பதற்கு, 'ஊரன் குறைகள்' எனப் பொருள் கொண்டு போயினர்.

"எழில்நலம் ஊரன் கவர" என்பதனை முதற்கண்ணும் "செப்புற்ற கொங்கையர் யாவர்கொல்" என்பதனை இறுதிக் கண்ணுங் கூட்டுக.

அப்பு - நீர் : "அவர்" என்றது தில்லை உறுதாரை. 'அவரை' என்னும் இரண்டாவது தொகுத்தலாயிற்று. வாளா 'நோய்' என்னாது, "அவர் உறுநோய்" என்றாள், அவை தன்னை உறற்பாலவன்றியிருப்பவும், தலைவன் உழப்பச் செய்தான்' என்றற்கு. ஒப்புற்று - ஏற்று, "செப்புற்ற" என்றதில், "உற்ற" என்றது, உவமஉருபு. யாவர்கொல் - இன்னும் யாவரோ!

சிவபெருமானது தலத்தை அடையாதவர், உள்ளும் புறம்பும் வெதும்பி, வெய்துயிர்த்து மெலிதல் கூறப்பட்டது.

355. கனவிழந் துரைத்தலாவது, தலைவனது கொடுமையை நினைந்து துன்புறுகின்ற தலைவி, கனவின்கண் அவனைக்

5. விளக்கொடு வெறுத்தல்

செய்ம்முக நீல மலர்தில்லைச் சிற்றம் பலத்தரற்குக்
கைம்முகங் கூம்பக் கழல்பணி யாரிற் கலந்தவர்க்குப்
பொய்ம்முகங் காட்டிக் கரத்தல் பொருத்தமன் றென்றிலையே;
நெய்ம்முக மாந்தி இருள்முகங் கீழும் நெடுஞ்சுடரே. 356

கண்டு கூடாது ஊடி. விழித்தமையைத் தோழிக்குச் சொல்லு தல். இதற்குக் கொளு :-

சினவிற் றடக்கைத் தீம்புனல் ஊரனைக்
கனவிற் கண்ட காரிகை உரைத்தது.

பொருள்கோள் : 'நலம்பாய் பாவாய், ஊரன் அமளியின் மேல்வந்து பூவார் அகலம் தர, நனவென்று புலம்பாய்த் தழுவிற் றிலேன்; அரும்பாவியன் விழித்தேன்; (அதனால்,) தில்லை சேரலர்போல், ஆவா கனவும் இழந்தேன்!'

"தேவாசுரர்" என்றது, வடநூல் முடிபாய உம்மைத் தொகை. கனவு - கனவிற்பெறும் இன்பம். 'நனவிற்பெறும் இன்பத்தையேயன்றி' எனப் பொருள் தருதலின், "கனவும்" என்ற உம்மை, எச்ச உம்மை. நனவென்று - நனவென்றே கருதி. 'கனவென்று அறியின், இது நீட்டியாது எனத் தழுவி யிருப்பேன்' என்பது கருத்து. பூ ஆர் அகலம் - தார்நிறைந்த மார்பு. புலம்பாய் - தனித்தொதுங்கி. நலம்பாய் பாவாய் - அழகு பாய்ந்த (பரவிய) பாவைபோல்வாய். தலைவன் ஊடல்நீக்கிக் கூடுமுன் விழித்தமைபற்றி, "அரும்பாவியன்" என்றாள். அரும்பாவி - நீக்குதற்கரிய தீவினையை உடையவள். 'இனிச் செய்வது யாது' என்பது குறிப்பெச்சம்.

'கனவும் இழந்தேன்; அதனால், தில்லை சேரலர்போல் இரண்டும் இழந்தேன்' என்று ஓதற்பாலது, சொற்பல்காமைப் பொருட்டு, "தில்லை சேரலர்போல் கனவுமிழந்தேன்" என ஓதப்பட்டது. தில்லை சேராதவர் இழக்கும் இரண்டு, இம்மை யின்பமும், மறுமையின்பமும்.

சிவபெருமானை அடையாதவர் இருமையும் இழத்தல் கூறப் பட்டது.

356. விளக்கொடு வெறுத்தலாவது, கனவிழந்தமை கூறி வருந்திய தலைமகள், அவ்விடத்து இரவில் நின்று எரியும் விளக்கை

நோக்கி, 'நீயாயினும், தெளிந்தாரை வஞ்சித்தல் பொருந்துவ தன்று என்று தலைவர்க்குக் கூறிற்றிலை' என்று வெறுத்துக் கூறுதல். வாய்மைக்குச் சான்றுவனவற்றுள் விளக்கு ஒன்று ஆகலானும், அஃது இருவரோடும் உடன் இருத்தலாலும் அதனை வெறுத்துக் கூறுவாளாயினள். இதற்குக் கொளு :-

பஞ்சணைத் துயின்ற பஞ்சின் மெல்லடி
அன்பனோ டழுங்கிச் செஞ்சுடர்க் குரைந்தது.

ஈற்றடியை முதலிற் கூட்டி, அதன் இறுதிக்கண், "கலந்த வர்க்கு" என்பதனைக் கூட்டுக.

செய்ம்முகம் - வயலிடத்து. அகங்கையைக் கைக்கு முகம் என்றார். 'அவன் கழல்' என எடுத்துக்கொண்டுரைக்க. பணியாரின் - பணியாதவரைப்போல; இது, "கரத்தல்" என்பத னோடு முடியும். "கலந்தவர்க்கு" என்றது, தலைவனை. அவனை அப் பெயராற் கூறியது, 'பொய்முகங் காட்டிக் கரத்தல் பொதுவே பொல்லாதாயினும், கலக்கப்பட்டாரிடத்து அது மிகவும் பொல்லாதன்றோ' என்பது தோற்றுதற்கு. பொய் - பொய்யான மலர்ச்சி. கரத்தல் - வஞ்சித்தல். என்றிலையே - என்று கூறினா யில்லையே. நெய்ம்முகம் மாந்தி - நெய்யைத் தகளியின் மூக்காற் குடித்து. கிழும் - பிளக்கின்ற. நெடுஞ் சுடரே - பெரிய சுடரே; இவ்வடைமொழி இகழ்ச்சி குறித்து நின்றது. 'நீ நல்ல உண வாலும், வெற்றியினாலும் கொண்ட செருக்கினால், செயற்பா லது செய்யாதொழிந்தனை' என்பாள், "நெய்ம்முகம் மாந்தி இருள்முகம் கிழும் நெடுஞ்சுடரே" என்றாள். 'செய்தக்கது செய்யாமையான், இனி நீ விரையக் கெடுவாய்' (குறள்-466.) என்பது குறிப்பெச்சம். தலைவி நெய்வாராதொழியின், விளக்கு விரையக்கெடுதல் உண்மையன்றோ !

சிவபெருமானை வணங்காதவர், பிறரைப் பொய்ம்முகங் காட்டி வஞ்சிக்க அஞ்சார் என்பது கூறப்பட்டது.

6. வாரம்பகர்ந்து வாயில் மறுத்துரைத்தல்

பூங்குவ ளைப்பொலி மாலையும், ஊரன்பொற் றேளிணையும்
ஆங்கு வளைத்துவைத் தாரே னுங் கொள்க; நள் ளார் அரணந்
தீங்கு வளைத்தவில் லோன் தில்லைச் சிற்றம் பலத்தயல்வாய்
ஓங்கு வளைக்கரத் தார்க்கடுத் தோம்மன் உருவரையே. 357

---

357. வாரம் பகர்ந்து வாயில்மறுத் துரைத்தலாவது, தலைமகள் விளக்கொடு வெறுத்திருக்கும் நிலைமைக் கண் (இது விடியற்காலத்து என்க.) தலைமகன் பரத்தையரிற் பிரிந்து வந்து வாயில் வேண்டிநுழைக, 'வண்டோரனையர் ஆடவர்; பூவோரனையர் மகளிர்; அதனால் அவர் வந்து தலையளி செய்யுங் காலத்து ஏற்றுக் கொள்வதன்றோ கிழத்தியர்க்கு உரித்தாவது!' எனக் கூறிய வாயில்கட்கு (தோழி முதலியவர்க்கு)த் தலைவி, 'யான் தலைவனைப் பரத்தையர்க்கு முற்றூட்டாகக் கொடுத்து விட்டேன்' என அவள் எல்லார்மட்டும் பேரருள் உடையாள் போலக் கூறி மறுத்துரைத்தல். இதற்குக் கொளு :-

வார்புனல் ஊரன் ஏர்திகழ் தோள்வயிற்
கார்புரை குழலி வாரம் பகர்ந்தது.

"ஆங்கு வளைத்துவைத்து ஆரேனும் கொள்க" என்றதனை இறுதிக்கண் கூட்டுக.

பூங்குவளைப் பொலிமாலை - குவளைப் பூவாற் பொலியும் மாலை; "ஊரன்" என்பதனை இதற்குங் கூட்டுக. திணை மருதமாகலின், குவளை மாலை கூறப்பட்டது. மாலையை முன்னர் வேறு கூறினாள், அது முன்னர்த் தரப்படுவதாதல் பற்றி. ஆங்கு - தம்மிடத்து வளைத்துவைத்து - முற்றுகையிட்டுத் தடுத்து. ஆரேனும் - வேண்டுவார் எவராயினும். கொள்க - தடையின்றித் தாமே கொள்க. இது, கொள்ளை சாற்றியவாறு. 'திங்கெய்த' என ஒரு சொல் வருவிக்க. 'நல்லோர் வாழுமிடத்தில் இவரும் வாழ்கின்றனரே' என்பாள், "சிற்றம் பலத்து அயல்வாய்" என்றாள். ஓங்கு - பொலிவுற்று வாழும் என்றது, 'அந் நல்வினை யுடையார்' என்றவாறு. இதனால் 'எனக்கு அந் நல்வினை இல்லை' என்றாள். 'என்மாட்டுக்

7. பள்ளியிடத் தூடல்

தவஞ்செய் திலாதவெந் தீவினை யேம்புன்மைத் தன்மைக்கெள்ளா
தெவஞ்செய்து நின்றினி இன்றுனை நோவதென்!
[அத்தன்முத்தன்
சிவன்செய்த சீரரு ளார்தில்லை யூர,நின் சேயிழையார்
நவஞ்செய்த புல்லங்கள் மாட்டேம்; தொடல்;விடு நற்கலையே.

காதலுடையானைத் தம்மாட்டுத் தாழ்விக்கும் தன்மை பெற்ற னர்' என்பாள், ''வளைக்கரத்தார்'' என்றாள். அடுத்தோம்-அடுக்கக் கொடுத்தோம்; ஊடல்தோன்றத் தன்னைப் பன்மை யாற் கூறினாள். 'மன் அடுத்தோம்' என முன்னே கூட்டுக. மன் - பெரிதும். ''அடுத்தோம்'' என்றதனாலும், ''மன்'' என்றதனாலும். தன் உரிமை விளக்கினாள் என்க. உருவரை - தான் சிறிதும் கொள்ளாத பங்கு; அஃதாவது முற்றாட்டு. 'உருவரையாக' என்னும் ஆக்கச்சொல் தொகுத்தல் பெற்றது.

சிவபெருமானது தலத்தில் வாழ்வார் தீநெறியிற் செல்லுதல் கூடாது என்பது கூறப்பட்டது.

358. பள்ளியிடத் தூடலாவது, தலைமகள் வாயில் மறுத்தமை யுணர்ந்த தலைவன் ஆற்றானாய் அவ்வாற்றாமையே வாயிலாகப் பள்ளியிடத்துச் சென்று, தலைவியது மேகலையைப் பற்ற, அவள் ஊடலுற்றுச் சொல்லுதல். இதற்குக் கொளு :-

பிடிவர் கற்பிற் றொடிவர் கோதை
ஆடவன் றன்னோ டூடி யுரைத்தது.

''அத்தன் முத்தன்................ஊர'' என்றதனை முதலிற் கொள்க.

தவம் செய்திலாத வெம் தீவினையேம் - நின்னால் காதலிக்கப் படுதற்குத் தவத்தைச் செய்யாது, நின்னால் வெறுக்கப்படுதற்குத் தீவினையைச் செய்த யாம். புன்மைத் தன்மைக்கு எள்ளாது - அக்கீழ்மை நோக்கி எம்மையே யாம் இகழ்ந்துகொள்ளாமல். 'எவ்வம்' என்பது, ''எவம்'' என இடைக்குறைந்து நின்றது. எவ்வம் செய்து நின்று - துன்பம் செய்து நின்று; என்றது,

8. செவ்வணி விடுக்க இல்லோர் கூறல்

தணியுறப் பொங்கும்இக் கொங்கைகள் தாங்கித் தளர்மருங்குல்
பிணியுறப் பேதைசென் றின்றெய்து மால்அர வம்பிறையும்
அணியுறக் கொண்டவன் தில்லைத்தொல் லாயநல்
[லார்கண்முன்னே
பணியுறத் தோன்றும் நுடங்கிடை யார்கள் பயில்மனைக்கே. 359

'காதலிக்கப்பட்டார் செய்யும் ஊடலை யாம் செய்து, நினக்குக் காதல் இல்லையாயினும் கண்ணோட்டம் பற்றி ஊடல் உணர்த்தி நிற்கச் செய்து' என்றவாறு. உனை நோவது என் - உன்னை வெறுத்தல் என்னோ. இதன்பின், 'அது நிற்க' என்னும் வினை மாற்றுத் தொடர் வருவிக்க. அத்தன் - எல்லா உயிர்கட்கும் தந்தை. முத்தன் - இயல்பாகவே பாசங்களின் நீங்கியவன். சிவன் - இன்ப வடிவினன். "சிவன் செய்த" என்றதில், "செய்த" என்றது காலமயக்கம். "சிவன் செய்த சீருளார் தில்லை ஊர" என்றதனால், 'நினக்கு இது தகாது' என்றாள் என்க. நின் சேயிழையார் - உன்னுடைய (உன்னால் காதலிக்கப் பட்ட) பெண்டிரது. நவம் செய்த புல்லங்கள் மாட்டேம்-புதுமை அமைந்த தழுவல்களை யாம் வல்லேமல்லேம். 'ஆதலின், நற்கலை விடு; தொடல்' என்க. மேகலை, 'கலை' எனப்பட்டது.

'சிவன் செய்த சீர் அருள் ஆர் தில்லை ஊர என்றதனால், நீ நின்னால் வெறுக்கப்பட்டாராலும் (பரத்தையராலும்) காதலிக்கப்படுகின்றாய் எனவும், தவம் செய்திலாத வெம் தீவினை யேம் என்றதனால், யாம் எம்மாற் காதலிக்கப்பட்டாராலும் (தலைவனாலும்) வெறுக்கப்படுகின்றேம் எனவும் கூறியவாறும்' என்பர் பேராசிரியர். புல்லம், அம்மீற்றுத் தொழிற்பெயர். 'புல்லல்கள்' எனவும், 'தொடேல்' எனவும் பாடம் ஓதுதல் சிறக்கும்.

சிவபெருமானது தலத்தில் வாழ்வோர் தவறு செய்யாமை கூறப்பட்டது.

359. செவ்வணி விடுக்க இல்லோர் கூறலாவது, தலைவன் பரத்தையரிடத்திருக்குங்கால் தலைவி பூத்து நீராடினமையை உணர்த்தற்குத் தோழியைச் செம்பட்டுடுத்துச் செஞ்சாந்து பூசிச்

செம்பூச் சூட்டிச் செவ்வணி யணிந்து விடுப்ப அவள் செல்லும் அந்நிலைகண்டு, இல்லத்துள்ளார் இரங்கிக் கூறுதல். இல்லத்தா ராவார், ஊரில் உள்ள இல்வாழ்க்கை மகளிர். எனவே, இது கண்டோர் கூற்றும். தலைவன் பரத்தையரிடத்திருக்கும் வழித் தலைவி தான் பூத்து நீராடினமையைத் தோழிக்குச் செவ்வணி யணிந்து விடுத்தும், புதல்வனைப் பெற்று நீராடினமையை வெள்ளணி யணிந்து விடுத்தும் உணர்த்துதல் இலக்கியங்களிற் காணப்படும் மரபுகளாகும். அவற்றுள் இது செவ்வணியணிந்து விடுத்தல். இதற்குக் கொளு :-

பாற்செலு மொழியார் மேற்செல விரும்பல்
பொல்லா தென்ன இல்லோர் புகன்றது.

தணியுறப் பொங்கும் - வளரும் அளவும் வளர்ந்து நிரம்பு மாறு வளர்கின்ற. "மருங்குல்" என்றது, மருங்குதலை யுடை யாளாகிய தலைவியை உணர்த்திற்று. பிணி உற - வருந்துத லால். "பேதை" என்றது தோழியை. "இன்று சென்று எய்துமால்" என்றதனை, இறுதிக்கண் கூட்டுக. ஆல், அசை நிலை. ஆயம் - மகளிர் கூட்டம். நல்லார் - பெண்கள். பணி உறத் தோன்றும் இடை - பாம்பு போலத் தோன்றுகின்ற இடை, "இடையார்கள்" என்றது, பரத்தையரை. மனைக்கு - இல்லத்தின் முன், என்றது, 'வீதிக்கண்' என்றவாறு. 'தில்லைக்கண் மனைமுன் சென்றெய்தும்' என்க. 'இஃது இரங் கத்தக்கது' என்பது குறிப்பெச்சம். 'இஃது இளிவரவுடைத்து' என இதனை, எள்ளற்பொருட்டாக உரைப்பர் பேராசிரியர்.

'பகைப் பொருளாய அரவும், பிறையும் பகையின்றி அழ குண்டாக வாழும் முடியையுடையோனது தில்லைக்கண் உள்ளா ராகலின், பகை பாராட்டுகின்றிலர்' என இறைச்சிப் பொருள் கொள்க.

சிவபெருமானைச் சார்ந்தோர் செற்றம் முதலிய குற்றங் களின் நீங்கிநிற்றல் கூறப்பட்டது.

9. அயலறி வுரைத்தவள் அழுக்கம் எய்தல்

இரவணை யும்மதி யோர்நுத லார்நுதிக் கோலஞ்செய்து
குரவணை யுங்குழல் இங்கிவ ளால்இக் குறிஅறிவித்
தரவணை யுஞ்சடை யோன்தில்லை யூரனை யாங்கொருத்தி
தரவணை யும்பரி சாயின வாறுநம் தன்மைகளே. 360

---

360. அயல்அறி வுரைத்து அவள் அழுக்கம் எய்தலாவது. செவ்வணி யணிந்து சேடியை விடுத்துத் தலைவனைப் பெறும் நிலை பலரும் அறிய நிகழ்தலைத் தலைவி சொல்லி வருந்துதல். இதற்குக் கொளு :-

உலகிய லறியச் செலவிட லுற்ற
விழுத்தகை மாதர்க் கழுக்கஞ் சென்றது.

மதியோர் நுதலார், பரத்தையர். நுதி - அவர்கள் முன்னே. ஒருசொல்லாய்நின்ற. 'இங்கிவள்" எனப்பட்டாள், தோழி. "இக்குறி" என்றது, பூத்து நீராடிய குறியை. "ஆங்கொருத்தி தர" என்றது, 'அயலாள் ஒருத்தி நமக்குத் தர' என்றவாறு. 'நமக்கு' என்றது, தலைவியது உரிமை தோற்றிற்று. அணையும் பரிசு ஆயினவாறு-கூடும் முறைமையாய் முடிந்தவாறு கொடிது 'கொடிது' என்பது சொல்லெச்சம். தன்மைகள் - பெண்மைத் தன்மைகள். அவை, நாண், மடம், அச்சம் முதலாயின.

"அரவணையும் சடையோன் தில்லை ஊரன்" என்றதனால், 'தில்லையோன், பாம்பை அணிந்திருப்பினும் அவனது தலைமை கருதி யாவரும் அவனை இகழாது வணங்குதல்போல, தலைவனது கொடுமை கருதி இகழாது வழிபடுதல் நமக்கு முறைமையா யிற்று' என இறைச்சிப் பொருள் கொள்க.

" பூப்பின் புறப்பா டீரறு நாளும்
நீத்தகன் றுறையார் என்மனார் புலவர்,
பரத்தையிற் பிரியுங் காலை யான "

(தொல் - பொருள் - 185.) என்பது பற்றிப் பூப்பெய்தினமை யைத் தலைவி தலைவற்குணர்த்தலும், அஃதுணர்ந்து பரத்தையர் தலைவனை விடுத்தலும், தலைவன் தலைவிமாட்டு மீண்டு வருதலும்

10. செவ்வணி கண்ட வாயிலவர் கூறல்

சிவந்தபொன் மேனி மணி திருச் சிற்றம் பலமுடையான்
சிவந்தஅம் தாளணி ஊரற் குலகிய லாறுரைப்பான்
சிவந்தபைம் போதும்அஞ் செம்மலர்ப் பட்டுங்கட் டார்முலைமேற்
சிவந்தஅம் சாந்தமும் தோன்றின வந்து திருமனைக்கே. 361

கடப்பாடாயின. இவற்றிற்கெல்லாம் காரணம் அது கருத் தோன்றும் காலம் என்பதே. அவ்வகையில் தலைவன் மீண்டு வந்து கூடுதலை, 'ஆண்கடன் இறுத்தல்' என்பர். இதனால், கற்புடை மனைவியிடத்து நற்றிரு மக்களைப் பெறுதலைச் சான்றோர் அறம் எனக் கொண்டமை தெளிவாம். கற்புடை மனைவியர்க்கும் அது கடனாதலை, "ஈன்றுபுறந் தருதல் என்றலைக் கடனே" என்னும் புறப்பாட்டு (312.) நன்குணர்த்தும்.

சிவபெருமான், எவ்வாற்றானும். யாவரானும் வழிபடப் படுவோனாதல் கூறப்பட்டது.

361. செவ்வணி கண்ட வாயிலவர் கூறலாவது, தோழி தலைவியது பூப்புணர்த்துவான் செவ்வணி யணிந்து செல்லக் கண்ட பரத்தைவாயிலோர் தம்முட் கூறுதல். இதற்குக் கொளு:-

மணிக்குழை பூப்பியல் உணர்த்த வந்த
ஆயிழையைக் கண்ட வாயிலவர் உரைத்தது

"மணி" என்றதும் திருச்சிற்றம்பலம் உடையானையே. அம்தாள் - அழகிய திருவடி. 'முடிக்கு அணியாக அணிந்து நின்ற ஊரன்' என்க. 'இத்தகையோனாகலின், உலகியல் கடவான்' என்பதாம். ஆறு - முறைமை. அது தலைவி பூப் பெய்தியஞான்று தலைவன் பிரிதல் கூடாமையாம். உரைப்பான்- உணர்த்துதற் பொருட்டு. 'அம் பட்டு' என இயையும். மலர்ப் பட்டு - பூத்தொழில் அமைந்த பட்டு. கட்டு ஆர் - கச்சினால் கட்டுதல் பொருந்திய. சாந்து - சந்தனம். திருமனை - செல்வத்தையுடைய மனை. 'நம் திருமனை' என்றவாறு. மனைக்கு - மனைக்கண். தோழி சென்று தோன்றினமையை, 'செவ்வணி தோன்றியது' எனப் பாற்படுத்துக் கூறினர்.

11. மனைபுகல் கண்ட வாயிலவர் கூறல்

குராப்பயில் கூழை இவளின்மிக் கம்பலத் தான்குழையாம்
அராப்பயில் நுண்ணிடை யார்அடங் கார்எவ ரே இனிப்?பண்
டிராப்பகல் நின்றுணங் கீர்ங்கடை இத்துணைப் போழ்திற்சென்று
கராப்பயில் பூம்புனல் ஊரன் புகும்இக் கடிமனைக்கே. 362

"திருமனைக்கே வந்து தோன்றின" என்றது, 'பிறர் அறியாமல் மறைக்கற்பாலது, பலரும் அறிய உணர்த்தல் வேண்டியதா யிற்று' என்றதாம். 'இனித் தலைவன் இங்குஇரான்' என்பது குறிப்பெச்சம்.

சிவபெருமானது திருவடிக்கு அன்பராயினர் நெறிகடவாமை கூறப்பட்டது.

362. மனைபுகல் கண்ட வாயிலவர் கூறலாவது, தோழி செவ்வணியணிந்து பரத்தையர் சேரியிற் சென்றகாலத்துத் தலைவன் உணர்ந்து, கடப்பாட்டானே தன் மனையின்கண்புக, அதனைக் கண்ட வாயிலோர் கூறுதல், இதற்குக் கொளு :-

கடனறிந் தூரன் கடிமனை புகுதர
வாய்ந்த வாயிலவர் ஆய்ந்துரைந்தது.

"பண்டு" என்பது முதலாகத் தொடங்கி யுரைக்க.

குராப் பயில் கூழை - குராமலர் பொருந்திய கூந்தல். "இவள்" என்றது, தலைவியை. மிக்கு - மேம்பட்டு. 'மிக்கு அடங்கார் எவரே' என இயையும். "அராப்பயில்" என்றதில் பயில், உவம உருபு. "நுண்ணிடையார்" என்றது, பரத்தை யரை. சிவபெருமானது குழையாகிய அரவுபோலும் இடையார், என்றதனால், அடங்காதார் அடங்கினமை குறித்தவாறு. 'இனி அடங்கார் எவரே' என இயையும். உணங்கு - பாழாய் இருந்த. கடை - வாயில். அறவோர்க்கு அளித்தலும், அந்தணர் ஓம்பலும், துறவோர்க்கு எதிர்தலும் (சிலப்பதிகாரம்- கொலைக்களக் காதை 71-72) உடைய வாயில் அவை அனைத் தையும் இழந்திருந்தது என்றற்கு, "உணங்கு ஈர்ங்கடை" என்றனர். 'கடை சென்று' என இயையும். "இத்துணைப்

12. முகமலர்ச்சி கூறல்

வந்தான் வயலணி யூரன் எனச்சின வாள்மலர்க்கண்
செந்தா மரைச்செவ்வி சென்ற;சிற் றம்பல வன்னருளான்
முந்தா யினவியன் நோக்கெதிர் நோக்க. முகமடுவிற்
பைந்தாட் குவளைகள் பூத்திருள் சூழ்ந்து பயின்றனவே. 363

போழ்தில்" என்றது, 'செவ்வணியணிந்து விடுத்த இவ்வள விற்றானே' என்றபடி. 'கராம்பயில் என்பது, வலித்தல் பெற்றது. கராம் - முதலை. புகும் - புகாநின்றான். 'ஊரன் இக் கடிமனைக்கே புகும்' எனக் கூட்டுக. 'தலைவி செவ்வணி யணிந்து விடுத்தலும், தலைவன் அதுகண்ட துணையானே விரைந்து வருதலும் ஆகிய முறைமை பிழையாது நிகழ்தலின். இனிப் பரத்தையர்க்குச் செருக்கு உளதாகுமோ' என்பது இதன் திரண்டபொருள்.

சிவபெருமானை அணுகின், அடக்கம் இல்லாதவரும் அடக்க முடையவராதல் கூறப்பட்டது.

363. முகமலர்ச்சி கூறலாவது, 'தலைவன் பரத்தையரிடத் தினின்றும் வந்தான்' எனக் கேட்ட அளவிலே தலைவி, கண் சிவந்து, பின் தலைவன் காதலொடு நோக்கியவழி அச் சிவப்பு மாறி முகம் மலர்ந்தமையைக் கண்டோர் தம்முட் கூறுதல். இதற்குக் கொளு:-

பூம்புனல் ஊரன் புகமுகம் மலர்ந்த
தேம்புனை கோதை திறம்பிறர் உரைத்தது.

வாள் உடையவரது சினத்தை வாள்மேல் ஏற்றி, 'சின வாள்' எனக் கூறுதல் வழக்கு. 'வாளும் மலரும் போலும் கண்கள்' என்க. செவ்வி - பொலிவு; என்றது, நிறத்தை. சென்றன - அடைந்தன. 'மூந்து அவ்வாறாயின வியல் நோக்கு' என்க. வியல் - அகன்ற. 'நோக்கிற்கு எதிர் நோக்க' என்க. 'எதிர்நோக்கினவன் ஊரன்' என்பது இனிது விளங்குதலின், அதனைப் பெயர்த்துங் கூறிற்றிலர். 'முகமாகிய மடுவில், நோக் காகிய குவளைகள் பூத்துப்பயின்றன' என உரைக்க. "இருள்" என்றது, கருமையை சூழ்ந்து - சூழப்பட்டு. பயின்றன - மிக்கு

13. காலநிகழ் வுரைத்தல்

வில்லிகைப் போதின் விரும்பா அரும்பா வியர்கள் அன்பிற்
செல்லிகைப் போதின் எரியுடை யோன்தில்லை அம்பலஞ்சூழ்
மல்லிகைப் போதின்வெண் சங்கம்வண் டூதவிண் தோய்பிறையோ
டெல்லிகைப் போதியல் வேல்வய லூரற் கெதிர்கொண்டதே. 364

விளங்கின. 'இதுவன்றோ கற்பு' என்பது குறிப்பெச்சம். 'சிற்றம்பலவன் அருளால் முந்து அவ்வாறாயின வியல்நோக்கு, பின் அவன் அருளாலே பூத்துப் பயின்றன' என உரைத்து, புலவியால் மிக்க துன்பமும், அதன் நீக்கத்தால் மிக்க இன்பமும் தலைவனுக்கு உளவாயினமையைப் பெறுவித்தல் அதற்குக் கருத்தாகக் கொள்க.

இவ்வாற்றால் சிவபெருமானது திருவருள் ஒன்றே பிறவித் துன்பமும், வீட்டின்பமும் தருதல் கூறப்பட்டது.

364. காலநிகழ் வுரைத்தலாவது, தலைவன் பரத்தையரிடத்து நின்றும் வந்து ஆற்றாமை யுடையனாகவும் தலைவி புலந்திருக்கக்கண்ட வாயிலோர், இராக்காலத்தால் தலைவனுக்கு ஆற்றாமை மிகுதலைக் கூறித் தலைவியை வாயில் நேர்வித்தல். இது முன்னைத் திருப்பாட்டைத் தொடர்ந்துவந்ததன்று. மேற்கூறியவாறன்றி இவ்வாறும் ஆம் என்றவாறு. இதற்குச் செய்யுள்:-

இகழ்வ தேவன்கோல் நிகழ்வதிவ் வாறெனச்
செழுமலர்க் கோதை உழையர் உரைத்தது.

வில்லி, காமன். கைப்போதின் - அவனது கையின்கண் உள்ள மலர் அம்புகளால். விரும்பா - மகளிரை விரும்புதல் இல்லாத. பாவியர் - பாவனை (தியானம்) உடையவர். செல்லி - செல்பவன். கைப்போதின் எரிஉடையோன் - கையாகிய மலரின் கண் நெருப்பை உடையவன். "மல்லிகைப்போதின்" என்றதில் இன், வேண்டாவழிச் சாரியை. 'மல்லிகைப் போதாகிய வெண்சங்கத்தை, என்க. இவ்வரிய வருணனையைப் பிற்காலத் தாரும் "மல்லிகையே வெண்சங்கா வண்டூத" (நளவெண்பா-சுயம்வரகாண்டம் 106.) எனஎடுத்துக்கூறினமை அறிக. விண்தோய் - வானத்தைப் பொருந்திய, பிறையைக்

14. எய்தல் எடுத்துரைத்தல்

புலவித் திரைபொரச் சீறடிப் பூங்கலஞ் சென்னியுய்ப்பக்
கலவிக் கடலுட் கலிங்கஞ்சென் றெய்திக் கதிர்கொள்முத்தம்
நிலவி நிறைமது ஆர்ந்தம் பலத்துநின் றோன்அருள்போன்
றுலவிய லாத்தனம் சென்றெய்த லாயின ஊரனுக்கே. 365

கூறினமையின் விண் மீன்களும் பெறப்பட்டன. படவே, 'விண்மீன்கள் விளங்கும் ஆகாயமாகிய விதானம் இட்டுப் பிறையாகிய மணிவிளக்கேற்றி, மல்லிகைப்போதாகிய வெண் சங்கினை வண்டுகளாகிய ஊதுவார் ஊதும் ஓசையுடனே இராக் காலம் தலைவனை எதிர்கொள்ளாநின்றது; நீ எதிர்கொள்ளாமை என்னை' என்றவாறாயிற்று. எல்லி - இரவு. கைப்போது இயல்வேல் ஊரன் - கையாகிய மலரிடத்துப் பயிலாநின்ற வேலை யுடைய தலைவன். "ஊரற்கு" என்றதனை, "ஊரனை" எனத் திரிக்க. இனி, இதனை இங்ஙனம் திரியாதே, "எதிர்கொண்டது" என்றதனை 'மாறுகொண்டது' எனக் கொண்டு, அதற்கேற்ப, 'இராக்காலம், மல்லிகைப்போதாகிய போர்ச்சங்கு ஒலிக்கப் பிறையாகிய வாளுடனே தோன்றி இகலாநின்றது' என்னும் பொருள்பட உரைத்தனர் முன்னை உரையாளர். இத் திருப் பாட்டினை, 'முன்னிலைமொழி' என்னாது, 'முன்னிலைப் புற மொழி' எனினும் ஆம்.

சிவபெருமான், காமத்தைக் கடிந்தோரது உள்ளத்தின்கண் விளங்கிநிற்றல் கூறப்பட்டது. "வான்புலன்கள் அகத்தடக்கி மடவாரோடும் - பொருந்தணைமேல் வரும்பயனைப் போகமாற் றிப் பொதுநீக்கித் தனைநினைய வல்லோர்க்கென்றும் - பெருந் துணையை" எனத் திருநாவுக்கரசரும் அருளிச் செய்தல்காண்க (திருமுறை - 6. 1. 5).

365. எய்தல் எடுத்துரைத்தலாவது, தலைவன், தலைவி யது புலவியைப் பணிந்து நீக்கி எய்திய இன்பத்தினை வாயில்கள் தம்முள் எடுத்துக்கூறுதல். இதற்குக் கொளு :-

சீரியல் உலகில் நிகழ்தரக் கூடி
வரர்புனல் ஊரன் மகிழ் வுற்றது.

15. கலவி கருதிப் புலத்தல்

செவ்வாய் துடிப்பக் கருங்கண் பிறழச்சிற் றம்பலத்தெம்
மொய்வார் சடையோன் அருளின் முயங்கி மயங்குகின்றாள்,
வெவ்வாய் உயிர்ப்பொடு விம்மிக் கலுழ்ந்து புலந்துறைந்தாள்
இவ்வா றருள்பிறர்க் காகு மெனநினைந் தின்னகையே. 366

புலவித் திரை - ஊடலாகிய திரைச்சீலை. பொர - தாக்க. சிறடிப் பூங்கலம் - சிறிய அடியாகிய அழகிய அணிகலம். 'அவற்றைத் (தன் தலைவன்) தலையிடத்து அணிதலால்' என்க. 'கடத்தல்' என்பது, 'கடல்' எனக்குறைந்து நின்றது. எனவே "கலவிக்கடலுள்" என்றதற்கு, 'இருவர் நெஞ்சும் கலவிக்கண் தம்மைக் கடந்துசென்றவிடத்து' என உரைக்க. கலிங்கம் - உடை; இது தலைவியது. எய்தி - பற்றி. முத்தம் - முத்தமிடுதல். 'நிலவுவித்து' என்பது, "நிலவி" என நின்றது. மது - தேன்; என்றது, இதழ் ஊறலை. ஆர்ந்து - நுகர்ந்து. உலவு இயலாத் தனம் - தளர்தல் பொருந்தாத கொங்கை. 'அம்பலத்து நின்றான் அருள்போன்று உலவியலாத' என்றதனால், 'என்றும் தளர்தல் இல்லாத' என உரைக்க. 'தனம் ஊரனுக்கு எய்தலாயின' என்க. இப்பாட்டு இப்பொருளே குறித்து நிற்பினும் வேறொரு நயமும் தோற்றி நின்றது ; அது வருமாறு ;-

புலால் நாற்றத்தையுடைய அலைமோத, சிறிய அடித் தலத்தையுடைய அழகிய மரக்கலத்தைப் பரந்த கடலினது தலையிலே செலுத்துதலால் கலிங்கம் என்னும் நாட்டை அடைந்து அங்குள்ள முத்துக்கள் தன்கண் வந்து நிலைக்கப் பெற்று, அந்நாட்டு மதுவை நுகர்ந்து சிற்றம்பலத்து நின்றோனது அருள்போன்று என்றும் கெடுதல் இல்லாத பொருள்கள் ஊரனுக்குச் சென்று எய்தலாயின.

சிவபெருமானது திருவருள் என்றும் கெடாததாதல் கூறப் பட்டது.

366. கலவி கருதிப் புலத்தலாவது, தலைவன் புலவி தீர்த்துப் புணரப்பட்ட கலவியாற் களிப்பெய்திய தலைமகள், இவ்வாறான தலையளி பிறர்க்கும் ஒருஞான்று ஆம் என்பது கருதிப் புலத்தல். இதற்குக் கொளு :-

16. குறிப்பறிந்து புலந்தமை கூறல்

மலரைப் பொருஅடி மானும் தமியள்;மன் னன்ஒருவன்;
பலரைப் பொருதென் றிழிந்துநின் ருள்பள்ளி; காமன்எய்த
அலரைப் பொருதன் றழல்விழித் தோன்அம் பலம்வணங்காக்
கலரைப் பொருச்சிறி யாள்என்னை கொல்லோ கருதியதே! 367

மன்னிய உலகில் துன்னிய அன்பொடு
கலவி கருதிப் புலவி யெய்தியது.

முயங்கி - முயங்கப்பட்டு. "அருளின்" என்றது. அருளால் நிகழ்த்தும் முயக்கத்தை. எனவே, "உடையோன், அருளின் முயங்கி" என்றது, 'சடையோனது முயக்கம் போல முயங்கப்பட்டு' என்றதாயிற்று. அஃதாவது, 'பரிபாகம் எய்தினரை இறைவன் தன் அருள்வழியே தன்னுள் அடக்கி அணைக்குங் காலத்து உண்டாகின்ற, உரையும் மனமும் கடந்த உவமையில் பேரின்பம் போலும் இன்பத்தைத் தலைவி, தலைவன் தன் கவவுக்கை ஞெகிழாது முயங்கிய முயக்கத்தால் எய்தினள்' என்றதாம். மயங்குகின்றாள் - வசமழியா நின்றவள்; இடையே ஒன்று நினைந்து நைந்தாள் என்க. சிவானந்த நுகர்ச்சிக்கண்ணும் மலவாசனையால் உயிர்க்கு இன்னதோர் இடையீடு உண்டாம் என்பதும் இதனால் உணர்த்தப்பட்டது, என்பதும் உணர்க. "செவ்வாய் துடிப்பக் கருங்கண் பிறழ" என்றதும், உயிர்களது ஞானக் கிரியைகள் அவ்வானந்தத்தில் திளைக்குமாறு அறிவித்ததேயாம். 'வெவ்வுயிர்ப்பு, வாய் உயிர்ப்பு' எனத் தனித்தனி சென்று இயையும். "இவ்வாறு அருள்" என்றதில் அருள், முதனிலைத் தொழிற்பெயர். 'பிறர்க் கும்' என்னும் எச்சவும்மை தொகுத்தலாயிற்று. இன்னகை- இனிய நகையை உடையாள். "தன்னை உணர்த்தினும் காயும். பிறர்க்கும் நீர் - இந்நீரர் ஆகுதிர் என்று" (குறள் - *1319.*) என்றது காண்க.

சிவானந்த அனுபவத்தியல்புகள் கூறப்பட்டன.

367. குறிப்பறிந்து புலந்தமை கூறலாவது, தலைவன், தன் தலையளியைப்பெற்று இன்புறுதற்கிடையே தலைவி புலந்தமை கண்டு, 'இவள் புலந்தது என்னோ' என நினைந்து, பின், 'இவ்

17. வாயிலவர் வாழ்த்தல்

வில்லைப் பொலிநுதல் வேற்பொலி கண்ணி மெலிவறிந்து
வல்லைப் பொலிவொடு வந்தமை யால்நின்று வான்வழுத்துந்
தில்லைப் பொலிசிவன் சிற்றம் பலஞ்சிந்தை செய்பவரின்
மல்லைப் பொலிவயல் ஊரன்மெய் யேதக்க வாய்மையனே. 368

வாறருளுதல் பிறர்க்கும் ஆம்' என அவள் கருதியதனை உணர்ந்தானாகத் தலைமகள் அக் குறிப்பையறிந்து, 'நம்மை யொழியப் பிறரும் உளராதல் பற்றியே இஃது இவன் உணர்வதாயிற்று' என்று கொண்டு, 'நம் இருவரையன்றி இப்பள்ளி பலரைத் தாங்காது' என்று சொல்லி இழிந்து புலந்து நிற்ப, அதனை வாயில்கள் கூறுதல். தலைமகனது நெஞ்சிடத்தாரைக் குறித்து, 'பலர்' என்றாள் என்க இதற்குக் கொளு ;-

குறிப்பினிற் குறிப்பு நெறிப்பட நோக்கி
மலர்நெடுங் கண்ணி புலவி யுற்றது.

"மான்" என்றது, செய்யுட்கண் முன்வரற்பாலதாய, 'இவள்' என்னும் சுட்டுப் பெயர்ப்பொருட்டாய் நின்றது. 'மன்னனும்' என்னும் உம்மையும், 'ஒருவனே' என்னும் ஏகாரமும் விரித்து 'இங்ஙனமாக' என்பது வருவித்து, "காமன்......சிறியாள்" என்பதனை, இதன்பின்னர்க் கூட்டுக. 'பள்ளி இழிந்து நின்றாள்' என மாற்றுக. 'அம்பு' என்னாது; "அலர்" என்றனர், 'காமனது செயலை நோக்காது கருத்து நோக்கி அவனை அழிவாக்கினான்' என்றற்கு. அழல் விழித்தோன் - தீயாக நோக்கினவன். கலர் - கீழ்மக்கள் ; 'அவரைப் பொருதவள்' என்றது, 'அவரது செயலை வெறுப்பவள்' என்றவாறு. 'அத்தன்மையளாகிய இவள், அவர் செய்யும் செயலை (அன்பரை வருத்தலை)ச் செய்தது என்னோ' என்றபடி. வாயில்கள் இங்ஙனம் கூறியதனால், பின்னர்த் தலைவி புலவி நீங்கினாள் என்பதே கருத்து.

சிவபெருமான், செய்வார் செய்யும் செயல்நோக்காது, அவர்தம் கருத்து நோக்கியே அறக்கருணையும், மறக்கருணையும் செய்தல் கூறப்பட்டது.

368. வாயிலவர் வாழ்த்தலாவது, தலைவன் செவ்வணி கண்டு விரைய வந்தமை பற்றி அவனை வாயிலோர் வாழ்த்துதல். இதற்குக் கொளு :-

18. புனல்வர வுரைத்தல்

சூன்முதிர் துள்ளு நடைப்பெடைக் கிற்றுணைச் சேவல்செய்வான்
தேன்முதிர் வேழத்தின் மென்பூக் குதர்செம்ம லூரன்திண்டோள்
மான்முதிர் நோக்கின்நல் லார்மகி ழத்தில்லை யான்அருளே
போன்முதிர் பொய்கையிற் பாய்ந்தது வாய்ந்த புதுப்புனலே.

தலைமகனது தகவுடைமை
நிலைதருவாயில் நின்றோர் உரைத்தது.

''வில்லை, மல்லை'' என்பவற்றில் ஐகாரங்கள், சாரியை. ''வேற்பொலி கண்ணி'' என்றது ஒருசொல்லாய், ''நுதல்'' என்றதனோடு இரண்டாவதன் தொகைபடத் தொக்கது. மெலிவு - வாட்டம்; என்றது, வருத்தத்தை வல்லை - விரைவாக. 'வல்லை வந்தமையான்' என இயையும். 'பொலிவொடு வந்தான்' என்றனர், அவன் வந்த அளவிலே தலைவி பொலிவு பெற்றமை பற்றி. 'தில்லைக்கண்' என உருபு விரிக்க. ''சிந்தை செய்பவரின்'' என்ற ஐந்தாவது, 'வாய்மையன்' என்னும் வினைக்குறிப்புப் பெயர் கொண்டது. மல் - வளம். மெய்யே - உண்மையாகவே-

சிவபெருமானிடத்து அன்புடையோர், வாய்மை யுடையராதல் கூறப்பட்டது.

வெள்ளணி விடுத்துத் தலைவி நெய்யாடிய துணர்த்தலிலும் இதனின்மிக்க வேறுபாடு பெரிதின்மையின், அது கூறுராயினர் என்க.

369. புனல்வர வுரைத்தலாவது, தலைவன் தலைவியொடு கூடி இன்புற்றிருக்குங்காலத்துப் புதுவெள்ளம் வந்து பொய்கைகளை நிறைக்க, அது கண்டோர், 'இனித் தலைவன் புனலாட்டின்கண் பரத்தையர் அவன் தோளைப்பெற்று மகிழத் தலைவிக்குப் புலவி எய்தும்போலும்' எனக் கூறுதல். இதற்குக் கொளு :-

புனலா டுகவேனப் புனைந்து கொண்டு
மனைபுகுந் தவனை வையம் உரைத்தது.

'சூல் முதிர் பெடை, துள்ளு நடைப் பெடை' எனத் தனித் தனி இயைக்க. துள்ளு நடை - சூல் முதிர்வால் குறுக அடியிட்டு நடக்கும் நடை. 'துன்னு நடை' என ஓதுவர் பழைய உரை யாசிரியர். பெடை - பெண் பறவை. இல் - ஈன் இல். சேவல் - ஆண் பறவை. 'துணைச் சேவல் பெடைக்கு இல் செய்வான் பூக் குதர் ஊரன்' எனக் கூட்டுக. தேன் - தேன்போலும் சாறு. வேழம் - வேழக் கரும்பு. குதர் - கோதுகின்ற (பறிக் கின்ற). செம்மல் ஊர் - தலைமை பெற்ற ஊர். 'திண்தோளை' என உருபு விரிக்க. மான் முதிர் நோக்கின் நல்லார் - மான் நோக்கின் தன்மை முதிர்ந்த நோக்கினையுடைய மகளிர்; பரத் தையர். மகிழ - பெற்று மகிழும்படி. 'தில்லையான் அருளே போல் பாய்ந்தது' என்றது, 'எல்லையின்றிக் குளிர்ந்து பரந்தது' என்றதாம். 'இனித் தலைவிக்கு ஊடல் நிகழ்வது போலும்' என்பது குறிப்பெச்சம்.

'சேவல் பெடைக்குச் சூல் முதிர்ந்த பின்னே இல் இழைத் தற் பொருட்டுக் கரும்பின் பூவைக் கோதுகின்ற ஊரன்' என்ற தனால், 'புதல்வற்பேறு காரணமாகவே தலைவன் இல்லிடத்துத் தங்குகின்றான் என்பது உள்ளுறை' எனப் பழைய உரையா சிரியரும், 'சேவல் இல் இழைத்துப் பாதுகாத்தல்போலத் தலைவன் தலைவிக்கு வேண்டுவன செய்து மனைவயின் தங்கு கின்றான் என்பது உள்ளுறை' எனப் பேராசிரியரும் உரைப்பர். இப் பாட்டின் முதல் இரண்டடிகளை,

"உள்ளூர்க் குரீஇத் துள்ளுநடைச் சேவல்
சூல்முதிர் பேடைக் கீனில் இழைஇயர்
தேம்பொதிக் கொண்ட தீங்கழைக் கரும்பின்
நாறா வெண்பூக் கொழுதும்
யாணர் ஊரன்"

என்னும் குறுந்தொகைப் பாட்டோடு (85) வைத்துக் காண்க. இவ்வாறே, பதினொன்றாந் திருமுறையிலும்,

"மனையுறை குருவி வளைவாய்ச் சேவல்
சினைமுதிர் பேடைச் செவ்வி நோக்கி
ஈனில் இழைக்க வேண்டி ....
.. ..
கண்ணுடைக் கரும்பின் நுண்தோடு கவரும்
... .
வருபுன லூரன்"

19. தேர்வரவு கண்டு மகிழ்ந்து கூறல்

சேயே எனமன்னு தீம்புன லூரன் திண் டோளிணைகள்
தோயிர் புணர்தவந் தொன்மைசெய் தீர்;சுடர் கின்றகோலம்
தீயே எனமன்னு சிற்றம் பலவர் தில் லைந்நகர்வாய்
வீயே யெனவடி யீர்,நெடுந் தேர்வந்து மேவினதே. 370

(திருவாரூர் மும்மணிக் கோவை - 19) எனக் கூறப்பட்டமை காண்க.

சிவபெருமானது திருவருள் எல்லையின்றிக் குளிர்ந்து பரந்து அன்பரது உள்ளங்கள் அனைத்தையும் நிறைத்து நிற்றல் கூறப் பட்டது.

370. தேர்வரவு கண்டு மகிழ்ந்து கூறலாவது, புதுப்புனல் வரவு கேட்ட தலைமகன் புனலாட்டு விழாவிற்குத் தேர் ஏறிச் செல்ல, அதுகண்ட பரத்தையர் மகிழ்ந்து கூறுதல். இதனை, 'தலைமகள் நொந்துரைத்ததாக உரைப்பினும் ஆம்' என்பர் பேராசிரியர். இதற்குக் கொளு :-

பயில்மணித் தேர்செலப் பரத்தையர் சேரிக்
கயல்மணிக் கன்னியர் கட்டு ரைத்தது.

"சுடர்கின்ற கோலம்" என்பது முதலாகத் தொடங்கி, 'திண்தோளிணைகள் புணர்தவம் தொன்மை செய்தீர், தோயிர்' எனக் கூட்டி முடிக்க.

சேய் - முருகன். 'இணைத் தோள்கள்' என மாற்றிக் கூட்டுக. 'ஒன்றற்கொன்று இணையாய் இருத்தலின் இணை எனத் தனித்தனி கூறப்பட்டன' என்பர் பேராசிரியர். தோயிர்- தழுவுங்கள். சுடர்கின்ற கோலம் - ஒளிர்கின்ற திருமேனி. 'இவ்வாறோதின் அறுசீராம்' என்று அஞ்சி, 'சுடர் கின்ற கோலம்' எனக் குறுக்கலாக்கி ஓதுவர் பேராசிரியர்; ஆயினும், 'இவ்யாப்பிற்கு அன்னதோர் யாப்புறவு செய்யப்பட்டது பிற் காலத்தேயாகலின், இவ்வாறோதுதல் வழுவாகாது' என்னுங் கருத்தால், இங்ஙனமே ஓதினர் பழைய உரையாசிரியர். வீ - மலர். "என" என்றது, "அடியீர்" என்னும் வினைக்குறிப்புப்

20. புனல் விளையாட்டில் தம்முள் உரைத்தல்

அரமங் கையரென வந்து விழாப்புகும் அவ்வவர்வான்
அரமங் கையரென வந்தணு கும்மவள்; அன்றுகிரால்
சிரமங் கையனைச்செற் றேன்தில்லைச் சிற்றம் பலம்வழுத்தாப்
புரமங் கையின்நை யாதைய காத்தும்நம் பொற்பரையே. 371

பெயர் கொண்டது. 'வடிவிர்' எனப் பாடம் ஓதுவர் பழைய உரையாசிரியர். "ஊரன்" என முன்னே வந்தமையின், வாளா, "நெடுந்தேர்" என்று போயினர். ஆகவே, "ஊரன்" என்றதனை இங்குத் தந்து, அவ்விடத்து, 'அவன் தோளிணைகள்' என உரைத்தல் கருத்தாதல் அறிந்து கொள்க. வந்து மேவியது - மனையினின்றும் வந்து இங்கு நின்றது.

"சுடர்கின்ற கோலம் நீயே என மன்னு சிற்றம்பலவர் தில்லைநகர்வாய் வந்து மேவினது" என்றது, 'அக்கோலத்தைக் காணும் தவம் உடையார்க்கு அது முன்னிற்றல்போல, நும் தவத்தால் தேர்வந்து நின்றது' என்றவாறும். 'தவம் செய்தேம் தோய்வேம்' எனத் தன்மையிற் கூறற்பாலதனை, மகிழ்ச்சி மிகுதியால் முன்னிலையாகக் கூறினர் என்க.

சிவபெருமானது திருக்கோலம், தொன்மைத் தவம் உடையார்க்கே காணலாவது என்பது கூறப்பட்டது.

371. புனல் விளையாட்டில் தம்முள் உரைத்தலாவது, தலைமகனது தேர்வரவு கண்டு மகிழ்ந்து அவனொடு சென்று புனலாடுகின்ற பரத்தையர், தம்முள் இயைந்து கூறுதல். இதற்குக் கொளு :-

நீம்புனல் வாயிற் சேயிழை வரும்எனக்
காம்பன தோளியர் கலந்துகட் டுரைத்தது.

"அரமங்கையர் என வந்து விழாப்புகும் அவ்வவர்" என்றதனை, 'நையாது" என்பதன் பின்னர்க் கூட்டுக.

"அரமங்கையர்" என்றது, நீரரமங்கையரை. விழா, நீராட்டு விழா. "அவ்வவர்" என்றது, தன்மைக்கண் படர்க்கை வந்த வழுவமைதி. 'அவ்வவரும்' என்னும் முற்றும்மை

21 தன்னைவியந் துரைத்தல்

கனலூர் கணைதுணை யூர்கெடச் செற்றசிற் றம்பலத்தெம்
அனலூர் சடையோன் அருள்பெற் றவரின் அமரப்புல்லும்
மினலூர் நகையவர் தம்பால் அருள்விலக் காவிடின்,யான்
புனலூ ரனைப்பிரி யும்புன லூர்கண் அப் பூங்கொடியே. 372

தொகுத்தலாயிற்று. "வான் அரமங்கையர் என" என்பது, ஒருமைக்குப் பன்மை யுவமை. அணுகும் - அணுகுவாள். "அவள்" என்றது, தலைவியைக் குறித்த பண்டறி சுட்டு. நீராட்டு விழாவில் நிற்றலின் தங்களை நீரர மகளிரோடும், மனையினின்றும் விரைய வருவாள் எனக் கருதுதலின் தலைவியை வாளா மகளிரோடும் ஒப்பித்துக் கூறினர் பரத்தையர். 'அயனை' என்பது, 'ஐயனை' எனப் போலியாயிற்று. "தில்லை" என முன்னர் வந்தமையின், "புரம்" என்றது, ஏனைய ஊர்களை யாயிற்று. 'புரம், திரிபுரம்' என்பர் பழைய உரையாசிரியர். நையாது - பின்னர் வருந்தாமல். ஐய - வியப்புடைய. 'ஐய பொற்பர்' எனக் கூட்டுக. 'பொற்பர் - அழகுடையவர்; என்றது தலைவனை. 'அவள் வந்து அணுகும்; அதற்குமுன்னே நம் பொற்பரை அவ்வவரும் காத்தும்' என முடிக்க. இதனுள் 'அவள் என்றது, காதற் பரத்தையை' என்று கூறி, 'அவ்வா றாயின் இது பயனில் கூற்றாமன்றோ' என்பதுபற்றி யாதும் கூறாதேபோயினர் பழைய உரையாசிரியர். இனி, 'அவள் என்றது, இற்பரத்தையை' எனக் கூறி, 'இப் பரத்தையரது மாறுபாடு, தலைமகள் ஊடுதற்கு நிமித்தமாகலின் பயனு டைத்து' என்றார் பேராசிரியர். "பரத்தை வாயில் எனஇரு வீற்றும் - கிழத்தியைச் சுட்டாக் கிளப்புப்பயன் இலவே" என்பது இலக்கணமாதல் (தொல். பொருள் - 499.) பேரா சிரியர் உரையிற்றானே காட்டப்பட்டது.

சிவபெருமானை வழுத்தாதவர், கிடைத்த பொருளையும் இழந்து வருந்துவோராதல் கூறப்பட்டது.

372. தன்னை வியந்துரைத்தலாவது, பரத்தையர் பலரும் தலைவனைச் சூழ்ந்து புனலாடுமிடத்து அவருள் தலைவியாயினாள், 'யான் இவனைப் பிறர்மாட்டுச் செல்லாது என்னிடத்துத் தாழ் வியாதொழியின், இவனை எம்மிடத்துத்தந்து மனைக்கண் நின்று

22. நகைத் துரைத்தல்

இறுமாப் பொழியுமன் றேதங்கை தோன்றின்என்
[னெங்கை! அங்கைச்
சிறுமான் தரித்தசிற் றம்பலத் தான்தில்லை யூரன்திண்டோள்
பெறுமாத் தொடும்தன்ன பேரனுக் குப்பெற்ற பெற்றியினே
டிறுமாப் பொழிய இறுமாப் பொழிந்த இணைமுலையே. 373

கனும்இன்ற மனைக்கிழத்தியாவேன்' எனத் தன்னை வியந்து கூறுதல். இதற்குக் கொளு :-

அரத்தத் துவர்வாய்ப் பரத்தைத் தலைவி
முனிவு தோன்ற நனிபு கன்றது.

கனல் ஊர் கணை - நெருப்பு மிகாநின்ற அம்பால். துணை ஊர் - தம்முள் இயைந்த ஊர்கள்; முப்புரம். "அருள்பெற்ற வரின்" என்றது, சுட்டிக் கூறு உவமமாதலின், அதனை விரித்து, 'அவர்போல இறுமாந்து புல்லும்' என உரைக்க. அமர - நெருங்க. மினல் ஊர் நகையவர் - ஒளி மிகுந்த நகைப்பை உடையவர். 'தம்பாற் செல்லாமல்' என ஒரு சொல் வருவிக்க. அருள் - இவன் அருளை. புனல், கண்ணீர். "பூங்கொடியே" என்றதன்பின், 'ஆவேன்' என்பது எஞ்சி நின்றது. தலைவியைப் பரத்தை இங்ஙனம் இழித்துக் கூறியது, 'அவள் தன் தலைவனைத் தன்னிடத்து நின்றும் நீங்காது பிணித்துக் கொள்ளும் வகையிலளாயினள்' எனக் கருதியாம்.

புரகரனாகிய சிவபெருமானது திருவருளைப்பெற்றோர், இன்னல் நீங்கி இன்பமுற்று இறுமாந்திருத்தல் கூறப்பட்டது.

373. நகைத்துரைத்தலாவது, பரத்தைத் தலைவி தன்னை வியந்துரைத்தமை கேட்ட தலைவி, தான் அவளை நகைத்துக் கூறுதல். இதற்குக் கொளு :-

வேந்தன் பிரிய ஏந்திழை மடந்தை
பரத்தையை நோக்கி விரித்து ரைத்தது.

(இக்கொளுவினுள், 'சிரித்துரைத்தது' என்பது பாடம் போலும்!)

"அங்கைச் சிறுமான்" என்பது முதலாகத் தொடங்கி, 'இறுமாப்பொழிய இணைமுலை இறுமாப்பொழிந்த; தங்கை தோன்றின், என் எங்கை, இறுமாப்பொழியுமன்றே' எனக் கூட்டி முடிக்க.

"எங்கை இறுமாப்பொழியும்" எனப் பண்பின் வினை பண்பிமேல் நின்றது. "அன்றே" என்றது, தேற்றப் பொருள் தந்துநின்றது. 'தனக்கு ஒரு தங்கை தோன்றின், என் தங்கை இறுமாப்பொழிவாளன்றே' என்க. இதனுள், "தோன்றின்" என்றது, 'விரைவில் தோன்றுவாள்' என்பது உணர்த்திநின்றது. நிற்கவே, 'இவள் இறுமாப்பும் விரைவில் நீங்குவதாம்' என்றதாயிற்று. பரத்தையைத் தலைவி, 'எங்கை' என்றொழியாது, "என் எங்கை" என அடுக்கிக் கூறியது, தனக்கு மிகவும் உரிமையுடையாள்போலக் கூறி, முனிவு வெளிப்படுத்தற்காம். எங்கை - என் தங்கை. "சிறுமான்" என்றதில் "அங்கை" என மிகுத்துக் கூறினாள், 'மானின் சிறுமை கருதி நீக்காது என்றும் ஒருபெற்றியே தரித்து நிற்கின்றவன்' என்பது உணர்த்துதற்கு. இதனானே. 'அவனது தில்லையணுகியும், ஊரன் ஒருநாட் கூடினாரை மறுநாள் விடுத்துப் பலரைத் தழுவுபவனாய் இராநின்றான்' என்பதும் கூறினாளாம். 'இவ் வாறாகவே, இன்று எனக்கு இவள் தங்கையாய்த் தோன்றினாற் போல, நாளை இவட்கும் ஒருத்தி தங்கையாய்த் தோன்றுதல் ஒரு தலையாகலின், அஃது அறியாது இவள் தருக்குகின்றது என்னே' என்பது கருத்து. இக்கருத்துத் தோன்றவே, 'இவள் பெருமையும், பெற்றியும், இறுமாப்பும் கெடுமாறு இவளது புணர்முலைகள் இறுமாப்பு ஒழிந்தன' என்றாள். "சிறுமான்" என்றதில் சிறுமை இளமை குறித்ததாயினும், ஈண்டுக் கருதிய பொருட்கேற்ப, 'சிறுமை' என்பதும் கொள்ள நின்றது என்க. மாத்து, 'மகத்து' என்னும் ஆரியச் சொற் சிதைவு. 'பெருமை' என்பது இதன் பொருள். ஒடு இரண்டும் எண்ணொடு. உம்மை, சிறப்பு. பெறுமாத்தொடும் - பெற்றதனால் உண்டாகிய பெருமையோடும். பெருமை, வரிசை, 'தன' என்பது, "தன்ன" என விரித்தல் பெற்றுநின்றது. 'தன பெற்றி' என இயையும். பேரணுக்குப் பெற்ற பெற்றி தலைவனொடு மிக அணுகியிருத்தலைப் பெற்றதனால் உண்டாகிய தன்மைகள்; அவை வரிசையால் எய்தும் களிப்புக்கள். இறுமாப்பு

23 நாணுதல் கண்டு மிகுத்துரைத்தல்

வேயாது செப்பின் அடைத்துத் தமிவைகும் வியினன்ன
தீயாடி சிற்றம் பலமனை யாள், தில்லை யூரனுக்கின்
றேயாப் பழியென நாணினன் கண்ணிங்கு னேமறைத்தாள் ;
யாயாம் இயல்பிவள் கற்பு, நற் பால இயல்புகளே. 374

ஒழிந்த இருமாங்கு நிற்றலை ஒழிந்தன; இது விரைவு பற்றி எதிர்காலத்தை இறந்தகாலமாகக் கூறியவாறு, 'கடிதில் ஒழியும்; ஒழியவே, தனக்குத் தங்கையும் கடிதில் தோன்று வான்' என்பதாய. இவற்றுலெல்லாம், 'இளமையும், இன்ப மும் கடிதின் மறைவன' என அவற்றது நிலையாமையை உணர்த்தும் நோக்குடைத்தாய் நின்றது இத்திருப்பாட்டு என்க. பரத்தை கூறுவனவற்றைத் தலைவி பாங்காயினர் கேட்டு அவட்கு உரைத்தலும், தலைவி கூறுவனவற்றைப் பரத்தை பாங்காயினர் கேட்டு அவட்குக் கூறுதலும் இயல்பு ; அதனுல் இவ்இரு துறைகளும் நிகழ்வனவாயின என்க.

சிவபெருமான், சிறியோரும் தன்னை அடையிற் கைவிடாது தாங்குதல் கூறப்பட்டது.

374. நாணுதல் கண்டு மிகுத்துரைத்தலாவது, தலைவனது புறத்தொழுக்கத்தால் ஆற்ருளாய தலைவி, 'அவ்வாற்ருமையைப் புலப்படுப்பின் தலைவற்குப் பழியாம்' என்று அதனை மறைத் தொழுக, அதனை யுணர்ந்த தோழி, அவளது கற்பு நலத்தைச் சிறப்பித்துக் கூறுதல். இதற்குச் செய்யுள் :-

மன்னவன் பிரிய நன்மனைக் கிழத்தியை
நாணுதல் கண்ட வாணுதல் உரைத்தது.

வேயாது - சூடாது. அடைத்து - அடைக்கப்பட்டு. "தமி" என்றது, பயன்படாமை குறித்து நின்றது. வீ - மலர். "வியின்" என்ற இன், தவிர்வழி வந்த சாரியை. "அன்ன அனையாள்" என்ருராயினும், 'அன்னவளும், அனையவளுமாகிய இவள்' என உரைத்தல் கருத்து என்க. சூடாது செப்பில் அடைக்கப்பட்டு வாடிய மலர், தலைவன் மருவாது, இல்லின்கண் வைத்துப் பிரியப்பட்டு மெலியும் மெலிவுபற்றியும், சிற்றம்பலம்

24. பாணன்வர வுரைத்தல்

விறலியும் பாணனும் வேந்தற்குத் தில்லை யிறையமைத்த
திறலியல் யாழ்கொண்டு வந்துநின் றூர்;சென் றிராத்திசைபோம்
பறலியல் வாவல் பகலுறை மாமரம் போலுமன்றே
அறலியல் கூழைநல் லாய்,தமி யோமை அறிந்திலரே. 375

இயற்கை நலம் பற்றியும் தலைவிக்கு உவமையாயின. இத் திருப்பாட்டினை,

"யாயா கியளே மாஅ யோளே
மடைமாண் செப்பின் தமிய வைகிய
பெய்யாப் பூவின் மெய்சா யினளே
....
தண்ணந் துறைவன் கொடுமை
நம்முள் நாணிக் கரப்பா டும்மே"

என்றதனோடு வைத்துக் காண்க. (குறுந்தொகை - 9.). ஏயாப் பழி - தகாத பழி. 'என்கண்ணும்' எனச் சிறப்பும்மை விரிக்க. "மறைத்தாள்" என்றதன் பின், 'ஆகலான்' என்பது எஞ்சிநின்றது. யாய் - எமக்குத் தாய்; என்றது, 'எம் கற்பிற்கெல்லாம் தாய்' என்றவாறு. இயல்புடையது, "இயல்பு" எனப்பட்டது. நற்பால - சிறந்த வகையின. இயல்புகள், நாணம் முதலியன. இவ்வாற்றால் அடிகள், குலமகளிரது இயல்புகளைக் குறிப்பித்தமை அறியற்பாற்று.

சிவபெருமானது அம்பலம் என்றும் கெடாது பொலிவு பெற்று விளங்குதல் கூறப்பட்டது.

375. பாணன் வரவுரைத்தலாவது, தலைவி தனது ஆற்றாமையை நாணத்தால் மறைத்தொழுகுகின்ற நிலைமைக்கண் பாணன் வாயில் வேண்டச் செல்ல, தலைவியை வாயில் நேர்வித்தற்குத் தோழி அதனை மறைத்துக் கூறுதல். இதற்குக் கொளு :-

இகல்வே லவனகல் வரியாப் பாணனைப்
பூங்குழன் மாதர்க்குப் பாங்கி பகர்ந்தது.

'விறலியும் பாணனும் வேந்தன் பொருட்டு யாழ்கொண்டு வந்து நின்றார் ; தமியோமை அறிந்திலர்' என முடிக்க.

விறலி - பாணிச்சி. வேந்தற்கு - தலைவனுக்குத் துயிலெடை மங்கலம் பாடுதற்பொருட்டு. பாணன் வாயில் வேண்ட வந்தமையைத் தலைவி வெகுளாமைப் பொருட்டுத் தோழி இங்ஙனம் மறைத்துக் கூறினாள் என்க.

> "பெருங்கடல் மூடிப் பிரளயங் கொண்டு
> பிரமனும்போய்
> இருங்கடல் மூடி இறக்கும் ; இறந்தான்
> களேபரமும்
> கருங்கடல் வண்ணன் களேபரமுங் கொண்டு
> கங்காளராய்
> வருங்கடன் மீளநின் றெம்மிறை நல்வீணை
> வாசிக்குமே"

(திருமுறை - 4.112-7.) என்பதனால், உலகத் தோற்றத்திற்கு முதலாக இறைவன் வீணையை வாசித்து நிற்றல் அறியப்படுதலின், "தில்லை இறை அமைத்த யாழ்" என்றதற்கு, 'உலகத் தோற்றத்தின்கண் தில்லை இறைவன் ஆக்கிய யாழ்' என்பது பொருளாம் என்க. பேராசிரியரும் இதற்கு இதனையே மேற்கோளாகக் காட்டினார். வீணையும் யாழும் சிறிய வேறுபாடுடைய எனினும் இவ்விடத்திற்கு அது நோக்க வேண்டாமை அறிக. திறல் இயல் - வெற்றி பொருந்திய ; வெற்றி, இசைக் கருவிகளுள் மேம்படுதல். "தில்லை இறையமைத்த திறல் இயல் யாழ் கொண்டு வந்து நின்றார்" என்றது, 'அக்கருவிக்கு இவர் தகுதியுடையரல்லர்' என்பது தோற்றுவித்து நின்றது. 'இராச் சென்று திசைபோம்' என மாற்றி, 'இரவில் நீங்கிச் சென்று திசையைக் கடக்கும்' என உரைக்க. 'போழும்' எனப் பாடம் ஓதி, 'திசையைக் கிழிக்கும்' என உரைப்பர் பழைய உரையாசிரியர். 'பறத்தல்' என்பது இடைக் குறைந்து, "பறல்" என நின்றது. பறல் இயல் - பறத்தல் பொருந்திய. மா மரம் - பெரிய மரம். 'மரம்போலும் தமியேம்' என இயையும். அறல் இயல் கூழை - கருமணல்போலும் கூந்தல். "இராத் திசைபோம் வாவல், பகல் உறை மரம்போலும்"

25. தோழி இயற்பழித்தல்

திக்கின் இலங்குதிண் டோள்இறை தில்லைச்சிற் றம்பலத்துக்
கொக்கின் இறகு தணிந்துநின் றாடிதென் கூடலன்ன
அக்கின் னகையிவள் நைய அயல்வயின் நல்குதலால்,
தக்கின் றிருந்திலன் நின்றசெவ் வேல்எம் தனிவள்ளலே. 376

என்னும் சுட்டிக் கூறு உவமையை விரித்துரைக்கவே, 'இர வெல்லாம் பரத்தையர் சேரிக்கண் சென்று அவர் வாயிற் கதவு களை நீக்கிப் புகுகின்ற தலைவன், பகற்பொழுதில் வந்து தங்கும் மனையிடத்தேம்' என்பது போதரலின், "தமியேம்" என்றது வாளா பெயராய் நின்றது என்க. "தமியோமை" என்றது, ஆகுபெயரால் 'தமியோமது நிலையை' எனப் பொருள் தந்தது. 'இவர் நமது நிலைமை யறியாமையால் வந்ததன்றி, அறிந்து நகையாட வந்தாரல்லர்' எனத் தோழி தலைவியது சிவப்பு (முனிவு) ஆற்றுவித்தாள். இதனால், தலைவி சிவப்பாறிப் பாணன் வாயில்வேண்டுஞ் செவ்வியளாவாள் என்க.

சிவபெருமான், எல்லாவற்றையும் ஒடுக்குங் காலத்துத் தோற்றுவித்தல் கூறப்பட்டது.

376. தோழி இயற்பழித்தலாவது, பாணன் வரவுரைத் துத் தலைவியைச் சிவப்பாற்றுவித்த தோழி அவள் தலைவனை இயற்படமொழிந்து வாயில் நேர்தற்பொருட்டுத் தலைமகனது இயல்பைத் தான் பழித்துக் கூறுதல். இதற்குக் கொளு :-

தலைமகனைத் தகவிலனெனச்
சிலைநுதற்பாங்கி தீங்கு செப்பியது.

"நின்ற செவ்வேல் எம் தனிவள்ளல்" என்றதனை முதலிற் கொள்க.

திக்கின் இலங்கு திண்டோள்-எட்டுத்திக்குகளிலும் விளங்கு கின்ற எட்டுத் தோள்கள். கொக்கு, 'குரண்டன்' என்னும் அசுரன் கொண்ட கொக்கு வடிவம். அதனைச் சிவபெருமான் அழித்து அதன் இறகையணிந்தான் எனப் புராணம் கூறும்.

௨௬. உழையர் இயற்பழித்தல்

அன்புடை நெஞ்சத் திவள்பே துறஅம் பலத்தடியார்
என்பிடை வந்தமிழ் தூறநின் ருடி இருஞ்சுழியல்
தன்பெடை நையத் தகவழிந் தன்னம் சலஞ்சலத்தின்
வன்பெடை மேல்துயி லும்வய லூரன் வரம்பிலனே. 377

"இறகது" என்றதில் அது, பகுதிப்பொருள் விகுதி. கூடல் - மதுரை. அக்கு இன்னகை - சங்கு மணிபோலும் இனிய நகைப்பு. 'இன்னகை இவள்' என்றதனல் தலைவியது அன்பும், "அயல்" என்றதனுல், பரத்தையரது அன்பின்மையும் கூறினள். இதனுல், 'வள்ளல்களாய பிறரெல்லாம் நல்கவேண்டுவார்க்கு நல்குதலன்றி, நல்க வேண்டாதார்க்கு நல்கார்; எம்வள்ளலது இயல்பு அவ்வாறின்றி மாறிக் காணப்படுகின்றது' என்பது குறிப்பித்தாளாம். நல்குதல் - அருள்பண்ணுதல். 'இன்று தக்கிருந்திலன்' எனக் கூட்டுக. நின்ற செவ்வேல் - நிலைபெற்ற சிவப்பை யுடைய வேல். சிவப்பு, பகைவர் குருதியால் ஆயது.

கொக்கினிறகு அணிந்தமையும், திண்டோள்கள் திக்கின் இலங்கத் தில்லைக்கண் ஆடுதலும் கூறியவாற்றுல், சிவபெருமான் அறக்கருணையும், மறக்கருணையும் புரிதல் கூறப்பட்டது.

377. உழையர் இயற்பழித்தலாவது, தோழி தலைவனை இயற்பழிக்கப் பாங்காயினர் பிறரும் அவ்வாறு தலைவனது இயல்பைப் பழித்துக் கூறுதல். இதற்குக் கொளு :-

அரத்தவேல் அண்ணல் பரத்தையிற் பிரியக்
குழைமுகந் தவளுக் குழைய ருரைத்தது.

இக்கொளுவினுள் இரண்டாம் அடியை, 'திண்டேர் விதியிற் கண்டோர்" உரைத்தது எனப் பாடம் ஓதி, அதற் கேற்பப் பாட்டிற்கு உரை கூறுவர் பழைய உரையாசிரியர்.

"இருஞ்சுழியல்" என்பதனை, "வயல்" என்பதன்பின்னும், "அன்புடை நெஞ்சத்து இவள் பேதுற" என்பதனை, "ஊரன்" என்பதன் பின்னும் கூட்டி யுரைக்க.

27. இயற்பட மொழிதல்

அஞ்சார் புரஞ்செற்ற சிற்றம் பலவர்அந் தண்கயிலை
மஞ்சார் புனத்தன்று மாந்தழை யேந்திவந் தாரவர்என்
நெஞ்சார், விலக்கினும் நீங்கார் நனவு ; கனவுமுண்டேல்,
பஞ்சா ரமளிப் பிரிதலுண் டோஎம் பயோதரமே. 378

"அன்புடை நெஞ்சத்து இவள்" என்றதனால், 'பரத்தையர் அன்பில்லா நெஞ்சத்தர்' என்பது தோற்றுவிக்கப்பட்டது. பேதுற - கலங்கும்படி. 'அம்பலத்து ஆடி' என இயையும். இங்கு 'அடியார் என்பிடை வந்து அமிழ்து ஊற ஆடி' என்றவாறே, "அற்புதமான அமுத தாரைகள் - எற்புத் துளைதொறும் ஏற்றினன்" எனவும், (திருவாசகம். திருவண்டப்பகுதி - 174, 75) 'கூம்பலங் கைத்தலத் தன்பர்என் பூடுருகக் குனிக்கும் - பாம்பலங் காரப் பரன்" எனவும் (திருக்கோவை - 11) அருளியவாறு அறிக. சுழியல் - ஒரு சிவதலம். அன்னம் - ஆண் அன்னம். சலஞ்சலம், ஒருவகை உயர் இனச் சங்கு. "சலஞ் சலத்தின்" என்றதில் இன், அல்வழிக்கண் வந்த சாரியை. சலஞ்சலப் பெடையை, "வன்பெடை" என்றதனால், "தன் பெடை" அன்புடைமை கூறப்பட்டது. வரம்பிலன் - நெறியின்றி ஒழுகாநின்றான். 'இஃது இரங்கத்தக்கது' என்பது குறிப்பெச்சம். 'அன்னம், அன்புடைய தன்பெடை னையுமாறு, அன்பில்லாத வேற்றினமாகிய சலஞ்சலப் பெடையின்மேல் துயிலும் வயல்களை யுடைய ஊரன்' என்றது, இத் துறைப் பொருளை வலியுறுத்தும் உள்ளுறை யுவமமாய் நின்றது.

சிவபெருமான், தன் அடியவர் இன்புற இன்ப நடம் புரிதல் கூறப்பட்டது.

378. இயற்பட மொழிதலாவது, தோழியும், உழையரும் தலைவனை இயற்பழிக்கக் கேட்ட தலைமகள் பொறாது, 'அவன் நல்லியல்பு உடையான்' என்பதுபடக்கூறுதல். இதற்குக் கொளு:-

வரிசிலை யூரன் பரிசு பழித்த
உழையர் கேட்ப எழில்நகை யுரைத்தது.

அஞ்சார் - தீவினைக்கு அஞ்சாதவர்; அசுரர். மஞ்சு - மேகம். 'வந்தாராகிய அவர்' என்க. "நனவு" என்றதனை,

28. நினைந்துவியந் துரைத்தல்

தெள்ளம் புனற்கங்கை தங்குஞ் சடையன்சிற் றம்பலத்தான்
கள்ளம் புகுநெஞ்சர் காணு இறைஉறை காழியன்னுள்
உள்ளம் புகும்ஒரு காற்பிரி யாதுள்ளி; உள்ளுதொறும்
பள்ளம் புகும்புனல் போன்றகத் தேவரும் பான்மையளே. 379

"அவர்" என்றதன்பின் கூட்டுக. "உண்டேல்" என்ருள், உறக்கம் அரிதாதல் பற்றி. 'அமளிக்கண்' என உருபு விரிக்க. "எம" என்றது ஒருமைப் பன்மை மயக்கம். பயோதரம் - கொங்கை. 'பயோதரத்தை' என, இறுதிக்கண் தொக்க இரண்டாவது விரிக்க. 'அன்று, என்பொருட்டு மாந் தழை ஏந்தி வந்தவாறே, இன்றும் நனவிலும், கனவிலும் என்னைப் பிரியாது நிற்கின்றவரை நீவிர் கொடுமை கூறுகின்றது என்' என்றவாறு. இதனுனும் தலைவிக்கு ஆற்றுதல் உளதாம் என்க.

சிவபெருமான் தீவினைக்கு அஞ்சாதாரை அழித்தல் கூறப் பட்டது.

379. நினைந்துவியந் துரைத்தலாவது, புனலாடப் பிரிந்து பரத்தையரிடத்துத் தங்கிய தலைவன், தலைவியது அன்பினை நினைந்து வியந்து கூறுதல். இதற்குக் கொளு :-

மெல்லியற் பரத்தையை விரும்பி மேவினேன்
அல்லியங் கோதையை அகனமர்ந் துரைத்தது.

காழி - சீகாழித் தலம். "உள்ளம் புகும்" என்றதற்கு, 'யான் நினையாதபொழுதும் என் உள்ளம் புகுவாள்' என உரைக்க. 'அவ்வாறு புகுதல் அவள் தன்னை இடைவிடாது நினைத்தலால்' எனக் கருதினுன் ஆகலின், 'உள்ளிப் புகும்' எனவும், இவ்வாறு பன்முறை நிகழ்தலின், 'ஒருகாலும் பிரியாது புகுவாள்' எனவும் கூறினுன். "ஒருகாலும், உள்ளி" என்றவற்றை இங்ஙனம் கூட்டிப் பொருள் கொள்க. 'ஒரு காலும்' என்னும் உம்மை தொகுத்தலாயிற்று. "உள்ளு தொறும் வரும் பான்மையள்" என்றது, 'யான் நினைக்குங் காலத்தும் வருவாள்' என்றவாறு. "பள்ளம் புகும்புனல்

29. வாயில்பெறாது மகன்திறம் நினைதல்

தேன்வண் டுறைதரு கொன்றையன் சிற்றம் பலம்வழுத்தும்
வான்வண் டுறைதரு வாய்மையன் மன்னு குதலையின்வா
யான்வண் டுறைதரு மால்அமு தன்னவன் வந்தணையான் ;
நான்வண் டுறைதரு கொங்கைஎவ் வாறுகொல் நண்ணுவதே.

போன்று" என்னும் உவமை, தடுப்பரிதாதல்பற்றி வந்தது. 'அதனால், இனி இங்கிருத்தல் அரிது' என்பது குறிப்பெச்சம்.

380. வாயில் பெறாது மகன்திறம் நினைதலாவது, பரத்தையரிடத்தினின்றும் பிரிந்து தலைமகளை நினைந்துவந்த தலைமகன், அவளைச் சார்தற்கு வாயில் பெறாது, மகனை வாயிலாக்கொண்டு சாரக் கருதி, அவனது இயல்புகளை நினைத்துக் கூறுதல். இதற்குக் கொளு :-

> பொற்றொடி மாதர் நற்கடை குறுகி
> நீடிய வாயிலின் வாடினன் மொழிந்தது.

"தேன்" என்பதும் வண்டுள் ஒருவகை. "வழுத்தும்" என்றது, 'வழுத்திப் பெறும்' எனத் தான் காரியந் தோற்றி நின்றது. வான் - வானுலகம். 'அதனிடத்துள்ள வளவிய இடங்களை எனக்குத் தரும் வாய்மையன்' என்க. குதலை இன் வாயான் - குதலைச் சொல்லால் இனிதாகிய வாயை யுடையவன். வண் துறை - வளவிய கடல் துறை. மால் அமுது - பெரிய அமுது. 'அணையான்'' என்றதன்பின், 'இனி' என்பது வருவிக்க. கொங்கைக்கண் வண்டு உறைதல், சந்தனம் குங்குமம் முதலியவற்றாலாம். "கொங்கை" என்றது, அவற்றையுடையாள்மேல் நின்றதாகலின், அவ்விடத்து, இரண்டாவது தொகுக்கப்பட்டது என்க. புதல்வனால் பெற்றோர் இருமை இன்பமும் எய்தலை,

> " இம்மை யுலகத் திசையொடும் விளங்கி
> மறுமை யுலகமும் மறுவின் றெய்துப
> செறுநரும் விழையும் செயிர்தீர் காட்சிச்
> சிறுவர்ப் பயந்த செம்மலோர் "

என்பதனானும் அறிக (அகம் - 66.). இங்ஙனம் கூறவே, தோழி தலைவியை வாயில் நேர்விப்பாள் என்க.

30. வாயிற்கண் நின்று தோழிக் குரைத்தல்

கயல்வந்த கண்ணியர்கண்ணிணை யால்மிகு காதரத்தால்
மயல்வந்த வாட்டம் அகற்ரு விரதம்என் ? மாமதியின்
அயல்வந்த ஆடர வாடவைத் தோன்அம் பலம்நிலவு
புயல்வந்த மாமதில் தில்லைநன் ஞட்டுப் பொலிபவரே. 381

சிவபெருமானது தலத்தை வணங்குவோரே வானுலகம் பெறுதற்கு உரியர் என்பது கூறப்பட்டது.

381. வாயிற்கண் நின்று தோழிக்கு உரைத்தலாவது, வாயில் பெருது மகன் திறம் நினைந்து வருந்தும் தலைமகன், தனது வருத்தத்தைத் தோழிக்குக் கூறுதல். இதற்குச் செய்யுள்:-

பெருந்தகை வாயில் பெருது நின்று
அருந்தகைப் பாங்கிக் கறிய வுரைத்தது.

'' மாமதியின் '' என்பது முதலாகத் தொடங்கி யுரைக்க.

'' கயல் வந்த '' என்றதில் '' வந்த '', உவம உருபு. 'கண்ணிணையால் மிகாநின்ற காதரம்' என்க. காதரம் - அச்சம். ' காதரத்தால் வந்த மயல் ' என ஒருசொல் வருவிக்க. மயல் - மயக்கம். ' மயலால் ' என உருபு விரிக்க. இரங்காத வன்கண்மையை, '' விரதம் '' எனப் புலந்து கூறினுன். வந்த - அம் மதிக்குத் தீங்கிழைக்க வந்த. நிலவு - நிலைபெற்ற. '' கயல் வந்த கண்ணியர் '' எனத் தலைவியையும், '' தில்லை நன்னாட்டுப் பொலிபவர் '' எனத் தோழியையும் முன்னிலைப் புறமொழியாகக் கூறினுன்.

மதிக்குத் தீங்கிழைக்க வந்த அரவை அத்தன்மை மாற்றி, மதிக்கு உண்டாகிய அச்சத்தையும் தீர்த்து அவ்வாடரவை அதன் பக்கத்தே தங்கி ஆடும்வண்ணம் முடித்தோனது தில்லை நன்னாட்டிற் பொலிபவர்க்கு, தம் சிவந்த பார்வையால் எம்மை, அஞ்சப்பண்ணி நிற்பாரை அத்தன்மை மாற்றி, எமக்கு உண்டா கின்ற அச்சத்தையும் நீக்கி, அவரை எம் அருகிருந்து விளையாடச் செய்யாது புறக்கணித்திருத்தல் சாலாது' எனத் தலைவன் உள்ளுறை யுவமம் கூறியவமை காண்க.

31. வாயில் வேண்டத் தோழிகூறல்

கூற்று யினசின ஆளிஎண் ணீர்;கண்கள் கோள்இழித்தாற்
போற்ருன் செறியிருட் பொக்கம்எண் ணீர்;கன் றகன் றபுனிற்
றிற்று என நீர் வருவது பண் ;டின்றெம் மீசர்தில்லைத்
தேற்ருர் கொடிநெடு வீதியிற் போதிர்அத் தேர்மிசையே. 382

சிவபெருமான் தன்னை அடைந்தோரை நல்லோராக்குதலும், அச்சம் நீக்கிக் காத்தலும் கூறப்பட்டன.

382. வாயில் வேண்டத் தோழி கூறலாவது, தன்னை வாயில் வேண்டிய தலைவனுக்குத் தோழி, அவனது புறத் தொழுக்கத்தினை எடுத்துக் கூறி, வாயில் மறுத்தல். இதற்குக் கொளு:-

வைவேல் அண்ணல் வாயில் வேண்டப்
பையர வல்குற் பாங்கி பகர்ந்தது.

ஆளி - யாளி. 'வாளி என்றே கொண்டு, 'மறவரது அம்பு' என்பர் பழைய உரையாசிரியர். கண்களைக் கோள் இழித்தல், பார்க்கும் ஆற்றலை வாங்குதல். "போல்தான்" என்பதில் தான், அசைநிலை. பொக்கம் - மறைப்பு. "எண்ணீர்" இரண்டும் முற்றெச்சங்கள்; அவை, "வருவது" என்பதனேடு முடியும். "வருவது" என்றதனை, 'எம்மிடத்து' என ஒரு சொல் வருவித்து முடிக்க. 'பண்டு வருவது என மாற்றிக் கொள்க. தில்லை தேற்ருர் - தில்லைக்கண் இருந்தும் அதனைத் தெளியாதார்: பரத்தையர். 'தெளிந்தாராயின் எம்மாட்டு வரும் நும்மைத் தம்மாட்டுத் தாழ்வியார்' என்பது கருத்து. இதனானே, 'தில்லையைத் தெளிந்த நீர் அத்தெளியாதாரோடு பயிலத் தொடங்கினீர்' எனக் கழறுதலும் செய்தாள் என்க. 'தில்லைத் தேற்ருர்' எனப் பாடம் ஓதி, 'தில்லைக்கண் போதிர்' எனவும், "தேற்ருர்" என்பதற்குத் தாம்தாம் வேண்டியவாறும் உரைப்பர் உரையாளர்; 'தில்லைக்கண்' என்றதனுற்போந்த சிறப்பொன்றும் இல்லாமையும், "தேற்ருர்" என்பதற்கு அவர் உரை பொருந்தாமையும் அறிக. கொடி, அவர் தம் தொழிலை விளக்க எடுத்த கொடி; இதனானும் அவரது இழிவைத் தோற்றுவித்தாள். அத்தேர்மிசையே - அன்று எம்மாட்டு வந்த

32. தோழி வாயில் வேண்டல்

வியந்தலை நீர்வையம் மெய்யே இறைஞ்சவின் தோய்குடைக்கீழ்
வயந்தலை கூர்ந்தொன் றும் வாய்திற வார்,வந்த வாளரக்கன்
புயந்தலை தீரப் புலியூர் அரன்இருக் கும்பொருப்பிற்
கயந்தலை யானை கடிந்த விருந்தினர்; கார்மயிலே. 383

அந்தத் தேரிற்றுனே. சுட்டு, தேர் அவனுக்குப் பயன்பட்ட வகையைச் சுட்டிற்று. 'இவ்வாறெல்லாம் ஆயிற்று ; நீவிர் எம் மாட்டுவைத்த அருள்' என்பது குறிப்பெச்சம்.

சிவபெருமானது தலத்தைத் தெளியாதோர், நல்லொழுக்கத் தினராகாமை கூறப்பட்டது.

383. தோழி வாயில் வேண்டலாவது, தலைமகனுக்கு வாயில் மறுத்த தோழி, பின் அவன் ஆற்றாமை மிகுதி கண்டு தலைமகளிடம் சென்று வாயில் வேண்டுதல். இதற்குக் கொளு :-

வாயில் பெறாது மன்னவன் நிற்ப
ஆயிழை யவட்குத் தோழி சொல்லியது.

"வந்த வாளரக்கன்" என்பது முதலாகத் தொடங்கி உரைக்க.

'விண்தோய் குடைக்கீழ் அலைநீர் வையம் வியந்து மெய்யே இறைஞ்ச' எனக் கூட்டுக இறைஞ்ச - இறைஞ்சிநிற்க ; என்றது ; 'அன்ன பெருமையை நினையாது' என்றபடி. 'வயா - என்பது, 'வய' எனக் குறுகி நின்றது. உரிச்சொல்லாதலின், மெல்லெழுத்து மிகுதலும் பெறுவதாயிற்று. வயா - வேட்கைப் பெருக்கம். "வயாவென் கிளவி வேட்கைப் பெருக்கம்" (தொல். சொல். 371.) என்றது காண்க. கூர்ந்து - மிகப் பெற்று. வாய்திறவார் - சொல்லுகின்றிலர்; என்றது, 'தம்தவ றுணர்ந்து வருந்தி வாயில் வேண்டி நிற்றலன்றி மீள்கின்றிலர்' என்றவாறு. 'இனி மறுத்தல் தகாது' என்பது குறிப்பெச்சம். வந்த - மதியாது மலையைப் பெயர்க்க வந்த. 'புயமும், தலையும் உடலினின்றும் நீங்க' என்க. இருக்கும் - வாளா இருந்த ; என்றது, 'புயமும் தலையும் தீர்தற்கு ஒரு முயற்சி செய்யாதும்,

33. மனையவர் மறித்துரைத்தல்

தேவியங் கண்திகழ் மேனியன் சிற்றம் பலத்தெழுதும்
ஓவியங் கண்டன்ன ஒண்ணுத லாள்தனக் கோகையுய்ப்பான்
மேவியங் கண்டனை யோவந் தனன்என வெய்துயிர்த்துக்
காவியங் கண்கழு நீர்ச்செவ்வி வெளவுதல் கற்றனவே. 384

அவை தீர்ந்தமைக்கு மகிழாதும் இருந்த' என்றபடி. "இருக்கும்" என்றது, கால மயக்கம். பொருப்பு, கைலை. கயந்தலை - மெல்லிய தலை; இஃது அதன் கன்றை உணர்த்திற்று. கன்றையுடைய யானை அதனைக் காத்தற்பொருட்டு, எதிர்ப்பட்டார் மேல் வெகுண்டு செல்லும் என்க. விருந்தினர் - அன்றுபோல இன்றும் விருந்தினராயே வந்தவர். பரத்தையரிடத்தினின்றும் வந்தமையின், இவ்வாறு கூறினாள். வரையாக் காலத்தில் தலைவன் இவர்கள் சிற்றிலுக்கு விருந்தினனாயும், தலைவி இற்செறிக்கப்பட்டவிடத்து அவர்தம் மனைக்கு விருந்தினனாயும் சென்றமை பற்றி, 'அன்றுபோல்' என்பதனை உட்கொண்டு கூறினாள்.

'அரக்கன் புயம் தலை திரவும் இறைவன் வாளா பொருப்பின் இருந்தான்' என்றதனால், 'தலைவர் வருந்தவும் நீ இரக்கமின்றி மனையில் இராநின்றாய்' என்பதுணர்த்தி, 'பின் அரக்கன் வேண்ட இறைவன் அவனுக்கு அருள்பண்ணினாற்போல, நீயும் அவர் தவற்றை மறந்து வாயில் நேர்தல் வேண்டும்' எனத் தோழி உள்ளுறை கூறினாள் என்க.

இராவணனை நெரித்துப் பின் அருள்புரிந்த வரலாற்றால், சிவபெருமானது பேராற்றலும், பற்றிகல் இன்மையும், பிழை பொறுத்து நல்கும் பேரருளும் கூறப்பட்டன.

384. மனையவர் மறித்துரைத்தலாவது, தோழி வாயில் வேண்டவும் தலைவி வாயில்நேராளாக அந்நேராமையை மனையிலுள்ளார் தம்முட் கொண்டு கூறுதல். இதற்குக் கொளு :-

கன்விமரன் நோக்கி கனவ்று நோக்க
மன்னிய மனையவர் மறித்துரைந்தது.

'தேவியது அம்கண் திகழ் மேனியன்' என்க. கூத்தப்பிரானது ஆடலை அம்மை இடையறுது நோக்குதலை நினைக்க.

34. வாயில் மறுத்துரைத்தல்

உடைமணி கட்டிச் சிறுதேர் உருட்டி உலாத்தரும்இந்
நடைமணி யைத்தந்த பின்னர்.முன் நான்முகன் மால்அறியா
விடைமணி கண்டவர்வண் தில்லைமென் தோகையன்
[னார்கள்முன்னங்
கடைமணி வாள்நகை யாய்இன்று கண்டனர் காதலரே. 385

'' ஒண்ணுதலாள் '' என்றது, ' தலைவி ' என்னும் பொருட்டாய், '' அன்ன '' என்றதற்கு முடிபாயிற்று. ஓகை உய்ப்பான் - மகிழ்ச்சியைத் தரும்பொருட்டு. மேவி - விரும்பி. அம்கண்டன் - அழகிய கணவன். '' ஐயோ '' என்றது இரக்கக் குறிப்பு; 'உவகைக்கண் வந்தது' என்பர் பேராசிரியர். இதனை இறுதிக் கண் கூட்டுக. கழுநீர், செங்கழுநீர். ' இனி என்னுமோ ' என்பது குறிப்பெச்சம். துறை. ' மனையவர் மகிழ்தல்' எனவும், கொளுவில், ' மகிழ்ந்துரைத்தது ' எனவும், பேராசிரியர் உரைப் பன பொருந்துவனவாய் இல்லை. அதனால் பழைய உரையாசிரியர் உரைபற்றி இங்ஙனம் கொள்ளப்பட்டன.

சிவபெருமான் சிவகாமியம்மை காணத் தில்லைக்கண் நிற்றல் கூறப்பட்டது.

385. வாயில் மறுத்துரைத்தலாவது, மனையவர் மறித்துக் கூறும் நிலைமைக்கண் தலைவி, வாயில்வேண்டிய தோழிக்கு வாயில் மறுத்துக் கூறுதல். இதற்குக் கொளு :-

மடவரல் தோழி வாயில் வேண்ட
அடல்வேலவன் அருள்உரைத்தது.

'' காதலர் '' என்பதனை முதலிற் கொள்க.

உடை மணி - அரை வடம். நடைமணி - நடத்தலையுடைய மாணிக்கம்; என்றது புதல்வனை. '' நடை '' என்றது, வாளா பெயராய் நின்றது. தந்த - நமக்குத்தந்த; என்றாள், 'நம்மாட்டே யன்றி இவனிடத்தும் அன்பிலராயினர்' என்றற்கு. ''நான்முகன் மால் அறியா விடை மணிகண்டர் '' என்றது, ' அவர்களால் அறியப்படாராயினும், அன்பர்முன் விரைந்து தோன்றுபவர் ' என்றதாம். '' தோகையன்னார் '' என்றது, ஆயத்தாரை.

35. பாணனோடு வெகுளுதல்

மைகொண்ட கண்டர் வயல்கொண்ட தில்லைமல் கூரர்நின்வாய்
மெய்கொண்ட அன்பினர் என்பதென் ? வில்லா அருள்பெரியர்!
வைகொண்ட ஊசிகொல் சேரியின் விற்றெம்மில் வண்ணவண்ணப்
பொய்கொண்டு நிற்கலுற் றோபுலை ஆத்தின்னி போந்ததுவே.

இதனால் ‘ இவர்கள்முன் நமக்கு இளிவரல் செய்தார் நம்காதலர்’ எனத் துனி புலப்படுத்தாள் என்க. மணி, முத்து. புதல்வனை, “ சிறுதேர் உருட்டி உலாத்தரும் மணி ” என்றதனால், “இனறு கண்டனர் ” என்றது, புதல்வனைப் பெற்று நெய்யாடிய காலத்திற்குப்பின், அவன் சிறுதேர் உருட்டி விளையாடும் பருவம் எய்துங்காறும் தலைவன் தன்னைப் பிரிந்திருந்தமை குறித்தாள். ‘ இத்தன்மையார்க்கு நாம் வாயில்நேர்தல் எவ்வாறு’ என்பது குறிப்பெச்சம். இதனால், “ காதலர் ” என்றது, அன்பின் மையைக் குறித்த குறிப்பு மொழியாம், “ குடம்பை தனித் தொழியப் புட்பறந்தற்றே உடம்போ டுயிரிடை நட்பு” (குறள் - 338) என்புழி, “ நட்பு ” என்றதுபோல.

சிவபெருமான், அமரரால் அறியப்படானாயினும், அன்பர்க்கு எளியனாதல் கூறப்பட்டது.

386. பாணனொடு வெகுளுதலாவது, தலைவி தோழிக்கு வாயில்மறுத்த நிலைமைக்கண் பாணன் வந்து வாயில் வேண்டத் தலைவி அவனை வெகுண்டு கூறுதல். இதற்குக் கொளு :-

மன்னியாழ்ப் பாணன் வாயில் வேண்ட
மின்னிடை மடந்தை வெகுண்டுரைத்தது.

பொருள்கோள் : ‘ புலை ஆத் தின்னி, மைகொண்ட கண்டர் மல்கு தில்லை ஊரர் அருள் பெரியர் என்பது (நாம் அறிந்ததாக,) நின் வாய் அன்பினர் என்பது என்? (இதனால்,) நீ எம் இல் போந்தது, கொற்சேரியின் ஊசி விற்று வண்ண வண்ணப் பொய்கொண்டு நிற்கலுற்றோ ? ’

‘ தில்லையாகிய ஊரர்’ என்க. மல்கு - அருள்மிகுந்து நிற்கின்ற. ‘ மனத்தொடுபட்டுச் சொல்விற்றில்லை’ என்பாள், “ நின் வாய் என்பது என் ” என்றாள். அன்பு, தலைவியிடத்துக்

36. பாணன் புலந்துரைத்தல்

கொல்லாண் டிலங்கு மழுப்படை யோன்குளிர் தில்லையன்னாய்,
வில்லாண் டிலங்கு புருவம் நெரியச்செவ் வாய்துடிப்பக்
கல்லாண் டெடேல்;கருங் கணசிவப் பாற்று; கறுப்பதன்று;
பல்லாண் ; டடியேன் அடிவலங் கொள்வன்; பணிமொழியே. 387

கொள்ளும் உள்ள நெகிழ்ச்சியும், அருள், பரத்தையரிடத்துக் கொள்ளும் உள்ள நெகிழ்ச்சியும் என்பது உணர்க. கொற்சேரி- கொல்லத் தெரு. 'கொல்லத் தெருவில் ஊசி விற்றல்போல' என்பது பழமொழியாதல் வெளிப்படை. 'பிற தெருக்களில் ஊசி விற்பின் விலைபோகும், கொல்லத் தெருவில் விற்பின் விலை போகுமோ' என்பது இதன் பொருளாதலின், 'நின் பொய் யைப் பிறரிடத்துக் கூறின் செல்லும்; எம்மிடத்துச் செல் லுமோ' என்பது இதனாற் குறித்த பொருளாயிற்று. ''விற்று'' என்றது, 'விற்றாற்போலும் செய்கையைச் செய்து' என்றவாறு. வண்ண வண்ணப் பொய் - வகைவகையான பொய்ம்மொழிகள். என்றது, அவன் ஒரு பொய்யை நிலைநாட்டக் கூறும் பல பொய் களை. புலை ஆத் தின்னி - புலையனுடைய பசுத் தின்னியே. பொய் கூறுதலைப் பசுக்கொலையோடு ஒத்த பெருங்கொடுஞ்செயலாக உயர்ந்தோர் கூறுதலை உட்கொண்டு, 'அச்செயலையே கூசாது செய்கின்ற நீ, பொய்சொல்லக் கூசுதல் உண்டோ' என்பாள், ''புலை ஆத்தின்னி'' என்றாள். ''தின்னி'' என்றதனை விளி யாக்காது, படர்க்கையாகவே வைத்துரைப்பர் பேராசிரியர்.

தேவர் வேண்ட நஞ்சை உண்ட சிவபெருமான், அன்பர் பொருட்டுத் தில்லைக்கண் அருள்மிகுந்து நிற்றல் கூறப்பட்டது

387. பாணன் புலந்துரைத்தலாவது. பாணனொடு வெகுண்ட தலைமகள், அவன்மேற் கல்லெறியத் தொடங்க, பாணன் புலந்து கூறுதல். இதற்குக் கொளு :-

கருமலர்க் கண்ணி கனன்றுகட் டுரைப்பப்
புரியாழ்ப் பாணன் புலப்பட்டது.

கோல் ஆண்டு இலங்கு - கொல்லத் தொழில் இயல்பானே அவ்விடத்து விளங்குகின்ற. என்றது, 'தனது சத்தியால் ஆகிய

37. விருந்தோடு செல்லத் தணிந்தமை கூறல்

மத்தக் கரியுரி யோன்தில்லை யூரன் வரவெனலும்
தத்தைக் கிளவி முகத்தா மரைத்தழல் வேல்மிளிர்ந்து
முத்தம் பயக்கும் கழுநீர்; விருந்தொடென் னுதமுன்னம்
கித்தக் கருங்குவ ளைச்செவ்வி யோடிக் கெழுமினவே. 388

மழுவை யுடையோன்' என்றவாறு. வில் ஆண்டு இலங்கு - வில்லை அடிமை கொண்டு விளங்குகின்ற. ஆண்டு எடேல் - அவ்விடத்து எடாதே. இதனை, ''நில்லையன்னாய்'' என்றதன் பின்னர்க் கூட்டுக. 'கருங்கண் ஆற்று' என இயையும். 'கருங்கண் சிவப்பு' என இயைத்தலுமாம். கறுப்பது - வெகுள்வது; இதன்பின், 'தக்கது' என்பது எஞ்சி நின்றது. 'யான் சொல்லியது வெகுளப்படுவது அன்று' என உரைப்பர் உரையாளர். பல்லாண்டு - உனக்குப் பல் லாண்டு கூறுகின்றேன். 'கூறுகின்றேன்' என்பது சொல் லெச்சம். ''பல்லாண்டு'' என்பது, 'பல்லாண்டு உளவாக' என்பதொரு வாழ்த்துச் சொல். இவ்விடத்து, 'உளவாக' என்பது சொல்லெச்சமாய் எஞ்சிநிற்கும். இதனை இறுதிக்கண் கூட்டுக. இங்ஙனம் கூறியது 'யான் இனிச் செல்கின்றேன்' என்னும் குறிப்புணர்த்திப் புலத்தலைத் தெரிவித்தது. அடி வலம் கொள்வன் - உனது அடிகளை வலங்கொண்டு பணி கின்றேன். பணிமொழி - தணிந்த சொல். 'இதனையுடைய நீ கடுஞ்சொற் சொல்லுதல் தகாது' என்பது குறிப்பு. எனவே, 'யான் தலைமகனோடு நீவிர் கூடி இன்புற்றிருக்கவே வேண்டி னேன்; அது தவறு என்றால், நீவிர் இங்ஙனமே பல்லாண்டு தனித்திருப்பீராக' எனப் பாணன் புலந்து கூறினான் என்க

சிவபெருமானது திருமேனியேயன்றிப் படைக்கலம் முதலி யனவும் சத்தி வடிவாதல் கூறப்பட்டது.

388. **விருந்தொடு செல்லத் தணிந்தமை கூறலாவது, பாணன் வாயில்பெறாது நீங்கத் தலைவன் விருந்தொடு சென்றா னாக, அது கண்டு தலைவி ஊடல் தணிந்தமையை இல்லத் துள்ளார் (ஆயத்தார்) தம்முள் மகிழ்ந்து கூறுதல். இதற்குக் கொளு:-**

பல்வளை பரிசுகண்டு — இல்லோர் இயம்பியது.

38. ஊடல் தணிவித்தல்

கவலங்கொள் பேய்த்தொகை பாய்தரக் காட்டிடை ஆட்டுகந்த
தவலங் கிலாச்சிவன் தில்லையன் னாய்,தழு விம்முழுவிச்
சுவலங் கிருந்தநம் தோன்றல் துணையெனத் தோன்றுதலால்,
அவலங் களைந்து பணிசெயற் பாலை அரசனுக்கே. 389

மத்தம் - களிப்பு ; மதமயக்கம். 'இதனை உரித்தோன்' என்றதனால், 'செருக்குற்று நின்றாரை அது நீக்குவோன்' என்றவாறாயிற்று. ஊரன் வரவு எனலும் - 'தலைவன் வரவு விருந்தொடாயிற்று' என்று கூறுவார், 'ஊரன் வரவு' எனச் சொல்லியவுடன். தத்தை - கிளி. "கிளவி" என்றது, அதனையுடைய தலைவியைக் குறித்தது. 'தாமரைக்கண்' என உருபு விரிக்க. 'தழல்போல மிளிர்ந்து' என்க. முத்தம், கண்ணீர். கழுநீர் - செங்கழுநீர்ப்பூக்கள் ; என்றது கண்களை. விருந்தொடு என்னாத முன்னம் - அடுக்க, 'விருந்தொடு' என்ற சொல்லைச் சொல்லுமுன்னே ; என்றது, 'சொல்லிய துணை யானே' என விரைவுணர்த்திநின்றது. "கித்த" என்றதனை, விரைவு குறித்து வருவதோர் இடைச்சொல்லாக உரையாளர் கொண்டனரெனினும், அவருள் பேராசிரியர், 'கித்தம் என்ப தனை செய்யப்பட்டதென்னும் பொருளதோர் வடமொழித் திரிபென்பாரும் உளர்' என உரைத்தார். அவர் குறித்த வட சொல், 'கிருதம்' என்பது. ஓடி - பரந்து 'செவ்வி ஓடி' எனப் பண்பின் தொழில், பண்பிமேல் நின்றது. கெழுமின - தலைவனோடு பொருந்தின. 'என்னே மனையறம்' என்பது குறிப்பெச்சம். இத்துறை, குலமகளிர்க்கு விருந்தோம்புதற்கண் உள்ள கடப்பாட்டுணர்ச்சியை விளக்கிநிற்கும். இதனானே, விருந்தும், ஊடல் தணிக்கும் வாயில்களுள் ஒன்றாகக்கொள்ளப்படுகின்றது.

சிவபெருமான், செருக்குடையாரை அது தீர்த்தல் கூறப் பட்டது.

389. ஊடல் தணிவித்தலாவது, தலைமகள் பாணனுக்கு வாயில் மறுத்தமை அறிந்த தலைமகன், புதல்வனை வாயிலாகக் கொண்டு புகத் தோழி சென்று தலைமகளை ஊடல் தணிவித்தல், எனவே, இது முன்னைத் திருப்பாட்டோடன்றி அப்பாற் பாட்டோடு தொடர்புடையதாம். இதற்குக் கொளு :-

39. அணைந்தவழி ஊடல்

சேல்தான் திகழ்வயற் சிற்றம் பலவர்தில் லைந்நகர்வாய்
வேல்தான் திகழ்கண் இளையார் வெகுள்வர்,மெய்ப் பாலன்செய்த
பால்தான் திகழும் பரிசினம் ; மேவும் படிறுவவேம் ;
கால்தான் தொடல்;தொட ரேல்;விடு தீண்டல்எம் கைத்தலமே.

தோன்றலைத் துணையோடு தோழி கண்டு
வான்றகை மடந்தையை வருந்தத் தணித்தது.

'கவல்' என்பது, அம்முப்பெற்று நின்றது. கவல் - கவலை ; 'கண்டார் கவலை கொள்ளுதற்கு ஏதுவாய பேய்' என்க. பாய்தல் - கரணமிடுதல். காடு - சுடுகாடு. தவல் - கெடுதல். 'கேடில்லாதவனுகலின், சுடுகாட்டிற் பேயோடு ஆடுவானுயினன்' என்றவாறு. பேய், சங்கார காலத்தில் உடம் பின்றி இருக்கும் உயிர்களைக் குறிப்பது. "கோயில் சுடுகாடு" (திருவாசகம் - திருச்சாழல் - 3. 'சுடுகாட்டை இடமாக உடையவன் இறைவனுதல் எவ்வாறு' என) ஐயுறுவார்க்கும், "காயில் உலகனைத்தும் கற்பொடிகாண்" (ஷை) என்பதே விடையாகக் கூறியவாறு அறிக. "தவலங்கு, சுவலங்கு" என்பவற்றில் அங்கு, அசைநிலை. முழுவி - முழுவப்பட்டு ; 'முத்தம் கொண்டு' என்றபடி. சுவல் - பிடர். தோன்றல் - மகன். இவ்விடத்துத் தொக்குநின்ற இரண்டாம் உருபு, "என" என்புழி எஞ்சிநின்ற, 'கொண்டு' என்பதனேடு முடிந்தது. துணை - வாயில். தோன்றுதல் - வருதல், "தோன்றல் துணை எனத் தோன்றுதலால்" என்றது, 'பிற வாயிலின்றி வந்தமையால்' என்றவாறு.

சிவபெருமானது கடவுள் தன்மை கூறப்பட்டது.

390. அணைந்தவழி ஊடலாவது, தோழியால் ஊடல் தணிந்த தலைமகள் பள்ளியிடத்துத் தலைவன் சார்ந்தவழி ஊடல்கொண்டு கூறுதல். இதற்குக் கொளு,

தேவிபுனல் ஊரன் சென்றணைந் தவழி
ஒளிமதி நுதலி ஊடி உரைத்தது.

40. புனலாட்டுவித்தமை கூறிப் புலத்தல்

செந்தார் நறுங்கொன்றைச் சிற்றம் பலவர்தில் லைநகர்ஓர்
பந்தார் விரலியைப் பாய்புன லாட்டிமன் பாவியெற்கு
வந்தார் பரிசுமன் றுய்நிற்கு மாறென் வளமனையிற்
கொந்தார் தடந்தோள் விடங்கால் அயிற்படைக் கொற்றவரே.

"செல்தான்" முதலிய "தான்" நான்கும் அசைநிலைகள். 'வயல் தில்லைநகர்' என இயையும். 'சிற்றம்பலவரது தில்லை நகரில் வயற்கண் செல்களும் பொலிவுபெற்று விளங்கும்; யாம் அது பெற்றிலேம்' என்றாள் என்க. "வெகுள்வர்" என்றது. 'நீ எம் கால் தொடுதலை அறிந்தால் வெகுள்வர்' என உரைக்க. "வேல்தான் திகழ்கண் இளையர்" என்றதனால், 'அவர் வெகுளி நோக்கினை நீ கடக்குந் தகைமையல்லை' என்றாள். 'மெய்க்கண் திகழும் பரிசினம்' என்க. செய்த - செதறவிட்ட. திகழும் பரிசினம் - நாறும் தன்மையுடையேம். மேவும் படிறு - நீ விரும்பும் வஞ்சனையை. உவவேம் - யாம் விரும்பேம். தொடல் - தொடாதே. தொடரேல் - எம்மைத் தொடராதே. நிண்டல் - எம்மைத் திண்டாதே. 'எம் கைத் தலம் விடு' என்க. பரத்தையர் பலராதலைக் கூறி, 'எம் ஒருவேமை ஊடல் தணிக்கப் புக்குப் பலரது வெகுளிக்கு இலக்காகாதி' என்பாள், "இளையார் வெகுள்வர்" என்றும்' 'பலரது வெகுளியை மதியாது வரினும் இங்கு இன்பம் இல்லை' என்பாள், "பாலன் செய்த பால்தான் மெய்த் திகழும் பரி சினம்' என்றும், 'இவ்விடத்தின்பமே எனக்கு இன்பமாம் என நீ கூறுவையாயின் அதனையாம் தெளியேம்' என்பாள், "மேவும் படிறு உவவேம்" என்றும் கூறினாள். மனைவி உயர்வும் கிழ வோன் பணிவும் நினையுங் காலைப் புலவியுள் உரிய ஆதலின், தலைவி, தன்னைப் பன்மையாகவும், தலைவனை ஒருமையாகவும் கூறினாள் (தொல். பொருள். 223.).

சிவபெருமானது தலத்தில் எல்லா உயிர்களும் இன்புற் றிருத்தல் கூறப்பட்டது.

391. புனலாட்டுவித்தமை கூறிப் புலத்தலாவது, தலை மகன் அணைந்தவழித் தலைமகள், 'கால் தொடல்; தொடரேல், நீண்டல்; விடுஎம் கைத்தலம்' எனக் கூறியவழி அவன் நொந்து

41. கலவிகருதிப் புலத்தல்

மின்றுன் னியசெஞ் சடைவெண் மதியன் விதியுடையோர்
சென்றுன் னியகழற் சிற்றம் பலவன்தென் னம்பொதியில்
நன்றுஞ் சிறியவர் இல்லெம தில்லம்; நல் லூரமன்றே
இன்றுன் திருவருள் இத்துணை சாலுமன் எங்களுக்கே. 392

வாளாவிருப்ப, தலைவி அவன் பரத்தை யொருத்தியைப் புனலாட்டுவித்தமை கூறிப் புலத்தல். இதற்குக் கொளு :-

ஆங்கதனுக் கழுக்கமாய்த்
தீங்கு மென்முலை விட்டுரைத்தது.

இறுதி அடியை முதலிற் கொள்க.

"செந்தார்" என்பதில் செம்மை, நிறம். "தில்லை நகர் ஓர் பந்தார் விரலியைப் பாய்புனல் ஆட்டி" என்றது, 'அவ்விடத்து உடனாடுதற்கு உரியேமை விடுத்துப் பரத்தையரோடு சென்று ஆடினான்' என்றவாறு. மன்பாவியெற்கு - மிக்க தீவினையுடைய என்னிடத்து; நான்கன் உருபை ஏழன் உருபாகத் திரிக்க. வந்து ஆர் பரிசு மன் தாய் - வந்து இன்பம் நுகரும் தன்மையை மிகப் பொருந்தி. 'வளமனையில் நிற்குமாறு என்' என்க. 'புனலாட்டுவித்தாரிடத்து இன்பம் நுகர்தலன்றே இவர் செயற்பாலது' என்றபடி. கொந்து ஆர் - கொத்தாகச் சேர்ந்த மாலையை அணிந்த. இத்திருப்பாட்டிற்கு, உரையாளர் தாம் தாம் வேண்டுமாறு உரைத்தனர்.

சிவதலங்களிற் சென்று சிவபெருமானை வழிபடும் முறை கூறப்பட்டது.

392. கலவி கருதிப் புலத்தலாவது, புனலாட்டுவித்தமை கூறிப் புலந்த தலைவியைத் தலைவன், பின் நுதலும், தோளும் முதலாயினவற்றைத் தைவந்து ஊடல் தணிப்ப அவள் கலவி கருதி, 'இவை' இத்துணை அமையும்' எனப் புலவிச்சொற் கூறுதல். இதற்குக் கொளு :-

கலைவளர் அல்குல் தலைமகன் றன்னொடு
கலவி கருதிப் புலவி புகன்றது.

42. மிகுத்துரைத் தூடல்

செழுமிய மாளிகைச் சிற்றம் பலவர்சென் றன்பர்சிந்தைக்
கழுமிய கூத்தர் கடிபொழில் ஏழினும் வாழியரோ
விழுமிய நாட்டு விழுமிய நல்லூர் விழுக்குடியீர்,
விழுமிய அல்லகொல் லோஇன்ன வாறு விரும்புவதே. 393

"விதியுடையோர் சென்றுன்னிய" என்றதற்கு, 'நற்பாலையுடையோர், சிற்றின்பத்திற்குக் காரணமான ஐம்புலங்களை விட்டுச்சென்று நினைந்த' எனப் பேராசிரியரும், 'ஆகம விதியுடையோர் கன்ம காண்டத்தினின்று ஞான காண்டத்திலே சென்று நினைக்கிற' எனப் பழைய உரையாசிரியரும் உரைப்பர். எனினும், "சென்ற" என்பதனை, 'செல்ல' எனத் திரித்து, 'நாள் முழுதும் செல்ல' என உரைத்தல் கூடும். நன்றும் சிறியவர் இல் - பெரிதும் சிறியவரது குடி. மன்னும், ஓவும் அசைநிலை. இன்று - இப்பொழுதைக்கு; என்றது, 'பின் ஒருகால் வேண்டிற் பெறுதும்' என்றவாறு. மன் எங்களுக்கு - நிலைபெற்ற எங்களுக்கு; என்றது, 'என்றும் யாம் உனக்கு எளியோம்' என்றபடி.

சிவபெருமானை நல்லூழ் உடையோர் ஒருஞான்றும் மறவாமை கூறப்பட்டது.

393. மிகுத்துரைத்து ஊடலாவது, 'ஊடல் தணித்தற்குச் செய்யும் செயல்கள் இத்துணை அமையும்' எனத் தலைவி கூறக் கேட்ட தலைவன் அவளை முயங்குதலுற்றவழி, 'எம்போல்வாரை முயங்குதல் நின் பெருந்தகைமைக்கு ஒவ்வாது' எனத் தலைவி தன் துனி நீங்காமை தோன்ற, அவனை மிகுத்துக் கூறுதல். இதற்குக் கொளு :-

நாடும் ஊரும் இல்லும் சுட்டி
ஆடற் பூங்கொடி ஊடி உரைத்தது.

'கெழு' என்பது, 'கெழுமு' என்றாக, அஃது அடியாக, 'கெழுமிய' என வருதல்போல, 'செழு' என்பது 'செழுமு' என்றாக, அஃது அடியாக, 'செழுமிய' என வந்தது.

43. ஊடல்நீட வாடியுரைத்தல்

திருந்தேன் உயநின்ற சிற்றம் பலவர்தென் னம்பொதியில்
இருந்தேன் உயவந் திணைமலர்க் கண்ணின்இன் நோக்கருளிப்
பெருந்தேன் எனநெஞ் சுகப்பிடித் தாண்டநம் பெண்ணமிழ்தம்
வருந்தேல் ; அதுவன் றிதுவோ ; வருவதொர் வஞ்சனையே. 394

'சிந்தைக்கண்' என உருபு விரிக்க. 'அன்பர் சிந்தை' சென்று கழுமிய கூத்தர்' என்க. கழுமிய - செறிந்த. கூத்தர் கடி - கூத்தரது காவலையுடைய 'விழுக்குடியிராகிய நீர், இன்னதொரு நெறியை விரும்புவது விழுமிதன்று' என்க. வாழி, அரோ, கொல், ஓ என்றவை அசைநிலைகள். "விரும்புவது" என்றது, பன்மை யொருமை மயக்கம். 'விரும்புதலே என்பதூஉம் பாடம்' என்பர் பேராசிரியர்.

சிவபெருமான் அன்பரது சிந்தையிற் சென்று செறிதலும், ஏழுலகத்தையும் காத்துநிற்றலும் கூறப்பட்டன. "பொய் யாத பொழில் ஏழும் தாங்கி நின்ற - கற்றூண்காண்" என்று அருளிச்செய்தார் திருநாவுக்கரசு நாயனாரும். (திருமுறை - 6. 8. 1.)

394. ஊடல் நீட வாடி உரைத்தலாவது, நுதலும், தோளும் முதலாயினவற்றை நீவியும், முயங்கியும் ஊடல் தணிப்பவும் தணியாது தலைவி பின்னும் பின்னும் ஊடல் நீட்டிப்பக் கண்ட தலைமகன் தளர்ச்சியுற்றுத் தன்நெஞ்சொடு கூறுதல். இதற்குக் கொளு :-

வாடா வூடல் — நீடா வாடியது.

திருந்தேன் - ஒருவாற்றானும் திருந்தாத யான். உய்ய - பிறவித் துன்பத்தினின்றும் நீங்கும்படி. இருந்தேன் - யாதொரு முயற்சியும் இன்றி இருந்த யான். இத்திருப்பாட்டில் களவிப் பொருளோடு தம் நிலையையும் உடனிலையாக உள்ளுறுத்து அருளிச்செய்தமை ஓர்ந்துணர்க. "இருந்தேன் உய" என்புழி, "உய" என்றதற்கு, 'இன்புறும் வண்ணம், உலகியலினின்று பிழைக்க' எனவும், 'பெண் அமிழ்தம்' என்றதற்கு, 'பெண் ணாகிய அமிழ்தம், ஒருபாற் பெண்ணையுடைய அமிழ்தம்'

44. துனியொழிந் துரைத்தல்

இயல்மன் னும் அன்புதந் தார்க்கென் நிலை! இமை
[யோர் இறைஞ்சுஞ்
செயல்மன் னுஞ் சீர்க்கழற் சிற்றம் பலவர்தென் னம்பொதியிற்
புயல்மன் னு குன்றிற் பொருவேல் துணையாப்பொம்
[மென்னிருள்வாய்
அயல்மன் னும் யானை துரந்தரி தேரும் அதரகத்தே. 395

எனவும் இருபொருள் காண்க. பெண் அமிழ்தமாகிய அது, எனக் கூட்டுக. "வருந்தேல்" என்பதனை இறுதிக்கண்ணும், "இதுவோ" என்பதனை முதற்கண்ணும் கூட்டுக. வருவது ஓர் வஞ்சனை - நம்மை வருத்துவான் வருவதொரு மாய வடிவு. இஃது அடிகள் வரலாற்றில், சிற்றம்பலத்து நின்ற திருவுருவ மாகக் கொள்ளப்படும். 'இங்ஙனம் கூறியது ஆற்ருமையா னன்றி, உண்மையான் அன்று' என்பது வெளிப்படை.

அடிகள் இத்திருக்கோவையைப் பல்சுவையும் பயப்பச் சிறந்ததோர் இலக்கியமாக அருளிச்செய்யினும், தம் ஆற்ருமை மிகுதியால், இடையிடையே தம்பொருளும் பயப்ப அருளிச் செய்தமையை மேற்ருெட்டு நோக்கியுணர்க.

சிவபெருமான் அன்பரை ஆட்கொள்ளுமாறெல்லாம் கூறப் பட்டன.

395. துனியொழிந்து உரைத்தலாவது, தலைவி ஊடல் நீடத் தலைவன் ஆற்ருனாயது கண்ட தலைவி, 'இனி நமக்கு இவ்வூடல் தகாது' எனத் தன் நெஞ்சொடு கூறுதல். இதற்குக் கொளு :-

தருக்கியின் ஊரன் மிகுபதம் நோக்கிப்
பனிமலர்க் கோதை துனியொழிந் தது.

'இயல் மன்னும் அன்பு - இயல்பாகப் பொருந்திய தமது அன்பினை. தந்தார்க்கு - நமக்கு உரியதாகத் தந்தவர்க்கு. நிலை என் - யான் ஊடி நிற்கும் நிலையாதாம். 'இறைஞ்சும் செயல்' என்றே இயைக்க. பொதியிற் குன்று - பொதியின் கண் உள்ள பக்கமலை. பொம்மென் இருள் - மிக்க இருள்.

45. புதல்வன்மேல் வைத்துப் புலவி தீர்தல்

கதிர்த்த நகைமன்னும் சிற்றவ்வை மார்களைக் கண்பிழைப்பித்
தெதிர்த்தெங்கு நின்றெப் பரிசளித் தான்?இமை
[யோர் இறைஞ்சும்
மதுத்தங் கியகொன்றை வார்சடை யீசர்வண் தில்லைநல்லார்
பொதுத்தம்ப லங்கொணர்ந் தோ,புதல்வா, எம்மைப் பூசிப்பதே.

'அரி அயல் மன்னும் யானையைத் துரந்து தேரும் அதர்' என்க. துரத்தல் - தொடர்தல். 'அதரகத்து வந்து' என ஒரு சொல் வருவிக்க. 'ஆதலின் இது தகாது' என்பது குறிப் பெச்சம்.

சிவபெருமானது திருவடியை இமையவர் எஞ்ஞான்றும் இறைஞ்சி நிற்றல் கூறப்பட்டது

396. புதல்வன்மேல் வைத்துப் புலவி தீர்தலாவது, தலைவி துனியொழிந்து நின்ற நிலைமைக்கண் தலைவன் அவள் ஒருசொற் சொல்லவேண்டிப் புதல்வனை எடுத்துப் புல்லி அவன் வாயில் தம்பலம் இட்டு முத்தம் கொடுக்க, தலைவி அது காணுள் போன்று தானும் புதல்வனைப் புல்லி முத்தங்கொண்டு தம்பலம் பெற்று 'இத்தம்பலம் பலர்க்கும் பொதுவன்றோ? இதனை நீ எனக்குத் தந்தது என்' என நகையாடி ஊடல் நீங்குதல். இதற்குக் கொளு :-

புதல்வனது திறம்புகன்று
மதர்அரிக்கண்ணி வரட்டந் தவிர்ந்தது.

கொளுவில், 'மதரரிக்கண்ணி வாட்டம் உற்றது' எனப் பாடம் ஓதி, இதனையும் ஊடலாகவே உரைப்பர் பழைய உரை யாசிரியர்.

"இமையோர் இறைஞ்ச" என்பது முதலாகத் தொடங்கி யுரைக்க.

கதிர்த்த - ஒளிவிசிய. 'நின் சிற்றவ்வைமார்களை' என்க. கண் பிழைப்பித்து - காணுவண்ணம் மறைத்து. எதிர்த்து - எதிர்ப்பட்டு. 'எங்கு எதிர்த்து நின்று' என மாற்றுக. இதனல்,

46. கலவியிடத் தூடல்

சிலைமலி வாள்நுதல் எங்கைய தாகம் எனச்செழும்பூண்
மலைமலி மார்பின் உதைப்பத்தந் தான்தலை; மன்னர் தில்லை
உலைமலி வேற்படை ஊரனிற் கள்வர்இல் என்னஉன்னிக்
கலைமலி காரிகை கண்முத்த மாலை கலுழ்ந்தனவே. 397

'உனக்குச் சிற்றவ்வைமார்கள் இல்லாத இடம் இல்லை' என்றாள். "அளித்தான்" என்றதற்கு, 'உன் தந்தை' என்னும் எழுவாய் வருவிக்க. ஊடல் நீங்கிய நிலைமையாகலின், 'அளித்தான்' என்ற ஒருமை உலக வழக்கன்றிச் செய்யுள் வழக்கு என்க. பூசிப்பது - வழிபடுவது. "மதுத் தங்கிய கொன்றை வார்சடை ஈசன்" என்றதனால், ஈசரது கொன்றை, மதுக் காரணமாக வண்டுகள் பலவற்றிற்கும் பொதுவாயினாற் போல, நின்தந்தையது தம்பலம், இன்பம் காரணமாகப் பரத்தையர் பலர்க்கும் பொதுவாயிற்று என்பது குறிப்பித்தாள்.

இதனால், சிவபெருமான் வேண்டுவார் வேண்டுவது ஈந்து காப்பவனாதல் கூறப்பட்டதாம்.

397. கலவியிடத்து ஊடலாவது, புதல்வன்மேல் வைத்துப் புலவி தீர்ந்த தலைமகள் கலவியேற்று நின்று அவன் மார்பகத்துத் தாரினை, 'இது பரத்தையர் மெய்யில் தோய்ந்தது' என மிதிக்கலுற்றவழி, அவன் அவட்கு உவகை பிறக்கும் வண்ணம் அவள்காலைத் தன் தலைமேற் கொள்ள, அதற்கொரு காரணம் கொண்டு தலைமகள் ஊடுதல். இதற்குக் கொளு :-

> சேடிக் குடைந்த நாரினர்த் தாரவன்
> தன்மை கண்டு பின்னுந் தளர்ந்தது.

"செழும்பூண் மலைமலி மார்பின் உதைப்ப" என்றதனை முதலிற் கொள்க.

"மலி" நான்கனுள் முதல் இரண்டும் உவம உருபுகள். எங்கையது - என் தங்கையுடையது. ஆகம் - தன் மார்பு. என - என்று கருதி. "தந்தான்" என்பதன்பின், 'அதனால்' என்பது எஞ்சிநின்றது. 'தலை தந்தான்' என மாற்றுக. மன்னர் -

47. முன்னிகழ்வுரைத்து ஊடல் தீர்த்தல்

ஆறூர் சடைமுடி அம்பலத் தண்டர்அண் டம்பெறினும்
மாறூர் மழவிடை யாய்கண் டிலம்வண் கதிர்வெதுப்பு
நீறூர் கொடுநெறி சென்றிச் செறிமென் முலைநெருங்கச்
சீறூர் மரையத ளிற்றங்கு கங்குற் சிறுதுயிலே. 398

யாவர்க்கும் தலைவர். உலை - உலைத் தொழில். "கலை" என்ற தற்கு, 'மேகலை' எனப் பழைய உரையாசிரியரும், 'யாழ் முதலிய கலைகள்' எனப் பேராசிரியரும் உரைப்பர். 'மூத்த மாலை புறப்பட' என ஒருசொல் வருவிக்க. 'இவள் ஊடுதற்கு, காரணம் வேண்டுவதில்லைபோலும்' என்பது குறிப்பெச்சம். இது கலவியிடத்து ஊடிய தலைமகள் கூற்றினைத் தலைமகன் கொண்டு கூறியது.

சிவபெருமான் யாவர்க்கும் தலைவனுதல் கூறப்பட்டது.

398. முன்னிகழ்வு உரைத்து ஊடல் தீர்த்தலாவது, கலவியிடத்து ஊடிநின்ற தலைமகளைத் தலைவன், முன் களவுக்காலத்து நிகழ்ந்தது கூறி ஊடல் நீக்குதல். இதற்குக் கொளு :-

முன்னிகழ்ந்தது நன்னுதற் குரைத்து
மன்னுபுன லூரன் மகிழ்வுற்றது.

அம்பலத்தண்டர் - சிவபெருமான். 'அவரது அண்டம்' என்றது, அவரால் படைக்கப்பட்ட அண்டங்களை. பெறினும் - அவையெல்லாவற்றையும் ஒருங்கே பெறினும். மாறு - நிகர். 'மாறு கண்டிலம்' என இயையும். மழ விடையாய் - இளங் காளையை உடையவளே. இளங்காளை, புதல்வன். தலைவியைத் தலைவன், 'புதல்வனை உடையவளே' என விளித்தது, 'புதல் வனைப் பயந்த உனக்கு ஊடல் தகாது' என்றற்கு. நீறு ஊர் - புழுதி பரக்கின்ற. நெருங்க - மார்பில் அழுந்த. 'சீறூர்க்கண்' என உருபு விரிக்க. மரை அதள் - மான் தோல். 'கங்குல் தங்கு சிறுதுயில்' என மாற்றுக. காலத்தினது சிறுமை, துயில் மேல் ஏற்றப்பட்டது. 'துயிற்கு' என்னும் நான்கனுருபு தொகுத் தலாயிற்று. 'துயிற்கு' என்று பாடம் ஓதாது, இவ்வாறே

48. பரத்தையைக் கண்டமை கூறிப் புலத்தல்

ஐயுற வாய்நம் அகன்கடைக் கண்டுவண் தேர்உருட்டுப்
மையுறு வாட்கண் மழவைத் தழுவமற் றுன்மகனே ;
மெய்யுற வாம்;இதுன் னில்லே வருகென வெள்கிச்சென்றுள்,
கையுறு மான்மறி யோன்புலி யூரன்ன காரிகையே. 399

உரைத்தார் பேராசிரியர். 'பள்ளி மான்தோலேயாகப் பொழுதும் சிறிதேயாயினும், நின் அன்பு காரணமாக அன்று இன்பம் பெரிதாயிற்று. பள்ளி மலரணையாக, பொழுது நெடிதாயினும் அன்பின்மையால் இன்று இன்பம் அரிதாயிற்று' எனத் தலைவன் முன் நிகழ்ந்தது கூறினன். இதுகேட்டுத் தலைவி ஊடல் தீர்ந்து, முன்னை நிலையளாதல் இதன் பயன் என்க.

சிவபெருமான் அண்டங்கள் பலவற்றையும் படைத்துக் காத்தல் கூறப்பட்டது.

399. பரத்தையைக் கண்டமை கூறிப் புலத்தலாவது, தலைவன் தலைவியது ஊடலை நீக்க முன் நிகழ்வுரைத்த காலத்துத் தலைவி, 'அன்று நின்னுடைய அன்பு எமக்கன்றிப் பிறர்க்கு ஆயிற்றில்லை' எனத் தலைவன், 'இன்றும் யான் நின்னையன்றிப் பிறரை அறியேன்' என்று கூறத் தலைவி, தான் பரத்தையைக் கண்டமை கூறிப் புலத்தல். இதற்குக் கொளு :-

பரத்தையைக் கண்ட பவளவாய் மாதர்
அரத்த நெடுவேல் அண்ணற் குரைத்தது.

ஈற்றடியை முதற்கண் கொண்டு, "ஐயுறவாய்' என்பதனை, "தழுவ" என்பதற்கு முன்னே கூட்டி யுரைக்க.

"ஐயுறவாய்" என்றது, 'ஐயுறவு உடையளாய்' என்னும் பொருளது. ஐயுறவு 'இவன் நம் தலைவன் மகன்போலும்' என்பது. மகனது உருவொப்புமை கண்டு பரத்தை இவ்வாறு ஐயுற்றாள் என்க. தலைவனோடு தனக்கு உளதாய உரிமையானும், 'தலைவி அங்கு இல்லை' என்னும் கருத்தானும் பரத்தை மகனை எடுத்துத் தழுவ, அதனை மறைந்து நின்று கண்ட தலைவி, அவளோடு பின் வருவனவற்றைக் கூறினாள். 'இவன் உன்

49. ஊதியம் எடுத்துரைத்து ஊடல் தீர்த்தல்

காரணி கற்பகம் ; கற்றவர் நற்றுணை ; பாணர்ஒக்கல் ;
சீரணி சிந்தா மணியணி தில்லைச் சிவனடிக்குத்
தாரணி கொன்றையன் ; தக்கோர் தம்சங்க நிதி ; விதி ; சேர்
ஊருணி உற்றவர்க் ; கூரன்மற் றியாவர்க்கும் ஊதியமே. 400

திருச்சிற்றம்பலம்

திருக்கோவையார் முற்றிற்று.

மகனே' எனவும், 'இவ்வுறவு மெய்யுறவே' எனவும் எழுவாய்கள் வருவித்துக்கொள்க. மற்று அசைநிலை. 'இஃது' என்னும் ஆய்தம் தொகுத்தலாயிற்று. 'புலியூர் அன்ன காரிகை' என்றது, தலைவன் கருத்துப் பற்றி. அஃதாவது, 'நினக்குப் புலியூரைப் போலச் சிறந்த காரிகை' என்றவாறு. 'அதனால், நீ எம்மிடத்து மாயங் கூற வேண்டா' என்பது குறிப்பெச்சம். இத் திருப்பாட்டினை, ''நாயுடை முதுநீர்க் கலித்த தாமரை'' என்னும் அகநானூற்றுப் பாடலோடு (16) வைத்துக் காண்க.

400. ஊதியம் எடுத்துரைத்து ஊடல் தீர்த்தலாவது, பரத்தையைக் கண்டமை கூறிப் புலந்த தலைவியைத் தோழி, 'பலர்க்கும் பயன் தருவோராதல் தலைமக்கட்கியல்பாகலின் அது பற்றி நாம் புறப்பெண்டிர் போலப் புலத்தல் தகாது ; வரும்பொழுது எதிர்தொழுதும், போம்பொழுது புறந்தொழுதும் தலைவனை வழிபட்டுப் புதல்வனைப் பயந்திருத்தலே நமக்குக் கடனாவது' எனக்கூறி ஊடல் தணித்தல். இதனைத் தோழி கூற்றென்னாது, கூத்தர் கூற்றாக உரைப்பினும் அமையும் எனக் கருதுவர் பேராசிரியர். இதற்குக் கொளு :-

இரும்பரிசில் ஏற்றவர்க் கருவி
விரும்பினர் மகிழ மேவுதல் உரைத்தது.

''கார்'' முதலியவற்றில், 'போல்வான்' என்பது எஞ்சி நின்றது. கார் - மேகம் ; இது, வேண்டாமலே கொடுப்பது.

அணி - அழகு. கற்பகம், வேண்டியது கொடுப்பது. நல் துணை - நல்ல உசாத் துணை; உசாவுதல் - சூழ்தல்; ஆராய்தல். இஃது ஒன்றற்கும். 'ஆவான்' என்பது வருவிக்க. ஒக்கல் - சுற்றம்; இஃது அளவளாவுவது. சீர் அணி - சீரை உடைய. சிந்தாமணி; இது நினைத்ததைக் கொடுப்பது. தார் அணி - அவன்தனக்குத் தாராக அணிந்துகொள்கின்ற. கொன்றையன் - கொன்றைப் பூப்போல்பவன். தக்கோர் - சான்றோர். சங்கநிதி, தொலையாது நிற்பது. விதி - ஊழ். இஃது அவரவர்க்குத் தக்க பயனைத் தப்பாது கொடுக்கும். சேர் ஊருணி - அணித்தாய் உள்ள ஊருணி (ஊரவரால் நீர் உண்ணப்படும் பொய்கை). உற்றவர் - சுற்றத்தார். 'உற்றவர்க்கு, சேர் ஊருணி' என மாற்றிக்கொள்க. 'இவ்வாறு, ஊரன் யாவர்க்கும் ஊதியமாய் இராநின்றான்' என்க. 'ஆகவே அருளால் பரத்தையரிடத்துத் தங்கியதல்லது, நின்மாட்டு அன்பின்றித் தங்கினானல்லன்; ஆதலின் நீ புலக்கற்பாலையல்லை' என்பது குறிப்பெச்சம். இவையெல்லாம் தலைமகள் அறிவாளாயினும் பெண்ணியல்பால் பொருமை தோன்ற ஊடினாள்; பின் இவற்றை நினைப்பித்தவழி ஊடல் தணிந்து கூடுவாள் ஆயினாள் என்க.

சிவபெருமான் திருவடிக்கு அன்பராயினார் யாவர்க்கும் ஊதியமாய்நிற்றல் கூறப்பட்டது.

இது, புகழ்தலும் பரவலுமாகிய இலக்கியமேயாதலின் இறைவன் இயல்பு ஒன்றே பலவிடத்து வருதல் பொருந்துவதேயாம் என்க.

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய

எட்டாந் திருமுறை

குறிப்புரையுடன் முற்றிற்று.

உ

சிவமயம்

திருக்கோவையார்

பாட்டு முதற்குறிப்பு அகராதி

உ

சிவமயம்

திருவாசகச் சிறப்பு

பெருகும் வையை தனைஅழைப் பிக்குமே
பிரம்ப டிக்குப் பிரான்மேனி கன்றுமே
நரியெ லாம்பரி யாக நடத்துமே
நாடி மூகை தனைப்பேச விக்குமே
பரிவிற் பிட்டுக்கு மண்சுமப் பிக்குமே
பரமனே டெழுதக் கோவை பாடுமே
வருகும் புத்தரை வாதினில் வெல்லுமே
வாத வூரர் வழங்கிய பாடலே.